
தமிழரசு
1-7-1974
50 காசு



செழுமையான விளைச்சலுக்கான சீரான
சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்





செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.


6-JULI 1974
6984/55

# குறுவை மாறுவாரிச் சிறப்பிதழ்



69683




மலர்.5 1·7·1974 இதழ்.1

# தமிழரசு



# புதிய எதிர்காலம்

## முதல்வர் கலைஞர்

விழியிழந்தோர் பாதுகாப்புக்காக அவர்களின் நல்வாழ்விற்காக ஒரு மன்றத்தை நிறுவி, அதை மிகச் சிறப்பாக நடத்தி, அதற்கு மாநில மாநாட்டையும் கூட்டுகின்ற அளவுக்கு ஆர்வத்தைக் காட்டியிருக்கின்ற அருமை நண்பர்களை வாழ்த்துகின்றேன்.

இந்தச் சங்கத்தினுடைய பெயர் தமிழக விழியிழந்தோர் சங்கம் என்பதாகும்.

தமிழக விழியிழந்தோர் சங்கம் என்கிற சுருக்கமான பெயரைப் பெற்று விட்டதற்காக, தமிழகத்திலே விழியிழந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பை வழங்குவதற்காகத் துவக்கப்பட்ட சங்கம்தான் இந்தச் சங்கத்தினுடைய பெயர் பொருள் தரும் என்பதை நானும் உணருகின்றேன்; நீங்களும் உணருவீர்கள்.

நான் பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டிருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளிலே என்னாலே மிக எளிதாக-சொற்களை தாராளமாகப் போட்டுப் பேச முடிகிறது. ஆனால் ஒரு சில நிகழ்ச்சிகளிலேதான் நான் நெஞ்சு நெகிழ்ந்து என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்திருக்கிறேன்.

அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே ஒன்று இந்த நிகழ்ச்சி என்பதை நான் உணருகின்றேன்.

இங்கு கூடியிருக்கின்றவர்களையெல்லாம் காணுகின்ற நேரத்தில் அவர்களுடைய முகத்தில் தோன்றியிருக்கும் ஆர்வத்தையும், ஒருவகையான நம்பிக்கையையும், ஒரு வகையான எதிர்காலத்தையும் என்னால் காண முடிகிறது.

நண்பர் பாலசுந்தரம் உணர்ச்சிப் பெருக்கோடு பேசிய பொழுதும், வெங்கா உருக்கத்தோடு உரை ஆற்றியபோதும், அமைச்சர்கள் கண்ணப்பன், அண்ணாமலை ஆகியோர் பேசும் போதும்—இந்த அரசுக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்புகளை எடுத்துக் கூறியபோதும்-திரு. அப்பன் அவர்களும், திருமதி. அப்பன் அவர்களும் பேசிய நேரத்திலும் நீங்கள் எந்தெந்தக் கருத்துக்களை எப்படியெப்படி வரவேற்றீர்கள்; மனத்தில் பதிய வைத்தீர்கள்; எப்படிக் கையொலி செய்தீர்கள் என்பவைகளை நான் மிக்க கவனத்துடன் கவனித்துக் கொண்டிருந்தேன்.

நமக்கு விழியில்லையே என்கிற கவலையைக்கூட மறந்து விட்டு, உங்கள் உள்ளத்தினை நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஐக்கியப்படுத்திக் கொண்ட காட்சியைக் கண்டபோது நான் என் கண்களைக் குளமாக்கிக் கொண்டதை ஒருவேளை என்னுடைய கறுப்புக் கண்ணாடி மறைத்திருக்கக் கூடும். ஆனால் என்னுடைய உள்ளம் அதை மறைத்திட இயலாதது; அந்த அளவுக்கு நான் கனிந்து போனேன்.

தமிழகத்தில் விழியிழந்த மக்களையெல்லாம் ஒன்றுதிரட்டி. அவர்களுக்கென்று ஒரு சங்கத்தை அமைத்து நூற்றுக்கணக்கானவர் இடம் பெற்றிருந்தாலும், ஆயிரக்கணக்கானோரை இடம் பெறச் செய்யும் முயற்சியில் ஈடுபட்ட இந்தச் சங்கத்தின் நிர்வாகிகளுக்குத் தமிழக அரசு தங்களுக்கு உறுதுணையாக இருக்கிறது என்ற-நம்பிக்கையோடு செயல்படலாம் என்ற உறுதியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநாட்டுத் தீர்மானங்கள், நான் உங்களுக்காக எதையெல்லாம் செய்ய வேண்டும் என்று கருதுகிறேனே, அந்த உள்ளக் கிடக்கையைத்தான் எழுத்துக்களாக ஆக்கி என்னிடத்திலே தீர்மானங்களாக வந்திருக்கின்றனவேயல்லாமல் எதுவும் புதியதாக நீங்கள் தீர்மானம் போட்டு நிறைவேற்றிடவில்லை.

மாநாடுகளிலே தீர்மானங்கள் போட்டுத்தான் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்றோ-அல்லது மாநாடுகளிலே தீர்மானம் போட்டுத்தான் ஆயிரக்கணக்கில் லட்சக் கணக்கில் கிராமப் புறங்களிலே கண்ணொளி மங்கிவிட்ட மக்களுக்கு—மூதாட்டியர்— முதியவர்— இவர்களுக்கு அறுவைச் சிகிச்சை மூலமாக கண்ணொளி வழங்கி இலவசக் கண்ணாடிகள் வழங்க வேண்டுமென்றோ மாநாடு போட்டுத்தான் கைரிக்ஷாக்களை அகற்றி அவர்களுக்கெல்லாம் இலவச சைகிள் ரிக்ஷாக்களை வழங்க வேண்டும் என்றோ-மாநாடு போட்டுத்தான் உடல் ஊனமுற்றோர்களுக்கு உதவ வேண்டும் என்றோ இந்த அரசு முடிவுகளை எடுக்கவில்லை.

இந்த அரசு தானாகவே தன்னுடைய பல ஆண்டுகாலச் சிந்தனையின் விளைவுகளைத்தான் இந்தப் பொறுப்பையேற்ற பிறகு செய்து வருகிறது.

சில நேரங்களில் கஷ்டப்பட்டுச் சில காரியங்களைச் செய்தால் அந்தக் காரியங்களிலே சுவை ஏறுது. சுலபமாகச் சில காரியங்களைச் செய்துவிட்டால், இவ்வளவு தானே என்று சாதாரணமாகத் தோன்றிவிடும்.

ஒருவேளை-அந்தக் குற்றத்தை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறதோ என்று கருதுகிறேன்.

கேட்காமல், வலியுறுத்தப்படாமல், கோரிக்கைகளை வைத்து அவை ஊறுகாய் பானையில் போடப்பட்டு-அவற்றை கிளர்ச்சிகள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென்கிற அளவுக்குப் போகாமல், எடுத்த எடுப்பிலேயே ஏழை எளியவர் தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர், பின்தங்கியவர், உடல் ஊனம் உற்றோர் இவர்களுக்காகப் பாடுபடுவதற்கான முதற் சிந்தனையை இந்த அரசு ஏற்றுக் கொள்கிற காரணத்தினாலேயே பல திட்டங்கள் சிறப்புக்குரிய விஷயங்களாக இன்றைக்கு இல்லாமல் போகலாம்.

ஆனால் எதிர்காலத்திலே சரித்திரச் சுவடிகளில் அவைகளெல்லாம் பொறிக்கப்படக் கூடியவை என்பதை நான் நன்றாக அறிவேன்.

இரண்டு மூன்று திங்களுக்கு முன்பு பறம்பு மலையிலே நடைபெற்ற பாரி விழாவுக்குச் சென்றிருந்தேன்.

பாரி விழாவில் எனக்கு முன்னால் பேசிய இரண்டு புலவர் பெருமக்கள் இந்த அரசு செய்கிற நல்ல காரியங்களையெல்லாம் எடுத்துக்கூறி, ''இந்த அரசை வீழ்த்த-இந்த ஆட்சியின் தலைவர் கருணாநிதியை வீழ்த்த-முயற்சிகள் நடைபெறுகிறதே நியாயமா?'' என்று கேட்டார்கள்.

நான் அப்போது சொன்னேன். பறம்பு மலையை ஆண்டான். பாரி வாரி வாரி வழங்கினான். ஏழை எளியோர்க்கெல்லாம் அவன் ஈதலையே தொழிலாகக் கொண்டான். புலவர்களைப் பாராட்டினான்!

பறம்பு மலையை நாடி அவனிடத்திலே நிதி பெறுவதற்காக அணிஅணியாக மக்கள் வந்தார்கள் என்றெல்லாம் வரலாறு இருக்கிறது.

அப்படிப்பட்ட பாரி மன்னரை முறியடிக்க அன்றிருந்த சேர சோழ பாண்டிய மன்னர்கள்- அவனுடைய பறம்பு மலையைமுற்றுகையிட்டார்கள்.

பாரி வள்ளலின் அரசவைப் புலவர் கபிலர் அந்த மூன்று மன்னர்களிடத்திலே சென்று ''நீங்கள் பறம்புமலை வேண்டுமென்று கேட்டால் பாரி தந்துவிடுவான்: அதற்காகச் சண்டை தேவையில்லை. நீங்கள் பாரியிடத்திலே பறம்பு மலையை வேண்டுமென்று சொல்லுங்கள் போர் வேண்டாம்'' என்று கூறினார்.

அந்த மூன்று மன்னர்களும் அதைக் கோராமல், போரிட்டார்கள். போரிலே பறம்பு மலையை வென்றார்கள். பாரி கொல்லப்பட்டான்.

ஆனால்-பாரி கொல்லப்பட்டான் என்பது சரித்திரத்திலே இருக்கிறது. ஆனால் பாரியைப் போர்க்களத்திலே கொன்ற அந்தச் சேர-சோழ-பாண்டிய மன்னர்களுடைய பெயர் என்ன?

அவனை வீழ்த்திய சேரன் யார்? தாக்கியது யார்? இந்தப் பெயர் எதுவும் சரித்திரக் குறிப்பில்கூட இல்லை!

ஆகவே, வீழ்ந்து விடுகிற காரணத்தினாலேயே - காலத்தினால் அழிக்கப்பட்டு விடுகிறான் என்று பொருள் அல்ல. அது போல் இன்று-நாம் செய்துவருகிற காரியங்கள் சாதாரண மக்களைத் தொடக்கூடிய காரியங்களாக-சாதாரண மக்களுக்கு வாழ்வுதரும் காரியங்களாக-என்ன பிச்சைக்காரர்களுக்குச் செய்யப்படுகிற காரியம் தானே-என்று வருணிக்கப்பட்டாலும், நாளை எழுதப்படும் சரித்திரப் பொன்னேட்டில் இந்த முன்னேற்றக் கழகத்தின் அரசு சாதித்துள்ள காரியங்கள் - எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர்— அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு-எந்த மக்களுக்குக் காரியங்களை ஆற்றியது என்கிற சாதனைகளின் பட்டியல்கள் - எதிர்காலத்திலே தான் மக்களுக்குப் புரியும்.

ஆகவேதான்-இந்த அரசு செய்கிற எந்தக் காரியமும் அடுத்து வருகிற தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு செய்யப்படுவது அல்ல; அடுத்த தலைமுறையை மனத்திலே வைத்துக்கொண்டு செய்யப்படுகிற காரியங்கள் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அந்த அளவிலே இங்கே வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளிலே மிகவும் முக்கியமான கோரிக்கையான-அரசு போக்குவரத்துப் பேருந்து வண்டிகளில் வேலைக்குச் செல்கின்ற விழியிழந்தோர்க்கு - பயணம் செய்யச் சலுகை தரப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

கோரிக்கையைச் சொன்னாலே அது கிடைக்கும் என்ற நம்பிக்கை உங்கள் உள்ளத்திலெல்லாம் இருக்கிற காரணத்தினால் -அந்தக் கோரிக்கையை நான் நிச்சயமாக நிறைவேற்றித் தருவேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சங்கத்திற்குக் கட்டடம் அமைய ஒரு இடம் தேவை என்று சொன்னார்கள். அது பற்றியும் அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து விரைவில் அந்த இடம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களையெல்லாம் விழியிழந்தவர்கள் என்று யாரும் கருதிக் கொள்ள வேண்டாம். நீங்கள் நடந்து செல்ல வழியாக நான் இருப்பேன்.

நீங்கள் ஊன்றிச் செல்வதற்கு ஏற்ற கழியாக நானிருப்பேன். ஏன்? விழியிழந்த உங்களுக்கு விழியாகவும் நானிருப்பேன்.



[23—6—'74-ல் சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த விழியிழந்தோர் மாநில மாநாட்டில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி]

# ஐந்தாவது ஆண்டில் தமிழரசு

மு. பரமசிவம் எம்.ஏ.,
இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை.

மக்களாட்சியின் மாண்பும் மாட்சியும் மக்களிடத்திலே நிலவும் விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளைப் பொறுத்து அமைகின்றன! அவ்வுணர்வுகளை ஊற்றெடுக்கச் செய்வதில் பத்திரிகைகளின் பணி அளப்பரியது. செய்தி ஏடுகளின் பணிகளில் தான் ஜனநாயகம் தழைப்பதும் தாழ்வதும் தொக்கி நிற்கின்றது. பத்திரிகைகளின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்த அமெரிக்க நாட்டுப்பேரறிஞன் ஜெபர்சன் ''செய்தி ஏடுகள் இல்லாத அரசு வேண்டுமா? அரசில்லாத செய்தித் தாள்கள் வேண்டுமா? என்று கேட்டால் பின்னதையே யான் விரும்புவேன்'' என்று அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

அதையே இந்திய நாடு கண்ட பெருமகன் நேரு 'எழுத்துச் சுதந்திரத்தைச் செய்தி ஏடுகள் எப்படிப் பயன் படுத்திக் கொண்டாலும், செய்திப் பத்திரிகைகளுக்கு முழு உரிமை அளிப்பதையே நான் விரும்புகிறேன்' என்றார்.

இக் கூற்றுகளிலிருந்து செய்தி ஏடுகளின் மேன்மையை நாம் உணரலாம். சீர்மிகு இச் சிறப்புப் பணியில் நான்கு ஆண்டு நற்பணியைச் சிறப்புற முடித்துக் கொண்டு ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது 'தமிழரசு.'

நான்காண்டுக் காலம் என்பது தனி மனிதன் வாழ்வில் மட்டும் அல்ல, ஒரு நிறுவனத்தின் வரலாற்றிலும் மிக மிகக் குறுகியதொரு கால கட்டமாகும். தவழப் பழகித் தளிர் நடை போடும் காலம் அது. தத்தித் தத்தி நடைபயின்று தள்ளாடித் தள்ளாடிக் கீழே விழுந்து நிமிர்ந்து எழுந்து நடமாடப் பயிலும் காலம். இக் காலத்திலும் 'தமிழரசு' இதழ் தொய்வில்லாமல் முன்னேற்றப் பாதையில் முன்னேறி வந்திருக்கிறது.

நாட்டிலே வெளியாகும் நாளேடுகள், வார ஏடுகள் மாத இதழ்கள் அனைத்தும் தனியாரின் தனிமுயற்சியாலோ கூட்டு முயற்சியாலோ வெளி வருபவையாகும். அவைகளில் பெரும்பான்மை பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்துள்ளவை. அதனால் அரசின் செயல் முறைகள், கட்சி அல்லது தனிப்பட்டோரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நிறங்கொடுத்து அவைகளில் வெளியிடப்படுகின்றன. நிறங் கொடுத்துச் செய்திகள் வெளியாவதால் அரசின் சாதனைகளின் அடிப்படைத் தன்மை மாறித்தான் பொது மக்களுக்குச் செய்திகளாக வெளியாகின்றன. அதனால் அரசின் செயல் முறைகள், சாதனைகள் உண்மையின் அடிப்படையில் வெளியாகிப் பொது மக்களும் நாட்டின் நடப்புகளை உள்ளது உள்ளபடியே அறிந்து கொள்ள அரசின் சார்பில் செய்தி வெளிக் கொணர்வது இன்றைய சூழ்நிலையில் இன்றியமையாததாகி விடுகிறது.

'தமிழரசு' தொடங்கப்படுவதற்கு முன் தமிழக அரசின் சார்பில் வெவ்வேறு துறைகளின் வாயிலாக, எட்டு ஏடுகள் வெளியிடப்பட்டு வந்தவ. தமிழ் நாடு இன்பர்மேஷன், சிரணி, இண்டகாம், மேழிச் செல்வம், ஆரோக்ய மார்க்கம், சென்னை ஹெல்த் எசுகேஷன், பாக்யலட்சுமி, திருக்கோயில் என்பவை அவைகளாகும். இவை ஒவ்வொன்றும் வெளியிடப்பட்ட துறைகளின் செய்திகளை மட்டுமே தாங்கி வெளி வந்தன. இவைகளில் எது ஒன்றையும் தனித் தனியாகப் படித்து அரசின் முழு உருவை அறிந்து புரிந்து கொள்ள முடியாது. அரசின் எல்லாவிதச் செயல் முறைகளையும் ஒருங்கு இணைத்து ஒன்றுபடுத்தி ஒரே இதழில் வெளிக் கொண்டு வரும் முயற்சியின் விளைவே 'தமிழரசு' இதழின் தோற்றத்திற்குக் கருவாக அமைந்தது. 'திருக்கோயில்' ஏடு மட்டும் அதன் தனித் தன்மையைக் கருதித் தனியாகவே வெளியிடப்பட்டு வருகிறது.

எண் 586 / 20—6—1970 அரசு ஆணையை அதிகார அடிப்படையாகக் கொண்டு 1—7—1970 தேதியில் 'தமிழரசு' முதல் வெளியீடு வெளியிடப்பட்டது. மாதமிரு முறையாக அந்நாளிலிருந்து தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் வெளியிடப்படும் 'தமிழரசு' இதழ் எடுத்த எடுப்பிலேயே முப்பதாயிரம் இதழ்கள் வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்ட ஏழாவது திங்களிலேயே — அதாவது 1—2—1971-ல் 'தமிழரசு' இதழ் விற்பனை எண்ணிக்கை 65,000 பிரதிகளாகக் கூடியது. குறைந்த காலத்தில் இவ்வளவு விரைவாகப் பொது மக்கள் நல்லாதரவைப் பெற்ற ஏடு அரசுத் துறை, தனியார் துறை இரண்டிலும் இது வரையிலும் வெளி வந்ததில்லை என்றே கருதுகிறேன். இதை ஒரு வரலாற்றுச் சாதனை என்றே குறிப்பிடலாம்.

சீரும் சிறப்புமிக்க இத்தகைய நல்லாதரவைப் பொது மக்களிடமிருந்து 'தமிழரசு' பெற்றதற்கு அது ஒவ்வொரு இதழிலும் தாங்கி வரும் பல்சுவை நிரம்பிய-பல் துறை சார்ந்த சிறப்புக் கட்டுரைகள் காரணமாக இருக்கலாம். இளஞ் சிறார்களிலிருந்து முதியோர் வரை, சாதாரணக் குடி மகனிலிருந்து நாட்டின் தலையான பொறுப்பில் உள்ளவர் வரை, அடிப்படைத் தொழிலாளர் பிரச்சினையிலிருந்து முதலாளிகளின் செயல் முறைகள் வரை, மற்றும் உழவுத் தொழில், தொழில் துறை, நாட்டின் பல்வேறு கனி வளங்கள், இயற்கை அமைப்புகள், இலக்கியம் ஆகியவை பற்றிய எளிய ஆனால் இனிய தமிழ்க் கட்டுரைகள், அழகிய கட்டமைப்பு ஆகியவைகளும் 'தமிழரசி'ன் உயர்விற்கு ஏதுவாக இருக்கலாம். இவைகளில் எவை ஏதுவாக இருப்பினும் பல்சுவைக் கருத்தோட்டங்களையும் ஒரே இதழில் பாமரர் படிக்கும் தமிழில் மட்டுமல்ல, பண்டிதர்களும் விரும்பிப் போற்றும் தமிழிலும் கொடுப்பதில் 'தமிழரசு' தனித் தன்மை, தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது என்பது எவரும் மறுக்க, மறைக்க முடியாத உண்மையாகும்.

இடையே 'தமிழரசின்' விற்பனையில் சிறிது தொய்வு ஏற்பட்டது. அதன் காரணம் ஒவ்வொரு இதழும் காலதாமதமாக வெளிவருவதுதான் என்பது கண்டறியப்பட்டு, அதையும் நீக்கும் பொருட்டுத் 'தமிழரசு'க்கு என்று நவீன வசதிகள் பொருந்திய தனி அச்சகம் ஒன்று நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. தனி அச்சகம் தமிழரசு இதழ்கள் இனிக் காலத்தே வெளியாவதற்குப் பெருந்துணையாக நிற்கும்; அதனால் தமிழரசின் விற்பனை மேலும் மேலும் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு இணைந்து செயல்படும் தன்மை துணை புரியும்.

இத்தகைய நற்பணியில் தடங்கல் ஏற்படாமல் தொய்வு துளைக்காமல் செயல்கள் செம்மையாகச் செவ்வனே நடைபெற அச்சகமும் இன்றியமையாததாகும்.

''கல்யாணம் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப் பார்'' என்பது நாட்டுப் பழமொழியாக இருக்கலாம். ஆனால் ஏடொன்று நடாத்துவது எவ்வளவு கடினம் என்பதை உணர்ந்தவர்கள் அப்பழமொழிகளுக்கு இணையாக 'ஏடு ஒன்றை நடத்திப் பார்' என்ற புது மொழியையும் சேர்க்கவே விரும்புவர். ஏடு நடாத்துவது அந்த அளவிற்குக் கடினமான நற்பணி என்றாலும், காலத்தே ஒவ்வொரு இதழையும் வெளியிடுவது என்பது வியாபார விற்பனை நோக்கில் மிக முக்கியமான ஒன்றாகும். இந்நோக்கை நிறைவேற்றுவதற்காகத் தமிழரசுக்கென்று நவீன வசதிகள் கொண்ட இயந்திரங்கள் அமைத்துத் தனி அச்சகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

பதினாறு பக்கங்களை (RA-2 size) நான்கு நிறங்களில் ஏககாலத்தில் மணிக்கு 12,000 பிரதிகள் வரை அச்சடித்துத் தானே மடக்கிக் கொண்டு வரும் வெப் ஆஃப்செட் (Web offset) அச்சடிக்கும் இயந்திரம் ஒன்று தமிழரசு அச்சகத்தில் உள்ளது. இதனால் அதிகப் பிரதிகளைக் குறுகிய காலத்தில் அச்சடிக்க முடிகிறது.

மேலட்டைகள் வண்ண நிறங்களில் மணிக்கு 5,000 முதல் 6,000 பிரதிகள் வரை அச்சடிக்கும் தன்மைத் திறன் வாய்ந்த பிளானெட்டா ஆஃப்செட் மெஷின்கள் இரண்டு தமிழரசு அச்சகத்தில் உள்ளன. இவைகள் இருப்பதால் மேல் அட்டைகள் (Wrappers) அச்சடிப்பதிலும் காலம் தாழ்த்தாமலும் செயல்பட முடிகிறது.

இவையன்றி மணிக்கு 2,000 பிரதிகள் அச்சடிக்கும் திறன் கொண்ட ஏக காலத்தில் எட்டுப் பக்கங்கள் அச்சடிக்கும் (RA-1 சைஸ்) லெட்டர் பிரஸ் பிரிண்டிங் மெஷின் ஒன்றும் தமிழரசு அச்சகத்தில் உள்ளது. குறைந்த எண்ணிக்கையில் எந்த ஒரு அச்சடிப்பு வேலையையும் இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பும் வசதியும் உள்ளது.

இவையன்றி ஃபீடர் ஒயர் ஸ்டிச்சர் (Feeder Wire Stitcher) என்ற தானே இயங்கும் இயந்திரம் ஒன்றும் அச்சகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் எட்டுப் பாகங்கள் கொண்ட ஒரு முழு அளவுப் புத்தகத்தைத் தானே வரிசையில் அடுக்கி மேலட்டையையும் இணைத்து, தைத்து, மூன்று புறங்களையும் வெட்டி மணிக்கு 3,000 பிரதிகள் வரை முழுப் புத்தகமாகக் கொண்டு வரும் திறன் கொண்டது. இதனால் ஏடுகள் முழு உருவம் பெறும் பணி தடையில்லாமல் நடைபெற முடிகிறது. இவையனைத்தும் கிழக்கு ஜெர்மனி நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்களாகும்.

இவையன்றி மேலட்டைகளை இரண்டாக மடிக்கும் திறன் அமைந்த தானே இயங்கும் மடிக்கும் இயந்திரம் (Automatic folding machine) மற்றும் வெட்டும் இயந்திரம் (Single cutting machine) ஒன்றும் இவ்வச்சகத்தில் உள்ளது.

'தமிழரசு' தமிழ், ஆங்கில இதழ்கள் தவிர்த்து திருக்கோயில், திட்டம் போன்ற இதழ்களும் தற்பொழுது தமிழரசு அச்சகத்தில் அச்சடிக்கப்படுகின்றன. இவையன்றி விளம்பர போஸ்டர்கள் அச்சடிக்கக் கூடிய வசதியும் தமிழரசு அச்சகத்தில் இருக்கிறது.

தட்டுப்பாடும், விலையேற்றமும் கடுமையான அளவில் காகிதத் தொழிலைத் தாக்கியுள்ளன. இவைகள் தமிழரசையும் பாதித்துள்ளது. இதனால் தமிழரசு ஏட்டின் விலையைக் கூட்டுவது தவிர்க்க முடியாத உண்மையாக உருவெடுத்துவிட்டது.

விலை கூடுதல் ஆனாலும், பக்கங்கள் குறைக்கப்பட்டாலும் தமிழரசு இதழின் தரம் குறையாமல் கண்காணித்துக் கொள்ள எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழரசின் வளர்ச்சியில் நல்ல எண்ணம் கொண்டோர் பலபடப் பாராட்டியதோடு அன்றி, அது இன்னும் செழித்து வளர நல்ல கருத்துக்களையும் வழங்கியுள்ளனர். இக்கருத்துக்கள் எல்லாம் முடிந்த அளவு வரும் வளர்ச்சி ஆண்டில் செயலாக்கப்படும் என்று கூற விழைகின்றேன்.

இன்னும் பல புதிய அம்சங்கள் தமிழரசில் புகுத்தப்பட வேண்டும் என்று விரும்பி வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளன. அவற்றில் முக்கியமானது குறிப்பாகக் காவல் துறையினர் ஆற்றும் சிறந்த துப்பறியும் பணி, குற்றங்களைக் கண்டு பிடித்தல் முதலியவற்றைப் புதிய முறையில் எடுத்துக் கூற வேண்டும் என்பதாகும். மேலும் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் (Accupuncture) இதய ரண சிகிச்சை பற்றியும் கேள்வி பதில் முறையில் எழுதுமாறு கோரியுள்ளனர். அரசின் சில துறைகளைப் பற்றிய செய்திகளை உதாரணமாக இலங்கை, பர்மா அகதிகள் புனரமைப்பு போன்றவற்றை விறுவிறுப்புடனும், சுவையுடனும் வெளியிடும்படி வேண்டியுள்ளனர்.

தமிழக அரசு செய்தித் துறையினர் மேற்கொண்டுள்ள இந்த நல்ல முயற்சிக்குப் பரந்த அளவில் படிப்பவர்களின் ஆதரவும் அரவணைப்பும் தேவை என்பது மட்டுமல்ல, அது ஒவ்வொருவரின் ஜனநாயகப் பணியும் ஆகும்.

பொழுதொரு வண்ணமும், நாளொரு சிறப்பும் பெற்று வீறு நடை இட்டுச் செல்ல 'தமிழரசு' ஏட்டிற்கு தமிழக மக்கள் என்றும் தங்கள் நல்லாதரவை நல்கி அது வளமும் வளர்ச்சியும் பெற உறுதுணையாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

# காலமெல்லாம் வாழ்த்திடுவோம்

முரசிருந்தால் புரட்சிஒலி முழக்கங்கள் கேட்காதா?
சரிசெய்த பூந்தோட்டம் சரமலர்கள் பூக்காதா?
அரசினர் தோட்டத்தில் அழகுமலர் பூக்கிறது!
தரமான அப்பூவோ தமிழரசின் "தமிழரசு"

தகவல்ல கூறுமல் தகவல்களைத் தரும்ஏடு!
புகவல்ல துறையனைத்தும் புகுந்துபுள்ளி விவரமுடன்
மிகநல்ல கட்டுரைகள் மிளிரவரும் இவ்வேடு
நகமல்ல நறுக்குதற்கு; நம்கட்டை விரல்என்பேன்!

பத்திரிகைப் படம்என்று பார்த்து,விட மனம்இல்லை;
கத்தரி,கைக் கொண்டுவெட்டிக் கண்ணாடிச் சட்டத்துள்
சித்திரங்கள் புகவைப்போம்! சீர்வாய்ந்த 'தமிழரசைப்'
பத்திரம்போல் நம்வீட்டில் பத்திரமாய் வைத்திருப்போம்!

தழைத்தாலும் ஆடுதொடா தழை,ஆடு தின்னுது!
பழுத்தாலும் எழில்எட்டிப் பழம்,பந்தி ஏற்காது!
பிழைத்தாலும் சிலஏடு பிழைபுரிந்தே பிழைக்கிறது!
எழுத்தெல்லாம் தமிழரசின் எழுத்தாக ஆகாது!

சதைக்கவர்ச்சி மேலட்டை-சமுதாயம் கெடவைக்கும்;
கதைக்கவர்ச்சி காட்டாமல் கருத்துள்ள கதைஏந்தும்!
விதைக்கும்விதை கருவிமுதல் விவசாய அறிவுதரும்!
வதைக்கும்நோய் நீக்குதற்கு வழிமுறைகள் பலகூறும்!

அட்டை இயற்கை அழகேந்தும்; இதுகோழி
முட்டைப் பயன்கூறி முறைகூறும் அதுபெருக!
திட்டம் பலதீட்டும் திறன்வாய்ந்த ஆட்சிபுகழ்
எட்டுதிசை யும்சென்றே எட்டவரும் புகழ்ஏடு;

காந்திபுகழ் யாரறியார்? கண்கவரும் பூ,சூரிய
காந்திபுகழ் இதுகூறும் கட்டுரையில்! நல்லதமிழ்
ஏந்திஇது நமக்களிக்கும் இலக்கியத்தின் விளக்கங்கள்!
வாய்ந்ததொழில் வளர்ச்சியதன் வரலாறும் வரும்இதிலே!

நல்லறிஞர் பொன்மொழிகள் நன்றாக நினைவூட்டும்!
வெல்லச்சொல் கவிதை,மனம் வெல்லவரும்! பாடுபடும்
நல்லவரும் வல்லமைகள் உள்ளவரும் நாட்டிற்குச்
சொல்லவரும் செய்திகளை அள்ளிவரும் நல்லேடு!

'என்னென்ன சாதனைகள் என்போரே! எண்ணிடுவீர்!
இன்னின்ன சாதனைகள்!' எனவிவரம் தரும்ஏடு!
கண்என்பேன் இவ்வேட்டை! கட்டுரைகள் ஒவ்வொன்றும்
பொன்என்பேன்! இதைக்கருத்துப் பூஎன்பேன்! போற்றிடுவேன்.

நாலும் உணர்ந்தவர்கள் நாள்தோறும் பாராட்ட
நாலாண்டு தனைமுடித்து நலமிக்க ஐந்தாண்டைச்
சீலமுடன் எட்டிச் சிரிக்கின்ற தமிழரசைக்
காலமெல்லாம் வாழ்த்திடுவோம்! காசுதந்து வாங்கிடுவோம்!

— புலவர் பொன்னிவளவன்




# பாலையிடையே சோலை!



மையை நிறைத்தகோல் கையில் பிடித்தவர்கள்
மாசற்ற வெண்தாளிலே,
மெய்யை மறைத்துபல பொய்யை வடிப்பதே
மிகுதியுறும் இந்நாளிலே,
வையகம் முழுமைக்கும் வாய்மையை உணர்விக்க
வருகின்ற 'தமிழரசு'தான்
பைந்தமிழ் நாட்டிலே பண்பென்ற யானைமேல்
பவனிவரும் உண்மைஏடாம்!

பயிர்வளம் தொழில்வளம் கலைவளம் யாவையும்
படமோடு தீட்டுகின்றார்!
துயர்பொங்கும் ஏழையை உயர்விக்கும் அரசினர்
தொண்டினைக் காட்டுகின்றார்!
அயலாரின் மொழியிலே மயல்கொண்ட மாக்களின்
அறியாமை போக்குகின்றார்!
இயல்பான தமிழிலே நயமான கவிதைகளை
ஏந்து 'தமிழரசு' வாழ்க!

ஒருகட்சி ஆளுகை நிருமித்த நிலையிலும்
பிறகட்சி சாடவில்லை.
அறிவுற்றமைச்சர்கள் திறமைப்புகழ்ச்சியை
அதிகமாய்ப் போடவில்லை.
கறையுற்ற மாற்றலர் குறையுற்ற செயல்களைக்
கடுமையாய்த் தூற்றவில்லை.
வரையற்ற நேர்மையால் வாழிநம் "தமிழரசு"
வள்ளுவன் குறள் போலவே!

கவிஞர் கு.மா.பாலசுப்பிரமணியம், எம்.ஏ.

# வாழ்க தமிழரசு!



கற்றறி புலவர் நாவில்
களிநடம் புரியும் பாட்டால்
நற்றமிழ் மணக்கும் பூங்கா;
நயமிகு போட்டி யிட்டு
வெற்றியில் மிளிரும் நல்ல
வெண்டளை மலரும் காடு;
தற்கிணை தானே யான
தமிழர சென்னும் ஏடு.

வயல்களில் புரட்சி செய்து
வளமைகள் சேர்க்க வேண்டிச்
செயல்முறை யனைத்துங் காட்டிச்
சீர்செயும் உழவர் தோழன்;
பயனுறு தொழில்கள் ஓங்கப்
பயிற்றிடும் பள்ளி யாசான்;
அயலவர் கண்டு சொன்ன
அறிவியற் கலைசேர் கோவில்

பழந்தமிழ்ப் பாண்பா டெல்லாம்
பாரினில் மீண்டுந் தோன்ற
உழந்துழந் தோடித் தேடி
ஒவ்வொன்றுங் கண்டு வந்து
வழங்கிடும் வள்ளல்; வல்லார்
வரைந்திடும் ஓவி யங்கள்
தழைந்திடும் ஓவக் கூடம்
தமிழர சென்னும் ஏடு.

நெஞ்சினில் தமிழை வைத்தார்
நெடுந்தொலை நாடு சென்று
விஞ்சையின் மேன்மை கண்டு
விளக்கிடும் பயண நூலாம்;
எஞ்சலில் திறமை கொண்டார்
எழுதிடும் கதையின் பேழை;
செஞ்சொலைச் சிதைக்கா வண்ணம்
செந்தமிழ் எழுதும் ஏடு.

கலைகளில் தோய்ந்த வுள்ளம்
காத்தலால் இந்த ஏடு
பலவகைச் சிறப்பும் மேவிப்
பயன்தரக் காணு கின்றோம்;
உலகினில் அரசின் சார்பில்
உலவிடும் இதழ்கட் கெல்லாம்
தலையென உலகம் போற்றத்
தமிழர சென்றும் வாழ்க!



கவியரசு
முடியரசன்





நாடகமே நாட்டகத்தின் முகக் கண்ணாடி!
நல்மகனோ எழில்தாயின் சாயல் என்பேன்!
ஏடுகளில் 'தமிழர'சே! நீயோ எங்கள்
ஈடில்லா ஆட்சிக்கோர் 'முத்திரைப்பூ'!
சாடுவதே தேனீயின் பிறவிப் பண்பு;
சபிப்பதுதான் சிலரட்டின் பழக்கம்; நீயோ
பாடுபடும் இந்நாட்டார் மேன்மை காணப்
பயனுடைய பலநூறு கருத்தைத் தந்தாய்!

அண்ணாவால் உருவான அரிய ஆட்சி
ஆரூரார் கலைஞரவர் தலைமையின்கீழ்
எண்ணிறந்த அற்புதங்கள் நிகழ்த்து கின்ற
ஏற்றமெலாம் அள்ளிவரும் தூதன் நீ, நீ!
கண்ணிருந்தும் காணாதோர் சிலரும், கேட்கக்
காதிருந்தும் கேளாதோர் சிலரும் இங்கே
உண்மைகளை உணர்வதற்குப் படங்க ளோடே
உலவிவரும் உயிரூட்டச் சாட்சி நீ, நீ!

ஐந்தாண்டுள் உன்மடியில் பூத்து நின்ற
ஆயிரம்ஆ யிரம்மலரின் மணந்தான் என்னே!
பைந்தமிழ்த்தேன் வெண்பாவில் போட்டி வைத்து
'பாட்'டாளிக் கூட்டத்தின் தொகையைச் சொன்னாய்!
ஐந்தருவிக் 'குற்றாலம்', 'உதகை', 'கோடை',
அழகுமிழும் 'ஏர்க்கா'ட்டின் பெருமை சொன்னாய்!
மைந்தரினைத் தாய்காத்தல் போலே நந்தம்
'மாக்கலை'யை இவ்வாட்சி காத்தல் சொன்னாய்!

# தமிழரசே! நீ முத்திரைப் பூ



சட்டமன்றம் காணாதோர் அனைவ ருக்கும்
'சாளர'மாய் நீஅமைந்தாய்! செய்தி தன்னை
வெட்டி ஒட்டிப் போடும்இதழ் சிலவற்றிற்கு
விரிவான விளக்கத்தால் உண்மை சொன்னாய்!
கட்டிவெல்லப் 'பூம்புகார் விழா'வைப் பற்றி,
'கட்டபொம்மன் விழா'பற்றிச் செய்தி தந்தாய்!
பட்டமுற்றோர் எதிர்கால வாழ்க்கைக் காக
பயனூட்டும் புதுவழிகள் காட்டி வைத்தாய்!



மலர்நடுவில் தேன்ஒளிந்தே இருத்தல் போலே
வரும்ஒவ்வோர் இதழ்நடுவில் கற்கண்டைப் போல்
நலக்கவிதை நீயளித்தாய்! முதல்வர் கண்ட
நாடுகளின் முன்னேற்ற வரலா றெல்லாம்
குலைக்கனிபோல் சேர்த்தளித்தாய்! நமது மண்ணில்
குவிந்திருக்கும் இயற்கைவளச் சீர்மை பற்றிப்
பலப்பலவாய் விளக்கங்கள் அளித்தாய்! நாட்டில்
பலதொழில்கள் வளர்ந்தோங்க ஊக்கம் தந்தாய்!



மீன்வளத்துக் காட்சிகளின் ஏற்றம் சொன்னாய்!
மின்னாற்றல் ஒளித்திட்ட மாற்றம் சொன்னாய்!
கான்வளத்துக் காட்சிகளின் பேரைச் சொன்னாய்!
கால்நடையின் துறைவளர்ச்சிச் சீரைச் சொன்னாய்!
'ஏன்?' என்றே ஏர்பிடித்தோர் கேள்வி கேட்டால்
எத்தனைஎத் தனைவிடைகள் தொகுத்துச் சொன்னாய்!
வான்காட்டில் நிலாப்பூவே புகழைச் சேர்க்கும்;
வனப்புள்ள 'தமிழர'சே! வளர்க; வாழ்க!

கவிஞர் கா.வேழவேந்தன்.எம்.எல்.ஏ







# தமிழரசு வாழ்க! வெல்க!

ஆட்சியினர் நடத்துகின்ற ஏடென் றுலே
அப்படியே பிரிக்காமல் அடுக்கி வைக்கும்
காட்சியினைக் கண்டுவந்த நிலையை மாற்றி
கற்கண்டுத் தேன்பாகுச் சுவையாய், இன்ப
மீட்சியினைக் கொண்டுவரும் எழுத்தும் நோக்கும்
மிளிர்கின்ற ஓவியமும் நிறைந்து, நாட்டின்
மாட்சியினை விண்டுரைக்கும் வகையில், இங்கு
மலர்ந்துவரும் தமிழரசு மணக்கக் கண்டோம்!

அன்றாடம் நிகழ்ந்துவரும் வளர்ச்சி காட்ட
அடுக்கான புள்ளிகளும் உண்டு; ஆனால்
நின்றாடும் புள்ளிமயில் கோலங் கொண்டு
நிகழ்த்துகின்ற விருந்தாக அவை இருக்கும்!
மன்றாடும் செய்திகளும் ஈர்க்கும்; அஃதும்
மாங்குயில்கள் இசைபாடிச் சேர்க்கும், வாழ்வில்
வென்றாடும் தமிழணங்கின் முரசாய், இங்கு
விளைந்துவரும் தமிழரசு விளங்கக் கண்டோம்!

கலையுணர்வுக் கட்டுரைகள்; நெஞ்சை யள்ளும்
கதைகளுடன் கவிதைகளும் கொஞ்ச, நம்மோர்
நிலையுணர்வு கொள்வதற்குச்சங்க காலம்—
நிழலாடும் சித்திரங்கள்; செய்தி மற்றும்
தலையுணர்வு தமிழுணர்வே எனமு ழங்கும்
தன்னுணர்வு; சமுதாயம் கிளர்ந்து ஓங்கி
விலையுணர்வு தகர்த்தெறிய ஒளியை ஏந்தி
விரியுமொரு தமிழரசு வாழ்க என்போம்!

தற்காலம் ஆளுகின்ற கலைஞர் உள்ளம்
தமிழ்உள்ளம் கவியுள்ளம் எனஉ ணர்த்தும்
பொற்காலம் ஆதலினால், செயல்க ளெல்லாம்
பொலிவோடும் வலிவோடும் அமைதல் கண்டோம்!
நற்காலம் சேர்த்துவரும் ஆட்சி தன்னின்
நற்செய்தித் துறையளிக்கும் இனிய ஏடு;
பிற்கால மாந்தர்களும் போற்றும் வண்ணம்
பிறந்திருக்கும் 'தமிழரசு' வெல்க என்போம்!

கவிஞர் வானம்பாடி

13



# திருமயம் கோட்டை

திருமயம், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டையிலிருந்து 13 கல் தொலைவிலுள்ள ஒரு சைவ, வைணவத் தலமாகும். 'சத்யகேஸ்வரா' என்னும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து எழுந்த சொல்லே 'திருமயம்'. இங்கு தான் சரித்திரப் புகழ்மிக்க 'திருமயம் கோட்டை' உள்ளது. விடுதலை வேட்கை கொண்டெழுந்த தென்பாண்டி நாட்டு வீரர்களை நசுக்கப் பயன்பட்ட இடங்களில் இக்கோட்டையும் ஒன்றாகும். இக்கோட்டை, வீர பாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரையால் கட்டப்பட்டது என்றும், இங்கிருந்துதான் அவன் வெள்ளையரை எதிர்த்து வீரமுழக்கமிட்டான் என்றும் தமிழகத்திலே பல நாட்டுக் கதைகள் கூறுகின்றன. இக்காரணம் பற்றியே இக் கோட்டைக்கு ஊமையன் கோட்டை என்ற பெயரும் வழங்கிவருகிறது. பள்ளிப் பாடப் புத்தகங்கள்கூட இக் கோட்டையை ஊமையன் கோட்டை என்றே குறிக்கின் றன. ஆனால் இக் கூற்று வரலாற்று உண்மைக்கு முற்றிலும் மாறானது என்பதை விளக்குகிறது இக் கட்டுரை.

முற்காலத்தில் திருமயம் பகுதியைப் பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்கள், சேதுபதிகள், புதுக் கோட்டைத் தொண்டைமான் அரசர்கள் ஆகியோர் ஆண்டு வந்தனர்.

கோட்டையின் அமைப்பு:

இலக்கியங்களும் கட்டடக் கலை நூல்களும் கூறும் இலக் கணத்துடன் அமைந்தது திரு மயம் கோட்டை. இக்கோட் டையைச் சுற்றி 7 சுற்று மதில் கள் இருந்தன. இக்கோட்டை வட்ட வடிவமானதாகும். இவ் விதக் கோட்டையை 'பத்மகக் கோட்டை' என 'மானசாரம்' என்னும் நூல் கூறுகிறது. வெளிச் சுவரைச் சுற்றி, முதலைகளும், நச்சுப் பாம்பு களும் நிறைந்த அகன்ற, ஆழ மான அகழி இருந்தது. அகழி யின் இடிபாடுகள் கோட்டை யைச் சுற்றி இன்னும் பல இடங் களில் இடிந்தும், சில இடங் களில் நல்ல நிலையிலும் நின்று கொண்டிருக்கின்றன. இச்சுவர் இடிந்த பின், இக்கற்களைக் கொண்டு அவ்விடங்களில் வீடு களைக் கட்டியுள்ளதால் சுவர் களின் இடுபாடுகளைக்கூட இன்று காணமுடியவில்லை. தற்போது இந்தக் குன் றின் மேல் காணப்படும் உட் கோட்டை நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வைக்கப் பட்டுள்ளது. இந்த உள் கோட்டை ஒரு குன்றின் மேல் இயற்கை அரண்களுடன் அமைந்திருப்பதையும் அதைச் சுற்றி மதில்கள் எழுப்பட்டுள்ள பாங்கையும் காணும்பொழுது நாம் தமிழர்களுடைய கட்டட கலைச் சிறப்பைப் புகழாமல் இருக்கமுடியவில்லை. உட்கோட் டைக்குச் செல்ல மேற்குப் புறம் ஒரு வாயில் உள்ளது. கிழக்கு வாயில் தற்போது அடைக்கப்பட்டுள்ளது. இக் கோட்டையின் கருங்கல் மதிலைச் சுற்றி மேல்பகுதியில் கட்டப்பட்ட செங்கற்களினா லான கைப்பிடிச் சுவரில் ஆயுதங்களை வைத்துக் கொள் வதற்கும், ஆட்கள் மறைந்து கொள்ளவும் இடைவெளிகள் காணப்படுகின்றன. உட்கோட் டைக்குச் செல்லும் பாதி வழி யில், வலது பக்கத்தில் பாறை யிலேயே குடையப்பட்ட அறை ஒன்று காணப்படுகிறது. இது ஆயுதக் கிடங்காக இருந்தி ருக்க வேண்டும். இவ்வறைக்கு எதிர்ப்புறம் மேற்கு நோக்கிக் குகைக்கோயில் ஒன்று உள்ளது. இதனுள் ஒன்றைக் காணலாம். இக்கோயிலுக்குச் செல்லத் தற் போது இரும்புப் படிக்கட்டுக் கள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டையின் மேல் 20 அடி உயரமுள்ள ஒரு மேடையில் பீரங்கி ஒன்று வைக்கப்பட்டுள் ளது. இதற்குப் பக்கத்தில் ஆழமான சுனையொன்றும் உள் ளது. கோட்டையின் மொத் தச் சுற்றளவு 40 ஏக்கராகும். கோட்டையின் மேல் தற் போது கட்டிடங்கள் எதுவும் காணப்படவில்லை. ஆனால் அங் கிருந்த கட்டிடங்கள் அழிக்கப் பட்டிருக்க வேண்டுமென்ப தற்கான அறிகுறிகள் தென் படுகின்றன. கோட்டையின் மேலிருந்து நோக்கினால் பல மைல்களுக்கு அப்பால் வரும் எதிரிப்படைகளைக்கூட அடை யாளம் கண்டு கொள்ள முடி யும். இங்கு கண்டெடுக்கப் பட்ட பீரங்கிகள், பீரங்கிக் குண்டுகள் சங்கிலிப்போர் உடைகள், உடைவாட்கள், பூட்டுகள் ஆகியவை தற்போது புதுக்கோட்டை அரசினர் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கோட்டை அமைந்துள்ள குன் றின் தென் பகுதியில், விஷ்ணு குகைக்கோவிலும், அதனருகே சத்திய கிரீஸ்வரம் என்னும் சிவன் கோவிலும் அமைந்து





இருப்பது சிறப்பான அம்சமா
கும். விஷ்ணு குகைக்கோவி
லில் பள்ளி கொண்டுள்ள
யோகசயன மூர்த்தி, ஸ்ரீரங்கம்
படையில் பெரியது எனவும்,
இதுவே ஆதிரங்கம் எனவும்,
இங்குள்ள வைணவர் கூறுவர்.
இங்கு எழுந்துள்ள விஷ்ணுவை
திருமங்கையாழ்வார் புகழ்ந்து
பாடியுள்ளார். கீழே விஷ்ணு
பள்ளி கொண்டிருப்பதைக்
குறிக்க, கோட்டையின் மேல்
10 அடி நீளம், 4 அடி அகலம்,
2 அடி உயரமுள்ள மேடை
யொன்று கட்டப்பட்டுள்ளது.
இங்குள்ள சிவன் கோவிலும்,
பழமையானதாகும். இக்கோவி
லிலுள்ளகதைகள் பலபேசும்
கற்சிலைகள் காணத்தக்கன.
குறிப்பாக கொம்புடன் கூடிய
துவாரபாலகர் சிலையும் சுவரி
லேயே செதுக்கப்பட்டுள்ள லி
லிங்கோத்பவ மூர்த்தியும் கலை
யழகு மிக்கன. இக்கோவிலும்
பல்லவர் காலத்தைச் சேர்ந்த
தாகும்.

**வரலாற்றுப் பின்னணியில்..**

*1731*-ல் மதுரையை ஆண்ட
நாயக்கர்களிடையே நடந்த
அரசுரிமைப் போரில், அர
சாண்டு கொண்டிருந்த அரசி
மீனாட்சியை தஞ்சை மன்னரும்
அரசுரிமைக்குப் போட்டியிட்ட
பங்காரு திருமலையை தொண்
டைமான் மன்னரும் ஆதரித்த
னர். இதன் காரணமாகத்
தஞ்சைத் தளபதி ஆனந்தராவ்
புதுக்கோட்டை மீது படை
யெடுத்து அப்பகுதி முழுவதை
யும் தன் வசப்படுத்திக் கொண்
டான். தொண்டைமான் மன்
னர் விஜயரகுநாதராய தொண்
டைமான் திருமயம் கோட்
டைக்குச் சென்று ஒளிந்து
கொண்டார். 15 மாதங்கள்
முற்றுகையிட்டும் இக்கோட்
டையைக் கைப்பற்ற முடியா
மல் திரும்பினான், ஆனந்தராவ்.
இப்படித் தொண்டைமான்
மன்னரின் ஆட்சி நிலைபெறத்
திருமயம் கோட்டை முக்கிய
காரணமாக இருந்தது. 1875-
ஆம் ஆண்டிலிருந்து கொடுங்
குற்றம் புரிந்தோரை அடைக்
கும் சிறைச்சாலையாகவும்
பயன்பட்டது இக்கோட்டை.

நாட்டு வழக்கில் இக்கோட்
டையை ஊமையன் கோட்டை
என்றழைக்க மூன்று காரணங்
கள் கூறப்படுகின்றன. முத
லாவதாக, ஊமைத்துரையே
இக்கோட்டையைக் கட்டினான்
என்பது; இரண்டாவதாக 1799
இல் நடந்த முதல் பாளையக்
காரப் போருக்குப் பிறகு கட்ட
பொம்மனும், ஊமைத்துரை
யும் தொண்டைமானால் பிடிக்
கப்பட்டு இக்கோட்டையில்
சிறைவைக்கப் பட்டிருந்தனர்.
என்பது, மூன்றாவதாக் பாளை
யங்கோட்டைச் சிறையிலிருந்து
தப்பிய ஊமைத்துரை, மருது
சகோதரர்களின் உதவியால்
இங்கு மறைந்து வாழ்ந்து
ஆங்கிலேயரை எதிர்த்து வந்
தான் என்பது. இக்கோட்டை
யும், கோட்டைக்குத் தொடர்
புள்ள எல்லா வரலாற்றுச்
சான்று நூல்களையும் குறிப்புக்
களையும், 2 ஆண்டுக் கால
மாக நான் ஆராய்ந்த பிறகு
இம்மூன்று கருத்துக்களுமே ஏற்
றுக்கொள்ளக் கூடியன அல்ல
என்ற முடிவிற்கு வந்தேன்.

பின் திருமயம் கோட்டை
யைக் கட்டியது யார்? திரு
மயம் கோட்டை இராமனாத
புரம் சேதுபதி மன்னன் விஜ
ரெகுநாத தாண்டவத் தேவன்
என்பவனால் *1687*-ஆம் ஆண்டு
கட்டப்பட்டதாக *1813*- ஆம்
ஆண்டு எடுக்கப்பட்ட புதுக்
கோட்டைக் கணக்காய்வுக்
குறிப்பு (Statistical account
of Pudukkottai) கூறு
கிறது. புதுக்கோட்டை
மதுரை, இராமனாதபுரம் ஆகிய
பகுதிகளின் வரலாற்றுப் பத்தி
ரங்கள் (Huzur Records)
கூறும் செய்திகளையும், அயல்
நாட்டார் இங்கு விட்டுச்
சென்றுள்ள வரலாற்றுக்
குறிப்புகளையும் தொடர்பு
படுத்தி நோக்கும்போது, இக்
கோட்டை *1687*-ஆம் ஆண்டு
கட்டப்பட்டது என்னும்
கருத்து வலுப்படுகிறது. இக்
கோட்டையைக் கட்டிய சேது
பதி மன்னன் கோட்டைத்
திறப்பு விழாவின்போது 2
மனித உயிர்களைப் பலியிட்ட
தாகச் செப்பேட்டுச் செய்தி
யொன்று செப்புகிறது. *1723*-
ஆம் ஆண்டில் கிழவன் சேது
பதிக்குப் பின் சேதுபதி தாண்
டத்தேவன் என்பான் சிவ
கெங்கைச் சீமையின் ஆட்சிப்
பொறுப்பை ஏற்றுக் கொண்ட
தும், கிழவன் சேதுபதியின்
மகன் பவானி சங்கருக்கும்,
தாண்டத் தேவனுக்கும் அரசு
ரிமை குறித்துப் போர் மூண்
டது. இவ்வரசுரிமைப் போரில்





புதுக்கோட்டைத் தொண்டை
மான் மன்னர் ரகுநாதராயத்
தொண்டைமானின் உதவியால்
வெற்றி பெற்ற தாண்டத்
தேவன் திருமயம் கோட்டை
யைத் தொண்டைமான் மன்ன
ருக்குச் சன்மானமாக வழங்கி
னான். *1723*-ஆம் ஆண்டு
முதல் இக்கோட்டை தொண்
டைமான் மன்னர்களின் கீழ்
இருந்து வந்தது. ஆகவே, இக்
கோட்டையைக் கட்டியவன்
ஊமைத்துரை அல்லன் என்பது
விளங்கும்.

இரண்டாவதாக, கட்டப்
பொம்மனும், ஊமைத்துரை
யும் தொண்டைமானால் பிடிக்
கப்பட்டு இக்கோட்டையில்
சிறை வைக்கப்பட்டு இருந்த
னர் என்றும், அதனால் இது
ஊமையன் கோட்டை என்று
அழைக்கப்படுவதாகவும், கூறு
கின்றனர். கட்டபொம்மனும்
ஊமைத்துரையும் பிடிபட்ட
திலிருந்து நடந்த நிகழ்ச்சிகள்,
வரலாற்றுக் குறிப்புகளுடன்
தேதி வாரியாக ஆராய்ந்தால்
இக்கருத்தும் ஏற்றுக் கொள்
ளக்கூடியதாக இல்லை.

ஊமையன் எப்போது எப்
படித் திருமயத்திற்கு வந்தான்?
*1799*-ஆம் ஆண்டு ஆகஸ்ட்
மாதம் நடந்த முதல் பாளையக்
காரப் போரில் பானர்மேனால்
தோற்கடிக்கப்பட்ட கட்ட
பொம்மன், தன் தம்பி ஊமைத்
துரை மற்றுமவன் உறவினர்
சிலரோடும் புதுக்கோட்டைப்
பகுதிக்குத் தப்பி ஓடிவந்தான்.
கட்டபொம்மனைக் கண்டுபிடித்
துக் கொடுக்குமாறு கலெக்டர்
ஹாசிங்டன் *8-9-1799* அன்று
ராஜா விஜயரெகுநாத தொண்
டைமானுக்குச் செய்தி அனுப்பி
னான். அதன்படி கட்டபொம்
மன் ஊமைத்துரை மற்றும் 5
பேர் திருக்களம்பூர் அருகி
லுள்ள காளியாப்பூர் என்னு
மிடத்தில் சர்தார் முத்து
வைரவ அம்பலக்காரன் என்ப
வனால் பிடிக்கப்பட்டு, புதுக்
கோட்டையில் காவலில் வைக்
கப்பட்டுள்ளதாக *24.9.1799*
இல் விஜயரெகுநாத தொண்
டைமான் ஹாசிங்டனுக்குச்
செய்தி அனுப்பினார். கலெக்
டர் ஹாசிங்டனின் வேண்டுகோ
ளின்படி கட்டபொம்மனும்,
மற்றோரும் *10-10-1799*-ல் ஆங்
கிலேயரிடம் ஒப்படைக்கப்
பட்டனர். *16-10-1799* காலை
*10* மணிக்குக் கட்டபொம்மன்
கயத்தாற்றில் தூக்கிலிடப்
பட்டான். ஊமைத்துரையும்
மற்றோரும் பாளையங்கோட்டை
யில் சிறை வைக்கப்பட்டனர்.
பிடிக்கப்பட்டதிலிருந்து ஆங்கி
லேயரிடம் ஒப்படைக்கும்வரை
கட்டபொம்மனும், ஊமைத்
துரையும் புதுக்கோட்டை
அரண்மனையிலேதான் சிறை
வைக்கப்பட்டிருந்தனர் என
அனைத்து வரலாற்றுக் குறிப்பு
களும் கூறுகின்றன. ஆகவே
இவ்வகையிலும், திருமயம்
கோட்டைக்கும், ஊமைய
னுக்கும் எவ்விதத் தொடர்பு
மில்லை.

மூன்றாவதாக, ஊமைத்துரை
பாளையங்கோட்டைச் சிறை
யிலிருந்து தப்பிய பின் மருது
சகோதரர்களின் உதவியால்
இக்கோட்டையில் மறைந்து
வாழ்ந்து ஆங்கிலேயரை எதிர்க்
கப் பாளையக்காரர்களைத் திரட்
டிக் கொண்டிருந்தான் என்று
கூறப்படுகிறது. இது நடந்தி
ருக்க முடியாதென ஆணித்தர
மாகக் கூறலாம். ஏனெனில் அக்
காலத்தில் திருமயம் கோட்
டையை ஆயுதக் கிடங்காகப்
பயன்படுத்திக் கொள்ள, ஆங்கி
லேயருக்கும் தொண்டைமான்
மன்னர் அனுமதி வழங்கி
இருந்தனர் என ஆங்கிலேய
ரின் 'வரலாற்றுக் குறிப்புகள்
கூறுகின்றன.

ஊமைத்துரையும் மற்றோ
ரும் *2-2-1801*-ல் பாளையங்
கோட்டைச் சிறையிலிருந்து
தப்பிச் சென்று இடிந்து தரை
மட்டமாய்போன பாஞ்சாலங்
குறிச்சிக் கோட்டையை ஒரு
மாத காலத்தில் கட்டி முடித்து
ஏனைய புரட்சிப் பாளையக்காரர்
களுடன் சேர்ந்து ஆங்கிலே
யரை எதிர்க்கும் பணியில் ஈடு
பட்டனர். ஆகவே ஊமைத்
துரை இக்காலத்தில் திருமயம்
வந்திருக்கவே வாய்ப்பில்லை.
*22-5-1801*-ல் லெப்டினன்ட்
கர்னல் அக்னுயு பாஞ்சாலங்
குறிச்சிக் கோட்டையை முற்று
கையிட்டுத் தகர்த்தான்.
தோல்வியுற்ற ஊமைத்துரை
மருது சகோதரர்களிடம்
அடைக்கலம் புகுந்தான். மருது
சகோதரர்களின் உதவியால்
அவன் சில காலம் தேவகோட்
டைக்கு அருகிலுள்ள சங்கர
பதிக் கோட்டையில் தங்கி
யிருந்தான். திருமயம் கோட்
டையில் அல்ல. ஊமைத்
துரையை தன்னிடம் ஒப்படைக்
கும்படி லெப்டினன்ட் கர்னல்
அக்னியூ *31—7—1801*-ல்காலை
யார் முற்றுகையிட்டான்.
இதுவே இரண்டாம் பாளையக்
காரப் போராகும். இக்
காலத்தில் திருமயம் கோட்டை
ஆங்கிலேயர்களின் ஆயுதக்
கிடங்காக இருந்தது என ஆங்கி
லத் தளபதி வில்லியம் ப்ளாக்
பர்ன், கவர்னர் ஜேம்ஸ்
வெல்ஷ் ஆகியோரின் குறிப்பு
கள் கூறுகின்றன. ஆகவே
ஊமைத்துரை தன் பாதுகாப்
பிற்கு எதிரியின் ஆயுதக் கிடங்
கிற்குள் நுழைந்து இருக்க
முடியாது. *1801*-ஆம் ஆண்டு
அக்டோபர் முதல் நாள் தோற்
கடிக்கப்பட்ட மருது சகோத
ரர்கள், அக்டோபர் மாதம்
இரண்டாம் வாரத்தில் திருப்
புத்தூர்க் கோட்டையில் தூக்கி
லிடப்பட்டனர். ஊமைத்துரை
யும், ஏனைய புரட்சிப் பாளையக்
காரர்களும் பாளையங்கோட்
டையில் தூக்கிலிடப்பட்டனர்.

தற்போது இக்கோட்டை
இந்தியத் தொல்பொருள் துறை
யினரால் புராதனச் சின்ன
மாகப் பாதுகாக்கப்பட்டு வரு
கிறது.

—ஜெ. இராசா முகமது,
பி.எஸ்சி.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்
1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

| | |
|---|---|
| 1966-67ல் | 2100.87 |
| 1972-73ல் | 5618.15 |



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20. லிங்கி செட்டி தெரு. சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

குடவாசல்

ஆர். கனகசபை — தலைவர்
சி. கிருட்டிணமூர்த்தி — உபதலைவர்
என். எல். ஹெப்லிகர் — நிர்வாக இயக்குநர்

TNSC BANK







காகிதம் இன்றைய நாகரிகத்தின் முக்கியத் தேவை. தற்கால வாழ்க்கைக்கு அது ஒரு அத்தியாவசியமான பொருளாகிவிட்டது. ஒரு நாட்டின் முன்னேற்றத்தை, அந்நாட்டு மக்கள் எவ்வளவு காகிதத்தை உபயோகிக்கிறார்கள் என்பதைக் கொண்டுதான் கணக்கிடுகிறார்கள்.

கற்காலத்தில் மனிதன் காடுகளில்தான் வாழ்ந்தான். ஆகவே காடுகள் நாகரிகத்திற்கு எதிரானவை என்ற ஒரு தப்பான எண்ணம் இருக்கிறது. காடு திருத்தி நாடாக்குதல் ஒரு முன்னேற்றமாகக் கருதப்பட்டது. இது தவறு. நாகரிகத்தின் அடிப்படையே காடுகள்தான். காடு மழையைப் பெருக்கும். மண்ணையும் நீரையும் பாதுகாக்கும். அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய பல பொருட்களைத் தரும். காடுகளை அழித்தால் பருவ மழை குறையும். விவசாயம் குன்றும். கால்நடைகள் நசித்துப் போகும். காடுகளை அழித்ததால் ராஜஸ்தானும், சிந்தும் பாலைவனமாகி விட்டன. இது சரித்திரம் கூறும் உண்மை. பெரும்பாலான மக்கள் இதை இன்னும் உணரவில்லை. காகிதத் தொழில் காடுகளோடு மிக நெருக்கமான தொடர்பு உடையது. காடுகள் இல்லை என்றால் காகிதமில்லை.

ஆதி காலத்தில் அறிவை வாய்மொழி மூலமாகப் பரப்பினர். பின்னர் பனை ஓலைகளைப் பயன்படுத்தினர். அதற்கும் பின்பே காகிதம் வந்தது. காகிதத்தை ஆங்கிலத்தில் பேப்பர் என்கிறோம். பழங்காலத்தில் எகிப்தியர் ''பெப்பைரஸ்'' என்ற கோரையை எழுதுவதற்கு உபயோகித்தார்கள். பெப்பைரஸ் என்ற சொல்தான் பின்பு ஆங்கிலத்தில் பேப்பர் என்று மாறியது. சீன நாடு தான் முதன் முதலில், அதாவது கி.பி. 105-ல் பேப்பர் செய்யும் முறையைக் கண்டு பிடித்தது. இந்தியாவில் மொகலாயர் ஆட்சியில் காகிதம் செய்யும் முறை புகுத்தப்பட்டது. முதல் காகித ஆலை நம் நாட்டில் 1870-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

காகிதம் செய்யத் தேவையான மூலப்பொருள் ''செலுலோஸ்'' ஆகும். இது தாவரங்களில் ஏராளமாக உள்ளது. குறிப்பாக காடுகளில் மண்டிக் கிடக்கும் மரம், புதர், புல், மூங்கில் முதலியவற்றில் இது அதிகமாக உள்ளது.

இனி காகிதம் செய்யும் முறையைக் கவனிப்போம். மரம், புல், புதர், மூங்கில் ஆகியவற்றைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்க வேண்டும். இத்துண்டுகளை நன்றாகத் தண்ணீர் விட்டு அரைத்தோ, அல்லது இரசாயன முறையிலோ கூழ் போல் ஆக்க வேண்டும். இதுவே மரக்கூழ். இதில் செலுலோஸ் தவிர, பெண்டோசான், லிக்னின் போன்ற அசுத்தங்களும் இருக்கும். இவற்றை நீக்கிவிட்டு, சுத்தமான செலுலோஸ் கூழை இரசாயனம் மூலமாக வெளுக்க வேண்டும். அதோடு மை பரவாமலிருக்க சில பொருள்களைச் சேர்க்க வேண்டும். தேவைப்பட்டால் வேண்டிய வர்ணங்களையும் சேர்க்கலாம். பின்பு, நீர் சேர்ந்த கூழை, மெல்லியதாகப் பரப்பி, சூடாக்கி நீரை எடுத்து விட்டால் காகிதம் கிடைக்கும்.

காகிதம் செய்ய செலுலோஸ் நாரின் நீளம் ஒரு முக்கிய அம்சமாகும். நீளம் அதிகமாக இருந்தால் காகிதத்தை மலிவாக நல்ல முறையில் செய்ய முடியும். மூங்கில், சபைப்புல், ஊசியிலை மரங்கள் ஆகியவை காகிதம் செய்ய மிகவும் சிறந்தவை. நீலகிரித் தைல மரம், சீகை, கற்பூர மரம் போன்ற மென் மரங்களையும் உபயோகிக்கலாம். காகித முசுக்கட்டை, பூலா, முள் முருங்கை, உதியன், முருங்கை, பச்சாளை, குடை வேலன் தூபம், போன்ற கடின மரங்களும் காகிதம் செய்யப் பயன்படும். ஆனால் இவை மட்டரகக் காகிதம் செய்யவே பயன்படும். மூங்கிலுடன் இவற்றைக் கலந்தால் நல்ல காகிதம் செய்யலாம். கரும்புச் சக்கை, பருத்தி, வைக்கோல், சணல், வாழைத் தண்டு போன்றவையும் பயன்படும்.



அறிவியலின் துணைகொண்டு இப்போது பயன்படுத்தப் படாத வேறு பல மரங்களை யும் உபயோகிக்க வேண்டும். 1 டன் காகிதம் செய்ய 3 டன் மரத்துண்டுகள் தேவை.

கடந்த 20 ஆண்டுகளில் காகித உற்பத்தி நம் நாட்டில் வெகுவாக முன்னேறி விட்டது. 1951-ல் இங்கு 17 காகித ஆலை களே இருந்தன. வருடத்திற்கு சுமார் 1,37,000 டன் காகி தமே செய்யப்பட்டது. இப் போது சுமார் 10 லட்சம் டன் உற்பத்தியாகிறது. ஆலைகளும் 60-க்கு மேல் உள்ளன. சுதந்த ரம் பெற்றபின், கல்வியைப் பரப்ப நாம் மிகவும் முயற்சி செய்கிறோம். வாழ்க்கைத் தர மும் உயர்ந்து வருகிறது. அதே சமயம் மக்கள் தொகை யும் அதிகரித்து வருகிறது. இவை எல்லாம் ஒன்று சேர்ந்து காகிதத் தேவையை அதிகப் படுத்தி விட்டன.

1985-ல் நமக்கு சுமார் 40 லட்சம் டன் காகிதம் தேவை. இதற்குச் சுமார் 1,200 கோடி ரூபாய் முலதனமிட வேண்டும். குறைந்தது 40 காகித ஆலை களை மேலும் நிறுவ வேண்டும். தமிழ்நாட்டில் இப்போது தலா 1.25 கிலோ காகிதத்தை உப யோகிக்கிறோம். 1985-ல் தலைக்கு 2.5 கிலோ காகிதம் தேவைப்படும். காகிதம் உப யோகிப்பதில் நாம் மிகவும் பின்தங்கி இருக்கிறோம். இந்தி யாவில் தலா 1.5 கிலோ காகி தம் உபயோகிக்கிறோம். முன் னேறிய நாடுகளாகிய அமெரிக்கா 216 கிலோவும், ஆஸ்திரேலியா 118 கிலோவும் உபயோகிக்கிறது. ஆகவே 2.5 கிலோ உபயோகிக்க நாம் நினைப்பது மிக உயர்ந்த இலக்கு எனச் சொல்ல முடியாது.

இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், காகிதத் தொழி லின் எதிர்காலம் ஒளி குன்றி இருக்கிறது. ஏனென்றால் உற் பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்கள் மிகவும் குறைவு. இந்நிலை நீடித்தால் காகிதப் பஞ்சம் நிச்சயம் வரும். இப்போது 45 லட்சம் டன் மூங்கில் செலவாகிறது. இது போதாது. மற்ற கடின மரங்களையும் பயன் படுத்த வேண்டும்.

ஆஸ்திரேலியாவின், மூலப் பொருட்களில் 90 சதவிகிதம கற்பூர மரமாகும். ஜப்பானில் 65 சதவிகிதம் கடின மரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இயற்கைக்காடுகளில் போது மான மூலப் பொருட்கள் இல்லை. இதை ஈடு செய்ய, நாம் செயற்கையான மரத் தோட்டங்களை உற்பத்திசெய்ய வேண்டும். பைன் மரங்கள் காகிதம் செய்ய மிகச் சிறந் தவை. தகுந்த பகுதிகளில் முடிந்த வரை இவற்றைப் பயிரிட வேண்டும். மற்ற இடங் களில் கற்பூரம் போன்ற மரங் களை வளர்க்கலாம். இதைச் சிறந்த முறையில் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். ஒரு காகித ஆலை லாபகரமாக நடக்க, ஒரு நாளைக்கு 200 டன் காகிதம் உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு 600 டன் மரம் தேவை. சாதாரணமாக எட்டு வருடத் தில் மரங்களை வெட்டலாம். இவ்வகையில் சுமார் 5,000 ஹெக்டேரில் துரிதமாக வளரும் மரங்களை வளர்க்க வேண்டும். அப்போதுதான் 300 டன் தயாராகும் ஒரு ஆலையை நிறுவ முடியும்.

காகிதத் தொழிலும் காடுகளும் பிரிக்கமுடியாத தொடர்பு உள்ளவை. காகித ஆலைக்கு வேண்டிய மூங்கில், மரம் ஆகியவற்றை வனத் துறை குறைந்த விலையில் தரு கிறது. தமிழ் நாட்டில் ஒரு டன் 11 ரூபாய்க்கு விற்கப்படு கிறது. இது மிகக் குறைந்த தொகையாகத் தோன்றலாம். ஆனல் அரசாங்கத்திற்கு ஒரு டன் மூங்கிலுக்கு வரிகள் மூல மாக 200 ரூபாய் கிடைக்கிறது.


## மத்தியக் கூட்டுறவு வங்கி லிட்., கும்பகோணம்

### இந்தியாவிலேயே முதன்மையான வங்கி என்ற கேடயம் பெற்றுள்ளது.

வைப்புத் தொகைகளுக்கு அரசு உத்திரவாதத்துடன்
$9\frac{1}{2}$ சதம் வரை வட்டி அளிக்கிறது.

| | |
|---|---|
| 91 நாட்கள் முதல் 6 மாதங்கள் வரை | $5\frac{1}{2}\%$ |
| 6 மாதங்கள் முதல் 9 மாதங்கள் வரை | 6% |
| 9 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை | $6\frac{1}{2}\%$ |
| 12 மாதங்கள் முதல் 24 மாதங்கள் வரை | $7\frac{1}{4}\%$ |
| 24 மாதங்கள் முதல் 36 மாதங்கள் முடிய | 8% |
| 36 மாதங்கள் முதல் 60 மாதங்கள் முடிய | $8\frac{1}{4}\%$ |
| 60 மாதங்கள் முதல் 72 மாதங்கள் வரை | $8\frac{1}{2}\%$ |
| 72 மாதங்களுக்கு மேல் | $8\frac{3}{4}\%$ |
| 80 மாதங்களுக்கு மேல் | 9% |
| 85 மாதங்களுக்கு மேல் | $9\frac{1}{2}\%$ |

அறநிலைய, தர்மஸ்தாபன, கல்வி நிலைய வைப்புத் தொகைகளுக்கு $\frac{1}{2}$ சதவிகிதம் அதிக வட்டி
சேமிப்புக் கணக்கு ... 5 சதவிகிதம்
ரிகரிங் டெபாசிட் ... 8 சதவிகிதம்
எல்லா விதமான வங்கி சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
இன்றே எங்கள் வங்கியுடன் தொடர்பு கொள்ளவும்.

கோ. சி. மணி எம்.எல்.சி.,
தலைவர்.

எம். பார்த்தசாரதி பி.ஏ., எச்.டி.சி.
செயலாளர்







"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே!" என்பதற்குஏற்ப, இயற்கை இன்னல் விளைவித்தாலும், இரசாயன உரப் பற்றாக் குறை மிகுதியாக இருந்தாலும், மனந்தள ராது விடாமுயற்சியுடன் தொடர்ந்து உயர் விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கி, பற்றாக்குறை மாநில மாக இருந்த தமிழகத்தைத் தன்னிறைவு பெற வைத்ததுடன், பிற மாநிலங்களின் பசிப்பிணி போக்க உணவு தானியங்களை அள்ளி அள்ளிக் கொடுக்கும் உபரி மாநிலமாகவும் திகழ வைத்துள்ளார்கள் தமிழக உழவர் பெருமக்கள்! அவர்களுக்கு உற்ற துணைவர் களாக இருந்து தமிழ்நாடு அரசின் வேளாண் மைத் துறையினர் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத் தவும் அயராது பாடுபட்டு வருகின்றனர்! அதுபோலவே தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத் துறையினரும் பொதுப்பணித் துறையினரும், வருவாய்த் துறையினரும் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கத் தளராது பணியாற்றி வருகின்றனர்! இவர்கள் அத்தனை பேர்களுடைய அயராத உழைப் பினல், சிறப்பாகத் தமிழ்நாட்டின் அரிசி உற்பத்தியும், பொதுவாக உணவு உற்பத்தி யும் கடந்த 7 ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு பெருகியுள்ளது.

அரிசி உற்பத்தி

| ஆண்டு | | அரிசி உற்பத்தி (இலட்சம் டன்கள்) |
|---|---|---|
| 1966—67 | ... | 37.91 |
| 1967—68 | ... | 38.46 |
| 1968—69 | ... | 35.50 |
| 1969—70 | ... | 40.12 |
| 1970—71 | ... | 50.07 |
| 1971—72 | ... | 53.10 |
| 1972—73 (முன் மதிப்பீடு) | ... | 55.00 |
| 1973—74 (எதிர்பார்ப்பது) | ... | 57.00 |

### உணவு தானிய உற்பத்தி

| ஆண்டு | | உற்பத்தி (இலட்சம் டன்கள்) |
|---|---|---|
| 1966—67 | ... | 54.58 |
| 1967—68 | ... | 54.17 |
| 1968—69 | ... | 50.62 |
| 1969—70 | ... | 57.31 |
| 1970—71 | ... | 67.06 |
| 1971—72 (முன்மதிப்பீடு) | ... | 69.94 |
| 1972—73 (முன்மதிப்பீடு) | ... | 72.02 |
| 1973—74 (எதிர்பார்ப்பது) | ... | 74.10 |

இவ்வாறு குறிப்பாக அரிசி உற்பத்தியும், பொதுவாக உணவு தானிய உற்பத்தியும் பெருகியதால், இந்திய அரசின் மைய இருப்புக்கு (Central pool) கீழ்க்கண்ட அளவில் அரிசி வழங்கியுள்ளோம்.

| ஆண்டு | | வழங்கிய அரிசி (இலட்சம் டன்கள்) |
|---|---|---|
| 1971—72 | ... | 0.51 |
| 1972—73 | ... | 1.12 |
| 1973—74 | ... | 1.11 |

மேலும் கடந்த ஆண்டில் (1973-74), கீழ்க்கண்டவாறு பிற மாநிலங்களுக்கு அரிசி வழங்கி, அம்மாநில மக்களின் பசிப்பிணி போக்கியுள்ளது தமிழ்நாடு!

| மாநிலம் | | வழங்கிய அரிசி (டன்கள்) |
|---|---|---|
| குசராத் | ... | 11,000 |
| மகாராட்டிரம் | ... | 10,000 |
| கேரளம் | ... | 9,000 |
| கர்னாடகம் | ... | 5,000 |
| மேற்கு வங்காளம் | ... | 1,000 |

அரிசியை மட்டுமல்ல, சிறு தானியங்களையும் மகாராட்டிரம், குசராத், கர்னாடகம், இராசஸ்தானம் ஆகிய மாநிலங்களுக்குத் தமிழ்நாடு வழங்கியுள்ளது!

இதிலிருந்து கடந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டு உழவர் பெருமக்களும், தமிழ்நாடு அரசும் மேற்கொண்ட முயற்சிகளினால் தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதுடன், உபரி மாநிலமாகத் திகழ முடிந்துள்ளது என்பது புலனாகின்றது.

மேலும் மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காக தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. இந்த ஆண்டின் முன்பருவத்தில் (Khariff season) மட்டும் 26.96 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களையும், 4.53 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் சிறு தானியங்களையும் சாகுபடி செய்ய தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது.

ஆனால் எதிர்பாராத விதமாக இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் இரசாயன உரப்பற்றாக்குறை மிகவும் கடுமையாக உள்ளது! 'இந்த நிலையில் இரசாயன உரங்களை அதிக அளவில் ஏற்றுக் கொண்டு அதிக மகசூல் தரும் உயர் விளைச்சல் இரகங்களைத் திட்டமிட்டபடி பயிரிட முடியுமா? எதிர்பார்க்கும் அளவுக்கு உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க முடியுமா?' என்பது எல்லாருடைய மனத்திலும் எழும் கேள்விக்குறிகளாக உள்ளன!

முடிந்த அளவுக்கு இரசாயன உரங்களை வழங்கிட தமிழ்நாடு அரசு தீவிரமாக முயன்று வருகிறது. இந்நிலையில் குறுவைப்பட்டமும், மானாவாரி பட்டமும் விரைந்து வருகின்றன!

எனவே, அப்பட்டங்களுக்கு ஏற்ற சிறந்த இரகங்களைத் தேர்ந்தெடுத்து, கிடைக்கின்ற அளவு உரத்தை இட்டு, நவீன அறிவியல் நுட்பங்களை முறையாக மேற்கொண்டு, உணவு உற்பத்தியைப் பெருக்கிவிடுவதற்குரிய வழிமுறைகளை விளக்கிட வேண்டும் என்பதற்காகவே, 1-7-1974 தேதிய "தமிழரசு" இதழை, குறுவை-மானாவாரி சிறப்பிதழாக உருவாக்கி, உணவு உற்பத்தியில் தமிழகத்தைத் தன்னிறைவு பெறச் செய்ததுடன், உபரி மாநிலமாகத் திகழச் செய்த உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளோம். இக்காணிக்கையை ஏற்று இவ்விதழில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை முறையாக மேற்கொண்டு, குறுவை, மானாவாரி மகசூலைப் பெருக்கி, உங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் நலஞ்சேர்க்குமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.







## குன்றென மகசூல் குவிக்க குறுவைப் பட்டமே சிறந்தது!

ஒரு நெற்பயிர் தரும் மகசூலின் அளவு, அப்பயிரின் கடைசி 45 நாட்களில் கிடைக்கும் சூரிய ஒளியின் அளவைப் பொருத்தே அமைகிறது. ஏனெனில், அந்தக் கடைசி 45 நாட்களில் நடைபெறும் ஒளிச்சேர்க்கையே, கதிரில் உருவாகும் தானிய மணிகளை நிரப்பத் தேவைப்படும் மாவுப் பொருட்களை உற்பத்திச் செய்து தருகிறது. ஆகவே, அந்த 45 நாட்களில் வானம் மப்பும் மந்தாரமாக இருந்தால், பயிருக்குப் போதிய அளவு சூரிய ஒளி கிடைப்பதில்லை. இதன் காரணமாக ஒளிச்சேர்க்கை குறைந்து, மகசூல் பாதிக்கப்படுகிறது!

இந்த காரணத்தினால்தான், தெளிந்த வானமும், நிறைந்த சூரிய ஒளியுடனும் கூடிய குறுவை மற்றும் கோடைப் பட்டங்களில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிரின் மகசூல், மப்பும் மந்தாரமுமான வானமும், குறைந்த சூரிய ஒளியுடனும் கூடிய தாளடி போன்ற பருவ (மழை) காலப்பட்டங்களில் கிடைக்கும் மகசூலைவிட அதிகமாக இருக்கின்றது.

மேலும் பருவ (மழை) கால நெற்பயிர் (பின் சம்பா அல்லது தாளடி) சாகுபடி செய்ய கடுமையான மழை பெய்து கொண்டிருக்கும்போதே நடவு செய்யப்படுகிறது. இளம் நாற்றுகள் வேர்ப் பிடித்து, தூர்கள் கட்டும் பருவத்தில், அதிக அளவு மழை நீர் வயலில் தேங்கி நிற்பதால், பயிரின் ஆரம்ப கால வளர்ச்சியும், தூர்ப்பிடிப்பும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஆனால் குறுவை மற்றும் கோடைப் பட்டங்களில் பாசன நீரைக் கட்டுப்படுத்த வாய்ப்புகள் இருப்பதால் பயிரின் ஆரம்ப கால வளர்ச்சியும், தூர்ப்பிடிப்பும் துரிதமாகவும், துடிப்பாகவும் நடைபெறுகின்றன! இதனால் மகசூல் கணிசமாகக் கூடுகிறது. ஆகவே, நெற்சாகுபடியில் அமோக மகசூல் பெற குறுவை மற்றும் கோடைப் பட்டங்களே மிகவும் சிறந்தவை!



### குறுவை நடுவதற்கு ஏற்ற காலம்!

குறுவை நெல் நடுவதற்கு ஏற்ற காலத்தைக் கண்டறிய 1971, 1972-ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட பரிசோதனைகளிலிருந்து, ஜூலை மாதம் முதல் வாரமே, குறுவை நெல் நடுவதற்கு ஏற்ற சிறந்த காலம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



## உயர்ந்த மகசூலுக்குச் சிறந்த இரகங்கள்!

குறுவைப் பட்டத்தில் உயர்ந்த மகசூல் பெற வேண்டுமானால், உயர் விளைச்சல் தரும் குட்டையான நெல் இரகங்களையே பயிரிட வேண்டும். ஏனெனில், நாட்டு இரகங்களைவிட, உயர் விளைச்சல் தரும் இரகங்களின் உற்பத்தித் திறன் மிகவும் அதிகம்! உயர் விளைச்சல் தரும் புதிய இரகங்களில் மிகக் கூடுதலான உற்பத்தித் திறனுடன் கூடிய சிறந்த இரகங்களைத் தேர்ந்தெடுத்துச் சாகுபடி செய்வதே சாலச் சிறந்தது. இத்தகைய இரகங்களைச் சாகுபடி செய்தால்தான், நிலத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள நிலவளத்தை மிகச் சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

130 நாட்கள் வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களே அதிக உற்பத்தித் திறனுடையவைகளாக விளங்குகின்றன! ஆகவே, கூடுமானவரையில் குறுவைப் பட்டத்தில் 130 நாட்கள் வயதுடைய 'ஜெயா', 'சோனா' (ஐ.இ.டி. 1991) போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களைக் குறுவைப் பட்டத்தில் பயிரிடுவதே மிகவும் இலாபகரமானதாக இருக்கும். நீர்பாசன வசதி இல்லாததாலோ அல்லது வேறு காரணமாகவோ, 130 நாட்கள் வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களைப் பயிரிட இயலாதபோது, 130 நாட்களைவிடக் குறைந்த அல்லது அதிகமான வயதும், உயர்ந்த உற்பத்தித் திறனும் கொண்ட கீழ்க்கண்ட இரகங்களில் ஏதேனும் ஒன்றைத் தமிழ்நாட்டில் பயிரிடலாம்.

### குறுவைக்கு ஏற்ற சிறந்த இரகங்கள்!

| வரிசை எண் (1) | இரகத்தின் பெயர் (2) | பெற்றோர் (3) | வயது (நாட்கள்) (4) | ஏக்கர் விளைச்சல் திறன் (கிலோ) (5) |
|---|---|---|---|---|
| 1. | ஐ.ஆர்.8 | பீட்டா×டி.ஜீ.வோ. ஜென். | 130 முதல் 140 | 3,200 |
| 2. | பவானி | பீட்டா×பீபி 176 | 130 முதல் 135 | 3,200 |
| 3. | ஐ. ஆர். 20 | ஐ. ஆர். 262 × டீ. கே. எம். 6 | 125 முதல் 130 | 3,200 |
| 4. | ஜெயா | டீ. என். 1 × டீ. 141 | 125 முதல் 130 | 3,200 |
| 5. | சோனா | டீ. என். 1×ஜிஇபி. 24 | 125 முதல் 130 | 3,000 |
| 6. | ரத்னா | ஐ. ஆர். 8 ×டீ. கே. எம். 6 | 115 முதல் 125 | 2,400 |
| 7. | வைகை | டீ.என். 1 × கோ. 29 | 115 முதல் 120 | 2,500 |
| 8. | காஞ்சி | டீ. என். 1×கோ. 29 | 110 முதல் 115 | 2,800 |
| 9. | பெண்ணை | டீ. என். 1×ஏ. எஸ். டி. 1 | 110 முதல் 115 | 2,800 |
| 10. | கரிகாலன் | டீ. என். 1× ஆடுதுறை. 27 | 110 | 2,000 |
| 11. | கோ. 29 | கோ. 13× கோ. 4 | 110 | 2,500 |
| 12. | காவேரி | டீ. என். 1× டீ. கே. எம். 6 | 105 முதல் 110 | 2,400 |
| 13. | திருவேணி | அன்னபூர்ணா ×பிடீபி. 15 | 105 முதல் 110 | 2,500 |
| 14. | அன்னபூர்ணா | பி.டி.பி. 10× டீ. என். 1 | 100 முதல் 110 | 2,400 |
| 15. | கருணா | ஐ. ஆர். 8× ஏ.டி.டீ. 27 | 108 | 2,500 |
| 16. | ஆடுதுறை-27 | நோரின் 8× ஜிஇபி. 24 | 105 | 2,500 |
| 17. | ஆடுதுறை-31 (கல்ச்சர் 8940) | ஐ. ஆர். 8×சி.யு. 340 | 104 | 2,800 |
| 18. | கண்ணகி | ஐ. ஆர். 8× டீ. கே. எம். 6 | 103 | 2,200 |

நீர்ப்பாசன வசதிக்கேற்ப மேற்கூறிய இரகங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பயிரிட்டால் குறுவைப் பட்டத்தில் பெரும் மகசூல் பெற்றுப் பயன்பெறலாம்.

—ஆர். எம்.



# குறுவைச் சாகுபடியின் நுட்பங்கள்!

தமிழ் நாடு, தற்போது ஆண்டுதோறும் 67 இலட்சம் ஏக்கரிலிருந்து 53 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை உற்பத்தி செய்து வருகிறது. நெல் சாகுபடியாகும் மொத்தப் பரப்பில் 90 சத அளவுக்கு மேல், இறைவையாகவே பயிரிடப்படுகிறது. தமிழ் நாடு, சராசரியாக ஏக்கருக்கு 0.8 டன் அரிசி உற்பத்தி செய்கிறது.

சராசரி ஏக்கர் மகசூலில், தமிழ் நாடு மற்ற மாநிலங்களை விட முன்னோடியாக விளங்கி இந்தியாவிலேயே முதலிடம் வகித்தாலும், ஜப்பான் போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தமிழ் நாட்டின் சராசரி உற்பத்தி மிகவும் குறைவு என்பது தெளிவாகிறது. ஜப்பான் நாடு தமிழ் நாட்டின் சராசரி ஏக்கர் உற்பத்தியைப் போல், மூன்று மடங்கு அரிசி உற்பத்தி செய்கிறது என்பது மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

தமிழ் நாடு தற்பொழுது அரிசி உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விளங்கினாலும், பெருகிவரும் தமிழ் நாட்டு மக்கள் தொகையின் தேவையை ஈடு செய்யவும், பற்றாக்குறை மாநிலங்களுக்கு அரிசி கொடுத்து உதவவும், தமிழ் நாட்டின் அரிசி உற்பத்தியை மேலும் மேலும் அதிகப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்!

பொதுவாகத் தமிழ் நாட்டில் 'சொர்ணவாரி' அல்லது 'கார்' அல்லது 'குறுவை', 'சம்பா', 'தாளடி' அல்லது 'பிசானம்', 'நவரை' ஆகியப் பட்டங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. "சொர்ணவாரி" அல்லது 'கார்' அல்லது 'குறுவை' பட்டம் என்பது பொதுவாக மே முதல் செப்டம்பர் வரையான காலத்தைக் குறிக்கும். இப்பட்டத்தைச் செங்கற்பட்டு, தென்னார்க்காடு மாவட்டங்களில் 'சொர்ணவாரி' என்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 'குறுவை' என்றும், திருச்சி மாவட்டத்தில் 'கார்' அல்லது 'குறுவை' என்றும், வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோவை, மதுரை நெல்லை, குமரி மாவட்டங்களில் 'கார்' என்றும் குறிப்பிடப்படுகிறது. வசதி கருதி இப் பட்டங்களை ஈண்டுப் பொதுவாக 'குறுவை' என்றே கூறியுள்ளோம்.

குறுவைப் பட்டத்தில், நீர்ப்பாசன வசதிக்கேற்ப 105 முதல் 130 நாட்கள் வயதுடைய நெல் ரகங்களைப் பயிரிடுவதே சிறந்தது.

ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் குறுவை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பொதுவாகத் தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி செய்வதற்காக, மேட்டூர் அணையில் இருந்து ஜூன் மாதப் பின் பாதியில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. சில ஆண்டுகளில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது இக்காலத்திற்கு முன்னாகவும் அல்லது பின் தள்ளியும் நீர்த்தேக்க—நிலைமைக்கு ஏற்ப—அமையும். வழக்கமாக, குறுவை நெல் நடுவதற்கான நாற்றுக்களைத் தயாரிக்க தண்ணீர் வந்து சேர்ந்த நாளில் இருந்து, ஒரு மாத காலம் ஆகக் கூடும்.

குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் நடவு தாமதமானால் குறுவை அறுவடை வட கிழக்குப் பருவ மழையினால் பாதிக்கப்படும்! இதன் காரணமாகவே, தஞ்சாவூர் மாவட்ட உழவர் பெருமக்கள் 105 நாட்கள் வயதிற்கு மேற்பட்ட இரகங்களைக் குறுவைப் பட்டத்தில் பயிரிட விரும்புவதில்லை!

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணியாற்றுத் தண்ணீர் ஜூன் மாத முதல் வாரத்திலேயே பாசனத்திற்குக் கிடைப்பதால், அம்மாவட்ட உழவர் பெருமக்கள் 115 நாட்கள் வயதுடைய இரகங்களைக் குறுவைப் பட்டத்தில் பயிரிடுகின்றனர்.

தென்னூர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற் பட்டு மாவட்டங்களில், கிணற்றுப் பாசனத்தைக் கொண்டே நெல் சாகுபடி செய்யப்படுவதால், அம்மாவட்டங்களில் 'டி.கே.எம். 6', 'கோ. 29' போன்ற இரகங்கள் குறுவைப் பட்டத்திற்கு உகந்த தாக விளங்குகின்றன.

ஈரோடு வட்டத்தில் காலிங்கராயன் வாய்க் கால் பாசனப் பகுதியிலும், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங் களின் ஒரு சில , பகுதிகளிலும் ஆண்டுதோறும் மூன்று போகம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழ் நாட்டில் 'டீ.கே.எம். 6' (சன்ன சொர்ணவாரி), 'ஏ.டி.டீ. 27' (ஆடுதுறை—27), 'கோ. 29' (குலேநோய்த் தாக்காத அறுபதாம் கோடை), 'ஏ.எஸ்.டி. 1' (அம்பாசமுத்திரம்—1) ஆகிய இரகங்களே 'சொர்ணவாரி' அல்லது 'கார்' அல்லது 'குறுவைப்' பட்டத்தில் வழக்கமாகப் பயி ரிடப்பட்டு வந்த இரகங்களாகும்.

அண்மையில் கண்டுபிடித்து வெளியிடப் பெற் றுள்ள கீழ்க்கண்ட புதிய இரகங்கள் குறுவைப் பட்டத்திற்கு ஏற்ற சிறந்த இரகங்களெனப் பரிந் துரைக்கப்படுகின்றன.

1. கண்ணகி

2. காவேரி 4. வைகை

3. காஞ்சி 5. பெண்ணே




மேற்கூறிய இரகங்கள் இயற்கையாகவே உயர் விளைச்சல் தரக் கூடியவை எனினும், நெல் சாகு படியில் உயர்ந்த அளவு மகசூல் பெறுவதற்குப் பின்கண்ட 7 நுட்பங்களேயும் மனதில் கொள்ள வேண்டும்.

1. பருவத்திற்கேற்ற சிறந்த இரகத்தைத் தேர்ந்தெடுத்தல்.

2. மண்ணே நன்கு உழவு செய்து சேராக்கு தல்.

3. தேவையான எண்ணிக்கையுள்ள நாற்றுக் களே நடுதல்.

4. வெவ்வேறு சத்துக்களே இரசாயன உர மாக தக்க நேரத்தில் இடுதல்.

5. போதிய பாசனம்.

6. காலத்தில், பொருத்தமான, பயிர்ப் பாது காப்பு முறைகளே மேற்கொள்ளல்.

7. சரியான காலத்தில் அறுத்து, அடித்து, தூற்றி, காய வைத்து இருப்பு வைத்தல்.

நெல் சாகுபடியில் மேற்கூறிய நுட்பங்களில் கவனம் செலுத்தினுல், தற்பொழுது சராசரி ஏக்கர் மகசூல் 0.8 டன் அரிசி என்றிருப்பதை மேலும் உயர்த்த வாய்ப்பு உள்ளது.

## குறுவைப் பட்டத்திற்கு ஏற்ற இரகங்கள்!

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறுவைப் பட்டத்தில் (சில மாவட்டங்களில் குறுவைப் பட்டத்தைக் 'கார்' என்றும் 'சொர்ண வாரி' என்றும் வழங்கப்படுகிறது) பயிரிடுவதற் கேற்ற உயர் விளேச்சல் இரகங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

| மாவட்டத்தின் பெயர் | | குறுவைப் பருவத் திற்கு பரிந்துரைக்கப் படும் இரகங்கள் |
|---|---|---|
| (1) | | (2) |
| செங்கற்பட்டு | ... | ஆடுதுறை—27, கருணு, காஞ்சி, காவேரி. |
| தென்னூர்க்காடு | .. | ஐ.ஆர். 20, ஆடுதுறை—27, கருணு, காவேரி. |
| வட ஆர்க்காடு | ... | ஐ.ஆர்.20, கருணு, கண்ணகி. |
| திருச்சி | ... | கரிகாலன், கருணு, கண்ணகி. |
| தஞ்சாவூர் | ... | கருணு, ஆடுதுறை—27, கரிகாலன், கண்ணகி. |
| தருமபுரி, சேலம் | ... | காஞ்சி, கண்ணகி, திருவேணி. |
| கோவை | ... | காஞ்சி, பவானி, கண்ணகி. |
| மதுரை | ... | ஐ.ஆர். 8, காஞ்சி, கண்ணகி, பவானி. |
| திருநெல்வேலி | ... | ஏ.எஸ்.டி. 14, கண்ணகி. |
| கன்னியாகுமரி | ... | ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, ஜெயா. |

## நுட்பங்கள்

பரிந்துரைக்கப்படும் இரசாயன உர அளவு, பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் உழவியல் முறைகள் ஆகியவற்றை மேற்கொள்வதின் மூல மாக, ஏக்கர் மகசூலே அதிகப்படுத்துவதற்குரிய வாய்ப்பினே, அண்மையில் புகுத்தப்பட்ட குட்டை யான உருவ அமைப்பு கொண்ட உயர் விளேச்சல் தரும் நெல் இரகங்கள் ஏற்படுத்தியுள்ளன. 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20', 'காஞ்சி', 'கருணு' முதலிய குட்டையான உருவ அமைப்பு கொண்ட உயர் விளேச்சல் தரக்கூடிய புதிய இரகங்களேப் பயிரிடும்போது கீழ்க்கண்ட சில நுட்பங்களே மன தில் கொள்ள வேண்டும்.

(1) இந்த இரகங்களில் 'தூர்' அல்லது 'சிம்பு' அல்லது 'குருத்து' அல்லது 'கிளேப்பு' விடும் முளே கள், அடியில் உள்ள கணுக்களிலேயே செறிந்துள் ளன. ஆகவே, நாற்றுகள் ஆழமாக நடப்பட்டால், தூர் விடக்கூடிய முளேகள் மண்ணில் அமிழ்ந்து விடும். அதனுல் தூர் கிளேப்புக் குறைந்து விடும்! எனவே, மேற்கூறிய புதிய இரகங்களே 1.5 முதல் 2 சென்டி மீட்டர் ஆழத்திற்கு மேல் அதிக ஆழத் தில் நடக் கூடாது!

(2) தூர் கிளேப்பதற்கு முன்பு, குறைந்த அளவாக ஒரு சென்டி மீட்டர் ஆழம் தண்ணீராவது வயலில் நிற்க வேண்டும். இல்லாவிட்டால், நாற்றின் அடிக் கணுக்களில் உள்ள தூர் முளேகள் காய்ந்து பயனற்றவைகளாக ஆகிவிடும்!

(3) நடவு செய்த 10 நாட்களுக்குள் பயிர்கள் நன்கு வேரூன்றி பச்சைக் கட்டி விடுவதுடன், தூர் கிளேப்புத் துவங்கிவிடும். அச் சமயத்தில் பயிர் களேச் சுற்றியுள்ள மண்ணேக் கிளறி விடுதல், அதிக மான தூர் கிளேப்பைத் தூண்டிவிடும்!

(4) மிக அதிகமான அளவுக்குத் தூர் கிளேத் தால், அறுவடையின் பொழுது, மணிகளில் பால் பிடித்தல், கதிர் வெளிவருதல், நன்கு முற்றிவிடு தல் போன்றவை, பல்வேறு நிலேகளில் இருக்கும். இது, இறுதியாக ஏக்கரின் மொத்த மகசூலேக் குறைக்கும்! எனவே, அளவுக்கு அதிகமாகத் தூர் கிளேப்பதும் விரும்பத் தக்கதல்ல! அதிகப்படியான தூர்கள் உருவாவதைப் பயிர்களுக்கு மண் அணேப்ப தன் மூலம் தடுத்திடலாம்!



போதிய அளவு நாற்றுகள்

நெல் சாகுபடியில் அடுத்து மனதில் கொள்ள வேண்டிய முக்கியமான நுட்பம், போதிய எண் ணிக்கை நாற்றுகளே ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் அதாவது ஒரு சதுர மீட்டரில் நடுவதாகும். வரிசை நடவு செய்வதின் மூலம், ஒரு சதுர மீட்டர் பரப் பளவிற்குத் தேவையான நாற்றுகளே நட இயலும்.

### ஒரு குறிப்பிட்ட பரப்பளவிற்குத் தேவையான நாற்றுகளின் எண்ணிக்கையை முடிவு செய்வது எப்படி?

தூர் கிளேப்பதை மண்ணேக் கிளறி விடுவது அல்லது மண் அணேத்தல் மூலமாக கட்டுப்படுத்த லாம். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் போதிய எண்ணிக்கையுள்ள தூர்கள் இருக்கச் செய்யலாம். எனவே, ஒரு சதுர மீட்டர் பரப்பள வில் நடவு செய்ய வேண்டிய நாற்றுகளின் எண் ணிக்கையை அறிந்து கொள்ள வேண்டியது உழவர் பெருமக்களின் தலேயாய கடமையாகும்.

குறுகிய காலக் குறுவை நெல் ரகங்களே நடுவ தற்கு வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் தூருக்கு தூர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளி யும் விட வேண்டும். ஆகவே ஒரு சதுர மீட்டரில் (100 சென்டி மீட்டர் × 100 சென்டி மீட்டர்) —அதாவது 10,000 சதுர சென்டி மீட்டர் பரப் பளவில்— மேற்கூறிய இடைவெளியில் (15 செ.மீ. × 10 செ.மீ.) நடவு செய்தால், 67 இடங்களில் (10,000/150) நடவு செய்ய வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் 3 நாற்றுக்கள் வீதம் வைத்து நட்டால், ஒரு சதுர மீட்டர் பரப்பளவிற்கு 201 நாற்றுகள் (67 × 3) நடவேண்டும். இந்த அளவில் நாற்று நட எவ்வளவு விதைகளே நாற்றுவிட வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.




## எவ்வளவு விதை விதைக்க வேண்டும்?

100 நெல் விதைகளின் எடை 2.8 கிராம் என்று எடுத்துக்கொண்டால், 201 நாற்றுகள் தயாரிப்பதற்குத் தேவையான விதைகளின் எடை 201/100 × 2.8 =5.6 கிராம் ஆகும். எனவே, ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் நடுவதற்கு 5.6 கிராம் விதையை நாற்றுவிட வேண்டும். இதே அடிப்படையில் ஒரு ஏக்கர் (4,000 சதுர மீட்டர்) நடுவதற்கு 4,000 × 5.6 =22,400 கிராம் அல்லது 22.4 கிலோ விதையை நாற்றுவிட வேண்டும்.

ஆனால் பின்கண்ட காரணங்களினால் விதையின் அளவை மேலும் சற்று அதிகப்படுத்த வேண்டும்.

1. நாற்றங்கால் தயாரிப்பது சரியாக அமையாதிருக்கலாம்.

2. விதைகளின் முளைப்புத் திறன் குறைவாக இருக்கலாம்.

3. எல்லா விதைகளும் ஒரே மாதிரியாக நல்ல நாற்றுகளைக் கொடுக்காதிருக்கலாம்.

4. நாற்றுகளைப் பறிக்கும் பொழுது, வேர்கள் அறுந்துவிடுவதால், சில நாற்றுகள் சேதமாகலாம்.

ஆகவே ஒரு ஏக்கர் நடுவதற்கு 22.4 கிலோ விதையை நாற்று விடுவதற்குப் பதிலாக, 25 கிலோ விதையை .நாற்றுவிடுதல் சிறந்தது.

## போதிய அளவு தூர்கள்!

நடவு செய்த பின் தோன்றும் தூர்களும் (Tillers) போதிய அளவில் இருக்க வேண்டும். முன்பே கூறியவாறு மண்ணைக் கிளறி விடுதல் அல்லது மண் அணைத்தல் மூலமாகப் போதிய அளவு தூர்கள் தோன்றிடச் செய்யலாம்.

## கதிர்கள், மணிகள் எண்ணிக்கை!

ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 400 கதிர்கள் இருந்தால், அவைகள் ஒவ்வொன்றிலும் சராசரியாக 100 நெல் மணிகள் இருந்தால், ஐ.ஆர். 8 நெல் இரகத்திலிருந்து ஒரு ஏக்கரில் 4 டன்னிற்கும் அதிகமான மகசூல் எதிர்பார்க்கலாம்! ஏக்கருக்கு 4 டன்னிற்கும் மேற்பட்ட மகசூல் என்பதை உயர் விளைச்சல் என்று கருதிடலாம்!

குறுகிய கால நெல் இரகங்களுக்கு 15 செ.மீ. × 10 செ.மீ. இடைவெளி விட்டு நடவு செய்தால், ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 67 இடங்களில் நடவு செய்ய வேண்டும் என்று முன்பே குறிப்பிட்டோம். எனவே, ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 400 கதிர்கள் தோன்றிட, ஒவ்வொரு நெல் குத்துகளிலும் ஏறத்தாழ 6 கதிர்கள் தோன்றிடச் செய்ய வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நெல் குத்திலும் 6 கதிர்கள் தோன்றிட வேண்டுமானால், 6 நல்ல தூர்கள் இருக்க வேண்டும்.

## உயர் விளைச்சலைக் குறைப்பவை!

நெல் சாகுபடியில் உயர் விளைச்சல் பெறுவதற்கு பின்கண்டவை காரணங்களாக உள்ளன :

1. நடப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை.

2. ஒவ்வொரு பயிரிலிருந்தும்தோன்றும் தூர்களின் எண்ணிக்கை.

3. ஒவ்வொரு பயிரிலிருந்தும் தோன்றும் பல்பிரிவுப் பூங்கொத்துக்களின் (Panic|e) எண்ணிக்கை.

4. ஒவ்வொரு பூங்கொத்திலிருந்தும் தோன்றும் பூக்களின் (நெல் பூ) எண்ணிக்கை.

5. மணிகளாக முதிர்ச்சி அடையும் பூக்களின் எண்ணிக்கை.

மேற்கூறியவைகளை விரும்பும் நிலையில் அமைத்துக் கொள்ள, பின்கூறிய நிருவாக முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

## உயர் விளைச்சலுக்கு உதவும் நிருவாக முறைகள்.

1. நடவு செய்த 20 நாட்களுக்குப் பிறகும், தூர் கிளைப்பது குறைவாக இருப்பின், தழைச்சத்து உரமிடுவதன் மூலமோ அல்லது பயிர்களைச் சுற்றிலும் மண்ணைக் கிளறி விடுவதன் மூலமோ, தூர் கிளைப்பதைத் தூண்டி விடலாம்.

2. ஒரு பயிரில் 10 தூர்களுக்கு (சிம்பு அல்லது போத்து) இருந்தால், பயிர்களுக்கு இலேசாக மண் அணைப்பதன் மூலம், மேலும் தூர் கிளைப்பதைத் தடுத்துவிடலாம்.

3. தண்ணீர்ப் பாய்ச்சுவதை நிறுத்துவதன் மூலம் பயிர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம்.



27

4. விதைத்த பிறகு 70-வது நாளில் அல்லது நடவு செய்த பிறகு 45-வது நாளில் நெற் பயிரின் தண்டினைப் பிளந்துப் பரிசோதனைச் செய்து பார்த்தால், பூங்கொத்துத் தோன்றியிருப்பது தெரியவரும்! இதுவே தழைச்சத்து உரத்தினை மேலுரமாக இடுவதற்கு ஏற்ற காலமாகும்.




இதுவரை ஏக்கர் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல வழி முறைகள் கூறப்பட்டிருப்பினும், எல்லா நிலைமைகளிலும் ஏக்கருக்குச் சராசரியாக 4 டன் மகசூல் பெறலாம் என்று உழவர் பெருமக்கள் முடிவு செய்துவிடக் கூடாது. கீழ்க்கண்ட நிலைமைகளில் உயர் விளைச்சல் பெற இயலாது என்பதை மனதிற் கொள்ள வேண்டும் :

1. மிகவும் மணற் பாங்கான மண், கெட்டியான அமில மண், வடிகால் வசதி குறைந்த மண் ஆகியவைகளில் உயர்ந்த மகசூல் பெறுவது எளிது அல்ல!

2. பயிரின் எந்த வளர்ச்சிப் பருவத்திலும் வெப்பம் 20 டிகிரி செண்டிகிரேடுக்குக் குறையாமலும், 38 டிகிரி செண்டிகிரேடுக்கு மிகாமலும் உள்ள பகுதிகளில் உயர் விளைச்சல் பெறுவதென்பது இயலாது!

3. மிகுந்த கோடை, குளிர் அல்லது வறட்சி நிலவும் பகுதிகளிலும் உயர் விளைச்சல் பெற முடியாது!

JL
V211m,N70
N74'5

4. நெற்பயிருக்கு 2 செண்டிமீட்டர் உயரத்திற்கு நிலையாகத் தண்ணீர் நிற்க வேண்டும். நெல் சாகுபடியில் வெற்றி பெற வயலில் மிகுதியாகத் தண்ணீர் தேங்கி நிற்கச் செய்வதையும் அல்லது தண்ணீர் பற்றுக்குறையின் காரணமாக வயலைக் காய விடுவதும் தவிர்க்கப்பட வேண்டும்!

5. வடிகால் வசதி குறைந்த நிலங்களிலும், தண்ணீர் பாய்ச்சுவதைக் கட்டுப்படுத்த முடியாத நிலங்களிலும், உயர் விளைச்சல் பெடுறுவதற்கு வாய்ப்பு இல்லை!

6. குறைந்த அளவு உரம் அல்லது பூச்சி மருந்துகளை இடுவது உயர் விளைச்சலைக் கொடுக்காது!

7. நுண்ணூட்டகங்கள் பற்றுக்குறை உள்ள நிலங்களில், அவைகளின் பற்றுக்குறையைத் தீர்க்க முயன்றாலன்றி, உற்பத்தியைப் பெருக்க மேற்கொள்ளும் மற்றெந்த முயற்சியும் வெற்றி பெறாது!

எனவே, நிலத்தின் தகுதி, இதர சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவைகளுக்கு ஏற்பவே, நாம் உயர் விளைச்சல் பெற முயற்சி செய்ய வேண்டும்.

## நெல்லிற்கு உரமிடுவதில் சில முக்கிய கண்டு பிடிப்புகள்!

இரசாயன உரப் பற்றுக்குறை மிகவும் கடுமையாக நிலவும் இந்நாளிலே பிலிப்பைன்ஸ் நாட்டிலே அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் கண்டறியப்பட்ட கீழ்க்கண்ட உண்மைகளை,தமிழக உழவர் பெருமக்கள் அனைவரும் மனதில் கொள்வது பயனுடையதாகும்.

1. குறைந்த வளமுள்ள மண்ணில், அங்கக உரங்கள் (தொழு உரம் போன்றவை) மண்ணின் தரத்தை உயர்த்துவதுடன், மண் வளத்தை உயர்த்தி அதிக மகசூல் கிடைக்கச் செய்கிறது.

2. தழைச்சத்தைப் பொருத்த மட்டில், தழை எரு, தொழு எரு, கலவை எரு (கம்போஸ்ட்) போன்ற அங்கக உரங்கள் நெல் மகசூலை அதிகப் படுத்துகின்றன.

3. வெப்ப நாடுகளில் பயறு வகைப் பயிர்களிலிருந்து பெறப்படும் தழைச்சத்து, செயற்கை இரசாயன உரங்களிலிருந்து பெறப்படும் தழைச்சத்திற்குச் சமமானதாகும்.

4. தழைச்சத்து உரங்களின் ஆதாரமான இரசாயன உரங்கள், அங்கக உரங்களை விட இது வரை வெகு எளிதில் கிடைத்து வந்ததால், பொதுவாக உழவர்கள் அங்கக உரங்களைத் தழைச் சத்தின் ஆதாரமாக[illegible]க்கொள்வதில்லை.

5. அங்க[illegible] மண்ணில் நன்கு சிதைவு பெறவிட்டா[illegible] மக்கா விட்டா[illegible] நெற் பயிர் நன்றாக வள[illegible]து.

6. இ[illegible]யாகக் கிடைக்[illegible] உரங்களைக் கொண்டே உ[illegible]ர்ந்த மகசூல் பெ[illegible]யும் என்ற உண்மையைப் [illegible]ராய்ச்சி [illegible]ளில் உழவர்கள் உணர்ந்துள்[illegible]

69683

உரச் சேதம் குறைத்திடுவோம்!

உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களுக்கு இடப்படும் தழைச் சத்தின் சேதத்தைக் குறைத்திடுவதற்காக மேற்கொள்ளப் பெற்ற சில உழவியல் பரிசோதனைகளுக்குப் பிறகு, கீழ்க்கண்ட பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன :

1. மண்ணின் வளத்திற்கும், நீர்ப்பாசன வசதிக்கும் ஏற்ப, தழைச்சத்து உரங்களை இரண்டு அல்லது மூன்று பாகங்களாகப் பிரித்து மேலுரமாக இடலாம்.

2. ஒவ்வொரு முறை மேலுரமிடும் பொழுதும், ஏக்கருக்கு 10 முதல் 12 கிலோ தழைச்சத்துக்கு அதிகமாகாமல் இடவேண்டும்.

3. மண்ணில் தழைச்சத்து குறைவாக இருப்பின், அடியுரத்தை அதிகப்படுத்த வேண்டும்.

4. மண்ணில் தழைச்சத்து மிகுதியான அளவில் காணப்பட்டால், மொத்தத்தில் இடவேண்டிய தழைச் சத்தினைக் குறைத்து, சிறு அளவு தழைச்சத்து உரங்களை மட்டும் இடலாம்.

5. குறைந்த அளவில் தூர் கிளைக்கும் இரகங்களுக்கு, அதிக அளவு தழைச்சத்தினை அடியுரமாக இடவேண்டும்.

6. குறுகிய கால இரகங்களுக்கு, அதிகஅளவு தழைச்சத்து உரங்களை அடியுரமாக இடுவதுடன், மேலுரமிடுவதும் அவசியமாகும்.

7. நீண்ட கால இரகங்களுக்குத் தழைச் சத்து உரத்தினை 3 முதல் 4 முறையாகப் பகிர்ந்து அளிக்கலாம்.

8. நட்வு காலம், குளிர் காலத்துடன் சேர்ந்து வருமானல், தழைச்சத்தின் அளவினை அதிகப்படுத்தலாம்.

இதுவரைக் கூறிய நுட்பங்களை மனதிற் கொண்டு, அதன்படி செய்தால் குறுவைச் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் தங்கள் குறுவை உற்பத்தியைப் பெருக்கிப் பெரும் பயன் அடையலாம் என்பது உறுதி!

தகவல் உதவியவர் :
திரு. கே.என். துரைசாமி,
விரிவினைக் கல்வி இயக்குநர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.


# கோயம்புத்தூர் மத்தியக் கூட்டுறவு வங்கி லிட்.,

தலைமையகம் : ஸ்டேட் பாங்க் சாலை, கோவை-641018

தந்தி : கோடிஸ்ட்பேங்
தொலைபேசி எண் : 33447 [மூன்று லைன்]

**மொத்தம் கிளைகள் : 32**

நிரந்தர வைப்புகளுக்கு வழங்கும் வட்டி விவரம்
நடப்புக் கணக்கு $\frac{1}{2}\%$
சேமிப்புக் கணக்கு $5\frac{1}{4}\%$
நிரந்தர வைப்புக்கு $5\frac{1}{4}\%$ முதல் $8\frac{1}{4}\%$

அத்துடன்
ரெக்கரிங், பிராவிடெண்டு, மினி டெப்பாசிட், கேஷ் சர்டிபிகேட்
போன்ற சிறப்பு சேமிப்புகளுக்கு அணுகவும்.

குறிப்பு : கொடை நிறுவனங்கள், மத நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் [Charitable, Religious, Institutions] நிரந்தர வைப்புகளின் பேரில் மேலே காணப்படும் வட்டி விகிதத்திற்கு மேல் $\frac{3}{4}\%$ கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

நிரந்தர வைப்புக்கு வட்டி மாதா மாதம் கொடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராசா, எம்.ஏ., எம்.எல்.ஏ.,
பெருந்தலைவர்.

திரு. எம். பழனிசாமி, பி.காம்., எச்.டி.சி.,
செயலாளர்.




# தஞ்சை மாவட்ட உழவர்களுக்குத் தகுந்த சில பரிந்துரைகள்!

தஞ்சை மாவட்டத்தில், 'குறுவை', 'சம்பா', 'தாளடி' ஆகிய மூன்று பட்டங்களிலும் நெல் சாகுபடி செய்யப்படுகின்றன. நல்ல தண்ணீர் வசதியும், வடிகாலும், அமையப் பெற்ற இருபோக நிலங்களில் முதல் போகமாக குறுவையும், அடுத்து தாளடியும் பயிரிடப் படுகின்றன. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் தேதியைப் பொருத்து, குறுவைப்பயிர் ஜூன், ஜூலை மாதங்களில் நாற்றுவிடப்பட்டு அக்டோபர்-நவம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது.

குறுவைப் பட்டத்தில் சூரிய ஒளி தேவையான அளவுக்குக் கிடைப்பதாலும், பூச்சி, பூசண தொல்லைகள் அதிகம் இல்லாததாலும், இப்பருவ மகசூல் மற்ற பட்டங்களை விட அதிகமாக உள்ளது.

எனவே, இப்பட்டத்தில் குறுகிய காலத்தில், அதிக விளைச்சல் அளிக்கக்கூடிய, சாயாத இரகங்களைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

1974-ஆம் ஆண்டு குறுவைப் பட்டத்தில், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 4.81 இலட்சம் ஏக்கரில் குறுவைப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கேற்ப, எந்தெந்த இரகங்களை எந்தப் பருவத்தில் பயிரிட வேண்டு தீவிரசாகுபடி என்பதைத் திட்ட அலுவலர்கள்-அனுபவத்தின் அடிப்படையிலும் ஆராய்ச்சிகளின் அடிப்படையிலும்-கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளனர்.

ஆழ் வடிமுனைக்குழாய், குழாய்க்கிணறு, குளம் முதலிய வசதிகளைக் கொண்டு நாற்று விட்டு நடும் உழவர்கள் அல்லது மேற்கண்ட வசதிகளைக் கொண்டு நாற்று மட்டும் விடும் உழவர்கள், 'ஐ.ஆர். 8' 'ஐ.ஆர். 20' ஆகிய இரகங்களைப் பயிரிடுதல் சிறந்ததென்றும், வடிமுனைக்குழாய், கிணறு முதலிய வசதிகளைக் கொண்டு நாற்றுமட்டும் விட்டு, ஆற்றில் நீர் வந்ததும் நடக்கூடிய உழவர்களும் ஆற்று நீரையே உபயோகித்து நாற்றுவிட்டு நட விரும்பும் உழவர்களும் 'கருணை', 'கண்ணகி', 'கரிகாலன்' ஆகிய இரகங்களைப் பயிரிடுதல் சிறந்ததென்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

இந்த இரகங்களைக் குறுவைக்கு தேர்தெடுப்பதால், குறுவையை மழைக்கு முன் அறுவடை செய்ய முடியும்! மேலும், அடுத்த பயிரான தாளடியையும் தண்ணீர்த் தட்டின்றி காலத்தில் அறுவடை செய்ய இயலுவதுடன், கோடைப்பயிர் சாகுபடிக்கும் வழி பிறக்கும்!

## உங்களுக்கு ஏற்ற இரகத்தைத் தேர்ந்தெடுங்கள்!

| இரகம் | வயது | நாற்று விடும் காலம் | அறுவடை காலம் |
|---|---|---|---|
| (அ) முன்கூட்டி நாற்றுவிட்டு நட வசதி உள்ளவர்களுக்கு:— | | | |
| ஐ.ஆர். 8.<br>ஐ.ஆர். 20. | 135 நாள்<br>135 நாள் | வைகாசி 1 முதல் வைகாசி 17 வரை (மே 15 முதல் மே 31 வரை) | புரட்டாசி 10 முதல் புரட்டாசி 25 வரை. (செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 11 வரை.) |
| (ஆ) முன்கூட்டி நாற்றுவிட்டு ஆற்று நீரைக்கொண்டு நடுபவர்களுக்கு:— | | | |
| ஐ.ஆர். 8.<br>ஐ.ஆர். 20. | 135 நாள்<br>135 நாள் | வைகாசி 18 முதல் ஆனி 16 வரை. (ஜூன் 1 முதல் ஜூன் 30 வரை) | புரட்டாசி 27 முதல் ஐப்பசி 24 வரை (அக்டோபர் 13 முதல் நவம்பர் 10 வரை.) |
| கருணை<br>கண்ணகி | 108 நாள்<br>103 நாள் | ஆனி 1 முதல் ஆனி 16 வரை (ஜூன் 15 முதல் ஜூன் 30 வரை) | புரட்டாசி 16 முதல் புரட்டாசி 30 வரை. (அக்டோபர் 2 முதல் அக்டோபர் 26 வரை.) |
| (இ) ஆற்றில் நீர் வந்தபின் நாற்று விடுபவர்களுக்கு:— | | | |
| கருணை<br>கண்ணகி<br>கரிகாலன் | 108 நாள்<br>103 நாள்<br>110 நாள் | ஆனி 17 முதல் ஆடி 11 வரை (ஜூலை 1 முதல் ஜூலை 27 வரை) | ஐப்பசி 1-லிருந்து ஐப்பசி 26 வரை. (அக்டோபர் 18 முதல் நவம்பர் 12 வரை.) |

'ஐ.ஆர். 8' இரகம் ''பிலிப்பைன்ஸ்'' நாட்டிலுள்ள அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சிக் கழகத்தில் உருவானது. இந்த இரகம் 135 நாட்களில் மிக அதிகமான மகசூல் அளிக்கும் திறன் கொண்டது. இதன் பயிர்கள் குட்டையாக இருப்பதால், சாய்ந்து சேதம் ஏற்படுத்துவதில்லை. இந்த இரகம் குறைந்தது மாவுக்கு 30 கலம் அல்லது ஏக்கருக்கு 90 கலம் மகசூல் கொடுக்கவல்லது!

இதே வயதுடைய ஆனால் சன்ன அரிசி தரக்கூடிய 'ஐ.ஆர். 20' இரகமும் பிலிப்பைன்ஸ் நாட்டில்தான் உருவாகியது. இதுவும் சாயாது! மாவுக்கு 25 முதல் 30 கலம் வரை விளைச்சல் அளிக்கிறது!

குறுகிய வயதுடைய 'கருணை' (கோ. 33), ஐ.ஆர். 8 இரகத்தையும், ஆடுதுறை 27 இரகத்தையும் கருஒட்டுச் செய்து உருவாக்கப்பட்டது. வயது 108 நாட்களே. இதுவும் சாயாது! மாவுக்கு 25 கலம் முதல் 30 கலம் வரை விளைச்சல் கொடுக்கக்கூடியது!

'கண்ணகி' இரகம் கருணையை விட வயதில் குறைந்தது. இதன் வயது 103 நாட்களே. இது ஐ. ஆர். 8 இரகத்தையும், டீ.கே.எம். 6 இரகத்தையும் ஒட்டுச் சேர்த்துப் புதுடில்லியுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் உருவாக்கப்பட்டது. இதுவும் கீழே சாயாது! மாவுக்கு 25 கலம் நெல் விளைச்சல் அளிக்கக்கூடியது!

'கரிகாலன்' இரகம் ஆடுதுறை மண்டலவேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 'டீ.என் 1' என்ற இரகத்தையும், 'ஏ.டி.டீ. 27' என்ற இரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டது. இதன் வயது 110 நாட்கள். இந்த இரமும் மாவுக்கு 25 கலம் விளைச்சல் கொடுக்கக்கூடியது!

எனவே, குழாய்க்கிணறு, வடிமுனைக்குழாய், கிணறு போன்ற வசதியுடையவர்கள் 'ஐ.ஆர். 8' 'ஐ.ஆர். 20' போன்ற இரகங்களை நாற்றுவிட்டு, முடிந்தால் நட்டும் விடலாம். அல்லது நாற்று விட்டு வைத்திருந்து, ஆற்றில் தண்ணீர் வந்தவுடன் நடலாம். இவ்வாறு முன்கூட்டியே நாற்றுவிட்டால்தான், மழைக்கு முன்பு அறுவடை செய்யமுடியும்!




அதுபோலவே, முன்கூட்டியே நாற்றுவிட்டு, ஆற்றுநீரைக் கொண்டு நடும் உழவர் பெருமக்களும், ஆற்றுநீர் வந்த பிறகு நாற்றுவிட்டு சாகுபடியைத் துவக்கும் உழவர் பெருமக்களும் குறைந்த கால வயதுடைய, அதிக விளைச்சல் கொடுக்கக்கூடிய இரகங்களான 'கருணை', 'கண்ணகி', கரிகாலன்' ஆகியவைகளைப் பயிரிடலாம்!

கீழ்த் தஞ்சைப் பகுதியில் 'அன்ன பூர்ணா' என்ற இரகத்தையும் குறுவைப் பட்டத்தில் பயிரிட்டு ஏக்கருக்கு 2 டன் வரை மகசூல் பெறலாம்!

இந்த ஆண்டு குறுவைப்பட்டத்தில் 'ஆடுதுறை-31' (கல்சர் 8940) என்ற இரகத்தைப் பல இடங்களில் செயல் விளக்கப் பண்ணைகளில் வேளாண்மைத் துறையினரின் நேரடிப் பார்வையில் பயிரிடப்படும். 104 நாட்கள் வயதுடைய இந்த இரகம், மாவுக்கு 25 மேனி கொடுக்கக்கூடியதாக விருப்பதால், அடுத்த ஆண்டு இந்த இரக விதைகள் உழவர் பெருமக்களுக்கு அதிக அளவில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எனவே இந்த இரகத்தின் வளர்ச்சி, மகசூல் திறன் முதலியவைகளை தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள் அனைவரும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவைப்பட்டத்தில் மேற்கூறிய இரகங்களைக் கீழே கண்டபடி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

| இரகம் | | பயிரிடவிருக்கும் பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஐ.ஆர். 8 | ... | 10,000 |
| ஐ.ஆர். 20 | ... | 20,000 |
| கருணை | ... | 3,18,000 |
| கண்ணகி | ... | 64,000 |
| கரிகாலன் | ... | 2,000 |
| அன்னபூர்ணா, திருவேணி | | 25,000 |
| ஆடுதுறை-27 | ... | 12,000 |
| மற்ற இரகங்கள். | | 10,000 |
| மொத்தம் | ... | 4,81,000 |




பொதுவாக உயர்விளைச்சல் இரகங்களிலிருந்து அதிக விளைச்சல் பெற கடைபிடிக்க வேண்டிய சாகுபடி முறைகளை எல்லா உழவர் பெருமக்களும் அறிந்திருந்தாலும், அச்சாகுபடி முறைகளின் தத்துவங்களையும், பயிர் வளர்ச்சி பற்றிய சில உண்மைகளையும் தெரிந்து கொண்டால் கூடுதல் மகசூல் பெறமுடியும்! எனவே, பின்கண்ட முறைகளை மேற்கொண்டு கூடுதல் மகசூல் பெற முனையுமாறு தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

### நாற்றங்கால் தயாரித்தல்

குறுவைப் பயிர் ஒரு ஏக்கர் நடவு செய்ய 20 கிலோ முதல் 25 கிலோ வரை விதை தேவைபடும். விதையின் பரிமாணத்தைப் பொருத்து விதையின் அளவு மாறுபடும். அதாவது 'ஐ.ஆர்.20', 'கருணை' போன்ற சன்ன நெல் இரகங்கள் சாகுபடி செய்ய 20 கிலோ விதையும், சற்று மோட்டா இரகங்களாக 'ஐ.ஆர்.8' போன்றவைகளுக்கு 25 கிலோ விதையின் போதுமானது. நோய்களைத் விதையின் மூலம் பரவும் நோய்களைத் தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் 'அக்ரசான்' போன்ற மருந்து கலக்கவேண்டும்.

''விளையும் பயிர் முளையிலே'' என்பதற்கிணங்க, நாற்று நன்ருக வாளிப்பாக இருக்க வேண்டும்! நாற்றுவிடும் பொழுது கலக்க விட வேண்டும். அதாவது ஒரு குழி நாற்றங்காலில் 0.5 கிலோ விதை விட வேண்டும். இவ்வாறு விட்டால் நாற்று பட்டை வைத்து செழிப்பாக வளரும்!

### நடவு வயல் தயாரித்தல்

நயமான சேற்றுக்கு இடைத் தரிசு இல்லாமல் பலமுறை உழுவது அவசியம்! நடவு வயலை நன்ருகச் சமப்படுத்துதல், கிடைக்கும் நீரைச் சிறந்த முறையில் பராமரிக்கவும், பயிரின் சீரான வளர்ச்சிக்கு ஆரம்ப கால முதல் உதவவும் வழி வகுக்கும்!

### அடியுரமிடல்

ஒவ்வொரு தடவைப் பயிர் செய்யும் பொழுதும் இயற்கை எருவாகிய பண்ணை எரு அல்லது கம்போஸ்ட் ஏக்கருக்கு 12 வண்டி அல்லது தழை எரு 5 வண்டி இடவேண்டும். இவைகள் பயிருக்குத் தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகியவைகளை அளிப்பதுடன் மண்ணில் பொலபொலப்புத் தன்மை உருவாக்கி நிலம் காற்றோட்டமும், வடிகால் வசதியும் பெற உதவுகிறது. மேலும் நிலத்தின் இயற்கைக் கோளாறுகளை நிவர்த்தி செய்கிறது. நிலத்தின் மண்ணை பரிசோதித்து அதன் பிரகாரம் உரமிடுதல் அவசியம். இதைக் கடைப்பிடிக்க இயலாவிட்டால், இயற்கை எரு இடுவதுடன் கூட, செயற்கை உரமும் அடி உரமாக இடவேண்டும். இடப்படும் இரசாயன உரங்களைப் பயிரின் வேர்கள் இருக்கு பாகத்தை அடையுமாறும் கலக்க வேண்டும். உரமிடும் பொழுது அதிக நீரைக் கட்டாமல் சீராக வைத்து உரம் இடவேண்டும்.

### நடவு

நடவேண்டிய நாற்றுகள் நான்கு இலைகள் வந்தவையாக இருத்தல் அவசியம்! நாற்றுக்கள் இந்த பருவமடைய விதை முளைத்ததிலிருந்து சுமார் 20 முதல் 25 நாட்கள் பிடிக்கும்! 25 நாட்களுக்குள் நாற்றைப் பறித்து நட்டுவிட வேண்டும். நாற்றை நடும் பொழுது மேலாக நடவேண்டும். மேலும் சரியான இடைவெளிவிட்டு நடவேண்டும்.

''நெருக்கி நட்டு நெல்லைப் பெருக்கு!'' என்ற பழமொழிக்கேற்ப நெருக்கி நடுதல் அவ

சியம்! வரிசை நடவு நட்டாலும் சரி, சாதாரண நடவு நட்டாலும் சரி, ஒரு சதுர மீட்டர் பரப்பில் 66 குத்துகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.



மேலுரமிடுதல்

'கருணு', 'கண்ணகி', 'கரிகாலன்' ஆகிய இரகங்களுக்குப் பழைய டெல்டா பகுதியில் இடப்படும் மேலுரத்தை பிரித்து இடவேண்டும். நட்ட 15-ஆம் நாள் ஒருமுறையும், சூல் பருவத்தில் ஒரு முறையும் ஆக இரண்டு தடவை பயிரின் வளர்ச்சியைக் கவனித்து இட வேண்டும். தேவைப்பட்டால் புதிய டெல்டா பகுதியில் கலப்புக் கதிர் காணும் தருணத்தில் ஆக மூன்று முறை மேலுரமிடலாம். 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20' இரகங்களுக்கு இடப்படும் மேலுரத்தை இரண்டு சமபாகமாகப் பிரித்து நட்ட 15-ஆம் நாள் ஒருமுறையும், சூல் கட்டத்தில் ஒரு முறையும் பயிரின் வளர்ச்சிக்கேற்ப மேல் உரமிடுவது சிறந்தது.

**பயிர்ப் பாதுகாப்பு**

பூச்சி, பூசண நோய்களின் தாக்குதல் தென்பட்டால், வேளாண்மைத் துறையினரின் பரிந்துரைப்படி மருந்தடிக்க வேண்டும்.

'செயற்கை உரம் ஓரளவு பற்றாக்குறையாக உள்ள இத் தருணத்தில், உயர் விளைச்சல் இரகங்களைச் சாகுபடி செய்ய இயலுமா?' என்ற ஒருவித சந்தேகம் ஒரு சில முன்னேற்ற உழவர் பெருமக்களிடம் கூட ஏற்பட்டுள்ளது! இயற்கை உர உற்பத்தியைப் பெருக்கி, கிடைக்கும் செயற்கை உரத்தை இரண்டு பகுதியாக பிரித்து 1 முதல் 2 அங்குல ஆழத்தில் கிடைக்கும்படிச் செய்து, மேற்கூறிய வேளாண் பணிகளை முறையோடு செய்தால், இந்த உயர் விளைச்சல் இரகங்களிலிருந்து குறுவைப்பட்டத்தில் அதிக விளைச்சல் பெற முடியும் என்பது திண்ணம்!

—பி. கே. சிவசுப்ரமணியம்,
திட்ட அலுவலர்,
தீவிர சாகுபடித் திட்டம்,
தஞ்சாவூர்,

## உயர்ந்த மகசூல் தருவது நிறைந்த தூர்களே!

'பயிர்களின் எண்ணிக்கையே பாதி மகசூல்!' என்பதற்கிணங்க, ஒரு நெற்பயிர் தரும் மொத்த மகசூலின் அளவு, அது விடும் மொத்தத் தூர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே அமைவதாலும், தூர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் இழப்பை, பின்னல் ஈடுகட்டுவதற்கான வழிமுறைகள் இல்லாத காரணத்தினுலும், நெற்பயிரில் தூர்கள் பிடிப்பது சிறப்பாக இருக்க வழி செய்யும் வகையில், பின்வரும் சாகுபடி முறைகளைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

1. இளம் நாற்றுக்களை நடுவது.
2. நாற்றுக்களை நெருக்கமாக நடுவது.

3. மூன்று முதல் ஐந்து சென்டி மீட்டர் ஆழத்தில் நாற்றுக்களை மேலோட்டமாக நடுவது.

4. தூர்கட்டும் பருவத்தில், குறைந்த அளவு நீரைப்பாய்ச்சி அது மெல்லிய ஆடைபோல் மேற்பரப்பில் சீராகப் பரவி நிற்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய பாசனம், தூர்ப் பிடிப்பைத் துரிதப் படுத்துகிறது.

5. நல்ல முறையில் தூர்கள் கிளைக்க உதவும் வகையில், மணிச்சத்து மற்றும் துத்தநாகச் சத்துக்களைப் போதியளவு அடியுரமாக இடுவது.

6. தழைச்சத்து உரங்களைத் தக்க காலத்தில் இடுவது.

இந்தச் சாகுபடி முறைகள் அனைத்தும் நெற்பயிரின் ஆரம்ப கால வளர்ச்சியைத் துடிப்பாக்கி, தூர்க்கட்டுதலை அதிகப் படுத்தப் பெரிதும் உதவுகின்றன. குறிப்பாக, பாதகமான பருவ நிலைகளிலும், குறைந்த அளவு உரங்களை உபயோகிக்க வேண்டிய சூழ்நிலைகளிலும் இந்தச் சாகுபடி முறைகள் சிறந்த பலன்களைத் தருகின்றன.

4 முதல் 6 இலைகளுடன் (ஐந்திலை நாற்றுகள் மிகவும் சிறந்தவைகள்) கூடிய, 25 முதல் 30 நாட்கள் வயதுடைய நாற்றுகள் நடவு வயலில் எளிதில் வேரூன்றி, விரைவில் பச்சை பிடிக்கும் ஆற்றல் நிறைந்தவை. ஆகவே, இத்தகைய இளம் நாற்றுகளை நடுவது நல்லது!

தூர்களாக வெளிவரும் பருக்கள், நாற்றின் அடிப்பாகத்தில் உள்ள கணுக்களில் அமைந்திருப்பதால், நாற்றுகளை 3 முதல் 5 சென்டி மீட்டர் ஆழத்தில் 'மேலோட்டமாக' நடுவது நல்லது. இதற்குமாருக வழக்கம் போல் ஆழமாக அழுத்தி நடவு செய்தால், தூர்விடும் பருக்கள், சேற்றில் ஆழமாக அழுந்திவிடுமாதலால், தூர்கள் வெளிவருவது தடைபடும். இதனுல் தூர்களின் எண்ணிக்கை பெரிதும் பாதிக்கப்படும்.

நாற்றுகளை 10 × 15 சென்டி மீட்டர் இடைவெளியில் நெருக்கமாக நடுவது நல்லது. இதனுல் நடப்படும் செடிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது. ஆகவே வெளிவரும் தூர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிறது.

தூர்களின் எண்ணிக்கை அதிகமானுல், மகசூலும் அதிகமாகும்!

வளங்குறைந்த வயல்களில் சாகுபடி செய்யும்போதும், குறைந்த அளவு உரங்களை உபயோகித்துச் சாகுபடி செய்ய வேண்டிய நிலைகளிலும், இந்த 10×15 சென்டி மீட்டர் இடைவெளி பெரிதும் விரும்பத்தக்கது. இதனுல்தான் 'நெருக்க நட்டு நெல்லைப்பார்' என்கின்ருேம். மேலும் 10×15 சென்டி மீட்டர் இடைவெளியில் நெருக்கமாக நடவு செய்கின்றபோது அதிகமான அளவு செடிகளின் வேர்கள், வயல் முழுவதும் சீராகப் பரவி, மண்ணிலுள்ள பயிர்ச் சத்துக்களை நல்லமுறையில், முழு அளவில் பயன்படுத்திக் கொள்கின்றன. இதன் காரணமாக நிலத்தில் இடப்படுகின்ற உரங்களின் சேதாரம் கணிசமாகக் குறைகிறது. மேலும் நிலத்திலுள்ள இயற்கை வளம் சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இளம் நாற்றுகளை நெருக்கமாகவும், மேலோட்டமாகவும் நட்டு, தழைச்சத்து உரங்களைத் தக்க காலத்தில் இடுவதே நிறையத் தூர்கள் கிளைப்பதற்குரிய வழியாகும்.



# தஞ்சையில் குறுவைப் பெருவிழா!

வேளாண்மை, ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாகும்! தமிழ் நாட்டின் நெல் உற்பத்தியில், கால் பங்கிற்கு மேல் தஞ்சை மாவட்டத்தில் தான் உற்பத்தியாகிறது! ஏறத்தாழ 12.50 இலட்சம் ஏக்கர் நன்செய் நிலங்களைக் கொண்ட தஞ்சையில், இன்று நெல் மட்டும் சுமார் 16.70 இலட்சம் ஏக்கரில் சாகுபடியாகிறது. 1960—61-ஆம் ஆண்டில் 13.50 இலட்சம் டன்னுக இருந்த நெல் உற்பத்தி இன்று சற்றேறக்குறைய 22.60 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது! அரிசி உற்பத்தியில் பற்ருக்குறை மாநிலமாக இருந்த நமது தமிழகம் இன்று உபரி மாநிலமாக விளங்குவதற்கு, தஞ்சைமாவட்ட வேளாண்மை வளர்ச்சியே மூல காரணம் என்ருல், மிகையாகாது!

இத்தகைய முன்னேற்றத்திற்கு, இத் தொழிலை மேற்கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான உழவர்களின் ஊக்கமும், தமிழ்நாடு அரசின் இடைவிடாத முயற்சியுமே முக்கிய காரணம் என்ருல் தவருகாது! வேளாண்மையை ஒரு வாழ்வியலாகக் கடைப் பிடித்து வந்த நிலைமாறி, அதனை ஒரு இலாபகரமான தொழிலாக மாற்றியமைக்கும் எண்ணம் இன்று உழவர்களிடத்தில் தோன்றியுள்ளது! இந்த எண்ணம் தோன்றியதற்கு தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறையினரின் ஓயாத உழைப்பும் இடையரு முயற்சியுமே காரணமாகும். இச் சீர்மிகு முயற்சியை நிறைவேற்ற தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள், புதிய வேளாண்மை முறைகளை —விஞ்ஞான ரீதியில் —பின் பற்ற வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும்!

தீவிர சாகுபடித் திட்டம் 1960-ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் தொடங்கியதிலிருந்து, 'ஒவ்வொரு ஏக்கரிலும் அதிக உற்பத்தி! ஒவ்வொரு உழவர்க்கும் அதிக வருவாய்!' என்ற குறிக்கோளுடன் பல திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. அவைகளில் ஒன்றுதான் 1970-ஆம் ஆண்டிலிருந்து தஞ்சைமாவட்டத்தில் நடைபெற்று வரும் 'குறுவைப் பெருவிழா!'

தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள், தங்கள் நெல் அறுவடை முடித்து, கோடை மாதங்களான ஏப்ரல், மே மாதங்களில் விழாக்களிலும், கேளிக்கைகளிலும் ஈடுபடுவது தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாகும். இக் காலத்தில் விழாக்கள் நடை பெருத கிராமமே இல்லை யென்று சொல்லலாம். இந்த வழக்கத்தினைப் பயன்படுத்தி, உழவர்கள் வாழ்வு வளம்பெற குறுவைப் பெரு விழாவைக் கோடையில் நடத்துதல் பயன் உடையதாக இருக்கும் என்று எண்ணியே, வேளாண்மைத் துறையினர் தஞ்சை மாவட்டமெங்கும் குறுவைப் பெருவிழா நடத்தி, குறுவை மகசூல் பெருகுவதற்குரிய வழி வகைகளை விளக்கி வருகின்றனர்.

தஞ்சை மாவட்டத்தில் கோடையில், ஒவ்வொரு ஆண்டும் 720 கிராமங்களில் குறுவைப் பெருவிழா நடத்தப் படுகிறது. ஒவ்வொரு விழாவிலும் உழவர்கள் அந்த ஆண்டு கடைப்பிடிக்கவிருக்கும் பயிர் சுழற்சி, ஒவ்வொரு பயிரிலும் உயர்விளைச்சல் பெற இலாபகரமாக மேற்கொள்ள வேண்டிய முறைகள், கூட்டுறவுத்துறை வேளாண்மைக்கு அளித்து வரும் உதவிகள் ஆகியவைகளைப் பற்றிய கருத்துக் காட்சி, நிழல் படக்காட்சி, செயல் விளக்கம், நாடகம், பிரசுரங்கள் முதலியவற்றின் வாயிலாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கும், தெரியாதவர்களுக்கும் தெளிவாகப் புரியும் வண்ணம் எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வாண்டும் தஞ்சை மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 20 கிராமங்களில், 4—5—74 அன்று துவங்கி, இக் குறுவைப் பெருவிழா நடைபெற்று வருகிறது. இவ் விழாக்கள் நடக்கும் கிராமங்களை முன் கூட்டியே துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப் படுகிறது. இவ் விழாவைச் சிறப்பாக நடத்திட, என்றும் உழவர்களுக்கு உறு துணையாக இருக்கும் வேளாண்மை விரிவு ஆக்கப் பணியாளர்கள் அனைவருக்கும் ஏப்ரல் மாதம் முழுவதும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப் பயிற்சி, விரிவாக்கப் பணியாளர்கள், ஆண்டு வேளாண்மைத் திட்டம் பற்றி அறிந்து கொள்வதுடன், புதுப் புது விஞ்ஞான கருத்துக்களையும் முழு அளவில் தெரிந்து கொள்வதால், அவைகளை உழவர் பெரு மக்களின் வயல்களிலேயே செயல் விளக்கம் மூலமாக மிளிரச் செய்யப் பெரிதும் உதவுகிறது. இதனுல் உழவர் வாழ்வு வளம் பெறவும், உணவு உற்பத்தி பெருகிடவும் 'குறுவைப் பெருவிழா' பயனுள்ளதாக அமைந்து உள்ளது!

# அடியுரம் வேண்டாம்! மேலுரம் போதும்!

இன்று நம் நாட்டில் நிலவி வரும் உரத்தட்டுப்பாடு காரணமாக, நம்முடைய பயிர்களுக்கு உரத்தைக் ''குறைத்து இட வேண்டிய'' கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு உரத்தைக் குறைத்து இட்டுச் சாகுபடி செய்ய வேண்டிய சூழ்நிலையில் தழைச்சத்து உரத்தை அடியுரமாக இடவேண்டிய அவசியமில்லை.

மணிச்சத்தும், துத்தநாகச் சத்தும் குறைந்து காணப்படும் நிலங்களுக்கு மட்டுமே, இச் சத்துக்களின் குறைவை நிறைவு செய்யும் வகையில், அடியுரமிட வேண்டும்.

நடப்பட்ட இளம் நாற்றுகள் வேர்ப்பிடித்து, தழைச் சத்து உரங்களைத் துரிதமாக உட்கிரகிக்கும் நிலைக்கு வர, 2 முதல் 3 வாரங்கள் பிடிக்கும். ஆகவே, அடியுரமாக இடப்பட்ட தழைச்சத்து உரங்கள், பயிரினால் உட்கிரகிக்கப்படாமல், நீரில் கரைந்து வெளியேறி வீணாகப் போக வாய்ப்புகள் உள்ளன. உரத்தட்டுப்பாடு மிகுந்த இந்த நேரத்தில் இத்தகைய உர விரயத்தைத் தாங்கும் ஆற்றல் நமக்கில்லை!

ஆகவே, அடியுரம் இடுவதற்குப் பதிலாக, ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ கிராம் தழைச்சத்தை (75 முதல் 100 கிலோ கிராம் அமோனியம் சல்பேட் அல்லது 30 முதல் 45 கிலோ கிராம் யூரியா) மேலுரமாக, பயிரில் கதிர் வெளிவருவதற்கு 40 நாட்கள் முன்னதாக இடவேண்டும். இந்தக் காலக்கட்டம், 130 நாட்கள் வயதுடைய 'ஜெயா' மற்றும் 'சோனா' நெல் ரகங்களைப் பொறுத்த வரையில் நட்ட 30-35வது நாட்களில் வரும். 120 நாட்கள் வயதுடைய 'ரத்னா' போன்ற நெல் ரகங்கள் நட்ட 20-25 நாட்களில் வரும்.

இவ்வாறு மேலுரமிட உத்தேசித்துள்ள இந்தக் காலக்கட்டம் வரும்போது பயிர், நிலத்திலுள்ள இயற்கை வளத்தை முழுவதுமாகப் பயன்படுத்தியிருக்கும். இதன்காரணமாகத் தழைச்சத்துப் பற்றாக்குறை ஏற்பட்டுப் பயிர்கள், பசுமை குறைந்து இலேசாக வெளிரத் தொடங்கும். இதுவே தழைச்சத்தை இடத் தகுந்த தருணம்! இந்தத் தருணத்தில் இடப்படும் தழைச்சத்தை, பயிர் விரயம் செய்யாமல் முழு அளவில் உட்கிரகித்துக் கொள்ளுகிறது. இதற்கு ஏதுவாக இந்த நேரத்தில் பயிரின் வேர்கள் முழுமையான வளர்ச்சியடைந்து திறம்படச் செயல்படும் ஆற்றல் வாய்ந்தனவாக இருக்கின்றன.

ஏக்கருக்கு 16 கிலோ கிராம் தழைச்சத்தை கதிர் வாங்குவதற்கு 40 நாட்களுக்கு முன்பாக மேலுரமாக இட்டபோது 'சோனா' நெல் ரகம், இடப்பட்ட ஒவ்வொரு கிலோ கிராம் தழைச்சத்து உரத்திற்கும் 70 கிலோ கிராம் தானியங்கள் என்ற விகிதத்தில் கூடுதல் மகசூல் தந்தது. ஐ.ஆர். 20 நெல் ரகத்தில் இந்த விகிதம் 50 கிலோ கிராமாக இருந்தது.

மேலுரத்தை 'கதிர்' வாங்குவதற்கு 40 நாட்கள் முன்னதாக' என்ற இந்த காலக்கட்டத்திற்கு முந்தியோ அல்லது பிந்தியோ இடுவதினால் கிடைத்த மகசூல் அவ்வளவு அதிகமாக இல்லை. ஆகவே மேலுரமிடுவதற்கு இதுவே சிறந்த காலக்கட்டம் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலக்கட்டத்தில் பயிர் துரிதமாகத் தூர் கட்டும் நிலையில் இருக்கும். அப்போது, தழைச்சத்தை மேலுரமாக இடுவதினால், உரத்தின் உற்பத்தித் திறன் இரு மடங்காக உயர்ந்து காணப்படுகிறது. இதன் காரணமாக உரத்தை ஒன்றுக்குப்பதிலாகக் குறைத்து இட்டாலும், உரத்தின் உற்பத்தித் திறன் இருமடங்காக உயர்ந்து, மகசூலின் அளவை அதிகப்படுத்துகிறது.

உரப் பற்றாக்குறை நிலவும் தற்போதைய நிலையில் உரத்தைக் குறைத்து இட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏற்படும் மகசூல் குறைவை நிறைவு செய்ய, சரியான சாகுபடி முறைகளை உரிய காலத்தில் கவனமுடன் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் இடுகின்ற குறைந்த அளவு உரங்களை 'உரிய காலத்தில்' இட்டு உரங்களின் உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும்.





## மானாவாரி மகசூல் பெருக்கிட பத்துக் கட்டளைகள்!

1. புன்செய் நிலங்களில் சம உயர வரப்பு (Contour bund) அமைக்க வேண்டும்.

2. மண்ணில் ஈரத்தைப் பாதுகாக்க, புன்செய் நிலங்களை நாட்டுக் கலப்பை அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் 2 அல்லது 3 முறை உழவேண்டும்.

3. கடைசி உழவு, சம உயர வரப்பு (Contour) செய்யப்பட அமைந்துள்ளவாக்கில் வேண்டும்.

4. புன்செய் நிலங்களில் வரப்பு அமைக்க வும், குறுக்கு வரப்பு அமைக்கவும், பார் கலப்பையைப் (Bund former) பயன்படுத்த வேண்டும்.

5. புன்செய் நிலத்தில் சமநிலைக் கோட்டு வாக்கில் அதாவது சம உயர வரப்பு அமைந்துள்ள வாக்கில் விதைக்க வேண்டும்.

6. புன்செய் நிலத்தில் தனி ஒரு பயிரைப் பயிரிடாமல், தகுந்த கலப்புப் பயிர்களைப் (Mixed crops) பயிரிட வேண்டும்.

7. புன்செய் நிலங்களில் வரிசை வரிசையாகவே விதைக்க வேண்டும். வரிசையாக விதைப்பதற்கு 'கொரு' (Gorru) எனப்படும் கருவி, விதைக் கலப்பை (Seed drill) ஆகியவைகளைப் பயன் படுத்தவேண்டும்.

8. புன்செய் நிலங்களில் களையெடுக்க 'தந்துலு' (Dantulu) எனப்படும் கருவி அல்லது 'புன்செய் நிலக் களையெடுக்கும் கருவி'யைப் (Dryland weeder) பயன்படுத்த வேண்டும்.

9. புன்செய் நிலப் பயிர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் அளவில் தொழு எரு, இரசாயன உரம் ஆகியவைகளை இட வேண்டும்.

10. புன்செய்ப் பயிர்களுக்கும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள 10 கட்டளைகளையும் மேற்கொண்டு, மானாவாரி சாகுபடியை மேற்கொண்டால், மானாவாரி மகசூல் பெருகுவது திண்ணம்!

—— ஆர். எம்.



# மானாவாரிப் பயிர்களில் மகசூல் பெருக்கிட

## சில அறிவுரைகள்!

வேளாண்மை முன்னேற்றத்தைப் பற்றி நாம் குறிப்பிடும் பொழுது, உயர் விளைச்சல் தரும் ரகங்களைப்பயிரிடுதல், உறுதியான நீர்ப் பாசன வசதியுள்ள இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட எல்லா ஒருமித்த செய் நேர்த்தி முறைகளையும் மேற்கொள்ளுதல், அதிக அளவு மகசூல் பெறுதல் ஆகியவைகளை மட்டுமே நாம் எப்பொழுதும் எண்ணுகின்றோம். இந்தியாவில், ஏறத்தாழ 45 சத பண்ணை உற்பத்திப் பொருள்கள், பயிர் உற்பத்திக்கு மழையையே முழுக்க முழுக்க நம்பி இருக்கும் புன்செய் நிலங்களிலிருந்தே கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஏறத்தாழ 60 சத சாகுபடி நிலங்கள் நீர்ப் பாசன வசதி பெற்றிருக்கவில்லை! பயிர் சாகுபடிக்கு அந்த நிலங்கள் மழையையே நம்பியுள்ளன! இந்தப் புன்செய் நிலங்களில் பயிர் விளைச்சலை உயர்ந்த அளவாக உற்பத்திச் செய்ய வேண்டும்என்ற குறிக்கோளைக் கொண்டால் தான், நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்! புன்செய் நிலங்களில் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய வழி முறைகளைப் பற்றிஅறிந்து கொள்வதற்கு முன்பாக, புன்செய் நிலங்களில் குறைந்த மகசூலே கிடைப்பதற்கான காரணங்களை அறிந்து கொள்ளுதல் பயனுடையதாக இருக்கும்.

1. புன்செய் நிலப் பகுதிகளில் முறையாக மழை பெய்வதில்லை.

2. பெய்யும் மழையும் போதுமானதாக இருப்பதில்லை!

3. அதுவும், புன்செய் நிலப் பகுதி எங்கும் பரவலாகப் பெய்வதில்லை!

4. அற்பமாகப் பெய்யும் மழையையும், சரியாகப் பயன்படுத்தப்படுவதில்லை!

5. புன்செய் நிலச் சாகுபடி, ஒரு வாழ்வு நிலையாகவே உள்ளது.

6. புன்செய் நில உழவர்கள் பொதுவாகவும், சமுதாய—பொருளாதர-வேளாண்மை நிலைமைகளிலும் பின் தங்கியவர்களாக இருக்கின்றார்கள்!

மேற்கூறிய 6 காரணங்களினாலேயே, புன்செய் நில மகசூல் மிகவும் குறைவாக உள்ளது.

புன்செய் நிலங்களில் பெய்யும் மழையை உழவியல் முறைகளைக் கொண்டு பாதுகாப்பதன் மூலம், மானாவாரிப் பயிர்களிலிருந்தும் நல்ல மகசூல் காண வாய்ப்புள்ளது!

புன்செய் நிலங்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குரிய வழி முறைகளை பின் கண்டவாறு வகைப்படுத்தலாம் :

1. நீர் மற்றும் மண் வளப் பாதுகாப்பு.



2. முன்னேற்ற உழவியல் முறைகள்.

### நீரையும் மண்ணையும் பாதுகாத்தல்

அற்ப சொற்பமாகப் பெய்யும் மழையினால் கிடைக்கும் தண்ணீர் சேதமாவதைத் தடுக்கவும், அதிக மழையினால் ஏற்படும் மண் அரிப்பைத் தவிர்க்கவும், புன்செய் நிலங்களில் சமநிலைக் கோட்டுவரப்புகள் அமைக்க வேண்டும். இது மண்ணில் தண்ணீர் நன்கு தங்குவதற்கு வழி வகுப்பதுடன், மண் ஈரத்தை அதிகப்படுத்துகிறது. இதனால் புன்செய் நிலப் பகுதிகளில் நீர் மட்ட நிலையும் உயருகிறது. இதன் பயனாய், கிணறுகளின் மூலம் பாசன வசதி பெருகுகிறது.

முதலாவதாக மானாவாரி கரிசல் மண்ணில் 10 செண்ட் அளவுள்ள பாத்திகள் அமைக்க வரப்பு கட்டும் கருவியைப் (Bund former) பயன் படுத்தலாம். இக் கருவி மூலம் 9 முதல் 12 அங்குல உயரம் உடைய வரப்புகள் அமைக்க இயலும். இவ்வாறு அமைக்கப்படும் வரப்புகள் மண் அரிப்பதைத் தடுப்பதுடன், மழை நீர்ச் சேதமாவதைத் தடுத்து நிறுத்தி மண் ஈரத்தை அதிகப்படுத்துகின்றன.

இரண்டாவதாக 'பேசின் லிஸ்டர்' (Basin lister) என்னும் கருவியைப் புன்செய் நிலங்களில் பயன்படுத்துதல் பயனுடையதாகும். இக்கருவி புன்செய் நிலத்தில் சிறு சிறு பள்ளங்களை ஏற்படுத்தி, மழை நீர் மண்ணிலேயே உறிஞ்சப் படஉதவுகிறது.

மூன்றாவதாக, நிலத்தின் சரிவிற்குக் குறுக்கே உழவு செய்ய வேண்டும். இவ்வாறு உழுவதால், மழை நீர் படைசாலிலேயே உறிஞ்சப்படும்.

இத்தகைய வழி முறைகள், புன்செய் நிலங்களில் மண்ணையும், நீரையும் பாதுகாக்க உதவுகின்றன.

### முன்னேற்ற உழவியல் முறைகள்

1. நிலத்தை இரும்புக் கலப்பை அல்லது மேழூர் கலப்பை அல்லது டிராக்டர் மூலம் நன்கு உழ வேண்டும். நன்கு உழவு செய்வது பின் கண்ட பயன்களைத் தருகின்றன :

(1) மண், தண்ணீரை உறிஞ்ச உதவுகிறது.

(2) களைகளைக் கொல்லுகிறது.

(3) இடப்பட்ட உரம் மண்ணுடன் நன்கு கலந்திட உதவுகிறது.

2. மண்ணிலிருந்து பயிருக்குக் கிடைக்கும் ஈரத்தையும், குறைந்த அளவில் கிடைக்கும் சத்துக்களையும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள, நிலத்தில் போதுமான அளவில் பயிர்கள் இருந்திடச் செய்ய வேண்டும். கையினால் விதைகளைத் தூவி விதைப்பதற்குப் பதிலாக விதைக்கும் கருவி (Seed drill) பயன்படுத்தி விதைப்பதின் மூலம், நிலத்தில் போதிய எண்ணிக்கையில் பயிர்களை வளர்த்திடலாம். விதைப்பதற்கு முன்பு தகுந்த பூஞ்சாள மருந்துடன் விதைகளைக் கலக்க வேண்டும்.

3. புன்செய் நிலப் பயிர்களுக்கு உரமிடப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. போதிய மண் ஈரம் இருக்கும் பொழுது, புன்செய் நிலங்களுக்கு உரமிடுவது பயனுடையது என சோதனைகள் காட்டுகின்றன.

4. புன்செய் நிலங்களில் குறைந்த அளவில் கிடைக்கும் மண் ஈரத்திற்கும், சத்துக்களுக்கும் களைகள் போட்டியிடுவதைத் தவிர்க்க, புன்செய் நிலங்களில் களையெடுத்தல் மிகவும் இன்றியமையாததாகும். முன்பே குறிப்பிட்டபடி, விதைக்கும் கருவியைப் பயன்படுத்தி வரிசை வரிசையாக விதைத்திருந்தால், 'ஜூனியர் ஹோ' அல்லது 'தந்தலு' போன்ற செலவைக் குறைக்கும் சிக்கன உழவுக் கருவிகளைப் பயன்படுத்திக் களையெடுக்கலாம்.

### புன்செய் நிலக் களையெடுப்பான்

வரிசையாக விதைக்கப்பட்டுள்ள பயிரில் களையெடுக்க ஒரு புதிய, 'புன்செய் நிலக் களையெடுப்பான்' உருவாக்கப்பட்டுள்ளது! மானாவாரி நிலங்களில் களையெடுக்க இக் கருவியைப் பயன்படுத்தலாம். இக் கருவி, மண்ணை எளிதில் கிளறி விட வேண்டும் என்பதற்காக, முக்கோண பற்கள் உருளையில் பொருத்தப்பட்டுள்ளன.




பற்களுடன் கூடிய உருளையின் பின்னால் உள்ள கத்தி போன்ற அமைப்பு, களைகளை வேருடன் வெட்டி வெளியே கொண்டு வருகின்றன. இக் களையெடுப்பானைப் பயன்படுத்துவதால், களைகளை அகற்ற முடிவதுடன், மண்ணும் கிளறி விடப்படுகிறது. இது ஒரு கூடுதல் பயனாகும்! குறைந்தது 10 செண்டி மீட்டர் இடைவெளியில் உள்ள வரிசைப் பயிர்களின் இடையே இக் கருவியைப் பயன்படுத்தலாம். இக் கருவி எல்லா வகை மண்ணிற்கும் ஏற்றதாக உள்ளது. ஆயினும் வரிசையில் உள்ள பயிர்களுக்கு மிக அருகிலும், இடையிலும் உள்ள களைகளை அகற்றிட, கூடுதல் ஆள் தேவைப்படுகிறது. இக்கருவியைக் கொண்டு சராசரியாக 8 மணி நேரத்தில் 25 செண்ட் பரப்பில் களை எடுக்க முடியும். இதன் எடை 5.5 கிலோ உள்ளது. இக் கருவியின் விலை ரூபாய் 50.

5. பருவ மழை தவறிவிடுவதால் ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்கவும், பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதலைத் தவிர்க்கவும், கலப்புப் பயிர் சாகுபடி செய்வதே சிறந்தது. பின்கண்டவாறு கலப்புப் பயிர் செய்வது பயனுடையதாக இருக்கும்.

1. பருத்தி + தினை

2. பருத்தி + பயறு வகைகள்

3. நிலக்கடலை + துவரை.

4. கம்பு + பயறு வகைகள்

5. சோளம் + பயறு வகைகள்

இத்தகைய கலப்புப் பயிர்கள், மிகவும் மோசமான பருவ நிலையிலும் ஓரளவிற்கு மகசூல் கிடைத்திடச் செய்யும்! மேற்கூறிய கலப்புப் பயிர்களை, ஆண்டுதோறும் தொடர்ந்து பயிர் சுழற்சியாகவும், பயிரிடலாம்.

6. புன்செய் நில உழவர்கள், தாங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள பால் பண்ணை அமைத்தல், கோழி வளர்த்தல், கொய்யா, மாதுளை போன்ற வட்சியைத் தாங்கும் பழ மரங்களை வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடலாம்.

7. மானாவாரி நிலைமையில் பயிரிடுவதற்கு உகந்த திருந்திய பொறுக்கு விதை இரகங்கள் சாகுபடிக்குக் கிடைக்கின்றன. புன்செய் நில உழவர்கள்—தங்கள் நிலங்களிலிருந்து உயர்ந்த அளவு உற்பத்தி செய்ய — இத்தகைய இரகங்களையே பயிரிட வேண்டும். புன்செய் நிலச் சாகுபடிக்கு உகந்த சில திருந்திய இரகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**புன்செய்க்கு ஏற்ற இரகங்கள் !**

| வரிசை எண். (1) | பயிரின் பெயர் (2) | இரகத்தின் பெயர் (3) |
|---|---|---|
| 1. | நெல் ... ... | கோ. 31, கோ. 19. |
| 2. | சோளம் ... ... | சி.எஸ்.எச். 2. |
| 3. | கம்பு ... ... | எச். பி. 3. |
| 4. | தினை ... ... | கோ. 3, கோ. 4, கோ. 1. |
| 5. | சாமை ... ... | கோ. 2. |
| 6. | வரகு ... ... | கோ. 2. |
| 7. | துவரை ... ... | கோ. 1. |
| 8. | உளுந்து ... ... | கோ. 1, கோ. 2. |
| 9. | பச்சைப்பயறு ... | கோ. 1, கோ.2. |
| 10. | கொண்டைக் கடலை ... | கோ. 1. |
| 11. | பருத்தி ... ... | எம்.சி.யு. 6. |
| 12. | நிலக்கடலை ... ... | டீ.எம்.வி. 7, டீ.எம்.வி. 2, பி.ஓ. எல். 2. |
| 13. | எள் ... ... | டீ.எம்.வி. 1, டீ. எம். வி. 2, கே.ஆர்.ஆர். 1. |
| 14. | ஆமணக்கு ... ... | எஸ்.ஏ. 1, டீ.எம். வி. 1, டீ.எம்.வி. 2, டீ. எம்.வி.3. |
| 15. | சூரியகாந்தி ... ... | கே.1. |

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கண்டு பிடிக்கப்பட்ட புன்செய் நிலங்களுக்கு ஏற்ற சில இரகங்களும், அவைகளுக்குரிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## கோ. 2 சாமை

இது ஒரு நடுத்தரமான-புதர் போன்று அடர்த்தியாக வளரக் கூடிய-சாமை ரகமாகும். இந்த இரகம் குறுகலான தோகைகளையும் (இலை), 8 முதல் 10 தூர்களையும் கொண்டது. இதன் பல்பிரிவுப் பூங்கொத்து விரிந்தும், வளைந்தும் காணப்படும்.

பயிர் சாயாத தன்மையையும், வறட்சியைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலையும், கதிர்களிலிருந்து மணிகள் உதிராத பண்பையும் கொண்ட இப் புதிய இரகம், முந்தின பட்டத்திற்கும், பிந்தின பட்டத்திற்கும் ஏற்றதாகும். இதன் வயது 80 முதல் 85 நாட்களாகும்.

செப்டம்பர் - அக்டோபர் மாத மழைப் பருவத்தில் பயிரிடுவதற்கேற்ற இந்த இரகத்தைச் சமவெளியில் மட்டுமல்ல மலைப்பிரதேசங்களிலும் பயிரிடலாம். இந்த இரகத்தைப் பயிரிட விரும்பும் உழவர்கள் பின்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

### ஒருமித்த செய்நேர்த்தி முறைகள் :

**வயது** : 80 முதல் 85 நாட்கள்.

**பட்டம்** : செப்டம்பர் - அக்டோபர்.

**விதையளவு** : வரிசை வரிசையாக விதைக்க ஏக்கருக்கு 4 கிலோ விதையும், கையால் பரவலாக விதைக்க ஏக்கருக்கு 5 கிலோ விதையும் தேவை. குறுகிய காலத்தில் பெரும் பரப்பில் விதைத்திடுவதற்காக, வரிசையில் விதைக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது.

**உரமிடுதல்** : ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கலவை எரு, 18 கிலோ தழைச்சத்து, 9 கிலோ மணிச்சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும்.

**இடைவெளி** : வரிசை விதைப்புக்கு 25 செ. மீட்டர் × 10 செ. மீட்டர். பரவலாகத் தூவி விதைத்தால் செடிக்குச் செடி 10 செண்டி மீட்டர் இடைவெளிவிட்டு, விதைக்க வேண்டும்.

**களையெடுத்தல்** : விதைத்த 15-வது நாளில் முதல் முறையாகவும், 40-வது நாளில் இரண்டாம் முறையாகவும் களையெடுக்க வேண்டும்.

**பயிர்க்கலைப்பு** : முதல் களையெடுத்த பிறகு அல்லது விதைத்த 20-வது நாளுக்கு முன்பாக பயிருக்குப் பயிர் 10 அங்குலம் இடைவெளி விட்டுக் கைகளால் பயிர்க் கலைப்புச் செய்ய வேண்டும்.

**மகசூல்** : ஏக்கருக்கு 350 முதல் 450 கிலோ.

## கோ. 4 தினை

இது நமது நாட்டில் வெளியிடப் பெற்ற முதல் குறுகிய காலத் தினை ரகமாகும்! இதன் வயது 65 முதல் 70 நாட்களாகும். 1972-ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்திந்திய சிறுதானிய செயற்கருத்தரங்கு, இந்த ரகத்தை நாடு முழுமைக்குமான ஒரு ரகமாக அனுமதித்தது. இந்த ரகப் பயிர் 2 அடி 4 அங்குலம் அளவுக்குக் குட்டையாகவே வளரக்கூடியது. 6 முதல் 8 தூர்களைக் கொண்டது இந்த ரகம்.

### ஒருமித்த செய் நேர்த்தி முறைகள்

**பருவம்** : ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

**விதையளவு** : தனிப்பயிருக்கு ஏக்கருக்கு 4 கிலோ, கலப்புப் பயிருக்கு ஏக்கருக்கு 1 கிலோ.

**விதையுடன் மருந்து கலத்தல்** : ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கரிம பாதரசக் கலவை மருந்து வீதம் கலக்க வேண்டும்.

**உரமிடுதல்** : ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு, அல்லது கலவை எரு, 18 கிலோ தழைச்சத்து, 9 கிலோ மணிச்சத்து ஆகியவற்றை அடியுரமாக இடவேண்டும்.

**பின்செய்நேர்த்தி** : விதைத்த 15-வது நாள் பயிர்க்கலைப்பு செய்ய வேண்டும். தேவையான பொழுது களையெடுக்க வேண்டும். வரிசையாக விதைத்




துள்ள தினைப் பயிரில் 'குண்டகா' மூலமாக விதைத்த 15-வது, 40-வது நாட்களில் ஊடுழவு செய்ய வேண்டும். தூவி விதைத்த பயிரில் களைக் கொட்டினால் விதைத்த 15-வது நாளிலும், 40-வது நாளிலும் கொத்திவிட வேண்டும்.

**மகசூல்**: கலப்புப் பயிரில் ஏக்கருக்கு 250 முதல் 300 கிலோ மகசூல் கிடைக்கும்.

## பி.ஓ.எல். 2-நிலக்கடலை

'பி.ஓ.எல்.2' என்பது பொள்ளாச்சி வட்டம் பரம்பிக்குளம் -ஆளியாறு திட்டப்பகுதியில் பயிரிடுவதற்கேற்ற உயர் விளைச்சல் தரும் புதிய குத்துவகை நிலக்கடலை இரகமாகும். இந்த இரகம் 105 நாட்களில், 600 கிலோ வரை மகசூல் கொடுக்கக்கூடியது. இதன் பயறுகள் சிறியவையாக இருப்பதால், பி.ஓ.எல். 1 இரகத்திற்குத் தேவையான விதை அளவை விட, 20 சதம் குறைவாகவே விதைக்கலாம்.

### சிறப்புக் குணங்கள்

1. அறைவைச் சதவீதம்—77.8 சதம்.

2. எண்ணெய் கொடுக்கும் திறன்—50.2 சதம்.

3. விதை ஓய்வுத் தன்மை—15 நாட்கள்.

4. ஒரு கிலோ எடையில் உள்ள பயறுகளின் எண்ணிக்கை—3,173.

5. விதை அளவு (ஏக்கருக்கு) —48 கிலோ.

அதிக மகசூல் அளிக்கும் திறன், அதிக அளவு பயறு கொடுக்கும் தன்மை, அதிக எண்ணெய் உற்பத்தித் திறன், விதை ஓய்வுத் தன்மை (உடன் முளைத்துவிடாத குணம்), குறைந்த அளவு விதைத்தேவை ஆகியவை பி.ஓ.எல். 2 நிலக்கடலை இரகத்தின் சிறப்புக் குணங்களாகும். பொதுவாக குத்து (செடி) வகை நிலக்கடலை இரகங்களில் விதை ஓய்வுத்

# மத்தியக் கூட்டுறவு வங்கி (வரையறை) தஞ்சாவூர்.

தோற்றம் : 1920. தொலைபேசி எண்: 42

திரு. எஸ். ராமையன்,
துணைப் பெருந்தலைவர்.

## கிளைகள் :

அறந்தாங்கி, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, திருக்காட்டுப்பள்ளி, பேராவூரணி, திருவையாறு, கந்தர்வக்கோட்டை, ஆவிடையார்கோவில், நீடாமங்கலம், மதுக்கூர், தஞ்சாவூர் மற்றும் குருவிக்கரம்பை.

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் பெற்ற மூலதனம் : | ... ... | ரூ. 100 லட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் (தமிழ்நாடு அரசு முதலீடு செய்துள்ள ரூ. 34·50 லட்சம் உள்பட) | ... | ரூ. 106·27 ,, |
| ரிசர்வ்கள் : | ... ... | ரூ. 35·22 ,, |
| அலுவல் நிதிகள் : | ... ... | ரூ. 705·66 ,, |

**1—4—74 முதல் டெபாசிட்களுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்கள் :**
பிக்செட் டெபாசிட்

| | |
|---|---|
| 91 நாட்கள் முதல் 6 மாதத்திற்குள் | 5·50% |
| 6 மாதங்கள் முதல் 9 மாதத்திற்குள் | 6·00% |
| 9 ,, ,, 12 ,, | 6·75% |
| 1 வருடம் முதல் 2 வருடங்களுக்குள் | 7·25% |
| 2 வருடங்கள் முதல் 3 வருடங்கள்வரை | 8·00% |
| 3 ,, ,, 5 ,, | 8·25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 8·50% |

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களுக்கும் லோகல் போர்டுகளுக்கும் குறிப்பிட்ட வட்டி விகிதங்களுக்கு மேல் ½% அதிக வட்டி வழங்கப்படும்.

ரூபாய் ஒரு லட்சத்திற்கும் அதற்கு மேலும் உள்ள டிபாசிட்களுக்கு ¼% அதிக வட்டி வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| சேவிங் டெபாசிட் | ... | 4·50% | (தினசரி நிலுவையின் பேரில்) |
| பிராவிடெண்ட் டெபாசிட் | ... | 7·50% | |
| ரெக்கரிங் டெபாசிட் | ... | 7% | |
| சீசன் டெபாசிட் : | | | |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | | 3·25% | |
| 46 ,, ,, 90 ,, | | 3·75% | |
| கால் டெபாசிட் | | | |
| 3 நாட்கள் நோட்டீசில் திரும்பப் பெறக்கூடியது | | 4·75% | |

பி. ஆர். சிவதாசன்,
துணைப்பதிவாளர்/செயலாளர்.




தன்மை இருக்காது. பி.ஓ.எல். 2 என்ற குத்து இரகத்தில் விதை ஓய்வுத்தன்மை இருப்பது, இந்த இரகத்திற்கே யுள்ள சிறப்புக் குணமாகும்! இக்குணத்தினால், இந்த இரகம் அறுவடையின்போது மழையில் சிக்கினாலும் முளைத்து விடாது! இந்த இரகத்தை ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மானாவாரியாக விதைத்துப் பெரும் மகசூல் பெறலாம்.

### கோ. 2 உளுந்து

கோ. 2 உளுந்து 65 முதல் 70 நாட்கள் வயதுடைய குறுகிய கால இரகமாகும். இதை ஆண்டு முழுவதும் பயிரிடலாம் ஆயினும் மார்ச்சு-ஏப்ரல், ஜூலை-ஆகஸ்ட், செப்டம்பர்-அக்டோபர் விதைப்பு அதிக மகசூல் தரும்.

**ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்**

**முன்செய் நேர்த்தி :** 4 முறை உழவு செய்ய வேண்டும்.

**உரமிடுதல் :** 4 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு, 10 கிலோ மணிச்சத்து, 5 கிலோ தழைச்சத்து ஆகியவைகளை விதைப்பதற்கு முன்பு இட வேண்டும்.

**விதைத்தல் :** நுண்ணுயிர் ராசி கலந்த 10 கிலோ, விதையை, வரிசைக்கு வரிசை 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 10 செ.மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு, 2.5 சென்டி மீட்டர் (1 அங்குலம்) ஆழத்தில் விதைக்க வேண்டும்.

**களையெடுத்தல் :** விதை 15-வது, 30-வது நாட்களில் களையெடுக்கவும்.

**பயிர்ப்பாதுகாப்பு :** அசுவணி ஈ, தத்துப்பூச்சி, வெள்ளை ஈ, கம்பளிப்பூச்சி ஆகியவைகளைக் கட்டுப்படுத்த பி.எச்சி. 10 சதத் தூளையும் டி.டி.டீ. 5 சதத் தூளையும் சம அளவில் கலந்து தூவ வேண்டும்.

காய்ப்புழுக்களைக் கட்டுப் படுத்த 'டி.டி.டீ.' 5 சதம் அல்லது 'செவின்' 10 சதம் அல்லது 'டிப்டிரெக்ஸ்' 5 சதம் அல்லது 'டிரைத்தியான்' 2 சதம் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

### கோ. 2 பச்சைப்பயறு

இந்த இரகம் 60 முதல் 70 நாட்களில் அறுவடைக்கு வந்து விடும்! இதை, ஆண்டு முழுவதும் (அக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலம் தவிர்த்து) பயிரிடலாம். கோ. 2 உளுந்திற்குக் கூறப்பட்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளையே, கோ. 2 பச்சைப் பயறு இரகத்திற்கும் மேற்கொள்ள வேண்டும். ஏக்கருக்கு 240 முதல் 280 கிலோ மகசூல் தரவல்லது இந்த இரகம்!

### சி.எஸ்.எச். 5 சோளம்

இது, செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் விதைப்பதற்கு ஏற்ற குறுகிய கால (100 முதல் 105 நாட்கள்) இரகம்! இந்த இரகம் பளபளப்பான முத்து போன்ற வெண்மை யான தானியங்களையும், கால்நடைகள் விரும்பி உண்ணும் தட்டைகளையும் கொடுக்கவல்லது!

**ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்:**

**விதை அளவு (ஏக்கருக்கு)**—10 கிலோ.




**இடைவெளி**—18 அங்குலம் 6 அங்குலம்.

**உரமிடுதல் :** 10 வண்டி (5 டன்) தொழு எரு, அல்லது கலவை எரு, 18 கிலோ தழைச்சத்து, 9 கிலோ மணிச்சத்து ஆகியவைகளை இட வேண்டும்.

**களையெடுத்தல் :** விதைத்த 21-வது நாளில் முதல் முறையும், இருவாரம் கழித்து இரண்டாவது முறையும் களையெடுக்க வேண்டும்.

**பயிர்ப்பாதுகாப்பு :** குருத்து ஈக்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 4 கிலோ 'திமெட்' குருணைகளை விதைப்பதற்கு முன்பு, படைச்சாலில் இட வேண்டும். தண்டுப் புழுவினைத் தடுக்க விதைத்த 30-வது நாளிலும், 45-வது நாளிலும் 'செவிடால்' அல்லது 'எண்டோசல்பாம்' குருணைகளை ஏக்கருக்கு 3.5 கிலோ வீதம் இலைக்குருத்துக்களில் இடவும்.

### சோளம்-771

இது, ஐ.எஸ். 3922 மற்றும் ஏஸ்பூரி ஆகிய இரகங்களின் ஒரு சந்ததியாகும். மஞ்சள்

நிறமான தானியங்களைக் கொண்ட இந்த இரகம் 105 நாட்களில் முதிர்ச்சிக்கு வரக் கூடியதாகும். இது 170 சென்டி மீட்டர் உயரம் வரை வளரக் கூடிய நடுத்தர குட்டை இரகமாகும். இந்த இரகம் பூச்சிப் பூஞ்சாளங்களின் தாக்குதலைச் சுமாராகத் தாங்கிக் கொள்ளக் கூடியது; கீழே சாயாத தன்மையுடையது; தழைச்சத்து உரமிடுவதற்கேற்ப மகசூல் அளிக்கும் குணமுடையது. இது ஒரு பொறுக்கு இரகமே தவிர, ஒட்டுவீரிய இரகமல்ல! எனவே இந்த இரகத்தைப் பயிரிட விரும்பும் உழவர்கள் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக விதை வாங்கத் தேவையில்லை! குறிப்பாக செப்டம்பர் முதல் டிசம்பர் வரையான பிந்திய முன்பருவத்தில் (Late Khariff season) பயிரிட நேர்ந்தால், இதன் குறுகிய கால வயதும், வறட்சியைத் தாங்கிக் கொள்ளும் பண்பும், நாட்டு இரகங்களைவிட சிறப்பான பயனளிக்கக்கூடியவைகளாக உள்ளன.

### ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

பருவம்—செப்டம்பர் முதல் டிசம்பர்.

வயது—100 முதல் 105 நாட்கள்.

விதையளவு—ஏக்கருக்கு 4 கிலோ.

இடைவெளி—15 சென்டி மீட்டர் × 15 சென்டி மீட்டர்.

இரசாயன உர அளவு—18 கிலோ தழைச்சத்து, 9 கிலோ மணிச்சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு : தண்டுப் புழுவின் தாக்குதலைத் தடுக்க,

விதைத்த 30-வது நாளில் ஏக்கருக்கு 4 கிலோ 'செவிடால்' குருணைகளை இலைக்குருத்துக்களில் இடவும்.

மகசூல் : ஏக்கருக்கு 1,000 முதல் 1,200 கிலோ.

எனவே, மானாவாரி மகசூலைக் கணிசமான அளவில் பெருக்கிட மேற்கூறிய முறைகளையும், இரகங்களையும் பயன்படுத்திடுமாறு தமிழகப் புன்செய் நில உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: இயக்குநர்,
விரிவினைத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.




**இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்,**
**மதுரை-625001.**

இராமநாதபுரம், மதுரை மாவட்ட மக்களுக்கு குறைந்த விலையில் சிறந்த பொருட்களை வழங்கி தனிச் சிறப்புடன் விளங்குகிறது எங்களது சங்கம்.

செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 8½ லட்சத்துக்கும்மேல். அங்கத்தினர்களின் எண்ணிக்கை 5,000-க்கு மேல். வருடாந்திர விற்பனை ரூ. 2½ கோடிக்கு மேல். நிகர லாபம் ரூ. 1¼ லட்சத்துக்குமேல்.

எமது புகழுக்குமேலும் புகழ்சேர்க்கும் எமது சொந்த தயாரிப்புகள் :-

ராம்கோ { நோட்டு புத்தகங்கள்
காப்பித் தூள்

மேலும் தரத்தில் சிறந்த விலையில் குறைந்த உணவுப் பொருட்களும் பலசரக்கு எழுது பொருட்களும் அழகு சாதனங்கள் அனைத்தும் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட துணி வகைகளும் எங்களிடம் கிடைக்கும்.

எங்கள் நிறுவனத்தின் ''ராம்கோ'' கூட்டுறவுச் சிறப்புச் சிற்றங்காடிகள் இராமேசுவரம், காரைக்குடி, தேவகோட்டை ஆகிய இடங்களில் சிறப்புடன் செயலாற்றி வருகின்றன.

மதுரை மாநகர், தளவாய் அக்ரகாரத்தில் நவீன முறையில் அமைக்கப்பட்ட ''ராம்கோ'' கூட்டுறவு விற்பனை நிலையம் பொது மக்களின் அன்றாட தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து நவீன முறையில் செயலாற்றி வருகிறது.

வே. வ. இராமசுவாமி,
தலைவர்.

ஏ. ஷேக்தாவூத், பி.காம்., எச்.டி.சி.,
செயலாளர்.


# புன்செய் நில உழவர்களின் வருவாய் பெருகிட

—ஆர். எம்.

''புன்செய் விளையின் பஞ்சம் தீரும்!'' என்பது தமிழ்நாட்டில் நெடுங்காலமாக நிலவி வரும் பழமொழியாகும்! இப் பழமொழி, முழுக்க முழுக்க உண்மையானது என்பது ஆராய்ந்து பார்ப்போர்க்கே நன்கு புலனாகும்!

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 160 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது. அப்பரப்பளவில், ஏறத்தாழ 100 இலட்சம் ஏக்கர் புன்செய் நிலங்களாகவே உள்ளன. அப்பரப்பு முழுவதும் மானாவாரியாகவே பயிரிடப்படுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான புன்செய் நில உழவர்கள் தங்கள் உணவுக்கும், கால்நடைகளின் தீவனத்திற்கும், வருவாய்க்கும் புன்செய் நிலங்களையே நம்பி இருக்கிறார்கள்!

தமிழ்நாட்டில் உள்ள மொத்த உணவு தானிய உற்பத்தியில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதி, புன்செய் நிலங்களிலிருந்தே கிடைக்கின்றன. கிராமப்புற மக்களில் பெரும்பாலோர், புன்செய்த் தானியங்களையே அன்றாட உணவாக உண்டு வருகின்றனர். எனவே புன்செய் நிலங்களில் மானாவாரியாகப் பயிரிடப்படும் சிறுதானியங்களும், பருப்பு வகைகளும் நன்கு விளைந்தால்தான் 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' பஞ்சம் தீரும் என்பது தெளிவாகிறது.

மேலும் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த சிறுதானியங்களும், பருப்பு வகைகளும் புன்செய் நிலங்களிலிருந்தே கிடைத்து வருகின்றன. ஊட்டச்சத்துணவின் அடிப்படையில் அன்றாட உணவில் கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, சாமை, வரகு முதலிய சிறுதானியங்களைக் கலப்பு உணவாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

ஆகவே, ஊட்டச் சத்துணவின் அடிப்படையிலும், புன்செய் நிலப்பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்!

இவ்விரு காரணங்களையும் முன்னிட்டே, புன்செய்ப் பயிர்கள் சாகுபடியில் உழவர் பெருமக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு, புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படை நிலவரியைத் தள்ளுபடி செய்தது. புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்கிடும் முறைகளை உழவர் பெருமக்களுக்கு விளக்கிடச் செயல் விளக்கத் தளைகளையும், பண்ணைகளையும் அமைத்திடவும், புன்செய்ப் பயிர்கள் சாகுபடிக்கான விதை, உரம், மருந்துபோன்ற தேவையான பொருள்களை (Inputs) வழங்கிடவும், கடன் உதவி அளித்திடவும் தமிழ்நாடு அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்து, புன்செய் நில உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்க முயன்று வருகிறது.

தமிழ்நாடு அரசு அளிக்கும் சலுகைகளைப் பயன்படுத்தி, புன்செய்ப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கீழ்க் கண்டுள்ள வழி முறைகளையும், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளையும், (Package of practices) புன்செய் நில உழவர் பெருமக்களுக்குத் 'தமிழரசு' சார்பில் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

### மானாவாரி மகசூலைப் பெருக்கும் வழிமுறைகள் :

மானாவாரி பண்ணைகளின் உற்பத்தி பெருகுவதோ அல்லது குறைவதோ மண்ணின் ஈரத்தைப் பொறுத்ததேயாகும். புன்செய் நிலங்களில் பெய்யும் மழை பின்கண்ட 3 வகைகளில் சேதம் அடைகிறது.

1. ஆவியாதல் (evoporation)
2. மண்ணின் வழியே வடிந்து பூமியின் அடியில் சென்றுவிடுதல் (Percolation).
3. வெள்ளமாகஓடி விரைந்து வடிந்து போதல் (Surface run-off).

இவ்வாறு மழைநீர் சேதமாவதைத் தகுந்த உழவியல் முறைகள் மூலமாகவும் கணிசமான அளவுக்குக் குறைத்து விட முடியும். அதன் பயனாய், மானாவாரிப் பயிர்கள் நன்கு வளர்ந்து மகசூல் தரக்கூடும்!

ஆராய்ச்சி மற்றும் உழவர் பெருமக்களின் அனுபவத்தின் அடிப்படையில் மானாவாரியில் தனிப் பயிராகவோ அல்லது கலப்புப் பயிராகவோ பயிரிடுவதற்கேற்ற பயிர்களையும், அப்பயிர்களுக்கேற்ற சாகுபடி முறைகளையும் கீழே பரிந்துரைத்துள்ளோம்.

தற்பொழுது தமிழ்நாட்டில் முக்கியமாகச் சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை,

வரகு ஆகியவை மானாவாரியாகப் பயிரிடப்படுவதால், அப்பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்குரிய ஒருமித்த செய் நேர்த்தி முறைகளை (கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள்) மட்டுமே கீழே விவரித்துள்ளோம்.

## ஒருமித்தச் செய்நேர்த்தி முறைகள் :

### 1. மானாவரி சோளம் :

**ஏற்ற இரகங்களும் வயதும் :**

| இரகங்களின் பெயர் | வயது (நாட்கள்) |
|---|---|
| 'கோ.19' | 125 முதல் 135 |
| 'கோ.20' | 125 முதல் 135 |
| 'கே.3' | 125 முதல் 135 |
| 'சொர்ணு' | 90 முதல் 100 |
| 'சி.எஸ்.எச்.2' | 90 முதல் 100 |
| 'சி.எஸ்.எச்.3' | 105 முதல் 115 |
| 'சி.எஸ்.எச்.5' | 100 முதல் 105 |

**விதைக்கும் பருவம் :**

ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் விதைப்பது சிறந்தது.

**நிலம் தயாரித்தல் :**

நாட்டுக் கலப்பை அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் 2 முதல் 3 முறை உழ வேண்டும்.

**உரமிடுதல் :**

அடியுரமாக ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கலவை எரு, 18 கிலோ தழைச்சத்து (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா), 9 கிலோ மணிச்சத்து (56 கிலோ சூப்பர் பாஸ்பேட்) ஆகியவைகளை இட வேண்டும் அல்லது டை-அமோனியம் பாஸ்பேட் 20 கிலோ, யூரியா 32 கிலோ இட வேண்டும்.

**விதையளவு :**

(அ) வரிசையில் விதைத்தல் கோ. 19, கோ 20, கே. 3 ஆகிய இரகங்களைப் பயிரிட ஏக்கருக்குக் 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். 'சொர்ணு' 'சி.எஸ்.எச்.2', சி.எஸ்.எச்.3' ஆகிய இரகங்களைப் பயிரிட ஏக்கருக்கு 6 கிலோ விதையை விதைக்க வேண்டும். 'சி.எஸ். எச். 5.' பயிரிட ஏக்கருக்கு 8 கிலோ விதையை விதைக்க வேண்டும்.




(ஆ) பரவலாகத் தூவி விதைத்தல்: 'கோ. 10', 'கோ. 20', 'கே. 3', 'சி.எஸ்.எச்.5' ஆகிய இரகங்களுக்கு ஏக்கருக்கு 10 கிலோ விதையும், 'சொர்ணு' 'சி. எஸ். எச். 2, 'சி.எஸ்.எச். 3' ஆகிய இரகங்களுக்கு ஏக்கருக்கு 8 கிலோ விதையும் விதைக்க வேண்டும்.

**விதையுடன் மருந்து கலக்குதல் :**

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'கேப்டான்' அல்லது 'டி.எம். டீ.டி' மருந்து வீதம் கலந்து, விதை கலக்கும் கருவியில் இட்டு, நன்கு சுற்றி விதைகளும் மருந்தும் நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும்.

**விதைத்தல் :**

மண்ணில் உள்ள ஈரம் காய்வதற்குள் பெரும் பரப்பில் விதைப்பதற்கு 'கொரு' அல்லது விதை கலப்பையைப் பயன்படுத்தி வரிசையில் விதைக்க வேண்டும்.

**இடைவெளி :**

வரிசைக்கு 45 சென்டி மீட்டர் (1·5 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

**கலப்புப் பயிர் :**

வரிசை வரிசையாக விதைக்கும் பொழுது, 4 வரிசை சோளம், ஒரு வரிசை மொச்சை வீதம் விதைக்க வேண்டும்.

விதைகளைப் பரவலாகத் தூவி விதைக்கும் பொழுது, 8 அடிக்கு ஒரு வரிசை மொச்சை வீதம் விதைக்க வேண்டும்.

**களை எடுத்தல் :**

விதைத்த 15-ஆம் நாள் முதல் முறையும் விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் முறையும் களை எடுக்க வேண்டும். களை எடுப்பதற்குக் களைக் கொட்டு அல்லது 'தந்துலு' அல்லது புன்செய் நிலக் களையெடுக்கும் கருவியை பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு களை எடுப்பதால், மண்ணின் ஈரம் பாதுகாக்கப்படும்.

**பயிர் கலைத்தல் :**

முதல் களையெடுத்த உடன், பயிர்க் கலைப்புச் செய்ய வேண்டும். பயிருச்குப் பயிர் 6 அங்குலம் இடைவெளி விட்டு, இடையில் உள்ள பயிர்களை அகற்றி விட வேண்டும். பயிர்க் கலைப்புச் செய்வதை 20-ஆம் நாளுக்குள் செய்துவிட வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு :**

குருத்துப் புழுவின் தாக்குதலைத் தடுக்க 150 மில்லி லிட்டர் 'என்ட்ரின்', 100 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' ஆகிய மருந்துகளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். இவ்வாறு 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும்.

இலைப்புள்ளி நோய் காணப்பட்டால் 400 கிராம் 'சினப்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் விதைத்த 40-ஆம் நாளில் முதல் முறையும், அதன்பின் 15 நாளில் இரண்டாம் முறையும், அதன்பின் 15 நாளில் மூன்றும் முறையும் தெளிக்க வேண்டும்.



### 2. மானாவாரி கம்பு

**ஏற்ற இரகங்கள் :**

'கோ. 4', 'எக்ஸ். 3', 'எச். பி. 3' ஆகிய இரகங்கள் மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்ற இரகங்களாகும். இவை 85 முதல் 90 நாட்களில் அறுவடைக்கு வரும்.

**விதைக்கும் பருவம் :** ஜூலை—ஆகஸ்ட்

**விதையளவு :** வரிசை வரிசையாக விதைத்தாலும், அல்லது பரவலாகத் தூவி விதைத்தாலும் ஏக்கருக்கு 3 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

**விதையுடன் மருந்து கலக்குதல் :**

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'கேப்டான்' அல்லது 'டீ.எம். டீ.டி' மருந்து வீதம் கலக்க வேண்டும். விதைகளுடன் மருந்தினை நன்கு கலப்பதற்கு விதை கலக்கும் கருவியைப் பயன்படுத்துதல் சிறந்தது.

**நிலம் தயாரித்தல் :**

நாட்டுக் கலப்பை, அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் வயலை 2 அல்லது 3 முறை உழவேண்டும்.

**அடி உரம் இடுதல்**

ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு அல்லது குளத்து வண்டல் மண்ணும், 18 கிலோ தழைச்சத்தும் (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா), 9 கிலோ மணிச்சத்தும் (56 கிலோ சூப்பர் பாஸ்பேட்) அடியுரமாக இட வேண்டும் அல்லது டை-அமோனியம் பாஸ்பேட் 20 கிலோ, யூரியா 32 கிலோ இட வேண்டும்.

**விதைத்தல் :**

மண் ஈரம் காய்வதற்குள் காலத்தில், பெரும் பரப்பில் விதைப்பதற்கு 'கொரு' அல்லது விதைக் கலப்பையைப் பயன்படுத்தி வரிசை வரிசையாக விதைக்கவும்.

**இடைவெளி :**

விதைக்கும் பொழுது வரிசைக்கு வரிசை 45 செ.மீ. (1.5 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 செ.மீ. (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். பரவலாகத் தூவி விதைக்கும் பொழுது விதைக்கு விதை 15 செ.மீ. (6 அங்குலம்) இடைவெளி இருக்குமாறு விதைத்தல் சிறந்தது.

**களையெடுத்தல் :**

விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் நாட்டுக் கலப்பையால் பயிருழவு (பயிர்களுக்கு இடையே உழவு செய்தல்) செய்ய வேண்டும்.

**பயிர்க் கலைத்தல் :**

வரிசை வரிசையாக விதைக்கப்பட்டுள்ள பயிரில் விதைத்த 20 நாட்களுக்குள் கைகளால் பயிர்க்கலைப்பு செய்ய வேண்டும். பரவலாகத் தூவி விதைக்கப்பட்டுள்ள வயலில், பயிருழவுக்குப் பிறகு பயிருக்குப் பயிர் 15 செ. மீ. (6 அங்குலம்) இடைவெளி இருக்குமாறு செய்து அதிகமாக உள்ள பயிர்களை அகற்றிவிட வேண்டும்.



**பயிர்ப் பாதுகாப்பு :**

'மிட்ஜ்' ஈக்கள், கதிர் காவாய்ப் பூச்சிகள் ஆகியவைகளின் தாக்குதலைத் தடுக்க, 'கம்பு பூக்கும் சமயத்தில் செவின்' தூளையும், கந்தகத் தூளையும் 1:1 என்ற விகிதத்தில் கலந்து கொண்டு ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ வீதம் தூவ வேண்டும்.

கம்பில் சர்க்கரை நோய் தோன்றினால், 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் 'சிராம்' அல்லது 'சினெப்' அல்லது தண்ணீரில் கரையும் கந்தகத்தை கலந்து கொண்டு பூக்கள் மலரும் சமயத்தில் முதல் தடவையும், 5 நாட்கள் கழித்து இரண்டாம் தடவையும், மீண்டும் 5 நாட்கள் கழித்து மூன்றும் தடவையும் தெளித்தல் வேண்டும்.

### 3. மா்னுவாரி கேழ்வரகு

**ஏற்ற இரகங்கள் :**

'கோ.2', 'கோ.[illegible]', 'கோ.5' கேழ்வரகு இரகங்கள் மானாவாரிக்கு ஏற்ற இரகங்களாகும். இந்த இரகங்கள் 120 முதல் 130 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும்.

**விதைக்கும் பருவம் :** ஜூலை-ஆகஸ்ட்.

**நிலம் தயாரித்தல் :** நாட்டுக் கலப்பை அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் 2 அல்லது 3 முறை உழ வேண்டும்.

**அடியுரம் இடுதல் :**

ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு, 18 கிலோ தழைச்சத்து, (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா) 9 கிலோ மணிச்சத்து (56 கிலோ சூப்பர் பாஸ்பேட்) ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும்.

**விதையளவு :**

வரிசை வரிசையாக விதைத்தாலும் அல்லது பரவலாகத் தூவி விதைத்தாலும் ஏக்கருக்கு 3 கிலோ விதைகளை விதைக்க வேண்டும்.

**விதையுடன் மருந்து கலக்குதல் :**

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'கேப்டான்' அல்லது 'டீ.எம்.




டீ.டி.' மருந்து வீதம் கலந்து விதைக்க வேண்டும்.

**இடைவெளி :**

வரிசைக்கு வரிசை 15 செ.மீ (6 அங்குலம்) இடைவெளியும் வரிசையில் விதைக்கு விதை 15 செ.மீ. (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். பரவலாகத் தூவி விதைத்தால் விதைக்கு விதை 15 செமீ. (6 அங்குலம்) இடைவெளி விட்டு விதைக்க வேண்டும்.

**விதைத்தல் :**

மண்ணின் ஈரம் காய்வதற்குள் பெரும்பரப்பில் விதைப்பதற்கு 'கொரு' அல்லது விதைப் கலப்பையைப் பயன்படுத்தி விதைக்க வேண்டும்.

**கலப்புப் பயிர் :**

கேழ்வரகுடன் மொச்சை, பச்சைப்பயறு, உளுந்து ஆகிய பயறு வகைகளைக் கலப்புப் பயிராகப் பயிரிடுவது மிகவும் சிறந்தது. வரிசை வரிசையாக விதைத்தால், 16 வரிசை கேழ்வரகிற்கு ஒரு வரிசை பயறு வகை வீதம் விதைக்க வேண்டும். பரவலாகத் தூவி விதைக்கும்பொழுது 8 அடி இடைவெளிக்கு ஒரு வரிசை வீதம் பயறு வகைகளை விதைக்க வேண்டும்.

**களையெடுத்தல் :**

களைக்கொட்டு, 'தந்துலு', 'மாணுவாரிகளை யெடுப்பான்' ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி விதைத்த 15-ஆம் நாள்முதல் முறையும், விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் முறையும் களை எடுக்க வேண்டும். இதனால் மண்ணில் ஈரம் பாதுகாக்கப்படுகிறது.

**பயிர்க் கலைத்தல் :**

முதல் களையெடுத்த உடன், அதிகமாக உள்ள பயிர்களைக் கைகளால் அகற்றி விட வேண்டும். விதைத்த 20-ஆம் நாளுக்குள் பயிர்க் கலைப்புச் செய்வதை முடித்துவிட வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு :**

நோயைத் தடுப்பதற்குப் பூக்கும் சமயத்தில் செரான்-சுண்ணும்புக் கலவையை ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ வீதம் தூவி விட வேண்டும்.

## 4. மாணுவாரி தினை

**ஏற்ற இரகமும், வயதும் :**

'கோ. 1'—90 நாட்கள். 'கோ. 4'—65 முதல் 70 நாட்கள்.

**விதைக்கும் பருவம் :** ஜூலை—ஆகஸ்ட்.

**விதையளவு :**

வரிசை வரிசையாக விதைத்தாலும், அல்லது பரவலாகத் தூவி விதைத்தாலும் ஏக்கருக்கு 5 கிலோ விதையை விதைக்கவேண்டும். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' மருந்து வீதம் கலந்து விதைப்பதே சிறந்தது.

**இடைவெளி :**

வரிசைக்கு வரிசை 25 சென்டிமீட்டர் (10 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 10 சென்டிமீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். பரவலாகத் தூவி விதைத்தால் விதைக்கு விதை 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

**நிலம் தயாரித்தல் :** கம்புக்குச் செய்வதுபோலவே செய்யவும்.

**அடிஉரம் இடுதல் :** கம்புக்கு அடிஉரம் இடுவது போலவே இடவும்.

**களையெடுத்தல் :** கேழ்வரகுக்குச் செய்வது போலச் செய்யவும்.

**பயிர்க் கலைத்தல் :** கேழ்வரகிற்குச் செய்வதுபோலச் செய்யவும்.

**பயிர்ப் பாதுகாப்பு :** பொதுவாகப் பூச்சிகள் நோய்களால் தாக்கப்படுவதில்லை.

## 5. மாணுவாரி சாமை

**ஏற்ற இரகமும், வயதும் :**

கோ. 1—95 நாட்கள்; கோ. 2—80முதல் 85 நாட்கள்.

**விதைக்கும் பருவம் :** ஜூலை-ஆகஸ்ட்.

சாகுபடி முறையைப் பொறுத்த வரையில் தினை பயிரிடுவதற்குக் கூறிய முறைகளையே மேற்கொள்ள வேண்டும்.

## 6. மாணுவாரி வரகு

**ஏற்ற இரகம்:** கோ. 2 வரகு
**வயது :** 125 நாட்கள்.

**விதைக்கும் பருவம் :** ஜூலை-ஆகஸ்ட்.

**இடைவெளி :** வரிசைக்கு வரிசை 45 செ. மீட்டர் (1.5 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 10 செ. மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். பரவலாகத் தூவி விதைத்தால் விதைக்கு விதை 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளி விட்டு விதைக்க வேண்டும்.

இதர சாகுபடி முறைகள் அனைத்தும் தினைப்பயிருக்கு செய்வது போலவே செய்ய வேண்டும்.

இதுவரை கூறப்பட்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மாணுவாரி சிறு தானியப் பயிர்களைச் சாகுபடி செய்தால், மாணுவாரி சிறு தானிய பயிர்களின் மகசூல் பெருகும்! அதன் பயனுய் பஞ்சம் தீருவதுடன், புன்செய் நில உழவர்களின் வாழ்வும் வளம் பெறும்!







# நெல்லுக்கு ஏற்ற நல்ல மண்!

மணற்பாங்கான நிலத்தைவிட, களிமண் பாங்கான நிலங்களில் நெற் பயிர் அதிக மகசூல் தருகிறது ! நிறைந்த மகசூல் பெற மண்ணில் 40 முதல் 60 சதவீதம் வரை களிமண் துகள்கள் இருப்பது நல்லது. களிமண் துகள்களுக்கு நீரை நன்கு பிடித்து வைத்துக்கொள்ளும் ஆற்றல் அதிகம் இருப்பதால், களிமண் பாங்கான நிலத்தில் பாசன நீர் விரைவில் வடிந்து வெளியேறுவது தடைபடுகிறது. எப்போதும் சிறிதளவு நீர் நிலத்தில் தேங்கி நிற்பதையே நெற்பயிர் பெரிதும் விரும்புகிறது.

மண்ணிலுள்ள களித்துகள்கள் 2:1 என்ற ரகத்தைச் சேர்ந்த "மான்ட் மொரிலினைட்" போன்ற களித்துகள்களாக இருப்பது இன்னும் சிறந்தது. மேலும் மண்ணின் அயனி மாற்றும் ஆற்றல் 100 கிராம் மண்ணில் 22 மி. ஈ. என்ற அளவுக்குக் குறையாமல் இருப்பது நல்லது.

சாகுபடி செய்யப்படும் மேல் மண்ணின் கண்டம் 18 முதல் 22 சென்டி மீட்டர் ஆழமுடையதாக இருக்க வேண்டும். மண் கண்டம் அதிகமாக ஆக நெற்பயிர் தரும் மகசூலின் அளவும் அதிகரிக்கின்றது.

நெற்பயிர் அமிலத் தன்மையுடைய மண்ணையே பெரிதும் விரும்புவதால், கார அமில நிலை 5·5 முதல் 6·5 வரை இருப்பது நல்லது. இத்தகைய மண் வயணங்களுடைய வயலில், நெற்பயிர் நல்ல மகசூல் தருகிறது.

இதற்கு மாருக, எளிதில் நீர் வடிந்துவிடக் கூடிய மணற்பாங்கானதும், குறைந்த அளவு மண் கண்டமுடையதும், மிகவும் வளம் குறைந்ததுமான நிலங்கள் நெற் சாகுபடிக்கேற்றதல்ல! நீண்ட காலம் நீர் தேங்கி நிற்கும் வடிகால் வசதியற்ற நிலங்களும் ஏற்றதல்ல! இத்தகைய நிலங்களில் நெற்பயிர் மிகக் குறைந்த மகசூலே தருகின்றன!



## தழைச்சத்து இடுவதற்கு ஏற்ற நேரம் !

1971, 1972-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சோதனைகளிலிருந்து 'கரிகாலன்' நெல் ரகத்திற்கு, ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்தை அடியுரமாக இடுவதுடன், உச்சகட்ட தூர் கிளைப்பு, பல்பிரிவு பூங்கொத்து தோன்றுதல், பூங்கொத்து வெளி வருதல் ஆகிய மூன்று நேரங்களிலும் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து வீதம் இட்டதில், உயர்ந்த அளவாக 1971-ஆம் ஆண்டில் 2,552 கிலோ மகசூலும், 1972-ஆம் ஆண்டில் 2,381 கிலோ மகசூலும் கிடைத்துள்ளது தெரிய வருகிறது.

'கண்ணகி' ரகத்திற்கு ஏக்கருக்கு 40 கிலோ தழைச்சத்தை அடியுரமாக இட்டு, மேற்கூறிய மூன்று நேரங்களிலும் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து வீதம் மேலுரம் இட்டதில் உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,039 கிலோ மகசூல் கிடைத்துள்ளது தெரிய வருகிறது.

ஆகவே, 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய ரகங்களுக்கு மேற்கூறிய மூன்று நேரங்களிலும் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து வீதம் மேலுரம் இடுதல் பெரும் மகசூல் பெற வழிகோலும்.

# உரத்தட்டுப்பாட்டைச் சமாளிப்பது எப்படி?



உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் உணவு உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் குறைவை நீக்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன! நம் நாட்டிலும் உணவுப் பற்ருக் குறையை நீக்கவும், வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குத் தேவையான அதிகப்படி உணவுத் தானியங்களை உற்பத்தி செய்யவும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன! ஒவ்வொரு ஆண்டும் அதிகப்படியாகச் சுமார் 100 அல்லது 150 இலட்சம் டன் உணவுத் தானிய உற்பத்தியை நம் நாட்டில் பெருக்கியாக வேண்டும்! இதற்கு ஆண்டொன்றுக்குக் குறைந்தது 10 அல்லது 15 இலட்சம் டன் தழைச்சத்து (நைட்ரசன்) இரசாயன உரம் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனல் தற்சமயம் நமக்குத் தேவையான இரசாயன உரத்தில் மூன்றில் இரண்டுபாகம் கூடக் கிடைப்பதில்லை! அடுத்து வரும் ஆண்டுகளில் இந்தத் தட்டுப்பாடு, மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன!

சமீபத்தில் ஏற்பட்டுள்ள எண்ணெய் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக எண்ணெய்யிலிருந்து கிடைக்கும் துணைப்பொருளான 'நாப்தா' கிடைப்பது குறைந்துவிட்டது. எனவே 'நாப்தா'வைப் பயன்படுத்தி இரசாயன உரம் தயாரிப்பதற்காக நம்நாட்டில் நிறுவப்பட்டுள்ள இரசாயன உர ஆலைகள் முழு அளவில் இயங்குவதற்கு இயலாமல் இடர்பாடுகின்றன!

'பெட்ரோல்' மற்றும் பல எண்ணெய்களின் விலை அதிகரித்துள்ளது போலவே, 'நாப்தா' விலையும் மூன்றிலிருந்து ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது! இனியும் அதிகரிக்கலாம்! ஆகையால் வருங்காலத்தில் உரத்தட்டுப்பாட்டுடன், அதன் விலையும் சுமார் மூன்றிலிருந்து ஐந்து மடங்கு அதிகமாகும்!

இந்த நெருக்கடியான சூழ்நிலையில், நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து, நம்மை எதிர்நோக்கி நிற்கும் உணவுப் பற்ருக் குறையைத் தவிர்க்க வேண்டுமானல், அவசியம் நமக்குக் கிடைக்கும் குறைந்த உரத்தைச் சிறந்த முறையில்—விஞ்ஞான அடிப்படையில்—உபயோகித்து, அதிகமான விளைச்சலைக் காண வேண்டும்! நமது ஆராய்ச்சியாளர்களும் மேலும் குறைந்த உரத்தில், அதிக விளைச்சல் தரக்கூடிய புதிய தானியங்களை நமக்கு உருவாக்கித் தர வேண்டும்!

தற்பொழுதுள்ள உரத்தட்டுப்பாட்டினல் உணவு உற்பத்தி, அதிலும் குறிப்பாக நெல் உற்பத்தி குறைந்து விடக்கூடாதே என்பதற்காக, நெல் பயிரிடும் முறைகளில், எப்படிக் குறைந்த உரத்தை உபயோகித்து அதிக விளைச்சலைக் காணலாம் என்ற வழிவகைகளை, உணவு உற்பத்தியைப் பெருக்க அயராது உழைத்து வரும் தமிழக உழவவர் பெருமக்களுக்குத் தெரிவிப்பதை என் கடமையாகக் கருதி ஈண்டு விளக்கியுள்ளேன்.




**டாக்டர் கோ. அரங்கசாமி,**
துணை வேந்தர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-3.


## குறைந்த உரமிட்டு, நிறைந்த மகசூல் பெரும் முறைகள் !

1. உயர் விளைச்சல் இரகங்கள் அனைத்தும், அதிக உரமிடாவிட்டால் நல்ல விளைச்சல் தராது என்பது உண்மையல்ல! உயர் விளைச்சல் நெல் இரகங்கள், மற்ற இரகங்களைக்காட்டிலும், குறைந்த அளவு உரமிட்டாலும் அதிக விளைச்சல் தரும் தன்மை வாய்ந்தவை! உதாரணமாக, 'பவானி' நெல் மிகக் குறைந்த உரமிட்டாலும் மற்ற இரகங்களைக் காட்டிலும் அதிக விளைச்சல் தருகிறது. பொதுவாக குறைந்த அளவு உரமிடும்போது, உயர்விளைச்சல் நெல்லின் நாற்றுகளை நெருக்கி நட வேண்டும்.

2. நெல் வயலுக்கு கடந்த சில ஆண்டுகளாக அதிக உரமிட்டு வந்திருந்தால், அடுத்து வரும் பருவத்தில் குறைந்த அளவு உரமிடுவதால் அதிக நட்டம் ஏற்படாது! அத்துடன் எக்டேருக்கு 200 கிலோ தழைச்சத்து (நைட்ரசன்) உரமிடுவதற்குப் பதிலாக, அதே 200 கிலோ உரத்தை எக்டேருக்கு 100 கிலோ வீதம், இரண்டு எக்டேருக்கு இட்டால், நிறைந்த பலன் காணலாம்! அதாவது ஒரு கிலோ நைட்ரசன் உரத்திற்கு வரும் சராசரி லாபம் அதிகமாகும்!

3. வளமான நிலத்தில் தழைச்சத்து உரத்தை அடி உரமாக இடுவதைக் காட்டிலும், பயிர் தூர் எடுக்கும் சமயத்திலும், கதிர் தோன்றுவதற்கு முன்னதாகவும் மேலுரமாக இடுவதனல் நல்ல பயன் காணலாம்! இந்த முறையில் குறைந்த அளவு உரமிட்டாலும் போதுமானது! அதானது 100 கிலோ அடி உரம் இடுவதும், மேலுரமாக இரண்டு தடவை, 40 கிலோ வீதம், மொத்தத்தில் 80 கிலோ உரம் இடுவதும் அநேகமாக, ஒரே விளைச்சலைக் கொடுக்கும்!



4. ஒரு ஆண்டில் மூன்று போகம் விளையும் நிலத்திற்குப் பருவத்திற்கு ஏற்ப உரமிட வேண்டும். ஏனென்றல், எல்லாப் பருவத்திலும் நெற்பயிர் ஒரே அளவு உரச்சத்தை எடுத்துக் கொள்வதில்லை! சம்பாப் பருவத்தில் மொத்தம் சுமார் 60 கிலோ தழைச்சத்து உரமும், குறுவைப் பருவத்தில் சுமார் 80 கிலோ தழைச்சத்து உரமும், கோடைப் பருவத்தில் சுமார் 80 கிலோ தழைச்சத்து உரமும் கொடுக்கலாம். எல்லாப் பருவங்களிலும் தழைச்சத்து உரத்தை இரண்டுமுறை மேலுரமாகக் கொடுப்பதே நல்லது!

5. இரசாயன உரத்தை நிலத்தில் இடுவதைக் காட்டிலும், ஒரு பகுதியைப் பயிரின் மேல் தெளிப்பதால் நல்ல பலன் காணலாம்! அதாவது, அடி உரமாக தழைச்சத்து உரத்தைப் போடாமல், பயிரில் தூர்கிளைக்கும் சமயத்தில், எக்டேருக்குச் சுமார் 40 கிலோ தழைச்சத்து உரத்தை நிலத்தில் இட்டு, அடுத்துக் கதிர் தோன்றும் சமயத்தில் சுமார் 20 முதல் 30 கிலோ தழைச்சத்தை-அதாவது சுமார் 44 முதல் 65 கிலோ யூரியாவை தெளிப்பான் மூலம் நன்ருகத் தெளிப்பதால் நல்ல விளைச்சல் காணலாம்! அடி உரமாக 100 கிலோ தழைச்சத்து (நைட்ரசன்) உரம் போட்டுக்காணும் அதே விளைச்சலை, மேற்கண்ட முறையில் 60 முதல் 70 கிலோ தழைச்சத்து உரத்தின் மூலம் காணலாம்! அதன் மூலம் எக்டேருக்குச் சுமார் 30 முதல் 40 கிலோ தழைச்சத்து உரத்தைச் சேமிக்கலாம்!

6. மணிச்சத்து (பாஸ்பேட்) மற்றும் சாம்பல் சத்து (பொட்டாசியம்) உரங்கள் எல்லா மண்ணிற்கும், பயிருக்கும் தேவைப்படுவதில்லை! மண் பரிசோணின் தன்மையைப் சத்துக்கள் தித்து, இந்தச் குறைவாயிருக்கும் மண்ணுக்கு மட்டும், இந்த உரங்களை அளவுடன் இட்டால் போதுமானது! தீவிரசாகுபடித் திட்டத்தின் கீழ் தொடர்ந்து, கடந்த நான்கைந்து ஆண்டுகளாகப் பாஸ் பேட்டும், பொட்டாசியமும் நிறைந்த அளவு இட்டு வந்திருந்தால், ஒன்று அல்லது இரண்டு போகங்களுக்கு அவைகளை இடாமல் நிறுத்தி வைக்கலாம்.

மேலும், பாஸ்பேட் உரத்தை நேரடியாக நிலத்தில் இடுவதைக் காட்டிலும், நாற்று நடுவதற்கு முன்னதாக 25 கிலோ பாஸ்பேட் உரமும், 20 கிலோ மண்ணும் 50 லிட்டர் நீரில் கலந்து, அந்தக் கலவையில் நாற்றின் வேரை முக்கி எடுத்து நட்டால் போதுமானது!

அதாவது, ஒரு எக்டேர் நிலத்திற்குச் சுமார் 25 கிலோ பாஸ்பேட் உரம் போதுமானது! இந்த முறையில் பாஸ்பேட் உரத்தை நிலத்தில் சேர்த்தால், கலப்பு உரங்கள் நெற்பயிருக்குத் தேவைப் படாது!

7. நெல் வயலை நன்ருக உழுது சேருக்கிப் பக்குவப்படுத்திஞல் களைப்பூண்டுகள் அதிகமாக வளராது! வயலில் தோன்றும் களைப்பூண்டுகளை அவ்வப்பொழுது எடுத்துவிட வேண்டும். ஒரு அளவு வளர்ந்த பிறகு களைகளை எடுக்கலாம் என்று விட்டுவிட்டால், அவைகளின் மூலம் நிலத்தின் வளம் குறைந்து விடுகிறது. நிலத்திற்கு இடும் உரத்தில் சுமார் 25 முதல் 30 சதவிகிதத்தைக் களைகள் இழுத்துக் கொள்வதால், நெற்பயிரின் வளர்ச்சி குறைவதுடன், விளைச்சலும் குறைந்துவிடுகிறது! நன்ருகப் பக்குவப் படுத்தப்பட்டு, களைகள் இல்லாமல் பாதுகாக்கப்பட்ட நிலத்திற்குச் சுமார் 25 சதவிகிதம் குறைத்து உரமிட்டால் போதுமானது!

8. நெல் வயலில் பாசன நீரை நல்லமுறையில் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும் அதிகமாக நீரைத் தேக்கினல் அது நெற்பயிருக்குக் கெடுதல் தருவதுடன், நிலத்திலிடும் உரத்தின் பலன் பயிருக்குக் கிடைப்பது குறைந்து விடுகிறது. சுமார் ஒன்று அல்லது இரண்டு அங்குலத்திற்கு மேல் நீரைத் தேக்கக் கூடாது! இதற்கு ஏற்ற முறையில் நிலத்தைச் சமமாக்கிப் பயிரை நட வேண்டும். மேலும், பயிர் நட்ட பிறகு நல்ல வடிகால் வசதி செய்து, பாய்ச்சிய நீர் அவ்வப்போது வடியும்படிச் செய்ய வேண்டும். இந்த முறையில் நீரைக் கட்டுப்படுத்திஞல், உரத்தை ஒரு அளவு குறைத்துக் கொள்ளலாம்!

9. பல நிலங்களில் எக்டேருக்கு 10 கிலோ மயில் துத்தமும், 10 கிலோ துத்த நாகமும் சேர்த்தால் நல்ல விளைச்சல் கிடைக்கும்! இந்த நிலங்களில் இடப்படும் நைட்ரசன், பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றின் பலனும் நெற்பயிருக்கு அதிகமாகக் கிடைக்கின்றன!

10. நெல் வயலுக்குத் தழை உரம், சாணம் ஆகியவை இடுவதனல் நிலத்தின் தன்மை குன்ருமல் இருப்பதுடன் நிலத்தின் குணங்கள் கூடுகின்றன! ஆனல் நாம் வருங்காலத்தில் தழை உரத்தையும், சாணத்தையும் மட்டும் நம்பித் தீவிரச் சாகுபடி செய்து, உணவு உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்க முடியாது! தீவிர சாகுபடி செய்யும் நெல் வயலில், நாம் ஒவ்வொரு பயிரை அறுவடை செய்யும் போதும், சுமார் 5 டன் எடையுள்ள வேர்கள் மற்றும் செடிகளின் தண்டுகளை மண்ணில் சேர்க்கிருேம். இவைகள் மக்கி நிலத்தின் தன்மையை உயர்த்துகின்றன. இத்துடன் தழைகளையும், மாட்டுச் சாணம் முதலியவற்றையும் நிலத்தில் சேர்த்தால், அவைகளின் மூலம் நிலத்தின் தரம் மேலும் உயருகிறது. ஆகையால் முடிந்தவரை பண்ணையில் சேரும் குப்பைக் கூளங்கள், செடிகள், கொடிகள், மரங்கள் ஆகியவற்றின் தழைகள் சாணம் ஆகியவற்றை நிலத்தில் இடலாம். இதன் மூலம் நிலத்திற்குத் தேவையான இரசாயன உரத்தைக் கணிசமாக -அதாவது 50 சதவிகிதமாக -குறைக்கலாம்!



11. ஒரே நிலத்தில் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று போகம் நெல் அல்லது மற்ற தானியங்கள் பயிர் செய்வதைக் காட்டிலும், ஒரு பருவத்தில் உளுந்து, பச்சைப் பயறு, காராமணி போன்ற பயறு வகைகளைப் பயிரிடுவதனல் நிலத்திற்குத் தேவையான உரம் குறைவதுடன், நிலத்தின் வளமும் பயறு வகைகளின் மூலம் உயருகிறது. அதாவது, பயறுவகைச் செடிகளின் வேர் முடிச்சுகளில் உள்ள நுண்ணுயிர்கள் (பேக்டீரியாக்கள்)

வானத்தில் நிறைந்துள்ள தழைச்சத்தை நிலத்தில் சேர்த்து, அதன் மூலம் வளத்தைப் பெருக்குகின்றன. இவ்வாறு பயறு வகைச் செடிகளைப் பயிர் சுழற்சியாக நெற்பயிருடன் பயிரிட்டால், நெற்பயிருக்கு இட வேண்டிய தழைச் சத்து உரத்தைக் கணிசமாகக் குறைத்துக்கொள்ளலாம். ஏனெனில் ஒரு எக்டேர் நிலத்தில் நெருக்கி விதைத்து, பச்சைப் பயறு அல்லது உளுந்து சாகுபடி செய்வதால் சுமார் 30 முதல் 50 கிலோ வரை தழைச்சத்து நிலத்தில் சேருகிறது! முன்னைய நாட்களைப் போலல்லாமல் தற்சமயம் ஆராய்ச்சியின் மூலம் உயர் விளைச்சலும், 65 முதல் 70 நாட்களில் குறுகிய காலத்தில் அறுவடை செய்யக்கூடியதும், எல்லாப் பருவத்திலும் பயிரிட ஏற்றதுமான சில புது உளுந்து, பச்சைப்பயறு இரகங்களை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளார்கள்! இவைகளைப் பயிரிட்டு அதிக விளைச்சல் காணுவதோடல்லாமல், இரசாயன உரத்தேவையையும் மிகவும் குறைத்துக் கொள்ளலாம்!

12. உயர் விளைச்சல் நெல் இரகத்திற்கு நல்ல நீர், நில வளப்பாதுகாப்பும், உரமும் மட்டும் இருந்துவிட்டால் போதாது! தக்க முறையில் பயிர்ப் பாதுகாப்புச் செய்து, அதில் காணும் நோய் மற்றும் பூச்சிகளைத் தடுக்க வேண்டும்! ஆனால், அதற்குத் தேவையான மருந்துகளின் விலையும் அதிகரித்து விட்டது! தேவையான அளவில் கிடைப்பதும் இல்லை! ஆகையால் இந்த மருந்துகளை உபயோகிப்பதிலும் சிக்கனம் இருக்க வேண்டும். முக்கியமான நோய்களும், பூச்சிகளும் எல்லாப் பருவத்திலும் நெற்பயிரைத் தாக்குவதில்லை. ஆகையால் பருவத்திற்கு ஏற்றவாறு, தக்கமுறையில் மருந்தைத் தெளிக்க வேண்டும். இதற்கான ஆலோசனைகளை அரசாங்கப் பயிர்ப்பாதுகாப்பு வல்லுநர்களிடம் கலந்து அறிய வேண்டும். இந்த முறையில் சேமிக்கும் பணத்தை, இரசாயன உரம் வாங்கவோ, மற்ற செலவிற்கோ பயன்படுத்தலாம்!

தற்சமயம் உள்ள உரத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வேண்டுமானல், நமது உழவர் பெருமக்கள் நன்கு யோசித்து மேற்கூறியவாறு மிகச் சிக்கனமான முறையில் இரசாயன உரத்தை உபயோகிக்க வேண்டும்.

மேலும், அடுத்துவரும் பருவங்களில் உரத்தின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதனல், ஒரு கிலோ உரத்தின் மூலம் எவ்விதம் அதிக விளைச்சல் எடுத்து, நிறைந்த பயன் அடையலாம் என்பதை ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டும்!



வருங்காலத்தில் நெற்பயிருக்குச் செலவாகும் மொத்தத் தொகையில் 50 சதவிகிதத்துக்கு மேல் இரசாயன உரத்திற்காக மட்டும் செலவிட வேண்டிய அவசியம் ஏற்படுமாகையால், நாம் எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனமாக உரத்தை உபயோகித்து, விஞ்ஞான முறையில் தானிய உற்பத்தியைப் பெருக்குகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கும், நமது நாட்டிற்கும் நல்லது! எனவே, நமது தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் தற்போதுள்ள நெருக்கடியான நிலையை உணர்ந்து வேளாண்மைத் திறனைத் தீவிரப்படுத்தி நாட்டுக்கு நன்மைத் தேடித் தர வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.


**1,75,000-க்கும் மேற்பட்ட**
**உழவர் பெருமக்கள்**
**"சென்டிரல் பாங்க்" தரும்**
**51 கோடி ரூபாய் நிதி உதவிக்காக**
**ஏதாவது ஒரு வகையில்,**
**நன்றி கூறுகிறவர்களாகயிருக்கிருர்கள்!**

அவர்களில் நீங்களும் ஒருவராக
இருக்கலாம்?
இல்லாவிடில் அவ்வாறு
நீங்களும் ஆகமுடியும்!

சென்டிரல் பாங்க் ஆப் இந்தியா,
(இந்தியாவின் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பெரிய வங்கி)


# மயிலை கபாலீசுவரர் கோயில்



ஆலயத்தில் ஆண்டவனையும் வழிபடலாம்; அறிவுக்கு விருந்தூட்டும் நூல்களையும் படிக்கலாம்.

ஆலயத்தில் ஆதிபகவனையும் வணங்கலாம்; பச்சிளங் குழந்தைகளுக்குப் பாலும் பெறலாம்.

ஆலயத்தில் கடவுள் வாழ்த்தும் பாடலாம்; கண்ணொளித் திட்டத்திற்கு நிதியுதவியும் பெறலாம்!

இவையெல்லாம் எங்கே பெறலாம்?

சிங்காரச் சென்னையில், சிறந்தோங்கும் திருமயிலையில் விளங்கும் அருள்மிகு கபாலீசுவரர் கோயிலில்தான்!

ஆலயத்தின் கம்பீரமான கோபுர வாயிலினுள் நுழைகிறேம். ஆடவரும், மகளிரும், வண்ண குழந்தைகளும் வந்த வண்ணமிருக்கின்றனர். தெய்வமணங் கமழும் இத்திருக்கோயில் துப்புரவாய்க் காட்சியளிக்கிறது. அமைதியான சூழ்நிலையும், நல்ல காற்றேட்டமும் உள்ள இக்கோயிலில் வழிபட வருவோருக்கு வசதிகள் பலவும் செய்திருப்பதைப் பார்த்து மகிழ்கிறேம். மயிலை கபாலீசுவரர் கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்கது. அந்த வரலாற்றைத் தெரிந்து கொள்வோமா?

மயிலாப்பூர்—அன்றும் இன்றும் அழகு கொழிக்கும் பழம் பெரும் நகராகத் திகழ்கிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செல்வம் கொழித்த திருநகராகத் திகழ்ந்திருந்தது. கி.பி. 1662-ல் ஜான் நையுப் (John Neiuhef) "மயிலையை அடுத்த சாந்தோம் கிழக்குப் பகுதியில் உள்ள செல்வம் மல்கிய துறைமுகங்களில் ஒன்று" என்று கூறியுள்ளார்.




கி.பி. 14-ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் மயிலாப்பூர் வருகை புரிந்த ஜான் டீ மரிக் நோலி (John De Marig Noli) என்பார் மயிலாப்பூரின் மயில்களைப் பற்றியும், மயிலாப்பூருக்குச் சீனத்துக் கப்பல்கள் வந்துபோன செய்தியினையும் சுவைபட தெரிவித்துள்ளார்.

கி.பி. 13-ம் நூற்றுண்டில் வெனிஸ் நாட்டிலிருந்து வந்த மார்க்க போலோ (Marco polo) என்ற புகழ்வாய்ந்த பயணி, மயிலாப்பூர் மயில்களுக்குப் பெயர் போனதென்று குறித்துள்ளார். எனவே, மயிலாப்பூர் பண்டை நாட்களில் பன்னாட்டினரும் வந்து குழுமும் ஓர் புகழ் பெற்ற பெரிய துறைமுகமாக விளங்கியது.

பல்லவர் காலத்தில் மாமல்லபுரம் முக்கியத் துறைமுகமாக அமைவதற்கு முன் மயிலாப்பூரே பல்லவர்களின் முக்கியத் துறைமுகமாக விளங்கி இருக்கிறது. காஞ்சியினைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவப் பேரரசர்கள் தங்களை "மயிலைக் காவலன்" என்று அழைத்துப் பெருமிதங் கொண்டனர்!

2-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த டாலமி (ptolamy) என்பார் மயிலையை "மயிலார்பன் (Mylarphan) என்றுர். 9-ம் நூற்றுண்டின் கல்வெட்டிலிருந்து இவ்வூர் "மயிலார்ப்பு" என்றும் "மயிலாப்பில்" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. "மயிலாப்பில்" என்றால் மயில் அகவும் இடம் எனப் பொருள்.

5-ம் நூற்றுண்டைச் சார்ந்த திருமழிசை ஆழ்வார் மயிலாப்பூரை "மாமயிலை" எனவும், 7-ம் நூற்றுண்டைச் சார்ந்த ஞானசம்பந்தர் "மயிலை" எனவும், "மயிலாப்பு" எனவும் குறிப்பிடுகிருர். நாவுக்கரசரோ இதனை "மயிலாப்பில்" என அழைக்கின்றுர். நந்திக் கலம்பகமும், கலிங்கத்துப்பரணியும் இவ்வூரினை "மயிலை" என்றே அழைத்து மகிழ்ந்தன. சுந்தரரும் திருமயிலை ஆழ்வாரும், அருணகிரிநாதரும் இவ்வூரை "மயிலை"

என்றே அழைக்கின்றனர். பெரிய புராணம் கண்ட சேக்கிழார் பெருமானே ''திரு மயிலாபுரி'' என இவ்வூருக்குப் பெயர் சூட்டினர்.

மயில் உருவான உமையம்மை சிவபெருமானை இங்கே வழிபட்டு மயிலுரு நீங்கப் பெற்றதால், இவ்வூருக்கு மயிலாப்பூர் எனப் பெயர் வழங்கலாயிற்று என்று புராணம் கூறும் கதையாகும்.

இலக்கியமும், வரலாறும் இவ்வூரில் அழகிய மயில்கள் அகவிய காட்சிகளைப் படம் பிடித்துக்காட்டி புராணக் கூற்றுக்கு வலிவு தேடுகின்றன.

வள்ளுவனை உலகினுக்கும் வான் புகழைத் தமிழ்நாட்டுக்கும் தந்தது திருமயிலைதான்!

அருள் சுரக்கும் ஆழ்வார்கள் பன்னிருவரில் மூன்றுமவராகிய பேயாழ்வாரைப் பெற்றெடுத்து, பாமணக்கும் பாசுரங்களை அருவியாய், ஆறாய், பெருவெள்ளமாய் ஓடச் செய்த பெருமைய்யைப் பெற்றதும் இத் திருமயிலைதான்!

இன்று தனிப்பேரூராய்த் திகழும் திருவல்லிக்கேணி அன்று மாடங்கள் மலிந்த மயிலைப் பேரூரின் ஒரு பகுதி

படுகிறது. இதுவே 'கபாலி தீர்த்தம்' எனப்படும்.

திருவமிகு சிவலிங்கத் திருமேனியோடு மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறான். கபாலீச்சுவரன். பெருமானுக்கு வலப்புறம் தெற்கு நோக்கிய தனிக்கோவிலில் ஆட்சி புரிகிறாள் கற்பகத் தாய். பெருமானுக்கு இடப்புறம் உள்ள கோவிலில் மேற்குத் திசையில் மேவி, ஆறுமுகத்தோடு அமர்ந்திருக்கிறான் சிங்காரவேலன்.


பால் வழங்கும் காட்சி

சேக்கிழார் என்ற வேளாண் குடிக்குப் புகழ் தேடித் தந்தவர்க்கு ''சேக்கிழார்'' என்று பெயர் சூட்டியதுபோல, தொல்காப்பியக் குடியில் பிறந்து அக் குடிக்குப் பேரும் புகழும் பெருமையும் சேர்த்தவர்க்குத் 'தொல்காப்பியர்' என்ற பெயரே நிலைத்தது போல, 'வாயிலார்' என்ற வேளாண் குடியில் பிறந்து அக்குடிக்கு அளப்பரும் பெருமையைத் தேடித்தந்த வாயிலார் நாயனார் பிறந்தது இம்மயிலையிலே!

யாக இருந்ததென்பது 'தேனமர்சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி' என்று பாடிய திருமங்கையாழ்வார் பாசுரத்தில் இருந்து தெரிய வருகிறது. இதனால் அன்றைய மயிலை இன்றைய திருவல்லிக்கேணிப் பகுதியையும் உள்ளடக்கிய பெரும் பேரூராய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

திருக்கோயில் மேற்கு நோக்கி இருக்கிறது. வாயிலின் முன்புறம் நடுமண்டபத்தோடு கூடிய பெரிய திருக்குளம் பேரழகுடையதாய்க் காணப்

அன்னை கற்பகத்துக்கு நேர் தெற்கே வாயிலார் நாயனார் கோயில் கொண்டுள்ளார்.

கபாலிப் பெருமானுக்கு எதிரே தலை வாயிலின் வடபுறம் திருஞான சம்பந்தர் பூம்பாவையுடன் இருக்கிறார். கோவிலின் வடக்கு வெளிச் சுற்றிலே அலுவலகத்துக்கு எதிரே புனிதப் புன்னை மரம் இருக்கிறது. அரச கோபுரமெனஅழைக்கப்படும் இழை வாயிலில் கூத்தாடும் பிள்ளையார் காட்சி தருகின்றார்.

இவ்வூருக்கே பெருமை தரும் திருவிழா அறுபத்து மூவர் காட்சியேயாகும். அன்றைக்குச் சுமார் பத்து இலட்சம் மக்கள்





நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வருகின்றனர்; இப்பெருவிழாவையொட்டித் திருக்கோயிலினுள் இன்னிசை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமண்டபம் ஆகியவை மக்களுக்குக் கருத்து விருந்து படைக்கின்றன.

இப்பெருவிழாவைத் தவிர வைகாசித் திங்களில் வசந்தத் திருவிழாவும், ஆவணித் திங்களில் பன்னிரு திருமுறை பெருந் திருவிழாவும், புரட்டாசித் திங்களில் நவராத்திரித் திருவிழாவும், ஐப்பசித் திங்களில் கந்தர்சஷ்டித் திருவிழாவும், தைப்பூசத்தில் தெப்பத் திருவிழாவும், மாசித் திங்களில் கடலாட்டுத் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

திருக்கோயில் ஆற்றிவரும் திருப்பணிகள் பல. அவை:

1. ஆண்டுதோறும் திருமுறை விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது.

2. ஒவ்வோர் ஆங்கில மாதமும் மூன்றும் ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை இருவேளையும் தேவாரம் மற்றும் திருமுறைப் பண்ணிசை ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு நிகழ்த்தி வருவது.

3. தேவார ஆகமப் பள்ளிகள் நடத்துவது.

4. திருமணங்கள் நடத்திக் கொள்வதற்காகக் கபாலீசுவரர் திருமண மண்டபம் கட்டியிருப்பது.

5. குளிர்ந்த குடிநீர் வசதி செய்யப்பட்டிருப்பது.

6. சுவாமி அம்மன் சன்னிதிகளில் விரைவில் குளிர்காற்று வசதி பொருத்தப்பட இருப்பது.

7. விநாயகர், சிங்காரவேலர், சனீசுவரர், நவக்கிரகம் ஆகிய நான்கு சன்னிதிகளிலும் சலவைக் கல் பதிக்கப்பட்டிருப்பது. விரைவில் மற்றச் சன்னிதிகளுக்கும் அமைக்கப்படவிருப்பது.

8. தெய்வீக வண்ண ஓவியங்கள் கண்ணாடிச் சட்டமிட்டுக் கண்ணைக்கவரும் வண்ணம் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருப்பது.

9. கோயிற் சுற்றில் கருங்கல் தளவரிசை போடப்பட்டு வருவது.

10. பொதுமக்கள் நலனுக்காகப் பிரசாதங்கள் விற்பனை நிலையம் அமைத்திருப்பது.

11. ஆலய வருவாயினைப் பெருக்க அருச்சனைகளுக்குக் கட்டணங்கள் வசூலித்து வருவது.

12. கோயிற் சுற்றில் அதிக ஒளி உமிழ் மின் விளக்குகள் பொருத்தியிருப்பது.

13. கண்ணைக் கவரும் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விட்டு வருவாயைப் பெருக்குவது.

14. வசதியற்றோர்க்கு இலவசமாகத் திருமணங்கள் செய்து வைப்பது.

15. திருப்பணி செய்து, திருக்குடமுழுக்கு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவது.

பொதுவாக ஆலயங்கள் வெறும் வழிபடும் இடங்களாக மட்டுமில்லாமல், பல்வேறு பொதுப்பணிகளையும் செவ்வனே ஆற்றிவருகின்றன. தமிழகத்திலுள்ள பல திருக்கோயில்கள் இதுபோன்ற திருப்பணிகள் பலவற்றைச் செய்து வருகின்றன.

'மக்கள் பணியே மகேசன் பணி' என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் ஆலயப் பணிகள் இன்று விரிவடைந்து வருகின்றன.

சென்னை மயிலை கபாலீசுவரர் கோயில், ஏழை எளியவர்களுக்கு இலவசத் திருமணங்களை நடத்தி வருகின்றது. இதற்காக ஆண்டுதோறும் ரூ. 5,000 செலவிடுகிறது. ஒரு திருமணத்துக்காகும் செலவு சுமார் ரூ. 200. புடவை, வேட்டி, திருமாங்கல்யம் முதலியன மணமக்களுக்கு வழங்கப்படுகிறது.

தீ விபத்துக்களின்போது பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு இவ்வாலயத்தின் சார்பில் நூற்றுக்கணக்கான வேட்டி, புடவைகள் அன்பளிப்பாக


ஆலயத்தினுள்ளே அறிவாலயம்

# விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



# அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

FDSIC/1813THA





இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

# சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark
of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்




அறுபத்து மூவர் திருவிழாக் காட்சி

வழங்கப்பட்டுள்ளன.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் கண்
திட்டத்திற்காகவும்,
ணொளி வழங்கும் திட்டத்திற்
காகவும் இவ்வாலயத்தின்
சார்பில் சுமார் ரூ. 20,000
நன்கொடை வழங்கப்பட்டுள்
ளதையும் இங்குக் குறிப்பிட
வேண்டும். இவ்வாண்டு ஊன
முற்றவர்களுக்காகவும் ஒரு
கணிசமான தொகை வழங்கப்
பட்டுள்ளது. இவ் று ஏழை
யின் சிரிப்பில் இறைவனைக்
காணும் நோக்கோடு பல அரிய
செயல்களைச் செய்து வருகின்
றது இத் திருக்கோயில்.

நாள்தோறும் சுமார் 25
குழந்தைகளுக்கு, இந்த ஆல
யத்திலேயே பால் வழங்கப்படு
கிறது. சிறுவர், சிறுமியர்,
பெரியவர் ஆகியோர் குழந்தை
களுக்காகப் பால் பெற, வரி
சையாக நிற்கும் காட்சியை
இங்கே அன்றாடம் பார்க்கலாம்.

இத்திருக்கோயில் ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றது. அதுதான் 'பிடி அரிசித் திட்டம்'. கோயிலுக்கு வருகிறவர்கள் இங்கே உள்ள ஒரு பெரிய உண்டியலில் பிடி அரிசியைப் போடுகின்றனர். இந்த அரிசியைக் கொண்டு வாரத்துக்கு இரண்டு நாள் அதாவது திங்கள், வெள்ளிக் கிழமைகளில் 50 ஏழைகளுக்கு சுவையான உணவு வழங்கப்படுகிறது, 10 காசுக்கு!

கடந்த 9 ஆண்டுகளாக இங்கு தேவாரப் பள்ளி ஒன்று மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. சிறுவர், சிறுமிகள் பலர் இப்பள்ளியில், ஒரு ஆசிரியரின் துணையோடு தேவார இசைப்பயிற்சி பெறுகின்றனர். இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு இலவச உணவு, உடை வழங்கப்படுகிறது.

குறைந்த வாடகையில் நல்ல வீடுகளை வழங்கும் நோக்கத்துடன் இரு காலனிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கபாலீசுவரர் நகர், வாயிலார் நாயனார் நகர் என்னும் நகர்களில் உள்ள இல்லங்களில் பலர் குடிவந்துள்ளனர்.

ஆலயத்துக்குள்ளே அழகிய நூலகம் ஒன்றிருக்கிறது. சுமார் 5000 நூல்கள் உள்ள இந்த நூலகம் மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும் பெரிதும் பயன்பட்டு வருகின்றது. காலையும், மாலையும் இங்கு அறிவு விருந்து பெறலாம்.

கோயில் வருமானத்தைப் பொறுத்தே அதன் செயல் திட்டங்கள் அமையும் அல்லவா? சில கோயில்கள் உண்டியல் வருமானத்தைக் கொண்டு செயலாற்றுகின்றன; ஆனால் இத்திருக்கோயிலோ வீடுகள் மூலமாக வருமானத்தைப் பெறுகின்றன. இக்கோயிலுக்குச் சொந்தமாக 125 வீடுகள் இருக்கின்றன. இவையன்றி ரூ .6 இலட்சம் செலவில் ஒரு

அங்காடி ஒன்றையும் கட்டத் திட்டமிட்டு, இப்போது அதற்கான அடிக்கல் போடப்பட்டிருக்கிறது.

இந்த ஆலயத்தின் சார்பில் அனாதை இல்லம்' ஒன்றை அமைக்கவும்திட்டமிருக்கிறது. முதலில் 15 குழந்தைகள் இவ்வில்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களுக்குப் படிக்க வசதி, இலவச உணவு, உடை முதலிய எல்லா வசதிகளும் வழங்கப்படும். இந்த இல்லம் விரைவில் துவக்கப்படவிருக்கிறது.

இத்திருக்கோயிலின் சார்பில் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கற்பகாம்பாள் திருமண மண்டபம் நிறைந்த வசதிகளுடன் திகழ்கிறது.

இந்த ஆலயத்துக்கு ஒரு நாளைக்குச் சுமார் 10 மேலை நாடுகளைச் சேர்ந்த பயணிகள் வருகை புரிகின்றனர். வெளிநாட்டுப் பயணிகளுக்கு உதவியாக இக்கோயிலின் சார்பில் ஒரு வழிகாட்டியும் உள்ளார். ரஷியா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, நேபாளம் முதலிய நாடுகளிலுள்ள பயணிகளை இக்கோயில் வெகுவாகக் கவர்ந்துள்ளது.




கோயிலில் தமிழ் அர்ச்சனையும், அபிராமி அந்தாதியும் சலவைக் கற்களில் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னொரு நல்ல காரியத்தையும் இக்கோயில் செய்து வருகிறது. போதிய நிதிவசதி இல்லாத மற்ற கோயில்களுக்கு இது நிதி உதவி அளித்து வருகிறது. இதற்காக ஒரு ஆண்டுக்கு ரூ. 10,000 ஒதுக்கி எல்லாவற்றுக்கும் பகிர்ந்து அளிக்கிறது.

இவ்வாறு மக்கள் பணியில் அக்கறையும், ஆர்வமும் கொண்டு ஆலயத்தின் சார்பில் அரும்பணியாற்றத் துணை நிற்பவர்கள் நிருவாக அலுவலரும் துணை ஆணையருமான திரு. த. நாகராசன், அறங்காவலர்கள் திருவாளர்கள்: டி. பாலகிருட்டிணன், ஆர். கோதண்டராமன், எஸ். ஜெயராமன், ஜி. குசேலர் ஆகியோர் பாராட்டுக்குரியராவர்.

சமுதாயம் வளமும் நலமும் பெற்றிட, ஒவ்வொருவரும் தம்மாலான உதவிகளைச் செய்திட முன்வருதல் வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல ஒவ்வொருவர் செய்யும் சிறு உதவியும் பல்கிப் பெருகி பயன் பெறச் செய்யும் அல்லவா? இந்த வகையில் பணியாற்றும் ஆலயங்களை நோக்கி இருகரம் கூப்பி வணங்குவோம்!

—பி.வி.ஜி.

## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1828.
## படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!





செங்கம் பகுதியில் சிறு விவசாயிகளுக்கு உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப் பெற்ற கறவை மாடுகள்.

குமரன்

# வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கான துணைத் தொழில் திட்டங்கள்!

நாட்டின் உயிர் நாடியாக இருப்பவை கிராமங்கள். இந்த கிராமங்களில் வாழும் மக்களில் பெரும் பகுதியினர், சிறு விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களுமே ஆவர். இவர்களுக்குவிதைப்புக்காலம், அறுவடைக் காலம் போன்ற குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே வேலை உண்டு. மற்ற நாட்களில் போதிய வேலையும் வருமானமும் இல்லாமல் அவதிக்கு உட்பட்டிருக்கிறது. இவர்கள் வாழ்க்கை நிலை.

இத்தகைய மக்களுக்குத் துணைத் தொழில்கள்கிடைக்கச் செய்து, அதன் மூலம் இவர்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கும் நாட்டின் வளப்பத்தைப் பெருக்குவதற்கும் உருவாக்கப்பட்டதுதான் ''சிறு அளவு நில விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மேம்பாட்டு நிறுவனம் (Marginal farmers and Agricultural labourers development agency) இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான முழு நிதி உதவியை மத்திய அரசு அளிக்கிறது. நாடு முழுவதிலும் 86 மாவட்டங்களில் சிறு அளவு நில விவசாயிகள், நிலம் அற்ற விவசாயத் தொழிலாளர்கள் மேம்பாட்டு நிறுவனமும், சிறு அளவு நில விவசாயிகள் வளர்ச்சி நிறுவனமும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த நிறுவனத் தலைவர் ஆவார். ஐந்தாவது திட்டக் காலத்தில் 160 மாவட்டங்களில் இத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களில் இரண்டு ''சிறு அளவு நில விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் வளர்ச்சி நிறுவனங்களும்'' தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் ''சிறு அளவு நில விவசாயிகள் வளர்ச்சி நிறுவனங்களும்'' செயல்பட்டு வருகின்றன.

### வட ஆர்க்காடு மாவட்டத்தில் பணி

வட ஆர்க்காடு மாவட்டத்திற்கான நிறுவனம் செங்கத்தை மையமாகக் கொண்டு, செங்கம் வட்டத்தைச் சேர்ந்த செங்கம், புதுப்பாளையம் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கடந்த பிப்ரவரி வரை செயல்பட்டு இப்போது மூன்றாவது ஊராட்சி ஒன்றியமான தண்டாராம்பட்டுப் பகுதியும் இந் நிறுவனப் பணி வரம்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனமானது 184 கிராமங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்குச்சேவை செய்கிறது. புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 14 கிராமங்கள் இந்நிறுவன எல்லையிலுள்ள ஐவ்வாது மலைப் பகுதியில் இருக்கின்றன. இந்த மலைப் பகுதி கிராமங்களிலுள்ள பழங்குடியினரான மலையாளிக் குடும்பங்களுக்கு ஏற்ப தனித் திட்டங்கள் வகுக்கவும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், தங்கள் நிலங்களிலிருந்து விவசாயத்தின் மூலம் பெறும் வருவாயைப் பெருக்கிக் கொள்ள பயனுள்ள சிறு பாசனத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றுகும். தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் (Identified families) மொத்த வருவாயைப் பெருக்க உதவும் துணைத் தொழில்களான கால் நடை வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ப்பு ஆகிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதுஇதன் அடுத்த முக்கியப்பணி. நிலம் அற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குத் துணைத் தொழில்களுக்கான திட்டங்களை அமைத்துச் செயல் படுத்துவதுடன் விவசாய வேலைகள் குறைவாக உள்ள காலங்களில் வேலை வாய்ப்புக்காக, கிராமப்புற வேலைத் திட்டமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. தனியார்களுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதுடன் வேளாண் மக்களுக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை அமைத்துக் கொடுப்பதும் முக்கியமான நோக்கமாகும்.

### நிதி வசதிக்கான அமைப்புகள்

இந்த மேம்பாட்டுத் திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களில் முதல் தேவை நிதி வசதி என்பதை விளக்கத் தேவையில்லை. இவ்வகையில் நிதி வசதி செய்யத் தேர்ந்து எடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு

கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் கடன் வழங்க வழி செய்துகொடுக்கப் படுகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர்மையக் கூட்டுறவு வங்கியே எல்லா கிராமங்களுக்கும் கிராம கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக குறுகிய கால சாகுபடிக் கடன் ஆகிய ஓராண்டுக் கடனையும் கால்நடைத் திட்டங்களுக்கான மத்திய கால—மூன்று ஆண்டு கால—கடன்களையும் அளித்து வருகிறது. தனியார் கிளை வங்கிகள் இரண்டு மட்டுமே இந் நிறுவன எல்லையில் செயல் படுகின்றன. அவை கடன் வசதி அளிக்க இன்னும் முன் வரவில்லை. நிலச் சீர்திருத்தம் மற்றும் சிறு பாசனத் திட்டங்களான புதிய கிணறு வெட்டுதல், பழைய கிணறுகளை ஆழப் படுத்துதல் மற்றும் மின்மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்தல் ஆகியவைகளுக்கான நீண்ட காலக் கடன் வசதியை பிரதம நில வள வங்கி அளிக்கிறது.

மானிய உதவி

தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்குக்கடன்வசதி செய்து கொடுப்பதுடன், கடன் பெற்றவர்கள் கஷ்டமில்லாமல் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக கடன் பளுவைக் குறைக்க இந் நிறுவனம் கீழ்க் கண்ட அளவு மானியமும் வழங்குகிறது:

1. குறுகிய காலக் கடன்கள் — 25 சதவிகிதம்.

2. மத்திய, நீண்ட காலக் கடன்கள் — 33.3 சதவிகிதம்.

மானியத் தொகையை இந் நிறுவனம், கடன் அளிக்கும் வங்கிகளுக்கு நேரடியாக அளித்து விடுகிறது. இந்தத் திட்டத்தில் பயனடைவதற்குத் தகுதியுள்ள குடும்பத்தாரின் விவரம் பின்வருமாறு:

1. மிகச் சிறு அளவு நிலம் உள்ள விவசாயக்குடும்பங்கள். அதாவது நன்செய் அல்லது புன்செய் பாசன நிலமானல் ஒரு ஏக்கர் வரையிலும், மானவாரி புன்செய் நிலமானல் இரண்டு ஏக்கர் வரையும் நிலம் உள்ளவர்கள்.

2. சிறு அளவு நில விவசாயக் குடும்பங்கள். அதாவது நன்செய் அல்லது புன்செய் பாசன நிலமானல் ஒரு ஏக்கருக்கு மேல் இரண்டரை ஏக்கர் வரையிலும் மானவாரி புன்செய் நிலமானல் இரண்டு ஏக்கருக்கு மேல் 5 ஏக்கர் வரையிலும் நிலம் உள்ளவர்கள்.

மேற்கூறிய இரு வகையான குடும்பத்தாரின் விவசாய மூலம் அல்லாத இதர தொடர்ந்த வருமானம் மாதத்திற்கு ரூ. 200-க்கு உட்பட்டு இருந்தால் தான் இந்த உதவி கிடைக்கும்.

3. நிலமற்ற விவசாயத் தொழிலாளி—அதாவது தனது அன்றாடத் தொழில் மூலம் கிடைக்கும் வருவாயில் 50 சதவிகிதத்திற்கு மேல் விவசாயக் கூலி வேலையின் மூலம் பெறுபவராகவும்சொந்த வீடு உள்ளவராகவும் இருப்போர் இப் பிரிவின் கீழ் வருவர்.

இருபதாயிரம் குடும்பங்கள்

இத் திட்டத்தின் மூலம் ஐந்தாண்டுக் காலத்தில் மேற்கூறிய மூன்று வகையினரும் சேர்ந்து சுமார் 20,000 குடும்பங்கள் பயனடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்கள் பயனடைவதற்கு உதவுகின்ற கூட்டுறவு அமைப்புக்களுக்கும் இந் நிறுவனம் வசதிகள் அளிக்கிறது. கூட்டுறவு மைய வங்கிக்கு நான்கு மேற் பார்வையாளர்களின் '(ஒரு வட்டாரத்திற்கு இருவர்வீதம்) சம்பளத்திற்கான மானியத்தை இந்த நிறுவனம் தருகிறது. சம்பள மானியமானது முதல் ஆண்டில் முழு மானியமும், இரண்டாவது ஆண்டில் மூன்றில் இரண்டு பங்கு அளவு மானியமும் மூன்ருவது ஆண்டில் மூன்றில் ஒரு பங்கு மானியமும் அளிக்கப்படுகிறது. இந் நிறுவனத்தின் பணி வரம்பில் உள்ள இரு தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரு இளநிலை ஆய்வர்—செயலாளர் களுக்கான முழு மானியம் அளிக்கப்படுகிறது. இரு



செங்கம் பகுதியில் சிறு விவசாயிகளுக்கான உதவித் திட்டத்தின் கீழ் சேங்கன்றுகள் வழங்கப் பெற்ற சிறு விவசாயிகள்.



தொழில் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்களும் தங்களுக்குத் தேவையான கருவிகளை வாங்க முழு மானியமாக ரூ. 10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் பெறுபவர்கள் எதிர்பாராத நிலையில் கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலை ஏற்படுமானல் வங்கிகளுக்கு இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் தொகையில் 8 சதவிகிதம் வீதமும் மைய வங்கிக்கு 3 சதவிகிதம் வீதமும் காப்பு நிதி அளிக்கப்படுகிறது.

கோழிப் பண்ணைகள்

கோழிப் பண்ணைகள் அமைக்க கோழிக் குஞ்சுகள் அதிக அளவில் தேவைப்படுகின்றன. இதற்காக ஏற்கனவே ஆரணிக்கு அருகில் உள்ள சத்திய விஜய நகரத்தில் செயல்பட்டு வரும் கோழி விரிவினை நிலையத்தை விரிவு படுத்த தமிழ் நாடு கோழி அபிவிருத்தி நிறுவனத்திற்கு ரூ. 2.00 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

கோழிக் குஞ்சுகளை சுமார் 16 வாரக் கோழிகளாக வளர்த்து பின் விவசாயிகளுக்கு வழங்க ரூ. 2.00 இலட்சம் மானியம் வழங்க மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அச்சரப்பாக்கத்தில் தீவனக் கலப்பு நிலையம் அமைக்க இந் நிறுவனம் ரூ. 2.00 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

கிராமக் கைவினைஞர்களுக்கு மின் மோர்ட்டார் ரீவைண்டிங் கிலும், மற்றும் விசைத் தெளிப்பான்களைப் பழுது பார்ப்பதிலும் பயிற்சி அளிப்பதற்காக ரூ. 84,000 செலவில் இரு திட்டங்களுக்கு வகை செய்யப்பட்டு வருகிறது.

கிராமப்புற வேலைத் திட்டம் கிராமப் பொறியியல் பணி ஆகியவைகளின் கீழ் ஏரிகள், வாய்க்கால்கள் பழுது பார்த் தல், சாலை அமைத்தல், சந்தை யில் வசதிகளைப் பெருக்க மேடைகள் கட்டிக் கொடுத் தல் ஆகிய செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, வேலை கள் தொடர்ந்து நடைபெறு இன்றன. இவ்வகையில் இது வரை மொத்தச் செலவு

ஊர்தி ஓட்டுநர் முதல் மாநாடு.

தஞ்சையில் 12—5—'74 அன்று, மாநில அரசு ஊர்தி ஓட்டுநர்கள் முதல் மாநாட்டில் முதல்வர் கலைஞர் பங்கேற்று அங்கேயே பல கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அப்போது, ஓட்டுநர் சங்கத்தின் சார்பில் முதல்வரின் பொன்விழாவை யொட்டி ரூ. 1111—அன்பளிப் பாக வழங்கப் பெற்றது.



ரூ. 7.72 இலட்சம் ஆகும். விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத காலத்தில் வேலை தர இவை உதவுகின்றன.

சிறு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவுவதற்கான இந்த இரு வகை நிறுவனங்களின் பணி எல்லையிலுள்ள ஏரிகளில் சுமார் 600 ஏக்கரில் கருவேலன் முதலிய மரங்களை தமிழ் நாடு வனத் துறை மூலமாக நட்டுப் பாதுகாக்கும் திட்டம் செயல்பட இருக்கிறது. இதற்குச் செலவு மதிப்பு ரூ. 2.50 இலட்சம் ஆகும்.

பெரியகோளப்பாடி கிராமத்தில் மண்வளப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 150 ஏக்கரில் வறட்சியைத் தாங்கிக் கொள்ளக் கூடிய மரங்களை நட்டுப் பராமரிக்கும் திட்டம் செயல்பட இருக்கிறது. இதற்குச் செலவு மதிப்பு ரூ. 1.20 இலட்சம் ஆகும். இதுவும் தமிழ் நாடு அரசு வனத் துறை மூலமாகச் செயல்படுத்தப்படும்.

ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் சாலை ஓரங்களில் புளியங் கன்றுகளை நட்டுப் பராமரிக்கும் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத் திட்டத்திற்கு சுமார் ரூ. 2.10 இலட்சம் செலவிடப்படும்.

இந்தப் பகுதியில் சிறுபாசன ஏரிகளின் கரைகளில் பனங் கொட்டை நட்டு பாதுகாக்கும் திட்டமும் ரூ. 30,000செலவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த ஆக்கப் பணிகள் ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தொடர்ந்து வருவாயைக் கொடுக்கும். புளியங் கன்று நடும்திட்டமும், பனங் கொட்டை ஊன்றும் திட்டமும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செயல் படுத்தப்படுகின்றன. இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1974 மார்ச் முடிவு வரை வரவினம் ரூ. 28.58 இலட்சம். தொடக்கத்திலிருந்து இத் தேதி வரை செலவு ரூ.28.85 இலட்சம் ஆகும். பயனடையும் சிறு விவசாயிகள் மிக்க ஆர்வத்துடன், இத் திட்டத்தில் ஒத்துழைத்து வருகிருர்கள்.

—சி.க.ரா.




# தமிழரசு சிறுகதைப் போட்டி 1974

61

தமிழரசு இதழைப் படித்து வரும் அன்பர்களும், எழுத்தாளர்களும், 'தமிழரசு' சிறுகதைப் போட்டி ஒன்றை உருவாக்கிட வேண்டும் என்று அடிக்கடி நமது அலுவலகத்துக்குக் கடிதம் எழுதி வந்தார்கள்.

எங்களுக்கும் அந்த எண்ணம் இருந்து வந்தது. நண்பர்களின் ஆர்வமும் சேர்ந்ததால், உடனடியாகச் 'சிறுகதைப் போட்டியை' நடத்த முன்வந்தோம். என்ருலும் அரசுத்துறை ஏடாக இருப்பதால் நீதித் துறையின் அனுமதி பெற்ற பின்னரே அறிவிக்கும் வாய்ப்புப் பெற்ருேம்.

'தமிழரசு' ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை நினைவுறுத்தும் வகையிலே துவக்கம் ஆகும் இந்தப் போட்டி, இனி ஒவ்வோர் ஆண்டும் நடைபெறவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

## போட்டிக்குரிய விவரங்கள்

*அரசின் ஆக்கப் பணிகளை அடித்தளமாகக் கொண்டு தமிழகச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் கதை அமைதல் வேண்டும்.

*கதை 'தமிழரசு' இதழில் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் இருக்கலாம்.

*ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானுலும் அனுப்பலாம்.

*தேர்ந்தெடுக்கப்பெருத கதைகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

*போட்டிக்கனுப்பப்படும் கதைகளின் அஞ்சல் உறையின் மீது

'தமிழரசு' சிறுகதைப் போட்டி

என்று குறிப்பிடுக.

*தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசு பெறும் கதைகள் தவிர, தகுதியுடைய கதைகள் 'தமிழரசில்' வெளியிடப்படும். அவைகளுக்கு வழக்கமான அன்பளிப்பு வழங்கப்படும்.

*போட்டிக்குக் கதைகள் வந்து சேரவேண்டிய முடிவு நாள்:—15—8—1974

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 500 |
| இரண்டாவது பரிசு | ரூ. 300 |
| மூன்ருவது பரிசு | ரூ. 200 |

# ஐவர் சொன்னார்கள்....

நான்கு ஆண்டுகள் நிறைவெய்தி ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தமிழரசைப் பற்றி, இது வரை தொடர்ந்து படித்துவரும் பல்வேறு அன்பர்கள் ஐவரைக் கேட்டோம். அவர்கள் சொன்னார்கள்.........



திரு. வ.உ.சி. சுப்பிரமணியம்

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்களின் புதல்வரும், பத்திரிகைத் தொழிலில் மிகுந்த அனுபவமுடையவரும், சென்னை அமெரிக்கத் தகவல் நிலையத்தின் தமிழ்ப் பிரிவில் முதன்மையாசிரியராகப் பணியாற்றி வருபவருமான திரு. வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள்...

*கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் கடந்த சில ஆண்டுகளாகத் 'தமிழரசு' ஏறுநடை போடுவது கண்டுமகிழாதார் இல்லை. தமிழக அரசின் கொள்கைகளையும், நல வாழ்வுப் பணிகளையும் கவினுற எடுத்துரைப்பதோடு இலக்கியம், அறிவியல், கவிதை, புதினம் முதலிய துறைகளிலும் சிறந்த கருவூலமாகத் 'தமிழரசு' திகழ்கிறது. புத்தெழில் ஊட்டி, புதுத் தமிழ் மணம் பரப்பி வரும் ஆசிரியர் குழுவினர் நமது பாராட்டுக்கு உரியவர்.*

*தமிழ்நாட்டில் வேளாண்மை, கல்வி, உடல் நலம்,*

*கலைகள் வளர்ச்சியைக் காட்டும் ஒரு கண்ணாடி, தமிழரசு.*

*வாணிப முறையில் வெளிவரும் ஏடுகள் பலவற்றையும்விட அழகிலும் அமைப்பிலும் தமிழரசு சிறந்து விளங்குகிறது; அறிவு ஒளி பரப்பி வருகிறது.*

*வெல்க, தமிழரசு இதழின் தன்னேரில்லா அரும் பணிகள்!*



திரு. மு. இராமநாதன்

பத்திரிகைத் தகவல் துறையில் நீண்ட அனுபவம் உடையவரும், கலையுள்ளம் கொண்டவரும், மத்திய அரசு உதவித் தகவல் அதிகாரியுமான திரு. மு. இராமநாதன் அவர்கள் சொன்னார்கள்....

தமிழ் மாநிலத்துக்கும் மக்களுக்கும் அரசு ஆற்றும் பணிகளை வெகு சிறப்பாக எடுத்துரைத்து வருவது 'தமிழரசு' ஆகும்!

பொருத்தமான பெயர், கண்கவர் அட்டைப் படம், கச்சிதமான அளவு. நேர்த்தியான காகிதம், பிழையற்ற பக்கங்கள், அழகிய படங்கள், அறிவியல் கட்டுரைகள், கதைகள், நெஞ்சை அள்ளும் கவிதைகள் இத்தனையும் கொண்டதே 'தமிழரசு' ஆகும்.

அரசு நடத்தும் பத்திரிகை எதுவும் சுவாரஸ்யமற்று கெஜட் மாதிரி அமைந்து விடுவதுண்டு. ஆனால் தமிழரசோ சிற்பம், சித்திரம், தொழில், வாணிபம், வேளாண்மை, கல்வி போன்ற பல துறைகளில் மக்களுக்கும் மாநிலத்துக்கும் ஏற்பட்டு வரும் நன்மைகளை மாதம் இருமுறை வெகு அழகாகப் படம் பிடித்துக் காட்டி வருவதுடன், அவ்வப்போது வெவ்வேறு தலைப்புக்களில் இலவச இணைப்பு நூல் என்ற பெயரில் நன்முத்துக்களையும் ஈன்று வருகிறது. எனவே, தமிழரசை 'இன்றுபோல் என்றும் வாழ்க' என்று வாழ்த்த விரும்புகிறேன்.



திரு. ஆர். மகாதேவன்

குடும்பநலத் திட்ட நிகழ்ச்சிகளில் புதுமையைப் புகுத்தியவரும் தாம் அமைக்கும் எந்த நிகழ்ச்சிகளிலும் முத்திரை பொறித்திடுபவரும் சென்னை அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சி அமைப்பாளருமான திரு. ஆர். மகாதேவன் அவர்கள் சொன்னார்கள்....

ஆங்கிலேயர் ஆட்சிக் காலந் தொட்டு அரசு ஏடுகள் கடைப்
பிடித்து வந்த அருமையான மரபுகளை எல்லாம் அடியோடு தகர்த்துவிட்ட 'தமிழரசு' இதழை என்னவென்பது?

அரசாங்க ஏடு என்றால் குறித்த நாளில் வெளிவரக் கூடாது என்று இருந்த இலக்கணத்தை முதற்கண் முறித்து விட்டீர்களே! அது போகட்டும், அரசாங்க ஏட்டிலே சுவையற்ற செய்திகளும், 'டெண்டர்' நோட்டீசுகளும்தான் இருக்க வேண்டும் என்ற மரபைக் காற்றிலே விட்டுவிட்டு சுவையான பயணக் கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும் வெளியிடும் போக்கை என்ன என்பது! இவை அனைத்தையும்விட மிக முக்கியமாக அரசாங்க ஏடு என்றால் கண்களைக் கவரும் வண்ணப் படங்களும், அழகான அச்சு எழுத்துக்களும் இருக்கக் கூடாது என்ற பண்டை மரபை மீறி அழகான முகப்பு அட்டையும், பல வண்ணப்படங்களும், வெளியிடத் துணிந்துவிட்ட உங்கள் ஆசிரியர் குழுவைப்பற்றி என்னசொல்வது!

அரசாங்க ஏடு என்றால் பொது மக்கள் காசு கொடுத்து வாங்கத் தக்கதல்ல என்ற தொன்மையான எண்ணத்தை எங்கள் உள்ளங்களிலிருந்து அகற்றி மற்ற பிரபல ஏடுகளைப்போல் இதனையும் வாங்கிப் படிக்கும் அளவிற்கு மாற்றிவிட்ட உங்களை என்ன என்பது!

இறுதியாக ஒரு வேண்டுகோள்: தொடர்ந்து இன்றுபோல் என்றும், அரசாங்க ஏடுகளின் தொன்மை மரபுகளை மீறிக் கொண்டேயிருங்கள்! நாங்களும் ஆயிரக்கணக்கில் வாங்கிப் படித்துக் கொண்டேயிருக்கிறோம்!



திரு. இரா. முத்துக்குமாரசாமி

நாட்டிலுள்ள நூல்நிலையங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாகத் திகழும் சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்தின் நூலகரும், புத்தகத் துறையில் நீண்ட அனுபவம் பெற்றவருமான திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் சொன்னார்கள்....

தண்டமிழ் வளர்க்கும் நம் தமிழக முதல்வர், டாக்டர், கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு வெளியிட்டுவரும் 'தமிழரசு' இதழைத் தொடக்க முதல் நான் படித்து வருகிறேன். 'தமிழரசு' ஒரு நல்ல தமிழ் முரசு.

அரசு நடத்தும் இதழ் என்றால் கவர்ச்சியற்று, படிப்பதற்குப் பயனற்ற புள்ளி விவரங்களைத் தரும் ஒன்று என்பது உண்மை நிலை. அதை மாற்றி, கண்ணையுங் கருத்தையும் கவரத்தக்க முறையில் பலவண்ண அட்டைப் படங்களுடனும் பயனுடைய படைப்புக்களுடனும் தமிழரசை வெளியிட்டுவருவது பாராட்டுதற்குரியதாகும்.

டாக்டர் கலைஞரின் எழுத்தோவியமான 'இனியவை இருபது' போன்ற சுவையுள்ள தொடரை வெளியிட்ட பெருமை 'தமிழரசு' இதழையே சாரும். பொதுமக்கள் அனைவருடைய எண்ணத்தையும் ஈர்க்கும் வகையில் சிறுகதைகளையும், தொடர் கதைகளையும், சிறந்த கவிஞர்களின் கவிதைகளையும் 'தமிழரசு' வெளியிட்டு வருவது நற்றமிழ் வளர்க்கும் பெரும்பணியாகும்.

தமிழக அரசு மக்களுக்குச் செய்யும் நல்ல பணிகளைப் படங்களுடனும் புள்ளி விவரங்களுடனும் தருவதின் வழி அரசு உதவியை மக்கள் நன்கு பெறுதற்கு வழி வகுக்கிறது.

தொடக்கமுதல் வெண்பாப் போட்டியை நிகழ்த்தி இளந் தமிழ்க் கவிஞர்களுக்கு ஊக்கமளித்து வருவதோடு நல்ல பணி செய்யும் நிலையங்களையும் 'தமிழரசு' மக்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்கின்றது.

அவ்வப்போது அவ்விதழுடன் வெளிவரும் இணைப்பு நூல்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி அரசு எடுக்கும் முடிவுகளை விளக்குவனவாய் அமைந்துள்ளன.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும், எந்த அரசும் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலும், சிறியோர் முதல் பெரியோர் வரை படித்துத் தம் பொது அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் இத்தகைய அழகிய பயனுடைய இதழை வெளியிடவில்லை. எதிலும் புதுமை செய்யும் கலைஞர் இதிலும் புதுமை செய்துள்ளது பாராட்டுதற்குரியது.



திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி

பொதுநலத் தொண்டில் மிகுந்த ஈடுபாடு உடையவரும், ஆதரவற்ற பெண்களுக்குப் புகலிடமாக விளங்கும் அவ்வை இல்லத்தின் தாளாளரும் சிறப்புச் செயலாளருமான திருமதி. மந்தா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள்....

தன் தளிர்நடை பயிலும் பால பருவம், வெற்றிச் செழுமையோடு முடிவு பெற்றது குறித்து 'தமிழரசு' பெருமையும் பெருமிதமும் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

செழுமையான நான்காண்டுக் காலப் பணி உண்மையை விரைவாகத் தன்னிலைப்படுத்திக் கொள்ளும் ஏடு என்ற தகுதியைத் 'தமிழரசு' பெறுகிறது. உழவுத் தொழிலிலிருந்து கணக்கியல் வரைக்கும், பொதுக்கல்வியிலிருந்து பொறியியல் வரைக்கும், சத்துணவுத் துறையில் தொடங்கி இயற்கை கனிச் செல்வங்கள் ஈருகவும், மற்றும் சமுதாய நலத்துறையிலிருந்து கதைத் தொகுப்புவரை பல்வேறு துறையின்பாலும் பல்சுவைச் சிறப்புச் செய்திகளை இந்தப் பத்திரிகையில் நீங்கள் பார்க்கலாம்.

படிக்க எடுத்தவுடன் படித்து முடிக்காமல் கீழே வைக்க முடி

யாத அளவுக்குப் பத்திரிகையின் கட்டமைப்பு அழகு மிளிர்கிறது.

உணர்ச்சி இல்லாத செய்திகளைப் படிக்காமல் இருக்கும் உணர்வு வாசகர்களிடையே நிலவுகிறது. ஒரு தடவை இந்தப் பத்திரிகையைப் படிக்கத் தொடங்கி விட்டால் அதைத் திரும்பத் திரும்பப் படிக்காமல் இருக்க முடியாது என்ற உண்மையை என் சொந்த அனுபவத்தின் மூலம் நான் சொல்ல முடியும்.

உங்கள் உணர்ச்சியை முழுவதும் இழுத்துச் செல்லும் தன்மையுடையது 'தமிழரசு'! அதனால் இந்த ஏடு அழகானது, படிக்கத் தகுந்தது, சுவையானது, போதனை மிகுந்தது. எல்லாவற்றையும் விட எண்ணக் கிளர்ச்சியைத் தோற்றுவிக்கும் செந்தமிழில் எழுதப்பட்டது என்பதை நான் கூற முடியும். படித்து முடித்தவுடன் புத்துணர்வோடு ஒருவர் வெளி வரலாம்.

இளந் தலைமுறையினர் இந்த ஏட்டினைப் படிப்பதால் அறிவு வளர்ச்சி பெறுகின்றனர் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த ஏட்டின் ஒரு சில பக்கங்கள் இளைஞரின் நடவடிக்கைகளுக்காக என்று ஒதுக்கினால், இளந் தலைமுறையினர் பொதுத் தொண்டில் ஆர்வம் உடையவர்களாகத் திகழ்வர் என்று நான் உணர்கிறேன்.

கடந்த காலத்தைத் தழுவி எதிர்காலத்திலும் முன்னைய உணர்ச்சியோடு— ஆர்வத்தோடு— இந்த ஏட்டினை அச்சடித்து வெளியிடும் பணித் தொடர தொடர்புடைய அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

---

குறவை மாஜுவாரிச் சிறப்பிதழ் கட்டுரைகள் காரணமாக இந்த இதழில் தொடர்கதை இடம் பெறவில்லை.

<u>அடுத்த இதழில்</u>

* பட்டிமன்றப் பாதை
* மேகங்கள் திரண்டால்..

---


## செழிப்பான பயிர் !

சிறப்பான மகசூல் தரும் செழிப்பான பயிர் வளர்க்க...............

ஒவ்வொரு உழவர் பெருமகனும் கனவு காண்கின்றான் !

ஆனால் எல்லா உழவர் பெருமக்களும் செழிப்பான பயிரை

அறுவடை செய்ய முடிவதில்லை !

ஏனெனில், அவர்களுக்குக் கிடைக்காதது............பணம் !

தரமான விதைகள்,
இரசாயன உரங்கள்,
பூச்சி மருந்துகள்,
பம்பு செட்டுகள்,
டிராக்டர்கள் அல்லது இதர பண்ணைக் கருவிகள் வாங்க
உழவர் பெருமக்களுக்கு

இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு

தேவையான நேரத்தில் நிதி உதவி செய்கிறது.

IOB இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு.



# உள்ளதையே கூறுகிறோம் : ஹைட்ராலிக் பரிட்சிப்பு என்றால் ஒவ்வொரு குழாய்க்கும் ஹைட்ராலிக் பரிட்சிப்பு.

# ஜெனித் தரம் என்றால் அதுதான் !



## முற்போக்கான விவசாயிகள் தேர்ந்தெடுக்கும் தரம்

ஜெனித் தொழிற்சாலையிலே, அத்யாவசியமான தரநிர்ணயக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
நிகழ்த்தப் படுகின்றன—அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்ந்தெடுத்த குழாய்களைக்
கொண்டு அல்ல; தனித்தனியே ஒவ்வொரு குழாயும் இப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்
படுகிறது. உதாரணமாக, ஜெனித் நடத்தும் ஹைட்ராலிக் (நீரழுத்த) பரிசோதனை :
ஒவ்வொரு குழாயும் 50 கிலோ / செமீ$^2$ அழுத்த விசையினைத் தாங்கி நிற்பதற்கு உறுதி
தருகிறது; ஒவ்வொரு குழாயினையும் மிகக் கண்டிப்பான இந்திய, பிரிட்டிஷ்,
சர்வதேசத் தரநிர்ணய விதிப்புகளுக்கு ஈடு நிற்கச் செய்கிறது.

விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் ஆகியவற்றின் தேவை தீர்க்கப்
பலவிதமான எஃகுக் குழாய்களை உடையது ஜெனித். குழாய்களை இந்தியாவிலிருந்து
ஏற்றுமதி செய்வதிலே முன்னோடியாக விளங்கியதற்காக அரசாங்கத்திட-
மிருந்து நற்சான்றுப் பத்திரம் பெற்றுள்ள ஜெனித் இன்று, அமெரிக்கா,
ஐக்கிய இங்கிலாந்து உள்பட 45 நாடுகளிலே உழைப்புத்திறனை
நிரூபித்த பெருமையைப் பெற்றுள்ளது.




வாங்குவீர்
ஜெனித்
எஃகுக் குழாய்களை—
45 நாடுகள் செய்வதுபோல்

ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிமிடெட்,
195, சர்ச்கேட் ரிக்ளமேஷன், பம்பாய்-400 020
போன்: 294445. தந்தி: ZENPIPES. டெலெக்ஸ் 011-2458

everest/865a/ZSP/tm

# 'சேமிப்பு'
## சிறந்த பழக்கம்!
## திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**




Criterion CO 2


உணவு உற்பத்தியில்
தன்னிறைவு எய்தியது போல
ஒவ்வொரு துறையிலும்
நிறைவுபெற உழைக்கின்றோம்
நம் நல்வாழ்வுக்காகத்
தமிழக அரசு
ஆற்றிடும் பணிகள்
எடுத்திடும் முயற்சிகள்
அத்திட்டங்களில்
வெற்றிகாண
நாம்ஆற்றவேண்டிய
கடமையே
காப்போம் — இனி
பிறந்ததைக் காப்போம் — இனி
பிறப்பதைத் தடுப்போம்!
எனவே
தமிழரசு


தமிழரசு
16-7-1974
25 JUL 1974



# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்



* கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
* புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
* சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ்விருந்து!
* மனதைக் கவரும் மாதவியின் அழகுச்சிலை.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.


# தமிழரசு


மலர் 5
இதழ் 2
16·7·1974




## கச்சத் தீவு குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை அமைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றுதல்

# தமிழரசு சிறுகதைப் போட்டி 1974

தமிழரசு இதழைப் படித்து வரும் அன்பர்களும், எழுத்தாளர்களும், 'தமிழரசு' சிறுகதைப் போட்டி ஒன்றை உருவாக்கிட வேண்டும் என்று அடிக்கடி நமது அலுவலகத்துக்குக் கடிதம் எழுதி வந்தார்கள்.

எங்களுக்கும் அந்த எண்ணம் இருந்து வந்தது. நண்பர்களின் ஆர்வமும் சேர்ந்ததால், உடனடியாகச் 'சிறுகதைப் போட்டியை' நடத்த முன்வந்தோம். என்றாலும் அரசுத்துறை ஏடாக இருப்பதால் நிதித் துறையின் அனுமதி பெற்ற பின்னரே அறிவிக்கும் வாய்ப்புப் பெற்றோம்.

'தமிழரசு' ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை நினைவுறுத்தும் வகையிலே துவக்கம் ஆகும் இந்தப் போட்டி, இனி ஒவ்வோர் ஆண்டும் நடைபெறவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## போட்டிக்குரிய விவரங்கள்

* அரசின் ஆக்கப் பணிகளை அடித்தளமாகக் கொண்டு தமிழகச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் கதை அமைதல் வேண்டும்.

* கதை 'தமிழரசு' இதழில் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் இருக்கலாம்.

* ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

* தேர்ந்தெடுக்கப்பெறாத கதைகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

* போட்டிக்கனுப்பப்படும் கதைகளின் அஞ்சல் உறையின் மீது

'தமிழரசு' சிறுகதைப் போட்டி

என்று குறிப்பிடுக.

* தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசு பெறும் கதைகள் தவிர, தகுதியுடைய கதைகள் 'தமிழரசில்' வெளியிடப்படும். அவைகளுக்கு வழக்கமான அன்பளிப்பு வழங்கப்படும்.

* போட்டிக்குக் கதைகள் வந்து சேரவேண்டிய முடிவு நாள் :—15—8—1974

முதல் பரிசு ரூ. 500
இரண்டாவது பரிசு ரூ. 300
மூன்றாவது பரிசு ரூ. 200

# நாம் செலுத்தும் நன்றி!

## முதல்வர் கலைஞர்

முன்னாள் இராணுவ வீரர்களின் மேம்பாட்டுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளில் ஒன்றாக இங்கு இராணுவ வீரர்கள் மாளிகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமும் அவர்கள் வாழ்வில் புத்தொளியை எழுப்பலாம் என்னும் இந்த முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

ஆண்டு ஒன்றுக்கு இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுத் திரும்பும் இராணுவ வீரர்கள் 60,000 பேர் ஆவர். 31-லிருந்து 35 வயது வரையில் ஓய்வு பெறும் வீரர்களும் 55-வது வயதில் ஓய்வு பெறும் இராணுவ அதிகாரிகளும், 45 வயதில் ஓய்வு பெறும் இராணுவத்தினருமாக இந்த 60 ஆயிரம் பேரில் தமிழ்நாட்டுக்கு ஓய்வு பெற்று வருவோர் 6,000 பேர்.

இல்லந் திரும்பும் இராணுவ வீரர்களை இல்லத்தினர் இனிய முகத்தோடு வரவேற்பார்கள் என்றாலும், அவர்கள் ஓய்வு பெற்றுத் திரும்பிய பின்னர், அடுத்து என்ன என்ற ஆதங்கம் அவர் தம் குடும்பத்தினருக்கு இல்லாமல் போகாது.

இராணுவத்திலிருந்து திரும்பியவர்களின் குடும்பம் வாழ்க்கைப் போராட்டத்தைப் பற்றி எண்ணும் கேள்விக் குறி தோன்றி விடுமானால் அடுத்து இந்த இராணுவப் பணிக்காகத் தங்கள் இளமை முறுக்கையும் உயிரையும் அர்ப்பணிக்கக் கிளம்புவோரின் மனத்தில் ஒரு சலிப்பு நேரிட்டு விடும். உற்சாகம் குன்றிவிடும்.

அதனால்தான் — காடுமலை கடந்தும், கடும் குளிரில் நின்றும் இந்த நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் போர் வீரர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில்—இந்த நாடு அவர்களை மறந்து விடாது என்று உணர்த்தும் வகையில் மாநில அரசுகளும் மத்திய அரசும் அக்கறை காட்டுகிற ஒரு சூழ்நிலையிலே ஒரு பகுதியாகத் தான் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தொடங்கியுள்ள முப்படை வாரியம் செயலாற்றுகிறது.

இந்த வாரியத்தினரால் கட்டப்பட்டு இங்கு வாடகைக்கு விடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தின் மூலம் கிடைக்கிற வருமானம் மேலும் இராணுவத்தினர்க்கு நற்பணி புரியப் பயன்படுத்தப் பட இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

அடுத்தடுத்து வருமானத்தைப் பெருக்குவதற்கு இப்படிப்பட்ட வழிகளைத் தேர்ந்து எடுப்பது நல்லதுதான்.

இந்த அரசு கூட, தனது வருமானத்தை வரி விதிப்பின் மூலம் மட்டும் பெருக்கிக் கொள்ள நினைக்காமல் பல்வேறு வருவாய் வகைத் திட்டங்களை உருவாக்கி உள்ளது. எனவே தான் இந்த ஆண்டு வெளியிடப்பட்ட நிதி நிலை அறிக்கையிலே கூட, தாங்கக் கூடியவர்களுக்கு மட்டுமே வரியிடப் பட்டது.

இராணுவத்தினர் நலனுக்காகப்பயன் படுத்துவதற்காகக் கொடி நாளைக் கொண்டாடி அதன் மூலம் சில இலட்சங்களை இந்த அரசு மக்களிடமிருந்து ஏற்றுக் கொள்கிறது. இங்கு என்.வி. என். அவர்கள் குறிப்பிட்டதுபோல் அந்த நிதியிலே கூட மூன்றில் ஒரு பங்கை டெல்லி வாங்கிக் கொள்கிறது. சென்ற ஆண்டில் இரண்டு இலட்ச ரூபாயைக் கொடிநாள் வசூலிலிருந்து இந்த அரசு டெல்லிக்குத் தந்தது.

இந்த ஆண்டில் கொடி நாளில் வசூலான தொகை ரூபாய் எட்டு இலட்சம். அதில் மத்திய அரசுக்கு, இந்த ஆண்டு அனுப்பாமலிருக்க அனுமதி தருமாறு நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். இந்தப் பங்கு ஏறத்தாழ மூன்று இலட்ச ரூபாய் — ஒரு சிறிய தொகை தானே என்று மத்திய அரசு விட்டுக்கொடுத்தாலும் கொடுக்கலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி விட்டுக் கொடுத்தால், அந்தத் தொகையில் மேலும் சில நன்மைகளை — இந்த மண்ணின் மேன்மைக்காக உதிரம் சிந்தி உயிர் விடத் தயாரான போர் வீரர் தம் குடும்பங்களுக்குச் செய்ய முடியும்.

சில நிகழ்ச்சிகளில் நான் கண்ட காட்சியை இங்கு விவரிக்காமல் இருக்க முடியவில்லை.

நான் பங்கேற்கும் சில நிகழ்ச்சிகளில் திடீரென்று ஓர் இராணுவ வீரர் வந்து முறுக்காக நின்று 'சல்யூட்' அடிப்பார். அவருடைய உடல், அடுத்த வினாடியே குழைந்து போய், குறுகி, என்னிடம் ஒரு மனுவை நீட்டும். அப்போது என் நெஞ்சு நெகிழும். அந்த மனுவில் அவர் தம் வாழ்க்கைக்கு இந்த அரசு ஒரு வழி காட்ட வேண்டும் என்று கோரியிருப்பார். என் உள்ள நெகிழ்ச்சியோடு ஓர் எண்ணமும் அப்போதெல்லாம் கேள்விக் குறியாய் எழும்.

இராணுவத்தினர் இன்னும் தங்கள் வாழ்க்கைக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளாமல் இருக்கிறார்களே — என்னும் அந்தக் கேள்விக் குறி ஆண்டு தோறும் பெருகிக் கொண்டு தான் வருகிறது என்பதை நான் உணராமலில்லை.

நாட்டைச் சூழ்ந்துள்ள வேலையில்லாப் பிரச்சினையோடு இவர்களின் சுமையும்தான் இப்போது விழுகிறது. இதற்கெல்லாம் முறையான திட்டங்களைத் தீட்டிட மத்திய அரசு முன் வரவேண்டும்.

திட்டங்கள் என்பது திட்டமிட்டு நடத்தப்பட வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை டெல்லி அறிவித்திருக்கிறது. ஆனால் அது எப்போது ஆரம்பமாகும் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. அது துவங்கினால்தான் இன்னும் பலருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படும்.

மத்திய அரசு தீட்டும் திட்டங்கள் இந்திய நாட்டின் மொத்தப்பொருளாதாரத்தையும் மையமாக வைத்துத் தீட்டப்பட வேண்டும். வேலை வாய்ப்புத் திட்டங்களை விரிந்த அளவில் தீட்டிட இந்திய அரசு முற்படாத வரையில் மாநிலங்களால் எதுவும் செய்ய இயலாது என்பதைத்தான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது!

[2—7—1974-ல் திருச்சியில் நடைபெற்ற இராணுவத்தினர் மாளிகைத் திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]

# அண்ணு கிராம ஊராட்சி ஒன்றியத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி

தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியத்தின் மகத்தான சாதனையாக அண்ணு கிராம (நெல்லிக் குப்பம்) ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங் கப்பட்டுள்ளது.

கடந்த 24—6—'74 அன்று அண்ணு கிராம குடிநீர் வழங்கும் முழுமை விழா முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரைந்து செயல்பட்டு வருகிறது.

நமது முதல்வர் கலைஞர் அவர்களும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு முதல் இடம் அளிப்பதில் ஆர்வம் காட்டி வருகிருர்கள்.

நெல்லிக்குப்பம் (அண்ணு கிராம) ஊராட்சி ஒன்றியத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்று ஒன்றியத் தலைவர் திரு வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., அவர்கள் முதல்வர் அவர்களிடம் கோரிக்கையை எழுதிக் கொடுத்த தாளிலேயே முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித் தார்கள்.

முதல்வர் கலைஞர் அவர்கள் பிறப்பித்த ஆணை, 'பேரறிவாளர் திருவாக' 45 கிராமங்களில் வாழும் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி யுள்ளது.

36 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள அந்தத் திட்டங்களின் பட்டியல் இதோ:



CUDDALORE

V. KRISHNAMOORTHI,
M. A., B. L., M. L. A.,
(Nellikuppam Constituency)

21.10.72

## கோரிக்கையும் ஆணையும்

அண்ணு கிராம (நெல்லிக் குப்பம்) ஊராட்சி ஒன்றியத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற்றுள்ள கிராமங்கள் பட்டியல் :

| | | | |
|---|---|---|---|
| 1. சன்யாசிப்பேட்டை | 90,000 | 6. நெல்லித்தோப்பு | 72,000 |
| 2. வரிஞ்சிப்பாக்கம் | 65,000 | 7. அகரம் | 61,000 |
| 3. கண்டரக்கோட்டை | 73,000 | 8. எலிமேடு | 69,000 |
| 4. திருத்துறையூர் | 1,18,000 | 9. ஆண்டிப்பாளையம் | 74,000 |
| 5. அழகப்பெருமாள்குப்பம் | 1,18,000 | 10. அம்மாப்பேட்டை | 73,000 |

| | | |
|---|---|---|
| 11. | பண்டரக்கோட்டை .. | 75,000 |
| 12. | சித்ரச்சாவடி .. | 68,000 |
| 13. | மேல்குமாரமங்கலம் .. | 1,04,000 |
| 14. | தட்டம்பாளையம் .. | 80,000 |
| 15. | கள்ளிப்பட்டு, குச்சிப்பாளையம் | 75,000 |
| 16. | சின்னப்பேட்டை .. | 68,000 |
| 17. | புலவனூர் .. .. | 1,10,000 |
| 18. | சாத்தப்பட்டு .. | 97,000 |
| 19. | கொட்டாளம்பாக்கம் .. | 1,13,000 |
| 20. | ஏரிப்பாளையம் கள்ளிப்பட்டு .. | 47,000 |
| 21. | எனதிரிமங்கலம் .. | 73,000 |
| 22. | அவியனூர் .. .. | 78,000 |
| 23. | கோழிப்பாக்கம் .. | 1,49,000 |
| 24. | கீழ்கவரப்பட்டு .. | 1,10,000 |
| 25. | எய்த்தானூர் .. | 75,000 |
| 26. | சித்ரகூர் .. .. | 86,000 |
| 27. | கணிசப்பாக்கம் .. | 96,000 |
| 28. | கொறத்தி .. .. | 65,000 |
| 29. | பல்லவராய நத்தம் .. | 95,000 |
| 30. | நரிமேடு .. .. | 71,000 |
| 31. | கட்டமுத்துப்பாளையம் .. | 71,000 |
| 32. | முத்துக்கிருஷ்ணபுரம் .. | 73,000 |
| 33. | சுந்தரவாண்டி .. | 71,000 |
| 34. | கீழருங்குணம் .. | 1,10,000 |
| 35. | நல்லூர்பாளையம்—வானியம் பாளையம் .. | 67,000 |
| 36. | நல்லாண்டிக்குப்பம் | 87,000 |
| 37. | ஏரிப்பாளையம் மளிகைமேடு | 58,000 |
| 38. | பெருமாள்நாய்க்கன்பாளையம் அரிசனக் குடியிருப்பு .. | 1,48,000 |
| 39. | வைத்தாம்பாடி | 88,000 |
| 40. | பலாப்பட்டு .. | 2,42,500 (40–45) |
| 41. | மோட்டாமேடு | |
| 42. | தொரப்பாடி அரிசனக் குடியிருப்பு .. | |
| 43. | நத்தம்மேடு .. | |
| 44. | பூண்டி .. | |
| 45. | காவனூர் .. | |
| | மொத்தச் செலவு | 35,59,500 |

## மலிவு விலையில் பட்டுச் சேலைகள்

மிகவும் மலிவான விலையில் அதுவும் பட்டுச் சேலைகள் வாங்குகின்ற ‘நல்ல’ வாய்ப்பினை அண்மையில் தமிழக மக்கள் பெற்றார்கள். தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் நடந்த இந்த விற்பனைத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருந்தது.

கதர் வாரியத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட தரமான இந்தப் பட்டுத் துணிகளை 10 சதவீதமோ அல்லது 15 சதவீதமோ தள்ளுபடி செய்து விற்கவில்லை; 50 சதவீதம் தள்ளுபடி செய்து, விலைக் குறைப்பில் ஒரு புரட்சியையே செய்து விட்டார்கள்.

இந்த அளவுக்கு விலைக் குறைப்பு செய்யப்படுவது இதுவே முதல் தடவை என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

காஞ்சீபுரம், இராசிபுரம், கும்பகோணம், ஆரணி, சேலம், தாராபுரம், அய்யம்பேட்டை ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்ட இந்தக் கண்கவர் பட்டுச் சேலைகள், சோளிகள், குழந்தைகளுக்கான ஆடைகள், ஆண்களுக்கான சட்டை, ‘பேண்ட்’ துணிகள் முதலியன 50 சதவீதம் தள்ளுபடி விலையில் பெருமளவு விற்கப்பட்டன.

ஜூன் 23 முதல் ஜூலை 7 வரை நடந்த இந்த மலிவு விற்பனைத் திட்டத்திற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது என்றால் அதற்குக் காரணம், தரமும், கவர்ச்சியுமே அன்றோ?

## அழுக்கு, பிணி எதிர்ப்பு முகாம்

மைய, மாநில அரசுகளின் ஆதரவில் மதுரைப் பல்கலைக் கழகம் இளைஞர் நலத் துறை இயக்கிய ‘அழுக்கு, பிணி எதிர்ப்பு இளைஞர் முகாம்’ இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பந்தல்குடியில் நடைபெற்றது. முகாமை அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. கல்லூரி மாணவர்கள் மே மாதம் 15-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை நடத்தினர். மக்கள் பிணியின்றி வாழ வழி வகுக்கவும், வந்த பிணியைப் போக்க வழி காட்டவும், சாண எரி வாயு அமைப்புகள் நிறுவிடவும், சிறுகச் சேமிக்கும் பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்தவும், இந்த முகாம் அமைக்கப்பட்டது.

**சுகாதாரப் பணி :**

பந்தல்குடி, காசிலிங்கபுரம், வேலாயுத புரம், சேதுராஜபுரம், சின்னத்தும்மக்குண்டு ஆகிய கிராமங்களில் மாணவர்கள், நோய்கள் பற்றிய கணக்கு எடுத்தனர். 5,000 பேர் கொண்ட பந்தல்குடியில் மட்டும் 31 பேருக்குக் கண் வியாதியும், 27 பேருக்குப் பல் வியாதியும், 48 சிறுவர் சிறுமிகளுக்குப் பல்வேறு வியாதிகளும் இருந்தன. மாணவர், விளம்பரம் வாயிலாகவும் நேர் முகப் பேச்சு வாயிலாகவும் கண்ட இடங்களில் மல ஜலம் கழிக்கக் கூடாது எனக் கிராம மக்களிடம் வேண்டியுள்ளனர். கழிப்பிடம் (கக்கூஸ்) அமைக்கும்படி, மாணவர், வீடுதோறும் அறிவுரை செய்தனர். முகாம் மாணவர்களை ஊக்குவிக்கும் கூட்டத்தில் பேசிய மாவட்ட அதிகாரி அவர்கள், பரம்பரை நோய், விபத்துக்களினால் வரும் நோய், ஊட்டச் சத்துக் குறை நோய், 40 வயதிற்கு மேல் வரும் நோய், கிருமிகள் மூலம் பரவும்-நோய், நீர், ஈ, கொசு, புழு மூலம் பரவும் நோய், புற்று நோய், குட்டம் ஆகியவற்றின் தீமையை எடுத்துக் கூறி அவை வந்த பின் காக்கும் முறைகளையும், வராது தடுக்கும் முறைகளையும் விளக்கமாகக் கூறினார். கல்லூரி மாணவர் எவ்வாறு பிணியாளரையும், மருத்துவரையும் தொடர்பு கொள்ளச் செய்யலாம் என்பதையும் கூறினார்.

‘பற்களின் உறுதி காக்க உப்புப் பொடி போதும்; விலையுயர்ந்த பசை தேவையில்லை’ என்றார்.

பந்தல்குடி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கண்ணுக்குப் பயன்படுத்தும் தைலம், வைட்டமின் மாத்திரைகள் ஆகியவற்றைத் தேவையானவர்க்கு, மாணவர் வழங்கினர். பணிக்கென ஏற்றுக் கொண்ட கிராமங்களில் தெருக்கள், களங்கள், பேருந்து நிலையம் ஆகியவற்றைத் துப்புரவு செய்தும் அருப்புக்கோட்டை அரிமா சங்கம் நல்கிய பிளீச்சிங் பவுடர், நக வெட்டி, பினைல் முதலியவற்றால் முறையே கழிவு நீரில் தெளித்தும் சிறுவரின் நகத்தை வெட்டியும் அழுக்குப் படிந்த இடத்தைக் கழுவியும் தொண்டாற்றினர்.

வெள்ளையாபுரம், லிங்காபுரம் ஆகிய இடங்களில் சுகாதார நிலை மிக இழிந்திருந்தபடியால் மாணவர் 300 அடி நீளத்திற்கு (1.5 அடி அகலம், 1 அடி ஆழம்) கழிவு நீர் செல்லும் வடிகால் அமைத்துத் தந்தனர். வெள்ளையாபுரத்தில் போக்குவரவு இருக்கக் கூடிய இடத்தில் ஒரு பெரிய குழி இடைஞ்சலாக இருந்தது. அதுவே ஈ, கொசு பெருகும் இடமாகவும் அமைந்தது. அக் குழியினை மாணவர், 22 வண்டி அளவு மண், கற்களைக் கொண்டு மூடிச் செம்மையாக்கித் தந்தனர்.

**சாண எரிவாயுத் திட்டம்:**

தற்போதுள்ள மின் தட்டுப்பாடு காரணமாகச் சாண எரிவாயுத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த மைய மாநில அரசுகள் முன்வந்துள்ளன. மூன்று அல்லது அதற்கு அதிகமான கால்நடைகள் வைத்திருப்பவர்களை அணுகிச் சாண எரி வாயுச் சாதனம் அமைக்குமாறு கேட்டுக் கொண்டனர். ஒலி பெருக்கி, விளம்பரத் தட்டிகள் மூலமாகக் கிராமங்களுக்குச் சாதனத்தின் தேவை புகட்டப்பட்டது. சூரிய ஒளி, சாணத்தின் மீது படும்போது, இரசாயன மாறுதல் ஏற்பட்டு மீத்தேன் என்ற வாயு கிடைக்கின்றது. இந்த



வாயு, அடுப்பு எரிப்பதற்கும், விளக்கு எரிப்பதற்கும், பம்பு செட்டை இயக்குவதற்கும் பயன்படுகின்றது.

**முதியோர் கல்வியும் கலை நிகழ்ச்சிகளும் :**

பந்தல்குடியில் இருக்கும் பட்டதாரிகளான இளைஞர் அணித் தொண்டருடன் மாணவர் இணைந்து பெட்ரோமாக்ஸ் விளக்கின் துணை கொண்டு வேலாயுதபுரத்தில் முதியோருக்குக் கல்வி புகட்டினர்.

அருப்புக்கோட்டை—தூத்துக்குடி நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து காசிலிங்கபுரம் கிராமத்திற்குச் செல்லும் ஒரு மைல் நீளமுள்ள சாலையை மாணவர்கள் செப்பனிட்டனர்.

'பற்கள், கண்கள் பாதுகாப்பு', 'பாதங்களைப் பாதுகாப்பது எப்படி?' 'இரத்த ஓட்டம்', 'நுரையீரல்', 'கொழுப்பும் புரதச் சத்தும்', 'யோகாசனப் பயிற்சி', 'மிருகக் காட்சி சாலை', 'அழகற்ற வாத்துக் குஞ்சு' ஆகிய விளக்கப் படங்கள் திரையிடப் பட்டன.

சேமிக்கச் சிறந்த வழி, சிறு துளி பெரு வெள்ளம், பறவைக் கூடு கட்டுதல், சிறந்த பாரம்பரியம், இந்திய நாட்டின் காட்சிகள், (அஸ்ஸாம், வங்கம், பீகார்) காசியின் மகிமை முதலிய பேசும் படங்களும் காண்பிக்கப் பெற்றன. படங்கள் திரையிடப்படும் பொழுது இடையிடையே எச்சில் துப்புவது, கண்ட இடங்களில் கழிப்பது ஆகியவற்றிற்கு எதிரானதுமான முழக்கங்களை மாணவர் ஒலித்தனர்.

உடலை வளம் பெறச் செய்யும் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் போட்டி நடத்தப்பட்டது. பள்ளிச் சிறுவர், சிறுமியர், வெளி மாணவர், பார்வையாளர்கள் ஆகிய 150 பேர் பங்கேற்றனர். 15 முதற் பரிசுகளும், 15 இரண்டாம் பரிசுகளும் வழங்கப்பெற்றன.

துப்புரவு, தூய்மை காப்பது, சாண எரி வாயுச் சாதனம் அமைப்பது, சிறு சேமிப்பை வளர்ப்பது ஆகிய கருத்துக்களைச் சொற் சித்திரங்களாக வடித்து, மாணவர்கள் பந்தல்குடி இளைஞர் அணித் தொண்டர்களின் ஒத்துழைப்புடன் கதைப் பாடல்கள், ஓரங்க நாடகங்கள் முதலியவற்றை நடத்தினர்.

**சிறு சேமிப்பு :**

ஊர் நல ஊழியர், இளைஞர் அணித் தொண்டர் இவர்கள் துணை கொண்டு மாணவர்கள், கிராம மக்களிடையே சேமிப்பு அட்டைகளையும், சேமிப்புத் தலைகளையும் விற்றனர். சேமிப்பு அட்டைகள் மொத்தம் 312 விற்றுள்ளன. சேமிப்புக் கணக்குகள் 65 துவக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் மாணவர்களின் முகாம், கிராமத்துப் பகுதியில் நல்ல வரவேற்பை ஏற்படுத்தியது மட்டுமல்ல — நல்ல மாற்றத்தையும் உருவாக்கியிருக்கிறது என்றுதான் குறிப்பிட வேண்டும்.



மதுரை மாநகரில் விரைவில் ஒரு சட்டக் கல்லூரியைத் தமிழ்நாடு அரசு நிறுவ இருக்கிறது.

## மேலை நாட்டினரைக்கவரும் தமிழகப் பொருள்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள மணப்பாடு என்ற கிராமத்தில் உற்பத்தியாகும் பனை ஓலைக் கைவினைப் பொருள்கள், வெளி நாடுகளிலுள்ள மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. மணப்பாடில் இயங்கி வரும் பனை ஓலைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் 1973-74ஆம் ஆண்டில் பனை ஓலைப் பொருள்கள் ஏற்றுமதி மூலம் 35 ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு அன்னியச் செலாவணி சம்பாதித்தது.

அந்தக் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பனை மரங்கள் ஏராளமாக உள்ளன. அந்தக் கூட்டுறவுச் சங்கம் 1957-ல் ஆரம்பிக்கப்பட்டது.

அங்கே பணியாற்றும் பெண்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களில் பெரும் பகுதியைப் பனை ஓலை கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்துகின்றனர்.

சங்கத்தில் 306 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 150 பேர் சங்கத்திலேயே பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் நான்கு ரூபாய் வீதம் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்தச் சங்கத்தில் பனை ஓலைத் தட்டுகள் முதல் கவர்ச்சிகரமான பொம்மைகள் வரை பல்வேறு வகையான பொருள்கள் உற்பத்தியாகின்றன. சென்ற ஆண்டில் அந்தச் சங்கம் பத்தாயிரம் ரூபாய் இலாபம் ஈட்டியது.

# செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள்

சுந்தர்—

தஞ்சை மாவட்டத்தில் 36 வட்டாரங்களில் விவசாய இயந்திரக் கருவிகளைப் பழுது பார்ப்பதற்கான நிலையங்களை அமைக்கத் தமிழ்நாடு அரசுக்கு மைய அரசு ரூ. 1.12 கோடி மான்ய உதவி அளித்துள்ளது.

அவ்வாறு அமைக்கப்படும் நிலையங்களில் விவசாயிகளது டிராக்டர்கள், பூச்சி தெளிப்பான்கள், பம்பு செட்டுகள் மற்றும் இதர கருவிகள் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

இம்மாவட்டத்தில் ரூ. 11 இலட்சம் செலவில் தீவிர மீன் வள வளர்ச்சி திட்டமொன்றை மேற்கொள்ளவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், பட்டுக்கோட்டை வட்ட மல்லிபட்டிணத்தில் மீன்பிடி படகுகட்டும் தொழிற்சாலையொன்று அமைக்கப்படும்.

* * *

நமது நாட்டில் மக்களின் சராசரி வாழ்நாள் ஒரேயடியாக அதிகரித்துள்ளது. 1946-ஆம் ஆண்டில் ஆண்களின் சராசரி வாழ்நாள் 32.45 ஆண்டுகளாகவும், பெண்களின் வாழ்நாள் 31.66 ஆண்டுகளாகவும் இருந்தது. இப்போது ஆண்களின் வாழ்நாள் 50.7 ஆண்டுகளாகவும், பெண்களின் வாழ்நாள் 49.3 ஆண்டுகளாகவும் அதிகரித்திருக்கிறது.

இந்தியாவில் மக்களின் வாழ்நாள் அதிகரித்திருப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். பல சுகாதாரத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்திருப்பதால் இறப்பு விகிதம் குறைந்திருக்கிறது. 1941 முதல் 1950 வரையிலான காலத்தில் இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 27.4 ஆக இருந்தது. 1971-ல் இறப்பு விகிதம் 15.1 ஆகக் குறைந்துவிட்டது.

* * *

தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப நலத் திட்டத்தை எல்லா ஊராட்சி ஒன்றியங்கள், நகரியங்களின் ஊழியர்களுக்கும் விரிவாக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இது 1-1-74 முதல் அமலுக்கு வரும்

* * *

சந்திரனில் உள்ள 'நிதானக் கடல்' என்ற பகுதியில் காணப்படும் 'பேஸில்-ஏ' என்ற பள்ளத்துக்கு, விக்ரம் சாராபாயின் பெயர் வைக்கப்படும். இந்திய விண்வெளி ஆய்வுத் திட்டத்தின் முன்னோடியாக அவர் புரிந்துள்ள சாதனையைப் பாராட்டும் வகையில் இப்பெயர் வைக்கப்படும்.

சந்திரனிலுள்ள ஒரு பகுதிக்கு ஒரு இந்தியரின் பெயர் வைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

சர்வதேச வான மண்டலக் கழகம் இவ்வாறு முடிவு செய்திருப்பதாக, இந்திய விண்வெளி ஆய்வு நிலையத்தின் வெளியீடு கூறுகிறது.

* * *

செங்கற்பட்டிலுள்ள இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிக்காக ரூ. 2 இலட்சம் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும். இங்கு உள்ள இளங் குற்றவாளிகளுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிப்பதற்காகத் தனியே ஒரு 'தொழிற்பயிற்சிக் கழகம்' விரைவில் நிறுவப்பட உள்ளது. இதன் முதல் படியாக ஆத்தூர் கிராமத்தில் 25 ஏக்கர் பரப்பில் ஒரு மோட்டார் வாகன பொறியியல் தொழிற்சாலை நிறுவப்படும்.

தற்போது இந்தப் பள்ளியிலேயே, தச்சுவேலை, உலைக்களப்பணி, தையல், நெசவு, தோட்டக்கலை, விவசாயம் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இளங் குற்றவாளிகளுக்காகக் கடலூரிலும் ஒரு சீர்திருத்தப் பள்ளி அமைக்கப்படும். கடலூர், ராணிப்பேட்டை சீர்திருத்தப் பள்ளிகளில் உள்ளவர்கள் சிலர் இங்கு மாற்றப்படுவர். கோவையில் பெண்களுக்காக ஒரு பாதுகாப்பு இல்லம் அமைக்கப்படும்.

வேலூரில் பெண்களுக்கான சீர்திருத்தப் பள்ளியில், ஆடை தயாரிப்புப் பிரிவில் ஓர் ஆண்டில் ரூ. 50 ஆயிரம் மதிப்புள்ள ஆடைகள் தயாரித்து விற்கப்படுகிறது. பாதுகாப்பு இல்லங்களில் உள்ள பெண்களில் சென்ற ஆண்டு சுமார் 6 பேருக்குத் திருமணம் நடத்தப்பட்டது. இந்த இல்லங்களின் சார்பில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 250 'சீதனம்' தரப்பட்டுள்ளதாம்!

* * *

தமிழ்நாட்டில் ஆரம்ப, நடுத்தரப் பள்ளிகளில் விஞ்ஞான கல்விப் பயிற்சி வளர்ச்சிக்காக ஐ.நா. அனைத்து நாட்டுக் குழந்தைகள் அவசர நிதி சுமார் 75 இலட்சம் ரூபாய் பெறுமான விஞ்ஞான சாதனங்களை வழங்கும்.

ஒரு முன்னோடித் திட்டமாக இது இந்த ஆண்டு வழங்கப்படுகிறது.

1550-க்கு மேற்பட்ட ஆரம்பப் பள்ளிகளுக்கும், 2100-க்கு மேற்பட்ட உயர் ஆரம்பப் பள்ளிகளுக்கும் இந்தச் சாதனங்கள் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கும் ரூ. 200 பெறுமான சாதனங்களும், உயர் ஆரம்பப் பள்ளிக்கு ரூ. 2,000 பெறுமான சாதனங்களும் வழங்கப்படும்.

ஏற்கெனவே சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு மாவட்டங்களில் உள்ள ஆரம்ப, உயர் ஆரம்பப் பள்ளிகளில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

இதுதவிர, உயர்நிலைப்பள்ளிகளில் விஞ்ஞான சாதனங்கள் வாங்கவும், விஞ்ஞான சாதனச் சாலைகள் நிறுவவும் தமிழ்நாடு அரசு ரூ. 35 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத்தேவர்,"டேய்ராமையா!" என்று ஊர் நாட்டாண்மை ஆதிமூலத் தேவர் ஆத்திரம் தூள் பறக்க, அதிகாரம் கொடி பறக்க அலட்டிய குரலைக் கேட்டதுதான் தாமதம் ; உடனே, அவர் சிம்ம அவதாரம் எடுக்க ஆரம்பித்து விட்டார். தன்னுடைய துடிப்பைப் பிரதிபலிப்பது போலத் துடித்திட்ட தேள் கொடுக்கு மீசையைத் தட்டி விட்டு, தட்டிக் கொடுத்தவாறு, விழிகளை வெட்டிக் கட்டி நிமிர்த்தினார் ; ''ஓய், ஆதிமூலத் தேவரே! என்னமோ உங்க வீட்டு மாட்டுக்காரப் பயலை ஏவுறதாட்டம், 'டேய் ராமையா' அப்படின்னு கூப்பாடு போடுறீங்களே? — என்ன, நெஞ்சுத் தைரியம் இருக்க வேணும் உமக்கு?'' என்று ஓங்காரமாக மட்டுமல்லாமல், ஒய்யாரமாகவும் கேட்டார் அவர்.

ஆதிமூலத் தேவர் பெரியவர்; ஆகவே, அவர் பெரிதாகவே சிரித்தார். எதிர்த்து வந்த ஆத்திரத்தை எதிர்கொள்ள ஆத்திரத்தை ஏவாமல், சிரிப்பைத் தேளாகக் கொட்டி எதிரியை மடக்கிப் போட வேண்டுமென்பது அவருடைய சித்தாந்தமாக இருக்கலாம். அக்கரைச் சீமைப் புதுப் பணக்காரரான ராமையாத் தேவரை ஏறிட்டுப் பார்த்தார். ''துப்புக் கெட்ட மச்சானுக்கு மீசை துடிக்கக் காணோம் ; ஆத்திரம்தான் துடிக்குது. நேற்று வெடிச்ச இலை நீ ; உன்னை 'டேய், ராமையா'ன்னு அடாவடியாய் அழைக்கிறத்துக்கு பெரிய நெஞ்சுத் தைரியம் வேணுமாக்கும்? என்னோட நெஞ்சுத் தைரியத்தை இனிமேல்தானா நீ புதுசாய் கண்டுக்கிடப் போறாய்? . . . அடி நாளிலே ஊர் நாட்டிலே வரி வசூல் பண்ணுற விசயமாய் நீ திருடனுக்குத் தேள் கொட்டினது கணக்காய் அவமானப்பட்டு முழி முழின்னு முழிச்சுக்கிட்டு இருந்தப்ப, உன் மானத்தைக் காப்பாற்றி, உன்னையும் காப்பாற்ற என்னோட நெஞ்சுத் துணிச்சல் என்னென்ன வழியெல்லாம் விளையாடித் தீர்த்திச்சு என்கிற காரியத்தை மறந்து, அதுக்கு உண்டான நன்றியையும் மறந்து தலை கெட்டுத் திரிகிறதினாலேதான், நீ என்னைப் பார்த்து கேள்வியும் எதிர்க் கேள்வியும் கேட்கத் துணிஞ்சிட்டே! அப்படித்தானேடா?'' என்று வேதனையின் நமைச்சலோடும் ஆத்திரத்தின் குமைச்சலோடும் வினவலானார் மூத்தவர். சுடும் நிலவின் சுடாத கதிர்களில் அவருடைய வெண் முடிகள் வைர முடி கட்டிச் சுடர் காட்டின!

வீரமணி முள் மேலே நின்றான்!

''பட்டுக்கோட்டைக்கு வழி என்னண்ணு கேட்டால், நீங்க கொட்டைப் பாக்கு விலையைச் சொல்லுறீங்களே? . . உப்புச் சப்பு இல்லாத உங்களுக்கே இத்தனை தைரியம் இருக்கையிலே, நாலு ஊர்த் தண்ணியை நாலு நாலு வாயாய் அள்ளிக்குடிச்சுப் பழக்கப்பட்ட எனக்கு மட்டும் வல்லமைக்கு 'வாட்டு' வந்திடுமோ? . .. சரி, சரி, என்னோட வெள்ளைக் காளையைப் பற்றி இப்போதைக்கு இனிமேல் நான் மூச்சுக் காட்ட மாட்டேன்! வாய் பேசத் தெரிஞ்ச எனக்குச் சொந்தமான, வாய் பேசத் தெரியாத 'வெள்ளை'யைப் பற்றின என்னோட நடவடிக்கைகளைப் பற்றி விடிகிற பொழுது விடிய விடிய உமக்குக் கதை சொல்லும்! இப்போ நான் போனதும் வந்ததுமாய்த் திரும்பி வந்த விசயம் வேறே! . . . ஐயாவே, ஆதிமூலத் தேவரே! கொஞ்ச முந்தி நான் இங்கிட்டுக் கால் பாவி நின்னபோது, என் அடிமடியிலே 'கமுக்க'மாய் ஒளிஞ்சிருந்த வைரச் சிமிக்கிச் சோடி எப்படியோ விழுந்து தொலைச்சிருக்குது; உம்மோட இந்தத் திட்டிவாசலை ஒட்டியேதான் எங்கிட்டாச்சும் நழுவி விழுந்து தொலைஞ்சிருக்க வேணும். கண்ணு ரெண்டையும் ஒரே முட்டிலே பறிச்சுப்பிடுற தாட்டம் மெய்யாலுமே மின்னிக்கிட்டிருக்கும் அந்தச் சிமிக்கிகளை நீங்க கண்டது உண்டா? . . .''

ராமையாத் தேவர், கை முறுக்குகளைக் கைக்கு மெய்யாகப் பறி கொடுத்தகுழந்தையின் ஏக்கத்தோடும் வேதனையோடும் வினவினார். கலங்கி அறியாத அவரது கண்கள் இரண்டும் கலங்கிக் கொண்டிருந்தன.

''ஏய், கேலியா பண்ணுறே, கேலி? . . . போட்ட இடத்திலே கண்ணு ரெண்டையும் விளக்கிக்கிட்டுத் தேடு. தேடினால் கிடைக்கும்; உனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியிருந்தால் கட்டாயம் கிடைக்கும்!'' என்று 'தத்துவம்' படித்தார் ஆறு கரை. நமட்டுச் சிரிப்பு வெட்ட வெளிச்சமாகக் கரை தட்டியது. ஆதிமூலத் தேவர் ஓர் அகம்பாவம் இழையோட கைகளை விரித்துக் காட்டினார்.

ராமையாத் தேவரின் ஆத்திரம் அவருடைய பற்களிலே நசுங்கிக் கொண்டேயிருந்தது. ''வீரமணி மாப்பிள்ளை, என்னோட வைரச் சிமிக்கிகள் உங்க கண்ணிலேயாச்சும் தென்பட்டுச்சா? . . உங்க அம்மான் மகளுக்காக இன்றைக்கு அந்திகட்டிலேதான் செஞ்சு வாங்கினேனுங்க!'' என்று கேட்டார் ராமையா.

வீரமணிக்கு ஓர் அரைக் கணம் ரத்த ஓட்டமே நின்று விட்ட மாதிரி ஆகிவிட்டது. அரை நாழிப் பொழுதுக்கு முந்தி, பொட்டலிலே கண்டவிளாம் பழமாகக் கண்டெடுத்த அன்னக் கொடியின் வைரச் சிமிக்கிகளைப் பற்றின நடப்பு நிலவரத்தை அப்பாவிடம் மறைத்து விட்ட நிலையிலே, உண்மையை இப்போது எவ்வாறு தாய் மாமனிடம் வெளிக் காட்ட முடியும் என்ற சிக்கல் அவனைப் பிடரியைப் பற்றி இழுத்து அலைக்கழித்துக் கொண்டிருந்தது. தவிர்க்க வாய்க்காத சங்கடமும் தவிப்பும் அவனைச் சோதிக்கத் தப்பிவிடவில்லை. பேயறை பட்ட பாவனையில் சில இமைப் பொழுதிற்கு இமைக்கவும் மறந்து செயலற்று — செய்வகை இழந்து அப்படியே 'குத்துக் கல்'லாகவே நின்று விட்டான் வீரமணி.



# காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

## 12. சலனத்தின் உணர்வுகள்!




ஆதிமூலம் தன் அருமை மைந்தனையும் மைத்துனன் ராமையாவையும் மாறி மாறி —மாற்றி மாற்றிப் பார்வையிட்டார். எதையோ எண்ணி, முயன்று அல்லது எண்ணி, அவ்வெண்ணத்தில் பொட்டுப் பொழுது வரை மயங்கி அல்லது மயங்க முயன்று, பிறகு விடுதலை கொண்ட அவர் நெற்றியைத் தடவி விட்டவராக ராமையாவை நோக்கினார். ''இந்தாப் பாரு, ராமையா! தும்பை விட்டுப் புட்டு வாலைப் பிடிக்கிறதுக்கு உனக்கு இருக்கக் கூடிய சூழ்நிலை அனுசரணையாக இருக்கலாம். அதைப் பற்றிக் கிண்டிக்கிளற வேண்டிய அக்கறை எனக்குக் கிடையாது. நீ எங்கேயோ புத்தி கெட்டு வைர

சிமிக்கிகளைக் கெட்டுப் போக்கிட்ட தப்புக்கு எங்களை ஏன் குடைஞ்செடுக்கிறே? . . . . நீ காணுமலடிச்ச சிமிக்கிகள் வைரமா இல்லையா?—அல்லது, அதுக ரெண்டும் உன் அன்பு மகள் அன்னத்தினுடையதா, இல்லே, வேறே யாருக்கும் அதுக ரெண்டும் சொந்த பந்தம் கொண்டதா என்கிற தலைவலிச் சங்கதியெல்லாம் எங்களுக்கென்ன தெரியும்?'' என்ருர் அவர். இன்னும் கூடுதலாக வேறு ஏதேதோ பேசத் துடித்து, பிறகு அத்துடிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டவர் போல அவர் காணப்பட்டார்.

அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிருன் என்பதை உணர்த்திக்காட்ட முனைபவன் மாதிரி, அப்பாவின் பேச்சை அனுசரித்து ஒப்புக் கொண்டவனுக, 'காணுமற் போன வைரச் சிமிக்கிகளைப் பற்றி எனக்கும் யாதொன்றும் தெரியாது!' என்கிற மாதிரி, அவனும் எதிர் மறையில் பலமாகத் தலையை உலுக்கி ஆட்டினுன்.

ராமையாத் தேவரின் முகம் ஏமாற்றத்தால் மாறிவிட்டது; தந்தையையும் தனயனையும் சூட்சுமத்தோடு பார்வையிட்டார். தன்னுடைய அடிமடியை இதம் பதமாகத் தடவிப் பார்த்தபடி, ''மான ஈனத்துக்கு அஞ்சாத புறக்குடிப் பயல் எவனே ஒருத்தனேட கையிலே என் மகளோட வைரச் சிமிக்கிகள் ரெண்டும் அகப்பட்டு இருக்க வேணும். என்னேட அருமைத் தங்கம் — ஆசைப் பொண்ணு அன்னத்துக்காகச் செஞ்ச அந்த வைரச் சிமிக்கிகளை எடுத்த புறம்போக்குப் பயல் மெய்யாலுமே உப்புப் போட்டு சோறு உண்ணவனுக இருந்திருந்தால், இப்பவே என் வீட்டிலே காதும் காதும் வச்சாப்பிலே கொண்டாந்து போட்டுப்புடுவான்! ஒருவேளை, அந்தச் சிமிக்கிகளைப் போடாமல், ''அழுச்சாட்டியம்' பண்ணினல், அந்தக் களவாணிப் பயலை சும்மா விடப் போறதில்லை!'' என்று காரசாரமாகவும் கோபாவேசமாகவும் பேசி நிறுத்தினர் அவர். மிளகாய்ப் பழங்களாகச் சிவந்திருந்த ராமையாத் தேவரின் கண்கள் மேலும் சிவந்துவிட்டன.

தாய் மாமன் சூடு பறக்க —அனல் தெறிக்கப் பேசிய பேச்சைக் கேட்டதும் வீரமணிக்குச் சுருக்கென்றது. ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு நெருஞ்சி முள்ளாகத் தைத்து விட்ட வேதனையை அவனுடைய மன அந்தரங்கம் உணர்ந்ததும், அவனது உள்ளம் குற்ற உணர்வின் கசையடி தாளாமல் திணறியது! திண்டாடியது. அன்னக்கொடிக்காகச் செய்திருந்த வைரச் சிமிக்கிகள் வனவாசம் செய்திருந்த அடிமடியை நலியாமல் தொட்டுப் பார்த்த அவனுடைய விரல்களில் அம்மான் மகள் அன்னத்தைத் தீண்டுகின்ற தொட்டுணர்வு அவனை ஓர் அரைக் கணம் மெய்ம்மறக்கச் செய்தது. உள்ளம் தொட்டவள் அவள்; உணர்வுகளைத் தொட வைத்தவளும் அவளே! — கனவின் தொடு வானமாக விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் அவளை அவன் இதயத்திலின்றும் பிரித்துவிட கங்கணம் கட்டி விட்டாரா அப்பா? அப்பாவை எண்ணும்போது, விதி என்ற ஒன்று இருக்கவே வேண்டுமென்று நம்பத்தான் வேண்டுமோ? அன்னம், என்னை மன்னிச்சிடு! நான் திருடன்தான்! ஏன், தெரியுமா? — உன் நெஞ்சைத் திருடிக்கிட்டேன் அல்லவா? ஆனல், உனக்குப் பாத்தியதை கொண்ட வைரச் சிமிக்கிகளை நான் திருடவே கிடையாது. தேடி வந்த ஸ்ரீதேவியாக அவை என்னைச் சரண் அடைஞ்சதுக்கு அப்பாலே, அதுகளை ஒதுக்கி விலக்குவேனு? . . .' நெஞ்சில் காதலாக நிறைந்தவள் கண்களிலே கண்ணீராகவும் நிறைந்தாள்! 'அரிச்சந்திரத்தனமாக இந்த வைரச் சிமிக்கிகளை அம்மானிடம் இப்போது கொடுத்து விட்டால், அப்புறம் அப்பா என்னைத் தவருக நினைச்சுக்கிடுவாங்க!' என்ற எண்ணத்தின் பலவீனமான அமைதியில் அவன் உழன்ருன்; சுழன்ருன். ஆயினும், எதையும் தாங்கும் இதயத்தின் கண்களிலே நேர்மையின் புனிதம் பளிச்சிட்டது!

ராமையா ஏமாற்றத்தின் எடுபிடியாகி அங்கிருந்து நகர்ந்த நேரத்திலே, அவருடைய வெள்ளைக் காளை முன் மாதிரி மறுபடி அவலக் குரல் எழுப்பியதைக் கேட்டதும், அவரது பார்வை ஆத்திரம் சிதற ஆதிமூலத் தேவரைச் சாடின.

அந்தப் பார்வையின் உட்பொருள் ஊர் நாட்டாண்மைக்காரருக்குப் புரியாமல் இருக்குமா, என்ன? அலட்சியமாகத் தன் மைத்துனனை நோக்கினர்.

''ராமையா! நீ இங்கேயிருந்து கால் மாறிக் கிளம்புறதுக்கு முந்தி, நான் சொல்லப் போற தாக்கல் தகவலையும் கேட்டுக்கிட்டு நடந்திடு. அதுதான் சிலாக்கியம்!'' என்ருர்.

''உத்தரவுங்க, பெரியவுகளே!''

ராமையாத் தேவரின் குரலில் நையாண்டித் தன்மை எடுப்பாகக் குரல் கொடுக்கத் தவறவில்லை.

''நல்லாய்ச் சொன்னே. ஆமா, நான் உத்தரவுதான் இப்போ போடப் போறேன். என் ஆசை மகன் வீரமணியை நீ நொடிக்கு நூறு வாட்டி 'மாப்பிள்ளை — மாப்பிள்ளை' அப்படின்னு சொந்தம் கொண்டாடுறதைப் பார்த்தால் — ஊகூம், கேட்டால், எனக்குப் பரிதாபமாக இருக்குது! . . . எங்க வீரமணி ஆவணி பிறந்தடியும் சிலட்டூர்க் கங்காணியோட மாப்பிள்ளை ஆகப் போகுதாக்கும்! ஆகச்சே, இனிமேலும் நீ வீணுகப் பகல் கனவு காணுதே! மனப்பாலும் குடிக்காதே! . . பசும் பாலைக் குடிச்சிகிட்டு இரு!'' என்று உத்தரவிட்டார் 'ஆவன்னு தீனு'.

சிங்கப்பூர்த் தேவரின் முகத்தில் எள்ளத்தனை சலனமாகிலும் ஏற்பட்டுத் தொலைக்கக் கூடாதோ? 'அந்தக் கதையெல்லாம் எனக்கு அப்பவே தெரியுமாக்கும்!'' என்று ஓர் அழுத்தம் கொடுத்துப் பதில் கொடுத்தார் அவர்.

''அந்தத் துப்புத் தெரிஞ்சிருந்துமா, துப்புக் கெட்டவனுட்டம் என் மகனை மாப்பிள்ளைச் சொந்தம் கொண்டாடத் துணிஞ்சே? . . .'' என்று இளக்காரமாக வினவினர் பெரியவர்.

''ஊம்!''

ராமையாவின் விடையில் அகம்பாவம் இருந்ததுதான் உண்மை.

''இந்தாப் பாரு, ராமையா. நீ உன் மகளைக் கொண்டு என் மகன் மேலே என்னதான் சொக்குப் பொடி தூவச் செஞ்சு, அதன் மூலமாய் நீ வீரமணியை வசப்படுத்திக்கிட ஏதாச்சும் சூதுகீது செஞ்சாயோ, அப்பாலே, உன்னைச் சும்மா விடவே மாட்டேன். நெஞ்சிலே முடி போட்டு



வச்சிக்கிடு. ஆமா, செப்பிட்டேன்!'' என்று எச்சரிக்கை செய்யலானர் ஆதிமூலம்.

''அதையும்தான் பார்க்கப் போறேனே, மச்சானே!''

ராமையா சிரித்தார். வேகமான சிரிப்பு அது. சிரிப்பின் கனமான காலடிச் சுவடுகளை அழுத்தி மிதித்தவராக, தலையை நிமிர்த்தியபடி அங்கிருந்து நகர எத்தனம் செய்தார் அவர்.

அந்தச் சிரிப்பின் அலைகள் தந்தையை மட்டுமல்லாமல், தனயனையும் சேர்த்து விழுங்கிவிடத் தவித்துக் கொண்டிருந்த உண்மையை அவர்கள் இருவருமே உணர்ந்திடவில்லை!

இப்போது வீரமணி தன்னந்தனியாக இருந்தான். அவனுக்குத் தனிமை வேண்டியிருந்தது. தன்னைப் பற்றிய சுயப் பரிசோதனையில் தன்னை ஈடுபடுத்தி அதனின்றும் விளையும் நல்லதும் கெட்டதுமான ஆரம்பத்தின் முடிவுகளை அல்லது முடிவின் ஆரம்பங்களை அலசி ஆராய்ந்து, அதன் மூலம் தன்னுடைய எதிர்காலத்துக்கு ஒரு திட்டம் வகுத்துக்கொள்ள முடியாதா என்றும் வகுத்துக் காட்ட இயலாதா என்றும் அவநம்பிக்கையோடு கூடிய ஒரு நம்பிக்கையின் நிழலில் ஒண்டிக் கிடந்தான் அவன். நிலவின் அருமையைப் படித்துச் சொல்ல நிழலுக்கு வாய்ப்பு ஏது? என்ருலும், வெண்ணிலவின் தண்மை மண்டின நிழல்கூட ஓர் ஆறுதல் அளிப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. முத்துக்கள் எடுக்க வேண்டுமென்று இலட்சியம் கொண்டவன் கிளிஞ்சில்களை அலட்சியம் செய்ய வேண்டுமென்று நியதி ஒன்றும் இல்லையே!

ஆதிமூலத்தேவர் வந்தார். உடம்பையும் முகம் கைகால்களையும் வேர்வை நாற்றம் கழியக் கழுவி, நெற்றியில் நீறு தரித்து, உடல் தறிக்காத கும்மாளத்தோடுதான் அவர் காணப்பட்டார். படித்துப் பட்டமும் பெற்ற பட்டிக்காட்டு இளைஞனை வீரமணியை— பரம்பரைப் பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்த செல்லப் பிள்ளையான வீரமணியை தன்னுடைய அருமை மாப்பிள்ளையாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கட்டியிருந்த ராமையாவின் மனக்கோட்டையை இடித்துப் பொடித்துத் தரைமட்டமாக மட்டம் தட்டிவிட்டதில் அவருக்கு ஏற்பட்ட ஆத்திரம் மிக்க ஆறுதல் இவ்வளவு அவ்வளவு அல்ல! வஞ்சனைக்கு வஞ்சனையைப் பதிலுக்குப் பதிலாகப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு வாய்ப்பு கைகூடி வந்திருப்பதிலுங்கூட அவரது ஆறுதல் இரட்டிக்கவே செய்தது. கைக்கு மெய்யாகக் கொடுத்த கடனைக் காட்டிலும் கூடுதலாகத் தொகை காட்டி பிராமிசரி நோட்டு எழுதி வாங்கி, நோட்டில் கண்ட உபரித் தொகையை உடனடியாகக் கை ரொக்கமாகக் கொடுத்து விடுவதாகக் கூறி, கடைசி வரை ஏமாற்றித் தீர்த்த ராமையா தன்னைச் சந்தி சிரிக்க வைக்க வேளை பார்த்துக் கொண்டிருக்கையில், அவனை முந்திக்கொண்டு அவனையே முச்சந்தியில் நிறுத்தி வைக்க ஒரு வாய்ப்பு கைகூடி வந்திருப்பதிலுந்தான் அவர் ஆனந்தம் கண்டார். 'சான்ருேர் பழிக்கும் வினைக்கு உடந்தையாகப் போகிருரா பெரியவர்?......

''இருங்க'' என்ருன் வீரமணி.

''இருக்கிறதுக்கு நேரம் ஏது?...ஆவணி கிட்டணியிலே நெருங்கிக்கிட்டு இருக்குதில்லே'' என்று ஆனந்தமாகப் புன்னகை செய்தார்.

தந்தையின் புன்சிரிப்பு வீரமணியின் வயிற்றில் புளியைக் கரைத்தது. ''ஆவணியைச் சாக்கு வச்சு, சதா அப்பா பயமுறுத்திக்கிட்டு இருக்கார். ஆவணி பிறந்திட்டால் மட்டும் நான் சிலட்டூர்க் கங்காணியோட செல்வப் பொண்ணு பவளக்கொடியின் கழுத்திலே மூணு முடிச்சுப் போட்டிடுவேனு, என்ன? பாவம்!..'' அவனை என்னவோ ஒரு திகில் உணர்வு ஆட்டிப் படைத்தது. இனம் விளங்காத தவிப்பும் இனம் விளங்கிய கிலேசமும் அவருள், பிசிறு தட்டிச் சிதறிச் சலனத்தின் உணர்வுகளைப் பொங்கிப் பீரிடச் செய்தன.

''தம்பி, எழுந்திரு. சாப்பிடுவோம்,'' என்று துருசுப்படுத்தினர் பெரியவர். அன்பு மகனிடம் அவனுக்குச் சம்பந்தம் பேசி முடித்திருக்கும் கங்காணியார் மகள் பவளக்கொடியைப் பற்றி அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டறிய வேண்டும். இந்தத் தார்மீக நியாயம் இப்போதுதான் அவருடைய உள்மனத்திலே 'சுள்ளாப்பாக' உறைத்தது போலும்! இத்தகைய மனமாறுதலின் புண்ணியம் ராமையாவையே சாரவேண்டும் என்ற ரகசியத்தை அவரது மனச்சான்று அறிந்து உணராமல் இருந்திருக்க நியாயம் இல்லைதான்!

''நீங்க சாப்பிடுங்க, அப்பா. எனக்கு வயிறு மந்தமாய் இருக்குது,'' என்று இட்டுக் கட்டி ஒரு பொய்யை வெளியிட்டான் அவன்.

''வயசுப் பிள்ளை நீ. பசிச்சாலும், பசிக்காட்டியும் வட்டியடியிலே குந்தி ஏந்திருச்சிடு வீரமணி. நாளைக்கு மணவறையிலே குந்தப்போற பிள்ளை நீ; வெறும் பிள்ளை இல்லே!— மாப்பிள்ளை! இந்தச் சங்கதியை அடிக்கொரு கடுத்தம் நீ மறந்துப்புடலாமா?.... உனக்கு நல்ல புத்தி படிச்சுக் கொடுக்க உனக்கு ஆத்தாளா இருக்கிருள்?'' பெரியவரின் குரல் கம்மத் தொடங்கிற்று.

வீரமணி அப்பாவையே வெறிக்க வெறிக்கப் பார்த்த வண்ணம், வண்ணப் பூக்கோலமென கோல நகை புரிந்தான். 'ஆத்தா இருந்திருந்தால், உங்களை மாதிரி என்னேட மனச் சம்மதம் கேட்காமல், என்வரை ஊர்பேர் தெரியாத சிலட்டூர்ப் பெண் பவளத்தைப் பேசி முடித்திருப்பாங்களா ?' என்று நினைத்த மாத்திரத்தில் அவனுக்கு நெஞ்சை அடைத்தது. பாசத்தின் பிரிவு அவன் கண்கடையில் சுடுநீரைக் கூட்டியது. என் கண் கலங்கக் கண்டால் அப்பாவின் கண்களும் கலங்கத் தொடங்கும். சமாளித்துக் கொள்ள வேண்டியவன் ஆனுன். தந்தையின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாமல், வேண்டா வெறுப்போடு அவசரமாக எழுந்தான். எழுந்த அவசரத்தில் அவன் கட்டியிருந்த வேட்டியில் கட்டியிருந்த மடி அவிழ்ந்து, உடனே மடியிலிருந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் ஒளியின் மிதப்பில் அமரிக்கையாக நழுவி விழுந்து கண் சிமிட்டின. திருடனுக்குத் தேள் கொட்டினுற் போன்று ஆகி விட்டது வீரமணியின் நிலை.

ஆதிமூலம் மூக்கின் முனையில் விரலை வைத்தார். ''அடடே, ராமையாத் தேவன் பறிகொடுத்து வாயிலேயும் வயிற்றிலேயும் அடிச்சுக்கிட்டு பறிஞ்சதெல்லாம் இந்த ஜோடி வைரச் சிமிக்கித்தானு?'' என்று பல்லெல்லாம் தெரியக்

காட்டிக் கேட்டுக் கொண்டே, நழுவி விழுந்திருந்த வைரச் சிமிக்கைகளைக் கையிலே எடுத்தார் அவர்.

வீரமணிக்கு வேர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. அப்பா எப்படியெல்லாம் கொதித்துக் கொதிப்படையப் போகின்ருரோ? ''ஆமாங்க. இந்த ஜோடி வைரச் சிமிக்கிகளுக்காகத்தான் அம்மான் ஆலாய்ப் பறந்து வந்தாருங்க. வீட்டுக்கு வெளியிலே நீங்க கேட்ட கேள்விக்கு வீட்டுக்கு உள்ளே பதில் சொல்லி, இந்தச் சிமிக்கிகளைக் கையில் எடுத்துக் காட்டி உண்மையைப் புட்டு வச்சுச் சொல்லிப்புட வேணும்னு யோசனை பண்ணியிருந்தேனுங்க, அப்பா!'' என்று சமாதானம் சொன்ஞன் அவன்.

வைரச் சிமிக்கிகள் இரண்டும் வைரம் காட்டி, வைரம் கட்டிச் சிரித்திருக்க வேண்டும்!

அதே தருணத்தில்; முதியவர் ஆதிமூலத்தேவர் காணுததைக் கண்ட பாங்கிலே கடகடவென்று சிரிக்கலாஞர். ''டேய் தம்பி, ஆத்தா மகமாயி நியாயத்துக்குப் பரிஞ்சு பேசக் கடமைப்பட்டவள் என்கிற விசயம் இப்பவாச்சும் உனக்குப் புரியுதாப்பா?'' என்று கேட்டார்.

தந்தையின் அடியும் முடியும் இல்லாத பேச்சு புரியாத புதிர் போலப்பட்டது.

''என்ன சொல்லுறீங்க, அப்பா? தெய்வம்னு சொன்ஞல், அது நியாயத்தின் அடையாளம்னுதானே அர்த்தம் ?'' என்று இளகிய தொனியில் பேசிஞன் வீரமணி.

''ஒண்ணைப்பத்தாகப் பெருக்கிப் பார்க்கப் பழகி விட்டால், வாழ்க்கையை வாழ்க்கையாகப் பாவித்துப் புரிஞ்சுக்கிட்டுவாழ இயலும். உன் அம்மான்—ஊகூம், அந்தச் சிங்கப்பூரான் ராமையாத்தேவன் கொடுக்காத ரூபாய் இரண்டாயிரத்துக்கும் சேர்த்து என் கிட்டே புரோ நோட்டு எழுதி வாங்கிக் கிட்டதோடு, பிராதும் போட்டு 'டிகிரி'யும் பண்ணி வச்சிருக்கான். அவன் தெய்வத்துக்குப் பயப்படாமல் அன்றைக்குச் செஞ்ச அநியாயம் இன்றைக்கு அதோட கூலியை அனுபவிக்குது. இன்னமுமா விளங்கல்லே ?... ராமையா எனக்குப் 'படுத்தடி' பண்ணின அந்த இரண்டாயிரத்துக்கும் கூடுதலான பெறுமதிகொண்ட அவஞேட வைரச் சிமிக்கிகள் இரண்டும் இப்பைக்கு என் கையிலே தேடிப் போன மூலிகை காலிலே சிக்கின கதையாகச் சிக்கிக்கிடுச்சுதே, கண்டியா, தம்பி?''

ஆதிமூலம் மேலும் விநயமாகச் சிரித்தார்.

''அப்பா!'' என்று விளித்தான் வீரமணி. பின்னர் சற்றே நின்ருன். பிறகு, ''அப்பா, இந்த வைரச்சிமிக்கிகள் இரண்டும் நான் கண்டெடுத்ததாக்கும். ஆகச்சே, இந்த விசயத்திலே உங்க விவகாரத்தைக் குட்டை குழப்பிபிடாதீங்க, அப்பா!' என்ருன் வீரமணி. ''ஊம், அதுகளை இங்கிட்டாலே என்கிட்டே கொடுங்க, அப்பா!'' என்றும் வேண்டுதல் விடுத்தான் அவன்.

உள்ளங்கை வைரங்களென மின்னிப் பளிச்சிட்ட அந்த வைரச்சிமிக்களை விழுங்கி விடுகிறமாதிரி பார்வையிட்டார் பெரியவர். வைரத்தை விழுங்கி விடாத வரை, அவர் பாடு யோகந்தான்! ''தம்பி, என் திட்டத்திலே மண்ணைப் போட்டு மூடிடாதேப்பா !.... இந்த வைரச்சிமிக்கிகள் என் கையிலேயே கைகாவலுக்கு இருக்கட்டும்டா, ராஜா! என்று 'நையம்' பாடிக் கெஞ்சிஞர் தேவர்.

''ஊகூம்; அந்த வைரச் சிமிக்கிகள் என்ஞேட அன்னத்தின் சொத்துங்க அப்பா! அந்தச் சிமிக்கிகளை நீங்க 'லவட்டிக்கிட' நான் ஒருக்காலும் அனுமதிக்கவே மாட்டேனுங்க, அப்பா!'' என்று வைரம் தொனிக்கப் பேசிக் கொண்டே அருமை அப்பாவின் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டையும் முறுக்குகளைப் பறிக்கும் வட்டபருந்து மாதிரி பறித்துக் கொண்டான் வீரமணி

அப்போது, கைவளைகள் 'கலகல'வென முழங்கும் குரல் கேட்டது.

ஆதிமூலத்தேவர் ஆத்திரத்துடன் திசை திரும்பலாஞர்.

வீரமணி ஆனந்தம் மேவ, பார்வையைத் திருப்பி விட்டான்.

அங்கே, உணர்ச்சிகளின் நாயகியாகத் திகழ்ந்த அன்னக்கொடி, மௌனப் புன்னகை மணக்க நின்று கொண்டிருந்தாள்!

(வளரும்)

# உலக வானிலை ஆராய்ச்சி

உலகத்தில் பல்வேறு இடங்களில் நிலவும் வானிலையை, 100 நாட்களுக்குத் தொடர்ச்சியாகக் கண்காணித்து ஆராய்ச்சி நடத்தும் அரிய பணியில், உலக வானிலை ஆராய்ச்சி நிலையம் முனைந்துள்ளது. இது ஐ.நா சபையின் விசேட துணை அமைப்பு ஆகும்.

இந்த ஆராய்ச்சி ஜூன் மாதம் 15-ந் தேதி துவங்குகிறது. தொடர்ந்து 100 நாட்களுக்கு இந்த ஆராய்ச்சி நடக்கும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள், விமானங்கள், செயற்கைக் கோள்கள் ஆகியவை இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்படும். 72 நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் இந்த ஆராய்ச்சியில் தீவிரமாக முனைவார்கள்.

இந்த ஆராய்ச்சியின் மூலம் தெரியவரும் உண்மைகளைக் கொண்டு, ஓர் இடத்தின் வானிலை முன்னறிவிப்பை, 2 அல்லது 3 வாரங்களுக்கு முன்பாகவே சொல்லிவிட முடியும்.

மொத்தம் 40 கப்பல்களும் 13 ஆராய்ச்சி விமானங்களும், அமெரிக்க, சோவியத் செயற்கைக் கோள்களும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்படும்.



# உங்கள் வயது என்ன?

உங்கள் வயது 40 என்று உங்களது பிறந்ததேதி கூறலாம். ஆஞல் உங்களது உடம்பில் உள்ள அவயவங்கள் உங்கள் உண்மையான வயதைவிட அதிக வயதுடையவையாக இருக்கலாம். எப்படி? இதுபற்றி மியாமி மருத்துவப் பள்ளி ஆய்வு நடத்தியிருக்கிறது.

வெறும் காலண்டர் தேதியைக் கொண்டு கணக்கிடாமல், செல்கள், எலும்புகள், உறுப்புக்கள் நரம்புகளின் இயக்கம், இரத்த ஓட்டம் ஆகியவற்றை எல்லாம் வைத்துக் கணக்கிடுகிருர்கள். சான்ருகக் காலண்டர்ப்படி உங்கள் வயது 40 என்ருல், உங்கள் இதயத்தின் வயது 50 ஆகவும் கல்லீரலின் வயது 55 ஆகவும் தசையின் வயது 30 ஆகவும் மூளையின் வயது 99 ஆகவும் இருக்கலாம்.

ஒரு மனிதனின் நுரையீரலுக்கு எத்தனை வயது ஆகிறது என்பதை, அவனது உடல் இரத்தத்திலிருந்து நைட்ரஜன் வாயுவை எவ்வளவு வேகமாக வெளியேற்றுகிறது என்பதைப் பொறுத்துக் கணக்கிடுகிருர்கள் மருத்துவர்கள். கொடுக்கப்பட்டுள்ள நைட்ரஜனின் பாதியைப் பதினைந்து வயதுச் சிறுவன் சில நிமிடங்களில் நுகர்ந்து முடித்துவிடுகிருன். ஆஞல் அதே அளவு நைட்ரஜன் வாயுவை நுகர்வதற்கு 5 மணி நேரம் ஆகிறது—முதியவர் ஒருவருக்கு!

இரத்தக் குழாய்களின் வயதை அறிவதற்கு-ஒரு புது வழி கண்டு பிடித்திருக்கிருர்கள்.. ரேடியோ ஆக்டிவ் மூலமாக இந்தக் குழாய்க்குள் சோடியம் செலுத்தப் படுகிறது. உடல் நலமுற்றவர்களின் இதயத்துக்குள் பாய்வதற்கு 20 விஞடிகள் தேவைப்படுகின்றன. அவ்வாறு இதயத்துக்குள் பரவுவதற்கு 40 விஞடிகள் தேவைப்பட்டால்- இரத்தக் குழாய்களுக்கு 40 வயது ஆகிறது என்று பொருள்.

பிறக்கும்போது ஒருவரது இதயம் ஒரு நிமிடத்திற்கு 130லிருந்து 140 முறை துடிக்கிறது. இந்தத் துடிப்பு நாளாவட்டத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது. 25-வது வயதில் நிமிடத்திற்கு 75 முறை துடிக்கிறது. ஒருவர் முதுமை அடைகிருர் என்ருல்-இதயம் மிகக் குறைவான இரத்தத்தையே வெளியில் அனுப்புகிறது — தனது ஆற்றல் குறைந்துவிட்டது என்பதைத் தெளிவாக்கி விடுகிறது.

ஓர் ஆணின் இதயத்திலுள்ள செல்கள், பெண்ணின் இதயத்திலுள்ள செல்களைவிட மிக விரைவில் முதுமை அடைகின்றன. இதஞல்தான் இதய நோய்களிஞல் இறக்கும் ஆண்களின் தொகை, பெண்களின் தொகையை விட மூன்று மடங்கு அதிகமாக இருக்கிறது.

தோல் பற்றிய ஆய்வு ஒன்றும் நடத்தப் பெற்றது. பத்து வயதுச் சிறுவனுக்கு-தோலிலே ஒரு காயம் ஏற்பட்டால் அது ஆறுவதற்கு 20 நாட்கள் தேவைப்படுகின்றன. 20 வயது ஆள் என்ருல் 31 நாட்கள் பிடிக்கின்றன. 30-வது வயதில் காயம் ஆறுவதற்கு 41 நாள் தேவைப்படுகின்றன. 40-வது வயதில் ஆறுவதற்கு 55 நாட்கள் தேவைப்படுகின்றன. வயது 50 என்ருல் - காயம் ஆறிட 75 நாட்களும், வயது 60 என்ருல் காயம் ஆற 100 நாட்களும் ஆகின்றன.

நீங்கள் நாற்பது வயதைத் தாண்டிய பின்னரும், உங்கள் தோலிலே ஏற்பட்ட ஒரு காயம், ஆறுவதற்கு 31 நாட்கள் ஆகின்றன என்பதை நீங்கள் கவனித்து அறிந்தீர்களென்ருல்-நீங்கள் ஆறுதல் பெறுவதற்கும் அகமகிழ்வு கொள்வதற்கும் வாய்ப்பு உண்டு. உங்களது தோல் உங்கள் வயதில் பாதி வயதைத்தான் பெற்றிருக்கிறது!




## மாணவர்களின் சாதனை!

கோயம்புத்தூரைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் ஏழு பேர், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கான காற்ருடி இயந்திரம் ஒன்றைத் தாங்களாகவே வடிவமைத்து உருவாக்கியிருக்கின்றனர். அதாவது காற்றிலிருந்து மின் சக்தி பெறப்படுகிறது. மின் சக்திப் பற்ருக்குறையைச் சமாளிப்பதற்கு இது ஓர் நல்ல உபாயமாகும். இறைவைப் பாசனக் காரியங்களுக்கு இந்தக் காற்ருடி இயந்திரம் பயன்படுத்தப் படுகிறது.

இந்த இயந்திரத்தின் காற்ருடி அமைப்பு மரத்தால் ஆனதாகும். பத்து மீட்டர் உயரமுள்ள உருக்குக் கம்பத்தின் உச்சியில் இது அமைக்கப்பட்டுள்ளது. காற்ருடியின் நாக்கு மர விசிறிகள் ஒவ்வொன்றும் மூன்று மீட்டர் நீளமுள்ளவை. காற்ருடி காற்றின் வேகத்திஞல் சுழல்கிறது. மணிக்கு 5 முதல் 20 கிலோ மீட்டர் வரையிலான காற்று வேகத்தில் ஒன்று முதல் மூன்று குதிரை சக்தி வரையுள்ள மோட்டாரை இயக்குவதற்கு ஏற்றபடி இந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டிலேயே மிகச் சிறந்த ஊராட்சியாக, கொரடாச் சேரி ஊராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது தஞ்சை மாவட்டத்தில், திருவாரூர் அருகே உள்ளது. இதற்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முரஞ்சிப்பட்டி ஊராட்சி இரண்டாவது இடத்தையும், சேலம் மாவட்டம் கொங்கணபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சமுத்திரம் ஊராட்சி மூன்ருவது இடத்தையும் பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 500 ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

| | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1966-67ல் | 2100.87 |
| 1972-73ல் | 5618.15 |



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

ஆர். கனகசபை — தலைவர்

சி. கிருட்டிணமூர்த்தி — உபதலைவர்

என். எல். ஹெப்லிகர் — நிர்வாக இயக்குநர்





நாடெங்கிலும் கடலை எண்ணெய் விலை ஏறிவிட்டது! அவ்விலையைத் தமிழ்நாட்டில் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காகத் தமிழ்நாடு அரசு வெளிமாநிலங்களுக்கு முறையின்றி, நிலக்கடலை அனுப்பப்படுவதைக் கட்டுப்படுத்தியுள்ளதுடன், நிலக்கடலையை, உணவுப் பங்கீட்டுத்துறையின் மூலம் கொள்முதல் செய்து வருகிறது. மேலும் சில இடங்களில் உணவுப் பங்கீட்டுக் கடைகளின் மூலம் நியாய விலையில் கடலை எண்ணெய் வழங்கி வருகிறது. கடலை எண்ணெய் விலை குறைய, நிலக்கடலை உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 24.7 இலட்சம் ஏக்கர் (10 இலட்சம் எக்டேர்) பரப்பளவில் ஆண்டுதோறும் மணிலா பயிரிடப்படுகிறது. அதில் 3.43 இலட்சம் ஏக்கர் (1.39 இலட்சம் எக்டேர்) இறைவையாகவும், 21.27 இலட்சம் ஏக்கர் (8.61 இலட்சம் எக்டேர்) மானாவாரியாகவும் சாகுபடிச் செய்யப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக மணிலாவின் பரப்பும் அதிகமாகி வருகிறது. அதுபோலவே, உற்பத்தியும் பெருகி வருகிறது. இதற்கு மூலகாரணம் இறைவை மணிலாப் பரப்பும், உற்பத்தியும் பெருகி வருவதேயாகும். ஆனால் மானாவாரி மணிலாவைப் பொறுத்தவரை எதிர்பார்க்கும் அளவுக்கு உற்பத்தி உயரவில்லை. இதற்கு முக்கியக் காரணம் கடந்த சில ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்து விடுவதே ஆகும்!

உயர்விளைச்சல் தானிய வகைகள் சாகுபடிக்கு வந்த பிறகு, மானாவாரி மணிலாச் சாகுபடியில் உழவர் பெருமக்கள் முன்பு போல் ஆர்வம் காட்டாததும் ஒரு வகையில், மானாவாரி மணிலா உற்பத்திக் குறைவுக்கு காரணம் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இக்காரணங்களினால் பெரும்பாலான உழவர் பெருமக்கள் ஏக்கருக்கு 10 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது) கூட விளைவிக்க முடியவில்லை! இதனாலேயே தற்பொழுது பல உழவர் பெருமக்கள் 'மானாவாரி மணிலாச் சாகுபடி இலாபமானதாக இல்லை' என்று கூறுகிறார்கள்.

ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மானாவாரி மணிலா சாகுபடி செய்தால், மானாவாரி மணிலாவிலும் ஏக்கருக்கு 20 மூட்டை (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது) மகசூல் எடுக்க முடியும் என்பது பல்வேறு இடங்களில் பல உழவர் பெருமக்களின் வயலில் நடைபெற்ற பரிசோதனைகளிலிருந்து தெளிவாகிறது. ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மானாவாரி மணிலாச் சாகுபடி செய்தால், சாதாரணமாகச் சாகுபடி செய்யப்படும் மணிலாவிலிருந்து கிடைக்கும் மகசூலை விட ஏக்கருக்கு 10 மூட்டை நிலக்கடலையை அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். அதாவது தற்போதுள்ள மானாவாரி மணிலா உற்பத்தியை 2 மடங்காகப் பெருக்கிடலாம்!

இந்த அடிப்படையில் கணக்கிட்டால் தமிழ்நாட்டில் சராசரியாகச் சாகுபடி செய்யப்படும் 21 இலட்சம் ஏக்கர் மானாவாரி மணிலாவிலிருந்தும் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொள்வதன் மூலம் 2 கோடியே 10 இலட்சம் மூட்டை அல்லது 8 இலட்சத்து 40 ஆயிரம் டன் மணிலா அதிகமாக விளைவிக்க முடியும்!

இவ்வாறு மானாவாரி மணிலா உற்பத்தி பெருகினால் உழவர் பெருமக்களின் வருவாய் பெருகுவதுடன், கடலை பிண்ணாக்கு, கடலை எண்ணெய் விலையும் கணிசமாகக் குறையும். மேலும், அதிகமாக உற்பத்தியாகும் கடலை எண்ணெயைக் கொண்டு உள்நாட்டுத் தேவையை ஈடு செய்வதுடன், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியையும் ஈட்டலாம்! எனவே, மானாவாரி மணிலாச் சாகுபடி செய்யவிருக்கும் உழவர் பெருமக்கள், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு, மானாவாரி மணிலா பயிரிட்டு வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பணி செய்ய வேண்டும் என்பதற்காகத் 'தமிழரசு' இதழின் சார்பாக பின்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை உழவர் பெருமக்களுக்கு அன்புடன் படைத்துள்ளதுடன் அவைகளைப் படித்துப் பயன்படுத்தி பயன்மிகு பெறுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

பருவம்: மானாவாரி மணிலா பயிரிட ஆனி; ஆடி (ஜூன், ஜூலை) மாதங்கள் மிகவும் ஏற்றது.

### ஏற்ற இரகங்கள்

மானாவாரி மணிலா பயிரிட விரும்புகின்றவர்கள் தங்கள் தேவைக்கும், விருப்பத்திற்கும் பகுதிக்கும் ஏற்ப கொடி மணிலா இரகங்களையோ அல்லது கொத்து (குத்து) மணிலா இரகங்களையோ பயிரிடலாம். கொடி மணிலா இரகங்கள் அதிக வயதுடையவையாதலின், அவைகளை அதிக நாட்கள் பருவமழை பெய்யும் பகுதிகளில் மட்டுமே பயிரிடுவது சிறந்தது. கொத்து மணிலா இரகங்கள் குறுகிய கால வயதுடையவையாதலின், அவைகளை குறிப்பாகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே பருவமழை பெய்யும் பகுதிகளிலும், பொதுவாக எல்லா இடங்களிலும் பயிரிடலாம். உங்களுக்கு ஏற்ற இரகங்களைப் பின்கண்ட அட்டவணையில் இருந்து தேர்தெடுத்துக் கொள்ளுங்கள்.

| மணிலா வகையும் இரகத்தின் பெயரும் | வயது நாட்கள் |
|---|---|
| கொடி வகை (Spreading Variety) | |
| 1. டி.எம்.வி. 1 | 135 |
| 2. டி.எம்.வி. 3 | 135 |
| கொத்து வகை (Bunch Variety) | |
| 1. டி.எம்.வி. 2 | 105 |
| 2. டி.எம்.வி. 7 | 105 |
| 3. பி.ஓ.எல் 1 | 105 |
| 4. பி.ஓ.எல். 2 | 105 |
| அதிகம் படராதது (Semi-spreading) | |
| 1. டி.எம்.வி. 10 | 125 |

மேற்கூறிய இரகங்களில் 'டி.எம்.வி.7', 'பி.ஓ.எல். 2' ஆகியவை அதிக மகசூல் தரக்கூடியவைகளாகும்.


டி.எம்.வி. 2

### ஏற்ற மண்

மணல் கலந்த வண்டல் மண், செம்மண் அல்லது கருவண்டல் மண் போன்ற மிருதுவான மண்ணே மாஞவாரி மணிலாச் சாகுபடிக்குச் சிறந்தது.

### நிலம் தயாரித்தல்

மாஞவாரி மணிலா மகசூலைப் பெருக்குவதற்கு நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். மணிலாச் செடிகள் நன்றாக வேர்விட்டு வளரவும், விழுதுகள் தடையின்றி மண்ணிற்குள் சென்று நிலக்கடலைகள் உருவாகவும், 6 அங்குல ஆழம் வரை நிலத்தை புழுதியாகும்படி உழவேண்டும். நிலம் நன்கு புழுதியாக ஆக இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை நன்கு உழவேண்டும். ஆழமாய் உழுவதைத் தவிர்க்க வேண்டும்.

### அடியுரமிடுதல்

விதைப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு, கடைசி உழவில் ஏக்கருக்கு பின்கண்ட அளவு உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

தொழு எரு:—

பத்து வண்டி (5 டன்) இடவேண்டும். தொழு எரு கிடைக்கா விட்டால் 10 வண்டி (5 டன்) கலவை எரு (கம்போஸ்ட்) இடலாம்.

இரசாயன உரம்:—

தழைச்சத்து—4 கிலோ.
மணிச்சத்து—8 கிலோ.
சாம்பல் சத்து—12 கிலோ.

மேற்கூறிய அளவு சத்துக்கள் அளிக்க ஏக்கருக்குக் கீழ்க்கண்ட அளவு இரசாயன உரங்களை இட வேண்டும்.

அமோனியம் சல்பேட்—20 கிலோ.
சூப்பர் பாஸ்பேட்—50 கிலோ.
மியூரியேட் ஆப் பொட்டாஷ்-20 கிலோ.

அமோனியம் சல்பேட் 20 கிலோ இடுவதற்குப் பதிலாக 9 கிலோ யூரியா இடலாம்.

மேற்கூறியவாறு உரமிடத் தனித்தனி இரசாயன உரங்கள் கிடைக்கா விட்டால், 7-ஆம் எண் கலப்பு உரத்தில் (4:8:12) ஏக்கருக்கு 100 கிலோவை அடியுரமாக இடலாம்.

அல்லது

23 கிலோ 17:17:17 கூட்டு உரம், 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 13 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இடலாம்.

அல்லது

18 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டையும், 2 கிலோ யூரியாவையும், 20 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து அடியுரமாக இடலாம். இதுவே மிகவும் குறைந்த செலவில் சிக்கனமாக உரமிடும் முறையாகும்!

இவ்வாறு இரசாயன உரமிட்ட 15 நாட்களுக்குப் பிறகு, மழை பெய்து விதைப்பதற்கு முன்னர் ஏக்கருக்கு 'போராக்ஸ்' எனப்படும் வெண்காரம் 4 கிலோ இட்டு, உழுதுவிட வேண்டும்.


டி.எம்.வி.1




பி.ஓ.எல்.2

'போராக்ஸ்' நிலக்கடலைச் செடியின் வளர்ச்சிக்கும், தரமான நிலக்கடலை உருவாவதற்கும், பருப்பு நன்கு முதிர்வதற்கும் உதவுகிறது. 'போராக்ஸ்' போடுவதால் 15 முதல் 20 சதம் வரை மணிலாவின் மகசூல் அதிகரிக்கும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 'போராக்ஸ்' இட்டால் போதுமானது!

### நுண்ணுயிர் கலத்தல்

மணிலாச் செடியின் வேரில் முடிச்சுகள் (Root Nodules) காணப்படும், அம் முடிச்சுகளில் 'ரைசோபியம்' என்னும் நுண்ணியர்கள் உள்ளன. அவைகளின் உதவியால் வேர் முடிச்சுக்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை இழுத்துக்கொண்டு செடிகளுக்குப் பயன்படும்படி செய்கின்றன. எனவே, மணிலாச் செடிகளில் அதிக அளவு வேர் முடிச்சு உண்டாக ஏக்கருக்கு 3 குடுவை நுண்ணுயிர்களை 10 கூடை மணல் அல்லது மரத்தூளுடன் கலந்து விதைப்பதற்கு முன்பு நிலத்தில் தூவுதல் சிறந்தது.

### விதையளவு

கொடி மணிலாவை விட கொத்துமணிலாவை நெருக்கமாக விதைக்க வேண்டுமாதலின், கொத்து மணிலாவிற்கு அதிக அளவு விதைப்பருப்புகளை (உடையாதது) விதைக்க வேண்டும். வகைக்கும், இரகத்திற்கும் ஏற்ப, பின்கண்ட அளவிற்கு விதைக்க வேண்டும்.



| இரகம் | ஏக்கருக்கு தேவைப்படும் விதை அளவு (கிலோவில்) |
|---|---|
| டி.எம். வி.1 | 45 |
| டி.எம்.வி. 2 | 45 |
| டி.எம்.வி. 3 | 50 |
| டி.எம்.வி. 7 | 55 |
| டி.எம்.வி. 10 | 45 |
| பி.ஓ.எல். 1 | 60 |
| பி.ஓ.எல். 2 | 48 |

### விதையுடன் மருந்து கலத்தல்

விதைப்பதற்கு முன்பு விதைப் பருப்புக்களுடன் 'கேப்டான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' என்ற மருந்தை 1 கிலோ விதைக்கு 2.5 கிராம் மருந்து வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருந்து பிறகு விதைக்கவும்.

### இடைவெளி

கொடி மணிலா இரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், செடிக்குச் செடி 9 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

கொத்து மணிலா இரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 6 அங்குலமும் செடிக்குச் செடி 6 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

### விதைப்பு

ஏரின் பின்னால் விதைப்பருப்புகளை மேற்கூறியவாறு இடைவெளியிலும், 1.5 முதல் 2 அங்குல ஆழத்திலும் போட வேண்டும். மேற்கூறிய இடைவெளியில் விதைக்காமல், பெரும் இடைவெளி விட்டு விதைத்தால் பயிரின் அடர்த்திக் குறைந்து மகசூல் குறைந்துவிடும்! ஆகவே, மாஞவாரி மணிலாவில் நிறைந்த மகசூல் பெறக் குறிப்பிட்ட இடைவெளியில் விதைக்க வேண்டும். ஏரின் பின்னால் விதைகளைப் போட்ட பிறகு, விதைகள் மண்ணில் மறைக்கப்படுவதற்குப் பச்சைக் கிளைகளை வெட்டிப் படலமாகக் கட்டிக் கொண்டு அல்லது மூங்கில் படலின் மேல் கற்களை வைத்துப் பளு ஏற்படுத்திக் கொண்டு நிலத்தின் மேல் இழுத்துச் செல்ல வேண்டும். இல்லையெல் விதைப் பருப்புகள் காக்கை, கருடன், குருவி போன்ற பறவைகளுக்கு இரையாகிவிடும்!

### கலப்புப் பயிர்

மணிலா விதைகளை விதைக்கும்பொழுது; சாலுக்குச்சால் 6 முதல் 8 அடி வரை இடைவெளி விட்டு, ஏக்கருக்கு 2 கிலோ 'எஸ்.ஏ. 1 துவரை' அல்லது 1 கிலோ 'டி.எம்.வி. 2 ஆமணக்கு, அல்லது 1 கிலோ 'கே. 1 சூரியகாந்தி' விதைகளை விதைப்பதால் கூடுதல் இலாபம் பெறலாம்!

### களை எடுத்தலும், 'ஜிப்சம்' இடுதலும்.

மாஞவாரி மணிலாவில் நல்ல மகசூல் காண களை எடுத்தல் மிகவும் இன்றியமையாதது! விதைத்த 20-ஆம் நாள் முதல் முறையும், விதைத்த 40-ஆம் நாள் இரண்டாவது முறையும், களைக்

கொட்டால் கொத்தி விட்டுக் களைகளை அகற்ற வேண்டும். இரண்டாவது களை எடுப்பிற்குப் பிறகு களைக்கொட்டால் களை எடுக்கக் கூடாது! அப்படிச் செய்தால், விழுதுகளைப் பாதிக்கும். எனவே, அதன் பின் தோன்றும் பெரிய களைகளைக் கைகளால் எடுத்து விட வேண்டும்.

கொத்து மணிலாவிற்கு இரண்டாவது களை எடுக்கும்போது மண் அணைக்க வேண்டும்.

நன்கு காய்ந்த நிலத்திலும், அதிக ஈரம் உள்ள நில்த்திலும் களை எடுக்கக் கூடாது!

ஆண்டுதோறும் தொடர்நது மணிலா சாகுபடி செய்வதால், மண்ணிலுள்ள சுண்ணும்புச் சத்து குறைந்து விடக்கூடும்! இதனால் மகசூல் குறைந்து விடும்! இக்குறையைத் தவிர்க்க 'ஜிப்சம்' இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் முறை களையெடுக்கும் பொழுது, ஏக்க ருக்கு 80 கிலோ 'ஜிப்சம்' தூவி, பிறகு களை எடுக்க வும். இதனால் மணிலா மகசூல் பெருகும்.

## பயிர்ப் பாதுகாப்பு

மானாவாரி மணிலாவில் முக்கியமாக 'சிகப்புக் கம்பளிப் பூச்சி', 'சுருள் பூச்சி', 'அசுவணி' ஆகிய பூச்சிகளும், 'டிக்கா' இலைப்புள்ளி நோயும் தோன் றக்கூடும்.

### 1. சிவப்புக் கம்பளிப் பூச்சி

மானாவாரி மணிலாவை அதிகம் தாக்குவது சிவப்புக் கம்பளிப் பூச்சியே! மழை பெய்த பிறகு இப் புழுக்கள் தோன்றக் கூடும்!

கோவை மாவட்டத்தில் வைகாசி முதல் ஆவணி வரை தோன்றக்கூடும்! மற்ற மாவட்டங் களில் ஆனி முதல் ஐப்பசி வரை தோன்றக்கூடும்! இதன் தாய்ப் பூச்சிகள் (வண்ணத்திப் பூச்சிகள்) மழை பெய்த 3-ம் நாள் இரவு, கூட்டுப் புழுவி லிருந்து தோன்றும். அப்பூச்சிகளை இரவில் 'பெட் ரோமாக்ஸ்' விளக்கு வைத்துப் பிடித்து அழித்து விடலாம். இப்பூச்சிகளை அழிக்காவிடில், அவை முட்டையிட்டு பிறகு அம் முட்டைகளில் இருந்து சிவப்புக் கம்பளிப் பூச்சிகள் தோன்றி மணிலாவை அழிக்கும். சிவப்புக் கம்பளிப் புழுக்கள் அழிக்க ஏக்கருக்கு பின்கண்ட அளவில் மருழ்ந்து தெளிக்க லாம்.

1. என்ட்ரின் 0.45 சதவீதம் (400 மில்லி லிட் டர் மருந்து, 200 லிட்டர் தண்ணீர்). அல்லது

2. பாரத்தியான் 0.05 சதவீதம் (200 மில்லி லிட்டர் மருந்து 200 லிட்டர் தண்ணீர்). அல்லது





3. நுவான் (டி.டி.வி.பி.) 0.1. சதவீதம் (200 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண் ணீர்) அல்லது.

4. ஹீலியோடாக்ஸ்—1500 மில்லி லிட்டர் 200 லிட்டர் தண்ணீர்.

5. பி.எச்.சி. 10 சதவீதம் தூள்—ஏககருக்கு 10 கிலோ இளம் புழுக்களை மட்டுமே அழிக்க ஏற் றது.

6. தயோடான்—500 மில்லி லிட்டர், 200 லிட்டர் தண்ணீர்—முதிர்ந்த புழுக்களை அழிக்க அல்லது.

### 2 சுருள் பூச்சி

இவை வறட்சியான காலங்களில் தோன்றும். இளம் இலைகளைத் தின்பதுடன். இலைகளை மடக்கிச் சேதம் விளைவிக்கின்றன. இவைகளை அழிக்கப் பின் கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்.

1. பாரத்தியான் 0.05 சதவீதம் ஏக்கருக்கு (200 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண் ணீர்). அல்லது

2. பெனிட்ரோதியான் 0.05 சதவீதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்). அல்லது

3. டேக்ஸோபின் + டி.டி.டீ + டைமேதோட் (1500 மில்லி லிட்டர் மருந்து 200 லிட்டர் தண் ணீர்). அல்லது

4. பெனிட்ரோதியான் 2சதவீதம் தூள்— ஏக்கருக்கு 10 கிலோ.

5. டி.டி.டீ. 5 சதத்தூள்—ஏக்கருக்கு 10 கிலோ.

### 3. அசுவணி

இவை நுண்ணிய கருப்புப் பூச்சிகள்; இலை களில் காணப்படும்; இலைகளின் சாற்றை உறிஞ்சி செடிகளை வாடச் செய்யும். இவைகளைப் பின் கண்ட வாறு அழிக்கலாம்.

1. கார்போஃபினோதியான் (டிரைதியான்) 0.06 சதவீதம் (600 மி.லி. 200 லிட்டர்) தண்ணீர்) அல்லது

2. மீதெயல் டெமிடாடன் (மொடாசிஸ் டாக்ஸ்) 25 சதவீதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்). அல்லது

3. தயோமிடான் (எகடின்) 0.25 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்). அல்லது

4. டைமதோட் (ரோகார்) 0.03 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்). அல்லது

5. ஃபாஸ் ஃபாமிடான் 0.5 சதவீதம் (டைமக்ரான்) (150 மி.லி. மருந்து, 300 லிட்டர் தண்ணீர்). அல்லது.

6. ஃபார்மோதியான் (என்தியோ) 0.05 சத விகிதம் (400 மில்லி மருந்து 200 லிட்டர் தண்ணீர்). அல்லது

7. வாமிடோதியான் 0.06 சதவிகிதம் (200 மி.லி. (மருந்து 200 லிட்டர் தண்ணீர்). அல்லது

8. பாஸலோன் 0.06 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) தெளிக்க வேண்டும்.

மருந்து தெளித்தல்: கையால் இயக்கும் மருந்து தெளிக்கும் கருவி (Hand operated Sprayer) உபயோகிக்கும் போது மேலே கூறி யுள்ள அளவு நீர் தேவைப்படுகிறது. விசைக் கருவி (Power Sprayer) உபயோகிக்கும்போது முன்னால் கூறிய நீரின் அளவுகளை 40 சதவிகிதமாகக் குறைத்துக் கொள்ளவும். ஆனல் மருந்தின் அள வைக் குறைக்கக்கூடாது!

''டிக்கா'' என்னும் இலைப்புள்ளி நோய் காணப் படும் இடங்களில் 1 கிலோ தாமிரக் கலவை மருந்தை ஏனைய மருந்துடன் கலந்து விதைத்த 20-25 நாட்களில் முதல் முறையும், விதைத்த 40-45 நாட்களில் மறுமுறையும் தெளிக்கவும்.

காலையில் 9 மணிக்குள்ளாகவும், மாலையில் 4 மணிக்கு மேற்பட்டும் மருந்து தெளித்தல் சிறந்தது.

மண்ணில் கரையான், வெள்ளைப்புழு, ஏனைய பூச்சிப்புழுக்கள் காணப்பட்டால் 'அல்டிரின், 'டைஅல்டிரின்', 'ஹெப்டோக்ளோர்' போன்ற மருந்துகளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் உழவில் போடலாம்.

### அறுவடையும் மகசூலும்

கடலைத் தோலின் உள்பாகம் கறுப்பு நிறமாக வும், பருப்பின் மேலுள்ள தோல் சிவப்பு நிறமாக வும் மாறிய பிறகு மணிலாவை அறுவடை செய் வதே சிறந்தது.

மேற்கூறிய முறைகளில் சாகுபடி செய்தால், ஏக்கருக்குப் பின்கண்ட அளவு மகசூல் கிடைக்கும்.

| இரகம் | மகசூல் (மூட்டைகள்) |
|---|---|
| டி.எம்.வி. 1 | 15—20 |
| டி.எம்.வி. 3 | 18—22 |
| டி.எம்.வி. 10 | 20—25 |
| டி.எம்.வி. 2 | 15—20 |
| டி.எம்.வி. 7 | 20—25 |
| பி.ஓ.எல். 1 | 18—22 |
| பி.ஓ.எல். 2 | 20—25 |

(1 மூட்டை—40 கிலோ)

எனவே, மாவாரி மணிலாச் சாகுபடி செய்ய விருக்கும் தமிழக உழவர் பெருமக்கள் அனைவரை யும், மேற்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மகசூலைப் பெருக்கிப் பெரும் இலாபம் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

# எலி



எலி இனம் 10 கோடி ஆண்டு களுக்கு முன்பு தோன்றியது என்று கருதப்படுகிறது. எலி கள் மனிதன் தனக்கென்று சேர்த்து வைத்திருக்கும் உண வைத் தின்று விடுகின்றன. நோய்க் கிருமிகள் பரவுவதற்குக் காரணமாக இருக்கின்றன. பல பொருட்களைக் கடித்து நாசம் செய்கின்றன.

எலிகள், மிக வேகமாக இனப்பெருக்கம் செய்யும் இயல்பு வாய்ந்தவை. இரண்டு எலிகள் ஒரே ஆண்டில் 800 எலி கள் தோன்றுவதற்குக் காரண மாக இருக்கின்றன. பெண் எலி ஓராண்டில் ஐந்து முறை குட்டி போடுகிறது. ஒவ்வொரு முறையும் 5 முதல் 10 குட்டிகள் வரை போடும். இன்று இந்தி யாவில் மட்டும், 240 கோடி முதல் 480 கோடி எலிகள் இருக்கலாம் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது, இந்த நாட்டில் ஒரு மனிதனுக்கு 5 எலிகள் வீதம் இருக்கின்றன.

சுமார் 150 எலிகள் ஒன்று சேர்ந்து ஒரே ஆண்டில் 500 கிலோ கிராம் உணவு தானியங் களைத் தின்றுவிடுகின்றன. இந்த எலிகள் மேலும் 3,000 கிலோ கிராம் உணவு தானி யத்தைத் தமது சிறுநீர் எச்சம் முதலியவற்றின் மூலம் நாசப் படுத்துகின்றன. நமது நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 35 இலட் சம் டன் உணவு தானியம் எலிக ளால் வீணக்கப்படுகிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த உணவைக் கொண்டு ஒரு கோடி பேருக்கு உணவு வழங்க முடியும்.

பிளேக், மஞ்சள் காமாலை, வயிற்றுப் போக்கு, எலிக்கடி நோய் போன்ற பல்வேறு நோய்கள் பரவுவதற்கு எலி இனம் காரணமாக உள்ளது. எலிகள் மரச்சாமான்களைக் கடித்துப் பாழாக்குகின்றன; கட்டடங்களுக்கு நாசம் விளைவிக் கின்றன. சில சமயங்களில் அணைகளில் விரிசல் ஏற்படுவதற் கும், ரயில் தண்டவாளங்களில் கோளாறு ஏற்படுவதற்கும் இவை காரணமாக இருக்கின் றன.

இந்தியாவில் மட்டும் 118 வகை எலிகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். வீடு களில் காணப்படும் சுண்டெலி, மூஞ்சூறு, வயல்களில் காணப் படும் வரப்பு எலி, பெருச்சாளி போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

எலிகளை ஒழிக்க வேண்டுமா னால், வீடுகளையும் சுற்றுப் புறத் தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சிலர் பூனை, நாய் போன்ற விலங்குகளை இதற் கென்று வளர்க்கிறார்கள். மற் றும் சிலர் எலிப்பொறி வைத்து எலிகளைப் பிடிக்கிறார்கள். விஞ்ஞான முறையில், எலி வளை களில் மருந்து தெளித்தும் நஞ்சு தடவிய உணவுப் பண்டங்களை வைத்தும் எலிகளைக் கொல்ல முயற்சி செய்யப்படுகிறது. வீடு களில் எலிகளைக் கொல்வதற்கு உறையாத நஞ்சுப் பொருட்களை யும், வயல் வெளிகளில் அலு மினிய பாஸ்பைடு எனும் கூட்டு மருந்தையும் பயன்படுத்தலாம். இந்த நச்சுப் பொருட்கள் பத்திர மானவை, மலிவானவை, நீடித்து நிற்கக் கூடியவை.

எலி ஒழிப்பு ஒரு சமுதாயப் பிரச்சினை, இதனைச் சமுதாய மட்டத்தில்தான் செயல்படுத்த வேண்டும்.







93



# நாவற்கனி

கோ. மா. இராசகோபாலன்



கருநீல எழில்முத்தோ! மணியோ! வண்டோ!
களித்தாடும் சிறுவர்கைப் பளிங்கோ! காணுங்
கருவிழியோ! கருந்திராட்சைக் கனியோ யென்னக்
காண்போரைக் கவர்ந்திங்கு கவினுர் வண்ணத்
திருவுடையேன்! தித்திக்குஞ் சுவையை ஊட்டுந்
திறமார்ந்த கனியாவேன்! தேச மக்கள்
மருவில்லா இன்பெய்த மலிந்து காண்பேன்!
வகையற்ற ஏழையர்க்கும் மகிழ்ச்சி ஈவேன்!

முக்கனிக்கும் மூத்தவன்நான் என்றுல் நீங்கள்
முறைக்கின்றீர்! என்கூற்றுப் புதுமை யென்றே!
முக்காலம் முற்றுணர்ந்த முனிவர் ஞானம்
முகிழ்த்தபெருந் தவச்சீலர் மிகுந்தி ருந்த
அக்காலத் தேயானும் அன்ன வர்க்கே
அருந்துணையாய் விளங்கியவன்! பழமை மிக்கோன்!
பக்குவமில் லார்;சிறுவர் பலரும் நத்திப்
பயன்பெற்று மகிழச்செய் பொதுமைப் பாட்டன்!



நாவினிக்க நல்குநறுஞ் சுவையோ(டு) எஃகின்
நயச்சத்தைத் துவர்ப்பாக நலமா யூட்டி
நாவிற்கும் உடலுக்கும் வலுவைக் கூட்டும்
நற்றிறத்தால் 'நாவல'—எனும் நாமம் தந்தார்!
நாவலென்றன் கொட்டைதனைத் தூள்படுத்தி
நல்லவிதம் காய்ச்சியநீர் அருந்தி வந்தால்
நாவினிக்கும் சர்க்கரையால் தோன்றும் நோயாம்
நாநடுங்கும் நீரிழிவைத் தீர்ப்பேன் நன்றே!

உடற்கூட்டை ஒட்டிவரும் பிணிகள் தம்மை
ஒட்டாது வெட்டிவிடும் குளிர்ச்சி தந்து
திடமுறவே சிந்தைநலம் சிறக்கச் செய்து
செங்குருதி தண்மையுறச் சீராய்க் காத்து
மடவாரும் ஆடவரும் சிறுவர் மூத்தோர்
மாற்றமின்றி அனைவர்க்கும் இன்பம் நல்குங்
கடமையுடை யோன், அதனுல் மாந்தர் தங்கள்
கருவிழிக்கே ஒப்பிட்டுச் சிறப்புத் தந்தார்!



துதிக்கின்ற சிலகடவுள் என்மரத்தில்
துடிப்போடு கோயில்கொள் கதையும் உண்டு
மதிக்கின்ற நலுங்கினிலே என்பேர் சொல்லி
மணமகளை வருணிப்பர் பிள்ளை வீட்டார்!
முதிர்பாட்டி அவ்வைக்குத் தருக்கு ணர்த்த
முருகன்கைக் கொண்டதுவும் என்னை யன்றோ!
எதிர்ப்பேது! இந்தியத்தை எனது பேரால்
ஏற்றமுற 'நாவலந்தீ வெ'ன்றார் அந்நாள்!

புத்துணர்வைப் படைப்பதிலே தொன்மை மிக்க
புகழ்ச்சரிதம் படைத்தவன்நான்! அதனுல் தானே
சத்தான என்பெயரை ஆங்கி லேயர்
சமைக்கின்ற புதினத்தைக் குறிக்கச் சூட்டித்
தித்திக்க 'நாவலெ'னச் சொல்லு கின்றார்!
திறத்தாலே நாடு, மொழி கடந்தே நிற்கும்!
சித்தன்நான்! என்னைப்பற்றி நானே இன்னும்
செப்புவது அழகல்ல! நிறுத்திக் கொள்வேன்!

காட்சி-1

(கார்மேகம் தன் மனைவி கல்யாணியிடம் சொல்லிக் கொண்டு வெளியே கிளம்பத் தயாராகிறார்)

கார்மேகம்: (சங்கீதம் பாடுவது போன்று அழைக்கிறார்) கல்...யாணி..கல்யாணி....கல்.....யாணி

கல்யாணி: காலையிலேயே கல்யாணி ராகமா?

கார்: சங்கீத ஞானமிருந்தால் அல்லவா உனக்குப் புரியும்? காலையிலே பாடவேண்டியது பூபாளம்.

கல்: பூபாளம் ராகம் வேறே.....நம்ப பாமாவுக்கு மாப்பிள்ளை பாருங்க..பாருங்கண்ணா.... அதிலே அக்கறையை காணோம்.

கார்: காலையிலேயே ஆரம்பிச்சுட்டியா உன் பல்லவியை....இன்று பூராவும் இதுதான் உன் பாட்டு....இதோ நான் வெளியே கிளம்பிவிடுறேன் (இசையுடன் இழுத்தாற்போல்) வர்றேன் கல்..யாணி

கல்: ஏங்க..கொஞ்சம் காதிலே வாங்கிட்டு போங்களேன்....நம்ப பாமாவுக்கு வயது கொஞ்சமா ஆவுது இப்படி பொறுப்பில்லாமே இருக்கீங்க....செய்ய வேண்டியதை எல்லாம் காலா காலத்திலே செய்யாமே......

கார்: கல்யாணி! இந்தக் கார்மேகத்திற்கு எதை எதை எப்பப்ப செய்யணும்னு தெரியும் நான் ஒண்ணு நினைச்சேன்னா ஒன்பது காரியம் முடியும். நீயே பார்க்கப்போறே.

கல்: கொஞ்சம் புரியும்படிதான் பேசுங்களேன்......

கார்: நம்ப வீட்டுக்கு எதிரே இருக்குதே பெரிய வீடு. அது இப்ப காலியாயிருக்கு.....

கல்: ஆமாம் 'மேகவிலாசம்'

கார்: அந்த வீட்டுச் சொந்தக்காரர் நீலமேகத்தை இப்ப பார்க்கப் போறேன்.

கல்: (கிண்டலாக) அந்த வீட்டை வாங்கப் போறீங்களா? வீடு வாங்கினவுடனேதான் பாமாவுக்கு மாப்பிள்ளை தேடப்போறீங்களா? இல்லே இந்த வீட்டை சீதனமா தரப்போறீங்களா?

கார்: கிண்டலா பண்றே....நான் அந்த வீட்டை வாடகைக்கு கேட்கப் போறேன்.

கல்: (மகிழ்ச்சியுடன்) ஆமாங்க...நான்கூட உங்களுடன் சொல்ல சொல்ல நினைச்சேன்.

கார்: அந்த வீட்டை வாடகைக் கேட்கச் சொல்லியா?

கல்: ஆமாங்க..என் தம்பி தனபாலனுக்கு வேறெ வீடு வேண்டுமாம். நண்டும் சிண்டுமா நாலைஞ்சு புள்ளைகளை வச்சுக்கிட்டு கஷ்டப் படுகிறான். கொஞ்சம் பெரிய வீடா இருந்தால் அவனுக்கும் நல்லது. அதிலே இருந்தா எனக்கும் ஒத்தாசை.




கார்: கல்யாணி, மேகவிலாசத்தை வாடகைக்குப் பிடிக்கப் போறது உன் தம்பிக்காக இல்லே. என் பால்ய நண்பன் பரந்தாமனுக்கு! அது மட்டுமில்லே. பரந்தாமன் எதிர் வீட்டுக்கு வரட்டுமே பின்னாலே நம்ப பாமாவின் கல்யாணம் ஜல்..ஜல்னு நடக்கும் பாரு...

கல்: ஏங்க...புரியும்படியாய் பேசுங்களேன். எதிர்வீட்டிலே உங்க சிநேகிதர் குடிவருவதற்கும் பாமா கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்?

கார்: உனக்கும் எனக்கும் ஏற்பட்ட சம்பந்தம் மாதிரிதான். எதிர் வீட்டிலே இருந்த என்னையே கல்யாணம் பண்ணிக்குவேன்னு பிடிவாதமா இருந்தியே....அது மாதிரி....பரந்தாமன் பையன் நம்ப பாமாவைக் கட்டிக்குவேன்னு பிடிவாதம் பிடிப்பான். நம்பவேலை சுலபம்.

கல்: உங்க திட்டம் ஒண்ணு நம்பர் அசட்டுத்தனம். ஈயைப் பிடிக்க எலிகாப்டர்லே ஏறி சுத்தினமாதிரி இருக்கு. என் பொண்ணு பாமா என் மாதிரி முட்டாளில்லே! அவள் புத்திசாலி. புத்திசாலிப் பையனைத்தான் கல்யாணம் பண்ணிக்குவா.

கார்: என்ன கல்யாணி! காலையிலேயே வாயை நீட்டுறியே....ஒரே கல்லிலே இரண்டு




மாங்கா அடிக்கிற மாதிரி இருக்கு....பரந்தா
மன் பையன் புத்திசாலி இல்லேன்னு சொல்லி
கிட்டு என்னையும் புத்திசாலி இல்லேண்ணு வரு
சொல்லிட்டே...உம்...இருபத்தைந்து
ஷத்துக்கு முன்னே நான் யோசித்திருக்கணும்.
உன் தம்பிக்கு மேகவிலாசம் கிடைக்கா
துண்ணு தெரிஞ்சதாலே எதுவும் பேசவே.

கல்: எங்கே இருந்தோ மாற்றலாகி வர்ற சிநேகிதருக்கு மேகவிலாசத்தை வாங்கித் தரீலாம், என் தம்பிக்கு வாங்கித்தரக்கூடாதா?

கார்: உன் தம்பி தனபால் முக விலாசத்துக்கு மேகவிலாசம் வேண்டியிருக்கோ?

கல்: (சிணுங்கிய குரலில்) ஏங்க எதுவேணும்
னாலும் பேசுங்க...அதுக்காக என் தம்பியை
அவலட்சணம்னு பேசாதீங்க...அப்பவே
சொன்னேன், அவனுக்கு பாமாவை கட்டிவைப்
போம்னு! கேட்டீங்களா? இப்ப மாப்பிள்ளை
தேடி அலைய வேண்டிய அவசியம் வந்திருக்
காது பாருங்க.

கார்: கல்யாணி...கொஞ்சநேரத்துக்கு முன்
னாலேதானே சொன்னே...பாமா...புத்திசாலி
அவள் புத்திசாலியைத் தான் திருமணம் செய்
துக்குவான்னு...அப்புறம் அவள் எப்படி உன்
தம்பியை கட்டிக்க சம்மதித்திருப்பா? இரு

சாறு வருஷத்துக்கு முந்தியே முடிஞ்ச கதை... உம்...அதோ பாமா வர்றா! அவள் முன்னாடியும் இதைபேசவேண்டாம்...சொல்ல மறந்திட்டனே என் தம்பி காளமேகம் வர்றதா போன் பண்ணினான். வந்தால் இருக்கச் சொல்லு. நீலமேகத்தைப் பார்த்துவிட்டு வந்துடறேன். வர்றேன்.....கல்யாணி!

காட்சி-2

(கார்மேகத்தின் தம்பி காளமேகம் தன் அண்ணன் வீட்டுக்கு வருகிறார். கார்மேகத்தின் மகள் பாமா வரவேற்கிறாள்)

பாமா: வாங்க சித்தப்பா வாங்க....

காளமேகம்: அண்ணே இல்லே பாமா....

பாமா: அப்பா, அம்மாவிடம் ஏதோ சொல்லிவிட்டு வெளியே கிளம்பினாங்க-இதோ அம்மாவைக் கூப்பிடுறேன்...அம்மா...அம்மா காளமேகம் சித்தப்பா வந்திருக்காங்க.

கல்யாணி: (வந்து கொண்டே) வாங்க தம்பி வாங்க...உங்க அண்ணன் அந்த எதிர்வீடு மேக விலாசம் இல்லே...அதை வாடகைக்கு கேட்க அந்த வீட்டுக்காரர் நீலமேகத்தைப் பார்க்கப்போயிருக்காங்க......

காள: நான் நினைச்சேன். அது எப்படி அண்ணனுக்குத் தெரிஞ்சுது....எப்படியாவது அந்த மேக விலாசத்தை வாடகைக்குப் பிடிச்சிட்டால் போதும் ரவிக்குப் பதவி உயர்வு கிடைச்சிடும்.

கல்: என்ன தம்பி சொல்றீங்க.....நீங்க.

காள: நம்ப ரவி வேலை செய்ற கம்பெனியின் பெரிய அதிகாரிக்கு வீடு வேணும். அந்த வீட்டைப் பிடித்துக் கொடுத்தால் போதும். ரவிக்குப் ப்ரோமோஷன் உறுதி. அதுக்காகத் தான் அண்ணனை அழைச்சுக்கிட்டு அந்த நீலமேகத்தைப் பார்க்கப் போகலாம்னு வந்தேன்.

கல்: தம்பி! உங்க அண்ணன் மேகவிலாசத்தை வாடகைக்குக் கேட்கப் போனது உங்களுக்காக அல்ல. பால்ய சிநேகிதராம் பரந்தாமன் என்பவர், அவருக்காகவாம்.

காள: அடாடா! இப்ப என்ன செய்யுறது? நான் ரவியிட[illegible]யாச் சொன்னேன்.

பாமா: [illegible] ரவி [illegible]ண்ணனுக்குத் தான் [illegible]ங்க வீட்டிலேதா[illegible] யா[illegible]யாரையோ தெரியு[illegible]ம.....

கா[illegible]: அவன்தான் சொன்[illegible] அம்மா நீங்க [illegible]போய் நீலமேகத்தைப் பா[illegible]த்துவிட்டு வாங்க[illegible]னு சொன்னான்.

கல்: [illegible] அண்ணனும் [illegible]டு வேணுங்[illegible] வேணு[illegible]..! இரண்டுக் ருங்க...நீ[illegible] [illegible]லாம். அந்தக்கும் பதி[illegible] ஒண்ணு [illegible]பாலுக்கு முடிச்சு வீட்டை என் [illegible] கொடுத்திடுங்க! அவனும் வீடு வீடுன்னு அலைஞ்சுகிட்டு இருக்கான்.

காள: அண்ணி, தனபாலுக்குக்கூட பின்னுல் வேறே வீடு பார்த்துக்கலாம். இது ரவி உத்தியோக விஷயத்துக்கு ரொம்ப முக்கியம். நீ என்ன சொல்றே பாமா?

பாமா: நான் என்ன சித்தப்பா சொல்றது..? ஒரு வீட்டுக்கு மூணுபேர் போட்டி போடுறீங்க ....அந்த வீட்டுச் சொந்தக்காரர் என்ன நினைச்சுகிட்டு இருக்காரோ....?அவருக்கு வேண்டியவுங்க யாராவது இருக்க மாட்டாங்களா?

காள: நானே அந்த நீலமேகத்தைப் போய் பார்த்து நிலைமையை உள்ளபடி சொன்னுல் எனக்குத் தரமாட்டாரரா? அதுதான் சரி. நான் உடனே கிளம்புகிறேன். வர்றேன் அண்ணி, வர்றேன் பாமா!

பாமா: அம்மா, அப்பாவும் சித்தப்பாவும் கிளம்பிட்டாங்க....நீயும் தனபால் மாமாவும் போய்க் கேளுங்களேன். அந்த வீட்டு மாமியைத்தான் உனக்குத் தெரியுமே!

கல்: அதுவும் சரிதான். நான் இப்பவே தனபாலை அழைச்சிகிட்டு அங்கே போறேன்.

காட்சி-3

(கார்மேகமும் அவருடைய தம்பி காளமேகமும் சாலையில் சந்திக்கின்றனர்)

கார். காளமேகம், அந்த மேக விலாசத்துக்காக நமக்குள்ளே எவ்வளவு போட்டி பார்த்தியா? அண்ணனுக்கும் தம்பிக்கும் போட்டி! கணவனுக்கும் மனைவிக்கும் போட்டி....நாம எதிரே வரும்போதே உங்க அண்ணி அவள் தம்பி தனபாலை அழைச்சிகிட்டு போருள்....

காள: அண்ணே! என்ன இருந்தாலும் அண்ணிக்கு நீங்கள் இவ்வளவு இடம் கொடுத்திருக்கக்கூடாது.

கார்: நீ ஒண்ணு! கல்யாணிக்கு எங்கே நான் இடம் கொடுத்தேன். என்னைக்கு அவளை கைப்பிடிச்சேனோ அன்றே எல்லா உரிமைகளையும் எடுத்துக்கிட்டா....நல்லவேளை என்னை வீட்டிலேயே தடுத்து நிறுத்திருயே அதுவரை சந்தோஷம்......

காள: அண்ணே! நீலமேகம் மனைவிக்கும் அண்ணிக்கும் சிநேகிதமாமே...அதனுலே அண்ணிக்கு மேகவிலாசம் கிடைச்சிடுமோ?

காள: அப்படிச்சொல்ல முடியுமா? என்னை எத்தனை வருஷமா அந்த நீலமேகத்துக்குத் தெரியும்?

காள: அண்ணே! என்னைத் தெரிஞ்ச பிறகுதான் அண்ணியை உங்களுக்குத் தெரியும். ஆனுல் நான் சொல்றதுக்கும் அண்ணி சொல்றதுக்கும் வித்தியாசம் இல்லையா? உங்க மாதிரி அந்த நீலமேகமும் மனைவி வார்த்தைக்கு மரியாதை கொடுக்கிருர்னு வைச்சுக்குவோம். அப்ப மேக விலாசம் யாருக்கு கிடைக்கும்?

கார்: வீட்டுக்கு வீடு வாசபடித்தான்! நீலமேகம் நிலைமை எப்படியோ? என்னவோ முயற்சி செய்துவிட்டோம்!...என்னவிருந்தாலும் காளமேகம் எனக்குப் போட்டியா நீ வந்திருக்கக் கூடாது.

காள: அண்ணே நான் உங்களுக்குப் போட்டியாவா வர ஆசைப்படுவேன்? நம்ப ரவியோட ப்ரோமோஷனுக்காகத்தான் நான் உங்களோடு மேகவிலாசத்துக்காக போட்டி போடும்படியாச்சு. நான் போன் பண்ணி வீட்டுக்கு வர்றேன்னு சொன்னேனே மேக விலாசத்தை கேட்க நீலமேகத்தைப் பார்க்கப்போகணும்னு தான். (வருத்தமான குரலில்) இப்படி நடந்ததுக்கு தப்பா நினைச்சுக்காதீங்க....

கார்: காளமேகம்! நீ வருத்தப்படாதே! சிரசுக்கு மேலே போற தண்ணி சென்டி மீட்டர்லே போனுல் என்ன? ஆளுயரத்துக்குப் போனு என்ன? எப்படியோ மூணு பேரும் வீடு தேவைன்னு போட்டி போட ஆரம்பிச்சிட்டோம். முடிவுதான் தெரியணும்.

காள: நீலமேகம் உங்களுக்கு என்ன பதில் சொன்ஞரு.....

கார்: வெள்ளிக்கிழமை மாலை வீட்டுக்கு வர்றேன் வந்து பதில் சொல்றேன்னுரு. நான் வீடு வாடகைக்கு கேட்கப் போனுல் என் வீட்டுக்கு வந்து பதில் சொல்ருராம். உனக்கு என்ன சொன்னுரு?

காள: எனக்கும் அதே பதில்தான். அண்ணன் வீட்டுக்கு வெள்ளிக்கிழமை வந்திடுங்க அங்கே பேசிக்குவோம்னு சொன்னுரு. நமக்குள்ளே போட்டியிருக்கிறதுனுலே வீட்டு வாடகையை உயர்த்துவாரோ—

கார்: போட்டியிருந்தால் எதுக்குமே புது மவுசு வந்திடும். வீட்டு வாடகையை உயர்த்திஞல் நமக்கு என்ன? நாமா கொடுக்கப் போறோம்?

காள: எவ்வளவு வசதியான வீடு! மேக விலாசம் கிடைச்சாலே யோகம்தான்.

கார்: எல்லாம் வெள்ளிக் கிழமை தெரிஞ்சிடும்! அதுசரி எங்கே...ரவியைக் காணோம்? கல்யாணி தனபாலை அழைச்சிகிட்டு வந்த மாதிரியா நீ ரவியை அழைச்சிகிட்டு வந்து நீலமேகத்திடம் நிற்கலியே! ரவிக்குத்தான் நீலமேகம் பையனை நல்லா தெரியும்! மேக விலாசத்திலே நீலமேகம் இருக்கும்போது நம்ப வீட்டுக்கு வரும் போதெல்லாம் அரட்டை அடிக்க அங்கே தான் போவான்.

காள: அண்ணே! நீங்க ஒண்ணு! ரவியோட வேலையைப் பற்றி அவன் ப்ரோமோஷனைப் பற்றி நான்தான் கவலைப் பட்டுவிட்டு அலையுறேன். அவனுக்கு ஏது அந்தக் கவலை? எங்கேயாவது ஊர் சுற்றிகிட்டு இருப்பான்....

கார்: காளமேகம்! கவலைப்படாதே! சந்தோஷப்படு! நல்ல வேளையா? அண்ணனுக்கு தம்பி போட்டி! கணவனுக்கு மனைவி போட்டிங்கிற இந்தப் போட்டியிலே அப்பனுக்கு மகன் போட்டிங்கிற நிலைமையை உண்டாக்க ரவியும் நாலாவதாக வேறுயாருக்கும் மேக விலாசத்தை கேட்டுகிட்டு வந்து நீலமேகத்திடம் நிற்கலியே! அதுவரையும் நமக்கு சந்தோஷம்தானே!

(அடுத்த இதழில் முடியும்)



# குறுவையில் பெரும் மகசூல் பெறுவது எப்படி

எ...க்கும் ...அளவில் மகசூல் பெற முடிவது குறுவை பட்டத்தில்தான்! இதன் காரணமாகவே தமிழகமெங்கும் உள்ள உழவர் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்யத் தண்ணீரை எதிர்பார்த்து ஆர்வத்துடன் இருப்பார்கள்! ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அயராது உழைத்துவரும் தமிழக உழவர் பெருமக்களுக்கு இந்த நேரத்திலே குறுவை சாகுபடிக்குறிப்புகளைத் தெரிவித்தால், அவை உழவர் பெரு மக்களுக்கு உறு துணையாக அமையும் என்று கருதி, கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளை, உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளோம்!

குறுவைக்கேற்ற இரகங்கள் :

குறுவைப் பட்டத்தில் 'ஐ. ஆர். 8', 'ஜெயா', 'ஐ.ஆர். 20' போன்ற நடுத்தரக் கால உயர் விளைச்சல் தரும் இரகங்களையும், 'கருணு', 'ஆடுதுறை 27', 'கரிகாலன்', 'கோ. 29', 'காஞ்சி', காவேரி', 'கண்ணகி' 'பொன்னி' போன்ற குறுகிய கால உயர் விளைச்சல் இரகங்களையும் பயிரிடுவதே அதிக மகசூல் பெறுவதற்கு வழியாகும்! உங்களுக்கு இருக்கும் தண்ணீர் வசதிக்கும், நிலத்தின் தன்மைக்கும், அடுத்துப் பயிரிடவிருக்கும் பயிருக்கும் ஏற்ப, மேற்கூறிய இரகங்களில் உங்களுக்குத் தகுந்தவற்றைத் தேர்ந்தெடுத்து ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டுப் பயிரிட்டால், குறுவையில் அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் அடையலாம்!



## ஒருமித்த செய் நேர்த்தி முறைகள்!

### நாற்று விட வேண்டிய காலம் :

ஜூன் 15-ஆம் தேதியிலிருந்து (ஆனி 1-ஆம் தேதி) ஜூலை 15-ஆம் தேதிக்குள் (ஆனி 31) நாற்று விடுவது மிகச் சிறந்தது. எக்காரணத்தைக்கொண்டும் ஜூலை 27 (ஆடி 12)-ஆம் தேதிக்குப் பிறகு குறுவைக்கு நாற்று விடுதல் நல்லதல்ல!

### விதையளவு :

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ தரமான விதையை நாற்று விட வேண்டும்.. தரமான விதைகளை வேளாண்மை துறையிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

### விதையுடன் மருந்து கலக்குதல்:

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ராசான், அல்லது 'செரசான்' அல்லது 'திராம்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' மருந்து வீதம் கலந்து, விதை கலக்கும் கருவியில் இட்டுச் சுற்றி, மருந்து விதைகளுடன் நன்கு கலக்குமாறு செய்யவும்.மருந்து கலந்து குறைந்தது 6 மணி நேரம் வைத்திருந்த பிறகே, முளை கட்ட வேண்டும்.

### நாற்றங்கால் தயாரித்தல் :

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது ,சேருக்க வேண்டும். 12 சென்ட் நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு அல்லது ஒரு வண்டித் தன... எரு வீதம் இடவேண்டு... நாற்றுகளைப் பறிக்கும் போ... வேர்கள் அறுந்து விடாம... பறிக்க இவ்வாறு எருவிடுத... அவசியம். நாற்றங்காலை ஒ... வொன்றும் ஒரு சென்ட் (... அடிX8 அடி) பரப்புள்ள ... பாத்திகளாகப் பிரித்து... கொண்டு, அவைகளை மேடை... பாத்திகளாக (Raised bed... அமைத்துக் கொள்ளுத... வேண்டும். புழுதி நாற்ற... கால் அமைத்தலும் சிறந்தது...



### விதைத்தல்

ஒவ்வொரு மேடைப் பா... திக்கும் 1.5 கிலோ அளவு முளை... விட்ட விதைகளை விதைக்... வேண்டும். மூன்றுங் கொம்... விதைகளை விதைப்பது நல்லது... புழுதி நாற்றங்காலில் விதை... களை முளைக்க வைக்காம... நேரடியாக விதைத்து தண்... ணீர் விட வேண்டும்.

### நடவு வயல் தயாரித்தல்

நடவு வயலை இரும்புக் கல... பையால் நன்கு உழுது சேருக்... வேண்டும். 'பில்லிப்பசரா... போன்ற பசுந்தாள் உர... பயிர் வளர்ந்துள்ள நிலமா... இருந்தால் அப்படியே இரும்... கலப்பையால் உழுது விட்டு... பின்னர், 'பர்மிய செட்டூன்... அல்லது தழை மிதிக்கும் கருவி... கொண்டு அழுத்தி உழவு செ... யவும். உழுவதற்கு டிராக்ட... பயன்படுத்துவதாகஇருந்தால்... கூண்டுச் சக்கரம் (Cage wheel... இணைத்து நிலத்தின் குறுக்கு... நெடுக்குமாக இரு முறை உழ... செய்து — பின்னர் பரம்பு... பலகையால் நிலத்தினைச் சம... படுத்தவும்.

## அடியுரமிடுதல்

அதிக மகசூல்பெறுவதற்குத் தேவையான அளவு தொழு எருக்களையும் அல்லது தழை எருக்களையும், இரசாயன உரங்களையும் இட வேண்டும். பொதுவாக மேற்கூறிய எல்லா இரகங்களுக்கும் ஏக்கருக்கு 12 வண்டி (6 டன்) தொழு எரு அல்லது 5 வண்டி (2,300 கிலோ) *பசுந் தழை அல்லது பசுந்தாள் உரம் இட்டு, உழுது சேற்றுடன் கலக்குமாறு செய்ய வேண்டும்.

மண்ணின் தன்மைக்கும் இரகத்திற்கும் ஏற்ப உரமிடுவதே நல்லது. மண் பரிசோதனை செய்து, சோதனை முடிவில் குறிப்பிட்ட அளவில் உரமிடுவதே அதிக மகசூலுக்கு வழி வகுக்கும்! மண் பரிசோதனை செய்து, அதன்படி இரசாயன உரமிட முடியாத உழவர்கள், வேளாண்மைத் துறையினர் இரகத்திற்கு ஏற்பப் பொதுவாகப் பரிந்துரைக்கும் அளவில் இரசாயன உரமிட வேண்டும்.

அடியுரமாக இரசாயன உரமிடுவதை இரகத்திற்கும், மாவட்டத்திற்கும் பரிந்துரைக்கப்படும் அளவில் இட வேண்டும். ஆகவே, கீழே இரகத்திற்கு ஏற்பப் பொதுவாக ஒரு உர அளவும், தஞ்சை மாவட்டத்திற்கென தனியே ஒரு உர அளவும் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவான உர அளவைத் தஞ்சை மாவட்டம் தவிர்த்த மற்ற மாவட்டங்களில் பயன்படுத்த வேண்டும். ஆனல் தஞ்சை மாவட்ட உழவர்கள், தஞ்சை மாவட்டத்திற்குஎனப் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவிலேயே இரசாயன உரங்களை இட வேண்டும்.

**'ஐ. ஆர். 8', 'ஜெயா', 'ஐ. ஆர். 20', இரகங்களுக்குப் பொதுவான உர அளவு.**

கடைசி உழவில் ஏக்கருக்கு 35 கிலோ மணிச் சத்தும், 35 கிலோ சாம்பல் சத்தும், அடியுரமாக அளிக்கப்பட வேண்டும். ஏக்கருக்கு இந்த அளவு சத்துக்களை அளிக்க, கடைசி உழவில் பின்கண்ட அளவில் இரசாயன உரங்களை இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட்—220 கிலோ.

மூரியேட் ஆஃப் பொட்டாஷ்—60 கிலோ.



நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவை அடியுரமாக இட வேண்டும்.

**தஞ்சை மாவட்டத்தில் 'ஐ. ஆர். 8', 'ஜெயா' பயிரிடுவதற்கான உர அளவு**

தஞ்சை மாவட்டத்தில் 'ஐ. ஆர். 8', 'ஜெயா' இரகங்களைப் பயிரிடக் கடைசி உழவிற்கு முன், ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்த அளவுக்குச் சத்துக்களைக் குறைந்த செலவில் அளிக்க பின்கண்ட உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுது விடவேண்டும்.

டை-அமோனியம்பாஸ்பேட்—54 கிலோ.

யூரியா—44 கிலோ.

மூரியேட் ஆஃப்பொட்டாஷ்—42 கிலோ.

**தஞ்சை மாவட்டத்தில் ஐ. ஆர். 20 பயிரிடுவதற்கான உர அளவு:**

தஞ்சை மாவட்டத்தில் 'ஐ. ஆர். 20' இரகம் பயிரிட ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவு சத்துகளை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின்கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுது விடவேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—35 கிலோ.

யூரியா—30 கிலோ.

மூரியேட் ஆஃப்பொட்டாஷ்—25 கிலோ.

**'கருணை', 'கரிகாலன்', 'கண்ணகி', 'காவேரி', 'காஞ்சி', 'பெண்ணை' இரகங்களுக்கான பொதுவான உர அளவு:**

'கருணை', 'கரிகாலன்', 'கண்ணகி', 'காவேரி', 'காஞ்சி', 'பெண்ணை' இரகங்களுக்கு ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து, ஆகியவைகளை அடியுரமாகக் கடைசி உழவில் இட, பின்கண்ட அளவு உரமிடுதல் வேண்டும.

சூப்பர் பாஸ்பேட்—157 கிலோ.

மூரியேட் ஆஃப்பொட்டாஷ்—42 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 33 கிலோ தழைச்சத்து அளிக்க 165 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 72 கிலோ யூரியாவை அடியுரமாக இட வேண்டும்.

**தஞ்சை மாவட்டத்தில் 'கருணை', 'காஞ்சி', 'காவேரி', 'கரிகாலன்', 'கண்ணகி' இரகங்களுக்கான உர அளவு:**

தஞ்சை மாவட்டத்தில் 'கருணை', 'காஞ்சி', 'காவேரி', 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய இரகங்களைப் பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்தச் சத்துக்களை குறைந்த செலவில் இட கீழ்க்கண்ட அளவில் இரசாயன உரங்களைக் கடைசி உழவில் இட்டு உழுது விட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—35 கிலோ.

யூரியா—20 கிலோ.

மூரியேட் ஆஃப்பொட்டாஷ்—25 கிலோ.

**''ஆடுதுறை 27'', 'கோ.-20' இரகங்களுக்குப்பொதுவான உர அளவு:**

கடைசி உழவில் ஏக்கருக்கு 21 கிலோ மணிச் சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்கப் பின்கண்ட அளவில் உரமிட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட்—130 கிலோ.

மூரியேட் ஆஃப்பொட்டாஷ்—23 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 17 கிலோ தழைச்சத்து; அளிக்க 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியாவை இட வேண்டும்.

**தஞ்சை மாவட்டத்தில் 'ஆடுதுறை-27' இரகத்திற்கான உர அளவு:**

தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை-27 இரகத்திற்கு அடியுரமாக ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து, 21 கிலோ மணிச் சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்த அளவில் சத்துக்களை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின்கண்ட அளவில் இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு விட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—45 கிலோ.

யூரியா—14 கிலோ.

மூரியேட் ஆஃப்பொட்டாஷ்—24 கிலோ.

ஆனல் தற்பொழுது கடுமையான இரசாயன உரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், போதிய அளவில் இரசாயன உரங்களை இட முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தற்பொழுது முடிந்தால் அடியுரம் இடுங்கள். முடியாவிட்டால் மேலுரம் மட்டும் இடுங்கள் என்று பரிந்துரைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அடியுரமாக இடப் போதிய உரங்கள் கிடைக்கவில்லையே என்று கவலைப்படாமல், கிடைத்த அளவினை மட்டும் பயன்படுத்தலாம்!

### நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்

நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக 12 சென்ட் நாற்றங்காலுக்கு 24 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 24 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### நாற்றின் வயது:

அதிக வயதுடைய நாற்றுகள் அதிக மகசூல் அளிக்காது! எனவே, நாற்றுகளைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் பறித்து நட்டு விட வேண்டும். நெல் இரகத்திற்கு ஏற்பக் கீழே குறிப்பிட்ட நாட்களில் நாற்றைப் பறித்து நட்டு விட வேண்டும்.

'தபாக்' முறையில் நாற்று விட்டால், நாற்றுவிட்ட 14-ஆம் நாளே நாற்றைப் பறித்து நடவும் செய்ய முடியும்.

நாற்றைப் பறிக்கும் பொழுது, நாற்றின் தண்டுகள் முறிந்து விடாமல் கவனமாகப் பறிக்க வேண்டும். நாற்றின் வேர்களில் உள்ள மண்ணை, அகற்ற நாற்று முடிகளைத் தடிகளால் அடிக்கக் கூடாது. நாற்று முடிகளைக் கட்ட நாற்றுகளையே வளைத்துக் கட்டக் கூடாது! அவ்வாறு வளைத்துக் கட்டினல் நாற்றுகள் முறிந்து விடும். எனவே, வைக்கோல் அல்லது வாழை நாரினல் முடிகளைக் கட்ட வேண்டும்.

| இரகத்தின் பெயர் | நாட்கள் |
| --- | --- |
| ஐ. ஆர். 8, ஜெயா ... ... | 24 முதல் 28 |
| கருணை ... ... | 24 முதல் 26 |
| ஆடுதுறை-27, கோ. 29 ... | 24 முதல் 25 |
| காஞ்சி, காவேரி, கரிகாலன், கண்ணகி ... | 22 முதல் 25 |
| ஐ. ஆர். 20 ... ... | 24 முதல் 28 |
| பெண்ணை ... ... | 24 முதல் 25 |



வயது முதிர்ந்த நாற்றுக்களை நடவு செய்ய நேர்ந்தால் நெருக்கமாக நட வேண்டும்.

நடவும், இடைவெளியும்:

நாற்றுகளைக் கூடுமான வரை வரிசை வரிசையாக நடவு செய்ய வேண்டும்.

வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடை வெளியும் விட்டு நட வேண்டும். ஒரு சதுர மீட்டர் பரப்பில் 67 இடங்களில் பயிர்களை நட வேண்டும்.

மூன்று மூன்று பயிர்களாக வைத்து நடுவது சிறந்தது. நெருக்கமாக நடுவது மகசூலைப் பெருக்கிடப் பெரிதும் உதவும்.



களையெடுத்தல்:

நாற்று நட்ட 15-ஆம் நாளும், 30-ஆம் நாளும் இடை உழவுக் கருவியால் பயிர் வரிசைகளுக்கு இடையில் மண்ணைக் கிளறி விட்டுக் களையெடுக்கவும். வரிசையில் பயிர்களுக்கு இடையில் உள்ள களைகளைக் கைகளால் பிடுங்கி அப்புறப்படுத்தவும். 'ஐ.ஆர். 8,' 'ஜெயா,' 'ஐ.ஆர்.20' இரகங்களுக்கு நாற்று நட்ட 40-ஆம் நாள் 2-வது களையெடுத்தால் போதுமானது.

மேலுரமிடுதல்

பொது: 'ஐ.ஆர். 8,' 'ஜெயா' இரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாள் முதல் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். நடவு செய்த 49 நாளிலிருந்து 54-ஆம் நாளுக்குள் அதாவது தண்டு உருளும் தருணத்தில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

'ஐ.ஆர். 20,' இரகத்திற்கும் நடவு செய்த 21-ஆம் நாள் ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். நடவு செய்த 45 முதல் 50-ஆம் நாளில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

'ஆடுதுறை-27,' 'கோ. 28,' இரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாள் ஏக்கருக்கு 11 கிலோ தழைச் சத்து அளிக்க 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

'கருணை,' 'காஞ்சி,' 'காவேரி,' 'கரிகாலன்,' 'கண்ணகி,' 'பெண்ணை' இரகங்களுக்கு நடவு செய்த 16-ஆம் நாள் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியாவையும், நடவு செய்த 34-ஆம் நாளில் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடவும்.

அண்மையில் மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளின்படிப் பொதுவாக எல்லாக் குறுவை இரகங்களுக்கும் விதைத்த 40, 50, 60, 70-வது நாட்களில் ஆக 4 முறை மேலுரமிடுவது இலாபகரமானதாகும். ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 8 கிலோ தழைச் சத்து அளிக்க 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18 கிலோ யூரியாவை மேலுரமாக இடுவது சிறந்தது.

தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் 'ஐ. ஆர். 8,' 'ஜெயா' ஆகிய இரகங்களைப் புதிய ஆற்றுப் பாசனப் பகுதியில் நட்டிருந்தால், நடவு செய்த 15-ஆம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். நடவு செய்த 50—55 நாட்களில் இரண்டாம் தடவையாக ஏக்கருக்கு 20 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். பழைய பாசனப் பகுதிக்கு நடவு செய்த 50—55 நாட்களில்,





(தண்டு உருளும் தருணம்) ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை இடவும்.

'ஐ.ஆர். 20' நட்டிருந்தால் புதிய ஆற்றுப் பாசனப் பகுதியில் நடவு செய்த 15-ஆம் நாள் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும், நடவு செய்த 50—55 நாட்களில் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடவேண்டும். பழைய ஆற்றுப் பாசன பகுதியில் நடவுசெய்த 50—55 நாட்களில் ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

'கருணை,' 'கரிகாலன்,' 'கண்ணகி' 'காஞ்சி,' 'காவேரி' ஆகிய இரகங்கள் பயிரிட்டிருந்தால் நடவு செய்த 15-ஆம் நாள் முதல் தடவையாக 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும், சூல் கட்டும் தருணத்தில் 2ஆம் தடவையாக ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடவும்.

பயிர்ப் பாதுகாப்பு

நடவு செய்த 21-ஆம் நாள் வருமுன் தடுப்பாக ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' அல்லது 250மில்லிலிட்டர் 'சுமதியான்' அல்லது 110 மில்லி லிட்டர் 'டெமக்ரான்' அல்லது 300 மில்லி லிட்டர் 'தயோடான்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து (10 பெரிய மண்ணெண்ணெய் டின் அளவு) கையால் இயங்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் பயன்படுத்துவதனால் மேற்கூறிய அளவு மருந்தை 40 முதல் 60 லிட்டர் தண்ணீரில் (2 முதல் 3 பெரிய டின் அளவு) கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 42-ஆம் நாள் மேற்கூறிய அளவு மருந்துடன், 400 கிராம் 'டைத்தேன் இசட்-78' அல்லது 400 கிராம் 'டைத்தேன். எம். 45' அல்லது 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' மருந்தைக் கலந்து தெளிக்க வேண்டும்.





தண்டு உருளும் தருணத்திலேயும், நடவு செய்த 21-ஆம் நாள் தெளித்தது போலவே தெளிக்க வேண்டும்.

நெற் பூவில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் 'செவின் 10 சதம்' அல்லது 'பி.எச். சி. 10 சதம்' தூளைத் தூவி விடவேண்டும்.

எனவே, மேற்கூறியசாகுபடி முறைகளை மேற்கொண்டு, பெரும் மகசூல் பெற்று பயன் அடையுமாறு, குறுவைச் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—ஆர். எம்.

# குடிசைமாற்று வாரியத்தின் புதிய திட்டங்கள்....



சென்னையில் குடிசைகளில் வாழ்ந்து வந்த மக்களின் குடிசைகளை மாற்றிக் கோபுரம் போல் வீடுகள் அமைத்து அங்கே அவர்களைக் குடிபுக வைத்து, மிகக் குறைந்த வாடகையை அவர்களிடமிருந்து பெற்று வரும் குடிசை மாற்று வாரியம், மற்றும் சில மகத்தான பணிகளையும் செய்யத் திட்டமிட்டுள்ளது.

மிகக் குறைந்த வாடகையையும் சில குடும்பத் தலைவர்கள் தர இயலாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். சில மாத வாடகை பாக்கி ஏற்பட்டு விடுகிறது. வாடகை பாக்கியின் காரணமாக, குடியிருக்கும் ஏழைகளை, இருப்பிடத்தைக் காலி செய்யும்படிக் கூறுவது மனிதாபிமானமற்ற செயல். குடியிருக்கும் குடும்பத்தின் பொருளாதாரத்தை வளப்படுத்தினால் வாடகை பாக்கி ஏற்படாதல்லவா? அதனால் தான் குடிசை மாற்று வாரியத்தின் தலைவர், இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்குப் புதிய திட்டம் ஒன்றை அறிமுகம் செய்திருக்கிறார்.

குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள இல்லங்களில் வசித்து வரும் குடும்பத் தலைவியர்கள் - வீட்டிலிருந்தவாறே தையல் வேலை செய்தல், பொம்மைகள் செய்தல், பிளாஸ்டிக் கூடை உருவாக்குதல் போன்ற பணிகளைச் செய்து, நாள் ஒன்றுக்கு ரூ. 4 முதல் 5 வரை சம்பாத்தியம் செய்ன்ற வகையில் சிறுசிறு



தொழில்களை அவர்களுக்காக அமைத்துக் கொடுக்கும் திட்டம்தான் அது.

தாண்டவராயன் பிள்ளை சத்திரத்தில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் இயந்திர சர்க்கா பயன்படுத்தப்பட்டு வருகிறது. இங்குள்ள மகளிர்கள் இதனை இயக்கித் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஊதியத்தைத் தேடிக் கொள்கிறார்கள். சேத்துப்பட்டுக் குடியிருப்பில் 20 தையல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தைக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் எல்லாவற்றிற்கும் விரிவுபடுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புக்களில் உள்ள, படித்து வேலையில்லாதிருக்கும் இளைஞர்களுக்கு வேலை தருவதற்கும்—திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. தச்சுப்பட்டறை, தீப்பெட்டித் தொழிற்சாலை, பாய், கூடைமுடையும் நிலையம் ஆகியவற்றைத் தமிழக அரசின் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தினிடமிருந்து நிதியுதவி பெற்று, உருவாக்கக் குடிசைமாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

மற்றொரு புதிய முயற்சியைக் குடிசை மாற்று வாரியம் செய்யவிருக்கிறது. அது என்ன தெரியுமா? சென்னையில் வசித்துவரும் 8000 ஆதி ஆந்திர குடும்பத்தினருக்குக் (துப்புரவுப்பணியாளர்) குடியிருப்பு வாய்ப்பை ஏற்படுத்துவதுதான் அந்த மாபெரும் முயற்சி.

சென்னை நகரில் 50 பகுதிகளில் வாழ்ந்துவரும் இவர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்கும் முயற்சியில் குடிசை மாற்றுவாரியம் இறங்கியுள்ளது. இவர்களைக் குறித்து ஆய்வு செய்வதற்கு ஒரு சிறப்பு அலுவலரைக் குடிசை மாற்று வாரியம் நியமித்தது. அவர் அளித்துள்ள அறிக்கையை வாரியம் ஏற்றுக்கொண்டு அரசின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது.

சென்னையில் ஆதி ஆந்திரர்களின் குடியிருப்புப் பகுதிகள் தற்போது மூன்று வகையில் உள்ளன. அரசுக்குச் சொந்தமான இடத்தில் சிலரும், அரசுக்கும் மாநகராட்சிக்கும் சொந்தமான இடத்தில் சிலரும், தனியார்க்குச் சொந்தமான இடங்களில், சிலரும் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு 5 கோடி ரூபாய் செலவில் குடிசை மாற்று வாரியம் குடியிருப்புகளை உருவாக்கிக் கொடுக்க முடிவு செய்துள்ளது. இதற்கான நிதியை ஆயுட் காப்பீட்டுக் கழகம் (L.I.C.) வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (HUDCO) ஆகிய கழகங்களிடமிருந்து பெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசின் அனுமதி கிடைத்தவுடன் இந்த மாபெரும் பணி துவக்கப் பெறும்.

# பட்டிமன்றப் பாதை

கோவை இளஞ்சேரன்



## சமயக் காட்சி

ஒரு கட்டழகி. அவள் துறவினி. புத்த மதத்தவள். அவளது துறவுக் கோலத்திலும் கட்டழகு பளிச்சிட்டது. அவ்வழகுக்கு முடி சூட்டி மிளிர்ந்தது அவளது சுருண்ட கூந்தல். அக் கூந்தல் குண்டலம் என்னும் காதணி போன்று சுருண்டு சுருண்டு குண்டலக் காடாய்த் தோன்றியது. அக்கூந்தலின் அழகைக் கொண்டே பெயர் பெற்றவள் அவள். அவள் பெயர் குண்டலகேசி என்பது.

அக்குண்டலகேசி அரண்மனைக் கோட்டை வாயிலின் முன் வந்து நிற்கின்றாள். அவளது கையில் ஒரு சிறு நாவல் கிளை உள்ளது. அதனை அவள் அங்குள்ள மணலில் நட்டு நிற்கின்றாள். நாவற்கிளை நட்ட காரணத்தால் கோட்டை வாயில் அடைக்கப்படுகின்றது. போக்குவரத்துக்கள் நிற்கின்றன.

அடைத்த கோட்டை வாயிலைக் காத்து நிற்கும் வாயிற் காவலனிடம் மற்றோர் அழகி வருகின்றாள். வந்தவள் வாயிற் காவலனைப் பார்த்து, ''யான் மன்னவனைக் காண வந்துள்ளேன். விரைந்து சென்று அவனுக்கு உரை'' என்கின்றாள். வாயிலோன், ''அதோ நிற்பவள் குண்டலகேசி; அவள் தனது புத்தமதக் கோட்பாட்டை எதிர்ப்பவர் உளரோ என்று அறைகூவியுள்ளாள்; அறைகூவலின் அறிகுறியாக நாவற் கிளையை நட்டுள்ளாள்; இந்த அறைகூவலுக்கு அமைந்த-மரபுப்படி மன்னவன் ஆணையால் கோட்டை வாயில் அடைக்கப்பட்டுப் போக்குவரத்துக்கள் ஒழிந்துள்ளன; அறைகூவல் மாற்றுக் கருத்தினரால் ஏற்கப்படும்வரை வாயில் அடைப்பு நீங்காது; யானும் உள்ளே போக முடியாது'' என்கின்றான். கேட்ட அவள் குண்டலகேசியை நோக்கி நடக்கின்றாள்.

வந்தவளும் ஒரு துறவினி. சமண சமயத்தவள். இவளது அழகின் வெற்றிச் சின்னமும் இவளது கூந்தலே. இது நீல நிறங்கொண்டது. இதுகொண்டே பெயர் பெற்றவள் இவள். நீலகேசி என்பது இவளது பெயர்.

வந்தவள் நின்றவளை அணுகி ''உன் குறை என்ன? நாவல் நட்டு நாட்டு நடப்புகளைத் தேக்கியுள்ளாயே! ஏதும் பூசல் எழுப்பும் நோக்கம் உண்டோ?'' என்று உசாவுகின்றாள்.

குண்டலகேசி மிடுக்குடன் மாற்றம் உரைக்கின்றாள்: ''யான் புத்த மதத்தவள். என் சமயக் கருத்தை நிலைநாட்ட இங்கு வந்துள்ளேன். அதன் அறிகுறியாக நாவற் கிளையை நட்டுள்ளேன். என் சமயக் கோட்பாட்டை மறுத்துக் கருத்துப்போர் புரியும் மாற்றுச் சமயத்தவரை எதிர்நோக்குகின்றேன். அந்த ஆற்றல் உனக்கிருந்தால் நாவலை ஒடித்து என் அறைகூவலை ஏற்றுக்கொள். மன்னவன் அவையில் கருத்துப் போரிடுவோம்'' என்கின்றாள்.

உடன், நீலகேசி அவள் நட்டிருந்த நாவற் கிளையைப் பறித்து ஒடித்து வீசி எறிகின்றாள். இதனால் குண்டலகேசியின் அறைகூவலை ஏற்றவளாய் வாயிலோனை அடைந்து ''மன்னவனிடம் எனது எதிர்கூவலை உரைப்பாய்'' என்கின்றாள்.

வாயிலோன் சிறு புழைக் கதவைத் திறந்து போய் மன்னவன் இசைவு பெற்று வந்து வாயிலைத் திறக்கின்றான். இரண்டு அழகியரையும் மன்னவனிடம் அழைத்துச் செல்கின்றான். அரசன் அவையைக் கூட்டுகின்றான். சான்றோர் குழுமுகின்றனர். மன்னவன் இரு நங்கையர்க்கும் தக்க இருக்கைகளை எதிர் எதிராக அமைக்கின்றான். கருத்துப் போருக்குரிய நெறிகளை அறிவிக்கின்றான்.

குண்டலகேசி ''வென்றார்க்குச் சிறப்பான விருது தர வேண்டும்; தோற்றார்க்கு ஒறுப்பாகப் பெருந்துயர் தர வேண்டும்; இதற்கு உறுதி கூறுக'' என்கின்றாள். மன்னவன்,

''சிறப்பயர்வன் நன்றாக
வென்றார்கட்கு இன்றேயான்;
புறப்படுப்பன் தோற்றாரைப்
பொல்லாங்கு செய்து''

என்று உறுதி கூறுகின்றான்.

கருத்துப்போர் துவங்குகின்றது. குண்டலகேசியும் நீலகேசியும் மாறி மாறிச் சொல்லாடுகின்றனர். ஒரு நிலையில் குண்டலகேசி நீலகேசிக்கு மாற்றம் உரைக்க முடியாமல் திகைக்கின்றாள். மன்னவன் அந்நிலையில் அவளை நோக்கி, ''பெண்ணே! நீ ஏற்றுக்கொண்டுள்ள புத்தமதக் கோட்பாடுகள் புனைந்து உரைக்கப்பட்டன போலும். மாற்றம் உரைக்கத் திகைக்கின்றாய். அதனால், நீ கொண்டுள்ள கருத்தின்பால் வைத்த மதிப்பை விட்டொழி'' என்கின்றான். பின்னர், அவையோரை நோக்கித் ''தம் கருத்திலுள்ள குறைகளை மூடி மறைத்து அவையில் பேசுவோர் மூடர்'' என்று தன் தீர்ப்புக்கு அடிகோலி, முடிவாக,

''புயலிருங் கூந்தலி (நீலகேசி)
பொருந்தச் சொல்லினாள்,
வியலர் உரையொடு
விரோதம் இல்லை'''—என்று தீர்ப்பளிக்கின்றான். அவையோர் இத்தீர்ப்பை வழிமொழிகின்றனர். மன்னவன், வென்ற நீலகேசிக்கு,

''முரசொடு நெடுங்கொடி
முழங்க நாட்டுக''

என்று ஆணையிட்டு, விருது வழங்கிச் சிறப்புச் செய்கின்றான். தோற்ற குண்டலகேசியை மன்னவனது ஏவலர்,

''வட்டிகொள் பறைகொட்டி (சாப்பறை)
வழுவுரை பலசொல்லி வாரல் என்று''

—கோட்டை வாயிலின் வெளியே விட்டு விரட்டியடிக்கின்றனர்.

இதுவரை காணப்பட்டது பட்டி மன்றப் பாதையில் ஒரு காட்சி. சமயப் பட்டி மன்றக் காட்சி. சமண சமயச் சார்புடைய ''நீலகேசி' என்னும் தமிழ்க்காப்பியம் காட்டும் பட்டி மன்றக் காட்சி.

## சங்கக் காட்சி

இதற்கு முற்காலப் பட்டி மன்றக் காட்சி ஒன்று தெரிகின்றது:



பூம்புகார் நகரத்தில் பெரிய கடைவீதி, ஆரவாரம் மிகுந்து காணப்படுகின்றது. ஒரு புலவர் மிடுக்குடன் வருகின்றார். அவர் ''தொல்லாணை நல்லாசிரியர்''. அவர் கையில் ஒரு துணிக்கொடி உளது. அக்கொடி கருத்துப் போர் குறித்து உயர்த்தும் கொடி. (''உறழ் குறித்தெடுத்த நெடுங்கொடி'') அக்கொடியில் ஒரு கருத்து எழுதப்பட்டுள்ளது. அஃது அவர் நிலைநாட்ட விரும்பும் கருத்து. அதனைப் பலர் கூடும் பொதுவிடத்தில் நட்டு அறைகூவி நிற்கின்றார். இவ்வறைகூவல் செய்தி பரபரப்புடன் பரவுகின்றது. மன்னவனுக்கு எட்டுகின்றது. அவன் அரண்மனையில் அமைந்துள்ள பட்டி மண்டப வாயிலை அடைக்கச் செய்கின்றான்.

மற்றொரு புலவர் அறைகூவலை ஏற்க முன் வருகின்றார். மன்னவன் பட்டி மண்டபத்தைத் திறக்கச் செய்து சான்றோர் அவையைக் கூட்டுகின்றான். மன்னவன் நடுவனாக அமைகின்றான். கருத்துப்போர் பண்புடன் நெறியாக நிகழ்கின்றது. மன்னவன் தீர்ப்பளிக்க அவையோர் ஏற்கின்றனர். வென்ற கருத்து நிலைநாட்டப்பட்டுப் பதிவாகின்றது. வென்றார்க்குச் சிறப்பு கிடைக்கின்றது. தோற்றவர் நிலைநாட்டப்பட்ட கருத்தை ஏற்று அமைதியுறுகின்றார்.

இது சங்க காலப் பட்டி மன்றக் காட்சி. பட்டினப்பாலையும் பிற இலக்கண, இலக்கிய நூல்களும் காட்டும் காட்சி.

இவையன்றி இசைப்பட்டி மன்றக் காட்சி ஒன்று தெரிகின்றது:



## இசையரங்குக் காட்சி

மதுரை மாநகரில் இராசராச பாண்டியன் அவை கூடியுள்ளது. பாண்டியன் நடுவனாக அமர்ந்துள்ளான். ஈழ நாட்டுப் பாடினி ஒருத்தியும் மதுரைப் பாடினியாகிய பாணபத்திரன் மனைவியும் இசைப்போர்க்கு அமர்ந்துள்ளனர். பாணபத்திரன் மனைவியைத் தாழ்த்த வேண்டும் என்ற உள்ளெண்ணத்துடன் பாண்டியன் ஈழநாட்டாளை அழைத்து இவ்இசைப்போரை ஏற்பாடு செய்துள்ளான். பாணபத்திரன் மனைவியை வேண்டுமென்றே வம்புக்கிழுத்து 'இசைவாது' செய்யவைக்கும் இசைப்பட்டி மன்றம் இது.

இசைப்போர் தொடங்கு முன் மன்னவன்,

தோற்றார் வென்ற மாதரார்க்கு
அடிமையாய் விடுவதே சபதம்''—

என்று விதிக்கின்றான். இரு பாடினியரும் மாறி மாறிப் பாடுகின்றனர். அவையோர் பாணபத்திரன் மனைவியது பாடலைப் பாராட்டி தலையசைக்கின்றனர். தனது உட்கோள் மாறுவதை அறிந்த பாண்டியன் ஈழத்துப் பாடினியைப் பாராட்டித் தலையசைக்கின்றான். மன்னவனது விருப்பம் அறிந்த அவையோர் 'மன்னன் எவ்வழி குடிகள் அவ்வழி' ஆகின்றனர். ஆயினும் மதுரைப் பாடினியின் இசை மேலோங்கி நிற்பது புலனாகிக்கொண்டே வருகின்றது. பாண்டியன் அழிவழக்குப் பேசி இசைப்போரை மறுநாளில் ஒற்றி வைக்கின்றான். மறுநாளும் இதே நிலை அமைகின்றது. மன்னவன் ஒருபால் சாய்கின்றான். மதுரைப் பாடினி மன்னவனை நோக்கி, இறைவன் திருமுன்னர் இருவரும் பாடுவோம்,

"இருவரேம் பாட்டும் கேட்டுத்
துணிந்திவள் வென்றாள் என்று
ஒருவர் சந்நிதியிற் சொன்னால் போதும்"

—என்று உரைக்கின்றாள்.

இறைவன் திருமுன் என்றதும் மன்னவன் வேறு மாற்றம் உரைக்க வழியின்றி இசைகின்றான். மறுநாள் இறைவன் திருமண்டபம் இசைப்பட்டி மண்டபம் ஆகின்றது. இசைப்போட்டி தொடர்கின்றது. இருவரும் தத்தம் இசைத்திறத்தைக் காட்டுகின்றனர். முடிவில் மன்னவன்,

"முன்னவன் அருளால் தன்மனக் கோட்டம்
முறன்கெடப் பொதுமையின் நோக்கி
இன்னவள் தானே (மதுரைப் பாடினியே)
வென்றனள்''

—என்று தீர்ப்பளிக்கின்றான். அவையோரும் அதனை உள்ள நிறைவுடன் வழிமொழிகின்றனர்.

தோற்ற இலங்கைப் பாடினி கழுத்தில், வென்ற மதுரைப்பாடினியை ஏற்றி, இலங்கைப் பாடினியைஅடிமையாக்குகின்றான். மன்னவன் வென்றவளுக்குச் சிறப்புச் செய்கின்றான். தோற்றவள் அமைதி பெற வரிசைகள் வழங்குகின்றான்.

இது திருவிளையாடற் புராணம் காட்டும் இசைப்பட்டிமன்றக் காட்சி.

இங்கு மூன்று பட்டி மன்றங்கள் காட்சியளித்தன. இவற்றிற்கு முன்னும் பின்னும் இடை இடையிலுமாக நிகழ்ந்த பட்டி மன்ற நிகழ்ச்சிகள் பல புலனாகின்றன.

மதுரையில் இறையனார் என்னும் புலவர் ''கொங்கு தேர் வாழ்க்கை'' என்றொரு பாடல் எழுதினார். மன்னவன் அவையில் இப்பாடல் பற்றிய கருத்து எழுந்தது. நக்கீரர் ''இது குற்றமுள்ள பாடல்'' என்றார். எழுதியவர் ''என்ன குற்றம்'' என்றார். நக்கீரர் ''சொற்குற்றமின்று; பொருட் குற்றம்'' என்றார். ''பொருட் குற்றத்தைக் கூறுக'' என்றார் இறையனார். ''மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்று குறித்தது பொருட் குற்றம்'' என்றார் இவர். அவர் ''நீ வழிபடும் இறைவியின் கூந்தலும் அத்தகையதோ'' என்றார். ''எவர் கூந்தலானாலும் இயற்கை மணம் இல்லைதான்'' என்றார் இவர். இறையனார் தாம் தக்க சான்று கூற இயலாத நிலையில் சினங்கொண்டு இரண்டு கண்களையும் உருட்டி விழித்தார். அது கண்ட நக்கீரர் அஞ்சாதவராய் ''இரண்டு கண்களென்ன; இந்திரன் போன்று உடம்பெல்லாம் கண்களாகிச் சினங்காட்டினாலும் குற்றம் குற்றமே' என்றார். பாண்டிய மன்னனால் இப்பூசலைத் தீர்க்க முடியவில்லை. (இன்று வரையிலும் புலவர்களிடையே இப்பூசல் பற்றி எழுதலும் உண்டு.)

இவ்வாறு அறியப்படும் நிகழ்ச்சி ஒரு பட்டி மன்ற நிகழ்ச்சியேயாகும். இதனைச் சங்கச் செய்யுளும், உரைகளும், திருவிளையாடற் புராணமும் பல வகைகளிற் பேசுகின்றன.

நக்கீரர் தொடர்பில் மற்றொரு பட்டி மன்றம் புலனாகின்றது. அப்படி மன்றமும் மதுரையில் நிகழ்ந்ததாக உளது.

மதுரையில் தமிழ்ப் புலவர் அமர்ந்து ஆராயும் பட்டி மண்டபத்தில் குயக்கோடன் என்பான் புகுந்து ''ஆரியம் நன்று; தமிழ் தீது'' என உரைத்தான். அங்கிருந்த ஒரு புலவர் அதனை மறுத்தார். கருத்துப்போர் நிகழ்ந்தது. ''ஆரியமொழி வாய்ச்சொல் ஒன்றாலேயே பகைவரை இறக்கச் செய்யும் மந்திரங்களைக் கொண்ட அரிய மொழி'' என்றான் குயக்கொண்டான். ''அவ்வாறாயின் அதனைச் செய்து காட்டு. . என்னிடமே அம்மொழியைச் சொல்லி நீ வெற்றிபெற்றவனாகலாம்'' என்றார் தமிழ்ப்புலவர். அவனும் அரிய மந்திர மொழி ஒன்றைச் சொல்லிப் புலவரை இறக்கச் செய்தான். இதனால் குயக்கோடன் தருக்குற்று ''என்னைத் தமிழால் இறக்கச் செய்து வெல்பவர் உளரோ'' என அறை கூவி நின்றான். மறுத்த புலவர் இறந்து கிடந்ததால் பட்டி மண்டபத்தை அடைக்க முடியாத நிலையில் தெற்குப் புற வாயிலை மட்டும் அடைத்து அறைகூவலின் அறிகுறியைக் காட்டினர். இதனை அறிந்த நக்கீரர் அறைகூவலை ஏற்று, அடைத்த வாயிலைத் திறக்கச் செய்தார். ''ஆரியம் நன்று தமிழ்தீது எனவுரைத்த'' என்று துவங்கும் வெண்பாவைப் பாடிக் குயக்கோடனை இறக்கச் செய்தார். ''முரணில் பொதியில்'' என்று துவங்கும் வெண்பாவைப் பாடி முன்னர் இறந்த புலவரை உயிர்பெற்று எழச் செய்தார்.

இப்பட்டி மன்ற நிகழ்ச்சியை
''இவை, தெற்கண் வாயில் திறவாது அடைத்த பட்டி மன்றத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாகவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின''— என்னும் தொல்காப்பிய உரைப்பகுதி காட்டுகின்றது. இது பேராசிரியர் உரைவிளக்கம்.

இவ்வாறு நிகழ்ந்ததுபற்றிய உண்மை எவ்வாறாயினும் கொள்கையை நிலைநாட்டுவதற்காகத் தம் உயிரையும் பணயமாக வைக்கவும் முன்வந்தனர் என்ற கருத்து உள்ளீடாக உளது. இக்கருத்தைத் தொடர்ந்து பட்டி மன்றத் தோல்விக்குச் சாவும் தண்டனையாக ஏற்பட்ட கருத்தும் புலப்படுகின்றது.

(அடுத்த இதழில் முடியும்)

# உயர்ந்த நெல் மகசூலுக்கு உதவுவது உரமா? சாகுபடி முறையா?



இன்று நமது நாட்டில் கடுமையான உரத்தட்டுப்பாடு நிலவி வருகிறது. இன்றைய உரத்தட்டுப்பாடு தற்காலிகமானதே, வெகு விரைவில் நிலைமை சீரடைந்து விடும் என்று எண்ணி, இதை அசட்டை செய்துவிட முடியாது. ஏனெனில், இந்த உரத் தட்டுப்பாடு இன்று உலகமெங்கும் உள்ளது. இதன் காரணமாக உரங்களைக் குறைத்து உபயோகிக்க வேண்டிய இக்கட்டான நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. உரத்தைக் குறைத்து இடுவதால் பயிரின் மகசூல் குறைந்துவிடாதா? உணவு நிலைமை மேலும் மோசமடையாதா? உணவுப் பற்றாக் குறையையும், உரப் பற்றாக் குறையையும் ஒருங்கே தீர்ப்பதற்கான வழி முறைகள் உண்டா? என்பது போன்ற பல கேள்விகள் பலரின் மனதில் தோன்றத் துவங்கியுள்ளன.

குறைந்த அளவு இரசாயன உரங்களை உபயோகித்து நிறைந்த அளவு நெல் மகசூல் பெற வழியொன்று உண்டு !

அதுதான் சரியான சாகுபடி முறைகள்! அவைகளைக் கவனமுடன் கடைப்பிடித்தால் குறைந்த அளவு உரங்களை இட்டே, உயர்ந்த அளவு மகசூல் பெறமுடியும் என்பதை நாடெங்கும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் சுட்டிக் காட்டுகின்றன. இரசாயன உரங்களின் குறைவை நிறைவு செய்ய ஒரே வழி-சரியான சாகுபடி முறைகளே!' உரத்தட்டுப்பாடு மிகுந்த இந்த நேரத்தில் உழவர்களுக்கு கை கொடுக்கக் கூடிய ஒரே வழி-ஒப்பற்ற வழி-இதுவே!

நமது உழவர்களில் அநேகர் நிறைந்த அளவு இரசாயன உரங்களைப் போட்டுவிட்டாலே போதும், உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்கள் அமோக மகசூல் தந்துவிடும் என்று நம்பி, அதற்கேற்பச் செயல் படவும் செய்தனர்.

இதன் காரணமாக 'நாற்றுகள் உற்பத்தி, சீரான உழவு, சிறந்த நடவு, தகுந்த இடைவெளி, செட்டான பாசனம், மற்றும் காலத்தில் களை எடுத்தல்' போன்ற பல்வேறு சாகுபடி முறைகளின் முக்கியத்துவம் குறைந்து விட்டன. மேலும், நாட்டு நெல் இரகங்களையே நெடுங்காலமாக சாகுபடி செய்து வந்த நமது உழவர்களுக்கு இந்தச் சாகுபடி முறைகளின் முக்கியத்துவம் முழுமையாகப்புலப்படவில்லை!

அனைத்திந்திய ஒருங்கிணைந்த அரிசி மேம்பாட்டுத் திட்டத்தின். (All India Co-ordinated Rice Improvement Project) கீழ் நாடெங்கும் நடத்தப் பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் 'சரியான சாகுபடி முறைகளின் முக்கியத்துவம்' முழுமையாகத் தெரியவருகிறது. இந்த ஆராய்ச்சிகள் நடத்தப் பட்ட பல்வேறு இடங்களில், உயர் விளைச்சல் தரும் புதிய நெல் இரகங்கள் உரமிடப் படாத வயல்களிலும்கூட ஏக்கருக்கு 2.5 டன்கள் வரை மகசூல் அளித்துள்ளன! இதனால் மிகவும் வளங்குறைந்த வயல்களில் கூட, சாகுபடி முறைகளை சரியாகக் கடைப்பிடித்தால், உரமில்லாமலே இந்த அளவுக்கு அதிக மகசூல் பெற முடியும் என்பது தெளிவாகியுள்ளது!

''மகசூலின் அளவை அதிகப் படுத்துவதில், சாகுபடி முறையின் முழுப்பங்கு என்ன?'' என்பதைத் திட்டவட்டமாக அறியும் பொருட்டு 1972-ஆம் ஆண்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பரிசோதனைகளில் பங்கேற்ற எல்லாத் தளைகளுக்கும் ஏக்கருக்கு 60 கிலோ கிராம் என்ற அளவில் தழைச்சத்து உரம் இடப்பட்டது. 'சோனா' என்ற புதிய நெல் இரகம் சாகுபடி செய்யப்பட்டது. நோய் நொடியிலிருந்தும், பூச்சி பொட்டுகளிலிருந்தும் பயிர்கள் கவனமுடன் காப்பாற்றப் பட்டன. இவ்வாறு, உரம், பயிர்ப் பாதுகாப்பு என்ற இரு அம்சங்கள் மட்டுமே போதிய அளவில், எல்லாத் தளைகளுக்கும் சமமாகத் தரப்பட்ட இந்தப் பரிசோதனையில், 'சாகுபடி முறைகள்' மட்டும் தளைக்குத்தளை வேறுபட்டன. இந்தப் பரிசோதனையில் கிடைத்த முடிவுகள் பின்வருமாறு உள்ளன.

| வரிசை எண் (1) | சாகுபடி முறைகள் (2) | ஏக்கருக்கு கிடைத்த மகசூல் (கிலோ) (3) | அதிகரித்த மகசூல் அளவு (சதம்) (4) |
|---|---|---|---|
| 1 | நாட்பட்ட நாற்றுகள்; ஆழமான நடவு; அதிகமான இடைவெளி. | 2,419 | — |
| 2 | இளம் நாற்றுகள்; ஆழமான நடவு; அதிகமான இடைவெளி. ... | 2,677 | 15 |
| 3 | நாட்பட்ட நாற்றுகள்; மேலோட்டமான (3-5 செ.மீ. ஆழம்) நடவு; அகலமான இடைவெளி .. | 3,166 | 29 |
| 4 | நாட்பட்ட நாற்றுகள்; மேலோட்டமான (3-5 செ. மீ. ஆழம்) நடவு; நெருக்கமான இடைவெளி ... | 3,301 | 37 |
| 5 | இளம் நாற்றுகள்; மேலோட்டமான (3-5 செ.மீ. ஆழம்) நடவு; அகலமான இடைவெளி ... | 3,613 | 50 |
| 6 | இளம்நாற்றுகள்; மேலோட்டமான (3-5 செ.மீ. ஆழம்) நடவு; நெருக்கமான இடைவெளி... | 4,077 | 69 |

எனவே, நெற்பயிரின் மகசூலை அதிகப்படுத்துவதற்கு உரங் களைவிட சாகுபடி முடைகளே கணிசமாக உதவுகின்றன என் பதை இந்தப் பரிசோதனை முடிவுகள் தெளிவுபடுத்துகின் றன.

சாகுபடி முறைகளைச் சரி யாகக் கடைப் பிடித்தால், மகசூலின் அளவை 69 சதம் வரை அதிகப்படுத்த முடியும் என்பதும் புலனாகின்றது. இந்தப் புதிய நெல் இரகத் திற்கு நிறைந்த அளவு உரங் களை மட்டுமே இட்டுவிட்டு, சாகுபடி முறைகளைச் சரியாக கடைப்பிடிக்காவிடில், ஏக்க ருக்கு 1.5 டன் வரையில் மகசூல் இழப்பு ஏற்படக்கூடும்!

ஒரு நெல் இரகத்திற்கு இட வேண்டிய இரசாயன உரங் களின் அளவு, அந்த இரகத் தின் உற்பத்தி திறனைப் பொருத்து நிர்ணயம் செய்யப் படுகிறது. நாட்டு நெல் இர கங்களுக்கு அதிக அளவு இரசா யன உரங்களை இடுவதில் பயனே இல்லை! ஏனெனில், இடுகின்ற எல்லா உரங்களை யும் ஏற்று உயர்ந்த மகசூல் தரும் ஆற்றல் அவைகளுக் இல்லை! ஆனால், உயர்விளைச்சல் தரும் புதிய நெல் இரகங் களுக்கு, எவ்வளவுக் கெவ் வளவு அதிகமாக உரமிடுகின் றோமோ அவ்வளவுக்கவ்வளவு அவைகள் அதிக மகசூல் தரக் கூடியவைகள்!



ஒரு கிலோகிராம் தழைச் சத்து உரத்திற்கு 30 கிலோ கிராம் என்ற அளவில் உயர் விளைச்சல் தரும் புதிய இரகங் கள் கூடுதல் மகசூல் கொடுத் துள்ளன. இதன் காரண மாகவே, இப்புதிய நெல் இரகங்களுக்கு ஏக்கருக்கு 50 முதல் 75 கிலோகிராம் என்ற அளவில் தழைச்சத்து உரங்களை இடுமாறு பரிந்துரைக்கப் பட் டது. ஆனால் அதே நேரத்தில் அமோக மகசூல் பெற, அதிக உரத்தோடு, சரியான சாகுபடி முறைகளும் அவசியம்!'' என்ற உண்மையை உணர்ந்து செயல் படத் தவறி விட்டோம். பல இடங்களில், அதிக அளவு இர சாயன உரங்களை இட்டபோதி லும், சாகுபடி முறைகளைச் சரி வர கடைபிடிக்காத ஒரே கார




# வருமுன் காப்போம்



சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள புற்று நோய்ப் பிரிவுக்குள் நுழைகிறோம்.

பரிசோதனைக்காகவும், சிகிச்சைக்காகவும் ஆண்களும் பெண்களும் குழுமியிருக்கின்றனர்.

சென்னையிலிருந்தும், தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்தும் வந்துள்ள அவர்களுக்குத்தான் எத்தனை வகை நோய்கள்!

பார்க்கப் பரிதாபமாய்க் காட்சியளிக்கும் அவர்களைப் பரிவுடன் அழைத்து விசாரிக்கிறார் ஒரு சமூக சேவகி. பிறகு அவரை மருத்துவர்கள் பரிசோதிக்கின்றனர். பரிசோதனைக்குப் பிறகு அவர்கள் சிகிச்சைக்கு அனுப்பப்படுகின்றனர்.

அரசினர் பொது மருத்துவ மனையில், 1920-லேயே புற்று நோய்க்கான சிகிச்சை தொடங்கப்பட்டது என்பதை நாம் பெருமையோடு சொல்ல வேண்டும்.

1895-ஆம் ஆண்டில் ராண்ட்ஜன் என்னும் விஞ்ஞானியால் எக்ஸ்ரே கண்டுபிடிக்கப்பட்டது. 1900-ஆம் ஆண்டில் முதன் முதலாக எக்ஸ்ரே மூலம் புற்றுநோயைக் குணப்படுத்தலாம் என்று உலக நாடுகள் முன்வந்தன; 1934-ல் நவீன வசதிகளுடன் கூடிய பெர்னார்டு கதிரியல் புற்று நோய்க் கழகம் (Barnard Institute of Radiology and Cancer) ஒன்று இந்த மருத்துவ மனையில் துவக்கப்பட்டது. பெர்னார்டு என்பவர் இத்துறைக்காகப் பாடுபட்ட ஒரு கதிரியல் பௌதிகத்துறை நிபுணர். அவர் நினைவாக இக்கழகம் இன்றளவும் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

அரசினர் பொது மருத்துவ மனையில் உள்ள இந்தப் புற்று நோய்ப் பிரிவுதான் (Cancer unit), தென்கிழக்கு ஆசியாவிலேயே புற்றுநோய்க்கான சிகிச்சையினை வழங்கும் நிலையங்களில் முன்னோடியாகத் திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இங்குக் குறிப்பிட வேண்டும்.

நோய் என்றாலேயே நம் மனம் அமைதி இழந்து தவிக்கின்றது. அதிலும் கொடிய நோய்கள் நம்மைப் பாதிக்கும் போதோ மனம் மேலும் கலக்கமடைகிறது; தெளிவில்லாமல் அல்லல்படுகிறது. முற்றிலும் நம் மன நிலையை-அமைதியைப் பாதிக்கும் நோய்களில் இந்தப் புற்றுநோயும் ஒன்று என்று கூறலாம். இந்நோய் எப்படி வருகிறது?

உடம்பிலுள்ள திசுக்கள் எல்லாம் உயிரணுக்களால் ஆகியவை. உயிரணுக்களின் முக்கியமான இயல்பு ஒவ்வொன்றும் இரண்டாகப் பிரிந்து பெருகுவதாகும். உடம்பின் எல்லாப் பாகங்களிலும் உயிரணுக்கள் பிரிந்து புதிய அணுக்கள் தோன்றுவது இடைவிடாமல் நடக்கின்றது. பொதுவாக இவ்வாறு நடப்பது உடம்பின் வளர்ச்சிக்காக இறந்துபோன உயிரணுக்களுக்குப் பதிலாக வேண்டியிருப்பதற்காகவே. ஆயினும் சில சமயம் எந்தத் திசுவிலேனும் காயம் ஏற்பட்டால், அங்குள்ள உயிரணுக்கள் தசையில் ஏற்பட்ட பழுது நீங்கும்வரை விரைவில் பெருகும். பிறகு பழுது நீங்கிய பின்னர் முன்போலவே பெருகும்.

சிலருடைய உடம்பில் திடீரென்று உயிரணுக்கள் இந்தக் கட்டுப்பாடின்றிப் பெருகத் தொடங்கும். இவற்றால் தசையோ, எலும்போ உண்டாவதில்லை. இவ்வாறு நடப்பதால் உடம்புக்கு எவ்விதப் பயனும் ஏற்படுவதில்லை. இவை வெகு விரைவில் பெருகி ஒரு பயனற்ற கழலையாக (Tumour) ஆகும்.

சில கழலைகள், தாம், தோன்றிய இடத்திலேயே இருக்கும். அவை பெரியவாக வளர்ந்து பிற உறுப்புக்களை அழுத்திய போதிலும் தீங்கு செய்வதில்லை. அதனால் அவற்றைக் 'கொடுமையற்ற கழலைகள்' என்று கூறுவர்.

சில கழலைகள் தோன்றிய உறுப்புக்குத் தீமை விளைவிப்பதுடன், பிற உறுப்புகளுக்கும் பரவி, அங்கும் புதிதாகக் கழலைகள் தோன்றச் செய்து தீமை விளைக்கும். இவற்றைக் 'கொடுமையான கழலைகள்' அல்லது 'புற்றுக்கள்' என்பர்.

இந்த இரண்டு வகைக் கழலைகளில் எது ஏற்பட்டாலும்



ணத்திஞல், உயர்விளேச்சல் தரும் நெல் இரகங்கள் அதிக மகசூல் தர மறுத்து விட்டன.

உண்மையைச் சொல்லப் போனுல், அதிக அளவு இரசாயன உரங்களே இட்டு அமோக மகசூல் பெறுவதற்கு ஏற்ற 'சரியான சாகுபடி முறைகள்' இன்று நம்மிடம் இல்லே! அதற்கு மாருக, தற்சமயம் பரிந்துரை செய்யப்படும் உர அளவுகளில், பாதியளவு உரத்தின் உற்பத்தி திறனே மட்டுமே மகசூலாக மாற்றக் கூடிய சாகுபடி முறைகளே இன்று நம்வசம் உள்ளன! ஆகவே, மிகச் சிறந்த சாகுபடி முறைகளே நடைமுறைக்கு கொண்டு வராத வரையில், நமது பயிர்களுக்கு அதிக அளவு இரசாயன உரங்களே இடுவதில் பொருளேயில்லே!

அனேந்திந்திய ஒருங்கிணேந்த அரிசி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பல்வேறு பருவங்களில் நாடெங்கும் நடத்தப்பட்ட பரிசோதனேகள் இந்த உண்மையை, 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல்' தெள்ளத் தெளி வாக்கியுள்ளன!

கோவையிலும், ஆடுதுறையிலும் அனேத்திந்திய ஒருங்கிணேந்த அரிசி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நடத்தப் பெற்ற பரிசோதனேகளின் முடிவுகள் பின் வருமாறு உள்ளன.

| பருவம், மற்றும் நெல் இரகம். (1) | பரிசோதனே நடைபெற்ற இடம் (2) | எக்டேருக்குக் கிடைத்த மகசூல் (கிலோகிராம்): உரமிடப் படாத தனே (3) | எக்டேருக்குக் கிடைத்த மகசூல் (கிலோகிராம்): எக்டேருக்கு 50 கி.கி. தழைச்சத்து இடப்பட்ட தனே (4) | எக்டேருக்குக் கிடைத்த மகசூல் (கிலோகிராம்): அதிகபட்சமாக கிடைத்த மகசூல் (5) | அதிகபட்ச மகசூலேப் பெற இடப் பட்ட உரத்தின் அளவு தழைச்சத்து (6) | $\frac{4}{5}\times 100$ (சதவிதம்) (7) |
|---|---|---|---|---|---|---|
| 1968 முன் பருவம் ஐ.ஆர். 8 | கோவை | 2,841 | 4,062 | 6,146 | 200 | 66.09 |
| 1969 முன் பருவம் ஐ.ஆர். 8 | கோவை | 4,126 | 4,745 | 6,318 | 200 | 75.11 |
| ஜெயா | கோவை | 3,999 | 4,745 | 5,441 | 200 | 79.86 |
| 1970 முன் பருவம் ஜெயா | கோவை | 4,318 | 5,253 | 6,550 | 200 | 80.19 |
| 1971 முன் பருவம் ஜெயா | கோவை | 4,592 | 5,166 | 6,795 | 150 | 76.02 |
| | ஆடுதுறை | 2,091 | 2,211 | 3,504 | 200 | 61.72 |
| விஜயா | கோவை | 3,318 | 4,439 | 6,288 | 150 | 70.91 |
| | ஆடுதுறை | 1,770 | 2,251 | 3,504 | 200 | 64.24 |
| ஐ.ஆர். 20 | கோவை | 3,858 | 4,526 | 5,981 | 200 | 75.67 |
| | ஆடுதுறை | 2,285 | 3,060 | 4,253 | 100 | 71.04 |
| ரத்ஞ | கோவை | 3,326 | 4,099 | 5,880 | 200 | 69.71 |
| | ஆடுதுறை | 4,331 | 4,378 | 4,558 | 100 | 96.08 |
| காவேரி | கோவை | 2,521 | 3,494 | 5,006 | 200 | 69.79 |
| | ஆடுதுறை | 3,328 | 3,820 | 3,820 | 50 | 100.00 |

மேற்கண்ட அட்டவணேயிலிருந்து உரத்தின் அளவை ஒன்றுக்குப் பாதியாக குறைத்து இட்டபோதிலும், மகசூலில் குறைவு சராசரியாக 20 சதவீதத்திற்கு மேல் போகவில்லே என்பது தெளிவாகிறது. இன்னும் விரிவாகச் சொல்லப் போனுல், தற்சமயம் பரிந்துரை செய்யப்படும், உர அளவில் 30 முதல் 50 சதவிதம் மட்டுமே உபயோகித்து, பயிரின் உற்பத்தித் திறனில் 80 சதவிதம் மகசூலே அறுவடை செய்ய முடியும் என்பதும் புலனுகின்றது. இந்தப் பரிசோதனே முடிவுகளேப் பார்க்கும்போது புதிய உயர் விளேச்சல் தரும் நெல் இரகங்களுக்கு ஏக்கருக்கு 20 கிலோ கிராம் (எக்டேருக்கு 50 கிலோ கிராம்) என்ற அளவில் தழைச்சத்து உரமிடுவதே மிகவும் இலாபகரமானதாகும் என்பது உறுதியாகி உள்ளது.

உரப்பற்ருக்குறை மிகுந்த இந்த நேரத்தில், உரம் உபயோகிப்பதில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது உழவர்களின் தலேயாய கடமை! எனவே, உரங்களேக் குறைத்து இட்டு, சாகுபடி முறைகளேச் சிறப்பாகச் செய்து மகசூலேக் கணிசமான அளவில் பெருக்கும்படி, தமிழக உழவர் பெருமக்களேக் கேட்டுக்கொள்கின்ருேம்.

—கே. எஸ். சண்முகம்,
—கே. எஸ். வேலாயுதம்

(குறிப்பு: இக்கட்டுரை அனேத்திந்திய ஒருங்கிணேந்த அரிசி மேம்பாட்டுத் திட்ட இணேப்பாளர் டாக்டர் எஸ்.வி. சாஸ்திரி அவர்களின் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்ட கட்டுரையில் ஒரு சில பகுதியாகும்.)



# தமிழர் எங்கள் உடன்பிறப்புகள்!



"கருப்பர் இனத்தவரும், தென்னிந்தியர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். தென்னிந்தியாவில் வாழும் தமிழர்கள் எங்கள் சகோதரர்கள்"

இப்படிச் சொன்னவர் யார் தெரியுமா? தமிழ்நாட்டு அறிஞர் அல்ல. செனிகல் என்ற ஆப்பிரிக்க நாட்டின் அதிபர் திரு செங்கூர் அவர்கள்!

38 இலட்சம் மக்களேக் கொண்டதும், 1960-ஆம் ஆண்டில் விடுதலே பெற்றதுமான 'செனிகல்' என்ற ஆப்பிரிக்க நாட்டின் அதிபர் திரு செங்கூர் அவர்கள் அண்மையில் சென்னே வந்திருந்தார்.

அவருக்குச் சென்னேயில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் சென்னே ராஜாஜி மண்டபத்தில் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

விழாவில் திரு செங்கூர் அவர்களுக்கு அமைச்சர் திரு. க. ராசாராம் அவர்கள் மாலே அணிவித்தார். தமிழ் ஆராய்ச்சிக் கழகச் சார்பில் பொன்ஞடை போர்த்தப்பட்டது.

திராவிட நாகரிகம் குறித்தும், மொழிகள் குறித்தும் திரு. செங்கூர் அவர்கள் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிருர். இந்த ஆராய்ச்சி குறித்து அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

"தென் ஆப்பிரிக்காவுக்கும், தென் இந்தியாவுக்கும், பல்வேறு விதங்களில் ஒற்றுமை இருக்கிறது. பூகோள-சரித்திர பின்னணிகள், இந்த இரண்டுக்கும் ஒரே விதமாக இருப்பதை நாம் காண்கிருேம்.

"திராவிடர்களின் பூர்வீகம் என்ன என்பது இன்னும் புரியாத புதிராக இருக்கிறது. ஆனுல், தென் இந்தியாவில் உள்ள திராவிட இனத்துக்கும், தென் ஆப்பிரிக்காவில் உள்ள எங்கள் இனத்துக்கும் ஒரே இரத்தம் என்ருல் அது மிகையாகாது! திராவிடர்கள் எங்கள் உடன் பிறப்புக்கள்!

"தென் இந்தியாவும், ஆப்பிரிக்காவும், முன்பு ஒரே நிலப் பரப்பாக இணேந்து இருந்தன என்றும், கால வெள்ளத்தில் இது இந்து மகா சமுத்திரத்தால் பிரிக்கப்பட்டு விட்டதாகவும் ஒருசில சரித்திர ஆசிரியர்கள் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும்.

"தமிழ், தெலுங்கு, மலேயாளம் போன்ற மொழிகளில் உள்ள பல சொற்கள் ஆப்பிரிக்க மொழிகளில் இருக்கின்றன. எனவே, மொழி, கலே, கலாசாரம் ஆகியவற்றிலும் நாம் ஒன்றுபட்டவர்கள்.

"நாம் கறுப்பர்களாக இருப்பது குறித்து வெட்கப்படத் தேவை இல்லே. நம்முடைய பழம் பெரும் நாகரிகம் குறித்துப் பெருமைப்படலாம். நாம் இந்த உலகின் மூத்த குடிகள். நாகரிகத்தை முதலில் உண்டாக்கியவர்கள். இது குறித்து நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்."

பிறகு கலேவாணர் அரங்கத்தில் நடந்த கலே நிகழ்ச்சியில் திரு செங்கூர் அவர்கள் கலந்து கொண்டார். பரதநாட்டியம் போன்ற கலே நிகழ்ச்சிகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன. அவரைக் கவர்ந்த மற்றவை: இங்குள்ள எழில்மிகு சிற்பங்கள், கண்கவர் ஓவியங்கள் முதலியன அவரைக் கவர்ந்தன. 'இந்திய நாட்டின் கலே, கலாசாரம் என்னே மிகவும் கவர்ந்து விட்டது' என்று பார்வையாளர் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

கிண்டி இராசபவனத்தில் மொழி அறிஞர்களே வரவழைத்து மொழியைப் பற்றி இரண்டுமணி நேரம் அவர்களோடு அளவளாவிஞர்.

திராவிட மொழிகளேப்பற்றி அறிந்து கொள்வதில் செங்கூர் அதிக ஆர்வம் காட்டிஞர்.

உலகத் தமிழ் மாநாடு பற்றிக் கேட்டு அறிந்த அவர், அடுத்த உலகத் தமிழ் மாநாட்டை செனகல் நாட்டில் நடத்தும்படி அழைப்பு விடுத்தார்.

1976-ஆம் ஆண்டு நைஜீரியா நாட்டில் நடக்கவிருக்கும் ஆப்பிரிக்கக் கலேவிழா மாநாடு முதலானவற்றுக்குத் தென் இந்தியாவின் பிரதிநிதிகள் வந்து கலந்து கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளேயும் அவர் விடுத்தார். தன்னுடைய மக்களில் ஒருவரை இந்திய ஆப்பிரிக்கத் தத்துவங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும்படிச் செய்திருப்பதாகத் திரு செங்கூர் கூறிஞர்.

மகரயாழ், பஞ்சமுக வாத்தியம் முதலிய பண்டைய திராவிடர் இசைக் கருவிகள் இசைக்கப்பட்டதை அவர் கேட்டு மகிழ்ந்தார்.

'திராவிட மொழிகளுக்கும், ஆப்பிரிக்க மொழிகளுக்குமிடையே உள்ள ஒப்புவமைகள் பற்றி ஆராய்ந்து அறியப்பட வேண்டும். இதில் வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன' என்று திரு செங்கூர் கருத்துத் தெரிவித்தார். ஆசிய ஆப்பிரிக்க நல்லுறவை நிலேநாட்டும் நல்லுறவுத்தளமாக இந்தியா அமைய வேண்டுமென்றும் அவர் தமது அவாவை வெளிப்படுத்திஞர்.



கதிரியக்க 'ஐசோடோப்' சிகிச்சைக்குப் பயன் படும் நூதன எலக்ட்ரானிக் கருவிகள்.

தொடக்கத்திலேயே சிகிச்சை செய்வதாயின், கழலையை அறுத்து நீக்கிவிடலாம்; அல்லது எக்ஸ்-கதிர் சிகிச்சை அல்லது ரேடியம் சிகிச்சை செய்து குணப்படுத்தலாம். ஆனால் கொடுமையான கழலையாகிய புற்று என்பது உடலில் உயிருக்கு அவசியமாயில்லாத உறுப்பில் உண்டாகுமாயினும், சிகிச்சை செய்யாவிடின் உயிருக்கு அவ்சியமான உறுப்புகளுக்கும் பரவி,இறப்புக்கு வழி செய்துவிடும். கொடுமையான கழலையும் கொடுமையற்றது போல முதலில் ஓர் இடத்திலேயே வளர்கின்றது. அதனால் காலத்தில் சிகிச்சை செய்தால் அதை நீக்கிக் குணப்படுத்திவிடலாம் என்பதை நினைவில் வைத்தல் இன்றியமையாததாகும்.

இந்த நோய் பெரும்பாலும் வயதானவர்களுக்கே வருகின்றது. உடம்பில் இரசாயனச் செயல் மிகுதியாக நடைபெறும் வயிறு, பெண்ணின் பிறப்புறுப்புப் போன்ற இடங்களிலேயே மிகுதியாகத் தோன்றுகிறது. சிலர் உடம்பில் சில பகுதிகளில் ஏதேனும் உராய்தலோ அல்லது உறுத்தலோ ஏற்பட்டால் அந்தப் பகுதிகளில் புற்றுநோய் உண்டாகலாம் என்று தெரிகிறது.

புகைக்கரி (Soot), தார்ப் பொருள்கள், கதிரியக்கப் பொருள்கள் (Radio-active materials) போன்ற சில பொருள்கள் புற்றுநோய் வளர்வதற்கு உதவி செய்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் சில முக்கியமாக நுரையீரலையே தாக்குகின்றன. அவற்றுள் தாது எண்ணெய் ஆவி, குரோமேட்டுத் தூள், கதிரியக்கத் தூள், ரேடியக் கதிர்கள் ஆகியவை அடங்கும்.

ஆயினும், புற்றுக்களில் பெரும்பாலானவை காலத்தில் கண்டு சிகிச்சை செய்தால் குணப்படுத்தக் கூடியவை என்பது மிகவும் முக்கியமான விஷயமாகும். புற்று என்பதற்குரிய குறிகளைக் கண்டதும் உடல் நலமாகவே தோன்றினாலும், மருத்துவரிடம் போய்க் காட்ட வேண்டும்.

புற்று நோய்க்குரிய குறிகளாவன:

1. மார்பிலும் மற்ற பாகங்களிலும் வலியில்லாத கட்டி அல்லது தசைத்தடிப்பு ஏற்படுதல்.

2. நாக்கு, கன்னம், உதடு ஆகிய இடங்களில் இரணம் இரண்டு மூன்று வாரங்கள் ஆறுமல் நீடித்தல்.

3. தொண்டைக் கம்மல் சில வாரங்கள் நீடித்தல்; உணவுக்குழாயில் தண்ணீர், உணவு சாப்பிடத் தடைப்படுதல்.

4. உடலின் முக்கிய துவாரங்கள் எதிலாவது அதிக இரத்தக் கசிவு காணுதல்.

5. விடாத அிரணம்.

6. மலப்போக்கில் காரணம் கூறமுடியாத மாறுதல்கள்.



கருப்பைப் புற்றுநோய்க்குக் கோபால்ட் கதிர் வீச்சுச் சிகிச்சை.

7. காரணம் கூறமுடியாத விதத்தில் உடம்பின் நிறை குறைதல்.

8. மரு இருந்தால் அதன் நிறமோ அளவோ மாறுதல்.

இந்த அறிகுறிதோன்றினால், காலத்தாமதம் செய்யாமல் உடனே மருத்துவரைப் பார்க்க வேண்டும்.



சிகிச்சைக்கு முன்னும் பின்னும்.



சிகிச்சைக்கு முன்னும் பின்னும்.

புற்றுநோய், அத்தைப் பாட்டி மருத்துவத்தால் குணமாகிவிடாது; மந்திர, கவச, தாயத்துக்களால் நீங்கிவிடாது. 'ஜல' வைத்தியத்தாலோ, உணவுப் பத்தியங்களாலோ இதனை ஓட்டிவிட முடியாது; விளம்பரம் செய்யப்படும் 'வாப்பிசாசு' முறைகளாலும் இதற்கு வழி காணமுடியாது.

மருத்துவர் ஒருவரால்தான் உடலில் தோன்றும் கட்டியானது புற்று நோயா இல்லையா என்று கூறமுடியும்; மருத்துவரால் மட்டுமே புற்று நோயைக் குணப்படுத்த முடியும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இராமங்களில், பட்டி தொட்டிகளில் உள்ள ஏழை எளியவர்கள் வருமுன் காக்கத் தவறி, வந்தபின் மனம் நொந்து பட்டணம் வருகின்றனர்-கெட்டுப் பட்டணம் சேர் என்பது போல!

இவர்களுக்கெல்லாம் ஒன்று சொல்ல வேண்டும்.

உங்களுக்காக-ஏழை எளியவர்களுக்காக - இலவசமாகச் சிகிச்சையளிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது, 'அரசினர் பொது மருத்துவமனை' (Govt. General Hospital). இந்த வாய்ப்பை, வசதியை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா?

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்கிறோம். அந்தச் செல்வத்தைப் பெறுதவர்கள் நோய் கண்டவுடனேயே-நோய் என்று சந்தேகித்தவுடனேயே மருத்துவரை நாடுவது மிக மிக அவசியம் என்பதை நாம் உணர வேண்டும்.

எல்லா நவீன இயந்திரச் சாதனங்களும் உள்ள இந்தப் புற்றுநோய்ப் பிரிவுக்கு, ஒரு நாளைக்குச் சுமார் 150 நோயாளிகள் வருகின்றனர். அவ்வாறு வரும் நோயாளிகளில் 100-க்கு 98 பேர் இலவசமாகவே சிகிச்சை பெற்றுத் திரும்புகின்றனர். இப்பிரிவில் வெளிப்புற நோயாளிகள் பகுதியும், உட்புற நோயாளிகள் பகுதியும் இருக்கின்றன.

புற்றுநோய் புறமுதுகிட்டு ஓடிட இங்குக் கதிர்வீச்சு இயந்திரச் சாதனங்கள் மூலம் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. அவை. 1. கோபால்ட் சிகிச்சை, 2. 'சீசியம்' சிகிச்சை 3. ரேடியம் சிகிச்சை, இவை

113

# அரசு ஊழியர்களுக்கு அரிய விற்பனை நிலையம்!



தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் இப்போது புதிதாக ஒரு விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

முதல்வர் கலைஞர் அவர்களின் பொன் விழாவின் போது துவக்கப்பட்ட இது, தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறுத ஊழியர்களுக்காக மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

தமிழ்நாடு நுகர் பொருள் வர்த்தக நிறுவனத்தின் (Civil Supplies Corporation Ltd.) சார்பில் துவக்கப்பட்டுள்ள இது, தரமான பொருள்களை, நியாயமான விலையில் வழங்கி வருகிறது.

இந் நிறுவனத்தின் சார்பில் அரசு ஊழியர்களுக்காகத் துவக்கப் படும் முதல் விற்பனை நிலையம் இதுவேயாகும். பிறகு சேப்பாக்கத்திலுள்ள எழிலகத்திலும், நுங்கம்பாக்கத்திலுள்ள கல்வித் துறையிலும், சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலும் இதுபோன்ற விற்பனை நிலையங்கள் விரைவில் துவக்கப்படவிருக்கின்றன.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்களான அரிசி, பருப்பு வகைகள், மிளகாய், புளி, கோதுமை, ரவா, மைதா, ஆட்டா, சர்க்கரை, எண்ணெய், சோப்பு வகைகள், குழந்தை உணவு, தேயிலை, பிஸ்கோத் முதலான பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. துணி, பற்பசை போன்ற மேலும் பல வகையான பொருள்கள் இங்கு விரைவில் விற்பனைக்கு வரவிருக்கின்றன.

காலை 9-30 மணிக்குத் தொடங்கி 1 மணி வரையிலும், பிற்பகல் 2 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரையிலும் இந்த நிலையம் திறந்திருக்கும்.

இதுவரை சுமார் 2,000 அரசிதழ் பதிவுபெறு தலைமைச் செயலக ஊழியர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டுள்ளார்கள். இந்த நிலையத்தில் உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்ள விரும்பும் ஊழியர்கள், முதலில் தங்கள் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டையை (Ration Card) இங்கே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்து கொண்ட ஊழியர்கள், குறிப்பிட்ட நேரங்களில் வந்து இங்கே பொருள்களை வாங்கிய வண்ணமுள்ளனர். தரமான பொருள்கள் என்றால் கூட்டம் வராமலா இருக்கும்?

அரசு ஊழியர்களுக்காகத் திறக்கப்பட்டுள்ள இந்த விற்பனை நிலையம் நிறைந்த வசதிகளுடன் திகழ்கிறது; ஊழியர்கள் தாமதமின்றிப் பொருள்களை வாங்கிச் செல்வதற்கு உதவியாக ஒரு மேலாளரும், நான்கு எழுத்தர்களும், நான்கு 'பேக்கர்'களும் இங்கே பணிபுரிகின்றனர்.

இந்த விற்பனை நிலையத்துக்கு நல்ல வரவேற்பு இருப்பதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிடுதல் வேண்டும்.

—பி.வி.ஜி.



# 'சேமிப்பு'

## சிறந்த பழக்கம்!
## திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**



# காயிதேமில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி

'எல்லார்க்கும் கல்வி-இலவசக் கல்வி' என்ற சீரிய திட்டத்தின்கீழ் தமிழக அரசு புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கத் திட்டமிட்டு அதனைச் சிறப்புற-எல்லாரும் பாராட்டுகின்ற வகையில் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்தின்கீழ், ஆண்டுக்காண்டு ஆங்காங்கு புதுப் புதுக் கல்லூரிகள் பல தோற்றுவிக்கப்பட்டும் வருகின்றன. அவற்றுள் சென்னை அண்ணாசாலையில் அமையப் பெற்றுள்ள 'காயிதேமில்லத்' அரசினர் மகளிர் கலைக் கல்லூரியும் ஒன்றாகும்.

அண்ணா சாலையில் முன்னர் செயல்பட்டு வந்து கொண்டிருந்த அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரிதான் இப்பொழுது காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரியாக மாற்றப்பட்டுள்ளது. இந்த இடத்தில் நடைபெற்று வந்த ஆண்கள் கலைக் கல்லூரியைச் சென்னை நந்தனத்தில் சில ஆண்டுகளாய் இயங்கி வந்த அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரியுடன் இணைத்து விட்டனர். இப்பொழுது அதே இடத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய அரசினர் மகளிர் கலைக் கல்லூரி இந்த ஆண்டு 1974 ஜூன் திங்களிலிருந்து செயல்படத் துவங்கியுள்ளது.




1918-ல் சென்னையின் ஆளுநராக இருந்த லார்டு பென்ட்லண்டு வித் என்பவரால் இந்தக் கல்லூரி நிறுவப்பெற்றது. அப்பொழுது கல்லூரிக்குத் தேவையான கட்டட வசதி போதிய அளவு இல்லாததால் 1934-ஆம் ஆண்டு வரையில் இக்கல்லூரி 'மதரசே ஆசம்' என்னும் பள்ளியின் கட்டடத்திலே நடைபெற்று வந்தது. கட்டடம் கட்டி முடிந்ததும் 1934-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அப்பொழுது சென்னை ஆளுநராயிருந்த எர்ஸ்கின் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. தற்பொழுதுள்ள புதிய கட்டடங்கள் 1948-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் முடிவுற்றன. இக்கல்லூரியில் 80-க்கு மேற்பட்ட அறைகள் அமைந்துள்ளன. ஒரு கலை அரங்கமும் (Auditorium) அமைக்கப்பெற்றுள்ளது.

அட்டை சொல்லும் கட்டுரை

1948-49-ல் சென்னை மாநிலக் கல்லூரியிலிருந்து இடைநிலை வகுப்பு (Intermediate) இக்கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரி, துவக்கத்தில் 'அரசினர் முகமதியர் கல்லூரி' என்ற பெயரினைக் கொண்டிருந்தது. பின்னர் இது அரசினர் கலைக் கல்லூரி என மாற்றப்பட்டது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் இக்கல்லூரி ஆண்கள் கல்லூரியாகப் புகுமுக வகுப்பு கலை இயல், அறிவியல் (B. A., and B.Sc.,) போன்ற பட்ட வகுப்புகளுடன் செயல்பட்டு வந்தது. இக்கல்லூரியை மகளிர் கலைக் கல்லூரியாக மாற்றிடலாம் என்கின்ற கருத்து பரவலாக எழுந்ததால் அரசு அதனை நன்கு ஆய்வு செய்து, மகளிர் கல்லூரியாக மாற்றிடத் தீர்மானித்தது. எனவேதான், இந்த ஆண்டு-1974 ஜூன் திங்களிலிருந்து 'காயிதே-மில்லத்' அரசினர் மகளிர் கலைக் கல்லூரியாகச் செயல்படத் துவங்கியுள்ளது.

தற்பொழுது துவக்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் இந்த ஆண்டு புகுமுக வகுப்பும், முதலாம் ஆண்டு கலையியல், அறிவியல் போன்ற பட்ட வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆண்கள் கல்லூரி மகளிர் கல்லூரியாக மாற்றப்பட்டதற்குப் போதிய அளவில் விளம்பரம் இல்லையென்றாலும் கல்லூரியில் சேருவதற்கென வந்து கொண்டிருந்த மாணவியரின் தொகைக்கு அளவே இல்லை.

தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள புகுமுக வகுப்பில் சுமார் 540 மாணவியரும் முதலாம் ஆண்டு அறிவியல், கலையியல் போன்ற பட்ட வகுப்புகளில் சுமார் 175 மாணவியரும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றைப் பயிற்று மொழிகளாகக் கொண்டவராவர்.


ஒளிச் சோதனையில் இயல்பியல் மாணவிகள்.


இயல்பியல் ஆய்வுக் கூடத்தில் 'கோல்ராஸ்ச் பிரிட்ஜ்' சோதனையில்.

பயிற்று மொழி தவிர்த்து, முன்னர் இக்கல்லூரியில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சமஸ்கிருதம், உருது, அராபிக் போன்ற மொழிகள்-முதல் பிரிவு மொழிகளாக- (Part I Language) தாய்மொழிகளாகப் பயிற்றுவிக்கப்பட்டு வந்தன. புதிதாகத் தொடங்கப்பெற்றுள்ள இக்கல்லூரியில் தற்பொழுது முதல்பிரிவு மொழியாகத் தமிழும் உருதும் இடம் பெற்றுள்ளன. பிறமொழிகள் விரைவில் பயிற்றுவிக்கப்படும்.

புத்தகப் படிப்போடு மட்டும் நிறுத்திவிட்டால் போதாதல்லவா? படித்தவைகள் பலவற்றைச் சோதனைகள் மூலம் தெரிந்து கொள்ளுதல் பெரிதும் பயன்தரும். எனவேதான் இக்கல்லூரியில் அறிவியல் துறையில்-ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி ஆய்வுக்கூடங்கள் (Laboratories) உள்ளன. இயல்பியல், வேதியல், உயிரியல் போன்ற துறைகளின் ஆய்வுக்கூடங்கள் சிறந்த முறையில் அமைந்துள்ளன. இக்கல்லூரியில் வேதியல் துறைக்கென உள்ள ஆய்வுக்கூடம் மிகப் பெரிய அளவில் அமைந்துள்ள ஆய்வுக்கூடம் மட்டுமின்றிப் பட்டமேற்படிப்புக்கும் பயன்படத்தக்க வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எல்லா ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்படத்தக்க வகையில் பொது நூல் நிலையம் ஒன்று உள்ளது. ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்களில் இந்நூலகம் இயங்கிக் கொண்டிருக்கும். இதில் பாட நூல்கள், இலக்கிய நூல்கள் போன்றவைகளுடன் மாணவியரின் பொது அறிவை வளர்ப்பதற்குரிய செய்தித்தாள்கள், வார, மாத இதழ்களும் உள்ளன. இந்நூலகம் தவிர 'துறை நூலகம்' என்று ஒவ்வொரு துறைக்கும் தனித் தனி நூலகம் உள்ளது. அந்தந்தத் 'துறைப் பேராசிரியர்களின் பொறுப்பில் இது இயங்கும்.

பொது நூலகத்திலிருந்தும் துறை நூலகத்திலிருந்தும் பாடநூல்கள் கிடைக்கும். தேவையான மாணவர்கள் நூலகத்திலிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒரு பாடத்தில் ஒரு நூல்தான் ஒரு நேரத்தில் தரப்படும். மாணவர்கள் இந்நூல்களைக் கல்வியாண்டின் இறுதி வரை வைத்துக் கொள்ளலாம். ஆனால் நூலகத்திற்குத் தேவைப்படும்போது அவற்றை அவர்கள் கொடுத்துவிட வேண்டும்.

இக்கல்லூரி ஆண்கள் கல்லூரியாக இருந்தபோது கல்லூரி எல்லைக்குள்ளேயே 'உம்தா பாக்' விடுதி (எழிற்பூங்கா இல்லம்) என்னும் பெயரில் மாணவர் இல்லம் ஒன்று இருந்தது. கல்லூரி முதல்வரையே விடுதிக் காப்பாளராகக் கொண்டுள்ள இதில் இக்கல்லூரியைச் சார்ந்த மாணவர்களுக்கு மட்டுமே இடம் தரப்பட்டன. ஆனால் இது தற்பொழுது மகளிர் கல்லூரியாக மார்றப்பட்டுவிட்டதால் இங்குப் பயிலும் வெளியூர் மாணவியருக்கு விடுதி வசதி செய்து தரப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே இதே கட்டடம் நன்கு புதுப்பிக்கப்பட்டு இன்னும் இவ் விடுதி ஓரிரு மாதங்களில் செயல்பட உள்ளது.

கல்வி பயிலும் மாணவியர் நோயற்ற வாழ்வு வாழ்கின்ற வகையில் இக்கல்லூரியில் ஒரு மருத்துவ அலுவலர் இருப்பார். எளிய மருந்துகள் கட்டணமின்றி மாணவியர்க்கு வழங்கப்படும்.

இத்தகைய சிறப்புக்களுடன் விளங்கும் இந்த மகளிர் கலைக் கல்லூரிக்கு, மறைந்த இஸ்லாமியத் தலைவர் 'காயிதே மில்லத்' அவர்களை நினைவு கூரும் வகையில்-அவரின் பெயரினைத் தமிழக அரசு சூட்டிப் பெருமைப் படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

—ஆயிரம்


மின்ம இயக்கச் (Electronic) சோதனையில் ஈடுபட்டுள்ள மாணவியர்.


கல்லூரியின் எழில் தோற்றம்.

பதிவு எண். M. 8676




குடும்பநலத்துறை, தமிழ்நாடு அரசு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.






# சமுகப் பாதுகாப்புத் திட்டம் மலரும்



மாவட்ட ஆட்சியாளர் —
காவல் துறை அதிகாரிகள்
மாநாட்டில் ஜூலை 27 ஆம் நாளன்று
முதல்வர் கலைஞர்
ஆற்றிய உரை

மலர் 5
இதழ் 3
தமிழரசு 1-8-1974

மேதகு ஆளுநர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! காவல்துறைத் தலைமை அதிகாரி அவர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர்களே! மாவட்டக் காவல் துறை அதிகாரிகளே! மற்றைய அரசு அதிகாரிகளே!

இன்று தொடங்கி நடைபெறும் இந்த சிறப்பு மிக்க மாநாட்டில் உங்கள் அனைவரையும் சந்திப்பதிலும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு, தமிழகத்தின் பொருளாதார வளம், மனவளம், ஒழுங்கு, அமைதி, இனிய வாழ்வைத் தொடர்ந்து வளர்ப்பதற்கு ஏற்ற வகையில் முடிவுகள் மேற்கொள்வதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியும் ஆர்வமும் அடைகிறேன்.

மக்களாட்சி முறையில் அரசோச்சும் கட்சிகள் மாறி மாறி வரக்கூடும் 23
என்றாலும், உண்மையான அரசு, மக்களின்

கலைகளை உணர்ந்து தெளிவு படவும்,
பொருந்தியுள்ள சமதர்ம — சமத்துவ
-சமுதாயத்தை அமைப்பதில் கண்ணும்
கருத்துமாக இருக்கவும் — அறத்தாற்றின்
உழலும் மக்களைக் கைதூக்கிவிடும் முயற்சியில்
வெற்றிபெறவும் — சமூகப் பாதுகாப்பு —
தொழிலாளர் நலன் — மாணவர் நல்வாழ்வு —
கிராம வளர்ச்சி இவற்றுக்கான திட்டங்களை நடை-
முறைப்படுத்தவும் — நகர் வீதி, மாநில,
இலக்கியம், வரலாறு, கலை, இவைகளைப்
பேணிக் காத்து நிற்கவும் — கொள்கை-
கள் வகுத்துக் கொண்டு, திட்டங்களை
நடைமுறைப்படுத்தும்போது, அவைகளை
அரசுப் பொறுப்பில் இருப்போர் கண்காணிப்புத்
தக்கவண்ணம் நிறைவேற்றிக் காட்டுதற்கு
பொறுப்பில் துணைநின்று, அணிதிரண்டு

அத்துறைக்கு, நல்லவைகளைத் தெரிந்த
தூய சக்திகள் அடங்கிய போது அவைகளைப்
புரிந்து கொண்டு நம்பிக்கைக் குறியவர்களாகப்
பண்பாடுடைய மிகப் பெரிய பொறுப்புக்களை
ஏற்கும் அதிகாரிகள் எல்லாம் இங்கே
கூடியிருக்கிறீர்கள்.

முதலமைச்சர் என்ற அதி-
காரத் தோரணையில் இல்லாமல் தோழமை
உணர்வுடன் நான் உங்களிடம் பழகி வந்தி-
ருந்தேன். நம் இடையே சகஜமான முறையில் நிகழ்கின்ற
தோழமை உணர்ச்சி, கருத்துக்களை விவாத
மேடையில் வைத்து சரியானதும், பாரபட்ச
மற்றதுமான முடிவுகள் எடுப்பதற்கு என்
னைத் தூண்டுதலாக இருந்தது.

"நகுதற் பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்ற குறள் மொழியை இப்போது நினைவுபடுத்
துவது சாலப் பொருத்தமுடையதாக இருக்கும்.
ஊழல்கள் தோன்றாமலே பாதுகாப்பாகக் கண்
காணித்தல் — மீறித் தோன்றி விடுமேயானால்
அதற்குப் பொறுப்பானவர்களிடம் பாரபட்சமின்றி
நடவடிக்கை எடுத்தல் — என்ற கொள்கையில்
இந்த அரசு நடைபோடுகிறது என்பதற்கு
என்னையும் எடுத்துக்காட்டாகக் கூற
முடியும். அதற்கு உறுதுணையாக இருக்கின்ற
அரசு அதிகாரிகள் அனைவரையும் நான் மிகப்
பாராட்டுகிறேன்.

தென்றல், வரப்பெற்ற வயல்,
குளம் தேக்கிய நல் வாய்க்கால், நெற்சோறு
உழுது உழுது பயன் விளைக்கும் நிலை

உழைப்புத் தோள்கள் — இவைகள் நம்
கிராமத்தில் நீங்காமல் இருப்பதால் தான்
நமது திட்டங்கள் மிகப் பெரும்பான்மையானவை
கிராமங்களை நோக்கிச் செல்கின்றன.

இந்த எண்ணத்தோடு நாட்டில்
வேளாண்மைத் துறை வளர்ச்சிக்காக வகுக்
கப்பட்டிருக்கிற கூட்டுறவுத் துறை கடன்கள் —
இந்தியாவில் எங்குமில்லாத அளவுக்கு இணைப்பு
தரப்பட்டிருக்கிற மின்விசைக் கிணறுகள் —
அனைத்துக் கிராமங்களுக்கும் மின்னொளி —
கடந்த இரண்டு ஆண்டுகளில் எழுபதாயிரம் பேர்
களுக்குக் கண்ணொளி — இவைகள் எல்லாம்
கிராமமக்களுக்குக் கிடைத்த நலன்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள் உருவாகப்
பட்டுப்பெற்று, நமது புதிய திட்டமான குடிசை
வாரியத்தின் முயற்சியின் அடிப்படையில்
நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றம்

...னின் பத்திரிகையில் கூட பாதுகாக்கப்பட்ட
37 தொண்ணூற்று வழங்கும் திருத்தத் திட்டம் மிக
வேகமாகச் செயல்பட்டு வருகிறது. இந்தத்
திட்டம் ஒரு நிலைக்கு வந்தவுடன் [illegible]
... பெற்றிட நாம் மேலும் முயற்சியுடன் பணி
யாற்றிட வேண்டும்.

இந்தியாவில் முதல் மாநிலத்தில் மட்டும் முதன்முறையாக
கொண்டு வரப்பட்டு செயல்பட்டு வருகிற "மது
விலக்குத் திட்டத்தின்" பயன்கள் உடனுக்குடன்
கிராமங்களில் பெருகிவருவதை எண்ணும், அதனை
மேலும் விரிவுபடுத்த உள்ளாட்சி மன்றங்கள் ஒத்
துழைப்பு தர வேண்டுகிறேன்.

இவற்றைத் தவிர மக்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் கிராமங்
களில், சுத்தமான குடிநீருடன் இணைப்பு
கொண்ட சாலைகள் அமைக்கும் திட்டத்தை
விரைவில் நிறைவேற்ற நாம் செயல்
படுத்தி வருகிறோம். இதனுடன் மேலும்

சிறிய கிராமங்களிலும் சுத்தமான உடைகளுடன்
திரிந்தும் கடைகளில் விலைக்கு வாங்கியும், இத
னால் ஏற்படும் செலவுத் திட்டத்தைத் தொடங்கி
யுள்ளோம். இதுவரை சுமார் இலட்சம் ஏழைக்
குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்
ளன. இவைகளில் சிறிய தொழில் செய்வதற்
காக அவர்களுக்கு பண உதவி அளிக்கப்பட்டு வருகிறது,
அதோடு அரசு உதவியும் அளிக்கப்பட வேண்டும். அதற்கான பெரும்
திட்டங்களும் தீட்டப்பட்டு இன்று மேலும்
விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு நம் நாட்டில்
இன்றுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட
திட்டங்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நல்ல பல
வசதிகளை அளிக்கக் கூடியதாக உள்ளன. இத் திட்டங்களைத்
தொடர்ந்து நடத்தவும், இந்தப் பணிகளை மேற்கொள்ள
அரசு ஒரு சிறப்புத் திட்டம், கிராமச் சாலைகள்
போடும் திட்டத்தோடு இணைத்துப் பெற்று, அதன்
விவரங்களை நாளும், ஆண்டுகளும், அதிகாரி
களுடன் கலந்து பேசியுள்ளோம்.

இந்தப் பணியை விரைவாக முடிக்கும் பொறுப்
பை அவர்களிடம் ஒப்படைத்துச் செயல்பட
வேண்டுகிறேன். இதற்கான நிதி ஆதாரத்தைப்
பற்றியும் பேசி முடிவு செய்து அதற்கான
ஊராட்சிகளின் ஒத்துழைப்பை அதிகாரிகள்
பெற்றிட வேண்டும்.

ஏரிகள், குளங்கள், போன்ற
பாசன ஆதாரங்களை தூர்வாரி சீர்படுத்தவும்
அவற்றையும் சீர்படுத்தும் சிறப்புத் திட்டம்
ஒன்று செயல்படுத்தப்பட இத்துறையின் மூலம்
அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் பயன்கள்
அனைத்து ஊராட்சிகளிலும் சென்றடையும்
வகையில் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
இதற்கான அடிப்படை வசதிகளையும் முறையாகச்
செய்து முடிக்கும் காரியத்தைத் தாங்கள்
மேற்கொள்ள வேண்டுமென இதைக்
கேட்டுக் கொள்கிறேன். [illegible]

அவர்களுக்கும் கூறிக் கொள்கிறேன்.

இந்தியாவில் வேறு எங்கும்
இல்லாத புதுமையான
திட்டமாக "ஏழை எளியவர் கூட்டுப்
பாதுகாப்புத் திட்டம்" "உழைப்போர் பாதுகாப்புத்
திட்டம்" ஆகிய இரு திட்டங்கள் நமது
அரசு, ஏழை எளியவர்கள் கூட்டுப்
பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியும் நடத்தி
வருகிறது. அவர்களுக்கும் நல்ல கூட்டம்
பற்றிய ஆதாரக் கருத்துகள் இவர்களையும்
பரிசோதித்துவிட்டு, நிதி பெற்றுப் போன
ஆண்டுகள் இந்தத் திட்டத்தின் வாயிலாகப்
பல ஆயிரம் பேர் பயன் பெறும் போது, உழைப்
பும் நலத்தையும் வாழ்விலும் அவர்களுக்கும்
எப்போதும் உறுதுணை நிற்கும் என்
பதை உணர்கிறது.

[illegible]

[illegible]

[illegible]

அண்டையிலுள்ள மாநிலங்களில் மதுக் கடைகள் திறந்திருப்பதாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் தொகை கட்டுப் படுத்தப் படாததாலும், நமது மதுவிலக் [illegible] [illegible] மது விலக்கில் வெற்றி பெறமுடியவில்லை; [illegible] 1971 ஆம் ஆண்டு மதுவிலக்கை ஒத்திவைத்தோம். [illegible]

[illegible]

[illegible] [illegible] போர், [illegible]

[illegible]

129

[illegible]

# ஊரக வளர்ச்சித் திட்டங்களை மேலும் தீவிரமாக நிறைவேற்றுவதற்கான விளக்க ஆணைகள் :

ஊரக ஒன்றியங்கள், ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை மட்டுமல்லாமல், வட்டார அளவிலும், அதற்குக் கீழேயும் செயற்படுத்த இயலக்கூடிய ஏனைய வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன. நடைமுறையில் கொண்டுவரப்பட்ட முக்கியமான மாற்றம் என்னவெனில், ஊராட்சி வளர்ச்சிக்கான திட்டவாரி வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டதாகும். இதன் மூலம் ஊர் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய நிதிகள் தொகுக்கப்பெற்று, அவற்றைப் பயன்படுத்துவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய திட்டவாரி வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டதன் காரணமாக, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரமும், தனக்கு ஐந்தாண்டு காலத்துக்குக் கிடைக்கக்கூடிய மொத்த நிதி ஒதுக்கீடு, அதனிடம் ஒப்படைக்கப்படுகின்ற வருவாயில் கிடைக்கக்கூடிய வரவினங்கள், வளர்ச்சித் திட்டத்துக்காக அரசு மானியங்களாக எவ்வளவு எதிர்பார்க்கலாம், தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எந்த அளவுக்கு தான் நிதியை திரட்ட வேண்டியிருக்கும் என்பதையெல்லாம் தெரிந்துக் கொள்ள உதவுகிறது. ஊராட்சி வளர்ச்சிக்குரிய திட்டவாரியான வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டதற்கு அடிப்படைக் கொள்கை யாதெனில், இதுவரை வளர்ச்சியில் மிக மிகப் பின்தங்கியிருந்த வளர்ச்சி வட்டாரங்கள், விரைந்து வளர்ச்சிபெற வகை செய்வதும், இயன்ற அளவு விரைவில் வளர்ச்சிப் பாங்கில் வட்டாரங்களுக்கிடையே ஏற்படும் வேறுபாடுகளை அகற்றுவதும் ஆகும். இந்த வகையில் கிராம மக்களின் பிரதிநிதிகளாக, அவர்களின் வளர்ச்சிக்குப் பொறுப்பேற்றவர்களாக அமைந்த ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்கு, தமது வட்டாரத்திற்கென திட்டமிடும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக, ஐந்தாண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதோடு மட்டுமல்லாமல், வரவு செலவுத் திட்டத்தை நிர்வகிக்கவும், வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தவும் பொறுப்பு ஏற்கும்.

எனவே ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இங்கு வளர்ச்சித் திட்டமானது தொடர்புடைய எல்லாத் துறைகளின் ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்தப்பட வேண்டுமேயன்றி, தனியொரு திட்டமாக கருதப்படக்கூடாது. ஊராட்சி ஒன்றியங்கள் திட்டமிடுதல்-வளர்ச்சி-இவற்றின் அடிப்படைக் களமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

பல்வேறு துறைத் தலைவர்கள், மாவட்டத்திலுள்ள சார்புநிலை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளுமாறு உத்திரவுகள் பிறப்பிக்கவேண்டும். அவர்கள், தங்களது நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், விரைவுபடுத்தவும், ஆக்கப்பூர்வமான திட்டங்களை வகுக்கவும், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து ஆலோசனை செய்தல் வேண்டும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு துறைகளும் செயல்படுத்துகின்ற திட்டங்களை, மாவட்ட அளவில், வளர்ச்சித் திட்டங்களின் தலைமைப் பொறுப்பு வகிப்பவர் என்ற அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். பல்வேறு துறைத் தலைவர்களும் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும் போது, தங்கள் திட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேறி வருகின்றன என்று ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். மேற்சொன்ன அரசாணையை, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் எல்லாருக்கும் அனுப்புமாறு, ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் செயலாளர் அவர்கள் (திரு. எம். எம். ராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்.) விரிவாகவும் தெளிவாகவும் வெளியிட்டுள்ள முக்கிய ஆணையின் பயனாக, ஊரகவளர்ச்சித் திட்டங்கள் புதிய ஊக்கத்துடன் நிறைவேற்றப்பெறும் என்றும் ஊராட்சிப் பணிகள் புத்துணர்வுடன் செயல்பெறும் என்றும் எதிர்பார்க்கலாம்.

(தமிழ்நாடு அரசு - ஊரகவளர்ச்சி உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண். 1410, நாள் : 4—6—1974-ன் சுருக்கம்)

அடையாறிலுள்ள எலெக்ட்ரானிக் தொழிற்பேட்டை சென்ற ஆண்டில் 4,000 கார்ரேடியோக்களை ஏற்றுமதி செய்தது. இந்தியாவிலேயே அதிக கார் ரேடியோ ஏற்றுமதி செய்த நிறுவனம் இதுவே.

திருவள்ளூர் அருகிலுள்ள கும்மிடிப்பூண்டியிலும் உள்ள எலெக்ட்ரானிக் தொழிற்பேட்டை முன்னேறி வருகிறது. திருச்சி, ஒசூர், சேலம், கோவை ஆகிய இடங்களிலும் இதேபோன்ற தொழிற்பேட்டைகள் அமைக்க ஆக்கப் பணிகள் நடந்து வருகின்றன.

தமிழ்நாடு சிறுதொழில்கள் கழகத்தின் கீழும், தொழில் வர்த்தகத்துறை இயக்குநர் கீழும் பணியாற்றி வரும் பீங்கான் தொழிற்சாலைகளை எடுத்து நடத்துவதற்காகத் 'தமிழ்நாடு பீங்கான் தொழிற் கழகம்' என்ற புதிய நிறுவனம் ரூ. 2 கோடி மூலதனத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 10 பீங்கான் தொழில்களை ஜூலை 15-ந் தேதி முதல் மேற்கொள்கிறது.

விருத்தாச்சலம் பீங்கான் தொழிற்சாலையில் இப்போது ஆண்டொன்றுக்கு ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகின்றது. இதை ரூ. 60 இலட்சத்துக்கு உயர்த்துவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.



தமிழ்நாட்டில் பெண் போலீஸ் முதலாவது அணிக்கு அளிக்கப்பட்டு வரும் பயிற்சியானது இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் முடிவடைகிறது. அதன் பிறகு ஓராண்டுக் காலம் அவர்கள் நேரடிப் பணியில் ஈடுபடுத்தப்படுவர். அவர்களுடைய பணி எந்த அளவில் திறமையாக நடக்கிறது என்பதைப் பொறுத்து மதுரை, கோவை, திருச்சி ஆகிய இடங்களிலும் இதுபோன்ற அணிகள் ஏற்படுத்தப்படும். வரும் செப்டம்பர் 14-ந் தேதி மதுரை நகரில் நடக்க இருக்கும், முதல்வர் காவலர் பதக்கம் அணி வகுப்பில், பெண் போலீஸ் அணியும் கலந்து கொள்ளும்.





# நன்மைகள் பெருகிடப் புதிய பொழுப்பு

## உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம்

இன்றையதினம் உங்களையெல்லாம் ஒருங்கே இங்கு சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி, மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் சுதந்திரம் பெற்றுத் தனிக் குடித்தனம் அமைப்பதில், எனது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவிக்கும் பொருட்டே இங்கு வந்திருக்கிறேன்.

1958 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே இந்தத் துறை தனித்து இயங்கினால் நன்மை என்ற கருத்தை வலியுறுத்தி வந்திருப்பவர்களில் நானும் ஒருவன். எனவே நமது கோரிக்கை இன்று நிறைவுபெறுவதைப் பார்க்கும்போது, மகிழ்ச்சி ஏற்படுகிறது.

மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்களும், ''பிள்ளைகளுக்கு வயது வந்துவிட்டது; தனிக் குடித்தனம் செய்யவேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. எனவே பிரிந்து இயங்குவது நல்லது'' என்ற உணர்வுடன் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

தனிக்குடித்தனம் தொடங்கினால், பொறுப்பு அதிகமென்பது, அனைவருக்கும் தெரியும். குறை சொல்லப் பலரும் காத்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே, நாம் கவனமுடனும் திறமையோடும் செயலாற்ற வேண்டும். இந்தப் பிரிவுக்குப் பிறகு, நாம் செய்யப்புகும் பணி, ஓர் எடுத்துக் காட்டாக அமையவேண்டும். அப்போதுதான், நமக்குப் பெருமை உண்டு. இதை நினைத்துப் பாடுபட வேண்டும்; பலன் காண வேண்டும்.

கிராமங்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுமானால் நாட்டுக்கு நல்லது. இதையே அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். என்னைக் காணும்போதெல்லாம் அவருக்குக் கிராமங்களின் நினைவுதான் ஏற்படும். என்னைக் கண்டதும் 'கிராமம்' வந்துவிட்டது என்பார்கள். ஏனெனில், நான் கிராமங்களின் . தேவைகளை வாய்ப்பு நேரும்போதெல்லாம் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டே இருப்பேன். என்னை 'கிராமம்' என்றே அண்ணா அவர்கள் அன்புடன் அழைப்பார்கள்.

இப்போது நமக்குப் புதிய பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நமது முயற்சியில் கிராம மக்களிடையே எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும். பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றினாலும், பொறுப்பு உள்ளாட்சித் துறையையே சார்ந்ததாகிறது.

கிராமங்களில் குடிநீர், இணைப்புச்சாலைகள், பள்ளிகள், ஆகிய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை உடனடியாகத் தீர்க்க முயல வேண்டும். இதில் உள்ளாட்சித் துறை முழு வெற்றி பெற வேண்டும்.

இப்போது நமக்குப் புதிய பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நமது முயற்சியில் கிராம மக்களிடையே எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும். பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றினாலும்,

'பொறுப்பு உள்ளாட்சித் துறையையே சார்ந்ததாகிறது.

கிராமங்களில் குடிநீர், இணைப்புச் சாலைகள், பள்ளிகள், ஆகிய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை உடனடியாகத் தீர்க்க முயல வேண்டும். இதில் உள்ளாட்சித் துறை முழு வெற்றி பெற வேண்டும்.

கிராமங்களின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு மானியங்கள் வழங்கும் அதிகாரம் தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே அளிக்கப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதலை எதிர்பார்க்காமல், மாவட்ட ஆட்சித்தலைவர்களே இனி திட்டங்களுக்கு அனுமதி வழங்குவார்கள். இதுவரை ஊராட்சிகளுக்கு ஒரே அளவான இணை மானியங்கள் வழங்கப்பட்டன. இனி அவ்வாறில்லாமல், ஊராட்சிகளின் தேவைகளுக்கேற்ப மானியங்கள் அளிக்கப்படும். தங்களிடமுள்ள நிதிகளை, ஊராட்சிகளே ஆக்கப்பணித் திட்டங்களுக்குச் செலவழித்துக் கொள்ள இதனால், புது வழி வகுக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறைக்கு எல்லா வகையிலும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருக்கிறது. ஊரக வளர்ச்சித்துறையும் அதனளவுக்கு வளர வேண்டும். இப்பொழுது பதவியுயர்வு பெற்று, புதிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள், பழைய நினைவுகள் வரும்போது கடந்த கால நிலைக்கும்போய்விடக்கூடாது. இதனால் நிர்வாகச் சீர்கேடும், வேலைகளில் தாமதங்களும் ஏற்பட ஏதுவாகலாம். நமது நிர்வாகத் திறன் வருங்காலத்தில் வருபவர்களுக்கு எடுத்துக் காட்டாக அமைய வேண்டும்.. கண்டிப்பு இருக்க வேண்டியது மிக முக்கியம். நாம்,



# ஊராட்சிகளின் நிருவாகத்தில் முக்கிய மாறுதல்கள்

மக்களுக்குச் சேவை செய்வதற்கேபொறுப்பேற்றிருக்கிறோம்!

இத்துறையின் எதிர்காலம் நீங்கள் எப்படிப் பணியாற்றுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே இருக்கிறது. ஊர் வளர்ந்தால் நாம் வளர்வோம். ''ஊரார் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்'' என்ற பழமொழி நினைவில் கொள்ளத்தக்கது.

இப்போது, நிர்வாகத்துறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், மக்களுக்கு அதிகமாகத் தெரியாது. இலாகா பிரிவின் விளைவு நாம் வேலை செய்யும்போதுதான் எல்லாருக்கும் தெரிய முடியும்.

டார்கள். இப்போது அதற்கெனவே, நாம் இருக்கிறோம். இதை உணர்ந்து உற்சாகமாகப் பாடுபடுங்கள். உள்ளாட்சித் துறை, வருவாய்த்துறையிலிருந்து பிரிந்த பிறகு சிறந்த முறையில் பணியாற்றுகிறதென்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஜூலை முதல் தேதி, முகூர்த்த நாள் என்கிறார்கள். எனவே, நல்ல புனிதமான நாளில் புதுப் பொறுப்பு ஏற்கிறீர்கள். நல்ல முறையில் வேலை செய்து, நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களை வாழ்த்தி நன்றி கூறி விடை பெறுகிறேன்.

[ஊரக வளர்ச்சியில் புதிய பொறுப்பேற்கும் கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சியாளர்களின் ஊராட்சி வளர்ச்சி உதவியாளர்கள் ஆகியோர், 28—6—74ல் சென்னை இராசாசி மண்டபத்தில் கூடியபோது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை].

ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைக்கு, அரசு பெருமளவில் ஊக்கமளித்து வருகிறது. எனவே இத்துறையின் அலுவலர்க்ள், மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். உடனுக்குடன் கிராம மக்கள் உதவிகளைப் பெறுமாறு பணியாற்ற வேண்டும். ''நாளைக்கு வரும் பலாக்காயை விட, இன்றைக்கு வரும் களாக்காயே மேல்'' என்பது கிராம மக்கள் கூறும் பழமொழி. எனவே அவர்கள் உடனடியாகப் பலன் கண்டு மகிழவே விரும்புவார்கள்; காலதாமதத்தை அவர்கள் வெறுக்கிறார்கள்.

இந்த மாற்றத்துக்காக நாம் எவ்வளவோ நாள் போராடி வந்திருக்கிறோம். 'தனிக்குடித்தனம் வைத்துப் பார்ப்போம்; எப்படி வளர்கிறார்கள் என்பதைக் கவனிப்போம்'' என்று இப்போது ஏற்பாடு செய்திருக்கிறார் நம் மதிப்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள். நீங்கள் சரியாக நடக்காவிட்டால், மீண்டும் பழைய முறையே ஏற்படலாம்.

வருவாய்த்துறையில், கிராமங்களின் வளர்ச்சி முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ள மாட்-

கோட்ட அளவில் முக்கிய அலுவலராக உள்ள கோட்டாட்சித் தலைவரே, தற்போது வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை பணிகள் இரண்டையும் கவனித்து, மேற்பார்வையிடுகிறார். இந் நிலையை மாற்றி, கோட்டாட்சித் தலைவர்கள், வருவாய்த்துறைப் பணிகளை மட்டுமே கவனிக்கவேண்டுமென்றும், ஊராட்சி வேலைகளை முழு நேரமும் கவனிக்கத் தனியாக அலுவலர்கள் பொறுப்பில் இருக்க வேண்டுமென்றும், ஊராட்சி வளர்ச்சித்துறை அலுவலர்கள் கழகம் கோரி வந்துள்ளது. நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் ஓர் உறுப்பினரும் அவ்வாறே பரிந்துரைத்துள்ளார். மேலும், இதுபற்றி பல்வேறு ஆய்வுகளும், கருத்துப் பரிமாற்றமும் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு அரசு இவற்றையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்த பின்னர், சில முக்கிய மாறுதல்களை அரசாணை பிறப்பித்துள்ளது. அதன்படி கோட்ட அளவில் வருவாய்த்துறை அலுவல்களும் ஊராட்சிப் பணிகளும் தனித்தனியே பிரிக்கப்பட்டு வருவாய்த்துறையை மட்டுமே தற்போதுள்ள கோட்டாட்சித் தலைவர்கள் கவனித்துக் கொள்வார்கள். ஊராட்சிப் பணிகளை 'கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்,. (Divisional Development Officer) என்ற புதிய அலுவலர்கள் மேற்கொள்வார்கள்

கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், இனி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடிப் பொறுப்பில், ஊராட்சிகள் பற்றிய அலுவல்கள் அனைத்தையும், கோட்ட அளவில் கவனிப்பார்கள். கோட்டாட்சித் தலைவர்களின் கீழ் இவர்கள் இனி செயல்படமாட்டார்கள்.

மாவட்ட அளவில், மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் (District Development Officer) ஊராட்சிப் பணிகளைக் கவனித்து வந்தனர். இவர்கள் இனி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்கள் (ஊரக வளர்ச்சி) என அழைக்கப்படுவார்கள். இவர்கள் மாவட்ட அளவில் ஆட்சித் தலைவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணியாற்றுவார்கள்.

# தியாகி அரங்கநாதன் சுரங்கப்பாதை





**1965**-ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப் போரின்போது தாய்த் தமிழ்க் காக்க தீக்குளித்த தியாகச் செம்மல்கள்—

தியாகி சிவ்லிங்கம்.

தியாகி அரங்கநாதன்.

இந்த தியாகச் சுடர்களின் பெயரில் சென்னை தியாகராய நகரில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

துரைசாமி ரோடில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையான தியாகி சிவலிங்கம் சுரங்கப் பாதையைத் திறந்து வைக்கும் பொழுதே கண்ணம்மா பேட்டையில் அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைக்குத் தியாகி அரங்கநாதன், பெயர் சூட்டப்படும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

கண்ணம்மா பேட்டையில அமைந்துள்ள தியாகி அரங்கநாதன் சுரங்கப் பாதை மிக அழகிய சுரங்கப் பாதையாக அமைக்கப்பட்டுள்ளது.

தியாகராய நகரில் கண்ணம்மா பேட்டை இரயில் பாதையின் மேற்குப் பகுதிகளான மேற்கு மாம்பலம், சைதாப்பேட்டை பகுதிகள் கடந்த பத்தாண்டுகளில் வெகு வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புறங்களாகும். இவை தவிர, தமிழ் நாட்டு வீட்டு வசதி வாரியம் அமைந்திருக்கும் அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர் போன்ற மக்கள் வாழும் பகுதிகளும் வருகின்றன. சைதாப்பேட்டை கிழக்கிலும், தியாகராய நகரிலும் பள்ளிகளும், கல்லூரிகளும், கடைகளும் நிறைந்திருப்பதால், அங்கு செல்லும் பலதரப்பட்ட மக்கள்—மாணவர்கள், சிறுவர்கள்— கண்ணம்மா பேட்டைக்கு இரயில் பாதையைக் கடந்துதான் செல்ல வேண்டும்.

கண்ணம்மாபேட்டை இரயில் பாதையின் குறுக்கே கடந்து செல்லும் ஊர்திகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 2,363 என்றும், நடந்து செல்பவர்கள் 2,977 பேர்கள் என்றும் போக்குவரத்துப் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இரயில் பாதையின் கதவுகள் சராசரி ஒரு மணி நேரத்தில் 31 நிமிடங்கள் மூடிக் கிடக்கிறது. ஒரு மணி நேரத்தில் கதவுகளை மூடியிருக்கும் அதிக பட்ச நேரம் 36 நிமிடங்கள். ஒரு மணி நேரத்தில் 9 முறை கதவுகள் மூடப்பட்டு திறக்கப்படுகின்றன. இவ்வாறு இரயில் பாதையின் கதவுகள் மூடப்பட்டு போக்குவரத்து தடைபடுவதால் சமுதாயத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் மறைமுகமாக ஏற்படும் நஷ்டத்தின் மதிப்பு ரூ. 1.17 லட்சங்களாகும். இரயில் பாதையின் கதவுகள் மூடப்படுவதால் ஊர்திகளும், நடந்து செல்வோரும் கதவு திறந்ததும் கடந்து செல்லும்போது, ஏற்படும் நெரிசலாலும், குழப்பத்தாலும் அவ்விடத்தில் விபத்துக்கள் நடைபெறுவது அன்றாட நிகழ்ச்சியாக இருந்தது. எனவே இவையனைத்தும் கருத்திற்கொண்டு ஆராய்ந்த பின், இவ்விடத்தில் தேவையான நிலமும், இணைப்புச் சாலைகள் அமைக்கப் போதுமான அகலமான நிலப்பகுதியும் இருந்தால்—இந்த சுரங்கப் பாதையினைக் கட்டுவது என முடிவெடுக்கப்பட்டது.

சுரங்கப் பாதையின் நீளம் சுமார் 781 அடிகள். இரயில் பாலத்தின் நீளம் சுமார் 65 அடிகள். கிழக்கில் உள்ள இணைப்புச் சாலைகள் நீளம் சுமார் 405 அடிகள். பாதையின் அகலம் இருபுறமும் உள்ள சுவர்களுக்கு இடையே 50 அடிகள். பாதையின் முழுவதும் 23 அடிகள் அகலம் உள்ள இரு வழிப்பாதைகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பாதையின் இருமருங்கும் ஒரு அடி அகலம் கொண்ட பாதுகாப்புச் சுவரும், சுரங்கப் பாதையின் மேற்குப் பகுதியில், ரெட்டிகுப்பம் சாலை இணைப்பில், போக்குவரத்துகள் தங்கு தடையின்றிச் செல்லும் பொருட்டு போதுமான அளவு அகலப்படுத்தப்பட்டுள்ளது. இரயில் பாதையின் இரும்புப் பாலத்திலிருந்து தரை மட்டம் வரையில் உள்ள உயரம் 14 அடி 9 அங்குலம் ஆகும். சுரங்கப் பாதையினை யொட்டிச் சைக்கிள்கள், பாதசாரிகள் செல்லுவதற்கு வசதியாக இரயில் பாதையின் கீழ் முறையே சுமார் 8 அடி, 7 அடி 6'' உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் சைக்கிள்கள் செல்ல 11 அடி அகலம், பாதசாரிகள் செல்ல 5 அடி அகலம் கொண்ட வழிப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விடத்தில் உள்ள நீரின் தன்மைகளுக்கு ஏற்ப சுரங்கப் பாதையின் கட்டட அமைப்புகளுக்கு ஒட்டிய தொழிற் நுட்ப முறைகளைப் பயன் படுத்தப்பட்டுள்ளது. சுரங்கப் பாதையின் வண்ணப் பூச்சுகள் அதற்கு மேலும் வனப்பும், பொலிவும் தரும் வகையில் பூசப்பட்டுள்ளது.

**வடிகால் அமைப்புகள்**

இவ் வேலைக்கு 125 மெட்ரிக் டன் இரும்பும், 1,500 மெட்ரிக் டன் சிமெண்ட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பணி 21 மாதங்களில்முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச்செலவு (நிலப் பற்றுமானம், இணைப்புச் சாலைகள், பக்கச் சாலைகள், நீரேற்றும் குழாய்கள், விளக்குகள் போன்றவற்றிற்கான செலவுகள் உட்பட) ரூ. 31.79 லட்சங்களாகும். தனியார் நிலபற்றுமானத்திற்கு ரூ. 3.2 லட்சம் செலவாகியுள்ளது. இத்தொகை மொத்தச் செலவில் அடங்கியுள்ளது. இத் திட்டத்தின் மொத்தச் செலவில் 50 சதவீதம் (சுரங்கப் பாதையின் 36 அடி அகலம் கட்டுவதற்கான செலவு) இரயில்வே துறையினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். மீதம் உள்ள 50 சதவீதத்தினை தமிழக அரசும், மாநகராட்சியும் ஏற்றுக்கொண்டுள்ளது. இரயில் பாதையின் பாலத்தின் பகுதியை இரயில்வே துறையினர் கட்டினர். இச் சுரங்கப் பாதையினைக் கட்டும் பணியினை திருவாளர்கள் ஜே. சண்முகம் கம்பெனியாருக்குக் கொடுக்கப்பட்டது.

தியாகி அரங்கநாதன் சுரங்கப் பாதை திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்த உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் 'தமிழுக்காக உயிர்நீத்த தியாகிகளை மதிக்கும் வகையில் நமது அரசு இந்தப் பாலத்திற்கு தியாகி அரங்கநாதன் பெயர் சூட்டியுள்ளது என்று தெரிவித்தார்.

விழாவில் உரையாற்றிய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 'இந்தப் பகுதி மக்களின் நீண்ட காலக் கனவை அரசு நனவாக்கியுள்ளது. 1957-ஆம் ஆண்டு தேர்தலின்போதே இந்தப் பகுதி மக்கள் இங்குச் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

துரைசாமி ரோடில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையும் கண்ணம்மாபேட்டையில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையும் தியாகராய நகர் மக்களின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளன. இங்கே சாலை வசதிகள் மட்டுமில்லை. ஏராளமான பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்டுள்ளன. பனகல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள 'மார்க்கெட்' எல்லாருக்கும் வசதியாக அமைந்துள்ளது.

'வீட்டுவசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் இந்தப் பகுதிகளின் தோற்றத்தில் மாபெரும் மாறுதல்களையும் சுகாதார வசதிகளையும் உருவாக்கியுள்ளன. ஒரு காலத்தில் காடாகக் காணப்பட்ட இடங்கள் அரசின் முயற்சியால் இன்று பெருமளவில் வளர்ச்சியடைந்த இடங்களாக மாறியுள்ளன. இந்த அரும்பெரும் பணிகளைச்செய்துவரும் அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டவன் நான்''—என்றார்.

தியாகி அரங்கநாதன் சுரங்கப் பாதையைத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''நீண்ட நாள் கோரிக்கையாக இந்தப் பாலத்துக்கான கோரிக்கை இருந்து வந்தது என்பதனையும் பல காலங்களில் முயற்சி எடுக்கப்பட்டு முடியாமல் விடப்பட்டதையும், தேர்தல் நேரங்களிலே வாக்குறுதி அளிக்கப்பட்டு அந்த வாக்குறுதிகளெல்லாம் தேர்தல் வாக்குறுதிகளாகவே அதாவது பழைய காலத்துத் தேர்தல் வாக்குறுதியாகவே ஆகிவிட்டன என்பதையும், நம்முடைய நண்பர் கே.எம்.எஸ். அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லி, இந்தப் பாலமும் இதைப்போலவே பக்கத்தில் தியாகி சிவலிங்கம் அவர்கள் பெயரால் அமைக்கப்பட்ட பாலமும் உருவாவதற்குக் காரணமாக இருந்த—இருந்து வருகிற தமிழக அரசையும், மாநகராட்சி மன்றத்தையும் பாராட்டிப் புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள். அவர் பேசும்போது 'நீங்கள் நிறைய நற்காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். ஏராளமான நன்மைகள் மக்களுக்காகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் எல்லாம் இலாகா அளவில் தெரிகிறது. மக்களுக்கு அவைகளெல்லாம் எடுத்துச் சொல்லப் படவில்லை'' என்று குறிப்பிட்டார்கள்.

''இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற எங்களுக்கு இருக்கின்ற வேலை, நாட்டு மக்களுக்குச் செய்த நன்மைகளைப் பட்டியல் போட்டுக் காட்டிக் கொண்டிருப்பதையே நாங்கள் பணியாகக் கொள்ளாமல், சரி—இந்த வேலைகள் முடிந்தன. அடுத்து என்ன நற்காரியங்களை நாட்டு மக்களுக்குச் செய்யலாம் என்ற அந்தக் கவனத்தில் எங்களை நாங்கள் ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தந்த பகுதியிலே இருக்கிற மக்கள் அந்தந்தக் காரியங்களுடைய பலனை நிச்சயமாக அனுபவிப்பார்கள் என்பதையும் அப்படி அனுபவிக்கிற நேரத்தில் இந்தக் காரியங்களைச் செய்தவர்கள் யார் என்பதை உணருவார்கள் என்பதனையும் நாங்கள் அறிகிறோம். அப்படி உணர்ந்தாலும், உணராவிட்டாலும் அவர்களிடத்தில் நாங்கள் கைம்மாறு கருதாமல், அவர்களிடத்திலே எதையும் எதிர்பார்க்காமல் ஜனநாயக மரபுக்கு ஏற்ப

அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் பணியாற்ற வேண்டிய கடமையை உணர்ந்து தொடர்ந்து எங்களுடைய நற்பணிகளை ஆற்றிக்கொண்டேயிருப்போம் என்பதை இந்த நல்ல விழாவிலே நான் தெரிவிக்கப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.''

ஆமாம், முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதுபோல நாள்தோறும் நற்பணிகள் தொடருகின்றன, நமது நல்வாழ்வுக்காக!

சென்னை கண்ணம்மா பேட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கநாதன் சுரங்கப்பாதை போன்றும் புதிய அகலமான சாலை அமைப்புத் திட்டங்கள் பல சென்னை நகருக்காக வற்றை நமது அரசு வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

—மாமூ

## குப்பையையும் காசாக்கலாம்!

இன்றைய நவ நாகரிக உலகில் குப்பையையும் காசாக்கி விடலாம். கசாப்புக் கடைகளில் சீந்துவாரற்றுக்கிடக்கும் ஆடு, மாடுகளின் உள் வயிற்றுத் தோல் எவ்வளவு பயனுள்ளதாக விளங்கக்கூடும் என்பதைச் சென்னையில் உள்ள தோல் ஆராய்ச்சிக் கழகம் நிரூபித்திருக்கிறது. உள் வயிற்றுத் தோலைப் பயன்படுத்தி அழகான பொருட்கள் பலவற்றை இந்த ஆராய்ச்சிக் கழகம் தயாரித்திருக்கிறது. இதற்காக ஆராய்ச்சி வளர்ச்சிக்கான பரிசும் கிடைத்திருக்கிறது.

ஒரு மாட்டின் உள் வயிற்றிலிருந்து கிடைக்கும் தோல் கிட்டத்தட்ட ஓர் ஆட்டின் புறத் தோல் அளவு பெரியதாக இருக்கும். ஆண்டு தோறும்1 கோடியே 97 இலட்சத்து 30 ஆயிரம் ஆடுமாடுகளின் தோலும், 71இலட்சத்து 15 ஆயிரம் எருமைத் தோலும் கிடைக்கின்றன. ஆடு, மாடுகளின் உள் வயிற்றுத் தோலையும் பயன்படுத்திக் கொண்டால் இதே எண்ணிக்கையில் தோல்கள் கிடைக்கும்.

உள் வயிற்றுத் தோல்களைப் பதனிடும் முறைகளைத் தோல் ஆராய்ச்சிக் கழகம் நிலைப்படுத்தியிருக்கிறது. பதப்படுத்திய தோல் 0.4 மி.மீ. முதல் 0.7 மி.மீ. கனமாக இருக்கும்.

இந்தியாவிலே ஊனமுற்றவர்கள் எவ்வளவு பேர் தெரியுமா?

ஒரு கோடியே 40 இலட்சம் பேர். இவர்களில் ஒரு கோடியே 20 இலட்சம் பேர் கை அல்லது கால்களை அடியோடு இழந்தவர்கள். விபத்து அல்லது நோயினால் ஊனம் ஏற்பட்டபோது, அறுவை சிகிச்சை செய்து கை அல்லது கால்களை வெட்டிவிட வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது. இவர்களில் பெரும்பாலோர் நாட்டுப்புறங்களில் வாழ்கின்றனர்.

பதம் செய்த உள்வயிற்றுத் தோலில் மெல்லிய உரோமம் காணப்படுவதால், தேங்காய்ப் பூ துவாலை போன்ற அழகிய தோற்றம் அளிக்கிறது. இந்தத் தோல் ஏற்றுமதி செய்வதற்கு உகந்த பொருட்களைச் செய்வதற்கு ஏற்றதாக விளங்குகிறது. வழுக்காமல் கையில் பிடிக்க வேண்டிய கையுறைகள், ஸ்கூட்டர் கைப்பிடி, விளையாட்டு மட்டைகளின் கைப்பிடி போன்றவற்றைச் செய்வதற்கு இந்தத் தோல் ஏற்றது. பெண்களின் கைப்பை, நகைப் பெட்டி, பர்ஸ், காலணிகள், கழுத்து டை, தோல் ஆடைகள் போன்ற பல்வேறு பொருட்கள் செய்வதற்கும் இது உதவும். இந்தத் தோல் பார்ப்பதற்கு அழகாக இருப்பதால், இவற்றில் செய்த பொருட்கள் மேல் நாடுகளில் நல்ல வரவேற்புப் பெறும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பொது மக்களும், தோல் பதனிடும் தொழிலைச் சேர்ந்தவர்களும் இந்தத் தோலில் ஆர்வம் காட்டியிருக்கின்றனர். வெளி நாட்டினரும் ஆர்வத்துடன் விசாரிக்கின்றனர் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

### மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட். நெ. ஜி-1628.

### படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்றும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!





## வேலூர்- தர்மபுரியிலிருந்து...

தமிழ்நாடு பால்வள நிறுவனம் மாநிலத்தில் பால் வளத்தைப் பெருக்க பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. அதன் வேலூர் பிரிவு, வட ஆர்க்காடு, தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களையும் அலுவல் வரம்பில் கொண்டு ஒரு திட்ட அலுவலரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

எந்தக் காலத்திலும், பாலை எந்த அளவானாலும் சங்கங்களிடமிருந்து தடையின்றிப் பெற்றுக் கொள்வதும், தரத்திற்கு உரிய தொகையை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பால் வழங்குபவர்களுக்குத் தருவதும் இதன் நடைமுறைப் பணியாகும்.

உள்ளூர் வாசிகளுக்கு வேண்டிய அளவு போக, எஞ்சிய பாலைப் பெற்று பதனம் செய்வது நாள் ஒன்றுக்கு இருபதாயிரம் லிட்டருக்கு மேல் நிறுவன வேலூர் பிரிவு சென்னைக்கு அனுப்பி வருகிறது.

பாலைப் பக்குவம் செய்ய, குளிரூட்டும் நிலையங்கள் ஆம்பூர், வேங்கிக்கால் ஆகிய இடங்களிலும், பால் பதன் செய்யும் பெருநிலையம் ஒன்று சத்துவாச்சாரியிலும் அமைக்கப்பட்டு பணியில் ஈடுபட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் ஓர் குளிரூட்டும் நிலையம் அமைக்க ஏற்பாடுகள் நிறைவு பெற்று வருகின்றன.

பால் பத அலுவலர், உதவி மேலரளர், பால் பத உதவியாளர் கள் மேற்பார்வையில் பாலின் தரம் காலையும், மாலையும் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிற்கு உரிய விலைகளும் நிர்ணயிக்கப்படுகின் றன.

பால் வழங்கும் சங்கங்கள் கணி சமான முறையிலே அமைக்கப் பட்டு பால் உற்பத்தியாளர்கள் பெற வேண்டிய தொகையைப் பெற வேண்டிய வழியிலே பெறவும், கூட்டுறவு வழியிலே பெறவும், உதவிகள் கிடைக்கவும் வேண்டிய உதவிகள் கிடைக்கவும் கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் (பால் பதம்) ஆவன செய்து வருகிறார்.

கறவை மாடுகளுக்கு சமன் முறைச் சத்துள்ள தீவனம் பால் வள நிறுவனத்தாரால் ஆம்பூரில் தயாரிக்கப்பட்டு இலாபம் நட்டம் இன்றி கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த கால் நடைகளுக்கு வழங் கப்பட்டு வருகிறது. பாலைப் பெருக்குவதில் பசும் புல் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, ஏக்கருக்கு ஆண்டு ஒன் றிற்கு இருநூறு ்டன்னுக்கு மேல் விளையக்கூடியதும் சுமார் பன்னி ரண்டு அடி உயரம் வளர்க்கூடிய துமான நேப்பியர் பாஜ்ரா-21 என்ற புதுமையான இராட்சதப் புல் கண்டுபிடிப்பு, பசும் புல் பெருக்கத்துக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் இலட்சக்கணக்கில் இந்த வகை புல் நாற்றுக்கள் தரப்பட்டு நல்ல முறையில் வளர்க்கப்படுகின்றன. நேப்பியர் பாஜ்ரா-21 புல் லூதியானாவில் உள்ள பஞ்சாப் விவசாயப் பல்கலைக் கழகத்தில் நேப்பியர் புல்லையும், பாஜ்ராவையும் இனச் சேர்க்கை செய்து கருவாக்கி உருவாக்கப் பெற்றது.

சத்துள்ள சாறு கணிசமாகப் பெற்ற நீண்ட இலைகளும் — பருத்த தண்டுகளும் ஒரே நாற்றிலிருந்து ஐந்து கிலோ சத்துள்ள பசுமைத் தீவனம் தருவதுமான ஒரு அரிய வழி வகை அமைப்பை என். பி. 21 பெற்றுத் திகழ்கிறது

ஒரு ஏக்கரில் புல் வளர்த்தால் ரூபாய் இரு நூறு மானியமாக வழங்கப்படுகிறது.

ஏக்கர் ஒன்றில் புல் வளர்த்து ஓராண்டில் வளர்ப்புக்காக மற்றவர்களுக்கு ஒரு லட்சம் நாற்றுக்கள் விற்று பயனடையச் செய்தால் ஒரு ஏக்கருக்கு ரூபாய் ஐநூறு, மானியமாகத் தருகிறது தமிழ்நாடு பால்வள நிறுவனம்.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்
1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

1966-67ல் 2100.87
1972-73ல் 5618.15



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

ஆர். கனகசபை — தலைவர்
சி. கிருட்டிணமூர்த்தி — உபதலைவர்
என். எல். ஹெப்லிகர் — நிர்வாக இயக்குநர்




# பத்தாயிரம் ஏக்கர் பண்ணை

உணவுப்பற்றுக்குறை பரவலாக உள்ள ஒரு கால கட்டத்தில் மற்ற மாநிலங்களுக்கும் முடிந்த வரை உணவு அனுப்புமளவுக்கு பசுமைப் புரட்சியில் வெற்றியைக் கண்டிருக்கிறது தமிழகம். அரசின் ஆர்வத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய விவசாயிகளும், விவசாயிகளின் வேட்கைக்கு ஈடுகொடுக்கக்கூடிய அரசாங்கமும் அமைந்திருப்பது மாநிலத்துக்குக் கிடைத்த தனி வாய்ப்பு.

ஆக்கப் பணிகளில், விவசாயப் பெருக்கத்தில், ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களில் குறிப்பிடத்தக்க ஒரு செயல் திட்டம் வடஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் அருகே அமைந்துள்ள பத்தாயிரம் ஏக்கர் அரசாங்க விதைப் பண்ணையாகும். தரமான விதைகளைப் பெருமளவில் உற்பத்தி செய்து மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பும் இந்தப் பண்ணை, நாள் ஒன்றுக்கு சுற்றுப்புற மக்கள் சுமார் ஓராயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றது.

ஆனந்தவாடி, மேல் செங்கம் காடுகளில் 10,500 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது இப்பண்ணை. செங்கம்—கிருஷ்ணகிரி சாலையில் இரு மருங்கிலும் கிட்டத்தட்ட மூன்று மைல் தூரத்துக்கு இது பரவிக் கிடக்கிறது. மத்திய அரசின் அரசாங்க விதைப் பண்ணைத் திட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டது. மாநில அரசினர், இந்தப் பண்ணைக்கான நிலங்களை ஆண்டுக்கு ஏக்கருக்கு ஒரு ரூபாய் குத்தகை என்ற முறையில் 30 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்து உதவியிருக்கின்றனர். மாநில அரசினரின் வேளாண்மைத் துறை, மின் வாரியம், நகரமைப்புத் துறை, வனத் துறை நிலநீர் வாரியம், இவை எல்லாம் இத்திட்டத்துக்குத் தங்கள் அளவில் ஒத்துழைப்பும் உதவியும் அளித்து வருகின்றன.

இப்பண்ணை 1971 அக்டோபரில் தொடங்கப்பட்டது. தமிழக அமைச்சர்கள் திரு. ப. உ. சண்முகம், திரு. அன்பில் தர்மலிங்கம், திரு. கே. இராசாராம் மற்றும் அரசாங்க விதைப் பண்ணை நிருவாக அமைப்பின் தலைவரும் இயக்குநருமான திரு. எம். ஆர். கிருஷ்ணா ஆகியோர் விழாவில் பங்கு பெற்றனர். 1972 தொடக்கத்தில் காட்டைத் திருத்திக் கழனியாக்கும் பணிகள் தொடங்கின.

நிலம் படிப்படியாகப் பண்படுத்தப்பட்டு 1972—73-ல் 1,500 ஏக்கரில் சி.எஸ். எச்-3 வீரிய சோளம், சூரியகாந்தி, ராகி, கொள்ளு, நிலக்கடலை முதலியன பயிரிடப்பட்டன. முன் பருவத்தில் மழை தவறிவிட்டதாலும், பின் பருவத்தில் சற்று அதிகமான மழையினாலும் பயிர்கள் பாதிக்கப்பட்டன. 1973—74-ல் முன் பருவத்தில் 3,500 ஏக்கரிலும், பின்பருவத்தில் 1,100 ஏக்கரிலும் பயிர் செய்யத் திட்டமிடப்பட்டது. ஆனால் மழைக் குறைவினால் இவ்விரு பருவங்களிலும் முறையே 3,500 ஏக்கரிலும், 450 ஏக்கரிலும்தான் பயிர் செய்ய முடிந்தது. முன்னால் சொல்லப்பட்ட பயிர்களுடன் பூசா வெண்டை, கத்தரி, அஞ்சுகம் பயறு முதலியன பரவலாகப் பயிரிடப்பட்டன.

பாசனத்துக்கான கிணறுகள் வகையில் இப் பண்ணைக்கு மொத்தம் 150 கிணறுகள் வெட்டவேண்டும் என்பது திட்டம். கிணறுகள் 68 அடிக்கு 38 அடி என்ற அளவில் ஒரே படித்தரமாக அமையும். நீர்க்கால் நிலைமைகளுக்கு ஏற்ப ஆழம் 30-லிருந்து 45 அடி வரை உள்ளது. இதுவரை 33 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. 21 கிணறுகள் வெட்டும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 1974—75-ல் மேற்கொண்டு 40 கிணறுகள் வெட்டப்படும். சோதனை முறையில் 6 அடி நடு விட்டமும் 146 அடி ஆழமும் உள்ளதாக குழாய்க் கிணறு தோண்டப்பட்டது. ஆனால் பயன் திருப்திகரமானதாக இல்லை.

ஒவ்வொன்றும் 100 குதிரை சக்தி உள்ள இரண்டு புல்டோசர்கள் வாங்கப்பட்டுக் காடுகளை அழிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மாநில அரசிடம் இருந்து 3 புல்டோசர்கள் வாடகைக்குப் பெறப்பட்டுள்ளன. 18 டிராக்டர்களும், 15 ஆயில் இன்சின்களும் வேறு பல இயந்திரக் கருவிகளும் விவசாயப் பணிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தண்ணீர் மண் தரையிலேயே வாய்க்கால் வழியாக் நீண்ட தூரம் சென்று பாய்வதில் நீர்ச்சேதம் அதிகம் ஆவதால், சிமிட்டி கான்கிரீட் குழாய்கள் போடப்பட்டு வருகின்றன. இதுவரை 14,000 அடி நீளத்துக்குக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மண் வளத்தைப் பாதுகாக்கக் கரை கட்டும் வேலைகள் 1,500 ஏக்கரில் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் 1,000 ஏக்கரில் பணி மேற்கொள்ளப்படும். காட்டைத் திருத்திக் கழனியாக்கும் இந்தப் பத்தாயிரம் ஏக்கர் பண்ணையில் சுமார் 7,000 ஏக்கர் விரைவில் முழு அளவில் சாகுபடிக்கு வந்துவிடும்.

# இங்கே எத்தனை எத்தனை பெட்டிகள்! எத்தனை எத்தனை அழகு!



உலோகப் பெட்டிகள் ஒவ்வொன்றும் ஒருவகை

பிறந்த நாளைக் கொண்டாட இனிப்புகள் வழங்குகிறோம். அந்த இனிப்பை-மிட்டாயை வாங்குவதற்குச் சிட்டாய்ப் பறந்து வரும் நம் குழந்தைகளோ அந்த அழகிய மிட்டாய்ப்பெட்டியையே விரும்பிக் கேட்பார்கள்.

குழந்தை உணவு, குடிக்கும் பான வகைகள் முதலானவை அழகிய கண்கவர் உலோக டப்பாக்களில் விற்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். அவற்றை வாங்கி வரும் நாம், அதிலுள்ளவை தீர்ந்து போனதும் அவற்றைத் தூக்கி எறிந்து விடுவதில்லை. அந்த டப்பாக்களில் மளிகைப் பொருள்களை போட்டு வைத்துக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

இப்படி அன்றாடம் நாம் பயன்படுத்தும் பொருள்கள் பலப்பல. முகப்பவுடர், பல்பொடி டப்பாக்கள், பல்வேறு புட்டிகளின் மூடிகள் இவையெல்லாம் நாள்தோறும் நம் கைக்கு வந்து போகும் பொருள்களாகும். இவையெல்லாம் எப்படித் தயாராகின்றன? எங்கே தயாராகின்றன.

சென்னைத் திருவொற்றியூரிலுள்ள 'மெட்டல் பாக்ஸ்' (Metal Box company) கம்பெனி' தான் இவைகளைத் தயாரிக்கின்றது.

கண்ணைக் கவரும் அழகிய உலோகப் பெட்டிகளைத் தயாரிக்கும் இந்நிறுவனம் 1933-ல் கல்கத்தாவில் துவக்கப்பட்டது. இந்தியாவில் உலோகப் பெட்டிகளைத் தயாரிப்பதற்கென்று முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்நிறுவனம், 1950-ல் சென்னைத் திருவொற்றியூரில் ஒரு கிளையைத் துவக்கியது. அனைத்து இந்திய அடிப்படையில் தொடங்கப்பெற்ற இந்நிறுவனத்தின் கிளைகள் தில்லி, பம்பாய், கொச்சின், மங்களூர் ஆகிய இடங்களில் உள்ளன.

தொழிற்சாலைக்குள் நுழைகிறோம்!

பல்வேறு இயந்திரங்களின் ஒலிகள் நம் காதில் வந்து சங்கமமாகின்றன. தொழிலாளர்கள் கருமமே கண்ணாய்க் காட்சியளிக்கின்றனர். இயந்திரங்கள் 'இந்திர ஜாலம்' புரிந்து கொண்டிருக்கின்றன. நாம் விஞ்ஞானத்தின் விந்தையைக் கண்டு வியக்கிறோம்.

அதோ! அந்த இயந்திரம் என்ன செய்கிறது?

கண்மூடிக் கண்திறப்பதற்குள் எத்தனை மூடிகளை இது தயாரித்து விடுகிறது! இந்த இயந்திரத்தில், மூடிக்கான 'டிசைன்கள்' அச்சான தகடு ஒன்று நுழைவதைப் பார்க்கிறோம். உடனே மூடிகள் முழு வடிவம் பெற்று ஒரு தொட்டிக்குள் வந்து விழுகின்றன.

இவ்வாறு வகை வகையான இயந்திரங்கள், வகை வகையான உலோகப் பெட்டிகளை— மூடிகளை உருவாக்குகின்ற காட்சியை நாம் நேரில் கண்டு மகிழவேண்டும்.





தமிழ்நாட்டிலுள்ள பெருவாரியான நிறுவனங்களுக்கு, இந்தத் தொழிற்சாலையில்தான் பெட்டிகள், மூடிகள் முதலியன தயாராகின்றன.

இங்கே உலோகப் பெட்டிகள் எப்படித் தயாராகின்றன?

முதலில் ஒரு உலோகப் பெட்டியைச் செய்வதற்கு முன்னால், அதற்கான 'டிசைன்' வரையப்படுகிறது. அந்த 'டிசைன்' தகட்டில் அச்சாகும் விதத்தைப் பார்க்கும்போது, நமக்குப் பத்திரிகைகளை அச்சடிக்கும் அச்சகமே நினைவுக்கு வருகிறது.

அச்சகத்தில் தாள்கள் அடுக்கி வைக்கப்பட்டு ஒவ்வொன்றாக அச்சாகி வெளியே வருவது போன்று, இந்த இயந்திரத்திலுள்ள தகடுகள் ஒவ்வொன்றாக அச்சாகி வெளிவருகின்றன


தகட்டுக்கு வண்ணம் பூசும் இயந்திரம்.

சாதாரணத் தகட்டுக்கு முதலில் வெள்ளை வண்ணம் பூசப்படுகிறது. பிறகு அந்தத் தகட்டில் டிசைன்கள் பதிக்கப்பட்டு, அதன்மேல் வார்னிஷ் பூசப்படுகிறது. இதற்குப் பிறகுதான் அதற்குரிய இயந்திரத்தில் அந்தத் தகடு பெட்டியாக வடிவம் பெற்று வெளிவருகின்றது. மின்னல் வேகத்தில் மேற்கண்ட எல்லா. வேலைகளையும் செய்து முடிக்கிறது. மின்னாற்றலால் இயங்கும் இயந்திரம்!

இங்கே வடிவமைப்புப் பிரிவு புகைப்படப் பிரிவு, அச்சகப் பிரிவு ஆகியவையும், பரிசோதனைக்கூடமும் உள்ளன.

உலோகப் பெட்டிகளுக்குத் தேவையான மூலப்பொருள் தகடு. இது இந்தியாவில் டாடா ரூர்க்கேலாவிலிருந்து கிடைக்கின்றது. இவையன்றி இலண்டன், ரஷ்யா, பெல்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்தும் தகடுகள் தருவிக்கப்படுகின்றன

இங்குத் தயாராகும் உலோகப் பெட்டிகளுக்கு இந்தியா முழுவதிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. இந்நிறுவனம் தயாரித்த 'டின்' களில் மீன், இரால் ஆகியவை அடைக்கப்பட்டு அமெரிக்கா, பிரிட்டன் முதலான மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

தமிழக அரசு சிறுசேமிப்புத் துறை வழங்கும் உண்டியல்கள் உரப்பொருள்கள் அடைக்கும் டப்பாக்கள் போன்றவை இங்கே உருவாகின்றன.

இனிப்பு வகைகள், பிஸ்





எண்ணெய் 'டின்கள்' உருவாவது எண்ணிலடங்கா.

கோத்துகள், ஊர்திகளின் எண்ணெய், வனஸ்பதி படச்சுருள்கள் ஆகியவற்றுக்கான பெட்டிகளும், மருந்து, மதுவகைப் புட்டிகளுக்கான மூடிகளும், பாட்டரி 'ஜாக்கெட்'டுகளும், காலண்டர்களும் இங்கே பெருமளவில், இலட்சக்கணக்கில் தயாரிக்கப்படுகின்றன.

உலோகத்தாலான பெட்டிகள் செய்யும் இந்நிறுவனம் பிளாஸ்டிக், காகிதத்தாலான பெட்டிகளையும் செய்கிறது, பம்பாயிலுள்ள கிளை இவற்றைத் தயாரிக்கின்றது.

நல்ல தரமான, கவர்ச்சியான வண்ண வண்ணப்பெட்டிகளை உருவாக்குவதில் சிறந்து விளங்கும் தன்மைக்காகத் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இந்நிறுவனம் பரிசு பெற்றுள்ளது. தோட்டக்கலையிலும் இது தோற்றுவிடவில்லை.

.இந்த நிறுவனத்தில் மொத்தம் 991 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு இந்நிறுவனம் பலவகையிலும் உதவிகள் புரிந்து வருகின்றது. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வாங்கவும், 'சகாய நிதி' என்ற பெயரில், துயர்படும் தொழிலாளர் குடும்பத்தினருக்கு நிதியுதவியும், காசநோய் போன்ற நோய்கள் பீடிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கியும் உதவுகிறது.



உற்பத்தித்திறன், சுற்றுப்புறத் தூய்மை, இயந்திரப் பாதுகாப்பு பற்றிய யோசனைகளைக் கூறும் தொழிலாளருக்கு ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இவையன்றி 'யோசனைத் திட்டம்' (Suggestion Scheme) ஒன்றும் செயல்படுகிறது. நாட்டுக்குத் தேவையான தரமான பொருள்களைத் தயாரித்தல், உற்பத்தியின் பயன் போன்ற தகுந்த யோசனைகள் கூறுவோருக்குத் தகுந்த பரிசு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் தொழிலாளர் அனைவரும் கலந்து கொள்கின்றனர். ரூ. 1,000 வரை பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில் கண் பார்வையற்றவர்களும் பணியாற்றுவதை நாம்பார்வையிடுகிறோம்.

20 ஆண்டுகள் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குப் பரிசுப் பொருள்களும், தேசிய சேமிப்புப் பத்திரமும் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 50 தொழிலாளர்கள் சுற்றுலாச் செல்கின்றனர். தமிழக, கேரள, கர்நாடக, ஆந்திர அரசு தொழிற்கூடங்கள் முதலானவற்றைப் பார்வையிட்டுப் பயன்பெறுகின்றனர்.

அரசு தொழில்நுட்பத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஒருசிலர், இங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரிய ஆலோசனைகளை வழங்கித் தொழில் வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலத்துக்கும் உதவி வருகிறார்கள்.



மூடிகளை உருவாக்கும் இயந்திரம்



'கண் மூடிக் கண் திறப்பதற்குள் உருவாகும் மூடிகள்'



பட்ச் சுருள் பெட்டி தயாரிக்கும் இயந்திரம்

கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம், இலவசத் திரைப்படம் தொழிலாளர் கல்வி போன்ற நல்ல செயல் திட்டங்கள் தொழிலாளர்களுக்கு மன நிறைவைத் தருகின்றன.

இவ்வாறு தொழிலும், தொழிலாளரும் வளர்வதற்கேற்ற வகையில் சிறந்து விளங்கும் இந்நிறுவனம், உலோகப் பெட்டிகள் செய்வதில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—பி.வி.ஜி.





# 'சேமிப்பு' சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


# ஆலயத் திருப்பணிக்கு யுனெஸ்கோ உதவி



இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி கோயில் திருப்பணிக்காகப் பத்தாயிரம் டாலர் மதிப்புக்குப் பண்டங்களாக உதவி செய்ய ''யுனெஸ்கோ'' நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

ஏற்கெனவே திருவரங்கம் அரங்கநாத சுவாமி ஆலயத் திருப்பணிக்குப் பண்டங்களாக 'யுனெஸ்கோ' நிறுவனம் உதவி செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் உதவி பெறும் இரண்டாவது திருக்கோயில் இராமேசுவரம் கோயில் ஆகும்.

ஆலயத் திருப்பணியின்போது கோவில் கோபுரங்களைப் புதுப்பித்து வண்ணம் பூசுவது போன்ற வேலைகளைச் செய்ய சவுக்குக் கம்புகளால் ஆன சாரம் அமைக்கப்படுவது வழக்கம். இந்த வேலைகள் முடிந்ததும் அந்தச் சவுக்குக் கொம்புகள் விறகாக எரிப்பதற்கு அன்றி வேறு எதற்கும் பயன்படா.

எனவே, தமிழகக் கோவில்கள் திருப்பணிக்கு நிரந்தரமாக உதவும் பொருட்டு மடக்கி முடுக்கக் கூடிய இரும்புச் சாரம் (இருநூறு அடி உயரம் கொண்டது) அலுமினியத்தால் செய்யப்பட்ட ஏணி, கனமான பண்டங்களை ஆலய விமானம் வரை தூக்கக் கூடிய தானே இயங்கும் சாதனம் உள்ளிட்ட 5 சாதனங்களை அது தரும். தவிர, பருவநிலை மாற்றம் காரணமாகப் பாதிக்கப்படாத வண்ணப் பூச்சுக் கலவை, கருங்கற்களையும் காலத்தால் அழிக்க முடியாதபடி பாதுகாக்கும் ஓர் இரசாயனக் கலவை ஆகிய ஏழு பண்டங்களையும் கொடுத்துதவ இசைவு தெரிவித்துள்ளது. இவற்றிற்காக 10 ஆயிரம் டாலர் ஒதுக்கவும் அனுமதி வழங்கி உள்ளது.

இராமேசுவரம் கோயில் திருப்பணி துவங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணி முடிந்து விடும்.

இராமேசுவரத்திற்கு அடுத்தபடியாக சிதம்பரம் சபாநாயகர் (நடராசர்) ஆலயம், காஞ்சிபுரம் தேவராச சுவாமி ஆலயம் ஆகிய இரு திருக்கோவில்களின் திருப்பணிக்கும் 'யுனெஸ்கோ' உதவி கோரப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மாநிலத்தில் 1,500 கோவில்களுக்குத் திருப்பணி செய்து புதுப்பிக்க அறநிலையத் துறை முடிவு செய்துள்ளது. திருச்சி மலைக்கோட்டை மகா கணபதி கோவில், சோளிங்கர் இலட்சுமி நரசிம்ம சுவாமி ஆலயம், திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் கோவில், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் ஆலயம் ஆகிய நான்கு மலைக் கோவில்களுக்கும் இழுவை ரயில் (வின்ச்) அமைக்கவும், பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு இன்னொரு இழுவை ரயில் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டு இதற்குத் தேவையான சில இயந்திர சாதனங்களை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி கோரி மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. இழுவை ரயில் போட ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஐந்து முதல் ஆறு இலட்சம் ரூபாய் வரை செலவாகும்.

திருவாரூர் தியாகராச சுவாமி, திருநாகேசுவரம், திருவரங்கம், திருநெல்வேலி நெல்லையப்பர், திருவண்ணாமலை ஆகிய 5 கோவில்கள் திருப்பணிக்காக ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மாநில அரசு மானியம் வழங்கியுள்ளது.

முருகப் பெருமானின் ஆறு படை வீடுகளில் ஒன்றான மதுரை பழமுதிர் சோலை (அழகர்) கோவில் வரை பக்தர்கள் வாகனங்களில் செல்ல இதுவரை சரியான பாதை அமைப்பு இல்லை. இந்தக் குறையைப் போக்கிப் பழமுதிர் சோலை, கோபுர கங்கைவரை செல்ல 5 இலட்சம் ரூபாய் செலவில் நல்ல சாலை அமைக்கப்பட்டு அந்த வேலை முடியும் கட்டத்தில் உள்ளது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் வெளிப் பிராகாரம் (கிரி பிராகாரம்), மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் கோபுர விமானத்தைப் புதுப்பித்துத் தளம் அமைப்பது, திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் 20 இலட்ச ரூபாயில் திருப்பணி செய்வது, திருவாரூர் தியாகராசேசுவரர் சுவாமி கோவிலில் நாலாவது இராசகோபுரம் அமைத்துக் கமலாலய நீராழி மண்டபம் அமைப்பது, திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலைப் புதுப்பிப்பது ஆகிய திருப்பணி வேலைகள் இந்த ஆண்டு நடைபெறும் பணிகளில் குறிப்பிடத்தக்கவை.

காஞ்சி அருள்மிகு காமாட்சி அம்மன் கோயிலில் 5 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்படும். அப்போது புதியதொரு இராச கோபுரம் ஒன்றும் எழுப்பப்படும்.

பழனி, திருத்தணி ஆகிய முருகன் திருத்தலங்களில் பக்தர்கள் வசதிக்காகக் கூடுதலாக விடுதிகள் கட்டப்படும். 19 இலட்சம் ரூபாய் செலவில் 108 அறைகள் கொண்ட ஒரு புதிய விடுதி பழனியில் கட்டுவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# 'வள்ளுவர் வெறுத்த ஓவாப்பிணி'




அன்ருெருநாள் முன்னிரவு; உண்ட பின்னர்
அறைசென்று நூல்படிக்க அமர்ந்தேன்; பின்னல்
தென்றல்ஒத்த என்மனைவி வந்தாள்; பக்கம்
திறந்திருந்த திருக்குறளைப் புரட்டிக் கொண்டே
''என்றைக்கோ இருபதுநூ ருண்டு முன்னல்
எழுதிவைத்த இக்குறளைப படிக்கும் போதும்
ஒன்ருென்றும் இனிக்கிறதே, அத்தான்! 'நாட்டின்
ஓவாத பிணி' யென்ருல் என்ன?'' என்ருள்.

''நாட்டுக்குப் பிணிவருமா?' என்று கேட்டாள்
நங்கைக்கு விளக்கத்தைச் சொன்னேன்;'' உள்ள
வீட்டுக்குப் பிணிவந்தே ஒருவர் மாண்டால்
விளக்கொன்றே அணைந்துவிடும்; மரமடர்ந்த
காட்டுக்குள் தீபரவி நோயும் வந்தால்
கரிமிஞ்சும்; சிலஉயிரே போகும்; ஆனல்
நாட்டுக்குத் தீராத பிணியும் வந்தால்
நலமுண்டா? அமைதியுண்டா?'' என்று சொன்னேன்.

''தீராத பிணியென்ருல் என்ன அத்தான்?
தெளிவாகக் கூறுங்கள்!'' என்ருள் மங்கை
''ஏரார்ந்த பைங்கிளியே! விளக்க மாக
இன்னுமொரு உவமையினுல் கூறு கின்றேன்
வேரோடிச் செழித்திருக்கும் செடியின் கீழே
வேர்ப்புழுக்கள் சூழ்ந்துவிட்டால் பட்டுப் போகும்!
ஏரோமச் சீரோடி வளர்ந்தி ருக்கும்
இந்நாடும் இனப்பகையால் அழியும்'' என்றேன்.

பொல்லாத ஆமையொன்று வீட்டுக்குள் குள்ளே
புகுந்திட்டால் அடிமனையே பாழபாழ் அன்ருே?
கல்லாமை, அறியாமை, பொருமை, வாய்மை
கழருமை, சூதாடமை, கயமை, நன்றி
இல்லாமை, முயலாமை, பகைமை, கையால்
இரக்கின்ற இழிவுடைமை,தீமை போன்ற
வல்லாமை பலநாட்டில் புகுமே யானல்
வளநாடு வாழ்ந்திடுமோ?'' என்று சொன்னேன்.

'இல்லை, இல்லை; ஒன்றுமில்லை; வறுமை யாட்சி
எம்மைவிட்டு மீள்வதில்லை' என்றே இங்குப்
பல்லிளித்துத் தூங்குகின்ற மடைய ருக்குப்
பாட்டடியால் அடிகொடுத்தார் குறளார்; 'காணும்
நல்லநிலம் எனும்நானும் என்வ யிற்றில்
நானூறு வகைச்செல்வம் வைத்தி ருக்க
'நல்குரவுக் கூக்குரல்ஏன்?' என்று கேட்டே
நல்மண்ணள் சிரித்திடுவாள் என்ருர் அன்ருே?

நெல்வயலில் நோய்வந்தால் பதரே மிஞ்சும்!
நீருக்கே நோய்வந்தால் வரட்சி மிஞ்சும்!
பல்லுக்கு நோய்வந்தால் சொல்லா மிஞ்சும்?
பாவைக்கு நோய்வந்தால் அழகா மிஞ்சும்?
வில்விழிக்கு நோய்வந்தால் காட்சி ஏது?
விதைகட்கே நோய்வந்தால் நாற்றே ஏது?
நல்லவர்க்கே தொல்லைஎன்ற நோயும் வந்தால்
நாடிங்கே சுடுகாடாய் மாறி டாதா?

கண்ணுக்குத் தெரியாத கிருமிக் கூட்டம்
கவின்உடலில் புகுமானல் காய்ச்சல் தோன்றும்!
மண்ணுக்கும் இதுபொருந்தும்; உடனி ருந்தே
மாய்க்கின்ற உட்பகையால் நாடே வீழும்!
'எண்ணுகின்ற எண்ணத்தில் உயர்வு வேண்டும்;
எல்லாரும் பகுத்துண்ணல் வேண்டும்' என்றே
வண்ணவண்ணக் கருத்தாலே உலகம் வாழ
வழிசமைத்த வள்ளுவரின் பெருமை ஒன்ரு?

ஓயாத நோய்என்று செந்நாப் போதார்
ஒன்றிரண்டா தமிழ்மறையில் கூறி வைத்தார்?
'காய்சின'மே அழிக்கின்ற நோய், நோய் என்ருர்!
'கயமை'யதும் இன்னெருநோய் என்று சொன்னர்!
வாயாரப் 'பொய்யுரைத்தல்' ஒருநோய் என்ருர்!
வஞ்சகரின் 'கெடுநட்பு' மறுநோய் என்ருர்!
தீயநெஞ்ச 'அழுக்காறு' பெருநோய் என்ருர்!
திரண்டுள்ள இந்நோய்கள் ஓய்வ தென்நாள்?

அடியாலே உலகளந்த மேதை இன்னும்
அட்டாவோ எத்தனைஎத் தனைக்க ருத்தை
இடித்துரைத்துப் போயுள்ளார்; இவரைப் போலே
ஏர் உழவர் பெருமையினைச் சொன்னோர் யார், யார்?
'குடிமை'இங்கே ஓங்கட்டும் என்ருர்; ஆனல்
குடிகெடுக்கும் 'குடி' வேண்டாம் என்றே சொன்னர்!
'மடி'தானே அனைத்துக்கும் வீழ்ச்சி என்ருர்;
மக்கள்எல்லாம் கல்வியின்றேல் 'மாக்கள்' என்ருர்!

''வீதிக்கு வீதிபல கொடிகள் நாட்டி
வீணவாதச் சச்சரவுக் கட்சி வைத்துச்
சாதிகளை உருவாக்கித் தேயும் பாழும்
சமுதாய நோய்என்ருே ஒழியும்?'' என்றேன்
''ஆதியிலே சாதியுண்டா?'' என்ருள் இல்லாள்
''அச்சொல்லே தமிழல்ல!'' என்று சொன்னேன்
''ஏதத்தான் தேசீய நூலாய் நந்தம்
எழில்குறள் நூல் ஆகவில்லை?'' என்ருள் மங்கை.

சாகாத முப்பாலால் சட்டம் செய்து
சரித்திரத்தில் தமிழினத்தை உயர்த்தி விட்ட
பாகான வள்ளுவரை உலகோர் மொத்தம்
பாராட்டும் காலமிங்கே தூர மில்லை;
ஏகஇந்தி யாமாந்தர் 'மனு'வை மிஞ்சும்
'இனியகுறள்' போற்றுகின்ற திருநாள் தோன்றும்!
வேகாத சோறெல்லாம் குதிக்கும் போது
வெந்திருக்கும் பானைகள் நாம் பொறுப்போம்!'' என்றேன்.

''ஓவாத பிணியென்ருல் என்ன என்றே
உயர்விளக்கம் அளித்தமைக்கு நன்றி, அத்தான்!
தேவைபல வளருகின்ற இந்நூற் ருண்டில்
திரும்பஇங்கே வள்ளுவனர் வரமாட் டாரா?''
பூவையவள் புதிருடனே என்னைக் கேட்டாள்!
புன்னகையைப் பதிலாக வைத்தேன். பாவை
ஆவலுடன், ''பாலிங்கே ஆறிற்'' றென்ருள்;
ஆம். மூன்ரும் பால்விளக்கம் காணச் சென்ருேம்!



கவிஞர். கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ

JL
V211m,1'0
1,4'5
69683

# காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

**ப**ண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்!

அந்தப் புண்ணியத்தின் தரிசனம் அன்னக் கொடியின் மௌனப் புன்னகையில் வீரமணிக்குக் கிட்டியது. முது மொழியின் இளம் ரத்தம் அப்போது அவனுக்கு ரத்த தானம் வழங்கியிருக்கத்தான் வேண்டும். இல்லையெனில், அவன் அவ்வாறு மனம் விட்டு —வாய்விட்டுச் சிரித்திருக்க மாட்டான்! ''அம்மான் மகளா? . . .வா, வா!'' என்று காதலாகிக் கனிவுடன் முகமன் மொழிந்தான். உள்ளங்கையில் நெல்லிக் கனியென மின்னிப் பளிச்சிட்ட அந்த வைரச் சிமிக்கிகளின் தரிசனம் அவனை அப்பொழுது நிலை குலையச் செய்தது என்னவோ உண்மைதான். என்றாலும், எல்லாச் சங்கடத்தையும் கடந்தும் கடத்தியும் அவன் சிரித்தான்.

பெரியவர் ஆதிமூலத் தேவர் சிமிக்கிகளைப் பறி கொடுத்த மனச் சலனத்தோடு கைகளைப் பிசைந்தவராக ஏக்கமும் துக்கமும் புடை சூழ—படை சூழ நின்றார். வேர்வை வழி தேடி வழிந்து ஓடியது. கட்டுக் கலைந்த கட்டுக் குடுமியைத் தட்டிச் சேர்ந்து முடிந்து கொள்ளக் கூட நினைவிழந்து தவித்தார் அவர். கொண்ட வைராக்கியத்தைக் கொண்டு செலுத்தத் தீட்டியிருந்த திட்டத்தில் பெற்ற மகனே பிடி மண்ணைப் பிடித்துப் போட்டு விட்டானே என்ற மனத்தாங்கலோடு, பூசை வேளையில் புகுந்த அன்னக் கொடியின் தோற்றமும் அவரைத் தள்ளாடித் தடுமாற வைத்துவிட்டது. 'மச்சினன் மகள் அன்னத்தின் அலங்காரச் சிமிக்கிகளையே பகடையாக்கி, மச்சினனை ஓட ஓட விரட்டத் துடிச்ச எனக்கு முன்னே, சிமிக்குகளுக்கு உடையவளான அன்னம் எப்படி இங்கிட்டு வந்திச்சாம்? .......தடயம் கிடைச்ச தடத்திலேயே ஓடோடி வந்திருக்குமா இந்தப் பொண்ணு? . . . இனிமேலே நான் ராமையாவைப் பழிக்குப் பழி வாங்க ஏது சாத்தியம்?..' என்று நினைத்து நெஞ்சம் மருள் கொண்டு நினைவுகள் மறுகிக் குறுக நின்றார் அவர்.

''அத்தான்!'' என்று உயிரை அழைத்திடும் உயிரின் உறவோடு அழைத்தாள் அன்னம். நிலா முற்றத்தை முற்றுகை இட்டிருந்த நிலவுப் பால் நுரைகள் கரை தாண்டி, கன்னியின் பவள மேனியில் பட்டுத் தெறித்துக் கொண்டே இருந்தன.

''அன்னம்!'' என்று பதில் குரல் கொடுத்தான் வீரமணி. ''நல்லா இருக்கீங்களா?''

''உன் புண்ணியத்திலே நல்லா இருக்கேன், அம்மான் மகனே!''

''நீ . .?''

''உங்க புண்ணியததிலே நானும் நல்லாய்த்தான் இருக்கேனுங்க, அயித்தை மகனே!''

பேசிய அவள் பாசம் உணர்த்திய பாந்தமும், பேசாத அவள் நேசம் உணர்த்திய பந்தமும் வீரமணியை எங்கெங்கெல்லாமோ வழி காட்டி, வழி நடத்திச் சென்றிருக்கக் கூடும்.

அவனுடைய தளர்ந்த நெஞ்சம் மலரத் துடித்துக் கொண்டேயிருந்தது. கைக்கு மெய்யாகக் காட்சி தந்த வைரச் சிமிக்கிகளை உரியவளிடம் ஒப்படைத்து விட வேண்டியது நாணயம் கூடிய பண்பாகும் என்று அவன் கருதினான். ஆனால், எப்படி ஒப்படைப்பது, என்ன காரணம் காட்டி ஒப்படைப்பது என்பது இப்போது அவனுடைய மண்டையைக் குடைந்த பிரச்சினையாக ஆகிவிட்டது. அன்றொரு நாள், தான் சுவைத்து எச்சில்படுத்திய முட்டைத் தோசையை அன்னம் சுவைத்துத் தின்ற நடப்பு அவனுக்குப் புதிய வல்லமையைக் கொடுத்தது. தனக்குச் சிலட்டூரில் அப்பா சம்பந்தம் முடித்திருந்த ஏமாற்றத்தின் பூச்சாண்டித் தனத்தைப் பற்றிக் கருதவே அவனுடைய அந்தரங்க உள்ளம் கூசிய நிலையில், உள்ளங்கையிலிருந்த வைரச் சிமிக்கிகளை ஒன்று சேர்த்துப் பையப் பைய மேலே உயர்த்திக் காட்டினான் அவன். உடையவளுக்கு உடைமை பூண்ட உடைமையை ஒப்படைப்பதற்கு அப்பாவின் ஒப்புதலோ அனுமதியோ தேவையில்லை என்பதை அவன், அறிவு பூர்வமாக மட்டுமின்றி, உணர்வு பூர்வமாகவும் அறிந்திருந்தான்.

''நான் வரட்டுங்களா, அத்தான்?'' என்று விடை கேட்டாள் அன்னம்.

விசேஷம் ஏதாவது உண்டா, அன்னம்?''

'வாய் பேசத் தெரியாத எங்க வீட்டு வெள்ளையை வாய் பேசத் தெரிஞ்ச நீங்க கட்டிப் போட்டிருக்கிறது தானுங்க விசேஷம்!'' என்றாள் அன்னம்.

பொட்டில் அறை பட்ட மாதிரி இருந்தது வீரமணிக்கு.

அன்னம் தன் அத்தையின் அன்புக் கணவனை அன்பு பிசகாமல் பார்வையிட்டாள்.

ஆனால், அவரோ அன்னத்தையும் வீரமணியையும் பொருமையுடன் நோக்கினார். பிறகு, ''அன்னம்! உங்க காளை தப்புச் செஞ்சுது; அதுக்கு உண்டான தண்டனையைக் கொடுத்திட்டான் எங்க வீரமணி!'' என்று ஒரு அபாண்டப் பொய்ப் பழியை மகன் பேரில் சுமத்தி விட்டார் பெரியவர்.

வீரமணிக்குச் சுருக்கென்'றது. பெற்றவரின் அநியாயப் பழிக்குப் பின்னே கள்ளத் தனமாக ஒளிந்திருந்த சூது மதியின் சூட்சுமத்தை அவன் அறிந்துகொள்ளத் தப்பவில்லை. அம்மான் மகளுக்கு என்பேரில் ஆத்திரத்தை உண்டு பண்ணத்தான் அப்பா இப்படிப் பழி போட்டிருக்கிறார்! — அப்பாவின் கெட்டி யாருக்கு வரும்? சரி; இந்த அப்பாதானா அம்மானிடம் ஏமாந்துவிட்டார்?

அன்னக் கொடி சிரித்தாள். சிரிப்பின் காந்தி அவளுடைய இயல்பான அழகை 'ஒட்டிக்கு ரெட்டியாகக் கூட்டிக் காட்டியது. சரியத் துடித்த முந்தானைப் பகுதியைச் சரிப்படுத்தியபடி, ''அத்தான், ஒரு பாவமும் அறிய மாட்டாங்க. பின்னே, அவங்க மேலே ஏதுக்கு வீண் அபவாதத்தைப் போடுறீங்க? எங்க வெள்ளையைக் கட்டிப் போட்டவங்க நீங்க! இந்த உண்மையை நான் அறியாமல் இல்லே! . . .'' என்று தெரிவித்தாள் அன்னம்.

ஆதிமூலம் சற்று நேரம் மௌனம் காத்தார். பிறகு, ''தப்புச் செய்கிறவங்க தண்டனையை அனுபவிச்சுத்தான் தீர வேணும்! புரிஞ்சுக்க, அன்னம்!'' என்று புத்தி சொன்னார்.

''தப்புத் தண்டா செய்கிறவங்க கட்டாயம் தண்டனையை அனுபவிச்சுத்தானே தீர வேணும்?''

''ஓ! . . ஆமா, ஆமா!''

அன்னத்தின் வாய்ச் சிரிப்பு வழி தடுமாறி வழிந்தது. மாமன்காரர் மறுகி நின்ற திசைக்கு அவள் தன் பார்வையைத் திசை திருப்பி, வீரமணியின் மீது நிலைக்கச் செய்தாள். ''எல்லாம் எனக்குப் புரியுமுங்க, மாமா!'' என்றாள் அவள். அப்புறம், அத்தை மகனை ஏறிட்டு நோக்கினாள். ''எங்க அப்பா சொன்ன மாதிரி, எங்க வெள்ளைக் காளையை நல்ல தனமா எங்க கையிலே ஒப்படைச்சாக வேணுமுங்க,'' என்றாள். ஆதிமூலத்தின் மீது ஏவி விட்டிருந்த பார்வையை மாற்றி, அத்தை மகன் பேரில் ஏவி விட்டாள். ''அத்தான் போயிட்டு வரட்டுங்களா?'' என்றாள்.

உடன் இருந்த தந்தையையும் மறந்து, அன்னக் கொடியையே இமைக்காமல் பார்த்தான் வீரமணி. பிறகு, தன் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளை அவளுடைய பார்வையில் படும்படியாக ஏந்தியபடி, அன்னத்தையும் அப்பாவையும் ஓடுகிற ஓட்டத்தின் கதியோடு எடை போட்டான். அடி மனத்தில் ஏற்பட்ட மாறுதலின் விளைவாக, நியாயத்தின் அடிப்படையில் நல்லதொரு முடிவுக்கு வரலானான் அவன். ''வேறே விசேஷம் ஒண்ணும் இல்லையா?'' என்று எதையோ நினைவூட்ட விரும்பிக் கேட்டான் தேவர் மைந்தன்.

அன்னம் இந்தக் கேள்விக்கும் மௌனப் புன்னகையையே விடையாகச் சிந்தினாள். சிந்தாத முத்துக்களாகப் பற்கள் காட்சியளித்தன.

''விசேஷத்தைச் சொல்ல வேண்டியவங்களும் சொல்லிக் காட்ட வேண்டியவங்களும் நீங்கதானுங்களே, 'அத்தான்?'' என்றாள் அவள்.

அன்னக் கொடியை வீரமணி ஏறிட்டுப் பார்த்த நேரத்தில் தன் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளையே அன்னம் தொடுத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்த காட்சியைக் கண்டான்! வைரச் சிமிக்கிகளைப் பற்றி உடைமைக்காரியான அன்னம் ஏன் மூச்சுப் பேச்சுக் காட்டக் காணோம்? 'என்னை அப்பா சோதிக்கிறது போறாதின்னு அம்மான் மகளும் சோதிக்குதாங்காட்டி? . . .' இவ்வாறு மனம் குமைந்தான்.

அப்பொழுது :

பெரியவர் பெரிதாக ஒரு கனைப்புக் கனைத்தார். அது ஒரு சமிக்ஞை — அடையாளம். மகனைத் திசை திருப்பச் சாகசம் பயின்று தோற்றுவித்த ஓர் உபாயம். ஆனால், வீரமணி என்னவோ சிந்தனை பண்ணியவாறு நின்றதைக் கண்டதும், அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. பகடைக் காய்களாக்கி வைரச் சிமிக்கிகளை உருட்டி விளையாடி, அதன் மூலம் ராமையாத் தேவரை உருட்டி வீழ்த்தக் கனவு நீட்டிக் கொண்டிருந்தவர் அவர். 'வைரச் சிமிக்கிகளை என் அனுமதி இல்லாமலே அன்னத்திடம் வீரமணி கொடுத்து விடுவானோ, என்னவோ?' என்னும் தவிப்பில் அவர் தண்ணீராய் உருகினார், பாவம்! . . .

வீரமணிக்கு இப்போது ஒரு மாற்றம் தேவைப்பட்டது. ''அன்னம்!'' என்று அன்பு ஒழுக, பாசம் சிந்தக் கூப்பிட்டான் அவன். கூப்பிட்டுக் கொண்டே, கூடத்தின் மையப் பகுதியை அண்டி நடந்தான். வானொலிப் பெட்டியைத் திருகினான். ''அன்னம், விசேஷம் என்கிட்டேயிருந்துதான் வரவேணும்னு நீ ஆசைப்பட்டால் அந்த விசேஷத்தை நான் சொல்லிப்பிடுறேன்; சொல்லிக் காட்டிபிடுறேன்!'' என்று கூறி அழகுடன் முறுவல் பூத்தான். அன்னத்தின் சொக்கும் புன்னகை அவனைச் சொக்குப்பொடி தூவிச் சொக்க வைத்தது! 'ஆகா!..உயிரினும் இனிதாய்ப் பெண்மை இனிக்கத்தான் செய்கிறது!'...பாரதியில் இணைந்தான் அவன் !....

மறுகணம், வானொலியினின்றும் பாட்டுப் புறப்பட்டது.



## 13. பெண்மை இனிக்குதடா

''காணி நிலம் வேண்டும்-பராசக்தி!
காணி நிலம் வேண்டும்!—
அங்கு
தூணில் அழகியதாய்—
நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—
அந்தக்
காணி நிலத்திடையே—ஓர்
மாளிகை
கட்டித்தர வேண்டும்!....''

பாட்டு திடுதிப்பென்று ஏன் நின்று விட்டது?

வீரமணி மருண்டான். தன் தகப்பனார் ஆவேசத்தோடு வானொலியின் விசையை நிறுத்திவிட்ட அலங்கோலத்தைக் கண்டதும், அவனுடைய ரத்த நாளங்கள் துடித்தன. ''அப்பா, நல்ல பாட்டாச்சுங்களே? நல்ல இடத்திலே ஏன் நிறுத்திப்பிட்டீங்க?'' என்று ஆற்றாமையோடு வினவினான்.

''நல்ல பாட்டை நல்ல இடத்திலே நிறுத்தினால்தான், அந்த நல்ல பாட்டோட நல்ல ஞாபகம் நம்ப நெஞ்சிலே சதா ஒலிச்சிக்கிட்டே இருக்கும் ! சரி சரி. பின்கட்டுப்பக்கம் கொஞ்சநேரம் வாயேன்.

எனக்கு நெஞ்சை என்னமோ பண்ணுது!'' என்று பரிதாபமாகக் கூறிவிட்டு, திறந்த மார்பைத் திறக்காமலே தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார் தேவர்.

வீரமணி பதறினான்; துடித்தான்; துவண்டான்; தவித்தான். பாசத்தை பாசத்தின் நிமித்தம் நம்பினான். பாசத்தை நம்ப 'நிமித்தம்' கேட்கவேண்டுமா?- அவன் வரை பாசம் ஒரு பூவிலங்குதான்! அப்பாவைத் தொடர்ந்தான். ''அன்னம், கொஞ்சம் பொறு, திரும்பிடுறேன்'', என்று சொல்லிய பிறகு, நடையை ஓசைப்படாமல் விசைப்படுத்தினான்.

ஆதிமூலத் தேவர் கைந்நொடிப் பொழுதுக்குக் கைவிரல்களைச் சொடுக்கிக்கொண்டிருந்தார்!

பின்கட்டில் நட்சத்திரக் குழந்தைகள் சிரிக்கின்றன

வீரமணி இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்ததன் விளைவாக ஏற்பட்ட மனச்சுமையோடும் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளின் சுமையோடும் நின்றான்;

தனக்குத் தானே என்னென்னவோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு, அப்பாவின் தந்திரம் என்னவாக இருக்கக் கூடுமென்ற ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டவன்மாதிரி, ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தித் தலையையும் ஆட்டிக் கொண்டான். ஆனாலும், மனத்தின் இரண்டகநிலை அவனது முகத்தில் 'களை'யைத் தோற்றுவிக்க மறுத்தது.

''வீரமணி!''

''சொல்லுங்க, அப்பா!''

''அன்னத் தோட வைரச் சிமிக்கிகளை என் கையிலே கொடுத்திடு!''

''அன்னத்தோட வைரச் சிமிக்கிகளை அன்னத்தின் கையிலேதான் கொடுக்கவேணும்!''

''என் கையிலே கொடுத்திடு''

''ஊகூம்!''

''கொடுத்திடுப்பா, தம்பி!''

''ஏன், நீங்க காதிலே போட்டுக்கிடப் போறீங்களா?''

''தம்பி, வைரச் சிமிக்கிகளை நான் போட்டுக்கிறதுக்காகக் கேட்கல்லே. விளையாடக் கேட்கிறேனுக்கும்!''

''விளையாடவா? சிமிக்கிகளோடவா விளையாடப் போறீங்க, அப்பா?''

''நீ என்ன தம்பி விரல் சூப்புகிற வாண்டு மாதிரி கேட்கிறே?..அன்னத்தோட வைரச் சிமிக்கிகளைப் பகடைக் காய்களாக்கி, உன் அருமை அம்மான் ராமையாவோடே விளையாடப் போறேன்!''

''என் அம்மான் மகள் அன்பு அன்னக் கொடியோட வைரச் சிமிக்கிகளைக் கண்டெடுத்த புள்ளி நான். அதை என் கையிலேயிருந்து பறிச்சு நீங்க விளையாட ஆரம்பிச்சீங்கன்னு, அப்பாலே அந்தச் சங்கதி ஊர் நாட்டிலே அடிபட ஆரம்பிக்கும்; அப்புறம் உங்களைப்பற்றி ஊர்ச்சனங்க கொண்டிருக்கிற நல்ல பெயருக்கு மாசு ஏற்படும். இல்லிங்களா, அப்பா?.. நீங்க என் அம்மானோடே உங்க இரண்டு பேருக்கும் ஊடாலே உள்ள விவகாரத்தை உத்தேசிச்சு மோத நினைச்சால், அதுக்கு இந்த வைரச் சிமிக்கிகளைக் கையாள நினைக்காதீங்க; அப்படி நீங்க நினைச்சால், அந்தத் துரோகத்துக்கு நான் இடம் தர ஒப்பவேமாட்டேன்! உங்களை அம்மான் ஏய்ச்சதுக்குப் பழிக்குப்பழி வாங்க நீங்க விருமபினால், அதுக்கு ஊர் நாட்டிலே வழிக்கா பஞ்சம் வந்திடும்?....''

வீரமணியின் பேச்சில் சூடு பறந்தது.

''இதுதான் உன் முடிவா?''

''ஊம்!''

''நீ இப்பைக்கு அந்த வைரச் சிமிக்கிகளை என்ன செய்யப் போறே?''

''அது என் சொந்த விஷயம்! அது சம்பந்தமாய் உங்ககிட்டே இப்போ எதையும் சொல்ல ஆசைப்படல்லே!..'' என்று வாழைப்பழத்தில் செருகிய சூரிக்கத்தியாகச் சொற்களைப் பாய்ச்சினான் வீரமணி.

ஆதிமூலம் செயலற்று நின்றுவிட்டார். தலைமுடிகள் தோளில் புரள, கோபம். ஆறுமல் அங்கிருந்து வெளியேறினார்.

கொஞ்ச நாளாக அப்பாவின் நடத்தை ரொம்பவும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது ! வீரமணி நெடுமூச்செறிந்தான். கையில் மறைந்திருந்த சிமிக்கிகளின் வைர ஒளி அவனது உள்ளுணர்வுகளைத் தொட்டும் தொடாமலும் உறுத்திக் கொண்டிருந்த சங்கடத்தை இனிமேலும் அவன் சோதனைப் படுத்த ஒப்பவில்லை. ஆகவே, வெளியேறினான். நிலவுக் காற்று இதமாகவே இருந்தது. ''அன்னம், அன்னம்!'' என்று அன்போடும் பாசத்தோடும் நேசத்தோடும் விளித்தான்.

முன்கூடத்தில் கையில் எதையோ பிரித்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள் அன்னக் கொடி. தோள்பட்டையிலிருந்து புடவை சரிந்து விடும் அளவுக்கு அவள் மனம் தடுமாறி விடவில்லை.

முதற் குரலைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தோன்றவில்லை அன்னம்.

வீரமணி மறுபடி விளித்தான்.

''என்னுங்க, அத்தான் ?'' என்று கேட்டாள். ''மாமாவுக்கு நெஞ்சடைப்பு சரியாயிடுச்சுங்களா?'' என்று தொடர்ந்தாள்.

''ஆமா; சரியாயிடுச்சு. அப்பாவுக்கு என்ன வெல்லாமோ புதுசு புதுசாய் வியாதிகள் தாக்குது!''

''எல்லாம் சரியாகிப் போயிடுமுங்க அத்தான். என் கையினாலே நாலு வேளை சோறு ஆக்கிப்போட்டேன்னு, எல்லாச் சீக்கும் கடலே கதின்னு ஓடிப் போயிடாதுங்களா?''

''ஓகோ!''

வீரமணி கம்பீரமான தன்னம்பிக்கையின் கம்பியில் நின்று ஊசலாடினான். நல்ல சிரிப்பும் பீறிட்டது. பெண்மை இப்போதும்தான் இனிக்கிறது! பேஷ்!....

''நான் புறப்படுகிறேன். அப்பாவுக்குப் பசி தாங்காது. போகட்டுமா?''

''போயிட்டு வரட்டுமான்னு கேள், அன்னம்!...இரு; ஒரு நிமிஷம் நில்லு, அம்மான் மகளே!'' என்று அன்பின் நெகிழ்ச்சியுடன் சல்லாபமாகச் சொல்லிக் கொண்டே, இதயத்தின் காதற் துடிப்புடன் காதற் பெண்ணின் கடைக்கண் பணியினை அனுபவிக்க, மெல்ல மெல்ல — மெள்ள மெள்ள நெருங்கினான்.

அன்னம் நாணத்தின் தங்கப் பதுமையாக நின்றாள்.

''அன்னம், உன் வைரச் சிமிக்கிகளை அம்மான் மடியிலே வச்சுக்கிட்டு இருந்திருக்காங்க போலே! வெள்ளை விசயமாக அவர் இங்கிட்டு வந்த சமயத்திலே, அந்த வைரச் சிமிக்கிகள் மடியிலேருந்து நழுவி எங்க வீட்டுத் திட்டி வாசல் புறத்திலே விழுந்து கிடந்திச்சு. நான் எடுத்து வச்சிருந்தேன். இந்தா!'' என்று ஓர் அமைதியின் நிறைவோடு பேசிவிட்டு, வைரச் சிமிக்கிகளைக் கைவிரல்களிலே ஏந்தி நீட்டினான் வீரமணி.

''இந்த வைரச் சிமிக்கிகள் என்னுடையது இல்லீங்களே? ஒரு வேளை, இதுகளை என் கண்ணாலத்துக்காக அப்பா செஞ்சிருந்தாலும், அதைப் பற்றி அப்பா என்கிட்டே கட்டாயம் சொல்லியிருப்பாங்களே? இது என்ன ஒரே பூடகமான சமாச்சாரமாக இருக்குதுங்களே, அத்தான்? அப்பா மடியிலேருந்து இந்த வைரச் சிமிக்கிகள் விழுந்திருந்தால், அந்த ரகசியம் அப்பாவைக் கேட்டால்தான் விளங்கும்! ஆமாங்க, அத்தான்!''

அன்னம் திகைப்பும் மலைப்பும் மீதூர நின்றாள்.

அப்போது:

''வீரமணி!'' என்று அழைத்துக் கொண்டே வந்து நின்றார் ஆதிமூலத்தேவர்.

''மாப்பிள்ளை!'' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்து நின்றார் ராமையாத்தேவர்.

வீரமணி கதிகலங்கித் தலையை நிமிர்த்தினான். பிறகு அவர்கள் இருவரையும் அருளை பளிச்சிட நோக்கினான். ''நீங்க ரெண்டு பேரும் கொஞ்ச நாழி பேசாமல் நில்லுங்க. நானும் அன்னமும் கொஞ்ச நாழி தனியே ஒரு ரகசியம் பேசி முடிச்சிட்டு வந்துப்பிடுறோம்'' என்றான். பிறகு, அன்னக் கொடியை நோக்கி, ''அம்மான் மகளே, அங்கிட்டு கொல்லைப் பக்கம் வா! ஒரு சங்கதி இருக்கு'' என்று தெரிவித்தான்.

தேவரும் தேவரும் விழித்தார்கள், பாவம்!

அம்மான் மகள் அன்னக்கொடியும் அத்தைமகன் வீரமணியும் நடந்தார்கள்!

அவர்கள் இருவரையும் ''வருக! வருக!'' என்று இரு கைகளையும் ஏந்தி வரவேற்றது அந்தத் தனிமை!

(வளரும்


உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

'ப்ளேனேஃபிக்ஸ்?'

தேவை.



சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் ''ப்ளேனேஃபிக்ஸ்'' உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும. பருத்திப் பயிரிலே ''ப்ளேனேஃபிக்ஸ் மருந்தைப பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன

அசல் தயாரிப்புதானா என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறாதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட

பம்பாய் கல்கத்தா, கௌஹாத்தி, இந்தோர் லக்னோ, சென்னை, நியூடெல்லி, பாட்னா

''ப்ளேனேஃபிக்ஸ்'' என்பது ஒரு எம & பி. ரகத் தயாரிப்பு

* டிரேட் மார்க்

## சிறுவர் பகுதி



# வானொலிக் கல்வி

வானொலியில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவதைக் கேட்கிறோம். குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பல சுவையான நிகழ்ச்சிகள் அவ்வப்போது ஒலிபரப்பாகி நம்மையெல்லாம் மகிழ்விக்கின்றன. கோடை விடுமுறை முடிந்து, பள்ளியெல்லாம் திறந்து பாடம் நடக்கும் நேரமல்லவா? அதனால் வானொலி நிகழ்ச்சிகள் மீண்டும் தொடங்குகின்றன. சூலை 15-ஆம் நாள் கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் மாணவர்க்குப் பயன் தரும் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துள்ளார். குறிப்பாக வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைகின்றன என்பதை இக் கட்டுரை மூலம் தெரிந்து கொள்வோமா?

சென்னை, திருச்சி வானொலி நிலையங்களின் கல்வி ஒலிபரப்பு முதன் முதலாக முறையே 1938, 1940-ஆம் ஆண்டுகளில் தொடங்கியது. அப்பொழுது கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் 1938-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ந் தேதி ஒலிபரப்பைத் துவக்கி வைத்தார். 1965 வரை இந்த நிகழ்ச்சிகள் வகுப்புவாரியாகத் திட்டமிடப்படாமல் பொதுவாக உயர்நிலைப் பள்ளி வகுப்புகள், நடுநிலைப் பள்ளி வகுப்புகள் என்று பிரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. ஆயினும் நிகழ்ச்சிகள் பாடத் திட்டங்களைச் சார்ந்தே அமைக்கப்பட்டன. நிகழ்ச்சிகளைக் கேட்கும் மாணவ, மாணவியர்களுக்குக் கற்கும் முறையில் ஒரு புதுவித அனுபவத்தை வளர்த்து அறிவு பெருகக் கல்வி ஒலிபரப்பு வகை செய்து வந்தது.

1965-ஆம் ஆண்டிலிருந்து, சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் கல்வி நிகழ்ச்சிகள் வகுப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு, 6-வது வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பு மாணவ, மாணவியரும் அவரவர்கள் பாடத் திட்டத்தை ஒட்டிய நிகழ்ச்சிகளைக் கேட்டு, வகுப்பு அறை அறிவை வளப்படுத்திக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டன.

இவ்வகுப்புவாரி முறையால், கல்வி நிகழ்ச்சிகளைத் தீவிரமாகக் கேட்கும் ஊக்கம் பள்ளிகளில் பெருகி வருகிறது. பள்ளிகளிலிருந்து தனிப்பட்ட ஆசிரியர் மாணவர்களிடமிருந்தும் சென்னை, திருச்சி நிலையங்களில் பெற்றுள்ள கல்வி நிகழ்ச்சி சம்பந்தமான கடிதங்கள், மதிப்பீடு அறிக்கைகள் இவைகளைக் கொண்டு கவனித்தால், தற்பொழுது சுமார் 3,000 பள்ளிகள் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயன்பெறுகின்றன என்று தெரிந்து கொள்கிறோம்.

வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல், அறிவியல் ஆகிய பாடங்கள் இடம் பெறுகின்றன. இப் பாடங்களை ஒட்டிய நிகழ்ச்சிகள், அந்த அந்த வகுப்புப் பிள்ளைகள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில், சுவையுள்ள நாடகமாகவோ, சித்திரமாகவோ, விளக்கப் பேச்சாகவோ அமைக்கப்படுகின்றன. வெறும் உரை வடிவில் அமைக்கப்படும் நிகழ்ச்சிகள் மிகக் குறைவு. இந்த முறை, கேட்கும் பிஞ்சு உள்ளங்களில் செய்திகள் நன்கு பதிவதோடு, கேட்கும்போது அலுப்புத் தட்டாமலும் இருக்க வகை செய்கின்றது. இலக்கியம், நாட்டு நடப்பு, நவீன விஞ்ஞானம், பெரியார்களின் வாழ்க்கை, வள்ளுவப் பண்புகள் இது போன்ற பல செய்திகள் சிற்றுரையாகவோ, சிறு சித்திரமாகவோ ஒலிபரப்பாகின்றன. இவை அந்தந்த வகுப்பிற்கான பாடத் திட்டத்தையொட்டி அமைந்தவை.

நிகழ்ச்சிகளில் மாணவர்கள் நேரடியாகப் பங்கு கொள்ளும் முறையில், வினாடி வினா நிகழ்ச்சிகள், மாணவர் விவாத அரங்குகள், பட்டி மன்றங்கள் இவை போன்ற நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகி வருகின்றன. அறிவை வளர்த்துக் கொள்வதில் ஒரு போட்டியும் உற்சாகமும் இந் நிகழ்ச்சிகளால் மாணவர்களுக்கு ஏற்படுகின்றன எனக் கூறலாம். இது தவிர, நாட்டு முன்னேற்றத்தையும், அறிவியல் முன்னேற்றத்தையும் நேரில் பார்த்து உணரும் ஒரு அனுபவத்தைப் பெறும் வகையில், தமிழ் நாட்டில் உள்ள தொழிற்சாலைகள், வானிலை ஆராய்ச்சிக் கூடம், பால் பண்ணை, சிற்பங் கூடங்கள், அனல் மின் நிலையம் போன்ற இடங்களுக்குச் சில மாணவர்களை அழைத்துச்சென்று, அங்கு நடக்கும் பணிகளையும் இயங்கும் முறைகளையும் அங்குள்ள பணியாளர்களைக் கொண்டே கூறச் செய்து, அந்தக் கருத்துக்களை எல்லாம் ஒலிப்பதிவு செய்து அமைத்து ஒலிபரப்பப் படுகின்றன.

இவை தவிர, 6,7,8-ஆம் வகுப்புகளுக்கு அந்தந்த வகுப்பிற்கான ஆங்கிலப் பாட நூல்களை ஒட்டி ஒவ்வொரு வகுப்பிற்கும் 12 ஆங்கிலப் பாடங்கள் ஒலிபரப்பாகின்றன. உயர்நிலை வகுப்புகளுக்கும் பாட நூல்களை ஒட்டியே ஆங்கில நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன. பெங்களூர் வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தின் கல்வி வல்லுநர்களைக் கொண்டு இப் பாடங்கள் நடத்தப்படுவதால், மொழிப் பயிற்சியில் சரியான பேச்சு முறையைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பள்ளிக் குழந்தைகள் பெறுகிறார்கள்.

ஆங்கிலத்தில் வானொலி ஆசிரியர் கூறும் ஒவ்வொரு பயிற்சிக்கும் தமிழில் சிறிய முன் குறிப்பும் நிகழ்ச்சியுடன் இணைக்கப்படுவதால், பயிற்சி முறைகளை நிகழ்ச்சி நடக்கும் போதே மாணவர்கள் முன் கூட்டிப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆங்கிலப் பாட நிகழ்ச்சிகளிலும் கதைப் பகுதி, ஒலிக் குறிகளோடு சுவையான நாடக வடிவிலேயே அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டிலும் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளின் விவரங்கள் அடங்கிய —வகுப்பு வாரியாக அமைத்த குறிப்பேடுகள், சுவரொட்டிகள் முதலியன நிகழ்ச்சிகளைக் கேட்பதாகப் பதிவு செய்து கொண்டுள்ள பள்ளிகளுக்கு இலவசமாக அனுப்பப்படுகின்றன. கிராமப் பள்ளிகளும், சிறிய நகரப் பள்ளிகளும் அதிகமாக இந்த நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயன் பெறுகின்றன. நாடக, சித்திர வடிவில் அமையும் நிகழ்ச்சிகளும், ஆங்கிலப் பாட நிகழ்ச்சிகளும் பெரிதும் பயனுள்ளவையாக இருப்பதாக ஆசிரியர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் வகுப்பறைப் பாடங்கள் போலில்லை. வகுப்பறையில் கையாள முடியாத சில முறைகள், உத்திகள் இவைகளை வானொலி நிகழ்ச்சிகளில் கையாள முடிகின்றன. நாடகங்களை யொட்டிய புதிய செய்திகளையும் வானொலி திரட்டி அளிக்கிறது. மேலும் பள்ளிகள் அழைக்க முடியாத சில வல்லுநர்களின் உரையை அவர்கள் குரலிலேயே வானொலி வழங்குகிறது. அத்தகைய சில காரணங்களால் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் பயிற்சி முறையிலே ஒரு தனித் தன்மை பெற்று விளங்குகின்றன. ஆகையால், இவை கற்கும் முறையில் மாணவர்களுக்கு நன்கு பயன்படுவதுடன், கற்பிக்கும் முறையில் ஆசிரியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவும் அமைகின்றன.

எனவே, வானொலிக் கல்வி நிகழ்ச்சி நிரலை, வகுப்பு பாட நேரத்திலே இணைத்து, மாணவர்கள் தவறாது கேட்கச் செய்தால், மாணவர்களின் கல்வி அறிவு, வளத்திலும் தரத்திலும் மேலும் உயரும். நாட்டின் கல்வி முன்னேற்றத்தில் தனக்குரிய பணியை நல்ல முறையில் ஆற்றுவதே, வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளின் குறிக்கோளாகும்.

—பி.வி.ஜி.

# நலவெண்பா

மருதங்குடி வெங்கடேசன்

பாலமுத மேனும் பசியாத போதினிலே
மேலும் அருந்துவது வேதனையாம் — வேளைதொறும்
முன்னுண்ட நல்லுணவு முற்றும் செரித்துவிட்ட
பின்னுண்டு நல்லுயிரைப் பேண்.

நீரோடு தேன்கலந்து நித்தம் அதிகாலை
ஆரமுதாய் எண்ணி அருந்துவதால் — சீராய்
இதயம் இயங்கும் எடைகுறையும் மிக்க
புதுவலிமை உண்டாகும் போற்று.

என்றுமிரு வேளை எளிதாய் மலங்கழிதல்
நன்றாம் உடல் நலம்பெறுமாம்—நந்தம்
குடலிலே தூய்மை குறைந்தாலே நல்ல
உடல்தூய்மை குன்றும் உணர்.

விரும்பிமிகத் தேநீர் வெறும்வயிற்றில் காப்பி
அருந்துவதால் தீமை அதிகம் — நரம்பு
தளர்ச்சி பசியிலாத் தன்மைதூக்க மின்மை
நலக்குறையும் உண்டாகும் நம்பு.

மோரை மிகவிரும்பு மூச்சுவிட்டு மெல்லமெல்ல
நீரை அருந்து நிரம்பவே—கீரைவகை
சேரும் எளிய சிறந்த வுணவுண்டு
பாரில் நலத்தையே பார்.

எப்போதும் நம்முணவில் ஏறும் புளிமிளகாய்
உப்பும் குறைதல் உயர்வாகும்—செப்புகிற
இம்மூன்றில் ஒன்றதிகம் என்றாலும் அவ்வுணவால்
நம்முடலில் தீங்குவரும் நம்பு.

இருமல் எனுங்கபநோய் இல்லாமல் நீங்கும்
திருவும் வலிவுமே சேரும்—விரைவாய்
முசுமுசுக்கை தூதுவளை மூலிகையின் சாறெடுத்துப்
பசுமோரில் பாலில் பருகு.

பார்போற்றும் வல்லாரைப் பச்சிலையின் சாறெடுத்துச்
சீர்நல்கும் ஆவின்பால் சேர்த்துண்டால்—ஓர்பிணியும்
நேராது நல்ல நினைவாற்றல் ஓங்கிவரும்;
சோராத உள்ளம் தரும்.

பொல்லாநோய் சேர்க்கும் புகைசுருட்டு வாழ்விலே
பொல்லாங்கைச் சேர்க்கும் புனைசுருட்டு—நல்லோர்
விரும்பாத தீப்பழக்கம் வேண்டாவாம் யார்க்கும்
கரும்பாக வாழ்வாய் களித்து.

தேவையிலாப் பேச்சினிலும் தின்பதிலும் உண்பதிலும்
நாவை அடக்கென்றார் நம்குறளார்—பாவாய்
அடக்க முடைமை அறிவுடைமை கொண்டு
நடக்கும் முறையே நலம்.

உள்ளதையே கூறுகிறோம்: நிரூபணமான உழைப்புத்திறம் என்றால் இதுவே நிரூபணமான உழைப்புத் திறம்—நம் நாட்டிலும், 45 நாடுகளிலும் நிரூபணம்

ஜெனித் தரம் என்றால் அதுதான்!



45 நாடுகளும் தவறுசெய்திருக்க முடியாது

இந்தியத் தரநிர்ணய விதிகளால் வரையறுக்கப்பட்ட கண்டிப்பான இலக்கணங்களுக்கு மட்டுமின்றி, பிரிட்டிஷ் மற்றும் சர்வதேசத் தர விதிப்புகளுக்கும் ஈடு நிற்பவை ஜெனித் எஃகுக் குழாய்கள். எனவே, அவை உலகிலேயே அதிநவீனமான சில நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவருவதில் அதிசயமென்ன!

விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் ஆகியவற்றின் தேவை தீர்க்கப் பலவிதமான எஃகுக் குழாய்களை உடையது ஜெனித். குழாய்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதிலே முன்னோடியாக விளங்கியதற்காக அரசாங்கத்திடமிருந்து நற்சான்றுப் பத்திரம் பெற்றுள்ள ஜெனித் இன்று, அமெரிக்கா, ஐக்கிய இங்கிலாந்து உள்பட 45 நாடுகளிலே, உழைப்புத்திறனை நிரூபித்த பெருமையைப் பெற்றுள்ளது.

ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிமிடெட்,
195, சர்ச்கேட் ரிக்ளமேஷன், பம்பாய்-400 020
போன்: 294445. தந்தி: ZENPIPES. டெலெக்ஸ் 011-2458




everest/864a/ZSP/tm


# மேகங்கள் திரண்டால்...

மாமூலன்




சென்ற இதழ்த் தொடர்ச்சி:

**காட்சி-4**

(கார்மேகம் ரவியும் பாமாவும் பேசிக் கொண்டிருக்கின்றனர்).

பாமா: ரவி அண்ணு! எதிர்வீடு காலியாளுலும் காலியானது.......

ரவி: அந்த வீட்டு மோகனை உன்னுல் பார்க்க முடியலையாக்கும்?

பாமா: உன்னைப் போல நினைச்சுக்காதே. அந்த வீடு காலியான பிறகு நீ என்னை பார்க்கக்கூட நீ வரவே இல்லியே! லலிதா அங்கே இல்லைங்கிறதுனுலேதான்! அது இருக்கட்டும்.. அந்த மேகவிலாசத்தை வாடகைக்குப் பிடிக்க மூவருக்குமே போட்டி! அப்பா, சித்தப்பா, அம்மா வீடு யாருக்குக்கிடைக்குமோ?

ரவி: கிடைக்க வேண்டியவுங்களுக்கு கிடைக்கும்.

பாமா: அபாரமான பதில்! உன் ப்ரமோஷனுக்காக அந்த வீட்டை சித்தப்பா எப்படியாவது பிடிக்கணும்னு தவம் கிடக்கிருங்க. நீ அலட்சியமா பேசுறே.....

ரவி: பாமா, அப்பாவுக்கு எப்பவும் வேலை வேலை! பெரியப்பாவுக்கும் தனக்காக எதையும் தேடிக்கிறதிலேயே கவனம். பெரியம்மாவும் தன் தம்பிக்காக வீடு தேடுருங்க...எல்லாம்....சுயநலம்...நாமும் சுயநலமா இருக்கணும்......

பாபா: அதுக்காக என்ன செய்றது?

ரவி: நான் என் வேலையை ராஜினுமா செய்துவிட்டேன்.

பாமா: சித்தப்பா ப்ரமோஷனுக்காக அலையுருங்க....நீ வேலையை ராஜினுமா செய்ததை சுலபமா சொல்றே..இப்ப சித்தப்பாவுக்கு வீடு கிடைச்சுட்டுதுன்ளு என்ன செய்றது....

ரவி: வீடு கிடைச்சுடுமா? நீலமேக மாமா என்ன சொன்னுராம்?

பாமா: அடி சக்கை...மாமா போட ஆரம்பிச்சுட்டியா? வெள்ளிக்கிழமை மாலை வீட்டுக்கு வருவதாச் சொல்லியிருக்கிருராம். அப்போ மூணு பேருக்கும் முடிவு சொல்றதா கூறியிருக்கிருர்.

ரவி: பாமா....அங்கே நீலமேக மாமா வருவதற்கு முன்னுலே அப்பாகிட்டே நான் வேலையை ராஜினுமா பண்ணினதைச் சொல்லு ....அதுவரையும் யாரிடமும் சொல்லாதே.... கடைசி நேரத்திலே நானும் வர்றேன் வேடிக்கை பார்க்க...இல்லை விஷயத்தை முடிக்க....

பாமா: என்ன அண்ணு சொல்றே.....

ரவி: வெள்ளிக்கிழமை மாலை விவரமா புரியும்....அப்ப நான் வர்றேன் அவசர வேலை இருக்கு.

**காட்சி-5**

(வீட்டில் கார்மேகமும் அவர் மனைவி கல்யாணியும் பேசிக்கொண்டிருக்கின்றனர்).

கல்யாணி: ஏங்க எதிர்வீட்டிலே வெள்ளை அடிக்கிருங்க...நிறைய ஆட்கள் எல்லாம் வந்து வேலை செய்யுருங்க.......

கார்மேகம்: எப்படியும் இன்றைக்கு ஈவினிங் எல்லாம் தெரிஞ்சு போகும்....! நமக்கு வீடு கொடுக்கத்தான் சுத்தம் செய்யுருங்களோ என்னவோ!

கல்: நான் அந்த அம்மாகிட்டே உருக்கமா சொல்லிட்டு வந்திருக்கேன், தனபால் மாமனுர் நல்ல வசதியானவர். நீங்கள் எவ்வளவு வாடகை கேட்டாலும் கொடுப்பார்னு. அதனுலே தனபாலுக்குத்தான் கிடைக்கும்.

கார்: அதையும்தான் பார்ப்போமே! ஹூம் எதை உறுதியாச் சொல்ல முடியும்? அந்த நீலமேகத்தின் நடவடிக்கைகள் கிராக்குத்தனமாகவும் இருக்கு...நாம் வீடு கேட்கப் போனுல் உங்க வீட்டுக்கு வருகிறேன் முடிவு சொல்ல... வெள்ளிக்கிழமை மாலை வர்றேன். எல்லாரும் சேர்ந்து வந்து அங்கே இருங்கண்ணு சொல்ருர். எல்லாம் வேடிக்கையாய் இருக்கு.

கல்: நல்ல வேடிக்கைத்தான் சொந்த மைத்துனனுக்கு வீடு பிடித்துக் கொடுக்காமே வேறு யாருக்கோ வீடு தேடி அலையுறது.......

கார்: மனைவியும் தம்பியுமே எனக்குப் போட்டிபோடுறது வேடிக்கையில்லை? கல்யாணி...சரி..சரி..நீ சொல்றதை எல்லாம்

# மதயானை

ந. பரமசிவம்

வனத்தில் வாழும் யானைகள் மதம் பெற்று மனித உயிருக்கும் பொருளுக்கும் பெருஞ் சேதம் உண்டாக்குவது பலரும் அறிந்ததே. இந்தக் காரணத்தைக் கொண்டு யானை இனம் ஓர் அளவு அழிந்து வரும் அபாய நிலையையும் நாம் உணர்கின்றோம். மதம் கொண்ட யானைக்கும் மத நீர் உடைய யானைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. யானைகளுக்கு மத நிலை ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்தல் அவசியம். வனத்தின் புறச் சூழ்நிலை மாறுதல் காரணமாகவும், உணவுப் பற்றாக்குறைவாலும், வேட்டையாடுபவர் இழைத்த காயத்தாலும், மற்ற யானைகளால் தன் கூட்டத்தை விட்டு வெளியேற்றப்படுவதாலும் யானைகளுக்கு மதம் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் உண்டாகின்றன.

யானைக் கூட்டங்கள் வாழும் பகுதிகளைப் பாதுகாப்பதாலும் சட்டத்திற்கு மாறாக யானைகளுக்கு இன்னல் இழைத்து வேட்டையாடுபவர்களைத் தவிர்ப்பதாலும் யானைகளுக்கு மதம் ஏற்படாது பாதுகாக்க முடியும்.

யானை இருப்பினும், இறப்பினும் விலையுயர்ந்த பொருள். ஆகையால், யானைக் கூட்டங்களைப் பாதுகாப்பதின் மூலம் நாட்டின் வருவாய் பெருகுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. யானை இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன். தற்போதைய பொன் விலைக்கேற்றபடி, யானைத் தந்தத்தின் விலையும் ஏறியுள்ளது என்பது ஒரு யானையின் ஜோடி தந்தம் ரூ. 50,000 வரை விலை பெறுகிறது என்பதால் விளங்கும்.

மதம் கொண்ட காட்டு யானைகளால் தாக்கப்பட்டு, காயமடைந்தவர்களையும், எந்தவித மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு முன்னரே இறந்துவிடும் நபர்களைப் பற்றியும் நாள் இதழ்கள் மூலம் அறிந்து வருகின்றோம். இவ்வாறு காட்டு யானைகள் மதம் பெற்று காட்டில் வேலை செய்பவர்களையும், காட்டிற்கு அருகில் பயிர் செய்து வருபவர்களையும், பயிர்களையும் தாக்கி உயிருக்கும், பயிருக்கும் கேடு விளைவித்து வரும் நிலை தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. இதனால் ஏற்படும் உயிர்ச் சேதங்களையும் பொருள் சேதங்களையும் தவிர்க்க அவ்வாறு மதம் பெற்றுத் திரியும் யானைகளை அடையாளம் குறிப்பிட்டு அவற்றைச் சுடுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அந்த அறிவிப்புக் கிடைத்தவுடன் வேட்டையில் தேர்ச்சி பெற்றவர்கள் துப்பாக்கியின் உதவியால் மத யானையைச் சுட்டு அழிக்கின்றனர். இவ்வாறு மத யானைகள் அழிந்து வரும் நிலையைப் பார்க்கின்றோம். இந்நிலை மேலும் நீடிக்குமானல் காட்டு யானைகள் காலப் போக்கில் குறைந்து ஒரு காலத்தில் யானை இனமே மறைந்து விடுமோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

வருங்கால சந்ததியினருக்கு யானையைப் பற்றிப் படங்களின் மூலமாகவோ அல்லது கற் சிலைகள் மூலமாகவோ தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். தந்தத்துக்கு ஆசைப்பட்டு, கயவர்களின் துப்பாக்கிக் குண்டுகள் யானையின் குருதியைச் சுவைக்கத் தவறுவதில்லை. மதம் என்னும் பெயரில் யானைகள் இன்று மறைந்து வரும் நிலையை எண்ணும் போது நாம் வருந்தாமல் இருக்க முடியாது.

மதம் என்னும் வார்த்தையானது யானைக்கு ஏற்படும் மூர்க்க குணத்தையும், மன அமைதி இல்லாத ஒரு நிலையையும் குறிப்பிடும். மதம் பொதுவாக ஆண் யானைகளுக்குத்தான் அதிகமாக ஏற்படுகின்றது. இது அநேகமாக சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஏற்ப அமைகின்றது. மதம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. மதம் பெற்று இறந்த யானைகளை நன்கு உற்று நோக்கிப் பார்த்தால் அதிகமான யானைகள் ஒரு தந்தத்தை உடையதாகவும், மற்றொரு தந்தத்தை இழந்தும், உடம்பில் துப்பாக்கிக் குண்டு பட்ட காயங்களோடும், குண்டுகளோடு கூடிய ரணத்தோடும் காணப்படுகின்றன. சில சமயங்களில் மத யானைகளின் வால் நுனி துண்டிக்கப்பட்டும், கால் பாதங்களில் ஒன்று அல்லது இரண்டு நகங்கள் விழப்பெற்றும் காணப்படுகின்றன. மதம் கொண்ட யானைகள் தனித்து அலைந்து திரியும் தன்மை உடையன. மத யானைக்கும் (Rogue Elephants), மத நீர் யானைக்கும் (Musth Elephants) பல வேறுபாடுகள் உள்ளன. யானையின் கண்ணுக்கும் காதுக்கும் இடையே சென்னிப் பகுதியில் சிறு துவாரம் காணப்படுகிறது. மதம் என்னும் நீர் இதன் வழியே கசிகின்றது. இது எண்ணெய்யைப் போன்று காணப்படுகின்றது. மத நீர் சுரக்கின்ற காலங்களில் சென்னிப் பகுதி வீக்கமுற்றுத் தென்படுகின்றது. அந்தச் சமயம் மதநீர் கொண்ட யானைகள் மிகவும் மூர்க்க குணம் உடையனவாக இருக்கின்றன. அவை மிக்க வேகமுடையதாகவும், தன்னேடு இருக்கும் மற்ற யானைகளையும் தாக்கித் துன்புறுத்தும் தன்மை உடையனவாக இருக்கின்றன. வேறு ஆண் யானைகளைக் காணும்போது மத நீர் வேகம் அதிகரிக்கின்றது. இதன் காரணமாக மற்ற ஆண் யானையைத் [illegible] தாக்கி அதன் உடலில் பல [illegible]களை ஏற்படுத்துகின்றது. தந்தத்தின் தாக்குதலால் பலம் குன்றிய மதம் இல்லாத யானை இறக்க நேரிடும். இந்த மதநீர் உற்பத்தி ஒரு மாத கால வரையிலும் நீடித்திருக்கும், பின்னர் குறைந்து குணமடைந்து யானை தனது பழைய நிலைக்கே வருகின்றது. மத நீர் குறைந்ததும் அதன் வேகம் குறைந்து அமைதி அடைகின்றது. மேலே குறிப்பிட்ட வேறுபாடுகளைக் கொண்டு மத யானையையும்.. மத நீர் யானையையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

யானைக்கு மதம் ஏற்பட்டு அதனால் விளைகின்ற அழிவுகளையும், உயிர்ச் சேதங்களையும் தடுக்கும் பொருட்டு அது மத யானைதான் என உறுதிசெய்த பின்னரே அறிவிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றது. அவ்வாறு மதம் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம். யானைக்கு மதம் வருகின்ற அடிப்படை சூழ்நிலைகளை நன்கு ஆராய்ந்து, அவற்றில் உள்ள குறைபாடுகள் எந்த அளவிற்கு அமைந்துள்ளன என்பதை உணர்ந்து அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்குரிய வழிகளை வகுத்து, சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தினல் யானைகளுக்கு மதம் ஏற்படும் நிலை குறையும்; யானைகளுக்கு ஏற்படும் உயிர்ச் சேதங்களையும் தடுத்து நிறுத்த முடியும். அவ்வாறே அழிந்து வருகின்ற யானை இனத்தையும் பாதுகாக்க முடியும்.

யானைகள் கூட்டமாக வாழுகின்ற காடுகளில் ஒரு யானைக் கூட்டத்தில் ஐந்து முதல் பதினைந்து யானைகள் வரையிலும் உள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது இரண்டு ஆண் யானைகளும், மற்றவை பெண் யானைகளும், குட்டிகளுமாகும். பெரிய ஆண் யானை சாதாரணமாக அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தும், மற்ற யானைகளையும் குட்டிகளையும் பாதுகாத்தும் வருகின்றது. இப்படித் தகுந்த சூழ்நிலையில் இருந்து வரும் யானைக் கூட்டங்களின் சுற்றுப் புறத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டால் அது பெரும் அளவிற்கு யானைக் கூட்டங்களைப் பாதிக்கின்றன. திடீர் மாறுதல் காரணமாக ஆண் யானைகள் தங்கள் கூட்டத்தை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவை சாதகமான சூழ்நிலை நிறைந்த இடங்களைத் தேடிச் செல்லுகின்றன. இவ்வாறு பிரிந்து செல்லும் யானைகள் சாதகமற்ற சூழ்நிலை அமைப்பாலும், தன் கூட்டத்தின் பிரிவாலும் தனித்துப் பல நாட்கள் காடுகளில் அலையும் நிலை ஏற்படுகின்றது. இந் நிலை நீடித்தால் அதன் மனத்தில் வெறுப்புணர்ச்சிகளும், ஒரு வேகத் தன்மையும் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது. பின்னரே மத யானையாக மாறுகின்றது.

சில சமயங்களில் போதிய அளவு தாவர உணவு கிடைக்காத காரணத்தால் பெரிய ஆண் யானைகள் தங்கள் கூட்டத்தை விட்டு உணவு தேடிப் புது இடங்களுக்கு அலைகின்றன. இவ்வாறு தனித்து அலையும்போது பிரிவாற்றாமையாலும், போதிய அளவு உணவு கிடைக்காத காரணத்தாலும் மத யானைகளாக மாறுகின்றன. தான் விலகி வந்த காடுகளில் மறுபடியும் நல்ல தாவர உணவு கிடைப்பதாக இருந்தால் அவை மறுபடியும் தன் இனக் கூட்டங்களுடன் வந்து சேருகின்றன. அந்த யானைகள் மதம் நீங்கி நல்ல நிலையில் வாழ்கின்றன.

உணவு தேடி அலைந்து திரியும் யானை, காட்டிற்கு அருகில் உணவு தானியங்கள் பயிர் செய்யப்படும் வயல்களைக் கண்டதும் தன் பசியைப் போக்குவதற்காக அந்த நிலங்களில் போதுமான அளவு உணவை அருந்துகின்றது. யானை உண்ணும் தானியங்களை விடச் சேதாரம் ஆகும் தானியங்களே அதிகமாகும். யானையைத் தோட்டக்காரர்கள் அவ்விடத்தை விட்டு விரட்டுகின்றனர். யானையை வெளியேற்ற வெடி குண்டு



வனத்தில் யானைகள் கூட்டமாக வாழுகின்றன. ஆண் யானை அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தும் பாதுகாத்தும் வருகின்றது.



யானைக் கூட்டத்திலிருந்து பிரிந்த ஆண் யானை பிரிவாற்றாமையாலும், உணவு பற்றாக் குறைவாலும் மற்றும் பல இன்னல்களாலும்காட்டில் தனித்து அலைந்து திரியும்போது மதயானையாக மாறுகின்றது.



யானையின் கண்ணுக்கும், காதுக்கும் இடையே வட்டத்தினுள் அமைந்திருக்கும் கருமையான புள்ளி மதநீர் சுரக்கும் பகுதி.

களையும், துப்பாக்கிக் குண்டுகளையும், தீப்பந்தங்களையும் உபயோகப்படுத்துகின்றனர். இந்த முயற்சியில் உடம்பில் காயம் ஏற்பட்ட யானை காயத்தின் வேதனையாலும், மற்ற துன்பங்களாலும் நாட்கள் செல்லச் செல்ல மத யானையாக மாறித் துன்புறுத்திய நபர்களையே தாக்க முயற்சி செய்யும். ஜிம் கார்பெட் என்னும் திறமை மிக்க வேட்டைக்காரரும் தமது 'Man Eater of Kumaon' என்னும் நூலில் காட்டுப் புலிகள் மனிதர்களையும், கால்நடைகளையும் அடிக்கடி தாக்கிப் பெருத்த இன்னல்கள் விளைவிப்பதற்கு மேலே குறிப்பிட்ட அடிப்படை உண்மைகளே காரணம் என்று கூறுகின்றார்.

மேலும் காடுகளில் யானைகளை வேட்டையாடும் நபர்கள்உபயோகப்படுத்தும் குண்டுகளால் காயம் ஏற்பட்டு அவை பல மாதங்களாக குணமாகாமல் ரணமாக மாறி யானைக்கு எப்போதும் பெரும் வேதனையைக் கொடுத்து வருகின்றது. நீண்ட நாட்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்த வேதனை காரணமாக மதயானையாக மாறுவதும் உண்டு. தன் உடலில் உள்ள ரணத்தின் வேதனையால் அதன் கண்முன் தென்படும் மனிதர்களைப் பழி வாங்கும் எண்ணத்தில் தாக்க முயலுகின்றது. தனது முயற்சியில் வெற்றியும் பெற்று தன் பகையையும் தீர்த்து கொள்கின்றது. இவ்வாறு யானையை இந்த நிலைக்குக் கொண்டு வருவது மனித இனத்தின் இரக்கமற்றசெயலாகும்.

சில சந்தர்ப்பங்களில் யானைக் கூட்டங்களில் உள்ள ஆண் யானைகளுக்கிடையே கூட்டத்தின் தலைமை, இடத்தைப் பெறுவதற்காக அவற்றுக்கிடையே பலப் பரீட்சை ஏற்படுகின்றது. இதனால் ஒரு யானை மற்றொரு யானையைத் தாக்கி அதன் உடலில் பல ரணங்களை ஏற்படுத்துகின்றது அதிக பலம் உடைய யானை மற்ற யானையை அந்தக் கூட்டத்தை விட்டு வெளியே துரத்துகின்றது. சில சமயங்களில் அதிகமாகத் தாக்கப்பட்ட யானை இறந்து போவதும் உண்டு. இவ்வாறு சண்டையில் காயம் ஏற்பட்டு விரட்டி அடிக்கப்பட்ட யானை தனித்து அலைந்து திரியும் போது மத யானையாக மாறுகின்றது.

மேலே குறிப்பிட்ட உண்மைகளைக் கொண்டு ஆராயுமிடத்து நல்ல நிலையில் வாழ்ந்து வரும் யானைகள் கூட நாளடைவில் இன்னல் தரக் கூடிய சூழ்நிலைக்கேற்றவாறு மத யானைகளாக மாறக் கூடும். இதற்கு முக்கிய காரணம் 'மனிதனே என்பதில் சந்தேகமில்லை.

யானைக் கூட்டங்கள் அதிகமாக உள்ள காடுகளை சரணாலயங்களாக மாற்றி அமைக்க வேண்டும். அந்தச் சரணாலயக் காடுகளில் மரம் வெட்டும் பணிகளும், செயற்கை முறையில் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் வேலைகளும் நடைபெறுமல் இருத்தல் அவசியம் அக் காடுகளில் வேடடையாடுதல், மோட்டார் வாகனங்களைச் செலுத்துதல் ஆகியவற்றையும் தடை செய்தல் வேண்டும. இவ்வாறு சரணாலயங்களை அமைத்து, பாதுகாப்புக் கொடுப்பதின் மூலம் யானைக் கூட்டங்களுக்குத் தகுந்த சாதகமான சூழ்நிலையை அமைக்க முடிகின்றது. அவைகளும் இந்தச் சூழ்நிலையை விட்டு வெளியே செல்லாமல் அந்தக் காடுகளிலே சுற்றித் திரிந்து வாழ்கின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள ''யானைப் பாதுகாப்புச் சட்டத்தை'' மறு பரிசீலனை செய்து பாதுகாப்பு அடிப்படையில் பல விதி முறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்த ஆவன செய்தல் வேண்டும். சட்டத்திற்கு விரோதமாக யானைகளை வேட்டையாடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்க விதி முறைகளை மாற்றி அமைத்தல் அவசியம்.

இவ்வாறு பாதுகாப்பு அளிக்கும்போது யானைக் கூட்டங்களில் ஆண் யானைகளுக்கு அதிக மதம் ஏற்படாது. அவற்றின் இனப் பெருக்கமும் அதிகரிக்கத் தொடங்கும். யானைகளின் பெருக்கம் அபிவிருத்தி அடையும்போது அவற்றைப் பிடித்து விற்பனை செய்யலாம்.



யானைகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. கோவில்களுக்குப், குழந்தைகள் பூங்காவிற்குப், மிருகக் காட்சிச் சாலைகளுக்கும், அயல் நாட்டவருக்கும், பல நிறுவனங்களுக்கும் தேவைப்படுகின்றன. இந்த விற்பனை மூலம் அரசிற்குக் கணிசமான வருவாய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. அதே வேளையில் சரணாலயங்களின் மூலமாக வெளிநாட்டு அன்னியச் செலாவணியும் கிடைக்க ஏதுவாகும். இந்த அடிப்படையில் நம் அரசு யானைகளுக்குப் போதிய பாதுகாப்பு கொடுப்பதன் மூலம் யானைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும், வருவாயும் உயரும்

# பட்டிமன்றப் பாவை

கோவை இளஞ்சேரன்

சென்ற இதழ்த் தொடர்ச்சி:

தொன்மைப் பூம்புகார் நகரில் இந்திர விழா ஆண்டுதோறும் நிகழ்ந்தது. விழா பலவகைச் சிறப்பு நிகழ்ச்சிகளால் நிறைந்தது. விழா அறிவிப்பில் பலவகை அறிஞரும் கலைஞரும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுமாறு அழைக்கப்பட்டனர். அவ்வறிவிப்பில்,

''பட்டி மன்றத்துப் பாங்கறிந் தேறுமின்'' எனப் பட்டி மன்றத்தாரும் அழைக்கப்பட்டனர். இப்பட்டி மன்றங்கள் சமயத்துறைப் பட்டி மன்றங்களாகவே அமைந்தன. சில நேரங்களில் இக்கருத்துப் போர் பூசலாகிவிடுவதுண்டு. சினங்கொண்டு கடுமையாகத் தாக்கிக் கொள்வதும்,வருகைதந்தோர் கலாட்டா செய்வதும் உண்டு. அதனால்,அறிவித்தவன்,

''செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்'' என்றும் அறிவிக்க நேர்ந்தது. இவற்றை அறிவிக்கும் மணிமேகலைக் காப்பியத்தில் அக் காப்பியத் தலைவி மணிமேகலை துறவுகொண்டு சமயக் கணக்கர் பலரது கருத்தை ஆராய்ந்தாள்:

''நிகண்ட வாதியை, நீஉரை; நின்னால்
புகழுறுந் தலைவன் யார்? நூற்பொருள்யாவை?
அப்பொருள் நிகழ்வும் கட்டும் வீடும்
மெய்ப்பட விளம்பு''—

என்று நிகண்ட வாதியுடன் வாதிடுகின்றாள். இதுபோன்றே பற்பல சமயத்தவருடன் கருத்துப்போர் நிகழ்கின்றது. இப்போர், மன்று கூடி, நடுவர் அமர நிகழவில்லையாயினும் கருத்துப்போர் என்னும் அளவில் பட்டி மன்றத்தின் நிழலாடுகின்றது.

மணிமேகலைக்குப் பின்னர் எழுந்த குண்டலகேசி என்னும் காப்பியத்தின் தலைவி குண்டலகேசியின் துறவு வாழ்வு முழுதும் பட்டிமன்ற வாழ்வாகவே அமைந்தது. அவள் சமண மதத்தைத் தழுவி நின்றபோது சாரிபுத்தருடன் கருத்துப் போரிட்டுத் தோற்றாள். அதனால் புத்த மதத்தைத் தழுவிச் சமண சமயத்தைச் சார்ந்த நாதகுத்தர் என்பவருடன் ஆவணம் என்னும் நகரில் கருத்துப் போரிட்டு அவரைத் தோற்கடித்தாள். சைவ, வைணவ மதத்தாருடனும் போரிட்டு வென்றதாக அந்நூல் கூறுகின்றது.

இக் காப்பியத்தை மறுப்பதற்காகவே எழுதப்பட்ட நீலகேசி என்னும் காப்பியம் ஒரு கருத்துப் போர்க் காப்பியமாகவே அமைந்துள்ளது. அக்காப்பியத்தின் சருக்கங்கள் குண்டலகேசி வாதச் சருக்கம், அருக்கசந்திர வாதச் சருக்கம், மொக்கல வாதச் சருக்கம், புத்த வாதச் சருக்கம், ஆசீவக வாதச் சருக்கம், சாங்கிய வாதச் சருக்கம், வைசேடிக வாதத் சருக்கம், வேத வாதச் சருக்கம், பூத வாதச் சருக்கம் என்பன. எனவே இக்காப்பியம் வாத-கருத்துப்போர் பட்டி மன்றக் காப்பிய நோக்குடனே எழுதப்பட்டதை அறியலாம்.

இம்மூன்று காப்பியங்களையும் பட்டி மன்ற நினைவுடன் நோக்கின் சமயத்துறையில் பட்டி மன்ற நிகழ்ச்சி எத்துணை அளவில் வளர்ந்து நிறைவு பெற்றது என்பதை உணரலாம்.

மதுரையில் தடாதகைப் பிராட்டியார் ஆண்டதைக் கூறும் திருவிளையாடற் புராணம் அப்பிராட்டியார் நாள் நிகழ்ச்சிகளைக் கண்டு வருங்கால்,

''வாதிகள் வாதஞ் செய்யும்
கோட்டிமேல் மகிழ்ச்சி கூர்ந்'' ததைக்

குறிக்கின்றது. அந்நூலில் முன்னர் நாம் கண்ட இசைப்பட்டி மன்றத்தினைக் கூறும் பகுதி ''இசைவாது வென்ற படலம்'' என்று பட்டி மன்றக் குறியுடன் அமைந்துள்ளது.

மதுரையில் திருஞானசம்பந்தருக்கும் சமணருக்கும் ஏற்பட்ட சமயப் பூசல் ஒரு பட்டி மன்றத்தின் நிழலாக அமைந்தது. சைவ சமய குரவரான திருஞானசம்பந்தர் வாது செய்வதை விரும்பாதவராயினும் இப்பூசலில் வாதுக்கு இசைந்தார். சமணர் வாதுக்கு அழைக்கும் அறைகூவலாகச் சம்பந்தர் சைவ மடத்திற் புகும்போது தடுத்து மறித்தனர். இவ்வாறு மறித்தது அறைகூவலுக்குப் பட்டி மண்டபத்தை அடைத்த வழக்கு போன்றதாயிற்று. மன்னன் சைவனானதால் அவன் அவையில் வாதிட மறுத்து நகர்ப்புறத்திற்கு அழைத்தனர். அங்கு அவரவர் சமய மந்திரத்தினை ஓலையில் எழுதித் தீயில் இட்டனர். சமணர் ஓலை எரிந்தது. சைவர் ஓலை எரியாதிருந்தது. சமணரோ இஃதொரு 'நெருப்பு வித்தை என்று ஏற்க மறுத்தனர். மீண்டும் ஏடெழுதி வைகையாற்றில் விட விரும்பிய சமணர், ''நீரினில் இடுவோம்; அதில் வென்றவர்க்குத் தோற்றவர் என்றுமே அடிமையாவது'' என்று ஒறுப்பையும் விதித்தனர். சம்பந்தரோ,

''..நுமக்கேற்ற தண்டம் இதுவோ என்று
வடிவான் திரைத்த கழுமுனையில் இடுவாம்
அதுவே வழக்கென்றார்''

சமணரும் அதற்கிசைந்தனர். இருவரும் தத்தம் ஏடுகளை வைகையில் இட, சைவ ஏடு எதிர்த்தேறியது; சமணர் ஏடு நீரோடு ஓடியது. சமணரும்,

''....யாங்களும்
இன்று தோற்றோம்; எமையீண்டு நீரே
வென்றீர்''

என்று தோல்வியை ஏற்றனர்.

சம்பந்தர் ''கழுவில் ஏற வேண்டா; சைவ மதத்தைத் தழுவுக'' என்றார். சமணரோ ''சிறியவனே, நீ எவ்வாறு எங்கட்கு அடாத மொழி சொல்வது'' என்று,

''மதத்தினில் மானம் மிக்கார்
தாங்களே வலிய (கழுவில்) ஏறினர்''

இவ்வாறு நிகழ்ந்த பூசலில் பட்டி மன்றம் சொல்லாடலாக நிகழவில்லையென்றாலும், ''வாது செய்து அடங்கத் தோற்ற''

''வாது செய்திர்''
''வாதினால் வேறும்''
''வாதஞ் செய்யப் போதுக''—என்றெல்லாம் வாதமாகக் குறிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்குப் பின் சம்பந்தர் ''வாது வென்றவர்'' என்று சிறப்பிக்கப்பட்டார்.





பாஞ்சாலங்குறிச்சியில் அகழ்வாய்ந்த கட்டபொம்மன் கோட்டை யிருந்த இடத்தின் பக்கத்தில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் கட்டபொம்மன் கோட்டை.

கோயில் எடுக்கப்பட்டது. கோட்டைமேடு முழுவதும் புதர்கள் மண்டிக் கிடந்தன. இங்குமங்குமாக ஒரு சில இடங்களில் சுவர்களின் அடிப்பகுதிகள் காணப்பட்டன. புறத்தே வாழும் மக்களால் கோட்டைப் பகுதிகளில் இருந்து மண் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

கோட்டை மேட்டை அகழ்ந்து அரண்மனைப் பகுதிகளை வெளிக் கொணர அரசு ஆணை எண். எம்.எஸ். 1653, கல்வித் துறை, நாள் 26-9-67-ல் ரூ. 8,500/-க்கு ஆணையிட்டது.

மேற்கண்ட அரசு ஆணையின் படி வேலை 24—8—68-ல் துவங்கப்பட்டது. கோட்டை மேட்டிலிருந்த புதர்கள் அகற்றப்பட்டன. ஜக்கம்மாள் கோயிலுக்கு அருகில் தென் புறத்தில் அகழ்வாய்வு தொடங்கப்பட்டது. அவ்விடத்திலேயே அரண்மனையின் அடிப்பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நாளோலக்க மாளிகையும் கலியாண மண்டபமும், அடுக்களையும், வசிக்கும் அறைகளும் சூழ விளங்கிய அரண்மனையின் அடிப்பகுதி வெளிப்பட்டது. தென் கோடியில் கிழக்கு நோக்கிய வாயில் காணப்பட்டது. வாயிலின் இரு மருங்கிலும் அறைகள் காணப்பட்டன. உள்ளே நுழைந்ததும் வடபுறத்தில் 1.5 மீட்டர் ஆழமுள்ள சதுரமான குழி ஒன்று காணப்பட்டது. குழியின் பக்கங்கள் சுண்ணாம்புச் சாந்தால் பூசப்பட்டு இருந்தன. தானியங்களைக் கொட்டிவைப்பதற்கு இவ்வறை உபயோகிக்கப்பட்டு இருக்கலாம். இங்கிருந்து ஒரு சரிவான வழியின் மூலம் நாளோலக்க மாளிகையை அடையலாம்.

நாளோலக்க மாளிகையின் மேல் புறம் செங்கற்கலால் கட்டப்பட்ட உயர்ந்த பீடம் ஒன்று காணப்பட்டது. அதன் முகப்பில் விளக்கு வைப்பதற்கு பிறைகள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. அப்பீடத்தின் அடிப்பகுதி மிக அழகாகச் சுதை வேலைப்பாட்டால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மரத் தூண்களைத் தாங்குவதற்கு கல்லாலான அடிப்பகுதிகள் இரண்டு பீடத்தின் மேல் காணப்பட்டன. பீடத்தின் மேல்பகுதி சதுரமான செங்கற்களால் பாவப்பட்டு சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டுஇருந்தது. இதன் ஒரு பகுதியில் சிலர் புதையல் தேடி குழி தோண்டியிருந்தனர். இதைச் சுற்றிலும் இருந்த சுவர், சுதை பூசப்பட்டிருந்தது. இங்கு வலப்பக்கச் சுவரில் ஆங்கிலேயர் பீரங்கியால் தாக்கியபோது வந்து பாய்ந்த இரும்பாலான பீரங்கிக் குண்டு சுவரில் பாய்ந்த நிலையில் காணப்பட்டது. இப்பகுதியில் இருந்த இடிபாடுகளை நீக்கியபோது சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட சுதை வேலைப்பாடுகளும், வண்ணம் பூசப்பட்ட சுதை காரைகளும் பெருவாரியாகக் கிடைத்தன. இப்பகுதியில் காணப்பட்ட ஒரு காரைத் துண்டில் வண்ணமுகம் காணப்பட்டது. வெளியான பகுதியின் ஓரங்களில் உயர்ந்த திண்ணைகளும் மண்டபத்தை நோக்கி அமரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் கிழக்கிலும் தெற்கிலும் இருந்த திண்ணைகள் சற்று உயரமாகவும், வடபுறம் இருந்த திண்ணை சற்று தாழ்வாகவும் அமைக்கப்பட்டு, திண்ணைகளின் ஓரங்களில் மரத் தூண்களைத் தாங்கியகல்லாலான அடிப்பகுதிகள் உரிய இடங்களில் இருந்தன.

திண்ணைகளும், தரைப்பகுதியும் அரைத்த வெண்மையான சுண்ணாம்புச் சாந்தினால் பூசப்பட்டிருந்தன. வடகிழக்கில் ஓர் அறை காணப்பட்டது. அவ்வறைக்குச் செல்லும் வாயில் நிலையும் காணப்பட்டது. நாளோலக்க மாளிகையிலிருந்து கழிவு நீர்ப் பாதை ஒன்று இவ்வறையின் வழியாக பூமியினடியில் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வறையின் தரை வெறும் சுண்ணாம்புச் சாந்தால் பூசப்பட்டிருந்தது. அறையின் ஒரு புறத்தில் கை கால் கழுவ திட்டு ஒன்று அமைக்கப் பெற்றிருந்தது. நாளோலக்க மாளிகையில் இருந்து அதையொட்டி வடப் புறத்தே கல்யாண மண்டபம் ஒன்று நடுவில் உயர்ந்த சதுரமான தெற்றியும், சுற்றி நான்கு புறமும் ஓடும் திண்ணைகளும் அவற்றின் புறத்தே அமைக்கப்பட்டிருந்த அறைகளும் உடையதாகக் காணப்பட்டது. நடுவில் இருந்த தெற்றி வெற்று மண்ணாலானது. சுற்றிலும் சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டிருந்தது. மேல் பகுதி இடிபாடுகளினால் சேதமடைந்து இருந்தது. கிழக்குப் புறத் திண்ணையின் அருகே நீர் வடியும் பாதை அமைக்கப்பட்டிருந்தது. திண்ணைகளில் ஏறுவதற்கு ஆங்காங்கே கருங்கல் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. திண்ணைகளின் ஓரங்களில் மரத் தூண்களைத் தாங்கும் கல்லால் ஆன அடிப்பகுதி ஆங்காங்கு வைக்கப்பெற்று இருந்தன.



பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த வீரபாண்டியக் கட்டபொம்மனின் முன்னோர் உருவங்கள்.

கல்யாண மண்டபத்திலிருந்து வடக்கு நோக்கி ஒரு வாயில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு மரக் கதவுகளும், நிலைகளும் இருந்திருக்க வேண்டும். அவற்றைப் பிடுங்கி யெடுத்த தடயங்கள் காணப்பட்டன. இவ்வாயிலுக்கும் வடபால் கிழக்கு மேற்காக சில அறைகளும் காணப்பட்டன. அவற்றிலொன்று அடுக்களையாக இருந்திருக்க வேண்டும். அடுப்பெரித்த சாம்பல்களும், கலங்கள் வைக்கும் திட்டுகளும், கை கால் கழுவும் பகுதிகளும் அங்குக் காணப்பட்டன. அரச மாளிகையிலிருந்து சுமார் 5 மீட்டர் மேற்கில் மற்றும் ஒரு பெரிய கட்டடத்தின் அடிப்பகுதி காணப்பட்டது. நடுவில் தாழ்வாகவும் சுற்றிலும் உயர்ந்த திண்ணைகளோடும் மரத் தூண்களால் தாங்கப்பட்ட மேல் கட்டடங்களோடும் இக் கட்டடம் இருந்திருக்க வேண்டும் என்பதற்கான தடயங்கள் கிடைத்தன. தாழ்



பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் கிடைத்த உடைந்த மண்பாண்டங்கள்.



பாஞ்சாலங்குறிச்சியை உடைத்த பீரங்கிக் குண்டுகள்.



கோட்டை கட்டும் பணி நடைபெறுகிறது.

எனவே, இஃதும் ஒருவகைப் பட்டி மன்ற நிழலாகத் தொடர்ந்தது. இந்நிழல் சமணர் கழுவேறிய கரும்புள்ளி கொண்டது. நக்கீரர் தொடர்பில் கடுமையும் கொடுமையும் பட்டி மன்ற வளர்ச்சியில் இந்த அடுமையும் (கொலையும்) பங்கு கொண்டது.

இங்குக் காட்டப்படும் கதைக் கருத்துக்கள் யாவும் அவ்வவ்வாறே நிகழ்ந்தனவாகக் கருதி கொள்ளப்பட்டன அல்ல. அவ்வக் காலத்து நிலவிய கருத்துக்களை அவ்வவ்வாசிரியர் கொண்டு காட்டியனவாகவே கொள்ளப்பட்டுள்ளன.

பட்டி மன்றப் பாதையில் திருமால் மதத்தினரும் நடைபழகினர். அம்மதத்தில் புரட்சி பெரியாராய்த் தோன்றிய இராமாநுசர்,

வாதில் வென்றான் எம் இராமா
நுசன் எம் மதிக்கடலே''— என்று இராமாநுச நூற்றந்தாதி (58)யில் போற்றப்பட்டார். இராமாநுசர் தோன்றியபின் ''ஆகம வாதியரும், தற்கச் சமணரும், சாக்கியப் பேய்களும், சைவச் சோம்பரும், சூனிய வாதரும் அழிந்தனர்'' என்று அந்நூல் பாடுகின்றது. இராமாநுசர் வாதியரைத் தலையெடுக்கவொட்டாது சொற்போராடி வென்றதாக அந்நூல் கூறுகிறது. அவர் ''மறைவாதி'' எனப்பட்டார்.

அரிதாசர் என்னும் திருமாலியப் பெரியார் ''இரு சமய விளக்கப் பாடல்கள்'' எனச் சைவ, திருமாலிய மதக் கருத்துக்களை மோத வைத்து ஒரு நூலை எழுதினார். அதில் சைவத்திற்கு ஆகமவல்லி என்றும், திருமாலியத்திற்கு ஆரணவல்லி என்றும் இரு மங்கையரைப் படைத்து மொழிந்து அவர்களை மாறி மாறிச் சொல்லாட வைத்துள்ளார். இதனை ஒரு சொற்போர் நூல் எனலாம்.

காலந்தோறும் ஆங்காங்கு சேதுபதிகள் அவை, மதுரைத் தமிழ்ச் சங்கம் முதலிய அவைகளில் கருத்துப் போராம் பட்டி மன்றப் படிவங்கள் தோன்றிக்கொண்டே வந்துள்ளன. வள்ளலார் திருவருட்பா பற்றிய கருத்துப் போர் நிகழ்ந்ததையும் அறிகின்றோம்.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்களும் கம்பராமாயணம் பற்றிக் கருத்துப் போரிட்டது பட்டி மன்றப் பாதையில் நம் கண்ணுக்கு நேர்வந்த காட்சி.

இக்காலத்தில் சொற்பொழிவு மேடையின் பருவம் பட்டி மன்றப் பருவமாகவே நிகழ்வதைக் காண்கின்றோம்.

கருத்துப் போராகப் பிறந்த பட்டி மன்றம் சமயப் போராக நடைபோட்டு, இன்று சுவர்ச்சிப் போராக ஓடிக்கொண்டுள்ளது. காலந்தோறும் இடம்பெற்ற இப்பட்டி மன்றம் பல முனைகளில் நிகழ்ந்தாலும் பிற்காலத்தை ஒதுக்கி இதன் நிகழ்ச்சிக்குப் பொது வான நிகழ்ச்சி நிரல் ஒன்றை உருவாக்க முடிகின்றது.



அந்நிகழ்ச்சி நிரல்,
அறைகூவல்—பட்டி மன்ற அடைப்பு;
அறைகூவலை ஏற்றல்—பட்டி மன்றத் திறப்பு;
அவை கூடல்—நடுவர் அமைதல்;
நெறியறிவிப்பு;
கருத்துப்போர்;
தீர்ப்பு;

அவையோர் வழிமொழிதல்;
சிறப்பும் ஒறுப்பும்
என அமையும்.

இந்நிகழ்ச்சிப் பட்டியலிலுள்ள ஒவ்வொன்றும் நடைமுறைப்பட்டபோது சிறு சிறு வேறுபாட்டைக் கொண்டது. ஆயினும், ஒவ்வொன்றிற்கும் நெறியும் விதியும் இருந்ததைப் பல வகை நூல்களும் அறிவிக்கின்றன. நிகண்டுகள், இலக்கணங்கள், உரைகள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், பழமொழிகள், நாட்டு வழக்குகள், செவி வழிச் செய்திகள் ஆகிய பலவற்றிலும் அள்ளித் தெளித்தது போன்று பட்டி மன்ற நெறிகளையும் விதிகளையும் விளக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் காண முடிகின்றது. அவற்றையெல்லாம் பொறுக்கி எடுத்து ஆய்ந்து தொகுத்தால் பட்டி மன்றத்திற்கு நீண்ட பெரும் வரலாறு கிடைக்கும். அவ்வரலாறும் பின்வரும் பத்து அதிகாரங்களாக அமையும்;

1. சொல்லாடல் - சொற்பொழிவு - சொற்போர்.
2. பட்டி
3. பட்டி மண்டபம்
4. பட்டியாளன்—வாதி.
5. அறைகூவல்.
6. பட்டி அவை.
7. பட்டி நெறி.
8. பட்டி நிகழ்ச்சி.
9. தீர்ப்பு.
10. தீர்ப்பின் விளைவு.

இவற்றிற்கு மேலும் ''வாது ஒரு தீது'' என்ற கடைகாப்பையும் அமைக்கும் சூழலும் உண்டு. இவ்வரலாற்றைக் காண்பதால் பல தமிழ் மரபுகளையும் காலப்போக்கில் வளர்ந்த— தளர்ந்த கருத்துப் போக்கையும் உணரலாம்.



# பாஞ்சாலங்குறிச்சியை அகழ்வாய்ந்தோம்

இரா. நாகசாமி

''வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி'' என்று வீரமுழக்கம் செய்து, அன்னியனை ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து விடுதலை வேள்வித் தீயில் தன் ஆவியை விட்ட பாஞ்சாலங்குறிச்சிக் குரிசில் வீரபாண்டிய கட்டபொம்மனை தமிழ் மக்கள் நன்கு அறிவர். அம்மாவீரன்வாழ்ந்தஇடத்தை ஆங்கிலேயர் தகர்த்துத் தரை மட்டமாக்கினர். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை ஆங்கிலேய வீரன் ஆலன் என்பான் கைப்பற்ற முனைந்து தோல்வியுற்றான். நெல்லை மாவட்டக் கலெக்டர் ஜாக்சன் என்பான் கட்டபொம்மனைச் சதி செய்து கைது செய்ய முயன்றான். ஆனால் வீரன் கட்டபொம்மு வெற்றி வாகை சூடினான். ஆனால் 1799-ல் கர்னல் பானர்மென் என்பான் தலைமை

யில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முற்றுகையிடப்பட்டது. பாஞ்சாலக்குறிச்சி வீரர்களின் ஆற்றலின் முன்னர் ஆங்கிலேயர் பலர் ஆவியிழந்தனர். இப்போரில் வீழ்ந்த ஆங்கிலேயர்களின் கல்லறைகள் இன்னும் ஒட்டப்பிடாரத்திற்கு அண்மையில் இப்போருக்குச் சாட்சியாக விளங்குகின்றன.

மாவீரன் கட்டபொம்மன் சூழ்ச்சியால் கைது செய்யப்பட்டான். கயத்தாற்றில் தூக்கு மேடையில் வீரன் ஆவி துறந்தான். இப்போர் முடிந்த ஓராண்டுக்குள் கட்டபொம்முவின் வீரத் தம்பி ஊமைத் துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பழுது பார்த்துத் தலைமையேற்றான். 1801-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சி மீது

மறுபடியும் படையெடுத்தனர். ஊமைத்துரை நடத்திய வீரப் போரில் ஆங்கில வீரர் பலர் அடிபட்டு மாய்ந்தனர். அவ் வாறு அடிபட்டு வீழ்ந்த 45 வீரர்களுடைய கல்லறைகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட் டைக்கு அருகிலிருக்கின்றன. ஆயினும் கோட்டை வீழ்ந்தது. இம்முறை, ஆங்கிலேயர் கோட் டையையும் அரண்மனையையும் பீரங்கி கொண்டு தகர்த்துத் தரை மட்ட மாக்கினர். கோட்டை வீழ்ந்தபோது அங்கு இருந்த பொருள்களெல் லாம் சூறையாடப்பட்டிருக்க வேண்டும். சுமார் 35 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் இருந்த கோட்டைப் பகுதிகள் மண் மேடாக இருந்து வந்தது. அண்மையில் கட்டபொம்முவி னுடைய குல தெய்வம் ஜக் கம்மா தேவிக்கு கோட்டை மேட்டின் மத்தியில் ஒரு



அந்தப்புரம், பாஞ்சாலங்குறிச்சி



பாஞ்சாலங்குறிச்சியில் கிடைத்த கண்ணாடிப் புட்டிகள்.

வான நடுப் பகுதியில் உயரமான நான்கு மரத் தூண்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றைத் தாங்கிய கல்லால் ஆன அடிப் பகுதிகள் இன்னம் இருக்கின்றன. இவற்றைச் சுற்றிலும் அறைகள் காணப்பட்டன. இக் கட்டடத்தின் நுழைவாயில் தெற்கு நோக்கி இருந்தது. தென் புறத்தில் வாயிலின் இரு மருங்கிலும் திண்ணைகள் இருந்தன. திண்ணைகளின் அடிப் பகுதி அழகிய சுதை வேலைப்பாடுடன் திகழ்ந்தது.

வடபுறக் கோடியிலிருந்த ஒரு கிணறு தூர் எடுக்கப்பட்டது. சில பீரங்கிக் குண்டுகளும், பீர் புட்டிகளும் கிணற்றினுள் காணப்பட்டன. அரச மாளிகையின் கிழக்கில் கருங்கல்லால் ஆன தறியும் கரடுமுரடமான கற்கள் பாவிய கட்டும் தறியும் காணப்பட்டன. இது யானை கட்டும் தறியாக இருக்கலாம். இக் கட்டுத் தறியின் வடக்கே தெற்குநோக்கிய கட்டடம் ஒன்றுகாணப்பட்டது இக்கட்டடத்தின் வட கோடியில் உயர்ந்த பீடமும், நடுவில் சதுரமான தூண்களின் அடிப் பகுதியும் காணப்பட்டன.

நினைவிருக்கட்டும்
தமிழரசு
சிறுகதைப் போட்டி
முடிவு நாள்
1-9-74

இக்கட்டடத்தின் அமைப்பைக் கண்டால் இது ஒரு கோயில் போலக் தோற்றமளிக்கிறது.

இவை தவிர கோட்டை மேட்டில் பல சிறு கட்டடங்களின் பகுதிகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இக்கோட்டையின் பகுதிகளில் அகழ் வாய்ந்தபோது பல மட் கலங்களும், கருங்கல்லாலும், இரும்பாலுமான பீரங்கிக் குண்டுகளும், அழகிய சுதை வேலைப்பாடுகளும், ஆங்கிலேயர்களின் பீங்கான் தட்டுகளும், மண் விளக்கும், சில மண் பாவைகளும் கிடைத்தன. அரச மாளிகையில் நாளோலக்க மாளிகையும், கல்யாண மண்டபமும் சேதமடைந்த பகுதிகளில் சுண்ணும்புக் காரையாலும், வெள்ளைச் சிமெண்டினும் பூசப்பட்டு வெய்யிலிலும், மழையிலும் பாழடைந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. மண்ணுலான தரைப் பகுதிகள் வாரமொரு முறை அலகிட்டு, மெழுகிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கோட்டை மேட்டின் கிழக்குக் கோடியில் புதர்களின் நடுவில் பல வீரக் கற்கள் காணப்பட்டன. இவற்றில் நாயக்க வீரர்கள் தங்கள் பெண்டிர் சூழ வீற்றிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இச் சிலைகள் அனைத்தும் கட்டபொம்முவின் முன்னேர்களின் சிலைகளாகக் கருதப்படுகின்றன. இவை அனைத்தும் ஜக்கம்மா கோயிலுக்கு அருகில் கொண்டு வந்து பாதுகாக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் குறிப்பு உள்ள ஒரு பலகை பொருத்தப்பட்டு உள்ளது.

ESTD: 2-3-52. தபால்மூலம் GOVT REGD: 3072

இலவசக் கல்வி போதனை

E. குருப் வகுப்புகள் ஆரம்பம்: 13—8—1974

ஆண்—பெண் இருபாலரும் 1974-75ம் வருட சர்க்கார்-பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற
உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.
1. S. V. B.A., B. Com., B. Sc.,– March 1975 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B.L.,
M.A., M.Com., A.M.I.B.M. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B.A., B.Com., B.Sc.,
(S. S. L. C. (அ). S. S. C. ஆ). மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்) 4. பாபாம்-ஆந்திரா-கர்ளுடக்-டெல்லி
இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்). 5. A.C.B.I.( London) S.S.L.C. மெட்ரிக்
தேறியவர்கள் தகுதியுடையவர்கள். 6. Account Text Exmns. (I.M.C. S.S.L.C./S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடை
யவர்கள்) 7. டெலிபோன் ஆப்ரேட்டர் - டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன்.
9. சென்னை-மதுரை P. U. C. 10. தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம் 12. போஸ்ட்மென் 13. போஸ்டல்
கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்விஸ் கமிஷன் (தமிழ் அண்ட்
ஆங்கிலம் அக்-74) 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER.
D.Com., B.Com., B.Com (Hons) M.Com., S.S.L.C. அல்லது P.U.C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-பிப்ரவரி
தேர்வில் கலந்து கொள்ளலாம்) 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாண்டர்.
24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X, XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)
முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி
பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தமிழகத்தின் தனிப்பெரும் தபால்கல்வி ஸ்தாபனம்

Affiliated by I. A. & A. I. S. Educations & Com. University, New Delhi.

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம் S.O:, தென்னூற்காடு மாவட்டம்—தமிழ்நாடு.

கிளைகள்: சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.

# கேளுங்கள்? கொடுக்கப்படும்!

வினு: எனக்குச் சுமார் 7 ஏக்கர் வளமான நஞ்சை நிலங்கள் உள்ளன. அந்நிலத்திற்கு ஒரு 5 எச்.பி. மோட்டார் பம்பு செட்டும், கிணறும் உள்ளன. கிணற்றின் ஆழம் 5 கெஜம் (முழுவதும்). ஆனால் கிணற்றில் நீருக்கே பஞ்சமில்லை.

சொர்ணவாரி, நவரை போன்ற இரு பட்டங்களில் அந் நிலங்களில் நஞ்சையில் நெல் விதைத்து அக் கிணற்றில் தண்ணீர் பாய்ச்சினுல் நெல்லின் விதை முளைகள் யாவும் கருகிவிடுகின்றன. நஞ்சையில் நடவு போட்டால் பச்சை கட்ட சுமார் 20 நாட்கள் ஆகின்றன. ஏகப்பட்ட நடவுகள் (நாற்றுக்கள்) இறந்து விடுகின்றன.

இருப்பினும் நான் அந்நிலங்களில் ஐ. ஆர். 20, ஐ. ஆர். 8, ஆடுதுறை-27 போன்ற நெல் வகைகளைத் 'தமிழரசு' சிபாரிசு செய்யும் அளவு தொழு உரம், இராசயன உரம் இட்டு பயிர் செய்கின்றேன். ஆனுல் மகசூல் மிகவும் குறைந்து விடுகின்றது. எனவே, நிலத்தின் மண்ணைப் பரிசோதித்ததில் மண் வளம் உள்ளது என 'நிருபிக்கப்பட்டது. ஆனுல் நான் இது வரை அக்கிணற்று நீரை பரிசோதனைக்கு அனுப்பவில்லை.

மேலும், அக்கிணற்றில் சுண்ணும்புப் பாறைகள் அதிக அளவில் உள்ளன. அச்சுண்ணும்பினுல் நீர் பாதிக்கப்படுகிறது எனச் சிலர் கூறுகின்றனர். இன்னும் கிணற்றை அடியில் ஆழப்படுத்தினுல் ஆற்று மணல் போல் மணலாக உள்ளது.

எனவே், மேற்படி கிணற்று நீரை எங்கு சென்று பரிசோதிப்பது? அல்லது கிணற்றில் போரிங் வைத்து மிக ஆழப்படுத்தி அதிலுள்ள நீரை எடுத்துக் கொண்டு விவசாயம் செய்யலாமா? அவ்வாறு செய்தால் பயிர் நன்கு வளர்ச்சியடையுமா? கிணற்றில் சுண்ணும்புப் பாறைகள் இருப்பதால், பயிர்களும் பாதிக்கப்படுமா? நீரின் வளம் பாதிக்கப்படுமா? இவைகட்கு விளக்கமான பதில்களை தாங்கள் தயவு செய்து கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—எஸ். நரசிம்மன்,
ஆவணியாபுரம் (அஞ்சல்),
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை: தாங்கள் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, தங்கள் கிணற்று நீரில் பயிருக்குத் தீங்கு விளைவிக்கும் சில வகை உப்புக்கள் இருக்கும் என்று ஊகிக்க இடமிருக்கிறது. மண் பரிசோதனையில், தங்கள் மண், வளம் உள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளீர்கள். ஆகவே, தாங்கள் கிணற்று நீரையும் உடனே பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். கிணற்றில் உள்ள சுண்ணும்புப் பாறையில் உள்ள உப்புக்களே தண்ணீரில் கரைந்து பயிருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடும். அவை என்ன உப்பு? எந்த அளவில் உள்ளது? அதைப் போக்கும் முறை என்ன என்பதை அறிய கிணற்று நீரைப்பரிசோதித்துப் பார்ப்பதே சிறந்தது.

வட ஆர்க்காடு மார்வட்டம் குடியாத்தத்திற்கு அருகில் உள்ள மேலாலத்தூரில் ஒரு மண் பரிசோதனை நிலையம் உள்ளது. அந் நிலையத்திற்கு தாங்கள் ஒரு முறை நேரில் சென்று, அங்குள்ள உதவி மண் இரசாயன வல்லுநர் (Assistant Soil Chemist) அவர்களிடம் முழு விவரத்தையும் கூறி, அவர் கூறும் வகையில் தங்கள் கிணற்று நீரின் மாதிரியைக் கண்ணுடி பாட்டிலில் எடுத்துச் சென்று கொடுத்தால், பரி சோதனைச் செய்து பார்த்துத் தங்களுக்குத் தகுந்த பரிந் துரை வழங்குவார். தாங்க ளுக்குக் கிணற்றுத் தண்ணீர் ஒரு பிரச்னையாக இருப்பதால், நேரில் சென்று உடன் தண் ணீரைப் பரிசோதித்து அறிந் திடுவதே நல்லது. போக வர செலவு ஆகுமே என்று பார்த் தால், உடனடியாக தகுந்த நிவாரணம் காண முடியாது. எனவே, மேலாலத்தூரில் உள்ள மண் பரிசோதனை நிலை யத்திற்கு நேரில் சென்று விவரம் அறிந்து, உதவி மண் இராசயன வல்லுநர் கூறுவது போல் செய்வதே சிறந்தது. இது தொடர்பாக உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அல்லது உங்கள் ஊர் நல உதவியாளர் ஆகியவர் களது உதவியையும் தாங்கள் கேட்டுப் பெறலாம்.

வினு: களர் நிலங்களில் எந்த ரக நெல் நல்ல பலன் தரும்? எந்தெந்த பருவத்தில் பயிர் செய்தால் நல்ல விளைச் சல் தரும்? பொதுவான உரச் சிபாரிசு என்ன? களர் நிலங் களில் தக்கைப் பூண்டு பயிர் செய்து எத்தனை நாளில் வய லில் மிதிக்க வேண்டும்? மேலு ரமாக எந்த உரத்தில் எவ்வ ளவு உரம் இட வேண்டும்?

—தா. வரதராஜுலு,
த/பெ. தாசு நாயுடு,
திருமலைக் கிராமம்,
காளப்பநாயக்கன்பட்டி
(அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

விடை: தங்கள் நிலம் 'களர் நிலமா? அல்லது உவர்நிலமா?' என்பதை அறிய முதலில் மண் பரிசோதனைச்செய்யவேண்டும். மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனை செய்ய உங்கள் ஊர் நல உதவியாளர் அல்லது உங்கள் ஊராட்சிஒன்றியதுணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் உதவியை நாடலாம்.

மண் பரிசோதனையின் அடிப் படையில் தங்கள் நிலம் களர் என்று முடிவு செய்யப்பட்டால் களர் தன்மையை மாற்றுவதற்

கான முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

களர் நிலங்களில் 'பேராவூரணி-1' (பி.வி.ஆர்.1) என்ற நெல் ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. இந்த ரகம், அமில கார நிலை (பிஎச்) 9.0 வரையுள்ள களர் மண்ணிலும், இ.சி. (E.C.) 1.5 வரையுள்ள உவர் மண்ணிலும் நன்கு வளர்ந்து நல்ல மகசூல் தரக் கூடியது. 'பேராவூரணி-1' ரகத்தின் வயது 145 நாட்கள். இந்த ரகத்தைச் சம்பா பட்டத்தில் (ஜூலை-ஆகஸ்ட்) மாதத்தில் பயிரிட வேண்டும்.

களரில் நெல் பயிரிட கூடுமானவரை அதிக அளவு தொழு உரம் அல்லது தழை எரு போடுதல் சிறந்தது. இந்த ரகத்திற்கு அடியுரமாக 11 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச் சத்து, 7 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவில் உரமிட 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 24 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட், 11 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். களர் நிலங்களுக்குச் சூப்பர் பாஸ்பேட் உரமிடுதல் சிறந்தது.

நடவு செய்த 30-வது நாளில் 3.5 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இட 17.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 7.7 கிலோ யூரியாவைத் தூவ வேண்டும். அடுத்து, பயிர் சூல் கட்டும் தருணத்தில் 3.5 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இட 17.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 7.7 கிலோ யூரியாவை இட வேண்டும்.

களர் நிலத்தில் எப்பொழுதும் தொடர்ந்துத் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது. வயலுக்குக் கொஞ்சம் தண்ணீர் மட்டுமே விட்டு, வயலெங்கும் நன்கு பரவி நிற்கச் செய்து, மண் நன்கு நனையுமாறு செய்ய வேண்டும். வயலில் மீண்டும் புதிதாகத் தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு செய்வதால் வயலில் உள்ள தீங்கு விளைவிக்கும் உப்புகள், மேல் மட்ட மண்ணிலிருந்து வேர் மண்டலத்திற்குக் (Root Zone) கீழே சென்று விடும். இதனால் அவ்வுப்புக்களால் பயிர்களுக்கு ஊறு ஏற்படாது.

களர் நிலத்தில்பொதுவாகப் பயிர் கரைந்துவிடும்! எனவே களர் நிலத்தில் நடவு செய்யும்போது ஒவ்வொரு குத்திலும் 3 பயிர் வீதம் வைத்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு ஏக்கர் நடவு செய்ய, 24 கிலோ 'பேராவூரணி-1' விதைகளை 16 செண்ட் நாற்றங்காலில் விதைத்திட வேண்டும்.

களர் நிலத்தில் தக்கைப் பூண்டு விதைத்து, பூ பூக்கும் தருணத்தில் அப்படியே மடக்கி உழுதுவிட வேண்டும்.

''பேராவூரணி-1'' ரக நெல் விதை வேண்டும் என்று உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் முன் கூட்டியே தெரிவித்தால், அவர் அவ்விதைகளை வரவழைத்து வழங்கிட ஆவன செய்வார்.

**வினா** : எங்கள் ஊரில் சுமார் பதினைந்து குடும்பங்கள் வீட்டு மனை சொந்தமாக இல்லாமல் தவிக்கிறார்கள். தமிழக அரசு நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் பட்டா செய்துதருவதை அறிந்து, பல அதிகாரிகளுக்கு மனுக்கள் எழுதியும், இதுவரை அவர்கள் ஒருபயனும் காணவில்லை. எனவே, எங்கள் இளைஞர் மன்றம் முன்னின்று, அந்த ஏழை மக்கள் பயனடைய ஆவன செய்து தர எண்ணியுள்ளது. எங்கள் மன்றம் என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும்? எந்தெந்த அதிகாரிகளை எவ்விதம் அணுக வேண்டும்? மனுக்களில் புறம்போக்கு நிலம் காட்டப்பட வேண்டுமா? பட்டா நிலத்தைக் காட்டலாமா? தயவு செய்து பதில் கூறவும்.

—மா. நாராயணன்,
செயலாளர்,
இளைஞர் மன்றம்,
குறிச்சி,
குளித்தலை வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**விடை** : வீடற்றோருக்கு வீட்டு மனையும், நிலமற்றோருக்கு நிலப்பட்டாவும் வழங்குவதில் தமிழ் நாடு அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. ஆனால் சில இடங்களில், இவ்வாறு பட்டா வழங்குவதில் பல தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதம் ஏற்படுகிறது. அத்தகைய காரணங்களால் தான் உங்கள் ஊரிலும் வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கும் என்று நம்புகின்றோம். உங்கள் இளைஞர் மன்றம் அவர்களுக்கு மனைப் பட்டா வாங்கிக் கொடுத்திட விரும்பினால், பின் கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) வீட்டு மனை இல்லாதவர்கள் தங்களுக்கு வீட்டு மனை இல்லை என்பதைக் குறிப்பிட்டு முடிந்தால் வீடு கட்டிக் கொள்வதற்கு ஏற்ற புறம்போக்கு நிலத்தின் சர்வே எண்ணையும் குறிப்பிட்டு— வீட்டு மனை வழங்குமாறு மனு எழுதி மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்க ஆவன செய்யவேண்டும். இம் மனுக்களை உங்கள் ஊரிலோ அல்லது பக்கத்திலோ 'மனு நீதித் திட்ட நாள்' பணி மேற்கொள்ளும் பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரில் கொடுத்திடுவது சிறந்தது.

(2) வீட்டுமனை கேட்கும் இடம் ஊராட்சிமன்றத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாய் இருந்தால், அப்புறம் போக்கு நிலத்தில் வீட்டு மனை கேட்டு மனு செய்துள்ளவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களுக்கு அந் நிலத்தைப் பகிர்ந்து மனைப் பட்டாவாக அளிக்க அந்த ஊராட்சி மன்றம் ஒப்புதல் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றி, தீர்மான நகலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஊராட்சி மன்றம் முக்கிய காரணம் காட்டி, ஊராட்சிப் புறம்போக்கு நிலத்தை வீட்டு மனையாகக் கொடுப்பதை ஆட்சேபிக்கலாம். இவ்வாறு நேர்ந்திடாமல் இருக்க, ஊராட்சித் தலைவரையும், உறுப்பினர்களையும் கலந்து, வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு ஒருமுகமான ஒப்புதல் அளித்துத் தீர்மானம் நிறைவேற்றிட இளைஞர் மன்றம் முயற்சிக்கலாம். அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமெனில் ஊராட்சி மன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால் வீட்டு மனைப் பட்டா கேட்டு மனு செய்துள்ளவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்கும்படி கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றி மேற்கூறிய அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

(3) இளைஞர் மன்றத்தின் சார்பில் வீடில்லாதவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும்படி கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு கொடுக்கலாம். முடிந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரையோ அல்லது கோட்டாட்சித் தலைவரையோ நேரில் சந்தித்து, வீட்டு மனை கேட்டு மனு அனுப்பியவர்களுக்கு, மனைப் பட்டா வழங்கும்படி இளைஞர் மன்றத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளலாம்.

(4) வீட்டு மனைப் பட்டா அளிப்பதில் எங்காவது முறைகேடு நடப்பின், தொடர்புடைய மேல் அலுவலர்களைச் சந்தித்து முறையிடலாம்.

(5) வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் கிராம கர்ணம், நிலவரி ஆய்வாளர், துணை வட்டாட்சியாளர், வட்டாட்சியாளர் ஆகியோர் நேரடியாக ஈடுபட வேண்டியுள்ளது. அவர்களுடன் சுமுகமான முறையில் பழகி, வீட்டுமனைப் பட்டா விரைந்து கிடைத்திட முயற்சிக்கலாம்.

நீங்கள் தொண்டுமனப்பான்மையுடன் பணியாற்றினால், அலுவலர்கள் நிச்சயமாக உங்களுக்கு உதவிட முன் வருவார்கள்.

வீட்டுமனைப் பட்டா பெற புறம்போக்கு நிலங்களையே காட்ட வேண்டும். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் புறம்போக்கு நிலம் இல்லாவிட்டால் பட்டா நிலங்களை வாங்கி, வீட்டு மனையாகப் பிரித்துப் பட்டா செய்து வழங்கப்படுகிறது.

**வினா** : உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்ஒரு மாணவன்படிப்புத் தரத்தில் சிறந்து விளங்குகின்றான். ஆனால் அவனது குடும்பத்தில் அவனைச் சீரிய முறையில் படிக்கவைக்க வசதியில்லை. மாணவன் 9-ஆம் வகுப்பு படிக்கிறான். பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவன். பிற்பட்டோர் நலத் துறையில் அவனுக்கு எப்படி எந்த விதமான முறையில் உதவி அல்லது கடனுதவி அளிக்கப்படுகிறது? பிற்பட்டோர் நல அலுவலகம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் எங்கு உள்ளது எனத் தெரிவிக்கவும்.

—திருவேங்கடப் பெருமாள்,
பொய்கைமேட்டூர்(அஞ்சல்),
வட ஆர்க்காடு மாவட்டம்.

**விடை** : பிற்பட்டோர் நலத் துறை மூலம், பிற்பட்ட மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகையும், பிற்பட்டோர் நலத் துறை விடுதிகளில் (Hostels) இலவசமாகத் தங்கி, இலவசமாக உண்டு, படித்திடுவதற்கான வசதியும் அளிக்கப்படுகிறது. நன்கு படிக்கும் ஏழை எளிய பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இவ்வுதவிகள் கல்லூரி படிப்பு முடியும் வரை தொடர்ந்து கிடைக்க வாய்ப்பு உள்ளது.

அண்மையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்பட்டோர் நலப்பணிகளைக் கவனிப்பதற்கு எனவே தனி நல அலுவலர்கள் (Welfare Officers) நியமிக்கப்பட்டுள்ளார்கள். (முன்பு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் நல அலுவலரே, பிற்பட்டோர் நலப் பணிகளையும் கவனித்து வந்தார்). வேலூரில், வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே, மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் அலுவலகமும் (District Backward Class Welfare Officer) உள்ளது. அங்கு சென்று மேலும் இது பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.


## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர்ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விவரங்களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்டஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**
(Ex. Member of the British Society of Dowers, London)
நீர் ஊற்று நிபுணர், கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர்-6.
தொலைபேசி எண் 31912.


## குறுவைச் சிறப்பிதழுக்குப் பாராட்டு




''தமிழரசு'' இதழின் ஐந்தாவது ஆண்டு அடியெடுத்து வைக்கும் ஆரம்பத்தில் குறுவை மாணவாரிச் சிறப்பிதழ் என் போன்ற விவசாயிகள் குறுவை, கார், நவரை ஆகிய பட்டங்களின் விவரங்களைத் தெரிந்து கொண்டோம். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் 'குன்றென மகசூல் குவிக்க குறுவைப் பட்டமே சிறந்தது!' என்ற பகுதியில் சூரிய ஒளியைப் பற்றி கூறியதுபோல், ஐ.ஆர். 8, ஆடுதுறை—1, கரிகாலன் கார் பட்டத்தில் இல்லை. மேனி இருப்பதுபோல் பிந்திய பட்டத்தில் இல்லை. அதுபோல் சோளம், நிலக்கடலை, மிளகாய் ஆகிய பயிர்களும் இருக்கின்றன. காய்கறிகளும், பூச்செடியும் அதிக மகசூல் காண்கிறது. 1—7—'74 இதழ் ஒவ்வொரு விவசாயிகளும் பலமுறை படித்து பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டியது என பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மு.மு. முகைதீன் பிச்சை,
உழவர் விவாதக் குழு,
செங்கோட்டை.


பசுமைப் புரட்சியால் உற்பத்திப் பெருக்கம்!
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள்! உதவிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் குடிநீர் வசதி!
புதிய முயற்சிகளால் தொழில்துறை வளர்ச்சி!
ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைந்திடத் திட்டங்கள்! பணிகள்!
இப்படித் தொடரும் நமது அரசின் அரும்பணிகளின்
வெற்றிக்கு
அடித்தளமே
அளவான குடும்பம்.
குடும்ப நலத் திட்டம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!


தமிழரசு



ஊனமுற்றோர்க்கு உதவிட உன்னதமான வழி!
செலவு ஒரு ரூபாய்
வரவோ பல லட்ச ரூபாய்
முதலமைச்சரின்
"உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்காக"
தமிழ்நாடு பரிசுச் சீட்டு
மாபெரும் சிறப்புக் குலுக்கல்!
இதுவரை கண்டிராத ஏராளப் பரிசுகள்! உயர்வான தொகை பெற
உங்கள் நல்வாய்ப்பு இன்றே!
முதல் பரிசு
இரண்டாவது பரிசு
சிறப்புப் பரிசுகள் (எல்லா வரிசைகளுக்கும் பொது)
ரூ. 10 லட்சம் ரூ. 2 லட்சம்
மொத்தப் பரிசுகள் 12312 (10 வரிசைகள்)
முதல் பரிசு
ஒவ்வொரு வரிசைக்கும்
ரூ. 1 லட்சம்
மற்றும்
ஆயிரக்கணக்கான
கவர்ச்சிப் பரிசுகள்.
மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 35 லட்சம்
இன்றே வாங்குங்கள்
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்!
குலுக்கல் நாள்
28-9-'74
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு,
சென்னை-600009.




பாவை
எழிலுக்கு பருவம் தரும்
வண்ணத்துப் பூச்சி!
● அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
● பருத்திப் புடவைகள் ● லுங்கிகள்
● வேட்டிகள் ● வீட்டு அலங்காரத் துணி வகைகள் ● துண்டுகள் ● கைக்குட்டைகள்
● பட்டு டைகள் ● கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
கைத்தறியே வண்ணத்துப் பூச்சி!
Criterion CO 2883

# மாணவர் சிந்தனை வளர...



கல்வி அமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன்

உயர்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த மாணவி, மாணவ மணிகளே! ஆசிரியை, ஆசிரியப் பெருமக்களே! வணக்கம்.

1974—75-ஆம் ஆண்டுக்கான 'வானொலிக் கல்வி ஒலிபரப்பினைத்' தொடங்கி வைக்கும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு, மிகவும் பூரிப்பும், பெருமையும் அடைகிறேன்.

''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்ற வள்ளுவத்திற்கிணங்க, வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஏற்ப வானொலிக் கல்வியும், கல்வி வகைகளில் ஒன்றாகும். காலத்திற்கேற்பக் கல்வியின் வகை மாறும். ஆனால் 'தரம்' ஒன்றுதான். ''நான் என்னுடைய முப்பதாவது வயதில்தான் வானொலிப் பெட்டியை இயக்கினேன்; என் பேரன் மூன்றாம் வயதிலேயே வானொலிப் பெட்டியைத் தொடுகிறான் என்றால், கல்வியின் தரம் குறையவில்லை ; மாறாகக் கல்வியின் வகை மாறுகிறது என்று பொருள்'' என்றார் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆமாம், நிலத்திலிருந்து மனிதன் நிலவுக்குத் தாவும் அளவுக்கு அறிவியல் வளர்ந்து உள்ளது. நேற்றைய 'தயக்கம்' இன்று தெளிவடைகிறது'. ஆதி மனிதனும், அடுத்த மனிதனும் கேட்ட கேள்விகளுக்கு இன்றுதான் பதில் கிடைக்கிறது. அந்த அளவுக்கு 'அறிவியல்' வளருகிறது. மனித வாழ்வோடு இணைந்துள்ளது. எனவேதான், புதிய சூழ்நிலைக்கு ஏற்ப, புதிய சமுதாயம், தன்னை ஆயத்தப்படுத்த வேண்டிய கட்டாய நிலை வந்துள்ளதை மனத்தில் கொண்டு, கல்வி முறையில் புதுப்புது வகைகள் அவ்வப்போது கொண்டு வரப்பட்டுள்ளன. அந்த வகையில் வானொலிக் கல்வியும் ஒன்றாகும்.

''அறிவியல் அறிவோடு'', ''அறிவியல் மனமும் வேண்டும்'' எனப் பண்டித நேரு குறிப்பிட்டுள்ளார். அம்மனத்தினை வெறும் ஏட்டுக் கல்வியால் மட்டும் பெறமுடியாது. போதிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் உண்டாக்குவது மூலம்தான் பெற முடியும். அவ்வாய்ப்பும், வசதியும், மாடி வீட்டு மாணவனுக்கு மட்டும் இருந்து பயனில்லை. ஏழை வீட்டு மாணவனுக்கும் வேண்டும். சமநிலை வாய்ப்புத்தான் சரியான சமுதாயத்தை அமைக்கும்.

அன்ன சத்திரம்
  ஆயிரம் வைத்தல்
ஆலயங் கள்பதி
  னாயிரம் நாட்டல்
அன்ன யாவினும்
  புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு
  எழுத்தறி வித்தல்

என்றார் பாரதியார். அப்பாரதியின் கனவினை நனவாக்கும் முறைதான் வானொலிக் கல்வி. வெள்ளி நிலவெரிய, வீட்டுத் திண்ணையில், கையில் வானொலிப் பெட்டியுடன் மாணவன் கல்வி ஒலிபரப்பு அறிவினை வளர்க்கும் காலமிது. அந்நிலையை மனத்திற்கொண்டு, வானொலி நிலையத்தார் நடுத்தர, உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்கென இவ்வேற்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது மகிழ்ச்சி தரத் தக்கதாகும்.

இக் கல்வி ஒலிபரப்பில், தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற பாடங்கள் இடம் பெற்று உள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அந் நிகழ்ச்சிகளும் புதியபாடத் திட்டத்திற்கிணங்கத் தயாரிக்கப்பட்டிருப்பதை அறிந்து பாராட்டுகிறேன். ஒரு துறையில் மட்டும் வல்லமை பெற்று இருப்பதைவிட, ஒவ்வொரு துறையிலும் வல்லமை பெறுவது சாலச் சிறந்தது. கவிதை மட்டுமே இயற்ற முடியும் என்பதைவிட, கணிதத்திலும் புலமை உண்டு என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ''அதிகாரம்'' மட்டுமே செய்ய முடியும் என்பதைவிட 'ஆளவும்' தெரியும் என்பது பாராட்டுக்குரிய ஒன்று. ரோஜா மலரை முகரத் தெரிந்தால் மட்டும் போதாது



அதில் 'பன்னீர்' எடுக்கலாம் என்ற அறிவும் வேண்டும். அருவியின் அழகில் சொக்கிவிட்டால் மட்டும் போதாது ; அதில் 'மின்சாரம்' எடுக்கலாம் என்ற அறிவும் வேண்டும். ஆலமரத்திலிருந்து பழம் கீழே விழுவது அன்றாடச் செயல் என்று இருப்பது சாதாரண மனம்; ஆனால் அச்செயலுக்குப் பூமியின் புவிஈர்ப்புச் சக்திதான் காரணம் என அறிவது அறிவியல் மனம். எனவே இவை போன்ற பல்வேறு துறையிலும் மாணவர்களின் அறிவினை வளர்க்க இக் கல்வி ஒலிபரப்பு பெரிதும் பயன்படும் என நம்புகிறேன். பயன்படுத்த வேண்டியது மாணவர்களின் கடமையாகும்.

''நவில்தொறும் நூல் நயம்'' என்ற வள்ளுவத்திற்கிணங்க கேட்டுக் கேட்டுப் பெறும் அறிவு பயனுடையதாகும். ''செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்'' என்பதற்கிணங்க, செவிச் செல்வம் தருவது . வானொலிக் கல்வி. ''கஞ்சத் தனம் கூடாது. அதுவும் அறிவுக் கஞ்சத்தனம் அறவே கூடாது. பெற்ற கல்வி பிறர்க்குப் பயன்பட வேண்டும். கல்வி ஒரு பொதுச் சொத்தாகும். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் வாழ்த்த, கற்ற கல்வியினைப் பயன்படுத்த வேண்டும். ஊரறியப் படித்த கல்வியை, உள்ளத்திலே பூட்டி வைத்தால், யாருக்கும் நன்மையில்லை. வீணையின் இசை மீட்டுதற்கே; விளக்கின் ஒளி, இருளை ஓட்டுதற்கே. அது போன்றுதான், கல்வியால் பெற்ற அறிவு! கொலம்பஸ் தன் அறிவினைப் பயன்படுத்தாவிட்டால், கடல் வழிப் பயணத்தால், நாட்டைக் காணலாம் என்ற நிலை ஏற்பட்டிருக்காது. வள்ளுவன் தன் அறிவினை முடக்கி வைத்திருந்தால்' திருக்குறள்' உலகத்திற்குக் கிடைத்திருக்காது. ஷேக்ஸ்பியர் அறிவினைப் பயன்படுத்தாவிட்டால், ஆங்கில இலக்கியத்தின் ஒரு பகுதி இல்லாமல் போயிருக்கும். இது போன்றே எத்தனையோ அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கையினையும் ஒரு சேரத் தருவது வானொலிக் கல்வியாகும். ஏன்? 'மார்க்கோனி'யின் அறிவால், உலகம் அடைந்துள்ள பயன் ஏராளம்! உலகத்தின் வடகோடி முனையில் நடக்கும் செய்திகளைத் தென்கோடி முனையில் இருப்பவன் கேட்கிறான். ஒட்டுத் திண்ணையில் இருந்தவாறே கேட்கிறான். இவை போன்ற 'சுவையான' நிகழ்ச்சிகளை வானொலிக் கல்வி வழங்கும்.

கேள்விகள் கேட்டு விடை காண்பது அறிவினை வளர்க்கும் முறைகளின் முதன்மையானது. ''எதையும், ஏன்? எப்படி? எதற்கு? எனக் கேட்டு, தன் பகுத்தறிவால் உணர்ந்து உரைத்த சாக்ரடீஸ் 'கிரேக்கப் பெரியார்' எனப் புகழடைந்தார். ஏன், எனக் கேட்டுத்தான் மின் ஒளி தந்த தாமஸ் ஆல்வா எடிசன், பேரும். புகழும் பெற்றார். எப்போது எனக் கேட்டால் விடை சொல்லிவிடலாம். எங்கு எனக் கேட்டால் விடை காணலாம். என்ன என்று கேட்டாலும் விடை கிடைத்துவிடும். ஆனால் ஏன் என்று கேட்டால் விடை காண்பது அரிதாகும். ஏன் என்னும் கேள்வி அறிவின் எல்லைக் கோட்டை அடையும் வழிகளில் முதன்மையானது. அந்த வகையில் மாணவர்களின் அறிவினைச் சோதிக்க, வளர்க்க, முழு மனிதனாக வளர்க்க, ''வினா—விடைப்'' பகுதியும்வானொலியில் உள்ளது என்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன்.

> **அடுத்த இதழில்....**
> மாநில தகவல் துறை அமைச்சர்கள் மாநாட்டில்
> தமிழ்நாடு அரசு செய்தி—மக்கள் தொடர்புத்துறை அமைச்சர்
> திரு என். வி. நடராசன் அவர்கள்
> ஆற்றிய உரை!

மேலை நாடுகளில் தொலைக்காட்சி வழியாய் மாணவர்கள் கல்வியினைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளதை அறிவோம். ஒவ்வொரு நாட்டின் பள்ளி அறையில் நடைபெறும் கல்வி முறையினை, ஒப்பு நோக்கி, தம் அறிவினை வளர்க்கிறார்கள். நம் நாட்டிலும் அத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நான் பார்த்த மேலை நாடுகளில், குறிப்பாகப் பிரிட்டனில் வகுப்பறையில் ஆசிரியர்கள், போதிப்பவராக இல்லாமல், வழிகாட்டியாகவே இருக்கிறார்கள். மாணவர்கள் தாமாகவே பாடத்திலுள்ள செயல் முறைகளைச் செய்யும்பொழுது ஏற்படும் தவற்றினை ஆசிரியர்கள் சுட்டிக் காட்டி வழிகாட்டுகின்றனர். அதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் மனம் ஒத்த அன்புடன் பழகும் சூழ்நிலை உருவாகும். இவ்வாய்ப்பினையும் மாணவர்கள் பெறும் காலம் நீண்ட நாளில் இல்லை.

தம் எண்ணத்தை எழுதி வெளியிட முடியாதவனுடையவும் அல்லது கேட்டார்ப் பிணிக்கும் வகையில் சொல்ல முடியாதவனுடையவும் 'ஊமையர் கண்ட கனவாகவே' அமைந்து விடுகின்றன. அந்தக் குறையை இவ் வானொலிக் கல்வி நீக்குகிறது. அவ்வப்போது 'சொல்மேடை' 'விவாத அரங்கு' போன்ற பல்சுவை நிகழ்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளது பாராட்டுக்குரியது. 'இளமையில் கல்' என்பது வெறும் சொற்கூட்டமன்று. பொருள் பொதிந்த உண்மையாகும். 'உனக்கு வேண்டிய செல்வத்தை உன் தலையில் வைத்துக் கொள். அது வாழ்நாள் முழுவதும் நிறைந்த வட்டியைக் கொடுக்கும்' என்பார்கள். எனவே இளமையில் நீங்கள் பெறும் அறிவு முழுமையான மனிதனாக, பூரணத்துவம் பெற்ற போர்க் கருவியாகத் தயார் செய்கிறது. போர் வீரன் 'நெப்போலியன்' போர் முனைக்குச் செல்லும் வழியில் கூடப் படித்துக் கொண்டே செல்வாராம். அவர் போகும் வழியில் அவர் படித்துவிட்ட புத்தகங்கள் எத்தனையோ கிடைக்குமாம். எனவே படிக்கும் பழக்கம் முழு மனிதனாக மாற்றுகிறது. அப்பழக்கத்தினைப் பெற, இவ் வானொலிக் கல்வி ஒலிபரப்புப் பயன்படும் என்பது திண்ணம்.

நம் தமிழகத்தைப் பொறுத்த வரை 2,823 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 16,27,030 ஆகும். அத்தனை பேருக்கும் கல்வி பெறுவதில் ஒரே சீரான, சம வாய்ப்பு கிடைக்கவில்லை. அக்குறையினை நிறை செய்யும் ஏற்பாடுதான் வானொலிக் கல்வி ஒலிபரப்பாகும்.

எழுச்சி மிக்க கவிதைகளால் விடுதலை உணர்ச்சியைத் தூண்டிய கவிஞர் பாரதி, தனக்குக் கிடைத்த பரிசுத் தொகையினைப் புத்தகங்களாக மாற்றி, வீட்டு வறுமையினையும் பொருட்படுத்தாது படிப்புணர்வை ஊட்டிய கவிஞர், வருங்கால மாணவர்கட்கு நல்ல எடுத்துக் காட்டாவார். அவர் கவிதைகளை நீவிர் கேட்பீர்! ''யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்



# சிறுபான்மையோர் நலன்களைப் பாதுகாப்போம்

கலாவாகினி மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாட்டின் தலைசிறந்த மைந்தர் ஆந்திரம் பெருமிதத்தோடு இந்த நாட்டுக்குத் தந்த செல்வர் நமது குடியரசுத் தலைவர் அவர்கள் பங்கேற்கும் இவ்விழா தனிச் சிறப்பு மிக்க விழாவாகும். ஒன்றாக இருந்த சென்னை ராஜதானியில் கிரி அவர்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையது ஆகும். எனவே தமிழகமும் நியாயமான பெருமிதத்தோடு திரு. கிரியின் சிறப்பில் பங்கு பெறலாம். திருவாளர்கள் கிரி, பிரகாசம் போன்ற சிறப்புக்குரிய ஆந்திரர்கள் தனிச்சார்பற்ற - பரந்த பாரம்பரியங்களைக் கட்டிக் காத்துச் செழுமையடையச் செய்வதற்காக உழைத்திருக்கிறார்கள். சென்னையின் மக்களும் இந்தத் தலைவர்களின் தொண்டைத் தக்க வகையில் போற்றிடத் தவறவில்லை என்பதில் பெருமிதம் கொள்ளலாம்.

சென்னை நகர் மட்டுமல்ல; தமிழகமே இந்தத் தனிச் சார்பற்ற பரந்த உணர்வை வளர்த்து, நாட்டில் ஒருமைப்பாட்டுச் சக்திகளை வலிவடைய செய்யும் ஒரு கொள்கையை இடையறாது கடைப்பிடித்து வந்துள்ளது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று தொன்மைக் காலத்துத் தமிழ் நாட்டுப் புலவர் ஒருவர் கூறிச் சென்றார். உலகில் வாழ்வோரனைவரும் நம் சோதரரே என்ற இந்த உணர்வு தமிழ்ப் பண்பாட்டில், தமிழ் வாழ்க்கை முறையில் பிரித்துக் காண முடியாத அளவுக்கு ஒன்றிவிட்ட உணர்வாகும். நின்று நிலைத்துவிட்ட இந்தக் கோட்பாட்டின் வழி நின்று, தமிழ்நாட்டில் வாழுகிற எல்லா இன மொழி மக்களிடையேயும் கூட்டுறவும் தோழமையுணர்வும் வளர்ந்திடப் பாடுபட்டு வருகிறோம்.

தமிழ்ப் பண்பாட்டின் மேன்மைக்காக உழைக்கிற அதே நேரத்தில் தேசிய ஒருமைப்பாட்டு உணர்விலிருந்து எங்களை நாங்கள் தனிமைப்படுத்திக் கொள்ள மாட்டோம்.

இந்த அமைப்பில் உள்ள உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும். உங்கள் அமைப்பின் இரண்டாம் ஆண்டுவிழாவில் நான் பங்கேற்ற நேரத்தில், 'உங்கள் பள்ளிக் கட்டடம் கட்டவும், மண்டபம் எழுப்பவும் நிலம் வழங்குகிறேன்'

முதல்வர் கலைஞர்

என்று உறுதியளித்தேன். ஆந்திரர்களின் பண்பாட்டு நிலையத்தை எழுப்பிட இங்கு மனை வழங்கிய இந்தச் செயலே எங்கள் சகோதரத்துவ உணர்வுக்கொரு எடுத்துக் காட்டாகும்.

தெலுங்கு மொழிப் பள்ளிக் கட்டடத்துக்கான கால்கோள் விழாவை நமது குடியரசுத் தலைவரவர்கள் இன்று இங்கே நிகழ்த்தியிருக்கிறார்கள். சிறு வயதில் தாய்மொழி மூலம் போதிப்பதே சிறந்த கல்வி முறையென்று கல்வி வல்லுநர் பலரும் ஒருமனப்பட்டுக் கூறுகிறார்கள். இதை உணர்ந்தே தமிழக அரசு தமிழ்நாட்டில் பெரும்பான்மையோரது மொழியான தமிழ் மொழியில் மட்டுமல்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, குஜராத்தி, உருது ஆகிய மொழிகளிலும் பாடம் போதிக்க வகை செய்துள்ளது.

மொழிவழிச் சிறுபான்மையோருக்கான ஆணைக்குழு தனது 1971-72-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தமிழகத்தில் 993 ஆரம்பப் பள்ளிகளில் 77,500 சிறுவர் சிறுமியர் தெலுங்கு மொழிக் கல்வி பெறுகின்றனர் என்று தெரிவித்துள்ளது.

இதேபோலத் தெலுங்கு மொழியில் போதனை 688 உயர்நிலைப் பள்ளிகளில் 27,126 மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இது இன்னும் தொடருகிறது.

கல்லூரி மட்டத்தில் தமிழும் ஆங்கிலமுமே பயிற்சி மொழிகளென்றாலும் மொழிவாரிச் சிறுபான்மையினர் புகுமுக வகுப்பிலும் பட்டப்படிப்பு வகுப்புகளிலும் முதல் தொகுப்பின்கீழ் அவரவர் தாய்மொழியில் பயிலலாம். பொதுவாக 15 முதல் 20 மாணவர்கள் வரை ஒரு குறிப்பிட்ட சிறுபான்மை மொழியில் பயில விரும்புவார்களானால் பல்கலைக் கழகத்திலிருந்து அனுமதி பெற்று, முதல் தொகுப்பின் கீழ் அவர்களுக்கு அந்த வசதியைச் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எண்ணிக்கை அதைவிடக் குறைவாக இருந்தால் அத்தகைய மாணவர்கள் தனியே படித்துத் தேர்வு எழுதப் பல்கலைக் கழகத்தினிடம் தேவையான அனுமதியைக் கேட்டுப் பெறலாம் என்றும் இங்கே வசதி செய்திருக்கிறோம்.

சிறுபான்மையோர் மொழிகளில் பாடபோதனை நடத்தத் தேவையான அளவு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அண்மைக் காலத்தில் தெலுங்கு மொழியாசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கென்று தருமபுரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. இந்தக் கல்வி ஆண்டும் அந்தப் பிரிவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதேபோலச் சிறுபான்மையோரது மொழிகளில் பாடப்புத்தகங்களை அச்சிட்டு வெளிக்கொண்டு வரவும் தமிழக அரசு தனி ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தற்போது உள்ளூர் மக்களுக்கு வேலை என்பது பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. வேலைவாய்ப்புக்களுக்கு உள்ளூர் மக்களுக்கு முதலிடம் அளிக்கப்படவேண்டுமென்கிற எண்ணத்தை உருவாக்கி வகுத்ததும் அதற்கேற்ப மத்திய மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கியதும் தேசிய ஒருமைப்பாட்டு மன்றமே என்பதை நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தேசிய ஒருமைப்பாட்டு மன்றத்தின் வரைவுத் தீர்மானம் ''பொதுத்துறை, தனியார்த் துறை நிறுவனங்கள் இரண்டிலும் உள்ளூர் மக்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு அளிக்கப்படாதது, அவர்களிடையே அதிருப்தியை உருவாக்கியிருக்கிறது. இதைத் தேசிய ஒருமைப்பாட்டு மன்றம் கருத்தில் கொள்கிறது. நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமை உண்டு என்று அரசியல் சட்டம் கூறுகிறது என்பதிலும் சந்தேகமில்லை. அது ஒற்றுமைக்கு அவசியமானதே. அதை நாம் மதித்துப் பாதுகாத்திட வேண்டும். அதே நேரத்தில் உரிய தகுதிகளுடைய அந்தந்த வட்டாரத்து மக்களுக்கு நாம் வேலை வாய்ப்புகளை அளித்திட வேண்டும். எல்லா மாநில அரசுகளின் கொள்கையும் இதுவாகவே இருக்க வேண்டும்.''

தேசிய ஒருமைப்பாடு மன்றத்தின் பரிந்துரை இது. இவை நாம் செய்ய முனையும்போது ''விதிமுறைகளெல்லாம் மீறப்பட்டு விட்டதாகக் கூக்குரல் எழுகிறது. இதை நீங்கள் அறிவீர்கள். இது உண்மையல்ல. உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்போது பிறருக்கு அது நம்மால் மறுக்கப்படுவது கிடையாது. இம்மாநிலத்தில் வாழுகிற மொழிவழிச் சிறுபான்மையினர் எவருக்கும் அத்தகைய அனுபவம் எதுவும் எப்போதும் ஏற்பட்டது கிடையாது.

தனிச்சார்பு அற்ற பரந்த நோக்குடன் கூடிய இந்த சென்னை மாநகரத்தில் மொழி வழி சிறுபான்மையோர் எப்படி அமைதியோடு வாழுகிறார்கள் என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

இங்கே குடியரசுத் தலைவரின் முன்னிலையில் ஒன்றை உங்களுக்கெல்லாம் உறுதியாகக் கூறுவேன். மாற்றார் எவர் எந்த அரசியல் முழக்கங்கள் எழுப்பிய போதிலும் மொழி வழிச் சிறுபான்மையோரை— அவர்களது நலன்களைப் பாதுகாப்போம் என்று உறுதி அளிக்கிறேன்,

(1-8-'74 அன்று, கலாவாகினி கலைமன்ற மண்டப அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)




**அட்டையில் காட்சி தருவது**

பூம்புகார் கலைக் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றிருக்கும் கண்ணகி சிலை. இதன் உயரம், 9 அடி ஆகும்.

சாந்துணையும் கல்லாதவாறு''
என்று வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கிணங்க வான்வழியாய் வரும் கல்வியினையும் பயன்படுத்தி, வாழ்நாள் முழுவதும் கற்போம். அறிவினை எங்கிருந்தாலும் பெறுவோம். வளர்ந்து வரும் அறிவியலுக்கேற்ப, நம் வாழ்வினைப் பயன்படுத்துவோம். ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்குவோம். மாணவச் சமுதாயம் அந் நிலையை அடைய இளமையிலேயே தன்னைத் தயார் செய்யட்டும்!

இந்தத் திட்டம் சிறப்புற, வெற்றி பெற ஒவ்வொரு பள்ளியின் தலைமை ஆசிரியரும், ஏனைய ஆசிரியப் பெருமக்களும் பெரிதும் முயற்சி எடுத்துத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் முழு வெற்றி அடைவதில், ஆசிரியர்களின் முழு முயற்சியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆசிரியப் பெருமக்கள் பொறுப்புணர்ச்சியோடு கடமையாற்றிப் பேரும் புகழும் பெற முன்வர விரும்பி அழைக்கிறேன்.



''என்னருந் தமிழ்நாட்டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்
உன்னத இமமா மலைபோல்
—ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல்
எந்நாளோ?''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற் கிணங்க ஓங்கிடும் புகழைத் தமிழகத்திற்கு ஏற்படுத்தித் தர ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் பேருதவி புரிவார்களாக! எல்லோருக்கும் என் உளங் கனிந்த வாழ்த்துக்கள்.

[15—7—1974-ல் சென்னை வானொலி நிலையத்தின் கல்வி ஒலிபரப்பைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை]



## வருந்துகிறோம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மாணவர்களுள் முதன்மை பெற்றவரும், கவிஞரேறு எனப் புகழ் பெற்றவருமான கவிஞர் வாணிதாசன் அவர்கள் 6-8-1974 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலைத் 'தமிழரசு' தெரிவித்துக் கொள்கிறது.

## மீன் உற்பத்தி உயருகிறது.

1973-74ல் மீன் உற்பத்தி 22 இலட்சம் டன்னுக்கும் கூடுதலாக அதிகரித்திருக்கிறது. 1968-69ல் உற்பத்தி சுமார் 17 இலட்சம் டன்னாக இருந்தது.

கடல் மீன் உற்பத்தி, 1968-69ல் 11 இலட்சத்து 50 ஆயிரம் டன்னாக இருந்தது. தற்போது இது 15 இலட்சம் டன்னுக்கும் அதிகமாகும்.

ஆற்று மீன் உற்பத்தி 1968-69ல் 6 இலட்சத்து 20 ஆயிரம் டன்னாக இருந்தது. இப்போது 7 இலட்சத்து 84 ஆயிரம் டன் அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியும் அதிகரித்திருக்கிறது. 1972-73ல் ஏற்றுமதி 38 ஆயிரத்து 903 டன்னாக இருந்தது. 1973-74ல் இது 48 ஆயிரம் டன்னாக உயர்ந்துள்ளது.

விசைப்படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் பழக்கத்தைச் சிறப்புறச் செய்வதற்காகப் புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டில் 12 ஆயிரம் மீன்பிடிப்பு விசைப் படகுகள் உள்ளன. மேலும் 700 படகுகளை மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்த இருக்கிறார்கள்.






# மதுரை மாவட்டத்தில்.



மதுரை மாவட்டத்தில் இயற்கை நீர்நிலையங்களில் மீன் குஞ்சுகள் சேகரிக்கப்பட்டு வைகை அணையில் அமைந்துள்ள தூண்டுதல் முறை இன விருத்தி நிலையத்தின் மூலம் செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்டு வினியோகிக் கப்படுகின்றன. மே திங்களில் 10,000 மீன் குஞ்சுகள் சேகரிக் கப்பட்டுள்ளன.

சூன் மாதத்தில் 10,000 மீன் குஞ்சுகள் இருப்பு செய் யப்பட்டுள்ளன. 2,466.500 கிலோ எடையுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டு அதன் மூலம் ரூபாய் 2,039.29 வருமானம் கிடைத்துள்ளது.

கிராமிய மீன்பிடி குளத்தில் 1,717.250 கிலோ எடையுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 1,351.42 வருமானம் கிடைத் துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய நாற்றங் காலைப் பராமரித்தலும் மீன் களை விற்பதற்காகக் குளங் களைப் புதுப்பித்தல் ஆகிய திட் டங்கள் மேற்கொள்ளப் படு கின்றன.

மதுரை மாவட்டத்தில் 5 மீன வர் கூட்டுறவுச் சங்கங்களும் மீனவர் கூட்டுறவு சம்மேள னம் ஒன்றும் இயங்கி வருகின் றன. இச்சங்க உறுப்பினர் களுக்கு ரூ. 42,900 இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

வைகையில் அமைந்துள்ள தூண்டுதல் முறை மீன் இன விருத்தி நிலையம்போல் சாத்தி யாறு அணையில் ரூ. 1.20 இலட் சம் செலவில் ஒரு மீன்பண்ணை கட்டப்பட்டுள்ளது. இப் பண்ணையின் மூலம் 50 இலட் சம் நுண்மீன் குஞ்சுகள் 10 இலட்சம் விரலளவு மீன்குஞ்சு களும் உற்பத்தி செய்யப்படும்.

வைகை அணையில் உள்ளது போல் ஒருமீன் பண்ணையை மஞ்சளாறு அணையில் ரூ. 1.25 லட்சம் செலவில் கட்ட உத் தேசிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட மீன் குஞ்சு உற்பத்தியில் தன்னிறைவுக் காக புதிதாகக் கட்டப்பட்டு வரும் பாலாறு-பொரந்தலாறு அணைப் பகுதியிலும் இது போன்ற மீன் பண்ணைகள் கட்டப்பட உள்ளன.

மேலும் கொடைக்கானலில் ஒரு டிரெனட் மீன்பண்ணை கட்ட உத்தேசிக்கப்பட்டுள் ளது.

* * *

அண்மையில் எடுக்கப்பட்ட தனிக் கணக்கின்படி மதுரை மாவட்டத்தில் 54,979 தறிகள் உள்ளன. இவற்றில் 11,126 தறிகள் 55 நெசவாளர் கூட்டு றவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்களில் இணைக்கப்பட்டு நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

நெசவாளர் கூட்டுறவுச் சங் கங்களில் சேராமல் மாஸ்டர் வீவர்களின் பிடியில் உள்ள தனி நெசவாளர்களை 500 தறி களுக்கு ஒரு சங்கம் என்ற அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் சேர்க்க தற்போது நெசவாளர் கூட்டுறவுப் பணி என்ற அடிப்படையில் அமைத்து, அச்சங்கங்கள் மூலம் அவர்களுக்குத் தேவை யான நூல், செயற்கைப்பட்டு, சாயப்பவுடர் போன்ற மூலப் பொருட்கள் வினியோகம் செய்ய ஏற்பாடுகள் நடை பெற்றுவருகின்றன. தற்போது 5,696 உறுப்பினர்களில் 26,890 தறிகளைக் கொண்ட 32 பணி கூட்டுறவுச் சங்கங்களின் பிரேரணைகள் வரப்பெற்று பதிவு செய்யும் தறுவாயில் உள்ளனர். இம்முயற்சியின் மூலம் தமிழகத்தில் உள்ள எல் லாத் தறிகளையும் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வந்து பயன்பெற அரசு முயன்று வரு கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் கூடிய விரைவில் பதிவு செய் யப்படும்.

* * *

1973-74-ஆம் ஆண்டில் வரு வாய்த்துறைப் பிரிவில் பழனி நகராட்சியில் 98 சதவீதம் வரி வசூலிக்கப்பட்டுள்ளது. ஏழு வரி தண்டலர்களுக்குப் போனஸ் வழங்கப்படுகிறது.

* * *

திருமங்கலம் ஊராட்சி ஒன் றியத்தில் 1974-75-ஆம் ஆண் டில் சாத்தங்குடி, அச்சம்பட்டி, கப்பலூர் ஆகிய மகளிர் மன் றங்கள் சத்துணவு வழங்கும் திட்டத்திற்காகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

* * *

மதுரை மாவட்டத்திற்கு 1974-75-ஆம் ஆண்டிற்கு கிராம குடிநீர்த்திட்டத்திற்கு ரூ. 26,64,480-ம் இணைப்புச் சாலைகள் திட்டத்திற்கு ரூ. 10,20,000-ம் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

* * *

ஆள்வலத்திட்டத்தின் (Rural man power) கீழ் 1974 -74 ஆம் ஆண்டிற்கு மதுரை மாவட்டத்தில் ஆண்டிபட்டி, ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட உள்ளது.

ஒவ்வொரு வட்டாரத்திற் கும் ரூ. 1 லட்சம் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

* * *

1974-74-ஆம் ஆண்டு பேரு ராட்சிகளில் தூசிபடியாத மேற்பரப்பு சாலைகள் அமைப் பதற்காக, அரைமான்யத் திட் டத்தின் கீழ் ரூ. 2,90,000ஐ அரசு, மதுரை மாவட்டத் திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

* * *

1974-75ஆம் ஆண்டுக்கு வேளாண்மைத் திட்டத்திற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றி யத்திற்கும் ரூ. 22,667-ம், கால்நடைப் பாதுகாப்புத் திட் டத்திற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 6,2000-ம் விவசாய மானியம் ஒதுக் கப்பட்டுள்ளது.

* * *

மதுரை மாவட்டம் தேனி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வீரபாண்டி கிராமம் 1972-73-ஆம் ஆண்டில் மாநில அளவில் முதல்தர சிறந்த கிராமமாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளது. இக்கிராமத் திற்கு அரசினரால் ரூ. 1,000/- பரிசுத் தொகையாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

* * *

மதுரை மாவட்டம் திரு மங்கலம் ஊராட்சி ஒன்றியத் தில் கிராம நல ஊழியையாகப் பணியாற்றும் திருமதி. எஸ். பாப்பு 1972-73-ஆம் ஆண்டில் மாநில அளவில் முதல்தர கிராமநல ஊழியையாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். இவருக்கு அரசினரால் ரூ. 750 பரிசுத்தொகை வழங்க உத்தர விட்டுள்ளது.

அம்மான் மகள் அன்னக் கொடியையும் அத்தை மகன் வீரமணியையும் 'வருக வருக!' என்று வரவேற்ற அந்தத் தனிமைக்கு ஓர் அந்தம் உண்டு; அந்தரங்கமும் இருந்தது. ஒட்டும் இரு உள்ளங்களும் ஒட்டிக் கொண்டிருந்த அந்தத் தனிமையில் ஒரு சொந்தம் வாழ்ந்தது.

மேலே, நட்சத்திரக் குழந்தைகள் 'கண்ணாமூச்சி' விளையாட்டிற்குப் புள்ளி வைத்து விட்டு, நாணக் குதூகலமும் நமட்டுச் சிரிப்பும் குலுங்கக் கீழே பார்த்தன.

''அத்தான்,'' என்று அன்பு பாராட்டி விளித்தாள் அன்னக் கொடி; நேசம் அன்ன நடை பயின்றது; பாசம் கொடியெனத் துவண்டது; ஆசை கிளியாகப் பேசியது. முகப் புறத் தோட்டத்தில் நிலவில் மயங்கி நின்ற ரத்தப் பூக்கள் அவளை என்னவோ செய்தன!

முறைப்பெண்ணை முறையான காதல் உணர்வோடு ஏறிட்டுப்பார்த்தான் வீரமணி. உள்ளங்கைக்கு உள்ளடக்கம் கற்பித்திருந்த வைரச் சிமிக்கிகளின் கனம் நெஞ்சைச் சுமைதாங்கி யாக்கி ஏறிக்குந்த, அவன் அவளைப் பார்த்த பார்வையில் ஆழம் மட்டுமல்லமல், ஆதங்கமும் நிழலாடியது. மாமன் மகளிடம் சற்று முன்பு வைரச் சிமிக்கிகளை ஏந்திப் பிடித்துக் காண்பித்ததைக் கண்ட அப்பாவும் அம்மானும் தன்னை அழைத்த மாறுபட்ட குரல்களையும்வேறுபட்ட சுருதிகளின் மாற்றங்களையும் அவன் இப்போதும் நினைத்துப் பார்க்கவே நாட்டம் கொண்டான். நிலவுப் பூக்களின் மணம் கமழும் வெளிச்சத்தின் ஆரோக்கியமான இன்பச் சூழலில் நின்றவன், இருட்டின் பயங்கரப் புதிர்ச் சிரிப்பின் சுழலிலே அகப்பட்டுக் கொண்டு மீள முடியாமல்-மீள வழிபுரியாமல் தட்டுத் தடுமாறுவதுபோல அவன் தவித்தான்; தடுமாறினான். அன்னத்தின் கண்கள் ஏன் அப்படிக் கலங்குகின்றன? ''அன்னம்!'' என்று கூப்பிட்டான்; அவளிடம் தோன்றிய சுடுநீர் அவனிடமும் 'மடை' மாறிப் பாய்ந்ததில் வியப்பு இல்லைதான்! ''அம்மான் மகளே, ஏன் கண் கலங்குறே?'' என்று தழுதழுப்புடன் கேட்கலானான் அவன்.

கலகத்தைத் திரைபோட்டு மறைக்க முயற்சி

# காணி நிலம் வேண்டும்

**பூவை எஸ். ஆறுமுகம்**

செய்து மறைக்கப்பாடுபட்டுத் தோற்ற நிலையில் அவள் தன்னுடைய அத்தானை நிமிர்ந்து நோக்கினாள். ''என்ன அத்தான், இப்படிக் கேட்கிறீங்களே? பசிக்கிதுன்னு சொன்னால், ஏன் பசிக்கிதுன்னு கேள்வி கேட்டால், என்ன பதிலைச் சொல்ல முடியுமுங்க?'' என்றாள்.

வீரமணி பெருமூச்சு விட்டான்; அம்மான் பெற்ற அருமைத் தவமகளை இப்பொழுதுதான் நேருக்கு நேராக முதல் தரமாகப் பார்ப்பவன் மாதிரி அதிசயத்துடன் பார்த்துநின்ற அவனுக்கு, அவளது பார்வையின் சலனங்களே அவனுடைய நெஞ்சைப் பிசைந்தெடுத்தன. அவன் கண்களில் கண்ணீர் பொங்கியது; பெருகியது.

''அத்தான்!'' என்று பதட்டத்துடன் கூப்பிட்டாள் அன்னம்.

## 14. ஓர் ஆறுதல்

''ஊம்,'' என்று பதட்டமின்றிக் குரல் கொடுத்தான் வீரமணி.

''அழுவுநீங்களா?''

''இல்லையே?''

''ஊகூம்; அழுவுநீங்க!''

''சரி, அழுவுறேன்தான்!''

''ஏனுங்க, மச்சான்!''

''என்னோட விதி!''

''விதியாவது சதியாவதுங்க அத்தான்!''

''விதியும் சதியும்தான், அம்மான் மகளே!''

''என்ன சொல்லுறீங்க?''

''நடந்ததைச் சொல்லுறேன்; நடக்கறதைச் [illegible] றேன். அன்னம்! [illegible] கனை வசப்படுத்த [illegible] அவனுடை [illegible] உள்ளங்கையில் [illegible] அந்த வைரச்சிமிக்கிகளை உள்ளங்கைக் குள்ளாக [illegible] வைத்து [illegible] விளையாடிக் கொண்டிருந்தான் அவன்.

''[illegible] வேண்டியதைச் சொல்லுங்களேன், அத்தான்!

''அது உன் கையிலேதான் இருக்குது, அன்னம்!''

''இல்லீங்களே! அது உங்களோட கையிலேதான் இருக்காக்கும்!''

''என் கையிலே இருக்குதாங் காட்டி? இல்லே; இல்லவே இல்லே!...என் கையிலே இப்பைக்கு இருக்கிறது உன்னோட இந்த இரண்டு வைரச் சிமிக்கிகள் மட்டிலுந்தானுக்கும்!''

''அந்த வைரச்சிமிக்கிகள் தான் என்னுடையது இல்லீங்கன்னு முன்னாடியே சொல்லிப் புட்டேனுங்களே, அத்தான்!''

''வாஸ்தவந்தான், அன்னம் இந்த வைரச் சிமிக்கிகள் உன்னுடையது இல்லேன்னு நீ மண்டையிலே தட்டினாப்பிலே வெட்டிப் பேசிட்டே; அந்தத் துப்பு எனக்கு நல்லாய் ஞாபகத்திலே நிற்குது. ஆனா, இந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் யாருடையதின்னு மட்டுப் படலையே, அன்னம்?''-ஒய்யாரக் கொண்டைக்காரி செங்கமலத்தின் ஞாபகம் கெட்ட கனவாகப் பிசிறு தட்டித் தொலைந்தது!''

''அந்த உளவு எங்க அப்பன் காரருக்குத்தான் வெளிச்சம், அத்தான்!''

''ஓகோ! அப்படியா சங்கதி? மனிதர்களுக்கு வயசு கூடக் கூட புத்தித் தடுமாற்றமும் கூடிக்கிட்டு இருக்கும்னு தோணுது. நான் இதுமட்டும் என் அப்பாவைப்பற்றித்தான் இப்படி நினைச்சுக் கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன். இப்ப அம்மான் விசயமும் இதே கதைதானா?..அம்மான்காரர் இருட்டிலே பொறிகலங்கி நிற்கையிலே, அவருக்கு வெளிச்சம் எங்கிட்டுக் கிடைக்கப்போகுது?

அந்திக் கட்டிலே உங்க வெள்ளைக் காளை சம்பந்தமாய் அம்மான் வாசலுக்கு நடைபாவி வந்தாங்க. காளையும் கையுமாகத் திரும்பிடாலம்னு வந்தவங்களுக்கு வெறுங்கையோடே தான் திரும்ப வாய்ச்சுது. அவர் போன சடுதியிலேதான் இந்த வைரச்சிமிக்கிகள் என் கண்ணிலே தட்டுப்பட்டுச்சு. வைரச் சிமிக்கிகளைக் கண்டதும், முக்காலறுப்பு இதுங்க ரெண்டும் உன்னுடையதாகவே இருக்கும்னும் இதுங்களை உன் அப்பா தான் தவறவிட்டுப் புட்டுப் பாய்ஞ்சிருக்க வேணும்

யானால், அம்மான்காரருக்கும் இந்த வைரச் சிமிக்கிகளுக்கும் ஊடாலே ஏதோ ஒரு 'கமுக்கம்'-ரகசியம் குந்திக்கிட்டு இருக்க வேணும்! அப்படின்னா, இந்த வைரச் சிமிக்கிகளை அம்மான் வேறே யாருக்காகவோ தான் அவசரமாகச் செஞ்சிருக்கவேணும். நீ என்ன கருதுறே, அன்னம்?''



னும் யோசிச்சேன், நம்பினேன். அதுக்குத்தக்கனை, அம்மான் வந்ததும் வராததுமாய் 'என் ஆசைப்பொண்ணு அன்னத்துக்கோசரம் ஆசாரிகிட்டே செஞ்ச புது வைரச்சிமிக்கிகள் ரெண்டையும் காணலையே?'' அப்படின்னு ஆத்திரம்பொங்க அழமாட்டாத குறையாகச் சேதி சொன்னாங்க. இதுக்குப் பிறகாலே நடந்த நடப்பு, உங்க வெள்ளைக் காளையோட கதை கணக்கிலே முன்னடியான் சாமியாய் ஒதுங்கிக்கிட்டடும்!.....''

வீரமணிக்கு இருமல் வரவே இருமினான். காட்டமான புகைச்சல் இருமல். பிறகு மறுபடி தொடர்ந்தான்:''அன்னம், இந்த வைரச்சிமிக்கி சம்பந்தமான சமாசாரம் எதுவுமே உனக்குத் தெரியாதின்னு எனக்குத் தோணுது. அப்படி

தொட்ட இருமல் தொடர் சேர்ந்தது.

விட்ட பெருமூச்சு விடை கேட்டது.

அன்னக்கொடி அழுகையும்

சிரிப்பும் அற்ற நிலைக்கு ஆளானாள்; ஆட்பட்டாள். எதையோ நினைத்து அழவேண்டும் போலவும், எதையோ மறந்து சிரிக்க வேண்டும் போலவும் அவள் நினைத்தாள்.

''அத்தான், நீக்குப்போக்குப்

புரியாமல் உருகி உருக்குலைஞ்சு போயிருக்கிற என்னை மந்திரி தந்திரியாட்டம் கருதி, கருத்துக் கேட்கிறீங்களே? என்னோட கதையே எனக்குப் பிடிபடலே; என் பாதையே எனக்கு இருட்டிக்கிட்டு வருது. இந்த அவல நிலைமையிலே, நான் என்னத்தைச் சொல்லட்டும்? உங்க அப்பா புதிர்னு நீங்க அடிக்கொரு பயணம் சொல்ல மாட்டீங்களா? அதொப்ப, என் அப்பாவும் ஒரு புதிர் தான்னு நானும் சொல்லித் தான் தப்பிக்க வேண்டியிருக்குது!'' என்று கூறி நிறுத்தினாள்.

வீரமணி நெடுமூச்செறிந்தான்.

விதியை வீட்டுக்கு வெளியே இருமுனைகளிலே பிரித்துக் காவல் வைத்து விட்டு, அந்த விதியை வீட்டுக்கு உள்ளே இருமுனைகளில் சோதிக்கத் துணிந்து விட்டவர்கள் மாதிரி, அன்னமும் வீரமணியும் ஒருவரையொருவர் புதிய பார்வையால் அளந்து கொண்டார்கள்.

அவள் சிரித்தாள். அவன் சிரித்தான்.

அவளது சிரிப்பிலே அவளது எதிர்காலக் கனவுகள் பிரதிபலித்தது போலும்!

அவனுடைய சிரிப்பிலே சிலட்டூர்க் கங்காணியின் மகள் பவளக்கொடியும் திட்டிவாசலை ஒட்டிக் கொண்டிருந்த ஆவணி மாதமும் பிரதிபலித்திருக்க வேண்டும்!

"மச்சான்!"

''என் கையிலே இருக்கிற இந்தச் சிமிக்கிகளை இப்போ என்ன பண்ணுறதாம்? வைரச் சிமிக்கிகளாச்சே? பலம் கூடிக் கிடக்குதுங்கிறேன்!''

''பலம் மட்டுமேதான் கூடியிருக்குங்களா? இல்லாட்டி பலனும் கிடையாது. இந்த வைரச் சிமிக்கிகளின் சுமை உறுத்திக்கிட்டே இருக்குது, என்னோட நெஞ்சிலே! ஆமா, அம்மான் பெண்ணே!'' என்று கண்களை மிரள மிரள விழித்தான் வீரமணி. குற்ற உணர்வின் பாவனை அது.

''இந்த வெறும் வைரச் சிமிக்கிகள் மட்டிலும்தானா உங்க நெஞ்சை உறுத்திக்கிட்டு இருக்குதுங்க, ஆசை அத்தானே?'' பாவத்தின் கூலியை அனுபவிக்க நேர்ந்திட்ட பாவம் அவளது சலனமடைந்த வதனத்தில் கோடு கிறுக்கிறது.

''பின்னே?''

''பின்னே ஒண்ணுமே உறுத்திலையுங்களா, மச்சானே?

நெஞ்சில் தைத்துவிட்டிருந்த நெருஞ்சி முள்ளைப் பிடுங்கி எடுத்துவிடத் துடித்தவனாக அவன் மார்புப் புறத்தைத் தடவிக் கொடுத்தான். பிறகு முறைமைப் பெண்ணை முறைப்பாக நோக்கினான். அவ்வாறு நோக்கின வேளையிலே, இருந்திருந்தாற் போன்று அவன் பவளக் கொடியை எண்ணிக் கொண்டான். பூடகமாகப் பேச்சுக் கொடுத்த அன்னத்தின் கேள்வியில் 'தொக்கி' நின்ற உள் அர்த்தத்தை அவனால் தற்சமயம் உணர முடிந்தது. ஆனாலும், எதுவுமே விளங்காதவன்போல் எதையும் பிடிகொடுத்துப் பிடித்துக் கொள்ளாதவன்போலே அவளை அன்னக்கொடியை அளப்பதில் ஈடுபட்டான். ''சங்கதியைப் பிட்டுவச்சுச் சொல்லிப்பிடப்படாதா, அன்னம்?'' என்று வினவினான்.

''அத்தான் நீங்ககூட புதிர் ஆசாமிதான் என்கிற உண்மையை இப்பத்தான் என்னாலே விளங்கிக்கிட வாய்ச்சது. நீங்க ஆணாய்ப் பிறந்தவங்க. எப்படி வேணுமானாலும் நடக்கலாம்; நடிக்கலாம்! ஆனா, பாழாய்ப் போன இந்த பயங்கரச் சமுதாயத்தின் மத்தியிலே பெண்ணாய்ப் பிறந்த நான் உங்களை மாதிரி நடக்கவோ அல்லது நடிக்கவோ ஏலுங்களா?'' என்று பேசி முடித்தாள் அன்னகொடி.

''விசயத்துக்கு வா, புள்ளே!

''விசயத்துக்கு வரவேண்டியவங்களே நீங்கதானுங்களே, மச்சானே?''

''ஓ, அப்படியா?'' என்று அரைச் சிலிர்ப்புடன் அரைச் சிரிப்பை வெளிப்படுத்தியவனாக, ''இந்தாலே விசயத்துக்கு வந்துப்பிடுறேன்!'' என்று ஓரக்கண் சிமிட்டிச் செப்பிக் கொண்டே, நெருங்கி, அவளுடைய சிந்தூரக் கன்னங்களைத் தொட்டான் வீரமணி.

நாணம் காத்தவள் நாணம் காட்டினாள். ''பாவம் செஞ்சிட்டீங்களே, அத்தான்?'' 'என்றாள், அன்னக்கொடி.

''ஊகூம்; புண்ணியம் செஞ்சிட்டேன், அம்மான் மகளே!'' என்றான் வீரமணி.

''மெய்யாலுமேதானா அத்தை மகனே?''

''என்னோட மெய் நடுங்குறதிலேயிருந்து அந்த மெய் உனக்குப் பிடிபடலையா புள்ளே!''

''புள்ளே, புள்ளேன்னு ஒரு அரை நாழிப் பொழுதுக்குள்ளாற எத்தனை கடுத்தம் அழைப்பீங்களாம்?''

''எத்தனை கடுத்தம் வேணும்னாலும் அழைப்பேன்; அழைச்சுக்கிட்டே இருப்பேன். கன்னி கழியாப் பொண்ணை எடுத்த எடுப்பிலே 'புள்ளே'ன்னு முறை வச்சுக் கூப்பிடுறதுக்கு நம்ப சாதி முறையிலே கற்பிச்சுக் கொடுத்திருக்கிற 'தனி அர்த்தம்' இன்னமுமா உனக்கு ஞாபகத்துக்கு வந்து குதிக்கலே அன்னம்?''

அன்னக்கொடியின் நனினம் நிரம்பிய நாணம் கண்கலங்கியது. விலக முயன்றவள் விலகாமலே நின்றுகொண்டிருந்தாள். ''இம்மாம் தொலைவுக்கு என் மேலே பாசமும் நேசமும், பாந்தமும் பந்தமும், ஆசையும் அன்பும் கொண்டிருக்கிற நீங்கதானா சிலட்டூர்ப் பவளக்கொடியைக் கண்ணாலம் கட்டிக்கிட ஒப்புதல் கொடுத்தீங்க, மச்சானே?..'' என்றாள்.

''அதுகிடக்கட்டும், இப்போ இந்த வைரச்சிமிக்கிகளை என்னா செய்கிறதாம்?'' என்று கேட்டபடி அம்மான் மகளை வாரியணைக்க முனைந்த வீரமணியின் அகன்று விரிந்த கைகள் அடுத்த இமைப்பில் துடிதுடித்தன. விளைவு என்ன தெரியுமா? அவன் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கிகள் கீழே மண் தரையில் சரணடைந்து விட்டன.

அப்போது, அங்கே அதிசயமும் அதிர்ச்சியும் விதியாகச் சிரிக்கத் தலைப்பட்டன. கூன் பிறை விழித்தது!

கீழே நழுவி வீழ்ந்த இரண்டு வைரச் சிமிக்கிகளில் ஒன்று, ஊர் நாட்டாண்மை ஆதிமூலத் தேவர் வசத்திலும், மற்றொன்று சிங்கப்பூர் ராமையாத் தேவர் வசத்திலும் அடைக்கலம் அடைந்திருந்தன!

(வளரும்)...






அடையாற்றில் உள்ள தொலைக்காட்சி நிலையத்தில் பயிற்சி வகுப்புகள்—தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கு பயிற்சி நிலைய முதல்வர் விளக்குகிறார்

# இந்தியாவிலுள்ள ஒரே டெலிவிஷன் தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிலையம்

சென்னை அரசினர் தோட்டத்தில் டெலிவிஷன் நிலையம் கட்டப்பட்டு வருகிறது.

டெலிவிஷன் நிலையம் கட்டுவதற்கான இடத்தைத் தமிழ்நாடு அரசு, மத்திய அரசுக்குக் கொடுத்துள்ளது. கட்டடம் கட்டும் பொறுப்பையும் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையே ஏற்றுள்ளது. டெலிவிஷன் நிலையம் அமைகின்ற கட்டடமும் முடிவடையும் கட்டத்தை எட்டியுள்ளது.

அடுத்த ஆண்டுக்குள் டெலிவிஷன் நிலையம் சென்னையிலிருந்து இயங்கும் என்றும் சொல்லப்படுகிறது.

நம் நாட்டில் முதன் முதலாக 1959-ஆம் ஆண்டு டெலிவிஷன் நிலையம் டில்லியில் இயங்கத் தொடங்கியது. 2-10-1972 முதல் பம்பாயில் இயங்கத் தொடங்கியது. ஸ்ரீநகரில் 26-1-1973 முதல் டெலிவிஷன் நிலையம் செயல்படத்தொடங்கியது.

தொடர்ந்து சென்னை, கல்கத்தா, லக்னோ, ஜலந்தர், ஐதராபாத், ஆமதாபாத் ஆகிய இடங்களில் டெலிவிஷன் நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

டெலிவிஷன் நிலையங்களின் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்ய முன்ஸோரி, பூனா, கான்பூர், அஸான்சோல் (மேற்கு வங்காளம்) அமிர்தசரஸ், சண்டிகார் ஆகிய இடங்களில் (Relay Station) துணை நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்த வகையில் பெருகி வரும் டெலிவிஷன் நிலையங்களால், டெலிவிஷன் பெட்டிகள் நாடு முழுவதும், வீடுகளிலும் வேறு இடங்களிலும் இடம்பெற வாய்ப்பு உண்டு.

இப்படி டெலிவிஷன் பரவும் வாய்ப்புகள் இருக்கும்பொழுது டெலிவிஷன் பற்றிய தொழில் நுட்ப அறிவுகளையும் பெற வேண்டாமா? டெலிவிஷன் பற்றி ஏனைய விவரங்களையும் அறிய வேண்டாமா? அந்த டெலிவிஷன் பெட்டிகளையும், டெலிவிஷன் கருவிகளையும் பழுது ஏற்பட்டால் சீர்படுத்தவும், பராமரிப்புப் பணிகளையும் கவனிக்கப் பயிற்சியாளர்கள் வேண்டாமா? அந்தப் பயிற்சி எங்கே தரப்படுகிறது?

சென்னை அடையாற்றில் தொழில் நுட்பக் கல்விகூடங்கள் அமைந்திருக்கும் 'தொழில் நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி நிறுவனம் (Technical Teachers' Training Institute) அமைந்துள்ளது. இங்கேதான் அந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

டி.டி.டி.ஐ என்று அழைக்கப்படும் இந்தத் தொழில்நுட்ப



ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நம் நாட்டில் சண்டிகார், கல்கத்தா, சென்னை, போபால், ஆகிய நான்கு இடங்களில் மட்டும்தான் உள்ளன.

மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த நிறுவனங்களில் சென்னையிலுள்ள தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் மட்டும்தான் நம் நாட்டில் டெலிவிஷன் பற்றிய தொழில் நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் முதன் முதலாக நம் நாட்டிலேயே கல்வித்துறை ஆராய்ச்சிகளில் டெலிவிஷனின் தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கு முன்னோடியாக அமைக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் அடையாற்றிலுள்ள தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம்தான்.

இந்தப் பயிற்சி நிறுவனத்தில் டெலிவிஷன் ஸ்டுடியோ, எலெக்டாரிக் ஆய்வுக்கூடம் மற்றும் டெலிவிஷன் நிலையத்துக்குத் தேவையான முக்கிய கருவிகள் அனைத்தும் உள்ளன. கொழும்புத் திட்டத்தின்கீழ் இந்தக் கருவிகள் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளன. அனைத்து இந்தியாவிலுள்ள தொழில் நுட்பப் பேராசிரியர்கள், தொழில்துறை நிறுவனங்களைச் சேர்ந்தோர்களும் இங்கு பயிற்சி பெறுகின்றனர்.



தொலைக்காட்சியின் ஒளி-ஒலிப்பதிவுகளை ஒருங்கிணைக்கும் முக்கியப் பகுதி

டெலிவிஷன் படங்கள் தயாரிப்பதற்கான தொழில் நுட்பப் பயிற்சியும் இங்கு அளிக்கப்படுகின்றது.

இதன் முதல்வரான பேராசிரியர் ஜம்புலிங்கம் அவர்கள், பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) ஒத்துழைப்புடன், (குளோ சர்க்யூட்) (உள்சுற்று) தொலைக்காட்சி நிலையத்தை, சென்னையில் முதன் முதலாக நிறுவி, கல்வி, ஊர்வளர்ச்சி பற்றிய டி.வி. நிகழ்ச்சிகளை உருவாக்கும் உத்திகளில் (Techniques of T.V. Production —Educational and Rural) இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல துறை அலுவலர்களும், இங்கே வந்து பயிற்சி பெற்றுப் பயன் பெற ஏற்பாடு செய்துள்ளார். மேலும், பயிற்சி முறைகளை ஆராய்ந்துணரும் வகையில், இங்கே ஆசிரியர்களுக்கு தொலைக்காட்சி வாயிலாக நுண்ணிய போதனை (Micro Teaching) அளிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, சென்னையில் தொலைக்காட்சிக்கான ஏற்பாடுகள் குறித்து உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தருமலிங்கம் அவர்கள் 3-4-1974-ல் சட்டப்பேரவையில் வைத்த குறிப்பின் ஒரு பகுதி வருமாறு:

''தொடக்கமாக, சென்னை மாநகரிலும், அதனைச் சார்ந்துள்ள அண்மை மாவட்டங்களிலும், வருங்காலத்தில் மாநில முழுவதிலும், தொலைக்காட்சிக் கருவிகளை நிறுவுவதற்கான திட்டப் பணிகள் பலவற்றைச் சேர்த்து, ஒருங்கிணைக்கும் வழிமுறைகளைக் கூறுவதற்கென ''ஊரகத் தொலைக்காட்சிக்குழு'' ஒன்றினைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. அந்தக் குழுவின் தலைவர், தலைமைச் செயலாளர் ஆவர். உள்ளாட்சி, கல்வி, நிதி ஆகிய துறைகளின் செயலாளர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநர், தலைமை வானொலி அலுவலர், உள்ளாட்சித் துறை மக்கள் தொடர்பு அலுவலர் முதலியோர் பணியாற்றுகின்றனர்.''

தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள இந்தக் குழுவின் விருப்பத்திற்கிணங்க, டெலிவிஷன் பெட்டிகளைப் பராமரிப்பதற்கான தொழில் பயிற்சியை அளிக்கவும், திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிகள் அனைத்துக்கும் உதவும் வகையில் சென்னை அடையாற்றுப் பகுதியிலுள்ள தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம் விளங்குகிறது.



தொலைக்காட்சிகளை உருவாக்கும் களம்

சென்னையில் அடையாறு அருகிலுள்ள பெசண்ட் நகரில் 'ரெடிமேடு வீடுகளை' தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டி வருகிறது.

ஒவ்வொரு செங்கல்லாக வீடு கட்டுவதற்குப் பதிலாக, முன்கூட்டியே வார்த்து எடுக்கப்பட்ட 'கான்கிரீட்' சுவர்களை அப்படியே வைத்து இணைத்து 'இந்த ரெடிமேடு வீடுகள்' கட்டப்படும். இந்தியாவில் பெருமளவில் இவ்வாறு 'ரெடிமேடு வீடுகள்' கட்டப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

பெசண்ட் நகரில் கடற்கரைப் பகுதியில், இந்த ரெடிமேடு வீடுகள் கட்டப்படுகின்றன. இதற்கான அடிக்கல் நாட்டுப் பணிகள் யாவும் ஏற்கெனவே முடிந்துவிட்டன. இந்தப் பகுதிக்கு அருகாமையில் ஓரிடத்தில் 'கான்கிரீட்' சுவர்கள் வார்ப்படப் பணிகள் நடைபெறும். பின்பு பளுதூக்கும் 'கிரேன்' இயந்திரங்கள் மூலமாக இந்தச் சுவர்கள் தூக்கி வைக்கப்பட்டு இணைத்து 'ரெடிமேடு' வீடுகள் உருவாக்கப்படும்.

நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்காக 144 குடியிருப்புப் பகுதிகள் இங்குக் கட்டப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்குச் சுமார் ரூ. 30 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

டில்லியில் உள்ள கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் இந்த 'ரெடிமேடு வீடுகள்' கட்டப்படுகின்றன. முன் மாதிரியாக மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்திற்குத் தேசிய கட்டட நிர்மாண நிறுவனம் நிதி உதவி அளிக்கிறது.

''ரெடிமேடு வீடுகள் கட்டுவதால், வீடு கட்டுமானப் பணியில் பாதிநேரம் மிச்சமாகிறது. இத்தகைய வீடுகள் குடியிருப்பதற்கு மிகவும் ஏற்றதாகும்'' என்று 'கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி நிலையம்' உறுதி அளித்துள்ளது.

பெசண்ட் நகர் ரெடிமேடு வீடு திட்டம், இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

• • •

விண்வெளியில் 'சல்யூட்-3' என்னும் பறக்கும் ஆய்வுக் கூடத்தில் ரஷிய விண்வெளி வீரர்கள் இருவர் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

விண்வெளியில் பறந்தவாறே, புதிய பொருட்களைத் தயாரிப்பது பற்றிய சாத்தியக் கூறுகள் பற்றி அவர்கள் ஆய்வு நடத்தினர்.

''விண்வெளியில் பொருட்களுக்கு எடை இருக்காது. இந்த எடையற்ற நிலையில், சோதனைகள் நடத்துவது மிகவும் கடினமாகும். இந்தச் சோதனைகள் வெற்றி பெற்றால் எதிர்காலத்தில் விண்வெளியில் 'மிதக்கும் தொழிற்சாலைகள்' ஏற்படக்கூடும். பூமியில் செய்யமுடியாத சில பொருட்களை இந்தத் தொழிற்சாலைகளில் எளிதில் செய்ய முடியலாம்'' இவ்வாறு ரஷிய விண்வெளி வீரர் விக்டர் கோர்பட்கோ தெரிவித்துள்ளார்.

* * *

தஞ்சை மாவட்டத்தில் ஒரு சணல் ஆலை தொடங்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இங்கு ஆலை ஏற்படுத்துவதற்கு முன்னர் 30,000 ஏக்கரில் சணல் விவசாயத்தை ஏற்படுத்த வேண்டும். இது குறித்து தீவிர விவசாயத் திட்ட அலுவலர்களிடம் கலந்து 30,000 ஏக்கர் நிலத்தை சணல் விவசாயப் பகுதியாக ஆக்க வேண்டிய செயல்முறைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மற்றும் சணல் பொருள்களுக்கு இருக்கும் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு இவ்விதம் தஞ்சையில் ஒரு சணல் ஆலை ஏற்படுத்தப்படுகிறது. தஞ்சை விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கில் சாக்குகள், சணல் கயறு முதலிய சணல் பொருள்கள் தேவைப்படுகின்றன. இதுவரையில் இப்பொருள்கள் கல்கத்தாவிலிருந்து வந்து கொண்டிருந்தன.

* * *

பருத்திக் கொட்டையை அரைத்து, கோதுமை மாவுடன் சேர்த்துப் புதிதாக ரொட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ரொட்டி சுவையாகவும், மணமாகவும், சத்துள்ளதாகவும், அழகிய நிறத்துடனும் இருக்கிறது. பருத்திக்கொட்டை ரொட்டிக்கு அமெரிக்காவில் நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது!

இந்தப் புதிய ரக ரொட்டியை அமெரிக்காவில் டெக்சாஸ் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவியான குமாரி பிலிங்கர் கண்டு பிடித்துள்ளார்.



## பயிற்சியின் போதே பணம் சம்பாதிக்கலாம்!



திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசு பல்தொழில் பயிற்சி நிலையத்தில் (பாலிடெக்னிக்) மாணவர்கள் பயிலும்போது வருவாய் ஈட்டும் வகை செய்யும் திட்டம் ஒன்று அமல் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் இதுவரை 350 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மாணவர்களுக்குத் தொழில் பயிற்சி அளிப்பதன் மூலம், மாணவர்கள் தற்சார்பு நிலையை அடையும்படிச் செய்வதே இந்த நவீன திட்டத்தின் நோக்கமாகும்.

பல்வேறு பயிற்சிகளுக்கும் தேவையான இயந்திரச் சாதனங்களைத் திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத் கனரக மின் சாதனத் தொழிற்சாலை வழங்கி வருகிறது. மாணவர்கள் தங்களுடைய வகுப்புகள் முடிந்த பிறகும், விடுமுறை நாட்களிலும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் செய்யும் வேலைக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

## பழங்களைப் பதப்படுத்த பயிற்சி நிலையம்!



காய்கறி, பழப் பதன நிலையம் ஒன்று மதுரையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இது தமிழ் நாட்டில் துவக்கப்படும் இரண்டாவது நிலையமாகும். ஏற்கெனவே, சென்னையில் ஒரு நிலையம் 1964 முதல் இயங்கி வருகிறது. வீடுகளில் காய்கறிகளையும், பழங்களையும் பதப்படுத்தி வைப்பதை ஊக்குவிப்பது இந்த நிலையத்தின் நோக்கமாகும்.

காய்கறிகளையும் பழங்களையும் பதப்படுத்தி வைப்பது பற்றி இல்லத் தலைவிகளுக்கு இந் நிலையம் இரண்டு வாரம் பயிற்சி அளிக்கும். பயிற்சிக்குக் கட்டணம் இல்லை. பயிற்சி முடிந்தவுடன் பகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

பழச்சாறு, ஜெல்லி, தக்காளிப் பண்டங்கள், பலவித ஊறுகாய்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும், பழங்களைப் பதப்படுத்தி டப்பாக்களில் அடைப்பதற்கும், இந்நிலையம் கற்றுத் தருகிறது. இவற்றைக் கற்றுக் கொள்ள விரும்புவோர், நிலையத்துக்கு ஏற்கெனவே தெரிவித்துவிட்டு, தம்முடன் பழங்கள், சர்க்கரை போன்றவற்றைக் கொண்டுவர வேண்டும். காய்கறி, பழப் பதனத் தொழிற்சாலை ஏற்படுத்த விரும்புவோருக்கும் இந்நிலையம் ஆலோசனை வழங்குகிறது. மத்திய அரசு உணவு, சத்துப் பொருள் வாரியம் இதனை நடத்துகிறது.

---

சிகரெட் புகையில் உள்ள பென்சோபைரின் இலட்சோப லட்சம் மக்கள் விரும்பி உள்ளிழுக்கின்றனர். அதனால் தான் நுரையீரல் புற்றுநோயாளிகளில் பலர் புகை பிடிப்பவர்களாக இருக்கிறார்கள்.

இது குறித்துச் சில புள்ளி விவரங்கள்: நாளொன்றுக்கு பத்து சிகரெட்டுகள் வீதம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் புகைக்கும் ஒரு மனிதனுக்கு, புகைபிடிக்காமல் இருப்பவனைவிடப் புற்றுநோய் கொள்ளும் வாய்ப்பு 11 மடங்கு அதிகம்; நாளொன்றுக்கு 20, 30 சிகரெட்டுகள் பிடிப்பவர்களுக்கு இந்த ஆபத்து 22 மடங்கும், 40 சிகரெட்டுகள் பிடிப்பவர்களுக்கு 52 மடங்கும் அதிகரிக்கிறது.

உடல் உழைப்பற்ற நிலை, மனித உடலிலும் உறுப்புகளிலும் கழிவுப் பொருள் தேங்குவதற்கு வழி செய்கிறது. அதிக உணவும், குறைந்த உடல் உழைப்பும் உள்ளவர்களிடையே புற்றுநோய் மரண விகிதம் பிறரைக் காட்டிலும் இரு மடங்கும் அதிகமாகும்.

முக்கியமாகப் புற்றுநோய் ஏற்படுவதைத் தடை செய்யும் நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டுமானால், நல்ல பழக்கங்களும், அறிவார்ந்த உணவுப் பழக்கமும், தீய பழக்கங்களை அகற்றுவதும், நல்ல உடற்பயிற்சியும் இன்றியமையாதனவாகும்.







புகாரஸ்ட் நகரில் உலக மக்கள் தொகை மாநாடு நடைபெறவிருக்கும் மாளிகையின் ஒரு தோற்றம்.

# உலக மக்கள் தொகை மாநாடு

எஸ். முத்துராமலிங்கம்

இந்த நூற்றாண்டில் உலகை அச்சுறுத்தும் பிரச்சினையாக இருந்து வருவது மக்கள் தொகைப் பிரச்சினையாகும். இப்பிரச்சினையின் தன்மைகள், கூறுகள், விளைவுகள் ஆகியவை குறித்து விளக்கி, உலகம் முழுவதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தத்தான் ஐக்கிய நாடுகள் மன்றம் நடப்பு 1974-ஆம் ஆண்டை உலக மக்கள் தொகை ஆண்டாக அறிவித்துச் செயல்பட்டு வருகிறது, என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். உலக மக்கள் தொகை ஆண்டின் உச்சக் கட்டம் இத்திங்களில் நடைபெறும் உலக மக்கள் தொகை மாநாடேயாகும்.

மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலான நடவடிக்கைகள் இவையிவை என வகுக்கவும் வழி காட்டவும் இம்மாநாட்டு முடிவுகள்—பரிந்துரைகள் துணையாக நிற்கும். இதுவரை உலக அளவில் இப்படிப்பட்டதொரு மாநாடே நடத்தப்படவில்லை என்பதும், அந்த வகையில் இதுவே முதல் மாநாடு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு முன்பு 1954-ஆம் ஆண்டு ரோம் நகரிலும், 1965-ஆம் ஆண்டு பெல்கிரேடிலும் விஞ்ஞானப்பூர்வமான முறையில் இரு மாநாடுகளை ஐ.நா. மன்றம் நடத்தியுள்ளது. ஆனால் இத்திங்களில் 'ருமேனியா' நாட்டின் 'புகாரஸ்ட்' நகரில் நடக்கவிருக்கும் உலக மக்கள் தொகை மாநாடு அவற்றினின்றும் பெரும் அளவில் மாறுபட்டதாகும். இம்மாநாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அரசுகளின் சார்பில் தலைவர்களும், திட்டங்களை வகுத்தளிக்கும் வல்லுநர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். இம்மாநாடு, மக்கள் தொகைக் கொள்கைகளை வகுத்து உலக அரசுகள் அதன்படி இயங்க வழிவகுக்கும்—பரிந்துரைக்கும். அந்த வகையில் வரையறுத்துக் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டு நடத்தப்பட்ட விஞ்ஞானப் பூர்வமான மற்ற இரு மாநாடுகளைக் காட்டிலும் விரிந்த அளவில்-பரந்த நோக்கில் நடத்தப்படுவதாகும், இப்போது நடத்தப்படும் உலக மக்கள் தொகை மாநாடு!

### கருத்தரங்குகளும், மண்டலக் கூட்டங்களும்:

இம்மாநாட்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பொருள்கள் பற்றி விஞ்ஞானக் கருத்துக்களைத் தொகுப்பதற்காகக் குறைந்த அளவு இருபத்தைந்து நிபுணர்கள் கலந்துகொண்ட பல்வேறு கருத்தரங்குகளை ஐ.நா. மன்றம் நடத்தி முடித்தது. 'மக்கள் தொகையும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் 'கெய்ரோ' நகரிலும் 'மக்கள் தொகையும் குடும்பமும்' என்ற தலைப்பில் 'ஒனலூலுவிலும்', 'மக்கள் தொகை, வாய்ப்பு வளவசதிகள், சுற்றுப்புறச் சுகாதார வாழ்வு' என்ற தலைப்பில் 'ஸ்டாக்ஹோமிலும், 'மக்கள் தொகையும் மனித உரிமைகளும்' என்ற தலைப்பில் 'ஹாக்கிலும்' நடந்த கருத்தரங்குகள் அப்படிப்பட்ட கருத்தரங்குகளில் சிலவாகும். இந்தக் கருத்தரங்குகள் முறையே 1973-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலும், ஆகஸ்டுத் திங்களிலும், செப்டம்பர்-அக்டோபர் திங்களிலும், 1974 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலும் நடந்தேறின.

கருத்தரங்குகளோடு கூட மக்கள் தொகை பற்றிய மண்டலக் கூட்டங்களும் (Regional Meetings) ஐ.நா. மன்றத்தால் நடத்தப்பட்டன. 1970-ஆம் ஆண்டு 'மெக்சிகோ' நகரில் நடந்த இலத்தீன் அமெரிக்க மக்கள் தொகை பற்றிய மாநாடும், 1971-ஆம் ஆண்டில் 'அக்காரா'வில் நடந்த ஆப்பிரிக்க மக்கள் தொகை பற்றிய மாநாடும் 1972-ஆம் ஆண்டில் 'டோக்கியோ'வில் நடந்த ஆசிய மக்கள் தொகை பற்றிய மாநாடும், 1973-ஆம் ஆண்டில் 'பெய்ரூட்' நகரில் நடந்த மத்திய கிழக்கு நாடுகளின் மக்கள் தொகை பற்றிய மாநாடும் அவற்றில் சிலவாகும். மேலும் ஐ.நா. மன்றத்தின் சிறப்புப் பிரிவுகள், விஞ்ஞானக் கழகங்கள் ஆகியவை உலக மக்கள் தொகை மாநாட்டின் முன் நடவடிக்கையாக மக்கள் தொகை சம்பந்தப்பட்ட தலைப்புக்களில் பல்வேறு கூட்டங்களையும் ஆராய்ச்சி மாநாடுகளையும் நடத்தி முடித்தன. கருத்தரங்குகளும், மண்டலக் கூட்டங்களும் பிற அனைத்தும் இத்திங்களில் நடக்கவிருக்கும் உலக மக்கள் தொகை மாநாட்டின் ஆய்வுத் தலைப்புகளுக்கு உருவகம் கொடுக்க உதவின என்றே கூறவேண்டும்.

### திட்டம்:

இத்திங்கள் 19 நாள் முதல் 30 நாள் வரை 'ருமேனியா' நாட்டிலுள்ள 'புகாரஸ்ட்' நகரில் நடைபெறவிருக்கும் உலக மக்கள் தொகை மாநாட்டின் செயலாளர் மெக்சிகோ நாட்டின் முன்னாள் நிதி அமைச்சரும் வெளி விவகாரத்துறை அமைச்சருமான திரு. அந்தோனியோ கார்லியோ புநோரஸ் என்பவராவர். இயன்றவரை உலகநாடுகள் பலவற்றிற்கும் சென்று தலைவர்களைச் சந்தித்து, உலக மக்கள் தொகை மாநாட்டிற்கு ஆதரவு திரட்டிய இவர் இந்தியாவிற்கு வந்து பிரதமர் இந்திரா

காந்தி அவர்களையும் சந்தித்துச் சென்றுள்ளார்.

இப்படிப்பட்ட தகுந்த முன்னேற்பாடுகள் பலவற்றுடன் தொடங்கவிருக்கும் உலக மக்கள் தொகை மாநாடு எதிர்கால மக்கள் தொகை வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு, எதிர்பாராத விளைவுகளை உண்டாக்கும் முறையில் அந்த மக்கள் தொகை வளர்ந்துவிடாமல் தடுக்கத் திட்டமொன்றினை வகுத்தளிக்கும். இத்திட்டம் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் உலகின் பல்வேறு வகையான சமூக, பொருளாதார, கலாசாரக் கூறுபாடுகளையும், நாடுகளிடையேயுள்ள வேறுபாடுகளையும் குறிப்பிட்ட நாட்டில் உள்ள வெவ்வேறு விதமான சூழல்களையும் வெளிப்படுத்துவதாக இருக்கும்.

**ஐ.நா. மக்கள் தொகை குழுவின் எண்ணங்கள்:**

உலக மக்கள் தொகை மாநாட்டில் உறுபயன்கள் எப்படிப்பட்டவையாய் இருத்தல் வேண்டும் என்பது பற்றி ஐ.நா. மன்றத்தின் மக்கள் தொகைக் குழு (United Nations Population Commission) தெரிவித்துள்ள கருத்துக்கள் குறிப்பிடத் தக்கவையாகும். காலப் போக்கில் அந்தந்த நாடுகள் தங்கள் வளர்ச்சித் திட்டப் பணிகளின் ஒரு கூறுக மக்கள் தொகைப் பிரச்சினையைச் சேர்த்துச் செயல்பட உதவும் வகையில் உலக அளவில் வகுக்கப்படும் மக்கள் தொகைத் திட்டம் உதவ வேண்டும். அப்போதுதான் அந்த நாட்டுப் பொருளாதார, சமூக வளர்ச்சிச் சூழமைவுக்குந் தக்கவாறு செயல்படுத்தற் கேற்றதாக இருக்கும்.

மக்கள் தொகை விகிதத்தில் குறிப்பிடத்தக்க சரிவினை உண்டாக்கத்தக்கவல்ல - மக்கள் தொகை வளர்ச்சியை விரைவாகக் குறைக்கத் தக்க திட்ட நடவடிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். பிறப்பு விகிதத்தைக் குறைப்பதன் மூலம் உலகத்தில் நிலையானதொரு மக்கள்தொகையை முடிவாக ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு-காலத்தின் மிகுந்த அருமை ஆகியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அதே நேரத்தில் உரிய மக்கள் தொகை வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்று நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ள உண்மைகளையும் புறக்கணித்துவிடாது நினைவில் கொள்ள வேண்டும். போதுமான வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான தவிர்க்க முடியாத மக்கள் தொகை மாற்றத்திற்குரிய கொள்கைகள், மக்கள் தொகை வளர்ச்சியின் வேகத்தை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்குக் குறைந்தவையல்ல. வளர்ந்து வரும் வாழ்க்கைச் செலவிற்கு ஈடுகொடுத்து அதிகமாகப் பெருகி வரும் மக்கள் வாழப் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் முனைப்பாக எடுக்கப்பட வேண்டும். ஐ.நா. மக்கள் தொகைக் குழுவின் இந்தக் கருத்துக்களில் உலக மக்கள் தொகை மாநாடு உரிய கவனம் அளித்துச் செயல்படுகிறது.



மாநாட்டின் செயலாளர் திரு. அந்தோணியோ கார்லியோ புரோஸ்.

---------- x ----------

**ஆய்வுத் தலைப்புகள்:**

பொருளாதார சமூக வளர்ச்சியின் அடிப்படையில் நோக்க மக்கள் தொகையின் நிலைமை, வளர்ச்சித் திட்டப்பணிகளின் ஆக்கப்பூர்வமான செயல்முறை திட்டமாக மக்கள் தொகைக் கொள்கைகளை ஏற்பது, பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கான - முறைப்படுத்துவதற்கான அரசு நடவடிக்கைகள், மக்கள் தொகையும் வளர்ச்சிப் பணிகளும், சுற்றுப்புறச் சுகாதார வாழ்வும், நீண்டகால மக்கள் தொகை வளர்ச்சியும் எதிர்பார்க்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியும், சமூகப் பொருளாதாரக் கொள்கைகளும் மக்கள் தொகை மாற்றத்திற்கு ஊறு உண்டாக்கும் நிலைமைகளும், பிறப்பு விகிதத்தை முறைப்படுத்துவதற்கான திட்டங்களும் சட்ட நடவடிக்கைகளும், அனைத்து நாட்டு அளவிலும் உள்நாட்டிலும் குடியேற்றத்தையும் மக்கள் தொகைப் பகிர்வமைப்பையும் ஒழுங்குபடுத்தும் கொள்கைகள்-ஆராய்ச்சிக்குரிய தேவைகள்-அனைத்து நாட்டு நடவடிக்கைகள் என்ற வெவ்வேறான பல தலைப்புக்களில் ஆய்வு நடத்தி, உலக மக்கள்தொகை மாநாடு பரிந்துரைகளை நல்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தனியார் மாநாடு:**

மக்கள் தொகைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நாட்டங்கொண்டுள்ள தனியார் பலரைக் கொண்ட குழுவினர்கள் உலக மக்கள் தொகை மாநாடு நடக்கும் அதே சமயத்தில் 'புகாரஸ்ட்' நகரில் மக்கள் தொகை மாநாடு (Population Tribune) ஒன்றினை நடத்துகிறார்கள். அரசுச் சார்பற்ற இவர்கள் நடத்தும் மாநாடு இத்திங்கள் 18-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் வரை 'புகாரஸ்ட்' நகரில், உள்ள சட்டக்கல்லூரியில் நடத்தப்படும். இதில் மக்கள் தொகைப் பிரச்சினையின் ஆழத்தினை-நுண்மையை விளக்கும் முகத்தான் பல்துறை அறிஞர்கள் உரையாற்றுவார்கள்.

இதனையொட்டிக் குழந்தைகள் நல நிறுவனம் (UNICEF) ஓவியப்போட்டியும், கவரொட்டிப் போட்டியும் நடத்தியது. அனைத்துலகினருக்குமான இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு இம்மாநாட்டில் பரிசுகள் வழங்கப்படும்.

இம்மாநாட்டில் 300 முதல் 1000 பேர்கள் வரை கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக மக்கள் தொகை மாநாட்டில் கலந்து கொள்ள வரும் பன்னூட்டு அறிஞர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்குவர்.

**ஒளியும் உவகையும்:**

உலகை அச்சுறுத்தி ஆட்டிப் படைக்கும் உலகப்போர், அணுவாயுதம் ஆகியவற்றை விட, இந்த நூற்றுண்டின் பெரும் பிரச்சினையாக இருந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலான நடைமுறைத் திட்டங்கள் பலவற்றைப் பரிந்துரைத்து உலக மக்கள் வாழ்வில் ஒளியூட்டும்-உவகை பெருக்கும் இந்த உலக மக்கள் தொகை மாநாடு என நாம் நம்பலாம்.





# காவிரிக் கரையில் காகித ஆலை

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்!"

—பாரதியார் தம் மனத்தில் எண்ணிய இவ் வரிகளை எழுதுவதற்குத் தாள் தேவைப்பட்டது; அவ்வாறு எழுதியவற்றை அச்சடித்து நூலாக்குவதற்குக் காகிதம் அவசியமாயிற்று.

விந்தைகள் புரியும் விஞ்ஞான யுகமல்லவா இது! காகிதமென்ன, கடல் நீரையே குடிநீராக்கும் இயந்திரச் சாதனங்களுக்கு இன்று குறைவில்லையே!

அறிவியல் வளர்வதற்கு முன் ஆதி மனிதன் தன் எண்ணத்தை—கருத்தை வெளிப்படுத்தக் கல்லிலே எழுத்தைப் பொறித்தான். படிப்படியாக மரப்பட்டை, தோல், உலர்ந்த இலை, பனை ஓலை முதலியவற்றை எழுதப் பயன்படுத்தினுன். பண்டை இலக்கியங்களெல்லாம் பனை ஓலை வடிவத்தில் இருப்பதே இதற்குத் தக்க சான்றல்லவா?

பனை ஓலையில் உள்ள பண்டைய எழுத்துக்கள் இன்று பாங்கான தாளில் அச்சு வடிவம் பெற்று அனைவருக்கும் பயன்படுகிறதென்ருல், அதற்குக் காகிதக் கண்டுபிடிப்பே காரணம் அல்லவா? முதன் முதலில் காகிதத்தைக் கண்டுபிடித்தவர்கள் · சீனர்களே யாவர்! கி.பி. 105-ல் அந்நாட்டில் முதன் முதலில் காகிதம் தயாரிக்கப்பட்டது. அங்கிருந்துதான் அது உலக நாடுகளுக்கெல்லாம் உலா வந்து, கி.பி. 11-வது நூற்றுண்டில் அரேபியர்கள் மூலம் இந்தியாவிற்குள் நுழைந்தது!

"ஆமாம், இந்த 'காகத்' எப்படித் தயாரிக்கப்படுகிறது?"

"என்ன? காகத்தா?"

"ஆமாம். 'காகத்' என்ற அரபுச் சொல்லிலிருந்துதான் 'காகிதம்' என்ற சொல்லே பிறந்தது!"

"அப்படியானுல் 'பேப்பர்' என்ற சொல் எப்படி வந்தது?"

கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர் 'பேபைரஸ்' (Papyrus) என்னும் கோரைப் புல்லை எழுதப் பயன்படுத்தினர். இந்தப் பேபைரசிலிருந்துதான் பேப்பர் (Paper) என்ற சொல் வந்தது. நைல் நதிக் கரையில் வளர்ந்த பேபைரசிலிருந்து இந்தப் 'பேப்பர்' பிறந்ததோ எப்படிப் 'பேப்பர்' பிறந்ததோ அதைப் போலக் காவிரிக் கரையில் காகிதமும் பிறந்தது!

சேலம் மாவட்டத்திலுள்ள ஈரோட்டுக்கு அருகில் —'சலசல'வென ஓடும் காவிரிக் கரையில்—சாவேரி இரயில் நிலயத்தை ஒட்டி ஒய்யாரமாய்க் காட்சியளிக்கிறது ஓர் காகித ஆலை! அதுதான் 'சேஷசாயி காகித ஆலை (Seshasayee Paper and Boards Ltd.,)

அன்றுடம் பயன்படுத்தும் பொருள்களில் காகிதம் மிக இன்றியமையாத ஒன்றுகும் என்பதை நாம் அறிவோம். அறிவை வளர்க்கும் கல்விக்கூடங்கள் முதல் அலுவலகப் பணிகள் வரை அதன் பயன்கள் சொல்லி முடியாது. ஏன், அன்றுட வாழ்க்கை வண்டி ஓடுவதற்குத் தேவையான பணமும் இந்தக் காகிதத்தாலன்றே காட்சியளிக்கின்றது?

உலகம் முழுவதற்கும் ஓர் ஒப்பற்ற பொருளாக—கிடைத்தற்கரிய செல்வமாக விளங்கும் இந்தக் காகிதத்தின் கதையைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

'செல்லுலோஸ்' (Cellulose) எனப்படும் இழைகளால் அதாவது மரக் கூறுகளால் உருவாவது காகிதம். தாவரங்கள் அனைத்திலும் காணப்படும் இவற்றிற்குப் பருத்தி ஓர் உதாரணம். நம் நாட்டில் காகிதம் தயாரிக்க உதவும் மூலப் பொருள்கள் மூங்கில், சில வகை மரங்கள், புற்கள் முதலியனவாகும்.

மூங்கிலுடன் கரும்புச் சக்கையிலிருந்தும் காகிதம் தயாரிப்பதில் நம் நாட்டில் முன் வரிசையில் வருவது இந்தக்

காகித ஆலை. மூங்கில் 60 சதவீதம் செல்லுலோசாலும், 25 சதவீதம் 'லிக்னின்' எனப்படுவதாலும் ஆனது. செல்லுலோஸ் இழைகளைப் பிணைப்பது லிக்னின். இதனைத் தகுந்த இரசாயனக் கரைசலில் கரைத்து, கரையாத பொருளாக செல்லுலோஸ் பிரித்து எடுக்கப்படுகிறது.

காகிதம் தயாரிக்கப் பயன்படும் மூங்கில், யூக்லிப்டஸ் மரம் ஆகியவை இவ்வாலையின் திடல் ஒன்றில் ஏராளமாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த மரங்கள் கூறும் கத்திகள் கொண்ட வெட்டும் இயந்திரப் பிரிவுக்குள் (Chipper house) செலுத்தப்படுகின்றன. கண் மூடிக் கண் திறப்பதற்குள் இந்த மரங்களைச் சிறுசிறு துண்டுகளாக்கிப் பொடிப் பொடியாக்கி விடுகிறது ஒரு இராட்சத இயந்திரம்! காதைச் செவிடாக்கும் இந்த இயந்திர ஆற்றலைக் கண்டு வியக்கிறோம்!

இந்த இயந்திரத்தைப் பார்க்கும்போது நமக்குச் சர்க்கரை ஆலையே நினைவுக்கு வருகிறது. சர்க்கரை ஆலையிலும் இம்மாதிரியான இயந்திரங்கள் கரும்புக் கத்தைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்குகின்றன. கரும்புச் சக்கையும் காகிதம் செய்வதற்குப் பயன்படும் பொருள்களில் ஒன்று. சர்க்கரை ஆலையிலிருந்து கட்டுகளாக வரும் கரும்புச் சக்கை உடைக்கப் பெற்று அதிலுள்ள வேண்டாத பொருள்கள் இப்பகுதியில் நீக்கப்படுகின்றன.

மூங்கில் துண்டுகள், கரும்புச் சக்கை, காகிதம் தயாரிக்க உதவும் பிற பொருள்கள் இவைகளெல்லாம் கையாளப்படுவதும், ஒரு கட்டத்திலிருந்து வேறு கட்டங்களுக்குச் செலுத்தப்படுவதும் முற்றிலும் இயந்திரங்களினாலேயே ஆகும். இதற்கான வகை வகையான இயந்திரங்கள் நம்மை மலைக்க வைக்கின்றன.

மூலப் பொருள்கள் எரி சோடா, சோடியம் சல்பைடு சேர்ந்த கலவையுடன் சத்தாக வடிசாறு இறக்கும் கலத்தில் (Digester) செலுத்தப்படுகின்றன. இக் கலத்தில் வெப்பநிலை சுமார் 350 டிகிரி எஃப் ஆகும். எரி சோடாவும், சோடியம் சல்பைடும் மூங்கில் துண்டிலும், கரும்புச் சக்கையிலும் உள்ள லிக்னினைக் கரைக்கின்றன. கரையாத பொருளாக செல்லுலோஸ் இழைகள் பிரிகின்றன.

நுண் துளைகளுள்ள வலைக் கம்பிகள் மூடிய நீள் உருளைகள் (Cylinder) செல்லுலோஸ் இழைகளைக் கழுவுவதற்கும், அவற்றைத் திரவக் கலவையிலிருந்து பிரிப்பதற்கும் பயன்படுகின்றன. இவை அலம்பும் இயந்திரங்கள் (Washers) எனப் பெயர் பெறுகின்றன. இங்குப் பிரிவுறும் திரவம் கருப்பு நிறம் உள்ளதாயிருக்கும். இதிலுள்ள எரி சோடாவைத் திரும்பப் பெறுவதற்காக ஆலையின் வேறொரு பகுதிக்கு இது கொண்டு செல்லப்படும். கழுவப்பட்ட செல்லுலோஸ் இழைகள் தாள் செய்வதற்கு உரிய கூழ் (Pulp) என அழைக்கப்படுகின்றன. கூழில் உள்ள சிறு மணல் போன்ற பிற பொருள்கள் சுழற் சக்தியின் மூலம் விலக்கப்படுகின்றன.

பழுப்பு நிறத்தாலான கூழ் இப்போது வெளுக்கும் (Bleaching) பகுதிக்கு அனுப்பப்படுகிறது. குளோரின் முதலாகவும் அடுத்து கால்சியம் ஹைப்போகுளோரைடு இரண்டு, மூன்று முறையும் உபயோகப்படுத்தப்பட்டு, கூழ் இழைகளில் மீதம் உள்ள லிக்னின் அகற்றப்பட்டுக் காகிதக் கூழ் வெளுக்கப்படுகிறது; நன்கு கழுவப்படுகிறது.

காகிதத் தயாரிப்பில் இனித் தொடருவது முக்கிய கட்டங்களிலொன்று. உற்பத்தி செய்யப்படும் காகிதத்தின் தன்மைகளைத் நிர்மாணிப்பதான இரசாயனங்கள் இங்குக் காகிதக் கூழுடன் கலக்கப்படுகின்றன. கூழுடன் டால்கம் பவுடர், சீனக் களிமண், அலுமினியம் சல்பேட்டு, ரோசின் (Rosin) ஆகியவை தேவைப்படி கலக்கப்படுகின்றன. டால்கம் பவுடரும், சீனக் களிமண்ணும் காகிதத்திற்கு ஒளிபுகாத் தன்மையையும், அச்சிடுவதற்கு ஏற்ற தகுதியையும், மழமழப்பையும் அளிக்கின்றன. மை ஊறாத்தன்மை, அலுமினியம் சல்பேட்டு ரோசின் கலவையினால் ஏற்படுகிறது. இவற்றுடன் நீரும் பெரும் அளவில் சேர்க்கப்படுகிறது. இவ்வாறு காகிதம் செய்யத் தயாரிக்கப்பட்ட கூழ்க் கலவை 99.5 -லிருந்து 99.8 சதவீதம் வரை நீராலேயே ஆனது!

ஆம். காவிரியின் நீராலேயே ஆனது. காவிரிக்கரையில் அமைந்திருக்கும் இந்த ஆலை, காவிரியாற்றின் நீரையே முழுக்க முழுக்கப் பயன்படுத்துகிறது. நம் கரம் படும் தாள்களில் அன்னை காவிரியே முழுதும் இழைந்திருக்கிறாள்!

இக் கலவை நுண் துளைகளுள்ள வலைக் கம்பியின் மீது செல்கையில் ஈரத் தாளாக உருவெடுக்கிறது. உட்புறம் நீராவியடங்கிய நீள் உருளைகள் மீது மேலும் கீழுமாகச் சென்று காகிதம் உலர்ந்து வெளிவருகிறது; கடினமான உருளைகளுக்கிடையில் அழுத்தப்பட்டு மழமழப்பாய் ஆகிறது. எனவே, சுமார் 300 அடிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு முனையில் நீர்த்ததொரு கலவையும், அதுவே மறுமுனையில் பெரும் காகித உருளைகளாக மாறுவதையும் நாம் கண்டு வியக்கிறோம். பிறகு தேவையான அளவுக்கு வெட்டப்பட்ட காகிதம், சோதனை செய்யப்



காகித ஆலையின் உட்புறத் தோற்றத்தின் ஒரு பகுதி.





காகித உற்பத்திக்கு உதவும் மூலப்பொருள் மூங்கில்.



எந்த மரமானாலும் இந்த இயந்திரத்தில் வந்து விழுந்தால் பொடி! பொடி!



காகிதம் தயாரிக்கும் ஒரு வகை இயந்திரம்.



தயாரான காகிதம் மின்னல் வேகத்தில் சுருட்டப்படுகிறது.



பட்டு, விற்பனைக்கு அனுப்பப் படுகிறது.

காகிதத் தொழிலுக்கு முக்கிய மூலப் பொருளாக விளங்குவது மூங்கில். இதை இவ்வாலைக்குத் தமிழ்நாடு அரசு வனத் துறை வழங்கி வருகிறது. மூங்கில் சத்திய மங்கலத்திலும், சேலம் தேன் கனிக் கோட்டையிலும் கிடைக்கின்றன. மூங்கிலோடு யூகலிப்டஸ் மரத்தையும் இங்கே காகிதம் செய்வதற்குப் பயன் படுத்துகின்றனர். இந்த மரம் செங்கற்பட்டு, நீலகிரி, புதுக் கோட்டை ஆகிய இடங்களில் இருந்து தருவிக்கப்படுகின்றது. இவையன்றி முருங்கை, கருவேல மரங்களிலிருந்தும்கூடக் காகிதம் தயாரிக்கலாமாம்.

1960-ல் துவக்கப்பட்ட இந்த ஆலை, 1962 முதல் உற்பத்தியைத் தொடங்கி வருகிறது.

இந்தியாவிலுள்ள பெரிய 10 காகித ஆலைகளில் சேஷசாயும் ஒன்று. ஆனால், தமிழ் நாட்டிலே இதுவே மிகப் பெரிய ஆலை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

பெரும்பான்மையான ஆலைகளிலெல்லாம் மூங்கிலை மட்டுமே மிகுதியாகப் பயன் படுத்திக் காகிதம் தயாரிக்கின்றனர். ஆனால், இங்கோ 50 சதவீத அளவில் மூங்கிலோடு யூகலிப்டஸ் போன்ற கடின மரத்தையும் சேர்த்துக் காகிதம் தயாரிக்கின்றனர். இந்த வகையில், கடின மரங்களை (Hard wood) அதிக அளவில் பயன்படுத்திக் காகிதம் தயாரிப்பதில் இவ்வாலை முதன்மையாகத் திகழ்கிறது. இன்னும் சொல்லப் போனால், யூகலிப்டஸ் மரத்தைப் பெருமளவில் உபயோகப்படுத்திக் காகிதத்தைச் செய்யலாம் என்று செயல் முறையில் காட்டிய பெருமை இவ்வாலையையே சாரும்.

ஒரு நாளைக்கு 100-லிருந்து 105 டன் காகிதமும், காகித அட்டையும் (Paper and boards) இவ்வாலையில் தயாரிக்கப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு 35,000 டன் காகிதமும், காகித அட்டைகளும் தயாராகின்றன. எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் பயன்படும் காகிதங்கள் இங்கே 60 சதவிகிதத்திற்கு மேல் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்குத் தயாராகும் காகிதங்களில் 25 சதவீதம் தமிழக அரசுக்கும்,







காகிதச் சுருளின் ஓரம் ஒழுங்காக வெட்டப்படுகிறது

மத்திய அரசக்கும் தரப்படுகிறது. தமிழ் நாட்டு அரசினர் அச்சகம், தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் ஆகியவை இவ்வாலை உருவாக்கிய காகிதங்களையே மிகுதியாகப் பயன் படுத்துகின்றன. இவையன்றிப் பத்திரிகைகளுக்கும் காகிதம் இவ்வாலையிலிருந்து தரப்படுகிறது.

இவ்வாலை தயாரிக்கும், டூப்ளக்ஸ் போர்டும் (Duplex board), போஸ்டர் தாளும் தனித் தன்மை பெற்று விளங்குகின்றன.

அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ள இக் காகித ஆலை 85 ஏக்கர் பரப்பளவில் கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது. இவ்வாலையில் 2,000 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களில் 600 பேர் நிர்வாகப் பிரிவிலும், 1,400 பேர் தொழிற் கூடத்திலும் உள்ளனர். இவர்களுக்கு அழகிய குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. 160 ஏக்கர் பரப்பளவில் கட்டப் பட்டுள்ள இக் குடியிருப்பில் சுமார் 700 இல்லங்கள் இருக்கின்றன. இங்கே அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளி, விளையாட்டுத் திடல், திறந்த வெளி அரங்கம், பொழுதுபோக்குச் சங்கம், மகளிர் மன்றம், கூட்டுறவுப் பண்டகசாலை, சிற்றுண்டிச் சாலை போன்ற வசதிகள் உள்ளன. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கெல்லாம் குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. வெளியே உள்ள பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவச ஊர்தி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

வேகமான விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இன்று விதவிதமான தாள்கள் பல்வேறு வண்ணங்களில் கண்ணைப் பறிக்கும் வண்ணம் தயாரிக்கப்படுகின்றன. தாள்களில்தான் எத்தனை வகைகள் இருக்கின்றன! சுமார் 7,000 வகையான காகிதங்கள் இன்று உலகெங்கிலும் உற்பத்தி செய்யப்படுகின்றனவாம்.

நார்ப்பட்டு, பட்டு, எஸ்பார்ட்டோபுல், மரம், முசுமுசுப்பு, நார், புளிச்சை, மூங்கில், சணல், வைக்கோல், சாக்குத்துணி, நாற் கயிறு, பயனற்ற தாள்கள் போன்ற பொருள்களிலிருந்து இப்போது காகிதம் தயாரிக்கப்படுகிறது.

காகிதங்கள், வகைகளுக்கு ஏற்பத் தயாரிக்கப்படுகிறது. பத்திரிகைக் காகிதம், வழுவழுப்புத் தாள் (Art paper) எழுத்தச்சுத்தாள் (Lithographic paper), போலி வழுவழுப்புத் தாள் (Imitation Art paper), பொருள்கள் மடிக்க உதவும் தாள் (Wrapper), அட்டைகள் (Card board), சுருகுத்தாள் (Trace paper), கொழுப்புத் தாள் (Cellophane paper) போன்றவையெல்லாம் ஒவ்வொரு வகையில் தயாரிக்கப் படுகின்றன.

இதற்காகப் பல்வேறு வகையான இயந்திரங்கள் காகித ஆலையில் உள்ளன. இந்த இயந்திரங்களைப் பார்க்கும் போது நமக்கு மலைப்பே ஏற்படுகிறது.

இதோ ஒரு இயந்திரம்!

நீரோடு கலந்த காகிதம் புடவை மாதிரி உருவாகி வருகிறது. பிறிதொரு இடத்தில் அந்நீர் உறிஞ்சப்பட்டு உலர்ந்த காகிதம் ஓர் உருளையில் சுருட்டப்படுகிறது. மின்னல் வேகத்தில் நடக்கிறது இந்த வேலை!

உருளையில் சுருட்டப்பட்ட காகிதம் (120 அங்குலம் அளவுடையது) குறைந்த அளவுக்கு ஒழுங்காக வெட்டப்படுகிறது. காகித உருளைகள் (Paper reels) பத்திரிகை, செய்தித் தாள் அச்சடிப்பவர்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. பெரிய வெட்டும் இயந்திரத்தின் உதவியினால் இவ்வேலை நடைபெறுவதை நேரில் கண்டு மகிழ வேண்டும்.

இவ்வாறு வெட்டப்பட்ட காகிதச் சுருள்கள் ஒரு பக்கம் நிறைய காட்சி அளிக்கின்றன. இந்தக் காகிதச் சுருள்கள் இன்னொரு இயந்திரத்தில் ஒற்றைத் தாளாக வெட்டப்படுகிறது. பிறகு அவை 500 தாள்கள் கொண்ட ஒரு 'ரீம்' ஆக நன்கு சிப்பம் (Packing) செய்யப் பட்டு விற்பனைக்கு அனுப்பப் படுகிறது.

இந்த ஆலையோடு இணைந்த இன்னொரு தொழிற்கூடமும் உள்ளது. அதுதான் கந்தை, கூளம், சாக்கு முதலியவற்றால் காகிதக் கூழ் செய்யும்தொழிற் கூடம் (Rag plant). இந்தக் காகிதக் கூழை மரக்கூழோடு கலப்பதால் நல்ல தரமான காகிதம் கிடைக்கிறது.

இக் காகித ஆலையில் மூன்று வகையான காகிதத் தயாரிப்பு இயந்திரங்கள் உள்ளன. அவை:

1. எம். எஃப். இயந்திரம் (M. F. Machine) :— இதில் எழுதுவதற்கும் அச்சடிப்பதற்கும் பயன்படுத்தப் படும் காகிதங்கள் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். இது ஒரு நாளைக்கு 50 டன் உற்பத்தி செய்கிறது.

2. எம்.ஜி. இயந்திரம் (M. G. Machine):— இது பல்வேறு திறமை வாய்ந்த இயந்திரம் ஆகும். இதில்தான் டூப்ளக்ஸ் போர்டு (Duplex board) எனப்படும் காகித அட்டை தயாராகிறது. இது அதிக அளவில் சிகரெட்டுப் பெட்டி செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இதில் மேற்சொன்ன எம். எஃப். இயந்திரத்தில் செய்யும் எல்லாவித எழுதும் தாள்களையும் உற்பத்தி செய்யலாம். இதைத் தவிர 'கிராப்ட்' எனப்படும் காகிதமும் காகிதப் பைகள் தயாரிப்பவர்களுக்காகத் தயாரிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு 50 டன் அட்டைகளும், 40 டன் காகிதங்களும் இதில் உற்பத்தி செய்யப்படுகிறது.

3. யாங்கி இயந்திரம் (Yankee machine):— இது மிகவும் நவீனமானதொரு இயந்திரமாகும். இதில் மெல்லிய காகிதமான போஸ்டர், மெல்லிய தாள் (Tissue) போன்றவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் ஒரே ஒரு காகித உலர் உருளைதான் (Paper dryer) உள்ளது. இது ஒரு நாளைக்கு 12—15 டன் வரை உற்பத்தி செய்யக்கூடியது.

இக் காகித ஆலையிலுள்ள பிரிவுகளைத் துப்புரவாக வைத்துக் கொள்ளும் தொழிலாளர்களுக்கு ரொக்கப் பரிசுகளும், சுழற் கேடயமும் வழங்கப்படுகின்றன. இந்த வகையில் ஆண்டுக்கு ரூ. 15 ஆயிரம் வரை ஒதுக்கித் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே இது மிகவும் சுத்தமான ஆலை என்று மெச்சும் அளவிற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.



இன்று இந்தியாவில் மட்டுமல்ல உலக நாடுகளிலேயும் காகிதப் பற்றாக்குறை இருந்து வருவதைப் பார்க்கிறோம். இந்தப் பற்றாக்குறைக்குக் காரணம் என்ன? இங்குப் பணியாற்றும் ஓர் அலுவலர் கூறுகிறார் :

“காகிதத் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருள்கள் மூங்கில், யூகலிப்டஸ் மரம் போன்றவை எளிதில் கிடைப்பதில்லை. இந்தப் பற்றாக்குறைக்குக் காரணம், காடுகளில் இவற்றின் உற்பத்திக் குறைவேயாகும்; தற்போது நாட்டில் காகிதத்தின் தேவை அதிகரித்திருப்பதும் இதற்கு மற்றொரு காரணமாகும். உற்பத்தி குறைந்து, தேவை அதிகமாகும்போது காகிதப்பற்றாக்குறை — தட்டுப்பாடு—விலையேற்றம் எல்லாம் உண்டாகின்றன. இன்று 'நியூஸ் பிரிண்ட்' போன்ற மலிவான காகிதங்கள்கூட மலைபோல விலையேறி விட்டதைப் பார்க்கிறோம்.

“இத்தொழிலுக்கு வேண்டிய இரசாயனப் பொருள்களின் விலை ஏற்றமும் காகித விலையேற்றத்திற்கு ஒரு காரணமாகக் கூறலாம். காகித ஆலைகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக இல்லாமல் நிறைய தோன்றினால், இந்தப் பற்றாக்குறையைப் போக்கலாம் என்றாலும், இதனை முன்னின்று நடத்துகின்ற மன உறுதி எவருக்கும் இல்லை. காரணம் இதற்கு மூலதனம் மிகமிக அதிகஅளவில் தேவைப் படுகிறது. பெரும் மூலதனம் போட்டுக் குறைந்த அளவில் இலாபத்தை அடைய எவர் தான் முன்வருவார்?”

இன்று இந்தியாவுக்கு 11 இலட்சம் டன் காகிதம் தேவைப்படுகிறது. ஆனால், உற்பத்தியாகும் காகிதத்தின் அளவோ 8 இலட்சம்தான்!

உலகத்தில், அமெரிக்காவில், ஒருவர் பயன்படுத்தும் காகிதத்தின் அளவு 250 கிலோ கிராம். ஆனால் இந்தியாவில் 1.5 கிலோ கிராமாக இருக்கிறது. இதிலிருந்து நாம் அங்கே உற்பத்திப் பெருக்கத்தின் அளவைக் கணக்கிடலாம்.

இந்த ஆலையிலும் உற்பத்திப் பெருக்கத்திற்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு நாளைக்கு 100-லிருந்து 150 டன் வரை உயர்த்தவும், அதன் மூலம் ஆண்டுக்கு 15,000 டன் காகித உற்பத்தி அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இருபத்து நான்கு மணி நேரமும் இடைவெளி இல்லாமல், இரவு பகலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இக் காகித ஆலையில், இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வந்துள்ள தொழிலாளிகள் ஈடுபட்டிருப்பதனால் இது ஓர் ஒருமைப்பாட்டு ஆலையாகவும் திகழ்கிறது என்று நாம் பெருமையோடு சொல்லலாம்.

தமிழ் நாட்டு மண்ணை முத்தமிட்டு ஓடும் காவிரி நீரால் முழுக்க முழுக்க ஆகும் இக் காகிதம், இந்தியாவின் பல மாநிலத்தவரின் கரங்களிலும் த வ ழ் கி ன் ற து.

—பி.வி.ஜி.

# வாழிய நெடிதே!

சங்கப் புலவர்கள் பாடிய தீந்தமிழ்ச் செய்யுள்களைப் போல......... இங்கே முதல்வர் கலைஞர் அவர்களுக்கு வாழ்த்துக் கவிதைகள் வடித்துத் தந்திருப்பவர்

**தேவநேயச்சித்திரன்**



## கைத்தறி விற்றே!

திணை : வாகை துறை : அரசமுல்லை

கைத்தறி வாழ்நர் உயிர்தரிக் கில்லா
வற்கடம் நேர்வுற வாடிய போழ்தில்
இல்லந் தோறும் புக்கு புக்கே
ஈட்டினை பொற்குவை கைத்தறி விற்றே
போக்கினை வற்கடம் புதுக்கினை வாழ்வை
வாழிய அமிழ்தாய் அருள்மலி வளவ
தேறல் பயனும் தெளித்திடு
தேன்தமிழ் அரசே தெளிப்புறப் பொலிகவே!

புறவுரை

1. உயிர் தரிக்கில்லா—உயிர் பிழைப்புற நில்லா
2. வற்கடம்—வறுமை, பஞ்சம்
3. தேறல்—தேன்





## வழங்கிய...அரசே!

திணை : பாடாண் துறை : வாழ்த்தியல்

தீவாய்ப் போகிய வாயிலாப் பூச்சியாய்
குடிசைப் போகிய ஏதிலி மக்கள்
மாடங்கள் கூடங்கள் வாழ்ந்திடு நேர்ச்சி
வழங்கிய தண்ணளி அரசே தமிழரசே
தளர்விலாப் பாங்கில் தழைகமா நெடிதே
தேத்தமிழ் புரப்பன் தென்றமிழ் படைப்பன்
முக்கனிச் சுவையின் சொல்லியன்
வாழிய வாழி வளநலந் தெளித்தே!

புறவுரை

1. ஏதிலி—அனாதை
2. நேர்ச்சி—நல்லூழ் வினையால் சூழ்ந்திடும் விளைவுறு சூழ்நிலை
3. புரப்பன்—முழுநிறைக் காப்பாளன்



## இல்லம் எடுத்திட!

திணை : வாகை துறை : அரசவாகை

அறறை ஈந்தார் புலவர் தமக்கே
முற்றூட் டாக முத்தமிழ் வேந்தர்
இற்றை நீயோ இல்லார் எவர்க்கும்
இல்லம் எடுத்திட எழிலுற வாழ்ந்திட
தகுநிலம் ஒதுக்கி உரிமம் வழங்கினை
நல்லை வாழிய நற்றமிழ் நேர
முல்லை அன்ன முத்தமிழ் அரசே
நெட்டுற நெடிதாய் கதிராய்
வாழ வாழ்த்துகம் வளமாச் சோழனே





புறவுரை

1 முற்றூட்டாக—கண்ணுக்கெட்டிய விளை நிலத்தைக் கொடையாக வழங்குதல்
2. உரிமம்—பட்டா



## உழுதூண் விளைத்திட!

திணை : வாகை துறை : அரசவாகை

உழைப்பே முதலாய் உகுவல் தோழன்மார்
உழுதூண் விளைத்திட உற்ற நிலங்கள்
உரித்தாய் அளித்தனை வாழிய நல்லை!
வளநில விளைவாய் பொலிகமா கலைஞர்
விதை முதல மாக
விளங்குக நெடிதே பூந்தமிழ் அரசே!



புறவுரை

1. உகுவர்—முழுமையாக ஈட்டிடு வலிமை மிகுந்த
2. முதலமாக—மூல நிலையாக





## கண்ணொளி செய்தார்!

திணை : வாகை துறை : அரசவாகை

வையம் தோன்றி வளர்வுறு நாளாய்
தண்ணளி செய்தார் பலரே பலரே
கண்ணொளி செய்தார் இலரே இலரே
கலைத்தமிழ் புதுக்கிடு கலைஞன் வளவன்
கருணை நிதிச்சோ ழனின் இலரே
இனியார் ஈகுவார் இவன்மா அளியே
வாழிய கலைஞன் வளவன் சோழன்
முதல்வன் முனைவன் படைப்பன் பாடன்
தழைத்திடு தளிரதன் பொலிவாய்
பொலிய வாழிய கோடியின் கோடியே!



புறவுரை

1. தண்ணளி—நெஞ்சங் குளிரும்படியான அருள்
2. படைப்பன்—படைப்பாளி
3. பாடன்—நல்லியல்பாளன்



## இழுவிழி போக்கினை!

திணை : வாகை துறை : அரசவாகை

மக்களை மக்களே மாக்கள்ாய் இழுவிழி
போகக்கினைப் போக்கிய நோக்குயர் சோழ
கலையின் கவிஞர் கொழிகொழு விளைவாய்
வாழிய நல்லை வாழிய நல்லை
கனப்புற செறிவுற தெறிப்பாய்
நிலைப்புற நெடிதாய் நெடுந்தமிழ் அரசே!

புறவுரை

1. மாக்களாய்—விலங்குகளைப் போல
2. இழுவிழி—இழுத்திடும் தாழ்வான
3. தெறிப்பாய்—முழுநிறை செப்பம் ஒளிர்வுறல் போல

காதி கிராப்ட்
அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.
ஆரோக்யம் தரும் சுத்தமான தேன்,
கைத்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட்
ஆடைகள், சுத்தமான எண்ணெய்,
கலைமுகு கொஞ்சும் கைவண்ணப்
பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப்
பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல
பொருட்களையும் வாங்கலாம்.
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி
மாநிலங்களில் 200க்கும் மேலான
காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை
பூர்த்தி செய்கின்றன.




தொலைபேசி சென்னை 29684 81954 திருச்சி 3814 கோவை 35051

# சமுதாய நலப் பணியில்



# சுழற் சங்கம்

ஏழை எளிய மக்களின் தேவைகளையும், அவர் தம் குழந்தைகளின் நல்வாழ்வுக்கு நல்லுணவு, இலவசக் கல்வி, இலவச மருத்துவ வசதி என்பன போன்ற தேவைகளையும் அளித்திடுவதில் தமிழக அரசு அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டி வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அரசுதான் செய்ய வேண்டும் என்றில்லாமல், வசதி படைத்தோர் வாழ்வில் அக்கறை கொண்டோர் — சமுதாய நலப் பணியில் நாட்டங்கொண்டோர் — நல்லெண்ணம் படைத்தோர் போன்றவர்கள் சமுதாயப் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு ஏழை எளியவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவிகளை நல்கிட முன் வர வேண்டும் என்கிற நல்லெண்ணத்தில் சென்னை சுழற்சங்கம் (Rotary Club of Madras ) மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இச் சங்கம், சங்கப் பணி, வாழ்க்கைத் தொழில் சார்ந்த பணி, சமுதாயநலப் பணி, அனைத்து நாட்டுப் பணி ஆகிய நான்கு பிரிவுகளிலும் பணியாற்றுகின்றது. சமுதாயப் பணியின்கீழ், சென்னை மாநகரில் இச் சங்கம் 'ரோட்டரி நகர்' என்ற பெயரில் ஒரு பகுதியையே தேர்ந்தெடுத்துக் களப் பணியாற்றி வருகிறது.

சென்னை இராணி மேரிக் கல்லூரியின் பின்புறத்தும், காவல்துறைத்தலைமை அலுவலரின் அலுவலகத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ள குடிசை வாழ் பகுதியே ரோட்டரி நகராகும். சுழற்சங்கத்தினரால் இப் பகுதி 1947-ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இங்கே ஏறத்தாழ 250 வீடுகள் வரை உள்ளன.

இப் பகுதி வாழ் மக்களுடைய இளம் சிறார்களுக்குக் கல்வியறிவைப் புகட்டிடும் வகையில் இரவுப் பள்ளி ஒன்றினை நடத்திடவும், இப்பகுதி மக்களுடைய ஏனைய உபயோகத்திற்கெனவும் ஒரு சிறிய கட்டடத்தை முதலில் இச் சங்கத்தினர் கட்டினார்கள்.

இச் சங்கத்திலுள்ள பல குழுக்களில் ஒன்றான 'சமுதாயப் பாதுகாப்புக் குழு' இப்பகுதியின், 2 வயது முதல் 12 வயது வரையிலுள்ள சிறார்களுக்கு [illegible]

திடும் திட்டம் ஒன்றினை உருவாக்கியது. இந்தச் சிறிய திட்டம் 1972-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களிலிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. இந்தச் செயல் திட்டத்தில் சுழற் சங்கத்தைச் சார்ந்த — பல் துறைகளில் புகழ்பெற்ற மருத்துவர்கள் பங்கு பெற்றுச் சிறப்புப் பணி புரிந்து வருகின்றனர்.

முதலில் மருத்துவச் சோதனைக்கென ஏற்படுத்தப் பட்ட இது, நாளடைவில் ஒரு மருத்துவ மையமாக வளர்ந்தது. முன்னர் இங்குச் சிறுவர்களுக்கு மட்டும் மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. ஆனால் தற்பொழுது இங்குள்ள முதியவர்களுக்கும் மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நாள்தோறும் ஏறத்தாழ 50 பேர் மருத்துவ சிகிச்சை பெறுகின்றனர். இங்குள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் குடும்ப அட்டைகள் (Family Cards) கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த மருத்துவ மையத்தில், பகுதி நேர மருத்துவர் ஒருவர் இச் சங்கத்தினரால் நியமிக்கப் பட்டுள்ளார். இவர், வாரத்தில் மூன்று நாட்கள் — அதாவது செவ்வாய், வியாழன் மற்றும் சனிக் கிழமைகளில் மருத்துவச் சிகிச்சை அளித்து வருகிறார். இச் சங்கத்தின் உறுப்பினர்களாகவுள்ள பல் துறைகளிலும் திறமைவாய்ந்த மருத்துவர்கள் செவ்வாய்க் கிழமைதோறும் இப் பகுதிக்கு வருகை தந்து, மருத்துவ ஆலோசனைகளை வழங்கி, மருந்துகளையும் தாங்களே கொண்டு வந்து கொடுக்கின்றனர்.

இம் மருத்துவச் சோதனையால் இப் பகுதி மக்களின் — குறிப்பாகச் சிறுவர்களின்

# கண்புரை நோயும் நீக்கும் வழிகளும்

—டாக்டர்
ஜி. வெங்கடசாமி

தமிழ் நாட்டில் சென்ற இரண்டு ஆண்டுகளாக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான மக்களுக்குப் புரைக்காகக் கண்ணில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. புரை என்றால் என்ன? கண்ணில் அதனால் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன? அதன் அறிகுறிகள் யாவை? என்றறிந்து கொள்ள மக்கள் ஆசைப்படுகிறார்கள்.

கண்களின் முக்கியமான பணி, வெளியில் இருக்கும் பொருட்களின் உருவத்தைப் படம் பிடித்து மூளைக்கு அனுப்புவதுதான். கேமராவில் வெளிப் பொருட்களின் படம் விழுகிறது. அதே போல கண்ணில் உள்ள 'ரெட்டினா' (Retina) என்ற திரையில் நாம் பார்க்கும் பொருட்களின் நிழல் விழுகிறது. கண் நரம்புகள் வழியாக மூளைக்கு இந்தச் செய்தி அனுப்பப்படுகிறது. மூளையின் பின் பகுதியில் பார்வைக்கெனத் தனிப் பகுதி உண்டு. நாம் காணும் பொருட்களிலிருந்து ஒளிக் கதிர்கள் கண்களைச் சேருகின்றன. கண்ணின் முன் பகுதியில் 'கார்னியா' (Cornea) என்ற கண்ணாடி போன்ற ஜவ்வு இருக்கின்றது. இந்தக் கார்னியா ஒளிக் கதிர்களைக் குவியச் செய்கிறது. கார்னியாவிற்கு 3 அல்லது 4 மில்லிமீட்டருக்குப் பின்னால் கண்ணிற்குள் 'லென்ஸ்' (Lens) என்ற குவி வில்லை இருக்கின்றது. இதன் அகலம் சுமார் 10 மில்லி மீட்டர் ஆகும். மையத்தில் கனம் சுமார் 4 முதல் 5 மில்லி மீட்டர் ஆகும். இந்தக் குவி வில்லையும் ஒளிக் கிரணங்களை ரெட்டினாவில் விழச் செய்கிறது.

## கண்ணில் புரை உண்டாவது

இந்தக் குவி வில்லை, கண்ணாடி போன்றது. இதில் இரத்த நாளங்கள் இடையா. மனிதன் உயிரோடு இருக்கும்வரை இந்தக் குவி வில்லையில் இருக்கும் திசுக்கள் உயிரோடு இருக்கின்றன. குவி வில்லையின் மத்தியிலுள்ள பாகத்தை 'நியூக்ளியஸ்' (Nucleus) என்றழைக்கிறார்கள். குழந்தை கருவில் இருக்கும்போதே இந்த நியூக்ளியஸை சுற்றித் திசுக்கள் வளருகின்றன. கடைசியில் உண்டாகும் திசுக்கள் இந்த வில்லையின் வெளிப் புறத்தில் காணப்படும். இதற்கு வேண்டிய ஆகாரப் பொருட்களை வில்லையைச் சுற்றியுள்ள திரவத்திலிருந்து எடுத்துக் கொள்கிறது. இந்தத் திசுக்களின் வாழ்விற்கு வேண்டிய உணவுப் பொருட்கள் சரியாக இல்லாமல் அவை இறந்து விடுகின்றன. அப்பொழுது புரை உண்டாகிறது என்று சொல்கிறோம்.

வயது அதிகமாக அதிகமாக உடலின் பல்வேறு பாகங்களிலும் பல மாறுதல்கள் உண்டாகும். பற்கள் விழுந்து விடுகின்றன. தலை முடி நரைத்து விடுகின்றது. தோலில் சுருக்கம் ஏற்படுகிறது. உடலில் தளர்ச்சி ஏற்படுகிறது. இவையெல்லாம் மனித உடலில் வயது அதிகமாவதால் ஏற்படும் பல்வேறு மாறுதல்கள். ஆகவே

கண்புரை நோயினால் பார்வை இழந்தவர்களுக்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமது 49-வது பிறந்த நாளின்போது அறிவித்தார்கள். அதன் பின்னர் மாவட்டந்தோறும் இலவசக் கண்சிகிச்சை முகாம்கள் அமைக்கப்பட்டன—அமைக்கப்பட்டு வருகின்றன. இலவச அறுவைச் சிகிச்சைகள் மிகுந்த அளவில் நடைபெற்று வருகின்றன. பலருக்குக் கண்ணொளி வழங்கப் பட்டது. பலருக்குக் கண்ணாடிகள் வழங்கப் பெற்று வருகின்றன.

15—5—1974 வரை, மொத்தம் 141 முகாம்கள் நடைபெற்றன 66,061 பேருக்குக் கண்புரை நோய் அறுவைச் சிகிச்சை நடைபெற்றுள்ளது. 65,344 பேருக்குக் கண் பரிசோதனை செய்யப்பெற்று, அறிவுரை வழங்கப் பெற்றிருக்கிறது.

வரலாற்றில் குறிப்பான இடத்தைப் பெற்றுவிட்ட இந்தத் திட்டம் வெளி நாட்டினரின் நல்வாழ்த்துக்களைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

முதல்வர் கலைஞர் ஆற்றிவரும் இந்தச் சமுதாயப் பணிக்கு மிகுந்த ஒத்துழைப்பு நல்கி, அறுவைச் சிகிச்சை முகாம்களில் அரும்பணியாற்றி வரும் டாக்டர் ஜி. வெங்கடசாமி அவர்கள், கண்புரை நோயின் விளைவு குறித்தும், அதற்குத் தேவைப்படும் சிகிச்சை முறை குறித்தும் எழுதும் தொடர் கட்டுரை இந்த இதழில் துவக்கம் ஆகிறது.






கண்ணின்- இயல்பு நிலை        முற்றிய புரை

கண்ணினுள் இருக்கும் பளிங்கு போன்ற குவி வில்லையும் நிறம் மாறி வெண்மையாகிவிடுகிறது. அப்பொழுது வெளியில் இருந்து ஒளிக் கதிர்கள் கண்ணிற்குள் புக முடிவதில்லை. இதனால் பார்வை குறைகிறது. புரை ஏன் உண்டாகிறது, என்று பலர் கேட்கிறார்கள். இது பற்றி ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இரசாயனப் பொருளின் மாற்றமே புரைக்குக் காரணம். என்ன காரணங்களினால் இந்த இரசாயனப் பொருட்களில் மாற்றம் ஏற்படுகிறது. சூரியனின் ஒளிக் கதிர்கள் கண் வில்லையில் அதிகம் படுவதால் புரை ஏற்படுவதாகச் சிலர் கூறுகிறார்கள். உணவில் உள்ள சத்துக் குறைவினால் புரை ஏற்படுகிறது என்று சிலர் கூறுகிறார்கள். இதர நாட்டில் உள்ள மக்களுக்குப் புரை அதிகம் உண்டாகிறதென்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவில் வெப்பம் அதிகமாகி ஒளிக் கதிர்கள் அதிகமாகக் கண்ணில் படுவதால் புரை உண்டாகிறதா, உணவுக் குறைவினால் உண்டாகிறதா, வேறு ஏதாவது காரணங்களினால் உண்டாகிறதாவென்று திட்டவட்டமாகத் தெரியவில்லை.

கண்ணில் இருக்கும் லென்ஸின் நிறம் மாறுதல் சிலருக்கு அதன் மத்தியில் ஆரம்பிக்கலாம். சிலருக்குச் சுற்றுவட்டத்தில் ஆரம்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து மத்தியில் சேரலாம். மத்தியில் ஆரம்பித்தால் சிலருக்கு வெளிச்சத்தில் செல்லும்போது பார்வை குறையும். கண்ணில் இருக்கும் 'பாப்பா' வெளிச்சத்தில் சிறிதாகும். இந்தச் சிறிதான பாப்பாவின் வழியாகச் செல்லும் ஒளிக் கதிர்களை, வில்லையின் மத்தியில் இருக்கும் புரை மறைத்துக் கொண்டால் பார்வை குறையும். இவர்கள் ஒளி மங்கிய இடத்திற்குச் சென்றால் பார்வை சிறிது அதிகரிக்கும். வில்லையின் வெளிப்புறத்தில் புரை ஆரம்பித்தால் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை குறைந்து வெளிச்சத்தில் நன்றாகவும் மங்கிய ஒளியில் பார்வை குறைந்தும் இருக்கும். வில்லை முழுவதும் நிறம் மாறிப் புரையாக மாறினால் .புரை முற்றி விட்டது என்று சொல்லுகிறோம். அப்பொழுது பார்வை மிகவும் குறைந்துவிடும். ஆனாலும் இவர்களுக்கு இருட்டிலிருந்து வெளிச்சத்தைக் காட்டினால் அறிந்து கொள்ள முடியும். கண்ணின் முன்னால் விரல்களை ஆட்டினால் தெரிந்து கொள்வார்கள். ஒளிக் கதிர்களில் சில இந்தப் புரையின் வழியாக ரெட்டினாவை அடைவதால் இவ்வாறு வெளிச்சம் தெரிகிறது.

பெரும்பாலும் 50 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்கு நம் நாட்டில் புரை உண்டாகிறது. ஐரோப்பா போன்ற மேலை நாடுகளில் பெரும்பாலும் 60 வயதிற்கு மேல் புரை உண்டாகிறது. புரை உண்டாவதைத் தடுக்க முடியுமோ என்று கேட்கலாம். இப்பொழுதுள்ள விஞ்ஞான அறிவில், புரையைத் தடுக்கக் கூடிய முறைகள் தெரியவில்லை. விஞ்ஞான வளர்ச்சி இத் துறையில் முன்னேறிப் புரையைத் தடுக்கும் முறைகள் பின்னர் கண்டு பிடிக்கப்படலாம். குழந்தைகளுக்குப் புரை ஏற்படுமா? உடலின் வேறு வியாதிகளினால் கண்ணில் புரை ஏற்படுமா? என்று கேட்கிறார்கள். சிறு குழந்தைகட்கும் கண்ணில் புரை உண்டாகலாம். சிலருக்குப் பரம்பரை வியாதியாக இருக்கலாம். தாய் கருவுற்று இருக்கும் போது முதல் மூன்று மாதத்திற்குள் சிச்சிலுப்பை போன்ற வியாதிகள் உண்டானால் பிறக்கும் குழந்தைகளுக்குப் புரை உண்டாகும். சிச்சிலுப்பை காரணமாகக் கிருமிகள் கருவை அடைந்து புரையை உண்டாக்குகின்றன. கண்ணில் அடிபட்டாலும் வில்லையில் மாறுதல் ஏற்பட்டுப் புரை உண்டாகும். கண்ணில் முள் குத்துவதாலும் புரை உண்டாகும். முக்கியமாக வில்லைக்கு உணவு அளிக்கும் திரவத்தில் மாறுதல் ஏற்பட்டால் புரை ஏற்படுவதுண்டு. கண்ணிற்குள் இருக்கும் பல்வேறு வியாதிகளினால் இந்த மாதிரி புரை உண்டாவதற்கு (Complicated Catract) என்று பெயர். இது தவிர உடம்பில் உண்டாகும் சில வியாதிகளினாலும் புரை ஏற்படுவதுண்டு. நீரிழிவு ஏற்பட்டவர்களுக்கு மற்றவர்கட்கு உண்டாவதை விடக் கண்ணில் புரை அதிகமாக உண்டாகும். இரத்தத்தில் உள்ள சுண்ணாம்புச் சத்து (Calcium) அதிகமானாலும் புரை உண்டாகும்.

பார்வை குறைவது தவிரக் கண்ணில் வலியோ சிவப்போ வேறுவிதக் கோளாறுகளோ உண்டாவதில்லை. சிலருக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களிலேயே புரை ஆரம்பித்து முற்றிவிடலாம். சிலருக்குப் புரை முற்றுவதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம். இதற்கு என்னென்ன காரணங்கள் என்றும் தெரியவில்லை. உண்டான புரையை மருந்தினால் கரைக்க முடியுமா என்று கேட்கிறார்கள். இதற்காகச் சில மருந்துகள் விற்கப்பட்டாலும் நிச்சயமாக அதனால் பலன் உண்டு என்று சொல்ல முடியவில்லை. சீக்கிரம் புரை முற்றுவதற்கு ஏதாவது வழி உண்டா என்று சிலர் கேட்கிறார்கள். அவ்வாறு முற்றச் செய்வதற்கும் விஞ்ஞான முறையில் வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும்.



தமிழ்நாட்டின்

**பசுமைப் புரட்சி**

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்
1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

1966-67ல் 2100.87
1972-73ல் 5618.15



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

ஆர். கனகசபை
தலைவர்

சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

என். எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குநர்


# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்



## 1. அதிகமான ஆண் பப்பாளிச் செடிகளை தவிர்ப்பது எப்படி?

வெப்ப மண்டலத்தில் வளர்க்கப்படும் பழப் பயிர்களுள் பப்பாளி முக்கியமான ஒன்றாகும். பல்வேறு வேளாண்மைச் சூழ்நிலைகளில் இப்பயிர் நன்கு வளர்க்கப்படுகிறது. இது அதிக வருமானம் தரும் பயிர்! இதன் பழங்கள் மிக்க சத்துள்ளவை. இதில் விட்டமின்கள் 'ஏ', 'பி.1', 'சி', 'நிக்கோட்டினிக் அமிலம்', 'ரைஃபோப்ளேவின்' முதலியவைகளும், மிக முக்கியமான தாதுப்பொருட்களும் கணிசமான அளவில் உள்ளன. குறைந்த விலையும், ஆண்டு முழுவதும் கனிதரும் தன்மையும் பப்பாளியின் சிறந்த பண்புகள் ஆகும். எனவே அனைவரும் இதன் கனியை உண்டு இன்புறலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கோவை வேளாண் கல்லூரியில் 'இராஞ்சி' பப்பாளி இனத்திலிருந்து 'கோ. 1' பப்பாளி உருவாக்கப் பட்டுள்ளது. இதற்கு அனேக சிறந்த தன்மைகள் உள்ளன! இதன் பழங்களில் 'பப்பெயின்' (பப்பாளியின் பால்) துர்நாற்றம் கிடையாது. எனவே, அனைவருக்கும் இப்பழத்தை விரும்பிச் சாப்பிட ஆவல் பிறக்கும். பப்பாளியில் ஆண், பெண், செடிகள் தனித்தனியாக உள்ளன. சாதாரணமாக 50 சதவிகிதம் ஆண் மரங்கள் ஆகும். அவை பலன் தருவதில்லை. மகரந்தச் சேர்க்கைக்காக 5 முதல் 10 சதவிகிதம் ஆண் மரங்கள் போதுமானது. அதிகப்படியாகக் காணப்படும் ஆண்மரங்கள் பிரச்சினையாக உள்ளன! ஏனெனில், இவைகள் பப்பாளித் தோட்டத்தின் வருமானத்தைக் குறைக்கின்றன!

இப்பிரச்சினையைத் தீர்க்க பல்லாண்டுகளாக, பல்வேறு நாடுகளில் ஆய்வு நடைபெற்றுள்ளது. இளம் நாற்றுகளில் ஆணு, பெண்ணு என்றுஅறிந்து கொள்ள ஆராய்ச்சி செய்யப்பட்டது. நூலில் கட்டி தொங்கவிடப்பட்ட உலோகத் துண்டின் அசைவின் மூலம் பப்பாளி ஆணு, பெண்ணு என்றுஅறிந்து கொள்ளலாம் எனக் கூறப்பட்டது. விதையின் மங்கலான நிறம் அல்லது கருமையான நிறம், பழத்தினின்று விதைகள் எடுக்கப்பட்ட இடம், இளம் நாற்றின் வீரியம் முதலியன நாற்று ஆணு, பெண்ணு என்பதைக் காட்டும் எனவும் கருதப்பட்டது. ஆனல் இவையாவும் தவறு என நிரூபிக்கப்பட்டுள்ளன. செடியின் தசைகளில் உள்ள வேதிப் பொருட்களிலும், ஆண் செடிகளிலும் பெண் செடிகளிலும் வேறுபாடு உள்ளது எனவும் அறியப்பட்டுள்ளது. ஆனல் இவ்விவரத்திஞல் பயிரிடுவோருக்கு நடைமுறையில் பயன் கிடைக்கவில்லை!

குழி ஒன்றுக்கு மூன்று நாற்றுக்கள் வீதம் நடுவது சிறந்தது எனப் பரிந்துரை செய்யப்படுகிறது. ஒரு குழியில் உள்ள எல்லாச் செடிகளும் பூத்தபின் பெண்செடி ஒன்றுகூட இல்லாவிட்டால், கடைசிச் செடி ஆணுயினும் அதைத் தவிர மற்ற எல்லா ஆண் செடிகளும் அகற்றப்படுகின்றன. இம்முறையைக் கையாண்டபோதிலும், பப்பாளித் தோட்டத்தில் இறுதியாக உள்ள செடிகளில் 22.5 சதவிகிதம் ஆண் செடிகளே!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கோவை வேளாண் கல்லூரியின் தோட்டக் கலைத்துறையில் நடந்த ஆய்வில், பூ பூத்தபின் மாற்றி நட்ட பப்பாளிச் செடிகள் நூற்றுக்கு நூறு பிழைத்து வெற்றியைக் கொடுத்துள்ளன! செடியைச் சுற்றிலும் 30 முதல் 50 செ.மீ. மண்ணைத் தோண்டி வேர் அதிகம் காயமுருத வகையில் செடியை எடுக்க வேண்டும். வேரோடு சேர்ந்த மண்ணையும் சேர்த்து எடுக்கத் தேவையில்லை. செடியை எடுத்தவுடன் அதைப் புதிய இடத்திற்குக் கொண்டு சென்று அங்கே 60 செ.மீ. × 60 செ.மீ. × 60 செ.மீ. அளவுள்ள குழியில் முன்னே இருந்த மட்டத்தில் நடவேண்டும். மணல், செம்மண், தோட்டமண், நன்கு மக்கிய உரம் முதலியவற்ருல் ஆன கலவையை வேர்கள் முன் இருந்த நிலையில் இருக்குமாறு வைத்து இடைவெளியில் போட்டுக் குழிகளை நிரப்ப வேண்டும். பின், செடிக்கு நன்கு தண்ணீர் ஊற்ற



மருந்துகள் பெற வரிசையில் நிற்கும் மங்கையர்.

பொது உடல் நலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நாம் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களின் உணவு ஊட்டத் தகுதியும் தகுந்த நிலையில் காணப்படுகின்றது. தற்பொழுது இச் சங்கத்தினர் தொற்று நோய்த் தடுப்பு, பற்றுக்குறையால் உண்டாகும் நோய்களைக் கண்டறிதல், தொற்று நோய்களைக் கண்டு பிடித்தல் போன்ற நோய்த் தடுப்பு முறைகளில் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றனர். இத்தகைய மருத்துவ வசதிகளை இந்நகருக்கு அண்மையில் அமைந்துள்ள பகுதிகளுக்கும் விரிவுபடுத்துகின்ற திட்டமும் உள்ளது.

இப் பகுதியில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்படவிருக்கிறது. இக்கட்டடத்தில் அனைத்து வசதிகளும் நிறைந்த மருத்துவமனை ஒன்று அமைக்கப் பெறும். இம்மருத்துவமனையில் நோயாளிகள் படுக்கைகளோடு அமைந்த ஆய்வுச் சாலை ஒன்றும் ஏற்படுத்தப்படும். இதில் இரத்த இயல் சார்ந்த (Hemotological) மற்றும் உயிர்வேதியல் (Bio-Chemical) சார்ந்தவைகளை ஆய்வு செய்யும் வகையில் நுண்ணோக்காடி (Microscope) கனல்மானி (Calor iemeter) கோல்டர் மானி (Colter meter) போன்ற நவீன கருவிகள் அனைத்தும் இடம் பெறும். எக்ஸ்-கதிர்கள் (X-ray) பகுதி ஒன்றும் சிறந்த முறையில் இயங்கும்.

குடும்பநலத் திட்டத்தைப் பரப்பிடும் வகையில் இப்பகுதியிலுள்ள மகளிர்களிடம் இத்திட்டம் பற்றிப் பிரச்சாரம் செய்திடத் தகுந்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கெனச் சென்னை கல்யாணி மருத்துவமனை மருத்துவர்கள் வாரத்தில் மூன்றுநாட்கள் இப்பகுதிக்கு நேரில் வந்து பல ஆலோசனைகள் நல்கி வருகின்றனர். உபயோகிக்க விரும்புகின்ற-ஒப்புதல் தெரிவிக்கின்ற மகளிர்களுக்குக் கருத்தடை மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

உடல் தளர்வுற்ற—உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்கென—ஊன்றுகோல்கள் மற்றும் தேவையுள்ள துணைக் கருவிகள் கொண்டியங்கும் 'மையம்' ஒன்றினை இச் சங்கத்தினுடைய ஊனமுற்ற சிறுவர் குழுவின் (Crippled Children Committee) மேற்பார்வையில் அமைத்திடத் திட்டம் ஒன்றும் உள்ளது.



மருத்துவ ஆலோசனையில் சுழற்சங்கத்தார்.

இங்குள்ள சிறுவர்களை நல்ல முறையில் பாதுகாத்திடவும், அவர்களுக்கு ஊட்டச் சத்து உள்ள உணவுகளை வழங்கிடவும், கல்வியறிவைப் புகட்டிடவும் சமூக நலந் துறையின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் 'பகல் நேரக் குழந்தைகள் காப்பகம்' ஒன்றும் இயங்கி வருகிறது. இக் காப்பகத்தில் சுமார் 40 சிறுவர்கள் வரை பயில்கின்றனர். குழந்தைகளைச் சிறந்த முறையில் கவனித்து—கல்விப் பயிற்சி அளிப்பதற்கென ஓர் ஆசிரியையை சமூக நலத் துறை நியமனம் செய்து உள்ளது. ஊட்டச் சத்து நிறைந்த உணவைப் பகல் உணவாக இத் துறையே வழங்கிவருகிறது.



பகல் நேரக் காப்பகத்தில் குழந்தைகள்.

இப் பகுதிவாழ் மக்களுக்கு வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இச் செயல் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசின் சமூக நலத் துறையின் சீரிய ஒத்துழைப்புடன் ஒரு தையல் பயிற்சி நிலையம் அமைக்கப்பெற்று, மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சுழற் சங்கம் ஒரு தையல் இயந்திரத்தையும், சமூக நலத் துறை ஓர் இயந்திரத்தையும் இலவசமாக வழங்கியுள்ளது.



தையல் தொழிலில் தையலர்.

படித்த—வேலை வாய்ப்பில்லாத—இப்பகுதிவாழ் இளைஞர்களுக்குப் பயன்படுகின்ற வகையில் தட்டச்சுப் பயிற்சி நிலையம் ஒன்று விரைவில் ஏற்படுத்தப்பட உள்ளது. இச் சங்க உறுப்பினர்களின் நிறுவனங்களில் அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன் சில இளைஞர்கள் ஏற்கெனவே அச்சுத் தொழில், மின்பிரிப் பூச்சுமானம் (Electro Plating) போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் அரிசன நலத் திட்டத்தின் கீழ் இப் பகுதியிலுள்ள குடிசைகளுக்குப் பதிலாகக் கட்டடங்களை அமைத்துத் தருவதற்கு அரசாங்கத்துடன் இச்சங்கத்தினர் ஆய்வுரைகள் நடத்தி வருகின்றனர். இரண்டு மாடிக் கட்டடம் கட்டுவதற்கும், மற்றும் ஏனைய செயல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் ஒரு இலட்சம் வரை இச்சங்கத்தினர் தங்களுடைய உறுப்பினர்களிடமிருந்தும் மற்றும் நல்லெண்ணம் படைத்தோர், அயல்நாட்டுச் சுழற் சங்கங்களிலிருந்தும் போன்றவைகளிட நன்கொடையாகப் பெற்றுள்ளனர்.

இவ்வாறு சமுதாய நலப் பணிகளில் தன்னை—ஈடுபடுத்திக் கொண்டு, 'மக்கள் பணியே மகேசன் பணி' என்பதற்கேற்ற வகையில் பாடுபட்டு வரும் இச் சங்கத்தினை மனமாரப் பாராட்ட வேண்டும்.

—ஆயிரம்

வேண்டும். தேவைப்பட்ட மண் கலவையைப் போட்டுச் செடியின் அடித்தளத்தின் மட்டத்தைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். செடி தண்ணீரையும், சத்துப் பொருட்களையும் எடுத்துக் கொள்வது தற்காலிகமாகத் தடைபடுவதால் மேல் மூன்று இலைகள் தவிர நன்கு வளர்ந்த எல்லா இலைகளையும் இலைக் காம்பை மாத்திரம் விட்டுவிட்டு அகற்றி விட வேண்டும். மாலை நேரங்களில் செடிகளை மாற்றி நடுதல் நல்லது. அதிர்ச்சியைத் தடுப்பதற்காக செடிகளை மாற்றி நடுவதற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னரே இலைப் பரப்பைக் குறைத்துவிடலாம்.

செடிகள் தேற சுமார் ஒரு மாதமாகும். இலைக்காம்புகளும், பூக்களும் காய்ந்துஉதிரும். அதன்பின் செடிகள் சாதாரணமாக வளர்ந்து காய்க்கும். ஆண்செடிகளும், பெண் செடிகளும் வெற்றிகரமாக மாற்றி நடப்பட்டுள்ளன. ஒரு செடியை மாற்றி நட ஆகும் வேலைக்குக் கூலி 50 பைசாக்களே ஆகின்றன.

ஆண் செடிகளின் விகிதத்தைச் சரிப்படுத்தி அவற்றை நிலத்தில் தக்க இடங்களில் இருக்குமாறு அமைக்க இவ்வாறு பப்பாளிச் செடிகளை மாற்றி நடுதல் உதவுகிறது. இம்முறையின் மூலம் நோயின் காரணமாக உண்டாகும் வெற்றிடங்களையும் எளிதில் நிரப்பி விடலாம். நன்கு காய்க்காத செடிகளை நீக்கி, நல்ல பலன்தரும் செடிகளை நடவும் வாய்ப்புக் கிடைக்கிறது.

செடிகளை இடம் மாற்றிநட அதைச் செய்பவர்க்கு சிறந்த பயிற்சியோ, செடிகளுக்குச் சிகிச்சையோ தேவை இல்லை. இம்முறை மிக இலகுவானது! ஆண் செடிகளை மாற்றி நடுவதன் மூலம் சுமார் 80 முதல் 90 சதவிகிதம் அதிக வருமானம் கிடைக்கிறது. நல்ல பலனைக் கொடுக்கும் செடிகளை மாற்றி நட்டால்இன்னும் அதிக லாபம் பெறலாம்!

## 2. வாழையைத் தாக்கும் கண்ணாடிப் பூச்சி!

வாழை, தமிழ்நாட்டில் பரவலாகவும், குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் அதிக அளவிலும் பயிரிடப்படுகிறது. வாழையைப் பலவகையான பூச்சி இனங்கள் தாக்கிச் சேதம்விளைவிக்கின்றன. அவற்றுள் கிழங்கைத் தாக்கும் கூன்வண்டும் (காஸ்மோபொலைடஸ் கார்டிடஸ்), அசுவினியும் (பென்ட்லோனியா நைக்ரோ நெர்வோசா), மலைச்சாரல்களில் பயிராகும் மலைவாழையைத் தாக்குகின்றன. இலைகளைத் தின்று அழிக்கும் பச்சை நிறப் புழுக்களும் (ப்ரோடீனியா லிட்டூரா) இருநிற கம்பளிப் பூச்சிகளும் (பெரிகாலியா ரிசினி) ஆங்காங்கே பரவலாகச் சிறு அளவில் காணப்படுகின்றன. திருச்சி மாவட்டத்தில் சாதாரணமாக வாழையை அதிக அளவில் தாக்குவது கண்ணாடிப் பூச்சிகள் (ஸ்டெபனைட்டிஸ் டிப்பிக்கா) எனப்படும் ஒருவகை சாற்றை உறிஞ்சும் பூச்சிகளாகும். இவற்றின் இறக்கைகள் மெல்லியதாகவும் நிறமற்று, வலைபோன்ற கோடுகளை உடையதாயும் இருப்பதால் இவற்றைக் 'கண்ணாடிப் பூச்சிகள்' எனவும், 'வலைப் பூச்சிகள்' எனவும் அழைக்கின்றனர்.

இவை வாழை இலைகளின் அடிப்பாகத்தில் தங்கித் தம் முட்டைகளை இலையில் செருகி இடுகின்றன. இம் முட்டைகளில் இருந்து சுமார் 12 நாட்களில் குஞ்சுகள் வெளி படுகின்றன. இவை வெளிர் மஞ்சள் நிறத்திலும், வாழையின் சாற்றை உண்டபின் வெளிர்பச்சையும் மஞ்சளும் கலந்த நிறத்திலும், உடலில் முட்கள் நிறைந்தும் காணப் படும். இவை சாதாரணமாகக் கூட்டமாக இலைகளின் அடிப் பாகத்தில் தங்கி, சாற்றை உறிஞ்சிக் குடித்து வளரும். குஞ்சுகள் ஐந்து இளைநிலைப் பருவத்தை உடையன. பின்பு இவை முதிர்ந்து இறக்கை உடைய தாய்ப்பூச்சிகளாகச் சுமார் 15 நாட்களில் மாறுகின் றன. கண்ணாடிப்பூச்சிகளும் அவற்றின் குஞ்சுகளும் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் இலைகளில் வெண்ணிறப் புள்ளி இப் கள் உண்டாகின்றன. புள்ளிகள் அதிகம் ஆகும்போது அவை இலைமுழுவதும் வெளுத் தத் தோற்றத்தை உண்டாக்கு கின்றன. இப்பூச்சிகளால் தாக் கப்பட்ட வாழைத் தோட்டங் இலைகள் கள் வெளுத்தும், காய்ந்தும் குறுகிய காலத்தில் காணப்படும். இதனால்வாழைக் குலைகள் சிறுத்துப் போவதற்கு ஏதுவாகும்!



பப்பாளிச் செடி வேருடன் பிடுங்கி நடப்படுகிறது.



இப்பூச்சிகளைத் தடுக்க, இவை காணப்படும் தோட்டங்களில், டைமிக்ரான் 0.1 சதவிகித மருந்தை (100 மில்லி மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலக்கவும்), மாதம் ஒரு முறை வீதம்—மருந்துக்கலவை இலைகளின் அடிப்பாகத்தில் படும்படி—தெளிக்கவேண்டும்.

## 3. திராட்சையைத் தாக்கும் பேன்!

திராட்சையில் காணப்படும் பூச்சிகளில் 'புள்ளிவண்டு', 'இலைப்பேன்', 'இலைசுருட்டுப் புழு' போன்றவைகள் இலைகளைப் பாதிக்கின்றன. ஆனால் இவைகளை விட திராட்சைக் குலைகளைத் தாக்கும் 'திரிப்ஸ்' எனும் பேன் இப்பொழுது விரைவாகப் பரவி வருகின்றது. குறிப்பாகக் கோவை, மதுரை மாவட்டங்களில் இப்பேனின் தாக்குதல் அதிக அளவில் காணப்படுகிறது. 'திரிப்ஸ்' இனத்தைச் சார்ந்த 'ஸ்கிர்டோதிரிப்ஸ் டார்சாலிஸ்' என்ற இச்சிறிய பேன்கள் காய்களின் மெல்லிய தோலினைச் சுரண்டி அதனின்று கசியும் சாற்றினை உட்கொள்ளுகின்றன. இதனால் காய்களின் மேல்தோலில், தேமல்போன்ற படைகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. நாளடைவில் இவைகள் சொறிபிடித்தது போல் வறண்டு கடினமாகி விடுகின்றன!

இப்பேன்களின் மிக்க கடுமையான தாக்குதலினால் காய்கள் வளர்ச்சியுறாமல் வெடித்து விடுகின்றன. இதனால் கொடியின் தூய்மை பாதிக்கப்பட்டுப் பற்பல பூஞ்சாள நோய்கள் பரவிட ஏதுவாகிறது. பாதிக்கப்பட்ட பழக்குலைகளின் விற்பனை மதிப்பு மிகவும் குறைந்துவிடுகின்றது. இவைகள் மிகவும் உவர்ப்பான சாற்றினை -அதுவும் குறைந்த அளவில்தான்- கொண்டிருக்கும். இக்காரணங்களால் திராட்சையில் இலாபம் வெகுவாகக் குறைகிறது.

இப்பூச்சியினால் குறிப்பாகப் 'பன்னீர்', 'அனாப்-இ-சாகி', 'காந்தாரி' 'பெங்களூர் நீலம்' போன்ற உயர்விளைச்சல் இரகங்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றன. 'அனாப்-இ-சாகி' இனத்தில் இப்பேனின் தாக்குதலால் 70 முதல் 80 விழுக்காடு வரையில் இழப்பு ஏற்படலாம்!



இப்பேனைக் கட்டுப்படுத்தக் கோயமுத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் பிரிவில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ் வாராய்ச்சிகளில் பல்வேறு பூச்சி கொல்லிகள் சோதனை செய்யப்பட்டன. கவாத்து செய்த நாளிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின்னர் தொடங்கி 7 முதல் 10 நாட்கள் இடைவெளிவிட்டு, 5 அல்லது 6 முறை 'கார்பரில்' 0.1 சதவிகிதம் அல்லது 'மாலத்தியான்' 0.1 சதவிகிதம் அல்லது 'பென்தியான்' 0.1. சதவிகிதம் தெளிப்பது இப்பேனின் தாக்குதலை வெகுவாகக் கட்டுப்படுத்திப் பழங்களின் தரத்தைப் பாதுகாக்க வல்லதென அறியப்பட்டுள்ளது.

### மருந்து தயாரிக்கும் முறை

1. 'பென்தியான்' (லெபாசிட் 1000 இ.சி.)—1 லிட்டர் நீருக்கு 1 மில்லி லிட்டர் மருந்து.

2. 'மாலத்தியான்' 50இ. சி.- 1 லிட்டர் நீருக்கு 2 மில்லி லிட்டர் மருந்து.

3. 'கார்பரில்' (செவின் 50 நீரில் கரையும் தூள்)—1 லிட்டர் நீருக்கு 2 கிராம் மருந்து.

ஒரு கொடிக்கு அதன் வளர்ச்சிக்கு ஏற்றவாறு 4 முதல் 6 லிட்டர் மருந்துக் கலவையைத் தெளிக்க வேண்டும்.

## 4. 'பிளானோபிக்ஸ்', மிளகாய் மகசூலைப் பெருக்கிடும்!

மிளகாய் மிகுந்த வருவாய் தரக்கூடிய பணப் பயிராகும்! மிளகாய்ச் செடிகளில் பூமொட்டுக்களும், பூக்களும், பிஞ்சுகளும் மிகுதியாக உதிர்ந்து விடுவது இயற்கையாகும். இதனால் மிகவும் விளைவு குறைகின்றது. கோவில்பட்டிச் சூழ்நிலையில் 11 சத வீதம் பூக்கள்தான் காயாக மாறுகின்றன என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். பல்வேறு காரணங்களால் இந்த பூ உதிர்தல் ஏற்படுகின்றது. பெருமழையினாலும், பூச்சிகள் நோய்கள் தாக்குவதினாலும் பூக்கள் உதிர்வது ஒரு சாதாரண இயற்கை நிகழ்ச்சியானாலும், விளை இயல் சார்ந்த மாற்றங்களால் (Physiological Changes) உதிர்வதுதான் பெரும்பகுதியாகும். பூச்சி நோய்களால் ஏற்படும் பூ உதிர்தலைப் பூச்சிக்கொல்லி, பூசணக்கொல்லி மூலம் தடுக்கும் முறையாவரும் அறிந்ததாகும். ஆகவே, விளை இயல் சார்ந்த மாற்றங்களினால் பயிருக்கு ஏற்படும் பூ இழப்பினைத் தடுக்கக் கோவில்பட்டியில் செயல்படும் அகில இந்திய ஒருங்கிணைந்த காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 'ஆல்பா நாஃப்தலின் அசிடிக் அமிலம் (Alpha naphthalene Acitic Acid) என்ற பயிர் ஊக்கியைத் (Hormone) தெளிப்பதால் ஓரளவு பூ உதிர்தலைக் குறைக்க முடியும். 'ஆல்பா நாஃப்தலின் அசிடிக் அமிலம்' என்ற பயிர் ஊக்கி 'பிளேனோபிக்ஸ்' என்ற விற்பனைப் பெயரில் விற்பனையாகின்றது. இதுபற்றி கோவில்பட்டி மண்டல ஆராய்ச்சிப் பண்ணையில், மிளகாய் ஆய்வுத் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவு, கீழ்க்கண்டவாறு உள்ளது.

மிளகாய் நாற்று நிட்ட 65-ஆம் நாள் 0.5 மில்லி லிட்டர் 'பிளேனோபிக்ஸ்' மருந்தை 4.5 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து தெளிக்கப்பட்டது. இரண்டாவது முறையாக ஒரு மில்லி லிட்டர் 'பிளேனோபிக்ஸ்' மருந்தை — 4.5 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து 95-வது நாள் தெளிக்கப்பட்டது. இவ்வாறு 'பிளேனோபிக்ஸ்' தெளித்த பயிருக்கும், தெளிக்காத பயிருக்கும் உள்ள மகசூல் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒப்பிடப்பட்டது. பரிசோதனையின் முடிவு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| விவரம் | எக்டேருக்கு வற்றல் மகசூல் (கிலோ) | கூடுதல் மகசூல் வற்றல் (கிலோ) | கூடுதல் விளைச்சலினால் கிடைத்த வருமானம் (ரூபாய்) | 'பிளேனோபிக்ஸ்' தெளிக்க ஆனமொத்த செலவு (ரூபாய்) | நிகர லாபம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 'பிளேனோபிக்ஸ்' தெளித்தது. | 1,531 | 431 | 1,080 | 60 | 1,020 |
| 'பிளேனோபிக்ஸ்' தெளிக்காதது. | 1,100 | ... | ... | ... | ... |

மேலுள்ள அட்டவணையிலிருந்து இரண்டுமுறை 'பிளேனோபிக்ஸ்' தெளிப்பதனால் எக்டேருக்கு ரூபாய் 1,020 நிகர லாபம் கிடைக்கும் எனத் தெளிவாகின்றது. ஆகவே, மிளகாய் பயிருக்கு தக்க பருவத்தில் 'பிளேனோபிக்ஸ்' தெளித்து லாபம் பெறுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

**'பிளேனோபிக்ஸ்' தெளிக்கும் போது கவனிக்க வேண்டிய சில விதி முறைகள் :**

1. தூய்மையான குடிநீர் கொண்டு கலவையை தயாரிக்கவும். காரத்தன்மை அல்லது உப்புகரிக்கும் தன்மை உள்ள நீரை உபயோகித்தால் தக்க பலன் கிடைக்காது. தேங்கிக் கிடக்கும் குளத்து நீர் அல்லது மழைநீர் ஏற்றது.

2. 'பிளேனோபிக்ஸ்' கலவையைக் கைத்தெளிப்பான் மூலமே தெளிக்க வேண்டும். பரிந்துரைத்த கலவைத் திறனை குறைக்கவோ, கூட்டவோ கூடாது.

3. கலவையைச் செடியின் மேல் பரப்பிலும், கீழ்ப்பரப்பிலும்படும்படி நன்றாகக் குளிரத் தெளிக்க வேண்டும்.

4. மேலே கூறப்பட்ட அளவுகளில், குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே கலந்து தெளிக்க வேண்டும். (முதல் தடவை 65-வது நாள் 0.5 மில்லி லிட்டருக்கு 4.5 லிட்டர் தண்ணீர் வீதமும், இரண்டாம் முறை 95-வது நாள் 1 மில்லி லிட்டருக்கு 4.5 லிட்டர் தண்ணீர் வீதமும் தெளிக்க வேண்டும்.)

'பிளேனோபிக்ஸ்' என்னும் இப்பயிர் ஊக்கி கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும்.

''மே அன் பேக்கர் இந்தியா (பி) லிட்.,
12/ஏ, மார்செல்ஸ் ரோடு,
எழும்பூர், சென்னை.

## 5. பூச்சி மருந்து, களைக் கொல்லிகளினால் தாக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி அளிப்பது எப்படி?

மண்ணை நம்பி உயிர்வாழும் உழவர் பெருமக்கள் தங்களது பயிர்களைப் பூச்சி, பூஞ்சாளம், களைகளிலிருந்து காப்பாற்ற முறையான காப்புமுறைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' தெள்ளத் தெளிவான உண்மை! பூச்சி, பூஞ்சாள, களைக் கொல்லிகள் நச்சுத்தன்மை கொண்டுள்ளது மட்டும் அல்லாமல் உயிருக்கு ஊறு விளைவிக்க வல்லது! பூச்சி, களைகளை ஒழிக்க கையாளும்போது அதிக கவனத்தோடு இருக்கவேண்டும் என்று விரிவாக்கப் பணியாளர்கள் உழவர்களுக்கு எடுத்தியம்பி வருகின்றார்கள். ஆயினும் நம்மை அறியாமலேயே சில தவறுகள் நேர்ந்து விடுகின்றன. அப்படித் தவறுகள் நேரிடும் பொழுது ஊறு விளைந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சைகள் செய்வது அவசியம். 'அம்முதலுதவியை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்? செய்ய வேண்டும்?' என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினால் கீழ்கண்ட அறிவுரைகளை வழங்கியுள்ளோம்.

**(1) ஒருவர் குடித்துவிட்டால் :—**

பூச்சி, பூஞ்சாள, களை கொல்லி மருந்துகளை ஒருவர் குடித்துவிட்டால் முதலில் முட்டையின் வெள்ளைக் கருவினைக்



குடிக்கச் செய்ய வேண்டும். பின் இரண்டு தேக்கரண்டி உப்பினை எடுத்து, இளஞ்சூடான அரை 'டம்ப்ளர்' தண்ணீரில் கலந்து அம்மனிதனைக் குடிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு உப்பு நீரை அந்த நபர் வாந்தி எடுக்கும்வரை - வாந்தி தண்ணீர் சுத்தநீராக வரும்வரை- கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். பின்பு முட்டையின் வெள்ளைக் கருவினைப் பாலில் கலந்து குடிக்கச் செய்ய வேண்டும்.

**(2) கண்ணில் விழுந்திருந்தால்:—**

கண்களை தூய்மையான தண்ணீர் கொண்டு பத்து நிமிடங்களுக்கு நன்றாகக்கழுவவும்

**(3) சுவாசித்திருந்தால்:—**

நல்ல காற்றோட்டமுள்ள அறையில் படுக்க வைத்து, அறையில் நன்றாகக் காற்று வரும்படி ஜன்னல்களைத் திறந்து விடவும். தேவைப்பட்டால் நோயாளியைக் கதகதப்பாக வைக்கச் சால்வை கொண்டு மூடவும்.

**(4) உடம்பில் விழுந்திருந்தால்:—**

உடம்பில் மருந்து பட்ட பாகங்களை நன்றாகச் சோப்புப் போட்டு நிறைய நீர் விட்டுக் கழுவவும்.

ஆக மேற்கூறிய முதலுதவியை மேற்கொண்ட பின், விரைவில் மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெற்று மருத்துவ முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

**தொகுப்பு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.**



# தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி

தமிழ்நாடு உழவர் பெருமக்களுக்கு முக்கிய துணைத் தொழிலாக இருந்து வருவது பால் பண்ணைத் தொழிலாகும். பால் உற்பத்தி மனித உணவுத் தேவையை நிறைவு செய்வதோடல்லாமல் ஏழை மக்கள்-குறிப்பாகக் கிராமப்புறத்து மக்கள் பால் உற்பத்தித் தொழிலை மையமாக வைத்து வாழ்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கறவை மாட்டிலிருந்து கிடைக்கும் பாலின் அளவும் ஒவ்வொரு நபருக்குக் கிடைக்கும் பாலின் அளவும் இன்னும் தன்னிறைவு எய்தவில்லை. ஒரு மனிதனின் சீரான உணவுக்கு ஒரு நாளைக்கு 300 கிராம் பால் தேவையெனக் கருதப்படுகிறது. அனைத்திந்திய அளவில் ஒருவருக்குக் கிடைக்கும் பாலின் சராசரி அளவு 130 கிராம். தமிழகத்தில் கிடைக்கும் பாலின் அளவு சராசரியாகச் சுமார் 63 கிராம் தான். எனவேதான் பால் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சத்துணவுத் தேவையை நிறைவு செய்யவும் இன்றைக்கு இத்துறையின் வாயிலாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுகின்றன.

கால்நடைகளின் பால் உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவை குறைந்திருப்பதும், நகர்ப் புறங்களில் நம்பகமான முறையில் பாலைப் பதப்படுத்தல், விற்பனை முறை இல்லாமையும் பால் பற்றாக்குறைக்கு முக்கிய காரணங்களாகும். ''பசுமைப் புரட்சி'' ஏற்படப் பழங்கால உழவு முறைகளை மாற்றிப் புதுமையான வேளாண்மை முறைகளை மேற்கொண்டதுபோல் பால் பண்ணைத் தொழிலில் ''வெண்மைப் புரட்சியை'' ஏற்படுத்த அறிவியல் முறைகளில் கால்நடை இனவளர்ச்சி, பால் உற்பத்தி, சேகரித்துப் பதப்படுத்துதல், விற்பனை முறை ஆகியவற்றின் மூலமாகத்தான் நாம் சாதிக்க முடியும்.

உலக நாடுகளிலிருந்து ஏடு எடுக்கப்பட்ட பால் பவுடர் தூய வெண்ணெய் ஆகியவைகளைப் பெறுவதில் தற்போது மிகுந்த கடினமான நிலை ஏற்பட்டுள்ளதால் நம் நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் தேவை முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, இம்மாநிலத்தில் கால்நடை சீர் வளத்தைப் பெருக்கிச் செம்மைப் படுத்துவதில் இத்துறை மிக முக்கியமான பணி ஆற்ற வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில்தான் தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சித் துறையும் தமிழ் நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகமும், நல்ல, தூய, தரமான பால், மற்றும் பால் பொருள்கள் இவற்றைப் பொது மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்யத் தங்களது செலவு வரம்புக்கு உட்பட்டுத் திட்டப் பணிகளையும் திட்டங்களையும் வகுத்துள்ளன.

**ஐந்தாம் திட்டத்தில் பாற் பண்ணைத் திட்டம்**

பாற்பண்ணைத் திட்டங்களுக்காக ஐந்தாம் திட்டத்தில் தமிழ்நாடு ரூ. 484.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யலாம் என உத்தேசித்ததற்கு மாறாகத் திட்ட ஆணைக்குழுவின் பணிக்குழு இத்திட்டத்திற்கு ரூ. 385.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளது. எனினும், பால் வளப் பெருக்குத் திட்டத்தின் எஞ்சிய பணித் திட்டங்களுக்கான ஒதுக்கீடாகிய ரூ. 485 இலட்சத்தைத் தவிர இந்தியப் பாற்பண்ணைக் கழகம், பால் வளப் பெருக்குத் திட்டத்தின் கீழ், ஐந்தாவது திட்டக் காலத்தில் கூடுதலாக ரூ. 500.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யக்கூடும்.

ஐந்தாவது திட்டத்தின்கீழ் தற்காலிகமாகத் திட்டமிடப் பட்டுள்ள புதிய திட்டங்கள்:

1. தமிழ்நாட்டில் தற்பொழுது பாலைத் தூய்மைப் படுத்தும் இயந்திர அமைப்புகள் இல்லாத இரண்டு மாவட்டத் தலைமையிடங்களாகிய சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நாள் ஒன்றுக்கு 10,000 முதல் 20,000 லிட்டர் வரை பால் பதப்படுத்தும் திறனளவு கொண்ட இயந்திரங்களை நிறுவுதல். இவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 30·00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. ரூ. 70.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கோடைக்கானலில், இந்திய-நியூசிலாந்து ஜெர்ஸி பண்ணை ”ஒன்றை நிறுவுதல். இது இப்போது இந்திய அரசின் ஆய்வில் உள்ளது.

3. ஒவ்வொன்றும் 5,000 லிட்டர் திறனளவுள்ள பாலைக் குளிர வைக்கும் மேலும் எட்டு நிலையங்களை அமைத்தல், இதற்கான தற்காலிக நிதி ஒதுக்கீடு, ரூ. 40.00 இலட்சம்.

4. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் குளிரூட்டும் இயந்திரங்கள் போன்ற தொழில் நுட்பக் கருவிகள் முதலியவற்றை நிறுவிப் பால் உற்பத்தியைப் பெருக்குதல். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 100.00 இலட்சம்.

5. ரூ. 200.000 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மத்திய அரசுத் துறையின்கீழ் குழந்தை பால் பவுடர் தொழிற்சாலையொன்றை ஈரோட்டில் அமைப்பது பற்றி மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியைப் பெருக்குதல்**

திட்டங்களுக்குப் பால் வழங்குகின்ற பால் உற்பத்தியாளர்களுக்குப் பல்வேறு வகையான தொழில் நுட்பச் சாதனங்கள், பொருட்கள் முதலியவற்றுக்கு வகை செய்து கொடுப்பதன் மூலம் இம்மாநிலத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கப் பால் பண்ணை வளர்ச்சித் துறையும், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகமும் முனைந்து செயல்படுகின்றன. இதில் கீழ்க்கண்டவை அடங்கும்:—

1. கறவை மாடுகளின் மேம்பாட்டுக்குக் கடன், பால் பண்ணைச் சாதனங்கள், வண்டிகள், குளிரூட்டும் இயந்திரங்கள் முதலியவை வாங்குவதற்கான கடன், கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள், சங்கங்கள் இவற்றின் பங்கு மூலதனத்தில் பங்கு கொள்ளுதல், தீவனப் பண்ணைகள், பால் வற்றிப்போன மாட்டுப்பண்ணைகள் ஆகியவை ஏற்படுத்துவதற்கான உதவித் தொகை.

2. கொள்முதல் விலையையும் பால் குறைவாகக் கிடைக்கும் காலங்களில் வழங்கப்படும் ஊக்கத் தொகையையும் அதிகரித்தல்.

கால்நடைகளைப் பராமரிப்பதற்கான செலவு அதிகரித்துவிட்டதால், 16-4-1973-லிருந்து பாலின் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டது. இதனால் உழவர்களால் வழங்கப்படும் பாலில் அடங்கியுள்ள கொழுப்புச் சத்துக்கள் கொழுப்பற்ற தரமான சத்துக்கள் (S—N—F) ஆகியவற்றைப் பொறுத்து லிட்டர் ஒன்றுக்கு 10 காசு முதல் 15 காசு வரை கூடுதலாக அவர்களுக்கு விலை கிடைக்கிறது.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு 1—8—73 முதல் 30-11-1973 வரை லிட்டர் ஒன்றுக்கு 10 காசு முதல் 15 காசு வரை குறைவான பால் உற்பத்திக் கால ஊக்கத் தொகையாகக் கொடுக்கப்பட்டது.

அனைத்திந்திய கைவினைப் பொருள் கழகம், ஒரு மாபெரும் திட்டத்தை உருவாக்கி வருகிறது. ஐந்தாவது திட்டக் காலத்தில், ஏறக்குறைய 500 கோடி ரூபாய் மதிப்புள்ள கைவினைப் பொருள்களை உருவாக்க வேண்டும் என்றும், இதில் 250 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்றும் முடிவு செய்து, அதற்குரிய பணியில் இறங்கியுள்ளது.

பால்வளப் பெருக்குத் திட்டத்தின் கீழ் தொழில் நுட்பச் சாதனங்கள் வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குதல்.

பால் வளப் பெருக்குத் திட்டத்தின் 7-வது செயல் திட்டத்தின்கீழ் உத்தேசித்துள்ள இத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 293.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக்கழகம், ஐந்து ஆண்டு கால அளவில் மொத்தம் ரூ. 292.15 இலட்சம் செலவாகக் கூடிய திட்டங்களை வகுத்து இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பியுள்ளது. கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியங்களை ஏற்படுத்துவதன் மூலமாகவும் அல்லது சென்னை, வேலூர், ஈரோடு, உதகை ஆகிய இடங்களில் உள்ள பால் வழங்கு ஒன்றியங்களைப் புதுப்பிப்பதன் மூலமாகவும், பால் உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னை, வேலூர், ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள ஒன்றியங்கள் ஒவ்வொன்றுடனும் தனித்தியங்கவல்ல 200 சீரமைக்கப்பட்ட தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்படும். உதகமண்டலத்தில் உள்ள பால் வழங்கு ஒன்றியத்தின்கீழ் பால் கூட்டுறவுச் சங்கங்கள் 100 அமைக்கப்படும்.

ஐந்து ஆண்டுக்கால முடிவில் சென்னை, வேலூர், ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியங்கள் ஒவ்வொன்றும், நாள் ஒன்றுக்கு 1.00 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யக்கூடிய நிலையிலும், உதகமண்டலம் பால் வழங்கு ஒன்றியம் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யக்கூடிய நிலையிலும் இருக்குமாறு இத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனால் பால் வளப் பெருக்குத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பால் பொடியும் தூய வெண்ணெய்யும் நிறுத்தப்படும் பொழுது, பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், திட்டமிட்டவாறு சென்னை மாநகர மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்ய இயலும் நிலையை மாதவரம் பால் பண்ணை அடையும். இரண்டாவது பால் பண்ணைக்கும் (இது அம்பத்தூரில் அமைக்கப்பட்டு வருகிறது) தொடர்ந்து பால் கிடைக்கும்.

இத்திட்டங்கள் கால்நடைகள் முழுவதற்கும் வகை செய்வதுடன், செய்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல், வலம் வரும் வண்டிகளில் கால் நடைகட்கு மருத்துவ உதவியளித்தல், கட்டடங்கள் கட்டுதல், மாட்டுத் தொழுவங்கள் கட்டுதல், இன்றியமையாப் பணியாளர்களுக்குப் புதுக்குடியிருப்புகள் கட்டுதல், பாற்பண்ணை இயந்திரங்கள் முதலியவையும் மரச்சாமான்களும் வாங்குதல், கால்நடைத் தீவனப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கான உதவித் தொகைகளும் கன்றுகளுக்கு உதவித் தொகைகளும் வழங்குதல் போன்ற திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதும் இதில் அடங்கும்.

இந்த ஒன்றியங்களினால் கையாளப்படும் ஒவ்வொரு லிட்டர் பாலுக்கும் 5 காசு வீதம் முதல் ஐந்தாண்டுக் காலத்திற்கு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் துண்டு விழும் தொகையை ஈடு செய்தும், ஐந்தாண்டுக் கால இறுதியில் இச் சங்கங்கள் ஆதாயமோ, விரயமோ இல்லாத நிலையை அடைவதற்கெனப் போதிய நிதிகளை உருவாக்கவும், இத்திட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ளது.

**பட்டதாரிகளுக்கான பால் பண்ணைத் திட்டம்**

செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர் நீலகிரி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பால் பண்ணைகளை அமைப்பதன் மூலம் பட்டதாரிகளுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதற்காகத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் தயாரித்துள்ளது.

இந்த இடங்களில் பால் பண்ணை வளர்ச்சித் துறையோ அல்லது கழகமோ, பாலை வாங்கிச் சேகரிக்கும் அமைப்புகளைக் கொண்டுள்ளது. ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு, பால்பண்ணைக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடனும், இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வேலை இல்லாப் பட்டதாரிகளுக்கு மாதவரம் பால் பண்ணையில் மூன்று திங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்குத் திங்கள் ஒன்றிக்கு ரூ. 150 உதவித்தொகை அளிக்கப்படும்.

பட்டதாரிகள் தங்களுடைய சொந்தப் பால் பண்ணையை அமைக்கும் வரையிலும், பயிற்சி முடிந்த பின்னரும் மேலும் ஒன்பது திங்கள் கால அளவுக்கு இந்த உதவித் தொகையான ரூ. 150 தொடர்ந்து அளிக்கப்படும்.

பயிற்சி அளிக்கப்பட்டு வரும் போது பட்டதாரிகளால் அமைக்கப்படவிருக்கிற பாற்பண்ணைகளுக்கு நிதி உதவி அளிக்க நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுடன் ஏற்பாடு செய்யப்படும்.

இந்தப் பண்ணைக்கான தகுந்த கறவை மாடுகளைத் தேர்ந்தெடுக்க, தமிழ்நாடு பாற்பண்ணைக் கழகம் பட்டதாரிகளுக்கு உதவும். இத்திட்டம் தொடர்ந்து நடைபெறத் தேவைப்படும் எல்லா உதவியையும் இது அளிக்கும்.

"தமிழரசு"
**சிறுகதைப் போட்டி 1974**
போட்டிக்குக் கதைகள்
வந்து சேரவேண்டிய
முடிவு நாள்:— 1-9-1974
*

**பால் கொள்முதலும், பகிர்ந்தளித்தலும்.**

மாதவரம் பால்பண்ணை - பால்வளப் பெருக்கத் திட்டத்தின்கீழ் விரிவுபடுத்தப்பட்ட வசதிகளுடன் மாதவரம் பாற்பண்ணையில் உற்பத்தி செய்யும் பாலின் அளவு நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர்களிலிருந்து 1,25,000 லிட்டர்களாக அதிகரித்துள்ளது.

1. 1969-70-ல் நாளொன்றுக்கு 49,456 லிட்டர் பால் மட்டுமே வழங்கி வந்த மாதவரம் பால் பண்ணை தனது தற்போதைய விற்பனையைப் பெரும்பாலும் இரட்டிப்பாக்கியுள்ளது.

2. நாளொன்றுக்குச் சென்னை மாநகரத்தில் வழங்கப்படும் பாலின் அளவு 1973-ஆண்டு நவம்பர் திங்கள் முதல் 1,00,000 லிட்டர் அளவைத் தாண்டிவிட்டது. இந்தப் பாற்பண்ணையைத் தொடங்கியது முதல் இந்தச் சாதனையை எய்தியது இதுவே முதல் தடவையாகும்.

3. பாதகமான பருவ நிலைமைகள் காரணமாய் நாட்டின் பெரிய பாற்பண்ணைகளில் பெரும்பாலானவை பால் வழங்கும் அளவைக் குறைக்க நேரிட்ட போதிலும் இங்கு பால் கிடைக்காத காலத்திலும் மாதவரம் பால் பண்ணை சென்னை மாநகரில் முழு அளவிற்குப் பால் வழங்கி வந்துள்ளது.

4. முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்தும், பால் உற்பத்தியாளருக்கு ஊக்க விலை கொடுத்தும், ஏனைய வசதிகள் அளித்தும், பால் சேகரிப்பு படிப்படியாக உயர்த்தப்பட்டது. நிறையப் பால் கிடைக்கும் நடப்புக் காலத்தில் பாலின் வரவு நாளொன்றுக்கு 80,000 லிட்டர்களாகும். 1972-73-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 45,000 லிட்டர் பால் சேகரிக்கப்பட்டு வந்ததற்கு மாறாக 1973-74-ஆம் ஆண்டில் நாளொன்றுக்குக் கிடைத்து வரும் பாலின் சராசரி அளவு 54,000 லிட்டர்களாகும். இதை ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் நிலைமை அனுகூலமாகவே உள்ளது.

5. கறந்த பாலைச் சேகரிக்க மேற்கொண்டுள்ள தற்போதைய வேகத்தில் மாதவரம் பால் பண்ணையின் முழுத் திறனளவையும் பால் வள நிறுவனம் நன்கு பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

6. 31-3-1973 நிலவரப்படி, சென்னை மாநகரில் 284 பால் வழங்கு நிலையங்கள் இருந்தன. இப்போது 301 பால் வழங்கு நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் பாலைக் குளிர்படுத்தும் வசதிகளுடன் கூடிய 10 நிலையங்கள் அடங்கும். இவற்றில் பால் வழங்கு அட்டைகளை வைத்திருக்கின்ற பால் வாங்குபவர்களின் எண்ணிக்கை 59,559 ஆக இருந்தது. இப்போது அவர்களது எண்ணிக்கை 64,798 ஆக உயர்ந்துள்ளது.

7. மொத்தமாகப் பால் வழங்கப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கையும் 134-லிருந்து 173 ஆக உயர்ந்துள்ளது.

8. பொது மக்களின் நலனிற்காக, சிறந்த வசதிகளுடன் கூடிய இயங்கும் பால் வழங்கு வண்டியொன்று 14-1-1974 பொங்கல் திருநாள் முதல் சென்னையில் செயல்பட்டு வருகிறது. வசதியான இடங்களில் குறிப்பிட்ட நேரங்களில் சுவையூட்டப்பட்ட பால், கோவா மற்றும் பால் உற்பத்திப் பொருள்கள் ஆகியவை விற்கப்பட்டு வருகின்றன.

**அம்பத்தூரிலுள்ள இரண்டாவது பாற்பண்ணை**

சென்னையில் இரண்டாவது பாற்பண்ணையொன்றை நிறுவுவதற்காக அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 9.45 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 47.25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்

பட்டுள்ளது. (மனையின் விலை நீங்கலாக) ரூ. 257.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள பாற்பண்ணை வளர்ச்சி தேசிய வாரியம், கட்டடங்கள் கட்டும் பணியையும், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை வாங்கும் பணியையும் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. தொடர்பான வேலைகள் மிக விரைந்து நடந்தேறி வருகின்றன. எல்லாவிதமான நவீன வசதிகளுடன் கூடிய புதிய பாற்பண்ணை 1974-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் செயல்படத் தொடங்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மதுரையில் பால் பவுடர் தொழிற்சாலை அமைத்தல்**

''பால் வளப் பெருக்கத் திட்டத்தின்'' கீழ் மதுரை பாற்பண்ணைத் திட்டத்தில் 10 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறனுள்ள பால் பவுடர் தொழிற்சாலையை அமைக்கும் பணி இடைவிடாமல் நடந்தேறி வருகிறது. இது இம்மாநிலத்தில் முதன் முதலாக நிறுவப்படவிருக்கும் திட்டமாகும். பாற்பண்ணை வளர்ச்சி தேசிய வாரியத்தினால் ரூ. 82,000 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் இன்னும் ஓராண்டுக் காலத்தில் தொடங்கி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

**மதுரை பாற்பண்ணைத் திட்டம்**

மதுரை பாற்பண்ணைத் திட்டத்தின் அன்றாட பால் உற்பத்தித் திறனளவு 50,000 லிட்டராகும். 1972-73-ஆம் ஆண்டில் இத்திட்டம் 28,000 லிட்டர் பால் உற்பத்தி செய்திருக்க இப்போது நாளொன்றுக்கு 40,000 லிட்டர் பால் உற்பத்தி செய்து வருகிறது. இந்தப் பாற்பண்ணை 1974-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் தனது முழு உற்பத்தித் திறனையும் எட்டிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரைப் பால் பண்ணையில் பால் வழங்கும் அளவும் 1972-73-ல் ஒரு நாளைக்கு 23,000 லிட்டரிலிருந்து தற்போது 28,000 லிட்டராக அதிகமாகி உள்ளது. அதேபோல் பால் வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கையும், 82 ஆக உயர்ந்துள்ளது. இதனுடன் 5 முக்கிய இடங்களில் பொது மக்களுக்குப் பால் விற்பனை செய்யப்படுகிறது. 31-3-1973 நிலவரப்படி 72 பால் வழங்கும் நிலையங்கள் மட்டுமே இருந்தன. 1974-75-ஆம் ஆண்டில் இந்த பால் வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை 100 வரை உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1974-75-ஆம் ஆண்டில் மதுரை மாநகரில் வழங்கப்படும் பாலின் அளவும் 45,000 லிட்டராக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.




**பால் வழங்கும் சங்கங்களும்' ஒன்றியங்களும்**

1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி நிலவரப்படி 23 கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்களும், 1966 கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களும் இருந்தன. இத்துடன் 320 பால் வழங்கும் அரிசனக் கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தன. சில பகுதிகளில் உள்ள நொடித்துச் செயலாற்றுப் போன சங்கங்களைப் படிப்படியாகத் தனித்தியங்கும் சங்கங்களாக மாற்றியமைக்கும் திட்டப் பணி நிறைவேறி வருகிறது.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்காக 1972-73-ல் அரசு கடன் தொகையாக 21.20 இலட்சம் ரூபாய் வழங்கியது. இதனால் 4,028 உறுப்பினர்கள் பயனடைந்தனர். பால் வழங்கும் அரிசனக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, 1972-73 கடனாகவும், உதவித் தொகையாகவும் 8.77 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 2,338.

கோயம்புத்தூரிலுள்ள கோவை கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கத்திற்குப் பால் வழங்கும் அளவினை அதிகரிக்க பால் வளப் பெருக்கத் திட்டத்தின்கீழ் கிடைக்கக் கூடிய நிதி ஒதுக்கத்திலிருந்து அதனுடைய உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக தமிழ்நாடு பால்வள நிறுவனம் ரூபாய் 9.00 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த நிதி உதவியில் 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் உதவித் தொகையாகவும் அளிக்கப்படுகிறது.

**மாதவரம் கால்நடைப்பண்ணை**

தற்போது மாதவரம் பால் பண்ணைக்குப் பால் வழங்கும் உரிமம் பெற்ற 50 பேர் பால் வழங்கி வருகின்றனர். பால் வற்றிப்போன 495 மாடுகளையும், கன்றுகளையும் வளர்ப்பதுடன், அவர்கள் 507 கறவை மாடுகளையும் வளர்த்து வருகின்றனர். மாதவரத்திலுள்ள அரசு பாற்பண்ணையில் இப்போது 464 கறவை மாடுகளும் 409 பால் வற்றிய மாடுகளும் கன்றுகளும் உள்ளன. பால் உரிமதாரர்களிடமிருந்தும், அரசு பாற்பண்ணையிடமிருந்தும் நாள்தோறும் இட்டத்தட்ட 3,500 லிட்டர் பால் கிடைத்து வருகிறது.

**கருணை மானியம் வழங்கல்**

1972-73-ல் பொங்கல் திருநாளுக்கு முந்திய நாளன்று வழங்கப்பட்ட கருணை மானியத்தைப்போல் இருமடங்குத் தொகை 1973-74 பால் வளத்துறை, தமிழ்நாடு பால் வள நிறுவனம் ஆகியவற்றில் பணியாற்றும் எல்லாப் பணியாளர்களுக்கும், அவர்களுடைய சம்பள வரையறை எவ்வாறு இருந்தபோதிலும், வழங்கப்பட்டது. பாற்பண்ணை நிர்வாகத்திற்கும், பாற்பண்ணைப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே நல்லுறவு நீடித்து வருகிறது.

தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சித் துறையும் பால் பண்ணை வளர்ச்சிக் கழகமும் பால் வளத்தைப் பெருக்கப் பல் வேறு திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றன. இவை வெற்றி பெற்றும் வருகின்றன.





# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**ஆர்.எம்.**




**வினா:** கடந்த நாலு வருட 'தமிழரசு' பத்திரிகையின் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியைத் தனியே புத்தகமாகப் பிரசுரித்து இலவச வெளியீடாகவோ அல்லது அதற்குரிய தொகையையோ வைத்து வெளியிடும் உத்தேசம் உண்டா? அவ்விதம் இல்லை என்றால் எனக்குத் 'தமிழரசு' பத்திரிகை ஆரம்பித்தது முதல் 1974 பிப்ரவரி முடிய எல்ல புத்தகமும்தேவை. ஆகையினால் தங்களிடம் புத்தகம் இருக்கிறதா? விலைவிவரம் தெரிவிக்கும்படி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்

ஒரு டன் தொழு எருவில் என்.பி.கே. எவ்வளவு இருக்கு? ஆமணக்கு, நிலக்கடலை, வேம்பு இந்த மூன்று பிண்ணாக்கில் என்.பி.கே. எவ்வளவு இருக்கு? இவை முறையே இரசாயன உரத்தில் எத்தனை கிலோவிற்குச் சமமாகும்?

—எஸ். வெங்கிடாஜலமய்யர்,
பெருமாள் கோவில் சந்து,
பூதபாண்டி (அஞ்சல்),
குமரி மாவட்டம்.

**விடை:** ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதியைத் தொகுத்து வெளியிடும் எண்ணம் உண்டா என்று கேட்டுள்ளீர்கள். தங்கள் யோசனை நல்லதுதான்! ஆனால், தற்பொழுதுள்ள காகிதப் பற்றாக்குறை நிலைமையில் தங்கள் யோசனைப்படி இலவசமாக வெளியிட இயலாமைக்கு வருந்துகின்றோம். மேலும் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' தொகுப்பை விலைக்கு விற்பதானால், அதை உழவர் பெருமக்கள் எந்த அளவுக்கு விரும்பி வாங்க முன் வருவார்கள் என்பதும் தெரியவில்லை! தங்களைப் போல் பலர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தால்-உழவர் பெருமக்களிடம் இருந்து வரவேற்பு இருக்குமானால்—''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதியைத் தொகுத்து, விலைக்கு விற்கும் வெளியீடாக அச்சிட்டு வழங்குவது பற்றி யோசிக்கப்படும். ஆரம்பம் முதல், 1974 பிப்ரவரி வரையான இதழ்களில் ஒருசில மட்டுமே இவ்வலுவலகத்தில் கிடைக்கும்; எல்லா இதழ்களும் இவ்வலுவலகத்தில் கிடைக்காது.

தொழு எருவில் பின்கண்ட அளவில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து (என். பி.கே.) உள்ளன.

| | | |
|---|---|---|
| தழைச்சத்து | — | 1.22 சதம் |
| மணிச்சத்து | — | 0.62சதம் |
| சாம்பல்சத்து | — | 1.20 சதம் |

இந்த அடிப்படையில் கணக்கிட்டால், ஒரு டன் (1000 கிலோ அல்லது 2 வண்டி) தொழு எருவில் 12.2 கிலோ தழைச்சத்தும், 6.2 கிலோ மணிச்சத்தும், 12 கிலோ சாம்பல் சத்தும் உள்ளன. இச்சத்துக்கள் முறையே 61 கிலோ அமோனியம் சல்பேட், 38.75 கிலோ சூப்பர் பாஸ்பேட், 19.2 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றிற்குச் சமமாகும்.

ஆகவே, ஒரு டன் தொழு எரு=61 கிலோ அமோனியம் சல்பேட்+38.75 கிலோ சூப்பர் பாஸ்பேட்+19.2 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ்.

ஆமணக்கு, நிலக்கடலை, வேம்பு ஆகியவற்றின் பிண்ணாக்கில் ஈரப்பதன அடிப்படையில் கீழ்க்கண்ட அளவுச் சத்துக்கள் உள்ளன.

**ஆமணக்குப் பிண்ணாக்கு**

| | | |
|---|---|---|
| தழைச்சத்து | — | 5.3 சதம் |
| மணிச்சத்து | — | 1.6 சதம் |

**கடலைப் பிண்ணாக்கு**

| | | |
|---|---|---|
| தழைச்சத்து | — | 7.6 சதம் |
| மணிச்சத்து | — | 1.3 சதம் |

**வேப்பம் பிண்ணாக்கு**

| | | |
|---|---|---|
| தழைச்சத்து | — | 4.7 சதம் |
| மணிச்சத்து | — | 1.9 சதம் |

ஆகவே,

100 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கு=26.5 கிலோ அமோனியம் சல்பேட்+10 கிலோ சூப்பர் பாஸ்பேட்.

100 கிலோ கடலைப் பிண்ணாக்கு =38 கிலோ அமோனியம் சல்பேட்+8.1 கிலோ சூப்பர் பாஸ்பேட்.

100 கிலோ வேப்பம் பிண்ணாக்கு=23.5 கிலோ அமோனியம் சல்பேட்+11.8கிலோ சூப்பர் பாஸ்பேட்.

பொதுவாகப் பிண்ணாக்குகளில் ஈரப்பதன அடிப்படையில், சாம்பல்சத்து இல்லை. கடலைப் பிண்ணாக்கு ஒரு சிறந்த கால்நடைத் தீவனமாக உள்ளதால், கடலைப் பிண்ணாக்கை உரமாகப் பயன்படுத்த வேண்டாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இரசாயன உரப் பற்றாக்குறை நிலவும் இந்நேரத்தில் தொழு எரு, வேப்பம் பிண்ணாக்கு, ஆமணக்குப் பிண்ணாக்கு ஆகியவைகளை வயலுக்கு இடு

# திட்டம்

**திட்டக் கமிஷன் சார்பில் சென்னையிலிருந்து வெளியிடப்படும் தமிழ் ஏடு**

படங்கள் கொண்டது : : மாதம் இருமுறை

* பாரத நாட்டின் இன்றைய பொருளாதாரப் பிரச்னைகள்—மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து நிபுணர்கள் தரும் நடுநிலைக் கட்டுரைகள்.
* திட்டமிடுவதன் மூலம் பல்வேறு துறைகளில் ஏற்படும் வெற்றி தோல்விகள் குறித்து ஒளிவு மறைவற்ற சுயேச்சையான மதிப்பீடுகள்.

சந்தா :

ஓர் ஆண்டு ரூ. 6 இரண்டு ஆண்டுகள் ரூ. 10 மூன்று ஆண்டுகள் ரூ. 14

தனிப் பிரதி 30 காசு

* நகர்ப்புறப் பத்திரிகை ஏஜெண்டுகளுக்கு நிறையக் கமிஷனும் விற்காத பிரதிகளைத் திருப்பியனுப்பும் வசதியும்
* விளம்பரம் செய்வதற்குச் சக்தி மிகுந்த சாதனம்

*மாணவர்களுக்கும், கல்வி ஆசிரியர்களுக்கும், நூலகங்களுக்கும் சந்தாவில் விசேஷமாக 25 சதவிகிதம் சலுகை*

சந்தா சேருவதற்கும் ஏஜென்ஸி விதிகளுக்கும் விளம்பர விதிகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர்,

"திட்டம்"

*வெளியீடுகள் பிரிவு (பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்)*
*தகவல்-ஒலிபரபபு அமைச்சகம், பாரத அரசாங்கம்,*
*81, ஜீ. என். செட்டி சாலை, சென்னை-600017.*





**உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல்**
**பெருக அதற்கு**
## 'ப்ளேநோ:பிக்ஸ்?
**தேவை.**

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள்
"ப்ளேநோ:பிக்ஸ்" உபயோகித்தீர்களானால்,
பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து,
மகசூலைப் பெருக்க முடியும் பருத்திப்
பயிரிலே "ப்ளேநோ:பிக்ஸ" மருந்தைப்
பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்தி-
கரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன

அசல் தயாரிப்புத்தானா என்று பார்த்து உபயோ-
கியுங்கள்... மாறுதலான தேறு மொருந்ர்கள்.
உங்கள் பயிர் ஓர் ஒயர்வாக் செல்வம்.

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட
பம்பாய் கலகத்தா. கவுஹாத்தி. இந்தோர
லகனோ. சென்னை நியூடெல்லி. பாட்னா

"ப்ளேநோ:பிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு
டிரேடு மார்க்


வது சிக்கனமான உரமிடும் முறையாகும். பிண்ணாக்கின் விலையும் அதிகமாக உள்ளது என்று சிலர் கூறக்கூடும். ஆங்காங்கே கிடைக்கும் புங்கம், வேம்பு, இலுப்பை ஆகியவற்றின் விதைகளைச் சேகரித்துப் பிண்ணாக்குத் தயாரித்து, அவைகளை உரமாகப் பயன்படுத்துவதால் இரசாயன உரச் செலவை ஓரளவிற்குக் குறைத்திட இயலும்!

காலத்திற்கு ஏற்ற நல்ல கேள்வியைக் கேட்டதற்காக எங்கள் மகிழ்ச்சியையும் தமிழக உழவர் பெருமக்களின் சார்பாக நன்றியையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வினா:** திருச்சி மாவட்ட வேளாண்மைத் துறையினர், அழகாக ஒரு பக்கம் படமும், மறுபக்கம் நெல்சாகுபடிக் குறிப்பும் அடங்கிய அஞ்சல் அட்டைகள் (Post cards) அச்சிட்டு வழங்கியுள்ளனர். அவைகளில் "பொன்னி" நெல் விவரக் குறிப்பில் "பொன்னி" இரகத்தின் வயது 140 நாட்கள்; மகசூல் 35 மூட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கண்ணகி 108 நாட்கள்; மகசூல் 40 மூட்டை. மேலும் ஐ. ஆர். 20 இரகம் வயது 130 நாட்கள்; மகசூல் 45 மூட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உழவர்கள் அதிக மகசூலை குறைந்த நாட்களில் கிடைப்பதைத் தான் விரும்புவார்கள். அப்படி இருக்க, 140 நாட்கள் காத்திருந்து 35 மூட்டை கிடைக்க பொன்னியை யார் பயிர் செய்வார்கள்? அதற்குப் பதில் 108 நாட்களில் 40 மூட்டையோ அல்லது 130 நாட்களில் 45 மூட்டை மகசூலைத்தான் விரும்புவார்கள்! அப்படியிருக்க, பொன்னியை விரும்புவார்களா? பொன்னியின் மகசூல் 35 மூட்டை என்பது சரிதானா?

—செல்வி. வி. எம். உமா,
53, மேற்குத் தெரு,
தாத்தையங்கார்பேட்டை,
திருச்சி மாவட்டம்.

**விடை:** தமிழ்நாடு வேளாண்மைத்துறை, குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரும் இரகங்களைப் பயிர் செய்யும்படியே, தமிழ்நாடு உழவர் பெருமக்களுக்குப் பரிந்துரை செய்கிறது. அந்த அடிப்படையில் திருச்சி மாவட்ட வேளாண்மைத்துறையினர் அச்சிட்டு வழங்கியுள்ள அஞ்சல் அட்டைகளில் உள்ள நெல்சாகுபடி பற்றிய விவரங்கள் சரியானவையே! ஆனால் தாங்கள் அந்த அட்டைகளைச் சரியாகப் படிக்கவில்லை என்று எண்ணுகின்றோம். ஏனெனில், வேளாண்மைத்துறையினர் ஒவ்வொரு பகுதிக்கும், வெவ்வேறு பருவத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற உயர்விளைச்சல் தரும் நெல் இரகங்களையே பரிந்துரைத்துள்ளனர். அவ்வாறு பரிந்துரைக்கப்படும் இரகங்களின் சராசரி மகசூலையே விளம்பரச் சாதனங்களில் ஒன்றான அஞ்சல் அட்டையில் குறிப்பிட்டுள்ளனர்.



திருச்சி மாவட்டத்தில் குறுவைப் பட்டத்தில் "கண்ணகி" இரகத்தைப் பயிர் செய்யும்படியே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் "ஐ. ஆர். 20", "பொன்னி" ஆகிய இரகங்களைச் சம்பா பட்டத்தில் பயிர் செய்யும்படியே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் தாங்கள் அவைகளைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று கருதுகின்றோம். அதனால்தான் தங்களுக்கு ஐயம் ஏற்பட்டுள்ளது!

108 நாட்களில் 40 மூட்டை கொடுக்கக்கூடிய "கண்ணகி" இரகத்தைப் பயிரிடுவதை விட்டு விட்டு, 140 நாட்களில் 35 மூட்டை மகசூல் தரக்கூடிய "பொன்னி" இரகத்தைப் பயிரிடச் சொல்லி, வேளாண்மைத் துறையில் உள்ள யாரும் பரிந்துரைக்க மாட்டார்கள்! "கண்ணகி" இரகத்தை குறுவைப் பட்டத்திலும், "பொன்னி" இரகத்தை சம்பா அல்லது தாளடிப்பட்டங்களிலுமே பயிரிடும்படி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குறுவைப் பட்டத்தில் பருவ மழையையொட்டியே பாசன வசதி கிடைப்பதால் "கருணா", "கண்ணகி" போன்ற குறுகிய கால நெல் இரகங்களைப் பயிரிடுவதே சிறந்தது. பொதுவாகச் சம்பா, தாளடிப் பட்டங்களில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாததனாலேயே "ஐ. ஆர். 20", "பொன்னி" போன்ற நடுத்தர கால வயதுள்ள நெல் இரகங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. சம்பா, தாளடி பட்டங்களுக்கான குறுகிய கால உயர்விளைச்சல் தரும் நெல் இரகங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் தமிழ்நாடு வேளாண்மைத் துறையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"பொன்னி" அரிசி சன்னமானதாகவும், சாப்பாட்டிற்கு மிகவும் ஏற்றதாகவும், ஒரு மூட்டை நெல்லுக்கு ரூபாய் 5 முதல் ரூபாய் 10 வரை அதிக விலை கிடைப்பதாலும், பலர் "ஐ. ஆர். 20" இரகத்தைவிட "பொன்னி" இரகத்தை விரும்புகின்றனர். "ஐ. ஆர். 20 இரகம்" அதிக மகசூல் கொடுத்தாலும், சன்ன அரிசி கொடுத்தாலும், பழைய சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல என்று இன்றும் பலர் கூறிவருகின்றனர். இந்நிலையில் "பொன்னி இரகத்தைப் பரிந்துரைப்பதில் தவறில்லை. சிலர் பொன்னி பயிரிட்டு ஏக்கருக்கு 45 மூட்டை விதமும் எடுத்துள்ளனர். சிலர் சென்ற ஆண்டு பொன்னியில் ஏக்கருக்கு 30 மூட்டை கூட எடுக்க முடியவில்லை என்று கூறுகின்றனர். இதையெல்லாம் மனதிற்கொண்டே திருச்சி மாவட்ட வேளாண்மைத் துறையினர் "பொன்னி" இரகம் ஏக்கருக்குச் சராசரியாக 35 மூட்டை மகசூல் தரும் என்று கூறியுள்ளனர். எனவே, அவர்கள் கூறியுள்ளதில் தவறில்லை.

# 'சேமிப்பு'

## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


(குறிப்பு: தாங்கள் நிறைய கேள்விகள் கேட்டுள்ளீர்கள். அவைகள் அனைத்திற்கும் ஒரே இதழில் விடை அளித்தால், மற்றவர்களின் கேள்விகளுக்கு விடையளிக்க முடியாது போய் விடும். எனவே, தங்களுடைய மற்ற கேள்விகளுக்குத் தொடர்ந்து விடையளிக்கப் படும். மேலும் தாங்கள் குறிப்பிட்டுள்ளபடி ''தமிழரசு'' இதழைக் காலத்தில் வெளியிட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்)

**வினா:** ஆடிப்பட்டத்தில் கரிசல் மண் நிலத்தில் மானாவாரியாகப் பயிரிட ஏற்ற கம்பு எது? சோள இரகம் எது? அவற்றின் சாகுபடி முறைகளையும் கூறுக. என் வீட்டுத் தோட்டத்தில் காய்கறி பயிரிட விரும்புகின்றேன். நல்ல காய்கறி விதைகளை எங்கு பெறலாம்?

—மூ. முத்துச்சாமி,
த/பெ. மூக்கன்,
முன்னாள் படைவீரன்,
கிருஷ்ணாபுரம் (அஞ்சல்),
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**விடை:** ஆடிப்பட்டத்தில், திருச்சி மாவட்ட கரிசல் மண் நிலத்தில் எச்.பி. 3 கம்பு இரகத்தை மானாவாரியாகப் பயிரிடுவதே சிறந்தது.

மானாவாரியாக பயிரிட ஏக்கருக்கு 1.5 கிலோ ''எச்.பி. 3'' கம்பு விதைகளை விதைக்க வேண்டும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு இட்டு நிலத்தை நன்கு உழுது விடவும். கடைசி உழவில் அல்லது விதைப்பதற்கு முன்பாக ஏக்கருக்கு 40 கிலோ யூரியாவையும் 56 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தையும் அடி உரமாக இடவேண்டும். அல்லது 20 கிலோ டை—அமோனியம் பாஸ்பேட்டையும், 32 கிலோ யூரியாவையும் அடியுரமாக இடலாம். விதைகளை விதைக்கும்பொழுது, 45 சென்டி மீட்டர் (18 அங்குலம்) இடைவெளியில் சால் வரிசையில் விதைத்து, மேல்மண்ணைக் கொண்டு மூடவும்.

விதைத்த 21-வது நாளில் வரிசையாக உள்ள பயிர்களில் 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளிக்கு ஒரு பயிர் விதம் விட்டு, அதிகமாகஉள்ள பயிர்களைப் பிடுங்கிப் பயிர்க் கலைப்பு செய்ய வேண்டும்.

விதைத்த 25-வது நாளில், நிலத்தைக் கொத்திவிட்டுக் களைகளை அகற்ற வேண்டும்.

விதைத்த 28-வது நாளில், 5 கிலோ 'பி.எச்.சி. 10 சதம்' தூளையும், 5 கிலோ 'டி.டி.டீ. 5 சதம்' தூளையும் தூவ வேண்டும் அல்லது 7 கிலோ ''கார்பரில் 10 சதம்'' தூளையும், 3 கிலோ கந்தகத் தூளையும் கலந்துத் தூவ வேண்டும்.

விதைத்த 54-வது நாளில் 400 கிராம் ''டைத்தேன் இசட் 78'' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

விதைத்த 64-வது நாளில், விதைத்த 25-வது நாளில் செய்தது போலவே மருந்து தூவ வேண்டும்.

விதைத்த 85 நாட்களில் எச்பி. 3 கம்பு இரகத்தை அறுவடை செய்யலாம்.

ஆடிப்பட்டத்தில் ''சி.எஸ்.எச். 3'' அல்லது ''சி.எஸ்.எச். 5'' போன்ற சோள இரகங்களை விதைப்பது சிறந்தது. இந்த இரகங்களின் சாகுபடி முறைகள் 1-7-1974 தேதிய ''தமிழரசு'' இதழில் பக்கம் 42-ல் விளக்கமாக வெளியிடப்பட்டுள்ளதால், அவைகளைப் படித்தறிந்து கொள்ளும்படி கேட்டு கொள்கின்றோம்.



நல்ல காய்கறி விதைகளை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்து விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.



**வினா:** நான் ஒரு விவசாயி. நான் அருப்புக் கோட்டை நிலவள வங்கியில் வட்டிக்குக் கடன் பெற்று என் நிலத்தில் ஒரு கிணறு வெட்டினேன். நன்கு தண்ணீர் ஊறுகின்றது. ஆனால் அவை முழுவதும் உப்பு தண்ணீராக உள்ளது. 18 அடி ஆழம் வெட்டப்பட்டுள்ளது. தண்ணீர் நன்றாகவே ஊறுகின்றது. ஆனால் தண்ணீரைப் பயன்படுத்தாமல் அப்படியே போட்டுவிட்டேன். இந்த தண்ணீரைக் கொண்டு ஏதேனும் பயிர் செய்யலாமா? தங்களின் யோசனையைத் தெரிவிக்கவும்.

—மு.க. பெரியசாமி,
கோட்டைக்கட்டியேந்தல்,
அருப்புக்கோட்டை வட்டம்,
இராமநாதபுரம்மாவட்டம்.

**விடை:** ''கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரி, கடன் வாங்கியும் பட்டினி!'' என்ற பழமொழிக்கு ஒப்ப, கடன் வாங்கிக் கிணறுவெட்டியும் பயன்படுத்த முடியாமல் இருக்கும் தங்கள் நிலைகுறித்து வருந்துகின்றோம். இறைப்பதற்கு முன்பாக உள்ள நிலையில் ஒரு பாட்டிலிலும், இறைத்த பிறகு உள்ள நிலையில் (புதிதாகத் தண்ணீர் ஊறும் நிலையில்) ஒரு பாட்டிலிலும் (24 அவுன்சு) தண்ணீர் எடுத்துச்சென்று பரமக்குடியில் உள்ள மண் பரிசோதனை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உதவி மண் இரசாயன வல்லுநர் அவர்களிடம் கொடுத்தால், அவர் தண்ணீரைப் பரிசோதித்து தங்கள் கிணற்றுத் தண்ணீரில் 'என்ன உப்பு?' 'எவ்வளவு அளவில் உள்ளது?' என்றும், 'அதைப்போக்கிட என்ன செய்யலாம்? அல்லது 'அந்தத் தண்ணீரைக் கொண்டு என்ன பயிரிடலாம்? என்பதற்கான பரிந்துரைகளை வழங்குவார். தண்ணீர் மாதிரி எடுத்து அனுப்ப உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் அல்லது உங்கள் ஊர்நல உதவியாளரின் உதவியை நாடலாம். இவ்வகையில் முயற்சித்து தங்கள் தண்ணீரைப் பரிசோதித்துப் பயிரிட முற்படுவதே பயனுள்ள முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் குழு

(தமிழ்நாடு அரசினால் அமைக்கப் பெற்றது)

## சென்னை-600005

ஓமியோபதி மருத்துவர்களுக்கு
மருத்துவ நெறிமுறைத் தொகுப்பு

வெளியிடுபவர் :—

பதிவாளர்,
தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் குழு,
சென்னை-5.

## தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் குழு மருத்துவ நெறிமுறைத் தொகுப்பு

### தொழில் முறைக் கண்ணியம் :

மருத்துவத் தொழில் முறையின் கண்ணியம் எங்கும் எந்த நிலையிலும் காக்கப் பெறவேண்டும். இந்தத் தொழில் முறைக்கண்ணியத்தைக் குறைக்கக் கூடிய வழக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அதாவது :

(அ) தனிப்பட்ட முறைச் சிகிச்சைக்காக நேரடியாகவோ அல்லது பத்திரிகைகளில் விளம்பரம், மற்றும் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியன மூலமோ ஆதரவு தேடக் கூடாது.

(ஆ) சிகிச்சை பெற்றுக் கொண்டவரின் நன்றியுரைக் கடிதங்களோ, சிகிச்சை அறிக்கைகளோ, தொழில் முறையல்லாத பத்திரிகைகளிலோ, இதழ்களிலோ வெளியிடுதலும், வெளியிட அனுமதித்தலும் கூடாது.

(இ) மருத்துவச் சட்டப்படி பதிவு செய்து கொள்ளாதவர்கள் இந்த அணியில் சேருவதற்கு உரியவர்களல்லர்.

(ஈ) ''குணம் இல்லையேல் பணம் வேண்டாம்'' என்பது போன்ற நிபந்தனைகளுக்கு இடமளிக்கக் கூடாது.

2. (அ) பதிவு செய்து கொண்டவர்கள் அல்லாத மருத்துவர்கள் யாருடனும் உறுப்பினர்கள் (உறுப்பினர் என்பது பதிவு செய்து கொண்டு உள்ள மருத்துவத் தொழில் அணியினைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும்) ஆலோசனை செய்யக் கூடாது. ஆனால் தமிழ்நாடு அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனம், தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் குழு இவர்களிடமிருந்து அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் சான்றிதழ் பெற்றவர்கள் வேறு இடங்களில் பதிவு செய்து கொண்டு தற்காலிமாக இந்த மாநிலத்தில் இருப்பார்களானால், அவர்களுக்கு இந்தத் தடை இல்லை.

(ஆ) ஆலோசனை பெறுவதற்கு நேரம் குறித்திருக்கும் சமயங்களில் நேரம் தவறாமல் இருக்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். நியாயமான கால அளவுக்குள் மருத்துவ சிகிச்சை அளிப்பவர் வரவில்லை யென்றால் அதாவது குறித்த நேரம் கடந்த கால் மணி நேரத்துக்குள் வரவில்லை என்றால் மருத்துவ ஆலோசகர், தாம் தனியாக நோயாளியைப் பரிட்சை செய்யலாம். அப்படிச் செய்து தனது முடிவுகளை எழுதி ஒரு உறையிலிட்டு வைத்துவிடலாம்.

(இ) மருத்துவ ஆலோசகரின் முடிவுகளை நோயாளியின் நண்பர்களுக்கு அறிவிப்பதில், மருத்துவ சிகிச்சை அளிப்பவரும் மருத்துவ ஆலோசகரும் பரஸ்பரம் கலந்து கொண்டு சொல்ல வேண்டும்.

(ஈ) கருத்து வேறுபாடுகள் இருக்குமானால் அதனை அநாவசியமாக வெளியிட வேண்டியதில்லை. ஆனால் சரிப்படுத்திக் கொள்ள முடியாத அளவில் கருத்து வேறுபாடு இருக்குமானால், நோயாளியின் நண்பர்களிடம் விஷயத்தை வெளிப்படையாகவும் பாரபட்சமில்லாமலும் விளக்கிவிட வேண்டும். மேற்கொண்டு ஆலோசனை பெறுவதென்பது அவர்களைப் பொறுத்தது.

(உ) ஆலோசனை பெறுவது முடிந்தவுடனே ஆலோசனை தரும் மருத்துவரின் பணி முடிந்து விடுகின்றது. மருத்துவர் மற்றொரு தடவையும் ஆலோசனை பெற விரும்பினால் அது தனி.

(ஊ) அதிகார நிலை வகிக்கும் ஒரு மருத்துவர் ஒரு நோயாளியைப் பார்த்து அறிக்கை தரவேண்டியிருக்கும் சமயத்தில், மரியாதையைக் கருதி, கூடுமான வரையில், நோயாளிக்கு சிகிச்சை தருகிற மருத்துவருடன் தொடர்பு கொள்ள வேண்டும். அதிகார முறையில் பார்ப்பவர் மற்ற மருத்துவருடைய சிகிச்சை முறையில் தலையிடக் கூடாது.

(எ) ஒரு மருத்துவரின் வேண்டுகோளின்படி மருத்துவ ஆலோசகர் நோயாளியைப் பார்ப்பாரானால் நோயைப் பற்றிய தமது கருத்தை எழுதி வைத்து எந்த விதமான சிகிச்சை முறையை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தமது கருத்தை எழுதி வைப்பதும் அவரது கடமையாகும்.

(ஏ) தொழில் முறை நண்பரின் ஒப்படைப்பில் உள்ள ஒரு உறுப்பினர் நோயுற்ற காலத்தில் அவரைப் பார்ப்பதில் கட்டணம் விதிக்கலாகாது. மருத்துவர்களுக்கு இடையே விசேஷ ஏற்பாடு இருந்தால் அது தனி. அவசர அபாய நிலைமைகளின் போது உறுப்பினர் நோயாளியைப் பார்க்க அழைக்கப்படுவாரானால், அந்த நோயாளி சாதாரணமாக வாடிக்கையான வேறு மருத்துவரிடம் சிகிச்சை பெறுபவராக இருக்கும் பட்சத்தில், அவசர நிலைமை நீங்கிய உடனே அந்த வழக்கமான மருத்துவருக்காக இவர் விட்டுக் கொடுத்து விலகிவிட வேண்டும். அதே நேரத்தில் தமது பணிக்காக உரிய கட்டணம் வசூலித்துக் கொள்ள அவருக்கு உரிமையுண்டு.

(ஐ) முன்பு ஒரு மருத்துவரால் அனுப்பப்பட்ட நோயாளி, திரும்ப அதே நோய்க்காக ஆலோசகரிடம் வருவாரானால், அந்த முந்தைய மருத்துவரிடம் செல்லுமாறு ஆலோசகர் கூறலாமே தவிர, நோயாளியைத் தம் பாதுகாப்பில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

(ஒ) ஏற்கனவே வேறொரு மருத்துவரின் பாதுகாப்பில் உள்ள ஒரு நோயாளியை (அவசர அபாய நிலைமை இல்லாதிருக்கும் போது) பார்க்குமாறு உறுப்பினர் கேட்டுக் கொள்ளப்படுவாரானால் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிற மருத்துவரைக் கலந்து கொள்ளாமல், இவர், அந்த நோயாளியைப் பார்க்கக் கூடாது. பார்த்துக் கொண்டிருக்கிற மருத்துவருக்கு, முடிந்தால் எழுத்து மூலமாக இனி உங்கள் உதவி தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தால் அவ்விஷயம் தனி.

(ஓ) ஒருவர் மருத்துவரிடம் வந்து அவருடைய வீட்டில் ஆலோசனை பெறும்போது, வேறு மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வருகிறீர்களா என்று கேட்கத் தேவையில்லை. ஆனால் நோயாளியின் நலனைக் கருதியும், மரியாதையைக் கருதியும் முன்பு பார்த்த மருத்துவருக்கு இதனைப் பற்றிக் கருத்தைத் தெரிவிக்கலாம்.

(3) நாட்டுப்புறம் போன்ற இடங்கள் தவிர்த்த மற்ற இடங்களில் உறுப்பினர்கள் தங்களுக்கு குத்தகை உரிமை இல்லாத இடங்களில் தங்கள் பெயர் பொறிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது. சட்டப்பூர்வமான கிளை சிகிச்சை நிலையங்களுக்கு இவ்விதி பொருந்தாது.

(4) கட்டண விகிதப் பட்டியல் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கலாகாது.

(5) மருத்துவத் தொழிலில் நிர்ணயமான கட்டண விகிதம் கிடையாது. அதாவது, நோயாளியோ மருத்துவரோ மேல் முறையீடு செய்து கொள்ளும்படியான அளவில் நிர்ணய கட்டணம் ஏதுமில்லை. ஆனால் நடைமுறையில் மருத்துவரின் தகுதி நிலை மற்றும் இதர நிலைமைகளுக்கு ஏற்பக் கட்டண முறை வேறுபடலாம். மருத்துவரின் உசிதத்திற்கு ஏற்பக் கட்டணம் குறைக்கப்படக் கூடியது.

(6) மருத்துவத் தொழில் புரிவோரிடையே தங்கள் பணிக்காக ஒருவர் மற்றவரிடமிருந்து கட்டணம் பெறக்கூடாது என்று விதி ஏதும் இல்லை. ஆனால் தொழில் முறை சகோதரருக்கு, அவரது மனைவிக்கு, குழந்தைகளுக்கு அல்லது ஒரு மருத்துவ மாணவருக்கு இலவசமாக மருத்துவம் செய்வதென்பது மகிழ்ச்சி மிக்க கடமையாகவும், பெருமையாகவும் கருதப்பட வேண்டும்.

(7) பேட்டன்ட்-மருந்துகள், உணவுகள் இவற்றைப் பயன்படுத்துவதிலும், பயன்படுத்துமாறு ஊக்கமூட்டுவதிலும் உஷாராக இருத்தல் வேண்டும். மற்றவர்களுக்கு இவற்றைப் பரிந்துரை செய்யும் போது அவற்றின் பொருள் சேர்க்கும் முறை பற்றியும் அவை நல்லவைதான் என்பதற்கு ஆதாரமும் தெரிந்தும் வைத்திருக்க வேண்டும்.

(8) ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கும் போது கீழ்க்கண்ட நிலைமைகளில் ஒரு மருத்துவர், தொடர்ந்து மருத்துவம் செய்ய முடியாது என்று கூறலாம். அத்தகைய நிலைமைகள் வருமாறு :

(அ) வேறொரு மருத்துவர் இந்த நோயாளியைப் பார்க்கிறார் என்று அறியும் போதும்.

(ஆ) தாம் குறிப்பிட்டவை தவிர வேறு பரிகார முறைகள் பயன்படுத்தப்படும் போதும்,

(இ) தாம் கூறிய பரிகார முறைகளை ஏற்க மறுக்கும்போதும்,

(ஈ) நோய் உண்மையல்ல பாசாங்குக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார் என்று தமக்கு உறுதி எற்படும் போதும்,

(உ) அபினி, மது வகைகள் மற்றும் அது போன்றவைகளை நோயாளி தகாத முறையில் உபயோகிக்கும் போதும்,

தாம் நோயை குணப்படுத்த முடியவில்லை என்றாலும் கூட அந்தக் கேசை விட்டுவிட வேண்டுமென்ற கட்டாயமில்லை. நோயாளி இவரது பணியை விரும்பும் வரை இவர் சிகிச்சை செய்யலாம்.

(9) நோயாளியின் இரகசியங்களைப் பாதுகாக்க வேண்டியது மருத்துவரின் கடமையாகும். தாவா விவகாரங்களில் நோயாளியின் சம்மதம் பெற்றில்லாமல் நீதி மன்றத்தில் பதிலளிக்க வேண்டியதில்லை. போலீசார், சொலிசிட்டர்கள், நீதி பரிபாலனம் சம்பந்தப்படாத மற்றவர்கள் கேள்விகளுக்கு மருத்துவர் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

(10) தொழில் முறையில் தமது பாதுகாப்பில் இருந்தவருக்கு எதிராக மருத்துவர் யாரும் சாட்சியம் தர முன் வரலாகாது. வாரன்ட் அடிப்படையில் தான் அவர் நீதி மன்றத்தில் ஆஜராகலாம்.

(11) மருத்துவர் ஒருவரின் பாதுகாப்பில் உள்ள நோயாளியை சுகாதார மருத்துவ அதிகாரிகள் முன்னறிவிப்பின்றிப் பார்க்கலாகாது. நோயாளியின் முன்னாலோ அல்லது அவர்களது நண்பர்கள் முன்னாலோ நோயின் தன்மை குறித்து சந்தேகமோ கருத்து வேறுபாடோ தெரிவிக்கக் கூடாது. நோயாளியின் நோய்க் கூறுபாடு, அதன் அடிப்படை ஆகியவை பற்றி மருத்துவரிடம் மருத்துவ அதிகாரியோ, சுகாதார அதிகாரியோ, சுற்றுப்புறதுப்புரவு அதிகாரியோ விளக்க அறிக்கை ஏதும் கேட்கலாகாது.

(12) நல்ல குடிமக்கள் என்ற முறையில் பொதுச் சுகாதார சட்ட விதிகளை சுமுகமாக நிறைவேற்றுவதில் உதவி புரிவது, மருத்துவர்களின் கடமையாகும். குறிப்பாக, தொத்து நோய் போன்றவைகளைத் தடுப்பதில் பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உதவி புரியலாம்.

(13) மருத்துவர் யாரும் மருந்துச் சீட்டினை தமக்கு என சொந்த பார்முலா அமைகிற முறையில் குறிப்பிட்ட மருந்துக் கடைக்காரர் மட்டுமே புரிந்து கொள்ளத் தக்க வகையில் எழுதக்கூடாது. மருந்துச் சீட்டு எழுதுவதில் அத்தகைய இரகசிய பரிபாஷையைப் பயன்படுத்துவது தொழில் நெறிக்கு ஏற்றதல்ல.

டாக்டர் சி. ஸ்ரீராமுலு.
தலைவர்.

கே. ஜி. சம்பந்தம்,
பதிவாளர்.

Advt.




# குழந்தை மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி!

உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health Organisation). தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவர், செவிலியர் போன்றவர்களுக்கு, 'குழந்தைகள் பிறந்தவுடன் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான மருத்துவங்கள்' குறித்து ஒரு சிறப்புப் பயிற்சியினை நடத்தி வருகிறது. அனைத்து நாட்டுப் பயிற்சியாக விளங்கும் இதில் 33 பெண்கள் பங்கு பெற்றுள்ளனர். இவர்களில் 22 பேர் செவிலியர்; 11 பேர் மருத்துவர்.

இந்தச் சிறப்புப் பயிற்சியானது, தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த குழந்தைகள் மருத்துவ நிலையமாக விளங்கும் சென்னை எழும்பூர் குழந்தைகள் நல ஆராய்ச்சி மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, நேபாளம், வங்காள தேசம் போன்ற நாடுகளைச் சார்ந்தவர்கள் பங்கு பெற்றுள்ளனர். இவர்களுக்கு 5 வாரங்கள் பயிற்சியளிக்கப்படும்.

குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களுக்கு எந்தெந்த வகையில் மருத்துவ வசதிகள் செய்து கவனிக்கப்பட வேண்டும் என்பவை குறித்துக் கற்றுத் தருதல், செய்முறையில் விளக்குதல் போன்ற வழிகளில் பயிற்சியளிக்கப்படும்

ஆகஸ்டு திங்கள் இறுதி வரை

யில் நடைபெறும் இந்தப் பயிற்சியினை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 29-7-1974-ல் துவக்கி வைத்தார்கள். துவக்க விழாவில் உலக நல்வாழ்வு நிறுவனத்தைச் சார்ந்தவர்களும், மருத்துவக் கல்வி இயக்குநர், எழும்பூர் மருத்துவ மனையின் இயக்குநர், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.






தமிழரசு
இனியது!
இனியது!!
பிற்படுத்தப்பட்ட
வகுப்பினர்க்கும்
தாழ்த்தப்பட்ட
மக்களுக்கும்
சலுகைகள்!
உதவிகள்!
புதிய
முயற்சிகளால்
தொழில்துறை
வளர்ச்சி!
நல்வாழ்வு வழங்கும்
திருப்பணிகள்!
இனிய வாழ்வுக்கு
இனிய எதிர்காலத்துக்கு
இனிய திட்டம்.
நாட்டின் நல்வாழ்வுக்கும்
வீட்டின் பெருமகிழ்ச்சிக்கும்
திட்டமிட்ட குடும்பமே அடையாளமாகும்!
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!



தமிழரசு



சிறு தொழிலுக்கோர் உறுதுணை.....எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

· பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

· சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 P.O. Box 323, புது டில்லி 1, P.O. Box 619, கல்கத்தா 16, Post Bag 5247, சென்னை 2.



OFFICE OF THE STATE EDITOR GAZETTEERS MADRAS-8 16 SEP 1974

தமிழரசு 1-9-1974 இதழ்-5 மலர்-5

வண்மென்று தமிழக அரசு வெளியிட்ட
-ரிமைத் தொடர்புப் புதுக்கனைக் கூடல்
ஒப்புதல் தந்த மத்திய அரசுக்கும்
இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி
அம்மையாருக்கும் என்
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
உழுதவர்க்கே நிலம் சொந்தப் போம் —
உழைப்பவர்க்கே ஆட்சி சொந்தப் போம்"
என்று நமது உழுதுபடைத்த உண்மைத்
தீர்க்கதரிசி "வீரத்தலைவர்
பரசு" இதுவென எண்ணி மகிழ்கிறேன்.
அண்ணல் காந்தி அடிகளும், நேதாஜி
போஸும், திலகர், நேருஜியும்,
தென்னாட்டு சிதம்பரனாரும், தியாகச்

செம்மல் பெரியாரும், வீரத்தளபதி ராஜா
ஜியும், வீரத் தேசத்தாரும் —
என்னற்ற இந்தியப் பெருவீரர்களும்
சிந்திய ரத்தத்தில் பூத்த புரட்சிமலர்
தான் இந்த நாட்டின் சுதந்திரம்.
இந்த மண்ணின் மணம், மாண்புகளின்
பல கனி வழியாக, தென்றலின் தேன்
மீது எழுந்து, வசதிபடைத்தோர்க்கு மட்டுமே
கிட்டும் என்ற நிலையை மாற்றி, ஏழை
வீட்டுத் தாய்மார்களும் நுழைந்திடும்
வண்ணம் செய்திட வேண்டும்.
இதைத்தான் அன்று அண்ணல் அவர்கள்,
1947 ஆகஸ்ட் 15 - அன்று அடித்தளத்
துக்குக் கோட்டைத் தீட்டிய நாள்
என்றும், அவ்வேளை கண்டும் கொண்

டாக்டர் ஆகஸ்ட் 15 - சுதந்திரத்
தின் பவளவிழாக் கொண்டாடும்
இந்நாள் என்றும் அழியாப் புகழ்
பெற்றது.
சுதந்திர முழக்கம் செய்த தியாகி
களின் வரையும் இந்த அரசு
மறக்கவில்லை - மறக்கப்போவதுமில்லை.
வெள்ளையனை எதிர்த்து முதலில்
ஒலித்த வீரபாண்டிய கட்டபொம்மனின்
அழிந்து போன பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை
இதோ - மீண்டும் உருவாக்கி விட்டோம்;
அந்தத் தீரன். திருப்பூர் குமரன் என்றும்
மறையாதிருக்கும் வகையில்!
தில்லையாடி வள்ளியம்மைக்கு

நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கி
றோம்.
சிதம்பரனார் புகழ்பாட, அவர் சிறை
யில் இழுத்த செக்கைக் கண்டு
பிடித்துச் சென்னை மாநகரில் காட்
சிக்கு வைத்திருக்கிறோம்.
கவிதை வழியில் விடுதலைப் போர்க்
கனலைத் தூண்டி விட்ட தொடுத்த
கவியரசன் பாரதிக்குச் சிலை மட்
டுமல்ல; எட்டயபுரத்தில் அவர்
பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்கி
யிருக்கிறோம்.
மூதறிஞர் ராஜாஜிக்கு நாம் எழுப்பும்
நினைவாலயம் முழுதும் தயாராகிவிட்ட

பெற்றுள்ள இந்தியா முழுதாக
இந்திய மாநிலங்கள் அனைத்தும்
பின்பற்ற வேண்டியது அதிகாரத்
தில் இருப்போர் உழவரை காண
வேண்டும்.
தன்னுடன் விளங்கிய தமிழ்
மாநிலத்தில் உழைப்பிற்கு
நமக்கு வேண்டியது ஒரு
சம்பவம்!
சுதந்திரத்தின் தேவைகள், தன்
னுடைய தன் சுயராஜ்ஜியத்தை
காக்க அடிப்படைகள்

முப்பெருமை முப்பெரும் தலைவர்
அன்று தான் இந்த உலகுப்
பிறந்தனர்!
பிரச்சினைகளைக் கண்டு துடிப்பவர்
ஒழியாமல் அந்த இடையிலே
பத்திரமாய் இருந்த எத்தனை
பேருழைப்புகள் – பொருட்செல்வம்
தந்த அர்ப்பணிப்பு – இவையெல்லாம்
காற்றோடு – சுடுகாடு
வந்தனர் எத்தனை கோடி
அழிக்கப்பட்டு விட்டன.
படுகொலைகள் – உடைந்த பிணங்கள்

தமிழ் பேசுகின்ற நாட்டுக் கொள்கை
எத்தனையோ வழிமுறைகள் இருப்பது, மன
னிக்க முடியாத துரோகம். அவர்கள்
கொடுமையான சட்டத்துக்கும், பொறுமைக்கும்
அடிப்பட்ட எல்லோரும் இழப்புகளையும்
என்பதை இந்த நாட்டுக்கு
எத்தனை காலம் இருக்க
முடியாது. எதையும் பேசத் தீர்க்க முன்வராமல்
கட்டத்தின் சக்தி பொறுத்தவர் நிறைய
முடிவது – சுதந்திர போராட்டத்தை
மறந்து காப்பாற்றத் தேவைகள்
குறைக்க நினைத்து மாட்டேன் – இவை
தான் இந்த அரசு, சுயநலத்துக்காக
மக்களை சுரண்டும், சமூகக் கூட

என்பதை உறுதியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன்.
சுதந்திரம் – என்னைமக்களுக்குச் சுதந்தான்!
ஒருவர் வாழ – ஒருவர் வீழ்வதா!
சுரண்டும் வாய்ப்பெடுத்து வரும்
இந்த தேசத்தில் வாய்ப்பாக்க காரும் கொள்கை
உழைத்து உழைத்து பயன்விளைக்கும்
நாட்டு உழைப்புத் தோம் கொள்ளைப்
பயன்படாத சுதந்திரம் —
பொருளாதார விடுதலை, மனித
குலத்தைப் போர்வெறிக்கு தேர்ந்த
அழிக்கப்போவதைப் பயன்படாத
சுதந்திரம் —

பழமையாக்குதலுக்குட்பட்ட தியாகி
ஈருக்கு திலகம் கொண்டு மானியம் —
நிறைய அழிவின் பாதையில் வீழ்ந்துப்
பட்டயம் — இப்புதுக் கடமை தவறு —
[illegible] நாளில் அதற்குப் போராட்டங்கள்
கண்டவர்க்கு வழங்கும் அன்புத்
தாண்டவத்தை இந்த அரசு திட்டமிட்டுத்
தயங்காமல் வழங்கி வருகிறது.
வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றி
விட்டோம் அதற்கு நாட்டின் போக்க
மாற்றமே! மக்களுக்குச் சுதந்திர
இந்தியத் திருநாட்டில் இது
வெற்றி காண்பதும் முக்கியமல்லவா
போனதன்றோ?

ஆடு மாட்டுக் கூட்டங்களின் இன்றி
யமையாத் தேவைகளான உணவு,
உடை, உறையுள் — இவைகளை
நிறைவு செய்வதில் நாம் முழு
வெற்றி பெற்று விட்டோமா?
இல்லையென்று தானே பதில் வருகிறது
நெஞ்சில் தட்டுத்து மனத்துக்கு!

தமிழகத்தைப் பொறுத்த
வரையில் — நமது அரசு, நமது
மக்கள் வாய்ப்புகளைச் சேர்த்து வாழ
முன்வரையில் ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண முன்வருகிறோம்.

அடுத்தடுத்து மக்கள், தாழ்த்தப்
பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட
மக்கள், ஏழை எளியோர்
மேன்மை பெற நமது திட்டங்கள்
திட்டப்படுகின்றன.
நமது கண்ணெதிர் வழங்கும் தீவிரப்
பணிகள், கொடுமைப்படுத்தப்படும்
நடைபெறும் மக்களின் கண்ணீர்ப்பில்
அழுத்துகின்றன.
காந்தியடிகள் கண்ட கனவை
நனவாக்கி, சாதிக்குறைகளை
அறவே அழிந்து விட்டோம்.
உலகெங்கிருந்தே உதவிட இந்த

கண்டு பிடித்துள்ளோம். இதுவென்
றும் கொடுமையை மட்டுமல்ல;
இதனைப் பார்த்த மேலும் நிலைமையும்
இந்த கண்டு அறிந்து விட்டோம்.
இதோ பாருங்கள் தேசியக் கொடி
இந்திய அமைப்பாட்டு சின்ன
மெனத் தெரிகிறது. அதில் —
மதவியக்கம், நிறைப்புத்திய
அழிப்பும் — மகாத்மாவின் கொள்கை
கள் என்றும், அவை அமைந்திய
அளவில் நடைமுறைப்படுத்தப்
படவில்லை. இந்திய அமைப்
பாட்டை திருநாட்டை, தமிழகம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
உறுதி எடுப்போம்.
விடுதலை என்றும் — [illegible]
திண்டாட்டம் — என்றும் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
இல்லை. இன்னும் தேசிய அளவில் மிகப்
பெரிய [illegible] பொருளாதார மாற்றத்
தைச் செய்து [illegible]

[illegible] என்பதை
மறந்திடலாகாது. [illegible]
பிறரும், பொருளாதாரத் துறையிலும்
துணிந்து எடுக்கின்ற புரட்சிகரமான
நடவடிக்கைகளின் மூலமே, இந்தியா
வை ஒளி பொருந்திய நாடாகத்
திகழவைக்க முடியும். [illegible]
க முடியாத [illegible]
வணங்கி, தொண்டாற்றத் தொடர்
வோம்! [illegible]
போம் — என்று கூறி என் இதய
வாழ்த்துக்களை [illegible] தெரிவித்
துக் கொள்கிறேன். வணக்கம்.

சென்னை கோட்டை கொத்தளத்தில் (15.8.1974) விடுதலைநாள் விழாவில் முதன்முதலாக நாட்டுக் கொடியை ஏற்றிவைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.

# கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தாயகத்தின் விடுதலைக்காகவும் தமிழினத்தின் தன்மானங் காக்கவும் முதல் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி புரிந்த பாஞ்சாலங்குறிச்சியில், பதினைரை ஏக்கர் நிலத்தில் ரூ. 7 இலட்சம் செலவில் தமிழக அரசு எழுப்பியுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டையினை 18—8—1974-ல் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

திறப்பு விழாவையொட்டி, முக்கடல் சங்கமமோ, மூவேந்தர் அணிவகுப்போ என்று வியக்கத் தக்க வகையில், எழுச்சியும் உணர்ச்சியும் இரண்டறக் கலந்து, மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. திறப்பு விழாவிற்கு முன்னர் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கோட்டையின் உள்ளே கட்டபொம்மன் அரியணையில் வீற்றிருப்பதுபோல் அமைந்த 7 அடி உயரக் கருங்கற் சிலை இடம் பெற்றுள்ளது. மற்றும், ஊமைத்துரை, பகடை சுந்தரலிங்கம், வெள்ளையத்தேவன், தானாபதிப்பிள்ளை ஆகியோருக்கும் சிலைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்களில் 200 பேருக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் அன்றைய தினம் நிலப்பட்டா, மனைப்பட்டா ஆகியவற்றை வழங்கினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. க. சுப்பு வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்களும், சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் மணலி கந்தசாமி, முத்தையா, கதிரவன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். சிவசாமி அவர்களும் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சென்னப்ப ரெட்டியார் அவர்களும் இந்த விழாவில் பங்கேற்றனர்.





# செய்தித் துறையும் தமிழ்நாட்டு அரசும்

அமைச்சர் என். வி. நடராசன்



நமது ஜனநாயகம் சிறு பிள்ளைப் பருவத்தில் உள்ளது. நமது மக்கள் தொகையோ லட்சோப லட்சமாய்ப் பெருகி வருகிறது.

எனினும், நம் மக்களில் பெரும்பாலோர் இன்னும் பத்திரிகைகள், வானொலி, டெலிவிஷன் போன்ற தகவல் தொடர்பு வசதிகளைப் பெறவில்லை.

ஒரு திட்டமிட்ட சமுதாய அமைப்பு முறையை நாம் நாடி உழைத்து வருகிறோம். இந்தச் சூழ்நிலையில் தகவல் மற்றும் விளம்பர அமைப்புகள் பெருங் கடமையை ஆற்ற வேண்டியிருக்கின்றன.

பொருளாதார-சமூக முன்னேற்றத் தேவையான அளவு தற்போது இந்தியாவில் தகவல் அமைப்பு முறை இல்லை. எனவே இந்தப் பொதுத் தொடர்பு வசதிகள் நவீன அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்; விஸ்தரிக்கப்பட வேண்டும்.

நீங்களெல்லாம் அறிந்தபடி நமது நாட்டில் சக்தி வாய்ந்த செய்தித் தொடர்பு வசதிகள் வானொலி, டெலிவிஷன் மற்றும் திரைப்படங்களாகும்.

அவைகள் மொழி எல்லைகளைக் கடந்து செல்கின்றன. குக்கிராமத்திலிருந்து மக்களைக் கூட எட்டுகின்றன.

1972-ஆம் ஆண்டின் கணக்கின்படி, இந்தியாவில் உரிமம் பெற்ற வானொலிப் பெட்டிகள் ஒரு கோடியே 30 லட்சம் உள்ளன என்று அறிகிறேன். அதாவது நான்கில் ஒரு பகுதி வீடுகளில்தான் அவைகள் உள்ளன.

நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள வானொலிப்பெட்டிகளின் விகிதாச்சாரமோ ஏற்றத்தாழ்வு கொண்டவை.

எமது மாநிலத்தில் இரு வானொலி நிலையங்கள் கிராமவாசிகளுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. இதனால் கிராமப்புறங்களில் வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகி வருகின்றன. மேலும் எமது மாநிலத்தில் வானொலி நிலையங்களை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையிலிருந்து இதை அறியலாம்.

நெல்லை மற்றும் கோவையிலுள்ள அஞ்சல் நிலையங்களைத் தரம் உயர்த்தும்படி எமது அரசாங்கம் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சரைக் கேட்டு வருகிறது.

அன்றியும், மதுரையில் முழுமையான வசதிகளுடன் வானொலி நிலையம் அமைவதையும் நாங்கள் விரும்புகிறோம். இந்த நிலையம் அமைந்தால், அது விவசாயிகளின் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்யும்.

ஐந்தாம் திட்டக் காலத்திலேயே மதுரையில் வானொலி நிலையம் அமைக்க மத்திய அரசு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னையில் டெலிவிஷன் நிலையம் அமைக்க எமது அரசு எல்லா உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகிறது என்பதை இந்த மாநாட்டுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலையம் விரைந்து இயங்கத் தொடங்குவதைத் தமிழ்நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

ஏற்கனவே வேறிடங்களில் அமைந்துள்ளவை போலன்றி, சென்னையில் அமையும் டெலிவிஷன் நிலையம் தொடக்கப் பள்ளிகளுக்கான கல்வி நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என எமது அரசாங்கம் நினைக்கிறது.

குழந்தைகளைச் சிறந்த குடிமக்களாக்க வேண்டும்; விரும்பிய இலக்கை அடையும் வண்ணம் இளம் மனதுகளை உருவாக்க வேண்டும்; இதுவே ஒரு சேம நல அரசின் அடிப்படையான பொறுப்பென்பதை நீங்களெல்லோரும் அறிவீர்கள்.

இந்த நோக்கை நிறைவேற்ற சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 1500-க்குக் குறையாமல் தொலைக் காட்சிப் பெட்டிகள் தேவைப்படும்.

எனவே, இந்தப் பெட்டிகளை இலவசமாய் வழங்க மத்திய அரசு முன்வருமென்று கருதுகிறேன்.

பம்பாயிலும் டெல்லியிலும் எமக்குக் கிடைத்த அனுபவங்கள் (சொந்தத்தில்) தொலைக் காட்சிப் பெட்டிகள் வைத்திருப்போருக்கு மட்டுமே இதைக் கண்டுகளிக்கும் வாய்ப்புக் கிட்டுகிறது என்பதைக் காட்டுகின்றன. ஆனால் அது கூடாது.

நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொன்னதை இத்தொடர்பில் எடுத்துக்கூறுவது தொடர்புடையது என்று கருதுகிறேன்.

"ஒரு குறிப்பிட்ட சிறு பகுதியினருக்கு மட்டுமே டெலிவிஷன் வசதி கிடைப்பதென்றால், அது தக்கதில்லை. எனவே, நாம் எங்கெல்லாம் டெலிவிஷன் அல்லது ரேடியோ நிலையம் வைத்திருக்கிறோமோ அங்கெல்லாம் அதன் பயன் பெருமளவு மக்களுக்கு எட்டும்படியும் அதிகப்படியான பொதுப் பெட்டிகள் இருக்கும்படியும பார்த்துக் கொள்ள வேண்டும்''' என்றார் அவர் 1972-ல்

‚மது தமிழ்நாட்டுத் திரைப்டத் தொழில் நுட்பக் கல்லூரி கற்பனைத்திறம் படைத்த தொழில் நுட்பதாரிகளை உருவாக்கி இருக்கிறது. அவர்களை சென்னையில் மட்டுமின்றி இந்தியாவெங்கணும் டெலிவிஷன் நிலையங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தகவல் துறை விஸ்தரிப்பு என்பது ஒரு தொழில் நுட்பச் செயல் திட்டம். எனவே, இத்துறையில் பயிற்சி என்பது தவிர்க்க முடியாதது.

எனவே, உள்ளிருப்பு ஊழியப் பயிற்சிக் கேந்திரம் என்ற உத்தேசத் திட்டம் எமது மாநில ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு அங்கமாக மாநிலத்துறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

அந்தப் பயிற்சிக் கேந்திரத்தை நடப்பு ஆண்டிலேயே துவக்க நாங்கள் கருதியுள்ளோம். எனவே அதற்கான நிதி ஒதுக்கீட்டைத் தரும்படி நான் திட்டக் கமிஷனைக் கோருகிறேன்.

செய்திப்படங்கள் போக, கிராமப்புறங்களுக்குத் தேவையான சிறு படங்களைத் தயாரிப்பதிலும் எமது மாநில அரசின் திரைப்படப பிரிவு ஒரு சாதனையைக் கண்டிருக்கிறது.

ஆங்கிலத்திலும், தமிழிலும் நாங்கள் வெளியிடும் 'தமிழரசு' என்ற மாதமிரு முறை ஏடு ஐம்பதாயிரம் பிரதிகள் விற்பனையாகின்றன.

சிறந்த தகவல் பணிக்காகவும், பொது மக்கள் தொடர்புக்காகவும் நாங்கள் எல்லா வசதிகளையும் பயன்படுத்த முயன்று வருகிறோம்.

ஆனால், திரைப்படக் காமிராக்கள், பிலிம் மற்றுமுள்ள கருவிகளைப் பெறுவதில் (இறக்குமதி சம்பந்தப்பட்டவற்றில்) நாங்கள் அடிக்கடி தொல்லைகளைச் சந்தித்து வருகிறோம். தேவையான அந்நியச் செலாவணியை அனுமதிக்க வேண்டுமென நான் மத்திய அரசை வேண்டுகிறேன்.

நாங்கள் திரை அரங்கக் கார்ப்பரேஷன் என்ற ஓர் அமைப்பை வைத்திருக்கிறோம். இந்தியாவில், அவ்வகையிலேயே முதலாவதாகும் இது. கிராமப்புறப் பகுதிகளில் நிரந்தரக் கொட்டகைகளை உருவாக்க, கடன் தருதல், தொழில் நுட்ப ஆலோசனை உட்பட தொடர்புடைய பிற உதவிகளையும் அளித்தல் ஆகியவற்றின் மூலம் இந்தக் கார்ப்பரேஷன் ஊக்கமளித்து வருகிறது.

எழுபது தியேட்டர்களுக்குக் கடன் தந்ததில், ஐந்து இப்போது இயங்கி வருகின்றன. நம் செப்டம்பர் திங்களில் இன்னும் ... இயங்கவிருக்கின்றன

சமூகத் திட்டமிடல், வறியோரின் உயர்வு ஆகியவற்றின் மீது எமது முதல்வர் கலைஞர் அவர்கள் அதிக அழுத்தம் காட்டிவருகிறார்.

அதற்கேற்ப உடல் ஊனமுற்றோருக்கும், தொழு நோயாளிகளுக்கும் மறுவாழ்வுதரும் திட்டத்தை நாங்கள் அமல்படுத்தி வருகிறோம். இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்தி வருகிறோம். வீடற்றவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களைத் தாராளமாக வழங்கி வருகிறோம்.

இந்த நல்வாழ்வுத் திட்டங்களெல்லாம் பிற மாநிலங்களிலும் விளம்பரப்படுத்தப்பட வேண்டியவை; அப்படிப்பட்ட தகவல் முயற்சிகள் பாமரனின் மனத்தில் நம்பிக்கையை ஊட்டி-அவன் இந்நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கெடுப்பதை உத்திரவாதம் செய்யும். எனவேதான் நான் இவற்றை இங்கே குறிப்பிட்டேன்.

சுதந்தரத்திற்குப் பின், இந்தியாவின் உண்மையான தோற்றத்தை எடுத்துக்காட்டுவதில் ஏடுகள் அடிக்கடி தவறிவிடுகின்றன. எனவே, இதற்கென்று ஓர் ஒழுக்க நியதியை இந்த மாநாடு எடுத்துக்கூறும் என்று கருதுகிறேன்.

புதிய சமூக அமைப்பை உருவாக்க இந்த நாடு போடும் நடையோடு பத்திரிகை உலகமும் சேரவேண்டும்.

[புதுடெல்லியில் 4—8—1974 அன்று நடைபெற்ற மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை].



## மிருகங்களுக்குத் தரும் மருந்துகள்



யானையிலிருந்து பூனை வரை விலங்கினங்கள் பல வகை. உடலமைப்பு, உடல்வாகு பல திறப்பட்டவை. நோய்க்காக இவைகளுக்கு மருந்து கொடுக்கும் போது, அந்த மருந்தின் அளவு மிருகத்துக்கு மிருகம் வேறுபடும். எந்த அளவுககு அதில் வேறுபாடு உள்ளது என்பது கீழேதரப்படுகிறது. இநதத தகவல் கால்நடை மருததுவக கல்லூரி அண்மையில் நடத்திய பொருட்காட்சியிலிருந்து பெறபபட்டது.

நாயககு ஒரு வேளை மருநது ஏறககுறைய மனிதாகள் உட கொள்ளும் அதே அளவு

பூனைக்கு அதில் பாதி;

பன்றிக்கு இரண்டு மடங்கு;

வெள்ளாடு, செம்மறியாடு ஆகியவைகளுக்கு மூன்று மடங்கு;

குதிரைக்கு 16 மடங்கு;

மாடுகள், எருமைகள் 24 மடங்கு.



# கட்டபொம்மன் பேசுகின்றேன்!



வானந்தா னுய்ப்பொழியும்; குளிரும் பூமி!
வரட்சிமாறப் பயிர்செய்வான் நமது தோழன்!
ஏனந்த வெள்ளையனுக் கிறை செலுத்தி
இழிநிலையில் நம்மைநாம் ஆள வேண்டும்?
மானந்தான் பெரிதுநமக்கு; உயிரோ துச்சம்!
மறத்தமிழர் குடிப்பெருமை புராணம் அல்ல!
ஆனந்தம் அடிமைமண்ணில் இல்லை; என்றும்
அந்நியருக் கிடங்கொடுத்தல் மடமை என்றேன்!

வழக்கம்போல் உடன்பிறந்தான் உடன்தான் நின்றான்!
வஞ்சகமாய் நரிவேலை செய்யும் ஈனன்
சழக்கருடன் சேர்ந்துகொண்டான்; சதிகள் செய்தான்!
சண்டாளர், பிழைக்கவந்தோர், நாட்டை ஆள
உழக்களவும் உரிமையிலார் படிய ளந்தால்—
உப்பிட்டுச் சோறுதின்போன் உணர்வு போமோ?
கிழக்கையாள மேற்கிருந்து வந்த கூட்டம்
கிடுகிடுக்கப் போர்தொடுத்தேன்; எனைய ழித்தார்!

பூண்டற்றுப் போகட்டும்; எனது வம்சம்
புகழற்றுப் போகட்டும் நம்நா டென்றே—
ஆண்டஅந்தப் பரங்கியர்கள் கனவு கண்டார்!
அடிமட்ட மாய்இடித்தார் கோட்டை யெல்லாம்!
வேண்டுமென்றே உழுதுபோட்டார்! ஆம ணக்கை
விதைத்திட்டார்! சுதந்தரத்தின் வேட்கை யாக
மூண்டெழுந்து வெள்ளையரை வெளியே தள்ளி
முழுவதுமே குடியரசாய் மலர்ந்த தன்றோ?

இருபத்தே ழாண்டுகள்முன் இந்தி யாவின்
ஈடற்ற சுதந்தரத்தைப் பெற்றீர்! ஆனால்
ஒருபக்தன் பாரதத்தாய் விடுத லைக்கே
உயிர்விட்டேன் முதன்முதலாய்; எனைம றந்தீர்!
கருவத்தால் என்தலைதான் கனக்கும் வண்ணம்
கனித்தமிழன் ஒருவன்தான் கனவு கண்டான்—
உருவத்தைச் சிதைத்தழித்தோர் வியக்கு மாறு
ஓங்கியெழும் கோட்டையொன்றைச் சமைத்தான் மீண்டும்!

இதன்முன்னர் வேறெவர்க்கும் தோன்றா எண்ணம்
எத்தனையோ இவன்அறிவில் முளைத்த தாலே—
முதன்முதலாய் நம்நாட்டுக் கொடியை ஏற்றும்
முதலமைச்சாய் இவனன்றோ உரிமை பெற்றான்
அதன்பயனை இன்றுணர மாட்டீர்! என்னை
இத்தனைநாள் ஏறெடுத்தும் பாரா மக்கள்—
நிதமினிமேல் பாஞ்சாலங் குறிச்சி நோக்கி
நிமிர்ந்தநடை போட்டுவா நினைப்பீர்; திண்ணம்!

கோட்டையென்ன; கொத்தளங்கள், மதில்கள் என்ன;
கொலுவிருக்கும் நேர்த்தியென்ன; என்முன் னாலே
கோட்டைவிடா ஊமதுரை, வெள்ளைத் தேவன்,
கொள்கைக்கோ சுந்தரன்,நம் பிள்ளை உள்ளார்!
நாட்டையாளும் நற்கலைஞர் உயிரை மீட்டார்;
நன்றிசொல்லத் தான்வந்தேன்; நினைவிற் கொள்வீர்!
நாட்டவரே; வீரனுக்குச் சாவே இல்லை;
நம்பிடுவீர்; வாழ்கின்றேன், உமக்கா கத்தான்!

கவிஞர் கருணானந்தம்

# கேளுங்கள் கொடுக்கப்படும்



விஞ : ஐயா, வணக்கம் ! 1973—74-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தின் சிறந்த வானொலி மன்றமாக 'சிவகுருநாதபுரம் வானொலி மன்றம்' தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தங்களது 'தமிழரசு' இதழ் எம் போன்ற அமைப்பாளர்களுக்குத் தக்க கட்டுரைகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும், பயிர் செய்யும் முறைகளையும் வெளியிடுவது மிகவும் பயனுள்ளதாய் உள்ளது. அதனை எமது உறுப்பினர்கள் கண்டு, படித்துப் பாராட்டுகின்றனர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். உழவர்களுக்குப் பயன்படும் வண்ணம் 'தமிழரசு' ஏட்டில் 15 நாட்களுக்கு ஒரு முறை, ஒரு சிறு பகுதியை ஒதுக்கி, இரவு 7-30 மணி முதல் 8 மணி வரை ஒலிபரப்பு ஆகும் விவசாயிகளுக்கான நிகழ்ச்சி நிரலை வெளியிட்டால் மிகவும் பயனுடையதாக இருக்கும். செயல்படுத்துவீர்களா?

ஜிப்சத்தை கடலைக்கு அடியுரமாக போடுவது நல்லதா? அல்லது 40-ஆம் நாள் மேலுரமாகப் போடுவது நல்லதா?

கரிகாலன், கண்ணகி ரகங்களை நெல்லை மாவட்டத்தில், 'பிசானம்' பருவத்தில் பயிரிடலாமா? எவ்வளவு மகசூல் தரும்?

—எஸ். ராஜு,
அமைப்பாளர்,
கிராம வானொலி மன்றம்,
சிவகுருநாதபுரம் (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

விடை : தங்கள் வேண்டுகோளுக்கு இணங்க, விரைவில் உழவர் பெருமக்களுக்கான வானொலி நிகழ்ச்சி நிரலைத் தொடர்புடைய அலுவலர்களிடம் இருந்து பெற்று, அதை உரிய முறையில் வெளியிட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜிப்சத்தை நிலக்கடலைக்கு அடியுரமாகப் போட வேண்டாம். நிலக்கடலை விதைத்த 40 முதல் 45 நாட்களுக்குள் அதாவது விழுது தோன்றும் சமயத்தில் (Peg formation stage), ஏக்கருக்கு 80 கிலோ வீதம் இடுவதே சிறந்தது.

நெல்லை மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் பயிரிடுவதற்கு 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய ரகங்கள் ஏற்றவையல்ல. 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய இரு ரகங்களும் நெல்லை மாவட்டத்தில் கார் பருவத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) பயிரிடுவதற்கே சிறந்தவையாகும்.

நெல்லை மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் 'பவானி' 'ஐ.ஆர். 20' ஆகிய இரு ரகங்களையும் பயிரிடுவதே சிறந்தது என்பது 1973 74-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பெற்ற அனுசாரணை ஆராய்ச்சிகளில் இருந்து (Adaptive Research) தெரியவருகிறது. மேலும் 'பவானி' ரகம், 'ஐ.ஆர். 20' ரகத்தைவிட 8 சதம் அதிக தானிய மகசூலும், 23 சதம் அதிக வைக்கோல் மகசூலும் கொடுத்துள்ளது என்பதும் தெளிவாகியுள்ளது. அச்சோதனைகளில் இருந்து பிசானம் பருவத்தில் 'பவானி' ஏக்கருக்கு 2,186 கிலோ வரையும், 'ஐ.ஆர். 20' ஏக்கருக்கு 2,028 கிலோ வரையும் மகசூல் அளிக்க வல்லது என்பதும் புலனாகியுள்ளது.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் 'பவானி', 'ஐ.ஆர். 20' ஆகிய இரு ரகங்களையும் பயிரிடுவதே சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விஞ : விவசாயக் குறிப்பின்படி நெல் சாகுபடிக்கு மருந்து அடிக்கும் பொழுது ஒரு பூச்சி மருந்தையும், ஒரு பூஞ்சாள மருந்தையும் நட்ட 3 வாரங்களுக்கு ஒரு முறை அடிக்கும்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது பத்திரிகைகளில் (Sevidol 4G, Furadon 3G) போன்ற குருணைகளைத் தண்ணீரில் போடும்படி கூறி இருக்கிறார்கள். இந்தக் குருணைகளைத் தண்ணீரில் வயலில் போட்டுவிட்டு, இன்னும் மற்ற பூச்சிப் பூஞ்சாள மருந்தை ஸ்ப்ரேயரில் அடிக்க வேண்டுமா? இக் குருணைகள் பூச்சி மருந்தா? பூஞ்சாள மருந்தா? அல்லது பூச்சிக்கும், பூஞ்சாளத்திற்கும் இக் குருணைகளை மாத்திரம் பாவினால் போதுமா? உயர் விளைச்சல் ரகங்களான 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20', 'கருணை' போன்றவற்றிற்கு இக்குருணைகளைப் பாவலாமா?

—செல்வி வி. எம். உமா,
53, மேற்குத்தெரு,
தாத்தையங்கார்பேட்டை,
திருச்சி மாவட்டம்.

விடை : நெல்லில் பூச்சிகளும், நோய்களும் வந்தபின் மருந்து தெளிப்பதை விட வருமுன் தடுப்பாக (Prophylactic treatment) மருந்து தெளிப்பதே சிறந்த பயனுடையதாகும். எனவேதான், நெல்லில் தோன்றும் பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த வருமுன் தடுப்பாக ஒரு பூச்சி மருந்தையும், ஒரு பூஞ்சாள மருந்தையும் நட்ட 3 வாரங்களில் இருந்து, 3 வாரங்களுக்கு ஒரு முறை வீதம் மருந்து தெளிக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது.

அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து பூச்சி மருந்துகளைத் தூளாகவோ அல்லது தண்ணீரில் கலந்தோ பயன்படுத்துவதை விட, குருணைகளாகப் (Granules) பயன்படுத்துவதால் நல்ல பயன் ஏற்படுவதுடன், பூச்சிகளைக் கட்டுப்படுத்த எளிதான முறை இதுவே, என்பதும் தெளிவாகியுள்ளது.

'செவிடால்' (Sevidol) 4 சத குருணைகளாகவும், 'ஃபூரடான்' (Furadon) 5 சதக் குருணைகளாகவும் விற்பனையாகின்றன. இவை பூச்சி மருந்துகளே! இக் குருணைகள் நோயைக் கட்டுப்படுத்தும் பூஞ்சாள மருந்து அல்ல!

குறிப்பாக நெல்லில் தோன்றும் 'மஞ்சள் குருத்துப் பூச்சி' 'குருத்து ஈ' போன்ற பூச்சிகளை ஒழிக்க மருந்து தெளிப்பதற்குப் பதிலாக, வயலில் தண்ணீரை 5 முதல் 7 சென்டிமீட்டர் (2 முதல் 2.5 அங்குலம்) அளவுத் தேங்கச்செய்து, அதில் 'செவிடால்', 'ஃபூரடான்' போன்ற குருணைகளைத் தூவ வேண்டும். குருணைகள் தூவி 3 நாட்கள் வரை, வயலில் தண்ணீர் மட்டம் குறையாமல் இருக்கும்படிச் செய்ய வேண்டும். இவ்வகைக் குருணைகளை நெல் நாற்று நட்ட 15-வது நாளிலும், 45-வது நாளிலும் ஆக இரு முறைகள் தூவ வேண்டும்.

நெல்லில் தோன்றும் 'தத்துப் பூச்சிகள்', 'மஞ்சள் குருத்துப் பூச்சி' ஆகியவைகளை அழிக்க 'செவிடால்' 4 சத குருணைகளைப் பயன்படுத்த வேண்டும்.

நெல்லைத் தாக்கும் 'மஞ்சள் குருத்துப் பூச்சி', 'ஆனைக் கொம்பன்', 'குருத்து ஈ' ஆகியவைகளைக் கட்டுப்படுத்த 'ஃபூரடான்' 5 சத குருணைகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

பூஞ்சாளங்களால் ஏற்படும் நோய்க்குப் பூஞ்சாள மருந்துகளைத் தனியே தெளித்திட வேண்டும்.

'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20', 'கருணை' போன்ற உயர்விளைச்சல் இரகங்களில் தோன்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'செவிடால்' அல்லது 'ஃபூரடான்' குருணைகளைப் பயன்படுத்தல் சிறந்தது.

விஞ: சூரிய காந்தியை நன்செய் நிலங்களில் ஜூன், ஜூலை ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பயிரிடலாமா? விதையை முழுமையாக விற்பனைக்குக் கொள்முதல் செய்யும் வனஸ்பதி ஆயில் மில்களின் விலாசங்களைத் தெரிவிக்கவும். எப்.சி.ஐ. (F.C.I.) மூலம் இதை விற்க முடியுமா?

—பாலு பி.ஏ.,
மாயூரம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

விடை : சூரியகாந்தியை மழைக்காலம் தவிர்த்த (அக்டோபர், நவம்பர், டிசம்பர்) மற்றெல்லா காலங்களிலும் இறவையாகப் பயிரிடலாம். சூரிய காந்தி விதைகள் தரமானவைகளாக இருந்தால், வேளாண்மைத் துறையினரே வாங்கிக் கொள்கின்றனர். வனஸ்பதி எண்ணெய் ஆலையினர் தற்சமயம் வியாபாரிகள் மூலமே சூரியகாந்தி விதைகளை வாங்கிக் கொள்கின்றனராம். தனிப்பட்ட உழவர்களிடமிருந்து நேரடியாக வாங்குவதில்லையாம். ஏனெனில், பெருமளவில் சூரிய காந்தி பயிரிட்டு, பெருமளவில் விற்பனைக்கு வழங்க இன்னும் உழவர்கள் முன்வரவில்லை. சூரிய காந்தி விதைகளிலிருந்து எண்ணெய் எடுத்து விற்பனை செய்யலாம். அவ்வாறு செய்ய இயலாவிட்டால் அல்லது சூரியகாந்தி விதைகளை விற்பது பிரச்சினையாக இருந்தால் மாயவரத்தில் உள்ள உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களிடம் இதுபற்றி கலந்தாலோசித்தால், அவர் உங்களுக்கு உதவிடக்கூடும்.



விஞ: 16-5-74 தேதிய 'தமிழரசு' இதழில், சாகுபடி விவரங்களைப் பற்றி எழுதும் புத்தகங்களின் பட்டியலைப் பார்த்தேன். உழவர் துணைவன், வானொலிக் கதிர், விவசாயச் செய்திக் கதிர், ஆகியயவை தனிநபர்களுக்கு இலவசமாகக் கிடைக்குமா? அல்லது கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கத்திற்கு மட்டுமே அனுப்பப்படுமா?

—வி. ஆர். நாதன்,
கோவை-16.

விடை : ''உழவர் துணைவன்' என்ற திங்களிதழுக்கு ஆண்டு சந்தா ரூபாய் 6 செலுத்த வேண்டும் என்று அதன் செயலர் அண்மையில் தெரிவித்துள்ளார். எனவே, சந்தா கட்டினால் மட்டுமே 'உழவர் துணைவன்' இதழ் பெறமுடியும்.

'வானொலிக் கதிர்' தனிப்பட்ட உழவர்களுக்கும் இலவசமாக அனுப்பப்படும். 'செய்திக் கதிர்' (News Letter) என்பது திங்கள் தோறும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்படும் ஆங்கில இதழாகும்.

இலவச வெளியீடுகள் என்றாலே பலர் அவைகளை அனுப்பச் சொல்லி கடிதம் எழுதி விடுகின்றார்கள்! இதனால் இலவச வெளியீடுகளை எல்லார்க்கும் அனுப்ப இயலாமல் போய் விடுகிறது. எனவே, தனிப்பட்டவர்கள் இலவச வெளியீடுகளைக் கேட்டுப் பெறுவதை விட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கிராம வானொலி மன்றங்கள் அல்லது உழவர் விவாதக் குழுக்கள் ஆகியவைகளின் சார்பில் 'வானொலிக் கதிர்' போன்ற இலவச வெளியீடுகளைப் பெற்று, எல்லா உறுப்பினர்களும் படித்துப் பயன்பெறச் செய்வதே சிறந்தது.

—ஆர்.எம்.

# புள்ளி நோய் தடுக்கவும், எள்ளின் விளைவு பெருக்கவும் ஒரு மருந்து!

ஆனைத்திந்திய எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின், வேளாண் தாவர இயல் துறை மற்றும் தாவர நோயியல் துறை ஆகிய துறைகளில் எள்ளின் சராசரி மகசூலை அதிகரிக்கச் செய்யத் தகுந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொறுக்கு வித்துக்கள் உட்பட்ட சீரிய வேளாண்மை முறைகளினால் கிடைக்கும் விளைச்சல், நோய்த் தாக்குதலினால் மிகவும் குறைந்துவிடுகிறது. எள்ளைத் தாக்கும் நோய்களில் ''ஆல்ட்டர் நேரியா செசாமி'' என்னும் பூசணத்தால் உண்டாகும் ''இலைப்புள்ளி நோய்'' முக்கியமானதாகும்.

இந்தப் புள்ளி நோய், ஆடிப்பட்ட எள்ளிலும், மாசிப்பட்ட எள்ளிலும் விதைத்த ஒரு மாதத்திற்குப் பிறகு தோன்றும். ஈரக் காற்று மிகுந்த சீதோஷ்ண நிலையில் இது வேகமாகப் பரவும். நோய் அதிகமானால் இலைகள் உதிர்ந்து விடும். இதனால் விளைச்சலில் ஏறத்தாழ 50 முதல் 80 சத விகிதம் வரை இழப்பு ஏற்படும். இந்த நோயைத் தடுக்க 1973-ஆம் ஆண்டு பல்வேறு பூசண மருந்துகளை உபயோகப்படுத்தி இரு வயல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 'டைத்தேன் எம். 45' என்னும் மருந்தை 0.2 சத விகித நீர்க் கலவையாக (எக்டேருக்கு 750 கிராம் மருந்து) தெளிப்பதன் மூலம் 'ஆல்ட்டர் நேரியா' இலைப் புள்ளி நோயை வெகுவாகக் குறைத்து விடலாம் என்று கண்டறியப்பட்டது.

மாசி (மார்ச்சு) மாதம் விதைத்த பயிருக்கு எள் விதைத்து 5-வது வாரத்திலும், பிறகு ஏழாவது வாரத்திலும் ஆக இரு முறைகள் மருந்து தெளிக்கப்பட்டது.

ஆடி மாதம் (ஆகஸ்ட) விதைத்த பயிருக்கு மூன்று முறை அதாவது 5, 7, 9-வது வாரங்களில் மருந்து தெளிக்கப்பட்டது. ஆய்வின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன இந்த ஆய்வு சிறிய பாத்திகளில் (3.6 × 3.6 மீட்டர் அளவு) மேற்கொள்ளப்படடு, அவற்றில் கிடைத்த மகசூல் எக்டேர் அளவிற்குக் கணக்கிடப்பட்டிருக்கின்றன. ''டைத்தேன்—எம். 45'' மருந்து தெளித்ததால் ஏற்பட்ட பயன் பின்கண்டவாறு உள்ளது:

| | விதைப்புக் காலம் | |
|---|---|---|
| | மார்ச் 1973 | ஆகஸ்ட் 1973 |
| விவரம் | எக்டேர்மகசூல் | எக்டேர்மகசூல் |
| மருந்தடிக்காத பயிர் .. | 403 கிலோ | 385 கிலோ |
| 'டைத்தேன் எம். 45' மருந்து தெளித்த பயிர் | 665 கிலோ. | 702 கிலோ |
| அதிக விளைச்சல் (கிலோ) ... | 262 கிலோ. | 317 கிலோ. |
| அதிக விளைவு சத விகிதம் ... | 65.00 | 82.40 |
| மருந்தடிப்பு செலவு (ஏறக் குறைய) ... | 80.00 ரூபாய் | 120.00 ரூபாய் |
| நிகர இலாபம் (ஒரு கிலோ எள். ரூ. 2.50 விதம்) | 575.00 ரூபாய் | 672 ரூபாய் |

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து 'டைத்தேன்—எம். 45' மருந்து தெளிப்பதனால் 'ஆல்ட்டர் நேரியா' புள்ளி நோய் பெருமளவில் கட்டுப்படுத்தப்படுவதோடு, விளைச்சலும் 65 முதல் 82 சத விகிதம் வரை அதிகமாகிறது என்பது புலனாகின்றது. நிகர இலாபமும் எக்டேருக்கு ஏறக்குறைய அறுநூற்றுக்கு மேல்கிடைக்க ஏதுவாகிறது இதனால், 'மாங்கனீஸ்' கலந்த பூசண நாசினியாகிய 'டைத்தேன்—எம். 45' மருந்து இலைப்புள்ளி நோயைத் தடுப்பதோடு, எள்ளின் விளைச்சலையும் பெருகச் செய்கிறது என்பதும் தெளிவாகிறது எனவே, இந்த உண்மையை உழவர் பெருமக்கள் உணர்ந்து, எள் பயிரில் 'டைத்தேன்—எம். 45' மருந்து தெளித்து, அளப்பரிய விளைவு பெருக்கிப் பலனடையும்படி கோருகிறோம்.

தொகுப்பு : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

# ஆண்டாள் நினைவு வரும் ஊரில்



# ஆலையின் நினைவும் வரும்

ஆண்டாள் நினைவு வரும் ஊரில் ஆலையின் நினைவும் வரும் அளவுக்குச் சிறந்து விளங்குவது ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையாகும்.

நெசவாளர் பெருமக்களுக்கு நூல் தட்டுப்பாடு இல்லாமல் நியாயமான விலையில் தரமான நூல் கிடைக்க வேண்டும் என்ற அரசின் திட்டப்படி தமிழகத்தில் இரண்டாவதாக தொடங்கப்பட்ட ஆலை ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையாகும். இவ்வாலை தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 1957-ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் நாள் துவக்கப்பட்டது.

தொடக்கத்தில் 12, 544 கதிர்களுக்கு உரிமம் பெறப்பட்டு. 1961-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து உற்பத்தி தொடங்கியது. பின் இவ்வாலையின் வளர்ச்சிக்காக மேலும் 12,544 கதிர்களுக்கு உரிமம் பெறப்பட்டது. இவற்றை நிறுவும் வேலைகளனைத்தையும் மேற்கொள்ளப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து முழுவதும் உற்பத்திக்கு கொண்டு வரப்பட்டு விரிவாக்கும் பணி வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டது.

இந்தக் கூட்டுறவு நூற்பு ஆலையின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 60 இலட்சமாகும். பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 'ஏ', 'பி', 'சி', 'டி' என்று நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முறையே நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் இதர கூட்டுறவு சங்கங்களும், தனிப்பட்ட நபர்களும், தமிழ்நாடு அரசு சேர்ந்து 1,071 உறுப்பினர்கள் பங்குகள் எடுத்துள்ளனர். செலுத்தப்பட்ட மொத்த பங்குத்தொகை ரூ. 39.78 இலட்சத்தில் தமிழ்நாடு அரசின் பங்குத்தொகை ரூ. 28.70 இலட்சமாகும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை நிருவாகம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கீழ் 15 பேர் அடங்கிய நிருவாகக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிருவாகக் குழுவில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களும் அலுவலால் நியமிக்கப்பட்ட இயக்குநர்களும் உள்ளனர். மேலும் நிர்வாக இயக்குநராக அரசு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டு அன்றாட நடைமுறைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் வாரத்தில் ஏழு நாட்களும், நாள் ஒன்றுக்கு மூன்று பணிமாற்று முறைகளில் (Three shifts) வேலை நடைபெற்று வருகின்றது. ஆலையில், நெசவாளர் பெருமக்களின் தேவைக்கேற்ப அவ்வப்போது 40 நிர் முதல் 100 நிர் வரை கார்டட் நூலும், 2/40 கோம்ப்ட் ஓரிழை நூலும், 60 நிர் கோன் ஈரிழை நூலும் உற்பத்தி செய்யப்பட்டு, பெரும்பகுதி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கே விற்கப்படுகின்றது. நிறுவப்பட்ட கதிர்களில் பாதி கதிர்களில் 40 நிர் நூலும், மீதி பாதி கதிர்களில் 60 நிர், 80 நிர், 100 நிர் ஆகிய உயர்ந்த ரக நூலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த ஆலையில் தற்பொழுது 763 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களில் 494 நிரந்தர தொழிலாளர்கள் ஆகும். மேலும் பர்மா இலங்கை அகதிகளுக்கு புனர் வாழ்வளிக்கும் பொருட்டு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் 200 பேர்களுக்கு ஆலையில் பயிற்சி அளிக்கப்பட்டு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தமிழக அரசு ரூ. 15 இலட்சம் பங்குகளில் முதலீடு செய்து உதவியுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் தமிழகத்தில் ஏற்பட்ட ஆலை தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்தைத் தவிர வேறு எந்த வேலை நிறுத்தமும் அண்மைக் காலங்களில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு தொழிலாளர்களுக்கும், நிருவாகத்தின



ருக்கும் இடையே நல்லுறவு சிறப்புடன் விளங்கி வருகிறது.

பொதுவாக நம்நாடே மின் சாரப் பற்றுக்குறையால் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது. இந்த நெருக்கடி ஆலை தொழிலுக்கு பெரிய இடர்ப்பாட்டை ஏற்படுத்தியிருந்தாலும் இந்த ஆலையில் மின்வெட்டை எதிர் நோக்கி 250 கிலோ வாட் சக்தியுள்ள ஒரு 'டீசல் ஜெனரேட்டர்' நிறுவப்பட்டு இயங்கி வருவதால், மின்வெட்டு இருக்கும் காலங்களில் ஓரளவு உற்பத்தி பாதிப்பு குறைக்கப்பட்டு வருகிறது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்ற இயந்திரங்கள் பழுதுபட்டிருப்பதால், இந்த இயந்திரங்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டி நவீன கருவிகளுடன் புதுப்பித்தல் வேலைகளும் ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆலையில் தொழிலாளர்களுக்காக ஒரு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கமும், அத்தியாவசிய பண்டங்களை விநியோகிக்க ஒரு கூட்டுறவு பண்டகசாலையும் தொழிலாளர்களால் இயக்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர்களுக்காக தொழிலாளர் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டு ஆலையின் செலவில் கல்விச் சுற்றுலாக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில பிரிவு தொழி தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டும், தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஆலையின் செலவில் மருத்துவச் சிகிச்சை தருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

*1971-72*-ஆம் ஆண்டில் இந்த ஆலை இலாபகரமாக இயங்கி உறுப்பினர்களுக்கு ஆதாயப் பங்கு வழங்கப்பட்டது. இந்த ஆலை தொடர்ந்து இலாபகரமாக இயங்கி வருகின்றதால் சட்டப்படி கொடுக்கக்கூடிய உச்ச அளவு கூடுதல் ஆதாயப்பங்கு வழங்கியுள்ளது சிறப்பானதாகும். *1973-74*-ஆம் ஆண்டில் முந்திய ஆண்டைவிட கூடுதலான நிகர லாபம் கிடைக்கப்பெற்று ஆலை நல்ல நிலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மொத்தத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, ஏனைய ஆலைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பது மிகப் பொருத்தமாகும்.

—மா.






# இதயம் போல இயங்கும் ஒரு நிலையம்

குமார்

"அதோ, விரைந்து செல்கிறதே ஒரு ஊர்தி, அது என்ன காவல் துறையைச் சேர்ந்ததா?"

"இல்லை! சென்னை அரசினர் பொது மருத்துவமனையைச் சேர்ந்தது. 'மாரடைப்பு சிகிச்சை நடமாடும் நிலையம்' என்று அதற்குப் பெயர்!"

ஆம். இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள இந்த 'மாரடைப்பு சிகிச்சை நடமாடும் நிலையம்' (Mobile coronary care unit) ஜூலை 29-ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த ஊர்தியை டி.வி.எஸ். அறக்கட்டளையைச் சேர்ந்த திரு. இரத்தினம், சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு (Govt. General Hospital) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இதன் மதிப்பு ரூ. 80,000 ஆகும். இதில், மேலைநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட நவீன மருத்துவக் கருவிகள், சாதனங்கள் முதலியன பொருத்தப்பட்டுள்ளன. இவை மின்சார பாட்டரிகள் மூலம் இயங்கும்.

கருவிகள் வாங்குவதற்காக ரூ. 2 இலட்சமும், சிகிச்சை நிலையத்தின் நடைமுறைப் பணிச் செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ. 2 இலட்சமும் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

சென்னை மாநகர மக்களுக்கு இந்த நடமாடும் நிலையம் ஒரு சமய சஞ்சீவியாகும். மாரடைப்பு ஏற்பட்ட ஒரு சில நிமிடங்களுக்குள் இது நோயாளி இருக்கும் இடத்தைத் தேடி வந்து முதல் உதவி அளிக்கும்; பிறகு மருத்துவ மனைக்கு அழைத்து வரும். இந்த ஊர்தியில் மருத்துவத் துறை உதவிப் பேராசிரியர்களும், பிற மருத்துவ வல்லுநர்களும் இருப்பார்கள். அதாவது 4 மருத்துவர்கள், 4 செவிலியர்கள், 3 உதவியாளர்கள், ஒரு தகவல் தொடர்புப் பணியாளர் ஆகியோர் இருப்பர்.

இந்த நடமாடும் ஊர்தியில் தொலைதூரத் தகவல் தொடர்பு (Wireless communication) வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

காவல் துறையிலும், இராணுவத்திலும் மட்டுமே இது போன்ற தகவல் தொடர்பு வசதிகள் கொண்ட ஊர்திகள் உள்ளன; மருத்துவத் துறையில் இந்த வசதியைப் பெறுவது இதுவே முதல் தடவை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

இந்த ஊர்தி அனைத்து நாட்டு நகரங்களுக்கு ஏற்ப, உலக சுகாதார நிலையத்தின் நியதிகளுக்கு இசைவாக வடிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடமாடும் நிலையத்தின் அவசர உதவியைப் பெற, பொறுப்பான ஒருவரோ அல்லது குடும்ப மருத்துவரோ தொடர்பு கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே, சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் மாரடைப்புச் சிகிச்சைக்கான தனிப் பகுதி (Coronary care unit) ஒன்று 1972 முதல் செயல்பட்டு வருகிறது.

இந்தப் பகுதிக்குள் நுழைகிறோம்.

மேலை நாட்டு மருத்துவ மனையோ என்று ஐயுறத்தக்க அளவில் காட்சியளிக்கும் இது, முற்றிலும் குளிர் சாதன வசதியுடையது. இந்தப் பகுதியில் ஐந்து படுக்கைகள் உள்ளன.

ஒவ்வொரு படுக்கையறையிலும் இதய நோயாளிக்கான நவீன மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

அதோ! அந்த நோயாளிக்கு அருகே உள்ள ஒரு கருவியில் மின் அலைகள் ஓடுகின்றனவே! ஆம். இதயத்தின் ஓட்டத்தைத்தானே அது துல்லியமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது! மானிட்டர் (Monitor) என்னும் அந்தக் கருவியை, மனித இதயத்தின் தன்மைகளை—துடிப்புகளை எடுத்துக் காட்டும் ஒரு 'மினி' டெலிவிஷன் என்றும் கூறலாம்.

ஐந்து படுக்கைகளுக்கு மத்தியில் 'மைய எச்சரிக்கும் நிலையம்' (central Monitoring Station) ஒன்று காட்சியளிக்கிறது. இது கண்ணாடியால் மூடப்பட்டு அழகாய்த் தோற்றம் அளிக்கிறது. அதனுள்ளே அமைந்துள்ள ஒரு நவீன சாதனத்தின் முன், செவிலியர் ஒருவர் உட்கார்ந்து அப்படியென்ன கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்!

ஐந்து படுக்கைகளில், எந்தப் படுக்கையின் நோயாளி எப்படி இருக்கிறார் என்பதையும், அவரது இதய ஓட்டம் முதலியவற்றையும் இவர் உட்கார்ந்த இடத்திலிருந்தே இந்தச் சாதனத்தை இயக்கித் தெரிந்து கொள்ள முடியும்.

இருபத்து நான்கு மணி நேரமும் இதயம் போல் இயங்கும் இந்தப் பகுதி, இயங்கா இதயத்தை இயங்க வைக்கும் மகத்தான பணியினை மேற்கொண்டிருக்கிறது.

இந்தப் பிரிவில் டாக்டர் சி. செந்தில்நாதன் அவர்கள் தலைமையில் 8 மருத்துவர்களும், 10 செவிலியர்களும் அல்லும் பகலும் அரும் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வளவு பெரிய சென்னை மாநகரத்துக்கு இந்த ஐந்து படுக்கைகள் போதுமா?

இந்தப் பகுதியில் மாரடைப்பு (Heart attack) நோயாளி அபாய கட்டத்தைத் தாண்டும் வரைதான் வைக்கப்படுகிறார். அதாவது மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை அவர் இங்கே சிகிச்சை பெறுகிறார். அபாய கட்டத்தைத் தாண்டியதும் அவர் வேறொரு பகுதிக்குச் சிகிச்சைக்காக அனுப்பப்படுகிறார்.

இதயம் சரிவர இயங்கவில்லை என்றால் 10 வினாடிகளுக்குள் சிகிச்சை அளிக்க வேண்டுமாம். ஒரு அம்மையாருக்கு இதயம் பத்து தடவை சரிவர இயங்கவில்லையாம். அதாவது அவர் பத்து தடவையும் செத்துப் பிழைத்திருக்கிறார்! அந்த நிலையில் இதயத்தைத் துடிக்க வைத்து, அவருக்கு உயிரூட்டியுள்ளனர் இங்குள்ள

247



இது மருத்துவ மனையல்ல: மாரடைப்புச் சிகிச்சைக்கு உங்கள் இல்லம் தேடி வரும் நடமாடும் நிலையத்தின் உட்புறத் தோற்றம்.

மருத்துவர்கள். அதற்கான கருவி ஒன்றிருக்கிறது இங்கே. அதன் பெயர்: ஃபிப்ரிலேஷன் (Fibrillation).

அமைதியான சூழ்நிலை.

அழகிய தோற்றம்.

குளிர்சாதன வசதி.

அடிக்கடி வந்து கவனிக்க மருத்துவர்கள், செவிலியர்கள்!

சிகிச்சைக்குக் கட்டணம் நிறைய இருக்குமே!

அதுதான் இல்லை. ஏழை, எளியவர்களுக்குக் கூட இங்கே இலவச சிகிச்சைதான். ஆனால் ஒன்று. வருமான அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(சென்னை இராயப்பேட்டை மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவற்றில் மாரடைப்பு சிகிச்சைக்கான தனிப் பகுதிகள் (coronary care unit) உள்ளன.

சென்னை அரசினர் பொது மருத்துவ மனையோடு இணைந்த 'நடமாடும் மாரடைப்புச் சிகிச்சை நிலைய'த் துவக்க விழாவில் பேசிய நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார் :

''மாரடைப்பினால் பாதிக்கப்பட்டவரை மருத்துவ மனைக்கு எந்தவித ஆபத்தும் இல்லாமல் பாதுகாப்புடன் கொண்டு வர தேவையான வசதிகளும், சிகிச்சைக் கருவிகளும் இந்த நடமாடும் நிலையத்தில் உள்ளன.

''இந்த அமைப்பில் பணியாற்றுபவர்கள் இதயத்தைப் போலவே இயங்க வேண்டும். நீங்கள் எந்த ஒரு நிமிடத்திலும் கடமையாற்ற வேண்டியிருக்கலாம். ஆர்வத்துடன் பணியாற்றினால்தான் சிறந்த பலன் கிடைக்கும்''.

இந்த நடமாடும் நிலையத்துக்கு, இதய நோயால் பாதிக்கப்பட்ட திரு. கே.டி.எஸ். மணி, திரு. திருநாவுக்கரசு, தம் கணவர் சார்பில் திருமதி பிரேமா தேவதத்தா ஆகியோர் டேப் ரிகார்டர், மின் விசிறி போன்ற பரிசுகளை வழங்கி, தம் இதயம் திறந்து பேசியதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—பி.வி.ஜி.



## கண்புரை நோயும் நீக்கும் வழிமுறைகளும்

சாதாரணமாக அறுவைச் சிகிச்சை என்றாலே எல்லாருக்கும் அச்சம். அதிலும் கண்ணில் அறுவைச் சிகிச்சை என்றால் பயம் அதிகமாகவே இருக்கும். சாதாரணமாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே பெரும்பாலும் கண்ணில் புரை உண்டாகிறது. பலர் ''வயது அதிகம் ஆகிவிட்டது. இந்த வயதில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் உடல் தாங்குமா?'' என்று கேட்கிறார்கள்.

எந்த வயதிலும் 90 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் கூட அறுவைச் சிகிச்சை செய்யலாம். அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் உடலை நன்றாகப் பரிசோதனை செய்து உடல் நல்ல நிலையில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இருதயம் சரியாக வேலை செய்கிறதா என்று பார்க்க வேண்டும். இருதயம் சரியாக வேலை செய்கிறதா, இரத்த அழுத்தம் ஏதாவது இருக்கின்றதா, இருமல், ஆஸ்துமா போன்ற வியாதிகள் இருக்கின்றனவா, நீரிழிவு வியாதி இருக்கின்றதா என்பதை எல்லாம் விவரமாகப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். வயதானவர்களுக்கு இரத்தக் கொதிப்பு, நீரிழிவு போன்ற வியாதிகள் ஏற்படுவது இயல்பு. அந்த மாதிரி வியாதிகள் இருந்தால் அறுவைச் சிகிச்சைக்கு முன் வேண்டிய மருந்து கொடுத்து இந்த வியாதிகளைத் தடுத்து விடலாம். ஆதலால் வயது அதிகமாகி விட்டது என்ற காரணத்தால் அறுவைச் சிகிச்சையை நிறுத்த வேண்டியதில்லை.

'ஒரு கண்ணில் புரை முற்றினால் பரவாயில்லை மற்றொரு கண் நன்றாக இருக்கிறது. ஆதலால் அறுவைச் சிகிச்சை வேண்டாம்' என்று பலர் கருதுகிறார்கள். புரை முற்றிவிட்டால் அதனால் பல கோளாறுகள் உண்டாகின்றன ; சாதாரணமாகப் புரை முற்றினால் கண் அழுத்தம் அதிகமாகி கண்ணில் பொறுக்க முடியாத வலி ஏற்படும். கண் சிவந்து விடும். அப்பொழுது வலியைக் குறைத்து கண் பார்வையைக் காப்பாற்றுவது கடினமாகும். கண் பார்வையை இழப்பதுடன் கண் வலி

# கண்புரை அறுவைச் சிகிச்சைக்கு முன்

## தெரிந்து கொள்ள வேண்டியவை!

வேதனையாலும் அல்லல் படுகிறார்கள். ஆதலால் புரை உண்டான பின்னர் அறுவைச் சிகிச்சை தவிர்க்க முடியாத நிலை ஆகும். அதனால் அறுவைச் சிகிச்சை பற்றிய விவரமெல்லாம் தெரிந்து கொண்டு எந்த மாதிரி நடந்து கொண்டால் நல்ல விதமாக குணம் பெறலாம் என்பதை அறிதல் அவசியமாகும்.

### எப்பொழுது அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது ?

சாதாரணமாகப் புரை முற்றிப் பார்வை மிகவும் குறைந்த பின்னர்தான் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று பலர் கருதுகிறார்கள். இது சரி அல்ல. அமெரிக்காவில் புரை ஆரம்ப நிலையிலேயே, பார்வை குறைந்து வரும்போதே அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள். அங்கு நடக்கும் புரை அறுவைச் சிகிச்சையில் பெரும்பாலும் ஆரம்ப நிலையிலேயே—அதாவது பார்வையை இழப்பதற்கு முன்பாகவே———அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது. புரை முற்றிய பின்னர்தான் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றால் சாதாரணமாகச் செய்யக்கூடிய வேலைகளைக் கூடச் செய்ய முடியாமல் பல மாதங்கள் துன்பப்படுகிறார்கள். இவ்வாறு துன்பப்படுவது அவசியமில்லை. புரை ஆரம்பத்திலேயே அறுவைச் சிகிச்சை செய்தாலும் புரை முற்றிய பின்னர் அறுவைச் சிகிச்சை செய்தாலும் இரண்டிலும் ஒரே பார்வைதான் கிடைக்கிறது. ஆதலால் அனாவசியமாகப் பார்வை குறைந்து புரை முற்றும் வரை காத்திருந்து அவதிப்படுவதைவிட புரையின் ஆரம்ப நிலையிலேயே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு இழந்த பார்வையைத் திரும்பப் பெறலாம்.

### எந்தெந்த மாதங்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது நல்லது :

வட இந்தியாவில் பெரும்பாலும் குளிர் மாதங்களிலேயே அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள். அங்கு கோடைக் காலத்தில் தாங்க முடியாத வெய்யிலாக இருப்பதாலும், ஈயினால் தொந்தரவு அதிகமாக இருப்பதாலும் குளிர் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்புகிறார்கள். தமிழ் நாட்டில் வெய்யில் காலத்திற்கும் குளிர் காலத்திற்கும் அதிக வேறுபாடு இல்லை. வட இந்தியாவைப்போல் இங்குக் குளிரும் அதிகம் கிடையாது. வெய்யிலும் அதிகம் கிடையாது. ஆதலால் ஆண்டு முழுவதும் எல்லா மாதங்களிலுமே அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்.

### அறுவைச் சிகிச்சையின்போது வலி தெரியுமா ?

டாக்டர் ஜி. வெங்கடசாமி

சாதாரணமாகப் புரை அறுவைச் சிகிச்சையின் போது மயக்கம் கொடுப்பதில்லை. கண்ணின் அருகில் வலி தெரியாமல் இருப்பதற்காக ஊசி போடப்படும். அதனால் அறுவைச் சிகிச்சையின் போது வலி தெரியாது.

### கண் பார்வை சோதிகக கருவி

கண் பார்வையைச் சோதிப்பதற்கும் அளவிடுவதற்கும் ஒரு கருவி உருவாக்கியிருக்கிறார்கள் ஒளி-மின்விசை முறையில் இது செயல்படுகிறது. 'ஐ-டிராக்' (Eye Trac) என்று பெயர் உலகம் நெடுகிலும் பல வணிக, மருத்துவக் காட்சிகளில் இதனைப் பார்வைக்கு வைக்கின்றனர்.

கண்ணிலுள்ள குறைகள் அனைத்தையும் இந்தக் கருவி பதிவு செய்ய வல்லது. அண்மைப் பார்வை, தொலைவுப் பார்வை, நிறம் புலப்படாமை, பார்வைத் துல்லியம், மருத்துவத்தினால் ஏற்படும் பலன்கள் போன்றவற்றையெல்லாம் இது அளவிட்டுப் பதிவு செய்யும்.

மருத்துவ உதவியாளர்களே கருவியை இயக்கி, விவரங்கள் பதிவு செய்ய இயலும். பின்னர் மருததுவர் அல்லது வல்லுநர் அவற்றை ஆராய்ந்து உரிய மருத்துவம் செயயலாம்; கண் நோயாளி பற்றி நிலையான விவரத் தொகுப்புப் புத்தகம் ஒன்றில் விவரங்களைப் பதிவு செய்து வைக்கலாம்.

அமெரிக்காவில் உருவாக்கியுள்ள இப்புதிய கருவியில் அவ்வப்போது மாற்றவேண்டியது ஒன்று உண்டு; அதுதான் வெப்ப முறையில் விவரங்களைப் பதிவு செய்து வைக்கும் காகிதச் சுருள்.

ஆலையின் உட்புறத் தோற்றத்தின் ஒரு பகுதி.





தொழிற்சாலையின் ஒரு தோற்றம்.

# மேலைநாடு செல்லும் மேட்டூர் அலுமினியம்

வாழ்க்கை என்னும் நாடகத்தில் நாமெல்லாம் ஒரு பாத்திரம் தானே?

பாத்திரமான நமக்கு, நம் அன்றாட வாழ்க்கைக்கும் சில பாத்திரங்கள் தேவைப்படுகின்றன!

பண்டைக்காலத்தில் மட்பாண்டங்களே மனிதனின் முக்கிய பாத்திரங்களாக இருந்தன. நாகரிகம் வளர வளர மனிதன் உலோக வகைகளைக் கண்டுபிடித்தான். பிறகு அவற்றின் மூலம் பல பொருள்களைச் செய்ய இயந்திரச் சாதனங்களை உருவாக்கினான்.

அதன் விளைவாக இன்று பொன், வெள்ளி, பித்தளை, செம்பு, அலுமினியம், இரும்பு, எவர்சில்வர் போன்ற உலோக வகைகளிலும் பிளாஸ்டிக், தோல் முதலானவற்றிலும் கண்கவர் பொருள்கள்-பாத்திரங்கள்-சாமான்கள் முதலியன செய்யப்படுவதையும், அவை கடைகளில் அழகுற அடுக்கி வைக்கப்பட்டு விற்பனையாவதையும் பார்க்கிறோம்.

அன்னை பூமி அள்ளி வழங்கும் செல்வங்களில் அலுமினியமும் ஒன்று. ஏழை எளியவர்கள் பெருமளவில் பயன்படுத்தும் பொருள்களில் இன்று அலுமினியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது எனலாம்.

மின் உலையில் மின்னவிடும் அலுமினியம்!



கம்பி சுருட்டிவிட்டார் இங்கே!

இந்த அலுமினியக் கனிப்பொருள் எப்படிக் கிடைக்கின்றது? எவ்வாறு உருவாக்கப்படுகின்றது?

இந்தக் கேள்விகளுக்கு விடை காண மேட்டூருக்குப் போவோம் வாருங்கள்!

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணைக்கட்டிற்கு அருகில் பிரம்மாண்டமாகக் காட்சியளிக்கிறது 'மால்கோ'. அதுதான் 'தி மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்' (The Madras Aluminium Company Ltd.) இது 1965-லிருந்து இயங்கி வருகிறது.

தொழிற்சாலைக்குள் நுழைகிறோம்.

அதோ தெரிகிறதே அது என்ன? மலையா?.

தொழிற்சாலைக்குள் மலை எப்படி வந்தது என்று மலைப்பதற்குமுன், "இதுதான் அலுமினியம் தயாரிக்க உதவும் மூலப்பொருள். பெயர்: பாக்சைட்!" என்று ஒரு பொறியாளர் சொன்னதும் மேலும் விந்தையாக இருந்தது.

லாரியிலிருந்து வந்த கட்டி கட்டியான மண் அந்தப் பெரிய கிடங்கில் கொட்டப்படுகின்றது. அவற்றைக் 'கிரேன்' மூலம் அமைந்துள்ள ஒரு பெரிய இரும்புத் தொட்டி அள்ளியெடுத்து இன்னொரு

பக்கம் குவிக்கிறது. அந்தக் குவியல்தான் மலைபோலக் காட்சியளிக்கிறது!

சுருங்கச் சொன்னால் இந்த மண்தான் அலுமினியக் குழம்பாக வெளி வருகிறது! அது எப்படி என்பதைத்தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சர்க்கரைக்கு மூலப்பொருள் கரும்பு, காகிதத்துக்கு மூலப்பொருள் மூங்கில் என்பது போல அலுமினியத்துக்கு மூலப்பொருள் பாக்சைட் என அறிந்தோம்.

பாக்சைட்டு (Bauxite) கிரையோலைட் (Kryolite), டர்க்காயிஸ் (Turquoise), அலுனைட்டு (Allunite), ஸ்பைனல் (Spinal) என்பவை சில அலுமினியக் கனியங்களாகும். இவற்றுள் பாக்சைட்டும், கிரையோலைட்டும் முக்கியமானவை.

பாக்சைட்டிலிருந்து அலுமினியத்தைப் பிரித்தெடுகக இது முதலில் மிக நன்றாகச் சுத்தப்படுத்தப்படுகிறது. பின் நன்றாக அரைக்கப்பட்டுத் தாழ்ந்த வெப்பத்தில் சுடப்படுகிறது. சோடாக்காரக் கரைவில் இதைக் கரைத்தால் கனியத்திலுள்ள அலுமினிய ஆக்சைடு மட்டும் கரைந்து அசுத்தங்கள் பின்தங்கி விடுகின்றன. இக்கரைவுடன் சிறிது சோடியம் ஹைடிராக்



வெள்ளிக் கட்டிகளோ இவை?

காது அருகில் போடப்படும் ஊசியால் முகத்தின் ஒரு பகுதி மரத்துப் போய் இருக்கும். 24 மணி நேரம் கழித்து இது சரியாகி விடும். சிறு குழந்தையாக இருந்தால் மயக்க ஊசி போடுவார்கள். கண்ணின் அருகில் ஊசி போடுவதால் வலி தெரியாமல் இருப்பதுடன் கண் விழி அசைக்க முடியாதபடி ஒரே நிலையில் இருக்கும். அறுவைச் சிகிச்சையின் போது விழி அசையாமல் இருப்பது நல்லது.

**ஈளை நோய் இருந்தால் அறுவைச் சிகிச்சை செய்யலாமா ?**

வயதானவர்கள் சிலருக்கு ஈளை நோய் (ஆஸ்துமா) வியாதி இருக்கலாம். படுத்தால் மூச்சுவிடுதல் இயலாது. பல சமயங்களில் உட்கார்ந்து கொண்டே தூங்குவார்கள். இவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம். கண் விழியில் அறுவைச் சிகிச்சை செய்த இடம் நன்றாக இணைய வேண்டும். இதற்குக் கண்களுக்கும் உடலுக்கும் ஓய்வு தேவை. அதனால்தான் கண் அறுவைச் சிகிச்சை செய்தவுடன் ஒரு வாரமாவது ஓய்வுடன் படுக்கையில் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அறுவைச் சிகிச்சை செய்த இடம் நல்ல முறையில் தைக்கப் பட்டிருந்தால் இணைவது எளிதாகும்; ஆதலால் இப்பொழுது விழியை அறுத்து புரையை எடுத்த பின்னர் அறுத்த இடத்தைத் தைத்துவிடுகிறார்கள். நன்றாக தைக்கப்பட்டிருந்தாலும் ஆஸ்துமாக்காரர்கள் படுக்காமல் உட்கார்ந்திருந்தாலும் எந்த விதக் கெடுதலும் இல்லை. படுக்கையிலேயே மல்லாந்து 24 மணி நேரமும் படுக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. கூடுமான வரை அதிக ஆட்டம் இல்லாமல் உடலுக்கு ஓய்வு கொடுப்பது நல்லதாகும். ஒவ்வொருவருடைய உடல் நிலைக்கேற்ப அறுவைச் சிகிச்சையில் சில மாறுதல்கள் செய்து கொள்ளலாம். அறுவைச் சிகிச்சை செய்த இடம் நன்றாக இணைந்து விழி முன் போலவே இருக்க வேண்டும் என்பதுதான் குறிக்கோள். இப்பொழுதுள்ள நவீன அறுவைச் சிகிச்சை முறையில் இது சாத்தியமாகிறது.

**அறுவைச் சிகிச்சைக்கு முன்னால் கவனிக்கப்பட வேண்டியவை :**

எந்தப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்தாலும் உடல் முழுவதும் நன்றாக சுத்தமாக இருக்க வேண்டும். நம் நாட்டில் பலர் மருத்துவ மனைக்கு வரும் பொழுதோ சிகிச்சை முகாமிற்கு வரும் பொழுதோ இதில் கவனம் செலுத்துவதில்லை. அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் ஆண்கள் முகச் சவரம் செய்து கொண்டு, சுத்தமாகக் குளித்து அழுக்கற்ற ஆடைகளை அணிந்து கொள்வது அவசியம். சில மருத்துவமனைகளில் ஒவ்வொருவரையும் குளிக்கச் செய்து அவர்கள் அணிந்து வந்த பழைய ஆடைகளைச் சலவைக்குப் போட்டுவிட்டு மருத்துவமனை ஆடைகளை அணிந்து கொள்ளக் கொடுக்கிறார்கள். எல்லாவற்றையும்விட முக்கியமானது உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்வது ஆகும்.

மருத்துவமனைப் படுக்கையை எவ்வாறு சுத்தமாக வைத்துக் கொள்வதென்று பலருக்குத் தெரிவதில்லை. பழங்களைச் சாப்பிட்டு விட்டுத் தோலைப் படுக்கைக்கு அருகிலேயே போட்டு விடுகிறார்கள். திராட்சைப் பழத்தைச் சாப்பிட்டு விட்டுத் தோலையும் விதைகளையும் அருகிலேயே போட்டு விடுகிறார்கள். அல்லது சன்னலுக்கு வெளியே போட்டு விடுகிறார்கள். அதேபோலக் கழிவிடங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்வதில்லை. மலம் கழிக்கச் செல்லும் வழியிலேயே சிறுநீர் கழித்து விடுகிறார்கள். இதனால் கிருமிகள் பெருகிக் கண்ணுக்குள் சென்று கேடு உண்டாக்கலாம். மேலை நாடுகளில் மருத்துவ மனைகளை மிகச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். அதனால் அறுவைச் சிகிச்சையில் கோளாறு ஏற்படுவது மிகக் குறைவாகும். நம் நாட்டில் இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். கைகளை நன்றாகக் கழுவ வேண்டும். கைகள் கண்களின் அருகில் சென்றாலும் அதில் கிருமிகள் இல்லாவிட்டால், கேடுகள் வராது. அது போலவே சாப்பிட்ட பின்னரும் நன்றாக வாயையும் கைகளையும் சுத்தம் செய்துவிட வேண்டும். கூடிய மட்டும் நாம் சுத்தமான ஆடைகளை அணிவது அவசியமாகும்.

**உணவு :**

அறுவைச் சிகிச்சைக்கு முன்னரும் அதன் பின்னரும் எந்த உணவு உட்கொள்வது, எவ்வளவு உட்கொள்வது என்பதை அறிந்து உண்ண வேண்டும். அளவுக்கு மீறி அதிகமாக உணவு உண்பதோ அல்லது பட்டினி கிடப்பதோ நல்லதல்ல. மிதமாக பல்லுக்கு அதிக அசைவு தராத உணவையே உட்கொள்ள வேண்டும். நம் நாட்டில் ஒரு நோயாளி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டால் சுற்றத்தார் யாவரும் வந்து அவரைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவசியமானதற்கு வேண்டியவர்கள் மட்டும்தான் மருத்துவமனைக்கு வரவேண்டும். அநாவசியமாகக் கூட்டம் போடக் கூடாது. வசதியுள்ள நோயாளிகளைச் சுற்றி மருத்துவ மனையில் பெரிய கூட்டத்தைப் பார்க்கலாம். இது நோயாளிகளுக்கு நன்மை அளிப்பது இல்லை. அவர்களுக்கு ஓய்வு அவசியம். (முக்கியமாக சிறு குழந்தைகளை மருத்துவ மனைக்கு நோயாளிகளைப் பார்க்க அழைத்து வருவது தவறு. பல்வேறு நோய் உள்ளவர்கள் மருத்துவ மனைக்கு வருகிறார்கள். பல தொத்து நோய்கள் இருக்கலாம். இது குழந்தைகளை எளிதில் பற்றிக் கொள்ளும். ஆதலால் கூடுமான வரை குழந்தைகளை நோயாளிகளைப் பார்ப்பதற்கு மருத்துவமனைக்குக் கொண்டு வருவது தவறாகும்.

அறுவைச் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு சென்ற பின்னர் கூடச் சில வாரங்கள் வரை உணவில் கட்டுப்பாடு தேவை. வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுவது, பொடி போடுவது போன்ற பழக்கங்களை நிறுத்தி விட வேண்டும். மலச்சிக்கல் உள்ளவர்கள் மருத்துவர்களிடம் சொல்லி அதற்குரிய சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். சிறுநீர் கழிப்பதில் சிரமம் இருந்தாலும் மருத்துவரிடம் சொல்லவேண்டும். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட முதல் நாள் சிறு நீர் கழிக்க எழுந்திருப்பதை அனுமதிப்பதில்லை. பலருக்குப் படுக்கையிலிருந்து சிறுநீர் கழிப்பது சிரமமாயிருக்கலாம்! அவர்களைப் பத்திரமாக எழுந்து உட்காரச் செய்து சிறுநீர் கழிக்கும் பாத்திரத்தில் சிறுநீர் கழிக்கச் செய்ய வேண்டும்.

புரை அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் தலைக்கு வெள்ளை மிளகை அரைத்துத் தேய்த்துப் பால் தேய்த்து முழுகவேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். இது அவசியமில்லை. அறுவைச் சிகிச்சை செய்த பின்னர் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கழித்துத் தலையில் தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்யலாம். அதன் பின்னர் இரண்டொரு வாரங்கள் கழித்து எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். சிலர் கண்பார்வை மங்குவதற்குத் தலையில் தைலம் தேய்த்துக் குளிக்காததுதான் காரணம் என்று கருதித் தலையில் தைலம் தேய்த்துக் குளிக்கிறார்கள். தைலம் தேய்ப்பதனால் மங்கிய கண் பார்வை சரியாகி விடும் என்பது விஞ்ஞான முறையாக நிரூபிக்கப்படவில்லை. எந்தக் காரணங்களினால் பார்வை குறைந்திருக்கிறது என்பதைத் தகுந்த வைத்தியரிடம் காட்டி வைத்தியம் செய்து கொள்வதுதான் முறையாகும்.

அடுத்த இதழில்
மருத்துவமனையிலும் கண் சிகிச்சை முகாமிலும் கவனிக்க வேண்டிய முறைகள்.





உங்கள் உற்பத்தித் திறன் வெகு சீராக இருப்பதன் காரணம்?

சீரான ஒளி தொழிலாளர்களின் பார்வையைத் தெளிவாக்கி, விபத்து விகிதத்தைக் குறைத்து, உற்பத்தித் திறனைப் பெருக்குகிறது. தொழிற்சாலைகளுக்கேற்ற நம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றின் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்காண்டெஸெண்ட், ஃப்ளூரோஸெண்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.



பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்—
சீரான பார்வைக்கு

பிலிப்ஸ

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-709(R)

# உள்ளதையே கூறுகிறோம் : ஹைட்ராலிக் பரிட்சிப்பு என்றால் ஒவ்வொரு குழாய்க்கும் ஹைட்ராலிக் பரிட்சிப்பு.

## ஜெனித் தரம் என்றால் அதுதான்!




**முற்போக்கான விவசாயிகள் தேர்ந்தெடுக்கும் தரம்**

ஜெனித் தொழிற்சாலையிலே, அத்யாவசியமான தரநிர்ணயக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நிகழ்த்தப் படுகின்றன—அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்ந்தெடுத்த குழாய்களைக் கொண்டு அல்ல; தனித்தனியே ஒவ்வொரு குழாயும் இப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப் படுகிறது. உதாரணமாக, ஜெனித் நடத்தும் ஹைட்ராலிக் (நீரழுத்த) பரிசோதனை; ஒவ்வொரு குழாயும் 50 கிலோ / செமீ² அழுத்த விசையினைத் தாங்கி நிற்பதற்கு உறுதி தருகிறது; ஒவ்வொரு குழாயினையும் மிகக் கண்டிப்பான இந்திய, பிரிட்டிஷ், சர்வதேசத் தரநிர்ணய விதிப்புகளுக்கு ஈடு நிற்கச் செய்கிறது.

விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் ஆகியவற்றின் தேவை தீர்க்கப் பலவிதமான எஃகுக் குழாய்களை உடையது ஜெனித். குழாய்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதிலே முன்னோடியாக விளங்கியதற்காக அரசாங்கத்திடமிருந்து நற்சான்றுப் பத்திரம் பெற்றுள்ள ஜெனித் இன்று, அமெரிக்கா, ஐக்கிய இங்கிலாந்து உள்பட 45 நாடுகளிலே உழைப்புத்திறனை நிரூபித்த பெருமையைப் பெற்றுள்ளது.

**ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிமிடெட்,**
195, சர்சேட் ரிகன்மேஷன், பம்பாய்-400 020
போன்: 294445. தந்தி: ZENPIPES. டெலெக்ஸ் 011-2458

everest/865a/ZSP/tm




# காணி நிலம் வேண்டும்

## 15. ஆசை அன்னத்துக்கு அருமைத் துணைவன்!

ஒரு நாட்டாண்மை ஆதி மூலத் தேவரும் சிங்கப்பூர் ராமையாத் தேவரும் ஒருவரை யொருவர் எரித்து, ஒருவர் சாம்பலை மற்றவர் நெற்றியில் பூசிக் கொண்டு கொக்கரிக்கத் தவிப்பவர்கள் போலவும், ஒருவரை மற்றவர் விழுங்கி ஏப்பம் விடத் துடிப்பவர்கள் போலவும் தோன்றினார்கள்! ஐந்தாறு நிமிட இடைவெளிக்குள்ளே ஆயிரம் தடவை அவரவர் கையில் மின்னிப் பளிச்சிட்ட வைரச் சிமிக்கியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கவும் அவர்கள் மறந்து விடக்காணோம்.

கூத்தை ரசிக்கும் ஆர்வத்துடன் அன்னக்கொடியும் வீரமணியும் புதிய சுதாரிப்புடன் தங்களைத் தயார் செய்து கொண்டவாறு, ஒருவரோடொருவர் உரசிக் கொண்டே புழக்கடை மண்ணில் கால் பாவி நடக்கத் தொடங்கினார்கள்.

ஆதிமூலத் தேவர் தலைமுடி களைத் தடவி முடிந்து கொண்டே பெரிதாக ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டார்.

ராமையாத் தேவர் கிராப்புத் தலையை வருடிக் கொண்டே சிறிதாக ஒரு பெருமூச்சை நெட்டித் தள்ளினார்

"மச்சான்காரரே! மண்ணிலே விழுந்தாலும் நிலைக்குப்புற மீசையிலே மண் ஒட்டலேன்னு பேச சில புறக்குடிப் படைகள் வாங்களாம்! ஆமா, நீங்க உயர்ந்த புள்ளி. ஊர்க்காரவாருக்கு உரிய ஆம்பளை என்றாலும், எனக்குச் சொந்தமான வைரச் சிமிக்கியைச் சந்தடி சாக்கிலே நீங்க லவட்டி எடுத்து வெளிச்சத்திலே ஏந்திநிற்கிற போக்கை என்னாலே அம்பிட்டுத் தொலைவுக்கு ரசிக்க வாய்க்கல்லேங்கிறேன்! மரியாதையாய் என்னோட வைரச் சிமிக்கியை என் கிட்டே நீட்டிப் பிடுங்க!"

ராமையாத் தேவரின் பேச்சில் ஆத்திரம் பதுங்கிக் கிடந்த ஏளனம் குரல் கொடுத்தது.

பெரியவர் ஏளனமாக அலட்சியத்தோடு சிங்கப்பூர் தேவரைப் பார்த்தார் பிறகு நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, கையிலிருந்த வைரச் சிமிக்கியை கைக்குள்ளாகவே சமர்த்தாகவும் சாமர்த்தியமாகவும் குலுக்கிக் கொண்டு ஓர் அட்டகாசமான நிர்த்தாட்சண்யச் சிரிப்பைக் கொட்டிவிட்டுப் பேசினார்.

"மச்சான்காரா... ராமையா! நீ எனக்குக் கை நீட்டி கை ரொக்கமாகக் கொடுக்காத — கொடுக்கிறதாகச் சொல்லி, கடைசியிலே கொடுக்காமல் ஏய்ச்சுப்பிட்ட அந்த ரெண்டாயிரம் ரூபாய்க்கும் சேர்த்து நீ என் கிட்டேயிருந்து புரோநோட்டை முன் கூட்டியே மோசடியாய் எழுதி வாங்கிக்கிட்டே! கொடுத்த கடனோட, கொடுக்காத கடன் ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் சேர்த்து அடாவடியாய் கோர்ட்டு கச்சேரியிலே என் மேலே 'தாவா' போட்டாய்! நான் வாங்காத




பூவை எஸ். ஆறுமுகம்



130 அடி உயரமுள்ள மாடியல்ல, அலுமினியக் கலவையைக் கெடாமல் காக்கும் மிகப் பெரிய தொட்டி!

சைடைச் சேர்த்து பல மணி நேரம் கலக்கினால் அலுமினியம் ஹைடிராக்சைடு படிகிறது. இதை வடிகட்டிப் பிரித்துக் கழுவி உலர வைக்கலாம்.

அலுமினியம் ஆக்சைடிலிருந்து உலோகத்தைப் பெற மின்பகுப்புமுறை வழங்குகிறது. அலுமினியம் ஆக்சைடு 20 பாகமும், கிரையோலைட்டு 60 பாகமும், புளோர்ஸ்பார் 20 பாகமும் கொண்ட கலவையை இளக்கி, மின்பகுப்பால் அலுமினியம் பிரித்தெடுக்கப்படுகிறது.

மின் பகுப்புக் கலம் ஓர் இரும்புத் தொட்டி. இதன் உட்புறம் கரியால் பூசப்பட்டு எதிர்முனையாக (Negative) இயங்குகிறது. தொட்டிக்குள் தொங்கவிடப்படும் சில கார்பன் குச்சிகள் நேர்முனையாக (Positive) இயங்கும். மின்சாரம் பாயும்போது எதிர்முனையில் அலுமினியம் வெளிப்பட்டுத் திரவ நிலையில் கலத்தின் அடியில் சேர்கிறது. இதை வடித்து எடுத்துவிடலாம்.

கார்ப்பனால் ஆன நேர்முனையில் (Positive) ஆக்சிஜன் தோன்றி அதை எரித்துக் கார்பன் மாணுக்சைடாக வெளிப்படுகிறது. அவ்வப்போது புதிதாக அலுமினியம், ஆக்சைடைச் சேர்த்துப் பகுபொருளின் செறிவு மாருமல் செய்ய வேண்டும். இதில் கிடைக்கும் அலுமினியம் 99 சதவீதம் சுத்தமானது. இதை மின்பகுப்பால் மேலும் தூய்மையாக்கலாம்.

பாக்சைட்டிலிருந்து அலுமினியம் தயாரிப்பதற்கான வகை வகையான நவீன இயந்திரங்களை இங்கே காணலாம். மூலப்பொருளான பாக்சைட் சேலம் மாவட்டம் சேர்வராயன் மலையிலிருந்து (ஏர்க்காடு) பெருமளவில் கிடைக்கிறது. கொல்லி மலையிலும் ஓரளவு பாக்சைட் தருவிக்கப்படுகிறது.

4 டன் பாக்சைட்டில் 2 டன் அலுமினியம் ஆக்சைடு கலந்திருக்கிறது. இதை மின் உலையில் இடும்போது நமக்குக் கிடைக்கும் அலுமினியம் எவ்வளவு தெரியுமா? ஒரே ஒரு டன்தான்!

1827-ல் வலர் என்ற இரசாயன அறிஞரால் இந்த உலோகம் பிரித்தெடுக்கப்பட்டது. இதைப் பிரித்தெடுக்கத் தற்காலத்தில் வழங்கும் முறையை ஹால் என்னும் அமெரிக்க மாணவர் கண்டுபிடித்தார்.

1888-ல் ஜெர்மன் விஞ்ஞானியான கார்ல் ஜோசப் பேயர் என்பவர் பாக்சைட்டிலிருந்து சுத்தமான அலுமினியத்தைத் தயாரிக்கும் முறையைக் கையாண்டார்.

வரலாற்றைப் பார்க்கும்போது, அலுமினியத்தின் சிறப்பினை நாம் நன்கறியலாம். நெப்போலியனின் விருந்தினர்கள் விருந்தின்போது அலுமினியக் கரண்டியையே உபயோகித்தார்களாம். பேரரசர்களின் குழந்தைகளெல்லாம் அலுமினியக் 'கிலுகிலு'ப்பையையே ஒலித்து மகிழ்ந்தனவாம். பாரிசுக்கு வருகை தந்த மன்னர் சியாம் என்பவருக்கு, வீரன் நெப்போலியன் அலுமினியத்தாலான கடிகாரப் பட்டையை பரிசளித்தாராம்!

இத்தகு சிறப்புமிக்க அலுமினியத்தைத் தயாரிக்கும் இந்தத் தொழிற்சாலையில் சுமார் 600 பேர் பணியாற்றுகின்றனர். இங்கு 24 மணி நேரமும் வேலை நடக்கிறது. குறிப்பாக மின் உலையில் இந்த பணி இடைவெளி இல்லாமல் நடக்கிறது. மின்சாரத் தடையோ, இயந்திரக் கோளாருே ஏற்பட்டால் உருகுநிலையில் உள்ள அலுமினியக் குழம்பெல்லாம் கெட்டியாகி அதாவது ஐந்து நிமிடத்தில் இது சிமெண்டுபோல் கட்டியாகிவிடும். பிறகு அது எதற்கும் உதவாததாகி விடுமாம். எனவே, மின்சாரமும் இத்தொழிலுக்கு ஒரு மூலப் பொருள் என்கிருர் ஒரு பொறியாளர்.

மின் உலையிலுள்ள அலுமினியக் குழம்பை வட்டவடிவ இரும்புத் தொட்டியில் நிரப்பி வார்ப்படச் சாலைக்குக் (Foundry) கொண்டு வரப்படுகிறது. வார்ப்படச் சாலையில் இந்த அலுமினியக் குழம்பு ஒரு குழாய் மூலம் வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல் வெளிவருகிறது. இக்குழம்பு சுடு நிலையிலேயே தகரக் கால்வாயில் ஓடி ஒரு இயந்திரத்திற்குள் நுழைகிறது. இங்கே இக்குழம்பு கனத்த கம்பியாக உருவாகிறது; அந்தக் கம்பி நீண்டுகொண்டே இன்ெனுரு இயந்திரத்திற்குள் நுழைந்து சன்னக் கம்பியாக உருவெடுத்து பிறகு நூலைச் சுற்றுவது போல சக்கரத்தில் சுருட்டப்படுகிறது; இப்போது அலுமினியக் கம்பி தயார்!

கம்பிகள், கன அளவுக்குத் தக்கவாறு தயாரிக்க இயந்திரத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் ஒரு பக்கம் 130 அடி உயரமுள்ள 18 தொட்டிகள் பிரம்மாண்டமாய்க் காட்சியளிக்கின்றன. 'லிப்ட்' மூலம் அதன் உச்சிக்குச் சென்று பார்க்கிருேம். காற்று அழுத்தம் (Compressed Air) மூலம் அலுமினியக் கலவையைத் திரவ நிலையிலேயே வைக்க இந்தத் தொட்டிகள் பெரிதும் உதவுகின்றன.

அதோ! அங்கே என்ன பளபளவென மின்னுகின்றனவே. அவையென்ன வெள்ளிக் கட்டிகளா?

அலுமினியக் குழம்பிலிருந்து கனத்த, சன்னக் கம்பிகளை உருவாக்கியதுபோல, அலுமினியக் கட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. வார்ப்படத்தின் (Mould) உதவியால் உருவான இந்த அலுமினியக் கட்டிகள் ஓரிடத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. பிறகு அவை லாரிகளில் ஏற்றி அனுப்பப்படுவதையும் பார்க்கிருேம்.

உலகிலுள்ள நவீன அலுமினிய நிறுவனங்களில் 'மால்கோ'வும் ஒன்று என்பதை அறிகிருேம். இங்கு ஒரு ஆண்டுக்கு 10,000 டன் அலுமினியம் தயாரிக்கப்படுகிறது.

இன்று உலகில் ஒரு ஆண்டுக்கு 8 மில்லியன் டனுக்கு மேற்பட்ட அலுமினியம் தயாரிக்கப்படுகிறது என்றும், 100 ஆண்டுகளுக்கு முன் அலுமினியத்தின் விலை 1 பவுண்டுக்கு 545 டாலராக இருந்தது என்றும், இப்போது 1 டனுக்கு 500 டாலராக விலை குறைந்திருக்கிறது என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொழிற்சாலையில் அலுமினியக் கம்பிகள், தகடுகள், பாளங்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன. இவை தரமானவையாக இருப்பதால் வெளிநாடுகளில்கூட இவற்றுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருவதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

இந்தத் தொழிற்கூடத்தில் ஒரு பரிசோதனைக் கூடமும் இருக்கிறது. அது, அலுமினியத்தில் எத்தனை சதவிகிதம் உலோகப் பொருள்கள் கலந்திருக்கின்றன என்பதையும், தரத்தைக் கணக்கிடவும் பயன்படுகிறது.

அலுமினியத்தின் தன்மையும், வன்மையும் பற்றித் தெரிந்து கொள்வோமா?

அலுமினியம் வெண்மையான உலோகம். இலேசான பொருளான இதன் இழுவலிமை இரும்பையும் செம்பையும் தவிர மற்றெல்லா உலோகங்களையும்விட அதிகம். இதற்கு நன்ருக மெருகேற்றலாம். இதன் உருகுநிலை 658 டிகிரி. இது பல உலோகங்களுடன் கலவையாகிறது.

வறண்ட காற்ருே, ஆக்சிஜனே இதைப் பாதிப்பதில்லை. ஈரமான காற்றும், கொதிக்கும் நீரும் இதன் மேல் அலுமினியம் ஆக்சைடைப் படிவிக்கும். இதனுடைய ரசக்கலவை நீராவியைச் சிதைக்கும். நுண்ணிய தூளான அலுமினியம் மிகப் பிரகாசமான ஒளியுடன் ஆக்சிஜனில் எரியும். இரும்பு, குரோமியம் அல்லது மாங்கனீஸ் ஆக்சைடுகளுடன் அலுமினியத் தூளைக் கலந்து பற்ற வைத்தால் மும்முரமான வினை நிகழ்ந்து ஆக்சைடு உலோகமாகக் குறையும். எஃகை இளக்கவும், இணைக்கவும் வழங்கும் தெர்மைட்டு முறைக்கு (Thermite Process) இந்த வினை அடிப்படையானது. குரோமியம், மாங்கனீஸ், யுரேனியம் போன்ற உலோகங்களைத் தயாரிக்கவும் இம்முறை பயனுகிறது.

அலுமினியமானது குளோரினுடனும் நைட்டிரஜனுடனும் நேரடியாகக்கூடுகிறது. சூடான அடர் ஹைடிரோ குளோரிக அமிலத்திலிருந்து இது ஹைடிரஜனை வெளிப்படுத்துகிறது. நீர்த்த கந்தகாமிலமாவது நைட்ரிக் அமிலமாவது இதைப் பாதிப்பதில்லை. அடர் கந்தகாமிலத்தில் இது விரைவாகக் கரைந்து கந்தக டை ஆக்சைடை வெளிவிடுகிறது. சூடான காரக் கரைவுகளில் இது கரைந்து, ஹைடிரஜனை வெளியிட்டு அலுமினேட்டுகளை அளிக்கிறது. உப்புக் கரைவுகளில் இது அரிப்புற்றுப் போகும்.

அலுமினியத்தால் நமக்கு அநேக நன்மைகள் உண்டு.

அழுத்தம் அதிகமான மின்சாரத்தைக் கடத்தச் செம்பைவிட இலேசான அலுமினியக் கம்பி அதிகமாகப் பயனுகின்றது. இது மலிவானதும், நச்சுத்தன்மை இல்லாததுமானதால் பாத்திரங்கள் செய்யப் பயன்படுகின்றன. அலுமினியத் தூள் ஆளிவிதை எண்ணெயுடன் கலக்கப்பட்டு, நீராவிக் குழாய்கள், விளக்குக் கம்பங்கள், தந்திக் கம்பங்கள் முதலியவற்றிற்கு வர்ணமாகப் பூசப்படுகிறது. அலுமினியமும் அலுமினியக் கலவைகளும் விமான உறுப்புகள் செய்யவும், மருத்துவக் கருவிகள் செய்யவும் பயனுகின்றன. எஃகு வார்ப்படங்களில் குமிழிகள் தோன்றுவதைத் தடுக்க இது இளகிய எஃகுடன் கலக்கப்படுகிறது. மெல்லிய அலுமினியத் தகடு உணவு வகைகளுக்கும், சிகரெட்டு, சாக்லெட்டு முதலியவற்றிற்கும் உறையாகப் பயனுகிறது.

தமிழ்நாட்டு மண்ணிலே பிறந்த இந்த அலுமினியம், பிறநாட்டவர் கண்ணிலே கவின்மிகு பொருளாய்க் காட்சியளிக்கிறது என்ருல் அதற்குக் காரணம், மேட்டூர் அலுமினியம் மேலான அலுமினியம் என்றல்லவோ பொருள்?

—பி. வி. ஜி.



ரெண்டாயிரத்துக்குச் சாட்சி வைக்க என் கையிலே ஆதாரம் இல்லாததனாலே, நீ கொடுக்காத பணத்துக்குச் சேர்த்து நான் உனக்குப் பணம் கட்டியாகத்தான் வேணும். இது சட்ட ரீதியான நீதி! ஆனா, சட்டத்துக்கு அப்பாலே உள்ள உன்னோட மனச்சாட்சி உன் மாதிரியே ஊமைத்தனமாய் இருந்துகிட்டு வருதே, அந்தப் பொல்லாத பாவத்துக்கு உண்டான கூலியை நீ அனுபவிக்காமல் தப்பிச்சுகிடலாம்னு மனப்பால் குடிச்சிருப்பாய். ஆனா, அந்தப் பாவத்தின் கூலியை நீ அனுபவிக்காமல் நூறுகாலும் தப்பவே வாய்க்காது என்கிற சத்தியத்துக்குச் சாட்சி சொல்லத்தான் இதோ, என் கையிலே கைக்கு மெய்யாய் உன்னுடைய இந்த ஒற்றை வைரச் சிமிக்கி விதியாகவும் விளையாகவும் தெய்வமாகவும் சிரிக்காமல் சிரிச்சுக்கிட்டே இருக்குதாக்கும்! இம்மாங்கொத்த நடப்பிலே, என் கையிலே தேடி வந்திருக்கிற இந்த ஒரு வைரச் சிமிக்கிக்கு நீ சொந்தம் கொண்டாடுறியே? அந்தச் சொந்தத்துக்கு உன் கையிலே என்ன சாட்சி இருக்குதாம்? சொல்லுடா, ராமையாத் தேவனே!''

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது; ஒரு வழியாகச் சமாளிக்க எத்தனம் செய்தார் பெரியவர் ஆதிமூலம். இடுப்பு வேட்டியைச் சரிப்படுத்தியவண்ணம் தன் மச்சான் ராமையாத் தேவரை வெஞ்சினத்தோடு முறைத்து வெறித்துப் பார்த்தார் அவர்.

காளியம்மன் சந்நிதிக்கு எல்லை சொல்லிக் காத்து நிற்குமே சாம்பான் சிலை, அம்மாதிரி, ராமையாத் தேவர் சிலையாக மலைத்து நின்றுவிட்டார்.

''ஊம்; ஏன்டா ராமையா, வாயடைச்சுப் போய் நின்னுக்கிட்டு இருக்கே? பேசடா, பேசு! உன் மனச் சாட்சியைப் பேச விடடா! ஊம்!'' என்று அதிகாரம் பண்ணினார் பெரியவர்.

ஆத்திரமும் ஏமாற்றமும் புதுப் புனலாகப் பொங்க, ஆதிமூலத் தேவரை நோக்கினார் ராமையாத் தேவர்.

''உங்ககிட்டே நான் ஏன் பேச வேணும்? என் மனச்சாட்சியை எதுக்கு நான் பேசவிடணும்? நீர் ஊருக்கு ஒசந்த மனிதராய் இருக்கலாம். ஆனால் என் வரையிலும் நீர் சாதாரண ஆள்தான்! அம்மன் கோயில் 'முதல் காளாஞ்சி' விசயத்திலே நீர் என்னை ஆட்டிப்படைக்க என்னைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்த்தீரே. அந்த ஆத்திரத்துக்குப் பதில் சொல்ல வேண்டித்தான் நான் ஒரு 'தில்லுமுல்லு' செஞ்சு, உம்மைக் கச்சேரிப்படி வரைக்கும் இழுத்துப் போட்டு வேடிக்கை பார்த்தேன். இன்னம் வேடிக்கை காட்டவும் போறேனாக்கும்! அந்த வேடிக்கைக்குத் தூபம் காட்டத்தானே நீங்க எங்க வெள்ளைக் காளையையும் கையாலாகத்தனமாய் 'அமுக்காட்டியம்' பண்ணிக் கட்டிப் போட்டு வச்சிருக்கீங்க? சரி; இப்ப நீங்க களவாடி வச்சிருக்கிற என்னோட ஒற்றை வைரச் சிமிக்கிக்கு ஆதாரம் கேட்கிறீங்க! இல்லையா? . . . உம்மோட யுக்தி எனக்குப் புரியாமல் இல்லே! நான் உம்மை ஏய்ச்ச உபரியாய் இரண்டாயிரத்துக்கும் சேர்த்து பிராமிசரி நோட்டு பூரிச்சு வாங்கிக்கிட்டதுக்கு ஈடுகட்டி என்னை ஏய்க்கிறதுக்கு என்னோட அந்த ஒரு வைரச் சிமிக்கியைப் பகடையாக்கி விளையாடப் பார்க்கிறீராக்கும்? தண்டத்தை ஈடுபட்ட லாபம் சேர்க்க ஆசைப்படுறீராக்கும்?''

**அண்ணா தலைமை அஞ்சல் நிலையம்.**

சென்னை அண்ணாசாலையிலுள்ள தலைமை அஞ்சல் நிலையம், செப்டம்பர் 15-ந் தேதி முதல் 'அண்ணா தலைமை அஞ்சல் நிலையம்' என்று அழைக்கப்படும். மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு.கே.பிரம்மானந்த ரெட்டி, புதுதில்லியில், தமது அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் இதை அறிவித்தார்.

இவ்வாறு ராமையாத் தேவர் கவடு தொனிக்கப் பேசி முடித்து, கண் இமைப் பொழுதிற்கு தன் அத்தான் ஆதிமூலத்தை ஓரக்கண் பதித்துப் பார்வையிட்டார். அடுத்த இமைப்பில், சற்றே பின் வாங்கிப் பதுங்கினார். பின்னர், கையிலிருந்த தன்னுடைய ஒரேயொரு வைரச் சிமிக்கியைப் பரிதாபமாகப் பார்த்தவாறு, அதை இடுப்பு மடியில் செருகிக் கட்டிக் கொண்டார். மேலேயும் கீழேயும் மிரள மிரள விழித்துப் பார்த்தார். மறு விநாடியில், பதுங்கிப் பாயும் வெம்புலியாக உருக்கொண்டு ஆதிமூலத் தேவர் மீது ஒரே பாய்ச்சலாக—காட்டுப் பாய்ச்சலாகப் பாய்ந்தார் ராமையாத் தேவர்!

அப்பொழுது

கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு எச்சரிக்கையோடு நின்றிருந்த முதியவர் ஆதிமூலத் தேவர் வெகு நயமான நிதானமான மிடுக்கோடு ராமையாவை 'லாகு' கொடுத்து, 'வாகு' கணித்துச் சாடி சமாளித்துக் கொண்டார். ராமையாவின் பிடரியிலே ஒரு 'பிடி' முடுகி, அந்தப் பிடியை முறுக்கி அவர் நெஞ்சோடு அமுத்திக் கீழே தள்ளினார்.

கீழே விழுந்துவிட்ட தன் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதை நிரூபித்துக் காட்டியவராக, பேந்தப் பேந்த விழித்தார் சிங்கப்பூர்ச் சீமான். சுற்றிச் சூழப் பார்வையை வெட்டினார். வெட்டுக் கடாவாக ஒரு துள்ளல் துள்ளினார். அவர் ஆசையோடு எதிர்பார்த்த மாதிரி, ஆதிமூலத் தேவரின் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கி அசந்து மறந்து கீழே விழுந்து கிடந்தால்தானே? ஆதிமூலம் அந்த வைரச் சிமிக்கியைப் பத்திரமாக இடுப்பு மடியில் முடி போட்டு வைத்துக் கொண்டிருந்த சிதம்பர ரகசியம் அவருக்கு விளங்கினால்தானே?

ஆதிமூலத்திற்கென்று அப்படியொரு நிர்த்தாட்சண்யமான அட்டகாசச் சிரிப்பு நினைத்த மாத்திரத்திலே கூடி வருகிறது; கை கூடி ஓடி வருகிறது. சிரித்தார். இடுப்பு மடியைத் தந்திரப் போக்கோடு லாகவமாகத் தடவிப் பார்த்து நிம்மதியடைந்தார். இருந்திருந்தாற்போலத் தாவிக் குதித்தார். அடுத்த மூன்றாவது நிமிடம், அவருடைய திருக்கரத்தில் மற்றொரு வைரச் சிமிக்கியும் கண்சிமிட்டிச் சிரிப்பை வெடித்துப் பொடிக்கத் தலைப்பட்டது. 'டேய் ராமையா! நீ என்னை ஏமாற்றின ரெண்டாயிரம் ரூபாய்க்கு இப்பத்தான்டா கணக்குச் சரியாகப் போச்சு! உன்னோட இந்த ரெண்டு வைரச் சிமிக்கியும் என்னோட அனுமத்துப் பணம் ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் இப்பத்தான்டா ஈடு ஆகுது!'' என்று குரோதம் மண்டிய நிம்மதியோடு கொக்கரித்து விட்டு, அடுத்த வைரச் சிமிக்கியையும் இடுப்பு மடியில் கெட்டியாக முடிபோட்டு முடிந்து கொண்டே, கொல்லைப்புறத்தை விட்டு நகர முயன்றார்.

அடிபட்ட வெம்புலிக்கு அவமானம் மூளுவது இயற்கை ; ஆத்திரம் கொப்பளிப்பதுஇயல்பு. ஆதிமூலத் தேவரின் குடுமியைப் பற்றி மடக்கலானார் ராமையாத் தேவர்.



திமிறிக் கொண்டு விடுதலை அடைந்திட முயன்ற பெரியவர் ஆதிமூலத் தேவர், அவ்வாறு முயன்ற அவசரத்தின் விளைவாக, மண்ணிலே — கட்டாந்தரைப் புழுதி மண் வெளியிலே 'தொபுகடீர்' என்று சாய நேர்ந்தது. அதன் விளைவாக, பெரியவர் ஆதிமூலத்துக்கு நெஞ்சடைப்பு வந்துவிட்டது. அது மட்டுமல்ல! —அவருடைய நெற்றிப் பொட்டினின்றும் ரத்தம் பீறிட ஆரம்பித்தது.

''அப்பா!'' என்று வீறிட்டான் வீரமணி.

''மாமா!'' என்று விம்மினாள் அன்னக்கொடி.

''அத்தான், மாமாவுக்கு மூச்சு இருக்குங்களா?'' என்று தழுதழுத்த குரலிலே வினவியவளாக, அருமை அத்தானை ஒட்டிக் குந்தினாள் அன்னம்.

''ஒண்ணும் மட்டுப்பட மாட்டேங்குது, புள்ளே!'' ரத்தத்தைத் துடைத்தபடி சொன்னான் வீரமணி.

''ஐயையோ!''

பாவம், ராமையா விழித்தார். சந்தடி சாக்கில் தப்பினமட்டும் ஆதாயமென்று எண்ணி, பையப் பைய நழுவ வேலை பார்த்திருந்தார்; தப்பிவிடவும் முனைந்தார்.

வீரமணி 'கச்சம்' கட்டியபடி கோபாவேசமாக எழுந்தான். 'அம்மான்! என்னோட அப்பாவை உயிர்க் கழுவிலே தவிக்க வச்சுப்பிட்டு எங்கிட்டுக் கால் மாறப் பார்க்கறீங்க? போனதும் வந்ததுமாய் ஓட்டமாய் ஓடிப் போய், நம்ப நாட்டு வைத்தியர் சோமசுந்தர ஐயாவைக் கையோடே இட்டுக்கிட்டு ஓடியாங்க!'' என்று ஆணையிட்டான். அவனது வேட்டியின் முனையில் ரத்தம் சொட்டியது.

''அப்படியே செய்கிறேனுங்க, மாப்பிள்ளை!''

பெட்டிப் பாம்பாகவோ அல்லது மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பாகவோ மாறிவிட்டார் ராமையா.

இரண்டாந் தடவையாகப் புது பிறவி கொண்டார் ஊர் நாட்டாண்மை ஆதிமூலத் தேவர். கண்களை மருள மருள விழித்த வண்ணம் சுற்று முற்றும் பார்வையைப் பரப்பினார். ராமையாவைக் கண்டவுடன், அவரது கண்வலையங்களைக் குரோத மனப்பான்மை வளைத்துக் கொண்டது. பற்களை கடித்துக் கொண்டார். எதையோ நினைவுபடுத்திக் கொண்டவர் போன்று ஓர் அரைக்கணம் திகைப்படைந்தார். அவசரம் அவசரமாக, படுத்த நிலையிலேயே தன் அடிமடியைத் தடவி பார்த்தார். இரண்டு சிமிக்கிகளும் பத்திரமாக இருப்பதைக் கண்டு கொண்டவுடன், ஆறுதலோடு நெடு மூச்செறிந்தார்.

''நான் விடை வாங்கிக்கிடட்டுமா, மாப்பிள்ளை?'' என்று விடை கேட்டார் ராமையா.

**சேலம் பெற்ற பரிசு**

அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி பரிசுத் திட்டப்படிப் புது தில்லியில் நடந்த பரிசுக் குலுக்கலில் சேலம் மாவட்டம் கருப்பூர் அஞ்சல் நிலையத்தில் பணம் போட்டிருக்கும் ஒருவருக்கு இரண்டாவது பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது.

அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளில், 1973 டிசம்பர் முதல் 1974 மார்ச் வரையில் 200 ரூபாய்க்குக் குறையாமல் பணம் போட்டு வைத்தவர்கள், இந்தப் பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முதல், இரண்டாவது பரிசுகள் தவிர, 50 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை மதிப்புள்ள வேறு பல பரிசுகளும் வழங்கப்படும்.

''ஏய் ராமையா! என் அருமை மகன் வீரமணியை மாப்பிள்ளைச் சொந்தம் கொண்டாடிக் கைக் குன்னே போட்டுகிட கனவிலே கூட நான் சொன்னதை மறந்துப்பிட்டா, மறுதக்கமும் 'வீரமணி மாப்பிள்ளை'ன்னு அழைச்சு அவன்கிட்டே விடை கேட்கிறே? — உனக்கு எம்புட்டு நெஞ்சழுத்தம் இருக்க வேணும்? டேய் ராமையா? உனக்கு விடை கொடுக்க வேண்டியவன் நான்தானாக்கும்! ஏன் தெரியுமாடா? என்னோட இந்த ரத்தத்துக்குப் பதில் சொல்லித் தீர வேண்டியவன் நீதானாக்கும்!'' என்று முழக்கம் செய்தார் அவர். கை விரல்களில் படிந்திருந்த ரத்தக் கறையின் கவடுகளைச் சாட்சியாகக் காட்டினார்.

ராமையாத் தேவருக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து தொலைக்கவே, அவர் தன்னுடைய பவித்திரமான மீசையை வருடி விட்டார். ''நீர் 'அதகடி' பண்ணி எடுத்து வச்சிருக்கிற என்னோட வைரச் சிமிக்கிகளுக்கு முதலிலே நீர் 'வகை' சொன்னால், நான் உம்மோட ரத்தத்துக்கு வழி சொல்லுறேன்!'' என்றார்.

''ஓகோ! அப்படியா கதை மடக்குறே நீ? . . சரி; உன்னோட வெள்ளையை மடக்கிப் போட்டு வச்சிருக்கிற என்னை நீ எந்தச் சட்டத்தைக் கொண்டு மடக்கப் போறியோ; அதே சட்டத்தைக் கொண்டு, உன்னோட வைரச் சிமிக்கிகளை நான் உன் கண்ணுக்கு முன்னாலேயே லாந்தி வச்சிருக்கிற சங்கதிக்கும் என்னை மடக்கிப் போடுவேன் பார்க்கலாம்!'' என்று வீராப்புடன் மொழிந்தார் பெரியவர்.

''ஊம்; பார்க்கலாம்!'' என்று காட்டமாகத் தெரிவித்தார் சிங்கப்பூர்க்காரர். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டே, ''அருமை மச்சானே! இந்தச் சந்தர்ப்பத்திலே இன்னொரு உண்மையையும் உம்மகிட்டே நான் செப்பிட வேண்டும்!'' என்று கோடி காட்டிவிட்டு, நின்றார் ராமையா.

இப் பேச்சைக் கேட்டதும், முதியவர் மூர்த்தண்யமாகக் கைகொட்டி நகைத்தார். ''அப்பனே ராமையாத் தேவா! உண்மையை நீ நம்புறியா? அதை நீ மதிக்கிறியா? அட, பைத்தியக்கார பாவி! கேப்பையிலே நெய் வடியுதின்னா, கேட்பாருக்கு மதி இல்லையா? நான் உன்னை மாதிரி மதிகெட்டவன் இல்லே! உன்னை மாதிரி, மகள் பேரைச் சொல்லிக்கிட்டு, யாரோ ஊர் பேர் தெரியாத சிறுக்கிக்காக வைரச் சிமிக்கிகளைப் பண்ணிப்புட்டு, இப்ப அதுகளைக் கோட்டை விட்டுப்புட்டு அம்போன்னு நிற்கிறவனா நான்? போடா, போ!'' என்று அதிர்வேட்டுச் சிரிப்பை உமிழ்ந்தார்.

''ஏய் ஆதிமூலத் தேவா! . . . வாயை மறுபடியும் எக்குத் தப்பாய் நீட்டினியோ அப்பாலே நான் கையை நீட்ட வேண்டி வந்திடும். ஜாக்கிரதை!''

''சரிதான் போடா, போக்கங்கெட்ட பயமவனே!'' என்று ஓங்காரமிட்டு உறுமியபடி, ராமையாவை நோக்கிப் பாய்ந்தார் மூத்தவர்.

வீரமணியும் அன்னக்கொடியும் முன்மேல் நின்றார்கள்.

நாட்டு வைத்தியர் இடைமறித்து, ராமையாவின் கைகளைப் பற்றினார்.

"அந்த வெறும் பயல் கையை நீட்டுவானேன்னு, நீங்க வேலை மெனக்கெட்டு அந்த முடிச்சு மாறிப் பயல் கையைப் பிடிக்கிறீங்க? அவன் கையை நீட்டினால், என் கை பூப்பறிக்கவாபோயிடும்? என்னமோ, முதுகுப்புறத்தாலே பயங்கொள்ளியாட்டம் பாய்ஞ்சு என்னைக் கீழே தள்ளிப் போட்டான் அவன். அதுக்கு உண்டான கூலியை அவனுக்குக் கொடுக்காமலா இருக்கப் போறேன்? இந்தத் துப்புக் கெட்ட பயலுக்கு எங்க வீரமணி மாப்பிள்ளையாமே? கேட்டீங்களா கதையை?!! என்று உறுமினார் பெரியவர்.

"ஆமாங்காணும்! உங்க வீரமணி எங்க வீட்டு மாப்பிள்ளைதானுக்கும்!"

இப் பேச்சைக் கேட்டதுதான் தாமதம், உடனே, ஆதிமூலத் தேவர் தன் மைந்தன் வீரமணியைச் சந்தேகக் கண்ணோடு பார்வையிட்டார். "வீரமணி!" என்று விளித்தார். சாமியாடியின் கண்களாக அவருடைய கண்கள் உருமாறின!

வீரமணி கடைக்கண் பார்வையால் அன்னத்தை அளந்தவண்ணம் தன்னுடைய உரிமையின் முடிவு பளிச்சிட, கம்பீரமான மிடுக்கோடு நடந்து வந்து நின்றான். மெல்லிய குரலெடுத்து, "அப்பா!" என்றான். ஏனோ அவனது அழகான கண்கள் இரண்டும் கலங்கிவரத்தொடங்கி விட்டன!

"தம்பி வீரமணி! உன் அம்மான் ராமையாத் தேவன் உன்னை மாப்பிள்ளைச் சொந்தம் கொண்டாடிக் கும்மாளமடிக்கக் கொக்கரிக்கிறானே? மெய்தானா அது?"

அப்பாவின் ஏடாகூடமான கேள்விக்கு மகன் விடையிறுக்கத்தான் வேண்டும். ஆனால், அவனோ வாய் மூடி மௌனியானான்!

ஆதிமூலத்தின் இதயத்திலே சாம்பல் பூத்த தணலாகக் குமைந்து கொண்டிருந்த ஐயமும் சினமும் காற்றுப் பட்டுக் கனல் ஆரம்பித்தன. "வீரமணி! உன்னைப் பெற்ற அப்பன்—இந்த ஆவணத்தாங்கோட்டை ஊர் நாட்டாண்மைக்காரன் கேட்கிறேன். கேட்டதுக்கு பதில் சொல்லாமல் வாயை மூடிக்கிட்டு நிற்கிறதைப் பார்த்தால், உன் அம்மான் தன் மகள் அன்னத்தைக் கொண்டு உன்னை மசிய வச்சு வசியம் பண்ணிட்டான்னு அர்த்தமா? பேசு தம்பி, பேசு!" என்று ஆற்றாமையோடு கேட்டார்.

"அப்பா நீங்களோ என்னைச் சிலட்டூர் மாப்பிள்ளையாக்கக் கங்கணம் கட்டிட்டீங்க; என் அம்மானோ என்னைத் தன் வீட்டு மாப்பிள்ளையாக ஆக்கிக்கிடப் போறதாகச் சவால் விட்டிருக்காங்க! இதுக்கு ஊடாலே என்னோட சொந்த அபிப்பிராயத்தைப் பற்றித் தெரிஞ்சுக்கிட உங்க ரெண்டு பேரிலே யாருக்குமே பொறுப்பு ஏற்பட்ட இல்லீங்களே!" என்று ஒரு புதிய குரலில் சொல்லி முடித்தான் வீரமணி.

அன்னக்கொடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நின்றாள். வேகமாக அடித்த சுழிக் காற்றில் பறந்து வந்து காலடியில் தஞ்சம் அடைந்த ஒரு கடிதத் தாளை நலியாமல் கைப்பற்றி நிமிர்ந்தாள். ஆசை அத்தானை குழந்தைத்தனமாக நிர்மலப் போக்கோடு ஊடுருவினாள்.

சுயப்பிரக்ஞை கொண்ட ஆதிமூலம், "ஓகோ! அப்படியா சங்கதி! சரி, சரி. நான் என் முடிவை உன்கிட்டே சொன்னப்பலே நீ என்கிட்டே சொல்லியிருக்கோணும்! ஊம், இப்போது சொல்லப்பா, வீரமணி!" என்று கேட்டுக் கொண்டார். நெஞ்சு அடித்துக் கொண்டது!

"அன்னக்கொடி தவித்தாள்!

"நான் என்னோட ஆசை அன்னத்துக்கு அருமையான புருசனாக ஆகப் போறேனுங்க, அப்பா!" என்று தன்னுடைய தீர்ப்பைத் தெரியப்படுத்தினான் வீரமணி! . . .

(வளரும்)

## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட். நெ. ஜி-1828.

### படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்றும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!

# வெற்றி மணம் கமழும் விடுதலை நாள் விழா

இந்தியா விடுதலை பெற்ற நாளிலிருந்து, ஆண்டுதோறும் அந்த விடுதலை நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம். இப்படி நாம் ஆண்டு தோறும் அந்த மகிழ்ச்சித் திருநாளை ஆடிப்பாடிக் கொண்டாடினாலும், அந்தந்த மாநிலத் தலைநகரில் அந்தந்த மாநில முதல்வரே கொடியேற்றும் உரிமையின்றி, மாநிலத்தின் ஆளுநர் கொடியேற்றுவதே மரபாக இருந்து வந்தது. இவ்வாண்டு, கத்தியின்றி, இரத்தமின்றி, ஒரு சிறு போராட்டம் கூட இல்லாமல், அமைதிப் புரட்சியால் அந்த மரபை மாற்றியமைத்த பெருமை-வரலாற்றுச் சிறப்பு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.

"மண் மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில், வெற்றிக் களிப்புடன் விண்முட்டப் பறந்து பட்டொளி வீசிடும் இந்திய தேசியக் கொடியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்கள்தாம் இந்த நாளில் மாநிலங்களின் தலைநகரங்களில் ஏற்றி வைக்க வேண்டும்" என்று தமிழக முதல்வர் எழுப்பிய உரிமைக்குரலுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்ததற்கிணங்க, சென்னை கோட்டைக் கொத்தளத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள், 15-8-74 காலை 8 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள்.

15-8-74 காலை கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றுவதற்கு முன்னால், முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழர்களின் இதய தெய்வமான

அட்டை சொல்லும் செய்தி

பேரறிஞர் அண்ணா துயில் கொள்ளும் அண்ணா சதுக்கத்திற்குச் சென்று, அங்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். பின்னர், அங்கிருந்து திறந்த காரில் புறப்பட்டுக் கோட்டையின் வாயிலை வந்தடைந்தார்கள். வாயிலில் பெருந் கோட்டை வாயிலில் கூடியிருந்த பொது திரளாகக் கூடியிருந்த பொதுமக்கள் 'கலைஞர் வாழ்க' என்று விண்ணதிர முழக்கமிட்டனர். முதல்வர் கலைஞர் அவர்கள் பொதுமக்களுக்கு அன்போடு வணக்கம் தெரிவித்தார்கள். பின்னர் முதல்வர் அவர்களுக்கு சென்னையிலுள்ள முப்படைத் தளபதிகள் அறிமுகம் செய்து வைக்கப் பெற்றனர். அதன் பின், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

காவல்துறை 'பாண்ட்' வாத்தியக் குழுவினர் இன்னிசை முழக்கினர்.

வாழ்த்து மலர்களை சொரிந்த மக்கட் கடலை நோக்கிப் புன்னகை தவழக் கரம் அசைத்து நன்றி தெரிவித்தபின் வெண்புரவிகளின் மீதமர்ந்த காவலர் வீர வரவேற்பளித்தனர். முதல்வர் கலைஞர் அவர்கள் கோட்டைக் கொத்தளத்திற்கு வந்து அங்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்ததும், தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, தமிழக முதல்வர், தமிழக மக்களுக்குச் சுதந்திர தினச் செய்தியை வழங்கினார்கள். இந்த 27-வது சுதந்திர தினம், மரபை மாற்றியமைத்து, மாநில முதல்வர்களுக்குக் கொடி ஏற்றும் உரிமையை வழங்கும் வரலாற்றுச் சிறப்புடைய நாளாக விளங்கியது 'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பதுபோல, வல்லார் ஒருவர் கேட்ட இந்த உரிமை இந்தியாவில் உள்ள எல்லா மாநிலத்திற்கும் கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சாமி பழ



## செய்தியாளர்களுக்கு முதல்வரின் விருந்து

முதல்வர் கலைஞர் அவர்கள் 15—8—74-ல் சுதந்தர நாளன்று, சென்னை ராஜாஜி மண்டபத்தில் செய்தியாளர்களுக்கு ஒரு விருந்தளித்தார்கள். செய்தித் துறை அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில்,

"இன்றைய விருந்தைப் பற்றி உங்களுடைய பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் என்னிடம் கூறும்போது, நிருபர்களை அழைத்து, முதன் முதலாக ராஜாஜி மண்டபத்தில் நடைபெறுகிற விருந்து இதுதான் என்று குறிப்பிட்டார்; இந்தியாவில் நடைபெறுகிற பாராட்டத்தக்க பல காரியங்கள் தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக நடைபெறுகின்றன என்பதை அறிகிற நேரத்தில் இது ஏதோ ஒரு கட்சிக்குரிய பெருமையாகக் கருதாமல், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிய பெருமையாக நாம் இந்த நாளில் கருதிக்கொள்ள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

குமார்

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்களின் பட்டியல் :

| எண். | திட்டத்தின் பெயர் | திட்டங்களின் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **1971—72 ஆம் ஆண்டில்** | |
| 1. | திருப்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் (வட ஆர்க்காடு மாவட்டம்) | 45.57 |
| 2. | கடையநல்லூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 30.00 |
| 3. | போளூர் குடிநீர் வழகும் திட்டம் | 15.37 |
| 4. | திருக்கோயிலூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 11.45 |
| 5. | கள்ளக்குறிச்சி குடிநீர் வழங்கும் திட்டம் | 9.99 |
| 6. | பெருந்துறை குடிநீர் வழங்கும் திட்டம் | 42.45 |
| 7. | திருவாரூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 27.76 |
| | **1972—73 ஆம் ஆண்டில்** | |
| 8. | ஆம்பூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 40.00 |
| 9. | பண்ணுருட்டி குடிநீர் வழங்கும் திட்டம் | 26.09 |
| 10. | ஆத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 23.86 |
| 11. | கிருஷ்ணகிரி குடிநீர் வழங்கும் திட்டம் | 28.00 |
| 12. | பூவிருந்தவல்லி குடிநீர் வழங்கும் திட்டம் | 24.40 |
| 13. | உத்திரமேரூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 18.51 |
| 14. | விக்கிரமசிங்கபுரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 27.55 |
| | **1973—74 ஆம் ஆண்டில்** | |
| 15. | வாணியம்பாடி குடிநீர் வழங்கும் திட்டம் | 46.43 |
| 16. | மேல்விஷாரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 13.87 |
| 17. | சோளிங்கர் குடிநீர் வழங்கும் திட்டம் | 23.80 |
| 18. | காவேரிப்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 9.57 |
| 19. | நிலக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம் | 19.40 |
| 20. | மோகனூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 6.50 |
| 21. | பரமத்தி குடிநீர் வழங்கும் திட்டம் | 12.92 |
| 22. | இராமநாதபுரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 37.41 |
| 23. | புஞ்சை புளியம்பட்டி குடிநீர் வழங்கும் திட்டம் | 25.74 |
| 24. | அருப்புக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம் | 65.00 |
| 25. | குளித்தலை குடிநீர் வழங்கும் திட்டம் | 13.00 |
| 26. | லப்பைக் குடிகாடு குடிநீர் வழங்கும் திட்டம் | 5.50 |
| 27. | புஞ்சை புகளூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 15.68 |
| 28. | செந்தாரப்பட்டி குடிநீர் வழங்கும் திட்டம் | 1.92 |
| 29. | திருப்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்) | 28.50 |
| | **1974—75 ஆம் ஆண்டில் (இதுவரை)** | |
| 30. | காட்பாடி, காட்பாடி புதுக்குடியிருப்பு விருதம்பட்டு ஏனைய ஊராட்சிகளுக்குமான குடிநீர் வழங்தும் திட்டம். | 55.00 |

புதிய திட்டங்களின் மொத்த எண்ணிக்கை: 30

மொத்தச் செலவு ரூ. 753.12 இலட்சம்

தொழிற்சாலைகளில் 7,000 குழாய்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

திருத்திய மதிப்பீட்டின்படி வீராணம் திட்டத்துக்காகும் மொத்தச் செலவு ரூ. 29.25 கோடி. 15—7—74 வரை இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 15.44 கோடியாகும்.

வீராணம் திட்டத்தின் மூலம் 1975-ஆம் ஆண்டில் சென்னை நகருக்குத் தண்ணீர் கிடைக்கும்.

**புதை வடிகால் திட்டம் :**

சென்னை மாநகரத்தின் மக்கள் தொகையான 24.7 இலட்சம் பேரில் 21.5 இலட்சம் மக்கள் புதைவடிகால் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நகரத்தின் முக்கால் பகுதி அளவுக்குப் புதைவடிகால் திட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்திலுள்ள கழிவு நீர்க் குழாய்களின் நீளம் 1,000 கிலோ மீட்டராகும்.

1957-ஆம் ஆண்டில் சாய்க்கடை நீரேற்று நிலையங்கள் 22 இருந்தன. இப்பொழுது இந்த எண்ணிக்கை 54 ஆகும். கழிவு நீரேற்றும் நிலையங்கள் ஒவ்வொன்றிலிருந்து இருந்தும் இன்னொரு பகுதிக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள கழிவு நீரேற்றும் நிலையத்திலிருந்து நீரேற்றப்படுகிறது.

முதன் முதலில் சென்னை நகருக்கு ஆறரை இலட்சம் மக்கள் தொகை அடிப்படையில் புதை வடிகால் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று மாநகரத்தின் மக்கள் தொகை 25 இலட்சத்துக்கு மேலாகும். எனவே பழைபுதை வடிகால் திட்டங்களை விரிவுபடுத்தி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதைவடிகாலை மேம்படுத்தும் பணிகள் ஐந்து தனிப்பட்ட மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

ஐந்து மேம்படுத்தப்படும் திட்டங்களுக்காக செலவு ரூபாய் 10.32 கோடியாகும்.

இந்த மேம்படுத்தும் திட்டங்களினால் இதுவரை புது வடிகால் வசதி பெறாத பகுதிகள் வசதி பெறும். தேவையுள்ள இடங்களில் கழிவு நீரேற்றும் நிலையங்கள் அமைக்கப்படும்.

புது வடிகால் மேம்படுத்தும் பணிகள் 1976-ஆம் ஆண்டில் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநகருக்காக வருங்கால நிலைகளை ஒட்டி மாபெரும் புதைவடிகால் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டம் மூன்று கட்டங்களில் மேற்கொள்ளப்படும் :

1. இப்போதுள்ள புதைவடிகால்களைப் பழுது பார்த்து அமைத்தல்.

2. புதிய முக்கியமான புதை வடிகால்களை மதிப்பீடு செய்தலும் விரிவான திட்டங்களை வகுத்தலும்.

3. புதை வடிகால்களை இணைக்கும் வடிகால் திட்டங்களை அமைத்தலும்.

இந்த மூன்று கட்டங்களில் முதல் கட்டப் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு 40.93 இலட்சம் ரூபாயாகும். இத்திட்டப் பணிகள் அரசுக்கு அனுக்கப்பப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டப் பணிகளில் 28 முக்கியமான புதை வடிகால் பாதைகள் அமைக்கப்படும். ஏறத்தாழ ரூபாய் 5.50 கோடி செலவில் இது நிறைவேற்றப்படும். மூன்றாவது கட்டப் பணிகளில் முக்கிய புதை வடிகாலில் கிளை வடிகால் பகுதிகள் இணைக்கப்படும்.

**கோவைக்கு சிறுவாணி நீர் :**

கேரள அரசுடன் தமிழ்நாடு அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி இரண்டு மாநிலங்களுக்கும் பயன் அளிக்கும் திட்டமாகும் சிறுவாணி நீர்த்தேக்கத் திட்டம். இதன் மூலம் ஆண்டு தோறும் சிறுவாணி ஆற்றிலிருந்து 130 கோடி கன அடி அளவு தண்ணீர் நமக்கு அளிக்கப்படும். கோவை நகராட்சி பகுதிக்கும் அதனை ஒட்டியுள்ள கிராமங்களுக்கும் சிறுவாணி ஆற்று நீர் கிடைக்கும்.

கேரளப் பகுதியில் சிறுவாணி ஆற்றில் சிறிய நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டு அங்கிருந்து தண்ணீர் எடுத்து வரப்படும். அங்கு செய்யப்படும் பணிகளைக் கேரள அரசின் பொதுப் பணித்துறை நமது சார்பில் செய்கிறது. நீர் துப்புரவு நிலையம், நம் பகுதியில் தண்ணீர் கொண்டு வரும் பணிகள், தேக்கி வைக்கும் இடங்கள் சாலை அமைப்பு, சிறுவாணிக்குச் சாலை யமைத்திடும் பணிகளை நமது அரசு ஏற்றுள்ளது.

கேரள அரசுக்கு இத்திட்டத்தால் ரூ. 550 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாட்டுக்கு ரூ. 642 இலட்சம் செலவாகும்.

இப்பொழுதுள்ள கோவை நகரத்திற்கு மட்டுமல்லாது பெரிய கோயம்புத்தூர் என்று அழைக்கப்படும் பகுதியில் உள்ள உப்பிலிபாளையம், கணபதி, சிங்காநல்லூர் பாளையம், பீளமேடு, குனிசெளரிபாளையம், தெலுங்குப்பாளையம், யமுத்தூர், தெலுங்குப்பாளையம், குறிச்சி, சங்கனூர் பகுதி, கவுண்டன்பாளையம், கிருஷ்ணராய புரம், இராமநாதபுரம், புளியங்குளம், கண்டைக்காமுத்தூர், ஆட்டுப்பாளையம் முதலிய இடங்களுக்கும் சிறுவாணி நீர் கிடைக்கும்.

சிறுவாணி நீர் வரும் வழியிலுள்ள ஊர்களான தெப்பிபாளையம், ஆலந்துறை, புழுவப்பட்டி, மடம்பட்டி, கள்ளம்பாளையம், பச்சாபாளையம், செட்டிபாளையம் பேரூர், தெலுங்குப் பாளையம் முதலிய ஊர்களுக்கும் சிறுவாணி நீர் கிடைக்கும்.

**தொழிலுக்கு நீர் :**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள தண்ணீர் வசதிகள் வருமாறு :

ரூபாய் 470 இலட்சம் செலவில் தூத்துக்குடியில் ஸ்பிக் தொழிற்சாலை தொடர்புடைய அனைத்து தொழிலகங்களுக்கும் நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 76.50 இலட்சம் செலவில் துறைமுகத்துக்கு நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 26.16 செலவில் திருச்சி ஆயுதத் தொழிற்சாலைக்கு நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 22.00 இலட்சம் செலவில் அரக்கோணம் எஃகு உருக்காலைத் திட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 58.94 இலட்சம் செலவில் ஆவடி கனரக வாகன தொழிற்சாலைக்கு நீர் வழ்ங்கும் திட்டம்.

இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சேலம் இரும்பாலை திட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டம் முடி

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட (Improvements Scheme) திட்டங்களின் பட்டியல்

| எண். | திட்டங்களின் பெயர் | செலவு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| | **1971—72 ஆம் ஆண்டில்** | |
| 1. | தாம்பரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 12.75 |
| 2. | புதுக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம் | 30.00 |
| | **1972—73 ஆம் ஆண்டில்** | |
| 3. | செங்கல்பட்டு குடிநீர் வழங்கும் திட்டம் | 21.72 |
| 4. | சிதம்பரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 3.24 |
| 5. | புளியங்குடி குடிநீர் வழங்கும் திட்டம் | 10.13 |
| 6. | அறந்தாங்கி குடிநீர் வழங்கும் திட்டம் | 1.58 |
| | **1973—74 ஆம் ஆண்டில்** | |
| 7. | மன்னார்குடி குடிநீர் வழங்கும் திட்டம் (தொடக்கநிலைத் திட்டம்) | 29.65 |
| 8. | திருநெல்வேலி குடிநீர் வழங்கும் திட்டம் (தொடக்கநிலைத் திட்டம்) | 54.00 |
| | **1974—75 ஆம் ஆண்டில் இதுவரை** | |
| 9. | ஸ்ரீரங்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 28.75 |
| 10. | கரூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 35.26 |

மேம்படுத்தப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை : 10

மொத்தச் செலவு ரூ. 753.12 இலட்சம்



# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்! சாதனைகள்!

குமார்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்னால் நம்முடைய நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் தேவைக்கு ஏற்ப குடிநீர் வழங்கிடவும் புதை வடிகால் அமைத்திடவும் முனைந்து செயல்படக் கூடிய ஒருங்கிணைந்த ஓர் அமைப்பு கிடையாது. அப்பொழுது எல்லாம் குடிநீர் வழங்குதல், புதை வடிகால் அமைத்தல் போன்ற பணிகளை நிறைவேற்ற பல்வேறு அமைப்புகள் கூட்டு முயற்சியாக செயல்பட வேண்டியிருந்தது. இதனால் விரைந்து செயல்படவும் முடியவில்லை. சிக்கல்களே வளர்ந்தன. திட்டங்களை நிறைவேற்றிட ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியும் அமைய வாய்ப்பில்லை. குடிநீர் திட்டங்கள் பற்றிய அடிப்படையான விவரங்களும் உணரப்படவில்லை. திட்டங்களுக்குரிய முக்கியத்துவம் தரப்படவில்லை.

ஆனால், இந் நிலையை மாற்றியமைத்திட அமைப்பாக உருவாகியது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

நவீன நாகரிக வாழ்க்கை வசதிகளோடு வளரும் நகரங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலும், புதை வடிகால் (சாய்க்கடை) முறைகள் அமைதலும் மிக இன்றியமையாததாகும். நோய்த் தடுப்புகளுக்கு மட்டுமல்ல தொழில்கள் வளர்ச்சியடையவும் தண்ணீர் வசதி முக்கியமாகும். மக்களின் நல்வாழ்வுக்கான இந்த அடிப்படைத் தேவைகளை விரைந்து செயல்படுத்தவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை நமது அரசு அமைத்தது.

தன்னுள் தனி அதிகாரம் படைத்த ஓர் அமைப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை நமது அரசு 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் அமைத்தது. இதற்கு முன்பு மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறையும், நகராட்சிப் பணித் துறையும் நிறைவேற்றி வந்த பணிகளையும் கடமைகளையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டது. இதனால் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ் நாட்டில் குடிநீர் வழங்கும் பணிகளில் மகத்தான சாதனைகள் உருவாகியுள்ளன.

ரூபாய் ஐம்பதாயிரம் செலவுக்கு மேற்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம், புதை வடிகால் அமைக்கும் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே மேற்கொண்டு நிறைவேற்றுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ள திட்டங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. நகர்ப் புறங்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டமும், புதைவடிகால் திட்டமும்,

2. கிராமப் புறங்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டம்,

3. தொழில்களுக்காக நீர் வழங்குதல்.

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் 1.55 கோடியாகும். நகர்ப்புற மக்களுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு வழங்கும் கடன்களைக் கொண்டு இப்பகுதிகளில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாட்டில் பாதுகாக்கப் பட்ட குடிநீர்வசதி சில தகவல்கள்.**

| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டின் பரப்பளவு | : | 1,29,900 சதுர கிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | : | 4·11 கோடி |
| நகர்ப்புற மக்கள் தொகை | : | 1·55 கோடி |
| கிராமப்புற மக்கள் தொகை | : | 2·56 கோடி |

| நகர்ப்புறங்களில் அடங்கியவை : | | இதில் குடிநீர் வசதி பெற்றவை : | |
|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 2 | மாநகராட்சிகள் | 2 |
| நகராட்சிகள் | 100 | நகராட்சிகள் | 87 |
| நகரியங்கள் | 13 | நகரியங்கள் | 8 |
| பேரூராட்சிகள் | 625 | பேரூராட்சிகள் | 71 |

குடிநீர் வசதி பெற்றுள்ள மொத்த நகர்ப்புற மக்களின் எண்ணிக்கை —1 கோடி (65 சதவிகிதம்)

கிராமப்புறங்களில் அடங்கியவை :

374 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 13,000 ஊராட்சி மன்றங்களில் அடங்கியுள்ள ஊர்களும் சிற்றூர்களும் —58,595

இதில் குடிநீர் வசதி பெற்றவை :

ஊர்களும் சிற்றூர்களும் சேர்த்து மொத்தம் : 40, 709

குடிநீர் வசதி பெற்றுள்ள கிராமப்புற மக்கள் எண்ணிக்கை —1·46 கோடி (58 சதவீதம்)

இப்பொழுது தமிழ் நாட்டில் 118 குடிநீர்த் வழங்கும் திட்டங்களும் புதை வடிகால் திட்டங்களும் ஐம்பத்தேழு கோடி முப்பத்தொரு லட்சத்து அறுபத்தேழாயிரம் மதிப்பீட்டில் பல்வேறு கட்டடங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சென்னை நகருக்கு :

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி சென்னை மாநகரத்தின் மக்கள் தொகை 24.7 இலட்சமாகும். சென்னை நகரத்திற்குரிய தண்ணீர் முழுவதும் சத்தியமூர்த்தி சாகரம், சோழவரம் ஏரி, செங்குன்றம் ஏரி முதலியவற்றின் மூலம் பெறப்படுகிறது. சோழவரம் ஏரி செங்குன்றம் ஏரிக்கு கொற்றலையாறு மூலம் தண்ணீர் கிடைக்கிறது. வடகிழக்குப் பருவ மழையின் மூலம்தான் கொற்றலையாறுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும்.

இப்பொழுது சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 5 கோடி 2 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதாவது 17 சென்னை நகரில் தலைக்கு காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப 1991-ஆம் ஆண்டில் சென்னை நகருக்கு நாள் ஒன்றுக்கு 27 கோடியே 5 இலட்சம் காலன் தண்ணீர் தேவைப்படும். இந்தத் தேவையின் அடிப்படையை நோக்கியும் உடனடித் தேவைகளுக்கு வகை செய்யும் வகையிலும் அமைந்தது வீராணம் திட்டம்.

வீராணம் திட்டத்தின் மூலம் இப்பொழுது சென்னை நகருக்கு கிடைக்கும் தண்ணீர் இரட்டிப்பாகும். காங்க்ரீட் குழாய்கள் மூலம் தென்னார்க்காடு மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகிலுள்ள வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் சென்னை நகருக்குத் இரண்டு கொண்டு வரப்படும்.

கட்டங்களில் நீரேற்றும் முறையில் தண்ணீர் குழாய்கள் மூலம் கொண்டு வரப்படும்.

வீராணத்திலிருந்து முதலில் நீரேற்றி, அங்கிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வடக்குத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

வடலூர் அருகிலுள்ள வடக்குத்துவில் தமிழ் நாட்டிலேயே



மிகப் பெரிய 'நீர் துப்புரவு நிலையம்' அமைக்கப்பட்டுள்ளது. வீராணம் ஏரியிலிருந்து வரும் நீர் இங்குத் துப்புரவு செய்யப்படும்.

வடக்குத்துவிலிருந்து சென்னை நகரம் 198 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. வடக்குத்துவில் துப்புரவு செய்யப்பட்ட நீரை, அங்கிருந்து நீரேற்றிக் குழாய்கள் மூலம் சென்னை தியாகராயநகர் பிரகாச முதலி தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி தென் பகுதி பணிக்கூடத்துக்குக் கொண்டு வரப்படும். அங்கிருந்து சென்னை நகருக்கு நீர் வழங்கப்படும்.

வீராணம் திட்டம் பற்றிய சில தகவல்கள் வருமாறு :

வீராணம் ஏரியிலிருந்து சென்னை நகருக்கு மொத்தம் 218.62 கிலோ மீட்டர் தொலைவுக்குக் குழாய்கள் அமைக்கப்பட வேண்டும்.

மொத்தம் 36,500 குழாய்கள் தேவைப்படும். ஒவ்வொரு குழாயின் நீளம் 6 மீட்டராகும். அந்தக் குழாய் உட்புறத்தின் குறுக்களவு 5 அடி 5 அங்குலமாகும்.

இந்தக் குழாய்களைத் தயாரிக்க திருக்கழுக்குன்றம் அருகில் மங்கலத்திலும் பண்ணுருட்டி அருகிலும் இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. குடிநீர் கொண்டு வருவதற்காக இங்குத் தயாரிக்கப்படும் குழாய்கள்போல இந்தியாவில் வேறு எங்கும் தயாரிக்கப்படவில்லை.

இத் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 28 குழாய்கள் தயாரிக்கும் திறனுடையவை.

15—7—74 வரையில் இத்

உங்கள்
எதிர்காலத்திற்கு
ஓர்
நற்செய்தி

TNSC
BANK

எப்பொழுதும் இல்லாத
அதிகப்படியான வட்டி
இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு
கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

| ரு 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரு 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001

தந்தி அர்பாங்க் தொலைபேசி: 20367 டெலக்ஸ் 7225

என்.எல். ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர். குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி தலைத்தலைவர் ஆர். கனகசபை, தலைவர்.


**ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்**
**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
**செயல்படுத்தப் போகும் திட்டங்களின் மதிப்பீடு**

| | |
|---|---|
| 1. சென்னை நகரம் நீங்கலாக | ரு. 25·50 கோடி |
| 2. சென்னை நகருக்கு | ரு. 27·40 கோடி |
| 3. கிராமப்புறங்களுக்கு | ரு. 25·00 கோடி |

1974-75-ஆம் ஆண்டு திட்டச் செலவு மதிப்பீடு:

| | |
|---|---|
| 1. சென்னை நகரம் நீங்கலாக நகர்ப்புறங்களுக்கு | ரு. 5·62 கோடி |
| 2. சென்னை நகருக்கு | ரு. 5·50 கோடி |
| 3 கிராமப்புறங்களுக்கு | ரு. 2·50 கோடி |

கூடுதலாக முதலமைச்சர் ஒதுக்கியுள்ள தொகை:

| | |
|---|---|
| 1. சென்னை நகரம் நீங்கலாக நகர்ப் புறங்களுக்கு | ரு. 1 கோடி |
| 2. சென்னை நகருக்கு | ரு. 2 கோடி |
| 3. கிராமப்புறங்களுக்கு | ரு. 3 கோடி |

வெ `க்கும் கட்டத்தில் உள்ளது.

**கிராமப்புறங்களுக்கு நீர் வசதி:**

தமிழ் நாட்டு மக்கள் தொகையில் 2.56 கோடி மக்கள் 58,595 கிராமங்களிலும் குக்கிராமங்களிலும் வாழ்கின்றனர்.

இவர்களுக்கான குடிநீர் திட்டங்களைப் பல்வேறு முறைகளில் நமது அரசு நிறைவேற்றி வருகிறது.

ரூபாய் 29.35 கோடி செலவில் 5,754 விரைவுபடுத்தும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 455 திட்டங்கள், 1972—73-ஆம் ஆண்டில் ரு. 136.42 இலட்சம் செலவிலும் 1973—74-ஆம் ஆண்டில் 118.44 இலட்சம் செலவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களால் 237 கிராமங்கள் பயனடைந்து உள்ளன.

தமிழ் நாட்டில் தண்ணீர் பற்றுக்குறையுடைய ஊர்களிலும் காலரா பரவக்கூடிய சூழல் உள்ள ஊர்களிலும் ரூபாய் 2.71 கோடி செலவில் 8,850 குழாய்க் கிணறுகளை ஐந்தாண்டில் அமைத்திட ஐக்கிய நாடுகளமைப்பின் உலக நாடுகள் குழந்தை நல அவசர ஏற்பாட்டு நிதி (UNICEF) உதவியுடன் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக குழந்தை நல அவசர ஏற்பாட்டு நிதி உதவியால் தேவையான தளவாடங்களும் வாகனங்களும் மற்ற கருவிகளும் கிடைத்தன.

தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தின் முதல் கட்டப்பணியாக 1971—72-ஆம் ஆண்டில் 2,000 துளைக் கிணறுகள் வெட்ட திட்டமிட்டது. இது வரை 1,575 குழாய்க் கிணறுகள் அமைத்ததில் 1,367 குழாய்க் கிணறுகள் வெற்றிகரமாக அமைந்துள்ளன. ரு. 70.6 இலட்சம் செலவில் அமைத்த இத் திட்டங்களில் 706 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

1974—75-ஆம் ஆண்டில் நோய்கள் பரவக்கூடிய சூழல் உள்ள கிராமங்களுக்கு ரு. 200 இலட்சம் செலவில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பற்றுக் குறை கிராமங்களுக்கும் 200 கோடி செலவில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இப்படி ஒவ்வொரு துறையிலும் பணிகளை விரைவாகவும் செம்மையாகவும் செய்துவரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1972—73-ஆம் ஆண்டில் 11 கோடி ரூபாயும், 1973-74-ஆம் ஆண்டில் 14 கோடியே 37 இலட்சம் ரூபாயும் செலவிட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டான (1974—75) இந்த ஆண்டில் வீராணம் திட்டம், கிராமப்புற குடிநீர் வழங்குத் திட்டம் சென்னை மாநகராட்சி புதைவடிகால் திட்டத்துக்காகவும் ரு. 14 கோடி செலவிடத் திட்டமிட்டுள்ளது.

—மாமூலன்

## கிராம குடிநீர்த் திட்டங்கள்

இதுவரை, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும், குடிநீர்த் திட்டங்களுக்கென, ஒரே அளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒரே அளவான நிதி ஒதுக்கீடு, அதிக அளவில் நிதி தேவைப்படும். ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை நிறைவேற்ற இயலவில்லை. எனவே, குடிநீர்த் திட்டங்கள் தொடர்பாக அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கிராம வேலைத் திட்டங்களின் கீழ், கிராம குடிநீர்த் திட்ட வேலைகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர் பற்றுக்குறையாகக் காணப்பட்டு, பலப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளதோ, அங்கெல்லாம் கிராம குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.

கிராம மக்கள் முடிந்த அளவு பயன்பெற வேண்டும் என்பதே கிராம குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசின் நோக்கமாகும். இயன்ற இடங்களில், குழாய் மூலம் வழங்கும் முறை இல்லாமல், தரைமட்ட குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்படும். கிராமத்தின் தொலைவிலிருந்து, மின் ஏற்றத்தின் வாயிலாகத்தான் கிராமத்திற்கு நீர் கொண்டு வரமுடியும் என்ற நிலையிலிருக்கும் கிராமங்களுக்கு, தொழில் நுட்ப வல்லுநரின் சான்றின் பேரில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க ஒப்புதல் வழங்கப்படும்.

இந்தத் தற்போதைய-மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ், கிணறுகள் வெட்டிக் கட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்த துணையிடுதல், தரைமட்டத்தில் நீர்த் தேக்க நிலைகளுக்காகக் குழாய்க் கிணறுகள் அமைப்பது போன்ற வேலைகளே எடுத்துக் கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில், ஒவ்வொரு புதிய குடிநீர் வழங்கும் திட்டத்தையும் செய்து முடிக்க ரு. 15,000 அரசு மானியமாக அளிக்கப்படும். மொத்த நிதி ஒதுக்கீட்டில் 20 சத விகிதம் அரிசனங்களின் நலனுக்கென்று மட்டுமே செலவிடப்படும்.

தற்போது, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் இல்லாத அரிசனக் குடியிருப்புக்களில் குடிநீர் வசதி செய்வதில் தனிக் கவனம் செலுத்தப்படலாம்.

# அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் திருப்பணி

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருப்பதிகளில் திருவல்லிக்கேணிக்குத் தனிச் சிறப்பும் பெருமையும் உண்டு. தொண்டமான் என்னும் பழந்தமிழ் மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கி, திருவேங்கடமுடையான் கண்ணபிரானுக உருக்குமினிப் பிராட்டியாருடன், அநிருத்தன் பிரத்தியும்னன், பலராமன், சாத்யகி ஆகிய தன் குடும்பத்தாருடன் சேவை சாதித்து அருள்புரிந்த தலம்.

இவ்வளவு சிறப்புமிக்க இத்திருக்கோயிலுள்ள இராச கோபுரம், ஆனந்த விமானம், கஜேந்திர வரதர், ஆண்டாள், திருமழிசை ஆழ்வார், ஆளவந்தார், உடையவர், மணவாள மாமுனிகள் விமானங்கள், நரசிம்மசுவாமி ராஜகோபுரம் முதலியவற்றிற்குத் திருப்பணிகள் வேலை செய்ய சுமார் 2 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. இதற்கு முன் இத்திருக்கோயிலில் 1936-ல் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு மகாசம்ரோட்சணம் நடைபெற்றுள்ளது. திருப்பணி நன்கொடைக்கு வருமானவரி விலக்கு உண்டு. மேலும் ஆயிரம் ரூபாய் நன்கொடை அளிக்கும் அன்பர்கள் பெயரை சலவைக் கல்லில் பொறிக்கப்படும்.

ஆகவே இதைக் காணும் அன்பர்கள் அருள்மிகு பார்த்தசாரதியின் திருவருளுக்குப் பாத்திரமாகித் தங்கள் வாழ்க்கை ரதத்தை செவ்வனே ஓட்டி இன்புற்றிருக்க கீழ்க்கண்ட முகவரிக்கு நன்கொடை அனுப்பி மகிழலாம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

**நிருவாக அதிகாரி,**
**அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்,**
**திருவல்லிக்கேணி, சென்னை-600005.**

P. G. செங்கல்வராய செட்டி,
*தலைவர், அறங்காவலர் குழு,*

K. R. சீனிவாசாசாரி, M.A.,
நாதெள்ள ஆதிகேசவுலு குப்தா,
*அறங்காவலர்கள்*

S. சோமசுந்தரம், B.A.,B.L.,
*நிருவாக அதிகாரி.*

# நிலக்கடலை மற்றும் உருளைக் கிழங்கு அறுவடை செய்ய ஒரு கருவி!



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சிப் பொறியாளர் பணிமனையில், நிலக்கடலை மற்றும் உருளைக் கிழங்கு அறுவடை செய்வதற்குரிய ஒரு கருவி உருவாக்கப்பட்டுள்ளது. நிலக்கடலை, உருளைக் கிழங்கு ஆகியவைகளை அறுவடை செய்வதற்கு ஏற்றார்போல் தனித் தனி இணைப்புகளைப் பொருத்திக்கொள்ளக் கூடிய வகையில் இக் கருவி அமைந்துள்ளது. நிலக்கடலை அறுவடை செய்ய பிறை போன்ற வடிவம் உடைய கத்தியையும் (Blade), உருளைக் கிழங்கு அறுவடை செய்ய பார் பிடிக்க உதவும் பகுதி போன்ற அமைப்பையும் (Ridger) இக் கருவியில் பொருத்திக் கொள்ள வேண்டும். இவ்விரு இணைப்புகளும் வளைவான ஒரு அச்சில் இணைக்கப்படுகின்றன. இவ்வச்சு, இரு எஃகுச் சக்கரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாடுகளைப் பிணைத்து இயக்கக்கூடிய இக் கருவியில், ஓட்டிச் செல்பவர் வசதியாக அமர்ந்து கொள்ள இருக்கையும், ஆழத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யக்கூடிய அமைப்பும் உள்ளன. இக் கருவியினுல், அறுவடை செய்யும் பொழுது உருளைக் கிழங்குகளுக்கும், நிலக்கடலைகளுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுவதில்லை.

இக் கருவியைக் கொண்டு 8 மணி நேரத்தில் 1.15 எக்டேர் பரப்பு நிலக்கடலை அல்லது 0.88 எக்டேர் பரப்பு உருளைக் கிழங்கை அறுவடை செய்யலாம்.

இக் கருவியின் நீளம், அகலம், உயரம், அறுவடைச் சக்தி, விலை இயக்கச் செலவு ஆகியவை பின்கண்டவாறு உள்ளன:

மொத்த நீளம்: 172செ.மீ.

மொத்த அகலம்—75செ.மீ.

மொத்தஉயரம்—109செ.மீ.

எடை—120 கிலோ.

இயக்கத் தேவைப்படும் சக்தி—ஒரு இணை எருதுகள்.

விலை—ரூபாய் 575 (இரு வகை இணைப்புடனும்).

இக் கருவியைக் கொண்டு அறுவடை செய்யத் தேவைப்படும் ஆட்கள்—(1) நிலக்கடலைக்கு 2 ஆண்கள், 4 பெண்கள், (2) உருளைக் கிழங்குக்கு 2 ஆண்கள், 6 பெண்கள்.

அறுவடைச் செலவு—(1) நிலக்கடலைக்கு எக்டேருக்கு 45 ரூபாய்.
(2) உருளைக் கிழங்கிற்கு எக்டேருக்கு 100 ரூபாய்.

இக் கருவியால் 8 மணி நேரத்தில் அறுவடை செய்யக் கூடிய பரப்பு—1.15 எக்டேர் நிலக்கடலை அல்லது 0.88 எக்டேர் உருளைக்கிழங்கு.

இக் கருவி பற்றி மேலும் விவரம் வேண்டின் பின்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்கலாம்:

முதுநிலை ஆராய்ச்சிப் பொறியாளர்,
மண்டல ஆராய்ச்சி நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.

தகவல் :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.



ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

| தொலைபேசி | சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|---|
| | 29684 | 3814 | 35051 |
| | 81954 | | |






# மானாவாரி என் மகசூல் பெருக்கிடும் முறைகள்

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏறக்குறைய 3 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் எள் சாகுபடி செய் யப்படுகிறது. இதில் ஏறத்தாழ 37,000 ஏக்கரில் மட்டுமே இறை வையாக எள் பயிரிடப்படுகிறது. மீதமுள்ள 2.63 இலட்சம் ஏக்கரி லும் மானாவாரியாகவே எள் சாகுபடி செய்யப்படுகிறது. ஆயி லும்-எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெய் ஒரு சிறந்த உணவு எண்ணெய்யாகவும், மருந்துப் பொருளாகவும் பயன் படுவதால்-தமிழ்நாட்டில் நல் லெண்ணெய் விலை ஏறுமுகமாக உள்ளது. இதற்கு முக்கிய கார ணம், தமிழ் நாட்டில் ஏக்கருக்குச் சராசரியாக 128 கிலோகிராம் மகசூலே கிடைக்கிறது. ஆகவே, என் மகசூலைப் பெருக்கி வீட்டிற் கும், நாட்டிற்கும் நன்மை செய்ய வேண்டியது உழவர் பெரு மக்களின் கடமையாகும்.

மானாவாரியாகத் தனி என் பயிரிடும் உழவர்கள் இரசாயன உரமிட்டு, திருந்திய இரகங்களைப் பயிரிட்டு, பயிர்ப்பாதுகாப்பு முறைகளையும் மேற்கொண்டால் ஏக்கருக்கு 3 முதல் 4 மூட்டை வரை (225 கிலோ முதல் 300 கிலோ வரை) என் மகசூல் பெற வாய்ப்பு உள்ளது! எனவே, என் உற்பத்தியைப் பெருக்கிட, கீழ்க் கண்ட சாகுபடி முறைகளை மேற் கொள்ளும்படி கேட்டுக் கொள் கின்றோம்.

## என் சாகுபடி முறைகள்

**ஏற்ற மண் :** நல்ல வடிகால் வசதியுடைய வண்டல் கலந்த மணற்பாங்கான நிலம், என் சாகு படிக்கு மிகவும் ஏற்றது. தண் ணீர் தேங்கக்கூடிய இடங்களி லும், களர் நிலத்திலும் என் பயிர் நல்ல மகசூல் தராது.

**பட்டம் :** ஆடி, ஆவணி மாதங் கள், மானாவாரி என் விதைக்க ஏற்ற பட்டமாகும். குளிர் பரு வத்தில் என் விதைக்க கார்த் திகை, மார்கழி மாதங்கள் ஏற்ற வையாகும்.

**இரகங்கள் :** ஆடி, ஆவணி மாதங்களில் டி.எம்.வி. 1 (85 நாட்கள்), கே.ஆர்.ஆர். 1 (125 நாட்கள்), கே.ஆர்.ஆர். 2 (110 நாட்கள்) வயதுயுடைய என் இரகங்களையும், கார்த்திகை - மாதங்களில் டி.எம்.வி. 2 (80 நாட்கள்) வயதுடைய என் இரகத்தையும் விதைப்பது சிறந்தது.

**நிலம் தயாரித்தல்:** நிலத்தை நாட்டுக் கலப்பையால் 6 முதல் 8 தடவை அல்லது இரும்புக் கலப்பையால் 4 முறை உழுது நன்கு புழுதியாக்க வேண்டும்.

**அடியுரம்:** கடைசி உழவிற்கு முன்பு ஏக்கருக்கு 5 வண்டி (2.5 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்), 8 கிலோ மணிச் தழைச்சத்து, 4 கிலோ சாம்பல் சத்து, சத்து, 4 கிலோ 'மாங்கனிஸ் சல்பேட்' 2 கிலோ ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

மேற்கூறிய அளவுச் சத்துக் களை அளிக்க 18 கிலோ யூரியா, 25 கிலோ சூப்பர்பாஸ்பேட், 7 கிலோ மியூரியேட் ஆப் பொட் டாஷ் உரங்களையோ

அல்லது

24 கிலோ 17:17:17 'காம்ப் ளெக்ஸ்', 9 கிலோ யூரியா உரங் களையோ

அல்லது

9 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 14 கிலோ யூரியா, 7 கிலோ மியூரியேட் ஆப் பொட் டாஷ் உரங்களையோ அடியுரமாக கடைசி உழவிற்கு முன்பு இட வேண்டும்.

அடியுரமாக இரசாயன உரம் இடும் பொழுதே, ஏக்கருக்கு 2 கிலோ 'மாங்கனிஸ் சல்பேட்' இடுவதால் என் மகசூலைக் கணிச மாகப் பெருக்கிடலாம்.

**விதைப்பு :** ஏக்கருக்கு 2.5 கிலோ விதையை விதைக்க வேண் டும்.

**இடைவெளி :** வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், வரிசையில் செடிக் குச் செடி 9 அங்குலமும் இடை வெளி விட்டு விதைக்க வேண் டும். விதைகளைக் கையால் தூவி பரவலாக விதைத்தால், விதைத்த 15-ஆம் நாளில் செடிக் குச் செடி 9 அங்குலம் × 9 அங்கு லம் இடைவெளி விட்டு, அதிக மாக உள்ள செடிகளை அகற்றிட வேண்டும்.

**களை எடுத்தல்:** விதைத்த 20 முதல் 25 நாட்களில் முதல் தட வையும், 35-வது நாளில் 2-வது தடவையும் கொத்தி விட்டுக் களை யெடுக்க வேண்டும்.

**பயிர்ப்பாதுகாப்பு :** என் செடி களில் பெருஞ்சேதம் விளைவிக்கும் கொண்டைப் புழுவைத் தடுக்க விதைத்த 15-வது நாளிலும், பூ பூக்கும் சமயத்திலும் ஆக 2 முறை ஏக்கருக்கு 10 கிலோ

# சேமிப்பு

## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும்(ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


# படிக்கும் பொழுதே பணம் சம்பாதிக்கலாம்



படிக்கும் பொழுதே மாணவர்கள் கடின உழைப்பின் புனிதத் தன்மை, உழைப்பின் மதிப்பு ஆகியவைகளை உணர்ந்து கொள்ளவும், வேளாண்மையில் சிறந்த பயிற்சி பெறவும், ஓரளவிற்குப் பணம் சம்பாதித்துத் தங்கள் படிப்பிற்குத் தேவையானப் பொருள்களை வாங்கிக் கொள்வதற்கு உதவி செய்யும் வகையிலும், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் "படிக்கும் பொழுதே சம்பாதிக்கும் திட்டம்" (Earn while you learn programme) என்ற ஒரு புதிய திட்டத்தைத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தினால் வேளாண்மைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்கள், படித்துக் கொண்டிருக்கும் பொழுதே கணிசமான தொகையைச் சம்பாதிக்க வழி பிறந்துள்ளதுடன், கடின உழைப்புக்குத் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும், உழைப்பின் மதிப்பினை நன்கு உணர்ந்து கொண்டு செயல்படவும், நவீன சாகுபடி முறைகளை நன்கு புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது!

இப்பயனுள்ள திட்டம் 1973 ஆண்டு துவக்கப்பட்டது. பி.எஸ்சி. (வேளாண்மை) இறுதி வகுப்பில் படிக்கும் 20 மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, சென்ற செப்டம்பர் திங்களில் துவக்கப்பட்ட காய்கறி உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். காய்கறி உற்பத்திக்கு என ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, ஒவ்வொரு மாணவருக்கும் 5 சென்ட் நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இரசாயன உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் முதலிய தேவைப் பொருள்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், தெளிப்பான் போன்ற கருவிகள், டிராக்டர்கள் முதலியன வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. வெண்டை, முள்ளங்கி, அவரை, ஆகியவைப் பயிரிடப்பட்டன. தேவைப் பொருள்களுக்கான செலவுத் தொகை, பயிர்ப் பருவ முடிவில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

1974-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் வாரத்துடன் முடிந்த முதல் பருவச் சாகுபடியில் 20 மாணவர்களும், தேவைப் பொருள்களின் விலை ரூபாய் 451-55-ஐக் கொடுத்து விட்டு, 3 திங்கள் 15 நாட்களில் நிகர இலபமாக ரூபாய் 843-70 சம்பாதித்துள்ளனர்!

பயிரிட்ட காய்கறிகளுக்கும், காய்கறிச் சாகுபடியில் காட்டிய ஈடுபாட்டிற்கும் ஏற்ப ஒவ்வொரு மாணவருக்கும் 5 சென்ட் நிலத்திலிருந்து ரூபாய் 15.36 முதல் ரூபாய் 81.50 வரை இலாபம் கிடைத்துள்ளது! இந்த இலாபத் தொகை, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் கோ. அரங்கசாமி அவர்களால் 31—5—1974 அன்று 20 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இதுபோன்ற மற்றொரு திட்டம் 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17-ஆம் நாள் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பி.எஸ்சி. (வேளாண்மை) இறுதி வகுப்பு மாணவர்களில் 2 தொகுதியினருக்கு 200 இறைச்சிக்கான கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதியிலும் 5 மாணவர்கள் இருந்தனர். அம்மாணவர்களுக்கு, கோழிக் குஞ்சுகளுக்கான தீனியை நிர்ணயித்தல், அறைத்தல், கலத்தல், கோழிக் குஞ்சுகளைப் பராமரித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டன. கோழிக் குஞ்சுகளுக்கான கோழி வீட்டை கட்டியதுடன், கோழி வழங்கப்பட்ட நாள் முதல் அவை 10 வார வயது அடையும் வரையான காலத்தில் கோழி வளர்ப்புத் தொடர்புடைய அன்றாடப் பணிகளையும் அந்த மாணவர்களே செய்துள்ளனர். தீனிச் செலவு அதிகமாக இருந்ததால், கோழி வீட்டிற்கான இடமும், பொருள்களும், மற்றும் இதர சாதனங்களும் இலவசமாக அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இவ்வாறு மாணவர்களால் வளர்க்கப்பட்ட கோழிக் குஞ்சுகள், உரோமம் அகற்றப்பட்டு நவீன முறையில் பக்குவப்படுத்தப்பட்டு இறைச்சியாக எடை போட்டு விற்கப்பட்டன. இத்திட்டத்தினால் முதல் தொகுதியில் அடங்கிய ஒவ்வொரு மாணவரும் ரூபாய் 26.80-யும், இரண்டாம் தொகுதியில் அடங்கிய ஒவ்வொரு மாணவரும் ரூபாய் 133.56-யும் வருவாயாக ஈட்டியுள்ளனர். முதல் தொகுதியினர் வளர்த்த கோழிக் குஞ்சுகள் விரைவில் வளர்ச்சியடையாததாலும், அக்கோழிக் குஞ்சுகளின் இறைச்சி குறைந்த விலையில் விற்கப்பட்டதாலும் முதல் தொகுதி மாணவர்கள், இரண்டாம் தொகுதி மாணவர்களைப் போல் அதிக இலாபம் பெற முடியவில்லை.

படிக்கும் பொழுது பணம் சம்பாதிக்க வாய்ப்பு ஏற்படுத்தும் திட்டங்களின் பயனாய் ஓரளவு வருவாய் ஈட்ட முடிவதுடன், தீவிர செயல் முறைப் பயிற்சி பெற முடிவதால், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர்கள் இத் திட்டங்களில் பேரார்வம் காட்டுகின்றனர். படிப்பதுடன், நல்ல பயிற்சியும் பெற உதவும் இத் திட்டங்களைத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படுத்தி வருவது, மற்ற பல்கலைக் கழகங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது!

—ஆர். எம்.



டி.எம்.வி.1 டி.எம்.வி.2

வீதம் 'டி.டி.டீ. 5 சதம்' தூளைத் தூவிட வேண்டும்.

இலைப்புள்ளி நோய் தோன்றுவதைத் தடுக்க விதைத்த 5,7, 9-வது வாரங்களில் 'டைத்தேன் எம். 45' மருந்தை 0.2 சத நீர்க்கலவையாகத் (ஏக்கருக்கு 300 கிராம்) தெளிக்கவும்.

அறுவடை: இலைகள், தண்டுப் பாகம் ஆகியவை மஞ்சள் நிறம் அடைவதும், இலைகள் உதிர ஆரம்பிப்பதும், பயிர் போதிய முதிர்ச்சி அடைந்து, அறுவடைக்குத் தயார் நிலையை அடைந்து விட்டதற்கான அறிகுறிகளாகும். அந்த நிலையில் அறுவடை செய்துவிட வேண்டும். அந்த நிலைக்குப் பின்னர் அறுவடை செய்யத் தாமதமானால், முற்றிய காய்கள் வெடித்து விதைகள் சிதறி மகசூல் குறையக்கூடும்.

அறுவடை செய்த எள் செடிகளின் அடிப்பாகத்தை வெளிப்புறமாக வைத்து, வட்ட வடிவ குவியலாக்கிச் சில நாட்கள் அப்படியே விட்டு வைத்திருக்கவேண்டும். அவ்வாறு செய்வதால், சரிவர முதிர்ச்சியடையாதிருக்கும் காய்களும், குவியலின் உட்பகுதியில் ஏற்படும் வெப்பம், புழுக்கம், ஆகியவற்றின் காரணமாக போதிய முதிர்ச்சி அடையும். இவ்வாறு சில நாட்கள் வைத்திருந்த பின்னர் குவியலைப் பிரித்து எள் செடிகளை 2 அல்லது 3 நாட்கள் வெய்யிலில் உலர வைக்க வேண்டும். உலர வைக்கும்போது காய்கள் வெடித்து, விதைகள் சிதறி கீழே விழும். மேலும், காய்ந்த செடிகளைக் கையினால் அலசிவிட்டால் விதைகள் முழு அளவில் உதிர்ந்து விடும். பிற விதைகளைச் சேகரித்து, தூய்மை படுத்தி, மீண்டும் காய வைத்து சேமித்து வைக்க வேண்டும்.

மகசூல்: மேற்கூறிய முறையில் மானாவாரி எள் பயிரிட்டால் ஏக்கருக்கு 3 முதல் 4 மூட்டை அதாவது 225 கிலோ முதல் 300 கிலோ வரை மகசூல் பெறலாம்.

—ஆர். எம்.




# நிலக்கடலையில் ஒரு புதிய நோய்.



தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 9,40,000 எக்டேரில் நிலக்கடலை பயிரிடப்பட்டு, அதிலிருந்து 9,54,000 டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு, இந்தியாவிலுள்ள மாநிலங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும் பரப்பில் நான்காவது இடத்தையும், உற்பத்தியில் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றது. நிலக்கடலையில் தோன்றும் முக்கிய நோயான ''டிக்கா'' இலைப்புள்ளி நோயை 0.75 சதவிகித 'போர்டோக்கலவை' தெளித்தல் அல்லது கந்தகத்தூள் தூவுதல் அல்லது 0.1 சதம் 'பிரஸ்டான்' மருந்து தெளித்தல் ஆகிய ஏதாவதொரு முறையினால் எளிதில் கட்டுப்படுத்தி விடலாம். இந்த 'டிக்கா' புள்ளியைத் தவிர, ''துரு'' எனப்படும் ஒரு புதிய நோய், 1969-ஆம் ஆண்டில் இந்தியாவில் முதன் முதலாக பஞ்சாப் மாநிலத்தில் தோன்றியுள்ளது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு, 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த நோய் கோவையில் மிகச் சிறிய அளவில் காணப்பட்டது. கடந்த இரண்டரை ஆண்டுகளுக்குள் தமிழ்நாட்டில் மேலும் வேகமாகப் பரவ ஆரம்பித்திருக்கின்றது. சென்ற ஆண்டு பழனி, திண்டுக்கல், ஒட்டன் சத்திரம் ஆகிய பகுதிகளில் கோடைகால இறைவை நிலக்கடலைப் பயிரில் ''துரு'' அதிகமாகத் தோன்றியது.

இந்த ''துரு'' வெ வேகமாகப் பரவக்கூடியதும், பெருத்த இழப்பு ஏற்படுத்தக் கூடியதுமாகையால், இந்த நோயைப் பரவ விடாமல் தடுக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந்த நோய் தோன்றிய காரணத்தால் மேற்கு இந்தியத் தீவுகளில் நிலக்கடலைச் சாகுபடியே சில ஆண்டுகளில் நிலைகுலைந்து விட்டது என்று அறியப்படுகிறது. எனவே, இந்த நோயைக் குறித்தும், அதன் தடுப்பு முறைகளைக் குறித்தும் தமிழக உழவர் பெருமக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆடி, ஆவணி மாதங்களில், செங்கல்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ஆகிய பகுதிகளிலும், வடஆற்காடு மாவட்டத்தில் வேலூர், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பகுதிகளிலும், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், ஆகிய பகுதிகளிலும் மானாவாரி நிலக்கடலை விதைப்பு நடக்கும் காலமாகும். இந்த பருவத்தில் உழவர்கள் பெருமக்கள் இந்த நோயைக் குறித்து அறிந்து கொள்வது மிக அவசியம்.

துருநோயை ஆங்கிலத்தில் ''ரஸ்ட்'' (Rust) என்று கூறுவார்கள். இந்த நோய் ''பக்சீனியா அராக்கிடீஸ்'' (Puccinia arachidis) என்னும் பூசணத்தால் உண்டாகிறது. சாதாரணமாக இந்த நோய், நிலக்கடலை விதைத்து ஒரு மாதத்திற்குப் பின்போ அல்லது முன்போ தோன்றலாம். பெரும்பாலும் இலைகளின் அடியில் பழுப்பு நிறப்புள்ளிகள் போல் சின்னஞ்சிறு கருஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிறக் கொப்புளங்கள் தோன்றும். இவை இலைத் தோலிலிருந்து சொர உயர்ந்திருப்பதால், சொரப்பாக இருக்கும். இந்தச் சின்னஞ்சிறு கொப்புளங்களிலிருந்து பூசண வித்துக்கள், சிவப்புநிறத் துகள்களாக வெளிப்படும். இவை காற்றின் மூலமாகப் பல கிலோ மீட்டர்கள் தூரம் பரவி, இலைகளின் மீது பட்டு, ''துரு'' நோய் உண்டாகிறது. ''துரு'' அதிகம் தோன்றின இலைகள் கருகிவிடும்! அதன்பின் இலைகள் உதிர்ந்து நிலக்கடலைச் செடி செடியே வாடிப் போகும்! ஒரே, இலையில் 'டிக்கா' இலைப் புள்ளி நோயின் கருவட்ட புள்ளிகளினிடையே, ''துரு'' நோய் காணப்படலாம்.

இந்த நோய் அண்மையில் தோன்றியதால் தகுந்த ஆய்வு மேற்கொள்ளப் படவில்லை. அதுவரை உழவர்கள் கீழ்க்கண்ட தடுப்பு முறைகளை மேற்கொள்ளலாம்.

(1) நிலக்கடலைத் ''துரு'' விதைகளின் மூலமாகப் பரவலாம் என்று எண்ணப்படுவதால் நோய்த்தோன்றிய வயல்களிலிருந்து விதைக்கடலைகளைத் தேர்ந்தெடுக்கக்கூடாது.

(2) நிலக்கடலை விதைக்கும் முன்பு விதைகளை ஒரு கிலோ விதைக்கு மூன்று கிராம் வீதம் 'காப்டான்' அல்லது 'திராம்' (T. M. T. D. or 'Thiram') போன்ற மருந்துகளுடன் கலந்து விதைத்தொற்று நீக்கிய பிறகே விதைக்க வேண்டும். விதைத் தொற்று நீக்குவதால், விதைகளின் மூலம் பரவும் வேரழுகல் போன்ற நோயையும் ஓரளவுத் தடுக்கலாம்.

(3) நோய்த் தாக்கிய உடனே 'ஜினெப்' போன்ற 'டைதையோ கார்பமேட்' மருந்துகளை 15 நாட்கள் இடைவெளிக்கு ஒருமுறை 0.2 சதவிகித அளவில் (ஏக்கருக்கு 300-400 கிராம்) இரண்டுமுறை தெளித்தால் இந்தத் ''துரு'' நோயைப் பெருமளவில் கட்டுப்படுத்தலாம்.

(4) பெரும்பாலான பரப்பளவில் ''துரு'' நோய் தோன்றினால், தலைவர், தாவர நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3 என்ற முகவரிக்குத் தொடர்புக் கொள்ளவும்.

இப்புதிய ''துரு'' நோய் மேலும் பரவாமல் தடுக்க உதவும்படி உழவர் பெருமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:—
டாக்டர் என். சண்முகம்,
இணைப்பேராசிரியர்,
தாவரநோய் இயல்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

## விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



## அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR I C CEMENT

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

**சங்கர் சிமெண்ட்**
தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA



இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோருவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

## சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்








P
SS 277
R.No. 670/74.

# தமிழரசு

16-9-1974 - 50 காசு

SEP 1974
9771






# தமிழரசு

மலர் 5. 16-9-1974 இதழ் 6



## தமிழ் மொழியின் அருமையும் பெருமையும்

தமிழ் மொழியின் அருமையை ரஷ்ய நாட்டினரும், செக்கோஸ்லாவியரும், நாட்டினரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே அது சரிவர உணரப்படவில்லை. இங்கிலாந்துப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராயப்படுகிறது என்று அறியும் நேரத்தில் அத்தகைய தமிழுக்கு நாம் சொந்தக்காரர்கள் என்கின்றபோது நமது நினைவு எங்கோ செல்கிறது. எங்கோ நம் நினைவு செல்கிறது என்று கூறினேனே, அந்தத் திருவிடத்திற்கு நாம் நிச்சயம் செல்வோம். இங்கிலாந்திலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ் மொழி மிக அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில் அதன்மீது நமக்குப் பற்று, பாசம் ஏற்படாமல் எப்படி இருக்கும்? அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது-எந்த நோக்குடனாவது —எப்படிப்பட்டவர்களிடமிருந்தாவது தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால் அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

—பேரறிஞர் அண்ணா




# குறளுக்குப் புத்துரை தேவை!

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகளெல்லாம் இடம் பெற்றுக் கருத்தைக் கவருகின்ற சொற்பொழிவுகளும்—உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கவியரங்கங்களும், சிந்திக்கத் தூண்டுகின்ற பட்டி மன்றப் பேரவைகளும் நடந்து, நேற்றும் இன்றும் நடத்தியவர்கள் — கலந்து கொண்டவர்கள் — கேட்டவர்கள் மாநாட்டினைச் சிறப்பித்திருக்கிறார்கள்.

இந்தச் சிறப்பு மிகுந்த மாநாட்டில் வள்ளுவர் வழியில் வந்தவர்களைப் பற்றியெல்லாம் தமிழ்ப்புலமைமிக்கநண்பர்கள் எடுத்துக் கூறினார்கள்.

வள்ளுவருடைய குறளில்,

**''எழுதுங்கால் கோல்காணாக்
கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து''**

என்று ஒரு குறளுண்டு.

தன்னுடைய காதலனைப் பிரிந்திருக்கிற நேரத்தில் — அவன் தொலைவில் இருக்கிற நேரத்தில் அவனுடைய குறைகளெல்லாம் காதலிக்குத் தெரிகிறது. 'அவன் வரட்டும், வந்தவுடன் அவனது குறைகளையெல்லாம் சொல்லி என்ன பாடுபடுத்துகிறேன் பார்' என்று கூறுகின்றவள், அவன் வந்தவுடன் அனைத்தும் மறந்து அவனது புகழ் பாடுகிறாள்.

அதாவது, எழுதுகிற நேரத்தில் மை எழுதும் கோல் மைக் கிண்ணத்தில் இருக்கிற போதோ, கையில் இருக்கிற போதோ கண்ணுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால், கண்ணிலே வைத்து மை எழுதுகிற நேரத்தில் கண்ணுக்கு மிக மிக அருகாமையில் அந்தக் கோல் வந்துவிடும் காரணத்தால், அந்த எழுது கோல் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதைப்போலக் காதலனின் குறைகள் தொலைவில் இருக்கிற போது தெரியும். அருகே வந்து விட்டால் தெரியாமல் மறைந்துவிடும் என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்.

அதைப்போல நண்பர் சஞ்சீவியும் மற்றவர்களும் பேசும் போது, நான் அருகில் இருந்த காரணத்தால் என்னுடைய குறைகள் தெரியாமல் என்னைப் பாராட்டினார்கள் என்றேதான் நான் கருதினேன். ஏதாவது குறைகளைச் சொல்லியிருந்தால் நான் திருத்திக் கொள்ள வழி ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர்களும், குறள் வழியில் நடந்து கொண்டார்கள்.

திருக்குறள் மாநாடுகள் நடத்துவதன் மூலம் மறந்திருந்த மறைக்கப்பட்டிருந்த அறநூலை—அறிவுக்கொத்தை தமிழ் மறையை மீண்டும் நாட்டிற்கு அளித்த பெருமையை நாம் செய்திருக்கிறோம்.

திருக்குறளில் பல கருத்து மாறுபாடுகள் கொண்ட பெரியாரே கூடச் சென்னையில் திருக்குறள் மாநாட்டை ஒரு காலத்தில் நடத்தியதற்குக் காரணம் — குறட்பாக்களில் எல்லாப் பாக்களிலும் அவருக்கு ஆழ்ந்த பற்றுண்டு என்பதைப் பெரியாரே ஒப்புக் கொள்ள மாட்டார்; ஆனாலும் இந்தப் பாக்கள் சமுதாய ஏற்றத்திற்கு அமையக்கூடியவை என்பதன் காரணமாகத் திருக்குறளை அழிக்க—மறைக்க முயன்றோர் தோல்வியுறத்தக்க வண்ணம் திருக்குறளுக்குச் சாதாரண மக்களிடம் புதிய அறிமுகத்தைப் பெரியாரும், அண்ணாவும் செய்தார்கள்!

அந்த வகையில்தான் இன்று தமிழர்களிடையே — வெளிநாட்டுத் தமிழர்களிடையே ஒரு புதிய எழுச்சி மலர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். அந்த அடிப்படையிலேயே இந்த மன்றத்தினர் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

இங்கே பேசிய நண்பர்கள் திருக்குறளை எந்தெந்த வகையில் நாம் கடைப்பிடிக்கிறோம் என்று எடுத்துக்காட்டி, 'குதிரைப் பந்தயத்தை ஒழித்ததன் மூலம் சூதாட்டத்தை ஒழித்து விட்டோம். மது விலக்கை மீண்டும் நடைமுறைப் படுத்துவதன் மூலம் அந்தக் கொள்கையை நிறைவேற்றி விட்டோம். இன்னும் ஒன்று, புலாலை ஒழிப்பது பாக்கி இருக்கிறது' என்றார்கள்.

ஒவ்வொரு நாளும் பெரும்பாலான மக்கள் புலாலை ஒழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஏதோ ஒரு வகையில் புலாலை ஒழித்தால் போதும் என்ற நிலைமையில் இன்று புலால் ஒழிக்கப்படுகிறது.

வள்ளுவர் சொன்ன எல்லாக் கருத்துக்களையும் எல்லாக் காலத்திலும் ஏற்றுக் கொள்வதென்ற அளவுக்கு நம்பிக்கையை நாம் கொள்வது, வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு ஏற்றதாக அமையாது.

சில நாடுகளில் உணவு தானியங்களுக்குப் பதிலாக இறைச்சியையே பயன்படுத்த வேண்டும் என்ற அளவுக்குக் கூடப் பொருளாதாரச் சூழ்நிலை இருக்கிறது.

வள்ளுவருடைய அந்தக் குறளுக்குக் கூட—புலாலை உண்ணக் கூடாது என்று அறிவுறுத்துகின்ற குறட்பாக்களுக்குப் 'புலால் மறுத்தல்' என்று தான் தலைப்பு இருக்கிறது.

அதாவது 'புலால் இருக்கும்: நீ மறுத்து விடு' என்றுதான் அவர் கூறுகிறாரே அல்லாமல் 'புலாலையே இல்லாமல் ஆக்கி விடு' என்று சொன்னதாக அந்த அதிகாரமில்லை.

திருக்குறளைப் பற்றி நாம் விரிவுரையாற்றும் போது உண்மையிலேயே வள்ளுவர் எதை எண்ணி எழுதினார் என்பதையும் மக்களுக்குச் சொல்லப் புலமை வாய்ந்தவர்கள், தமிழை ஒழுங்குறக் கற்றவர்கள்—தமிழால் வாழ்பவர்கள்—தமிழை வாழ வைப்பவர்கள் முன் வர வேண்டும்.

இன்றைக்கும் நாம் திருக்குறளுக்குப் பழைய புராண காலப் பொருளைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**''தெய்வந் தொழாஅள்
கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''**

இதற்கு என்ன பொருள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்?

தெய்வத்தைக் கூடத் தொழாமல் கணவனையே தொழுபவள் பெய்யென்று சொன்னால் மழை பெய்யும் —இதைத்தான் இன்றைக்கும் பகுத்தறிவில் நாட்டம் கொண்டிருக்கும் புலவர்கள் கூட உரை எழுதும் நேரத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த உரையைப் படிப்பவர்கள் வீட்டிலே பரிசோதித்தால் வீட்டிலே எவ்வளவு பெரிய



**முதல்வர் கலைஞர்**

புயலும் பூகம்பமும் ஏற்படும் என்பதை யாரும் உணராமல் இருக்க முடியாது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உரை முழுமையாக வராவிட்டாலும் இந்தக் குறளுக்கு அவர் எழுதியிருக்கின்ற உரையில் 'பெய்யென்ற' உடன் பெய்கின்ற மழை எவ்வளவு சிறந்ததோ அப்படிப்பட்டவள் தான் தெய்வத்தைத் தொழுகின்ற பெண் என்கிறார்.

அதைப்போலவே இன்னொரு குறளில்—

**''ஆபயன் குன்றும்
அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்''**

—அதாவது அரசன் ஒழுங்காக நாட்டைப் பரிபாலிக்காவிட்டால் ஆபயன் குன்றும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

அதற்கு இதுநாள் வரை உரை எழுதியவர்கள் 'ஆ' என்றால் பசு, பயன் குன்றும் என்றால் பால் கொடுக்காது, ஆக நாட்டை ஒழுங்காக அரசன் ஆளாதுவிட்டால் பசு மாடு பால் கொடுக்காது என்றுதான் இன்றைக்கும் என் கையில் கொடுத்திருக்கிற திருக்குறளில் கூட உரை எழுதப்பட்டுள்ளது.

இதுபற்றிப் பாரதிதாசன் கூறுகையில், பசுமாடு பால் கொடுக்காது என்று பொருள் வரவேண்டுமேயானால் 'ஆ பயன்' என்று இருக்காது; 'ஆப்பயன்' என்று தான் இருக்க வேண்டும். ஆகவே 'ஆபயன்' என்றால் ஆகவேண்டிய காரியங்கள் ஆகாது; நாட்டிற்குத் தேவையான பயன்கள் விளையாது என்பது தான் பொருள் என்று பாரதிதாசன் உரை எழுதிய பிறகும் அதை மறைந்து பழைய பதிப்புக்களையே பிரசுரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முழுமையான பாரதிதாசன் உரை கிட்டாவிட்டாலும் இப்படி, ஆங்காங்கு, அவர் உரைத்த உரையைப் பற்றி இது போன்ற மன்றத்தினர் மக்களிடையே பரப்ப முன் வர வேண்டும்.

இப்படிப்பட்ட புதுமையான உரைகளை—கருத்து மாறுபாடு இல்லாமல் பொருத்தமுடையதாக இருந்தால், அதை ஏற்றுக் கொள்கிற தெளிவும் எடுத்துச் சொல்கிற மாண்பும் நமக்கெல்லாம் தேவை.

இந்தப் புதிய புரட்சியை திருக்குறளில் நாம் செய்தாக வேண்டும்.

**(1—9—1974-ல் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.)**

# தமிழ்நாட்டில் உணவு நிலைமை



இந்தியா சுதந்திரம் பெற்ற 27 ஆண்டுகளுக்குப் பிறகும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுமல் இருக்கிறோம் என்பதை இன்றைய நாட்டு நிலை நமக்கு உணர்த்துகிறது. இவ்வாண்டு, வளர்ந்து வரும் தமிழகத்திற்கும் இது பாதகமாக அமைந்துவிட்டது!

1967-ஆம் ஆண்டிலிருந்து, நமது மாநிலத்தில் மக்கள் தேவைக்கான இன்றியமையாப் பொருள்களுள், குறிப்பாக உணவு தானியங்கள் உற்பத்தியில் உன்னிப்பான கவனம் செலுத்தியுள்ளோம் என்பதை மறுக்கவும், மறக்கவும் முடியாது! உணவு உற்பத்தியைப் பெருக்க அவசியமான தரமான விதைகளையும், உரம், பூஞ்சாள மருந்துகள் இவற்றினை வழங்கல், நீர்ப்பாசன வசதிகளை பெருக்குதல், நவீன விவசாய முறைகளை புகுத்துதல் ஆகிய விவசாய பெருமக்களுக்கு தேவையான வசதிகள், உதவிகள் செய்து ஊக்குவித்திருக்கிறோம்.

இதன் விளைவாகத்தான் 1966-67-ல் அரிசி உற்பத்தி 37.91 இலட்சம் டன்கள், சிறு தானியங்கள் உற்பத்தி 11.00 இலட்சம் டன்கள், ஆக மொத்தம் உணவு உற்பத்தி 49 இலட்சம் டன்கள் என்றிருந்தது, 1972-73-ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி 56 இலட்சம் டன்கள், சிறுதானியங்கள் உற்பத்தி 17 இலட்சம் டன்கள், ஆக மொத்த உற்பத்தி 73 இலட்சம் டன்களாக உயர்ந்தது! 1973-74-ல் பருவக் கோளாறு முதலிய இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், அரிசி உற்பத்தி 53 இலட்சம் டன்கள், சிறுதானியங்கள் உற்பத்தி 14 இலட்சம் டன்கள், ஆக மொத்த உணவுப்பொருள் உற்பத்தி 67 இலட்சம் டன்கள். இம்மாதிரி அதிக உணவு உற்பத்திக்குக் காரணம், நமது பெரும் உழைப்பேயாகும்.

நமது தமிழகத்தில் நபர் ஒருவர் உண்ணும் உணவு அளவு, நாள் ஒன்றுக்கு சராசரி 419 கிராம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்குப்படி பார்த்தால், நமது மாநிலத்தின் உற்பத்தியைவிட தேவை சற்று அதிகப்படும்! தலா நாள் ஒன்றுக்கு 400 கிராம் உணவு பொருள் என்று கணக்குப்பார்த்தாலும் நமது மொத்த உணவுப் பொருள் தேவை 66.5 இலட்சம் டன்கள். 1972-73-ஆம் ஆண்டு நமது மொத்த உணவு பொருள் உற்பத்தி, தேவைக்குச் சற்று உயர்வாக இருந்தாலும 1973-74-ஆம் ஆண்டு நமது உணவு பொருள் உற்பத்தி நமது மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்குதான் உள்ளது. ஆகையால், 1973-74-ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றவர்களாகக் கருதமுடியுமே தவிர, உபரியாக இருப்பதாக கொள்ள முடியவில்லை. உற்பத்தியையும், தேவையையும் கணக்கிடுகிடும்பொழுது அரிசி மட்டுமல்லாமல், சிறு தானியங்களையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உணவு அமைச்சர்

**மன்னை ப. நாராயணசாமி**

இமார்

இந்த நேரத்தில் நாம் கவனம் கொள்ள வேண்டியது, 6.3.74-ல் மத்திய அரசு, சிறு தானியங்கள் போக்குவரத்துக் கட்டுப் பாட்டை நீக்கியதால், நமது மாநிலத்தில் தன்னிறைவு பெற்றதாக இருந்த உணவு நிலைமை, தட்டுப்பாடு ஏற்பட வேண்டிய நிலைவந்தது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சமயத்தில், நமது மாநிலத்தில் சிறுதானியங்கள் அறுவடையாகி இருந்தும் கட்டுப்பாட்டை நீக்கியவுடன், சிறுதானிய உற்பத்தியில் பெருமளவு வெளிமாநிலத்திற்குக் கொண்டு போக ஏதுவாகிவிட்டது. இதனால் 1973-74-ஆம் ஆண்டு உணவு உற்பத்தி அரிசி 53 இலட்சம் டன்கள், சிறுதானியங்கள் 14 இலட்சம் டன்கள் ஆக 67 இலட்சம் டன்கள் என்று நிறைவாக எண்ணிக்கொண்டிருந்த நாம், நிலைமை மாறி சிறுதானியங்கள் இருப்பு பெருவாரியாக குறைந்துவிட்டதுடன், இரண்டு மடங்காக விலை ஏறவும் வழி வகுத்துவிட்டது என்பதை ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். இன்றைய விலை ஏற்றத்திற்கு மேற்படி உத்திரவும் ஒரு காரணமாகும்! சிறுதானியங்கள் தட்டுப்பாட்டினால் அரிசி விலையேறிற்று. இதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. அவற்றையும் நாம் நினைவில் கொள்ளும் வகையில் நான் விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏப்ரல் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரை, நமது மாநிலத்தில் பற்றுக்குறைப் பருவமாகும், இப்பருவத்தில் இயற்கையாகவே நெல் அரிசி விலை, படிப்படியாக உயர்வது வழக்கம்.

வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் நவரைப் பயிர் வழக்கமாக 3.5 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடியாகக்கூடியது. சென்ற ஆண்டு சாகுபடி 1.65 இலட்சம் ஏக்கராவாகக் குறைந்துவிட்டது. நவரை உற்பத்தியும் 2 இலட்சம் டன்களிலிருந்து 80 ஆயிரம் டன்களாகக் குறைந்துவிட்டது.

தஞ்சையில் சம்பா, தாளடி கண்டுமுதல் எதிர்பார்த்ததைவிட குறைந்துவிட்டது.

> **கற்பதில் மூன்றுவகை**
>
> **"தமிழ்க் கவிதைகளை — தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகையில்:**
>
> **ஒன்று: நூலிலுள்ள அருமை பெருமை—நூல்நயம் இலக்கணச்சுவை கண்டு, படித்து இன்பம் பெறுவது.**
>
> **இரண்டு: அந்த இலக்கியத்தை பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிறநாட்டாரும் உணரச் செய்வது.**
>
> **மூன்று: அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.**
>
> **—பேரறிஞர் அண்ணா.**

தென் மேற்குப் பருவமழை தாமதமாகத் துவங்கியதும், மேட்டூர் நீர் குறைவாக இருப்பதும், குறுவை சாகுபடியின் உறுதியற்ற நிலையும் வணிகர்கள் பதுக்கலும், பற்றுக்குறைக்குக் காரணங்களாகும்.

பொதுவாக உரம், பூஞ்சாள மருந்துகள், விவசாயக்கூலி, வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் விலையேற்றம் இவைகள் எல்லாம் கூடி விட்டபடியால், விவசாயிகள் நெல்லுக்கு உயர்வான விலையை எதிர்பார்த்துத் தேக்கி வைத்துக் கொள்ள முனைந்தனர்.

மேற்கூறிய காரணங்களால், மாநிலமெங்கும் இவ்வாண்டு மார்ச்சுத்திங்கள் முதல் நெல் அரிசி விலை படிப்படியாக ஏறத் தொடங்கியது. விலை உயர்வுக்கு 'லெவி' விதிப்பது ஒரு காரணமாதலால் 23.4.74 அன்று தஞ்சை தவிர, மற்ற மாவட்டங்களில் லெவி குறைக்கப்பட்டது. இதனால் எதிர்பார்த்த பலன் ஏற்படாமையால்' 11.6.74-ல் தஞ்சை உள்பட எல்லா மாவட்டங்களிலும் 'லெவி' ரத்து செய்ததோடு, போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

இதனால், இடர்பாடான சூழ்நிலை உருவாகும் என்று தெரிந்திருந்தும், கொள்முதல் போதிய அளவு செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறது. இது உண்மையல்ல! நமது சம்பா பருவக் கொள்முதலின் குறியீடு 1.25 இலட்சம் டன் என்றிருந்தபோதிலும் 11.6.74 வரையில் 'லெவி' மூலம் ஒரு லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்து மூன்று டன் அரிசி கொள்முதல் செய்திருக்கிறோம். இதைத்தவிர வெளிச் சந்தையில் முப்பத்தேழாயிரத்து அறுநூற்று எழுபத்திரண்டு டன்கள் வாங்கியிருக்கிறோம். ஆக சம்பா பருவத்தில், மொத்தக் கொள்முதல் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்து நாநூற்று நாற்பத்தைந்து டன் அரிசி. இக் கொள்முதல், நமது குறியீட்டைவிட மிக அதிகமான அளவேயாகும். இவ்வாண்டு சம்பா கொள்முதலுடன், சென்ற ஆண்டுக் குறுவைக் கொள்முதலும் சேர்த்தால்— முந்திய ஆண்டு கொள்முதலைவிட இரண்டு மடங்குக்குமேல் அதிகம் பெற்றுள்ளோம்.

நாம் அரிசி விலையேற்றத்தைச் சமாளிக்க, மக்களுக்கு அரசு இருப்பிலிருந்து அரிசி வழங்கத் தொடங்கும்பொழுது, சில சமூக விரோத சக்திகளும், அரசியல் கட்சிகளும் குழப்பமான நிலையை உருவாக்கத் திட்டமிட்டனர். அதில் தோல்வியும் கண்டனர். உணவு தானியங்கள் ஏற்றிச் செல்லும் லாரிகளைத் தடுத்து நிறுத்தினர். வணிகர்களைப் பயமுறுத்திக் கடைகளை மூடும்படி செய்தனர். சில இடங்களில் கிடங்குகளைச் சூறையாட முற்பட்டனர்.

**7. தஞ்சை மாவட்டத்தில் அரிசன மக்களுக்கு வீட்டுவசதி.**

தமிழ்நாடு அரசு அரிசன நல வீட்டு வளர்ச்சிக் கழகம் தஞ்சை மாவட்டத்தில் 17 இடங்களில் ரூ. 22 இலட்சம் செலவில் அரிசனங்கள் மற்றும் பின்தங்கிய மாணவர்களுக்கு விடுதிகள் கட்டுகிறது. இவற்றில் அரிசனங்களுக்கு 12 விடுதிகளும், பின்தங்கியவர்களுக்காக 5 விடுதிகளும் கட்டப்படும். இவை, திருவாரூர், மன்னார்குடி, திருவையாறு, பாபநாசம், கோட்டூர், கும்பகோணம், கொரடாச்சேரி, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, தஞ்சை, பேராவூரணி, மகாதேவப்பட்டினம், பந்தநல்லூர் திருக்குவளை ஆகிய இடங்களில் அமையும். இந்த விடுதிகள் 775 அரிசன மாணவர்கட்கும், 525 பின்தங்கிய மாணவர்களுக்கும் பயன்படும்.

**8. காகித-அட்டைத் தொழிற்சாலை.**

பாபநாசம் பகுதியில் விளையும் வைக்கோலைக் கொண்டு ஒரு பேப்பர்-அட்டை தொழிற்சாலை தனியார் துறையில் ஏற்



படவிருக்கிறது. ரூ. 20 கோடி மூலதனத்தில் நாள் தோறும் 100 டன் பேப்பர்-அட்டை உற்பத்தியைக் கொடுக்கும் தொழிற்சாலையாக இது இருக்கும்.

**9. நினைவுச் சின்னம் புதுப்பித்தல்.**

வேதாரண்யத்தில் இராஜாஜி உப்புச் சத்தியாக்கிரகம் செய்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னம் இடிவிழுந்து சேதம் அடைந்த நிலையில் உள்ளது. இதை ரூ. 2 இலட்சம் செலவில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**10. புதிய வேலை வாய்ப்புத் திட்டம்.**

தஞ்சை மாவட்டத்தில் கோழிப்பண்ணை வளர்ச்சிக்குப் புதியதொரு ஏற்பாடு. எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் 100 பேர்களை பாங்க் ஆப் மதுரை தெரிவு செய்யும். இம்மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து முதலில் தஞ்சை-ஒரத்தநாடு ஆகிய வட்டங்களில் ஆய்வு முறையில் உற்பத்தி செய்து பார்க்கப்படும். இம்மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தின்போது ரூ. 150 உதவித் தொகை வழங்கப்படும். இந்த உதவித் தொகையைக் கோழி வளர்ச்சக் கார்ப்பரேஷன் வழங்கும். இந்தக் கடன் தொகையை 10 ஆண்டுகளில் திருப்பிக் கட்டலாம். இந்தக் கடனுக்கு 4 சதவீதம் வட்டியே வசூலிக்கப்படும். அதிக அளவில் கோழிப் பண்ணைகள் நிறுவப்படும்போது உற்பத்தியாகும் முட்டைகள் விற்பனையாகாவிடில், அவற்றை விற்பனை செய்யும் பொறுப்பையும் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கார்ப்பரேஷன் மேற்கொள்ளும்.


## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ்406

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.

தொலைபேசி எண் : 30877, 30878. தபால் பெட்டி எண். 486. தந்தி: ''ஹவுஸ்பாங்க்''

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்; எம் எல்.ஏ.

உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை

பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | | |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.5 கோடி. |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | ... | ரூ. 2.33 ,, |
| | ... | ரூ. 15.97 ,, |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான விபரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடு அடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் ஆண்டிற்குக் குறையாமலும் தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும். தவணைவைப்புத் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது.

| | | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு. |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | | |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட | ... | ரூ. 25,000/- |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும் | ... | ரூ. 10,000/- |
| | ... | ரூ. 10,000/-. |

பூ.க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.


# ஆனந்த சுதந்தரம்



'இளமையில் சோம்பல முதுமையில் வறுமை' என்னும் பழமொழியை நாம் கேட்டிருக்கிரும். இளம் வயதில், சின்னஞ் சிறு பருவத்தில் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக இருந்தால்தானே வருங்காலம் வளமுள்ளதாகத் திகழும்? அதனுற்ருன் 'இளமையில் கல்' என்றனர் பெரியோர்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்களே அதைப்போலக் குழந்தைகளின் திறனைப் பிள்ளைப் பருவத்திலேயே நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஆடல், பாடல், நடிப்பு, பேச்சு, கட்டுரை எழுதுதல் போன்ற பல்வேறு துறைகளில் அவர்கள் திறமை காட்டுவதை நாம் பார்த்து மகிழ்ந்திருக்கிரும்; பள்ளியில் படிக்கும்போதே அவர்களது ஆர்வம் வளர்வதை, ஆற்றல் வெளிப்படுவதைக் கண்டு பாராட்டவும் போற்றவும் செய்கிரும்.



அண்மையில் சென்னைக் கலைவாணர் அரங்கில், விடுதலைத் திருநாளையொட்டி சென்னை வானொலி நிலையத்தார் ஏற்பாடு செய்திருந்த 'ஆனந்த சுதந்தரம்' என்னும் சிறுவர் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று சிந்தை கவரும் வகையில் அமைந்திருந்தது.

இந்தக் கலை நிகழ்ச்சி 'மழலை அமுத'த்தையும், 'சிறுவர் சோலை'யிலே பூத்த நறுமண மலர்களையும் வழங்கி, வந்திருந்தோரைப் பெரிதும் மகிழ்வித்தன.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் நடனம், நாடகம், வில்லுப் பாட்டு, விகடம் போன்றவையும், கோலாட்டம், தனி நடிப்பு, கரக ஆட்டம், பாப் இசை, தாள வாத்தியக் கச்சேரி, வ.உ.சி-கலெக்டர் விஞ்ச் உரையாடல் போன்ற நிகழ்ச்சிகளும் எல்லாருடைய மனத்தையும் வெகுவாகக் கவர்ந்தன.

முழுக்க முழுக்கச் சிறுவர், சிறுமியரே கலந்து கொண்ட இந்தக் கலை நிகழ்ச்சி, பிஞ்சு நெஞ்சங்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் நல்லதொரு நிகழ்ச்சியாக இருந்ததை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.



இதனால் பெருவாரியாக வணிகர்களிடம் பீதி ஏற்பட்டு, வியாபாரம் தடைப்பட்டு, மக்களுக்கு அரிசி கிடைக்காமல் போக பல வழிகளைக் கையாண்டனர். இது போன்ற தீயச் செயல்கள் வளர்ந்து வரும் தமிழகத்திற்கு முட்டுக்கட்டைகளாகும்.

அரசு இந்நிலையில் நிதானம் இழக்கவில்லை. ஆங்காங்குள்ள சமூக விரோத சக்திகளைச் செயலற்றுப்போகச் செய்தது, 'தருமத்தை வஞ்சகம் வெல்லாது' என்பதற்குச் சான்றாகும். அரசு, இருப்பிலிருந்து மக்களுக்கு அரிசி வழங்க வழி வகைகளைச் செய்தது. சென்னை புறநகர் பகுதியில் மாதம் ரூ. 300-ம் அதற்குக் குறைவான வருமானமும் உள்ளவர்களுக்கு நியாய விலையில் அரிசி வழங்கும் திட்டத்தை, மாதம் ரூ. 500 வரை வருமானமுள்ளவர்களுக்கும் விரிவாக்கப்பட்டது. மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, குறைந்த வருமானமுள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளில், நியாய விலையில் அரிசி வழங்க வழி வகை செய்யப்பட்டு உள்ளது.

சமூக விரோத சக்திகளும், சில அரசியல் கட்சிகளும் 11.6.'74-ல் தஞ்சையில் கட்டுபாடுகளை நீக்கியபின் பெருமளவில் அரிசி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்று சொல்லி இருக்கிறார்கள். இது உண்மைக்குப் புறம்பானது. நமது மாநில எல்லையில் 6 பிரிவுகள்கொண்ட ஒரு ஆயுதந்தாங்கியபடை, கடத்தலைத் தடுக்க அமர்த்தப்பட்டிருக்கிறது. புலனாய்வுத் துறையின் அதிகாரிகள், முன்னிலும் 50 பேர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு, மொத்தம் சுமார் 700 பேர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் உசிதப்படி ஸ்தல காவல் படையினரும் அந்தப் பணியில், ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். எல்லையோரப் பகுதியில் கடத்தல்காரர்களைப் பிடிக்கத் தகவல் கொடுப்போர், பிடிப்போர் ஆகியவர்களுக்குப் பிடிபடும் பொருள் மதிப்பில் 25 சதவிகிதம் வரை வெகுமதியாக வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு முழுவதிலும் ரூபாய் 69.25 இலட்சம் மதிப்புள்ள பொருள்களைப் பிடித்த புலனாய்வுத் துறை, இவ்வாண்டு 7 திங்களுக்குள்ளேயே ரூபாய் 89.23 இலட்சம் மதிப்புள்ள பொருள்களைக் கைப்பற்றியிருக்கிறது.



கடத்தல் குற்றத்திற்காகச் சென்ற ஆண்டில் 2,298 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாண்டு 31.7.'74 வரை கடத்தல் குற்றத்திற்காக 1,794 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. உள்நாட்டு அமைதி பராமரிப்பு சட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு பதுக்கல் கடத்தல் பெருமளவில் செய்த 31 நபர்கள் கைதானார்கள். இவ்வாண்டு இதுவரை 18 நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, கள்ளக்கடத்தல் பெரும்பாலும் தடுக்கப்பட்டு விட்டது என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

**சென்னையில் டெலிவிஷன் மூலம் பாடபோதனை நடத்த 300 பள்ளிக்கூடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றுக்கும் அடுத்தாண்டில் ஒவ்வொரு டெலிவிஷன் செட் வீதம் வழங்கப்படும்.**

***

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பொறுப்பிலுள்ள பல்வேறு திட்டங்களுக்கு சிமெண்டுக்குப் பதில் சுண்ணாம்பு உபயோகிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் தமிழ் நாட்டில் நிறைய சுண்ணாம்பு கிடைப்பதேயாகும்.**

தட்டுப்பாடு நிலைமை போகவும், விலைகள் மேலும் ஏறுவண்ணம் பாதுக்காக்கவும் தகுந்த நடவடிக்கைகளை நமது அரசு எடுத்து வருகிறது. பொதுமக்களுக்கு நியாய விலையில் அரிசி வழங்குவது தொடர்ந்து செயல்படும். இதனால் மாநிலமெங்கும் பரபரப்பான நிலைமாறி, நம்பிக்கையான சூழ்நிலை உருவாகியுள்ளது. பல இடங்களில் அரிசி விலை சற்று இறங்குமுகமாகவும் இருக்கிறது என்ற செய்திகள் கிடைப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தரத்தக்கதாய் இருக்கிறது. அரசு எடுத்துவரும் முயற்சிகள் வெற்றி பெற, பொதுமக்கள் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்.

விவசாய பெருமக்கள் உணவு, விதை, கூலி இவற்றிக்கான தேவை தவிர எஞ்சியுள்ள தானியங்களைக் கூட்டுறவு பண்டகசாலைகளுக்கோ மற்றும் அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்கோ அளந்துவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். அரிசி வாங்கிஉண்பவர்கள் தேவைக்கு மேல் அதிகம் வைத்துக்கொள்ளாமல், அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். சமூக விரோதிகளின் கடத்தல், பதுக்கல் போன்ற நடவடிக்கைகளை ஆங்காங்குள்ள அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வருவது ஒரு சிறந்த மக்கள் சேவை என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். பதுக்கல், கடத்தல் இவற்றில் ஈடுபடுவோர் பேரில் ஸ்தல அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற நிலை எனக்குத் தெரிந்தால், உடனடியாகச் செயல் புரிந்து, நியாயம் வழங்க எந்த காலத்திலும் தயங்கமாட்டேன். இதுபற்றி என்னிடம் யாரும், எப்பொழுதும் தொடர்பு கொள்ளலாம் என்று திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன்.

இன்றைய உணவுப் பற்றுக் குறையிலிருந்து விடுபட, படித்தவர்கள், பாமரர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள், வணிகர்கள், அரசியல்வாதிகள், மாணவ மணிகள் அத்துணைபேரும் அரசோடு ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

சமூக விரோதிகள், ஏதும் அறியாத மக்களை வீண் குழப்பத்திற்கு ஆளாக்குகிறார்கள். அந்த இடங்களில் நல்லெண்ணம் கொண்ட பெரியவர்கள் அவர்களுக்கு விளக்கம் தரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தப்பணி, வளரும் தமிழகத்திற்குத் தாங்கள் ஆற்றும் அருந்தொண்டென்பதால், தங்களுக்கு நன்றியும் செலுத்துகிறேன்.

ஊக்கமும், விடா முயற்சியும் குன்றாது செயல்பட்டால் நிச்சயம் நாம் இந்தத் தட்டுப்பாட்டிலிருந்து விடுபடுவோம் என்பது உறுதி. உங்களின் ஒத்துழைப்புத் தேவை. வணக்கம்.

**('வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் மாண்புமிகு தமிழ்நாடு உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் 18—8—1974 அன்று வானொலியில் ஆற்றிய உரை.)**

# தஞ்சை மாவட்டச் செய்திகள்

**1. பூம்புகாரில் புதிய துறைமுகம்.**

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகார் தமிழகத்தின் சிறந்த துறைமுகமாக விளங்கியது. அதேபோல், இப்போதும் பூம்புகாரைச் சிறந்த தலைநகரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பூம்புகாரில் பலவகைகளில் பயன்படக்கூடிய துறைமுகம் (போர்ட் காம்ப்ளக்ஸ்) ஒன்று அமைக்க அரசுக்கு ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் இதுவரை 8 துறைமுகங்களே இருந்தன. விசாகப்பட்டினம், மங்களூர், ஆகியவற்றுடன் சேர்ந்து 10 துறைமுகங்கள் ஆயின. பூம்புகார் ஒரு பெரிய துறைமுகம் ஆவதுடன், சீர்காழி, மாயவரம் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமையுமானால் அது இந்த மாவட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். நாகைத் துறைமுகத்தைவிட பூம்புகார் வசதிகள் அதிகம் உள்ள இடம். கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலையும் இதற்கு உறுதுணையாக இருக்கும்.



**2. தஞ்சை மாவட்டத்தில் ரூ. 20 கோடி செலவில் அட்டை தயாரிக்கும் தொழிற்சாலை.**

தஞ்சை மாவட்டத்தில், ரூ. 20 கோடி செலவில் வைக்கோலிலிருந்து அட்டை தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்குத் தனியார் துறையினர் அனுமதி கேட்டு இருக்கிறார்கள். அதுபற்றி, ஆலோசனை நடந்து வருகிறது. பூம்புகார், சீர்காழி, மாயவரம் ஆகிய பகுதிகளில் பலதொழில் நிறுவனங்கள் அமைக்க வாய்ப்புள்ளதால் அது குறித்து ஆய்வு நடத்தும்படித் தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. வேதாரண்யத்தில் இரசாயனத் தொழிற்சாலை.**

வேதாரண்யத்தில் மிதுப்பேட்டை வரையில் கடற்கரையோரமுள்ள 75,000 ஏக்கர் (118.8 சதுர மைல்) சதுப்பு நிலப் பிராந்தியத்தில் பெரும் இரசாயனத் தொழிற்சாலைகள் கேந்திரம் ஒன்றை நிறுவத் தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் திட்டமிட்டுள்ளது. விரிவான சர்வே நடத்தியபின், வருடாந்தரமாக எவ்வளவு உப்பு கிடைக்கும், என்ன இரசாயனப் பொருட்கள் கடல் நீரிலிருந்து தயாரிக்கலாம் என்பவை ஆராய்ந்து மதிப்பிடப்படும். இந்தியாவிலேயே மிகப்பெரிய கடல் இரசாயனத் தொழில் பகுதியாக இது அமையும்.

**4. தஞ்சை மாவட்டத்தில் அரிசன மக்களுக்கு வீட்டு வசதி.**

தமிழ்நாடு அரிசன நல வீட்டு வளர்ச்சிக் கழகம் தஞ்சை மாவட்டத்தில் வட்டத்திற்கு ஒன்று வீதம் 3 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டு 7 இடங்களில் கட்டுமான வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டன. இந்த வீடுகள் ஒவ்வொன்றும் ரூ. 3000 வீதம் மொத்தம் ரூ. 90 இலட்சத்திற்குக் கட்டிக் கொடுக்கப்படும். ஒவ்வொரு வீடும் 3 செண்ட் நிலப் பரப்பில் அமைவதுடன், கடைகள், குடிநீர் வசதி, விளையாட்டு வசதி எல்லாவற்றையும் அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் செய்து கொடுக்கும். இந்த வீடுகள் இலவசமாகவே கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கட்டுமான வேலையில் பயன்பெறும் அரிசனங்களும் பங்கு பெறுவார்கள். இதனால் அவர்களுக்கு இந்தக் கோடையில் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. இந்தப் பணிகளைக் கண்காணிக்க ஒரு நிர்வாகப் பொறியாளரும் பதவி ஏற்றுள்ளார். முன்னதாக ஓர் உதவிப் பொறியாளர் பணியாற்றி வருகிறார். கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது.

**5. வீட்டு வசதி வாரியம்.**

நீடாமங்கலம் அருகேயுள்ள சித்தமல்லியில், ரூ. 7 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்படவிருக்கும் 250 வீடுகளுக்கான துவக்க வேலை ஆரம்பிக்கப்பட்டது. முதற்கட்டமாக 89 வீடுகள் இரண்டு மாதங்களுக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 3,000 என்றும், அது ஓட்டு வீடாகவும் கட்டப்படும் என்றும் தெரிய வருகிறது.

**6. உடல் ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு தரும் பணி.**

தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 23 ஆயிரத்து 634 ஊனமுற்றோர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு என்ன வேலைகள், எப்படிக் கொடுக்கலாம் என்பது குறித்து மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலர் மூலம் ஆலோசனை செய்யப்படும்.

—பா. செயப்பிரகாசம்

# காசே நலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்




ராமையாத் தேவர் சிவபுரிச் சொர்க்கத்தை விட்டு மீண்டார். சிவபுரிச் சுருட்டை ஒரு சுண்டுச் சுண்டி வீசினார்.

ஒட்டி வந்தது மெட்டிச் சத்தம்.

'சத்தம்' கொடுக்காமல், அச்சத்தை நெஞ்சில் வாங்கிக் கொண்டார் சிங்கப்பூர்ச் சீமான். பாசம், கவரிமானைத் துள்ளியாட, ஏறிட்டு விழித்தார். தங்கப் பல் இரண்டும் மங்கி விடாமல் சிரிப்பை வெள்ளோட்டம் விட்டார்.

''ஆத்தா! கம்மாய்க்குப் போயிட்டு வந்திட்டியா?'' என்று அன்பு மீதூரக் கேட்டார்.

'ஊம்' கொட்டினாள் அன்னம்.

ஆனால், புதிய பணக்காரரோ பழைய தேள் கொட்டின மாதிரி தவித்துப் போய்விட்டார். 'ஆத்தா, வந்திட்டியா?' என்று பாசம் சேர வினவியதற்கு, அவள் வாய் திறந்து, 'ஆமாங்க, அப்பா!'' என்று வாய் நிறையச் சொன்னால் என்னவாம்? அலுப்பும் சலிப்புமாக 'ஊம்' கொட்டவா வேண்டும்? குற்ற மனப்பான்மை அவரை நெருஞ்சி முள்ளாகக் குத்திக் குதறிக் கொண்டிருக்கிறது! பாவம்! ராமையாத் தேவர் பாவத்துக்குப் பயப்படுகிறவர்தானா? அப்படியென்றால் கண்ணுக்குத் தெரியாத அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் ஏன் அவ்வாறு கண்ணுக்குத் தெரியாமல் கைகொட்டிச் சிரிக்க வேண்டும்?

ராமையாத் தேவரின் உள்ளம், சந்தையில் சொக்கப் பச்சைக் கட்டியைக் களவு கொடுத்து விட்டாற்போல் துடித்தது.

பெற்ற அன்புத் தவமகளின் அருமைப் பாசத்தைக் களவு கொடுத்து விட்டாரா அவர்? இன்றைக்கு ஏறிய தங்கத்தின் விலை நாளைக்கு இறங்கக் கூடும்! —ஆனால், அவர் தன் ஒரே புதல்வி மீது வைத்திருக்கும் அன்புப் பாசத்துக்கு எதையும் ஈடு காட்ட வாய்க்காதே? — எதையும் ஈடுகட்டவும் இயலாதே? — 'ஆத்தா, அன்னம்!' —உந்திக் கமலம் விம்மலை வெடிக்க, கண்கள் கண்ணீரைப் பொடிக்கின்றன!

சிங்கப்பூர்ச் செல்வந்தரின் இதயத்தின் ஒரு முடுக்கிலே, முடுக்கிவிடப்பட்ட இயந்திரமாகக் குற்றவுணர்வு உறுத்தத் தொடங்கி விட்ட உண்மையை அவரால் தட்டிக் கழித்திட முடியாதுதான்!

அன்னக்கொடி ஈரம் களைந்து, அதாவது, ஈரத் துணிகளைக் களைந்து காய்ந்த கொட்டடியைக் கட்டிக் கொண்டுவந்து நின்றாள்; உடுத்தியிருந்த சேலையின் கொசுவத்தைச் சன்னமாக இழுத்துவிட்டுக் கொண்டாள். அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற் போல, நெற்றியில் பூசிக் கொண்டு இருந்த விபூதியின் பிசிறுகள் கண்களில் தெறித்துக் கண்களைக் கரிக்கச் செய்தன போலும்! கசக்கி விட்டுக் கொண்டே நின்றாள் அவள்.

இந்நேரம் பார்த்துத்தானா ராமையா தன் மகளை ஏறிட்டுப் பார்க்க வேண்டும்? ''ஆத்

## 16. நாலுகால் பாய்ச்சலில் வந்த அதிசயம் ஒன்று!

தாடி! கண்ணெல்லாம் மிளகாய்ப் பழம் கணக்கிலே சிவந்து கிடக்குதே? — அழுதியா?'' என்று பதற்றம் மூள வினவினார்.

''ஆத்தா மண்டையைப் போட்டதுக்கு அப்பாலே, என்னைத் தலை மேலே தூக்கி வச்சுக்கிட்டு கூத்தாடிக்கிட்டிருக்கிற அன்பான அப்பன்காரர் நீங்க கைக்கு மெய்யாய் இருக்கையிலே, நான் எதுக்குங்க கண் கலங்கவோ, இல்லாட்டி, கண்ணைக் கசக்கவோ போறேன்?'' என்றாள். காதுகளில் ஊசலாடிய பழைய கற்சிமிக்கிகளைத் தடவி விட்டவாறு, 'அரிக்கன்' விளக்கைப் பொருத்தினாள். பழைய வீட்டின் முகப்பில் நின்று கொண்டு, எதிர்ப்புறம் அழகு காட்டிய புதிய வீட்டை ஒரு முறை நோக்கினாள். பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ? விளக்கைத் தூண்டி, தூக்கிப் பிடித்து, புதிய மனையைப் புதிய உள்ளத்தோடு பார்வையிட்டாள். ஆனந்தக் கனவும் இன்பப் பெருமூச்சும் பின்னிப் பிணைய, ஓர் இமைப்பொழுது வரை இமைக்காமல் நின்றாள். சுய நினைவை ஆட்கொண்டதும், அவளது பேசும் விழிகளின் இமைகள் பேசாமல் படபடத்தன — வண்ணத்துப் பூச்சிகள் சிறகடிக்குமே, அப்படி!

''அப்பா!'' என்று நிதானமான குரலெடுத்துக் கூப்பிட்டாள் அன்னக்கொடி. கொண்டைப் பூக்கள் குலுங்கின.

''சொல்லு, ஆத்தா!'' என்று தவிப்பை அடக்க மாட்டாமல் கூறினார்.

''அப்பா, நாம ஏற்கெனவே போட்டு வச்சிருக்கிற திட்டப் பிரகாரமே, ஆவணி பிறந்தடியும் நம்மோட புது வீட்டிலே குடி புகுந்து பால் காய்ச்சிக் குடிச்சுப்பிடுவோம் தானுங்களே?'' என்று கேட்டாள். அப்பா காண வேண்டுமென்று விரும்பியவள் மாதிரி, மறு பயணமும் அவள் தன்னுடைய தங்கச் சிமிக்கிகளை வருடியும் நெருடியும் விட்டுக் கொண்டாள்.

புதல்வியின் சூட்சுமமான இச் செயலைக் கவனிக்கவும் ராமையாத் தேவர் தவறிவிடவில்லை; கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற தட்டிக் கழிக்க முடியாத பொறுப்புடன் — அந்தப் பொறுப்பைச் சந்தியில் நிறுத்தி விட முயன்று கொண்டிருந்த அவருடைய கள்ளக் காதலி செங்கமலத்தின் நினைவைத் தற்காலிகமாகத் தட்டிக்கழிக்க முயன்ற நிம்மதியுடன், அவர் தன் அருமைத் திருமகளை இனம் புரியாத அச்சத்தோடு நோக்கினார். ''மெய்தான் அன்னம். ஆவணி பிறந்திடியும் புது வீட்டிலே பால் காய்ச்சி மட்டுந்தானா குடிப்போம்? அந்தப் புது மனையிலே உனக்கும் உன் அன்பு மச்சான் வீரமணிக்கும் கண்ணாலமும் சேர்ந்து நடக்கப் போகுதாக்கும்!'' என்று சொல்லிப் பெருமையுடன் தடபுடலாகச்சிரித்தார். அச்சிரிப்பு,விதியை எதிர்கொள்ளுவதுபோல வளைந்து நெளிந்தது.

பெருங்காயம் வைத்த பாண்டமாகக் காலந் தள்ளும் — நாட்டாண்மை ஆதிமூலத் தேவர், தன் மைந்தன் வீரமணிக்கும் சிலட்டூர்ப் பெருந்தனக்காரரான கங்காணி கருப்பையாத் தேவரின் மகள் பவளக் கொடிக்கும் ஆவணியில் திருமணம் செய்து வைத்து விடத் திட்டமிட்டு, அத்திட்டத்திற்குக் கிட்டும் ஒரு பலனாக, ராமையாத் தேவரின் பயங்காட்டும் கடன்களை கங்காணியைக்கொண்டு அடைத்து விட வேண்டுமென்றும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அவரது ஆசைக் கனவிலே தனக்குச் சாதகமாக வீரமணியே ஒரு பிடி குருவிமணலை அள்ளிப் போட்டு, விட்டதால் விளைந்த அந்தமான—ஆனந்தமான சிரிப்பு அது! கங்காணியைக் கைக்குள்ளே போட்டுப் பணம் புரட்டி, தன் கடனைச் சட்டப்படி கட்டி அடைத்து விட்டு, தன்னைக் காலுக்குக் கீழே தள்ளிக் காலால் எட்டி உதைத்து விடச் 'சாகசம்' பண்ணிக் கொண்டிருந்த ஆதிமூலத் தேவரின் தந்திரம் இனி தவிடு பொடிதான்!

'ஊம்; இனிமேல் ஆதிமூலம் மச்சானோட மானம் காலாவதி தான்! பெற்ற மகனே பெற்ற அப்பனுக்கு விரோதமாகக் கொடி பிடிச்சுக்கோதாவிலே இறங்கியாச்சு! கச்சேரியிலே தீர்ப்பு ஆகியிருக்கிற என்னோட கடன் உடனுக்கு அந்தக்

கிழம் இனி எப்படி 'மால்' பண்ணப் போகுதாம்? தற்காலிகமாக 'லாந்தி' வச்சிருக்கிற என் வெள்ளைக் காளைக்கும் வைரச் சிமிக்கிகளுக்கும் அந்தக் கிழத்தைச் சும்மாவா விடப் போறேன்?''

நினைவுகள் தோன்றிய மாத்திரத்தில், அவருடைய சிரிப்பினால் விளைந்திட்ட பெருமையை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை? தாங்கிக் கொள்ள முடியாத பெருமையைத் தாங்கிக் கொண்டவராக, மகளைப் பார்த்துக் கொண்டே இருந்தார் அவர்.

''ஆவணி பிறந்ததும் உன் கண்ணாலத்தை நடத்திப்பிட வேண்டியதுதானே?''

''உங்க இஷ்டமுங்க, அப்பா?''

''என் இஷ்டந்தான் உனக்குத் திரவிசாய்ப் புரிஞ்சிருக்குமே, அன்னம்?''

''அப்போ, சரிங்க அப்பா!''

''சரி; சோறு உண்ணலாம். வா ஆத்தா!''

''ஓ!''

அடுப்படிப் பக்கம் காலடி எடுத்து வைத்தார் ராமையாத்தேவர்.

இருட்டு கனமாகச் சிரித்தது.

அப்போது, வெள்ளைக் காளை பரிதாபமாகக் கதறும் சத்தம் சோகத்தின் அலைகளை எழுப்பியவாறு காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

இச்சத்தத்தைக் கேட்டதுதான் தாமதம்; உடனே சிங்கப்பூர்ச் சீமானின் கொட்டி அளந்த சிரிப்பெல்லாம் கொட்டித் தூற்றிய 'சாவி'யாக அதற்குள் எந்தக் கடவுக்கு எப்படித்தான் ஆலாய்ப் பறந்து தொலைத்ததோ? வயிற்றில் அடித்தவனை நெஞ்சைக் கணித்து அடித்து வீழ்த்திக் கருவறுக்கத் துடித்த துடிப்பு அவரது கண் வளையங்களிலே வினையென விளையாடியது. ஏதோவொரு பயங்கர முடிவுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டவராக, பற்களைக் கடித்துக் கொண்டார் அவர்.

மறுபடியும் வெள்ளையின் காட்டுக் கூச்சல் ஓடிவந்தது.



''பாவம், வாயில்லாச் சீவன் பசி தாளாமல் கத்திக் கதறிக்கினே இருக்குதுங்களே, அப்பா? நம்ப வீட்டுக் கொட்டடியிலே நின்னிருந்தா, இம்மாம்பொழுதுக்கு எத்தனையோ வாட்டி தீனி அள்ளிப் போட்டு இருக்க மாட்டேனுங்களா, அப்பா? நம்ப உடைமையை இப்படித் தோற்றுப்பிட்டு சிவனேன்னு நிற்பீங்களா?''

ராமையா தனது அருமை பெருமை மிகுந்த தேள் கொடுக்கு மீசையைப் பாலைவனம் ஜமீந்தார் மாதிரி நீவி விட்டுக் கொண்டார். பிறகு, ''அன்னம், என்னோட ஆத்திரத்தை நீ சரியாய்ப் புரிஞ்சுக்கிடல்லே! நீ உன் அயித்தை புருசன் சவடால் ஆதிமூலத் தேவன் நம்ப வெள்ளையையும் உன்னோட வைரச் சிமிக்கிகளையும் லாந்திப் பிடிச்சி வச்சுக்கிட்டு இருக்கிற குற்றத்துக்கு உண்டான தண்டனையை அந்தக் கிழம் நாளைப் பொழுதுக்குள்ளே அனுபவிக்கிறனா, இல்லையா, பார்த்துக்க, ஆத்தா! நாளை மம்மலுக்கு நான் தஞ்சாவூருக்குப் பறந்து வந்ததும், கதை எப்படித் திரும்புதின்னு நீ பார்த்துக்க அன்னம்!'' என்று சோளம் பொரிந்தார் அவர்; கண்களிலே ரத்தம் கட்டி நின்றது.

அன்னம் நம்பிக்கை இழந்து, அழமாட்டாத குறையாகச் சிரித்தாள்!

இருட்டும் சிரித்தது.

சிங்கப்பூர் ராமையா மகளிடம் என்னவோ சமாதானம் சொல்ல வாயெடுத்த நேரத்திலே, அவரது பண்ணைக்காரன் பரமசிவம் பேயடித்தவன் போல ஓடிவந்து அவருடைய அழகான காதைக் கடித்தான்.

ராமையா, ''ஆ!'' என்று துடித்து விட்டார்.

''அடிபாவிச் சிறுக்கி!'' என்று செருமினார் ராமையா.

''என்னாங்க அப்பா சொல்லுறீங்க?''

அருமைச் செல்வியின் அனுதாபம் அன்பான அசட்டு அப்பாவுக்கு எங்கே புரிகிறதாம்? குமாரத்தியின் கேள்வியைக் காதில் வாங்கிக் கொண்டால்தானே?

அப்பொழுது, அங்கே ஓர் அதிசயம் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவந்து நின்றது!



ஆமாம்! அதோ, அந்த வெள்ளைக் காளை அறுபட்ட வாலை ஒய்யாரத்தோடு ஆட்டிக் கொண்டே, அசட்டுப் பெருமையின் குதூகலத்தோடு கத்தியவாறு, அங்கே நாலுகால் பாய்ச்சலில் ஓட்டமாக ஓடிவந்து நிற்கிறது!

## 17. இருட்டோடு இருட்டாக ஓடுகிறாள் கன்னி!

தந்தை ராமையாத் தேவரும் மகள் அன்னக் கொடியும் அந்தக் காளையை வைத்த விழி விலக்காமல் பார்த்தார்கள்; பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்!

இந்தப் பழமொழியின் வியவகாரமும் கூட வெள்ளைக்குத் தெரிந்திருக்கிறது. பரவாயில்லைதான்! இனிமேலும் வெள்ளை மீது பழியைச் சுமத்தக் கூடாது. கொட்டையை வீசி விட்டுப் பழத்தைத் தின்னப் பழகிக் கொண்டிருக்கும் சிங்கப்பூர் ஆசாமியின் காளையா, இல்லை, கொக்கா? அதிலும் ஆவணத்தாங் கோட்டைக்கே புதிய புள்ளியாக உயர்ந்து வர முயன்று கொண்டிருக்கும் ராமையாவின் 'வெள்ளை' அது! எப்படியோ அது ஆதிமூலத் தேவரின் மாட்டுத் தொழுவத்தை 'முறி' வைத்துவிட்டு ஓடிவந்து விட்டது.

''அப்பா'' என்று அலட்டினாள் தேவரின் பெண்.

பருத்தி, புடவையாகவே காய்த்துவிட்ட குதூகலத்தைக் காளை அவர் வசம் ஒப்படைத்து விட்டது போலும்! பண்ணைக்காரன் சொன்ன இடுசாமச் சேதியை அப்போதைக்கு மறந்து போனார்.



''உன்னோட அயித்தை புருசன் மானத்தைப் பொழுது விடிஞ்சதும் கப்பலேற்றிப்பிட வேணும்னு ரோசித்துக்கிட்டு இருந்தேன். பல்லுப்போன அந்தக் கிழம் இப்போதைக்கு என் கிட்டேயிருந்து படிக்குப் பாதி தப்பிச்சுக்கிடுச்சு. நம்மோட வெள்ளை எப்படியோ ராவோடு ராவாக விடுதலை அடைஞ்சி வந்திருச்சு! ஆனா, ஊர் நாட்டாண்மைப் புள்ளி என் கையிலேயிருந்து ஒட்டுமொத்தமாய் விடுதலை அடைய வேணும்னா, நம்மோட அந்த வைரச் சிமிக்கிகள் ரெண்டுக்கும் அவர் பதில் சொல்லியாக வேணும்!'' என்றார் ராமையா.

அன்னக் கொடி நெடுமூச்செறிந்தாள். ''நம்ப வெள்ளை தன்னாலே மச்சான் வீட்டிலேயிருந்து விடுதலை வாங்கிக்கிட்டு ஓடிவந்திருக்கும்னு நினைக்கிறீங்களா, அப்பா?'' என்று விசாரித்தாள் கன்னிப் பெண்.

''ஒரு வேளை, உன் ஆசை மச்சான்——என் மாப்பிள்ளை இந்தக் காளையை, அப்பன்காரர் அசந்திருந்த சமயம் பார்த்து அவிழ்த்து விட்டிருக்குமோ?''

''ஆமாங்க ; அப்படித்தான் முக்காலறுப்பு கதை தடம் மாறியிருக்க வேணுமுங்க, அப்பா!''

''கதைதான் எப்பவோ தடம் மாறிப் போயிடுச்சுதே, ஆத்தா?''

''உன்னோட வைரச் சிமிக்கி ரெண்டையும் பொழுது விடிஞ்சடியும் நல்ல தனமாகத் திருப்பிக் கொடுத்திட்டாரானால்தான், ஆதிமூலத் தேவன் என் கிட்டேயிருந்து தப்ப முடியும்!'' என்று வீறு கொண்டு முழங்கினார்.

''வைரச் சிமிக்கி என்னோடது அப்படின்னு நூறு வாட்டி சொல்லிக்கிட்டு இருக்கிற நீங்க, வைரச் சிமிக்கிகளை எனக்கோசரம் பண்ணியிருக்கிறதாக ஒரு வாட்டி கூட அச்சாரம் வச்சு இது மட்டும் சொல்லவே இல்லீங்களே, அப்பா?''

''வைரச் சிமிக்கிகளை உனக்காகப் பண்ணாமல், மறுகா யாருக்காகப் பண்ணினேனாம், அன்னம்?''

''அந்தத் துப்பு உங்களுக்குத் தெரியும். அப்பாலே, குடி கெடுத்த அந்தப் புறக்குடிப் பாவிச் சிறுக்கி செங்கமலத்துக்குத் தெரியும்!''

சிங்கப்பூர்ச் சீமான் பாக்குக் கடிக்கும் நேரம் வாயடைத்துப் போய்விட்டார்.

அப்பாவின் பரிதாபத்திற்கு உகந்த இந்தக் காட்சியைக் கண்ட அன்னத்திற்கு அனுதாபம் மேலிட்டது. ''சரி, சரி, கை கழுவிப்புட்டு வாங்க, சாப்பிடலாம்!'' என்றாள்.

''நல்லாய்ச் சொன்னாய், ஆத்தா. இதோ, கை கழுவிப்புட்டு நொடியிலே வந்திடுறேன். நீ உள்ளே போய்க் கதவை நாதாங்கி போட்டுக்கிட்டு இரு, அன்னம் !'' என்று கூறிவிட்டு, அரிக்கன் விளக்கைத் தூண்டியவாறு கையிலெடுத்தார் ராமையா. சற்று முன்னம் பண்ணைக்காரன் சொன்ன அந்தப் பயங்கரச் சேதியை அவரால் மறக்கவே முடியாது!

''பசியாறாமல் ராத்திரியிலே எங்கிட்டுப் பறியிறீங்க, அப்பா?''

''அன்னம்? நான் உன்னை விட்டுப்புட்டு எங்கிட்டும் மறுகவோ மடங்கவோ, ஏலாது. அதனாலேதான், நான் என்னோட விதியை நானே தேடிக்கிட்டுப் பறிகிறேன்; நான் விதைச்ச வினையை நானே என் கையாலேயே அறுவடை பண்ணிக் கண்டு முதல் பண்ணிப்புடப் பறியிறேன்! புதிராட்டம் என் பேச்சு உனக்குத் தோணுதா? மெய்தான் ; புதிர்தான் போடுறேன்..! இந்த நாலஞ்சு வருசமாய் உன் கிட்டேயிருந்து கமுக்கமாய் மறைஞ்சு நின்னு புதிர்போட்டுக் கிட்டு வந்த நான், இனி நான் போட்ட புதிரை நானே விடுவிக்க வேண்டிய வேளை வந்தாச்சு.

நீ சாப்பிட்டுப்புட்டு, கெட்டியமாய்த் தூங்கு. நான் திரும்பினால் கதவைத் தட்டுறேன்! நான் வாரேன்!'' என்று கூறி, குரலின் சலனத்தை நிதானப்படுத்த முடியாமல் தவித்தார் அவர்.

''போயிட்டு வாரேன்னு சொல்லுங்க, அப்பாரே!''

''ஓ!.....சாத்திரம் பேசுறீயா, மகளே? சரி. போயிட்டு வாரேன்!'' என்று திருத்திப் பேசினார். புதுப்பணக்காரரர். அன்னத்தின் சுடுநீரை எதிர்கொள்ள வலுவிழந்து முகப்பினின்றும் வெளியேறினார் ராமையா.

பசி வந்திடப் பத்தும் பறந்து போய்விடுமாம்!

ஆனால், அழகுக் குமரி அன்னத்துக்குப் பசி வந்ததென்னவோ நிஜம்தான். ஆனால், அவள் வரை, பத்தும் பறக்காமல், பசியே பறந்துவிட்டது. இதுவும் பொய்யன்று!

'புதுமாடி வீட்டு நடையிலே தொங்கவிடுறதுக்காக சாம்பிராணி போட்டு வச்சிருக்கிற சிங்கப்பூர்ச் சுவர்க் கடிகாரத்திலே ராவு எட்டுத்தரம் மணி அடிச்சதும், அப்பா தலைபோகிற அவசரத்திலே எங்கிட்டோ தலைதெறிக்கப் பறிஞ்சாங்க. மணி இப்ப பத்தும் அடிச்சு ஓய்ஞ்சிருச்சு. ஆனா, அப்பாவைத்தான் காணோம்! எங்கே போயிருப்பாங்க அப்பா? ஒரு சமயம், அந்தப் பட்டி செங்கமலத்தை நாடித்தேடி காளியம்மன் கோயில் வளைவு முக்கத்துக்குக் கால் பாவி இருப்பாகளோ? கல்யாணம் ஆகாத பொண்ணை வீட்டுக்கு ஒண்டியாகக் காவல் வச்சுப்புட்டு, ஊரைக் கெடுக்க வந்த செங்கமலத்துக்குக் காவல் இருக்கப் போயிட்டார் அப்பா!

நினைவுகள் சீறின! ஆறின!

வெள்ளைக்கு இப்போது என்ன கேடு வந்து தொலைத்தது? வாய் பேசாமல், 'சிவனே என்று தன் விதியை தொழுத வண்ணம் தொழுவத்தில் பசுவாக அடைந்து கிடக்கக்கூடாதோ? பிடுங்கிப் போட்ட 'கூளம்' அதற்குள்ளாகவா தீர்ந்துவிட்டது!-சே! என்ன ஆனாலும் இவ்வளவு குறும்பு கூடாது! அத்தை வீட்டிலே தீனி இல்லாமல் பூராப்பொழுதுக்கும் கொட்டடியிலே கொட்டக் கொட்டப் பட்டினி கிடந்தது மறந்து போய்விட்டது போலும்!

நடராசர் கோயில் பக்கம்
ாய் குலேக்கிறது!

வெள்ளேக் காளேயின் மூலம் ன் குடும்பத்துக்கும் அத்தை ின் குடும்பத்துக்கும் இடை ில் நிலவியிருந்த பகைமை ாளாகை வளர்ந்துவிட்டிருக் ம் நிலவரத்தை எண்ண ண்ண, அன்னக்கொடிக்கு வெள்ளே மேலிருந்த அனுதா ம் ஆத்திரமாக உருமாறி- ருக் கொள்ளத் தொடங்கி ிட்டது. கொடுக்கல்-வாங் ல் விவகாரத்தின் காரணமாக அப்பாவுக்கும் மாமாவுக்கும் டுவில் நிலவி வந்த கோப தாபங்களேக் கிண்டிக் கிளறி வேடிக்கை பார்க்கத்தான் வெள்ளே, அத்தை வீட்டின் வைக்கோலேக் கேள்வி முறை யில்லாமல் தின்று வைத்ததா? வெள்ளேமீது மட்டிலும் குற்றப்பத்திரிகை வாசிப்பது மனிதத்தன்மை ஆகாது. அந்த வைரச்சிமிக்கிகளும் அல்லவா இந்தப் பகைமைத் தீயைக் கொழுந்துவிட்டு எரிய செய்து விட்டன! அம்மாவும் அப்பாவும் பிணக்குத் தீர்ந்து, எங்கள் திருமணத்தைச் சிறப் பாக நடத்தி வைக்க வேண்டும்! தெய்வமே! நீள்மூச்சு நீள் கிறது!

அப்போது:

'தங்கச்சி,'' என்ற குரல் கேட்டது.

ஜன்னலேத் திறந்துகொண்டு எட்டிப் பார்த்தாள் அன்னம். தான் கணித்த மாதிரி, பண் ணேக்காரன் பரமசிவம்தான் குரல் கொடுத்திருக்கிருன்.

''என்னப்பா?'' என்று விசாரித்தாள் அவள்.

''தங்கச்சி, தலேக்குமேலே வெள்ளம் போயாச்சு!'' என்று மென்று விழுங்கினுன் வேலேக்காரன்.

''வெள்ளம் யாரோட தலேக்கு மேலே போச்சுதாம்! உடைச்சுப் பேசப்பா,'' என்று உத்தரவு பிறப்பித்தாள் ராமையாவின் பெண்.

''சொல்ல வேண்டியதைச் சொல்லிப்பிடத்தான் வேணும்; ஆனு, உங்க அப்பா சொல்லப் படாதின்னு 'முச்சரிக்கை' வாங்கிக்கிட்டாரு. சரி, சரி, நான் சொல்லிப்பிடுகிறேன்!''

''சொல்லு!''

''உங்க சின்ன ஆத்தா....''



''எங்க சின்ன ஆத்தாவா? என் ஆத்தாளோடே கூடப் பொறந்தவுக யாருமே இல்லேயே?''

''அதுதாங்க........ வந்து அடடே! நெற்றிக் கண்ணேத் திறந்துப்புடாதீங்க, தங்கச்சி, உங்க அப்பா தொடுத்துவச்சிருந்த செங்கமலம் காதுக்கு எஜமான் வைரச் சிமிக்கி போடலேயாம். அந்த நிட்டுரக் கோபம் தாங்காமல், துப்புக் கெட்ட அந்தப் பொந்துக்கிளி பொழுது பட்டடியுமே கை மாறிப் பறந்து போயிடுச்சாம்!

வேலேக்காரன் முண்டாசுத் துவாலேயை 'சனியன் விட்டது என்கிற போக்கில் சுள்ளாப் போடு உதறிப் போட்டுக் கொண்டான்.

அன்னம் தலேகுனிந்தாள். ''புள்ளி-புதுப்புள்ளி யாராம்?' என்று தாழ்குரலில் கேட்டாள். ஆற்ருமை கேட்டது.



''அந்தத் துப்பு உங்க அப்பா திரும்பினுல்தானுங்க புரியும்!''

''ஓகோ!''

விழிநீருக்கு வழிகாட்ட அன்னத்துக்குப் புரியவில்லே.

திடுதிப்பென்று 'வெள்ளே' வீரிட்டுக் கதறியது!

மறுகணம்—

''ஐயையோ! நம்ப வீட்டு வெள்ளேக்காளேயை யாரோ இருட்டிலே இழுத்துக்கிட்டு ஓடுருனே....தங்கச்சி!

பரமசிவம் ஓலமிட்டான்.

''ஆ!'' என்று வீரிட்டு அலறினுள் அன்னம்!-கதவை 'படா' ரென்று திறந்தாள்; நிற்க வில்லே; நிலேக்கவில்லே. இருட்டைச் சுமந்தவளாக, இருட்டைத் துளேத்தவண்ணம், இருட்டோடு இருட்டாக ஓடிக் கொண்டிருந்தாள் அந்தக் கன்னி!

(வளரும்)

## இந்தியாவின் இரண்டாவது சிறந்த கிராமப் பரிசு தமிழகத்திற்கே!



கோவை மாவட்டம் பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கவுந்தப்பாடி என்ற கிராமம் 1972-73ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே இரண்டாவது சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக கவுந்தப்பாடி கிராமத்திற்கு ரூபாய் 2,500 பரிசு வழங்கப்படும்.

இந்தியாவின் சிறந்த கிராமம் என்ற பரிசை பஞ்சாப் மாநிலம் பெரேஸ்ப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 'நூர்ப்பூர்' என்ற கிராமம் பெற்றுள்ளது. இதற்காக நூர்ப்பூர் கிராமத்திற்கு ரூபாய் 3,000 பரிசு வழங்கப்படும்.

## தமிழ்நாட்டில் சிறந்த கிராமம் !

மதுரை மாவட்டம் தேனி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வீரபாண்டி கிராமம், 1972-73 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலேயே சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம் பெண்ணுகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 'நாகமரி' என்ற கிராமம் 1972-73ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் இரண்டாவது சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சிறந்த கிராமத்திற்கு 1,000 ரூபாய் பரிசும், இரண்டாவது சிறந்த கிராமத்திற்கு 500 ரூபாய் பரிசும் தமிழ்நாடு அரசால் விரைவில் வழங்கப் பெறும்.



# இரவும் பகலும் இங்கே சிகிச்சை

காலே 9.30 மணி!

ஒரு சிறுவனேச் சிலர் தூக்கிக் கொண்டு வருகின்றனர்.

அவன் தலேயில் பலத்த காயம் பட்டு, இரத்தம் முகத்தில் வழிந்தோடுகிறது.

அவனுக்குச் சுயநினேவில்லே.

உடன் வந்தவர்கள் சோகமே உருவாய்க் காட்சியளிக்கின்றனர்.

மருத்துவர்கள் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றுகின்றனர்.

நோயாளி வந்த ஐந்து நிமிடத்திற்குள் சிகிச்சை ஆரம்பமாகி விடுகிறது!

எங்கே?

சென்னே பொது மருத்துவமனேயிலுள்ள 'காஷுவால்டி' (Casualty) அதாவது இடைவிபத்துப் பகுதியில்!

எதிர்பாராமல் நடக்கும் சாலே விபத்துக்கள், அடிதடி, கத்திக்குத்து, விஷம் குடித்தல், மாரடைப்பு, கட்டடங்களிலிருந்து கீழே விழுதல் போன்ற 'அவசர கேஸ்'களுக்கு முதலில் இடைவிபத்துப் பகுதிக்கு வர வேண்டும்.

அங்கே துரிதமாகப் பரிசோதிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவரை 'எமர்ஜென்சி வார்டு'க்கு (Emergency Ward) அதாவது எதிர்பாரா நிகழ்ச்சிகளுக்கு உடனடிச் சிகிச்சையளிக்கும் பகுதிக்கு அழைத்துச் செல்கின்றனர்.

## சென்னே அரசினர் பொது மருத்துவமனேயில்...

சென்னே அரசினர் பொது மருத்துவமனேக்கு வரும் வெளிப்புறபகுதிநோயாளிகள் காலே 7 மணிமுதல் 9 மணி வரை தம் பெயரைப் பதிவு செய்து கொண்டு சிகிச்சை பெறச் செல்வார்கள். 9 மணிக்குமேல் வருகிறவர்களுக்கு இந்த வசதி இல்லாமல் இருந்தது.

ஆனுல், இப்போது இந்தக் கால நேரத்தை மாற்றியமைத்து காலே, மாலே இரு வேளேயும் அதாவது காலே 7-லிருந்து 11 மணிவரையிலும், மாலே 4 மணியில் இருந்து 6 மணி வரையிலும் அவர்கள் சிகிச்சை பெற வசதிசெய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே, மணி ஆகிவிட்டதே என்று யாரும் திரும்பிப் போகவேண்டியதில்லே!

அங்கே—

எல்லாவிதமான சாதனங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. நோயாளிக்கு இரத்தம் செலுத்த வேண்டுமா? எக்ஸ்ரே எடுக்க வேண்டுமா? அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமா? எல்லாவற்றுக்கும் அங்கேயே வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன; எதற்கும், எங்கேயும் போகத் தேவையில்லே.

சிகிச்சைக்கு வந்த அந்தப் பதினுன்கு வயதுச் சிறுவன், 25 அடி உயர மரத்திலிருந்து கீழே விழுந்தானும். சுயநினேவில்லாத அவனுக்குத் துரித சிகிச்சை அளித்ததன் பயனுகை அவன் உயிர் பிழைத்துக் கொண்டான்!

நோயாளி வந்த உடனேயே ஒரு நிமிடமும் தாமதிக்காமல் கவனிக்க, நோய் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் இங்கே தயாராக இருக்கின்றனர்.

இருபத்து நான்கு மணி நேரமும் பணியாற்றும் இந்தப் பகுதி (Emergency Ward) வேறெந்த மருத்துவமனேயிலும் இல்லாத ஒன்ருகும். கடந்த நான்கைந்து மாதங்களுக்கு முன்தான் இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் ஆறு மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

ஒருசமயம் இரத்த வெள்ளத்தில் மிதந்த ஒருவர் இங்கே



நினைவிழந்த சிறுவனுக்கு துரித சிகிச்சை நடக்கிறது.

சேர்க்கப்பட்டார். முதுகுப் புறமெல்லாம் பயங்கரமாகக் கத்தியால் அறுக்கப்பட்டிருந்தது. மருத்துவர்களையே திகைக்க வைத்தது இந்தச் சம்பவம்.

தாக்கப்பட்டவர் இறந்து விட்டாரோ என ஐயுறத் தக்க வகையில் காணப்பட்ட அவருக்கு உடனே சிகிச்சையளித்தனர் மருத்துவர்கள். சில நாட்களில் மருத்துவமனையிலிருந்து அவர் நலமாக வீடு திரும்பினார்!

இவ்வாறு பொதுமக்களுக்காக அல்லும் பகலும் அயராது பணியாற்றி வரும் சென்னை அரசினர் பொது மருத்துவமனை, மருத்துவ உலகில் சிறந்து விளங்குகிறது என்றால் அது மிகையல்ல.

—பி.வி.ஜி.

# வாழ்த்த வா! வா!

காமத்துப் பாலென்றால் கசப்பாய் எண்ணிக்
 கானகத்து முனிவரைப்போல் நடித்தோர் கூட—
ஆமதற்கு நிகரில்லை என்றே நெஞ்சில்
 ஆதாவு தெரிவிப்பார்! வாழ்க்கை இன்பம்
தாமதித்தால் திரும்பிவா முடியா தன்றோ?
 தமிழினிலே செறிந்துள்ள அகச்சு வைக்குப்
பாமரரும் பொருள்புரியச் செய்தாய் அண்ணா;
 பழச்சாறு நீதந்தாய்! அதனால் நாங்கள்

சோத்துச் சிறியதம்பி இளங்கோ யாத்த
 சிலம்புதரும் பல்சுவையில் காதலைத்தான்
விரத்தை விடமிகவும் விரும்பிக் கற்றோம்!
 விளையாட்டாய்க் கடல்கொண்ட பூம்பு காரைத்
தூரத்தில் கரைமீதில் நின்ற வாறு
 தூக்கிவைத்து நிறுத்திடவே கனவு கண்டோம்;
பாரத்தைச் சுமக்கின்ற கலைஞர் ஆட்சி
 பழம்பெருமைக் காவியத்தைப் படைத்த தங்கே!

பொருட்பாலில் அரசியலை வடித்துத் தந்தாய்;
 பொன்னனைய கருத்துகளின் சுரங்கம் அன்றோ?
இருட்குகையில் தவித்திருந்த நம்ம வர்க்கே
 இதுதான்என் றொளிகாட்டும் ஞாயி றொப்ப
அருட்பார்வை செலுத்தியவன் நீதான் அண்ணா!
 அதனாலே பாஞ்சாலங் குறிச்சி மண்ணில்
மருட்சியுற்ற வெள்ளையரை விரட்டி மாண்ட
 மாவீரன் கட்டபொம்மன் கோட்டை கண்டோம்!

அறத்துப்பால் அனைத்துக்கும் முதற்பால் ஆக—
 அதற்கொப்பத் தலைநகராம் சென்னைக் குள்ளே...
திறத்துக்கோர் எடுத்துக்காட் டாகத் தானே
 தெய்வமுனைக் கடற்கரையில் புதைத்து வைத்தோம்?
குறைத்துமதிப் பிடாவகையில் குறள்தந் தார்க்குக்
 கோயிலொன்றும் எழுப்புகின்றோம்; கொள்கை மூன்றாய்
உரைத்தவனே, வள்ளுவனின் வழியில் வாழும்
 உன்தம்பிக் கூட்டத்தை வாழ்த்த, வா! வா!



முப்பாலுக் கப்பாலோர் மொழி நூல் இல்லை;
 முழுதுலகும் ஏற்றுள்ள உண்மை யாகும்
இப்பாலை மூன்றுக்கிப் பகுத்துக் காட்டும்
 எழிலுடைய இலக்கியமும் உலகில் எது?
தப்பாமல் திருக்குறளைப் பொருள்பு ரிந்து
 தாமுணர்ந்தார் தடம்பிறழ்ந்த வரலா றில்லை!
ஒப்பாரும் மிக்காரும் இல்லா அண்ணா
 உன்உரையை நாளெல்லாம் நாடு கேட்கும்!

சாமி...

கவிஞர் கருணானந்தம்

# கடல் மணலே! ஒதுங்கு!

கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ



கடல் மணலே! கடல் மணலே! ஒதுங்கு! மூடிக்
கண்ணுறங்கும் எம்மண்ணு எழுதல் வேண்டும்!
உடல்அணுக்கள் ஒவ்வொன்றும் சிலிர்க்க வைத்த
ஒப்பற்ற தலைவரையா மறைத்தாய், பாவி?
கடலலைபோல் நடமாடி எழுப்பி விட்ட
கனற்பிழம்பு மண்ணுக்குள் தூங்க லாமா?
தடம்மாறிக் கிடந்திட்ட தலைமு றைக்கே
சரியான வழிகாட்டி அவரே யன்றோ?

மேடைகளே! மேடைகளே! அண்ணு இன்றி
மெருகிழந்த உம்தோற்றம் நிமிர்வ தெந்நாள்?
பீடுநடைத் தமிழெடுத்து மடமைப் பேயைப்
பீரங்கிப் பேச்சாலே தகர்த்தோர் எங்கே?
நாடியெலாம் நரம்பெல்லாம் முறுக்கைத் தந்த
நாதமெங்கே? கீதமெங்கே? குரல்தான் எங்கே?
சூடிருக்கும் சுவையிருக்கும் வகையில் பேசிச்
சொக்கவைத்த பேருருவிக் குரல்மீ ளாதா?

ஏடுகளே! ஏடுகளே! உம்மி டத்தில்
எமைஈர்த்த பேரறிஞர் மறைந்த பின்னுல்
'ஓடிழந்த ஆமை'களாய் மாறி விட்டீர்!
'ஒயில்இழந்த மயிலாகக் காணு கின்றீர்!
கேடுதரும் இந்தியினைத் திணித்த நேரம்
கிளர்ந்தெழுந்தே எம்மண்ணன் எழுதி வைத்த
பாடல்நேர் கட்டுரைகள் போலே மீண்டும்
படைப்பதற்கே அவர்கைகள் துடித்தெ ழாதா?

கோட்டைகளே! கோட்டைகளே! தமிழ்த்தாய் தன்னைக்
கொலுவைத்த தலைவரெங்கே? 'பள்ளத் தூ'ரின்
நாட்டுமக்கள் 'மேட்டு'ரை அடைவ தற்கே
நல்லபல திட்டங்கள் வகுத்துத் தந்து,
பாட்டாளிக் கலைஞரினை உருவாய் ஆக்கிப்
பாதியிலே விட்டுவிட்டுச் சென்ற தேன், ஏன்?
ஓட்டாலே உள்நுழைந்த அறிஞர், தீமை
ஓட்டுமுன்னே ஓடியதும் நீதி தானு?

கலையுலகே! கலையுலகே! உன்ம திப்பைக்
கற்றோரும் மற்றோரும் போற்றும் வண்ணம்
நிலையான நாடகத்தால், திரைப்ப டத்தால்
நித்தமிங்கே உயர்த்திவந்த மேதை எங்கே?
கலக்கின்ற அரிதாரக் கார ரெல்லாம்
கவின்பெருமை பெற்றதெலாம் எவரால் இங்கே?
விலையில்லா 'ஓர்இரவு' 'வேலைக் காரி'
பெருமைநிறை 'நல்லதம்பி' காண்ப தெந்நாள்?

வரலாறே! வரலாறே! தாய கத்தின்
வரலாற்றை மாற்றிவைத்த மன்னர் எங்கே?
குரலெடுத்தே அழுதாலும் வரமாட் டாரா?
குலைநடுங்கக் கதறிடினும் திரும்பி டாரா?
இருண்டிருந்த தமிழகத்தில் அறிவுத் தீபம்
ஏற்றிவைத்த நற்சுடரை மீண்டு மிங்கே
ஒருமுறையாம் திருவிழியால் காண்ப தற்கே
உயர்வான வரலாறே பின்னுல் போ! போ!

புன்னகையால் இவ்வுலகை வென்று காட்டிப்
புதைமணலில் நீளுறக்கம் கொண்டு விட்ட
தென்னகத்துப் பெருந்தலைவர் அண்ணு சொன்ன
தெளிவுரைகள் சிலவற்றை எண்ணு கின்றேன்;
என்னகத்தில் அலைமோதிப் பாய்ந்து பாய்ந்தே
எழுப்புகின்ற சிந்தனையைக் கவிதை யாக்கிப்
பொன்னெழுத்தில் பொறிக்கின்றேன் என்றும் வாடாப்
பூமலராம் புதுக் கருத்தைப் போற்று வோமே!

''தொடங்குகின்ற செயற்கெல்லாம் இயற்கை வந்து
துணையாக நிற்பதில்லை; எனினும் வீணுய்த்
தடங்கலுண்டு பண்ணுவதும் உண்டு; மாற்ருர்
தாழுனைந்து கேடுசெயப் புகுதல் உண்டு;
படங்கொண்ட பாம்புக்குப் பணிந்தாற் போலே
பணிசெய்யப் பின்வாங்க லாமோ தம்பி?
அடங்காதே; மயங்காதே; எதையுந்தாங்கும்
அடலேற்றின் இதயத்தைக் கொள்வாய் தம்பி!

துடிக்கின்ற நெஞ்சத்தால் தீமை கண்டு
துள்ளுகின்ற போதிங்கே வெறிமி குந்தே
அடிக்கின்ற மனப்பான்மை தோன்று மாகில்
அத்தனையும் பாழாகிப் போகுந் தம்பி!
வடிக்கின்ற பானையிலே பொங்கும் சோறு
வழிந்துவிடக் கண்டிருப்பாய்; அதனைப் போலே
அடக்கத்தை அணியாக்கி, ஆத்தி ரத்தை
அழித்துவிடப் பகைவெல்லும் பண்பாம் தம்பி!

ஒன்ருக உண்டுறங்கி வாழ்ந்த பேரும்
ஒட்டுறவை வெட்டிக்கொண் டோட லுண்டு;
நன்ருக இருந்ததெலாம் மறந்து விட்டு
நஞ்சாகத் தீயாக மாற லுண்டு
மன்ருடி நின்ருலும், பழிப்பா ரேனும்
மன்னித்து விடுதம்பி; உறுதி மிக்க
குன்ருக நிற்குமுனை ஒருநாள் அண்டிக்
கும்பிட்டு நிற்பார்கள் காண்பாய் தம்பி!''

# பூமலராம் புதுக் கருத்து



கவிஞர் நாரா. நாச்சியப்பன்





# சந்தனப் பேழைக்குள் ஒரு சரித்திரம்

கவிஞர் ஈ.ரோம்.தமிழன்பன்

மறதிநீர் துடைக்காத எங்கள் மனங்களின்
நிறமாக நிலைத்தவனே' நிலாநாள் இரவுகளில்
எங்கள் மனைவாசல் குந்தி யிருந்தபடி
பங்கிட்டுக் கொண்டுனது பனிநினைவில் சிலிர்க்கின்றோம்!
நனவு நரம்புகளில் என்றோநீ மீட்டிய
தினவு இராகங்கள் தினம்தினம் பூத்துவரும்!
கனவின் உதடுகள் சிவந்து கனிந்திட
இனிப்பான முத்தங்கள் எங்கிருந்து கொடுக்கின்றாய்?
அடுத்தநொடி விழிப்புகளில் ஆக்ரமிக்கும் வேதனையைத்
துடைப்பதற்கோர் மணிவிரலால் எங்கிருந்து தொடுகின்றாய்?
உன்னுடைய நிழல்கூட ஒளிகளின் கருவறை
என்பதனை இன்றைய வெளிச்சங்கள் விளம்பிடும்!
ஈரப் பனிமுட்டை என்றுன்னைச் சொன்னாலும்
சூரியக் குஞ்சுகள் பொரித்ததென்ன சூட்சுமம்?
உறைந்துகரு மேகங்கள் ஊமையாய் இருந்துவரும்;
உருக்கி இடிகளின் உதடுகளை நீதிறந்தாய்!
இருள்தோல் உரித்தெடுத்தே எங்கட்குப் பகல்பழத்தின்
பெருகும் வெயில்சாறு பிழிந்து கொடுத்தாய்!
நரம்புகளில் விழிப்புகளின் நர்த்தனம்! நாங்கள்
மரணக் குளத்திலிருந்து வாழ்வுக் கரைசேர்ந்தோம்!
புதுவசந்த வாக்கியத்தை வானவில்லில் பொறித்தோம்!
மதிவிழுதில் புல்லாங் குழல்செய்து வடித்தோம்பண்!
பூபாளப் பூஞ்சிறகுதமைப் பூமியில் உதிர்த்துவிட்டு
நீபோய் அத்தமனக் கூட்டிலா நின்றுவிட்டாய்!
ஞாபகச் சாளரத்தில் நாங்கள் தினம்ஏற்றும்
தீபத்தில் சிரிப்பவனே! சிந்திசைக்கும் கடலோரம்
சந்தனப் பேழையுள்எம் சரித்திரம் இறக்கிவைத்தோம்!
சிந்தனை முகாம்களில்உன் சீவிதம் தொடர்ந்துவரும்!
எங்களின் நாக்குகளைக் கொடிகளாய் ஏற்றிவைத்து
மங்காத உன்புகழ்க்கு மணிக்கம்பம் ஆகிவிட்டோம்!
தமிழினத்தின் மூச்சைச் சரியாக மொழிபெயர்த்தால்
ஈமைக்கவர்ந்த அண்ணா! உன் எழிற்பெயரே கிடைக்கும்!

# வேளாண்மை குறித்து அண்ணா

ஜீவ நதிகள் இல்லாத தமிழ்நாட்டில் நாம் பயிர்ப் பாசனத்துக்கு நிலத்தின் அடியில் உள்ள நீரையே பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் - நிலத்தினடி நீரைப் பொறுத்தமட்டில் நாம் மிக நல்ல நிலையில் வளமுடன் இருக்கிறோம். இந்த வளத்தைப் பயன்படுத்த இறைவைப் பொறிகள்-வலுவுள்ள - உறுதி - யும்பாதுகாப்புமுள்ளவை விலை மலிவாகவுள்ளவை நிறையத் தேவை.

* * *

வேளாண்மைத் துறையை வலிவடையச் செய்வதில் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும். தளராது உழைத்து அதை வலிவுடையதாக ஆக்கிவிட்டோமானால் நம் தொழில்களுக்குத் தேவையான மூலதனத்துக்கு எவரிடமும் உதவி நாடி நிற்கத் தேவையில்லை. வேளாண்மை மக்களே உதவிட முன்வருவார்கள். தொழில் முயற்சிகளில் பங்குதாரர்களாகச் சேர்ந்து ஊக்குவிப்பார்கள்.

* * *

உரம் போட்டால் விளையாத நிலம் கூட விவசாயியின் உடலிலிருந்து விழும் வியர்வையால் விளையும். உழைப்புக்கு மதிப்பளித்து வந்தால் தான் உற்பத்தி பெருகும்.

* * *

நூற்றுக்கு நூறு பேர் படிக்க வேண்டும்—படித்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால் கிடைக்கின்ற பலன் மிக அதிகமாக இருக்கும்.

படித்தவன் உழ வேண்டும்—உழுபவன் படிக்க வேண்டும் — படிப்பான், அறிவுப் பசியைத் தீர்க்க; உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.

* * *

நெல்! எல்லாமே நெல்தான் எனினும் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு காலம் தேவைப்படுகிறது. குறுவைக்குப் போதுமான நாட்கள் கிச்சிலிச் சம்பாவுக்குக் காணாது! ஒரு வகை நெற்பயிர் நீந்தியபடி இருக்க விரும்புகிறது! வேறு சில வகைக்கு நீர் தெளித்து விட்டால்போதும்-திருப்தியடைந்து விடுகிறது. சிலவகை ஏற்றுக் கொள்ளும் உரத்தை வேறுசில வகையான நெற்பயிர் ஏற்றுக் கொள்வதில்லை. நாம் நெடுங்காலமாக இவருக்கு எந்தப் பண்டம் பிடிக்கும், அவருக்கு என்ன பானம் தேவை என்பது பற்றியே பேசி வருகிறோம். நம்மை வாழ வைக்கும் 'படைப்பு' களான இப்பயிர் வகைகளின் விருப்பு, வெறுப்பு பற்றி அறியமுனைந்தோமில்லை. ஏன்? வயலருகே, சென்றவர்கள் நம்மில் அநேகர் அல்ல! செல்லும் சிலரும் 'அறுவடை' காணச் செல்லும் ஆர்வத்தை மற்ற போது காட்டுவதும் இல்லை.

* * *

தமிழகத்தின் விவசாயிகள் முற்போக்கானவர்கள். எத்தகைய நவீன விவசாய முறையானாலும் அவற்றை ஏற்றுச் செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை. 'மாறிய நிலைக்கேற்ப வசதிகளைக் கொடுத்திடுக' என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள். நாம் முன்னேற்றப் பாதையில் செல்கிறோம். பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் நீர் தாதுச்சத்துக் குறைந்தது என்று விவசாயிகளிடத்தில் நிலவுகின்ற அவநம்பிக்கையைப் போக்க வேண்டும். ஒரு காலத்தில் இரசாயன உரத்தைப் பற்றிக்கூட இப்படித்தான் கருதப் பட்டது; இன்று அந்த நிலைமையில்லை; கலப்பு உரமா, அதை நாங்களே தயாரித்துக் கொள்கிறோம். தேவையானதை மட்டும் எங்களுக்குக் கொடுத்துதவுங்கள்' என்ற அளவுக்கு நமது விவசாயிகளிடம் உரத்தைப் பற்றிய அறிவு வளர்ந்துள்ளது.

* * *

நெடுங்காலமாக அமெரிக்காவில் குதிரைகளை வைத்து உழவுத் தொழிலை நடத்தி வந்தார்கள் அதுபோல பிரிட்டனிலும் குதிரைகள் விவசாயத்திற்குப் பயன்பட்டன. அரேபியாவில் ஒட்டகத்தை விவசாயத்திற்குப் பயன் படுத்திவந்தார்கள். ஆனால் அங்கெல்லாம் இன்று இயந்திர முறையில் உழவுத் தொழில் செய்யப் படுகிறது. ஆகவே நமது நாட்டில் ஒவ்வொரு விவசாயியும் டிராக்டர் போன்றவை இல்லாவிட்டாலும் இயந்திரக் கலப்பைகளை-விசை ஏர்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி முன்னேற வேண்டும்.









# "அண்ணா" ஓர் இலக்கியப் படிவம்

''அண்ணா'' என்பதோர் அருஞ்சுவைச் சொல்லாம்:
அண்ணம் என்பது மேல்வாய் ஆகும்;
'அருஞ்சுவை' என்பதோ அதற்கொரு பொருளாம்;
அண்ணத் துடனே நாவது பொருந்தின்
''அண்ணா'' பிறக்கும்; அஃதொரு சுவைச்சொல்.

''அண்ணா'' என்றே எந்நாச் சொலினும்
அந்நா அமுதச் செந்நா ஆகும்.

சுவைச்சொல் ஒன்றோ? சுரக்கும் ஒளியால்
அவர்தம் தோற்றம் அண்டினோர்ப் பிணிக்கும்
கவர்ச்சி இலக்கியம்; காண்பாம் அதனை:

நெற்றியோ அறிவு நடம்பயில் தெற்றி;
ஒற்றிய புருவம் ஓங்கருள் கருவாம்;
கண்ணொரு கலித்தொகை; கண்ணிமை கானல்வரி;
பார்வையோ ஆயிரம் பருவப்பொருள் பேசும்:
ஆர்வப் பார்வை ''அருந்தம்பீ'' என்னும்;
அரும்புப் பார்வை அரசியல் முத்திரை;
குறும்புப் பார்வையில் குற்றாலம் புரியும்;
அகலப் பார்வையில் பகையும் நகையாம்;
பகுத்தறி வொளியாம் பரவிடும் பார்வை;
ஓரப் பார்வை ஒருகோடி பொன்பெறும்;
ஈரப் பார்வைக் கில்லை உவமை;
கண்ணில் கவர்ச்சிக் (காந்தம்) கல்லை வைத்து
மண்ணில் ஈன்றனர் மதிப்புடை அன்னையார்.
பார்வையைத் திருப்பிப் பக்கம் பார்ப்பம்:





கன்னமோர் அகப்பொருள்; கனைப்போர் புறப்பொருள்;
மூக்கொரு முல்லைப் பாட்டாம்; அதனில்
தேக்கிய பொடியோ மகரந் தத்தூள்;
தேனும் உண்டாம், யாமது கண்டிலம்.
வாயோர் பாயிரம்: இதழ்நூல் ஆயிரம்;
புகையிலை உண்டாம், புகவிலை புன்சொல்
பகையிலை நாவில், பாகிலை உண்டாம்
நாவொரு நிகண்டு; நாடியோ தமிழாம்;
ஊறும் எச்சிலே உணர்தமிழ் அமுதம்;
ஊறிடும் சுவைக்கோ உலகமே உவமை.

கழுத்தோ குறுந்தொகை; கனிக்குலை தொண்டை;
எழுத்தோ வைரம்; எழுங்குரல் வெண்கலம்;
சொல்லோ சுனையாம், வெல்வதே தொழிலாம்.

தோளிரு கோடியும் தோழர்பல் கோடி
வாளுடை மறவர் வாழ்விடம்; மார்போ
''எதையும் தாங்கும் இதய'' அரங்கம்;
நெஞ்சம் தமிழ்க்குப் பஞ்சணையாகும்.
கையோ காப்பியக் காவிரி; சட்டைப்
பையோ காசிலாப் பஞ்சறை; சட்டையிற்
பொத்தான் இல்லை; பேசிடில் வாயைப்
பொத்தான் இலனே, பொருந்தான் இலனே.
தொந்தியோ சிறிது; தொந்தமோ பெரிது.
கால்கள் தன்மானக் கால்கோள் ஆகும்.
உருவம் குறளாம்; உயரம் நாலடி;
பருவம் என்றும் எவர்க்கும் அண்ணன்.
கவரும் இவற்றால் கவர்ச்சி இலக்கியம்.
எவரும் விரும்பும் இயல்பில் நிறைந்த
அறிஞர் பெருந்தகை அண்ணா தம்மைப்
பரிவுடை இலக்கியப் படிவமாய்ப்
பதித்துப் படித்துப் பணிந்தமை வோமே!

கவிஞர்
கோவை. இளஞ்சேரன்



உங்கள்
எதிர்காலத்திற்கு
ஓர்
நற்செய்தி

TNSC
BANK

எப்பொழுதும் இல்லாத
அதிகப்படியான வட்டி
இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு
கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

| ரூ 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதங்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001

தந்தி அர்பாங்க் தொலைபேசி: 20367 டெலக்ஸ் 7225

என்.எல். ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர். குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர் ஆர். கனகசபை, தலைவர்.


# கேளுங்கள் கொடுக்கப்படும்?

ஆர். எம்.

பொது மக்களின் குறைகளை அறிந்து அவைகளைத் தீர்த்திடுவதற்காக மனுநீதிச் சோழன், தன் அரண்மனையில் ஆராய்ச்சி மணி அமைத்திருந்ததைப் போல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் குறைகளையும், முறையீடுகளையும், மனுக்களையும் பெற்று உடன் குறைகளைக் களைந்து, நிறை செய்வதற்காக ஒரு சிறப்புப் பிரிவையே தன் அலுவலகத்தில் ஏற்படுத்தியுள்ளார்.

இப் பிரிவு, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தின் கீழ்த் தளத்தில் செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் பக்கத்தில் 9—8—74 முதல் செயலாற்றி வருகிறது.

முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்துக் குறைகளையும், முறையீடுகளையும் கூற முடியவில்லையே என்று வருந்துகின்றவர்கள், அவைகளை மனு வடிவில் எழுதி, சிறப்புப் பிரிவின் தனி அலுவலர் அவர்களிடம் அலுவலக நேரங்களில் கொடுக்கலாம். அல்லது தனி அலுவலர் அவர்களுக்கு மனுவை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம்.

மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டிய எல்லாப் பிரச்சினைகளையும் சிறப்புப் பிரிவில் சேர்ப்பதன் மூலம், அன்றுடம் அவைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுத் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, 'தமிழரசு' அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததையெல்லாம் மனு வடிவில் வெள்ளைத் தாளில் எழுதிப் பொது மக்களிடம் கையொப்பம் வாங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, சிறப்புப் பிரிவின் தனி அலுவலர் மூலமாக அனுப்பிட முயற்சி செய்யுங்கள். உங்கள் மனுவைப் பின்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனி அலுவலர்,
முதலமைச்சர் அலுவலகம்
(சிறப்புப் பிரிவு),
தலைமைச் செயலகம்,
சென்னை—600009.

* * *

**வினா:** *1—7—74 'தமிழரசு' இதழைப் பார்த்தேன். தங்களுடைய திட்டங்கள் போற்றுதற்கு உரியவை.*

*செந்துறை கிராமத்தில் மாடுகளை அடைத்து வைக்கும் ஒரு பவுண்டு முன்பு இருந்தது. அதைப் புதுப்பிக்கும்படிப் பழைய ஆட்சியினரிடம் கேட்டோம். அவர்கள் பவுண்டு இருந்ததற்குச் சான்று கணக்கில் இல்லை என்று கூறி ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்கள். அண்ணு அவர்களின் ஆட்சியில் தற்காலிகமாக பவுண்டு இயங்கியது. தற்பொழுது அந்த இடத்தை வேறு காரியத்திற்குப் பயன்படுத்தி விட்டார்கள். எனவே, ஏழை பங்காளன் அரசாகிய இன்றைய அரசு, உடனடி கவனம் செலுத்தி முடித்துக் கொடுக்க வேண்டுமென கிராம விவசாயிகளின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன். எவ்வளவோ முயன்றும் முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இது பற்றிக் கூற இயலவில்லை! பவுண்டு அமைப்பதில் இலாபம், நட்டம் பாராமல் உடனடியாகச் செந்துறை கிராமத்தில் ஒரு பவுண்டைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் தமிழக முதல்வரைக் கேட்டுக் கொள்வதோடு, இதனை 'தமிழரசு' இதழில் பிரசுரிக்கும்படியும் கேட்டுக் கொள்கின்றேன்.*

*(கடிதம் மிகவும் பெரியதாக இருப்பதால், முழுவதும் வெளியிடப்படவில்லை).*

*—எஸ். கே. ஜான் ஞானவரம்,*

*செந்துறை,*
*திருச்சி மாவட்டம்.*

**விடை:** செந்துறை கிராமத்தில் கட்டுப்பாடின்றி விடப்படும் மாடுகளை அடைத்து வைக்க ஒரு பவுண்டு கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டு, 'தமிழரசு' அலுவலகத்திற்குக் கடிதம் எழுதியுள்ளீர்கள். இது முறையன்று!





**வினா:** *அரசினர் உத்தியோகங்களில் பணி புரிகின்றவர்களைத் தவிர மற்றவர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் (மாதம் 10 ரூபாய்) பற்றிய தகவல்களை எங்குப் பெறுவது? எப்படிக் கட்டுவது? என்பது பற்றித் தெரிவிக்க வேண்டுகிறேன்.*

*—எஸ். ராமசாமி,*
*42, கீழ ராஜ வீதி,*
*புதுக்கோட்டை.*

**விடை:** இத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு, சமூகப் பொதுப் பாதுகாப்புத் திட்டம் (Social Security Scheme) என்று பெயர். விரைவில் இத் திட்டம் அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் கூறியுள்ளார். திட்டம் செயலுக்கு வரும் நிலை அடைந்தவுடன், அது பற்றிய முழு விவரமும் 'தமிழரசு' இதழில் வெளியிடப்படும்.



**வினா**: அன்புள்ள ஐயா, வணக்கம், 'தமிழரசு' இதழ் 16—7—74 நாளிட்ட வெளியீட்டில் பக்கம் 21-ல் எலிகளைப் பற்றிய கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. கட்டுரை இறுதியில் எலிகளைக் கொல்ல வயல் வெளிகளில் 'அலுமினியம் பாஸ்பைடு' என்னும் மருந்தைப் பயன்படுத்தலாம் எனக் கண்டு உள்ளது. சரியான மருந்து 'துத்தநாகப் பாஸ்பைடு' (Zinc Phosphide). மொழி பெயர்ப்பில் இச் சிறு தவறு நிகழ்ந்துள்ளது என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். தயவு செய்து இதற்கான திருத்தத்தை வெளியிடும்படி வேண்டுகின்றேன். நன்றி.

—தி. வே. சிங்காரவேலு,
பி.எஸ்சி. (விவ.)
(மாவட்ட விவசாய அலுவலர்),
விவசாய விரிவுரையாளர்,
இளைஞர் அணி பயிற்சி நிலையம்,
பவானி சாகர் (அஞ்சல்),
கோவை மாவட்டம்.

**விடை**: 'தமிழரசு' இதழில் வெளியிடப்பட்டுள்ள தகவல் தவறு என்ற எண்ணத்திலும், "Zinc phosphide" என்பதற்குத் "துத்தநாகப் பாஸ்பைடு" என்று மொழி பெயர்ப்பதற்குப் பதில் "அலுமினியம் பாஸ்பைடு" என்று தவறுதலாக மொழி பெயர்க்கப்பட்டு விட்டது என்ற எண்ணத்திலும் தாங்கள் திருத்தம் வெளியிடும்படிக் கேட்டுள்ளீர்கள். 'தமிழரசு' வெளியிட்ட தகவல் சரியானதே என்பதையும், திருத்தம் வெளியிட வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதற்கான விளக்கம் இதோ!

எலிகளைக் கொல்லுவதற்கு "Zinc phosphide" என்ற மருந்து மட்டும்தான் உள்ளது என்று தாங்கள் எண்ணியுள்ளீர்கள்! அதனால் தான், மொழி பெயர்ப்பில் நாங்கள் தவறு செய்து விட்டோம் என்று எண்ணித் திருத்தம் வெளியிடும்படி கேட்டுள்ளீர்கள்!

'வார்பரின்' (Warfarin), 'பேரியம் கார்பனேட்' (Barium Carbonate), 'அலுமினியம் பாஸ்பைடு' (Aluminium phosphide) போன்ற மருந்துகளும் எலிகளைக் கொல்லப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அலுமினியம் பாஸ்பைடு 3 கிராம் வில்லைகளாக (Tablets) கிடைக்கிறது. இது 'பாஸ்டாக்சின்' (Phostoxin) என்றும், 'பாஸ்டாக்ஸ்' (Phostox) என்ற வியாபாரப் பெயரிலும் அண்மைக் காலத்தில் விற்பனைக்கு வந்துள்ளது. இவ் வில்லைகளை, எலிவளைகளில் திணித்து, வளையின் வாயை மூடி விட்டால், அவ்வில்லைகள் காற்றிலுள்ள ஈரத்தின் சேர்க்கையால் "Hydrogen phosphide" என்ற நச்சு வாயுவை வெளியிடுகின்றன. இவ் வாயுவினால் எலிகள் இறந்து விடுகின்றன.

"அலுமினியம் பாஸ்பைடு" வில்லைகள் எலிகளைக் கொல்வதற்கு மட்டுமல்ல, சேமித்து வைக்கப்பட்டுள்ள தானியங்களைத் தாக்கும் எல்லாப் பூச்சிகளையும் கொல்ல வல்ல புகை மருந்தாகவும் (Fumigent) பயன்படுகிறது.

எனவே, எலிகளைக் கொல்ல 'அலுமினியம் பாஸ்பைடு' மருந்தைப் பயன்படுத்தலாம் என்று 16—7—74 நாளிட்ட 'தமிழரசு' இதழில் 21-ம் பக்கத்தில் வெளியிட்டுள்ள தகவல் சரியானதே என்று தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : 'தமிழரசு' இதழில் வெளியிடப்படும் வேளாண்மைக் கட்டுரைகள் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலேயே எழுதப்பட்டு வெளியிடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.






**வினா**: ஆண்டு முழுவதும் பெருமளவில் வாழை பயிரிடப்படும் இடங்களில் எங்கள் பகுதியும் ஒன்று. ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான வாழைகள் வாடல் நோயினால் நாசமாகி விடுகின்றன. இதற்கு என்ன செய்யலாம்?

தற்பொழுது புதிதாக வெளி வந்திருக்கும் 'க்ருஷி ஆயில்' வாழை வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் என்கிறார்கள். தயவு செய்து பதில் தெரிவிக்கவும்.

எனது முதல் மாதக் கேள்விக்குத் தாங்கள் இன்னும் பதில் கூறவில்லை. தயவுசெய்து அதற்கும் விடை கூறவும்.

—மு. முகமது அலி,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
பணகுடி (அஞ்சல்),
நெல்லை மாவட்டம்.

**விடை**: மொந்தன், ரஸ்தாளி, விருப்பாட்சி ஆகிய வாழை இரகங்கள் வாடல் நோயினால் பெருமளவில் பாதிக்கப்படும். தொடர்ந்து வாடல் நோய் தோன்றும் இடங்களில் கூடுமான வரை இந்த இரகங்களைப் பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். இது இயலாதென்றால், ரஸ்தாளி, மொந்தன், விருப்பாட்சி ஆகிய இரக வாழைக் கன்றுகளை நடுவதற்கு முன் 0.1 சத 'செரசான்' கரைசலில் '(ஒரு லிட்டர் நீரில் ஒரு கிராம் கரையும் செரசான் (Wet cereson) மருந்தைக் கரைக்க வேண்டும். 5 நிமிட நேரம் முக்கியெடுத்து நடவேண்டும்.



வாடல் நோயினால் தாக்கப்பட்ட மரத்தைச் சுற்றி 0.1 சத செரசான் கரைசலை ஊற்றி மண்ணை நனைப்பதால், இந்நோய் மற்ற வாழை மரங்களுக்குப் பரவுவதைத் தடுக்கலாம்.

வாடல் நோயினால் மிகவும் பாதிக்கப்பட்ட மரத்தைக் கிழங்குடன் தோண்டியெடுத்து அழித்து விடுதலும் அவசியம் ஆகும்.

வாடல் நோயினால் பாதிக்கப்பட்ட வாழை மரத்தினை அகற்றிய பிறகு, அந்த இடத்தில் உள்ள மண்ணுடன் சுண்ணாம்பைக் கொட்டிக்கலப்பதும் இன்றியமையாததாகும். இந்நோயினால் தாக்கப்பட்ட வாழையை அகற்றிட உபயோகித்த கருவிகளை மற்ற இடங்களில் உபயோகிப்பதற்கு முன்பு, நன்றாகத் தூய்மைப் படுத்த வேண்டும்.

வாடல் நோய் தாக்காது இருக்க, பின்கண்ட வாழை ரகங்களைப் பயிரிடுவது சிறந்தது:

1. 'லகாடன்'
2. 'பூவன்'
3. 'குள்ள வாழை'
4. எட்டடி வாழை'

மேற்கூறியவைகளே வேளாண்மைத் துறையினராலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினராலும் வாடல் நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் பரிந்துரைக்கப்படும் முறைகளாகும்.

'க்ருஷி ஆயில்' என்பது தனிப்பட்ட கம்பெனியாரின் மருந்தாக இருக்கக் கூடும். தாங்கள் விரும்பினால் இதை வாங்கிப் பயன்படுத்தலாம். இம் மருந்து வேளாண்மைத் துறையால் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, இதுபற்றி எங்கள் கருத்தைத் தெரிவிக்க இயலாது.

தாங்கள் முன்பு அனுப்பியுள்ளதாகக் கூறும் கேள்விகள், எங்களிடம் வந்து சேர்ந்ததாகத் தெரியவில்லை. எனவே, மீண்டும் அக்கேள்விகளை அனுப்பினால் விடை அளிக்கின்றோம்.



**வினா**: செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் மானாவாரியாக விதைப்பதற்கு ஏற்ற குறுகிய கால உளுந்து எது? ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் தரும்?

—வி. முத்துவேல்,
ஜெயம்கொண்டம்,
திருச்சி மாவட்டம்.



**விடை**: 'கோ. 2 உளுந்து' ரகமே செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் மானாவாரியாக விதைப்பதற்கு ஏற்ற சிறந்த ரகமாகும். இதன் வயது 65 முதல் 70 நாட்களே. இந்த ரகம் மானாவாரியில் ஏக்கருக்கு 600 முதல் 700 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது. இந்த மகசூல் 100 நாட்கள் வயதுடைய 'கோ. 1 உளுந்து' ரகத்தின் மகசூலைவிட 200 கிலோ அதிகமாகும்.




**வினா**: சென்னை நகரில் காய்கறி மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்படுவதாகவும், தரமான விதைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் நான் பணியாற்றும் அலுவலகத்தில் கேள்விப்பட்டேன். விதைகள் எங்கு வாங்குவது என்ற விவரத்தை அறிய முடியவில்லை. இதுபற்றி விளக்கம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். மல்லிகா,
பெரிய தெரு,
திருவல்லிக்கேணி.
சென்னை—600005

**விடை**: சென்னை நகரின் வீட்டுத் தோட்டங்களில் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்காகவே, 'காய்கறி மேம்பாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. இத்திடடத்தின் கீழ் தரமான காய்கறி விதைகள், காய்கறி நாற்றுகள், பழச் செடிகள், பூச்செடிகள், தென்னங் கன்றுகள், பூச்சி பூஞ்சாள மருந்துகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

இத்திட்டம், ஒரு துணை வேளாண்மை இயக்குநர் (காய்கறி) அவர்களின் பொறுப்பில் செயல்படுத்தப்படுகிறது. ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலர் சென்னை நகரில் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்.

வீட்டுத் தோட்டம் அமைப்பவர்களுக்கு உதவி செய்ய, துணை வேளாண்மை அலுவலர்களும் (Deputy Agricultural Officers), விளக்கிக் காட்டும் கண்காணிகளும் (Demonstration Maistries) உள்ளனர்.

சென்னை நகரில் வீட்டுத் தோட்டம் அமைக்க விரும்புகின்றவர்கள் இலவசத் தொழில் நுட்ப ஆலோசனை பெற பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

தனித் துணை வேளாண்மை இயக்குநர் (காய்கறி),
40, சேமியர்ஸ் ரோடு,
சென்னை—600018.

தொலைபேசியில் தொடர்பு கொள்ள விரும்புகின்றவர்கள், 443561 என்ற தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

காய்கறி விதைகள், பழச் செடிகள், மருந்துகள், தென்னங் கன்றுகள், நாற்றுகள், ஆகியவற்றைச் சென்னை நகரில் பின்கண்ட இடங்களில் உள்ள துணை வேளாண்மை அலுவலர் (காய்கறி) அலுவலகத்தில் வாங்கிக் கொள்ளலாம்.

(1) 5/13, எல்டாம்ஸ் ரோடு சென்னை—600018.

(2) 40, சேமியர்ஸ் ரோடு, சென்னை—600018.

(3) 15-பி, பாபு முதலிதெரு, சென்னை—600021.

(4) 19, ரெங்கநாதன் அவன்யூ, சில்வான் லாட்ஜ் காலனி, வேப்பேரி, சென்னை—600010.

(5) 3, ஃபிஞட்சி தெரு, பெரம்பூர், சென்னை-600011.

(6) 1-பி, கங்கை அம்மன் காலனி, கோடம்பாக்கம், சென்னை—600026.

(7) 4-பி, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சென்னை-600034

(8) 26, ஏழாவது குறுக்குத் தெரு, ஷெனாய் நகர், சென்னை—600030.

(9) 6-எ, காமராஜ் அவன்யூ, அடையார், சென்னை-600020.

(10) 99, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை——600018.

**வினா** : நிலக்கடலைக்குப் போடும் நுண்ணுயிர் பாக்கட்டில் திகதிகள் (தேதி) குறிப்பிட்டு, அந்த திகதிகளுக்கு முன் அவைகளைப் பாவிக்கும்படி அச்சிட்டிருக்கிறார்கள். அவ்வாறு குறிப்பிட்டிருக்கும் திகதியின் பயன் என்ன? குறிப்பிட்ட திகதிக்குப் பின் அவைகளை பாவிக்கக் கூடாதா?

விவசாயமே தெரியாதவர் புதிதாக விவசாயத்தில் நவீன முறைகளை மேற்கொள்ளவும், முக்கியமாக நெல், சோளம், கம்பு, நிலக்கடலை போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யவும் முறைகளை விவரமாக, புத்தக வடிவில் தெரிந்து கொள்ள யாரை அணுக வேண்டும்? அந்தப் புத்தகங்கள் ஆங்கிலத்தில் கிடைத்தால் மிக நல்லது. தமிழில் கிடைத்தால் பரவாயில்லை. எந்தப் புத்தகக் கடையில் கிடைக்கும். தயவுசெய்து விவசாய இலாகாவை அணுகி விவரம் அறியவும் என்று சொல்லி விடாதீர்கள்.

திருச்சி, முசிறி, விவசாய அலுவலகங்களில் விசாரித்ததில் இம்மாதிரி புத்தகங்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள்.

—செல்வி வி.எம். உமா,
53, மேற்குத் தெரு,
தாத்தையங்கார் பேட்டை,
திருச்சி மாவட்டம்.



**விடை** : நிலக்கடலைக்குப் போடும் நுண்ணுயிர் பாக்கட்டில் குறிப்பிட்டுள்ள நாளுக்குப் பிறகு அவைகளைப் பயன்படுத்தினால் பயன் இல்லை! ஏனெனில் அந்நாளுக்குப் பிறகு நுண்ணுயிர்கள் செயலிழந்து விடும். அதனால் எதிர்பார்க்கும் பலன் கிட்டாததோடு, வேண்டாத விளைவுகளும் சில சமயம் ஏற்படக் கூடும். எனவே, நுண்ணுயிர்களை 'After the date of Expiry' பயன்படுத்தக்கூடாது.

வேளாண்மை பற்றி தெரியாதவர், நவீன வேளாண்மை முறைகளை மேற்கொள்வதற்குப் புத்தகங்களைப் படித்தால் மட்டும் போதாது! தகுந்த பயிற்சியும் பெற வேண்டும்! நீங்கள் எதிர்பார்க்கும் வகையான ஆங்கிலப் புத்தகங்கள் எந்தப் புத்தகக் கடையிலும் கிடைக்காது. பின்கண்ட முகவரிக்கு எழுதினால் கிடைக்கக் கூடும்.

The Business Manager,
Indian Council of Agricultural Research,
Krishi Bhavan,
New Delhi-1.

தாங்கள் குறிப்பிட்டுள்ள பயிர்களைப் பற்றிய நவீன சாகுபடி முறைகள் அடங்கிய சிறு சிறு வெளியீடுகளைப் பின் கண்ட முகவரியில் பெறலாம்:

உழவர் பயிற்சி நிலையம்,
இலால்குடி (அஞ்சல்),
திருச்சி மாவட்டம்.



இப் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து, நவீன சாகுபடி முறை பற்றி நேரடிப் பயிற்சி பெறுவதே சிறந்தது.

**வினா** : தற்பொழுது தமிழ் நாடு அரசால் தொடங்கப்பட்டு நடைமுறையில் உள்ள குடும்ப நலத் திட்டத்தில் உறுப்பினராக உள்ளவர் இயற்கையாகவோ அல்லது எதிர்பாராத விதமாகவோ மரணம் அடைந்தால் மட்டுமே ரூபாய் 10,000 கொடுக்கப்படும் என்கிறேன் நான். ஆனால், "தற்கொலை மற்றும் கொலை போன்ற காரணங்களால் இறப்பவர்களுக்கும் இத்திட்டத்தால் பயன் உண்டு" எனச் சொல்கிறார் என் நண்பர். இங்கு விசாரித்ததில் சரியான உண்மை தெரியவில்லை. இதற்காக ரூபாய் 10 பந்தயம் கட்டியுள்ளோம். தயவு செய்து சரியான தகவலைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

—ஆர். சுப்ரமணியம்,
தமிழ்நாடு மின்சாரவாரியம்,
ஆணியாபுரம் (அஞ்சல்),
நாமக்கல் வட்டம்,
சேலம் மாவட்டம்.

**விடை** : நீங்கள் தோற்று விட்டீர்கள்! பந்தயம் கட்டியபடி உங்கள் நண்பருக்கு 10 ரூபாய் கொடுத்து விடுங்கள்!

குடும்ப நன்மைத் திட்டத்தின் (Family Benefit Scheme)கீழ் பணம் கட்டி வருகின்றவர்கள், தற்கொலை மற்றும் கொலை போன்ற காரணங்களால் இறந்தாலும் ரூபாய் 10,000 கொடுக்கப்படும்! ஆனால், ரூபாய் 10,000 பெறுவதற்காகவே, தற்கொலை செய்து கொண்டிருந்தால், அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 10,000 கிடைக்காது! வேறு காரணங்களுக்காகத் தற்கொலை செய்து கொண்டிருந்தால் கிடைக்கும். தற்கொலை செய்து கொண்ட காரணத்தைத் தகுந்த விசாரணைக்குப் பின், தமிழ்நாடு அரசே முடிவு செய்யும். 10,000 ரூபாய்க்குத் தற்கொலை செய்து கொள்ளவில்லை, வேறு காரணங்களினாலேயே தற்கொலை செய்து கொண்டார் என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்தால், தற்கொலை செய்து கொண்டவரின் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 கிடைக்கும். இதுபற்றி முன்பே மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்து உள்ளார். * * * *







# தமிழ்நாட்டின் தலைசிறந்த வீரிய ஒட்டுப் பருத்தி

சோளம், கம்பு, மக்காச் சோளம் முதலான பயிர்களில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒட்டு இரகங்கள் வியக்கத்தக்க அளவில் அதிக மகசூலைக் கொடுத்து வருகின்றன என்பது உழவர் பெருமக்கள் அனைவரும் அறிந்ததே. பருத்தி இதற்கு விதிவிலக்கல்ல! பருத்தியிலும் இரண்டு வீரிய ஒட்டு இரகங்கள் தற்போது உள்ளன!

'ஹைபிரிட் 4' என்ற வீரிய ஒட்டுப்பருத்தி குஜராத், மகாராட்டிரம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. 'வரலட்சுமி' என்ற வீரிய ஒட்டுப் பருத்தி கர்நாடகம், மகாராட்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டிலும் இதன் சாகுபடி பரவி வருகிறது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், 'ஹைபிரிட் 4', 'வரலட்சுமி' ஆகிய இரு வீரிய ஒட்டுப் பருத்தி, மற்றும் தமிழ்நாட்டில் தற்போது பயிரிடப்பட்டு வரும் இதரப் பருத்தி இரகங்களைக் காட்டிலும் சிறந்ததொரு வீரிய ஒட்டுப்பருத்தியைக் கண்டுபிடித்து சி.பி.எஸ். 156' என்ற பெயரில் 7.1.74 அன்று வெளியிட்டுள்ளது. இப்புதிய இரகம் 'சுரப்பியில்லாத அக்கேலா' என்ற அமெரிக்கப் பருத்தியைத் தாயாகவும், குறுகிய இலைகளுள்ள 1085-6 என்ற 'பாாப்டன்ஸ்' பருத்தி இரகத்தைத் தந்தையாகவும் கொண்டு, இனச்சேர்க்கைச் செய்து உருவாக்கப்பட்டதாகும்!

நம் நாட்டில், தற்போது சாகுபடியிலிருந்து வரும் 'ஹைபிரிட் 4', 'வரலட்சுமி' ஆகிய இரு வீரியஒட்டுப் பருத்தி இரகங்கள், 'எம்.சி.யு. 5', 'சுஜாதா' முதலிய இதரப் பருத்தி இரகங்கள் ஆகிய எல்லாவற்றையும் காட்டிலும் 'சி.பி.எஸ். 156' பலவகைகளிலும் சிறந்தது. சிறப்பாக அதிக மகசூல் தருவதும், தரமான பஞ்சும் (Lint) கொடுக்கவல்லது. தமிழ்நாட்டின் சூழ்நிலையில், 'ஹைபிரிட் 4' பருத்தியைக் காட்டிலும் சுமார் இரண்டு மடங்கு மகசூலும், வரலட்சுமியைக் காட்டிலும் ஏக்கருக்கு ஒரு குவிண்டால் அதிக மகசூலும் 'சி.பி. எஸ். 156' கொடுக்கின்றது!

'சி.பி.எஸ். 156' இரகம் கோவை மாவட்டத்தில் ஏக்கருக்கு 15 குவிண்டால் வரை மகசூல் கொடுத்துள்ளது! 'வரலட்சுமி'யைக் காட்டிலும் மூன்று சதவிகிதம் அதிக அரைவைத்திறன் கொண்டது. மற்ற இரண்டு வீரிய ஒட்டுப் பருத்திகளைக் காட்டிலும் இதன் இழை நீளம் மிக அதிகம்! 36 மில்லி மீட்டர் (1.41 அங்குலம்) இழைநீளம் உடைய இந்த அதி நீண்ட இழையுடைய இரகமாகும் (Extra long staple). 'ஹைபிரிட் 4', 'வரலட்சுமி' ஆகியவற்றைக் காட்டிலும் இரண்டு மடங்கு நூற்கும் திறன் கொண்டது.

நூல் நூற்கும் திறனில், 'ஹைபிரிட் 4' 50-ஆம் நம்பரும், 'வரலட்சுமி' 60-ம் நம்பரும், 'எம்.சி.யு. 5', 70-ஆம் நம்பரும், 'சுஜாதா' 90-ஆம் நம்பரும் நூற்கின்றன. ஆனால் 'சி.பி.எஸ். 156' வலுவான 120-ஆம் நம்பர் நூல் நூற்க வல்லது. பஞ்சு மிகவும் மென்மையானது. இது அதி நீண்ட இழையுள்ள எகிப்தியப் பஞ்சிற்கு (Extra long staple super fine cotton) ஈடானது!

'சி.பி.எஸ். 156' வீரிய ஒட்டுப் பருத்தியைப் பயிரிடுவதால் ஏக்கருக்குச் சராசரி ரூபாய் 7,500 நிகர இலாபமாகக் கிடைக்கின்றது என்றும், கோவை மாவட்டத்தில் சில உழவர் பெருமக்கள் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 12,000 அளவில் நிகர இலாபம் அடைந்துள்ளனர் என்றும், இவ்விதையை வெளியிட்ட, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கோ. அரங்கசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இப்புதிய ஒட்டு இரகம் தண்டுப் புழுவையும், வாடல் நோயையும் சமாளிக்கும் திறன் கொண்டது. ஆகவே, இப்பருத்தியை எல்லா இடங்களிலுமே பயிரிடலாம். இதன் வயது 170 நாட்கள்தான்!

நமது நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய, ஆண்டுதோறும் வெளிநாடுகளிலிருந்து 2 முதல் 3 இலட்சம் பேல்கள் அதி நீண்டஇழைப் பஞ்சு இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்காக 100 கோடி முதல் 150 கோடி ரூபாய் வரை அந்நியச் செலாவணி விரயமாகிறது! 'சி.பி.எஸ். 156' வீரிய ஒட்டுப் பருத்தியை ஒரு இலட்சம் ஏக்கரில் ஆண்டுதோறும் பயிரிட்டால், அதி நீண்ட இழைப் பஞ்சு உற்பத்தியைப் பொறுத்தமட்டில், நம்நாடு தன்னிறைவு பெறுவதோடு, மேற்கூறிய அந்நியச் செலாவணியும் மிஞ்சும்!

இப்பருத்தியை விளைவிப்பதனால் நம் நாட்டிற்கு ஆண்டு தோறும் சுமார் 75 கோடி ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும். இதனால், பருத்தி பயிரிடும் உழவர் பெருமக்கள், பஞ்சாலைகள், மற்றும் பருத்தியில் தொடர்புள்ள பலரும் பயனடைவதுடன், நாட்டின் வளமும் பெருகும்!

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்



# ஏழைகளின் வெள்ளி!

அலுமினியக் கட்டிகள் உருக்கப்படுகின்றன.

அலுமினியத்தைத் தகடாக்கும் இயந்திரம்.

ஏழைக்கேற்ற எள்ளுருண்டை-இது பழமொழி என்றால், ஏழைக்கேற்ற அலுமினியம்-இதைப் புதுமொழியாகக் கொள்ளலாம்!

அலுமினியம் இன்று ஏழை எளிய மக்கள் இல்லங்களில் பெருமளவில் காட்சியளிப்பதைப் பார்க்கிறோம்.

செம்பு, பித்தளை, எவர்சில்வர் போன்ற உலோகப் பாத்திரங்களைவிட அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் கிடைப்பதே இதற்குக் காரணம்.

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் பாக்சைட் மூலம் அலுமினியக் கட்டிகளைத் தயாரிக்கிறது 'மால்கோ'. இந்த அலுமினியக் கட்டிதான் பல்வேறு உருவில் பாத்திரங்களாகத் தயாரிக்கப்படுகின்றன.

அன்றாடம் நாம் பயன்படுத்தும் பொருள்களில் பாத்திரங்களுக்கும் முக்கிய இடமுண்டு. அவற்றுள் அலுமினியப் பாத்திரங்களும் பலவாகும். இந்தப் பாத்திரங்கள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன?

சென்னை திருவொற்றியூரிலுள்ள 'சன் பீம் மெட்டல் கம்பெனி'க்குள் நுழைகிறோம்.

இயந்திரங்களோடு பணியாளர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றனர்.

அதோ! ஒரு பெரிய வாணலியில் கொதித்துக் கொண்டிருக்கிறதே அது என்ன?

அலுமினியக் குழம்புதான் அது! புதிய அலுமினியக் கட்டிகள், பழைய அலுமினியப் பாத்திரங்கள் ஆகியவை பெரிய அடுப்பின் மூலம் இங்கே உருக்கப்படுகின்றன. இக்குழம்பு அச்சுருக்களில் (Moulds) ஊற்றப்பட்டுப் பாளங்களாக்கப்படுகின்றன.

பிறகு இந்தப் பாளம் ஒரு இயந்திரத்தின் (Rolling Machine) உதவியால் தகடாக்கப்படுகிறது.

இந்தத் தகடுகள் துண்டாக்கப்பட்டு ஒரு அடுப்பில் அடுக்கி வைக்கப்பட்டு நன்றாகக் காய்ச்சப்படுகின்றன. இதன் விளைவால் கடினமான தகடுகள் மிருதுவாகின்றன. மறுபடியும் இத்தகடு ஒரு இயந்திரத்தில் கன அளவுக்குத் தக்கவாறு நீட்டப்பட்டு மீண்டும் காய்ச்சப்படுகின்றது. பிறகு இவை வட்ட வடிவத் தகடுகளாக வெட்டப்படுகின்றன. இந்த வட்டத் தகடுகள் பாத்திரம் செய்யும் பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. அங்கே உள்ள ஒரு பெரிய இயந்திரத்தின் உதவியால் பாத்திரங்கள் தயாராகி வெளிவருகின்றன.

இந்த இயந்திரத்தில் வார்ப்பு உருவுக்கான படிவம் (Die) ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. வட்ட வடிவ அலுமினியத்தகடை அதன் மேல் வைத்து அழுத்தியதும் பாத்திரம் உருவாகி விடுகிறது. தேவையான பாத்திரங்களுக்கு ஏற்பப் பல்வேறு படிவங்கள் உள்ளன. அவற்றின் உதவியால் எம்மாதிரியான பாத்திரம் தேவையோ அவற்றை நாம் தயாரித்துக் கொள்ளலாம். தானே இயங்கும் இந்த இயந்திரம் கண்மூடிக் கண் திறப்பதற்குள் பாத்திரத்தைப் பத்திரமாகத் தந்துவிடுகிறது!

இவ்வாறு தயாரான பாத்திரத்தின் விளிம்பை ஒழுங்காக்குகிறது ஒரு இயந்திரம். அதோடு முடிகிறதா இவ்வேலை? பாத்திரங்கள் பளிச்சிட வேண்டாமா?

அதற்காக, முதலில் காஸ்டிக் சோடா கலந்த கொதிநீரில் பாத்திரங்கள் போடப்பட்டு, பிறகு நைட்ரிக் ஆசிட் கலந்த நீரில் கழுவப்படுகின்றன. இப்போது பாத்திரம் வெண்மை பளிச்சிடுகிறது.

1949-ஆம் ஆண்டில் சிறு அளவில் துவக்கப்பட்ட இந் நிறுவனம், இன்று படிப்படியாக வளர்ச்சி அடைந்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

வெள்ளிவிழாவை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த தொழிற்கூடம்தான், சென்னையில் முதன் முதலில் வட்ட வடிவத் தகடுகளை உருவாக்கியது. இதற்குமுன் வட்டத் தகடுகள் வெளிநாட்டிலிருந்தே கொள்முதல் செய்யப்பட்டனவாம்.

ஆந்திராவிலுள்ள மகேந்திரபுரத்தில்தான வார்ப்பட அலுமினிய, பித்தளைப் பாத்திரங்களை அதிக அளவில் தயாரித்தார்களாம். அதே போலத் தமிழ் நாட்டிலும் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தத் தொழிற்கூடம் தொடங்கப்பெற்றது. இதன் துணை நிறுவனமான 'தி இந்தியா மெட்டல் ஒர்க்ஸ்' பொருள்களை விற்பனை செய்கின்றது.

ஒரு தொழில் வெற்றிகரமாக இயங்கிட மூலதனம் மட்டும் முக்கியமல்ல; உழைப்பு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி இவையும் அதற்குத் தேவை என்பதைச் சொல்லாமல் சொல்கிறார், இத் தொழிற்கூடத்தின் நிருவாகி திரு. எஸ். மருதை அவர்கள்.

இயந்திரங்களைப் பழுது பார்க்கவும், வார்ப்பு உருவுக்கான படிவம் (Die) செய்யவும், தேவையான சிறு இயந்திரங்களைத் தயார் செய்து கொள்ளவும் இத்தொழிற்கூடத்தில் ஒரு பிரிவு இருக்கிறது.

சாதாரணமாக ஒரு இயந்திரத்தில் ஒரு நாளைக்கு 50-லிருந்து 75 கிலோ பாத்திரங்கள் வரை தயாரிக்கலாம்; ஆனால், இங்கு அமைந்துள்ள தானாக இயங்கும் இயந்திரமோ ஒரு நாளைக்கு 1000 கிலோ பாத்திரங்களைத் தயாரிக்கும் திறன் கொண்டதாயிருக்கின்றது. இதுபோல இரண்டு இயந்திரங்கள் இங்கே உள்ளன. ஒரு இயந்திரத்தில் எவர்சில்வரால் ஆன அறுவைச் சிகிச்சைக்கான மேசைகளும், பிற மருத்துவச் சாதனங்களும் அவ்வப்போது தயாரிக்கப்படுகின்றன.

உருக்கும்போது ஏற்படும் கழிவுப் பொருள்களை வீணாக்காமல், அவற்றையெல்லாம் சேகரித்து மீண்டும் உருக்கிப் பாத்திரங்கள் செய்யப் பயன்படுத்துகின்றனர்.

இங்கு உருவாகும் பாத்திரங்கள் தமிழ்நாடு தவிர, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

ஒருவர் 10 கிலோ மதிப்புள்ள அதாவது ரூ. 200-க்கு அலுமினியச் சாமான்களை வாங்கினார் என்றால், அவற்றை உபயோகத்துக்குப் பிறகு திருப்பிக் கொடுத்தால், 50 பங்கு திரும்ப அவருக்குக் கிடைக்கிறது. வேறெந்த உலோகச் சாமான்களிலும் இந்தப் பலன் கிடைப்பதில்லை. பாத்திரத்தைக் கடைசிவரை பயன்படுத்தி, பிறகு தேவையில்லாதபோது அவற்றின் எடைக்குத் தக்கவாறு புதிய பாத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இப்போது சொல்லுங்கள்? ஏழைக்கேற்ற வெள்ளி: அலுமினியம்தானே?

—பி.வி.ஜி.



பாத்திர விளிம்பு ஒழுங்காக்கப்படுகிறது.

வெண்மை பளிச்சிட கழுவப்படுகிறது.

தகடு வட்டமாக வெட்டப்படுகிறது.

பாத்திரம் தயாரிக்கும் இயந்திரம்.



பாங்கான படிவமும் (Die) இங்கே தயாராகின்றது.

வெள்ளிப் பாத்திரங்களோ இவை?



# ஊனமுற்றோர்க்கு உதவிட உன்னதமான வழி!

செலவு ஒரு ரூபாய்
வரவோ பல லட்ச ரூபாய்

முதலமைச்சரின்
"உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்காக"

## தமிழ்நாடு பரிசுச் சீட்டு மாபெரும் சிறப்புக் குலுக்கல்!

இதுவரை கண்டிராத ஏராளப் பரிசுகள்! உயர்வான தொகை பெற உங்கள் நல்வாய்ப்பு இன்றே!

முதல் பரிசு ரூ. 10 லட்சம்

இரண்டாவது பரிசு
சிறப்புப் பரிசுகள் (எல்லா வரிசைகளுக்கும் பொது)
ரூ. 2 லட்சம்

முதல் பரிசு
ஒவ்வொரு வரிசைக்கும்
ரூ. 1 லட்சம்
மற்றும்
ஆயிரக்கணக்கான கவர்ச்சிப் பரிசுகள்.

மொத்தப் பரிசுகள் 12312 (10 வரிசைகள்)

மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 35 லட்சம்

இன்றே வாங்குங்கள்

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்!

குலுக்கல் நாள் 28-9-74

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை–600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு,
சென்னை-600009.




# கண்சிகிச்சையில் கவனிக்கவேண்டிய முறைகள்



## டாக்டர் ஜி. வெங்கடசாமி

**சா**தாரணமாகக் கண் சிகிச்சை முகாமிலோ அல்லது மருத்துவ மனையிலோ கண்ணில் புரை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்ருல் ஒரு நாள் முன்னதாகவே சேர்த்துக் கொள்வார்கள். கண்ணிலிருந்து மூக்கிற்கு ஒரு துவாரம் உண்டு. இந்தத் துவாரம் அடைபட்டால் கண்ணில் சீழ் உண்டாகும். சீழ் இருந்தால் அறுவைச் சிகிச்சை செய்ய முடியாது. ஆதலால் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய ஒவ்வொருவருக்கும் கண்ணிலிருந்து மூக்கிற்குச் செல்லும் துளை அடைபடாமல் இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டும். கண்ணில் பச்சையான மருந்து போட்டு மூக்கிற்கு வருகிறதா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு வராவிட்டால் கண் இமையில் உள்ள துவாரத்தின் வழியாக மருந்தை ஊசிமூலம் (Syringe) செலுத்துவார்கள். வழியில் அடைப்பு இல்லாமல் இருந்தால் தொண்டையிலிருந்தோ மூக்கிலிருந்தோ இந்த மருந்து வரும். நீர்ப்பையில் அடைப்பு இருந்தால் நீர்ப்பையை எடுத்து விடுவது நல்லது. நீர்ப்பையை எடுத்த பின்னர் ஒன்று அல்லது ஒன்றரை மாதம் கழித்துப் புரை அறுவைச் சிகிச்சை செய்யலாம்.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவரின் இரத்தக் கொதிப்பு சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இரத்தக் கொதிப்பு அதிகமாக இருந்தால் மருத்துவம் செய்து அதைக் குறைத்த பின்னர் தான் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். சிறுநீரைப் பரிசோதித்து, சர்க்கரை அல்லது உப்பு இருக்கிறதா என்று பார்ப்பார்கள். ஏதாவது இதில் குறை இருந்தால் அதற்கான மருத்துவம் செய்து குணப்படுத்திய பின்னர் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். உடம்பில் இரத்தம் குறைந்து (Anemia) சோகை இருந்தாலும் அறுவைச் சிகிச்சை செய்வதில்லை. இரத்தம் ஊறிய பின்னர் அறுவைச் சிகிச்சை செய்யலாம். உடம்பில் ஏதாவது நோய் இருந்தால் மருத்துவரிடம் சொல்லி விடுவது நல்லது. சிறு நீர் கழிப்பதில் கஷ்டம் இருந்தாலும் இருமல், தும்மல், தலை சுற்றல், மயக்கம் முதலிய கோளாறுகள் இருந்தாலும் மருத்துவரிடம் அறிவிப்பது அவசியம்.

### கண்களைச் சுத்தம் செய்தல்

அறுவைச் சிகிச்சை செய்யப்படும் இடம் கிருமிகள் இல்லாமல் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். நம் நாட்டில் மக்களிடையே சுகாதாரக் குறைவு இருப்பதால் கண்கள் அவ்வளவு சுத்தமாக இருப்பதில்லை. சுற்றுப் புறத்தில் உள்ள காற்று எப்பொழுதும் கண்களில் செல்வதால் அசுத்தமான சூழ்நிலையில் கண்களில் கிருமிகள் செல்லும். அறுவைச் சிகிச்சை செய்வதற்கு முன்னர் கண்களில் அசுத்தமான கிருமிகள் இருக்கின்றனவா என்று பார்ப்பது அவசியம்.

முதல் நாள் கண் இமை மடிகளை வெட்டிவிட்டு அறுவைச் சிகிச்சை செய்யப்படும். கண்ணைக் கழுவிச் சுத்தமான பஞ்சை வைத்துக் கட்டிவிடுவார்கள். மறுநாள் காலையில் அந்தக் கட்டை அவிழ்த்து மருத்துவர் கண்ணைப் பரிசோதிப்பார். கண்ணில் கிருமிகள் இருந்தால் சீழ் கலந்து பீளை கண்ணில் இருக்கும். கண்ணில் பீளை இருந்தால் அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யக் கூடாது. தேவையான மருந்தைக் கண்ணில் தினமும் போட்டு அந்தக் கிருமிகளை அகற்றிய பின்னரே அவர்கட்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். மூக்கில் சளி, தடுமன், தும்மல், இருமல் இருந்தாலும் அதைச் சரிப்படுத்திக் கொண்டுதான் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

கண் சிகிச்சை முகாமிலோ, மருத்துவ மனையிலோ சேர்க்கப்பட்ட தினத்திலிருந்து உணவை மிதமாகச் சாப்பிட வேண்டும். முக்கியமாக, அறுவைச் சிகிச்சை முடிந்த பின்பு 24 மணி நேரத்திற்குப் படுக்கையில் அசையாமல் இருப்பது நல்லது. அப்பொழுது மலஜலம் கழிக்க அடிக்கடி எழுந்திருப்பது கூடாது. உணவும் கடினமாக இல்லாமல் மெதுவாக எளிதில் உண்ணக் கூடியதாக இருக்கவேண்டும். கஞ்சி, குழைத்த சாதம், பால், காப்பி இவை சிறந்த உணவாகும். நோயாளிகள் அவரவர்களுக்கு உரிய இடத்தில் தங்கியிருப்பது நல்லது. இரண்டு கண்களும் கட்டப்பட்ட பின்னர் எங்கிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்வது சாத்தியமில்லை. அறுவைச் சிகிச்சை முடிந்த பின்னர் 24 மணி நேரம் கழிந்த பின்னர் ஒரு கண் மட்டுமே கட்டப்படும். மற்றொரு கண்ணில் பார்வை இருந்தால் எழுந்து நடமாட அனுமதிக்கப்படுவார்கள். அப்பொழுது மலஜலம் கழிக்கும் இடம், சாப்பிடும் இடம் இவை



# மரண விபத்துகள் உங்களை எதிர்கொண்டழைக்கின்றனவா?

சீரான ஒளி தெருக்களுக்கும், நெடுஞ்சாலைகளுக்கும் பெரும் பாதுகாப்பை அளிக்கிறது. பார்வையைத் தெளிவாக்கி, கண்கூசும் மின்விளக்கின் (ஹெட்லைட்) ஒளியை மந்தப்படுத்தி விபத்து விகிதத்தைத் தடுக்கிறது. நெடுஞ்சாலைகளுக்கும், தெருக்களுக்கும் உகந்த கம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப் பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்காண்டிஸெண்ட், ஃப்ளுரோஸெண்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.



பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்—
சீரான பார்வைக்கு

**பிலிப்ஸ்**

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்




எங்கிருக்கின்றன என்பதை அறிந்து ஒருவரை யொருவர் முட்டிக் கொள்ளாமல், இடித்துக் கொள்ளாமல் பத்திரமாகச் செல்ல வேண்டும்.

அறுவைச் சிகிச்சை முடிந்த பின்னர் 24 மணி நேரம் படுக்கையில் அசையாமல் படுத்திருப்பது நலம். இது மிகச் சிரமமான காரியம். இப்பொழுது அறுவைச் சிகிச்சையில் தையல் போடப்படுவதால் சிறிது ஆடினுலும் ஆபத்தில்லை. கூடுமான வரை தலையை அசைக்காமல் வைத்துக்கொள்வது நலம். முதல் 24 மணி நேரத்திற்கு முகாமிலும் மருத்துவ மனையிலும் தலையணை கொடுப்பதில்லை. தலையணை இல்லாமல் படுப்பது பலருக்குச் சிரமாக இருக்கும். அறுவைச் சிகிச்சை முடிந்து 24 மணி நேரம் கழிந்த பின் தலையணை வைத்துக் கொள்ளலாம்.

அறுவைச் சிகிச்சையின் பொழுது கண்ணில் வலியோ வேறு சிரமமோ ஒன்றும் இருக்காது. அறுவைச் சிகிச்சை ஆரம்பிக்கும் பொழுது கண்ணில் ஏதாவது வலி இருந்தால் உடனே சொல்ல வேண்டும். தேவைப்பட்டால் ஊசியைப் போட்டு வலியைக் குறைப்பார்கள். அறுவைச் சிகிச்சை நடந்த இரவு கண்ணில் சிறிது வலி ஏற்படலாம். அந்த வலியைக் குறைப்பதற்கு மருத்துவர்கள் மருந்து கொடுப்பார்கள். கட்டை அவிழ்த்து மருந்து போடும் போது வலி ஒன்றும் இருக்காது. மருத்துவர்கள் சொல்வதை சரியாகக் கேட்டு கண்களை நன்ருகத் திறந்து காட்டினுல் சரியாகப் பரிசோதித்து மருந்து போட உதவும். எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது சுத்தமாக இருத்தல்தான். எந்த விதமான காரணத்தினுலும் கட்டை அவிழ்க்கவோ விரலைக் கொண்டு கண்ணைத் துடைக்கவோ கூடாது. அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட உடனே சீழ் உண்டாகி, கண் கெட்டுவிடும். கட்டு அவிழ்ந்திருந்தால் மருத்துவரிடம் அல்லது செவிலியரிடமோ சொன்ஞல் கட்டைச் சரியாகக் கட்டுவார்கள்.

மருத்துவ மனையிலோ அல்லது கண் சிகிச்சை முகாமிலோ அறுவைச் சிகிச்சை முடிந்த பின்னர் ஆறு அல்லது ஏழு நாள் வைத்திருப்பார்கள். பின்னர் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். வீட்டிற்குச் சென்ற பின்னரும் கண்ணை நன்ருகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வீட்டிற்குப் போகும் போது கண்ணில் போடுவதற்காக மருந்து கொடுப்பார்கள். ஐந்து அல்லது ஆறு வாரங்களுக்குக் கனமான சாமான்களைத் தூக்கக் கூடாது. தலையை மிகவும் குனியக் கூடாது. கண்ணிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திரையைச் சதா அணிந்து கொள்ளுதல் வேண்டும். மாடிப்படியில் ஏறி இறங்கக் கூடாது. கண்ணை அழுத்தக் கூடாது. மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்குக் கண்ணில் வலியோ கண்ணீர் வருவதோ இயல்பு. சுத்தமானத் துணியை வைத்து மெதுவாகக் கண்ணின் வெளிப்புறத்தைச் சுத்தம் செய்யவேண்டும். ஆறு வாரம் கழித்துக் கண்களைப் பரிசோதித்துக் கண்ணுடி போட வேண்டும். அறுவைச் சிகிச்சை செய்யப்படாத கண்ணின் பார்வை நன்ருக இருந்தால் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட கண்ணுக்கு, கண்ணுடி தேவை இல்லை. முதலிலேயே மற்ருெரு கண்ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்து கண்ணுடி போடப்பட்டிருந்தால் இரண்டு கண்களுக்கும் கண்ணுடி போடலாம்.

அறுவைச் சிகிச்சை பெற்றவர்களுக்குக் கண்ணுடிபோட்ட பின்னரும் பார்வையில் வேற்றுமை காணப்படும். வெள்ளையான பொருள்கள் எல்லாம் நீல நிறமாகத் தெரியும். சில சமயங்களில் சிவப்பு நிறமாகவும் தோன்றலாம். பொருள்கள் முன்பு பார்த்ததை விட உருவத்தில் பெரியதாகத் தோன்றும். படிகளில் கீழே இறங்கும் போதும் ஏறும் போதும் தடுமாற்றம் ஏற்படலாம். சிலருக்கு வெளிச்சத்தில் கண் கூச்சம் உண்டாகும். இவையெல்லாம் நாளாவட்டத்தில் சரியாகிப் பார்வையை முழுமையாகத் திரும்பப் பெறுவார்கள். பிறகு எந்த விதமான நுண்ணிய வேலையும் செய்யலாம். தூரப் பார்வையும் நன்ருக இருக்கும். தூரப் பார்வைக்கு ஒரு கண்ணுடி, கிட்டப் பார்வைக்கு ஒரு கண்ணுடி என்றும் தனித் தனியாகப் போட வேண்டும். இரண்டையும் ஒன்ருகச் சேர்த்துப் போடுவது சிரமம். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பின்னர் கறுப்புக் கண்ணுடி போட வேண்டுமோ என்று சிலர் கேட்கிருர்கள். நாலைந்து வாரங்களுக்குக் கறுப்புக் கண்ணுடி போட்டுக் கொள்ளலாம். நிரந்தரமாக இந்தக் கண்ணுடி தேவை இல்லை.

அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஐந்து தினங்களுக்கெல்லாம் பார்ப்பதற்கு உதவியாகத் தற்காலிகக் கண்ணுடி கொடுக்கிருர்கள். இது பிளாஸ்டிக்கினுல் ஆன கண்ணுடியாகும். ஐந்து அல்லது ஆறுவாரம் கழித்து நிரந்தரமான கண்ணுடி தருவார்கள். நிரந்தரமாகப் போடுவதற்கும் பிளாஸ்டிக்கினுல் ஆன கண்ணுடி வெளி நாடுகளில் செய்கிருர்கள். இதன் விலை அதிகமாக இருக்கிறது. ஒரு கண்ணுடியின் விலை ரூ. 600 முதல் 700 வரை உள்ளது. சாதாரணக் கண்ணுடியை விட இது இலேசாக இருக்கும். அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குக் கண்ணில் பொருந்தும் ஒட்டுக் கண்ணுடி போடலாமா? (Contact lens) போட்டுக் கொள்ளலாம். ஒரு கண் நன்ருக இருந்து மற்ருெரு கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தால் அறுவைச் சிகிச்சை செய்த கண்ணுக்கு ஒட்டுக் கண்ணுடிபோட்டால் இரு கண்ணும் ஒத்துப் பார்க்கும் நிலை ஏற்படும்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் முன்பு செய்த வேலைகள் எல்லாவற்றையும் சாதாரணமாகச் செய்யலாம். பெண்கள் சமையல் வேலைகள் செய்வதில் ஒன்றும் சிரமம் இல்லை. காட்டில் விவசாய வேலை செய்பவர்களும் கண்ணுடி அணிந்து கொண்டு முன் போலவே வேலை செய்யலாம். கார் ஓட்டுபவர்கள் கண்ணுடி அணிந்து கொண்டு கார் ஓட்டலாம். ஆதலால் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் முன்பு செய்த வேலையைச் செய்ய முடியாதபடி போய் விடுமோ என்று பயப்பட வேண்டியதில்லை.


அடுத்த இதழில்....
கண் புரை அறுவைச் சிகிச்சை முறைகள்.




# 'சேமிப்பு'

## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறுசேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

ஆ

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


213



# குறைந்த உரமிட்டு நிறைந்த மகசூல் பெற 'பவானி' பயிரிடுவீர்!

தற்பொழுது இரசாயன உரங்களின் விலை உயர்ந்து விட்டதோடு, போதிய அளவில் கிடைக்காத நிலை இந்தியாவெங்கும் நிலவி வருகிறது. கூடுமான வரை இரசாயன உரங்களை உழவர் பெருமக்களுக்குத் தேவையான அளவில் வழங்கிட தமிழ் நாடு அரசு முயற்சி செய்து வருகிறது. மேலும், தமிழ் நாட்டில் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள பெரும் வாய்ப்புகளை விளக்கி, போதிய அளவில் இரசாயன உரங்களைத் தமிழ் நாட்டிற்கு வழங்கிடுமாறு இந்திய அரசைத் தமிழ் அரசு வற்புறுத்தி வருகிறது. எனவே, கிடைக்கின்ற இரசாயன உரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தி உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க வேண்டியது 'பசிப் பிணி மருத்துவர்கள்' என்று புகழப்படும் தமிழக உழவர் பெருமக்களின் கடமையாகும்!

இக்கடமையை வெற்றிகரமாகச் செய்திட உழவர் பெரு மக்கள் பின்கண்ட 3 குறிக்கோள்களுடன் செயலாற்ற வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

1. உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க—அதுவும் சிறப்பாக நெல் உற்பத்தியைப் பெருக்க—உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களையே பயிரிட வேண்டும்.

2. பருவ மழை வாய்ப்பாக அமையாததால் ஏற்பட்டுள்ள பாசன வசதி பற்றாக்குறையை எண்ணி, உயர் விளைச்சல் ரகங்களிலும் குறைந்த வயதில் நிறைந்த மகசூல் தரும் ரகங்களையே தேர்ந்தெடுத்துப் பயிரிட வேண்டும்

3. குறைந்த கால வயதுடைய உயர் விளைச்சல் ரகங்களிலும், குறைந்த உரம் ஏற்று நிறைந்த மகசூல் தரக்கூடிய ரகத்தைத் தேர்ந்தெடுப்பயிரிட வேண்டும்

அப்படிச் செய்தால் தான், குறுகிய காலத்தில், குறைந்த அளவு உரமிட்டு, குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு, நிறைந்த மகசூல் பெற முடியும்! அதுவே நாட்டிற்கும், வீட்டிற்கும் உழவர் பெரு மக்கள் செய்யும் கடமையாக அமையும்!

மேற்கூறிய 3 குறிக்கோள்களின் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால், குறைந்த உரம் ஏற்றுக் கொண்டு குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய நெல் ரகம் 'பவானி' என்பது தெளிவாகிறது. இக் கருத்தைப் பல்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னோடி உழவர் பெரு மக்கள் அனுபவத்தில் உண்மை என்று ஒப்புக் கொண்டு, மற்ற உழவர் பெரு மக்களுக்கும் இவ்வுண்மையைக் கூறி, 'பவானி' நெல் பயிரிடத் தூண்டி வருகிறார்கள். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் இதோ!

* கோவை மாவட்டம், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், கருக்கம்பாளையத்தைச் சார்ந்த திரு அ. காளியப்பக் கவுண்டர் என்பவர், ஏக்கருக்கு 50 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் உரமிட்டு, பவானி நெல் பயிரிட்டு ஏக்கருக்கு 3,820 கிலோ மகசூல் எடுத்துள்ளார்.

''மகசூல் அளிக்கும் திறன், சன்ன அரிசி தரும் பண்பு, வைக்கோல் கொடுக்கும் தன்மை ஆகியவற்றில் பவானி நெல் ரகம், ஐ. ஆர். 20 ரகத்தை விட சிறந்து விளங்குகிறது'' என்று அவர் கூறியுள்ளார்.

* திருச்சி மாவட்டம், மணத்தட்டைக் கிராமத்தைச் சார்ந்த திரு. எம். ஆர். ராமரத்தினம் என்பவர் ஏக்கருக்கு 40 கிலோ தழைச் சத்து, 25

கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் உரமிட்டு, 'பவானி' நெல் பயிரிட்டு, 136 நாட்களில் ஏக்கருக்கு 2,640 கிலோ நெல் விளைவித்துள்ளார். அவர் பின் கண்ட காரணங்களால் 'பவானி' நெல் ரகமே சிறந்தது'' என்று கூறியுள்ளார்.

1. ''மற்ற ரகங்களின் அரிசியைக் காட்டிலும், 'பவானி' ரக அரிசியின் தரம் சிறந்தது''.

2. ''தரமான வைக்கோல் தருகிறது''.

3. ''அதிக விலைக்கு விற்க முடிகிறது''.

4. ''ஓரளவிற்கு வரட்சியையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றது''.

* தென்னார்க்காடு மாவட்டம் ராம்பாக்கம் கிராமத்தைச் சார்ந்த ஒரு உழவர் வயலில் நடத்தப்பட்ட களச் சோதனையில், ஏக்கருக்கு 40 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச் சத்து, 20 கிலோ சாம்பல் சத்து என்று குறைந்த அளவு உரமிட்ட போதிலும் 2955 கிலோ மகசூல் எடுக்க முடிந்துள்ளது என்பது தெரிய வருகிறது.

* 1973—74-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் நடத்தப்பெற்ற அனுசரணை ஆராய்ச்சியிலிருந்து ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச் சத்து, 15 கிலோ சாம்பல் சத்து என்று மிகக் குறைந்த அளவில் உரமிட்டாலும் சராசரியாக ஏக்கருக்கு 2,357 கிலோ மகசூல் பெற முடியும் என்பது தெளிவாகியுள்ளது.

ஆகவே, இராசயன உரப் பற்றுக் குறையும், இரசாயன உர விலையும் மிகுந்துள்ள இச்சமயத்தில் 'பவானி' நெல் ரகத்தைப் பயிரிடுவதே பயன் உள்ள செயலாகும்!

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டு உள்ள 'பவானி' நெல் ரகம் பின்கண்ட சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளது.

## பவானி நெல்லின் சிறப்புக் குணங்கள்

1. எக்டேருக்குச் சராசரி 6,895 கிலோ மகசூல் தரவல்லது.

2. 120 முதல் 130சென்டி மீட்டர் உயரம் வளர்ந்தாலும், சாய்ந்து விடுவதில்லை.

3. நீர் வசதி இருப்பின் எந்தப் பருவத்திலும் பயிராகும்.

4. விதைத்து 130 முதல் 135 நாட்களில் அறுவடைக்கு வரும்.

5. நட்டவுடன் வீரியமாக வளரக்கூடியது.

6. குலைநோய், பிளைட் நோய், இலைப் புள்ளி நோய் ஆகியவைகளைத் தாங்கிக் கொளுவதுடன், உவர் நிலங்களிலு நன்கு பயிராகிறது.

7. தரமும், சுவையும் மிகுந்த அரிசியைக் கொடுக்கிறது.

8. அறுவடையின் போது மழை இருந்தாலும், இதன் நெல் மணிகள் முளைக்காது.

9. குறைந்த அளவு உரம் இட்டாலும், நிறைந்த மகசூல் தரும்.

10. அதிக விலைக்குப் 'பவானி' நெல்லை விற்க முடியும்.

அதிக மகசூல், வீரிய வளர்ச்சி, பல்வேறு சூழ்நிலைகளிலும் நல்ல மகசூல் தரும் திறன், குறைந்த உரமிட்ட போதிலும் அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல், தரம்மிக்க அரிசி ஆகிய சிறப்பியல்புகளைக் கொண்டிருப்பதால், 'பவானி' ரகத்தை கோவை, சேலம், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, திருச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களில் பயிரிட்டுப் பயனடையலாம். இந்த இரகத்தைப் பயிரிடுவதின் மூலம் ஏக்கருக்கு ஏறத்தாழ ரூபாய் 400 அதிக இலாபம் பெற முடியும். எனவே, சம்பா பருவத்தில் (ஆவணி—புரட்டாசி), பின்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு, 'பவானி' பயிரிட்டுப் பயன் மிகு பெறுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## 'பவானி' சாகுபடிக் குறிப்புகள்

### பருவம்

கார்ப் பட்டம் : ஏப்ரல்-மே முதல் ஆகஸ்ட்-செப்டம்பர் வரை.

சம்பாப் பட்டம் : ஆகஸ்ட்-செப்டம்பர் முதல் டிசம்பர்-ஜனவரி வரை.

நவரைப் பட்டம் : ஜனவரி-பிப்ரவரி முதல் மே-ஜூன் வரை.

### விதையளவு

ஏக்கருக்கு 18 கிலோ விதையை, 12 செண்ட் நாற்றங்காலில் நாற்று நடவும்.

### விதை நேர்த்தி

விதைக்கும் முன்பு ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' போன்ற கரிம பாதரச மருந்துகளையோ அல்லது டீ. எம். டீ. டி. மருந்தையோ கலந்து விதைக்கவும்.

### நாற்றங்கால் தயாரித்தல்

இரும்புக் கலப்பையால் நிலத்தை நன்கு உழுது, ஏக்கருக்கு 10 டன் தொழு எரு அல்லது கம்போஸ்ட் வீதம் போட்டு, நன்றாகச் சேறாக்கி, செண்ட் நாற்றங்கால் (54 அடி × 8 அடி அகலம்) அமைத்தல் சிறந்தது.

### நாற்றின் வயது

25-28 நாட்கள் வயதுடைய நாற்றுகளையே நட வேண்டும்.

### நடவு வயல் தயாரித்தல்

இரும்புக் கலப்பையால் நிலத்தை நன்கு உழுது பண்படுத்தவும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது 2,300 கிலோ பசுந்தாள் உரமிடவும்.

### அடியுரம்

கடைசி உழவின் போது 25 கிலோ மணிச் சத்து (156 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 25 கிலோ சாம்பல் சத்து (41 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்) போடவும்.

நடும்போது 25 கிலோ தழைச் சத்து அளிக்க 125 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 55 கிலோ யூரியா போடவும்.

(அல்லது)

கடைசி உழவில் 148 கிலோ 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரமிடவம்.

### குறைந்த அளவு உரம்

மேற்கூறிய அளவில் உரமிட முடியாவிட்டால், அடியுரமாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச் சத்து, 15 கிலோ சாம்பல் சத்து என்று மிகக் குறைந்த அளவில் உரமிட்டாலும் நல்ல மகசூல் பெறலாம். இந்த அளவுச் சத்து அளிக்க 88 கிலோ 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தை அடியுரமாக இட்டாலே போதும்!

### மேலுரம்

நட்ட 21-வது நாளில் 15 கிலோ தழைச் சத்தும் (75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியா), நட்ட 45-வது நாளில் 10 கிலோ தழைச் சத்தும் (50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 யூரியா) மேலுரமாக இட வேண்டும்.

குறைந்த அளவில் உரமிட விரும்புகின்றவர்கள் நடவு செய்த 21-வது நாளிலும், 45-வது நாளிலும் ஆக இருமுறை, ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 7.5 கிலோ தழைச் சத்தை (37.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 16.5 கிலோ யூரியா) மேலுரமாக இட வேண்டும்.

### பயிர்ப் பாதுகாப்பு

நாற்றங்கால் : நாற்றுகள் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு 0.05 சத 'பாரதியான்' 0.04 சத 'என்டிரின்', 0.06 சத 'ஃபெனிட்ரோதியான்', 0.05 சத 'பாஃபாமிடான்' 0.05 சத 'ஃபெந்தியான்' ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்.

நடவு வயல் : நாற்று நட்ட 2 வாரங்களுக்குப் பிறகு நடவு வயலில் மேற்கூறியவாறு முதல் முறை தெளிக்கவும்.

நடவு வயலில் முதல் முறை மருந்து தெளித்த பிறகு 3 வாரத்திற்கு ஒரு முறை வீதம், 2-வது, 3-வது முறை மருந்து தெளிக்கவும்.

தத்துப் பூச்சிகளும், இலையைத் தின்னும் புழுக்களும் காணப்படின், 'பி.எச்.சி. 10 சதம்' தூளையும், 'டி.டி.டீ. 5 சதம்' தூளையும் சம அளவில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும்.

கதிர்களில் உள்ள மணிகளில் பால் பிடிக்கும் தருணத்தில் கதிர் நாவாய்ப் பூச்சிகள், புகையான் பூச்சிகள் (பல்காரிட்) தோன்றுவதைத் தடுக்க ஏக்கருக்கு 10 கிலோ 'பி.எச்.சி. 10 சதம்' தூளைத் தூவவும்.

### மகசூல்

ஏக்கருக்கு 2,500 கிலோ முதல் 3,500 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

### வேண்டுகோள்

குறைந்த அளவு இரசாயன உரமிட்டாலும் நிறைந்த மகசூல் தருவதால், சம்பா பட்டத்தில் பவானி பயிரிடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.


**சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண். 151.**

**சேலம்-1.** தொலைபேசி எண் 2402

கிளைகள் :— நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமனூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம் ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**நடைமுறை மூலதனம் 1690 லட்சம்**

**சொந்த நிதி ரூ. 323 லட்சம்**

**வட்டி விகித அட்டவணை 23-7-'74 தேதி முதல்**

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| | ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | 3½% |
| சேவிங்ஸ் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் | 3% |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3½% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | |
| பிக்செட் டெபாசிட்டுகள் : | ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு | 5½% |
| | 1. 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் | 6% |
| | 2. 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள்... | 7% |
| | 3. 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள்... | 8% |
| | 4. 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள். | 9% |
| | 5. 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள். ... | 10% |
| | 6. ஐந்து வருடங்களுக்கு மேல் | |

சேமிப்பு கணக்கு 5%

நடப்புக் கணக்கு ½%

ரூ. 5,000-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க!

எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
தலைவர்



உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல்
பெருக அதற்கு
'ப்ளேனே:.பிக்ஸ்?
தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள்
"ப்ளேனே:.பிக்ஸ்" உபயோகித்தீர்களானால்,
பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து,
மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப்
பயிரிலே "ப்ளேனே:.பிக்ஸ் மருந்தைப்
பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்தி-
கரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன

அசல் தயாரிப்புதானா என்று பார்த்து உபயோ-
கியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறாதீர்கள்.
உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட
பம்பாய், கல்கத்தா, கவுஹாத்தி, இந்தோர்
லக்னோ, சென்னை, நியூடெல்லி, பாட்னா

"ப்ளேனே:.பிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு — டிரேடு மார்க்



உயர்தர வட்டி சம்பாதியுங்கள்!

BOBL-லில் உங்கள் சேமிப்பு மூலம்

1—4—74 முதல் வைப்புத் தொகைகளுக்கு வட்டி விகிதம் :

| வைப்புத் தொகை பிரிவுகள் | | ஆண்டுக்கு வட்டி விகிதம் |
|---|---|---|
| சேமிப்புக் கணக்கு | ... | 5½% |
| டெபாசிட் 15 முதல் 45 நாட்கள் வரை | ... | 3% |
| டெபாசிட் 46 முதல் 90 நாட்கள் வரை | ... | 3½% |
| டெபாசிட் 91 முதல் 6 மாதங்கள் வரை | ... | 5½% |
| டெபாசிட் 6 மாதம் முதல் 9 மாதங்கள் வரை | ... | 6% |
| டெபாசிட் 9 மாதம் முதல் 1 ஆண்டு வரை | ... | 6¾% |
| டெபாசிட் 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள் வரை | ... | 7¼% |
| டெபாசிட் 2 ஆண்டுகள் முதல் 3 ஆண்டுகள் வரை | ... | 8% |
| டெபாசிட் 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை | ... | 8¼% |
| 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட டெபாசிட்டர்களுக்கு | ... | 8½% |

அங்கீகரிக்கப்பட்ட மத, அறநிலைய, கல்வி நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ½ சதவிகிதம் வட்டி கூடுதலாக அளிக்கப்படும்.

ஸ்ரீ பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : ஆக்ஸ்போர்டு ஹவுஸ், (சபையர் எதிரில்)
மவுண்ட் ரோடு, சென்னை-600006.
தொலைபேசி எண் : 812983


# பொது நிருவாகக் கலை

பொது நிருவாகக் கலை என்றால் என்ன?
அது எந்த அளவு சிறப்பு மிக்கது?
அதன் பிரிவுகள் யாவை.
அந்தக் கலையைக் கற்பதால் விளையும் பயன்கள் எவை?
இவற்றை இந்தக் கட்டுரை எடுத்துக் கூறுகிறது.


இல. பழனியப்பன் எம்.ஏ.,


பொது நிருவாகத்தின் இன்றியமையாமை இன்றைய நாட்களில் உணரப்பட்டு அது ஒரு மாபெரும் அறிவியல் கலையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. பொது நிருவாகம் பழங்காலத்திலிருந்தே பேணி வளர்க்கப்பட்ட செய்திகளை நம் நாட்டு வரலாற்றை உற்று நோக்கினால் எளிதில் உணரலாம்.

நிர்வாகம் (Administration) என்ற 'இலத்தீன்' மொழிச் சொல்லுக்குப் 'பணியாற்றுதல்' என்பதே பொருள். ஆகவே நிருவாகம் என்ற சொல்லே மற்றவர்க்கு அதாவது மனித உணர்வுகளை நிருவகித்து மனித குலத்தின் மேம்பாட்டிற்கு உழைப்பது என்று பொருள் தருகிறது.

நம்நாட்டில் மன்னராட்சிக் காலத்திலேயே மிகச் சிறப்புடன் பேணி வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இடைக்காலத்தில் அந்நியர் விடுதலைக்குப் பின் மீண்டும் புத்துணர்வோடு வளரத் தொடங்கியுள்ளது. பொது நிருவாகமும், தனி நிருவாகமும் அதன் நோக்கங்களில், தன்மைகளில் ஒன்றுபட்டிருந்தாலும் இரண்டும் பல்வேறு திறத்தால் தனித்தன்மையுடன் திகழ்கின்றன. சுருக்கமாகச் சொல்லுமிடத்தில் ஒருதனி மனிதனை மற்றொரு தனிமனிதன் நிருவாகம் செய்வது தனி நிருவாகம். மக்கள் நன்மை என்ற பொதுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அவர்களை அவர்களுடைய மகிழ்விற்காக அரசாங்கம் நேரடியாக அல்லது அதற்கென்று நியமிக்கப்பட்ட ஓர் அமைப்பின் வாயிலாக நிருவகிப்பது பொது நிருவாகம். கூடி வாழும் வாழ்க்கை என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே நிருவாகக்கலை இடம் பெற்றுள்ளது. அதாவது ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் உள்ள உறவை ஒழுங்குபடுத்தி முறைப்படுத்தும் பணியை நிருவாகக்கலை செய்கிறது. தன்னந்தனியாக இருக்கும் ஒரு மனிதனிடத்தில் நிருவாகக் கலைக்கு வேலையேயில்லை. ஆகவே மனித இனம் இவ்வுலகில் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை நிருவாகக்கலை, வாழ்வில் வெவ்வேறு வடிவங்களில் இடம் பெற்றே வந்துள்ளது. நாகரிக வளர்ச்சியின் காரணமாக நிருவாகக்கலை பல்வேறு மாற்றங்களைப்பெற்று வருவது இயற்கை. இவ்வுலகில் மனித இனம் என்று ஒன்று இருக்கும் வரை நிருவாகக் கலையும் இருந்தே தீரும்.

'பொது நிருவாகம்' என்ற சொல் மிகப் பரந்த பொருள் கொண்ட ஒன்றாகும். அதன் நோக்கம் எண்ணிறந்தது. சில குறிப்பிட்ட குறிக்கோள்களை, இலட்சியங்களை எய்த மக்கள் சக்தி முழுவதையும் ஒருங்கிணைத்துப் பொது நன்மை என்ற ஒன்றை நோக்கி நடைபோடுவதே பொது நிருவாகமாகும். சுருங்கச் சொன்னால் சட்டங்களை ஏட்டிலிருக்கும் நடைமுறைக்குக் நாட்டு கொண்டு வருவதே பொது நிருவாகத்தின் தலையாய பணியாகும். பொது நிருவாகத் துறை தன்னகத்தே பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பொது நிருவாகக் கலையின் உதவி தேவைப்படுகிறது. மனிதன் ஓர் கூடி வாழும் பிராணி (Social animal) அவன் வாழ்வில் பல்வேறு சமூக அமைப்புகளைச் (Social institutions) சார்ந்து வாழ்கிறான். இவ்வமைப்புக்களின் மொத்த நோக்கம் அவன் மேம்பாடு அடைய வேண்டும் என்பதே. அத்தகைய மேம்பாட்டைச் செயல்படுத்தும் கருவியே நிருவாகக் கலை. இவ்வாறு மனித வாழ்வின் எல்லாக் கூறுகளையும் பாதிக்கும் பொது நிருவாகக் கலையில் உள்ளவர்கள் நல்ல திறமைசாலிகளாகவும், உழைப்பாளிகளாகவும் இருந்தால் தான் பொது நிருவாகத்தின் வாயிலாக முன்னேற்றமும், அதன் வாயிலாக மனநிறைவும் மக்களுக்கு ஏற்பட இயலும்.

உலக வரலாற்றுப் புகழ் படைத்த மாபெரும் தலைவர்கள் அனைவரும் நிருவாகக் கலைக்கு எத்துணையோ காணிக்கைகளைச் செலுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு உலகெங்கும் ஏற்பட்ட நிருவாக அனுபவங்கள் முறைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கின்றன. இவையே இன்றைய நிருவாகிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

பொதுநிருவாகம் மக்களின் எண்ணங்களை அரசாங்கத்தின் வாயிலாக எதிரொலிப்பதால் உலகெங்கும் பொது நிருவாகமே அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதும், சட்டத்தின் அனுமதி பெற்றதாகவும் திகழ்கிறது. இது பொது நிருவாகக் கலைக்கே உரிய தனித்தன்மையாகும்.

பொதுத்தன்மையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட பொது நிருவாகத்தில் மட்டுமே முறையான சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல் படுத்தப் படுவதால், இதில் எந்தவிதமான கட்டாயத்தையும் காணமுடியாது.


காதி கிராப்ட்
அளிக்கிறது சுவையும், வெண்மையும்.
ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.
ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.
தொலைபேசி சென்னை 29684 81954 திருச்சி 3814 கோவை 35051
தேன்
HONEY


வண்ணத்துப் பூச்சியின்
வண்ணமிகு கோலங்கள்!
• அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
• பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
• வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
• பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
கைத்தறியே வண்ணத்துப்-பூச்சி!
Criterion CO 2882

பொது நிருவாகத்தை மக்களின் மகிழ்ச்சியான அமைதியான வாழ்வுக்கு வழிகாட்டும் தலைமை என்றே கொள்ள வேண்டும். நாட்டுப் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு காத்தல் ஆகியவை இந்த அடிப்படையிலே திகழ்கின்றன.

பொது நிருவாகக் கலை மிகப் பரந்த ஒன்று. மனித இனத்தின் பல்வேறு தரப்பட்ட தேவைகளையும் பூர்த்தி செய்ய வல்லது, இது ஒன்றே. அதிலும் சமதர்ம சமுதாய இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட நம் நாட்டில் இதற்குத் தனிச்சிறப்பு உண்டு. பயணத்திற்காகப் புகைவண்டியும் தொடர்புக்காக அஞ்சல்துறையும், பிணிநீக்க மருத்துவ மனைகளும் இருப்பது பொது நிருவாகத்தின் மக்கள் தேவை என்ற உணர்வின் அடிப்படையிலேயே! பொதுநன்மையின் அடிப்படையில் அமைந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக அரசாங்கமே திகழ்கிறது. ஆகவே 'பரந்த அளவில் பணி புரிதல்' என்ற தனிப்பண்புடன் இப்பொது நிருவாகம் திகழ்கிறது. லாபநோக்கின்றி, நலநோக்கின் அடிப்படையில் பணிபுரிவதே பொதுநிருவாகத்தின் அடிப்படை இலட்சியமாகும்.

பொது நிருவாகத்திற்கு ஆண்டியும், அரசனும் ஒன்றே. எல்லா மக்களும் ஒரே விதமாக நடத்தப்படுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் மனித குலத்தின் சுயமரியாதைக் காவலனாகப் பொதுநிருவாகம் திகழ்கிறது. தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் தலைகாட்ட முடியாது இங்கே. பொது நிருவாகத்தில் செயல்கள் அனைத்தும் வரிசைப்படி முன்னுரிமையின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. பதவி உயர்வு எந்த விதமான வேறுபாடின்றி வழங்கப்படுவதைக் காட்டாகக் கொள்ளலாம்.

பொது நிருவாகத்தில் மக்களே நிருவாகிகள். சட்டமியற்றும் மன்றங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்டவை. ஆகவே பொதுநிருவாகத்தில் மக்களின் எண்ணங்களை எடுத்துரைப்பவர்களாக அதிகாரிகள் விளங்குவார்கள். அரசின், செய்தி, மக்கள்-தொடர்புத் துறைகளே மக்களின் எண்ணங்களைப் பொதுவாக எடுத்துரைக்கும் கருவிகளாகத் திகழ்கின்றன. பொது நிருவாகத்தில் பணிபுரிபவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு உண்டு. ஊதியம் மற்ற சலுகைகளில் பொது நிருவாகத்துறை, தனியார் நிருவாகத்திற்கு என்றும் முன்னணியாகத் திகழ்வது ஈண்டு நோக்கத்தக்கது. பொது நிருவாகத்தின் திறமை, மக்களின் தேவைகளின் அடிப்படையிலும், பொருளாதார முறையிலும் அமைகிறது. பொது நிருவாகத்தில் திறமைக்குச் சரியான ஊக்கம் என்றும் உண்டு.

பொதுநிருவாகத்தில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் கீழ்க்கண்டவைகளைத் தவறாது பின்பற்றினால்தான் வெற்றியைத் தழுவ முடியும்.

1. **திட்டமிடுதல் (Planning) :** செயல்களைக் குறித்த காலத்தில் முடிக்க ஏதுவாகத் திட்டமிடுதல்.

2. **அமைத்தல் (Organising) :** பணிபுரிபவர்களிடத்தில் நல்லுறவை ஏற்படுத்தி அதற்குப் பாலமாக இருந்து, குறித்த காலத்தில் பணிகளை முடித்தல்.

3. **அலுவலர்களைத் தேர்ந்தெடுத்தல் (Staffing) :** அந்தந்தக் குறிப்பிட்ட பணிகளுக்குத்தேவையானவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியளித்து அவர்களைத் தொடர்ந்து பணியாற்றச் செய்தல்.

4. **இயக்குதல் (Directing) :** சரியான முடிவுகளை உரிய நேரத்தில் எடுத்தலும் எடுத்த முடிவுகளை ஆணைகள், விதிகள் மூலமாகச் செவ்வனே செயல்படுத்துதலும்.

5. **ஒருங்கிணைப்பு (Co-ordination) :** பல முனைகளிலும் பல கட்டங்களாக உருவாகும் பணியை ஒருங்கிணைத்துப் பணியாளர்களிடையே குழு மனப்பான்மையை ஏற்படுத்துதல்.

6. **தகவல் தருதல் (Reporting):** நிருவாகத்தின் நடைமுறைச் செயல்திட்டங்களின் பல்வேறு நிலைகளை உடனுக்குடன் உயர் அதிகாரிகளுக்கு அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்துதல்.

7. **வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்தல் (Budgeting):** பொது நிருவாகத்தின் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டத்தைப் பயன்தரும் முறையில் ஆக்குதல்.



இவ்வாறாக, பொது நிருவாகக் கலை மனித உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட மனிதாபிமானச் சிக்கல். உலகம், நாகரிகத்தின் உச்சாணியில் போய்க்கொண்டிருக்கும் இக்காலத்தில் பொதுநிருவாகக் கலை மிகச் சிக்கல் வாய்ந்ததொன்றாக நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கிறது. ஆகவே பல்வேறு புதிய அனுபவங்கள் பிறக்கின்றன. அவைகளே எதிர்கால நிருவாகத்திற்குப் படிக்கற்கள். ஆகவே, பொது நிருவாகம் என்பது பொதுமக்களுக்கு நிறைவான மேம்பாட்டை உருவாக்க அவர்களின் பிரதிநிதிகளால், குறைந்த காலத்தில், குறைந்த செலவில் உருவான ஓர் அமைப்பு என்று கூறுவதே சிறந்த இலக்கணமாகும். மக்களின் நன்மைக்காகச் சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களைச் செயற்படுத்துதலே நிருவாகப் பிரிவின் நோக்கமாகும். பொது நிருவாகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மிகவும் பெருந்தன்மையுடனும் அடக்கத்துடனும், நேர்மையுடனும் பணிபுரிதல் வேண்டும். பொது நிருவாகத்தை ஒழுங்காக நடைபெறவைப்பதில் பொது மக்களுக்கும் பெரும்பங்கு உண்டு. அவர்களுடைய உண்மையான ஒத்துழைப்பே பொது நிருவாகத் திறமைக்கு வழி வகுக்கும். பொது நிருவாகக் கலை, நம்நாட்டில் இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது. திட்டமிடுகின்ற உயர்நிலையிலுள்ள அதிகாரிகள் அனைவர்க்கும் இக்கலையில் பயிற்சியளித்தல் இன்றியமையாததாகும்.




## மானாவாரி கம்போடியா பருத்திக்கு இலைவழி உரமிடுதல் இலாபம் தரும்!

கோவில்பட்டி மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் அனைத்து இந்திய ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மானாவாரி கம்போடியா பருத்திக்கு இலைமூலம் உரமளிக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனையில், டை-அமோனியம் பாஸ்பேட் உரத்தை 0.5 சத அடர்த்தியில், "பாரதி" பருத்திக்கு விதைத்த 65-வது நாளிலும், 85-வது நாளிலும் ஆக 2 முறை தெளித்தில் (உயர் கொள்ளளவுத் தெளிப்பான்மூலம்), எகடேருக்கு 36 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து, உரங்களை அடி உரமாக இட்டுச் சாகுபடி செய்த "பாரதி" பருத்தியின் மகசூலை விட, 53 சத அளவு அதிக மகசூல் கிடைத்துள்ளது. இதன் மூலம் எகடேருக்கு ரூபாய் 523 கூடுதல் இலாபம் கிடைத்துள்ளது. இலை மூலம் உரமளித்ததனால் இழையின்தரமும், உற்பத்தியும் கணிசமாகப் பெருகியுள்ளது.

## உரமிடாவிட்டாலும் களையெடுக்கத் தவறாதீர்!

விதை, உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், களைக்கொல்லிகள் போன்ற தேவைப் பொருள்களைப் (Inputs) பயன்படுத்தவதால் ஏற்படும் பயன்களைப் பற்றி திட்டவட்டமாக அறிந்திடுவதற்காக ஆழியாறு நகரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், "கருணை" நெல் ரகத்தில் பரிசோதனை நடத்தப் பெற்றது. அப் பரிசோதனையில், இரசாயன உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்புச் செய்தல், களையெடுத்தல் ஆகிய 3 திருந்திய சாகுபடி முறைகளையும் ஒன்று சேர்த்து எக்டேருக்கு 7,000 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. இந்த மகசூல், தடுப்புத் தளையின் மகசூலை விட 102 சதம் அதிகமானதாகும்! இதனால் எக்டேருக்கு ரூபாய் 4,062 நிகர இலாபம் கிடைத்துள்ளது.

மேலும் அப் பரிசோதனையில் இருந்து பயிர்ப்பாதுகாப்பு செய்வதனால் மட்டும் எக்டேருக்கு 275 கிலோ மகசூலும், களையெடுப்பதனால் எக்டேருக்கு 939 கிலோ மகசூலும், இரசாயன உரமிடுவதால் எக்டேருக்கு 2,272 கிலோ மகசூலும் கூடுதலாகக் கிடைத்துள்ளது என்பது தெளிவாகியுள்ளது. இவ்வாறு கூடுதலாகக் கிடைத்துள்ள மகசூல், தடுப்புத் தளையின் மகசூலைவிட முறையே 8,27,66 சதம் அதிக அளவில் இருந்துள்ளது.

உரம் கிடைக்காமை, உர விலை உயர்வு ஆகியவைகளின் காரணமாக உரத்திற்குப் பணம் செலவிட முடியாத நிலை ஏற்படும்போது, பயிர்ப் பாதுகாப்பு செய்வதை விட, களையெடுப்பதே மிகவும் இன்றியமையாதது என்பதையும் மேற்கண்ட பரிசோதனையின் முடிவுகள் தெரிவிக்கின்றன. களையெடுப்பதனால் மட்டும் எக்டேருக்கு ரூபாய் 2,589 நிகர லாபமும், பயிர்ப்பாதுகாப்புச் செய்வதனால் மட்டும் எக்டேருக்கு ரூபாய் 1,991 நிகர இலாபமும் கிடைத்துள்ளன. இதர திருந்திய முறைகள் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைத் தளைகளைக் காட்டிலும், களையெடுத்த தளையில் ஒரு ரூபாய் முதலீடு செய்ததற்குக் கிடைத்த வருவாய் ரூபாய் 3·32 என்ற அளவில் இருந்துள்ளது! ஆகவே, இரசாயன உரமிடாவிட்டாலும், களையெடுப்பது மிகவும் இன்றியமையாதது என்பதை உழவர் பெருமக்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

## உழவர் பெருமக்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு

'சி.பி.எஸ். 156' என்ற புதிய ஈக வீரிய ஒட்டுப் பருத்தியின் விதை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தான் உற்பத்திச் செய்து விற்கப்படுகிறது. மற்ற இடங்களில் 'சி.பி.எஸ். 156' என்ற பெயருடன் விற்கப்படும் விதைகளை வாங்கி ஏமாற வேண்டாம் என்று உழவர் பெருமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.





# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்



* கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
* புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
* சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ்விருந்து!
* மனதைக் கவரும் மாதவியின் அழகுச்சிலை.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.


# எங்கும் எப்பொழுதும் தமிழாட்சி!



## முதல்வர் கலைஞர்

அரசர்கள் புலவர்களை மதிப்பதென்பது இன்று நேற்றல்ல ; அக்காலந்தொட்டே இருந்து வருகின்ற ஒரு மரபு.

புலவர்கள் பின்னால் அரசர்கள் ஏழடி தூரம் நடந்து சென்று வழியனுப்பி வைப்பது தமிழ்நாட்டுச் சிறப்பு. புலவர்கள் உட்கார்ந்துகொண்டு பேசியதையும், அமைச்சர்கள் நின்றுகொண்டு பேசியதையும் இங்கேகூடக்கண்டீர்கள். இந்த அரசு புலவர்களுக்கு அளிக்கின்ற மரியாதை இது.

நினைத்துச் செய்யாவிட்டாலும், இயற்கையாகவே நடந்துவிட்ட ஒன்று; நமது அரசு டத்திலே சேர்ப்பித்தான்; மணத்தின் அடிப்படையிலே தான் அந்தக் கவிதையும் எழுதப்பட்டதாகும்.

பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டா இல்லையா ? என்ற கேள்வியின் அடிப்படையில் சர்ச்சையெழுந்து, புலவர்கள் விடை காண முடியாமல் தவித்தபோது, இறையனார் எனும் புலவர், எப்படியோ அதற்கொரு முற்றுப்புள்ளியை வைத்தாக வேண்டும் என்று- 'பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டு' என்று எழுதி முடித்த ஒரு கவிதையைத் தருமி வாயிலாக அனுப்பி வைத்தார்.

இதுபற்றி இங்கே பேசிய மு. வ. அவர்கள் பஞ்சணையிலேயே இருந்து கொஞ்சிக் கொண்டிருப்பவனுக்கு இதைப் பற்றி ஆராயப் புலவர்கள் தேவைப்பட்டார்கள் என்று அழகுற எடுத்துச் சொன்னார்கள்.

எப்படியோ ஒரு நல்ல பாட்டு தமிழுக்குக் கிடைத்தது.

அந்த அளவிலே பாண்டியனுடைய சந்தேகம் வரையறுக்கப்பட்டது. விளைவு பொல்லாதவைகளாக இருந்தாலும் பரவாயில்லை.

தமிழை - தமிழ்ப் புலவர்களை எந்த அளவிற்கு மதிக்கிறது என்பதன் அடையாளமாக அமைந்துவிட்டது என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டினேன்.

இந்தப் பொற்கிழி விழா பற்றி இங்கே பேசிய அனைவரும் எடுத்துச் சொன்னார்கள்.

பொற்கிழி விவகாரமே மணத்தின் அடிப்படையிலே எழுந்தது.

தருமி, தனக்கு மணம் நடைபெற வேண்டுமென்பதற்காக ஒரு கவிதை தேவைப்பட்டு- அதைத் தேடி அலைந்து பெற்று அதனைப் பாண்டிய மன்னனி

அதற்குப் பிறகு எழுந்த போராட்டங்கள் இன்றைக்கும் விவாதத்திற்கு உரியன.

ஆனால் பொற்கிழி பற்றி அறிவிக்கப்பட்டதும் அதைப் பெற வேண்டும் என்று தருமி துடித்ததும் இரண்டும் மணத்தின் அடிப்படையில்தான். ஆனால் அந்த மணங்கள் இரு வகைப்பட்டவை. ஒன்று தருமிக்குத் தேவைப்பட்டது பணம். அதற்காக அந்தப் பொற்கிழியைப் பெற வேண்டும் என்று துடித்தான்.

அரசன் ஆரணங்கின் கூந்தலுக்கு இயற்கையான மணம் உண்டா? இல்லையா? என்பதை அறியத் துடித்தான்.

அந்த வகையில்தான், தமிழுக்கு ஒரு நல்ல பாட்டு— "கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்று ஆரம்பமாகின்ற வரிகளோடு தமிழுக்குக் கிடைத்திருக்கின்றது. அந்த முதல் அடியிலேயே எவ்வளவு நயமிருக்கிறது; எவ்வளவு பொருள்கள் பொதிந்து இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தா தமிழனின் அருமையும் தமிழ்க் கவிஞர்களின் கற்பனைத் திறமையும் தெளிவாக விளங்கும்.

'கொங்குதேர் வாழ்க்கை ' என்பதைப் படிக்கும் பலரும் அதன் பொருளைச் சரியாகப் புரிந்து கொண்டிருப்பார்களோ என்கின்ற ஐயம் எனக்கு உண்டு.

தமிழரசு

பதிவு எண். M. 887

# இனியது! இனியது!!

பசுமைப் புரட்சியால் உற்பத்திப் பெருக்கம்!

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள்! உதவிகள்!

புதிய முயற்சிகளால் தொழில்துறை வளர்ச்சி!

நல்வாழ்வு வழங்கும் திருப்பணிகள்!



இனிய வாழ்வுக்கு
இனிய எதிர்காலத்துக்கு
இனிய திட்டம்.

## நாட்டின் நல்வாழ்வுக்கும் வீட்டின் பெருமகிழ்ச்சிக்கும் திட்டமிட்ட குடும்பமே அடிப்படையாகும்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை



# தமிழரசு

1-10-1974 50 காசு

# உங்களுக்கு 40,...45 வயது இருக்குமா?

## பென்ஷன் ஒன்றை அடைய இனியும் தாமதம் வேண்டாம்

நீங்கள் ஓய்வு பெறும்போது கூடுதல் பாதுகாப்பு பெற இதோ ஒரு விசேஷ திட்டம். தபால் நிலையம் ஒன்றில் (தேசிய சேமிப்பு பத்திரம் Vவது வெளியீட்டை கேட்டு வாங்கி) மாதம் 100 ரூபாய் வீதம் அடுத்த 7 ஆண்டுகளுக்கு நீங்கள் சேமித்து வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது உங்களுக்கு 1981-லிருந்து மாதம் 198 ரூபாய் வீதம் 7 ஆண்டுகளுக்குக் கிடைக்கும்.

**1981-க்குப் பிறகு கூடுதல் அனுகூலம் உண்டு—**

இந்தத் திட்டத்தைத் தொடருங்கள். ஒவ்வொரு மாதமும் கிடைக்கும் தொகையுடன் 2 ரூபாய் மட்டுமே கூடுதலாகச் சேருங்கள்; புதிய பத்திரங்களை வாங்குங்கள். அடுத்த 7 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1988-லிருந்து உங்களுக்கு மாதம் 396 ரூபாய் வீதம் 7 ஆண்டுகளுக்குக் கிடைத்து வரும்.

ஆரம்பத்தில் நீங்கள் பிரதி மாதமும் சேமித்த 100 ரூபாய் கிட்டத்தட்ட நான்கு மடங்காகப் பெருகியிருக்கும்.

இந்த திட்டத்தில் சேர வயது வரம்பு எதுவும் கிடையாது. ஆண், பெண் எவரும் சேரலாம்.

100 ரூபாய்க்கு அதிகமாகவும் நீங்கள் சேமிக்கலாம். மாதம் 200 ரூபாயோ, 300 ரூபாயோ, 500 ரூபாயோ சேமிக்கலாம். அதிகமாகச் சேமித்தால் கூடுதல் பயன் கிடைக்கும்.

| நீங்கள் சேமிப்பது | | உங்களுக்குக் கிடைப்பது |
|---|---|---|
| முதல் 7 ஆண்டுகள் | இரண்டாவது 7 ஆண்டுகள் | மூன்றாவது 7 ஆண்டுகள் |
| மாதம் 100 ரூபாய் | மாதம் 2 ரூபாய் | மாதம் 396 ரூபாய் |

உங்களுடைய தபால் நிலையத்தில் விசாரியுங்கள். அல்லது

**நாக்பூரிலுள்ள தேசிய சேமிப்பு கமிஷனருக்கு எழுதுங்கள்.**

தேசிய சேமிப்பு நிறுவனம்

davp 74/192


# சன்ன அரிசி தரும் பொன்னி பயிரிடுவீர்!

உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களுள் 'ஐ.ஆர். 20' ரகத்திற்கு அடுத்தபடியாகப் பெரும் புகழ் பெற்று விளங்குவது, 'பொன்னி' ரகமே! சன்னமான அரிசியைத் தரும் 'பொன்னி' நெல்லிற்கு விற்பனைக் கூடங்களில் நல்ல விலை கிடைக்கிறது! அண்மைக் காலத்தில் 'பொன்னி நெல்', 57 கிலோ கொண்ட மூட்டை ரூபாய் 120 வரை விற்றுள்ளது! இதே நிலைமையில் எப்பொழுதும் 'பொன்னி' நெல் விற்காதெனினும், மற்ற ரகங்களின் விலையைக் காட்டிலும் பொன்னி நெல்லுக்கு எப்பொழுதுமே மூட்டைக்கு 5 முதல் 10 ரூபாய் அதிகம் கிடைக்கும் என்பது திண்ணமாக உள்ளது!

'பொன்னி' நெல் ரகம் 140 நாட்களில் ஏக்கருக்குச் சராசரியாக 30 மூட்டைக்குக் குறையாமல் (ஒவ்வொன்றும் 75 கிலோ கொண்டது) மகசூல் கொடுப்பதுடன், பல உழவர் பெருமக்களின் பண்ணைகளில் ஏக்கருக்கு 40 முதல் 45 மூட்டைகள் வரை மகசூல் கொடுத்து உள்ளது.

சன்ன அரிசியையும், அதிகமான மகசூலையும் கொடுப்பதுடன், பல்வேறு மண் வயணத்திற்கும் ஏற்றதாகவும், சம்பா, தாளடி ஆகிய இரு பட்டத்திற்கும் ஏற்றதாகவும், குறிப்பாகக் கெட்டியான களிமண் நிலங்களிலும் (Heavy clay), தண்ணீர் நன்கு வடியாத மண்களிலும், நீர்த் தேங்கும் பகுதிகளிலும் குறைந்த அளவு ரசாயன உரத்திலேயே நல்ல மகசூல் தரக் கூடியதாகவும் 'பொன்னி' விளங்குகிறது. எனவேதான், தமிழக முற்போக்கு உழவர் பெருமக்கள் 'பொன்னி' ரக நெல் பயிரிடுவதில் பேரார்வம் காட்டி வருகின்றனர்.

'பொன்னி' ரகம் எல்லா மாவட்டத்திற்கும் ஏற்றதாக இருக்கிறது. எனவேதான், இந்த ஆண்டின் முன் பருவத்தில் (Khariff season) — அதாவது சம்பா, தாளடி பட்டங்களில்— தமிழ் நாட்டில் பின்கண்டவாறு மொத்தம் 11.535 இலட்சம் ஏக்கரில் 'பொன்னி' ரகத்தைப் பயிரிட தமிழ் நாடு வேளாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது.

பொன்னி பயிரிட வேண்டிய இலக்கு

| மாவட்டம் | பரப்பு (இலட்சம் ஏக்கர்) |
|---|---|
| செங்கற்பட்டு ... | 0.570 |
| வடஆர்க்காடு ... | 0.590 |
| தென்ஆர்க்காடு ... | 1.690 |
| திருச்சி ... | 0.660 |
| புதுக்கோட்டை ... | 0.475 |
| திருநெல்வேலி ... | 0.2[illegible] |
| கன்னியாகுமரி ... | 0.050 |
| கோவை ... | 0.060 |
| சேலம் ... | 0.130 |
| தருமபுரி ... | 0.100 |
| மதுரை ... | 0.500 |
| இராமநாதபுரம் ... | 1.000 |
| தஞ்சாவூர் ... | 5.420 |
| மொத்தம் ... | 11.535 |

எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றதாக உள்ள 'பொன்னி' ரக நெல்லைப் பயிரிட கீழ்க் கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of practices) மேற்கொள்ளும்படி தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

### ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

**பருவம்**

சம்பா, தாளடி ஆகிய இரு பட்டத்திற்கும் ஏற்றது.

**நாற்றுவிடும் காலம்**

பொதுவாக ஆகஸ்டு முதல் நவம்பர் வரை நாற்று விடலாம்.

தஞ்சை மாவட்டத்தில் தாளடிப் பட்டத்திற்கு அக்டோபர் 10-ஆம் தேதிக்குள் நாற்று விடுதல் சிறந்தது.

திருச்சி மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் நாற்று விடுதலே அதிக மகசூல் தருவதாகத் தெரிய வருகிறது.

கோவை, சேலம், தருமபுரி மாவட்டங்களில் பின் சம்பா பட்டத்தில் (செப்டம்பர், அக்டோபர்) நாற்று விடலாம்.

**விதையளவு**

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ விதையை நாற்று விட வேண்டும்.

**விதை நேர்த்தி**

விதை மூலம் நோய் பரவுவதைத் தடுக்க, ஒரு கிலோ

விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' மருந்து வீதம் கலந்து, விதைக்கும் கருவியில் இட்டு, விதையுடன் மருந்து நன்கு கலக்கும்படி செய்ய வேண்டும்.

### நாற்றங்கால்

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எருவிட்டு, இரும்புக் கலப்பையால் உழுது சேருக்கி, ஒவ்வொன்றும் ஒரு சென்ட் பரப்பளவு (54 அடி நீளம் × 8 அடி அகலம்) உள்ள பாத்திகளாக அமைத்துக் கொள்ளவும். மேடைப் பாத்திகள் அமைப்பது சிறந்தது.

### விதைத்தல்

ஒரு சென்ட் பாத்திக்கு 1.5 கிலோ விதை வீதம் விதைக்க வேண்டும்.

### நடவு வயல் தயாரித்தல்

நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவும். ஏக்கருக்கு 12 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) இட்டு மண்ணுடன் நன்கு கலக்கும்படி உழுது விடவும். அல்லது தழை எரு கிடைத்தால் ஏக்கருக்கு 5 வண்டி வீதம் இட்டு, தழை மிதிக்கும் கலப்பையால் தழைகளை அமிழ்த்தி விடவும்.

### அடியுரம்

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து வீதம் அடியுரம் இட வேண்டும்.

திருச்சி மாவட்டத்திற்கு ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல் சத்து வீதம் அடியுரம் இட வேண்டும்.

தஞ்சாவூர், திருச்சி மாவட்டம் தவிர்த்த மற்றெல்லா மாவட்டங்களிலும் ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்து வீதம் அடியுரம் இட வேண்டும்.

இந்த அளவுச் சத்துக்களை அளிக்க பின்கண்டவாறு உரமிடலாம் :



### தஞ்சாவூர் மாவட்டத்திற்கு

20 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து அளிக்க 88 கிலோ 17 : 17 : 17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தையும், 11 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

100 கிலோ 15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் உரத்தையும், 11 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

டை-அமோனியம் பாஸ்பேட்—35 கிலோ+

யூரியா—30 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—25 கிலோ ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

### திருச்சி மாவட்டத்திற்கு

20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச் சத்து, 20 கிலோ சாம்பல் சத்து அளிக்க பின்கண்டவாறு உரமிடலாம் :

யூரியா—44 கிலோ+

சூப்பர் பாஸ்பேட்—125 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—33 கிலோ.

அல்லது



17:17:17 காம்ப்ளெக்ஸ்—120 கிலோ.

அல்லது

டை-அமோனியம் பாஸ்பேட்—44 கிலோ+

யூரியா—26 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—33 கிலோ.

### இதர மாவட்டங்களுக்கு

30 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்து அளிக்க 147 கிலோ 17:17:17 காம்ப்ளெக்ஸ் உரத்தையும், 11 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

யூரியா—65 கிலோ+

சூப்பர் பாஸ்பேட்—155 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—42 கிலோ.

அல்லது

டை-அமோனியம் பாஸ்பேட்—54 கிலோ+

யூரியா—44 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—42 கிலோ.

அடியுரத்தைக் கடைசி உழவில் இட்டு பரம்படிக்கவும்.

### நடுதல்

நாற்றுவிட்ட 30-வது நாளில் நாற்றைப் பறித்து, 15 சென்டிமீட்டர் × 10 சென்டிமீட்டர் (6 அங்குலம் × 4 அங்குலம்) இடைவெளியில் நடவேண்டும்.

### களை எடுத்தல்

நடவு செய்த 15-வது நாளும், 30-வது நாளும் களை எடுத்தல் வேண்டும். தேவையானால் பூ வெளிவரும் சமயத்திலும் ஒரு தடவை களை எடுக்கலாம்.

### மேல் உரமிடுதல்

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய ஆற்றுப் பாசன பகுதியில் நடவு செய்த 20-வது நாளில், முதல், முறையாக ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்; இரண்டாம் முறையாக, நடவு செய்த 50 முதல் 55 நாட்களில் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பழைய டெல்டாப் பகுதியில் நடவு செய்த 50 முதல் 55 நாட்களில் ஒரே முறையாக 20 கிலோ தழைச் சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

மற்ற எல்லா மாவட்டங்களிலும் (திருச்சி உட்பட) நடவு செய்த 15-வது நாளில் முதல் முறையாக ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவைத் தூவி விடவும். நடவு செய்த 45-ஆம் நாளில், இரண்டாம் முறையாக 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

### பயிர் பாதுகாப்பு

**நாற்றங்காலுக்கு :** நாற்றுப் பறிப்பதற்கு 7 நாட்கள் முன்னதாக, அதாவது நாற்று விட்ட 23 நாளில் 25 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 50 மில்லி லிட்டர் 'என்டரின்' மருந்தை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து 12 சென்ட் நாற்றங்காலுக்குத் தெளிக்கவும்.

**நடவு வயலுக்கு :** நடவு செய்த 21-ஆம் நாள், முதல் முறையாக 'பாரத்தியான்' 200 மில்லி லிட்டர் அல்லது 'என்டரின்' 400 மில்லி லிட்டர் அல்லது 'சுமாதியான்' 250 மில்லி லிட்டர் அல்லது 'லெபாசிட்' 200 மில்லி லிட்டர் அல்லது 'டைமெக்ரான்' 110 மில்லி லிட்டர் அல்லது 'தயோடான்' 300 மில்லி லிட்டர் மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து அத்துடன், 'டைத்தேன் இசட்' 78-ல் 400 கிராம்,

அல்லது

டைத்தேன் எம். 45-ல் 400 கிராம்

அல்லது

'ஹினோசான்' 300 மில்லிட்டர் மருந்தைக் கலந்து கையால் இயங்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

விசைத் தெளிப்பான் பயன்படுத்துவதாய் இருந்தால், மேற்கூறிய அளவு மருந்தையே 60 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

நடவு செய்த 42-ஆம் நாள் மேற்கூறியவாறே இரண்டாம் முறையாக மருந்து தெளிக்கவும்.

நடவு செய்த 63-ஆம் நாள் மேற்கூறியவாறே மூன்றும் முறையாக மருந்து தெளிக்கவும்.

### மகசூல்

மேற்கூறிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டால், தஞ்சை மாவட்டத்தில் ஏக்கருக்கு 60 கலத்திற்குக் குறையாமல் மகசூல் எடுக்க முடியும். மற்ற மாவட்டங்களில் ஏக்கருக்கு 2,250 கிலோவுக்குக் குறையாமல் (75 கிலோ கொண்ட மூட்டை—30) மகசூல் எடுக்கலாம்! உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,375 கிலோ (45 மூட்டை) வரை மகசூல் எடுக்க முடியும்!

எனவே, சன்ன அரிசி தரும் பொன்னியைப் பயிரிட்டு, அதிக இலாபம் பெற்றுப் பயன் அடையுமாறு தமிழக உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

தொலைபேசி எண் : 292

ஸ்தாபிதம் : 1957

## க்யூ. 849 அருப்புக்கோட்டை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை,

இராமநாதபுரம் மாவட்டம்.

"அருவை டெக்ஸ்"

எங்கள் சங்கத்தில் நேர்த்தியானதும், திடமானதுமான 20, 40, 2/20, 2/40, 2/60, 2/80 நூல்களில் வேஷ்டி, துண்டு, வெள்ளை & கலர் 50" பீஸ்கள், கைலிகள் தயார் செய்கின்றோம். எங்கள் சங்க ஜவுளிகள் மலிவான விலையில் அருப்புக்கோட்டை நூல் கடை பஜாரிலுள்ள 378-ஏ, 1-5/நிர். கதவு இலக்க எங்கள் சங்க டிப்போவிலும், எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

## விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



## அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR I C CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

i/DSIC/1813TMA



இலக்கியங்களுக்கு

இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர் களின் எண்ணங்களும், கருத்துக் களும் காலத்தால் அழிவுரு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

# சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

*The Watermark of Quality*

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்




# பாடுபடப் பாடுபட....!

### எடுப்பு

பாடுபடப் பாடுபடப் பலன்தருமே பூமி
பசிதீர நாள்தோறும் உழைக்கவேணும் சாமி (பாடு)

### தொகுப்பு

ஈடுஇணை இல்லாத தொழில்இதனை நம்பி
ஏமாந்து போனவர்கள் யாருமில்லை தம்பி (பாடு)

### முடிப்பு

இல்லையில்லை என்றுசொல்லி ஏங்கியே குந்தி
இருப்பவனைச் சிரிப்பாளே நல்லநில மங்கை
தொல்லைகளை ஏற்கஅஞ்சும் ஒருகோழை என்றும்
சோம்பேறி செல்வத்தைத் தொடமுடியா ஏழை (பாடு)

பஞ்சங்கள் பறந்தோட வேண்டுமெனில் பச்சைப்
பயிர்விளையும் பாத்திகளில் நீர்வழிய வேண்டும்
அஞ்சாமல் களையகற்றி, பூச்சிகளைக் கொன்று
அருமையாய் உரமிட்டுக் காவல்காக்க வேண்டும்

காஞ்சிகரி காலன்வைகை காவேரி பெண்ணை
கண்ணகிகரு ஜூபவானி ஐயாறிருப—தெட்டு
நோஞ்சலான பழையநெல்லை மாற்றியேவி தைத்து
நோகாமல் நஞ்சையிலே மிகுவிளைச்சல் தருவோம் (பாடு)

வரிசையுடன் பாரதிசு ஜாதாவர லக்ஷ்மி
வனிதையரின் பெயரல்ல புனிதமாம் பருத்தி
தரிசாகக் கிடக்கின்ற கரிசல்நிலம் எங்கும்
தயங்காமல் புதுமையாய்ப் பஞ்சுவிளை விப்போம்

உருப்படியாய் வாழ்ந்திடவும் ஊட்டமான சத்து
வழங்கிடவும் மரவள்ளிக் கிழங்குபயிர் செய்வோம்
பருப்புவகை நிரப்பிடுவோம் எண்ணெய்விலை குறைப்போம்
பயன்மிக்க காய்கனிகள் உயர்வாகக் கொய்வோம் (பாடு)






கவிஞர் கருணானந்தம்

# அண்ணல் மொழி கேளீர்!



அகிம்சை என்பது அயராத அன்பு ; அதுவே செந்நெறி. அதன் வாயிலாகவே மனித சமூகத்தைக் காத்தல் இயலும்.

* *

அகிம்சை கோழையின் ஆயுதம் அன்று ; அது வீரனின் ஆயுதம். அகிம்சையில் உறுதியுடையவன் ஆண்டவனிடத்து உறுதியுடையவன்.

* *

இறக்க அஞ்சுகிறவன் மகாவீரரையோ புத்தரையோ, வேதங்களையோ பின்பற்றுகிறவன் அல்லன். மகாவீரரும் புத்தரும் போர்வீரர்கள்; டால்ஸ்டாயும் அவ்வினத்தவரே.

* *

கொட்டும் குருதி நம்முடையதாக இருக்க வேண்டும். மற்றவரின் இரத்தம் சிந்தாமல் அவர்களின் வாளால் இறக்கத் துணியும் வீரத்தில் அகிம்சை இருக்கிறது.

* *

அகிம்சை, அஞ்சாமையின் உச்சியில் நிலவுவது. இம்சையில் தேர்ச்சி பெற்றவர்க்கு அகிம்சையின் சிறப்பை எளிதில நிறுவிக்காட்ட என்றால் இயலும். பல்லாண்டுகள் யான் கோழையாக இருந்தபொழுது மூர்க்க நெறியைக் கடைப்பிடித்திருந்தேன். எனது கோழைமையை உதிர்க்கத் தொடங்கியபோதே அகிம்சையையும் போற்றி மதிக்கத் தொடங்கினேன்.

* *

தாய்மொழிக் கல்வி மிகவும் முக்கியம். அம்மொழியிலுள்ள எல்லா நூல்களும் அடங்கிய ஒரு கருவூலம் அமைக்க எண்ணியிருக்கிறேன்.

* *

உண்மையில் அழகைக் காணும் ஆற்றல் இல்லாத குருடனாகவே மனிதன் இருக்கிறான். அவன் எப்பொழுது உண்மையில் அழகைக் காணத் தொடங்குகிறானோ அப்பொழுதுதான் உண்மைக் கலையும் பிறக்கிறது.

* *

சமயத்தின் சாரம் ஒழுக்கமே.





என்னுடைய சமயம் சிறைக்கூடு போன்றதன்று. கடவுட் படைப்புக்குட்பட்ட எல்லாவற்றிற்கும் அதனிடத்தே இடமுண்டு.

* *

கடவுள் எங்கோ விண்ணுலகில் இருக்கிறார் அல்லது கீழே அதள பாதாளத்தில் இருக்கிறார் என்று எண்ணுவதும் பேசுவதும் மடமை; அவர் நாம் காணும் ஒவ்வொரு பொருளிலும் இருக்கிறார்.

* *

யாரைக் கண்டும் பொறாமைப்படாதவன் பக்தன். உள்ளத்தில் இரக்கம் நிறைந்தவன் பக்தன். நான், எனது என்னும் அகந்தையைக் கல்லி யெறிந்தவன் பக்தன். சுகம் துக்கம் என்கிற வேறுபாட்டைக் கருதாதவன் பக்தன்.

* *

மலச்சிக்கல்தான் எல்லா நோய்களுக்கும் அடிப்படை. அதேபோல, பொய்மைதான் அத்தனை குற்றங்களுக்கும் அடிப்படை.

* *

சத்தியத்தினும் சிறந்த சமயம் ஒன்றில்லை என்பது எனது பிறழாத உறுதி.

* *

ஒரு நாணயத்தின் ஒருபக்க முத்திரை அன்பு ; மறுபக்க முத்திரை உண்மை.

* *

இவ்வுலகில் எவர்க்கும் நான் அஞ்சேன். இறைவன் ஒருவனுக்கே அஞ்சுவேன். யாரொடும் பகை கொள்ளேன். எவருடைய அநியாயத்திற்கும் இணங்கேன். பொய்மையைச் சத்தியத்தால்-மெய்மையால் வெல்வேன். பொய்மையொடு போராட எல்லாத் துன்பங்களையும் ஏற்பேன்.

* *

முதலில் உண்மையைத்தான் தேடிக் காண வேண்டும். அப்புறம் அழகும் நலனும் தாமே கிட்டும்.

* *

நான் பரிபூரணமானவன் என்று உரிமை கொண்டாடவில்லை. உண்மையைத் தேடிச் செல்வதில் தணியாத ஆர்வம் கொண்டவன் என்ற உரிமையைத்தான் கொண்டாடுகிறேன்.

* *

உண்மை என்பது கடவுளின் மற்றொரு பெயர்தான்.

* *

அகிம்சையைவிட உண்மையினிடத்தில் எனக்குப் பக்தி அதிகம்.

* *

ஆடவன் ஆடவனாக இருந்துகொண்டே பெண்ணாக வேண்டும் - பெண் பெண்ணாக இருந்துகொண்டே ஆடவனாக வேண்டும் என்பது எனது பெருவேட்கை. ஆடவன் பெண்ணாவதென்றால் அவன் பெண்ணுக்குரிய பணிவும் விவேகமும் பெறுதல் ; பெண் ஆடவனாவதென்றால் அவள் தனது கோழைத்தனத்தை உதறி விட்டுத் துணிவும் வீரமும் பெறுதல் என்பதுதான்.

* *

பெண்களிடத்தே இன்று நாம் பல குறைபாடுகளைக் காண்கின்றோம். அதற்கெல்லாம் காரணம் ஆடவர்களே என்பதை ஆடவர்கள் ஒப்புக்கொள்ளாத வரையில் பெண்கள் முன்னேற முடியாது.

* *

பெண்ணாக நான் பிறந்திருந்தால் பெண்களெல்லாம் தம் கைப்பாவைகள் என்று ஆண்களிடையே நிலவும் கட்டுக் கதையை எதிர்த்துப் புரட்சி செய்வேன்.

# உறுதியாகத் தெரியுமா?



**நீங்கள் வாங்குவது மட்ட ரகப் போலி அல்ல, ஜெனித் குழாய் தான் என்று உறுதியாகத் தெரியுமா? குழாய் மீது ஜெனித் அடையாளம் இருக்கிறதா பாருங்கள்.**

பார்த்து வாங்கினால் பலனுண்டு. ஏனெனில், அசல் ஜெனித் எஃகுக் குழாய்களை வாங்கும்போது தரமான எஃகுக் குழாய்களைப் பெறுகிறீர்கள், 45 நாடுகளுக்கு ஏற்றுமதி பெறத்தக்க, சர்வதேசத் தரம் பொருந்திடத் தயாரிக்கப்படும் குழாய்களை அடைகிறீர்கள். கூறாகப் பரிசோதிக்கப்படுகின்றன நிலைகளிலே ஓர் ஆயுட்காலம் நீடித்துழைக்கும் அளவுக்கு, ஆதலால் இயல்பான பலவீனமான இடமே இல்லாமல் ஒருசீரான சுவர்ப் பருமனும், வலிமையும், கட்டுறுதியும் படைத்துள்ள எஃகுக் குழாய்கள் இவை. விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் எதற்கும் சரி, எவ்விதத் தேவைக்கும் யாவரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பது ஜெனித்.

ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிட்.,
195, சர்ச்கேட் ரிக்ளமேஷன்,
பம்பாய் 400 020.
போன்: 294445. தந்தி: ZENPIPES
டெலெக்ஸ் 011-2458.




everest/867a/ZSP-tm


# மழைக் காலம்

— கவிஞர் வெ. கலைக்கூத்தன் —



அலைமேகம் தனைப்பிடித்து மென்தன்மை கொடுத்து
அழகுமிகு சேலைகளாய் அதைநெய்து எடுத்துக்
கலைமேவும் ஓவியம்போல் உலவிவரும் பெண்கள்
கண்கூச அணிந்துவரும் பவனிதனைக் கண்கள்
வலைவீசும் காளையர்க்கு விருந்தாகக எண்ணி
வந்தமழை நனைத்துவிடச் சிலையான கன்னி
தலைசாய மிகநாணித் நடிநடையில் கோலம்
தான்மின்ன நெஞ்சிலிடி தாக்குகின்ற காலம்!

ஒருகுடையில் இருஉருவம் ஒன்றிவரச் செய்து
உடல்நனைதரும் சூடேற்றி நடைதளர்த்தும் காலம்!
மறுபடியும் இந்தமழை என்றுவரு மென்று
மண்பார்த்த விவசாயி விண்பார்க்கும் காலம்!
தெரியாமல் வீட்டார்க்குச் சிறிசுகளும் ஓடித்
தெருத்தேங்கும் ஓடைகளில் இருபாலர் கூடிச்
சரிநிகராய் விளையாடி வீடுவந்து சேர்ந்து
தாய்களிடம் வசவுகளை வாங்குகின்ற காலம்!

பள்ளிசென்ற சின்னஞ்சிறு பசுந்தளிர்கள் எல்லாம்
பழகிடுநூல் நனையாமல் காப்பாற்ற எண்ணி
கொள்ளாத்தன் மேற்சட்டைக் குள்ளவைகள் திணித்துக்
கொண்டாட்டம் போட்டாங்கே குதித்துத்தான் நனைந்து
துள்ளிவரும் பாங்குதனைக் கண்டிநொய் ஓடித்
துடிதுடித்து முந்தானை தானெடுத்துத் துவட்டி
அள்ளித்தன் மார்போடு அணைத்துடையை மாற்றி
அழுநூட்டும் காட்சிமிக நல்குகின்ற காலம்!

கார்முகிலும் திரண்டுவந்து கடல்வண்ணம் காட்டக்
கண்டமயில் இனந்தோகை விரித்தாடும் காலம்!
ஏர்கலப்பை தோள்சுமந்து எருதுமுனம் நடக்க
இவ்வுலக உயிர்நாடி வயல்வரப்பைக் கடக்க
பார்வைதனைப் பயிர்நலத்தில் செலுத்தியகம் வந்தும்
பாசமிகு மனைவியைத்தான் அணைக்கமழை பெய்யின்
கோர்வையுடன் வருநெஞ்சில் வயற்காட்டின் நினைவு
கொள்ளன்பை இருபிரிவாய் அவனுக்கும் காலம்!

காட்டாற்றில் வருவெள்ளம் கரைகடக்கும் மழையால்
கால்நடைகள் மிகவிரைந்து வீடுவந்து சேரும்
கோட்டானும் குருவிகளும் கூடேகும் ஏழைக்
குடிசைகளும் தண்ணீரில் மிதந்துவரும் காலம்!
பாட்டாளி வீடுகளில் வெள்ளம்புக அந்தப்
பக்கமுள்ள பள்ளிமக்கள் தங்குகின்ற காலம்!
பாட்டளவில் அடங்காது இரண்டுமுண்டு எனினும்
பாருக்கு மழைகாலம் இயற்கைதரும் பரிசு!





# திருக்கானப்பேர் தெரியுமா?

சங்க காலத்திலிருந்து வரும் ஊர் திருக்கானப்பேர்.

இந்த ஊரை தெட்சிணகாளிபுரம் சோதிவனம் மந்தாரவனம் மோட்சபிரதம், சைவஷேத்திரம், காந்தாரம், தவசித்திகரம், தேவதாருவனம், பூலோக கைலாசம், அகத்திய ஷேத்திரம், மகா காளபுரம் என்று பல பெயர்களில் அழைக்கிறார்கள்.

திருவாரூர் தேருக்குள்ள பெருமை போல இந்த ஊரின் தேருக்கும் பெருமை உண்டு.

பழைய தேர் இழுக்க முடியாமலே போய்விட்டது. அவ்வளவு பெரியதாம்.

சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் தம் திருப்பதிகங்களால் பாடிய பெருமை பெற்றது இவ்வூர்.

இன்னும் தெரியவில்லையா?

சிவகங்கைச் சீமையில் வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட மான மறவன் பெரிய மருது திருப்பத்தூரில் தூக்குக்கயிற்றை முத்தமிட நேர்ந்தாலும் இந்த ஊரில் தான் அவரின் கல்லறை உள்ளது.



சிவகங்கை ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே பத்தாவது மைலிலும், தேவகோட்டையிலிருந்து மேற்கே தேவகோட்டை-மானாமதுரைப் பாதையில் இருபதாவது மைலிலும், மதுரை-தொண்டிப் பாதையில் மதுரையிலிருந்து நாற்பதாவது மைலிலும் அமைந்துள்ள காளையார் கோயில்தான் அந்த ஊர்.





இராமேசுவரம் கோயில் போன்று அமைந்துள்ள முற்றுப் பெறாத வெளிப்புறச் சுற்று

காளையார் கோயிலுக்குப் பண்டைக் காலத்தில் வழங்கிய பெயரே திருக்கானப்பேர்.

சிவகங்கை அரண்மனை அறநிறுவனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட திருவாலயங்கள் எண்பத்து ஐந்தாகும். அந்த ஆலயங்களில் ஒன்றுதான் காளையார் கோவில் திருக்கோயில். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர்கள் காளீசர், சோமேசர், சொக்கநாதர் என்பதாகும்.

சிவகங்கைச் சீமையை ஆண்ட முத்துவடுகநாதர் காளீசரை விருப்ப தெய்வமாகக் கொண்டாடினாராம்.

வீரசேன பாண்டியனின் பிள்ளையில்லாக் குறை இத்தலத்திற்கு வந்து வழிபட்டதால் நீங்கிற்று. வரகுண பாண்டியன் சோழ மன்னனை வெற்றி கொள்ளக் காளீசுவரர் திருவருள் செய்தார். விக்கிரம சோழன் காளீசரை வணங்கிப் புத்திரப் பேறடைந்தான் என்பன போன்ற பல செய்திகள் இங்குக் கூறப்படுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புற்று விளங்கும் இவ்வூர் ஆலயம் திருவிழாக் காலங்களில் மட்டுமே மிகுந்த கூட்டத்துடன் விளங்கும் என்று தெரிகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயத்தில் திருப்பணி நடைபெற்று வருகிறது. செங்கற்களாக இருந்த பகுதிகளைக் கருங்கற்களால் கட்டி வருகிறார்கள்.

இராமேசுவரம் கோயிலின் சுற்றுப் பிரகாரத்தினைப் போன்று அதே மாதிரி கல் தூண்களை அமைத்துக் கட்டி வந்துள்ளார்கள். நீண்ட நாளாகியும் முற்றுப் பெறாத நிலையிலே அந்தப் பணிகள் உள்ளன.

ஆலயத்துக்குச் சேரும் நிதி அவ்வளவு பெருந்தொகையாக இராது என்ற எண்ணம் நம்முள் எழுகிறது.

ஆலய நிருவாகப் பொறுப்புள்ளவர்களிடம் வினவுகிறோம். அவர்களும் ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் உணர்ந்து இந்த ஆலயத்தைக் காண வருபவர்கள் ஏராளம்! வழிபாட்டுக்கு வந்து காணிக்கைச் செலுத்தி செல்வார்கள் எண்ணிக்கை ஏனோ அந்த அளவுக்கு இல்லை.

எனினும் சிவகங்கை அரண்மனை அறநிறுவனத்தைச் சேர்ந்த ஏனைய ஆலயங்களின் மிகுதியான வருவாய் இவ்வாலயத்திற்குப் பயன்படக்கூடிய வாய்ப்பு உண்டு. வேறுவகையில் குறைவில்லாமலே ஆலயத்தின் அன்றாடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.




இறைவன் வழிபாட்டின்போது பாடுவது மட்டுமல்லாது நாட்டியம் ஆடிக்கொண்டு வழிபாடு செய்யும் 'நாட்டியக்கட்டளை' என்ற அறக்கட்டளையின்படியும் இங்குப் பூசை நடைபெறுகிறது.

கோயிலின் வாகனங்கள் அனைத்தும் காணத் தகுந்தவை. மிகப் பெரியவை.

கோயிலின் உள்ளே கிழவன் சேதுபதி சிலையையும், மருது சகோதரர்கள் சிலையையும் காணலாம். முத்துவடுக நாதர் உருவமும் ஓரிடத்தில் அமைக்கப்பெற்றுள்ளது.

காளீசர் சன்னதிக்கு நேராகக் கோயிலுக்கு வெளியே ஒரு பர்லாங் தொலைவில் அமைந்துள்ளது பெரிய மருதுவின் சமாதி. 1748-ஆம் ஆண்டில் சிவகங்கைச் சீமையில் தோன்றிய அந்த மானமறவன் 27.10.1801 அன்று மறைந்ததை அங்குக் குறிப்பிட்டுள்ளனர்.

வீரம் கமழ்ந்த மண்ணின் பல செய்திகள் நம் நினைவுக்கு வருகின்றன.

அவைகளை நினைந்தவாறு மீண்டும் கோயில் பகுதிகளைச் சுற்றி வந்தோம். அதோ தெப்பக்குளம் தெரிகிறது. அதன் ஒரு கரையில் நின்று நடுவிலுள்ள மண்டபத்தைக் காணுகின்றோம் கோயில் கோபுரமும் தெரிகிறது. மாலைக் கதிரவனின் பொன்னொளியால் கோவிலின் கோபுரம் புதிய வனப்புடன் திகழ்கிறது; நம் நெஞ்சம் மயங்குகிறது.

நம் கண்முன்னே காணும் வனப்புக்கு ஈடில்லை!

இது காளையார் கோயிலுக்குள்ள பெருமை.

—மாறு

# தமிழும் தமிழரும்



தென்னுப்பிரிக்காவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல் வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது, மனங்கவரும் ஓர் இனிய மொழி.

* * *

தமிழ் மக்களுள் பண்டை நாளிலும்—இந்நாளிலும் கூடப் பல அறிஞர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக் கிடைக்கின்றது. இந்தியாவில் ஓரினம் ஏற்படவேண்டுமாயின் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவர்களும் தமிழுணர்தல் வேண்டும்.

* * *

தமிழ்மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன்பிறந்தவர் போலத் தோன்றுகிருர்கள்.

* * *

தமிழ்மொழிப் பயிற்சியைப் பற்றி நான் ஒன்றுங் கூறுவதில்லை என்று சிலர் என்மீது பழி சுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என் மீது அப்பழியைச் சுமத்தமாட்டார்கள். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர் தமிழ்மொழி பயிலவேண்டும் என்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். 1915 - ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்தைவிடத் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ்மக்களை வேண்டிக் கொண்டேன்.

* * *

இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆசையே யாகும்.

* * *

தமிழ்மொழியில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினுனில்லை. அது குறித்து நான் அடையும் வருத்தத்திற்கு ஓர் அளவில்லை.

* * *

தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம்மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளை விடக் கூட முதன்மையாகக் கருதுதல் வேண்டும்.

—அண்ணல் காந்தியடிகள்




'பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ' என்று செயங்கொண்டார் பாடியதற்கு விளக்கம் இதோ—

ஊரெல்லாம் குறுகிவிட்டன, ஒன்று திரண்டுவிட்ட மக்கள் திரளால் ...

காணுமிடமெல்லாம் மக்கள் கடல்.

கண்படுமிடமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம்.

வல்லநாடு எல்லாம் மக்கள் தலைகளால் நிரம்பி வழிந்தது.

நெஞ்சம் நிறைந்த உணர்ச்சிப் பெருக்கு பாஞ்சைப் பகுதிஎங்கும் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

எங்கும் விழாக் கோலம்.

எழுச்சியின் வேகம்.

பண்டை நாள் ஆண்ட மன்னர் மீண்டும் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து பார்த்தால் நம்புவரோ என்னவோ!

இப்படியொரு காட்சியை எண்ணிப் பார்க்கவே முடியாதே!

புதைந்த வரலாற்றுச் சின்னத்துக்குப் புத்துயிர் ஊட்டும் திருப்பணியல்லவா நடந்திருக்கிறது! பொட்டல் வெளியாக்கப்பட்ட இடத்தில் புகழ்பாடும் கோட்டையல்லவா எழுந்துள்ளது!

ஈடில்லாப் பெருமையை எண்ணி மகிழ்ந்து வீறு நடை போட்டு விழாக் காணச் சென்று கொண்டிருந்த என்னை அந்தப் பெரியவர் அழைத்தார்.

தள்ளாத வயது அவருக்கு, ஆனுல் தளராத உடலமைப்பு.

மூப்பின் சாயல்தோன்றிடினும் முகத்தில் வீரம் செறிந்த வனப்பு.

முதுமை, அவருடைய கம்பீரமான தோற்றத்தைக் கண்டு அஞ்சி நெருங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்க வேண்டும்.

அவருடைய உடலமைப்பைக் கண்டு எனக்குக் கொஞ்சம் அச்சம் தோன்றினுலும் பாஞ்சை மண்ணில் அச்சம் வரலாமாஎன்ற துணிச்சலுடன் அவர் அருகில் சென்றேன்.

''தம்பி! இந்த விழாவைக் காண்பதில் நீ எவ்வளவுஆனந்தப் படுகிருயோ அதே போன்று பல மடங்கு மகிழ்ச்சி அடைய உரிமை உடையவன் நான்''—என்றவர் தொடர்ந்தார்.

''தம்பி! எந்தக் காலத்திலும் பாஞ்சாலங்குறிச்சியில் மக்கள் இப்படித் திரண்டது கிடையாது. வயது அதிகமாகி விட்டதால் இந்தப் பெருங் கூட்டத்தின் நடுவே செல்வது எனக்குக் கொஞ்சம் கடினம். எனக்குத் துணை வருகின்ருயா?

அவருக்கு நான் துணையா?

மாவீரனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அவர் எங்கே? நான் எங்கே? பதில் பேசாமல் அவரை நோக்கினேன். ஒளி உமிழும் அவரின் கண்களில் தெரிந்த வீரமும் ஆவலும் என்னைச் 'சரி' சொல்ல வைத்தன.

''வாங்க, போகலாம்'' என்று அழைத்துக்கொண்டு கூட்டத்தில் கலந்தேன்.

பெரியவர் துணைக்கு என்னை அழைத்தார். ஆனுல், எனக்குத் துணை வருபவர் போல வந்தார். அவருடைய நடையைக் கண்டோ என்னவோ எல்லாரும் ஒதுங்கி வழிவிட்டனர்.

பெரியவர் பேசிக்கொண்டே வந்தார். ''தம்பி, நாம் மக்கள் கூட்டத்தின் நடுவில் இருந்து கொண்டுதான் எல்லாக் காட்சிகளையும் காண வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் பகிர்ந்து கொண்டு நாம் அனுபவிக்க முடியும்''.

அவர் சொல்வதற்கெல்லாம் தலையசைத்து வந்தேன்.

பாஞ்சாலங்குறிச்சியில் காற்று மிக வேகமாக வீசியது. அதனுல் தான் என் தலையசைந்தது என்று நினைக்க வேண்டாம். பெரியவரின் கம்பீரமான தோற்றத்தைக் கண்ட எவரும் என்போல்தான் செய்வார்கள்.

ஊர்வலம் தொடங்கச் சிறிது நேரமாகும் போல் தோன்றியது. என் மதிப்புக்குரியவராகக் காட்சி அளிக்கும் அந்தப் பெரியவருக்குப் பாஞ்சாலங்குறிச்சியின் சரித்திரம் நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். அவரிடம் கேட்டேன்.

ஒரு வரலாற்றுப் பேராசிரியர் போல மிகத் தெளிவாக அவர் விளக்கினுர் :

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு-

தெலுங்கு தேசத்திலுள்ள பெல்லாரி வட்டாரத்தில் 'வாடிக் கோட்டை' என்ற பகுதியில் குறுநில மன்னனாக வாழ்ந்தவன் பாலராஜா. அவனுடைய எட்டாவது மைந்தன் பொம்மு.

வான் மழை பொய்த்ததால், வாழ்வு சிதைந்ததால் வாடிக் கோட்டையை விட்டு, வாழிடம் தேடித் திருநெல்வேலிச் சீமைப் பக்கம் வந்தான் பொம்மு.

அதுபோது—

தென்பாண்டி மண்டலத்தை ஆண்டுவந்த பாண்டிய மன்னர்கள் வலிவு குன்றி வாழ்ந்து வந்தார்கள். திசைக்கொருவராகக் குறுநில மன்னர்களாக வாழ்ந்தனர். சாலிக்குளம் அருகே அழகிய பாண்டியபுரம் என்ற ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டவன், ஜகவீர பாண்டியன் என்ற குறுநில மன்னன்.

ஜகவீர பாண்டியனைப் புதியம் புத்தூர் ஆரைக்குளம் முதலிய ஊர்களிலிருந்து குறுநில மன்னர்கள் எதிர்த்தார்கள். அவர்களை எதிர்க்கத் தன்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த கெட்டிபொம்முவை ஜகவீர பாண்டியன் துணைக்கு அழைத்தார்.

'மன்னர்க்கு உழைத்தல் தன் தலை கடனே' என்றுணர்ந்த கெட்டிபொம்மு, ஜகவீர பாண்டியனுக்கு ஆதரவாக நின்று எதிரிகளை முறியடித்துத் தளபதி ஆனான். ஜகவீர பாண்டியன் மறைந்தபொழுது வாரிசு இல்லாததினால் கெட்டிபொம்மு அரசனானான்.

சாலிக்குளம் அருகே காட்டில் வேட்டையாடப்போனபொழுது, வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட முயல் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடன் துரத்தி வந்த வேட்டை நாய்களை எதிர்த்துச் சீறியது. முயலின் சீற்றத்தைக் கண்டு நாய்களும் அஞ்சி நின்றன. எனவே அந்த மண்ணின் மகிமையை உணர்ந்த கெட்டிபொம்மு அங்கு ஒரு கோட்டை கட்டினான். அதற்குத் தன் மூதாதையின் நினைவாகப் பாஞ்சாலம் என்ற பெயரைச் சூட்டிப் பாஞ்சாலங்குறிச்சியை உருவாக்கினான். அது முதல் அரசனின் தலைநகரமாயிற்று, பாஞ்சாலங்குறிச்சி.

கெட்டிபொம்மு தனக்கு அரச வாழ்வை அளித்த ஜகவீர பாண்டியன் நினைவாகத் தன் மகனுக்கு ஜகவீர பாண்டியக் கட்டபொம்மு என்று பெயரிட்டான்.

கி.பி. பதினோராம் நூற்றாண்டில் ஜகவீர பாண்டியக் கட்டபொம்மு பட்டத்துக்கு வந்தான். அவனைத் தொடர்ந்து வீர பொம்மு, இரண்டாவது கெட்டி பொம்மு; ஆதிராமு, சின்ன பொம்மு, வீரராமு, துரைராஜன், நல்ல பொம்மு, முத்து விஜய ராமு, வீரசூடாமணி, தளவாய் குமாரசாமி, வீரமல்லு, அதிவீர ராமு, ரணவீர சின்னு, வீரசேகரன், ரகுநாதன், ஜெகவீர பொம்மு, விஜயராகவன், ராஜ பாண்டியன், துரைமல்லு, பொம்மு துரை, துரைச்சிங்கம், ஜகவீர ராமு, துரைராஜ பாண்டியன், கெட்டித்தளவாய், விஜயரகுராமன், ராஜபொம்மு, வீர சென்னவன், பராக்கிரம பாண்டியன், விஜயரகுபதி, துரைராஜ பொம்மு, வீரதளவாய், விஜய ரகுநாதன், குமார வீரன் ரணவீர ராமு, ரகுவீர ராமன், பால்ராஜ பொம்மு, ரகுவீரணன், ஜகவீரராகவன், சின்னபொம்மேந்திரன், ஜகவீர ராம குமாரசாமி, ராஜசூடாமணி, ரகுவீர பாண்டியன், பால்பாண்டியன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

பால்பாண்டியனுக்கு அடுத்துப் பட்டத்துக்கு வந்தவர் ஜெகவீர கட்டபொம்மன். இவர் கி.பி. 1760-ஆம் ஆண்டில் பட்டத்துக்கு வந்தார். இவருடைய மனைவி ஆறுமுகத்தம்மாள். இவர்களுடைய மூத்த புதல்வன்தான் வீரபாண்டியன். இரண்டாவது மகன் குமாரசாமி, மூன்றாவது மகன் துரைசிங்கம்.

வீரபாண்டியன் காளைப் பருவம் எய்தியவுடன் வீரசக்கம்மாள் என்ற பெண்ணை மணந்தார்.

வீரபாண்டியன் தனது முப்பதாவது வயதில் 1790-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் பட்டத்துக்கு வந்தார்.

"அப்பொழுது பாஞ்சாலங்குறிச்சிப் பாளையம் தொண்ணூற்றாறு ஊர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அவ்வூர்கள் கெவுனகிரி வனிதம், பசுவந்தனை வனிதம், புதியம் புத்தூர் வனிதம், ஆதனூர் வனிதம், வேடநத்தம் வனிதம், பட்டண மருதூர் வனிதம் என ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செலுத்தப்பட்டது."

—இதுவரை சொல்லி வந்த பெரியவர் இப்பொழுது நிறுத்தினார். "வீர பாண்டியனின் வீரச் செயல்களைப் பற்றி நானே சொல்வது முறையல்ல" என்றார்.

ஒன்றும் புரியாமல் நான் அவரைப் பார்த்தேன்.

"தம்பி, உனக்கு எதுவும் வீர பாண்டியன் பற்றிய செய்திகளே தெரியாதா?"

"ஏன் தெரியாது. நீங்கள் வரலாற்றுப் பேராசிரியர் மாதிரி விவரங்களைச் சொன்னால் வரலாற்று மாணவன் போல எனக்கும் தெரியும்" என்ற நான் அவருடைய பதிலுக்காகக் காத்திராமல் சொன்னேன்.

கட்டபொம்மன் பிறந்தது—3—1—1760-ஆம் ஆண்டு.

பட்டத்துக்கு வந்தது—2—2—1790-ஆம் ஆண்டு.

கும்பினியார் திரைகேட்டது—1793-ஆம் ஆண்டு.

ஆலன் துரை பாஞ்சைக் கோட்டைக்கு வந்தது—1797-ஆம் ஆண்டு.

ஜாக்ஸன்—வீரபாண்டியன் சந்திப்பு—10—9—1798.

பாஞ்சைப் போர் மூண்டது—5—9—1799.

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டது—16-10-1799.

ஊமைத்துரையின் சிறைவாசம்—1-11-1799 முதல் 2-2-1801 வரை.

பங்கெட் என்னும் ஆங்கிலத் தளபதியைச் சிறை வைத்தது—30—2—1801.

கும்பினியார் பாஞ்சாலங்குறிச்சியில் போராடியது—31—3—1801.

ஊமைத்துரையிடம், ஆங்கிலத் தளபதி படைவீரர்களைப் புதைக்க சமாதான கொடியுடன் தூதரை அனுப்பியது—1-4-1801.

பாஞ்சாலங்குறிச்சி அருகே ஆங்கிலத் தளபதி பாசறைகள் அமைத்தது—3—4—1801.

ஊமைத்துரை வெளியேறப் பாஞ்சைப்பதி அடியோடு அழிந்தது—24—5—1801.

பெரியவர் குறுக்கிட்டார், "தம்பி! இவ்வளவு தகவல்களை நீ தெரிந்து வைத்திருப்பது போன்று எல்லாத் தமிழர்களும் தெரிந்து வைத்திருப்பார்கள். ஆனாலும் . . . ."

"ஆனாலும் என்ன?"—நான் கேட்டேன்.

அவர் பதில் சொல்லவில்லை. "அதோ ஊர்வலம் புறப்பட்டு வருகிறது. அதைப் பார்ப்போம் பிறகு பேசிக்கொள்ளலாம்" —என்று கட்டளையிடுவது போலச் சொன்னார்.

அலங்கார அணிவகுப்புப் புறப்பட்டு வந்தது.





ஊர்வலத்தின் துவக்கத்தைப் பார்த்தவுடனேயே உற்சாகத்தோடு உரக்கச் சொன்னேன்.

"ஆண்ட நாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப் பாண்டியன் மீண்டும் பவனியா? அற்றை நாள் காட்சியா? நிகழ்ச்சியா? வீரபாண்டியனே நேரில் வந்தாலும் நம்புவாரோ?"

"உண்மை புரிந்து விட்டதா தம்பி உனக்கு".

—இப்படிப் பெரியவர் கேட்டதுதான் எனக்குப் புரியவில்லை. ஊர்வலம் எங்களை நெருங்கியது.

யானை முன்னே செல்ல—

அலங்கார ஊர்திகள், வீர பாண்டிய கட்டபொம்மன் வரலாற்று நிகழ்ச்சிகளை விவரிக்கும் ஓவியங்களைத் தாங்கி வர—

வரலாற்றுக் காட்சிகளை நம் கண்முன்னே காட்டிட அந்தந்த வேடமணிந்தோர் ஏறிச் செல்லும் ஊர்திகள் இடையிடையே செல்ல—

ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னே அணிவகுத்துச் சென்ற தென் பாண்டி மண்டலத்து மறவர்கள் அணிவகுப்புத் தொடர்ந்தது.

பண்டையக் காட்சிகளைப் பசுமையாக நம் கண்முன்னே காண்கிறோம்.

பாளையத்து வீரர் தம் வீர விளையாட்டுக்கள் ஒன்றா இரண்டா? வேலும் வாளும் தாங்கிய திண்தோள் மறவர்களின் உடற்கட்டும் வீரம் கொப்பளிக்கும் விளையாட்டு முறைகளும் விவரிக்கக் கூடியனவா?

வித்தை இதற்கு ஈடில்லை என்று சொல்லும் வகையில், சிலம்பமும், அதன் வகை முறைகளும்.

இருந்த இடத்திலிருந்தபடியே எதிரியின் தலையைக் கொணர வைக்கும் சுருள் கத்தியால் தாக்கும் முறையும், தடுக்கும் வகையும் அந்நாள் வீரர்களை நமக்குக் காட்ட!

ஆணுக்குப் பெண் வீரத்தில் குறைந்தவள் அல்லள் என்பதைக் காட்டவோ 'அந்நாள் வீரமகளிர் அணிவகுப்பு'.

சீறி வந்த புலியை முறத்தினாலேயே அடித்துத் துரத்தியவர்கள்—புறநானூறு காட்டும் 'புலி சேர்ந்து போகிய கல்லளை'யை வயிறாகக் கொண்டவர்கள் இவர்கள்தாம் என்று அந்தக் காட்சியைக் கண்டவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இவைகளுடன் சீரணி, இளைஞரணி, மகளிரணி, சாரணர்கள், தேசிய மாணவர் படையினர் போன்றோரும்,

கரகம், காவடி போன்ற ஆட்ட நிகழ்ச்சிகளும் அழகுற அமைந்திட ஊர்வலம் சென்றது.

அலங்கார வண்டிகளுடன் மக்கள் திரளும் அணிவகுத்தது.

ஊர்திகளில் மின்விளக்கு அலங்காரம் வேறு. எங்கும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டே சென்றன.

தனியாக அமைக்கப்பட்ட மேடை ஒன்றிலிருந்தவாறு தமிழக முதல்வரும் அமைச்சர்களும் தமிழ்க் குலப் பெருமக்களும் ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர், வாழ்த்துவது போலத் தலையசைத்தார்.

கூடியிருந்த மக்கள்கடல் விழா நடக்கும் இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. "ஐயா போகலாமா?" என்றேன்.

'விழா நடக்கும் இடத்திற்குத் தானே?' என்றார்.

அதற்கு முன் நினைவுக் கோட்டைக்குச் சென்று பார்க்கலாம் என்று அழைத்தேன். இப்பொழுது எல்லாம் நான் சொல்லியபடியே பெரியவர் கேட்டார்.

ஏதோ பரவசத்தில் தன்னை இழந்திருந்தார் அவர்.

நினைவுக் கோட்டைக்குச் சென்றோம்.

அங்குச் சென்றவுடன் அரியணை மண்டபத்திலுள்ள கட்டபொம்மன் சிலையைப் பார்த்துக் கண்கள் ஒளி உமிழ ஒரு புன்னகை பூத்தார்.

''அண்மைக் காலத்தில் எந்த மன்னருக்கும் இவ்வளவு பெரிய உருவச் சிலையைக் கல்லில் செதுக்கியதில்லை. காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள பட்டுமலைக் குப்பத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கல்லில் மாமல்லபுரத்தில் செய்யப்பட்ட சிலை இது என்றேன்''

அந்தப் பெரியவரோ வேறு ஓர் உலகத்தில் இருப்பதுபோன்ற உணர்வில் மூழ்கியிருந்தார்.

அந்த நினைவுக் கோட்டையின் மேல் தளத்துக்குச் சென்று சுற்றிப் பார்த்தோம். அருகிலிருந்த ஜக்கம்மாள் ஆலயத்தை மேல் தளத்திலிருந்து பார்த்தவுடன் மிக வேகமாக விரைந்து கீழே இறங்கி ஜக்கம்மாள் ஆலயத்தை நோக்கிச் சென்றார்.

பெரியவரைப் பின் தொடர்ந்தேன்.

ஜக்கம்மாள் ஆலயம், என்றுமில்லாச் சிறப்புடன் தோன்றியது.

அந்த ஆலயத்துக்குரிய மங்கல ஒலிகள் முழங்கிக் கொண்டிருந்தன.

சில மணித் துளி நேரம் மௌனமாக அம்மனை நோக்கி வழிபட்ட பெரியவர், என் பக்கம் திரும்பி, ''தம்பி, புதிய பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்றார். அவர் மேலும் ஏதோ சொல்ல நினைத்தார். அதற்குள் விழா நிகழ்ச்சிக்கு நேரமாவதை நினைவூட்டினேன்.

''சரி, செல்லலாம்'' என்றார்.

ஆலயத்துக்கு அருகில் கம்பி வேலியிட்டு மறைத்திருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டினேன். பழைய கட்டபொம்மன் கோட்டை இருந்த இடத்தை அகழ்வாராய்ச்சி மூலம் வெளிப்படுத்தியிருக்கும் நமது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பணிகளைச் சுருக்கமாக விவரித்தேன்.

விழா நடைபெறும் இடத்துக்கு சென்றேன். முன்னால் செல்லலாம் என்று பெரியவரை அழைத்தேன்.

''தம்பி, முன்பே சொன்னேனே! மக்களுடன் ஒன்றிக் கலந்து அமருவோம். அப்பொழுதுதான் அவர்களின் உணர்ச்சியோடு நம்முடைய மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளமுடியும்.''

பெரியவர் சொல்லியபடியே மக்கள் கூட்டத்தில் கலந்துவிட்டோம்.

விழா தொடங்கியது.

விழா நிகழ்ச்சிகளுக்கு இடையிடையே நேரம் கிடைத்தபொழுது எல்லாம் நானும் பெரியவரும் பேசிக் கொண்டிருந்தோம். அவற்றில் சில—

பெரியவர் சொன்னார்: ''தம்பி நான்தான் தவறாகக் கருதிவிட்டேன். வெள்ளையர்கள் கண்ணோட்டத்திலேயே நம்மவர் இருந்துவிட்டார்கள் என்று''.

''தவறான எண்ணம் ஐயா, வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றைப் பற்றி முதல் புத்தகம் ரெவரண்ட் க்ரீன்ஸ் எழுதிய பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் பற்றிய சில குறிப்புகள்'' என்ற நூலாகும். கால்டுவெல் பாதிரியார் எழுதிய நெல்லை மாவட்ட அரசியல் பொது வரலாறு. ஏ. ஜேஸ்ரேவர்ட் என்பவர் இயற்றிய திருநெல்வேலி மாவட்ட நிகழ்ச்சித் தொகுப்பு. எச்.ஆர். பேட் என்பவர் முதல் உலகப் பெரும் போருக்குப் பின் எழுதிய ''திருநெல்வேலி கெஜட்டியர்'' முதலியவை முழுக்க முழுக்க வரலாற்று உண்மைகளை வெள்ளையர் கண்ணோட்டத்தோடு மறைத்ததை நாங்கள் உணராமலில்லை. சென்னை மாகாணத்து உள்துறைச் செயலாளராக இருந்த இ.யு. தாமோதர், ஐ.ஏ.எஸ் அவர்கள் இதை மிகத் தெளிவாக விளக்கித் கட்டுரைகள் வரைந்துள்ளார். பானர்மேன், மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ் எழுதிய குறிப்புகளைப் படித்தால் வீரபாண்டியனின் வீரமும் நேர்மையும் விளங்கும். ஜெகவீர பாண்டியனார் எழுதிய புத்தகங்கள், சிலம்புச் செல்வர் எழுதிய புத்தகங்களைப் படித்தால் உங்களுக்குப் புரியும் ...''

பெரியவர் ''ஓகோ'' என்று சிரித்தார். எனக்கும் அப்பொழுதுதான் விளங்குமா என்று நகைத்துக்கொண்டே கேட்டார். பெரியவரின் பேச்சு எனக்குப் புரியவில்லை.

எங்கள் பேச்சு சுற்றியிருந்தவர்களுக்கு இடையூறு விளைவித்ததால் விழா நிகழ்ச்சிகளைக் கவனித்தோம்.

* * *

சட்டப் பேரவை உறுப்பினர் க. சுப்பு வரவேற்பு உரை நிகழ்த்தினார். அவர் உரையில் கமழ்ந்த வீர உணர்வுகள் அவர் கட்டபொம்மன் பரம்பரையில் வந்தவர் என்பதை வெளிப்படுத்தின.

விழாவுக்குத் தலைமையேற்றிருந்த கல்வி சுற்றுலாத் துறையமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பழைய வரலாற்று செய்திகளைப் படம் பிடித்துக் காட்டினார்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் மணலி கந்தசாமி, கதிரவன், முத்தையா, ஆகியோரும் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் சென்னப்ப ரெட்டியாரும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். சிவசாமி அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.சி.பா. ஆதித்தனார் அவர்களும் பொதுப் பணித்துறைஅமைச்சர் திரு.ப.உ. சண்முகம் அவர்களும் உரை நிகழ்த்தினார்கள்.



வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித் தோன்றல்களாக வாழும் மக்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா ஆகியவற்றை முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

அதன் பிறகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள், சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

அந்த உரை வீரபாண்டிய கட்ட பொம்மன் காலத்துக்கு நம்மை இழுத்துச் சென்றது.

அதில் அடங்கிய வரலாற்றுச் செய்திகள்தான் எத்தனை எத்தனை!

நாற்பத்தேழு தலைமுறையாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்தவன் தமிழனாக—தமிழ் மக்களில் ஒருவனாகத் திகழ்ந்த காட்சிகளைச் செவ்வையாக அடுக்கியபோது—கேட்கும் உள்ளங்கள், அனைத்தும் உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கின.

லெப்டினண்ட் கர்னல் அக்னியூ என்பானுக்குக் கீழ் காப்டனாகப் பணியாற்றிய மேஜர் வெல்ஷ் எழுதிய நினைவுக் குறிப்புகளை எடுத்துரைத்தார்.

கட்டபொம்மனின் வீர வரலாற்றைப் பட்டி தொட்டி எங்கும் அறிமுகப்படுத்திய பெருமைக்கு உரிய சிலம்புச் செல்வர் அவர்கள் தன்னுடைய ஆசைகள் நிறைவேறுவதை—அதுவும் கட்டபொம்மன் மறைந்து 175 ஆண்டுகளுக்குப் பின்னர் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை புத்துயிர் பெற்றுத் தோன்றுவதையும் எண்ணி மகிழ்ந்த அவர் உணர்ச்சிப் பெருக்குடன் விவரித்த காட்சிகள் ஒன்றா? இரண்டா?

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஆற்றிய உரையின் மூலம் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்த வீரத்தை—நாட்டுப் பற்றை—தியாகத்தின் மாண்பை—பகைவனுக்கும் அருளும் பண்பை—வள்ளண்மையை மிக அழகாக விளக்கினார்.

பெரியவரின் கண்கள் கண்ணீரை வடித்தன.

உணர்ச்சிப் பெருக்குக்கு ஆளாகியிருந்த நானும் 'ஐயா' என்று அழைத்தேன்.

''தம்பி! நான் பேறு பெற்றவன்''—என்று உணர்ச்சி மல்கக் கூறினார்.

எனக்கு என்னவோ அவர் நிமிடத்துக்கு நிமிடம் புரியாத புதிராகத் தோன்றுவது போல் தெரிந்தது. அதற்குள் விழா மேடையில் முதல்வர் கலைஞர் அவர்கள் உரை நிகழ்த்தத் தொடங்கி விட்டார்.

கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை எடுத்த முழுப் பெருமைக்குரிய அவரின் உரை பழைய வரலாற்றுக் காட்சிகளை விவரித்தது. அந்த உரையில்தான் எத்தனை எத்தனை செய்திகள் ! எத்தனை எத்தனை விளக்கங்கள்!

முதல்வர், பாரி விழாவிலே எடுத்துரைத்த ஒரு செய்தியை மீண்டும் கூறுகிறார்:

''பறம்பு மலையை ஆண்ட பாரி மன்னன், வாரி வழங்கிய வள்ளல்—முல்லைக்குத் தேர் கொடுத்தவன். அவனைச் சேர, சோழ, பாண்டியன் என்ற மூன்று சிற்றரசர்கள்போருக்கு அழைத்தார்கள். அவன் கோட்டையை முற்றுகையிட்டார்கள். பாரியின் நண்பரான புலவர் கபிலர் அந்த மூன்று அரசர்களிடமும் சென்று, ''நீங்கள் பாரியை எதிர்த்துப் போர் புரிய வேண்டாம். அவனிடம் நாட்டைக் கேட்டாலேயே கொடையாகக் கொடுத்து விடுவான் என்கிறார். ஆனால் அந்த மன்னர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. போரிட்டுப் பாரியைக் கொன்று விடுகிறார்கள். பாரி இறந்துவிடுகிறான்.

''இங்கே இலக்கியம் படித்த பெரியோர்கள், சான்றோர்கள், மாணவ நண்பர்கள் எல்லாரும் இருப்பார்கள். அவர்களைக் கேட்கின்றேன் இறந்துவிட்ட பாரியின் பெயர் நமக்குத் தெரிகிறது. பாரிக்கு விழா எடுக்கின்றோம். ஆனால் பாரியை எதிர்த்த மன்னர்கள் யார்? அவர்கள் பெயர் என்ன? யாருக்காவது தெரியுமா?

அது போன்று கட்டபொம்மனின் வெற்றி விழாவை நாம் இங்குக் கொண்டாடவில்லை. தூக்குக் கயிற்றை முத்தமிட்ட வீரனுக்கே விழா எடுக்கின்றோம். அழிந்துபட்ட கோட்டைக்கே நினைவுக் கோட்டை எடுத்துள்ளோம்!

''நல்லவர்கள் வாழ்ந்தாலும் அழிந்தாலும் மக்கள் நெஞ்சத்தில் நீங்காது வாழ்வார்கள்''.

முதல்வரின் உரையைக் கேட்ட பெரியவர் சொன்னார். 'ஆமாம், நீங்கள் நிச்சயம் வாழ்வீர்கள்! மாண்ட பெருமைகளை மீண்டும் உயிர்ப்பிக்கும் நீங்கள் என்றும் வாழ்வீர்கள்!''



# புதைந்த புகழ் வெளிக்கொணர்வார்!

வான்பொழிந்து பூவிளையும் மாநிலத்தை முடிபுனையும்
மன்னனுக்கோ கிஸ்தி! என்மனம்கொதித்து கனன்றெழுந்து
இந்தியத்திருத்தாயின் ஈடிலா அடியைச்சூழ்ந்த
அந்நியத்தளையை விழ்த்தும் முதல்முரசறையும் ஆற்றல்
செந்தமிழ் மகனதே என்று சீருடன் எடுத்துக்காட்டி
விடுதலை வேள்வித்தீயில் தன்னுடை ஆவிவேட்ட
வீரம்சால் மறவர் வேந்து பாண்டியக் கட்டப்பொம்மு
உடன்நின்று உயர்வுகாத்த தம்பியாம் ஊமைத்துரை
இருவரும் வீரம்பெய்த ஈடிலாப்பெரிய கோட்டை
மண்ணோடு மண்ணாகி மேடிட்டுப் புதர் மண்டி
அப்படியும் ஒருகோட்டை இந்நாட்டில் இருந்ததுண்டோ!
என்றவகை இடிந்துபோய் மறைந்தும் போக
புதைந்திருக்கும் புகழை எல்லாம் வெளிக்கொணர்வதெந்தம் பணி
ஏற்றிடுவோம் ஏட்டிலினை வீரனது வரலாற்றை
அதுவே எம்தலையாய கடன் என்னும் சபதம் ஏற்று
அரண்மனையின் பகுதிகளை அகழ்வாய்வில் வெளிப்படுத்தி
கண்ணிமைக்கும் நேரமதில் கோட்டைதனை அமைத்துத்தந்து
மாண்டபுகழ் மன்னவனின் நினைவாகச் சின்னம் செய்தார்
வழித்தோன்றல் அனைவருமே வளம்பெற மான்யந்தந்தார்
பூதலம் போற்றும் வண்ணம் பூம்புகார் படைத்த
தமிழக அரசின் முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி என்
ஆனந்த ஆண்டு ஆவணித் திங்கள் 2-ஆம் நாள்.

18.8.1974

[கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டு]







பெரியவர் குரல் உரக்கவே ஒலித்தது. அங்கிருந்த எல்லா மக்களின் இதயங்களிலிருந்தும் ஒலித்துக் கொண்டிருக்கும் வார்த்தைகளும் இவைதாம் என்பதை விழா முடிந்ததும் எழுந்த ஆரவாரமே நிரூபித்தது.

* * *

விழா முடிந்ததும் வாணவேடிக்கை நடைபெற்றது. அந்த வர்ண ஜாலங்கள் கண்ணைப் பறித்தன.

அதனைக் கண்களை மூடியவண்ணம் பார்த்தார் பெரியவர்.

''ஐயா, தாங்கள் புரியாத புதிராகவே இருக்கிறீர்கள், கண்ணை மூடிக்கொண்டு வாணவேடிக்கைகளைப் பார்க்கிறீர்களே!''

''தம்பி, பார்க்கவேண்டியவைகளைப் பார்த்து விட்டேன். கேட்கவேண்டியவைகளை கேட்டுவிட்டேன். 175 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகம் புது வாழ்வு பெற்று வருவதைப் பார்த்துவிட்டேன். என் வரலாறு தெரிந்தும் உணர்வற்று இருந்த நீங்கள் இன்று புதிய பொற்காலத்தை உருவாக்கி வருகிறீர்கள். இப்பெரும் பணியின் பெருமையைக் காணவே நேரில் வந்தேன். கண்டேன்! கேட்டேன்! உணர்ந்தேன்! அதனை நான் ஓராயிரம் முறை சொல்வேன்! மாண்ட பெருமையை மீண்டும் கொணரும் திறனுடையார், செயல்மிக்கார் தமிழகத்தை ஆளுகிறார்கள்! அவர்களால் புதிய பொற்காலம் உருவாகியே தீரும்!''

உணர்ச்சி வயப்பட்டு பெரியவர் மொழிந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த நான் ''ஐயா, நீங்கள் . . .''

''தம்பி! நான் இன்னும் சொல்லவில்லையே! நான்தான் வீரபாண்டி கட்டபொம்மன்''.

வியப்போடு மீண்டும் பெரியவரை நோக்கினேன்! என்னையறியாமலேயே ஓர் அச்சம்! மரியாதை! எனது மன நிலையை விவரிக்க முடியவில்லை.

அது மகிழ்ச்சியா? திகைப்பா?

பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டைத் திறப்பு விழா நிகழ்ச்சிகளைப் பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் நண்பர்களிடம் பேசிக்கொண்டவாறு உறங்கிவிட்ட என்னைப் பலகணி வழியாகப்பட்ட காலைக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் எழுப்பின.

அந்த ஒளிக்கற்றை—

புதிய வெள்ளமாக எங்கும் பாய்ந்து கொண்டிருந்தது!

—மாமூலன்


ESTD: 21-3-52. தபால்மூலம் GOVT REGD: 3072

இலவசக் கல்விபோதனை

10-10-1974

'G' குரூப் வகுப்புகள் ஆரம்பம்!

ஆண்—பெண் இருபாலரும் 1974-75ம் வருட சர்க்கார்-பல்கலைக்கழக [illegible] தேர்ச்சி பெற [illegible] தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும். [illegible] B.A., B.Com., B.Sc., March 1975 (P.U.C./இன்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B.L. [illegible] B.A., B.Com., B.Sc. 1. S. V. B.A., B. Com., B. Sc.,- [illegible] 3. [illegible] 4. [illegible] M.A., M.Com., A.M.I.B.M. (பட்டதாரிகள் [illegible]) 5. A.C.B.I.( London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள் (S. S. L. C. (அ). S. S. C. ஆ). மெட்ரிக் தேறியவர்கள் [illegible] (I.M.C. S.S.L.C./S.S.C. மெட்ரிக் [illegible]) இன்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள். 6. Account Text Exmns. [illegible] 7. டெலிபோன் ஆப்ரேட்டர் [illegible] 9. சென்னை-மதுரை P. U. C. 10. தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம் 12. போஸ்ட்மேன் 13. [illegible] 14. கைத்தறி தொழில். 15. அக்கவுண்டன்ஸி, 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் [illegible]) 18. S.S.L.C. (8-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER. [illegible] P.U.C. தேறியவர்களும் [illegible] 20. பேங்க் ஆபீஸர். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. [illegible] D.Com., B.Com., B.Com (Hons) M.Com., S.S.L.C. [illegible] (X, XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 24. டெல்லி [illegible] தேர்வு [illegible] நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் [illegible]

தமிழகத்தின் தனிப்பெரும் தபால்கல்வி ஸ்தாபனம்

Affiliated by I. A. & A. I. S. Educations & Com. University, New Delhi.

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ஸ்ரீவைகுண்டம் S.O., தென்னார்க்காடு மாவட்டம்—தமிழ்நாடு.

கிளைகள்: இலங்கை, மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, [illegible]



# தொழுநோயாளிகளுக்குத் தொழிற்பயிற்சி அளிக்க இந்தியாவில் முதல் தொழிற்சாலை!

''தொழுநோய்க்கு நிரந்தரமான பரிகாரம் காணும் திசையில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்கும் தமிழக அரசின் தலைசிறந்த திட்டம் பாராட்டுக்குரியது.''

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், பரனூரிலுள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தைச் சுற்றிப் பார்வையிட்டு இவ்வாறு கூறினார். அவர் முதல்வர் கலைஞர் தலைமையில் இயந்திரத் தொழிற்சாலையையும் திறந்து வைத்தார்.

பரனூர் தொழு நோய் இரவலர் மறுவாழ்வு இல்லத்திற்கு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் வருகை தந்தார்.

முதல்வர் கலைஞர், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம், சமூக நலத் துறை அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் பிரதமரை வரவேற்று, இரவலர் மறுவாழ்வு இல்லத்தைச் சுற்றிக் காண்பித்தனர்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நனவாக்கும் வகையில், முதல்வர் கலைஞர் அவர்கள் தமது பிறந்த நாள் பரிசாகத் தமிழகம் முழுதுமுள்ள இரவலர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் உயரிய திட்டத்தை வழங்கி, தமது பிறந்த நாள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தொகையினை அத்திட்டத்திற்காக அளித்தார்கள்.

தமிழகத்தில் தொழுநோயினர் மறுவாழ்வு இல்லங்கள் 10 இடங்களில் தோற்றுவிக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அவ்வகையில் தோற்றுவிக்கப்பட்டதுதான் பரனூர் தொழுநோய் இரவலர் மறுவாழ்வு இல்லமும்.

இந்த இல்லத்தில்220 ஆண்களும், 118 பெண்களும், 59 சிறுவர்களும் உள்ளனர்.

வாழ்க்கையின் கலையறியாது, அல்லும் பகலும் அல்லலுடன் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்த இவர்களது வாழ்வு இன்று நிச்சயமானதால், ஒளிமயமானதாய் அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பெருமையோடு நாம் குறிப்பிட வேண்டும்.

இவ்வில்லத்தில் உள்ளவர்களின் நோயைக் குணப்படுத்துவதுடன், அவர்களுக்கு வேலையும் கொடுக்கப்பட்டு நேர்மையான வாழ்வுக்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

பரனூரில் அமைந்துள்ள இந்த இல்லத்தில் தொழுநோய் இரவலர்களுக்கென்று சுமார் ரூ. 8 இலட்சம் செலவில் இயந்திரத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தொழுநோயினருக்கென இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலை இதுதான்!

இந்தத் தொழிற்சாலையில் தற்போது கிடைப்பதற்கு அரிதாக உள்ள தட்டெழுத்துக் கருவிகளுக்கும், மோட்டார் வாகனங்களுக்கும் தேவைப்படும் பல முக்கியமான பாகங்கள் தயார் செய்யப்படும். தொழுநோயிலிருந்து சிகிச்சை பெற்று வேலை செய்ய முடிந்த இளைஞர்கள் இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் பாங்கினைப் பெறுவார்கள்.

மேலும் இந்தத் தொழிற்சாலையில் மேசை, நாற்காலி, பீரோ போன்ற எஃகுச் சாமான்களும், மூன்று சக்கர வண்டிகளுக்கான இரும்பு வேலைப்பாடுகளும் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை தமிழக அரசால், ஸ்வீடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழில் நுட்ப உதவியுடன் கட்டப்பட்டது.



இதனை முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்தார்.

தொழுநோய் இரவலர்களுக்குப் புத்தாடைகள் வழங்கிப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழக அரசின் இந்த நல்ல முயற்சியைப் பாராட்டினார்.

பரனூர் தொழுநோய் இரவலர் மறுவாழ்வு இல்லத்தில் நிறுவப்பட்டுள்ள இயந்திரத் தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை விவரமாவது :—

''இந்தப் பயங்கரமான நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புது வாழ்வளிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து, அந்த அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த இல்லத்தில் உள்ள தொழிற்சாலையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

''தொழு நோய்க்கு நிரந்தரமான பரிகாரம் காணக்கூடிய நிலைமைக்கு நாம் வந்துள்ளோம். இதிலே முக்கியம் என்னவென்றால் நோய் பாதிக்கப்பட்டவர்கள் அறிகுறி தொடங்குவதற்கான மருத்துவர்களை தெரிந்தவுடன் அணுக வேண்டும். இந்த நோய் இருப்பதை வெளியே சொல்ல வெட்கப்பட்டு சொல்லாமல் இந்த நோய் முற்றிவிடுகிற காரணத்தால், குணப்படுத்த முடியாமல் போய்விடுகிறது.

''தமிழக அரசு இந்தச் சிறந்த திட்டத்தைத் தொடங்கியுள்ளது மிகவும் பாராட்டத் தக்க ஒரு முயற்சியாகும்.

''அதிலும் காந்தி பிறந்த நாளில் இந்தப் பரனூர் திட்டம் தொடங்கப்பட்டது மிகவும் வரவேற்கத் தக்கதாகும்.

''இந்தச் சிறந்த பணியிலே ஸ்வீடன் நாட்டினர் ஒத்துழைப்பு நல்கியுள்ளது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இது போன்ற பல நல்ல பணியிலே மற்ற நாடுகளும் எவ்வாறு ஒத்துழைக்க முடியும், ஒத்துழைக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தலைமையமைச்சர் அவர்களை முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்கிறார்.

''இந்த விடுதியிலே வாழ்பவர்களுக்கும்—இந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கும் என் நல்வாழ்த்துக்கள்! மிக விரைவில் இந்தத் தொழுநோயை அடியோடு அகற்றி விட்டோம் என்ற நிலைமையை நாம் எய்துவோமாக!''

விழாவிற்குத் தலைமையேற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை விவரமாவது:





களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி அளிப்பதற்கு இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கப்படுகிற தொழிற்சாலை இதுதான்!"



''கடந்த மூன்றுண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு மேற்கொண்ட திட்டத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டில் இது போன்ற தொழு நோய் இரவலர் இல்லங்கள் பத்து இடங்களில் அமைக்கப்பட்டு, ஏறத்தாழ நான்காயிரம் தொழு நோய் இரவலர்கள் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக் கொண்டு தொழில் வளர்ச்சி பெறுகிற வகையிலும், தொழு நோய்ச் சிகிச்சை பெறுகிற வகையிலும் இந்த இல்லத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

''அடித்தளத்தில் இருக்கிற மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், சமுதாயத்திலே ஒரு அங்கம் என்று சொல்லத்தக்க வகையிலே உள்ளவனைமுத்தோர்— இப்படிப்பட்டவர்களுடைய மறுவாழ்விற்காக அரசு தன்னால் இயன்ற எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.



தொழிற்சாலையைத் தலைமை அமைச்சரும் முதல்வரும் பார்வையிடுகின்றனர்.

''அந்த வகையில் ஆரம்பிக்கப்பட்ட பத்து இல்லங்களில் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட இந்தப் பரனூர் இல்லத்திற்கு வருகை தந்துள்ள இந்தியத் தலைமை அமைச்சரை, இந்த இல்லத்திலே வாழ்கிற 300-க்கு மேற்பட்ட தாய்மார்கள், பெரியவர்கள், நண்பர்கள் அத்தனை பேர் சார்பாக, வருக, வருக என்று வரவேற்கிறேன்.

''ஸ்விடன் நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தினரும், நம்முடைய அரசும் சேர்ந்து இங்கே நிறுவியிருக்கிற இயந்திரத் தொழிற்சாலையை அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். சுமார் எட்டு இலட்ச ரூபாய் செலவில் அந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது. தொழு நோய் கொண்டவர்

புத்தொளி பெற்றவர்க்குப் புத்தாடை வழங்குகிறார் தலைமையமைச்சர்.



# காணி நிலம் வேண்டும்

—பூவை எஸ். ஆறுமுகம்—

18. வாழும் சொந்தங்கள் வாழும்!

வாழ்க்கை சுவை மிக்க நவீனமாக அமைந்திட வேண்டுமென்றுதான், கன்னி அன்னக்கொடி கனவுபின்னிக் கொண்டு காலத்தோடு காலமாக விளையாடிக் கொண்டிருந்தாள்!

ஆனால்... ?

'நினைப்பது மாத்திரம் வாழ்க்கை அல்ல; நினைப்பதை மறப்பதும், அல்லது மறைப்பதும் கூட வாழ்க்கைதான்!' என்கின்ற நிதர்சனத் தத்துவத்தைச் சொல்லிக்காட்டுவது மாதிரி, அவள் கடந்த சில நாட்களிலே எத்தகைய எதிர்பாராத சம்பவங்களையெல்லாம் எதிர்கொள்ள நேரிட்டு விட்டது!

முந்திய நாள் இரவு நடந்த நிகழ்ச்சியை மீண்டும் மனத்திரையில் உலவவிட்டாள்.

வெள்ளைக் காளையை யாரோ திருட்டுத்தனமாகப் பிடித்துக் கொண்டு ஓடும் சேதியை பண்ணைக்காரன் பரமசிவம் மூலம் கேள்விப்பட்டாளோ, இல்லையோ, அக்கணமே இருக்குப் பிடித்த பாவனையில் வெள்ளைக் காளையைத் தேடி ஓட்டம் எடுத்தாள் அன்னக்கொடி. 'தங்கச்சியோ!' என்று அலட்டியவாறு ஓடிவந்த பரமசிவம், அவள் ஓடின காளவாய் ஒற்றையடிப் பாதையிலே மறுகாமல், வேப்பந் தூரடியிலே மடங்கி விட, இவ்விவரம் அறியாத அபலைக் கன்னி தன் போக்கில் வெள்ளையின் கழுத்து மணிச் சத்தத்தைக் குறி வைத்து ஓடினாள். காளையின் பின்னணியில் ஊசலாடிய மானப் பிரச்சினையில்தான் அவள் உள்ளம் ஊசலாடியது.

தாராடிப் பொட்டல் காடு வந்தது.

பேயிருட்டில், மணிச் சத்தம் நின்றது!

அக்கணம்தான் அன்னம் தன்னையும் தன் நிலையையும், உணரலானாள். 'ஐயோ! என் அன்பு மச்சான் வீரமணிக்குச் சொந்தம் கொண்ட—பந்தம் கொண்ட—அன்புப் பிச்சை யாச்சே நான்? அந்நியன் யாராச்சும் வந்து என்னைச் சாடிப் பிடிச்சு. . .ஐயையோ! ஆத்தாளே!' விம்மினாள்.

விடியாத இரவாகப் போகிறதா இந்தப் பாழ் இரவு?

அப்போது:

பூங்கரத்தைப் பூ நாகம் கவ்விப் பிடிப்பது போலே, ஓர் உணர்வு—தொட்டுணர்வு கிளர்ந்தெழுந்தது. 'கன்னி கழியாப் பொண்ணுன என் கையை எந்தப் பாவி பிடிச்சு இழுக்கிறதாம்?'—அவள் பத்திரகாளியானாள். கண்களைத் தீட்டிக் கொண்டு ஏறிட்டுத் திரும்பினாள்.

கைகளை உதறி விடுவித்துக் கொள்ள முயன்றாள். முடியவில்லை. கைகளைப் பற்றி இழுத்த 'பேடி'யை இனம் காண வேண்டி, பார்வையைத் தீட்சண்யமாகத் தீட்டிக் கொண்டாள். இருட்டில் இருட்டைத்தான் சந்தித்தாள். ஆனால், யாரையும் இனம் கண்டு கொள்ளக்கூடவில்லை. ''ஏலே, யார் நீ? சமைஞ்ச பெண்ணோட கையை பேடிக்கணக்கிலே கள்ளத்தனமாய்த் தொட்டிழுக்கத் துணிஞ்ச புறக்குடி யார் நீ? நீ மெய்யான ஆண் பிள்ளையாய் இருந்தால், வெளிச்சத்துக்கு வா. ஒண்டிக்கு ஒண்டி மல்லுப் பிடிக்கலாம்! ஊம் . . வாடா! '' என்று முழங்கினாள்.

ஆனால், அந்த உடும்புப் பிடி இன்னமும் விலகின பாடில்லையே!

அன்னம் தமிழச்சியாக மாறிவிட்டாள். கைகளை யானைப் பலத்தோடு உதறித் தன்னை விடுவித்துக் கொண்டாள். விடுதலை பெற்ற உத்வேகத்தோடு எதிரில் எதிரியாக நின்ற அந்த ஆளை ஓங்கி அறைந்தாள். அறை குறி தவறவில்லை!

கண்மூடிக் கண் திறக்கும் நாழி அங்கே சுடுகாட்டு அமைதி பரிபாலனம் செய்தது.

ஆனால், அன்னமோ திறந்த கண்ணை மூடவே இல்லை.

அன்னக்கொடி தலைநிமிர்ந்து நின்றாள்.

''ஏய்! ஒரு பொட்டைக் குட்டி கையினாலே—அதிலேயும் கண்ணாலம் கட்டாத ஒரு புத்தம் புதுப் பொண்ணு கையினாலே வசமாய் அறையை ஏந்தி வாங்கிக்கிட்டு, மானம் இல்லாமல்ரோசம் இல்லாமல்—சூடு சுரணையும் இல்லாமல் செல்லத் தேவர் ஊரணித் தொந்திப் பிள்ளையாராட்டம் கல்லாய்ச் சமைஞ்சு வாயடைச்சு நிற்கிறியே நீ?—உனக்கே உன் போக்கு—உன் நடத்தை வெட்கமாக இல்லையா? சீ! நீயும் ஒரு ஆண் பிள்ளையா?'' என்று திட்டினாள்.

அடுத்த கணம் :

'அன்னம்!'

அழைப்பில் குரல் இருட்டையும் அமைதியையும் வெட்டிப் பிளந்தது.

அழைப்பது, அன்பு அத்தான் வீரமணி அல்லவா? ஐயையோ! அன்னம் தணலிடைப் பட்ட மெழுகுப் பதுமையாக உருகிக் கரைந்தாள். ''ம..ச்..சானே! என்று விளித்தாள். ஏக்கமும், அச்சமும் அரவணைக்க அழைத்தாள் அவள். ''மச்சான், நீங்கதானா? நீங்கள்தானா? பின்னே ஏன் மூச்சு காட்டாமல் பூடகமாய் மௌனம் சாதிக்கிறீங்க? பேசுங்க, மச்சான்! ஐயோ, வாயைத் திறக்க மாட்டீங்களா? என்னைத் தற்காத்துக்கிடுறதுக்காக— என்னோட பெண்மையின் கற்பைக் கட்டிக் காப்பாற்றிக்கிடுறதுக்கோசரம் தான் நான் அப்படி அறைஞ் . . . நீங்க தான் என் கையை . . இழுத்தீங்க என்கிற . . . எனக்கு இந்தப் பாழும் . . . ருட்டிலே எப்படித் . . . ய ஏலுமுங்க?

''அன்னம்!'' என்றான் வீரமணி.

''அன்னம் தானுங்க, அத்தான் உங்களோட ஆசை அன்னமேதானுங்க, மச்சான்!''

''நீ வேளை கெட்ட இந்த வேளையிலே இந்தக் காட்டுப் பக்கம் ஏன் வந்தே, அன்னம்?''

''நீங்க எதுக்கு இங்கிட்டு வந்தீங்களாம்?''

''நானா? . . . வந்து . . . . வந்து . . . .?''

''அதுதான் வந்திட்டீங்களே? விவரத்தைச் சொல்லுங்க. நீங்க ஏன் இங்கே வந்தீங்க?''

''நான் எங்க வீட்டோட மானத்தையும் கவுரவத்தையும் மீட்டுக்கிட வந்தேன்!''...

''ஓகோ! அப்படீங்களா? நானும் எங்க குலக் கவுரவத்தையும் குடும்ப மானத்தையும் மீட்டுக்கிடத்தான் இந்த இருட்டிலே இந்தக் காட்டுக்கு வந்தேனுங்க, மச்சான்!''

''அப்படியா சங்கதி?''

''பின்னே? உங்க வீட்டு வைக்கோலை அறியாமல் தெரியாமல் துளியுண்டு தின்னு தொலைச்ச பழி பாவத்துக்காக வாயில்லாச் சீவனை உங்க அப்பா கொட்டடியிலே கட்டிப் போட்டாங்க இல்லைங்களா? அந்த வெள்ளைக்காளை ராவுக்கு ராவாய் விடுதலையாகி எங்க வீட்டுக்கு ஓடியாந்திச்சு. வந்த காளையை யாரோ முடிச்சு மாறி போகுடி ஆசாமி கொஞ்ச முந்தி பிடிச்சிக்கிட்டு ஓடிட்டான். அந்தப் 'பொம்பளை செட்டி'யைத் துரத்திக்கிட்டு



நான் வந்தேனுக்கும்!''

சிரிப்பொன்று சஞ்சலத்தோடு விம்மிப்புடைத்து வீரிட்டு வெடித்தது!

''மச்சான், ஏன் சிரிக்கிறீங்க?''

''சிரிக்கப்படாதின்னு, அழட்டுமா, அம்மான் பொண்ணே?''

''விளையாடுறீங்களே?''

''நானு விளையாடுறேன்? ஊகூம்! விதி விளையாடுது!''

''ஒண்ணுமே மட்டுப்பட மாட்டேங்குதே, அத்தானே?''

''அன்னம், உங்க வீட்டுக் காளை தன்னாலே விடுதலையாகி உங்க விட்டை நாடி ஓடி வரல்லே! நானேதான் அதை தேற்று அவிழ்த்து விட்டேன்! ஆனா, இந்தச் சங்கதியைத் தெரிஞ்சுகிட்ட என் அப்பன்காரர் உடனே உண்ணாவிரதம் இருக்க ஆரம்பிச்சுட்டார். நான் அவரோட அனுமதி இல்லாமல் தன்னடைச்ச மூப்பாய் அவிழ்த்து விட்ட உங்க வெள்ளையை நானே திரும்பவும் சிறைப் பிடிச்சுப்பிட வேணும்னு ஆணை இட்டாங்க. அப்பன்காரரோட வம்பும் விம்பும்தான் ஊரறிஞ்ச தகைவாச்சே? அவரோட சொந்தத் திட்டத்துக்கு விரோதமாய் நான் உன்னையே கட்டிக்கிடப் போறேன்னு அன்னைக்கு வாக்கு கொடுத்திட்ட சடங்கை மனசிலே தாங்கிக்க முடியாமல், பட்டினி கிடக்காங்க. பெற்ற அப்பன் பாவம் சும்மா விடுமா? நானேதான் கமுக்கமாய் நலியாமல் ஓடி வந்து உங்க வீட்டு வெள்ளையைக் கடத்தி இழுத்துக்கிட்டு ஓடினேன். ஆமா அன்னம்!''

''மச்சான், இப்ப எங்கே அந்தக் காளை?''

''ஏன்? அங்கிட்டு சவுக்கு மரத்திலே முடிபோட்டுக் கட்டியிருக்கேன் உங்க வீட்டுக் காளையை!''

''அதை எங்கிட்டே ஒப்படைச்சுப்பிடுங்க! ஏன், தெரியுங்களா? நான் என் அப்பாருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவளாக்கும்!'

''ஊகூம்! முடியாது! என் அப்பாருக்கு நான் பதில் சொல்லியாக வேணும்! நான் உங்க காளையை என் அப்பா கையிலேதான் ஒப்படைப்பேனுக்கும்!''

''மெய்யாலுமா?''

''ஆமா!''

''பார்க்கலாமா?''

''பார்க்கிறதுக்கு இருட்டு தடை போட்டிருக்குதே, அம்மான் செல்லமே!''

''உங்களைப் படிச்சுக்கிட முடியல்லீங்களே, அத்தானே!'

''ப்பூ! .. ம்புட்டுத்தானு? என்னைப் படிச்சுக்கிட திராணி இல்லாத உங்கிட்டேயா என்னை ஒப்படைக்கச் சொல்லுறே?''

''மச்சான்!'' என்று கோபக் கனல் கூட அலறியபடி, காளையைத் தடம் கண்டு தேட ஓடலானாள் அன்னம்.

மறுபடியும் அவள் கையைப் பிடித்து இழுத்து மடக்கினான் வீரமணி. பூங்கரத்தின் தொட்

## சித்த மருத்துவத்தின் சிறப்பு

எத்தனையோ வகையான நவீன மருந்துகளால் குணப்படுத்த முடியாத ஆஸ்த்துமா நோயைச் சித்த மருத்துவ முறைப்படி கொடுக்கப்பட்ட ஒரு மூலிகை 12 நாட்களில் முழுக் குணப்படுத்திவிட்டது. தில்லியிலுள்ள இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தில் சிகிச்சை பெற்று வந்த ஆஸ்த்துமா நோயாளிகள் நாள் சித்த மருத்துவத்தின் மூலம் இவ்வாறு முழுக் குணமடைந்துள்ளனர்.

டுணர்வு அவன் இதயத்தின் மனச்சான்றை தொட்டு உணர்த்தியிருக்கலாமோ?

ஆடி மாத மேகப் படுதாவில் மின்னல் ஒன்று வெட்டிக் கீறியது.

வீரமணி திடுக்கிட்டான். ''அன்னம்'' என்று பதறினான். அழுதியா அம்மான் மகளே?'' என்று கேட்டான். அவனுக்கும் விழிகளில் கலக்கம் கண்டது.

''மச்சான், நீங்க அடாவடி அடிக்கிறீங்க!''

அவன் சிரித்தான். பிறகு சொன்னான். ''அன்னம், என் தவிப்பு உனக்குப் புரியாது. பாசம் என்னைப் பூ விலங்காகக் கட்டிப் போட்டிருக்குது இந்த வெள்ளைக் காளை விசயத்தில் மட்டும்! உன் தவிப்பும் எனக்குப் புரியாமல் இல்லேதான்!''

''அப்பாலே எனக்கு வழி?''

''உனக்கு வழி காட்டத் தான் நான் இருக்கேனே, புள்ளே!''

''சன்னைப்படுத்துறீங்களே, மச்சான்! என் வழி எனக்குப் புரியும்!''

''ஊகூம்; உன் வழி உனக்குப் பிடிபடாது. ஏன், தெரியுமா? இது இருட்டு நேரம். இருட்டிலேயும் இருட்டு, பேய் இருட்டு! மூச்சு விடாமல் நான் சொல்லுறதைக் கேள். உங்க வெள்ளையை உன் கிட்டவே ஒப்படைக்க வேண்டியது என் பொறுப்பு. இப்ப நான் அந்தக் காளையை என் அப்பா கையிலே தான் ஒப்படைப்பேன். பின்னாடி உன் கிட்டே ஒப்படைச்சிட்டுப் போறேன் நான்! என்னை நம்பு. நான் உன்னைக் கண்ணாலம் கட்டிக்கப் போற முறை மச்சானுக்கும்! ஆமா, சொல்லிபிட்டேன்! நம்மோட சொந்தங்களும் பந்தங்களும் ஆத்தா ஆணையாக வாழத்தான் போகுது!...ம்!''

அவள்—அன்னம் சிரிக்கவில்லை.

ஆனால், அவன்—வீரமணி அவளைச் சிரிக்க வைத்துவிட்டான்!

* * *

உலை கொதித்தது.

அன்னக்கொடி பதறிப் பெருமூச்செறிந்தாள்.

வாசலில் சத்தம் கேட்டது.

அப்பா தஞ்சாவூரிலிருந்து அதற்குள் எப்படித் திரும்ப முடியும்? ஊகூம். ஆனால் . . .

வாசலில் 'விதி'யாகக் காட்சியளித்தவள் சிலட்டூர்ச் செல்வ மகள் பவளக்கொடி!

## 19. சிலட்டூர்ப் பவளக்கொடி!

அன்னக்கொடிக்கு பவளக் கொடியை மறந்தே போய் விட்டது!

''அன்னம், என்னை உனக்கு நினைப்பு இல்லையா?'' என்று விசாரித்தாள் பவளக்கொடி. எடுப்பான நாசி முனையிலே எடுப்பாகச் சிரித்தது அந்த 'மரு'!

பவளக் கொடியை ஏற இறங்கப் பார்வையிட்டாள் அன்னக்கொடி. எடுத்த எடுப்பில் அவள் பார்வையில் எடுப்பாகப்பட்டது பவளத்தின் காதுச் சிமிக்கிகள் . சிந்திய வைர ஒளிதான். அடுத்தபடியாக அவள் சந்தித்தது பவளத்தின் அந்தப் பார்வையை. அந்தப் பார்வை 'என்னவோ ஒரு மாதிரியாக' இருந்தது. அதில் யதார்த்தமான பாசம் இல்லை; போலித்தனமானதும் ஊமைத் தனமானதுமான ஒரு செயற்கைத் தன்மையைத் தான் அவள் பார்வையில் அன்னம் காண முடிந்தது. வரவழைத்துக் கொண்ட பூஞ்சிரிப்புடன், ''மூஞ்சி நெஞ்சிலே நிற்குது; ஆனா, உம் பேர்தான் நினைப்பிலே நிற்கல்லே!'' என்று தெரிவித்தாள் சிங்கப்பூர் ராமையாவின் அருமை மகள்.

''ஜல்லாய் சொன்னே, போ! நான் உன் பேரை முத்திரை குத்தின்து கணக்கிலே இம்மாம் காலத்துக்கு ஞாபகம் வச்சுக்கிட்டிருக்கேன். நீயானால், பழகபட்டதை அடியோடு மறந்தாப்பிலே எம் பேரையுமில்லை மறந்து போயிருக்கே?

பவளக் கொடியின் செய்கை அன்னத்திற்குச் சிரிப்பை ஊட்டி விட்டது. முத்துச் சுடர் ஒளிர, ஓர்மையோடும் தன்மையோடும் சிரித்தாள் அவள். பிறகு, ''கதைன்னா, அதிசயமாய்த் தான் இருக்கும்; இருக்கவும் வேணும். கதையின்னா, அதுதானே அருத்தம்? பர்க்கப் போனால், வாழ்க்கை கூட கதையேதான்! நீ செப்பின தொப்ப, என் கதை கூட ரொம்ப அதிசயமானதுதான், தங்கச்சி!'' என்று பேசினாள்.

''அன்னம், உன்னை மாதிரியே உம் பேச்சும் அழகாய் இருக்கு!''

''பொய் பேசலியே நீ?''

''பொய்யே பேசத் தெரியாது!''

''பொய்யே பேசத் தெரியாது என்கிறதே பொய்! நான் நம்புறதுக்குத் தயாராக இல்லே, ஆனா, பொய் பேசப் படாது அப்படின்னு சொல்லு, நம்புறேன்.''

''அந்தச் சங்கதி இப்பைக்கு ஈசான்ய முடுக்கிலே ஒடுங்கட்டும். மெய்யாலுமே நீ ஒசத்தியான அழகு கொண்ட பொண்ணுதான்! அதனாலே?

''அதாலேதான், உன்னை என்னாலே இம்புட்டு வருசத்துக்கு மறக்கவே முடியல்லே!''

''ஓ! அப்படின்னா, அம்புட்டுத் தொலைவுக்கு என் அழகு உன்னை மயக்கிடுச்சின்னு சொல்லு!''

''ஊம்! உன் அழகு என்னை மட்டுந்தானா மயக்கும்?''

''அப்பன்னா, உன் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேணும்!''

''வெறும் சர்க்கரை மட்டியும் தான் என் வாய்க்குப்' போடப் போறியா, அன்னம்?''

தேடிவந்த விருந்தாளி வேறு என்ன எதிர் பார்க்கிறாளென்று அன்னத்திற்கு விளங்கிடவில்லை. அப்போது, மூக்கின் முனையில் முன் கோபத்தைக் கூடுகட்டி வைத்திருக்கும் முசுடு மாதிரி, அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந்த ஓசை கேட்கவே ''வாய்க்குச் சர்க்கரையும் போடுறேன்; வயிற்றுக்குச் சோறும் போடுறேன் . . . தங்கச்சி!'' என்று 'டக்' என்று ஒரு போடு போட்டாளே, பார்க்க வேண்டும்!

''நான் தங்கச்சி இல்லே!''

''தங்கச்சி இல்லையா? அப்படின்னா அக்காவா?''

''ஊகூம். நான் பவளம் ... அதாகப்பட்டது, பவளக்கொடி!''

''உன்னோட பேரைக் கேட்டுக்கிடத்தான் கூப்பிட்டேன். ரொம்ப அழகான பேர்!''

''அப்படியானால், நான் அழகில்லே, கறுப்புன்னு இடிக்காமல் இடிக்கிறீயாங்காட்டி, அன்னம்?''

''நாவப்பழம் கறுப்புத் தான். அதை எத்தனை ஆசையோட தின்கிறோம்? நீ கறுப்பானால் என்ன? அந்தக் கறுப்பிலேயும் மனசைச் சுண்டியிழுக்கிற அந்தம் சந்தம் சேர்ந்திருக்குதே, பவளம்!''

''என்னோட அழகிலே மனசைச் சுண்டி இழுக்கக் கூடிய அந்தம் இருக்குது என்கிற துப்பு உனக்குக் கூடப் புரிஞ்சிருக்குதே?'' என்று அட்டகாசமாகச் சிரித்தாள் பவளம். ''அடி, சக்கை!'' கும்மாளம் போட்டாள்.

பவளத்தின் பேச்சுக்கு உண்டான அர்த்தமோ, அல்லது, அவள் சிரிப்புக்கு உரித்தான காரணமோ அன்னத்திற்கு மட்டுப்படவில்லை. ''கைப் புண்ணுக்குக் கண்ணாடியா வேணும்?'' என்றாள்.

''கண்ணாடி வேணும். சில பேருக்கு மூக்குக் கண்ணாடி தேவைப்படாதா?''

''ரொம்பச் சூட்சுமக் காரியாய் இருப்பே போலிருக்கே, பவளம்?'' சரி, சரி. வந்த காலோட நிற்காமல், அப்படிக் குந்து. இந்தாலே ஓடிப்போய் 'கலசோத்தைக் கவிழ்த்து 'கலவடை'யிலே இறக்கி வச்சிட்டு,

## துப்புத் துலக்கப் புதிய கருவி

குற்றங்களில் விரைவாகத் துப்புத் துலக்க தமிழ்நாட்டில் புதிய கருவி பொருத்தப்படுகிறது.

மிகக் குறைந்த தூரம் வரை தொடர்பு கொள்ளக் கூடிய 'வயர்லஸ் செட்டுகள்' இப்போது காவல் நிலையங்களில் உள்ளன. இதற்குப் பதில் அதிக தூரம் தொடர்பு கொள்வதற்கான புதிய கருவி 'மைக்ரோ வேவ்' பொருத்தப்பட இருக்கிறது.

இந்தக் கருவியின் உதவியால் 340 மைல் தூரம் வரை ஒரே நிமிடத்தில் தொடர்பு கொள்ள முடியும்! அதாவது சென்னையில் உள்ள போலீசார் மதுரையில் உள்ள போலீசாரிடம் ஒரே நிமிடத்தில் பேசி எல்லா விவரங்களையும் சேகரித்துவிடலாம். மழை, வெள்ளக் காலங்களில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது.

கொலை, கொள்ளை குற்றங்களில் விரைவாகத் தொடர்பு கொண்டு துப்புத் துலக்க இந்தக் கருவி பெரிதும் உதவும்.

இந்த நவீனக் கருவியைப் பொருத்த ரூ. 1 கோடியே 6 இலட்சம் செலவாகும். மத்திய அரசு மானியமாகவும், கடனாகவும் ரூ. 1 கோடி கொடுக்கிறது. மீதித் தொகையைத் தமிழக அரசு கொடுக்கிறது.

இந்த நவீனக் கருவியை உத்தரபிரதேசத்தில் காஜியாபாத்தில் உள்ள 'பாரத் எலக்ட்ரானிக்' நிறுவனம் தயாரிக்கிறது. இதற்கான ஒப்பந்தம் சென்னையில் கையெழுத்தானது.

எட்டிலே ஓடியாந்திடறேன்... பவளம்!'' என்று சொல்லிக் கொண்டே, பவளத்தைப் பார்க்காமல் காலைப் பார்த்து நடந்தாள் அன்னம்.

விடிகாலையிலேயே தஞ்சாவூருக்குக் கார் ஏறிப் பறந்த அப்பா எப்போது திரும்புவார்? அப்பாவுக்கு இப்போது தஞ்சையில் என்ன அவசர அலுவல்? 'கேசு' தான் கெலிச்சுப் போச்சே? பாவம், ராத்திரியும் அவர் சோறு உண்ணவில்லை! 'இரு மனம்' பூண்ட இரும்பு நெஞ்சுக்காரியான செங்கமலம் 'கால்மாறி' ஓடிவிட்ட சேதி கேட்டு, அவளைக் கையும் களவுமாக—கையும் மெய்யுமாக ஓடிப் பிடித்து விடுகிற மாதிரி ஓடினாரே அப்பா? ஆனால், நட்ட நடு ராத்திரியிலே அவர் மாத்திரம் தானே திரும்பினார்? அந்தப் பாவி பழிகாரி—சண்டாளிச் சனியன் செங்கமலம் என்ன ஆனாள்? என்னமோ எல்லாமே மூடுமந்திரமாக அல்லவா இருக்கிறது? வேலைக்காரப் பரமசிவம் எங்கே போய்த் தொலைந்தானும்? — சே! குழப்பத்திற்குப் பெயர்தான் வாழ்க்கையோ?—ஐயையோ!

இப்படி என்னென்னவோ கேள்விகளையெல்லாம் மனக்குழலி, 'குளவி'யாகக் கொட்டிக் கேட்க, அந்தச் சலனத்திற்கும் குழப்பத்திற்கும் மத்தியிலே ஒரு வழியாகச் சோற்றைக் கவிழ்த்து—வடித்து இறக்கி வைத்தாள் அன்னம்.

பவளம் இங்கே ஏன் வந்திருக்கிறாள்? அவள் பார்வை நன்றாக இல்லையே? வைரப் புளியங்கொம்பாகப் பார்த்துதான் அத்தானைக் கட்டிப்போட நினைத்திருக்கிறார் மாமா! பாவம், அத்தை புருஷன்! ஏமாந்து விட்டாரே!

அன்னக்கொடி அவளுக்கே உரித்தான பரிவுடன் பவளக்கொடியை—சிலட்டூர்க் கங்காணியாரின் அருமந்தப் புதல்வி பவளக்கொடியை நெருங்கி, ''பவளம், வா, சோறு உண்ணலாம்'', என்று அன்புடன் அழைத்தாள். மனிதாபிமானம் மணந்திட அழைத்தாள்.

ஏலே அன்னம்! ஈனத்தனமும் சின்னத்தனமும் கொண்ட உங்க வீட்டிலே கை நனைக்க வந்திருக்கேன்னு மனப்பால் குடிச்சே நீ? என்னோட தாலிப் பிரச்சினை சம்பந்தப்பட்ட ஒரு சங்கதியைப் பானை வெடிச்சாப்பிலே உங்கிட்ட ஓதிப்புட்டு ஓடத்தான் ஓடியாந்திருக்கேன்! கேட்டுக்க!'' என்று மறைவுக் கவர்ச்சி விளையாடச் சற்றே நிறுத்தினாள் பவளம்.

அன்னத்தின் சந்திர பிம்ப வதனத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தலைப்பட்டன.

உச்சாடனம் கொண்ட குணயக்காரியாகப் பவளம் தொடர்ந்தாள்.

''ஏ, அன்னம்! உன்னைக் கண்ணாலம் பண்ணிக்கப் போறதாக உன் ஆசை அத்தைமகன் வீரமணி வாக்குக் கொடுத்திருக்காராமே? அந்தப் பாக்கியம் இந்தச் சென்மத்திலே உனக்குக் கிட்டவே கிட்டாது; கிட்டவும் இந்தச் சென்மத்திலே விடவும் மாட்டேன் நான்! ஏன் தெரியுமா? உன் நேச மச்சான் வீரமணி எனக்கே திருப்பூட்டுறதாக ஆத்தாளைச் சாட்சி வச்சு, எனக்குக் கையடிச்சுக் கொடுத்திருக்காகளாக்கும்! அந்தச் சத்திய வாக்கை நான் வேதவாக்காய் நம்பித்தான், நான் என்னோட அருமை வீரமணி மச்சானுக்கு கண்ணாலம் காட்சிக்கு முந்தியே ஒரு நிலா ராத்திரியிலே நான் ''முந்தானை விரிச்சுப்புடத் துணிஞ்சேனாக்கும்!''

—வளரும்.


**மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1828.**

**படாளம்**

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுவட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளின் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே பயக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!


# மண்பாண்டங்களுக்கு மானாமதுரை

''கானக் கரிசலிலே
களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிக்கட்டுமா போகட்டுமா?''

—இது ஏட்டில் எழுதாக் கவிதையாக வழங்கும் நாட்டுப் பாடலில் காளை ஒருவன் கேட்கும் கேள்வி.

இதற்கு அவனுடைய உள்ளம் கவர்ந்தவள் சொல்லும் பதில் :

''ஒருநாள் ஒருபொழுது-
உங்கமுகம் பாராமே
ஓடைக்கரை மண்ணெடுத்து
உருவாரம் செஞ்சுபார்த்தேன்'

அவளுடைய ஆசையை அப்படியே சொல்லி விட்டதால் ஆனந்தம் தாங்கவில்லை அவனுக்கு. அதனை அவன் வாயிலிருந்து வரும் சொற்கள் வெளிப்படுத்துகின்றன.

''மானாமதுரை மண்ணெடுத்து
மங்கைஉன் உருவம் செஞ்சா
தேனா இனிக்குமடி
திக்கெட்டும் மயங்குமடி''

ஆமாம், திக்கெட்டும் மயங்கித்தான் தீரும். மானாமதுரையிலே செய்துள்ள மண்பாண்டங்களே நம்மை மயக்கும்போது, மங்கையின் உருவம் காளையை மயக்காதா? நாட்டுப் பாடலில் அந்தக் காளை சொல்வது உண்மைதான் என்பதை இன்று மானாமதுரையில் செய்யப்பட்டுள்ள மண்பாண்டங்களைக் காணும் ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்வர்.

மானாமதுரையின் மண்ணின் மகிமை போலும். அந்தப் பகுதியில் மண்பாண்டம் செய்யும் தொழிலில் தான் எவ்வளவு நேர்த்தி.

வைகையாறு ஓடும் மானாமதுரைப் பகுதியில் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலைகளும் உள்ளன. செங்கல் தயாரிக்கும் தொழிலும் நடைபெறுகிறது. மண்பாண்டங்கள் செய்யும் தொழிலும் கைவண்ணம், கலைவண்ணம் மிகுந்ததாகக் காணப்படுகிறது.

தலைமுறை தலைமுறையாக மண்பாண்டங்கள் செய்வோர் இப்பகுதியில் ஏராளமாக உள்ளனர். இவர்கள் நலங் கருதி, மானாமதுரை மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கம் 1946-ஆம் ஆண்டிலே இங்குத் தொடங்கப்பட்டது.

இன்னொரு கூட்டுறவுச் சங்கம், மானாமதுரை தேசிய மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு 1960-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இப்பொழுது இந்த இரண்டு சங்கங்களையும் ஒன்றாக இணைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இவ்விரு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உதவியளித்து வருகிறது.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களால் மண்பாண்டம் செய்வோருக்கு மேம்படுத்தப்பட்ட சக்கரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய புதிய வடிவங்களில் மண் வீட்டுக்குப் பயன்படும் மண்பாண்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

குடிநீர் வைக்கும் கூஜாக்களில் தான் எத்தனை வகை. மான் போல ஒன்று, வாத்து போல மற்றொன்று; மயில் போல இன்னொன்று; முயல் போன்ற வடிவில் வேறொன்று.

மலை போலக் குவிந்திருக்கும் பானை வகைகளில் எத்தனை எவ்வளவு வகை. பலாப்பழம் போல செய்யப்பட்டிருக்கும் பானைதான் எவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறது.

அங்கு வைத்திருக்கும் ஒவ்வொரு பொருளையும் பார்க்கப் பார்க்க ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நேர்த்தியாக இருப்பதைக் காணுகின்றோம்.

செங்கற்பட்டு மாவட்டம் செவ்வாய்ப்பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஊர்க்காடு பகுதியிலும், மண்பாண்டங்கள் செய்யும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இராம

நாதபுரம் மாவட்டம் மானா! மதுரைப் பகுதியில் நடைபெற்று வரும் மண்பாண்டம் செய்யும் தொழிலின் நேர்த்தியும் சிறப்பும் தனியாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்குச் செய்யப்படும் மண்பாண்டங்கள் அண்டை மாவட்டங்கள் அனைத்துக்கும் செல்கின்றன. கதர் கிராமத் தொழில் வாரியத்தின் விற்பனை நிலையங்களான 'காதி கிராப்ட்' கடைகள் எல்லாவற்றுக்கும் அனுப்பபடுகின்றன. சென்னை குறளகத்துக்கும் மானாமதுரை மண்பாண்டங்கள் அனுப்பப்படுகின்றன.

மானாமதுரை மண்பாண்டங்கள் கேரள மாநிலத்திற்கும் அனுப்பப்படுகின்றன.

இங்குத் தயாராகும் பூவைக்கும் அலங்காரத் தொட்டிகளைத் தூத்துக்குடி 'ஸ்பிக்' தொழிற்சாலைக்கும் அனுப்பியுள்ளார்கள்.

மானாமதுரையில் மண்பாண்டங்களின் விலை கொள்ளை மலிவுதான்! வெளியூருக்கு மண்பாண்டங்களை எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவும், பொருட்களை எடுத்துச் செல்லும் போது ஏற்படும் சேதமும்தான் வெளியூர்களில் மண்பாண்டங்களின் விலையை ஏற்றி விடுகின்றன. அப்படிக் கூடுதலான விலை கூட இந்த மண்பாண்டங்களின் கலையழகைக் காணும்பொழுது மிகக் குறைவானதுதான்.

மானாமதுரை மண்பாண்டம்

மானாமதுரை மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்க்கும் எவரும் அங்கு வைக்கப்பட்டுள்ள மண்பாண்டங்களில் தனியாகக் கவர்ச்சியைக் காண முடியும். அதற்கு உரிய காரணத்தை அறிந்து கொள்ள மண்பாண்டங்கள் செய்யும் இடங்களுக்கே செல்கிறோம்.

அங்கே—

மண்ணை எத்தனை வகையாகத் தரம் பிரித்து, எடுத்துச் சேர்க்கிறார்கள். எல்லாம் அனுபவ முறைதான்.

மண்ணின் தரமும் சேர்க்கும் முறையும்தான் இங்கு இந்தத் தொழில் இப்படி வளரக் காரணமோ?

இருக்கலாம். அத்துடன் கைப் பழக்கத்தால் உருவாகும் கலை வண்ணம்—செய்தொழில் நேர்த்திக்குச் சிறப்பான எடுத்துக்காட்டு.

மண் பானையைச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றி வடிவம் கொடுக்கும் போது, பானையின் ஒரு பகுதியில் மண் அளவு கூடுதலாகி கனம் ஏற்பட்டு விட்டால் அதையும் அழகாக ஓசை நயத்தோடு தட்டிச் சமன் செய்கின்றனர்.

## கள்வனை விரட்டும் கருவி!

கள்வனைக் கண்டுகொண்டு அச்சுறுத்தி விரட்டிடவும், அவனைப் புகைப் படம் எடுக்கவும் வல்ல ஒரு புதுமைக் கருவியொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பெயர் 'இன்ட்ருடெக்'; எடுத்துச் செல்லக்கூடிய கருவி. மின்கலம் கொண்டு இயங்குகிறது. பலப்பல பணிகளுக்குப் பயன்படக் கூடியது. இதனை அமைப்பதற்கோ இயக்குவதற்கோ தனிப்பயிற்சி தேவையில்லை. இது சாலைகளில் ஓடும் ஊர்திகளை எண்ணும்; ஏரியில் ஓடும் படகுகளை எண்ணும்; காடுகளில் மான்களையும் எண்ணும், மக்கள் தொகையையும் கணிக்கும்!

எடுத்துச்செல்லக்கூடியதாகவும், எளிதில் அமைக்கக்கூடியதாகவும் இக்கருவி இருப்பதால், வெளியே தற்காலிகமாகப் பொருத்துவதற்கு மிகவும் ஏற்றது என்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள்.

இதில் உள்ள காமிராக்கள் அத்துமீறி நுழைபவர்களை நிலையாகப் படம் எடுத்துவிடுகின்றன! சட்டைப் பை அளவு இருக்கும் ரிசீவர்கள், வெளியே களத்திலே வேலை செய்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளவையாகும். கருவியின் வண்ணம் மங்கலாக இருக்கிறபடியால் அதனை மூடி மறைத்து வைக்க முடியும்! உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இக் கருவி தண்ணீர் புகாதபடி அமைக்கப்பட்டுள்ளபடியால் அதனைத் தரைக்கடியில் புதைத்து வைக்கலாம்.







இப்படி உருவாகி வரும் பொருள்களை அதற்கு உரிய அடுப்பில் வைத்துச் சுடுகிறார்கள். அந்தப் பகுதியில் கிடைக்கும் மரங்களே எரிபொருளாகப் பயன்படுகின்றன.

மண்பாண்டங்கள் தயாரிக்கப் பட்ட பின்னர் அவைகளைச் சங்க உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்கு விற்றுவிடுகிறார்கள்.

கூட்டுறவுச் சங்கத்தில் ஒவ்வொரு மண்பாண்டங்களும் சோதனைச் செய்யப்பட்டு வாங்கிக் கொள்ளப்படுகின்றன. பிறகே விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

இக்கூட்டுறவுச் சங்கங்களால் இத் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்குத் தொடர்ச்சியான வேலை வாய்ப்பும் வருமானமும் கிடைக்கிறது.

தலைமுறை தலைமுறையாக வழங்கி வந்த ஒரு தொழிலின் நேர்த்தியும் செய்யும் திறனும் பேணிக் காப்பாற்றப்பட்டு வருகிறது என்ற பெருமையும் இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உண்டு.

மானாமதுரையில் மண்பாண்டம் செய்வோர், கிராமக் கோயில்களுக்கான மண் குதிரை, காளை, அம்மன், ஐயனார் ஆகியவைகளைச் செய்வதில் சிறந்தவர்களாக விளங்குகிறார்கள். இவர்களுடைய கை வண்ணங்களால் பல ஊர்களின் கோயில்களில் மண் குதிரையும், ஐயனார் மற்ற கிராம தேவதைகளின் உருவங்களும் உருவாகியுள்ளன.

மண்பாண்டத் தொழிலின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ள மானாமதுரை மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்த்து வரும் பொழுது பாரதியாரின் பாடல் நினைவுக்கு வருகிறது.

''அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்'
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!''

—என்ற பாடலின் அடுத்த வரி தான்

''மண்ணெடுத்துக் குடங்கள் செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!''

—மானா.





உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு
'ப்ளேனோஃபிக்ஸ்'
தேவை.
சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள்
''ப்ளேனோஃபிக்ஸ்'' உபயோகித்தீர்களானால்,
பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து,
மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப்
பயிரிலே ''ப்ளேனோஃபிக்ஸ் மருந்தைப்
பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்தி
கரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன
M&B May&Baker
மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட
''ப்ளேனோஃபிக்ஸ்'' என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு



# உங்கள் அந்தரங்கக் காரியதரிசி இருளில் அவதிப்படுகிருரா?

சீரான ஒளி உங்கள் ஊழியர்களின் பார்வை, வேலைத்திறன் மற்றும் பரஸ்பர பழகும் தன்மை இவற்றை மேம்படுத்துவதில் பங்கு வகிக்கிறது. அலுவலகங்களுக்கேற்ற நம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்கான்டிஸென்ட், ஃப்ளுரோஸென்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.



பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்—
சீரான பார்வைக்கு

**பிலிப்ஸ்**

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்




# புளியோ புளி!

வெப்ப மண்டலத்தில் வளரும் மிகச் சாதாரணமான மரங்களுள் புளி ஒன்று. இது முள் இல்லாத மரம்; எப்போதும் இலை போர்த்துப் பச்சையாக விளங்கும்! 'இந்தியாவின் பேரீச்சம்பழம்' என இதைக் கூறுகின்றனர். இது நம்நாட்டில் தென் பகுதிகளிலும், மத்தியப் பகுதிகளிலும் சரித்திரக் காலத்திற்கு முன்பாகவே காணப்படும் மிக அழகிய மரம். காடுகளில் புளி மிகப் பெரிய மரமாக வளருகிறது. இதன் ஒவ்வொரு பகுதியும் பயன் உடையதாகையால், மக்கள் இதனை இதன் அழகிற்காகவும், பயனுக்காகவும், வீட்டிருகே வளர்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. சாலை ஓரங்களில் வைக்க இது ஒரு சிறந்த மரம். இலைகள் உதிர்ந்து புதிய இலைகள் துளிர்த்து அதோடு பூக்களும் மலருவது பார்ப்பதற்குப் பரவசமூட்டும் காட்சியாகும்! இளங்காவி நிறத்ததும், மஞ்சள் வரி கொண்டதுமான இதழ்கள் பாய்விரித்தாற்போல் தரையில் உதிர, கொத்துக் கொத்தாய் அழகிய இளம் பிஞ்சுகள் உருவாகின்றன. காய் முதிரும்போது பழுப்புப் பச்சை நிறமுடையதாகவும், பழுக்கும்போது சாம்பல் நிறமுடையதாகவும் விளங்கும். பழங்கள் மர நுனியில் ஏராளமாய்க் காணப்படும்.

இந்தியாவில் தென்முனை தொடங்கி, வடக்கே ஜீலம் நதி வரை புளியமரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அம்பாலா என்னும் இடத்திற்கு மேற்கான பாகங்களில் புளி பழுப்பதில்லை! கற்பாங்கான இடத்திலும், மண்வளம் அற்ற இடத்திலும், காய்ந்த உபயோகமற்ற இடங்களிலும்கூட இம்மரம் சாதாரணமாக வளர்கிறது. மழை அதிகம் பெய்யும் இடங்களிலும், மண்வளம் நிறைந்த இடத்திலும் செழித்து வளர்கிறது. வெப்ப மண்டலத்தில் மண்வளம் நிறைந்ததும், நல்லமழை உள்ளதுமான இடங்களில் பெரும் அளவில் காணப்படுகிறது. இது வெப்ப மண்டலத்தின் சூட்டினுலும், குளிரினுலும் (28-30 டிகிரி பாரன் கைட்) எந்த அளவும் பாதிக்கப்படாது மிக ஆழமாகச் செல்லும் வேர்களை கொண்டிருப்பதால், காற்றை எதிர்க்கும் பலம் உடையது. ஆகவே புளியமரம் காற்றைத் தடை செய்யும் மரமாகவளர்க்கப்படுகிறது. எப்போதும் பச்சையாக விளங்கும் மரமாயினும், மார்ச்-ஏப்ரல் மாதத்தில் இலைகளை உதிர்த்துத் துளிர்க்கும். புளி அனேகமாக தானாக விழுந்த- விதைகளினின்று உண்டாகிறது.

## இனங்கள்

ஃபிர்மிங்கர் என்பவர் இந்தியாவில் மூன்று இனங்கள் உள எனக் கூறுகிறார். ஆனால் தாய்ச்செடி போன்ற அதே இனங்களை விதையிலிருந்து திரும்ப உண்டு பண்ண முடிவது நிச்சயமில்லை என்றும் கூறுகிறார்.

'பெய்லி' என்பவர் கீழ்க் கண்ட இரு இனங்களைப் பற்றி கூறுகிறார்:—

கிழக்கு இந்திய இனம்: இந்த இனத்தின் காய் நீளமானது. சுமார் 6-12 விதைகள் இருக்கும்.

மேற்கு இந்திய இனம்: இந்த இனத்தின் காய் குட்டையானது. சுமார் 1-4 விதைகள் இருக்கும்.

குறிப்பாக குமரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட புளி இனங்கள் காணப்படுகின்றன.

இனிப்புப் புளி: இப்பழங்கள் புளிப்போடு, இனிப்பும் கலந்த சுவை உடையதாக இருப்பதால் மக்கள் இதை நேரடியாக விரும்பிச் சாப்பிடுகின்றனர். இது சாதாரணமாகப் பயன்படும் புளியைப் போன்று அத்துணை முக்கியம் வாய்ந்ததல்ல! இவ்வினம் ஒவ்வொன்றும் ஆங்காங்கே காணப்படுகிறது.

புளிப்பு இனம்: பழங்கள் புளிப்பானவை. சந்தைகளில் சாதாரணமாக காணப்படுவது இவ்வினமே.

வாழைகாச்சி: இதன் காய்கள் நீளமானவை. குறுக்கு வெட்டு நீண்ட சதுரமாய்த் தோன்றும். இதுவும் புளிப்பு இனமே.

சின்ன விதைகளைக் கொண்ட சிவப்பு நிறமான 'குஜராத்' புளியும் சிவப்பு கலந்த பழுப்பு நிறமான இன்னொரு இனமும் கூட நம் நாட்டில் உள்ளன.

### மரம் வளர்த்தல்

புளி விதைகள் எளிதில் கெடா. சாதாரணமாக தானே விழுந்த விதைகளிலிருந்து முளைத்துப் புளியமரங்கள் தோன்றுகின்றன. நாற்றுக்களை எளிதில் பெயர்த்து நடலாம். எனவே, நாற்றங்கால்களிலிருந்து நாற்றுக்களை எடுத்து நடவும் கூடும். மணலில் சுமார் ஒரு சென்டி மீட்டர் ஆழத்தில் விதைகளை விதைக்க வேண்டும். செடி முளைக்கும்போது இரண்டு விதை இலைகளுடன் வெளிவருகிறது. நாற்றுகள் எளிதில் அழுகிவிடக் கூடியன. ஆகவே, அவற்றை அதிகக் கருத்தோடு வளர்க்க வேண்டும். பின் விரும்புமிடத்தில் இளம் நாற்றுக்களை நடலாம். இளம் நாற்றுக்கள் ஆரம்பத்தில் மெதுவாக வளரும். அவை மென்மையானதால் பக்கத்தில் கம்பு வைத்துக் கட்டுதல் அவசியம். மேலும் கால் நடைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். பக்கங்களில் இருந்து வரும் கிளைகள் கழிக்கப்பட்டு சுமார் 2 மீட்டர் உயரம் எய்தும் வரை ஒற்றைத் தண்டாக வளரவிட வேண்டும். பின் கிளைகள் பல தோன்றும். விதைகளிலிருந்து எழுந்த நாற்றுக்களை நடுவதால், காய்களில் குணமாறுதல்கள், காய்ப்பின் அளவின் வேற்றுமைகள் முதலிய பண்புகள் எழுகின்றன.

தாய்ச்செடியின் சிறப்பான குணநலன்கள் காக்கப்பட, சிறப்பு முறைகளில் தாய்ச் செடியின் பாகங்களிலிருந்து இனவிருத்தி செய்யப்பட வேண்டும்.

'ஃபிர்மிங்கர்' என்பவர் தெரிந்து எடுக்கப்பட்ட சிறந்த பழங்களைக் கொடுக்கக்கூடிய மரக்கிளைகளிலிருந்து பதியம் எடுக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

'வெஸ்டர்', 'பெய்லி' ஆகிய இருவரும் கேடய மொட்டுக் கட்டும் முறையில், நற்குலச் செடிகள் தயாரிக்கலாம் எனக் கூறுகின்றனர்.

'சாமோலர்' என்பவர் இளம் நாற்றுகளில் மொட்டுக் கட்டும் முறையைப் பின்பற்றலாம் எனக் கூறியுள்ளார்.

'மொரே' என்பவரும் 'டாய்' என்பவரும் விரும்பத்தக்க பழம் தரும் மரங்களின் மொட்டுக்களை, கேடய முறையில் சிறிய நாற்றுகளில் செய்வதை விரும்பியுள்ளனர்.

### நடுதலும் பின் கவனிப்பும்

புளிய மரம் பொதுவாக வீட்டுப்புறங்களிலும், பாதை ஓரங்களிலும் வளர்க்கப்படுகிறது. காற்றுத் தடுப்பு மரமாகவும், இதை வளர்க்கின்றனர். வீட்டு அருகில் விதை நட்டு, செடி வளர்த்து, தண்ணீர் விட்டுப்பாதுகாப்பது சிரமம் அல்ல! நாற்றங்கால்களில் 'பாலிதின்' பைகளில் அல்லது சின்ன தொட்டிகளில் அல்லது கூடைகளில் மண்போட்டு நாற்றுக்களை வளர்த்தல் விரும்பத்தக்கது. 'ஒரு 'பாலித்தின்' பை அல்லது தொட்டில் அல்லது கூடையில் இரண்டு விதை வீதம் போடப்பட வேண்டும். துரிதமாக வளரும் செடியை தெரிந்து கொண்டு மற்றதை நீக்க வேண்டும். குழிகள் தோண்டி, எருக்கலவை போட்டு செடியைக் கூடையோடு நட்டுத் தண்ணீர் விட வேண்டும். இளஞ் செடிகளைக் கால்நடைகள் மேய்ந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். வறண்ட காலங்களில் தண்ணீர் ஊற்ற வேண்டும். அடர்த்தியான நிழலும், உதிரும் இலைகளின் நச்சுத் தன்மையும், புளிய மரத்தின் அடியில் களைகளை வளரவிடுவதில்லை! மழைக் காலத்திற்குப்பின் மரங்களின் அடியிலுள்ள காய்ந்த இலை முதலியவற்றை மண்ணோடு கலந்து எருவாக்கி மண்ணின் வளத்தைக் காக்க ஒன்றிரண்டு முறை உழவேண்டும். இளமையில் மெதுவாக வளரும் புளி, பின்னர் வேர்களை ஆழமாகச் செலுத்தி துரிதமாக வளருகிறது. இளம் செடிகள் சுமார் 2 மீட்டர் உயரம் வளரும் வரை ஒற்றைத் தண்டாக விட்டு, பின் கிளைகள் உண்டாக அனுமதிக்க வேண்டும். அதிகமாக உருவந்திருத்தல், காவத்து செய்தல், தண்ணீர் பாய்ச்சுதல், எருப்போடுதல் முதலிய பக்குவங்கள் செய்யப்படுவதில்லை.

புளிய மரம் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையும், அக்டோபர் மாதத்திலும் கூட பூக்கும்! பழங்கள் டிசம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரை அறுவடை செய்யப்படும்!

### அறுவடை

காய்கள் முற்றும்போது பச்சை நிறத்திலிருந்து தவிட்டு நிறமாக மாறும். சதை சுருங்கி மேல் தோட்டிலிருந்து விலகும் மேல்தோடு இலகுவில் உடையும் தன்மை உள்ளது. சதை, பச்சை நிறத்திலிருந்து பழுப்பு நிறமாக மாறும். ஆண்கள், கிளைகளின் மீது ஏறி, பலமாக உலுக்கிப் பழங்களை உதிர்க்கின்றனர். தரையிலிருந்து அவற்றை பெண்கள் அல்லது சிறுவர்கள் பொறுக்கி எடுப்பார்கள். சில இனப் பழங்கள் இலகுவில் கீழே விழா. அவ்வினங்களில், தொரடு அல்லது வாங்கு போன்ற சாதனங்களால் பழங்களை அறுவடை செய்வர். இவ்வினச் செடிகள் அரிதாகத்தான் காணப்படுகின்றன. இவற்றில் காற்றினால் விழுந்து சேதப்படுவது தடுக்கப்பட்டாலும், அறுவடைச் செலவு அதிகமாகும்.

### மகசூலும் வருமானமும்

இனத்தைப் பொறுத்தும், மரத்தின் வயதைப் பொறுத்தும் மகசூல் வேறுபடும். ஒரு மரம் சுமார் 175 கிலோ பழம் கொடுக்கும். ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ஏழத்தாழ ரூபாய் 5,000 நிகர வருவாய் கிடைக்கும்.

**உமியிலிருந்து சிமெண்ட்**

நெல் உமியைச் சிமெண்ட்டாக மாற்றலாம் என்று டாக்டர் பி. கே. மேத்தா என்னும் இந்திய விஞ்ஞானி கண்டுபிடித்திருக்கிறார். அவர் இப்போது அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

உமியை உலையில் போட்டு ஒரு குறிப்பிட்ட வெப்பத்தில் எரித்து அதைச் சாம்பலாக்குகிறார்கள். இந்தச் சாம்பலில் 'ஸிலிகா' என்னும் பொருள் நிறைய இருக்கிறது. 'ஸிலிகா' சிமெண்ட் உற்பத்திக்குத் தேவையான முக்கியமானதோர் அடிப்படைப் பொருளாகும். இந்தச் சாம்பலை சுண்ணாம்புடன் கலந்து கறுப்பு நிறமான சிமெண்ட் செய்யப்படுகிறது. இந்த வகை சிமெண்டானது, சாதாரண சிமெண்ட் எந்த அளவுக்கு உறுதியானதோ அந்த அளவுக்கு உறுதியானதாகும்.



### விற்பனை

காடுகளிலும் பாதை ஓரங்களிலும் உள்ள மரங்களில் மகசூல் மரத்தில் இருக்கும் போதே ஏலத்தில் விடப்படுகிறது. சிலர் பழங்களைச் சேகரித்து அளந்து விற்கிறார்கள்.

'ஜமெய்க்காவில்' ஏற்றுமதிக்கான புளியைத்தோட்டை நீக்கி தயாரிக்கிறார்கள். பெட்டிகளில் ஒவ்வொரு அடுக்குக்கும் இடையே பரல் சர்க்கரை போட்டு அடைக்கிறார்கள். பெட்டி சுமாராக நிறைந்ததும் கொதிக்கும் சக்கரைப்பாகு ஊற்றி மூடிவிடுகிறார்கள்.

கீழ்நாடுகளில் விதைகளை நீக்கிவிட்டு சதைப் பகுதிகளை பெரிய கட்டிகளாக உருட்டிப் பாய்கள் அல்லது ஓலைகளில் பொதிந்து கட்டி, அனுப்புகிறார்கள். நம் நாட்டிலிருந்து பெரும் அளவில் அரேபியாவிற்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் கப்பலில் புளி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளுக்கு தோடு, விதை, மற்ற அழுக்குகளை நீக்கி, புளியைச் சுத்தம் செய்து அனுப்புகிறார்கள். சுத்தம் செய்யப்பட்ட சதை அடுக்குகளுக்கிடையே உப்பு அல்லது சர்க்கரை போட்டு பொதியப்படுகிறது. பின் கொதிக்கும் பாகு ஊற்றி பெட்டி மூடப்படுகிறது. ஆங்கில நாட்டிற்கு மேற்கிந்திய தீவுகளிலிருந்து புளி அனுப்பப்படுகிறது.

வீட்டின் தேவைக்கான புளியைத் தோடு, விதை, கோது முதலியன நீக்கிச் சுத்தம் செய்து, பனியிலும், வெய்யிலிலும் சுமார் ஒரு வாரம் திறந்து போட்டுத் தயாரிக்கிறார்கள். அதன்பின் பானைகளுக்குள் உப்பிட்டு அடைத்து, பானையின் வாயை துணியினால் வண்டு கட்டி, உலை மூடியால் மூடி வைக்கிறார்கள்.

### பயன்கள்

இம்மரத்தின் எல்லாப் பாகங்களும் பயன்படுகின்றன. பழத்தின் சதையானது குழம்பு, சட்னி முதலியன தயாரிக்கச் சிறந்தது. மீன் ஊறுகாய் போடவும், புளி உதவும். இனிப்புப் பலகாரம் தயாரிக்க புளி, பாகாக உதவுகிறது. பழத்தின் சாற்றை எடுத்து, சர்க்கரைத் தண்ணீர் இவற்றோடு கலந்து குளிர்ந்த குடிநீராக (Cool-drinks) பயன்படுத்துகின்றனர். பாடம் செய்த உணவுப் பொருட்களுக்கு மணம் அளிக்கவும் உதவுகிறது. குழந்தைகள் புளியை பிஞ்சிலிருந்து பழம் வரை எல்லாப் பருவங்களிலும் விரும்புகின்றனர். நகை செய்பவர்கள் வெள்ளியைச் சுத்தம் செய்து பளபளப்பாக்க புளியும் உப்பும் கலந்தகலவையைப் பயன்படுத்துகின்றனர். தரம் குறைந்த புளியோடு உப்புப் போட்டு பித்தளை, செம்பு முதலிய வீட்டுப் பாத்திரங்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்துகிறார்கள். இதன் மரம் மிக்க உறுதியானது. வண்டிச் சக்கரம், கொட்டாப்புளி, வீட்டுச் சாமான்கள், எண்ணெய் மற்றும் சர்க்கரை ஆலைக்கான உரல்கள் முதலியன செய்ய பயன்படுகின்றன. கடசல் வேலைக்கு ஏற்ற மரம் புளி. வெடிமருந்து, அடுப்புக் கரி முதலியன செய்ய விரும்பத்தக்க மரங்களுள் புளியும் ஒன்று.



விதைகளை நன்கு நொறுக்கி, இரவு முழுவதும் ஊற வைத்து பன்றிகளைக் கொழுக்க வைக்க கொடுக்கப்படுகிறது. வெளித் தோல் வறுப்பதாலும், ஊற வைப்பதாலும் நீக்கப்படுகிறது. விதைகளை வறுத்துச் சாப்பிடுகின்றனர். அல்லது அவித்துக் கால்நடைகளுக்குக்கொடுக்கின்றனர். விதையைக் காய வைத்து, அரைத்து நல்ல மாவாகவும் பயன்படுத்தலாம்.

இதன் இலைகள், பூக்கள், பழங்கள் முதலியவற்றை சாஃப்ளவரோடு ஒருவகைச் சாயம் தயாரிக்க பயன்படுத்துகின்றனர். இதன் விதையில் இருபது சதவிகிதம் எண்ணெய் இருக்கின்றது. அந்த எண்ணெய் இனிப்பானதாகவும், மணம் அற்றதாகவும், கெட்டியான திரவமாகவும் உள்ளது. விதைகளைப் பிழிந்து எண்ணெய் எடுக்கின்றனர். பெயிண்ட், வார்னிஷ் முதலியன செய்யவும், விளக்கு எரிக்கவும் உதவுகிறது. இந்த எண்ணெய்யைச் சமையலுக்கும் பயன்படுத்தலாம்.

ஓர் அடி உயரம் உள்ள புளியங்கன்றுகள் காய்கறியாகவும், பயன்படுத்தப் படுகின்றன. புளியமரத்தின் இலைகளைக் கறியாகச் சமைக்கவும், பயன்படுத்தப்படுகிறது. புளிய மரத்தின் பூக்களிலிருந்து 'சின்கார்' (Chingar) என்ற உணவு வகை (Dish) தயாரிக்கப்படுகிறது. புளியமரத்தின் இளம் துளிர்களையும் பூக்களையும் கொண்டு தயாரிக்கப்படும் 'சட்னி' சுவையானதாக இருக்கும்.

### மருந்துக் குணங்கள்

புளி உடம்பிற்குக் குளுமை கொடுப்பதுடன், உண்ட உணவைச் சீரணிக்கச் செய்கிறது. மலமிளக்கியாகவும், வாயுவைத் தடுக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. மது போன்றவற்றால் உண்டான கோளாற்றைப் போக்க உதவுகிறது. புளியம் பழத்தைக் கூழாக்கியும், அல்லது இலையை அரைத்தும் அல்லது அரைத்த விதைகளையும் கட்டிகள், வீக்கங்கள் முதலியவற்றின் மேல் பூச்சாகப் பயன்படுத்துகின்றனர். தொண்டைப் புண்ணுக்கு மருந்தாகப் புளிக் கரைசலால் வாய் கொப்பளிக்கின்றனர். இலகுவில் ஆறாத இரணப் புண்கள் கூட, புளி இலைகள் போட்டு தயாரித்த கசாயத்தால் கழுவும்போது துரிதமாகக் குணப்படுகின்றன. விதையின் மேல் காணப்படும் சிவப்புத் தோடும், கடுமையான வயிற்றுக் கடுப்பு நோய்க்கு மருந்தாகிறது.

விதையின் நிறை, பழத்தின் நிறைக்கு 13.9 சதவீதம் ஆகும். விதை நீக்கிய பழக் கூழில் கீழ்க் கண்டவை அடங்கியுள்ளன.

நீர் —27%

கரையாப் பொருட்கள் —16.2%

பொட்டாசியம் பை கார்பனேட் —5.27%
டார்டாரிக் அமிலம்—6.63%

சிட்ரிக் அமிலம் —2.20%

மாலிக் அமிலம் —சிறிது அளவில்

**ஊட்டச் சத்துக்களின் மதிப்பு**

புளியம்பழத்தில் சுமார் 20 சதவிகிதம் சர்க்கரை இருந்த போதிலும், அதிகமாகப் புளிப்புச் சுவை உள்ளது. அதில் 3.3 சதவிகிதம் புரதச் சத்தும், அதிக அளவில் விட்டமின் 'பி' யும், தாதுப் பொருட்களும் அடங்கி உள்ளன.

வீட்டில் பயன்படுத்தவும், வியாபாரத்திற்கும் மேற்கூறப்பட்ட முறைகளில் புளி தயாரிக்கப்படுகிறது. சில முக்கியமான தயாரிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திடீர்ப்புளி (Instant Tamarind): புளியின் கூழ் தயாரிக்கப்பட்டுப் புட்டிகளில் அடைக்கப்பட்டுள்ளது. விதை கோது, தோடு, முதலிய பொருட்கள் ஏற்கெனவே நீக்கப் பட்டுள்ளதால் நேரடியாக இதனைப் பயன்படுத்தலாம்.

பானம் (Refresed): இப் பானத்திற்காக கூழிலிருந்து பாகு தயாரிக்கப்பட்டுப் புட்டியில் அடைக்கப்படுகிறது. நேரடியாகப்பயன்படுத்தலாம். தேவைக்கேற்பத் தண்ணீரும் சர்க்கரையும் சேர்த்து நல்ல குளிர் பானம் தயாரிக்கலாம்.

**பூச்சிகளும், நோய்களும்**

புளியமரம் பூச்சிகளினால் உண்டாகும் தாக்குதலை எதிர்க்கக் கூடியது. ஆயினும் கீழ்க்கண்ட பூச்சிகள் இந்தியாவில் காணப்படுகின்றன.

வண்டு (Caryoborus genagra): இது சாம்பல் பழுப்பு நிறமான வண்டு. இது புளியின் விதைகளைத் தாக்குகிறது.

வண்ணாத்திப்பூச்சி (Charaxes fabices): இது உருவில் பெரியது. கறுப்பு நிறமானது. இதில் மஞ்சள் புள்ளிகள் உள்ளன. இதன் புழுக்கள் புளியின் இலைகளைத் தின்று வளர்வதால் மரம் தாக்கப்படுகிறது.

பொதுவாக, புளி, நோயால் தாக்கப்படுவதில்லை.

பொதுவாக பூச்சிகளாலும், நோய்களாலும், புளிய மரத்திற்கு அதிகச் சேதம் உண்டாவதில்லை. எனவே, சாதாரணமாக எந்தத் தடுப்பு முறையும் தேவைப்படுவதில்லை.

புளியம்பழம், உலர்த்தின புளி, புளியம் விதை, விதைப் பொடி, ஆகியவைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், கானடா, மத்திய கிழக்கு நாடுகள் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் மூலம் நம் நாட்டுக்கு ஆண்டு தோறும் 4.7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அன்னியச் செலாவணி கிடைக்கிறது. எனவே, புளிய மரம் வளர்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

—திரு. தா. பாலஸ்,
தோட்டக் கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.




# உழவர் பெருமக்களுக்கு உதவும் தேன் துளிகள்

— ஆர்.எம்



ஆராய்ச்சி நிலையங்களில் அதிக மகசூல் தரும் ரகங்கள், சில சமயம் சாதாரண உழவர்களின் வயல்களில் அதிக மகசூல் அளிப்பதில்லை! இதனால் பாதிக்கப்பட்ட உழவர்கள், ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வெளிவரும் புதிய ரகங்களைப் பயிரிடத் தயங்குகின்றனர். ஆராய்ச்சி நிலையங்களில் புதிய ரகங்கள் அதிக மகசூல் அளிப்பதற்கு, ஆராய்ச்சி நிலையங்களில் அவ்வப்பொழுது மிகுந்த செலவில் தீவிரமாக மேற்கொள்ளப்படும் சாகுபடி முறைகளே காரணம் என்று பல உழவர்கள் எண்ணுகின்றனர்! தங்களிடம் உள்ள குறைந்த பொருளாதார வசதிக்கு ஏற்ப சாதாரண முறையில் சாகுபடி செய்யும்பொழுது, புதிய ரகங்கள் அதிக மகசூல் தராது என்று நம்புகின்றனர். அனுபவத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, உழவர்களின்கருத்து ஓரளவிற்கு உண்மை என்றே ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, ஆராய்ச்சி நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரகங்களை உழவர் பெரு மக்களிடம் புகுத்தும் பணியைத் தலையாயகடமையாகக் கொண்டுள்ள தமிழ் நாடு வேளாண்மைத்துறை, 'ஆராய்ச்சி நிலையங்களில் அதிக மகசூல் அளித்துள்ள ரகங்கள் பல்வேறு மண் நிலைமைக்கும், கால நிலைமைக்கும், ஏற்றதா?' என்பதையும், 'உழவர்கள் செலவு செய்வதற்கு ஏற்பப் பயன் தருமா?' என்பதையும் ஆராய்ந்து அறிவிக்கும் நோக்குடன் உடனடியாகப் பல்வேறு இடங்களில் உழவர்களின் வயலிலேயே அனுசரணை ஆராய்ச்சியாக (Adaptive Research) புதிய ரகங்களைப் பயிரிட்டுப் பார்க்கிறது. அனுசரணை ஆராய்ச்சியில் புதிய ரங்கள் பயன் தருவதாக இருந்தால் மட்டுமே, தமிழ் நாடு வேளாண்மைத்துறை அந்த ரகங்களின் விதைகளை வழங்கி, பயிரிடுமாறு உழவர் பெருமக்களுக்குப் பரிந்துரைக்கிறது.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால் ஆராய்ச்சி நிலையங்களின் முடிவை, மறு பரிசோதனை செய்ய (Test check), அனுசரணை ஆராய்ச்சி உதவுகிறது. பல்வேறு இடங்களில், உழவர் பெருமக்களின் வயலிலே நடத்தப் பெறும் அனுசரணை ஆராய்ச்சிகளை நேரில் காணும் வாய்ப்பு பெறும் உழவர் பெருமக்கள், தங்கள் பகுதிக்கு ஏற்ற சிறந்த ரகத்தைத் தெரிந்து கொண்டு, அந்த ரகத்தைப் பயிரிட முன் வருகின்றனர். எனவே, 'நம் பகுதிக்கு இந்த ரகம் ஏற்றதாக இருக்குமா?' என்று ஐயுறும் உழவர் பெருமக்களுக்கு அனுசரணை ஆராய்ச்சி, புதிய ரகங்களின் மகசூல் திறனையும், மற்ற சிறப்புக் குணங்களையும் அறிந்திட உதவும் கருவியாக இருப்பதுடன், உழவர் பெருமக்களுக்கு ஏற்படக் கூடிய நட்டத்தைத் தவிர்த்திட உதவும் கருவியாகவும் அமைந்துள்ளது!

அனுசரணை ஆராய்ச்சிகளின் பயனாகவே, தமிழ் நாட்டில் 'கருணா', 'ஐ. ஆர். 20', 'கண்ணகி', 'கரிகாலன்', 'பவானி' போன்ற புதிய ரகங்கள் வெகு விரைவாகப் பெரும் பரப்பில் பரவியுள்ளது! ஆகவே தான், தமிழ் நாடு வேளாண்மைத் துறை 1973—74-ஆம் ஆண்டில் பெரும் அளவில் நெல் ரகங்களில் அனுசரணை ஆராய்ச்சிகளைப் பல்வேறு மாவட்டங்களில், ஆங்காங்குள்ள உள்ளூர் நிலைமைகளில் நடத்தியது.

அனுசரணை ஆராய்ச்சி முடிவுகள், தமிழ் நாட்டு உழவர் பெருமக்களின் 'ஐயம்' என்னும் நோய் தீர்க்கும் தேன்துளிகளாக உள்ளதால், அவைகளைத் 'தமிழரசு' என்னும் தேன்கிண்ணத்தில் திரட்டி, தமிழக உழவர் பெருமக்கள் உண்டு மகிழ்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்கிட ஈண்டு படைத்துள்ளோம்!

**அனுசரணை ஆராய்ச்சி முடிவுகள்!**

**செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களுக்கு :—**

1. 'சொர்ணவாரி' பட்டத்தில் 48 இடங்களில், நடத்திய அனுசரணை ஆராய்ச்சிகளில் உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 'கண்ணகி' ரகம் 2,625 கிலோ மகசூலும், 'கல்சர் 1251' ஏக்கருக்கு 2,656 கிலோ மகசூலும், 'டி.கே.எம். 6' ரகம் ஏக்கருக்கு 1,925 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. எனவே 'டி. கே.எம்.6' ரகத்தை விட 'கண்ணகி' ரகமும், 'கல்சர் 1251'-ம் முறையே 26 சதம், 20 சதம் அதிக மகசூல் அளித்துள்ளது என்பது தெளிவாகிறது.



உங்கள் எதிர்காலத்திற்கு ஓர் நற்செய்தி

TNSC BANK

எப்பொழுதும் இல்லாத அதிகப்படியான வட்டி இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

| ரூ 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதங்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001

தந்தி அர்பாங்க் தொலைபேசி: 20367 டெலக்ஸ் 7225

என்.எல்.ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர். குடவாசல் சி.கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர் ஆர்.கனகசபை, தலைவர்.


367

2. குருத்துப் பூச்சி, இலைச் சுருட்டும் புழு ஆகிய இரண்டையும் தாங்கிக் கொள்ள வல்லது 'கல்சர் 1251'. ஆனால் கண்ணகி ரகம் இலைச்சுருட்டும் புழுவினால் பாதிக்கப்பட்டாலும், ஓரளவிற்கு குருத்துப் பூச்சியின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள வல்லது.

3. சொர்ணவாரி பட்டத்தில், 15 இடங்களில் நடத்தப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சியிலிருந்து 'கோ.-29' ரகத்தை விட, 'ரத்னா', 'காஞ்சி' ஆகிய ரகங்கள் அதிக மகசூல் அளிக்கவல்லவை என்பது புலனாகி உள்ளது. 'கோ. 29' ரகத்தை விட 'ரத்னா' ரகமும், 'காஞ்சி' ரகமும்முறையே 37 சதம், 40 சதம் அதிக மகசூல் அளித்துள்ளன.

4. சம்பா பட்டத்தில் முதலில் மானாவாரியாக விதைத்து, பிறகு தண்ணீர் கிடைத்ததும் இறைவையாகச் சாகுபடி செய்யப்படும் நிலைமைக்கு (Semi-dry condition) 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20', 'பவானி' ஆகிய ரகங்கள் ஏற்றவை. இம்மூன்று ரகங்களும், தற்பொழுது வழக்கத்தில் உள்ள 'பைய்யகுண்டா' (B.A.M-3) என்ற ரகத்தைவிட, 3 வார வயது குறைந்தவையாக இருப்பதுடன், 'பைய்யகுண்டா' ரகத்தைப் போலவே மகசூல் தருகின்றன. 'பவானி' வறட்சியைத் தாங்கிக் கொள்வதாகவும், இலைப் புள்ளி (Helminthosporium), குருத்துப் பூச்சி, இலைச் சுருட்டுப் புழு ஆகியவைகளால் அதிகம் பாதிக்கப்பட்டதாகவும் உள்ளது.

5. சம்பா பட்டத்தில் 'பவானி' ரகம்—'ஐ.ஆர். 20' ரகம் போலவே—நல்ல மகசூல் அளிக்கிறது. பல்வேறு இடங்களிலும் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது.

6. ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்துக்கு மேல் அதிகமாக தழைச் சத்து இட்டால், 'பவானி' ரகம் தலை சாய்ந்து கீழே விழும்!

7. கெட்டியான களிமண் பகுதிக்கும், தண்ணீரை வடிய விடாத மண் பகுதிக்கும் ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து என்ற அளவில் உரமிட்டு பயிரிட 'பொன்னி' ஏற்றது.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு :—

8. குறுவைப் பட்டத்தில் 'கண்ணகி', 'கல்ச்சர் 1251', 'திருவேணி' ஆகிய குறுகிய கால வயதுடைய (100 முதல் 112 நாட்கள்) ரகங்கள், 'ஐ.ஆர். 20'



(127 நாட்கள்) ரகத்திற்கு ஒப்பாகச் சராசரியாக ஏக்கருக்கு 2.5 டன் மகசூல் வீதம் அளிக்கின்றன. இந்த ரகங்களில், 'கண்ணகி' ரகமே அதிக மகசூல் (ஏக்கருக்கு 2,553 கிலோ) அளிக்கிறது. 'காவேரி' ரகம் குறுவைப் பட்டத்தில் குறைந்த மகசூலையே தருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு :—

9. முன் குறுவைப் பட்டத்தில் பயிரிட 'ஜெயா', 'ஐ.இ.டீ. 1136' ஆகியவை (130 நாட்கள் வயதுடையவை) சிறந்த ரகங்களாகும். 'ஜெயா' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,674 கிலோ மகசூலும், ஐ.இ.டீ. 1136 சராசரியாக ஏக்கருக்கு 2,667 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. 'ஜெயா' அதிக அளவு வைக்கோலும் (ஏக்கருக்கு 3,838 கிலோ) தருகிறது.

10. குறுவைப் பட்டத்தில் 'கல்ச்சர் 8946' (106 நாட்கள் வயது), 'கரிகாலன்' (114 நாட்கள் வயது) ரகத்தை விட 12 சதம் அதிக மகசூல் அளிக்கிறது. இது, உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,590 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது.

11. உவர், களர் நிலங்களில், சம்பா பட்டத்தில் பயிரிட 'மணிலா' (Manila), ஐ.ஆர். 20' ஆகிய ரகங்கள் சிறந்தவை. இவை, 'பி.வி.ஆர்.1 ' ரகத்தை விட ஒரு வார வயது குறைந்தவையாகும். 'பி.வி.ஆர். 1' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1,412 கிலோ மகசூல் மட்டுமே கொடுத்திருக்க, 'மணிலா' ரகம் 1,480 கிலோ மகசூலும், 'ஐ.ஆர். 20' ரகம் 1,472 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன.

12. சம்பா பட்டத்தில் 'சிஆர். 10-5071' என்ற ரகம் 'ஐ.ஆர். 20' ரகத்தை விட, சற்று அதிகமான அளவு தானிய மகசூலையும், வைக்கோல் மகசூலையும் கொடுக்கிறது.

13. தாளடி பட்டத்திற்கு (செப்டம்பர்-அக்டோபர்) 'ஐ.ஆர். 20', 'பொன்னி' ஆகிய 2 ரகங்களும் சிறந்தவையாகும். 'ஐ.ஆர். 20' ரகம், சராசரியாக ஏக்கருக்கு 1,708 கிலோ மகசூலையும், 'பொன்னி' ரகம் 1,635 கிலோ மகசூலையும் கொடுத்துள்ளது. ஏக்கருக்கு உயர்ந்த அளவாக 'ஐ.ஆர். 20' ரகம் 2,400 கிலோ மகசூல் மட்டுமே கொடுத்திருக்கும் பொழுது, 'பொன்னி' ரகம் 3,270 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. ஆகவே தாளடிப் பட்டத்திற்கு 'ஐ.ஆர். 20', 'பொன்னி' ஆகிய 2 ரகங்களும் சிறந்தவையாகும.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு :—

14. கலச்சர் 8946, குறுவைப் பட்டத்தில் 'கண்ணகி' ரகத்தை விட 10 சத அதிக மகசூல் கொடுக்கிறது. கண்ணகி சராசரியாக ஏக்கருக்கு 2,195 கிலோ மகசூல் கொடுத்திருக்க, 'கல்ச்சர் 8946' சராசரியாக ஏக்கருக்கு 2,413 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. 'கல்ச்சர் 8946' சிறந்த தரமான நெல்மணிகளைக் கொடுப்பதால், உழவர்கள் இக்கல்ச்சரை விரும்புகின்றனர். ஜூலை மாதக் குறுவை நடவு சிறந்த மகசூலைத் தரும்!

15. முன்னதாகவே மழை பெய்யும் பகுதிகளில் மானாவாரியாகப் பயிரிட 'ஐ.ஆர்.8', 'கோ.31' ஆகிய ரகங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

16. காலங்கடந்து மழை பெய்யும் பகுதிகளில் மானாவாரியாகப் பயிரிட 'அன்னபூர்ணா' ரகம் (116 நாட்கள் வயது) சிறந்தது.

17. 'பி.வி.ஆர். 1', 'ஐ.ஆர். 20', 'பவானி' ஆகிய ரகங்கள் உவர்நிலங்களில் சராசரியாக ஏக்கருக்கு முறையே 1,619 கிலோ, 1,429 கிலோ, 1,412 கிலோ வீதம் மகசூல் கொடுத்துள்ளன. 'மணிலா' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1,113 கிலோ மகசூல் மட்டுமே கொடுத்துள்ளதால், 'மணிலா' ரகம் திருச்சி மாவட்டத்திற்கு ஏற்றதல்ல!



18. சம்பாபட்டத்தில் 'சோனு' (ஐ.இ.டி. 1991), கோ. 36 (கல்ச்சர் 14466) ஆகிய ரகங்களைவிட, 'பொன்னி' ரகமே அதிக தானிய மகசூலும், வைக்கோலும் தருவதாக உள்ளது ! பொன்னி ரக அரிசி சன்னமாக உள்ளதால், பொன்னி நெல்லிற்கு அதிக விலை கிடைக்கிறது!

19. 'பொன்னி', 'சோனு', 'கோ.36'ஆகிய ரகங்களை ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் தனித்தனியாக விதைத்துச் சோதனை நடத்திப் பார்த்ததில், நவம்பர் மாதத்தில் விதைத்த (பின்சம்பா) பொன்னியே ஏக்கருக்கு 2,840 கிலோ வீதம் உயர்ந்த அளவு மகசூல் கொடுத்துள்ளது. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் பின்சம்பா பட்டத்தில் 'பொன்னி' பயிரிடுவதே சிறந்தது.

20. நவரைப் பட்டத்தில் வழக்கமாகப் பயிரிடப்படும் 'கோ. 29' ரகத்தைவிட, 'ரத்னு' 'காஞ்சி' ஆகிய ரகங்கள் முறையே 21 சதம், 15 சதம் அதிக மகசூல் தருகின்றன. 'கோ. 29' உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 2,680 கிலோ மகசூல் கொடுத்திருக்க, 'ரத்னு' 3,100 கிலோ மகசூலும், 'காஞ்சி' 3,000 கிலோ மகசூலும் கொடுத்திருப்பதால், திருச்சி மாவட்டத்தில் நவரைப் பட்டத்தில் பயிரிட, 'ரத்னு' 'காஞ்சி' ஆகிய சன்ன அரிசி தரும் ரகங்கள் மிகவும் சிறந்தவை என்பது தெளிவாகியுள்ளது.



மதுரை மாவட்டத்திற்கு :—

21. குறுவைப் பட்டத்திற்கு 'கரிகாலன்' ரகமே மிகவும் சிறந்தது. இது, 'கருணு', 'கண்ணகி' ஆகிய இரு ரகங்களைக் காட்டிலும் முறையே 12 சதம், 5 சதம் அதிக மகசூல் தருகிறது.

22. 'கருணு', 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய குறுவை ரகங்களைச் செப்டம்பர் மாதத்தில் விதைத்தால், மகசூல் குறைந்து விடும்!

23. ஜூலை மாதத்தில் விதைத்த 'சோனு' ரகம், ஐ.ஆர். 20 ரகத்தைவிட 9 சதமும், 'பவானி' ரகத்தைவிட 18 சதமும் அதிக மகசூல் அளித்துள்ளது.

24. 'சோனு' ரக அரிசி சன்னமானது. ஆனால் 'சோனு' ரக நெல்மணிகள் கதிரிலிருந்து எளிதில் பிரியாமல் இருப்பதால், நெல்லடிப்பது பிரச்சினையாக உள்ளது. மேலும் நெல் அறைக்கும் பொழுது, அரிசி உடைகின்றன. பவானி ரகம், ஏக்கருக்கு 50 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து அளவில் இடும் பொழுது சாய்ந்து விழுந்து விடுகிறது.

25. ஜூலை-ஆகஸ்ட் மாதத்தில் நடப்படும் 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20', 'கோ. 36' ஆகிய மூன்று ரகங்களும் ஏறத்தாழ ஏக்கருக்கு 2.8 டன் அளவில் மகசூல் தருகின்றன.

26. செப்டம்பர் மாதத்தில் நடுவதற்கு 'ஐ.ஆர். 20', 'சோனு 'பவானி' ஆகிய ரகங்கள் ஏற்றவை. இம்மூன்று ரகங்களும் சராசரியாக ஏக்கருக்கு 2 டன் அளவில் மகசூல் தருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு:-

27. அக்டோபர் - நவம்பர் மாதத்தில் விதைப்பதற்கு 'ஐ. ஆர். 20' ரகத்தைவிட, 'ஜெயந்தி' ரகம் மிகவும் சிறந்தது. உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 'ஐ.ஆர். 20' ரகம் 2,850 மகசூல் மட்டுமே அளித்திருக்க, 'ஜெயந்தி' (I.E.T. 1039) ரகம் 3,150 கிலோ மகசூல் கொடுத்துள்ளது.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு:—

28. 'கார்' பருவத்தில் 'பெண்ணை', 'கண்ணகி' ஆகிய ரகங்களைவிட, 'கரிகாலன்' ரகம் முறையே 15 சதம், 9 சதம் அதிககம் மகசூல் அளித்துள்ளது. 'கரிகாலன்' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,253 கிலோ மகசூல் கொடுத்திருக்க, கண்ணகி 2,131 கிலோ மகசூலும், பெண்ணை 1,959 கிலோ மகசூலும் மட்டும் கொடுத்துள்ளன.

29. முன் கார் பருவத்தில் நடவு செய்வதற்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய ஏரிப்பாசனப் பகுதிகளில் 'கரிகாலன்' ரகம் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. பின்கார் பருவத்தில் நடவு செய்யப்படும் தென்காசி, மற்றும் இதர பகுதிகளில் பயிரிடுவதற்குக் 'கண்ணகி' ரகம் பரிந்துரைக்கப்படுகிறது.

30. 'பிசானம்' பருவத்தில் பயிரிடுவதற்கு 'பவானி', 'ஐ. ஆர். 20' ஆகிய 2 ரகங்களும் பரிந்துரைக்கப்படுகின்றன. 'ஐ. ஆர். 20' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,028 கிலோ மகசூலும், 'பவானி' ரகம் 2,186 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. 'ஐ.ஆர் 20' ரகம் உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 2,960 கிலோ மகசூல் கொடுத்து இருக்க, 'பவானி' ரகம் 3,250 கிலோ மகசூல் கொடுத்துள்ளது.

31. 'பிசானம்' பருவத்தில் 'ஐ.ஆர். 20' ரகத்தைவிட, 'பவானி' ரகம் 8 சதம் அதிக தானிய மகசூலும், 23 சதம் அதிக வைக்கோல் மகசூலும் கொடுத்துள்ளது.

கோவை மண்டலத்திற்கு (கோவை, சேலம், தருமபுரி மாவட்டங்கள்):-

32. 'மே-ஆகஸ்ட்' மாதத்தில் (Early khariff) 'வைகை' ரகம் (I.E.T. 849) காஞ்சி' ரகத்தை விட-20 சதம் அதிக தானிய மகசூலும், 15 சதம் அதிக வைக்கோல் மகசூலும் அளித்துள்ளது. எனவே, வைகை ரகத்தைப் பொள்ளாச்சி, கோபி, சேலம் வட்டங்களில் 'மே-ஆகஸ்ட்' பட்டத்தில் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

33. 'காஞ்சி' ரகத்தைவிட, 'வைகை' ரகம் 'பாக்டீரியல் இலைக் கருகல்' நோயைத் தாங்கிக் கொள்ளவல்லது.

34. சேலம் மாவட்டத்தில் 'திருவேணி' ரகம், 110 நாட்களில் சராசரியாக ஏக்கருக்கு 2,055 கிலோ மகசூலும், உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,200 கிலோ மகசூலும் கொடுத்துள்ளது. ஆனால் இந்த ரக மணிகள் பெரியதாக (மோட்டா ரகம்) உள்ளதால், உழவர் பெருமக்கள் திருவேணி ரகத்தை விரும்பவில்லை.

35. ஈரோடு, கோபி, பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி வட்டங்களில் ஜூலை-அக்டோபர் பருவத்தில் 'வைகை' ரகம் நல்ல மகசூல் தருகிறது. 'கண்ணகி' ரகம் இப்பகுதிகளில் நல்ல மகசூல் அளித்தாலும், இந்த ரகம் குட்டையாக இருப்பதால், வைக்கோல் குறைவாகக் காணும் என்று கருதி, உழவர் பெருமக்கள் இந்த ரகத்தைப் பயிரிட விரும்பவில்லை. 'கண்ணகி' ரகத்தைவிட, 'வைகை' ரகம் 14 சதம் அதிக வைக்கோல் தருவதால், 'வைகை' ரகத்தையே உழவர் பெருமக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

36. கிருஷ்ணகிரி வட்டத்தில் மண் உவராக இருப்பதால் 'காஞ்சி' ரகம் ஜூலை-அக்டோபர் பருவத்தில் நல்லபயன் தரவில்லை.

37. சம்பா பட்டத்தில் 'பவானி 'பொன்னி', 'ஐ.இ.டி. 1039' ஆகிய ரகங்கள் நல்ல மகசூல் தருகின்றன. இந்த ரகங்கள், 'ஐ. ஆர். 20', 'கோ. 36' ஆகிய இரகங்களை விட 7 சதம் அதிக தானியம் மகசூலும், 15 சதம் அதிக வைக்கோல் மகசூலும் தருகின்றன.

38. குறைந்த அளவு உரமிட்டு அதிக மகசூல் பெற 'பவானி' ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது! 'பவானி' ரகத்திற்கு ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து வீதம் இட்டாலே போதுமானது!

39. பின்சம்பாப் பட்டத்திற்கு 'பொன்னி' மிகவும் சிறந்தது!



நீலகிரி மாவட்டத்திற்கு:—

40. நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் ஜூன்-ஜூலை முதல் அக்டோபர்-நவம்பர் வரையான பருவத்தில் 'கே. 84' என்ற ரகத்தைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இது 148 நாட்களில் குளிரைத் தாங்கிக்கொண்டு வளர்ந்து, நன்கு மகசூல் தரக் கூடியது! இப்பகுதியில் தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் 'பால் தோண்டி' என்ற நெல் ரகம், சராசரியாக ஏக்கருக்கு 495 கிலோ மகசூல் மட்டுமே தருகிறது. ஆனால் 'கே. 84' என்ற புதிய ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1,945 கிலோ மகசூல் தருகிறது. ஆகவே, நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் 'கே. 84' ரக நெல்லைப் பயிரிட்டு, நெல்மகசூலை மேலும் 3 மடங்கு அதிகமாகப் பெருக்கிடலாம்!



# போதுமான அளவு உரம் கிடைக்கவில்லையே என்ற கவலை வேண்டாம்.

# கிடைக்கின்ற அளவு உரத்தைக்கொண்டே நல்ல மகசூல் பெறலாம்.

## இதோ அதற்கான 11 வழிமுறைகள்:

### 1. உரமிடுவதில், பாசன நிலங்களுக்கு முதலிடம் அளியுங்கள்

மானாவாரியைவிட பாசன நிலங்களில் உரங்கள் அதிக பலனைத் தருகின்றன. அதிலும் எங்கு பாசன நீர் உபயோகத்தைத் தகுந்த முறையில் கட்டுப்படுத்த முடியுமோ அங்கு உரங்கள் மேலும் அதிக பலனைத் தருகின்றன. (உதாரணமாக, கால்வாய்ப் பாசனத்தைவிட கிணற்றுநீர்ப் பாசனத்தை நன்கு கட்டுப்படுத்தலாம். ஆதலால், கிணற்றுநீர்ப் பாசன நிலங்கள் அதிக மகசூலை கொடுக்கும்.) உப்பு அல்லது களர் இல்லாத மற்ற நிலங்களுக்கே உரமளியுங்கள்.

### 2. முக்கியமாக உயர் விளைச்சல் ரகங்களுக்கு உரமிடுங்கள்

ஏனென்றால் உரமிடுதலுக்கு உயர் விளைச்சல் ரகங்கள், சாதாரண ரகங்களைவிட அதிக மகசூலைக் கொடுக்கின்றன. இதனால், உங்கள் முதலீட்டிற்கு மொத்தத்தில் அதிக லாபம் கிடைக்கும்.

### 3. கூடியமட்டில் அதிக நிலப்பரப்பில் உபயோகியுங்கள்

சிபாரிசின்படி உரமிடுவதற்கு போதிய உரம் கிடைக்காத நிலையில், உரமிடும் விகிதத்தைக் குறைத்து, முடிந்தமட்டும் அதிக நிலத்திற்கு உரமிட்டால் மொத்தத்தில் அதிக பலனைப் பெறலாம். (உதாரணம்: உங்களுக்கு 5 ஏக்கர் பாசன நிலம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதற்கு சிபாரிசுப்படி 1000 கிலோ உரம் தேவைப் படுகிறது. ஆனால் 500 கிலோ மட்டுமே உங்களுக்குக் கிடைக்கிறது. இந்நிலையில், இந்த 500 கிலோவை சிபாரிசுப்படி 2½ ஏக்கருக்கு மட்டும் அளிப்பதைவிட உங்கள் 5 ஏக்கருக்குமே உபயோகித்தால் மொத்தத்தில் அதிக மகசூல் கிடைக்கும்.) இவ்வாறு கிடைக்கின்ற அளவை அதிக பரப்பில் உரமிடும்போது உரமிடும் அளவு,சிபாரிசு அளவில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாக இருத்தலாகாது.

### 4. முக்கிய பயிர்களுக்கு முதலிடம் கொடுங்கள்

முதலாவதாக உணவு தானியங்கள், இரண்டாவதாக எண்ணெய் வித்துக்கள், மூன்ருவதாக பருத்தி, நான்காவதாக கரும்பு என்ற முறைப்படி உர அளவை ஒதுக்குங்கள்.

### 5. சமச்சீர் உரமிடுதல் மூலம் அதிக பலன் பெறுங்கள்

பயிருக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை, மண்ணிலிருந்தும் மற்றும் ரசாயன உரங்களிலிருந்தும் சேர்ந்து தேவையான அளவுகளில் கிடைக்கச் செய்தலே சமச்சீர் உரமிடுதல் என்பதாகும். இதற்கு முதலில் உங்கள் நிலத்தின் மண்ணை பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பின்பு சோதனை முடிவுகளைப் பொறுத்து தழை, மணி, சாம்பல் சத்துக்களை சரியான அளவில் பயிருக்கிடுங்கள். இதனால்,உரமும் உங்கள் பணமும் மீதமாகும்; அதிக மகசூலும் கிடைக்கும்.

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனம் அளிக்கும் 'துரித' மண் பரிசோதனைச் சேவையை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

### 6. காலத்தில் முறைப்படி உரமிடுங்கள். நீரைத் திறம்பட பாய்ச்சுங்கள்

மணிச்சத்தையும் சாம்பல்சத்தையும் அடியுரமாக உபயோகியுங்கள். தழைச் சத்தில் ஒரு பங்கை அடியுரமாகவும் மற்ருெரு பங்கை மேலுரமாகவும் இடுங்கள். என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரங்களை அடியுரமாகவோ அல்லது பயிர் நட்ட ஒரு மாதத்திலோ இடவேண்டும்.

மேலுரமாக இடும் யூரியாவை 'பயிரின் வகை, வயது மற்றும் மண்ணின் ஈரம் — இவற்றைப் பொறுத்து முடிந்தவரை பல தடவைகளில் பிரித்தளியுங்கள்.

பாசன நீரை வடித்த பின்பே யூரியாவை மேலுரமாக இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும். உரமிட்ட 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்பு நீர் பாய்ச்சுங்கள்.

### 7. களைகளை வேரோடு நீக்குங்கள்

பயிருக்கு அளிக்கப்படும் உரத்தில் கணிசமான பங்கை, களைகளே எடுத்துக் கொள்கின்றன. அதனுல் எப்போதும், முக்கியமாக பயிர் வளர்ச்சியின் முதல் 40 நாட்களின் போது, நிலத்தில் களைகளே இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

### 8. பூச்சி, பூஞ்சாள நோய்களை அண்டவிடாதீர்கள்

உங்கள் பகுதியில் வழக்கமாக பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை எதிர்த்து முன் கூட்டியே பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுங்கள். மற்ற பூச்சி, பூஞ்சாள நோய்கள் பயிர்களில் கண்டவுடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். இதனுல் அளிக்கும் உரத்திலிருந்து அதிக பயன் பெறுவீர்கள்.

### 9. பருப்பு வகைகளை சாகுபடி செய்யுங்கள்; உரத் தேவையைக் குறையுங்கள்

உங்கள் பயிர் சுழற்சியில் நிலக்கடலை, பட்டாணி, உளுந்து, பாசிப்பயறு அல்லது பசுந்தழை இவற்றில் ஏதாவதொன்றை பயிரிடுங்கள். இப்பயிர்கள் அடுத்து வரும் பயிருக்கு கணிசமான அளவு தழைச்சத்தை கிடைக்கச் செய்கின்றன.

மேலும், 'பாக்டீரியல் கல்சர்' கிடைத்தால், பருப்பு வகை விதைகளை அதனுடன் கலந்து பின்பு விதையுங்கள். இதனுல் அப்பயிர் நன்கு வளர்ந்து அதிக மகசூல் தரும்.

### 10. பருவத்தைப் பொறுத்து உரத்தை ஒதுக்குங்கள்

கோடை சாகுபடிப் பயிருக்கு, மழைக்காலப் பயிருக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரத்தை அளியுங்கள். உதாரணமாக, கோடை நெற்பயிருக்கு, மழைக் கால நெல்லுக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரமிடுங்கள்.

### 11. ரசாயன உரத்தைத் தவிர இயற்கை எருவையும் உபயோகியுங்கள்.

உங்கள் பண்ணையில் கிடைக்கும் வைக்கோல், கழிவுப் பொருட்கள், இலைகள், சருகுகள், சாணம் இவற்றை வீணுக்காமல் சேகரித்து 'கம்போஸ்ட்' தயாரியுங்கள்.

முடிந்தால், மாட்டு சாணத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் சாதனம் ஒன்றை உங்கள் வீட்டில் நிறுவுங்கள். அது, சமையல் மற்றும் வீட்டு விளக்குகளுக்கு வேண்டிய எரிபொருளையும், பயிர்களுக்கு வேண்டிய எருவையும் கொடுக்கும்.

மேலும் விவரங்களுக்கு, இன்றே உங்கள் அருகாமையிலுள்ள மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தாரின் பீல்டு ஆபீசரை சந்தியுங்கள்; அல்லது, வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுகுங்கள்.

விவசாயிகள் நலனை முன்னிட்டு வெளியிட்டோர்:

**விஜய் 17-17-17,**
**விஜய் 14-28-14,**
**விஜய் யூரியா உரங்கள்**
**தயாரிப்பாளர்களான**

**மதராஸ்**
**பெர்ட்டிலைசர்ஸ்**
**லிமிடெட்**
மணலி, சென்னை 600 068

**உழவர் துணைவன்**




**பொங்கும் செல்வம்**
**விஜய்**


பசுமைப் புரட்சியால் உற்பத்திப் பெருக்கம்!
பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள்! உதவிகள்!
புதிய முயற்சிகளால் தொழில்துறை வளர்ச்சி!
ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைந்திடத் திட்டங்கள்! பணிகள்!
இப்படித் தொடரும் நமது அரசின் அரும்பணிகளின் வெற்றிக்கு அடித்தளமே அளவான குடும்பம்.
குடும்ப நலத் திட்டம்
குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு



'சேமிப்பு'
சிறந்த பழக்கம்!
திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**




10981




# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்

* கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
* புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
* சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ்விருந்து!
* மனதைக் கவரும் மாதவியின் அழகுச்சிலை,

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**



பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-



மலர்: 5 **தமிழரசு** இதழ்: 8

16-10-1974




பிறகு காந்தியடிகளுடைய நினைவாலயம் சென்னையில் ஒன்று இருக்கும்போது அந்தப் புனிதமான இடத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த விழாவை நடத்துவது என்ற முடிவை மேற்கொண்டோம். அந்த முடிவிற்கு எங்களையெல்லாம் உந்தித்தள்ளிய பெருமை தமிழக ஆளுநர் மேதகு. கே. கே. ஷா அவர்களையே சாரும் என்று நான் சொன்னால் அது மிகையாகாது.

தமிழகம் எத்தனையோ ஆளுநர்களைப் பெற்றிருந்திருக்கிறது. பலர் கவர்னர்களாக வந்து, போய் இருக்கிறார்கள். நான் மற்ற எந்தக் கவர்னர்களையும் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதக்கூடாது. ஆனால், இந்த கவர்னர் அளவிற்கு வேறு எந்தக் கவர்னரும் மக்களோடு இவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இல்லை என்

# நாடுமுழுதும் மதுவிலக்கு வேண்டும்

— முதல்வர் கலைஞர் —

இந்த ஆண்டு வழக்கம்போல நடைபெறுகின்ற காந்தியடிகளுடைய விழா இது என்றாலும், இந்த விழாவில் அன்புக்குரிய மத்திய அமைச்சர் திரு உமாசங்கர் தீட்சித் கலந்து கொண்டிருப்பது பாராட்டத் தக்கது. மத்திய அமைச்சரைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நம்முடைய ஆளுநரோடு இணைந்து வரவேற்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

காந்தியடிகளுடைய விழாவைச் சீரோடும் சிறப்போடும் நடத்த வேண்டும் என்கின்ற முனைப்போடு கடந்த நான்கு ஐந்து ஆண்டு காலமாக நடத்தி வருகிறோம். முதலில் காந்தியடிகள் விழாவைத் தமிழக அரசின் சார்பில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தான் இந்த விழாவை நாம் தொடங்கினோம். அதற்குப்



மத்திய உள்துறை அமைச்சர் திரு உமாசங்கர் தீட்சித், உடல் ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல்.

பதை நான் சொல்லாவிட்டால் என்னுடைய கடமையிலிருந்து தவறியவன் ஆவேன்.

காந்தியடிகளுடைய விழாவை இங்கே நடத்துகின்ற நேரத்தில் தீட்சித் அவர்களின் ஆங்கில உரையை இங்கேயிருக்கிற அனைவரும் புரிந்து கொள்கிற அளவிற்குத்தமிழிலே யாராவது மொழி பெயர்த்தால் நலமாக இருக்கும் என்று அவர் என்னிடம் வினவியபோது, நான் அதற்குத் தகுதியானவர் திருமதி அனந்தநாயகி என்று குறிப்பிட்டுச் சொல்லி, அவர்கள் அந்த மொழி பெயர்க்கும் பணியை நிறைவேற்றினர். அதிலே எனக்கு இரண்டு வகையான இலாபம் என்பதை நீங்கள் எல்லாம் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

இன்றைக்கு இந்தியாவின் நிலைமையை - தமிழகத்தின் நிலைமையை ஏன் உலகப் பொருளாதார நிலைமையை நம்முடைய மத்திய உள்துறை அமைச்சர் தீட்சித் அவர்கள் வெகு விளக்கமாக இங்கே படம் பிடித்துக்காட்டினர்கள். நான் நூறு கூட்டங்களுக்குச் சென்று இலட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து அங்கே எடுத்துச் சொல்லி மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய அளவிற்கு, படவேண்டிய கஷ்டத்தை இங்கே ஒரு 20 நிமிடப் பேச்சில் தீட்சித் அவர்கள் தீர்த்து வைத்ததற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

எதற்கும் நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்கிற, அந்தத் தியாக உருவங்களாக மனிதர்கள் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் காந்தியடிகளுடைய மணிவாக்காகும். அந்த மணிவாக்கின் அடிப்படையில், இயன்றவரையில், சக்திக்கேற்ற வரையில் தமிழக அரசின் சார்பில் நாம் சமுதாய மறுமலர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். அந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகத்தான் நம்முடைய தீட்சித் அவர்களுடைய கரங்களாலேயே இங்கே அடையாளப் பூர்வமாகப் பல அங்கஹீனர்களுக்குச் சக்கர வண்டிகள் வழங்கப்பட்டதை நீங்கள் கண்டீர்கள். தமிழ்நாட்டில் 2 இலட்சம் பேர் உடல் ஊனமுற்றவர்கள், கைகாலற்றோர், காது கேளாதோர், ஊமையர், முடமானோர் என்கிற இந்த வகையில் இருக்கிறார்கள்.

அந்த இரண்டு இலட்சம் பேருக்கும் ஒரேயடியாக இந்த மறுமலர்ச்சித் திட்டத்தின் பயனை அடையச் செய்கிற மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வழிவகை இல்லாவிட்டாலும், இந்த ஆண்டு முதற்கட்டமாக 22 ஆயிரம் பேருக்கு நல்வாழ்வை அளிப்பது என்று தமிழ்நாடு அரசு திட்டமிட்டு, அதை ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்றைக்குப் பரவலா- செய்து வருகிறோம். காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவில் அந்தக் காரியத்தை அடையாளப் பூர்வமாகச் செய்ய வேண்டும். என்பதற்காகத்தான் தீட்சித் அவர்களின் கையால் அந்த நல்ல பணி இங்கே நடைபெறுகிறது.

இதைப்போலக் காந்தியடிகளின் மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்றான மனிதனை மனிதன் இழுக்கிற கைரிக்ஷாக்களை அகற்றி, அந்தக் கை ரிக்ஷாக்களை இழுத்த தொழிலாளர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களை இந்த அரசின் சார்பில் நாம் வழங்கியிருக்கிறோம். அதைப் போலவே தொழுநோய்ப் பிச்சைக்காரர்களிடம் காந்தியடிகள் எவ்வளவு அன்பு கொண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படிப்பட்டவர்களை, அவரே கையால் தொட்டுச் சிகிச்சை அளிக்கும் உத்தமர் அவர். அப்படிப்பட்ட தொழு நோய்ப் பிச்சைக்காரர்களும் இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கம், அவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவர்களல்லர்; ஒதுக்கப்பட வேண்டியவர்களல்லர்; அவர்களும் வாழ வேண்டியவர்கள். அவர்களும் மனிதர்கள்; மண் அன்று! அவர்கள் பொட்டுப் பூச்சிகள் அல்லர். புண்மைத் தேரைகளல்லர்; அவர்களும் வாழ வேண்டும்; அவர்களுக்கு வாழ்க்கை அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தமிழகத்தில் பத்து இடங்களில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு அருமையான இல்லங்கள் அமைத்துள்ளோம். அப்படிப்பட்ட மாளிகையில் ஒன்றைத்தான் செங்கற்பட்டு மாவட்டத்தில் [illegible] தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் பார்வையிட்டார்கள். இப்படிச் செய்யப்படுகிற சமுதாய நலக் காரியங்களில் அரசியல் குறுக்கிடக்கூடாது என்று தீட்சித் அவர்கள் சொன்னதை நான் வரிக்கு வரி, எழுத்துக்கு எழுத்து அப்படியே வழிமொழிகிறேன்.

இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகிற நேரத்தில் அவைகளைப் பாராட்டுவதற்குப் பதிலாக எப்படி நடைபெறுகிறது; என்னென்ன வழிகளில் நடைபெறுகிறது என்றெல்லாம் கேட்பதில்தான் அரசியல் நோக்கம் வந்து குறுக்கிட்டு விடுகிறது. சமுதாய நலனுக்காக நடைபெறுகிற காரியங்களை எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்து கொண்டு செய்ய வேண்டும். காந்தியடிகள் விழாவில் எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்து கொள்கிறோம். கவர்னர் அவர்கள் நான்கைந்து நாட்களுக்கு நடத்துகின்ற இந்த விழாவில் எல்லாக் கட்சியின் தலைவர்களையும் கலந்து கொள்ளச் சொல்கிறாரே, அதைப்போல சமுதாய நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில், கட்சிச் சார்பற்ற முறையில் இன்னும் பரந்த மனப்பான்மையோடு சிந்திக்க வேண்டுமானால் நாமெல்லாம் மனித சாதியைச் சேர்ந்தவர்கள், தனித்தனி சாதிகள் அல்லர் என்கின்ற அந்த உணர்வோடு பாடுபட்டாக வேண்டும்.

காந்தியடிகளின் மற்றொரு பொன் மொழியையும் தீட்சித் அவர்கள் சொன்னார்கள். அதுதான் குடும்ப நலத் திட்டம். அரசாங்கத்தின் மூலம் திணிக்கக்கூடாதென்பது காந்தியடிகளின் கொள்கை. கருத்தடை செய்தல் கூடாது என்பது அவருடைய கொள்கை. ஆனாலும் இன்றைக்குக் காந்தியடிகள் சொன்ன மனஅடக்கம், கட்டுப்பாடு, பிரம்மச்சரியம் ஆகியவைகளை எல்லா மனிதர்களும் கைக்கொள்ள முடியாத சூழ்நிலைக்கு ஆளாகின்ற காரணத்தால்தான் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளைச் சட்டத்தின் வாயிலாக அல்லது பிரச்சாரத்தின் விளைவாகச் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறது.

பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு தமிழகத்தின் முதலமைச்சரை இரண்டரைக்கோடி மக்களின் நாயகர் என்று அழைத்ததற்கு மாறாக இப்போது நாலரைக்கோடி மக்களின் நாயகர் என்று அழைக்கிறார்கள். என்றால் தமிழகத்தின் மக்கள் வளர்ச்சி எவ்வளவு வேகமாக நடைபெறுகிறது, என்பதை அறியலாம்.

குடும்பத்திலே பெருகவேண்டியது எது? நல்வாழ்வு, அறிவு, ஆற்றல் பெருக வேண்டும். மக்களிடம் காட்டுகின்ற அன்பு பெருக வேண்டும்; இரக்கம் பெருக வேண்டும். இவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி, குழந்தை உற்பத்தி வேகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. மனோதிடத்தாலேயோ, குடும்பநலத் திட்டத்தாலேயோ குடும்பக் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக ஆக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், அது பாவமாயிற்றே என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். கடவு



காந்தி ஜோதியை முதல்வர் கலைஞர் பெற்றுக் கொள்ளுதல்.



ளுக்கு அடுக்குமா, என்று கேட்கிறவர்களும் இருக்கிறார்கள். குடும்பங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லுவது குடும்பங்கள் வாழ வேண்டும் என்பதற்காகத்தான்.

இந்தியாவின் மக்கள்தொகை இன்னும் 20 ஆண்டுக் காலத்திற்குள் இரட்டிப்பு மடங்கு ஆகுமென்றால் இருக்கிற மலைகள் அப்படியேதான் இருக்கும். நாட்டில் ஆறுகள் அப்படியேதான் இருக்கும். நமக்கு என்று இருக்கிற இயற்கை வளங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வரும்; கடல்வளங்கள் குறைந்து கொண்டு வரும்; அல்லது அப்படியே இருக்கும். இவைகளால் பயன்பெற வேண்டிய மக்கள் தொகை பெருகி, திட்டங்களின் பயனை அனுபவிக்க முடியாத சங்கடத்திற்கு ஆளாவார்கள்.

கடவுள் பெயரில் பாரத்தைப் போட்டு, பாவ புண்ணியம் என்று கூறிச் சமுதாயத்தை நாம் கெடுத்துவிடக்கூடாது. அண்ணா ஒருமுறை கூறியது போல ஆண்டவனேகூட குடும்பக் கட்டுப்பாட்டு விஷயத்தில் மிகுந்த ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்கிறார். பரமசிவனும் பார்வதியும்கூட இரண்டு பிள்ளைகளோடு முடித்துவிட்டார்கள். நாம் இன்றைக்குத்தான் 'நாமிருவர் நமக்கு இருவர்' என்று கூறுகிறோம். ஆனால் அவர்கள், அன்றே அந்த முடிவிற்கு வந்து முருகன், பிள்ளையார் என்ற இரண்டோடு முடித்துவிட்டார்கள். முருகன் இரண்டு பெண்களை மணந்தும், ஒரு பிள்ளைகூடப் பெறாமல் குடும்பக் கட்டுப்பாட்டில் மிகத் தீவிரமாக இருந்திருக்கிறார். ஆகவே கடவுள்களுக்கும் ஏற்புடைய கொள்கைதான் இது. இதை யாரும் தவறாகக் கருதத் தேவையில்லை.

உலகம் முழுவதும் பொருளாதாரத் துறையில் இன்றைக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக நாம் வாங்க வேண்டிய பெட்ரோலானாலும், க்ரூடாயிலானாலும், இந்திய நாட்டுக்குத் தேவையான அன்னிய நாட்டுப்பொருள்கள் எதுவானாலும் அவைகளின் விலைகள் எல்லாம் இன்று உயர்ந்திருக்கின்ற சூழ்நிலையை மத்திய அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அந்தச் சூழ்நிலைதான் இந்தியாவைப் பாதிக்கிறது. இந்தியாவைப் பாதிக்கிறதென்றால், இந்தியாவில் இருக்கிற எல்லா மக்களையும் பாதிக்கிறது என்றுதான் பொருள். அந்தப் பாதிப்பு தமிழ்நாட்டு மக்களுக்கும் உடன்பாடானதுதான். ஆகவே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதையும் காந்தியடிகளின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்ற அறிவுரையையும் மத்திய அமைச்சர் குறிப்பிட்டார்.

மிக அழகாக காந்தியடிகளின் பொன்மொழி ஒன்றை அவர் இங்கே குறிப்பிட்டார். இட்சியம் மிகச் சிறப்பானதாக இருக்கலாம். ஆனால், இந்த இலட்சியத்தையடைவதற்காக மேற்கொள்கிற வழி இருக்கிறதே, அந்த வழி நேர்மையானதாக இருக்க வேண்டும்- அற வழியாக இருக்க வேண்டும் என்று காந்தியடிகள் எடுத்துரைப்பதை தீட்சித் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

காந்தியடிகள் இன்னும்கூடத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நம்மை ஒருவன் வாளால் வெட்டி, அதன் காரணமாக வழிகிற இரத்தத்தால் ஏற்படுகிற அந்தத் தியாக உணர்வு நாம் அவனை வாளால் வெட்டி, அவனுடைய இரத்தத்தைக் கீழே கொட்டச் செய்கிறோமே அந்த வீர உணர்வைவிட உயர்வானது என்று கூறியிருக்கிறார்.

சாதி பேதங்கள் ஒழிய வேண்டுமென்கிற தீவிரக் கொள்கை, தீண்டாமை அகற்றப்பட வேண்டுமென்ற கொள்கை! காந்தி அடிகளுடைய பெயரை உச்சரிக்கின்ற நாம் உண்மையிலேயே நம்முடைய மனச்சாட்சியைத் தொட்டுப்பார்த்து அவைகளை எல்லாம் இன்றைக்கு நிறைவேற்றி விட்டோமா என்று கேட்டுக் கொள்ள வேண்டும். இன்றைக்கும் சாதிகள் தனித்தனியாக இருப்பதைப் பார்க்கிறோம். பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், முன்னேறியோர் என்ற இந்தப் பாகுபாடு கூட ஒருவகையில் குறிப்பிட்ட காலத்திற்கு சலுகைகள் வழங்க இருந்திடக் கூடும். ஆனால், அதற்குள்ளேயே ஆயிரக்கணக்கான சாதிகள், பேதங்கள், வருப்பு வாதங்கள் இருக்குமேயானால் நாம் காந்தியடிகளுக்கு விழா எடுத்துப் பயனில்லை.

> வாழ்க்கையை விரும்பவும் வேண்டாம்; வெறுத்துத் தள்ளவும் வேண்டாம். வாழ்வதை மட்டும் நன்றாக வாழ்ந்தால் போதும்.
>
> —மில்டன்.

ஆளுநர் அவர்கள் சென்ற ஆண்டு மாணவர்கள் கொண்டு வருகிற ஜோதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று என்னை அழைத்திருந்த போது நான் அன்றுவர இயலவில்லை. அதுவும் ஒரு பொருத்தமாக அமைந்துவிட்டது. சென்ற ஆண்டு மதுவிலக்குக் கொள்கையில் பாதி நிறைவேறியும், பாதி நிறைவேறாமலும் இருந்த நேரம்; அந்த நேரத்தில் காந்தி ஜோதியை வாங்க என்னுடைய கரங்கள் அவ்வளவு தகுதிதானா என்று எனக்குச் சந்தேகம். இந்த ஆண்டு பூரண மதுவிலக்கு தமிழகத்தில் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் இன்றைக்கு என்னுடைய கரங்கள் அந்தத் தீபத்தை வாங்கத் தகுதி பெற்றிருக்கும் என்ற அடிப்படையில் இன்றைக்குக் காலையில் இங்கே நான் அந்தத் தீபத்தைப் பெற்றுக் கொண்டேன்.

மத்திய அமைச்சர் திரு தீட்சித் அவர்கள் தவறாகக் கருதிக் கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்களிடம் ஓர் அன்பு வேண்டுகோளை அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில் விடுக்க விரும்புகிறேன். தமிழகத்திலும், குஜராத்திலும் மாத்திரம் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தினால் போதாது. இந்தியா முழுமையும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த, காந்தியடிகளோடு நெருங்கிப் பழகிய பெரும் தலைவர்களில் ஒருவராக இருக்கும் தீட்சித் போன்றவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காந்தியடிகள் விழாவில் நான் விடுக்கின்றவேண்டுகோள் இதுதான்!

**2-10-1974 அன்று கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.**






# சமதர்மச் சமுதாயம் அமைத்திடுவோம்!

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
**அன்பில் தருமலிங்கம்**

"சிற்றூர்கள் பெற்றிடும் வளர்ச்சியே சமுதாய மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். நாட்டின் நல்வாழ்வு எழுச்சிக்கும் அஃதே அடையாளமாகும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதற்கேற்ப இன்றைய, தமிழ்நாடு அரசு சிற்றூர்கள் செழித்திட வகைசெய்யும் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்ற இலட்சியத்துடன் செயலாற்றி வரும் இன்றைய தமிழ்நாடு அரசு, 'சமதர்மச் சமுதாயம்' அமைத்து எல்லார்க்கும் எல்லா வசதிகளும் கிடைத்திடச் செய்ய வேண்டும்' என்பதற்காக அரும்பாடுபட்டு வருகிறது. சமதர்மச் சமுதாயம் அமைந்திட வேண்டுமானால், ஏழை, எளிய, பாமர, பாட்டாளி, சாமான்ய மக்கள் நிறைந்த கிராமங்கள் முன்னேற வேண்டும் என்று இன்றைய தமிழ்நாடு அரசு விரும்புகிறது. எனவேதான், கிராமங்களின் மேம்பாட்டிற்கு உதவும் சமுதாய நலத் திட்டங்களைச் செம்மையாகவும், சிக்கனமாகவும், விரைவாகவும் செயல்படுத்திடுவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. அந்த ஆர்வத்தின் காரணமாகவே, ஒரு வார காலத்திற்குச் "சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா" கொண்டாட இன்றைய தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் எதிர்காலம், கிராமங்களின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது. கிராமங்கள் முன்னேறினால் தான், இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்! இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும், தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு, என்று தன்னிறைவு பெறுகிறதோ அன்றுதான் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்!

"இந்த நாட்டின் உயிர் நாடி கிராமங்களிலேயே உள்ளது!" என்று அண்ணல் காந்தியடிகள் அன்றே குறிப்பிட்டார்கள். 'கிராம ராஜ்யம்' அமைய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அண்ணல் கூறிய கிராம வளர்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே, இந்தியாவின் சமுதாய மேம்பாட்டுத் திட்டம் 1952-ஆம் ஆண்டு, அக்டோபர் 2-ஆம் நாள்-அண்ணல் பிறந்த நாளில்-நாடெங்கும் துவக்கப் பெற்றது. அந்தத் திட்டத்தின் பயனாய் இந்தியாவின் கிராமங்கள் முன்னேறி வருகின்றன! இதை இல்லை என்று யாரும் கூறிவிட முடியாது. ஆனால் சமுதாய மேம்பாட்டுத் திட்டம் துவக்கப்பட்டு 22 ஆண்டுகள் முடிந்திருந்தும், இந்தியா விடுதலை பெற்று 27 ஆண்டுகள் முடிந்திருந்தும், இன்னும் அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவு நிறைவேறவில்லை! ஆம்! இன்னும் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிட்டவில்லை! ஆகவே, இந்தியாவின் பொருளாதார விடுதலைக்கு வழி வகுக்கும்-கிராம முன்னேற்றத்திற்கு உதவும்-சமுதாய மேம்பாட்டுத் திட்ட வேகம் போதவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது. சமுதாய மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேலும் தீவிரப்படுத்திடவே, ஒருவார காலத்திற்கு 'சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா' இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிறது.

"விழா நடத்திவிட்டால் சமுதாயம் மேம்பாடு அடைந்துவிடுமா?" என்று பலர் கேட்கலாம். "விழா நடத்துவதனால் சமுதாயம் மேம்பாடு அடையாது! ஆனால் சமுதாயம் மேம்பாடு பெறுவதற்குரிய உள்ளுணர்வுகளையும், செயல் திறனையும் கிராம மக்களுக்கு ஏற்படுத்திட முடியும்!"

இந்த நோக்கத்துடனேயே சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா கொண்டாடப் பெறுகிறது.

"சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ளவர்களும் மேம்பாடு பெற வழி பிறக்க வேண்டும்"! என்பது காந்தியடிகள் கண்ட கனவாகும். "ஏழ்மையும் வறுமையும் ஒழிந்து, சமுதாயம் முழுவதும் முன்னேற வேண்டும்" என்று அண்ணல் கூறினார். அண்ணல் கண்ட கனவை நனவாக்கவும், அவர் கூறியவைகளை நிறைவேற்றவுமே, இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் சமுதாய நல மேம்பாட்டு விழாவைக் கொண்டாடி வருகின்றன.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானல், சமுதாயத்தை மேம்படுத்தி, ஏற்றத்தாழ்வில்லாத சமதர்மச் சமுதாயத்தை அமைத்திடுவதே இன்றைய தமிழ்நாடு அரசின் இலட்சியமாக உள்ளது.

''சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள ஏழை, எளிய, சாமான்ய மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையிலேயே எங்கள் அமைச்சரவை, திட்டம் தீட்டி செயல் படுத்தும்'' என்று பேரறிஞர் அண்ணு அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனே - ராஜாஜி அரங்கின் முன்னுல் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னே உறுதி கூறிஞர். அதன்படி, சமுதாயத்தை மேம்படுத்தும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திஞர்.

அண்ணல் காந்தியடிகள் காட்டிய வழியிலும், 'தென்ஞட்டுக் காந்தி அண்ணு' அவர்கள் வழியிலும் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சமுதாய மேம்பாட்டிற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, பல்வேறு பயன்மிகு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிருர். வீடற்றவர்க்கு வீட்டுமனைப் பட்டாவும், நிலமற்றவர்க்கு நிலப்பட்டாவும் வழங்குவதில், தீவிர கவனம் செலுத்தி வருகிருர் கலைஞர்.

''ஏன் எடுத்தோம் இந்த ஜென்மம்?'' என்று தன்னையே நொந்து கொண்டு வாழும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் துவங்கிய கலைஞர், கண்பார்வை இழந்து கஷ்டப்படும் ஏழை எளியவர்களுக்கெல்லாம் கண்ணெளி வழங்குவதற்காக இலவசக் கண்சிகிச்சை முகாம் திட்டத்தைத் துவக்கிஞர்.

'மனிதனை மனிதன் இழுப்பது இழிவு என்று அண்ணல் காந்தியடிகள் அன்றே குறிப்பிட்டார். அதை மனதிற்கொண்ட கலைஞர் அவர்கள், கைரிக்ஷா இழுத்துப் பிழைப்பவர்களுக்கு இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தைச் சென்ற ஆண்டு துவக்கிஞர். இந்த ஆண்டில், காஞர், கேளார், கால்முடம்பட்டோர், பேணுநர் இல்லோர் ஆகியவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு அளிக்க, ஊனமுற்ரேர் மறுவாழ்வுத் திட்டத்தைத் துவக்கியுள்ளார். விரைவில் சமுதாயத்தில் குறைந்த வருவாய் உள்ள



அனைவருக்கும் பயன்தரும் 'பென்ஷன்' திட்டத்தைத் துவக்கிட விருக்கிருர். 'சமூகப் பாதுகாப்பு திட்டம்' என்ற பெயரில் இத்திட்டம், 'ஆசிய ஜோதி' என்று புகழப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்த நாளிலே, தமிழ்நாட்டில் துவக்கப்படவிருக்கிறது.

இத்தகைய திட்டங்களை எல்லாம் இந்தியாவிலேயே முதல் முதலாக, கலைஞர் நிறைவேற்றுவதற்கு மூல காரணம், ''சமுதாயத்தை மேம்படுத்த வேண்டும், சமதர்மச் சமுதாயத்தை அமைத்திடவேண்டும்'' என்ற இலட்சியமேயாகும்.

சமுதாயத்தில் உள்ள சாதி பேதத்தையும், பொருளாதார ஏற்றத்தாழ்வையும் போக்கி எல்லாரும் சமம் என்ற நிலையை ஏற்படுத்தவே தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச்சலுகைகள், கலப்புத் திருமணம் செய்து கொள்வோருக்குத் தங்கப்பதக்கம், அரிசனங்களுக்கும் ஆலயங்களில் அறங்காவலர் பதவி, பிற்பட்ட மக்களுக்குத் தனிச்சலுகைகள், அரிசன காலனிகளுக்கு மின் விளக்குத் திட்டம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டம், அரிசனங்களுக்கென தனி வீட்டு வசதி வாரியம் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது.

சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே ஊர் வளர்ச்சித்துறையை, வருவாய் துறையிலிருந்துத் தனியாகப் பிரித்து, தனித் துறையாக இயங்கச் செய்தது.

சிற்றூர்களில் வாழும் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், எல்லா ஊர்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்த இணைப்புச் சாலைகளை அமைக்கவும் ஊராட்சித் துறை முயன்று வருகிறது.



ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள 24,000 பாசன ஆதாரங்களைத் தூரெடுத்து நீர்த்தேக்கக் கொள்ளளவை அதிகப்படுத்தவும், பாசனக் கால்வாய்களைச் சீரமைக்கவும் முன்பே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதுடன், மேலும் ''சிறிய நீர்ப் பாசன விரைவுத் திட்டம்'' என்ற புதிய திட்டத்தை உருவாக்கி, அதற்கென 150 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. தமிழக கிராமங்களில் உள்ள 50,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களெல்லாம் சமுதாய மேம்பாட்டிற்காக நிறைவேற்றப்படும் திட்டங்களேயாகும்!

உணவு உற்பத்தியில் ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளன. இதன் பயனுகவே தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி பெருகியுள்ளது. ஆனுல், உணவு உற்பத்திப் பெருக்கத்தைவிட, மிக வேகமாக மக்கள் தொகை உற்பத்தி பெருகி வருகிறது. இதைக் கட்டுப்படுத்த வேண்டியது நமது இன்றியமையாத கடமையாகும். சமுதாயம் மேம்பாடு அடைய வேண்டுமானுல், குடும்பத்தை அளவோடு அமைத்துக் கொள்ள வேண்டும். எனவே, குடும்ப நலத் திட்டத்தில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.



எனவே, வட்டார நிலையில் உருவாக்கப்பட்டுள்ள, நிருவாக அமைப்பின் வாயிலாக, வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும், நன்ருக இணைந்து செயல்பட வேண்டும். இந்தக் கொள்கையை நடைமுறையில் கொண்டு வரவே, சமுதாய நல வாரவிழா, இந்திய நாடெங்கும் கொண்டாடப் பெறுகிறது. இதையொட்டியே, இந்த வார நிகழ்ச்சிகள், விரிவாக நடைபெற, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை, அரசாணை பிறப்பித்துள்ளது.

பசுமைப் புரட்சியில் நாம் கண்டுள்ள வெற்றியைப்போல், வெண்மைப் புரட்சியிலும், நீலப்புரட்சியிலும் வெற்றி காண நமது சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை முனைப்பாக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதுபோல் எல்லா துறையிலும் வெற்றிகாண, கிராமப்புற மக்கள் ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் எல்லாத் துறையிலும் வெற்றி ஏற்படும்; கிராமப் பொருளாதாரம் செழிக்கும்!

அடுத்து சமுதாயத்திலே உள்ள சாதி வேறுபாடுகளையும், ஏற்றத் தாழ்வு மனப்பான்மையும் போக்க, சமூகக் கல்விப் பணிகளை விரிவுபடுத்த முயன்று வருகின்ரேம். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில், தமிழ்நாடு அரசு பேரார்வம் கொண்டுள்ளது. அதுபோலவே, பிற்பட்டோர் நலனிலும் தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. ஆகவே, சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றி, ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைத்திட முயன்று வரும் தமிழ்நாடு அரசுக்கு, உங்கள் முழு ஒத்துழைப்பையும் அளித்திட வேண்டும் என்று பொது மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சமுதாயத்தின் பல்வேறுபிரிவினரும், இதில் எல்லா வேற்றுமைகளையும் மறந்து, ஒன்றுபட்டுச் செயலாற்றுமாறு வேண்டுகிறேன். குறிப்பாக, சமுதாயத்தின் பின்தங்கியோர்க்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் உள்ள வேதனைகளைத் தீர்க்கும் வகையிலும், அவர்கள் கண்ணீரைத் துடைக்கும் முறையிலும், ஒன்றுபட்டு உழைப்போமாக! ஊராட்சி மன்றத் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும் இப்பணிகளில் பேரார்வம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.



இதுவே, அண்ணல் காந்தியடிகளுக்கும், அமரர் அண்ணு அவர்களுக்கும், அவர்கள் வழியில் நின்று பணியாற்றும் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசுக்கும் செலுத்துகின்ற அன்புக் காணிக்கையாகும் வணக்கம்.



**சமுதாய வளர்ச்சித் திட்ட வார விழாவின் தொடர்பாக, 3-10-1974 ஆம் நாளன்று இரவு 7-00 மணி அளவில் தமிழ்நாடு அரசின், ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் பி. தர்மலிங்கம் அவர்கள் சென்னை வானெலியில் ஆற்றிய உரை.**

## தமிழரசு சிறுகதைப் போட்டி 1974

16-7-1974 தமிழரசு இதழில் வெளியிடப்பெற்ற வேண்டுகோளுக் கிணங்க ஆயிரத்துக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் சிறுகதைகளை அனுப்பியுள்ளனர். ஆசிரியர் குழுவினர் அனைத்தையும் ஆய்வுசெய்து வருகின்றனர்.

பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்க, தமிழ் இலக்கிய உலகில் புகழ்பெற்ற மூன்று பெருமக்கள் அன்போடு இசைந்துள்ளார்கள். முடிவுகள் 1-11-74 தமிழரசு இதழில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

### நடுவர்கள்

1. திரு. டி. கே. சீனிவாசன், எம். பி. (மாநிலங்கள் அவை உறுப்பினர்)
2. திரு. எம். எஸ். விசுவநாதன், (சாவி) ('தினமணி கதிர்' ஆசிரியர்)
3. திரு. பி. வி. அகிலாண்டம், (அகிலன்) (அனைத்திந்திய வானெலி, சென்னை)

"சுதந்தரத்தின் குறிக்கோள் ஒவ்வொரு இந்தியனின் கண்களிலிருந்து துயரம் காரணமாக வருகின்ற கண்ணீர் துடைக்கப்பட வேண்டும்" என்று மகாத்மா காந்தி சொன்னார். அவருடைய நினைவு உண்மையாகத் தக்க வகையில் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கக் கூடிய திரு. மு. கருணாநிதி அவர்கள் இன்று ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடிய — உண்மையிலேயே ஒரு நல்ல திட்டத்தை ஆரம்பித்துள்ளது, ஒரு சேமநலத் திட்டம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஊனமுற்றவர்களுக்குக் கருவிகளை வழங்கும் வாய்ப்பினை எனக்குத் தமிழக அரசு அளித்திருப்பது குறித்து மகிழ்ந்து, இந்த நேரத்தில் இந்தத் திட்டத்திற்காக அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று காந்தியடிகளின் பிறந்த தினமாக இருப்பதால் அவருடைய இலட்சியங்கள் சிலவற்றை உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். காந்தியடிகள் மக்கள் முன்னால் ஆறு பெரிய கொள்கைகளை எடுத்துச் சொன்னார்.

முதலாவதாக, குறிக்கோள் மாத்திரம் சிறப்பானதாக இருக்கக் கூடாது. அந்தக் குறிக்கோளை அடையக் கூடிய வழி சிறப்பானதாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, சொல்லுக்கும் செயலுக்கும் இடையே அதிக வேறுபாடு இருக்கக் கூடாது. என்ன சொல்கிறோமோ அதைச் செயல்படுத்த வேண்டும். ஏனென்றால் நாம் என்ன சொல்கிறோம், என்ன செய்கிறோம் என்பதை மக்கள் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாநிலத்திலும் மத்தியிலும் இருக்கக் கூடிய தலைவர்கள் மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தாமல் என்ன செய்யப் போகிறோம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

மூன்றாவதாக, குடும்பக் கட்டுப்பாடு, இதை அவரவர்களாக மேற்கொள்ள வேண்டுமே தவிர, அரசாங்கம் திணிக்கக்கூடிய நிலை இருக்கக் கூடாது. காந்தியின் இந்தக் கொள்கைகளை மறந்துவிட்டதால்தான் மக்கள் பெருக்கம் அதிகமாய்ப் போய்விட்டது.

நான்காவதாக, அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது. அவைகள் பரவலாக்கப்பட வேண்டும். தொழில் துறை ஆறுமும், பொருளாதாரத் துறை ஆறுமும், அதிகாரம் ஒரு இடத்தில் குவிந்திருந்தால் நல்லதல்ல. அதிகாரங்கள் பரவலாக இருப்பதுதான் நல்லது என்று அவர் போதித்திருந்தார்.

ஐந்தாவதாக, ஒவ்வொரு கிராமத்திற்கும் நாம் செல்ல வேண்டும். கிராம மக்களுடைய சுய தேவையை நாம் பூர்த்தி செய்ய வேண்டும். கிராம மக்கள் நகரங்களுக்கு நகரும் நிலையைப் போக்க வேண்டும். இந்த நல்ல திட்டத்தைத் தமிழக அரசு மேற்கொண்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். கிராம மக்கள் அங்கேயே வாழ்வதற்கு, அங்கேயே வேலை வாய்ப்புக்களைக் கொடுக்க ஆசைப்படுகிறார்கள். அது வரவேற்கத்தக்கது.

ஆறாவதாக, நம் நாட்டில் பெரிய தொழிற்சாலைகளை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. காரணம் பெரிய விமானங்களை, தளவாடங்களை, டாங்கிகளை உற்பத்தி செய்யவில்லை என்றால், இந்த நாட்டின் உரிமையைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்படும். மக்கள் குவிந்துள்ள நாடுகளில் வேலைவாய்ப்புக்களைக் கொடுக்க பெரும் தொழிற்சாலைகளை மட்டும் நம்பிக் கொண்டிருக்க முடியாது. எப்படி பெரும் தொழிற்சாலைகள் இருக்கின்றதோ, அதைப் போல நடுத்தர, சிறிய தொழிற்சாலைகளை நாம் தொடங்க வேண்டும்.

- திரு. உமா சங்கர் தீட்சித்,
மத்திய அமைச்சர்

# அண்ணலின் பிறந்தநாள் விழா!

தமிழகத்தில் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா தனி சிறப்போடு நடைபெற்று வருகிறது. இதில் மக்கள் தாங்களாகவே—யாருடைய தூண்டுதலுமின்றி, முன் வந்து உற்சாகம் காட்டுகிறார்கள்.

தமிழகம் காந்தியடிகளின் திட்டங்களோடும், கொள்கைகளோடும் ஒன்றிக் கலந்திருப்பதாகும் என்பதையே இது காட்டுகிறது. தன் கையே தனக்குதவி என்று தன்னம்பிக்கையோடு மக்கள் இருக்க வேண்டுமென்ற மகாத்மா காந்தியின் கொள்கையை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாட்டில் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

கிராமங்களில் மக்கள் ஒவ்வொருவருக்கும், வேலை இருக்கும் வகையில் பயிற்சி அளிப்பதே இந்தத் திட்டம்.

கிராமப்புறங்கள், வளர்ச்சி பெற்றால்தான் நகரங்களில் வளம் தேங்கும் என்றார் மகாத்மா காந்தி. அவர் சொன்ன அந்த அடிப்படையில் கிராமப்புறங்களின் முன்னேற்றத்திற்குத் தமிழக அரசு பெரிதும் பாடுபட்டு வருகிறது.

- மேதகு. கே. கே. ஷா,
தமிழக ஆளுநர்

காந்தியின்றி, இரத்தமின்றி, உண்மை, அன்பு, நேர்மை வழி நின்று போராடி நாட்டு விடுதலையை வாங்கித் தந்தவர் காந்தியார்.

புத்திரப் பேறுடைய ஆண்-பெண் உறவு ஏற்பட வேண்டுமே அல்லாது இன்பத்திற்காக அல்ல என்றார் காந்தியார். பாலிய விவாகங்களும், பழக்க வழக்கங்களும் அதிகமான பிள்ளைப் பேற்றுக்கு வழி செய்வதாகக் கண்டறிந்த அவர், அவைகளைச் சீர்திருத்தினால் மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியுமே என்கிறார்.

எனவே, காந்தியார் வற்புறுத்திய குடும்பக் கட்டுப்பாட்டை நினைவிலிருத்தி, குடும்ப நலம் தழைக்க மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

சமூகத்தில் கீழ்த் தளத்தில் நலிந்துள்ள மக்களைக் கை கொடுத்துத் தூக்கி வாழ்வு அளிக்க விழைந்த காந்தியார் கனவை நனவாக்க நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். அவ்வகையில், ஊனமுற்றோருக்கு இங்கே சக்கர வண்டிகளை தமிழக அரசின் சார்பில் டெல்லி மந்திரி உமா சங்கர் தீட்சித் வழங்கியதை நீங்கள் நன்கறிவீர்கள்.

ஏழை எளிய மக்களின் பங்காளனாக — நலிந்த — மெலிந்த மக்களின் உயிர்த் தோழனாக விளங்கும் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த நல்வாழ்வுத் திட்டங்கள் வெற்றி பெற்றிட ஒல்லும் வகையில் அவருக்கு உடனிருந்து உறுதுணை புரிந்து ஒத்துழைப்பு நல்குவோம்.

- திரு. சி.வி.எம். அண்ணாமலை,
சமூக நல அமைச்சர்

## சென்னை காந்திமண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்தநாள் விழா உரைகள்









# தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய அச்சகம்!

விஞ்ஞானம் மனித குலத்துக்கு வழங்கிய மாபெரும் சாதனங்களில் அச்சகமும் ஒன்று என்பதை நாமறிவோம்.

எண்ணியதை, எண்ணற்ற அளவில் அச்சடித்துக் கொள்வதற்கு இன்று மூலைக்கு மூலை அச்சகங்கள் முளைத்திருக்கின்றன; மனித மூளையிலிருந்து உருவான இவை, இன்று உலகமெங்கணும் பரந்து பயன் விளைத்துக் கொண்டிருக்கின்றன.

அன்றாடம் படிக்கும் செய்தித் தாள்களிலிருந்து இதன் பணி சொல்லி முடியாதே!



சிறிய பெரிய எழுத்துக்களில், பல்வேறு வகையான தாள்களில், பலவண்ண எழிலோடு அச்சிடும் அளவுக்கு இன்று அச்சுக் கலை வளர்ந்திருக்கிறது.

புத்தகக் கடைகளிலே காட்சியளிக்கும் புத்தகங்கள், இதழ்கள் முதலியன, முதலில் வாசகர்களைக் கவர்வது அதன் உள்ளே இருக்கும் எழுத்துக்கள் அல்ல; அதன் கவர்ச்சியான வண்ண முகப்பினாலேயாகும்.

இந்த வண்ண முகப்பிலிருந்து வகை வகையான அச்சுவேலைகளுக்கெல்லாம் அருந் துணை புரிவது மெச்சத் தகுந்த அச்சுத் தொழிலேயன்றோ?

தனியச்சிலிருந்து எழுத்துக்கள் உருவாகும் பிரிவு.

இதோ! சென்னை வள்ளலார் நகரிலுள்ள அரசினர் மத்திய அச்சகம்!

இன்று மிகப் பெரிய அளவில் பரந்து விரிந்து காட்சி தரும் இந்த அச்சகம்தான், 1831-ல் பெரிய அச்சு எழுத்துக்களைக் கொண்டு, பத்துப் பேரோடு சென்னைக் கோட்டையில் துவக்கப்பட்டது!

பத்துப் பேரோடு தொடங்கிய இந்த அச்சகம் இன்று பல்லாயிரவர் பணியாற்றும் பெரிய அச்சகமாக-ஏன், தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய அச்சகமாக விளங்கி வருவதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

எழுதுபொருள்—அச்சுத் துறையானது, அரசு அச்சகம், எழுதுபொருள் கிடங்கு என்ற இரண்டு பெரிய அங்கங்களைக் கொண்ட அமைப்பாய் இயங்கி வருகிறது.

தமிழக அச்சுத்துறை எனும் தருவானது, கீழ்க்காணும் கிளைகளைப் பெற்றுள்ளது :

1. வள்ளலார் நகரிலுள்ள மத்திய அச்சகம்.

2. சென்னை மத்திய சிறையில் உள்ள கிளை அச்சகம்.

3. அண்ணாசாலையிலுள்ள கிளை அச்சகம்.

4. உயர்நீதி மன்றக் கட்டடத்தில் அமைந்துள்ள வழக்குப் பட்டியல் மற்றும் உயர்நீதி மன்றக் கிளை அச்சகம்.

5. புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம்.

6. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார அச்சகம்.

7. சேலத்தில் உள்ள வட்டார அச்சகம்.

8. விருத்தாசலத்திலுள்ள வட்டார அச்சகம்.

9. கிளை அச்சகம் ஆனைக்கார் தோட்டம்

இரவும் பகலும் எந்நேரமும இயங்கும் சென்னை அரசினர் மத்திய அச்சகத்தில் ஏறக்குறைய 3,000 பேர் பணி புரிகின்றனர். காலை 6 மணி முதல் 2 மணி வரையிலும், பகல் 2 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலும், இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரையிலும் ஆக மூன்று முறைமாற்றுப் பணிகளில் (Shifts) அச்சகம் இயங்குகிறது.

எழுத்துக் கோக்கும் பகுதியில் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித் தனியே பிரிவுகள் இருக்கின்றன. இவையன்றி மின்னல் வேகத்தில் எழுத்துக்களை கோக்க உதவும் 28 தொடர் அச்சு (Intertype) மற்றும் வரியச்சு (Linotype) இயந்திரப் பொறிகளும், 20 தனியச்சு (Monotype) எழுத்துப் பலகணிகளும், 40 வார்ப்புப் பொறிகளும், 40 வார்ப்பு இயந்திரங்களும், 2 சீரிய வார்ப்புகள் (Super), 1 இலகுவான (Loosetype) எழுத்து வார்ப்புப் பொறி (Caster) களும் உள்ளன.

அச்சடிப்பதற்குத் தேவையான வகை வகையான சிறிய பெரிய நவீன அச்சடிக்கும் இயந்திரங்கள் இங்கே உள்ளன. அதோடு 39 கட்டமைப்பு (Binding) இயந்திரப் பொறிகளும் உள்ளன.

வள்ளலார் நகரிலுள்ள மத்திய அச்சகத்தில் கீழ்க்காணும் வெளியீடுகள் உரிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தரப்படுகின்றன:

1. தமிழ் நாடு அரசிதழ், 2. மாநிலத் திட்ட ஆணைக் குழு அறிக்கை, 3. இந்தியச் சட்ட அறிக்கைகள், 4. அரசு உறுதி மொழிக் குழு அறிக்கை, 5. மதிப்பீட்டுக் குழு அறிக்கை, 6. மாநில நிருவாக அறிக்கைகள், 7. கைத்தறிக் குழுவின் அறிக்கைகள், 8. சுகாதாரப் பணிகள்—குடும்பநலத் திட்ட நிருவாக அறிக்கைகள், 9. பருவ காலப் பணிகள் பற்றிய அறிக்கைகள், 10. தொழிற்சங்கச் சட்ட ஆண்டு அறிக்கை, 11. விடுதலை வீரர்கள் பற்றிய வெளியீடுகள், 12. நிதி—பொருளாதார மதிப்பீடு, 13. அறிவியல் வரலாறு, 14. காவிரி நீர் பற்றிய நடைமுறை அட்டவணைகள், 15. ஐந்தாவது ஐந்து ஆண்டுத் திட்டம், 16. நீண்ட காலத் திட்டம், 17. அரசு அரும்பொருட் காட்சியகம், 18. உயர் நீதி மன்ற நிலை ஆணைகள், 19. கருவூலக் கணக்குகள் தொடர்பான கணக்குத் துறைத் தலைவரின் விரிவான புத்தகம், 20. காவல் பதக்கம் பற்றிய சில வெளியீடுகள்.

இதோடு நிற்கவில்லை இதன் பணி, மேலும் தொடர்கின்றது:





தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை, சட்ட மன்ற மேலவை விவாதங்கள், வாரச் சிறப்பு அரசிதழ்கள், மாநிலப் பரிசுச் சீட்டுகள், பால் அட்டைகள், உணவுப் பங்கீட்டு அட்டைகள், நில உரிமைப் பத்திரங்கள், தமிழ் நாட்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள், அறிவுரைக் குறிப்புகள் (Instructions), வாக்காளர் பெயர்ப் பட்டியல்கள், பேருந்துப்பயணச் சீட்டுகள் ஆகியவையும் அச்சிடப்படுகின்றன.

இவையன்றி ஊராட்சி நடைமுறை நூல், கருவூல நடைமுறை



நூல், வேளாண்மை நடைமுறை நூல், எழுதுபொருள் நடைமுறை நூல் ஆகியவற்றையும் இந்த அச்சகம் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றது.

உயர்நீதி மன்றக் கட்டடத்திலுள்ள வழக்குப் பட்டியல் அச்சுப் பிரிவில் சுமார் 100 பேர் அல்லும் பகலும் பணியாற்றுகின்றனர். இந்தப் பிரிவு ஒரு செய்திப் பத்திரிகை அலுவலகம் போன்று நாள் முழுவதும் விழிப்போடு செயலாற்றி வருகிறது.

மத்தியச் சிறையிலுள்ள அரசு கிளை அச்சகம் 16 அச்சுப் பொறிகளுடன் இயங்கி வருகிறது. குற்றவாளிகளுக்கு அவரது நலனைக் கருதி, அச்சுத் தொழிலில் இங்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

கூலை ஆனைக்கார் தோட்டத்தில் புதிய கிளை அச்சகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இந்த அச்சகத்தில், ரஷ்ய நாட்டு அச்சு இயந்திரங்கள், வெட்டு இயந்திரங்கள், காற்று அழுத்தப் பொறிகள், தனியச்சு எழுத்துப் பலகணிகள், தனியச்சு வார்ப்புப் பொறிகள் ஆகிய இயந்திரங்கள் தற்போது நிறுவப்பட்டுள்ளன.



அச்சாணவை அழுத்தக் கட்டமைக்கப்படுகின்றன.

மதுரை மாநகரிலும் ஒரு கிளை அச்சகத்தை அமைக்கத் தக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ரூ. 27.20 இலட்சம் செலவில் அச்சகம் அமைக்கவும், சுமார் 21 இலட்சம் மதிப்பிற்கு இயந்திரங்கள் வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுளது. இந்த அச்சகத்தில் சுமார் 750 பேர் பணியாற்றுவர் என்றும், இந்த அச்சகம் மூன்று முறையாற்றுப் பணிகளில் (Shifts) பணியாற்றத் தொடங்கும்போது படிவங்கள், பதிவேடுகளைப் பொறுத்தமட்டில் தமிழகத்திலுள்ள பெரும்பாலான அரசு அலுவலகங்களின் தேவைகள் நிறைவு செய்யப்படும் என்றும் குறிப்புகள் கூறுகின்றன.

புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகத்தின் சார்பில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஓய்வு இல்லத்தில் பயிற்சி பெற்ற தொழிலாளர் ஒருவர் மூலம் தொழிலாளர்களுக்கு அச்சுப் பிரிவு அளவில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

திருச்சி கிளை அச்சகத்தில், அன்றாடக் குற்றங்கள்—நிகழ்வுகள் பற்றிய தாள்கள், குற்றம்—நிகழ்வு பற்றிய வாரத் தாள்கள், மாதாந்திரக் குற்ற ஆய்வுரை போன்றவையோடு பிற அரசு அச்சகப்பணிகளும் நடக்கின்றன.

இதேபோன்று சேலம், விருத்தாசலம் வட்டார அச்சகங்கள் பல்வேறு அச்சுப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

எழுது பொருள்—அச்சுத் துறை உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிப்பதில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகின்றது. இந்த வகையில் கண் பார்வையற்றவர்கள் 7 பேர், காது கேளாதவர்கள் 3 பேர், பேச இயலாதவர்கள் 6 பேர், நடக்க இயலாதவர்கள் 37 பேர், பிற உறுப்புகள் ஊனமுற்றோர் 4 பேர் ஆக 57 பேர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர்.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் இணையற்ற பணி ஆற்றியமைக்காக எழுது பொருள் அச்சுத்துறை தேசியப் பரிசைப் பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். 1974-ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் நாள் புது தில்லியில் இதற்கான நடந்த சிறப்பு விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவரால் இப்பரிசு வழங்கப் பெற்றது.

இத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அச்சகத்திலுள்ள மருந்தகத்தில் நாள்தோறும் 175 தொழிலாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தொழிலாளர் நல்வாழ்வுக்காகவும், விளையாட்டுகளுக்காகவும் நல நிதியிலிருந்து இதுவரை ரூ. 2,253 வழங்கப் பட்டுள்ளது.

அண்ணாசாலையிலுள்ள கிளை அச்சகம், எழுதுபொருள் பண்டக சாலை ஆகியவற்றில் பணி புரியும் பணியாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக ஒவ்வொரு இடத்திலும் தனியாக ஒரு மருந்தகம் செயற்பட்டு வருகிறது. இங்குள்ள



கண்பார்வையற்றோர் புத்தக உறைகள் செய்கின்றனர்.



பெண் தொழிலாளர்கள் பணி புரியும்போது, அவர்களது குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்குக் 'குழந்தைகள் காப்பகம்' ஒன்றும் உள்ளது. இந்தக் காப்பகத்தில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு இரு பெண் பணியாளர் உள்ளனர்.

அச்சகத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் காரியத்தால் உடல் நலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அவர்களுக்குப் பலவித ஊட்டச் சத்து மிக்க குளிகைகள் வழங்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு வழக்கம் போல் ரொட்டியும் தேநீரும் வழங்கப்படுகிறது. இத்துறையைச் சேர்ந்த காலமான தொழிலாளர்களைச் சார்ந்திருப்போருக்கு நல நிதியிலிருந்து ரூ. 50 அளிக்கப்பட்டு வருகிறது.

இவையன்றி மாநகரில் அமைந்துள்ள கிளை அச்சகங்களில் பணி புரியும் தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றைத் தீர்க்கும் பொருட்டு அரசு அச்சகத்திலுள்ள தொழிலாளர் நல அலுவலர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை அந்தந்த இடங்களுக்குச் சென்று பார்வையிடுகின்றனர்.

அச்சகத்திற்குள்ளே சிறப்பாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கம், தொழிலாளர்களுக்குக் கடன் உதவி அளித்து வருகிறது. 1,877 உறுப்பினர்கள் கொண்டது இந்தச் சங்கம். இச்சங்கத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 6.75 இலட்சம் ஆகும். இது உறுப்பினர்களுக்குக் கடனாக ரூ. 84.43 இலட்சம் வழங்கியுள்ளது. பொன் விழாவினைக் கண்ட இச் சங்கம், 1972-73-ல் ரூ. 65,656 நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது.

ஆறாண்டுகளாக நற்பணியாற்றி வரும் 'தமிழ்நாடு அரசு எழுது பொருள் அச்சுத் துறைத் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை' தமது உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை விற்பனை செய்து வருகின்றது.



அச்சக உட்புறத் தோற்றத்தின் ஒரு பகுதி.



பட அச்சு (Block making)

தண்டையார்பேட்டை காமராஜ நகரில் தொழிலாளர்களுக்கான 300 குடியிருப்புகளும் உள்ளன.

சிறந்த பணிகளை ஆற்றி வருவதற்காக இது பரிசுகளும், பாராட்டுதல்களும் பெற்று வருகின்றது. 1972-ஆம் ஆண்டிற்கான தேசியப் பாதுகாப்புப் பரிசுகளைச் சென்னை மத்திய அச்சகம் பெற்றுள்ளது. பம்பாய் தேசியப் பாதுகாப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பெற்ற இப் பரிசுகள் 1973-ல் குடியரசுத் தலைவரால் வழங்கப்பெற்றது.

சென்னை அண்ணாசாலையிலுள்ள அரசுக் கிளை அச்சகம் (தமிழரசு அச்சகம்) 1971-ஆம் ஆண்டிற்கான மாநிலப் பாதுகாப்புப் பரிசைப் பெற்றுள்ளது.

எழுதுபொருள் அச்சுத்துறையின் ஓர் அங்கமான 'எழுதுபொருள் கிடங்கு' காகிதம், அட்டைகள், அச்சகத்தால் தயாரிக்கப்படும் பொருள்கள், அச்சகத்திற்குத் தேவையான தட்டெழுத்துப் பொறிகள், கணக்கெடுப்புப் பொறிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வினியோகம் செய்யும் ஒரு மத்திய செயலாண்மை நிலையமாக இயங்கி வருகிறது.

143 வயதுள்ள சென்னை அரசினர் மத்திய அச்சகம் இவ்வாறு அரசுத் துறைகளுக்காகப் பல் வேறு பணிகளைப் பாங்குடன் ஆற்றி வருவதைப் பாராட்ட வேண்டும்.

—பி.வி.ஜி.




உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

'ப்ளேனோஃபிக்ஸ்'

தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோஃபிக்ஸ்" உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து மகசூலைப் பெருக்க முடியும்.

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட

"ப்ளேனோஃபிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு





# புதுமைக் கதர்

ஒரு பொருளை வாங்குவதற்கு முன் ஒரு முறைக்குப் பல முறை சிந்திக்கிறோம். கதர்த் துணி வாங்குபவர்களில் பெரும்பாலோர் அப்படித்தான் சிந்திக்கிறார்கள். தங்களைத் தாங்களே சில கேள்விகள் கேட்டுக்கொள்கிறார்கள்.

எண்ணற்ற இரகங்களில்-விதவிதமான வண்ணங்களில் ஆலைத்துணிகள் விற்பனையாகும்பொழுது கதர்த்துணி வாங்க வேண்டுமா?

ஆலைத்துணிகளை விட கதர்த் துணி விலை அதிகமானதா?

நாம் கொடுக்கும் பணத்துக்கு ஈடானதா?

அது நீடித்து நாள்பட உழைக்குமா?

இவையே அந்தக் கேள்விகள். இவை நியாயமானவையும்கூட. ஏனெனில் உழைத்துச் சம்பாதித்த பணத்தை உபயோகமான வழிகளில் தானே செலவிட வேண்டும்!

எண்ணற்ற இரகங்களில்-விதவிதமான வண்ணங்களில் ஆலைத்துணிகள் உள்ளன. உண்மைதான். ஆனால் அதே அளவுக்குக் கதரிலும் இன்று கண்களைப் பறிக்கும் வண்ணங்களும்-கவனத்தை ஈர்த்திடும் இரகங்களும் வந்துள்ளன.

கதர் ஒரு முரட்டுத்துணி — மென்மையோ நளினமோ இல்லாதது' என்ற அறியாமையில் சிலர் சொல்லிய காலம் மலையேறிவிட்டது. இது ஆலைத் துணியா? அல்லது கதர்த் துணியா? என்று வேறுபாடு காணமுடியாத அளவுக்குக் கதரில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை ஒரு மறுமலர்ச்சி என்றுகூடச் சொல்லலாம்.

இதன் விளைவாகத்தான் கதர் விற்பனையும் இன்று அதிகரித்துள்ளது. முன்பு ஒரு சிலர் மட்டுமே கதர்த்துணி வாங்கி அணிந்தார்கள். ஆனால் இன்று வாழ்க்கையின் பல நிலைகளில் உள்ள மக்கள்-பல் வேறு அளவு வருவாய் உள்ளவர்கள் அனைவரும் கதர்த்துணி வாங்குகிறார்கள். தொழிலதிபர்கள்-தொழிலாளர்கள்; அலுவலக அதிகாரிகள்-ஊழியர்கள் குடும்பத் தலைவியர்-கல்லூரி மாணவர்கள் - மாணவியர் இளஞ்சிறார் என்று பலரும் கதர்த்துணியும், பட்டுப் புடவைகளும், ரெடிமேட் ஆடைகளும் அணிகிறார்கள். இந்த அளவுக்கு பல தரப்பட்ட மக்களும் வாங்குகிறார்கள் என்றால்-கதரில் எண்ணற்ற இரகங்களும், விதவிதமான வண்ணங்களும் உள்ளன என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக் காட்டாகும்.


மு. அ. க. தய்யப் ஐ.ஏ.எஸ்.
தலைமைச் செயல் அலுவலர்
தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம்.


ஆலைத்துணிகளை விட கதர்த் துணி விலை அதிகம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது சரியல்ல. ஏனெனில் எந்த வகையில் பார்த்தாலும் தரமான ஒரு கதர்த் துணியைவிட-தரமான ஒரு ஆலைத்துணி விலை குறைவானதாக இருக்கவே முடியாது. ஆலைத்துணிகள் விற்பனைக்கு வருவதற்கு முன்பு எவ்வளவோ வரிகள் அவற்றின் மேல் சுமத்தப்படுகின்றன. அத்துடன் ஆலை நிருவாகச் செலவு-முதலீட்டுக்கான வட்டி-விளம்பரச் செலவு-இவை தவிர ஆலை அதிபரின் இலாபம் இவையெல்லாம் சேர்த்துத்தான் ஆலைத்துணியின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் கதர்த்துணிக்கு இத்தகைய சுமைகள் இல்லை. கதர் உற்பத்திக்கு அரசாங்கத்திடமிருந்தும், கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவிடமிருந்தும் வட்டியில்லாக் கடனும் மானியமும் கிடைக்கின்றன. கதர்த் துணிக்கு வரி கிடையாது. கதர் விற்பவர்களுக்கும் துணி நெய்பவர்களுக்கும் கணிசமான கூலி கிடைக்க வேண்டும் என்பதைத் தவிர இதில் யாருக்கும் எந்த இலாப நோக்கமும் கிடையாது. நிருவாகச் செலவில் ஒரு பகுதியை ஈடுகட்டுவதற்கு மட்டும் ஆலையில் மிகக்குறைவான சதவிகிதம் அதிகப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வருகிறது. இப்படி இருக்கும் பொழுது ஆலைத் துணியைவிட கதர்த்துணி விலை அதிகமானது என்று எப்படிச் சொல்ல முடியும்!

நாம் கொடுக்கும் பணத்துக்குக் கதர்த்துணி ஈடானதா?

என்று சிலர் கேட்கலாம். கதர் இயக்கத்தின் பின்னணியில் காந்தியடிகள் கூறிய சித்தாந்தம் ஒன்று உள்ளது. அந்த சித்தாந்தத்தைப்பற்றி இப்போது இங்கு விவரிக்க வேண்டியதில்லை. மாருக, பொருளாதார அடிப்படையில் கதர்த்துணியின் விலை மதிப்பை-பெறுமானத்தை ஆராயலாம்.

பன்னிரெண்டு ரூபாய்க்குத் தரமான ஒரு ரெடிமேட் சிலாக் கதரில் கிடைக்கிறது. இதே அளவு தரமுள்ள ஆலைத்துணி வாங்கி தைக்க வேண்டுமானுல் குறைந்தது 15 ரூபாய் ஆகும். போதிய நீள அகலமுள்ள ஒரு வேட்டியும்-துண்டும் கதரில் 15 ரூபாய்க்குள் வாங்கலாம். அதுபோல் கதர்ப்புடவைகள் 50 ரூபாயிலிருந்து கிடைக்கிறது. இளஞ்சிருர்களுக்கான ரெடிமேட் ஆடைகள் ஏழெட்டு ரூபாயிலிருந்து உண்டு. இன்று ஆலைத்துணிகள் விற்கும் விலையையும்-கதரில் நீங்கள் வாங்கும் பொருள்களின் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கதர்த் துணியின் பெறுமானத்தைச் சொல்லாமலேயே புரிந்துகொள்ளலாம்.

இன்ஞெரு குறிப்பிடத்தக்க அம்சமும் இதில் உண்டு. 15 ரூபாய் கொடுத்து ஒரு வேட்டியும்,. துண்டும் வாங்கிஞல் அதில் பாதி அந்த வேட்டி-துண்டுகளை தயார் செய்த நூற்பாளர்களுக்கும் - நெசவாளர்களுக்கும் கூலியாகப் போய்ச் சேர்கிறது. கதர்த் துணியில் எது வாங்கிஞலும் ஏறக்குறைய அதில் பாதித்தொகை ஏழைத் தொழிலாளர்களுக்கு ஊதியமாகக் கிடைக்கிறது. அவர்கள் யார் ? கிராமப் புறங்களிலும், ஒருசில நகர்ப்புறங்களிலும் வேலையில்லாமல் - வாழ்வுக்கு வழி இல்லாமல் வறுமையில் அவதிப்படுபவர்கள். இப்படி இலட்சக்கணக்கான மக்கள் நம்நாட்டில் உள்ளனர். கதர்த் தொழில்தான் அவர்களுக்கு ஆதாரம். அதுதான் அவர்களுக்குச் சோறு போடுகிறது.

நீங்கள் பணம் கொடுத்து கதர்த்துணி வாங்குபொழுது பணத்தின் மதிப்புக்கேற்ற துணி உங்களுக்குக் கிடைப்பதுடன், உங்களது ஏழைச் சகோதர-சகோதரிகளின் அன்ருட வாழ்வுக்கும் நீங்கள் உதவி செய்திருக்கிறீர்கள் என்ற மனநிறைவும் கிடைக்கிறது. உங்களது பணம் தனிப்பட்ட ஒருவரின் இரும்புப் பெட்டிக்கோ— கடைத்தரகர்களின் கைகளுக்கோ போய்ச் சேராமல்,

கதரில் கிடைக்கக்கூடிய துணிமணிகள் அவற்றின் விலை ஆகிய விவரங்களை கீழ்வரும் அட்டவணை விளக்கிவிடும்:

| | | |
|---|---|---|
| **சர்ட்டிங்** | ... | **(மீட்டருக்கு)** |
| வெள்ளை | ... | ரூ. 4.50 முதல் 17.45 வரை |
| கலர் | ... | ரூ. 6.70 முதல் 10.95 வரை |
| சூட்டிங் | | |
| வெள்ளை-கலர் | ... | ரூ. 7.00 முதல் 10.75 வரை |
| டிரில் | ... | ரூ. 5.95 |
| **ரெடிமேட்** | | **(ஒன்று)** |
| சிலாக் | ... | ரூ. 12.00 முதல் 21.00 வரை |
| முழுக்கைச் சட்டை | ... | ரூ. 16 முதல் 25.00 வரை |
| 'குரு' சட்டை | ... | ரூ. 15.000 முதல் 18.00 வரை |
| பட்டு சிலாக் | ... | ரூ. 35 முதல் 50.00 வரை |
| **குழந்தைகள் ரெடிமேட்** | | |
| பாபா சூட் | ... | ரூ. 15.90 முதல் 26.00 வரை |
| மற்ற இரகங்கள் | ... | ரூ. 7.00 முதல் 21.00 வரை |
| புடவைகள்: | ... | |
| 'பாடிக் பிரிண்டட்' புடவை | ... | ரூ. 55.00 முதல் 70.00 வரை.. |

நேரடியாக ஏழைத் தொழிலாளர்களின் மடியில் போய் விழுகிறது என்பதை ஒரு விஞடி எண்ணிப் பாருங்கள்.

கதர்த்துணி நாள்பட உழைக்குமா? அணிந்து கொள்வதற்கு நன்ருக-எடுப்பாக இருக்குமா? என்று சிலருக்குச் சந்தேகம் வரும். ஆள்பாதி-ஆடைபாதி என்பார்கள். நன்ருகச் சலவை செய்த கதர்த்துணி அணிந்தால் அதன் கவர்ச்சியே தனி தான்.

ஒரு துணி நாள்பட உழைக்குமா - உழைக்காதா என்பது அந்தத் துணியை நாம் பயன்படுத்துகிற விதத்தைப் பொறுத்தது. அது எவ்வளவு கெட்டியான-உயர்வான துணியாக இருந்தாலும் அதைக் கவனமாக வைத்துக் கொள்ளாவிட்டால், ஒரே மாதத்தில் உபயோகமற்றுப் போகும். இதற்குக் கதர்த் துணி விலக்கானதல்ல.

நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகள். சலவை செய்வதற்காக அவர்களால் அதிகம் செலவிட முடியாது. மிகக் குறைந்த செலவில் சலவை செய்யத் தக்க துணிகளே அவர்களுக்குத் தேவை. கதர்த்துணி அத்தகையது. அதை இன்னின்ன விதத்தில் இந்த சோப் போட்டுத்தான் சலவை செய்ய வேண்டுமென்றில்லை. எளிய முறையில் சலவை செய்யலாம்.

மேலும் நமது நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு உகந்தது கதர்த் துணிகள் தான். வெய்யில் காலத்தில் கதர் அணிந்து பார்த்தால் அந்தச் சுகம் தெரியும். அதுபோல் குளிர் காலத்தில்-மழைக்காலத்தில் கதர்த் துணியின் சிறப்பு தெரியும்.

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியமானது தமிழகத்தில் கதர் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பினை மேற்கொண்டுள்ளது. ரூரல் டெக்ஸ்டைல் சென்டர் (Rural Textile Centres) என்று சொல்லப்படும் கதர் நூற்பு நிலையங்கள் மற்றும்கதர் நெசவு நிலையங்கள், இன்று கதர்த் துணிக்கு உள்ள கிராக்கியையும் - தேவைப்பாட்டையும் நிறைவு செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாடு - பாண்டிச்சேரி மாநிலங்களில் 150-க்கும் மேற்பட்ட காதி கிராப்ட் நிலையங்கள், எண்ணற்ற கதர்த்துணி இரகங்களை விற்பனை செய்து வருகின்றன. அருகிலுள்ள கதர் கிராப்டுக்கு ஒரு முறை சென்று பாருங்கள்... கதர்த் துணி பற்றிய புதுமையான இந்த உண்மைகளை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.



# காணி நிலம் வேண்டும்

திட்டமிட்ட காரியத்தைத் திட்டமிட்டவாறே செய்து முடித்துவிட்ட ஆணவத்துடன் நின்று கொண்டிருந்த சிலட்டூர்க் கங்காணி மகள் கன்னி பவளக்கொடியை நோக்கி ஆத்திரம் கொடிகட்டிப் பறக்க நடந்தாள், ஆவணத்தாங் கோட்டை ராமையாத் தேவர் மகள் அன்னக்கொடி.

''அடிபாவி! பழிகாரி!'' என்று வீரிட்டுக்கொண்டே விரைந்தாள் அவள். வீரிட்ட

ஆவேசத்தோடு அப்படியே தள்ளிவிட்டாள்.

நாவற்பழம் மண்ணிலே உதிருமே அந்தக்கதையாகச் சாய்ந்தாள் பவளம். பதனமாக எழுந்தாள்; நின்ருள்.

பொங்குமாங்கடலெனக் காட்சியளிக்கின்ருள் கன்னிக் கொழுந்து அன்னம்!

தைக் கள்ளத்தனமாகக் கடித்துத் தின்றுவிட்டு நழுவி ஓடிவிட முயலும் எலியைத் துரத்திப் பிடித்துக் கைக்கு மெய்யாகத் தண்டனை கொடுக்க முனைவது மாதிரி, பவளக் கொடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அன்னம்.

''ஏ பவளம்! உன்னைப்போய் தங்கச்சின்னு விளிச்சேனே! நான் ஒரு பைத்தியக்காரி! ஆனு நீ பலே கைகாரி! அது மட்டுமல்ல; நீ படு சூதுக்காரி! அதாலேதான்,யானை தன் தலை மேலே மண்ணை வாரிக் கொட்

## 20. ஊர்ப் பஞ்சாயத்தில் புது நீதி விசாரணை!

குரல் வீங்கி வெடிப்பதற்குள், பவளக்கொடியின் கறுப்புக் கதுப்புக் கன்னங்களிலே ஓங்கி ஓர் அறை விட்டாள் அன்னம்.

பசையும் பச்சாப்பும் மிகுந்த பெருந்தனக்காரரின் மகள் பவளக்கொடி இந்தப் பயங்கரமான அறையை எப்படி எதிர்பார்த்திருப்பாள்? பாவம் அவள் அப்படியே கதிகலங்கி, பொறிகலங்கி நின்றுவிட்டாள்!

''கேடு கெட்ட குட்டி உனக்கு என் மூஞ்சியிலே அறையறதுக்கு அம்மாம் கொழுப்பு முட்டுப் பூடுச்சாங் காட்டி?'' என்று கொள்ளிவாய்ப் பிசாசு மாதிரிக் கத்திக் கொண்டே அன்னக்கொடிக்குப் பதில் அறை கொடுக்கக் கையை ஓங்கலாஞள் பவளக்கொடி.

பவளத்தின் 'சவடால்' அன்னத்திடமா சாயும்? அன்னம் அவள் மார்பில் கைவைத்து

"அடி பாவிப்பட்டி! அடி மூதேவி! தர்மராட்டமும் அரிச்சந்திரராட்டமும் மனிதாபிமானத்தோடவும் ஊர்நாட்டிலே மானத்தோட நடமாடிக்கிட்டிருக்கிற என்ஞேட அன்பு அத்தான் வீரமணி மேலேயா இருந்திருந்து நீ பழிபாவம் சுமத்தத் துணிஞ்சே? என் ஆசைமச்சான் வீரமணிபேரிலே அநியாய அவதூறு சுமத்துற தன் மூலம் உன்ஞேட பேரிலே நீயே பழிசுமத்திக்கிட நேரிட்ட இடுசாமச்சங்கதி நாளைக்கு நம்ம மறக்குலச்சமுதாயத்திலே காட்டுத் தீயாகப் பரவத் தொடங்கிஞல், கன்னிப் பொண்ணுன உன் கதி என்னுகும்னு ரோசிச்சுப் பார்க்கக் கூடவா உனக்கு மதிகெட்டுப் போச்சு?''

தடம்புரண்டு நழுவியோட முனைந்தாள் பவளக்கொடி.

சீமைக் கொய்யாப் பழத்

டிக்கிடுற தொப்ப, நீயே உன் பேரிலே வினையைத் தூவி விதைச்சுப்பிடதுணிஞ்சிருக்கே!

''சே! நீயும் ஒரு பொம்பளையா? தமிழ்ச்சாதியோட நல்ல பேரைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு நீ! சீ! எச்சிற் கலைக்கு அலைகிற வெறிநாயே!''

சிம்மக்குரல் வீசி முழங்கிவிட்டு, எச்சிலைக் காறிப் பவளத்தின் மீது துப்பிவிட்டாள் அன்னம்.

அவ்வளவுதான்!

பவளக்கொடி காட்டேரியாக மாறிஞள். அன்னத்தின் பேரில் அவளும் பதிலுக்குப் பதில் எச்சிலை உமிழ்ந்தாள். அத்துடன் விடவில்லை, கங்காணி மகள். அன்னத்தின் குழற் கற்றையை மடக்கிப் பிடித்துக் கொண்டாள்.

பூவை எஸ். ஆறுமுகம்





"ஈயத்தைப் பார்த்து இளிச்சுதாம் பித்தளை! நானாடி கெட்டழிஞ்சவ? நீதான் கெட்டழிஞ்ச லம்பாடிச் சிறுக்கி. உன் சிங்கப்பூர் அப்பன் செங்கமலத்தோட கொசுவத்தைச் சுற்றிக்கிட்டு இருந்திட்டு, இப்ப ஏமாந்து நிற்கலையா? அந்தப் புத்திதானே உனக்கும் இருக்கும்! நான் ராமருக்கு வாய்ச்சிட்ட சீதை கணக்காக்கும்!

"எனக்கு அந்த வீரமணி நம்பிக்கைத் துரோகம் செஞ்சு என்னை மோசம் செய்யத் துணிஞ்சால், அப்பவே அந்த வீரமணியை நாசமாக்கிப்பிட மாட்டேனா?" என்று முழங்கினாள் பவளம்.

"ஆ" என்று கூக்குரல் பரப்பிப் பவளத்திடமிருந்து விடுதலை பெற்று விட்டாள் அபலை அன்னம். 'அப்படின்னா, பவளம் செப்புறதெல்லாம் மெய்யே தானா?' மெய் நடுங்கியது. புயலிடை அகப்பட்ட அகல் விளக்கானாள். கொழுந்த விட்டெரிந்த மனத்திரி ஏன் இப்படி 'அலமந்து' துடிக்கிறது? பவளம் கடைசிவரை அவள் பிடியில் கிடைத்தால்தானே? அவள் ஆத்திரத்துடன் தவித்தாள்; வேதனையோடு துடித்தாள்; அச்சத்தோடு துவண்டாள். கண்ணீர் மடைமாறிய வெள்ளமாக வெட்டிச் சாடிற்று.

'மச்சான், வெறிபிடிச்ச இந்த நாய் உங்களைப் பார்த்துக் குலைக்கிறது ஒட்டுக்குமே நிசந்தானா? உங்களை மலைபோலே நம்பிக்கிட்டிருந்தேனே நான்? கடைசிலே, நீங்க சதம்னு உங்க காலடியிலே உயிர்ச்சரண் அடைஞ்சிருந்த உங்க அருமை அம்மான் மகளான என்னை மலே மேலேயிருந்து உருட்டி விட்டிடுவீங்க போலத் தோணுதுங்களே? ஐயையோ, தெய்வமே! என் சாமியே வீரமணி!' —மனம் தூண்டிற் புழுவாகித் துடிதடித்தது!

சூழ்வினை, மாய விதியாகச் சூழ்ந்து, மௌனத்தின் சூழலைக் கைகொட்டிச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறதா, என்ன?

இப்போது உள்ள சூழலிலே அன்னத்திற்கு அழத்தான் தெரிகிறது!

"ஏட்டி அன்னக்குட்டி! ஏண்டி வாயடைச்சிட்டே? கோட்டையிலே பிறந்தாலும் போட்ட சுழி தப்பாது அப்படின்னு ஒரு பழமொழி உண்டே, அந்தக் கதை தெரியாதா உனக்கு? பாவம்!" என்று நிர்த்தாட்சண்யமாகவும் ஆணவச் செருக்காகவும் சிரிப்பினை வெடித்தாள் பவளம்.

குனிந்திருந்த தலையைப் பைய நிமிர்த்தினாள் அன்னம். பவளத்தை ஏக்கமும் சோகமும் ஏமாற்றமும் சூழ நோக்கினாள் அவள்.



பவளம் மேலும் சிரிக்கலானாள். ''ஏலே, அன்னம்! இனிமே வீரமணி எனக்கேதானாக்கும்! வீரமணி என்னோட ஆசை மச்சானாகி, நேச மச்சானாகி, வள்ளிசாய் நாள் முப்பத்தஞ்சு ஆகிடுச்சு! ஆமா!'' என்றாள்.

பவளம் பெண்தானா? அவளைக் கடித்துக் குதறிப்போட்டால் என்ன? - அன்னத்தின் கைகள் மறுபடி குறுகுறுக்கத் தொடங்கின. 'இவளை மாதிரி மான ரோசம், சூடு, சுரணை இல்லாத ஈனச்ஜென்மமாக என் அன்பு மச்சான் வீரமணியையும் ஆக்கிப்போடக் கங்கணம் கட்டித்தான் கூத்து ஆடுறாள் போலே!-கூத்தடிக்கிறாள் போலே இந்தப்பாவி! பற்கள் கடிபட்டன. பவளத்தை விசையாக நெருங்கினாள் அன்னம்.

''அசலூர்க் குட்டியாச்சே நீ அப்படின்னு உன்னைச் சமிச்சு உனக்கு மாப்பு விட்டிருக்கிறேன். இல்லாங்காட்டி, உன்னை முந்தியே கடிச்சுக் குதறி வீசியிருப்பேன்! என் ஆசைமச்சான் பாதை தவறிப் போற ஆம்பளையே இல்லை. அந்த நம்பிக்கை இந்த விநாடி வரை எனக்கு உண்டு. ஆனா, நீயாக மோடி பண்ணி என் மச்சானை எங்கிட்டேயிருந்து அபகரிச்சுக்கிட உனக்கு வயசு பற்றுது! எதுவுமே என்மச்சான் வீரமணியோட தீர்ப்புப் படித்தான் நடக்கும்!''

அன்னம் தீயாகிச் சிதறினாள்.

பவளக்கொடி துளிகூட அதிர்ச்சியடையாமல், தன்னுடைய பயங்கரச் சிரிப்பைத் தொடர்ந்து வெடித்தாள்.

''ஏலே, பவளம்! நான் கேட்கப்போற சங்கதிக்கெல்லாம் பதில் சொல்லு, பார்க்கலாம்!''

''ஊம்!''

''நீயும் வீரமணியும் கூடிக் களிச்சிங்க என்கிறதுக்குச் சாட்சி என்ன வச்சிருக்கே? சொல்லுடி, பவளம், சொல்லு!

''காளி மகமாயி சத்தியமாகச் சாட்சி வச்சிருக்கேன்!''

''ஓகோ! அப்படியா? அப்படீன்னா, இப்பவே என் பின்னாடி ஓடிவா. இப்பவே தமுக்கடிச்சு, காளி ஆத்தா சந்நதித் திட்டிலே ஊர்ப்பஞ்சாயத்தைக் கூட்டுறேன். இப்பவே எவக்கு எது நிஜம், எது பொய்; யார் அசல், யார் போலி என்கிற உண்மையும் தர்மமும் சத்தியமும் விளங்கியாக வேணும்! ...ம்..வாடி, பவளம்!''

அழைத்துக் கொண்டே பவளக்கொடியின் கரங்களைப் பற்றி, மாட்டை இழுப்பது போன்று 'பரபர' வென்று இழுக்கலானாள் அன்னக்கொடி.

ஆனால், பவளமோ திமிறிக் கொண்டு பின்னுக்கு இழுத்தாள். அன்னத்தின் பிடியை விட்டு விலகிக் கொண்டாள். ''அன்னம், நான் கெட்டுப் போனவள் என்கிற ரகசியத்தை ஊரைக் கூட்டித் தமுக்குக் கொட்ட நினைக்கிறே நீ. நான் வாரேன். ஆனா, அதே ஊர்ப்பஞ்சாயத்திலே, உன் ஆசை மச்சான் வீரமணியாலே நான் கெடுக்கப்படல்லே என்கிறதையும் நிரூபிச்சுக் காட்ட வேணுமாக்கும்! ஆமா, சொல்லிப்புட்டேன்!'' என்று ஓங்காரமிடலானாள் பவளக்கொடி. வெயிலில் மூக்குத்தி பளபளத்தது.

## கடம்பத்தூரில் கல் குழாய்த் தொழிற்சாலை!

அரசு துறை நிறுவனமான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தினர் செங்கற்பட்டு மாவட்டம் கடம்பத்தூரில் 6000 டன் குழாய்கள் உற்பத்தி செய்யக் கூடிய கல் குழாய்த் தொழிற்சாலை ஒன்றை நிறுவவிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலேயே இத்தகைய தொழிற்சாலைகளில் இதுவே பெரிதாக விளங்கும்.

இந்தத் தொழிற்சாலை ரூ. 35 இலட்சம் செலவில் நிறுவப்படும்

இப்பேச்சைக் கேட்டதும், அப்படியே வாயடைத்துப் போய்விட்டாள் அன்னம். மறு பேச்சாடவில்லை அவள். பவளக்கொடியின் அறைபடாத இன்னொரு கன்னத்திலும் இப்போது ஓங்கி ஓர் அறை கொடுத்தாள் அன்னக்கொடி. பத்ரகாளியாக உருக்கொண்டு விட்டாளா அன்னம்?

அப்போது:

''அன்னம்!'' என்று விளித்த வண்ணம், அன்னத்திற்கு உடைமை பூண்ட வெள்ளைக் காளையும் கையுமாக அங்கே தோன்றினான் வீரமணி!

## 21. மணல் வீடு!

தேடிவந்த தெய்வம்' என்று சொல்லுவது உண்டல்லவா?- தெய்வம் தேடிவருமோ என்னவோ? ஆனால், வீரமணி அன்னத்தைத் தேடி வந்தான்.

வீரமணியை உச்சிப் பொழுதில், தன் இல்லத்தில் அன்னம் எதிர்பார்க்கவில்லைதான். என்றாலும், பழி சுமத்திய பவளக்கொடியைப் பழிக்கு ஆளாக்கப்பட்டுள்ள ஆசை மச்சான் வீரமணியின் முன்னிலையில் நிறுத்தி நீதி விசாரணை நடத்திவிடவேண்டுமென்ற உள்நோக்கத் துடிப்போடுதான், ஆத்தா சந்நிதானத்தில் 'ஊர்ப் பஞ்சாயம்' கூட்டப் போவதாகப் 'பாவலா' காட்டி, அவளைக் கையைப் பிடித்து இழுத்தாள் அன்னம்.

வீரமணி வெள்ளைக்காளையும் கையுமாக அப்போது அங்கே காட்சியளித்தான்!

வீரமணியைக் கண்டதும், அவனைத் தேடிவந்த தெய்வமெனவே மதித்தாள் அன்னம். அடித்தாலும், அணைத்தாலும் சேய்க்குத் தாய்தான் சதம்.

வீரமணியைக் கண்டதும், தாயைக் கண்ட சேயாக மாறிவிட்டாள் அன்னக்கொடி. உடனே ''மச்சான்'' என்று அலறினாள். கதறினாள்!.

வீரமணிக்குத் திக்கும் புரியவில்லை; திசையும் விளங்கவில்லை. ''அன்னம்! ஏன் அழுகிறே, அன்னம்? என்னத்தைப் பறிகொடுத்திட்டே? உன்னோட வெள்ளைக்காளையைத்தான் நான் உன்கிட்டே வாக்குக் கொடுத்ததுபோல கொண்டாந்து சேர்த்துப் புட்டேனே? என் அப்பாரோட வம்பை விலை கொடுத்து வாங்கினாலும் பாதகமில்லே; உன்னோட அன்பை விலை கொடுக்காமல் வாங்கக் கடமைப்பட்டவன்; உரிமைப்பட்டவன் அப்படின்னு தீர்மானம் பண்ணித்தான் மறுதக்கமும் கோதாவிலே இறங்கிப்புட்டேனே? இரங்கமாட்டீயா நீ, அன்னம்?'' என்று சிறுபிள்ளை மாதிரி செருமத் தொடங்கினான் வீரமணி.

வெள்ளை கத்திக் கொண்டே அன்னத்திடம் ஓடிப் பாய்ந்து வந்து நின்றது.



அத்தானை ஏக்கத்தோடும் சோகத்துடனும் பார்த்தவண்ணம், வெள்ளையைக் கைத்தாங்கலாகப் பிடித்துச் சென்று மாட்டுத் தொழுவத்தின் நிழலில் கட்டிப் போட்டுவிட்டுத் திரும்பிய அன்னத்தின் பேதை நெஞ்சமும் கூடத்தான் கட்டிப் போட்டுவிட்ட பாங்கில் தவித்தது; தடுமாறியது!

பவளக்கொடியையும், அன்னக்கொடியையும் வீரமணி மாறி மாறிப் பார்த்தான். அவனுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

''என்ன நடந்திச்சு, அன்னம்?''

''மச்சான்'' என்று மீண்டும் விம்மினாள் அன்னம். நடந்த கதையை எங்ஙனம் விளக்குவது என்ற துப்பு விளங்காமல் குழப்பமும் ஏக்கமும் சலனமும் சூழ்ந்திட வீரமணியை உறுத்துப் பார்வையிடலானாள் கன்னி. ''என்ன நடக்கப்படாதின்னு நான் கவலைப்பட்டேனோ, என்ன நடக்காதின்னு நான் நம்பினேனோ, அது நடந்து போச்சுங்க!'' என்று பொருமினாள் அவள். தொடர்ந்து பவளக் கொடியை நடுங்கும் விரலால் சுட்டிக்காட்டி, ''இவளைத் தெரியுமா உங்களுக்கு?'' என்று ஆத்திரக் குரலெடுத்துக் கேள்வி கேட்டாள் அன்னம்.

குழப்பமும் சங்கடமும் மலிந்திட, பவளக்கொடியை ஏற இறங்கப் பார்வை பரப்பினான் வீரமணி; எங்கேயோ எப்போதோ அந்த முகத்தை. அந்தப் பார்வையை இதற்கு முன்னம் சந்தித்திருப்பதாகவே அவனுக்குப் பட்டது. பிறகு, பவளக்கொடியை அன்புடன் ஊடுருவியவனாக, சற்றே நெகிழ்ந்த வெட்கச் சிதறலோடு, ''நீ..நீ..பவளக்கொடி ....சிலட்டூர்ப் பவளக்கொடி தானே?'' என்று கேட்டான்.

இவளைத்தான் ஏதோ ஒரு பிரதிப் பிரயோசனம் கருதி, தன்னுடைய தலையில் அப்பா கட்டக் கங்கணம் கட்டியிருந்தார் என்கிற விவரத்தையும் அவன் மனச்சாட்சி உணர்ந்துதான் இருந்தது. ஆனால், இவளேதான் இப்போது தன் மூச்சைப் பிரித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறாள் என்ற விஷயத்தை மட்டும் அவன் உணர்ந்திருக்க இயலாது!

ஆடு திருடிய கள்ளிக்குச் சமதையாக நின்றாள் பவளக்கொடி. பின்னர், என்னவோ முடிவுக்கு வந்தவளாக, ''ஆமா'' என்று தலையைப் பலி ஆடு மாதிரி உலுக்கிக் குலுக்கினாள். வைரச் சிமிக்கிகளின் ஒளியில் மூக்குத்திக் கற்கள் முகம் கண்டன. மாரகச் சேலை இடம் பெயர்ந்த காரணத்தால், கழுத்து அட்டிகை இப்போதுதான் தன்னைக் காட்டிக் கொள்ளவோ, காட்டிக் கொடுக்கவோ வேளை பார்த்திருக்கலாம்.

''பவளம்! என்னைத் தெரியுதா, உனக்கு?''

''உங்களை எப்படிங்க மறப்பேன் நான்? நெஞ்சிலே உள்ளதை நினைப்பிலே கொண்டாந்து, உள்ளதை உள்ளபடி சொல்றேனுங்க! நெஞ்சை ஒளிச்சு ஒரு வஞ்சகம் இருக்குங்களா?''

வீரமணியின் மனப் பதற்றம் சூடு பிடித்தது.



பவளம் பழைய காட்டேரியாக உருக்கொண்டாள்! உடனே ''மச்சான்''! என்று வீரிட்டாள். குரல் தழுதழுத்தது. கறுப்புக் கண்கள் கன்றிச் சிவந்தன. சிவப்பில் ஒரு 'சாகசம்' சிவப்பு விளக்குக் காட்டுகிறதே?......

அன்னக்கொடிக்குச் சுருக்கென்றது.

வீரமணி உந்திக்கமலத்தில் உதை பட்டமாதிரி பதைத்தான்; ''மச்சானா? எங்கே உன் மச்சான்? யாரு உன் மச்சான்?'' என்று ஆத்திரத்தோடு வினவினான்.

பவளக்கொடி விம்மத் தொடங்கினாள். ''நீங்கதான் என் மச்சான்! என்னோட மச்சான், நீங்களேதானுங்க!'' என்று நறுக்குத் தெறித்தாற்போல முழக்கம் செய்தாள்.

'அடிபாவி'— வீரமணிக்குக் கண் தெரியாத காட்டிலே கண்களைக் கட்டிவிட்ட மாதிரி இருந்தது. 'கண்ணாமூச்சி விளையாடுறாளே இந்தச் சிறுக்கி?'— வீறுகொண்டான் வீரமணி. ''பவளம், என்னா கதை பண்ணுறே?'' என்று ஆவேசத் தீ கொழுந்து விட்டெரிய, அவளை அண்டினான்.

அன்னம் முள்மேல் நிற்கிறாள்!

''நானா கதை பண்ணுறேன்? நீங்கதான் எல்லாத்தையும் மறந்துப்புட்டு, ஒண்ணுமே அறியாத பச்சைப்பிள்ளை கணக்கிலே என்னை என்னென்னமோ விசாரிக்கிறீங்க! அடிநாள் தொட்டு என் நெஞ்சைத் தொட்டவங்க நீங்க. துல்லிதமான அந்த மயக்கத்திலே மயங்கினேன் நான். ஆனா, நீங்களோ அன்னத்தையே கொண்டுக்கிடப் போறதாகத் தீர்ப்பு படிச்சிட்டீங்களாம்! ஐயோ, நீங்க எனக்குத் துரோகம் செஞ்சிட்டீங்களே! மச்சான்' ''

வீரமணியின் இதயத்தை என்னவோ ஓர் உணர்வு பிராண்டத் தொடங்கியது. ''நான எப்படி உனக்குத் துரோகம் செஞ்சதாக அர்த்தமாக முடியும் பவளக்கொடி?''

''நீங்க எனக்குத் துரோகமே செய்யலையா? ஒரு நிலா ராத்திரிப் பயணத்திலே என்னை எங்க ஊர் மாரியத்தா கம்மாய் கரைப்பத்தைப் பக்கம் சந்திச்சு, என்னையே நீங்க கண்ணாலம் கட்டிக்கிடுதாக ஆத்தா பேரிலே ஆணை வச்சுக் கையடிச்சுக் கொடுத்தீங்களே, அப்ப என்னா நடந்திச்சாம்..''

தலையில் இடிவிழுந்த மாதிரி தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான், வீரமணி.

''ஒரு ஆவணிக் கெடுவிலே உங்க ஊரையும், எங்க ஊரையும் ஒருமிக்கக் கூட்டி ருசுப்படுத்திச் சொல்லத்தான் போறேன்! நீங்க என்னை ஆசை காட்டி, மோசம் பண்ணிக் கெடுத்த மாதிரியே, நீங்க உங்க முறைப்பொண்ணு அன்னக்கொடியையும் ஆசை காட்டி, மோசம் பண்ணிக் கெடுத்திருக்கீங்க......என்கிற நடப்பையும் மூதலிச்சு மெய்ப்பிக்கத்தான் போறேன். ஆமா!''

''பவளம்....!''

அன்னக்கொடி மட்டிலும்தான் இப்படி அலறிக் கதறினாளா? வீரமணியும்தான்!

(வளரும்.)





# திருச்சியில் நடைபெறும் திருப்பணி

நரிக்குறவர்கள்!

இயற்கையிலேயே மிகவும் பரபரப்பான - நிச்சயமில்லாத வாழ்க்கை அமைப்பு அமையப் பெற்றவர்கள். விலங்குகள் கூடத் தமக்கென்று நிலையான இடத்தைத் தேடிக் கொள்கின்றன. ஆனால், மனித சமுதாயத்தில் அங்கம் பெறும் இந்த இனத்தினர், நிலையான-நீடித்த இன்ப வாழ்வுக்கு உரிய உறைவிடத்தை ஒருபோதும் தேடிக் கொள்வதில்லை. எப்போதும் இடம்விட்டு இடம் மாறுவதும், ஊர் விட்டு ஊர் அலைவதும் இவர்களுக்கு வழக்கமான செயல்கள். காலையில் ஓர் ஊருக்குள் நுழைவார்கள்; அவசர அவசரமாகக் கூடாரத்தை அமைப்பார்கள்; மாலையில் அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று, நம் கண்களை விட்டே மறைந்துவிடுவார்கள்; நம்மை எல்லாம் வியப்புக்கு ஆளாக்கி விடுவார்கள். சுருக்கமாகச் சொன்னால் நரிக்குறவர்களுக்கு நல்வாழ்க்கை அமைத்துத் தருவது என்பது பொய்யாய், கனவாய், கற்பனையாய்க் காட்சியளித்து வந்தது.

மெய்ம்மை, பெருந்தன்மை, ஆற்றல், நம்பிக்கை, ஒருமைப்பாடு-இவை, நரிக்குறவர்கள் விடாப்பிடியாகக் கொண்டிருக்கும் குணநலன்கள். இவ்வளவு உயர்ந்த குணநலன்கள் கொண்டிருக்கும் இந்த இனம்-கல்வி கற்பதில்லை என்பதற்காக அசட்டை செய்யப்படக் கூடாது.

நரிக்குறவர்களுக்கு நல்ல தொண்டாற்றுகின்ற வாய்ப்பைத் திருச்சி மாவட்டம் பெற்றிருக்கிறது. இந்த மாவட்டத்தில் தொடர்ந்து 15 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் நரிக்குறவர்களுக்கு நாகரிகமான, அருமையான, நிலையான வாழ்வை வகுத்துக் கொடுப்பதில் திருச்சி முன்னணியில் இருக்கிறது. இந்த இனம் தமிழக அரசினரால் கொடுக்கப்பட்ட ஓரளவு நிலத்தில் வேளாண்மையைச் செய்துவருகிறது. வேளாண்மையைத் தவிர, ஊசி, கொண்டை ஊசி, பாசிகள் மற்றும் சின்னஞ்சிறு பொருள்களை விற்றுத் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் இந்த இனத்தினர். தஞ்சை-திருச்சி முதன்மைச் சாலையில் - அமைந்துள்ள - தேவராயநேரி அருகில் இந்த நரிக்குறவர்கள் அங்கும் இங்கும் அலைந்து செல்வது மறக்க முடியாத காட்சியாகும்.

நாகரிகம் மலர்ந்துள்ள இந்த நவீன யுகத்தில் நாகரிகத்தால் கவரப்படாமல் வாழ்வது உண்மையிலேயே, பரிதாபமான காட்சிதான். அவர்களது குடியிருப்புப் பிரச்சினை மிக நீண்ட காலத் தேவையாகும்.

அரிசன வீட்டு வசதிக் கழகம், தமிழக அரசினால் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களில் புகழ் பெற்ற திட்டமாகும். ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற நம்பிக்கை கொண்டு, ஆயிரக்கணக்கான ஏழைமக்களின் கண்ணீரைத் துடைக்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக நடத்தபட்டு வரும் எண்ணற்ற திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

திருச்சியைப் பொறுத்த அளவில், நரிக்குறவர்களின் குடியிருப்புப் பிரச்சினைக்காக அரும் முயற்சி எடுத்துள்ளார், மாவட்ட ஆட்சியாளர் வைத்தியலிங்கம் அவர்கள்.

தமிழ்நாடு முழுதும் நரிக்குறவர் சமுதாயத்திற்காக வீடுகள் கட்டப்படுகின்றன. வீட்டின் விலை ரூபாய் 3,000. திருச்சி-அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் உதவியால் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பெற்று வருகிறது; உண்மையில் நரிக்குறவர் இனத்துக்கு நலம் சேர்த்திட இது ஒரு நவீன திட்டம்—மூலமுதலான திட்டம்.

எந்த விதமான பொறுப்பு உணர்ச்சியும் இல்லாது, நாள் தோறும் இடம் விட்டு இடம் மாறிச் செல்லும் இந்த நரிக்குறவர் சமுதாயம் நலமடைவதற்காகத் தீட்டப்படும் இந்தத் திட்டம் வெற்றி பெறப் பணிபுரியும் மாவட்ட ஆட்சியாளரின் முயற்சியினால், ஒவ்வொரு நரிக்குறவர் குடும்பத்திடமும் அவர்களின் நலத்தை எண்ணி ரூ. 500/- நிலையான பொறுப்புத் தொகையாக வசூலிக்கப்பெற்று ரூ. 3500 விலையுள்ள வீடு வழங்கப்படுகிறது.



இந்தத் திட்டத்திற்காக ரூ. 20 ஆயிரம் திரட்டப்பெற்று, சில திங்களுக்கு முன்னர்தான் வங்கியில் போடப்பட்டது. நரிக்குறவர்கள் இனியும் கல்வி அறிவில்லாதவர்களாக இருக்கவேண்டிய தேவையில்லை. ஏற்கெனவே இங்கே அவர்களுக்காக. ஒரு பள்ளி நடைபெற்று வருகிறது. இங்கே நரிக்குறவர் இனத்து மாணவர் 55 பேர் கல்வி கற்கின்றனர். துவக்கப் பள்ளி ஒன்றினைக் கட்டுமாறு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அதிகாரிகளுக்கு, மாவட்ட ஆட்சியாளர் ஆணை பிறப்பித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த ஆகஸ்டு திங்கள் 23-ஆம் நாளன்று நரிக்குறவர் வீடு அமைப்புத் திட்டத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். முதல்வரின் வெற்றிக்கரங்களால் அடித்தளம் அமைக்கப் பெற்ற இந்தத் திட்டம்-வீடற்ற நரிக்குறவர்களுக்கு நல்வாழ்வு-நிலையான வாழ்வு உருவாக்கித் தரும் என்பது உறுதி. நரிக்குறவர்கள் தெருவெல்லாம் அலைந்து திரியும் காட்சி, எதிர்காலத்தில் கற்பனைக் காட்சியாகத்தான் இருக்க முடியும் என்பதைத் திருச்சி நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

—த. பி.



# உலக நல்வாழ்வு நிறுவனம் உருவாக்கிய பயிற்சி

குமார்—

மக்கள், தொகைப் பிரச்சினை விஞடிதோறும் வளர்ந்து, பல் வேறு பிரச்சினைகளை உருவாக் கிக்கொண்டு வருவதை நாம் அறிவோம். நம்மை நோக்கி மிக விரைவாக நெருங்கி வரு கின்ற அந்தப் பேராபத்தைத் தடுப்பதற்கு நாள்தோறும் சிந் தித்துச் சிந்தித்துப் பல்வேறு திட்டங்களை அரசும், நாட்டு நலனில் அக்கறைகொண்ட நல் லவர்களும் முயன்று உருவாக்கி வருகின்றனர்.

இன்றைய நாளில் திட்ட மிட்ட குடும்பத்தை-அளவான குடும்பத்தை உருவாக்குவதில் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்ற நாம்-அதே நேரத்தில் கருவுற்ற அன்னையர் தங்கள் உடல் நலனைப் பேணிக் காத்துத் தங்கள் உடல்நிலையில் முன்னேற்றம் காண்பதற்குரிய சரியான கவனிப்பும், அறி வுரைகளும் பெறுகின்றனரா என்பதைக் கவனிக்க வேண்டி யது நம் ஒவ்வொருவரின் நீங் காப் பொறுப்பாகும்.

முன்னேற்றம் பெற்ற நாடு களிலும்கூட வளர்ச்சியுற்ற குழந்தைகளின் (14வயதுவரை) இறப்பு விகிதத்தைக் காட்டி லும் புதிதாகப் பிறந்த சில நாள் குழந்தைகளின் இறப்பு விகிதம் 15 பங்கு அதிகரித்துள் ளது என்பதை நாம் மறந்து விட முடியாது.

வீட்டில் நடைபெறுகின்ற மகப்பேற்றினுல் பிறக்கின்ற குழந்தைகளில் நான்கில் ஒன்று அதன் ஒரு மாதகால வளர்ச்சிக் குள் இறந்து விடுகிறது என் பது தமிழ்நாடு மக்கள் நல் வாழ்வுத் துறை, மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்து வத்துறை ஆகியவை நடத்தி யுள்ள ஆராய்ச்சி முடிவாகும். இந்த வகையில் இந்தியாவில்



## அட்டை சொல்லும் கட்டுரை

மட்டும் ஆண்டுக்குச் சுமார் 4,00,000 குழந்தைகள் இறக் கின்றன. குழந்தைகள், பிறப் பிலே குறைந்த எடையில் இருத்தல், மகப்பேற்று முறை யில் கையாளுகின்ற தவருன வழிகள், தொற்றுநோய்போன் றவைகளால் இத்தகைய கொடூ ரமான இறப்புக்கள் நிகழ்கின் றன.

இப்படிப்பட்ட மிகப்பெரிய விபத்துக்களைத் தடுத்து நிறுத்த வழி உண்டா? புதிதாகப் பிறக் கின்ற குழந்தைகளைச் சரியான வகையில் மருத்துவச் சிகிச்சை களின் மூலம் காப்பாற்ற முடி யுமா? கருவுற்ற தாய்மார்கள் தங்களின் உடல் நிலையைத் தக்கமுறையில் வைத்துக் கொள்ள முடியுமா? என்பன போன்ற விஞக்களுக்கு விடை காணுகின்ற வகையில் உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health Organisation) குழந் தைகள் மருத்துவம் பற் றிய அனைத்து நாட்டுப் பயிற்சி ஒன்றினை அண்மையில் சென்னை யில் நடத்தியது.

புதிதாகப் பிறந்த குழந்தை களை-பிறந்த சில நாட்கள்வரை அவைகளுக்கு நல்ல மருத்துவ வசதிகள் அளித்துக் காத்தல்' (Care of New-born) குறித் துத் தொடங்கப் பெற்ற அனைத்து நாட்டுச் சிறப்புப் பயிற்சி ஒரு குறுகிய காலப் பயிற்சியாக ஐந்து வாரங்கள் கொண்ட பயிற்சியாக நடை பெற்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளைச் சார்ந்த செவிலியர், மருத்துவர் பங்கு பெற்ற இப் பயிற்சி, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல ஆராய்ச்சி மற்றும் குழந்தைகள் மருத்துவ மனையில் நடைபெற்றது குறிப் பிடத்தக்கது.

இந்தியாவிலேயே குழந்தை கள் மருத்துவ வளர்ச்சியில் இந்த மருத்துவமனை முன்னணி யில் நிற்கிறது. இந்தியாவி லேயே குழந்தைகளுக்கான மருத்துவப் பகுதியை முதன் முதலில் —28 ஆண்டுகளுக்கு முன்பே இங்குத் தொடங்கினார் கள். மருத்துவமனையாக முத லில் இயங்கிப் பின்னர், குழந் தைகள் நல ஆராய்ச்சி நிலைய மாக 1967-ஆம் ஆண்டு முதல் இது செயல்பட்டு வருகிறது. அரசு அளித்த ஊக்கத்திஞலும், உற்சாகத்திஞலும், உதவிகளி ஞலும் நம் நாட்டிலே-ஏன் தென் கிழக்கு ஆசியாவிலேயே வேறு எந்த மருத்துவ நிலைய மும் பெற்றிராத வசதிகளையும் சாதனங்களையும் பெற்றுச் சீரிய முறையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்க ஒன் ருகும்.

இத்தகைய அனைத்து நாட்டுப் பயிற்சி இங்கு நடைபெறுவது இது முதல் தடவை அல்ல. 1968- ஆம் ஆண்டில், உலக நல்வாழ்வு நிறுவனம், 'பிறந்த குழந்தைகளுக்குச் சில நாட்கள் வரை எத்தகைய வகையில் மருத்துவச் சிகிச்சை அளிக்க வேண்டும், எந்தெந்த மருத் துவச் சாதனங்களைப் பயன் படுத்த வேண்டும்' என்பன வற்றை (Neonatology) விளக்குகின்ற வகையில் அனைத்து நாட்டினைச் சார்ந்த மருத்துவத் துறையினர் கலந்து விவாதிக்கின்ற ஒரு பயிற்சி யினை இரண்டு வார காலம் நடத்தியது.



சில குழந்தைகள் பிறக்கும் பொழுதே கை, கால் போன்றவைகளில் ஊனம் ஏற்பட்டிருக்கலாம்; பிறக்கும்பொழுதே சில குழந்தைகளுக்குக் கட்டிகள் உண்டாகியிருக்கலாம். சில குழந்தைகள் பிறக்கும் பொழுதே ஆசனவாய் இல்லாமல் பிறந்திருக்கலாம். இவைகளையெல்லாம் அறுவைச் சிகிச்சை மூலம் ஆரம்பத்திலே நீக்கிவிட இயலும் என்பதைக் காட்டுவதற்காக 1970-ஆம் ஆண்டில் 'பிறந்த குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை முறைகள் (Paediatrics Surgery) என்ற குறுகிய காலப் பயிற்சியினை நடத்தியது. மீண்டும் 1972-ஆம் ஆண்டில் இதே நிறுவனம் 'குழந்தைகள் மருத்துவம் மற்றும் குடும்ப நலத் திட்டம்' இவைகளை விளக்குகின்ற ஒரு பயிற்சியினையும் நடத்தியது.

எனவே இத்தகைய பயிற்சி மீண்டும் இங்கு நடைபெறுவது ஆச்சரியப்படத்தக்க ஒன்று அல்ல. இங்குள்ள குறைப் பிர சவக் குழந்தைகள் பகுதி (Pre-mature Baby unit) 1959-ஆம் ஆண்டில் தொடங் கப்பெற்றது. அது முதல் இந்தப் பகுதியும், புதிதாகப் பிறந்த குழந்தைகள் பகுதியும் (New-born Baby-unit) முறையே மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் இயங்கத் தொடங்கின. புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் பேணுவதில் நன்கு பயிற்சிபெற்ற-குழந்தை மருத்துவத்தில் தேர்ச்சி பெற்று அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் மேற்பார்வையில் இவை நடத்தப்பெற்று வருகின்றன.

அண்மையில் நடத்தப்பெற்ற இந்த அனைத்து நாட்டுப் பயிற்சியினைத் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 29-7-1974-ல் துவக்கி வைத்தார்கள். 29-7-1974 முதல் 30-8-1974 முடிய 5 வார காலம் நடத்தப்பெற்ற இப்பயிற்சியில் முதல் மூன்று வாரங்களில் செவிலியர் மட்டுமே பங்கு பெற்றனர். நான்காவது, ஐந்தாவது வாரங்களில் செவிலியருடன் மருத்துவர்களும பங்கு கொண்டனர். பங்குபெற்ற செவிலியர் 22 பேர்கள், மருத்துவர் 11 பேர்கள். இவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சார்ந்த இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, நேபாளம், வங்காள தேசம், தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்களாவர்.

முதல் மூன்று வாரங்கள் நடைபெற்ற பயிற்சியின்போது செவிலியர்களுக்குக் குழந்தைகளின் மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களைக் கொண்டு, குழந்தைகள் மருத்துவம் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. பல நாடுகளைச் சார்ந்தவர்கள் பங்கு பெற்றதால் அவரவர் நாட்டில் கையாளுகின்ற மருத்துவ முறைகளைப் பற்றி மற்றவர் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் கூட்டாகச் சேர்ந்து விளக்கங்கள் செய்து கொண்டனர். கருவுற்ற தாய்மார்களின் நிலை, அந்த நேரத்தில் அவர்களுக்குத் தரப்படவேண்டிய மருத்துவங்கள், கருப்பையில் உள்ளபோதும் குழந்தையாகப் பிறந்த பிறகும் அதன் வளர்ச்சியும், முன்னேற்றமும் பாதிக்கப்படுதலுக்கான காரணங்கள், அவைகளை நீக்கும் முறைகள் முதலியன செய்முறைகளின் மூலம் விளக்கப்பட்டன.

முக்கியமாக மகப்பேற்றுக்கு முன்னர் தாய்மார்களுக்கு அளிக்கப்பட வேண்டிய மருத்துவங்கள்-அவர்களைக் காத்திடும் வகை, குழந்தைகள் பிறப்பதற்கு முன்பும், பிறந்ததற்குப் பின்பும் கவனிக்கப்பட வேண்டிய வழிமுறைகள், குடும்ப நலத் திட்டத்திலும், குழந்தை மருத்துவக் கல்வி முறையிலும் செவிலியர்க்கு உள்ள முக்கியப் பங்கு போன்றவைகளும் கற்றுத் தரப்பட்டன.






புதிதாகப் பிறந்த குழந்தைகள் பகுதியில் (New-born Baby Unit) அனைத்து நாட்டுச் செவிலியர்

தவிர, அவர்கள் மகப்பேற்றிற்கென அனுமதிக்கப்பெற்ற தாய்மார்கள் தங்கியுள்ள மருத்துவமனைகள், மகப்பேறு நடைபெறுகின்ற அறைகள், பெற்றபின் தாய்மார்கள் தங்கியுள்ள இடம், புதிதாகப் பிறந்த குழந்தைகள் வைக்கப்பெற்றுள்ள மருத்துவ நிலையங்கள் போன்றவைகளுக்கு நேரில் சென்று அங்கு நடைபெறுகின்ற செயல் முறைகளையும் அறிந்து வந்தார்கள். சென்னை சூளையில் அமைந்துள்ள மாநகராட்சி மகப்பேறு நிலைய மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு நிலையம் ஆகியவைகளுக்குச் சென்று அங்குச் செயல்படுகின்ற குடும்ப நலத் திட்ட முறைகள், குழந்தைகள் வளர்ப்புப்போன்றவைகளையும் கண்டறிந்தார்கள்.

நான்காவது, ஐந்தாவது வாரத்தில் 6 நாடுகளிலிருந்து பங்குபெற்ற மருத்துவர்கள் செவிலியர்களுடன் இணைந்து

[illegible] நல ஆராய்ச்சி [illegible]



பயிற்சி பெற்றனர். இந்த நேரத்தில் அவர்களுக்குக் குறைந்த அளவில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் அதிக அளவில் கூட்டாகச் சேர்ந்து வாதிட்டு ஆராய்தல், நடுவர் ஒருவரை வைத்துக் கொண்டு குழந்தை மருத்துவம் பற்றி வாதிடுதல், புதிதாகப் பிறந்துள்ள குழந்தைகளிடம் தொடக்கத்தில் காணப்படுகின்ற சிக்கல் குணவியல்புகள் பற்றியும், தனியான-முனைப்பான கவனஞ் செலுத்திக் காத்திடும் வழிமுறைகள் குறித்தும் இந்தப் பயிற்சியின்போது கற்றுத் தரப்பட்டன. இந்தக் காலப் பகுதியில் இவைகள் ஒரு கூட்டுப்பணியாக மருத்துவர், செவிலியர் இடையே மட்டுமின்றி குழந்தைகள் நலத்தில் ஈடுபட்டுள்ள எல்லாத் துறையினரும் கூட்டாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டுமெனவும் வலியுறுத்தப்பெற்றது.



குறைமாதக் குழந்தைகள் பகுதியில் (Pre-mature Baby unit) உலக நல்வாழ்வு நிறுவன ஆய்வுரையாளர்கள்

இப்பயிற்சியில் பங்கு பெற்ற செவிலியர், மருத்துவர்களுக்குக் குழந்தை மருத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், புதிதாகப் பிறக்கின்ற குழந்தைகளைக் காத்திடும் முறைகளைத் தெரிந்து கொள்ளவும் இப்பயிற்சி பெரிதும் வாய்ப்பளித்தது. இத்தனை சிறப்பு வாய்ந்த இப்பயிற்சியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில் இந்தப் பயிற்சியின் முக்கியதத்துவம் குறித்தும், இதில் பங்குபெற்ற செவிலியர், மருத்துவர்கள் இதனை நன்கு பயன்படுத்திக்கொண்டு, பிறந்த குழந்தைகள் நலனைப் பேணிக் காப்பதிலும், கருவுற்ற தாய்மார்களின் உடல் நலனைக் கவனித்துக் கொள்ளவும், குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தவும், பெரிதும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

உலக நல்வாழ்வு நிறுவனம் நடத்திய இப்பயிற்சியின் இயக்குநராக செல்வி பியன் பூன் சுவானும் (Miss Pien Poon Suwan), குழந்தைகள் மருத்துவத்தின் ஆய்வுரையாளராகப் பேராசிரியர் 'கே' யும் (Prof. Keay), செவிலியர்களின் ஆய்வுரையாளராக செல்வி 'யங்'கும் (Miss Young) அமர்த்தப்பெற்றுப் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையின் இயக்குநரான டாக்டர் வி. பாலகோபால்ராஜ் அவர்களும் இப்பயிற்சியின் ஆய்வுரையாளராக இருந்து பயிற்சி வெற்றிகரமாக நடைபெறப் பெரிதும் உதவினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குழந்தை மருத்துவம் வெற்றி பெறுவதற்கு, இது போன்ற பயிற்சிகள் மிகவும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை!

—ஆயிரம்.



# உலகில் எதுவும் உங்களுக்கு மங்கலாகத் தெரிகிறதா?

கண்பார்வைக்கு சீரான ஒளி அத்தியாவசியமாகும். எதையும் நன்கு காண, கூசலைத்தடுக்க மற்றும் வர்ணங்களை சிதறல் இன்றித் தெளிவாகக் காண அது மிகவும் உதவுகிறது. உங்கள் வீட்டிற்குகந்த நம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்காண்டிஸென்ட், ஃப்ளுரோஸென்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.





பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்–
சீரான பார்வைக்கு

**பிலிப்ஸ்**

PHL-r 794

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்


# செழிப்புக்கு வழிகாட்டும்

# 'ஜே' பண்ணை!




'இரண்டாண்டிற்குத் திட்டமிட்டால்', நெல் பயிரிடுக!

'பத்தாண்டிற்குத் திட்டமிட்டால்', பழம் தரும் மரம் நடுக!

'நூறு ஆண்டிற்குத் திட்டமிட்டால்', மக்களுக்குக் கல்வி கற்பித்திடுக!

'நீண்ட காலத் திட்டமிடுவதில்' நம்பிக்கை கொள்க!

என்று எழுதப்பட்ட பொன்மொழியையும், அதற்கு மேலே சிரித்த முகத்துடன் உள்ள தொழில் அதிபர் திரு. எஸ். அனந்த ராமகிருஷ்ணன் அவர்களது பெரிய புகைப்படத்தையும் 'ஜே' பண்ணை அலுவலகத்திற்குச் செல்லும் யாரும் பார்த்துச் சிந்திக்காமல் இருக்க முடியாது!

'ஜே' பண்ணை, நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்குவதற்குரிய வழி முறைகளை வகுத்து, அவைகளைச் செயல்படுத்திக் காட்டி, உழவர் பெருமக்களின் வழி காட்டியாக விளங்குவதை எண்ணிப் பார்த்து யாரும் வியக்காமல் இருக்க முடியாது!

'' பல்லவ நாட்டின் நெற் களஞ்சியம் '' என்று போற்றப்
படும் பகுதியில், புதுப்பாக்கம்
என்னும் கிராமத்தில் அமைந்
துள்ள 'ஜே' பண்ணை, புத்தம்
புதிய ரகங்களைப் பற்றியும்,
நவீன சாகுபடி முறைகளைப்
பற்றியும் உழவர் பெருமக்களுக்
குத் தெளிவு ஏற்படுத்தும் ஒரு
மாதிரிப் பண்ணையாக விளங்கு
கிறது என்றால் மிகையல்ல!
200 ஏக்கர் பரப்பில் அமைந்
துள்ள 'ஜே' பண்ணை, சென்னை
யிலிருந்து 40 கிலோ மீட்டர்
தூரத்தில், சென்னை - மாமல்ல
புரம் சாலையில் அமைந்துள்ளது.
மறைந்த தொழில் அதிபர் திரு
எஸ். அனந்தராமகிருஷ்ணன்
அவர்களால் இப்பண்ணை
அமைக்கப்பெற்றது.
திரு அனந்தராமகிருஷ்ணன்
அவர்களை, அவர்களுடைய
நெருங்கிய நண்பர்கள்-குறிப்
பாக அயல் நாட்டவர் - 'ஜே'
என்றே அழைப்பது பழக்க
மாம்! எனவே, திரு அனந்த
ராமகிருஷ்ணன் அவர்களால்
அமைக்கப்பெற்ற இப்பண்ணை,
'ஜே' பண்ணை என்று வழங்கப்
படுவதுடன், பெயருக்கேற்பப்
பல வெற்றி முழக்கங்களை
பிரபல தொழிலதிபரும், திரு
அனந்தராமகிருஷ்ணன் அவர்
களின் புதல்வருமான திரு
சிவசைலம் அவர்களின் நிரு
வாகத்தில் அவ்வப்பொழுது
ஒலித்துவருகிறது!

'ஜே' பண்ணையின் முக்கிய அங்கமாக 'டாஃபி' (TAFE) எனப்படும் டிராக்டர் மற்றும் பண்ணைக் கருவிகள் நிறுவனம் (Tractor and Farm Equipment, Limited) அமைந்துள்ளது. இந்நிறுவனம் மாடுகளோடு பிணைந்த உழவுத்தொழிலை இயந்திரமயமாக்க வழிகாட்டுவதுடன், இந்நிறுவனம் தயாரித்து வழங்கும் இயந்திரங்களையும், கருவிகளைப் பற்றியும், அவைகளை இயக்குவது பற்றியும் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், வாங்குகின்றவர்களுக்கும் பல்வேறு பயிற்சிகளை அளிக்கிறது. அனு சரணை ஆராய்ச்சி, பண்ணையை இயந்திரமயமாக்குதல் ஆகிய தீவிர பணிகளின் மூலம் இந்திய வேளாண்மையை மேம்படுத்துவதே 'டாஃபி' நிறுவனத்தின் அடிப்படை இலட்சியமாக உள்ளது. இந்தியப் பொருளாதாரத்தைச் செழிக்கச் செய்ய வேண்டும், குறிப்பாக வேளா வேளாண்மை உற்பத்தியில் உபரி நிலைமை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் இந்திய உழவர் பெருமக்களுக்கும், இந்திய அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்

கும் 'டாஃபி' நிறுவனம் முழு ஒத்துழைப்பையும் அளித்து வருகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில், வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு மூலாதாரமான பலஉயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களை உழவர் பெருமக்களிடையே பிரபலப்படுத்த 'ஜே' பண்ணை சிறந்த பணியாற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




**1964**-ஆம் ஆண்டில், ''தைச்சுங் நேட்டிவ்-1'' என்ற தைவான் நாட்டு நெல் ரகத்தை புகுத்தியபோது, வேளாண்மை விஞ்ஞானிகள் பலர் ''இந்த ரகம் 'பாக்டீரியல் இலைக்கருகல்' நோயினால் எளிதில் தாக்கப்படுவதால், இந்த ரகத்திற்கு எதிர்காலம் இல்லை'' என்று கருதினர். ஆனால் 'ஜே' பண்ணை சில குறிப்பிட்ட நிலைமைகளில் 'தைச்சுங் நேட்டிவ்-1' நெல் ரகத்தைப் பயிரிடும் பொழுது பாக்டீரியல் இலைக்கருகல் நோய் தாக்காது என்றும், ஒட்டுச்சேர்ப்பதன் மூலம் புதிய ரகங்களை உருவாக்க இந்த ரகம் உதவும் என்றும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியது. இன்று புகழ்பெற்று வரும் புதிய நெல் ரகங்கள் 'தைச்சுங் நேட்டிவ்-1' என்ற ரகத்துடன் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டதே என்பதை உணரும்பொழுது, 'தைச்சுங் நேட்டிங்-1' ரகம் பற்றிய 'ஜே' பண்ணையின் முடிவுக்கு, 'உழவர் உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டதாக உள்ளது.

அதே முறையில் 'ஜே' பண்ணை தொடர்ந்து 'கருணு', 'ஐ.ஆர். 20', 'கண்ணகி' ஆகிய ரகங்களையும் அனுசரணை ஆராய்ச்சியாகப் பயிரிட்டுப் பார்த்து குறிப்பாகச் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஏற்றதென மெய்பித்துக் காட்டியது. 'கருணு' ரகத்தைப் புகுத்தியபோது, அந்த ரகத்தைப் பற்றி, பலர் கடுமையாக விமர்சித்தனர். ஆனல்'ஜே' பண்ணை, 'கருணு' செங்கை மாவட்ட குறுவைக்கு ஏற்ற ரகம் என்பதைப் பல்வேறு பரிசோதனை மூலம் எடுத்துக் காட்டியது! செங்கற்பட்டு மாவட்டத்தில் 'கருணு', 'ஐ.ஆர். 20,' 'கண்ணகி' ஆகிய ரகங்கள் பிரபலமடைந்ததற்கு 'ஜே'பண்ணையே மூலகாரணம் என்ருல் மிகையல்ல!

சில ரகங்களில் உள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டி, அந்த ரகங்கள் தமிழ்நாட்டிற்கு ஏற்றதல்ல என்பதைச் சுட்டிக் காட்டவும் 'ஜே' பண்ணை தயங்கியதில்லை! இப்பண்ணையின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே, 'டைனன்-3', 'ஐ.ஆர். 22' ஆகிய ரகங்களை விரிவினைத் திட்டத்தின் கீழ், உழவர்களுக்கு வழங்குவதைத் தமிழ்நாடு அரசு நிறுத்திவிட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 'கண்ணகி' ரகம்பற்றி 'ஜே' பண்ணையின் ஆராய்ச்சிகளின் காரணமாகவே, குறுகிய கால வயதுடைய 'கண்ணகி' ரகம், செங்கற்பட்டு மாவட்ட உழவர் பெருமக்களிடையே பெரும் புகழ்பெற்று இன்று நிலையான இடத்தைப் பெற்றுள்ளது.

இத்தகைய பயன் மிகு பணிகளைச் செய்துவரும் 'ஜே' பண்ணை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் அந்நியச் செலாவணியைப் (Foreign exchange பெருமளவில் ஈட்டுதற்கு உதவும் ஏற்றுமதிக்குகந்த குறுகிய வயதுடைய நறுமண நெல் ரகம் (Exportable, short term, scented paddy) ஒன்றை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது! இந்த ரகத்தின் பெயர் 'பூசா-33'.

## ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற நெல்

'பூசா-33' என்ற ஏற்றுமதிக்குகந்த, குறுகிய கால வயதுடைய, நறுமண நெல் ரகம், டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் (Indian Agricultural Research Institute) 'சபர்மதி' என்ற ரகத்தையும், ரத்னு' என்ற ரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதாகும். இந்த ரகம் நீண்ட சன்னமான, படிகம் போன்ற அரிசியைக் கொடுப்பதுடன், 'பாஸ்மதி'(Basmathy) அரிசியின் நறுமணத்தையும் கொண்டுள்ளது. இது கைக்குத்தலில் 65சத அரிசியையும், அரைவையில் 58 சத அரிசியையும் கொடுக்கிறது. இதன் அரிசி சமையலுக்கு ஏற்ற சிறந்த குணங்களைப் பெற்றுள்ளது. இந்த ரகம், 'குலைநோய்' (Blast) கருகல் நோய்(Blight) குருத்துப் பூச்சி (Stem borer) ஆகியவைகளின் தாக்குதலைச் சுமாராகத் தாங்கிக் கொள்ள வல்லது. ஆனல் 'கால்மிட்ஜ்' என்னும் குருத்து ஈக்களின் தாக்குதலுக்கு உள்ளாகும். ஆகவே, அவைகளைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கையாகத் தடுப்பு முறைகளைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும்.

இந்த ரகத்தை 'ஜே'பண்ணை கடந்த சொர்ணவாரி (மே முதல் செப்டம்பர் வரை) பட்டத்தில் அனுசரணை ஆராய்ச்சி திட்டத்தின்கீழ் வெற்றிகரமாகப் பயிரிட்டது.

தமிழ் நாட்டின் வருங்காலத்தை வளமாக்கவல்ல இந்த ரகத்தினைத் தமிழகமெங்கும் பரப்பிட வேண்டும் என்ற கடமை உணர்வுடன் 'ஜே' பண்ணையினர், கடந்த 13-9-1974 அன்று பத்திரிகை நிருபர்களை அன்புடன் அழைத்துச் சென்று 'பூசா-33' ரகத்தைக் காட்டினர்.

'டாஃபி' நிறுவன விளம்பர அலுவலர் திரு ஆர். வெங்கடேசுவரன் அவர்கள், 'பூசா-33'' நெல் ரகத்தைக் காணச் சென்ற பத்திரிகையாளர்களை வரவேற்று உரையாற்றினர். 'ஜே' பண்ணையில் அமைந்துள்ள 'டாஃபி' நிறுவன உற்பத்திப் பொருள் பயிற்சி நிலையத்தின் (Product Training Centre) மேலாளர், திரு ஓம்ஜி பிர் அவர்கள், அந்நிலையத்தில் தரப்படும் பயிற்சிகளைப்பற்றி விவரித்தார்.





'டாஃபி' நிறுவனத்தின் வேளாண்மைப் பொருளாதார வல்லுநர் திரு எஸ். எஸ். நாகராஜன் பி.எஸ்.சி. (வே)., எம்., எஸ்.சி., அவர்கள் 'பூசா.33' ரகத்தைப் பற்றிய விளக்கமளித்தார்.

'டாஃபி' நிறுவன வெளியீடுகளின் ஆசிரியர் குழு நிருவாகி (Editorial Executive) திரு டி.வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நன்றி தெரிவித்தார்.

பிறகு, 'பூசா-33' ரக நெல் பயிரிடப்பட்டிருந்த வயலுக்குப் பத்திரிகை நிருபர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த 'பூசா-33' ரகம், குட்டையானதாக இருந்ததைப் பத்திரிகை நிருபர்கள் கண்டனர். ஆனல் 'மூர்த்தி சிறியதானுலும் கீர்த்தி பெரியது' என்ற பழமொழிக்கிணங்க 'பூசா-33' ரகத்தின் சிறப்புக் குணங்களை, திரு எஸ்.எஸ். நாகராசன் அவர்கள் விளக்கியது கேட்டுப் பத்திரிகை நிருபர்கள் உண்மையிலேயே வியந்தனர்!

## ''பூசா-33'' நெல்லின் சிறப்புக் குணங்கள்!

'பூசா-33' நெல்கரம், பின் கண்ட 6 சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளதால், தமிழ்நாட்டிற்கு மிகவும் ஏற்றது என்று திரு எஸ். எஸ். நாகராஜன் அவர்கள் விளக்கினுர்.

1. மிகவும் குறுகியகால வயதுடையது (100 நாட்கள்-விதை முதல் விதை வரை).

2. எல்லா பருவத்திலும், நாட்டின் எல்லா இடங்களிலும் நன்கு பயிராகக்கூடிய ரகமாகும் (Cosmopolitant).

3. ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற நறுமணமுள்ள தரமான அரிசி தரவல்லது.

4. சிக்கனமாக நீர்ப்பாசனம் செய்து பயிரிடுவதற்கு ஏற்ற ரகமாகும். (வயலில் எப்பொழுதும் தண்ணீரைத் தேக்கிவைக்க வேண்டியதில்லை)

5. ஏக்கருக்கு 2 டன் வரை மகசூல் தரக்கூடியது.

6. அதிக விலைக்கு விற்கக் கூடிய அரிசியை அளிக்க வல்லது (கிலோ ரூபாய் 9 வீதம் விற்கிறது)

## ஏற்றுமதி செய்யலாம்!

''பாஸ்மதி போன்ற நறுமண அரிசிக்கு, மத்திய கிழக்கு நாடுகளில் (Middle East Countries) மிகுந்த தேவை (Good demand) உள்ளதால், பஞ்சாப், அரியானு ஆகிய இரு மாநிலங்களும் இவ்வகை அரிசி தரும் நெல் ரகங்களைப் பயிரிடுவதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. அவ்விரு மாநிலங்களும் இதில் குறிப்பிடத்தகுந்த வெற்றியும் பெற்றுள்ளன !

நீண்ட கால வயதுடைய (150 நாட்கள்) 'பாஸ்மதி' ரகம் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே ஏக்கருக்குச் சராசரியாக 500 கிலோ மகசூல் தரும். ஆனல், 'பாஸ்மதி' ரகம் தமிழ்நாட்டிற்கு ஏற்றதாய் அமையவில்லை. பாஸ்மதி அரிசிக்கு ஈடான அரிசியைத் தரவல்ல 'பூசா-33' ரகம் தமிழ்நாட்டில், 100 நாட்களில் ஏக்கருக்கு 2,000 கிலோ மகசூல் தரவல்லதாக இருப்பதால், தமிழ்நாட்டில் 'பூசா-33' ரகத்தைப் பயிரிட்டுப் பஞ்சாப், அரியானு மாநிலங்களில் 'பாஸ்மதி' அரிசியை ஏற்றுமதி செய்வது போல, தமிழ்நாடும் 'பூசா 33' அரிசியைஅயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டிடலாம்!

## தமிழகத்திற்கு ஏற்றது!

நூறு நாட்கள் வயதுடைய 'பூசா-33' என்ற ரகத்தை 'தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்' என்று புகழப்படும் தஞ்சை மாவட்டத்தில், குறுவைப் பரப்பு முழுவதிலும் வெற்றிகரமாகப் பயிரிட்டு, வடகிழக்குப் பருவ மழை துவங்கும் முன்பே அறுவடை செய்திட இயலும். தகுந்த நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாவிட்டாலும், தஞ்சை மாவட்டத்தில் கிணறுகளின் மூலம் உறுதியான பாசன வசதி கிடைக்கும் இடங்களில் குறைந்தது ஒரு இலட்சம் ஏக்கரில் 'பூசா-33' ரகத்தைப் பயிரிட முடியும் !'' என்று திரு எஸ்.எஸ். நாகராஜன் கூறினுர்.

''செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில் பெரும்பாலும் மணல் கலந்த மண்ணுக இருப்பதால், தண்ணீர் பாய்ச்சிய உடனேயே வடிந்துவிடும். ஆகவே, இவ்விரு மாவட்டங்களிலும் வயல்களில் பெரும்பாலும் தண்ணீரைத் தேக்கி வைக்க முடிவதில்லை ; மேலும் தண்ணீரைத் தேக்கி நிறுத்தி வைக்கும் அளவுக்கு அதிக தண்ணீரும் கிடைப்பதில்லை. ஆகவே, இவ்விரு மாவட்டங்களிலும் உருட்டுத் தண்ணீர் பாய்ச்சும் (Staggered irrigation) முறையே உள்ளது. இந்த மாதிரிப் பாசனத்திற்கு 'பூசா-33' ரகம் மிகவும் ஏற்றதாக இருப்பதால் செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில், சொர்ணவாரி, நவரை ஆகிய பட்டங்களில், 'பூசா-33' ரகத்தைப் பயிரிடுவது பயனுள்ள செயலாகும்''.

''மற்ற மாவட்டங்களிலும் 'பூசா-33' ரகத்தைப் பயிரிட வாய்ப்பு உள்ளது. ஆடுதுறை, கோவை, சென்னை ('ஜே' பண்ணை) ஆகிய இடங்களில்



நடைபெற்ற பரிசோதனைகளி லிருந்து தமிழகமெங்கும் உள்ள உழவர் பெருமக்கள் தங்களுடைய நிலத்தின் ஒரு பகுதியை 'பூசா-33' ரகம் பயிரிடுவதற்கென்று ஒதுக்கி-அதாவது அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர் என்று ஒதுக்கி-'பூசா-33' ரகத்தைப் பயிரிட்டால், நமது உள்நாட்டுத் தேவையை ஈடுசெய்வதுடன், வெளிநாடுகளுக்கும் பெருமளவில் ஏற்றுமதி செய்ய முடியும் என்பது தெளிவாகிறது. அரசு வியாபாரக் கழகத்தின் (State Trading Corporation) உதவியுடன் தமிழ்நாடு அரசு, 'பூசா-33' அரிசியை வெளிநாடுகளுக்கு அனுப்பி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டிட முயற்சிக்கலாம். அரிசி உற்பத்தியில் இந்தியாவிலேயே, குறிப்பிடத்தகுந்த அளவில் முன்னேற்றம் கண்டுள்ள தமிழ்நாடு அரசு, உள்நாட்டுத் தேவைக்காக மட்டுமல்லாமல், ஏற்றுமதி செய்வதற்காகவும் — எவ்வித சங்கடமும் இன்றி—'பூசா-33' அரிசி உற்பத்தி செய்ய முடியும்!'' என்று அவர் மேலும் விளக்குகிறார்.

''ஐ.ஆர். 8'' போன்ற உயர் விளைச்சல் தரும் ரகங்களுக்குப் பொதுவாக 75 கிலோ தழைச் சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் 'பூசா-33' ரகத்திற்கு 42 கிலோ தழைச் சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல்சத்து இட்டாலே போதும்! அடியுரமாக 24 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை இட்டு, மீதமுள்ள 18 கிலோ தழைச்சத்தை மூன்றாகப் பிரித்து, பயிர் கிளைக்கும் சமயம் முதல்முறையாகவும், பூங்கொத்து உருவாகும் சமயம் இரண்டாவது முறையாகவும், பூட்டை தோன்றும் சமயம் மூன்றாவது முறையாகவும் மேலுரமிடுவது இன்றியமையாததாகும். எனவே, இரசாயன உரப்பற்றாக்குறை நிலவும் இந்நேரத்திலே குறைந்த உரம் ஏற்று, அதிக இலாபம் தரும் 'பூசா-33' ரகத்தைப் பயிரிடுவது சிறந்தது'' என்று அவர் கூறினார்.

''பூசா-33 ரக விதைகளை உழவர்களுக்கு விற்பனை செய்வீர்களா ?'' என்று கேட்டதற்கு, அவர், ''இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கிடைத்த 2 கிலோ விதையை நாற்றுவிட்டு நட்டுள்ளோம். இதில் கிடைக்கும் விதையை நாற்று விட்டு, வருகிற நவரைப் பருவத்தில் நடவு செய்வோம். நவரை அறுவடையில் கிடைக்கும் விதையை உழவர்களுக்கு விற்பனை செய்யலாம் என்று எண்ணியுள்ளோம். அதற்குள் இவ்விதையை வழங்க எங்களால் முடியாது'' என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார்.

'பூசா-33' ரகத்துடன், 'பூசா-4-1-11' என்ற புதிய ரகத்தையும் 'ஜே' பண்ணை அனுசரணை ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் சாகுபடி செய்துள்ளது. 108 நாட்கள் வயதுடைய இந்த ரகம், 'பூசா-33' ரகத்தை விட குட்டையானதாக உள்ளது. ஆனால் சன்னமான அரிசியையும், அதிக மகசூலையும் தரவல்லது. இந்த ரகமும் 'ஜே' பண்ணை மூலமாக விரைவில் தமிழ்நாட்டில்பரவக் கூடும் என்று நம்பப்படுகிறது.

'டாஃபி' நிறுவனம் நவீன வேளாண்மைக் கருவிகளை புகுத்தி வருவது போல, புதிய ரகங்களையும், நவீன சாகுபடி முறைகளையும் பரப்பி வருகிறது 'ஜே' பண்ணை!

உண்மையிலேயே உழவர்களின் உயர்வுக்கு—தமிழகத்தின் செழிப்புக்கு—வழிகாட்டும் ஒருமாதிரிப் பண்ணையாக உள்ளது 'ஜே' பண்ணை என்பது, 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' தெளிவாகிறது.

—ஆர்.எம்.



## குச்சியில் கோபுரம்!

இந்த மாதாகோவில் எந்தப் பொருளால் கட்டப்பட்டது?

செங்கற்களாலா? காங்கிரீட்டாலா? இல்லை. வெறும் குச்சிகளால்! அதுவும் தீக்குச்சிகளால்!

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பார்கள். 61 வயதுள்ள கோட்லிப் கிளெங் என்னும் ஜெர்மானியர் இதைத் தயாரித்திருக்கிறார். இதற்குத் தேவைப்பட்ட தீக்குச்சிகள் 25 இலட்சம் டன்!




# கண்புரை அறுவைச் சிகிச்சை முறைகள்

— டாக்டர் ஜி. வெங்கடசாமி

உலகத்திலே ஆதிகாலத்தில் கண்சிகிச்சை முறையில் இந்தியா நாடுதான் முன்னேறி இருந்தது. ஹர்ஷர் காலத்தில் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. 150 ஆண்டுகளுக்கு முன்புகூட இந்தியக் கண் மருத்துவர்கள் ஐரோப்பாவுக்குச் சென்று கண் புரை அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் ஒரு கூர்மையான ஊசியைக் கொண்டு புரையைக் கண் விழிக்குள் தள்ளிவிடுவதுதான் சிகிச்சை முறையாக இருந்திருக்கிறது. அதில் பல கோளாறுகள் ஏற்படுவதுண்டு. புரை உள்ளே தள்ளப்படுவதால் கண் அழுத்தம் அதிகமாகும்.

150 ஆண்டுகளுக்கு முன்னால் கிருமிகளால் எவ்வாறு சீழ் உண்டாகிறதென்று கண்டுபிடிக்கப்படவில்லை. விஞ்ஞான வளர்ச்சியில் நுண்பெருக்கிக் கருவி (Microscope) கண்டு பிடிக்கப்பட்டதால் கிருமிகளைப்பற்றி நாம் அறியமுடிந்தது. கிருமிகளால் எவ்வாறு சீழ் உண்டாகிறது, எவ்வாறு பல நோய்கள் உண்டாகின்றன என்பதை அறிந்து அறுவைச் சிகிச்சையின்போது கண்ணிற்குள் இந்தக்கிருமிகள் செல்லாததற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் எல்லாமே கிருமிகள் இல்லாமல் தூய நிலையில் இருக்க வேண்டும். இதில் ஏதாவது தவறு இருந்தால்கூட சீழ் கிருமிகள் கண்ணில் சேர்ந்து சீழ் ஏற்பட்டு கண் கெட்டுவிடும். ஆதலால் அறுவைக் கூடத்தையும் அறுவைச் சிகிச்சையின்போது உபயோகிக்கும் கருவிகளையும் மிக சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு புரையை விழிக்குள் தள்ளுவதற்குப் பதிலாக கண்விழியைக் கருவிழியின் ஓரத்தில் அறுத்து புரையை வெளியே எடுக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. புரையைச் சுற்றிலும் மெல்லியதான உறை ஒன்று இருக்கிறது. உறையோடு புரையை எடுத்தல் ஒரு முறை. உறையின் ஒரு பகுதியைக்கண்ணினுள்ளே விட்டு விட்டுப்புரையை மட்டும் எடுத்துவிடுவது மற்றொரு முறை. இந்த இரண்டு முறைகளுமே எல்லா நாடுகளிலும் மருத்துவர்கள் கையாண்டு வரும் முறைகளாகும். கடந்த 20 அல்லது 30 ஆண்டுகளில் தீவிர விஞ்ஞான வளர்ச்சியினால் பல்வேறு மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கிறது. நோயாளிகளின் சௌகரியத்தை முன்னிட்டும் நல்ல பார்வை கிடைப்பதற்காகவும் அறுவைச் சிகிச்சை முறையில் பல ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள்.

அறுவைச் சிகிச்சை செய்த இடத்தை மெல்லியதான பட்டு நாலினாலோ அல்லது நரம்பு போன்ற நூலினாலோ தைத்துவிடுவது ஒரு முன்னேற்றமாகும். அறுவைச்சிகிச்சைக்கென நுணுக்கமான தனி நுண்பெருக்கிக் கருவி உள்ளது-(Microscope). கண்ணின் உறுப்புக்களை பல மடங்கு பெரியதாக இந்தக் கருவி காட்டுவதால் வெகு நுண்ணிய முறையில் அறுவை செய்த இடத்தை

# 'சேமிப்பு

## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


தைக்க முடிகிறது. அறுவை செய்த இடத்தைத் தைக்க உபயோகப்படுத்தப்படும் ஊசி 5 மில்லி மீட்டர் நீளம்தான் இருக்கும். இவ்வாறு தைக்கப்படுவதால் நோயாளி முன்போல் ஆடாமல் அசையாமல் படுத்திருக்க வேண்டியதில்லை. அறுத்த இடம் நன்றாக இணைக்கப்படுவதால் நோயாளிக்கு நடமாட முடிகிறது. முன்பெல்லாம் தையல் போடாததினால் அறுக்கப்பட்ட இடம் சரியாக இணையாமல் உள்ளே இருக்கும் ஐரிஸ் (Iris) வெளியே வருவது சகஜமாகிறது. வெளியிலிருந்து கிருமிகள் உள்ளே செல்வதற்கும் முடிந்தது. நன்றாக தைத்து சரியாக இணைக்கப்பட்டால் இந்த மாதிரிக் குறைகள் உண்டாக வழியில்லை.

கண்ணிற்குள்ளிருக்கும் வில்லை (Lens) சிலந்தி போன்ற மெல்லிய நூல்களினால் பிணைக்கப்பட்டிருக்கிறது. உறையோடு புரையை எடுப்பதனால் இந்த மெல்லிய வலையைக் கிழிக்க வேண்டும். புரையைப்பற்றிக் கொண்டு ஆட்டினால் செடியை ஆட்டும்போது வேர்கள் முறிந்து விழுவதைப் போல் இந்த மெல்லியதான நூல் போன்ற இழைகள் முறிந்துவிடும். இவ்வாறு ஆட்டி பிணைப்பைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒரு திரவத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். (Alpha-chymotrypsin) என்ற திரவத்தை ஒரு சொட்டு சிறுஞ்சியின் மூலமாக இந்தப் புரையைச் சுற்றி இருக்கும் வலையில் விழச் செய்வதால் அந்த வலை கரைந்து புரை மட்டும் தனியாக மிதக்கும். அப்பொழுது புரையை எடுத்துவிடுவது சுலபம்.

இப்பொழுது புரையை எடுப்பதற்குக் குளிர்சாதன முறையை உபயோகப்படுத்துவது ஒரு சிறந்த விஞ்ஞான முன்னேற்றமாகும். கருவிழியைச் சுற்றி அரை வட்டத்தில் அறுத்துக் கொண்டு பின்னால் புரையின் மீது ஒரு நுண்ணிய குளிர்சாதனக் கருவியை வைக்கிறார்கள். பொத்தானை அமுக்கியவுடன் இக்கருவியின் நுனி-70 டிகிரி சீதளத்திற்கு செல்கிறது. அப்பொழுது அதன் நுனியைச் சுற்றி ஐஸ் கட்டி உண்டாகிறது. புரையில் இருக்கும் நீரும் ஐஸாக மாறி இந்த நுனியை நன்றாகப் பற்றிக் கொள்கிறது. தெருவில் விற்கும் குச்சி ஐஸில் குச்சியைச் சுற்றி ஐஸ் பற்றிக் கொண்டிருப்பதைப்போல இந்த புரை அந்த சீதள-நுனியைப் பற்றிக் கொள்கிறது. அவ்வாறு பற்றிக் கொண்ட புரையை லேசாகப் பற்றி அசைத்து எடுத்துவிடலாம்.

கண் விழியினால் புரைக்குப் பின்னால் விட்ரியஸ் (Vitreous) என்னும் திரவம் இருக்கிறது. முட்டையில் வெள்ளைக் கருபோல இந்தத் திரவம் இருக்கும். இதை சிதைக்காமல் ஆட்டாமல் கண் விழியை விட்டெடுப்பதுதான் முக்கியப் பிரச்சினையாகும். புரை அகற்றப்பட்ட பின்னரும் வெள்ளைக் கரு போன்ற நிறமற்ற விட்ரியஸ் அதனிடத்திலேயே இருக்க வேண்டும். அதன்மேல் ஏதாவது ஆயுதம் பட்டாலோ கண்ணை அதிகமாக அழுத்தினாலோ அது கண்ணின் முன்பகுதிக்கு வரும். அப்பொழுது பல கோளாறுகள் ஏற்படும். எவ்வாறாவது புரையை எடுத்துவிடுவது என்பது கருத்தல்ல. கண்ணினோடு இருக்கும் இதர பாகங்களைத் தொடாமல் அசைக்காமல் புரையை மட்டும் வெளியில் எடுப்பதுதான் நுட்பமானப் பணியாகும். இதில்தான் தேர்ச்சி பெற்ற மருத்துவரின் சாதனையைப் பார்க்கலாம்.

புரை அகற்றப்பட்ட பின்னர் அரைவட்டமாக ஆக்கப்பட்டுள்ள கருவிழியைத் தைக்க வேண்டும். சிறந்த முறையில் ஏற்றத்தாழ்வில்லாமல் தைப்பதுதான் கஷ்டமான பணியாகும். அறுவை நுண்பெருக்கிக் கருவி வந்த பின்னர் இவ்வாறு தைப்பதற்கென் நுண்ணிய கருவிகள் வந்துள்ளன. இந்தியாவில் இன்னும் இவை தயார் செய்யப்படவில்லை. சாதாரணமாக அறுவைச் சிகிச்சைக்கு அறுக்கப்படும் நீளம் சுமார் 17 மில்லி மீட்டராகும். அறுக்கப்படும் நீளம் குறையக் குறைய குணமாகும் காலமும் குறையும். இந்தக் கருத்தை மனத்தில் கொண்டு கடந்த நாலைந்து ஆண்டுகளில் புரை அறுவைச் சிகிச்சையில் நூதன முறைகளைக் கடைபிடித்து வருகிறார்கள்.

புரையின் அகலம் சுமார் 10 மில்லி மீட்டர் ஆகும். 10 மில்லி மீட்டர் நீளமும் 5 மில்லி மீட்டர் கனமும் உள்ள புரையை எடுப்பதற்கு அரை வட்டமான வழி செய்யவேண்டுமானால் 17 மில்லி மீட்டர் நீளமுள்ள இடத்தை அறுக்க வேண்டி உள்ளது. இதற்குப் பதிலாக வில்லையைப் பொடியாக்கி சிறு துவாரத்தின் வழியாக எடுத்துவிட்டால் மருத்துவமனையில் இருக்கும் காலத்தை மிகவும் குறைத்து விடலாம். இதற்கு 2.5 மில்லி மீட்டர் நீளமுள்ள இடத்தை மட்டும் அறுத்து அதன் வழியாக ஒரு ஊசியை உள்ளே புகுத்தி ஒலி அலைகளை (Ultrasonic) இந்த ஊசி வழியாகப் புகுத்தினால் புரை உடைக்கப்பட்டு சிறு துகள்களாக மாறுகிறது. இந்தத் துகள்களை சிறுஞ்சி மூலமாக வெளியே எடுத்து விடலாம். இந்த விதமான அறுவைச் சிகிச்சை முறை புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்காவில் செய்யப்பட்டு வருகிறது. ஒரு வாரம் மருத்துவமனையில் தங்குவதற்குப் பதிலாக 24 மணி நேரத்தில் நோயாளி வீட்டிற்குச் சென்று விடலாம். ஆறு வாரங்கள் ஓய்வெடுத்து வேலைக்குச் செல்பவர்கள் இந்த புதிய அறுவைச் சிகிச்சையின் மூலம் ஒரு வாரத்தில் வேலைக்குச் செல்லலாம். இந்தக் கருவியின் விலை சுமார் 2 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆகிறது. இது நம் நாட்டில் எளிதில் சாத்தியமாகக்கூடிய முறையில் இல்லை. இந்த முறையில் மலிவான விலையில் கிடைக்கக்கூடிய கருவிகளை உபயோகப்படுத்திச் சாதனைகள் பெற மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை முயன்றுவருகிறது.

கண் புரை அறுவைச் சிகிச்சையில் கடந்த 15 ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முறைகள் :

1. அறுவைச் சிகிச்சை செய்வதற்கு புரை முற்றும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. அவரவர்கள் செய்யும் வேலையைச் செய்ய எப்பொழுது சிரமம்

### சாயம் பூசும் புதிய இயந்திரம்!

ஆடு, மாடு போன்ற விலங்குகளின் ரோமத்தையும், கம்பளி இழைகளையும் ஒரே சீராகக் கன்னங்கரேலென்ற நிறத்தில் மாற்றக்கூடிய செய்முறை ஒன்றை, சென்னையில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்திருக்கிறது.

இந்த வகையில் நிறம் ஏற்றப்படும் ரோமமும், கம்பளி இழையும் மென்மையாகவும், பளபளப்பாகவும் காணப்படுகின்றன. நிறம் நீடித்து நிற்கிறது. ஒளி, ஈரம், சலவைச் சோப்பு கலந்த சுடு நீர் போன்றவை இந்த நிறத்தைப் பாதிப்பதில்லை.

வெளிநாடுகளில், கரு நிற ரோமத்தையும், கம்பளத்தையும் ஏற்றுமதி செய்து ஏராளமாக வெளிச் செலாவணி ஈட்ட இந்த முறை உதவும்.

ஏற்படுகிறதோ அப்பொழுதே செய்யலாம்.

2. நோயாளியும் சுத்தமாக இருந்து அறுவை முறைகளும் கிருமியற்ற முறையில் செய்யப் பட்டால் கோளாறுகள் ஏற்படு வது மிகமிகக் குறைவாகும். நல்ல பார்வையை திரும்பப் பெற லாம் என்பதைத் திட்டவட்ட மாகச் சொல்லலாம்.

3. நுண்பெருக்கிக் கருவிஅறுத்த இடத்தைத் தைப்பதற்கு நல்ல ஊசி, நுண்ணிய கருவிகள் ஆகிய வைகளை உபயோகிக்கும் முறை கள் நம் மருத்துவர்களுக்கு மட் டும் அளிக்கப்பட்டால் நம் புரை அறுவைச் சிகிச்சை முறை இன் னும் பலன் தரும்.

4. இதில் இன்னும் மக்களின் வசதியை முன்னிட்டுப் பல பல முறைகளில் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி உள்ளது. இதற்கு ஆராய்ச்சி செய்யவும் வெளி நாட்டிலிருந்து பல கருவி கள் வாங்கவும் பொதுமக்கள் மன முவந்து நிதிஅளித்தல் நலமாகும்.

தமிழ்நாட்டில் மட்டும் கண் களில் புரை உண்டாகி, பார்வை குறைந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 7 அல்லது 8 இலட்சம் ஆகும். இவர்கள் நகரங்களில் வாழ்ந்தாலும் குக்கிராமங்களில் வாழ்ந்தாலும் என்ன பணி செய் தாலும் நல்ல பார்வை பெற்றி ருப்பது அத்தியாவசியமாகும். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி திட்டத்தின்கீழ் ஒளி இழந்த இந்த மக்களுக்கு ஒளி பெற நிறைய வாய்ப்பிருக்கிறது. உலகிலேயே இதுபோன்ற திட் டம் எங்கும் நடந்ததில்லை. இந்தி யாவில் இதர மாநிலங்களுக்கும் இதர நாடுகளுக்கும் ஒரு முன் னேடியாக இருக்கிறது இந்தத் திட்டம். இந்தத் திட்டம் வெற்றி பெற்ருல் குறைந்த செலவில் பெரும்பாலான மக்களுக்கு சிறந்த சேவை அளிக்க முடி யும். இவ்வாறு இவ்வளவு பேருக்கும் மருத்துவ மனைகள் கட்ட வேண்டுமென்ருல் பல ஆண்டுகள் ஆகும். ஏராளமான பணமும் செலவாகும். இன்னும் குறைந்தது 30 ஆண்டுகளாகும். அதுவரை அவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள். அவர் களுடைய வாழ்நாளிலேயே இப் பொழுதுள்ள நிதியை வைத்துக் கொண்டு பார்வை அளிக்க வேண்டுமாளுல் இந்தத் திட்டத்தி ளுல்தான் முடியும். மக்கள் யாவரும் இந்தத் திட்டத்தின் முக் கியத்துவத்தை உணர்ந்து அவர் களால் இயன்ற உதவிகளை அளிக்க முன் வரவேண்டும்.

வாக்குப் பதிவுசெய்ய தானே இயங்கும் புதுவகை இயந்திரம் ஒன்று பெங்களூரிலுள்ள இந் தியன் டெலிபோன் தொழிற் சாலையில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

இதில் பகிரங்க வாக்கும் பதிவு செய்யலாம்; இரகசிய வாக்கும் பதிவு செய்யலாம்; வாக்கு அளிப்பவர்களின் புகைப்படங்களையும் கூடப் பதிவு செய்யலாம்.

பேட்டரி மூலமோ, மின் சாரம் மூலமோ இதை இயக் கலாம்.

சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்தில்ஒரு விளுடி யில் 600 வாக்குகளை இது எண்ணிவிடும்.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண். 151.

சேலம்-1. தொலைபேசி எண் 2402

கிளைகள் :—நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஒமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம் ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 323 லட்சம் நடைமுறை மூலதனம் 1690 லட்சம்

வட்டி விகித அட்டவணை 23-7-'74 தேதி முதல்

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| | ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | 3½% |
| சேவிங்ஸ் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | 3½% |
| பிக்செட் டெபாசிட்டுகள் : | ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு | |
| | 1. 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் | 5½% |
| | 2. 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள்... | 6% |
| | 3. 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள்... | 7% |
| | 4. 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள். | 8% |
| | 5. 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள். | 9% |
| | 6. ஐந்து வருடங்களுக்கு மேல் ... | 10% |

நடப்புக் கணக்கு ½% சேமிப்பு கணக்கு 5%

ரூ. 5,000-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க!

எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
தலைவர்





மணிக் கூண்டு கடியாரம் இரவு மணி பன்னிரண்டு அடித்துவிட்டு ஓய்ந்தது.

எங்கும் மை இருட்டு!

ஒரே அமைதி!

அப்போது—

இரண்டு உருவங்கள் அந்தக் கரடிக் குகை எஸ்டேட் பங்களாவிற்குள் நுழைந்து . . . .

என்ன செய்தன?

ஒன்றும் செய்யவில்லை!

அவை ஏதாவது செய்வதற்கு இது ஒன்றும் துப்பறியும் கதை இல்லையே!

கரடிக் குகை எஸ்டேட் என்று ஒன்று இருக்கிறது, அந்த எஸ்டேட்டில் ஒரு அழகிய பங்களா இருக்கிறது, அந்தப் பங்களாவிற்குப் பக்கத்தில் ஒரு கரடிக் குகை இருக் கிறது . . . .

ஆமாம். இந்த எஸ்டேட், பங்களா, கரடிக்குகை எல்லாம் எங்கே இருக்கிறது? அதைச் சொல்லுங்கள்!

பூமியிலிருந்து 5,020 அடி உயரத்தில் இருக்கிறது!

என்ன சார் 'கரடி' விடுகி றீர்கள்?

கரடி இல்லை. உண்மைக் கதையைத்தான் சொல்கி றேன்.

சேலம் மாவட்டத்திலுள்ள ஏர்க்காடு மலை வளைவுப் பாதையில் 'ஜீப்' வளைந்து வளைந்து செல்கிறது. ஒரு பக்கம் மலைப் பாறையும், மறுபக்கம் பச்சைப்



கரடிக்குகை எஸ்டேட் பங்களா இதுதான்!

பசேலென்ற மரஞ் செடி கொடிகள் மட்டுமே கண்ணுக்குத் தெரிகின்றன.

ஜீப் மேலே மேலே சென்று கொண்டேயிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகக் குளுமை நம் உடலைச் சில்லிட வைக்கிறது . . இப்போது மூடுபனி முழுதுமாக வந்து நம் உடலை முற்றுகையிடுகின்றது. வெய்யிலின் தகிப்பிலிருந்து வந்த நமக்குக் குளுமை இதமாக இருந்தாலும், கொஞ்சம் நடுக்கம் இருப்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்!

ஏர்க்காடு மலையிலே எழில் மிகு இடங்கள்—அழகிய ஏரி, அண்ணா பூங்கா, சுற்றுலா மாளிகை, பாவையின் பீடம், சேர்வராயன் குகைக் கோயில், கிளியூர் அருவி, பகோடா பாயிண்ட், காவேரி பீக், லூப் ரோடு, மாண்ட்ஃபோர்டு பள்ளி, தேயிலைத் தோட்டங்கள்—இவற்றைப் பற்றியெல்லாம் எழுதிக் கொண்டே போகலாம். ஆனால், நாம் எடுத்துக்கொண்ட பொருளோ



திரு. ஆர். சாம்பசிவம்

அந்தக் கரடிக் குகை எஸ்டேட் பங்களா தானே? வாருங்கள், அங்கே போவோம்!

அழகிய மலர்கள், அடர்ந்த மரஞ் செடி கொடிகள். எங்கும் பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகள். இதன் நடுவே காட்சியளிக்கிறது, அந்த அழகிய பங்களா!

பங்களாவுக்குப் பின்னும் மலை முடி தெரிகிறது. வெண்ணிறப் புகை போன்ற பனிப் படலங்கள் வீட்டைச் சுற்றி அலை மோதுகின்றன. அதோடு மழையும் வெளுத்து வாங்குகிறது. அங்கிருந்து கீழே பார்க்கிறோம். மலைப்பாதையையும் அல்லவா அந்தப் படலம் வழி மறித்திருக்கிறது!

"வாங்க, வணக்கம்!"

புன்னகையுடன் அழைக்கிறார் அந்தப் பங்களாவில் வசிக்கும் திரு. ஆர். சாம்பசிவம்.

பங்களாவின் புற அழகை ரசித்துக் கொண்டிருந்த நாங்கள் உள்ளே நுழைகிறோம்.

"இங்கே கரடிக் குகை இருக்கிறதாமே?"

"ஆமாம். அதற்குப் பக்கத்தில்தானே நாங்கள் வசிக்கிறோம். . .நீங்கள் அங்கேபோய் பார்க்க வேண்டுமா?" என்று அவர் கேட்டதும், நாங்கள் 'ஆமாம்' என்று தலையசைத்தோம். உடனே அவர் ஒரு டார்ச் லைட்டை எடுத்துத் தம்முடன் வசிக்கும் ஒரு இளைஞரிடம் கொடுத்து எங்களுக்கு 'வழிகாட்டி'யாக அனுப்பினார்.

"பார்த்துப் போங்கள் ஒரே இருட்டாக இருக்கும் . . . ."

என்றும் அவர் சொல்லி வைக்கத் தவறவில்லை.

'இந்தக் குகையில் உண்மையாகவே கரடி இருக்குமோ?' என்ற இலேசான பயம் உள்ளுக்குள் இருந்தது! குளிர் வேறு—கேட்க வேண்டுமா பயத்தை வெளிக்காட்ட!

"உள்ளே 100 அடி வரைக்கும்தான் போக முடியும். அதற்கு இடையில் வழி சரியாகத் தெரியாது. குனிந்தும் படுத்த நிலையிலும் செல்ல வேண்டியிருக்கும். வௌவால்கள் நிறைய இருக்கின்றன . . . ஜாக்கிரதை!" என்று இன்னும்

கரடிக் குகையில் இருந்தது இந்தக் கரடி அல்ல!





கரடிக் குகை—இந்த இடத்தில்தான் கரடி வசித்து வந்ததாம்.

பயமுறுத்தி விட்டார் திரு. சாம்பசிவம்.

பெரிய மலைப் பாறைகளுக்கு இடையேஒரு சிறு இடைவெளி. அதுதான் கரடிக் குகையின் வாயில்!

"இதுதான் கரடிக் குகை!" என்று டார்ச்சை கையிலேந்திய அவர் குனிந்து உள்ளே நுழைந்தார். நாங்கள் தைரியமாக அவருக்குப் பின்னால் குனிந்து குனிந்து இறங்கிச் சென்றோம்.

எங்களுடன் வந்த புகைப் படக்காரரோ "காமிரா' இருக்கிறதே எப்படிக் குனிந்து குனிந்து வர முடியும் . .?" என்று காமிராவை இறுகப் பற்றிக் கொண்டார்.

அப்பாடா! ஒரு இடத்தில் வந்து நிமிர்ந்து நின்றோம்!

"இந்த இடத்தில்தான் அந்தக் கரடி படுத்துக் கொண்டிருக்குமாம்" என்று நாங்கள் நின்றிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினார் எங்களுடன் வந்த இளைஞர்.

சுமார் 15 அடி வரைதான் நாங்கள் சென்றோம். ஒரே இருள். வௌவால்கள் தலைக்கு மேலே சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன!

"குகைதான் பார்த்துவிட்டோமே. இன்னும் போய்ப் பார்க்க வேண்டுமா என்ன?" என்று நான் கேட்டதும் அனைவரும் 'கொல்' லென்று சிரித்துக் கொண்டே முன்னே வைத்த காலைப் பின்னே வைத்தனர்.

"இந்தக் குகைக்குள் நான் 100 அடி வரை சென்றிருக்கிறேன். மேலும் இதனுள்ளே செல்வதற்குப் பிராணவாயு தேவைப்படும் என்கிறார்கள். சிலர் மலைப் பாம்புகள் கூட இங்கே இருக்கின்றன என்கிறார்கள். இந்தக் குகைக்குள் சென்றால் மேலே உள்ள சேர்வராயன் கோயிலுக்குப் போகலாம் என்றும் சொல்கிறார்கள் . . ." என்று சொல்லிக் கொண்டே வந்தார் அந்த இளைஞர். நாங்கள் அனைவரும் வெளியே வந்தோம். மழை விட்டிருந்தது. ஆனால், குளிர்தான் விட்டபாடில்லை!

"என்ன? குகை எல்லாம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டுக் கொண்டே எங்களை வரவேற்றார் திரு. சாம்பசிவம்.

பங்களாவிற்குள் நுழைந்த எங்களுக்கு, குளிருக்கு இதமான சூடான தேநீர் தயாராக இருந்தது. நாங்கள் சுற்று முற்றும் கண்ணோட்டம் விட்டோம். மிகப் பழைமையான அந்த பங்களாவைப் புதுப்பித்திருந்தார் அதன் சொந்தக்காரர்.



"இந்தப் பங்களாவைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டதற்கு "அதுவா அது ஒரு கதை!" என்றார் தேநீரைச் சுவைத்துக் கொண்டே திரு. சாம்பசிவம்.

இந்தப் பங்களா 1868-ல் கட்டப்பட்டது. அதாவது இதைக் கட்டி நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. 1888 வெளியான "The early History of Yercaud" என்னும் நூலில் பிரான்சிஸ்கா எச். வில்சன் என்பவர் இந்தப் பங்களாவைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார். இந்தப் பங்களா ஒரு காலத்தில் பிரபல குற்றவியல் வழக்குரைஞராயிருந்த நார்ட்டன் என்ற ஆங்கிலேயருக்குச் சொந்தமாக இருந்தது. அதனால் இதை 'நார்ட்டன் பங்களா' என்றும் அழைப்பர்.

இந்தப் பங்களாவில் இதற்கு முன் சுப்பராயலு என்பவர் வசித்து வந்தாராம். இவரது உறவினர் ஒருவர் விமான ஓட்டியாக இருந்தார்.

ஒரு நாள் அந்த விமானத்தில் இருவரும் ஏர்க்காட்டு மலைக்கு வந்து வட்டமிட்டனர். விமானத்தை மலையில் எப்படியாவது இறக்க வேண்டும் என்ற வீராப்புடன் இறக்க முயன்றனர்.

அப்போது—

எதிர்பாராத விதமாக மலை முகட்டில் பயங்கரமாக விமானம் மோதி நொறுங்கியது! அதிலிருந்த இருவரின் கதி?

அதிசயமாக அவர்கள் தப்பிப் பிழைத்துவிட்டனர்!

... இந்தப் பங்களாவின் சொந்தக்காரர் இதை வாங்குவதற்கு முன் பலர் ''இந்த வீட்டிற்கா குடி வரப்போகிறீர்கள்? இது பேய் வீடு . . .'' என்றெல்லாம் பயமுறுத்தினர்களாம்.

''இரவில் ஒரு அறையில் படுத்துக் காலையில் எழுந்து பார்த்தால், வேறொரு அறையில் இருப்பீர்கள்! இதற்கு முன் இப்படி நடந்திருக்கிறது . . .'' இப்படிச் சிலர், இவர் இங்கே வரவேண்டாம் என்று அச்சுறுத்தினராம்.

ஆனால், இவரோ எதற்கும் மசியவில்லை.

'பேயாவது, பிசாசாவது... அதெல்லாம் நான் இங்கே வந்தால் ஓடிப் போய் விடும் . . .!'' என்று அடித்துப் பேசிப் 'புதுமனை புகுவிழா' நடத்தி விட்டார்!

இவர் ஏர்க்காட்டிலுள்ள நூலகம், விளையாட்டுக் குழு போன்றவற்றில் உறுப்பினராக இருக்கிறார். தோட்டக் கலையில் மிகுந்த ஆர்வம் காட்டும் இவர், வித விதமான செடி வகைகளை வளர்ப்பதைப் பொழுது போக்காக வைத்துக் கொண்டுள்ளார். இவரது பங்களாவைச் சுற்றி வளர்ந்துள்ள ஒரு சில செடிகளின் இலைகள் மஞ்சள், நீலம், சிவப்பு நிறங்களில் அடிக்கடி வண்ணம் மாறுகின்றனவாம்!

40 ஏக்கர் பரப்பளவில், இயற்கை எழில் மண்டிக் கிடக்கும் சூழலில் அமைந்துள்ள இந்தப் பங்களாவின் விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 37,500.

''வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம் வாருங்கள்!'' என்று உள்ளே மேலும் சில இடங்களுக்கு அழைத்துச் செல்கிறார்.

நிறைய மலர்ச் செடி வகைகளைப் பார்த்துவிட்டு வந்த நமக்கு, ஒரு அறையில் வைக்கப்பட்டிருந்த ஒரு பூந்தொட்டி ஒரு விநாடி நம்மை நிற்க வைத்து விடுகிறது.

''இது என்ன செடி? மிக அழகாக இருக்கிறதே!''

''இதுவா? முட்டைச் செடி!'' என்று அவர் சிரித்துக் கொண்டே சொன்னதும் எங்கள் கண்ணோட்டம் அதன் மீது பாய்ந்தது.



முட்டைச் செடி!

முட்டை ஓடுகள் அந்தச் செடியின் ஒவ்வொரு கிளைகளிலும் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு முட்டைக்கும் ஒவ்வொரு வண்ணம் தீட்டப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது அவை வண்ண விளக்குகள் போல காட்சியளித்தன.

அடுத்த அறைக்குச் செல்கிறோம். சுவற்றில் உறையுடன் கூடிய பெரிய துப்பாக்கி ஒன்று மாட்டப்பட்டிருக்கிறது.

''நீங்கள் துப்பாக்கி சுடுவதில் கூட வல்லவர் போலிருக்கிறதே?'' என்று கேட்டதற்கு, ''அதெல்லாம் ஒன்றுமில்லை. இரவு நேரங்களில் காட்டுப் பன்றிகள் கூட்டமாக வந்து இந்தச் செடிகளையெல்லாம் பாழாக்கி விடுகின்றன . . . அவைகளைச் சுடுவதற்குத்தான் இந்தத் துப்பாக்கி . . கடந்த வாரம் கூட ஆறேழு காட்டுப் பன்றிகளைச் சுட்டிருக்கிறேன்!'' என்று அவர் சொன்னதும், இவ்வளவு தொல்லைகளுக்கும் இடையில் — பனி, மழையில் எப்படித்தான் இந்தத் தனி பங்களாவில் வசிக்கிறாரோ என்று நாங்கள் வியந்தோம்.

ஏர்க்காட்டுக்கு வருபவர்கள் இந்தச் சரடிக் குகைக்குப் பக்கத்தில் இருக்கும் இந்தப் பழம் பெரும் பங்களாவையும் பார்க்கத் தவறுவதில்லை — அனுமதியுடன்தான்!

—பி. வி. ஜி.

பங்களாவிலுள்ள ஒரு தமிழ்ப்பாவை!



# சென்னையில் வள்ளுவர் கோட்டம்!

வையகத்துக்கு வாழும் நெறி வகுத்து அளித்த வான் புகழ் வள்ளுவருக்குச் சென்னை நகரில் மாபெரும் நினைவுச் சின்னமாக வள்ளுவர் கோட்டத்தை நமது அரசு அமைத்து வருகிறது.

வள்ளுவர் கோட்டம், பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த நுங்கம்பாக்கம் பகுதியில் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

வள்ளுவர் கோட்டத்தின் கால்கோள் விழா, கடந்த 18—9—74 அன்று சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரைத் திடலில் நடைபெற்றது.

விழாவுக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் பொதுப்பணித் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் வரவேற்றார்.

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

வள்ளுவர் கோட்டம் கால்கோள் விழாப் பணியினை முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வள்ளுவர் கோட்டம் நுங்கம்பாக்கம் ஏரிப் பகுதியில் ஏழு ஏக்கர் பரப்புள்ள திடலில் அமைக்கப்படுகிறது. இங்கு ஐம்பது அடி முதல் 60 அடியில் பாறைகிடைப்பதால் கட்டடத்தின் கடைகால் 50 அடிக்குக் குறைவில்லாமல் எடுக்கப்படும்.

900 அடி நீளமும் 350 அடி அகலமும் கொண்ட இந்த இடத்தில் 400 அடி நீளமும் 130 அடி அகலமும் கொண்ட இடத்தில் கோட்டம் அமைக்கப்படுகிறது.

கோட்டம் பற்றிய ஏனைய விவரங்கள் :—

வள்ளுவர் கோட்டம் தமிழகத் தேர்களில் சிறப்பு வாய்ந்த திருவாரூர்த் தேரின் அமைப்பியல்புகளைப் பெற்று இருக்கும். 101 அடி உயரம் உள்ள இத் தேர், நயமான கருங்கல்லால் கட்டப்படும். தேரின் அணி மிக்க அடிப்பகுதிக்கும் இடைப் பகுதிக்கும் கருங்கல்லும், மேற்கோப்பிற்குச் சிவப்புக் கல்லும் தலைப்பகுதியான சிகரத்திற்கு வெள்ளைக் கல்லும் பயன்படுத்தப்படும்.

திருவண்ணாமலையில் 'வைரக் குன்று' என்ற பாறையில் கருங்கல் எடுக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

தேரின் அடிப் பகுதியில் உட்பட்ட அடுக்குகளில் திருவள்ளுவரின் திருவுருவம் 133 புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பெறும். ஒவ்வொன்றும் திருக்குறளின் ஓர் அதிகாரத்தை உருவகப்படுத்தும். பிற இடங்களில் பொதிகை, பூமுனைகள், கருக்கு வேலைகள், சிறு தூண்கள் மற்றும் நுணுக்கமான அணிகள் இடம் பெறும்.

தேர் முட்டியின் தளத்தில் மலர்ப் பீடம் அமைத்து அதன் மேல், குறள் நெறியை உலகுக்கு எடுத்தோதும் பாவனையில் நின்ற கோலத்தில் திருவள்ளுவரின் திருவுருவம் ஒன்று கல்லிலே செய்து அமைக்கப்படும்.

முப்பாலின் உருவகமான இத்தேரினை மூன்று யானைகள் நடத்திச் செல்வது போல— தேரின் முன் பக்கத்தில் யானைகள் கல்லிலேயே செய்தமைக்கப்பெறும். நடுவில் 10 அடி உயரமுள்ள யானையும், இருமருங்கில் 7 அடி உயரமுள்ள இரு யானைகளும் செய்தமைக்கப்படும்.



வள்ளுவர் கோட்டம் சிறப்புப்பணிகளை முதல்வர் கலைஞர் தொடங்கி வைக்கிறார்.



வள்ளுவர் கோட்டம் கால்கோள் விழாவில் பங்கேற்ற முதல்வர் கலைஞர், கல்வியமைச்சர் நாவலர், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர், அமைச்சர் ப. உ. சண்முகம், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் ஆகியோர்.

திருவாரூர்த் தேரின் தனிச் சிறப்பு—அழகு— அத்தேரின் சிகரப் பகுதியின் அமைப்பில் விளங்கும். தலைப் பகுதியான இச் சிகரம் அகன்று விரிந்து உயர்ந்துள்ளதால் தேரோடும் போது இப் பகுதி சிலிர்த்து ஆடிவரும். இக்காட்சி காண் போரின் உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும். திருவாரூர்த் தேரின் அழகை இவ்வகையிலே காணலாம்.

தேர் அமைப்பைக் கட்டட மாகச் செய்து, கட்டடத்தின் பக்கங்களில் சக்கரங்களை இணைத்துச் செய்வதே இன்று வரை தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் சிற்பிகள் அமைத்துள்ளார்கள். ஆனால் இங்கு மரத் தேரின் அமைப்பை அப்படியே கல்லிலே அமைத் துக் காட்டுவது சிற்ப வரலாற் றில் ஒரு புதுமையே! இதனைச் சாதிக்க இன்றைய தொழில் நுட்ப அறிவு பயன்படுகிறது.




வள்ளுவர் கோட்டம் மாதிரி வடிவம்.



வள்ளுவர் கோட்டமான தேரின் முன் புறத்தில் 100 அடி அகலமும், 220 அடி நீள மும் கொண்ட பெருமன்றம் ஒன்று அமைக்கப்படும். தென் கிழக்கு ஆசியாக் கண்டத்திலே தூண்கள் இன்றி, கான்கிரிட் அமைத்துக் கட்டப்படும் முதல் மன்றம் இதுவேயாகும். உலகம் முழுவதும் பரந்து விரிந்த புகழ் கொண்ட குறளுக்கு — வள்ளுவன் புக ழுக்குச் சின்னமாக இம்மன்றம் நிற்கும்.

இம்மன்றத்தைச் சுற்றி அணி பொருந்திய தூண்களால் தாக்கப்பெற்ற தாழ்வாரம் அமைக்கப்படும். ஒவ்வொரு பக்கத்திலும் 3 வாயில்கள் அமையும். வாயில்களிலும், தோரண கம்பங்களிலும் அமைப்புகள் அணியூட்டுவதாக அமையும்.

கவரில் 1,330 குறளும் கல் வெட்டுக்களாக அமைக்கப் பெறும்.

மன்றத்தின் தட்டோட்டில் (மேல் தளத்தில்) பூங்காவும், நீர்த்தடாகமும், நடைபாதை யும், மக்கள் கூடுவதற்கான இடவசதியும் செய்யப்படும்.

முகப்பு :

மன்றத்திற்கு மேலும் முன் புறத்தில் இருமருங்கிலும் ஏறி இறங்கிச் செல்வதற்கேற்ற வகையில் படிகள் அமைக்கப் படும். அணி மிக்க கைப்பிடிச் சுவர்கள் அணி பெற அமையும். படிக்கட்டுகளுக்கு இடையில் சிறந்த இடம் ஒன்று அமை கிறது.

படி ஏறுமிடத்தில் சிறு முகப்பு மண்டபங்கள் அமை யும். நடு மண்டபம் ஒன்று இதற்கிடையில் அமையும். இவ்வழி சென்றால் சிறந்த முற்றத்தை அடைந்து, இரு தலைவாயிலை மன்றத்தின் அடையலாம். வாயிலில் சுற் றுப் படிகள் அமையும், சிறந்த முற்றத்தில் இருமருங்கிலும் யானைகள் நின்று வரவேற்கும்.



வள்ளுவர் கோட்டத்தின் சிற்பப் பணிகளைச் சிற்பிகள் தொடங்குகிறார்கள்.

பூங்கா :

வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி வண்ணப் பூங்கா அமைக்கப்படும். இதில் மகிழம், நாகலிங்கம், சரக் கொன்றை, தென்னை, பாக்கு, மலர்ச் செடிகள், நறுமணம் பரப்பும் செடி கொடிகளும் இடம் பெறும்.

சுற்றுச் சுவர் :

நான்கு திசைகளிலிருந்தும் மக்கள் வந்து பார்த்து மகிழ்ந் திட நான்கு தோரண வாயில் கள் அமைக்கப்படும். கோட் டத்தையும் பூங்காவையும் சுற்றிச் சிறு சுவர் ஒன்று அமைக்கப்படும்.

முப்பாலை உணர்த்தும் வண்ணம்:

(1) தேர் மூன்று அடுக்கு களாக — மூவண்ணங்களில் அமையும்.

(2) மூன்று யானைகள் தேரினை இழுத்து நிற்கும்.

(3) முப்பால் 133 அதிகாரங் களைக் கொண்டிருப்பதை உணர்த்த 133 படிகள் அமை யும்.

(4) திருமன்றத்தின் பக்கங் களில் மும்மூன்று வாயில்கள்.

(5) முகப்பில் மூன்று மண்ட பங்கள்.

(6) பெருமன்றத்தின் கைப் பிடிச் சுவரினை ஒட்டியதாக 1,330 கட்டைத் தூண்கள் அமையும். இதில் 1,330 விளக்குகள் பொருத்தப்படும்.

வேலை வாய்ப்பு :

வள்ளுவர் கோட்டம் பணி யின் மூலம் ஐநூறு சிற்பிகளுக் கும் ஆயிரம் தொழிலாளர் களுக்கும் வேலை வாய்ப்பு அளிக் கப்படும்.

வள்ளுவர் கோட்டப் பணி கள் 1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

# கேளுங்கள்? கொடுக்கப்படும்!

‘ஆர்.எம்.’




வினா: 16-8-74 தேதிய ‘தமிழரசு’ இதழில் கேளுங்கள் கொடுக்கப்படும் பகுதியில் பிண்ணாக்கில் உள்ள சத்துப் பொருள்களின் விகிதம் அளித்துள்ளீர்கள். அதில் 100 கிலோ ஆமணக்கு பிண்ணாக்கில் 26.5 கிலோ அமோனியம் சல்பேட்-!-10 கிலோ சூப்பர் பாஸ்பேட் உள்ளது எனப் பதில் அளிக்கப் பட்டுள்ளது. அது புரியவில்லை. 100 கிலோ பிண்ணாக்கில் தழைச்சத்து, மணிச்சத்து சத விகிதம் கொடுக்கவும்.

பிண்ணாக்கை அடியுரமாக இடுவதா? அல்லது மேல் உரமாக இடுவதா? எந்தெந்த தருணங்களில் இடுவதென்று தெரிவிக்கவும். அடியுரமாக இடுவதென்றால், மணிச்சத்து அதிகமாக உள்ள செயற்கை உரம் எந்த அளவு சேர்த்து இட வேண்டும்? பிண்ணாக்கில் உள்ள சத்து எவ்வளவு காலத்திற்குள் பயிருக்குக் கிடைக்கும்?

தங்கள் பரிந்துரைப்படி தான், தாளடிப் பயிருக்கு உரமிட வேண்டும். எனவே, அதற்கு ஏதுவாக, விரைவில் பதில் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—ப. பழனிச்சாமி,
கச்சமங்கலம்,
தஞ்சை மாவட்டம்.

விடை: 100 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கில் தழைச்சத்து, மணிச்சத்து சதவிகிதம் கொடுக்கும்படி கேட்டுள்ளீர்கள். 16-8-74 தேதிய ‘தமிழரசு’ இதழிலேயே பக்கம் 41-ல் 3-வது கலத்தில், ஆமணக்குப் பிண்ணாக்கில் உள்ள தழைச் சத்து, மணிச்சத்து ஆகியவைகளின் சதவிகிதம் கொடுக்கப் பட்டுள்ளது. அதை தாங்கள் கவனிக்கவில்லை போலும்! அதைத் தங்களுக்கு விளக்கவே 100 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கு, 26.5 கிலோ அமோனியம் சல்பேட் மற்றும் 8.1 கிலோ சூப்பர்பாஸ்பேட்டிற்குச் சமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தங்களுக்குப் புரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளதால் மீண்டும் விரிவான விளக்கத்தை கீழே கொடுத்துள்ளோம்.

சாதாரணமான ஆமணக்குப் பிண்ணாக்கில் 5.3 சதம் தழைச்சத்தும், 1.6 சதம் மணிச்சத்தும் உள்ளது. இந்த அளவு சராசரி அளவேயாகும்.

ஆனால் மேல் ஓடு நன்கு நீக்கப்பட்டு, ஆமணக்குப் பருப்பை மட்டும் இட்டு எண்ணெய் எடுத்தால், வெண்மையான ஆமணக்குப் பிண்ணாக்கு கிடைக்கும். இதில் 6.3 சதம் தழைச்சத்து, 2.6 சதம் மணிச்சத்து, 1.1 சதம் சாம்பல்சத்து இருக்கிறது என்பது பகுப்பாய்வில் இருந்து தெரியவருகிறது. மேல் ஓடு நீக்கப்படாமல், ஆமணக்கு விதையை அப்படியே போட்டு எண்ணெய் எடுத்தால் கருப்பு நிறமான பிண்ணாக்கு கிடைக்கும். இதில் 4.5 சதம் தழைச்சத்து, 1.8 சதம் மணிச்சத்து, 0.7 சதம் சாம்பல் சத்து உள்ளதென்று பகுப்பாய்வின் மூலம் தெரிகிறது.

ஆகவே, 100 கிலோ வெண்மையான ஆமணக்குப் பிண்ணாக்கில் 6.3 சதம் தழைச்சத்து 2.6 கிலோ மணிச்சத்து, 1.1 கிலோ சாம்பல் சத்தும், 100 கிலோ கருப்பு ஆமணக்குப் பிண்ணாக்கில் 4.5 கிலோ தழைசத்து, 1.8 கிலோ மணிச்சத்து, 0.7 கிலோ சாம்பல் சத்தும் உள்ளன.

ஒரு கிலோ தழைச்சத்து என்பது 5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 2.2 கிலோ யூரியாவிற்குச் சமம். ஒரு கிலோ மணிச்சத்து என்பது 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட்டிற்குச் சமம். ஒரு கிலோ சாம்பல் சத்து என்பது 1.6 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்திற்குச் சமம். இந்த அடிப்படையில் கணக்கிட்டால் 100 கிலோ வெண்மையான ஆமணக்குப் பிண்ணாக்கு, 31.5 கிலோ (6.3×5) அமோனியம் சல்பேட்டிற்குச் சமமாகும். இது போலமற்ற சத்துக்களுக்கும் சமமான உரங்களை கணக்கிட்டுக் கொள்ளவும்.

பிண்ணாக்கை நெல்லிற்கு அடியுரமாகவே போடவேண்டும். ஆனால் சில இடங்களில் மேலுரமாகப் போடும் வழக்கமும் உள்ளது; இது சிறந்ததல்ல! கரும்பிற்கு மேல் உரமாகப் போடுவதே சிறந்தது. குறிப்பாக, ஆமணக்குப் பிண்ணாக்கு கரும்பிற்கும், கடலைப் பிண்ணாக்கு, புங்கம் பிண்ணாக்கு வேப்பம் பிண்ணாக்கு ஆகியவை நெல்லிற்கும் சிறந்தது.

பிண்ணாக்கை எந்த ரகத்திற்கு இட விரும்புகின்றீர்களோ, அந்த ரகத்திற்கு இட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படும் அளவு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகள் கிடைக்க இரசாயன உரங்களையும் சேர்த்து இடுவதே சிறந்தது. “எந்த ரகம் பயிரிடப் போகின்றீர்கள்? எந்தப் பிண்ணாக்கில் எவ்வளவு போடப்போகின்றீர்கள்?” என்பதைத் தெரிவித்தால்தான், அதற்கேற்ப மணிச்சத்து எவ்வளவு இட வேண்டும் என்பதைத் தெரிவிக்க இயலும்.

பிண்ணாக்கு, இரசாயன உரங்களைப் போல் எளிதில் பயிருக்குக் கிடைக்காது; பிண்ணாக்கு தண்ணீரில் ஊறி, கரைந்த பிறகுதான் பயிருக்குக் கிடைக்கும். பிண்ணாக்குப் போட்டதன் பயன் சுமார் 15 நாட்களுக்குப் பிறகே நெற்பயிரில் தெளிவாகத் தெரியும்.

* * *

வினா: தழை உரச்செடிகளில் எந்த வகைச் செடியை நடவு வயலுக்கு விதைத்து மடக்கி உழுதால் பயன்தரும் ?

ஆடுதுறை-33 (கல்ச்சர் 8940) நெல்விதை எங்கு கிடைக்கும்? அதன் சாகுபடி முறைகளையும், எந்தப் பட்டத்தில் நடவு செய்ய வேண்டும் என்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கவும்.



நவரைப் பட்டத்தில் எந்த வகை நெல் ரகம் சாகுபடி செய்தால் அமோக விளைச்சல் பெறலாம் ?

—சி. ஏழுமலை,
தின்னலூர் கிராமம்,
அனந்தமங்கலம் (அஞ்சல்)
மதுராந்தகம் வட்டம்,
செங்கை மாவட்டம்.

விடை: தக்கைப் பூண்டு, செஸ்பேனியா, பில்லிப்பசரா, சணப்பை, அவுரி, தட்டைப் பயறு ஆகிய தழை உரச் செடி விதைகளை விதைத்து, பூ பூக்கும் தருணத்தில் அவைகளை மடக்கி உழுதால் நிலவளம் செழிப்பாகும். தக்கைப்பூண்டு செஸ்பேனியா, பில்லிப்பசரா, சணப்பை ஆகிய விதைகளுடன் நுண்ணுயிர் ராசிகளைக் கலந்து விதைப்பதால், இவ்வகைச் செடிகளின் வேர்முடிச்சுகளில் உள்ள நுண்ணுயிர்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை இழுத்து நிலத்தில் இருத்துகின்றன. உரப்பற்றாக்குறை நிலவும் இந்நேரத்தில், இவ்வாறு தழை உரச்செடிகளைப் பயிரிடுவதால் ஏக்கருக்கு 20 முதல் 40 கிலோ தழைச்சத்தை நிலத்தில் இருத்தமுடியும்!

ஆடுதுறை-31 (கல்ச்சர் 8946) நெல்விதை, தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் கிடைக்கும். இந்த ரகம் குறுவைப்பட்டத்திற்கே ஏற்றது. இது அண்மையில்தான் வெளியிடப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டுமே இந்த ரகம் ஏற்றது எனப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இந்த ரகம் ஏற்றதா, இல்லையா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்த ரகம் பற்றிய அனுசரணை ஆராய்ச்சி நடைபெற்று முடிவு தெரிந்தபின், இந்த ரகத்தைப்பயிரிடமுயறசி செய்யலாம். ‘கரிகாலன்’ ரகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் சாகுபடி முறைகளையே இந்த ரகத்திற்கும் மேற்கொள்ளலாம்.



செங்கற்பட்டு மாவட்டத்தில் நவரைப் பட்டத்தில் ‘ஐ.ஆர். 8’, ‘ஐ.ஆர். 20’ ஆகிய ரகங்களைப் பயிரிட்டு அமோக விளைச்சல் பெறலாம்.

* * *

வினா: ‘கோ-25’ நெல் பயிரிடுவதற்குக் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை விவரிக்கவும். பின்னைப் பிண்ணாக்கு கையிருப்பில் வைத்துக் கொள்ளவிருப்பதால் சிவப்பு வண்டு துளைத்து மாவாக்கி விடுகிறது. இதனால் ‘என்’, ‘பி’ சத்து குறையுமா? பூச்சியைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

தற்பொழுது காகிதப் பற்றாக்குறை ஏற்படுவதினால், பசுமை புரட்சி, சிறுசேமிப்பு போன்ற விளம்பரங்களை எல்லாம் இரு புற அட்டையில் வெளியிட்டு-உள்பக்கங்களில் போட்டு பக்கத்தை வீணாக்காமல்-நல்ல செய்திகளை வெளியிட்டால் என்ன ? கேளுங்கள் கொடுக்கப்படும் பகுதியில் 20 கேள்விகளுக்காவது பதில் வெளியிட்டால் என்ன ?

--எஸ். வெங்கிடாசலமய்யர்
பெருமாள் கோயில் சந்து,
பூதபாண்டி அஞ்சல்,
குமரி மாவட்டம்.

விடை: ‘கோ. 25’ நெல் இரகத்தைக் குமரி மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் (செப்டம்பர் — அக்டோபர் முதல் பிப்பரவரி - மார்ச்சு வரை) பயிரிடலாம். சம்பா பட்டத்தில் 180 நாட்கள் வயதுடைய கோ-25 நெல், பிசானம் பருவத்தில் 165 நாட்களிலேயே அறுவடைக்கு வரக்கூடும்! ஒரு ஏக்கரில் ‘கோ-25’ நெல் பயிரிட 18 கிலோ விதையை, 36 கிராம் ‘அக்ரசான்’ அல்லது ‘செரசான்’ மருந்துடன் கலந்து, 12 சென்ட் பரப்பில் நாற்று நட வேண்டும்.

நாற்று பறிக்க 7 நாட்களுக்கு முன்பாக 25 லிட்டர் ‘பாரத்தியான்’ மருந்தை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 21 17 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 14 கிலோ




சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவுச் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியா, 130 கிலோ சூப்பர் பாஸ்பேட், 23 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

நாற்றுவிட்ட 40 முதல் 45 நாட்களில் நாற்றைப் பறித்து நடவு செய்ய வேண்டும். நடவு செய்யும் பொழுது வரிசைக்கு வரிசை 10 அங்குலம் இடைவெளியும், வரிசையில் தூருக்குத்தூர் 5 அங்குலம் இடைவெளியும் விட்டு நடவு செய்ய வேண்டும். சாதாரண முறையில் நடவு செய்தால் 6 அங்குலம் × 6 அங்குலம் இடைவெளியில் நடவு செய்யலாம்.

நடவு செய்த 15 நாட்களுக்குள் முதல் முறையாக களையெடுக்கவும். பிறகு 15 நாட்களுக்கு ஒருமுறை விதம் பூட்டை வெளிவரும் வரை களையெடுத்தல் நல்லது.

நடவு செய்த 21-ஆம் நாள் 5.5 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இட, 27.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியாவைத் தூவி விடவும். பிறகு, தொண்டைப் பூ தோன்றும் சமயத்தில் 5.5 கிலோ தழைச்சத்து அளிக்க 27.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியாவைத் தூவி விடவும்.

நடவு செய்த 21-வது, 42-வது, 63-வது நாட்களிலும், பூட்டை தோன்றும் சமயத்திலும் ஆக 4 முறை, 200 மில்லி லிட்டர் ‘பாரத்தியான்’ அல்லது 400 மில்லி லிட்டர் ‘எண்டரின்’ மருந்தை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவும். 21-வது நாள் தெளிக்கும் மருந்து

டன்; 500 கிராம் தாமிரப் பூசணக் கொல்லியையும் கலந்து தெளிப்பதால் நோய்களைக் கட்டுப்படுத்தலாம். நெல் பூவில் தோன்றும் நாவாய்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் 'பி. எச். சி. 10 சதம்' மருந்து தெளிக்க வேண்டும்.

மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 2 முதல் 4 டன் வரை மகசூல் பெற இயலும்!

பின்னை பிண்ணாக்கைச் சிவப்பு வண்டு துளைப்பதால், மாவாகி சேதமடையும்! இதனால், நாளடைவில் ஓரளவிற்கு 'என்', 'பி' சத்து குறையக் கூடும். சிவப்பு வண்டைக் கட்டுப்படுத்த, பிண்ணாக்கைச் சற்று வெய்யிலில் உலர்த்தி, வண்டுகளைப் அப்புறப்படுத்தி விட்டு, பிறகு சாக்குகளில் சேமிக்கவும். சாக்குகளின்மேல் இலேசாக 'பி.எச்.சி. 10 சதம்' தூளைத் தூவி விடவும். பிண்ணாக்கைத் தரையிலேயே குவித்து வைத்திருந்தாலும், குவியலைச் சுற்றி 'பி.எச்.சி. 10 சதம்' தூளைத் தூவி விடலாம்.

காகித பற்றுக்குறையும், காகித விலை உயர்வும் உள்ள இந்நேரத்தில் தாங்கள் கூறியுள்ளதுபோல் விளம்பரத்தைக் குறைத்தால், 'தமிழரசு' இதழுக்கு நட்டம் ஏற்படும்! தற்பொழுது உள்ள மற்ற இதழ்களுடன் ஒப்பிட்டால், 'தமிழரசு' இதழின் விலை மிகவும் குறைவு. ஆகவே, 'தமிழரசு' இதழில் விளம்பரம் வெளியிடுவது அவசியமாகிறது. மேலும் பசுமைப்புரட்சி, சிறுசேமிப்பு போன்ற விளம்பரங்களை வெளியிடுவது, பொதுமக்களை அந்த நல்லப் பணிகளில் ஈடுபடுத்துவதற்காகவேயாகும்! எனவே, 'தமிழரசு' இதழில் விளம்பரம் வெளியிடுவது பக்கங்களை வீணாக்குவதற்கல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் 20 கேள்விக்களுக்காவது விடையளிக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றோம். ஆனால் உங்களைப்போல், கோ. 25 நெல் சாகுபடி முறைகள் அனைத்தையும் தெரிவிக்கும்படி பெரிய கேள்வியைக் கேட்டால் எப்படி 20 கேள்விகளுக்கான பதில்களை வெளியிட இயலும்? எனவே, தேவையானவைகளை மட்டும் சிறிய கேள்விகளாக எழுதி அனுப்பினால்தான், 20 கேள்விகளுக்கான பதில் வெளியிட முடியும். அல்லது நீங்கள் கேட்டுள்ளது போன்ற நீண்ட கேள்விகளை விட்டு விட்டு, சிறு சிறு கேள்விகளுக்கு மட்டும் பதில் அளித்தால் தான் தாங்கள் கூறுவது போல் 20 கேள்விகளுக்குப் பதில் கூற இயலும். அவ்வாறு செய்வது நல்லதா நீங்களே கூறுங்கள்?

வினா: மண்பரிசோதனைக்கு எங்கே அனுப்ப வேண்டும்? அதற்குக் கட்டணம் உண்டா? வேளாண்மைக் குறிப்புகளடங்கிய தொகுப்பு நூல் கிடைக்குமா?

—தமிழாலயன்,
எழுத்தர்,
குளமங்கலம் (அஞ்சல்),
மதுரை மாவட்டம்.

விடை: மதுரை மாவட்டத்திலுள்ள உழவர் பெருமக்கள், தங்கள் வயலின் மண்ணைப் பரிசோதனைச் செய்து கொள்வதற்காக, மதுரையிலேயே ஒரு மண் பரிசோதனைக்கூடம் உள்ளது. நீங்கள் மண்மாதிரியைப் பின்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

''உதவி மண் இரசாயன
வல்லுநர்,
மண்பரிசோதனைக் கூடம்,
மதுரை.''

மண்பரிசோதனை செய்ய கட்டணம் ஏதும் இல்லை; இலவசமாகவே மண்பரிசோதனை செய்து முடிவு அறிவிக்கப்படும். உங்கள் வயலில் மண்மாதிரி எடுத்து அனுப்பிட, உங்கள் ஊர்நல ஊழியர் (கிராமசேவகர்) உதவியை நாடலாம்.

வேளாண்மைக் குறிப்புகள் அடங்கிய தொகுப்பு நூல் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால் வேளாண்மைக் குறிப்புகள் அடங்கிய சிறு சிறு இலவச வெளியீடுகளை மதுரையில் உள்ள உழவர் பயிற்சி நிலையத்திலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

வினா: எனது தோட்டத்தில் கரிய நிறமுடைய கடினமான கற்கள் அதிக அளவு கிடைக்கின்றன. நான், இக்கற்களில் இரும்புப்படிகள் இருக்கும் என எண்ணுகிறேன். ஆகவே, அதைத் தெளிவு செய்து கொள்ள வேண்டுமாயின், கற்களை எந்த விலாசத்தில் உள்ள ஆராய்ச்சிச் சாலைக்கு அனுப்ப வேண்டும்? அதற்கு ஏதாவது கட்டணம் செலுத்த வேண்டுமா? எவ்வளவு நாளில் முடிவு தெரியும்? எந்த முறையில் கற்களை அனுப்ப வேண்டும்?

—சி. நாராயணசாமி,
6-84, வையம்பாளையம்
(அஞ்சல்),
கோயம்புத்தூர்.

விடை: தங்கள் தோட்டத்தில் உள்ள கற்களில் இரும்புத் தாதுக்கள் கலந்திருக்கிறதா அல்லது இல்லையா என்பதைக் கண்டறிவதுபற்றிய விவரங்களையெல்லாம் அறிந்துகொள்ள பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

State Geologist,
Tamil Nadu Mineral
Development Project,
Madras-600032.

நீங்கள் கேட்டுள்ள கேள்விகளை எல்லாம் எழுதி, மேற்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

## தமிழகத்துக்குப் பாராட்டு

''அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித்தரத் தமிழக அரசு வகுத்து நிறைவேற்றி வருகிற பணிகள் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன. குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கவும், அரிசனங்களுக்காக வீடுகள் கட்டித் தரவும் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் போல இந்தியாவில் வேறு எந்த மாநில அரசும் செய்யவில்லை.

இந்தப் பணிகளுக்காக முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்கள் பாராட்டப்பட வேண்டியவராவார்.

இந்தக் காரியங்களில் தமிழ்நாட்டின் முன்னுதாரணத்தைப் பின்பற்றும்படி இதர மாநிலங்களின் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

கட்டடங்கள் கட்டும்போது கிராமப்புறத்து ஏழை மக்களுக்கான வீடுகள் கட்டுவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். தமிழ் நாடு அரசு இதில் கவனம் செலுத்தியுள்ளது.

—மத்திய வீட்டு வசதித்துறை
அமைச்சர்
போலோபஸ்வன் சாஸ்திரி.





# பதக்கம் பெற்ற காவலர்கள்

தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் வழங்கும் விழா 14-9-1974 அன்று, மதுரையில் நடைபெற்றது. தன்னிகரற்ற பணிகளுக்காகவும் வீரச் செயல்களுக்காகவும் காவல்துறையைச் சேர்ந்தோருக்குக் காவல் பதக்கமும் உதவித் தொகையும்அளிக்கப்பட்டன.

தன்னிரகற்ற பணிகளுக்காகக் காவல் பதக்கங்களையும் ரூபாய் மூவாயிரம் உதவித் தொகையையும் பெற்றவர்கள் விவரம். வருமாறு :

1. திரு. டி. எம். குருசாமி,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
சிறப்புப் பிரிவு 2, சி.ஐ.டி.,
திருச்சிராப்பள்ளி.

2. திரு. எம். துரைராஜ்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
விழிப்புப்பணி-ஊழல் தடுப்பு,
திருநெல்வேலி பிரிவு.

3. திரு. கே. குப்புசாமி,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
திருச்சிராப்பள்ளி (புறநகர்ப் பகுதி).

4. திரு. டி. கே. எம். அப்துல்ரசாக்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
சிவகாசி.

5. திரு. எஸ். சத்தியநாராயணன்,
துணைக் கண்காணிப்பாளர்,
கம்ப்யூட்டர் பிரிவு,
சென்னை.

6. திரு. ஏ. அருணாசலம்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை இனம் 2,
கோயம்புத்தூர் (நகர்ப்புறம்).

காவல் பதக்கமும் ரூபாய் இரண்டாயிரமும் உதவித் தொகை பெற்றவர்கள் விவரம் வருமாறு :

7. திரு. ஜி. ஜி. ராஜேந்திரன்,
காவல் துறை ஆய்வாளர்,
விழிப்புணர்வு-ஊழல் தடுப்பு இயக்ககம்,
சென்னை.

8. திரு. எஸ். ராஜன்,
காவல் துறை ஆய்வாளர்,
விழிப்புணர்வு-ஊழல் தடுப்பு இயக்ககம்,
மதுரைப் பகுதி.

9. திரு. கே. ஏ. மீனாட்சி சுந்தரம்,
காவல் துறை ஆய்வாளர்,
சென்னை நகரக் காவல் துறை.

10. திரு. எல். ஜே. மோனுச்,
காவல் துறை ஆய்வாளர்,
சென்னை நகரக் காவல் துறை.

11. திரு. என். லிங்கசாமி,
காவல் துறை ஆய்வாளர்,
விழிப்புணர்வு-அமைப்பு,
வேலூர்.

12. திரு. ஜி. டேவிட் திருத்துவராஜ்,
தனிக் காவல் ஆய்வாளர்,
சென்னை நகரக் காவல் துறை.


பசுமைப் புரட்சியால் உற்பத்திப் பெருக்கம்!
புதிய முயற்சிகளால் தொழில் துறை வளர்ச்சி!
ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைத்திடத் திட்டங்கள்! பணிகள்!



13. திரு. எஸ். வரதராஜன்,
துணை ஆய்வாளர்,
காவல் துறை,
மதுரை தெற்கு.

14. திரு. எஸ். முருகேசன்,
துணை ஆய்வாளர்,
காவல் துறை,
நீலகிரி.

15. திரு. பி. என். எழுத்தச்சன்,
துணை ஆய்வாளர்,
தமிழ்நாடு சிறப்புக் காவல் படை நான்காவது அணி,
கோவைபுதூர்.

16. திரு. இ. இராமநாதன்,
உதவித் துணை ஆய்வாளர்,
காவல் துறை,
இரயில்வே காவல் துறை.

17. திரு. என். மாரிமுத்து,
நிலையத் தியணைப்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

காவல் பதக்கமும் ரூபாய் ஆயிரம் உதவித் தொகையும் பெற்றவர்கள் விவரம் வருமாறு :

18. திரு. கே. வரதன்,
தலைமைக் காவலர்,
சேலம்.

19. திரு. கே. நீலகண்டன்,
காவலர்,
ரயில்வே காவல் துறை.

20. திரு. ஷேக் முகமது,
காவலர் 1372,
வட ஆர்க்காடு மாவட்டம்.

21. திரு. ஏ. கோவிந்தராஜன்,
காவலர் 1279,
சென்னை நகரக் காவல் துறை.

**வீரச்செயல்களுக்கு :**

வீரச்செயல்களுக்காகவும் குறிப்பிடத் தகுந்த அளவில் மகத்தான பணிகள் ஆற்றியமைக்காகவும் காவல் பதக்கத்துடன் ரூபாய் மூவாயிரம் உதவித் தொகை பெற்றவர்கள் விவரம் வருமாறு :

1. திரு. கே. ஆர். வெங்கடேசன்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
பொள்ளாச்சி.

2. திரு. ஆர். வி. வீரண்ணன்,
தனித் துணை ஆய்வாளர்,
காவல் துறை,
இராமநாதபுரம்.

3. திரு. பி. அய்யாக்கண்ணு,
துணை ஆய்வாளர்,
காவல் துறை,
இராமநாதபுரம்.

4. திரு. ஆர். வெள்ளைச்சாமி,
காவலர் 1008,
மதுரை தெற்கு.


**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ் 406**

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.

தொலைபேசி எண் : 30877
30878.
தபால் பெட்டி எண். 486.
தந்தி: ''ஹவுஸ்பாங்க்''

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்., எம் எல்.ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை
பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | | |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.5 கோடி. |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | ... | ரூ. 2.33 ,, |
| | ... | ரூ. 15.97 ,, |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான விபரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடு அடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் ஆண்டிற்குக் குறையாமலும் தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும். தவணைவைப்புத் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது.

| | | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு. |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | | |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட | ... | ரூ. 25,000/- |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும் | ... | ரூ. 10,000/- |
| | ... | ரூ. 10,000/-. |

பூ.க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.பி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.






செழுமையான விளைச்சலுக்கோர் சீரான
சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்
CONTROL POWER WITH
L&T Switchgear




11559
தமிழரசு
வர்த்தமான
மகாவீரர்
உ500 வது
நினைவு நாள்
சிறப்பிதழ்
ஆலயங்களில் காணப்பெறும் மனத்தூய்மைக் கம்பம்
சமணர்
மலர் 5 • 1-11-1974

# நடமாடும் தெய்வங்களின் நல்வாழ்வுக்கு....

புரசைப் பகுதியில் ராதாகிருஷ்ணபுரம் புதுக் குடியிருப்புகளைத் திறந்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தக் குடியிருப்புகள் பல ஆண்டுக் காலமாக குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருந்த—ஏழை எளிய மக்களுடைய ஏற்றம் மிகுந்த வாழ்விற்காக அமைக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் சார்பில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மூன்றாண்டுகளுக்கு முன்பு சிந்தித்து, இதைச் செயல்படுத்த முடியுமா என்ற ஐயப்பாடுகள் எழுந்த நேரத்தில் ஐயத்திற்கு இடமில்லாமல் எப்படியும் இவைகளை நிறைவேற்றித் தீர வேண்டுமென்ற மனத் துணிவுடன், ஏழை மக்களுக்காக, அடித்தளத்து மக்களுக்காகப் பாடுபடக்கூடிய ஒரு அரசு செய்ய வேண்டிய கடமைகளில் இது முக்கியமான கடமை என்பதை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு இந்த வாரியம் அமைக்கப்பட்டது.

கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களின் படி, இது வரையில் 14 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, சற்றேறப்ப 18,000 குடியிருப்புகள் சென்னையில் எழுப்பப்பட்டுள்ளன. இவைகளைத் தவிர, தமிழகத்தில் உள்ள மாவட்டத் தலைநகரங்களில் குறிப்பாக கோவை, சேலம், தஞ்சை, திருச்சி போன்ற இடங்களில் அங்கு வாழ்கிற குடிசை வாழ் மக்களுடைய நல்வாழ்வை மனதில் கொண்டு அவர்களுக்கும் இத்தகைய குடியிருப்புகளை வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகக் கட்டித் தருவது என்ற திட்டமும் கடந்தவோராண்டுக்காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதைத் தவிர, தமிழகத்திலே வாழ்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வசதியான, சுகாதார வசதியுள்ள வீடுகளைக் கட்டித் தர எவ்வளவு ஆகும். எத்தனை வீடுகள் கட்டித்தரப்பட வேண்டியிருக்கும் என்ற கணக்கை நாங்கள் எடுத்துச் சொன்னதில்



அப்படிப்பட்ட வீடுகள் பத்து இலட்சம் தேவைப்படும் என்ற கணக்கை அதிகாரிகள் சொன்னார்கள்.

ஒரு நாட்டின் குடிமகனுடைய முக்கியமான தேவை உணவு, உடை, உறையுள். உணவிலேயே சத்துணவும் அடங்கும். சுகாதாரமும் பாதுகாக்கப்பட்ட குடிநீரும் அடங்கும். உறையுள் என்பதில் நம்முடைய அரசு போதிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்ற தீவிரத் திட்டத்தைத் தீட்டத் தொடங்கிய பிறகுதான், நண்பர் ராசாராம் சொன்னதைப் போல, தொழிலாளர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் இல்லங்களை அமைக்கிற காரியம் வேகமாக நிறைவேறி வருகிறது.

**முதல்வர் கலைஞர்**

1947-ஆம் ஆண்டு நமக்குச் சுதந்தரம் கிடைத்ததென்றாலும், வெற்றி விழாவைக் கொண்டாட ஓராண்டுக் காலத்தை ஒதுக்கி வைத்துவிட்டு 1948-ஆம் ஆண்டிலிருந்து இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்வது என்று அன்றிருந்த ஆட்சியாளர்கள் திட்டமிட்டிருந்தால் சென்னையில் குடிசைப் பகுதிகளே இப்போது இருந்திருக்காது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பத்து இலட்சம் வீடுகள் கட்ட வேண்டிய தேவையும் இப்போது எழுந்திருக்காது.

கடந்த 3,4 ஆண்டுக் காலமாக, நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளின் காரணமாகத்தான் காரியங்கள் செய்யப்படுகின்றன. இதைக் கட்சிச் சார்பற்ற முறையில் எல்லா ஏழை மக்களும் இந்தப் பயனை அனுபவிக்கிறார்கள். அதை நீங்கள் இந்தமேடையிலேயே கண்டிருக்கலாம். மாலை போட்ட நண்பர்கள் இந்தப் புதிய குடியிருப்புகளுக்குக் குடிவர இருக்கிறார்கள்.

மாலைகளில் சில மூன்று வண்ண மாலைகளாக இருந்ததையும் அதைப் போட்டவர்கள் அழுத்தமான கதராடைகளை அணிந்திருந்ததையும் நான் கவனிக்கத் தவறிடவில்லை.

ஆகவே அனைவரும் மகிழத்தக்க, கட்சிச் சார்பற்ற முறையில் ஏழை எளியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் களிப்படையத் தக்க வண்ணம் அவர்களுடைய வாழ்விலேஒளி வழங்கத்தக்க வண்ணம் இந்த ஏற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 10 இலட்சம் வீடுகளை ஒரேயடியாகக் கட்டுவது. என்பது முடியாத காரியம். படிப்படியாகத்தான் செய்ய முடியும். என்னதான் நிதி ஆதாரம் பல கோடிக் கணக்கில் குவிந்திருந்தாலும் அந்த நிதியைச் செலவழித்து உடனடியாக காரியங்களை நிறைவேற்றிட நிச்சயமாக ஓராண்டுக் காலம் பத்து இலட்சம் இல்லங்களை அமைக்கப் போதாது.

மழை கூட ராயபுரத்தில் பெய்யும்போது புரசையிலே பெய்வதில்லை; புரசையிலே பெய்கிற நேரத்தில் ராயபுரத்தில் பெய்வதில்லை.

மழையே அப்படி பகுதி, பகுதியாகப் பெய்கிறதென்றால், நிதி ஆதாரத்தைக் குறைவாகக் கொண்டுள்ள இந்த அரசு இப்படிப்பட்ட பெரிய காரியங்களைப் படிப்படியாக, பகுதி பகுதியாகத்தான் செய்ய வேண்டியிருக்கிறது.

அந்த வகையில்தான் இந்த ஆண்டு கிராமப் புறங்களில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டித் தருவது என்று அரசு முடிவு எடுத்து, அதற்காகத் தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி வாரியம் என்ற தனி வாரியத்தை அமைத்திருக்கிறது.

இந்தியாவிலேயே இப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டினைக் கட்டித் தர ஒரு தனி வாரியம் அமைக்கப்பட்ட செய்தி வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இங்கே செய்தியாக மாத்திரமல்ல, செயலாகவும் உருவெடுத்து, இந்த மாதம் முடிவதற்குள் பத்தாயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, அதனுடைய தலைவர் திறப்பு விழாவிற்கு என்னிடம் தேதி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இதைச் சொல்லக் காரணம் — நடமாடும் தெய்வங்களாக — குடிசைகளில் வாழ்கிற தெய்வங்களாக இருக்கிற ஏழை மக்களுக்கு நாம் பாடுபடுகிறோம். கோயில்களில் இல்லாமல் குடிசைகளில் தெய்வங்கள் இருக்கிறதா என்று எள்ளி நகையாடுபவர்களும் இருக்கக்கூடும்.

அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான் என்ற தத்துவத்தை நாட்டிற்கு எடுத்துச் சொன்னார். எங்களுடைய நெஞ்சத்தில் பதிய வைத்தார். அந்த வழி நின்று ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்கிற அந்த முயற்சியை மேற் கொண்டிருக்கிறோம்.

தமிழக அரசு தீட்டுகின்ற எந்தத் திட்டங்களானாலும், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டமானாலும், கண்ணொளி வழங்குகிற திட்டமானாலும், ஊனமுற்றோருக்கு நல்வாழ்வு அளிக்கும் திட்டமானாலும், அவைகள் எல்லாம் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதற்காக நடைமுறைப்படுத்தப்படுகிற திட்டங்களாகும். இல்லாவிட்டால் துன்பங்களால் பாதிக்கப்படுகிற அந்த ஏழைகள் பாழாய்போன கடவுளே என்றும், என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிய கொடியவனே என்றும் ஆண்டவனைத் திட்டாமல், அவர்களிடமிருந்து ஆண்டவனைக் காப்பாற்றும் பொறுப்பைத்தான் நாங்கள் மேற்கொண்டு இப்படிப்பட்ட பணிகளைச் செய்து வருகிறோம்.

இங்கே ஏராளமான மாலைகள் குவிந்ததை நீங்கள் கண்டீர்கள்.

அவைகளை எதிர்பார்த்துச் செய்யப்பட்ட காரியங்கள் அல்ல இவை. மாலைகள் வந்து குவியலாம். மாறுகக்கல் மலைகள் குவியலாம். ஆனால் நாங்கள் ஆற்றவேண்டிய கடமையை ஆற்றிக் கொண்டு வருகிறோம்.

இன்று திறக்கப்பட்ட இல்லங்களைத் தூய்மையாக வைத்திருங்கள் என்று பேராசிரியர் பேசும் போது கேட்டுக் கொண்டார். இந்த அழகான இல்லங்களின் சுவரிலே ; நாளைய தினமே கருணாநிதி ஒழிக என்று எழுதி வைக்கக் கூடும்.

அதற்காக நான் கவலைப்படவில்லை. எப்படியோ கருணாநிதி என்று எழுதியிருக்கிறார்களே, அது வரையில் நினைவு இருக்கிறதே என்ற அளவில் மகிழ்ச்சியடைவேன். இந்தக் காரியங்கள் கைமாறு கருதி செய்யப்படுகிற காரியங்கள் அல்ல.

ஏழை எளியவர்களுக்குப் பாடுபட ஒரு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அடித்தளத்தில் கிடக்கிற மக்களுக்காகப் பாடுபட — அந்த இலட்சியத்தை நிறைவேற்றிட அண்ணா அவர்கள் எங்களையெல்லாம் அருமைத் தம்பிகளாக வளர்த்து ஆளாக்கிவிட்டார். அவருடைய எண்ணங்கள் ஈடேற நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வெற்றிகரமாக ஆக்கும் பணியில் இந்தக் குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் அதன் தலைவர் அரங்கண்ணல் ஆற்றியிருக்கிற செயல்கள் அற்புதமானவை. போற்றிப் புகழத் தக்கவை.

அவரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தபோது சற்றுத் தயங்கினார் என்றாலும், அந்தத் தயக்கம் தன்னால் இது முடியுமா என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட கேள்வி; அத்தனைக்கும் விடை கிடைப்பதைப் போல இன்று வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்கள் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் அத்தனை பேரும் இதனைப் பாராட்டுகிறார்கள்.

சில நாட்களுக்கு முன்னால் ஆந்திராவின் மாண்புமிகு முதலமைச்சர் வெங்கல் ராவ் சென்னைக் கோட்டையில் என்னைச் சந்தித்த போது, நம்முடைய அரசின் பல்வேறு திட்டங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், அவரே சொன்னார் : ''தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற குடிசை மாற்று வாரியத் திட்டம் ஒரு அரிய திட்டம் ; மற்ற மாநிலங்கள் எல்லாம் பின்பற்ற வேண்டிய ஒரு மகத்தான திட்டம்'' என்று தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு முழுக் காரணமாக இந்த வாரியத் தலைவர் அரங்கண்ணல் அவர்களும், அவரோடு இணைந்து பணியாற்றுகிற அதிகாரிகளும், இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் ராசாராம் அவர்களும், சென்னையில் மாத்திரமல்லாமல் தமிழகத்தின் பல்வேறு



இடங்களில் குடிசை வாழ் மக்களுக்கு இந்த இல்லங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிற அதிகாரிகளும் நம்முடைய நன்றிக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்களாவர்.

வெளியிலிருந்து வருகிறவர்கள் எல்லாம் இது எப்படி நடக்கிறது என்று பாராட்டுகிறார்கள்.

இங்கே இருப்பவர்கள் இது ஏன் நடக்கிறது என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அடுத்த தேர்தலைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பவர்கள்.

இந்த அரசைப் பொறுத்த வரையில் ஏதோ தேர்தலையே இழந்துவிட்ட துறவி என்று சொல்ல மாட்டேன். ஆனால் அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கச் சொன்ன இயக்கம்தான் இந்த இயக்கம்.

அந்த இயக்கத்தின் தொண்டர் நாங்கள். ஆகவேதான் தமிழ்ச் சமுதாயம் இன்றைக்கு ஏழை மக்களாக, தாழ்த்தப்பட்ட மக்களாக, புழுவாய், பூச்சியாய், புன்மைத் தேரையாய் வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயம் ஒளி மிக்க வாழ்வைப் பெற வேண்டுமென்ற அடிப்படைத் தத்துவத்தை நாங்கள் உயிர் ஆதாரமாகக் கொண்டு இந்தப் பணியைச் செய்து வருகிறோம்.

பேராசிரியர் பேசும்போது இப்படிப்பட்ட இல்லங்களைப் பெற்று மற்றவர்களுக்கு வாடகைக்கு விடும் பழக்கம் ஒன்றிரண்டு இடங்களில் இருப்பதாகச் சொன்னார்.

அந்தச் செய்திகள் வராமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பை இது வரையில் குடிசைகளிலே வாழ்ந்து இப்போது இந்த மாடி வீடுகளில் குடியிருக்கப் போகிற நண்பர்கள் உணர்ந்து அரசோடும், வாரியத்தோடும் ஒத்துழைக்க வேண்டும். இந்தப் பணி செவ்வனே நடைபெற உதவ வேண்டும்.

தங்களுக்காகப் பெற்ற வீடுகளில் வேறு ஒருவரைக்குடியிருக்க அனுமதித்து, அதிகமாக வாடகையை அவர்களிடமிருந்து பெற்று, நிர்ணயித்த வாடகையை வாரியத்திற்குத் தந்து, அதன் மூலம் இடையில் ஒரு இலாபத்தைப் பெறலாம் என்று கருதுகிற சமூக விரோதிகள் இருக்கக்கூடும்.

அவை மிக அக்கறையோடு ஏழையெளிய மக்களும், அந்த ஏழை மக்களுடைய வாழ்க்கையில் எந்த வகையில் இலாபம் பெறலாம் என்று கருதுகிற சுயநலக்காரர்களும் சிந்திக்க வேண்டும். அப்படிப்பட்ட சட்ட விரோதச் செயல்கள் நடைபெறுமானால் அதை எந்த வகையில் சட்ட விரோதமாக்குவது என்பதைப் பற்றியும், எப்படி குடியிருக்கத் தங்களுக்குக் கிடைத்த வீட்டை மற்றவர்களுக்குத் தந்தார்கள் என்பதைப் பற்றியும், தரப்படுகிற வீட்டைப் பயன்படுத்திக் கொள்கிற சுயநலவாதிகளைப் பற்றியும்—வீட்டைத் தருபவர்களை விட குடியிருக்க வருகிற சுயநலவாதிகள் கடத்தல்காரர்களைவிட பயங்கரமானவர்கள் என்ற வகையில் எப்படியெப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றியும், அப்படிப்பட்ட சட்ட விரோதச் செயல்கள் நடைபெறுமானால் அவைகளைத் தடுத்து நிறுத்த — அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க என்னென்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றியும் அரசும் வாரியமும் நிச்சயமாக யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அட்டையில் காட்சி தருவது வட ஆர்க்காடு கரந்தையில் உள்ள வர்த்தமானர் சிலை.

இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி மன்றத்திற்கும், நல்வாழ்வுப்பேரவைக்கும் மருந்தக வார்டுகள் தரப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் தருவதற்குப் பெரு முயற்சியை மேற்கொண்ட நண்பர் ராசரத்தினம் அவர்களுக்கும், இவைகளை வழங்கிய நாதர் நிறுவனத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(22.10.1974 அன்று சென்னை புரசைவாக்கம் இராதாகிருட்டிணபுரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் புதிய குடியிருப்புகளைத் திறந்துவைத்த முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.)



ஆதியாய் உலகெல்லை அளித்தாய் நீயே!
அருந்தவரும் அறம்பகர்ந்த அறவன் நீயே!
காதியாய் இருவினையைக் கடிந்தாய் நீயே!
கணம் ஈராறு அடியேத்தும் கடவுள் நீயே!
போதியாய்ப் பொருளனைத்தும் ஆனாய் நீயே!
பொறிவாயில் ஐந்தவித்த புனிதன் நீயே!
சேதியா நிலவுலகச் செல்வன் நீயே!
சீர்வர்த்த மானனெனும் தீர்த்தன் நீயே!

அங்கமலை ஆதிரண்டும் உரைத்தாய் நீயே!
அலர்மழைமுழுத் துயிபுடைய அமலன் நீயே!
கொங்குலவு மலர்ப்பிண்டிக் கோமான் நீயே!
குடைமூன்றுடன் நிழலருள தாரும் நீயே!
பொங்கியசா மரையொழியல் படைத்தாய் நீயே!
புரந்தரனும் இந்திரனும் போற்றும் நீயே!
செங்கமலமேல் நடந்த செல்வன் நீயே!
சீர்வர்த்த மானனெனும் தீர்த்தன் நீயே!

கருவான வினையழித்த வள்ளல் நீயே!
கலியாணம் ஐந்துடைய கடவுள் நீயே!
மருவான பூம்பிண்டி மன்னன் நீயே!
மறைமொழியால் உரைத்தருளு வள்ளல் நீயே!
பெருவாழ்வே இன்புறும் பெம்மான் நீயே!
பெண்ணுருவும் ஆணுருவும் ஆனாய் நீயே!
திருமாலும் நான்முகனும் ஆனாய் நீயே!
சீர்வர்த்த மானனெனும் தீர்த்தன் நீயே!

(ஜீவ சம்போதனை, 27-31)





# சமண சமயம் தமிழ்நாடு வந்த வரலாறு

மயிலை சீனி. வேங்கடசாமி

சமணர்களின் கடைசித் தீர்த்தங்கரராகிய வர்த்தமான மகாவீரர் தமது 72-வது வயதிலே கி.மு. 527-இல் வீடுபேறு அடைந்தார். மகாவீரரின் சீடர்களில் ஒன்பதின்மர், கேவல ஞானம் வாய்க்கப் பெற்று மகாவீரர் காலத்திலேயே இராசக்கிருத நகரில் வடக்கிருத்தல் என்னும் சல்லேகனை நோன்பிருந்து வீடு பேறடைந்தனர். கௌதம இந்திரபூதி, சுதர்மர் என்னும் இரண்டு கணதரர்கள் மகாவீரர் வீடுபேறடைந்த பின்னரும் உயிர் வாழ்ந்திருந்தார்கள்.

மகாவீரர் வீடு பேறடையும் வரையில் தாமே சமண சமயத் தலைவராக இருந்தார். அவருக்குப் பின்னர், அவர் சீடர் கௌதம இந்திரபூதி என்பவர் சமயத் தலைவராக இருந்தார். அவருக்குப் பிறகு, மகாவீரரின் மற்றொரு சீடராகிய சுதர்மர் என்பவர் சமயக் குரவராக இருந்தார். அவருக்குப் பின்னர் அவரின் (சுதர்மரது) சீடராகிய சம்பு சுவாமி சமயக் குரவராக இருந்தார். அவருக்குப் பின்னர் விட்ணுநந்தி என்னும் விட்ணு தேவர் சமயத் தலைவர் ஆனார். அவருக்குப் பிறகு நந்திமித்திரரும், அவருக்குப் பின்னர் அபராசிதரும் அவருக்குப் பிறகு கோவர்த்தனரும் அவருக்குப் பின்னர் பத்திரபாகு முனிவரும் சமயக் குரவராக இருந்தனர்.

பத்திரபாகு முனிவருடைய காலத்திலேதான் சமண சமயம் தமிழ் நாட்டிற்கு வந்தது என்பர். பத்திரபாகு முனிவர் கி.மு. 317 முதல் கி.மு. 297 வரையில் சமண சமயத் தலைவராக இருந்தவர். இவர், சமண சமயத் தலைவராக இருந்ததோடல்லாமல், பேர் பெற்ற சந்திரகுப்தன் (கி.மு. 322—298) என்னும் மௌரிய அரசனுக்கு மத குருவாகவும் இருந்தார். இந்தச் சந்திர குப்த மௌரியன் கிரேக்க அரசனாகிய மகா அலெக்சாந்தர் காலத்தவன்; இந்தியாவை அரசாண்ட சக்கரவர்த்தி; அசோக சக்கரவர்த்தியின் பாட்டன்.

சந்திரகுப்த அரசனுக்குச் சமய குருவாக இருந்த பத்திரபாகு முனிவர், மகத நாட்டில் பன்னிரண்டு யாண்டு பஞ்சம் வரப் போவதை யறிந்து அச் செய்தியை அரசனுக்கு அறிவித்து, வரப்போகும் பஞ்சக் கொடுமையினின்றும் தப்பிக்கக் கருதித் தம்மைச் சார்ந்திருந்த பன்னிராயிரம் சமண முனிவர்களை அழைத்துக்கொண்டு, தென் திசை நோக்கிப் புறப்பட்டு வந்தார். சந்திரகுப்த அரசனும், அரசைத் துறந்து, துறவு பூண்டு பத்திரபாகு முனிவரின் சீடனாகி அவருடன் வந்தான். தென் திசை நோக்கி வந்த பத்திரபாகு முனிவர், மைசூர் நாட்டில் வந்து, சமணர் வெள்ளைக் குளம் என்னும் பொருள்படும் சிரவண பெள்கொள என்று இப்போது பெயர் வழங்கப்படுகிற இடத்தில் தம்முடன் வந்த முனிவர்களுடன் தங்கினார். தங்கின பிறகு, தம் சீடர்களில் ஒருவரான விசாக முனிவர் என்பவரை அனுப்பிச் சோழ பாண்டிய நாடுகளில் சமண சமயக் கொள்கைகளைப் பரவச் செய்தார். பின்னர் கி. மு. 297-இல் வடக்கிருத்தல் என்னும் சல்லேகனையிருந்து வீடு பெற்றார். இவர் சீடராக இருந்த சந்திர குப்தரும் அவ்விடத்திலேயே சல்லேகனை நோன்பிருந்து உயிர் நீத்தார்.

இச் செய்திகள் சமண சமய வரலாறுகளினால் அறியப்படும். அரிசேனர் என்பவர் (கி.பி. 931-இல்) இயற்றிய பிருகத் கதாகோசம் என்னும் நாலிலும், தேவசந்திரர் கன்னட மொழியில் (கி.பி. 1838-இல்) இயற்றிய 'ராஜா வளி கதெ'' என்னும் நூலிலும், சமணர்களின் கர்ண பரம்பரைச் செய்திகளிலும் இவ்வரலாறுகள் கூறப்படுகின்றன. அன்றியும் மைசூரில் உள்ள சந்திரகிரி மலையில் பத்திரபாகு குகை என்னும் குகையும், சந்திர குப்த பஸ்தி என்னும் சமாதிக் கட்டடமும் இன்னும் உள்ளன. சந்திரகுப்தப் பஸ்தியில், சந்திர குப்த பத்திரபாகு வரலாறுகள் சிற்ப உருவங்களாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அங்குள்ள சாசன எழுத்துக்களும் இச் செய்திகளை உறுதிப்படுத்துகின்றன.

எனவே, கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பத்திரபாகு முனிவரின் சீடராகிய வைசாக முனிவரால் தமிழ் நாட்டிலே சமண சமயம் பரவச் செய்யப்பட்டது என்று அறிகிறோம். பாண்டிய நாட்டிலே மதுரை மாவட்டத்தில் காணப்படுகிற பிராமி கல்வெட்டெழுத்துக்கள் சமணரால் எழுதப்பட்டவை என்றும், அவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை என்றும் அரசாங்க அகழ்வாய்வுத் துறையினர் கூறுகிறபடியால், சமண சமயம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வந்திருக்க வேண்டும் என்று துணியப்படும். இவர்கள் கூறும் காலமும் பத்திர பாகு முனிவர் தென் திசை நோக்கி வந்த காலமும் ஒத்திருப்பதும் கருதத் தக்கது.

வட நாட்டினின்றும் தென்னாடு வந்த பன்னிராயிரம் சமணத் துறவிகளும் மைசூரில் தங்கி காலங் கழித்திருக்க மாட்டார்கள். தமது மதக் கொள்கையைப்



பரப்புவதையே தமது நோக்கமாகக் கொண்ட அவர்கள், மைசூருக்கு அடுத்திருக்கும் தமிழ் நாட்டிலும் வந்து தமது சமண சமயத்தைப் பரவச் செய்திருப்பர் என்பது தவருகாது.

இன்னொரு சான்றினுலும் இச் செய்தி உறுதிப்படுகின்றது. மகாவம்சம் என்னும் பௌத்த மத நூலில், இலங்கையிலே கி.மு. மூன்ரும் நூற்ருண்டிற்கு முன்பே சமண சமயம் இருந்ததாகக் கூறப்படுகிறது. கி.மு. 377 முதல் 307 வரையில் இலங்கைத் தீவை அரசாண்ட பாண்டு காபயன் என்னும் அரசன், அநுராதபுரம் என்னும் நகரத்திலே சோதியன், கிரி, கும்பண்டன் என்னும் நிகண்ட (சமண) மதக் குருமாருக்குப் பள்ளிகள் கட்டிக் கொடுத்தான் என்று மகா வம்சம் கூறுகிறது.

வட இந்தியாவை அரசாண்ட சந்திர குப்தஅரசனும் இலங்கைத் தீவை அரசாண்ட இந்தப்பாண்டு காபய அரசனும் ஏறத்தாழ ஒரே காலத்தில் வாழ்ந்திருந்தவர் என்பது கருதத் தக்கது. பாண்டு காபய அரசன் காலத்தில் சமண சமயத்தவர் இலங்கையில் இருந்தார்கள் என்ருல், அவர்கள் தமிழ் நாட்டிலிருந்தே சென்றிருக்க வேண்டும்; வட இந்தியாவில் இருந்து கப்பல் ஏறிக் கடல் வழியாக நேரே இலங்கைக்குச் சென்றிருக்க முடியாது. ஏனென்ருல் சமண சமயத் துறவிகள், ஆறு முதலிய சிறு நீர்ப் பரப்புகளைக் கடந்து செல்லலாமே தவிர, கடலில் பிரயாணம் செய்யக் கூடாது என்பது அந்த மதக் கொள்கை. ஆகவே வட இந்தியாவிலிருந்து சமணர் கப்பலேறி நேரே இலங்கைக்குச் சென்ருர்கள் என்று நம்புவதற்கில்லை. அவர்கள் தமிழ் நாட்டிலிருந்தே இலங்கைக்குச் சென்றிருக்க வேண்டும். இலங்கைக்கும் பாண்டி நாட்டுக்கும் இடையில் உள்ள மன்ஞர் குடாக்கடல் மிகக் குறுகி ஆழமற்று ஒரே. நாளில் இலங்கைக்குச் செல்லக் கூடிய அண்மையில் இருந்தது என்பது நினைவு கூரத் தக்கது. ஆகவே, கி.பி. மூன்ரும் நூற்ருண்டிலேயே தமிழ் நாட்டிலும் இலங்கைத் தீவிலும் சமணர் இருந்தனர் என்று துணிந்து கூறலாம்.



இன்னும் ஊன்றி ஆராயப் புகுந்தால், கி.மு. மூன்ரும் நூற்ருண்டிற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே சமண மதம் தமிழ் நாட்டிற்கு வந்திருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது. மகாபாரத காலத்திலே, அதாவது கண்ணபிரானுடைய காலத்திலே சமணர் தமிழ் நாட்டிற்கு வந்ததாகத் தெரிகிறது. 22-வது தீர்த்தங்கரராகிய நேமிநாத சுவாமி கண்ணபிரானுடைய நெருங்கிய உறவினர் என்றும், கண்ணபிரான் எதிர்காலத்திலே சமண தீர்த்தங்கரராய்ப் பிறந்து சமண மதத்தை நிலைநாட்டப் போகிருர் என்றும் சமண நூல்கள் கூறுகின்றன. இக்காலத்துச் சமணருடைய நம்பிக்கையும் இதுவே. கண்ணபிரானும் அவரைச் சேர்ந்தவர்களும் சமண சமயத்தவர் என்று சமண நூல்கள் கூறுகின்றன.

கண்ணபிரானிடத்தில் அகத்தியர் சென்று அவர் இனத்தவராகிய பதினெண் குடி வேளிரையும் அருளாளரையும் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து குடியேற்றினுர் என்று தொல்காப்பிய உரையிலே நச்சினுர்க்கினியர் கூறுகிருர் :

அகத்தியர் தென்ருடு போதுகின்றவர் 'துவராபதிப் போந்து நிலங் கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் பதினெண் குடிவேளிரையும் அருவாளரையும் கொண்டு போந்து'' காடுகெடுத்துநாடாக்கி குடியேற்றினுர் என்று கூறுகிருர் ; (தொல் : எழுத்து. பாயிரம் உரை).

''இது மலயமாதவன் நிலங் கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண் வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன் தொழில் உரித்தென்கிறது;''

(தொல் : பொருள். அகத்திணை. 32-ஆம் சூத்திரத்திற்கு நச்சினுர்க்கினியர் எழுதிய உரை).

மலயமாதவனுகிய அகத்தியர், நிலங்கடந்த நெடுமுடி யண்ணலாகிய கண்ணபிரானிடமிருந்து பதினெட்டுக் குடியைச் சார்ந்த வேளிரையும் அருவாளரையும் தமிழ் நாட்டிற்குக்கொண்டுவந்து குடியேற்றிய செய்தி இதஞல் அறியப்படும். அகத்தியர் என்னும் பெயருடையவர் பலர் இருந்தனர். அவர்களுள் ஓர் அகத்தியர் வேளிரையும் அருவாளரையும் தமிழ் நாட்டில் குடியேற்றிய செய்தியை நச்சினுர்க்கினியர் கூறுகிருர். இவர் இவ்வாறு கூறுவது இவர் காலத்தில் கர்ணபரம்பரையாக வழங்கி வந்த வரலாருக இருக்க வேண்டும்.

கண்ணபிரான் சமணராக இருந்தால் அவர் வழியினராகிய அகத்தியரால் அழைத்து வரப்பட்ட பதினெண்குடி வேளிரும் அருவாளரும் சமணராக இருந்திருக்க வேண்டும். பதினெண் குடி வேளிர் தமிழ் நாட்டில் குடியேறிய பின், சேர, சோழ, பாண்டிய அரசர்களுக்குப் பெண் கொடுக்கும் உரிமையுடையராக வாழ்ந்து வந்தனர் என்று சங்க நூல்களினுல் அறிகிருேம். அன்றியும் அவர்கள் அக் காலத்தில் சமண மதத்தவராக இருந்தனர் என்பதும் ஆராய்ச்சியினுல் விளங்குகிறது. அகத்தியருடன் வந்த அருவாளர் தொண்டை நாட்டில் குடியேறினுர்கள். அவர்கள் குடியேறிய பிறகு தொண்டை நாட்டிற்கு அருவா நாடு (அருவாளர் நாடு) என்று பெயர் உண்டாயிற்று. அருவாளரும் அக்காலத்தில் சமண மதத்தராக இருந்தனர் என்று கருதப்படுகின்றனர். நெல்லூர் மாவட்டம் கண்டகூர் தாலுகாவைச் சேர்ந்த மாலகொண்டா என்னும் மலை மேல் உள்ள ஒரு குகையில் கி. மு. 3-ஆம் நூற்ருண்டில் எழுதப்பட்ட சாசனம் ஒன்று காணப்படுகிறது. இது பிராகிருத மொழியிலே பிராமி எழுத்தினுல் எழுதப்பட்டிருக்கிறது. ''அருவாஹி (ள) குலத்து நந்த செட்டி மகன் சிறீவிரி செட்டி செய்வித்த குகை'' என்று இந்தச் சாசனம் எழுதப்பட்டிருக்கிறது.

இதில் கருத வேண்டியதென்னவென்ருல், தமிழ் நூல்களில் அருவாளர் என்று கூறப்படுபவர் தாம் இச் சாசனத்தில் அருவாஹிள குலம் என்றுகூறப்படுகிருர் என்பதும் இந்தக் குகை சமணத் துறவிகளுக்காக அமைக்கப்பட்டது என்பதும் அருவாளர் பண்டைக் காலத்தில் சமணராக இருந்தனர் என்பதும் ஆகும். இன்னொரு சிறப்பு என்னவென்ருல், இந்தச் சாசனம் காணப்படுகிற இடம் பண்டைக் காலத்தில் தமிழ் நாடாக (தமிழ் நாட்டின் வட எல்லையாக )இருந்தது என்பதே. கி.பி. 2-ஆம் நூற்ருண்டில் இருந்த டாலமி என்னும் யவன ஆசிரியர் அருவார்னுய் (Aruvarnoi) என்னும் இனத்தார் இந்தப் பகுதியில் (தொண்டை நாட்டில்) வாழ்ந்தனர் என்று கூறுவது இந்த அருவாளரைத்தாம் போலும்!

கண்ணபிரான் மரபினராகிய பதினெண்குடி வேளிரும் அருவாளரும் சமண சமயத்தவராக இருந்ததோடு அவர்கள் தென்னுட்டிற்கு வந்த பிறகு கண்ணன் பலராமன் என்னும் இருவரையும் வழிபடும் வழக்கத்தைத் தமிழ் நாட்டில் நிலைநாட்டினுர்கள் என்றும் தெரிகிறது. கண்ணன் பலராமன் வணக்கம் சங்க காலத்திலே தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்தது என்பதைச் சங்க நூல்கள் பல இடங்களில் கூறுகின்றன. வைணவ மதம் தலை எடுத்த பிற்காலத்திலே பலராமன் வணக்கம் மறக்கப்பட்டுக் கண்ணபிரான் வணக்கம் மட்டும் (கண்ணன் திருமாலின் அவதாரம் என்னும் முறையில்) கைக்கொள்ளப்பட்டது.

இச்செய்திகளை இங்குக் குறிப்பிட நேர்ந்த காரணம் என்னவென்ருல் கி.மு. 3-ஆம் நூற்ருண்டுக்கும் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே—கண்ணபிரான் வாழ்ந்திருந்த மகாபாரதக் காலத்திலேயே—சமண சமயம் தமிழ் நாட்டிற்கு வந்தது என்பதைக் கூறுவதற்கே யாகும். கண்ணபிரான் தொடர்புடைய பாரதப் போர் நிகழ்ச்சியைச் சகித்திர நிகழ்ச்சியாக இந்திய சரித்திர நூல்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற படியினுலே, கண்ணபிரான் காலத்தில் இருந்த அவர் உறவினரான நேமிநாத தீர்த்தங்கரரும் சரித்திர காலத்தவர் ஆவார். ஆகவே, நேமிநாத தீர்த்தங்கரர் காலத்திலே—கண்ணபிரான் பாரதப் போர் செய்த அந்தக் காலத்திலே—அகத்திய முனிவருடன் தமிழ் நாடு வந்த பதினெண்குடி வேளிர் அருவாளர் ஆகிய இவர்கள் மூலமாகச் சமண சமயம் தமிழ் நாட்டிற்கு வந்திருத்தல் கூடும். மிகப் பழைய அந்தக் காலத்திலே சமயப் பகையும் காழ்ப்பும் அதிகமாகப் பாராட்டப்படவில்லை ; சமயப் பகையும் மதப் போர்களும் நிகழ்ந்தது மிகப் பிற்காலத்திலேயாகலின், சமரச நோக்கமுடைய மிகப் பழைய காலத்தில் எல்லா மதங்களும் சகோதர பாவத்துடன் இருந்தன. தமிழ் நாட்டிலிருந்த மதங்களில் மிகப் பழமையானது சமண மதம் என்பதில் யாதோர் ஐயமும் இல்லை.



# வர்த்தமானர் வரலாறு

இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு !

வட இந்தியாவில் சின்னஞ்சிறு நாடுகளாகப் பதினுறு அரசுகள் இருந்தன. அவற்றில் மகதமும் ஒன்று. அதனையடுத்திருந்த விதேக நாட்டில் உள்ள குந்தக் கிராமம் என்ற ஒரு நிலப் பகுதியைச் சித்தார்த்தன் என்னும் சிற்றரசன் ஆண்டு வந்தான். செல்வாக்கு மிகுந்திருந்த அவன், அருகில் இருந்த லிச்சாவியர்களின் மன்னனுன சேதக மாமன்னனின் மகள் திரிசிலை பிரியகாரிணியைத் திருமணம் செய்தான். அவர்கள் இருவருக்கும் கி.மு. 599 ஆம் ஆண்டு, சித்திரைத் திங்கள், பதின்மூன்ரும் நாளில் வளர்பிறைப் பருவத்தில் ஓர் ஆண் மகவு பிறந்தது.



[illegible]னுக்குச் செல்வன் பிறந்[illegible] என்னி மக்கள் மகிழ்ந்தார்கள். நகர் முழுதும் தோரணங்கள் கட்டி அணி செய்தார்கள். மகன் பிறந்ததனால் மகிழ்ச்சியுற்ற மன்னனும் வரிகளைக் குறைத்தான்; சிறைக் கைதிகளுக்கு விடுதலை கொடுத்தான். அறிஞர் பெருமக்களுக்கு அன்பளிப்பு வழங்கினான்.

குழந்தை பிறந்ததிலிருந்து நாட்டில் செல்வம் பெருகிக் கொண்டே இருந்ததால்-மன்னனும், அவன் தேவியும் மனமகிழ்ந்தனர். குழந்தைக்கு 'வர்த்தமானன்' என்று பெயர் சூட்டினர்.

பிள்ளைப் பருவத்தில் ஒருநாள், வர்த்தமானரும் அவரது நண்பர்களும் ஒரு பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மரத்தின் மீதிருந்து ஒரு பாம்பு படம் எடுத்து ஆடியது. அதனைக் கண்டதும் பிள்ளைகள் அனைவரும் பயந்து நடுங்கி ஓடி ஒளிந்து கொண்டனர். ஆனால் வர்த்தமானர் சிறிதுகூட அச்சம் இல்லாமல், மரத்தின் மீது ஏறி, பாம்பின் படத்தின் மீது கால்களை ஊன்றி, அதன் கொட்டத்தை அடக்கினார். இவ்வாறு, சின்னஞ் சிறு வயதிலேயே அஞ்சாமையுடனும் வீரத்துடனும் திகழ்ந்ததனால் 'மகாவீரர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார்.

ஊக்கம், விடா முயற்சி, அஞ்சாமை, பிறர்க்கு உதவி செய்தல் முதலிய நற்பண்புகள் அவரிடம் இளம் பருவத்திலேயே குடிகொண்டிருந்தன.

வர்த்தமானர் காளைப் பருவம் எய்தியவுடன் அவருக்கு மணம் முடிக்க வேண்டுமென்று பெற்றோர் நினைத்தனர். தங்கள் கருத்தினைத் தூதுவர்களின் வாயிலாகத் தம் மகனிடம் கூறினர். ஆனால் வர்த்தமானர் மணம் செய்ய மறுத்துத் துறவியாகிவிட்டார். (மணம் செய்துகொண்டார் என்றும் சிலர் கூறுகின்றனர்)

வர்த்தமானர் பிறந்து வளர்ந்த காலத்தில் மக்கள், பொருட் செல்வத்தில் திளைத்துஇருந்தனர். சுதந்தரமாகவும் உரிமையோடும் வாழ்க்கை நடத்தினர். என்றாலும் தியாகம், நேர்மை, சத்தியம், உறுதி, ஊக்கம், இரக்கம் முதலிய அறநெறிப் பண்புகள் குறைந்து காணப்பட்டன. எனவே மக்களிடம் அறநெறி வாழ்க்கையைப் பரப்பிட, வர்த்தமான மகாவீரர் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டார்.

அக்காலத்தில், இந்து மதத்தினர் வேள்வி என்ற பெயரால் உயிர்க்கொலை நடத்தி வந்தனர். 'வேள்வியில் உயிர்களைப் பலியிடுதல் கொலையாகாது' என்றும் கூறி வந்தனர். வர்த்தமான மகாவீரர் உயிர்க்கொலையைக் கண்டித்தார். கொல்லாமையைவலியுறுத்தினார்.

பன்னிரண்டு ஆண்டுகள் கடும் நோன்புகள் இயற்றினார். அதன் பின்னர் நாடெங்கும் அலைந்து அறநெறிகளைப் போதித்தார். தமது எழுபத்திரண்டாவது வயதில் பாவாபுரி என்னும் ஊருக்குச் சென்று அறவுரை நிகழ்த்தினார்.

அப்போது, அவரது சீடர்களில் ஒருவர் அவரிடம் கேட்டார்:

''ஐந்து அறங்களில் முதன்மையானது எது ?''

''கொல்லாமை எனப்படும் அகிம்சைதான் முதன்மையான அறம்''—வர்த்தமானர் கூறினார்.

அறவுரை முடிந்தவுடன் மகாவீரர் துயிலில் ஆழ்ந்தார்; வீடுபேறடைந்தார். அவர் வீடுபேறடைந்தது கி.மு. 527 ஆம் ஆண்டு எனத் தெரிகிறது.

சமண சமயத் தீர்த்தங்கரர்களில் 24வது தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர், மிகவும் புகழ் பெற்று விளங்கினார். மற்றத் தீர்த்தங்கரர்களை விட இவர், அனைத்து நாட்டினருக்கும் அறிமுகமாகி விட்டார்.

த. பி.

# ஜைனமும் பொதுவுடைமையும்




## ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால்

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் மக்கள் சமுதாயம் சீர்குலைந்தது. நன்மை தீமைகளைப் பகுத்துணராமல் தங்கள் தங்கள் விருப்பம்போன்று, கண்டதே காட்சி கொண்டதே கோலமாக மக்கள் வாழ்ந்தனர். இந்நிலையில்தான் பகவான் விருஷபதேவர் தோன்றினார். மக்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முனைந்து அதற்கான பல திட்டங்களை வகுத்தார். அத்திட்டங்களின் தலையாய அறமாக அகிம்சையை அமைத்தார். இப் பேரறத்தின் அடிப்படையில் மக்களுக்குக் கல்வி, உழவு, வாணிபம், சிற்பம்போன்ற பல தொழில்களைக் கற்பித்து மக்கள் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கினார். அகிம்சையே அமைதியும், அன்பும் இன்பமும் கொண்ட சமுதாயத்தை வளர்க்கும் என்பதை விளக்கிப் பொருளாதாரத் தத்துவத்தையும் வகுத்தார். பொருள் ஈட்டுவோர் ஒவ்வொருவரும் பொருளை வரையறுத்துக் கொள்ள வேண்டும். மிகு பொருள் ஈட்டிப் பிறருடைய வாழ்க்கையைத் தாழ்வுறச் செய்யக் கூடாது என அறிவுறுத்தினார்.

ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்யும் அகிம்சா தருமத்தில் பொருளை வரையறுத்துக்கொண்டு வாழ்தலும் அடங்கும். அகிம்சையின் தத்துவம் மக்கள் பலரும் ஒருமைப்பாட்டு உணர்ச்சியையும், பொருளை ஈட்டுவோர், பலரும் வாழ நாமும் வாழ்வோம் என்ற பரந்த நோக்கங்கொண்டு மிகுபொருள் விரும்பாது, பிறரும் பொருளீட்டும் வாய்ப்பையும் பெறவல்ல பொருளாக அறிவியல் தத்துவத்தை விளக்கினார் பகவான் விருஷபதேவர்.

உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் பிறருக்கு ஊறு நேரா வகையில் அருளறத்தைக் கடைபிடிப்பது போன்று, பொருளாலும், பிறருக்கு இன்னல் விளையலாகாதென்ற கொள்கையை முதன் முதல் உலகுக்கு உரைசெய்த பொருளாதார நிபுணர் நாம் போற்றற்குரிய பகவான் விருஷபதேவர். அதுமட்டுமல்ல, சமதர்மக் கொள்கைகளுக்கு வித்திட்ட முதல் அரசியல் தலைவரும் அவரே. இப்புதிய சமுதாயக் கொள்கையை அகிம்சா சமுதாயம் அல்லது அறநெறிச் சமுதாயம் எனப்போற்றி அழைத்து வந்தனர். இக்காலத்தில் ஜைனம் என அழைக்கின்றனர்.

இவ் அறநெறித் தத்துவக் கொள்கையை ஆழமாக ஆராய்ந்தறிய வேண்டும். பரிவு உணர்ச்சியோடு கூடிய கண்ணோட்டத்துடன் பயில வேண்டும். தன்னலமற்ற பொதுமைக் கண் கொண்டு பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் அகிம்சையின் உள்ளடக்கிய பொதுவுடைமைச் சமுதாயத்தின் மேன்மை வெளிப்படும். அமைதியான உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ற உணர்வு தோன்றும். அதுமட்டுமல்ல, இம் மாண்புமிக்க அகிம்சா சமுதாயத்தின் வழியில் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற கடமை உணர்ச்சியும் உள்ளத்தில் உருவாகும். எனவே, அக்கால மக்கள் அப்புனித சமுதாய வாழ்க்கையை ஆர்வமொடு ஏற்று அப்பாதையில் ஒழுகலாயினர். அப்பெருமகன் வகுத்தருளிய தொழில்களை உணர்ச்சியோடும், ஊக்கமோடும் புரியலாயினர். அவ்வாறு மக்கள் செயற்பாடு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. தொழில்கள் பலவும் தனிச் சிறப்பைப் பெற்றன. அவர்களுக்குள் வளர்ந்துவரும் ஒற்றுமையும் ஒருமைப்பாட்டின் உணர்ச்சியுமே அவ்வாறு பணிபுரியச் செய்தது. அவர்களுக்கு சாதி, சமயம் என்ற சொற்களே தெரியாது. அன்றுள்ள மக்களை இன்றுபோல் உங்கள் சாதி என்ன? உங்கள் சமயம் யாது ?

எனக் கேட்டால் அச்சொற்களையே கேட்டறியாத அவர்கள் விழிப்பார்கள். உங்கள் தருமம் யாது என வினவிடின் 'அகிம்சா தருமம்' என்று விரைந்து விடை பகருவார்கள்.

இப்புனித அருளறமும், சமதர்ம சமுதாயமும், பகுத்துண்டு வாழும் பண்பும் பல்லாயிரம் ஆண்டு வரை பாரதநாட்டில் ஒளி விட்டு வீசிற்று. பகவான் விருஷப தேவருக்குப்பின் அப்பெருமகனுக்கு ஒப்பாக இருபத்து இரண்டு தீர்த்தங்கரர்கள் தோன்றி அவ்வப்போது அப்புனிதக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பி வளர்த்துவந்தனர். இம்மாபெரும் அறநெறிகள் மிகமிகப் பிற்காலத்தில் சிதறுண்டன. பல்வேறு கொள்கைகளைக் கொண்ட பல்வேறு மதங்கள் தோன்றின. அன்றைய அறநெறிக்கு மாறுக மதங்களின் பெயராலும், தெய்வத்தின் பெயராலும் சாதிப் பாகுபாடுகளும், சமய வேறுபாடுகளும் தோன்றி மக்கள் சமுதாயத்தைச் சீர்குலைத்தன. தன்னலமும், தயவின்மையும் தலைவிரித்தாடின. எங்கும் சுரண்டல்! எங்கும் பதுக்கல்! எங்கும் ஆண்டான் அடிமை போன்ற தீமைகள் மலிந்திருந்தன.

## பகவான் மகாவீரர்:

இச்சூழ்நிலையில்தான் பகவான் மகாவீர வர்த்தமானர் தோன்றினார். இவர் கி.மு. 599-ல் பீஹாரைச் சேர்ந்த குண்டலபுரத்தில் அரசர் குடும்பத்தில் பிறந்தார். இப்புனிதர், பகவான் விருஷப தேவர் வழியில் தோன்றிய இருபத்துநான்காம் தீர்த்தங்கரர் ஆவார். இவர் கருவிலேயே திருவுடையவராகத் திகழ்ந்தமையால் ஆட்சியைவிட ஆன்மீகத் துறையிலேயே அவர் மனம் சென்றது. எனவே மக்களின் வாழ்க்கைப் பண்பில் அக்கறை கொண்டார். அக்கால மக்கள் பண்டைய அறநெறிகளுக்கு மாறுக மக்கள் வாழ்க்கை சென்று கொண்டிருந்ததைக் கண்டார். நாம் மேலே கூறியவாறு சாதிச் சண்டையும், சமயப்போரும் மற்றும் பல தீய செயல்களும் எங்கும் காணப்பட்டன. இவைகளைச் சட்டத்தின் வாயிலாகத் திருத்த இயலாது என்றும், ஆட்சியின் வலிமையால் சட்டம் இயற்றினும் தம் ஆட்சியிலன்றி மற்றப் பகுதிகட்கு உதவாது என்பதை உணர்ந்தார். பகவான் விருஷபதேவர் அருளிய பண்டைய அறநெறிகளை எங்கும் பரப்ப வேண்டும் என எண்ணினார். இவ்வெண்ணம் வெற்றி பெற வேண்டின் வாழ்க்கையைத் துறப்பதேவழி எனத் துணிந்தார்.



செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். நாட்டாட்சியைத் துறந்து துறவரசரானார். இம்மாபெரும் தியாக உணர்ச்சியொடு நாடெங்கும் சென்று அறவுரை நிகழ்த்தலானார். அகிம்சையின் அடிப்படையில் அக்கொள்கைகளை மக்கள் கருத்திலும், வாழ்க்கையிலும் ஊடுருவச் செய்தார். எல்லா உயிர்களையும் உன் உயிர்போல் கருது; எல்லா மக்களையும் உடன் பிறந்தாராக நேசி; என்பது அவர் வீர உரைகளுள் முதன்மையானவை. அகிம்சை அல்லது கொல்லாமை, மிகுபொருள் விரும்பாமை, பகுத்துண்டு வாழ்தல், பொய் பேசாமை, களவாடாமை, கள்ளுண்ணுமை, ஊனுண்ணுமை, பிறர்மனை நயவாமை, சான்றோரை இகழாமை போன்ற நல்லறங்களை நாடெங்கும் பரப்பினார். இப்பேரறங்கள் பெரும்பாலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எங்கும் மக்கள் வாழ்க்கை தூய்மையாகக் காணப்பட்டது. எங்கும் அறிவொளி வீசிற்று. பண்டைய அறநெறிகள் மறுமலர்ச்சியுற்றதாக மக்கள் தோன்றினார்கள். இவ்வுண்மை வரலாற்றை 'ஆதிகால இந்தியாவில் பொதுவுடைமை' என்ற ஆங்கிலக் கட்டுரையைத் தமிழாக்கம் செய்த திரு. எஸ். என். என்ற அறிஞர் 9-6-1947-ஆம் தேதி பாரத தேவியில் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

''கிறிஸ்து பிறப்பதற்கு முன் 5 அல்லது 7-ஆம் நூற்றுண்டில் அஃதாவது ஜைன சமயம் தலையெடுத்திருந்த காலத்தில் நம் நாட்டில் பொதுவுடைமை அமலில் இருந்திருக்கிறது.' எல்லா நிலங்களும் பொதுவாக உழப்படும். பலன் எல்லார்க்கும் பங்கிடப்படும். செல்வமும் சமமாகப் பங்கிடப்பட்டிருந்தது. அக்காலத்தில் பிச்சைக்காரர்கள் கிடையாது. நிலச்சுவான்தாரும் கிடையாது.''

இவ்வரலாற்றால் அக்காலத்தில் மிகுபொருள் விரும்பாக் கொள்கையும் பகுத்துண்டு வாழ்தலுமாகிய அகிம்சா சமுதாயம் அமைந்திருந்ததை அறிகின்றோம். பகவான் மகாவீரரால் மறுமலர்ச்சியுற்ற இப்பேரறங்களைப் பிற்கால அறிஞர்களும் புலவர்களும் அவரவர்கள் மொழிகளில் சொற்பொழிவு வாயிலாகப் பரப்பி வந்ததோடு இலக்கியங்களாகவும், நீதி நூல்களாகவும் இயற்றி உலகுக்கு வழங்கினர். அத்துறையில் தமிழகத்தில் திருவுள்ள தேவர் என்ற பேரறிஞர் மகாவீரரின் கொள்கைகளைத் திருக்குறள் என்ற பெயரால் ஒரு சிறந்த நீதிநூலை இயற்றித் தந்தார். அப்புகழ்ச்சி நூலுள்



(Famous Book) மிகுபொருள் விரும்பாமை என்ற பேரறம் மிளிர்வதைக் காண்போம்.

## மிகுபொருள் வெஃகாமை

நமது தமிழ்மறையாகிய திருக்குறளில் வெஃகாமை என்னும் அதிகாரத்தை ஆராயின், ஒவ்வொருவரும் தங்கள் நிலங்கள் அல்லது பொருள் வருவாய்களுக்கு வரம்பு கோல வேண்டும் என்னும் அறநெறியைக் காணலாம். ''வெஃகாமை'' என்னும் அதிகாரம் 'மிகுபொருள் வெஃகாமை' என்ற தலைப்பில்தான் இருக்க வேண்டும். ஆனால் முதலாளித்துவ மனப்பான்மை படைத்தவர்கள் அக்கொள்கையை உலகம் அறியாவண்ணம் செய்ய வேண்டி வெஃகாமை என்று மாற்றியதோடு அதனடியாக விளங்கும் குறள்களுக்கும் போலி உரைகூறி மறைத்து வைத்துள்ளார்கள்.

''நடுவின்றி நன்பொருள்
வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்''

என்னும் குறளில், நன்பொருள் என்பதற்குப் பரிமேலழகர் போன்றவர்கள் பிறருடைய நல்ல பொருள் என உரை கூறியுள்ளார்கள். இவ்வுரைப்படி நோக்கின் திருக்குறளாசிரியரின் பொருளாதாரக் கொள்கையும், அக்காலத்தில் நிலவியிருந்த மிகுபொருள் விரும்பாத மேலான அறநெறியும் மாய்ந்து, மக்களிடையே சுயநலக்கொள்கைகள் வளர்ந்துவிடுகின்றன. எனவே குறளாசிரியர் கொள்கை எதுவென ஆராய்வோம்.

நன்பொருள் என்பதற்கு நல்ல பொருள் அல்லது மிகுபொருள் என்பது பொருள். நல்ல என்பதற்கு மிகுதி என்னும் பொருள் உண்டென்பதை, ''நல்ல மழை பெய்தது'' ''நன்ருக அடித்துவிட்டான்'' என்ற உலகியல் வழக்கிலே காணலாம். தொல்காப்பியத்திலும் ''நன்று பெரிதாகும்'' என்பது சூத்திரம். எனவே நடுவின்றி நன்பொருள் என்பதனுல் இங்கே நடுநிலைமையின்றித் தேவைக்கு மேலான பொருளைப் பதுக்கி வைத்தல் என்பது கருத்தாகும். பரிமேலழகர் கூற்றுப்படி பிறர்பொருள் எனக்கொண்டால், பிறருடைய நன்பொருளை வெஃகாமல் தீயபொருள்களை விரும்பலாம் என்ருகிறது. ஆகவே தேவைக்கு மேலான பொருள்களை மேலும் மேலும் சேர்த்துப் பதுக்கி வைத்தல் நேர்மையன்று என்பதுதான் குறளாசிரியர் கொள்கை.

பொருளீட்டுவோர் பேராசையால் பொருளை வரம்பின்றிக் குவிக்கின்றனர். இச்செல்வர்களில் பெரும்பாலோர் தங்கள் கௌரவத்திற்கும் ஆடம்பர வாழ்க்கைக்கும் ஆசைப்பட்டுத் தங்கள் வியாபாரம் முதலிய பொருள் சேர்க்கும் துறைகளில் கொள்ளை லாபம் அடித்து, பொருளைக் குவிக்கின்றனர். நிலம் பெற்றவர்களும் பொருளாசையால் விளைபொருள்களைப் பதுக்கி வைக்கும் இரக்கமற்ற முறையைக் கையாளுகின்றனர். இவை யாவும் பொருளாதார உரிமையின் பெயரால் நடைபெறுகின்றன. உரிமை பெற்றிருந்தாலும் அம்மிகுதிப் பொருள் பிறருடையதே என்பது தேவர் கருத்து. மக்கள் நலமேம்பாட்டிற்குரிய ஐம்பெரும் அறங்களில் மிகுபொருள் வெஃகாமை ஒன்று என்பதையும், அவ்வறத்தை மேற்கொண்டு வாழ்வோரே அறிவுடையார் என்பதையும் விளக்கவே திருக்குறள் ஆசிரியர் தேவர், ''அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்' எனப் பாராட்டியுள்ளார்.

மக்கள் சமுதாயம் சமானத்துடனும் சகோதர உணர்ச்சியுடனும் வாழ, 'கொல்லாநெறி' எத்துணை இன்றியமையாததோ அத்துணை இன்றியமையாதது மிகுபொருளை விரும்பாமை என்னும் கொள்கை. தன் தேவைக்கு மேலான பெரும் பொருள்களை ஒருவர் பதுக்கி வைத்திருந்தால் அது பிறருடைய வாழ்க்கையைப் பாதிக்கும். ஆகவே அவ்விழி செயல் மனித சமூகத்திற்குத் துரோகம் செய்த குற்றமும் பாவமும் ஆகும். ஏன்? அது களவைவிட எந்தவிதத்திலும் குறைந்தது அன்று. ஆகவே திருக்குறளாசிரியர், கொல்லா விரதமும், மிகுபொருள் விரும்பா நோன்பும் மக்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாத இரு பேரறங்கள் என்பதை.

''பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந்தலை

என அழகாக அறிவுறுத்துகின்றுர். இக் குறட்பாவிலே ''பகுத்துண்ணலையும், பல்லுயிர் ஓம்புதலையும்'' அறங்களாக முதன் முதல் தொகுத்தளித்த நூலோராகிய 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனையும் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இதனுல் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பு பண்டைக்காலத்திலிருந்தே நமது நாட்டில் நிலவியிருந்ததென்பதையும் அறிகின்றோம். பகுத்துண்ணலெனில் தாம் ஈட்டும் பொருள்களில் மிகுதியாயுள்ள பொருள்களைப் பதுக்கி வைக்காமல் பலருக்கும் பயன்படுமாறு சமுதாய நலத்திற்கு உதவ வேண்டும் என்பதாகும். அதுமட்டுமன்று, தமது பொருளீட்டலுக்கு வரம்பு வைத்துக் கொள்ளுதலுமாகும். இதனுல் பிறருக்கும் பொருளீட்டும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பலரும் இன்புற்று வாழ்வர். நாட்டில் வறுமையும் பசியும் தலைகாட்டா. இவ்வின்பக் காட்சியைக் காண்பற்கு ஒவ்வொரு மனிதனும் மேற்கூறிய 'பகுத்துண்ணலும்', 'பல்லுயிரோம்பலும்' ஆகிய இரு பேரறங்களையும் மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்துகின்றுர் நம் குறளாசிரியர்.

அகிம்சையை அரசியலிலே புகுத்தி அகிம்சையின் பெருமையை உலகறியச் செய்த மகாத்மா காந்தியடிகள் தாம் எழுதிய 'இந்திய சுயராஜ்யா' என்றநூலில்,

''மனிதன் தனக்குத் தேவைக்கு வேண்டிய பொருளைத் தேடிக் கொண்டு தனது ஆசைக்கு அணை கட்டிவிட வேண்டும்'' என எழுதியுள்ளதினின்றும் மகாத்மா காந்தியடிகளும் அகிம்சையையும் மிகுபொருள் விரும்பான்மையையுமே மக்கள் சமுதாய வாழ்வுக்கு இன்றியமையாதவை என்பதை மேற்கொண்டவர் என அறிகின்றும்.

பசியும், பிணியும், வறுமையும் இல்லாத ஒரு சமுதாயத்தை நமது உள்ளத்தில் கற்பனையாகப் படைத்துக் காணின், நமதுள்ளத்தே நம்மையுமறியாமல் ஓர் இன்ப உணர்ச்சி உண்டாகிறதல்லவா? இக்கற்பனை இன்பத்தை உண்மையிலேயே நடைமுறையில் மக்களிடையே காணின், நமதுள்ளம் எவ்வாறு விளங்கும்! மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைக்குமே! இப்பெருங்களிப்பு எத்தகையதென்பதையும் தேவர் நமக்குக் கூறத் தவறவில்லை.

''தம்மில் இருந்து தமது பாத்
துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு''

என்னும் குறளில் அரிவை முயக்கும் பத்துண்ணலால் உண்டாகும் இன்பத்தைப் போன்றதென உவமையாகக் கூறி உவமையைப் பொருளாக்கி உணருமாறு செய்துள்ளார்.

## தமிழ் இலக்கியங்களும் பகுத்துண்டு வாழ்தலும்

இனி திருக்குறள் கூறும் மிகுபொருள் வெஃகாமை, பகுத்துண்டு வாழ்தல் என்னும் சீரிய கொள்கைகளை வற்புறுத்தும் தமிழ் இலக்கியங்களைக் காண்போம்.

பாரதநாட்டு ஜைன அறவோர் அறநெறிகளையும் பொருளாதாரக் கொள்கையையும் பிணைத்தே மக்கள் வாழ்க்கை நலத்திற்கு வழி வகுத்துள்ளார்கள். இல்லறத்தாருக்குரிய அறங்களாகக் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை ஆகிய பஞ்சசீலங்களையும் அன்னூர் வகுத்துள்ளனர். இதனை திருக்கலம்பக ஆசிரியர்,

''விரையார் மலர்மிசை வருவார்
திருவறம் விழையார்
தொலையினை விழையார் பொய்
யுரையார் களவினை யொழுகார்
பிறர்மனையுவவார்
மிகுபொருள் உவவார்''

என அழகாக விளக்கியுள்ளார். இவைபோன்றே பகுத்துண்டு வாழ்தலைப் பற்றித் திருத்தக்க தேவர் தமது நரிவிருத்தத்தில்



''பங்காமை செல்வராகிப் பகுத்
துண்டு வாழ்தல் ஒன்றே
தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை
நிற்றல் ஒன்றே''

என்றும் சீவகசிந்தாமணியில்,

''அட்டுநீர் அருவி குன்றத்
தல்லது வயிரந்தோன்ரு
குட்டநீர் குளத்தினல்லால்,
குப்பைமேற் குவளை பூவா
விட்டுநீர் வினவிக் கேண்மோ
விழுத்தகையவர்கட் கல்லால்
பட்டது பகுத்துண் பாரிப்
பார்மிசை இல்லைகண்டாய்''

என்றும் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறே திருக்குறள் நெறியைப் பின்பற்றும் பல இலக்கியங்களில் பொருள் வருவாயை வரையறுத்துக் கொள்ளும் அறநெறியை வற்புறுத்துவதைக் காணலாம். இதனால் பகுத்துண்டு வாழும் பண்பு இயல்பாகவே அமையும். பொருளாதாரச் சமத்துவம் பொலிவுடன் மக்களிடையே தோற்றமளிக்கும்.

''இயற்றலும் ஈட்டலும் காத்த
லும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு''

என்னும் தமிழ்மறையின் ஆட்சி காட்சியளிக்கும். உறுபசியும் ஓவாப்பிணியும், செறுபகையும் சேராத இன்பநாடாகத் திகழும். இத்தகைய நாட்டையும் நமது தமிழ் இலக்கியம் அறிமுகப்படுத்துகின்றது.

மேருமந்தரபுராணம் என்னும் பேரிலக்கியத்தில் விதேக நாட்டின் சிறப்பைப்பற்றி அதன் ஆசிரியர்,

''பாரிலுள்ளவர்க் கெலாம் படு
பயன் பொதுவுமாய்
ஏர்மலிந்திடங்க ளெங்கும் இன்
பமே பயந்துநல்
வேரிசாந்த மூடுபோகி மேவி
யாடல் பாடலொடும்
வாரமாதர் போன்றமாட ஊர்
கடோறும் மாடெலாம்''

என்றார். விதேக நாட்டுச் செல்வங்களும் விளைபொருள்களும் பொதுவுடமையாக்கப்பட்டுப் பலருக்கும் பயன்படுமாறு பகுத்தளிக்கப்பட்டன. அதனால் அந்நாடு ஆடல் பாடல்களிலே மிகுந்து, மக்கள் இன்பமாக வாழ்ந்தனர் என்றார். பொதுவுடைமை நாட்டையே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது, இக்கவியிலே! எனவே ஒவ்வொருவரும் தங்கள் பொருள் வருவாயை வரையறுத்துக் கொண்டு, பிறருடைய வாழ்க்கை வளர்ச்சிக்கு வழிதிறக்கும் இவ்வரிய 'மிகுபொருள் வெஃகாமை' என்னும் பொதுவுடைமைத் தத்துவத்தை மேற்கொண்டு சோஷலிசக் கொள்கையை நிலைநாட்டுவோமாக!

தொடர்கதை

**காணி நிலம் வேண்டும்**

அடுத்த இதழில் இடம்பெறும்.

## சமணர்களுக்குரிய சுவஸ்திகம்



இந்த சுவஸ்திகச் சின்னம் ஜெர்மனியை ஆட்சி செய்த இட்லரின் உடையில் இடம் பெற்றிருந்ததை அறிவோம். உண்மையில் இந்தச் சின்னம் சமண சமயத் தத்துவத்தின் விளக்கமாகும். இதற்குப் பிறவிச் சக்கரம் என்று பெயர்: உயிர்கள், தாம் செய்த நல்வினை தீவினைக்குத் தகுந்தவாறு, தேவகதி, விலங்குகதி, நரககதி, மனிதகதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து உழல்வதை இது குறிக்கிறது.

பிறவிச் சக்கரத்திற்கு மேலே உள்ள மூன்று புள்ளிகள் மும்மணிகளைக் குறிக்கின்றன. அதாவது, நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்பவற்றைக் குறிக்கின்றன.

மூன்று புள்ளிகளுக்கு மேலே பிறைக்கோடும், அதன் மேல் ஒற்றைப் புள்ளியும் காணப்படுகின்றன. ஒற்றைப்புள்ளி வினைகளை நீக்கி வீடு அடைந்த உயிரைக் குறிக்கிறது.

இந்தத் தத்துவக் குறியைச் சமணர் இல்லங்களிலும் ஆலயங்களிலும் காணலாம்.

# தமிழகமும் சமண சமயமும்

திருவரங்கம் சீதரன்



பண்டைக் காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த மதங்களில் சமண சமயமும் ஒன்று ஆகும். சுமார் கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழகத்தில் சமண சமயம் பரவத் தொடங்கியது. சமணர் சமயத்தைத் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் போற்றியதன் காரணமாக நாடெங்கும் சமணக் கோயில்களும், திருமேனிகளும் செய்விக்கப்பட்டன.

சமண சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அவ்வப்போது உலகத்தில் பெரியார் தோன்றுவார்கள் என்பது சமண சமயத்தின் கொள்கை. அவர்கள் தெய்வமாகவும் வழிபட்டனர். அவர்களுக்குத் தீர்த்தங்கரர் எனப் பெயரிட்டு அழைத்தனர். தீர்த்தங்கரரின் திருமேனிகள் தமிழகத்தின் பல இடங்களில் காணப்படுகின்றன. அவை எவ்வாறு இருக்குமெனின், தீர்த்தங்கரரின் உருவச் சிலைகளின் இரு பக்கங்களிலும் சாமரம் வீசும் தேவர்களின் உருவங்களும், மத்தியில் ஒன்றன் மேல் ஒன்ருக மூன்று குடைகளும் காணப்படும்.

''திங்கள் மூன்றடுக்கிய திகழ்முக் குடைக்கீழ்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதை தாழ்பிண்டிக் கொழுநிழ லிருந்த
ஆதியிற் ருேற்றத்து அறிவனை வணங்கி''

என இளங்கோவடிகள் போற்றுகின்றனர்.

இத்தகைய சமணக் கோயில்களும், சமணத் திருமேனிகளும் தமிழகத்தின் பல இடங்களில் உள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆனந்த மங்கலம், காஞ்சிபுரம், திருப்பருத்திக்குன்றம் ஆகிய ஊர்களிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருமலை, சேலூர், திருவோத்தூர், திருப்பனப்பூர், வள்ளிமலை ஆகிய ஊர்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருவதிகை, சிறுகடம்பூர், திருநறுங்கொண்டை ஆகிய ஊர்களிலும், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் வெள்ளனூர், செயங்கொண்ட சோழபுரம், வெட்டுவாந்தலை, நார்த்தாமலை, சடையா பாறை ஆகிய ஊர்களிலும், தஞ்சை மாவட்டத்தில் திருநாகேசுவரம், பழையாறை, திருவலஞ்சுழி, மன்னார்குடி, தீபங்குடி ஆகிய ஊர்களிலும், இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் பிரான்மலை, இளையான்குடி, ஆனைமலை, திருப்பரங்குன்றம் ஆகிய ஊர்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் எருவாடி, கொற்கை, கழுகுமலை, வீரசிகாமணி ஆகிய ஊர்களிலும், கோயமுத்தூர் மாவட்டத்தில் விசயமங்கலம், ஆனைமலை, வெள்ளோடு, திங்களூர், திருமூர்த்திமலை ஆகிய ஊர்களிலும் இத்தகைய திருமேனிகள் காணப்படுகின்றன.

—குமார்

### சமணர் வாழ்ந்த குகைகள்

சமணத் துறவிகள், மலைகளில் இயற்கையாக அமைந்த குகைகளில் தங்கினர். அவைகள் எளிதில் அடைய முடியாத இடத்திலும் இயற்கையாக அமைந்த சுனைகளின் அருகிலும் உள்ளன. மன அமைதியுடன் இருக்க இத்தகைய சூழ்நிலைகளை விரும்பி அவர்கள் அங்கு வாழ்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு அரசர்களும், வணிகர்களும் குகைகளின் உட்புறத்தைத் தங்குவதற்கு ஏற்ப மழமழப்பாக்கியும், கல்லிலேயே தலையணை போன்ற அமைப்பினைச்செய்தும் அளித்தனர். அவ்வாறு அளித்ததைக் குறிப்பதற்காக அப்படுக்கைகளின் மேலும், குகையின் முகப்பிலும் கல்வெட்டுக்களாகப் பொறித்தனர். இப்படுக்கைகள் 'பாழி' என்றும், 'பஞ்சபாண்டவர் படுக்கைகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தகைய படுக்கைகள் தமிழகத்தின் பல குன்றுகளில் காணப்படுகின்றன.

மதுரையின் அருகேயுள்ள குன்றுகளில் இத்தகைய படுக்கைகளும், கல் வெட்டுக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. சமணர் வாழ்ந்த மதுரையின் அருகேயுள்ள இடங்களை ஒரு பாடல் குறிப்பிடுகின்றது :

''பரங்குன்று ஒருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை ஆனை-இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப
[வல்லார்க்குச்
சென்றட்டு மோபிறவித் தீங்கு''

—பெருந்தொகை

உதாரணமாக, ஆனைமலை குகைக் கல்வெட்டு,

''இவகுன்றத்து உறையுள் பாதந்தான் எரி
அரிதன் அத்து வாயி அரட்ட காயிபன்''

எனக் குறிப்பிடுகின்றது. அதாவது, அத்துவாயி அரட்ட காயிபன் என்பவன் அக்குகையிலுள்ள படுக்கையைச் செய்து அளித்தான் என்பது பொருள். இவகுன்றம் என்பது ஆனைமலையைக் குறிப்பிடுவதாகும்.

### பள்ளிச் சந்தம்

தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் சமண, பௌத்த கோயில்களுக்கு நிலங்களையும், ஊர்களையும் தானமளித்தனர்.

சமணர் கோயில்கள் 'பள்ளிகள்' என அழைக்கப்படும். தானமாக அளிக்கப்பட்ட நிலங்கள் 'பள்ளிச் சந்தம்' எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றன. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் உள்ள 'பள்ளிச்சந்தம் என்ற ஊர் இத்தகைய சமணப் பள்ளியால் பெயர் பெற்றது எனலாம். அவ்வூரின் அருகில் உள்ள ஒரு கல்வெட்டுச் செய்தியினால் அங்கு 'கண்டராதித்த பெரும்பள்ளி' என்ற சமணர் கோயில் இருந்ததாகத் தெரிய வருகின்றது. இவ்வாறு பல சமணப் பள்ளிகளுக்குத் தானமளிக்கப்பட்டதாகப் பல கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இதனால் தமிழக வேந்தர்கள் எல்லா மதங்களையும் வேற்றுமையின்றி ஆதரித்தனர் என்பது தெரிகின்றது.

# சமணமும் சமணரும்

## சில சுவையான தகவல்கள்



இந்திய நாட்டில் சமண சமயம், பௌத்த சமயம், இந்து சமயம், சொராத்திரிய சமயம், இசுலாமிய சமயம், சீக்கிய சமயம், கிறித்தவ சமயம் என ஏழு சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றார்கள். இவற்றில், சமணம், சீக்கியம், பௌத்தம் ஆகிய மூன்று மட்டுமே இந்தியாவில் தோன்றியவை. ஏனையவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானவை. இவற்றில் சமணமே மிகத் தொன்மையான சமயம்.

* * *

இந்தியா முழுவதிலும் எண்ணிக்கை அளவில் பார்த்தால் ஜைனர்களின் தொகை மிக மிகக் குறைவு. ஏறக்குறைய 25 லட்சம் ஜைனர்கள்தாம் இப்பொழுது இருக்கின்றார்கள். இராஜஸ்தானம், மராட்டியம், குசராத், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில்தாம் ஜைனர்கள் அதிகம் இருக்கின்றார்கள்.

அளவில் குறைந்திருந்தாலும் இன்று, வணிகத் துறை, தொழில் துறை, கல்வித் துறை ஆகியவற்றில் ஜைனர்கள் முன்னணியில் இருக்கின்றார்கள். பத்துப் பேருக்கு எட்டுப் பேர், படித்தவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

கருத்துக்களை வலியுறுத்துவதற்காக நாளேடுகளும், கிழமை ஏடுகளும் கருத்து விளக்கப் படங்கள் தீட்டி வருவதை நாம் காண்கின்றோம் அல்லவா? இந்த முறையை முதலில் உருவாக்கியவர்கள் சமணர்கள்தாம். அவர்கள் தங்கள் சமயத்தின் தத்துவங்களைக் கருத்துச் சித்திரங்களின் வாயிலாகத் தெரிவித்துள்ளனர்.

* * *

சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் அடிப்படையான வேற்றுமைகள் உள்ளன. சமணர்கள், கொல்லாமை, புலால் உண்ணாமை இரண்டையும் மிகவும் வலியுறுத்துகின்றனர். பௌத்தர்கள் கொல்லாமையை ஏற்கின்றார்கள் ; ஆனால் புலால் உண்ணலை அவர்கள் வலியுறுத்தவில்லை. பௌத்தத் துறவியிடம் திருவோடு, கமண்டலம் உண்டு; அவை கூட ஆசையின் அடையாளம் என்று சமணர் கருதுவதால் சமணத் துறவிகளிடம் திருவோடு கூடக் கிடையாது. பௌத்தத் துறவிகள் பிச்சை கேட்பார்கள். சமணத் துறவிகள் எவரிடமும் கேட்க மாட்டார்கள். தெருவில் நடந்து வரும்போது எவராவது வலிய வந்து உணவு தந்தால், தங்கள் கரங்களை நீட்டி வாங்கி, நின்ற நிலையிலேயே அருந்திச் செல்வர். அமர்ந்து உணவு உண்பது கூடாது என்பது சமணத் துறவிகள் பின்பற்றிய ஒழுக்கம்.

'உருக்கமுடன் என்பசிக்கே
உணவுவந்தா லுண்பேன்,
பெருக்க அழைத்தாலும்
போகேன்'

என்று பட்டினத்தடிகள் சொல்லிய வாசகத்தைச் செயற்படுத்தியவர்கள் சமணத் துறவிகள்.

* * *

சமண சமயத்தை நிறுவியவர் வர்த்தமான மகாவீரர் என்று பலர் எண்ணி வருகின்றனர். இது தவறான கருத்தாகும். சமண சமயத்தைத் துவக்கியவர் ரிஷப தேவர் என்று அழைக்கப் பெற்று வந்த ஆதி பகவன் ஆவார். இந்தியாவின் மிகத் தொன்மையான மொழி என்று கருதப்படும் பிராமி மொழியை உருவாக்கியவரும் இவர்தான். பிராமி என்னும் அவரது மகளின் பெயரால் அவர் கண்டுபிடித்த மொழி அழைக்கப் பெற்றதாகத் தெரிகிறது.

* * *

ஜைன சமயம், ஆருகத சமயம் நிகண்ட சமயம், அநேகாந்தவாத சமயம், சியாத்வாத சமயம் என்னும் பெயர்களும் சமண சமயத்திற்கு உண்டு.

சமணர்—ஸ்ரமணர் என்றால் துறவிகள் என்று பொருள். துறவை வற்புறுத்திக் கூறி, துறவு பூண்டோரே வீடு பெறுவர் என்று இந்தச் சமயம் சாற்றுகிறது.

புலன்களையும் வினைகளையும் வென்றவர்—ஜெயித்தவர். ஆதலின் தீர்த்தங்கரருக்கு ஜினர் என்னும் பெயர் உண்டு. ஜினரைக் கடவுளாக உடைய சமயம் ஜைன சமயம் என வழங்கப் பெற்றது.

சமண சமயக் கடவுளுக்கு அருகன் என்னும் பெயர் உண்டு. அருகனை வணங்குவோர் ஆருகதர் என்றும், அதனால் இது ஆருகத சமயம் என்றும் சொல்லப் பெற்றது.

சமணக் கடவுள் பற்றற்றவர் ஆதலால் நிர்க்கந்தர் அல்லது நிகண்டர் எனப்பட்டனர். அதன் காரணமாகச் சமண சமயத்திற்கு நிகண்ட சமயம் என்னும் பெயரும் கிட்டியது.

பொதுவாகச் சமயங்கள் ஏகாந்தவாதம், அநேகாந்தவாதம் என இரு வகைப்படும். சமணத்தைத் தவிர ஏனையவை ஏகாந்தவாதம் ஆகும். சமணம் ஒன்றுதான் அநேகாந்தவாதத்தைக் கூறுவது; ஆகவே இதற்கு அநேகாந்தவாத சமயம் என்ற பெயர் உண்டாயிற்று. சியாத்வாதம் என்றாலும் அதே பொருள்தான்.

அசோக (பிண்டி) மரத்தைப் போற்றுவது சமணர் வழக்கம். அதனால் சமணர், பிண்டியர் என்றும் வழங்கப்படுகின்றார்கள்.

* * *

சமண சமயத் தத்துவ நூல்களில் கடவுளைப் பற்றிக் கூறவில்லை. பற்றினின்றும் விடுபட்டு,





வீடுபேறு அடைந்த உயிரே கடவுள் என்பது சமண சமயக் கருத்து. சைவம், வைணவம் முதலிய சமயங்களில் உயிர்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனிக் கடவுள் குறிக்கப்படுவதுபோல் சமண சமயத்தில் கடவுள் குறிக்கப்படவில்லை.

* * *

கொல்லாமை, வாய்மை, திருடாமை, துறவு, அவாவறுத்தல் ஆகிய ஐந்தும் சமணத் துறவிகள் தவறாது கைப்பிடித்து வரும் நோன்புகள் ஆகும்.

* * *

சமண சமயத்தில் குறிக்கப் பெறும் தீர்த்தங்கரர்கள் 24 பேரின் சிலை வடிவங்களும் ஒரே அமைப்பில்தான் உள்ளன. வேறு வேறு முகச்சாயல் கிடையாது. அவரவர்களின் பீடத்தில் உள்ள இலச்சினையைக் கொண்டுதான் அடையாளம் கூற முடியும். பீடத்தில் சிங்கம் இருக்குமானால் அவர் வர்த்தமான மகா வீரர்; சங்கு இருக்குமானால் அவர் நேமிநாதர்; பிறை நிலவு இருக்குமானால் சந்திர பிரபர்; தலைக்கு மேல் ஐந்து தலைப் பாம்பு இருந்தால், அவர் பாசுர்வநாதர்; இவ்வாறு ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் உள்ள இலச்சினையைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

* * *

வர்த்தமான மகா வீரரும் புத்த மதத்தை உருவாக்கிய கௌதம புத்தரும் ஒரே காலத்தில் வசித்தவர்கள் என்று வரலாறு தெரிவிக்கிறது.

புத்த சமயம், மகாயானம், ஹீனயானம் என்று இருபிரிவாகப் பிரிந்தது போல, சமண சமயமும் பிற்காலத்தில் மூன்று பிரிவுகளாக ஆகியது. அவை சுவேதாம்பர சமணம், திகம்பர சமணம், ஸ்தானகவாசி சமணம் என்பன.

சுவேதாம்பர சமணத் துறவிகள் வெண்ணிற ஆடை அணிவர்; ஆலயங்களில் உள்ள தீர்த்தங்கரர் திருவுருவங்களுக்கும் வெண்ணிற ஆடை அணிவிப்பர். திகம்பர சமணத் துறவிகள் ஆடை அணிய மாட்டார்கள். பிறந்த மேனியாக இருப்பார்கள். அவர்களது ஆலயங்களில் உள்ள தீர்த்தங்கரர் திருவுருவங்களுக்கும் ஆடை அணிவிக்க மாட்டார்கள். ஸ்தானகவாசி சமணர் உருவ வழிபாடு செய்ய மாட்டார்கள். தங்களது ஆலயங்களில் சமண ஆகம நூல்களை வைத்து, அவற்றையே தீர்த்தங்கரராகவும் அருகக் கடவுளாகவும் கருதி வணங்குவார்கள்.

* * *

தமிழ் நாட்டில் இன்று வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங் களில்தான் சமண சமயத்தினர் வாழ்கின்றார்கள். சமணர்கள் என்றாலே துறவிகள் என்று எண்ணி விடக் கூடாது. இந்த மாவட்டங் களில் வாழ்கின்ற சமண சமயத் தினர், இல்லற வாசிகளாக உள் ளனர். வாணிகம், வேளாண்மை, கல்வி ஆகிய பலவகைப் பணி களைச் செய்து வருகின்றார்கள். இவர்களுக்குள் சாதி உட்பிரிவு என்பது மருந்துக்குக்கூடக் கிடை யாது. அனைவரும் சமணர் என் பதைத் தவிர—தங்கள் பெயர் களுக்குப் பின்னால் நயினார் என்று குறிப்பிட்டுக் கொள்வதைத் தவிர, சாதியைத் தெரிவிக்கும் எந்தச் சமயச் சொல்லும் கிடை யாது. தமிழ் நாட்டில் உள்ள சமணர் அனைவரும் பெயருக்குப் பின்னால் நயினார் என்றும், வட நாட்டில் உள்ள சமணர்கள் பெய ருக்குப் பின்னால் ஜெயின் என்றும் போட்டுக் கொள்வதைத் தவிர, வேறு எந்த அடையாளமும் கிடையாது.

* * *

பொதுவாக அறிந்தவர்களைக் கண்ணுறும்போது வணக்கமும்,

குமார்—

அவருடன் வந்திருக்கும் அறியாத—புதிய ஒருவரைக் கண்ணுறும் போது தயக்கமும் காட்டுவது பெரும்பான்மையான சமயத்தவர் பண்பாக இருந்து வருகிறது. ஆனால் சமண சமயத்தவர் அப்படி அல்லர்-தங்கள் உறவினர் ஒருவருடன் வந்திருக்கும் உறவினரல்லாத வேறொருவரையும் மனப்பூர்வமாக 'வாருங்கள்' என்றழைத்து 'வணக்கம்'—அல்லது 'நமஸ்காரம்' கூறுகின்றார்கள். உள்ளம் மகிழ மெய்யான வரவேற்பை நல்குகின்றார்கள் சமண சமயத்தவர்கள். வீட்டுக்கு வந்த விருந்தினர்க்கு உணவு படைக்காமல் அவர்கள் அனுப்புவது கிடையாது.

* * *

இல்லறத்தில் ஒழுகும் சமண சமயத்தவர் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்கள் பத்தாகும். அவை :

கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, பிறன்மனை நயவாமை, பொருள் வரைதல், கள் உண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை, இரவு உண்ணாமை, பெரியோரை வணங்குதல்.

இவற்றில் பொருள் வரைதல் என்றால், பொருளை இவ்வளவுதான் ஈட்ட வேண்டும் என்று வரையறுத்துக் கொண்டு, அதன்படி பொருளீட்டுவதாகும்.



சமண சமயத்தார் தாங்கள் எந்தெந்த நாட்டிற்குப் போனாலும், அந்தந்த நாடுகளில் வழங்குகின்ற தாய் மொழியிலேயே தங்கள் சமய நூல்களை எழுதினார்கள். இதனால் அந்தந்த நாட்டு மக்கள், எளிதில் சமண சமயக் கொள்கைகளை அறிந்து கொண்டு அவற்றைக் கைக்கொள்ள முடிந்தது. மக்கள் அறியாதபடி வேறு மொழியில் சமயக் கொள்கைகளை மறைத்து வைப்பது மன்னிக்க முடியாத பெருங் குற்றம் என்றும், பெரும்பாவம் என்றும் சமணர் கருதினர். அதனால்தான், அந்தந்த நாட்டு மக்களின் தாய் மொழியிலேயே தமது சமய நூல்களைச் சமணர் உருவாக்கினர்.

* * *

சமணர் நான்கு வகைத் தானங்களைச் செய்வதைத் தங்களின் பேரறமாகக் கருதி வந்தனர். அவை : அன்னதானம், அடைக்கலதானம், ஔடத தானம், சாத்திர தானம்.

அன்னதானம் : பசித்தோர்க்கு அன்னம் வழங்குதல்.

அடைக்கலதானம் : அச்சம் கொண்டு அடைக்கலம் நாடி வந்தவர்களுக்கு அபயமளித்துக் காத்தல்.

ஔடததானம் : நோயாளிகளுக்கு இலவசமாக மருந்து கொடுத்து நோய் தீர்த்தல்.

சாத்திரதானம் : பள்ளிகளிலே சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்தல். (பள்ளிக்கூடம் என்று வகுப்பறைக்குப் பெயர் வந்ததற்குக் காரணமே—சமணர்கள் தங்கள் பள்ளிகளில் நடத்திவந்த கல்விப் பணிதான்.).

* * *

சமண முனிவர்களின் கூட்டம், சங்கம் என்று அழைக்கப் பெற்று வந்தது. துவக்கத்தில் சமண சங்கம் ஒரே கூட்டமாக இருந்தது. மூலச் சங்கம் என்று வழங்கப் பெற்றது. பின்னர், சங்கம் பெரிதாக வளர்ந்த பின்னர், அது நான்கு பிரிவாகப் பிரிக்கப் பெற்று, நந்தி கணம், சேன கணம், தேவ கணம் எனப் பெயர் இடப்பட்டது. நந்தி கணத்தில் கனக நந்தி, நமண நந்தி, குணநந்தி, பவநந்தி போன்ற முனிவர்களும், சேன கணத்தில் சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன் போன்ற முனிவர்களும், சிம்ம கணத்தில் கனகவீரர், கரும வீரர், குண வீரர் என்னும் முனிவர்களும், தேவகணத்தில், திருத்தக்க தேவர், தோலாமணித் தேவர், போன்ற முனிவர்களும் குறிப்பிடத் தக்கவராவர்.

* * *

சமணமும் பௌத்தமும் ஏக காலத்தில் இந்தியாவில் இருந்தது என்றாலும் அவை இரண்டும் அடிக்கடி தங்களுக்குள் மோதிக் கொள்வதுண்டு. சமண சமயத்தைக் கண்டிக்க பௌத்தர்கள் குண்டலகேசி என்னும் நூலை உருவாக்கினர்; உடனே சமணர்கள், பௌத்தத்தைத் தாக்குவதற்கு நீலகேசி என்னும் நூலை இயற்றினார்கள். காஞ்சிபுரத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில், (கி.பி. 753-ல்) சமண சமய குருவான அகளங்க முனிவர், பௌத்த பிக்குகளுடன் சொற்போர் செய்து அவர்களை வென்றார். தோல்வியுற்ற பிக்குகள் இலங்கைக்குச் சென்று விட்டனர்.

* * *

ஊன்உணவு அல்லாத காய்கறி உணவு தற்போது சைவ உணவு என்று சொல்லப்படுகிறது. சமண சமயம் செல்வாக்கடைந்திருந்த பழங்காலத்திலே மரக்கறி உணவுக்கு ஆருகதஉணவு என்று பெயர் வழங்கப் பெற்றதாகத் தெரிகிறது. ஈழத்தில் வாழும் தமிழர்கள் மரக்கறி உணவை ஆரத உணவு என்று இந்நாளிலும் கூட வழங்கி வருகின்றனர். ஆருகத உணவு என்பதுதான் திரிந்து, ஆரத உணவாகியிருக்கிறது.




சமண சமயத்தில் குறிப்பிடப் பெற்ற தீர்த்தங்கரர்கள், சாதாரண ஆண்டிகளல்லர். மண்டலத்தை ஆண்ட மன்னர்கள்; அவர்களில் பலர் இளவரசுப் பட்டம் பெற்று, பின்னர் மன்னராக முடிசூட்டப்பெற்று, இல்வாழ்வில் ஈடுபட்டுச் சிறிது காலம் கழித்துத் துறவு நாடி வந்தவர்களாவர். எனவே தான் தீர்த்தங்கரர் சிலைகளில் மன்னர்களுக்குரிய சில சிறப்பம்சங்களை நாம் காணலாம். அவர்களது பீடங்கள் அரியாசனம் போல் அமைக்கப் பெற்றிருப்பதையும் நாம் காணமுடிகிறது. அவர்களின் தலைக்கு மேல் மூன்று குடைகள் காணப்பெறுகின்றன.

* * *

சமணர் ஆலயங்களில் நுழைந்தவுடன், கொடிமரத்துக்கு முன்னர் மிக உயரமான ஒரு கற்றூணைக் காணலாம். இதற்கு மானஸ்தம்பம் என்று பெயர். மனத் தூய்மைக் கம்பம் என்பது இதன் பொருள். மிக உயர்ந்தவர்கள் என்று தம்மைக் கருதிக் கொள்பவர்கள் (அகங்காரம் கொண்டவர்கள்) கூட, ஆலயத்துக்குள் நுழைந்தவுடன் கண்களில் காட்சி தரும் மனத் தூய்மைக் கம்பத்தைப் பார்த்தவுடன் வியப்படைந்து மன அடக்கம் கொண்டு விடுகிறார்கள். இவ்வாறு மனத்தை அடக்குவதற்காகவே இந்தக் கம்பம் ஒவ்வோர் ஆலயத்திலும் இடம் பெறச் செய்திருக்கிறார்கள்.

* * *

சமண சமயத்தில் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவநாதர், அப்பாண்டைநாதர் என்றும் வழங்கப்படுகிறார். அப்பனாகவும் ஆண்டையாகவும் காத்தளிக்கிறார் என்னும் கருத்தில் அப்பெயர் வழங்கப்படுகிறது.

* * *

சமணர் ஆலயங்களிலுள்ள தீர்த்தங்கரர் உருவச் சிலைகளின் மீது மலர்கள் அல்லது மாலைகள் அணிவிப்பதில்லை. அவர்கள் அனைவரும், உலகத்தையும் உலக இன்பங்களையும் துறந்த துறவிகள் என்பதனால், அவர்களது திருமேனிகளில் மலர்களைத் தூவாமல், திருவடிகளில் படைக்கின்றனர். பொதுவாகப் பால், தயிர், இளநீர், பழங்கள், சந்தனம் ஆகியவற்றால் திரு முழுக்காட்டுகின்றனர். தேன் மட்டும் இந்தப் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. தேனீக்களைக் கொன்றுதானே தேனை எடுக்க வேண்டும்? அதனால், கொல்லாமையை வற்புறுத்தும் சமயத்தினர் தேனை ஒதுக்கி விட்டார்கள்.

* * *

நமது நாடு, சகுந்தலை பெற்ற மைந்தன் பரதனின் பெயரால் பாரத நாடு என்று வழங்கப்பெற்றதாக நாம் அறிவோம் ; ஆனால் சமண சமயத்தவர்கள் வேறு காரணம் கூறுகிறார்கள். சமண சமயத்தை உருவாக்கியவரும் முதல் தீர்த்தங்கரருமான ஆதிநாதர் என்னும் விருடப தேவரின் முதல் புதல்வனான பரதன்தான் இந் நாட்டின் முதற் சக்கரவர்த்தி என்றும், அதனால்தான் இந்நாட்டிற்குப் பாரத நாடு, பரதகண்டம் என்று பெயர்கள் ஏற்பட்டன என்றும் சொல்லுகின்றனர்.

—தொகுப்பு : தமிழ்ப்பித்தன்





# தமிழக வரலாற்றில் சமணம்

— இரா. நாகசாமி —

பகவான் மகாவீரரின் அறிவுரைகளைப் பின்பற்றி வளர்ந்த சமண சமயம் இந்திய மண்ணில் உதித்த மிகப் பெரிய சமயங்களில் ஒன்று. தமிழகத்திலும் பரவி மலர்ந்து நிறைந்த இச்சமயத்தின் வரலாறு தமிழ் இலக்கியத்துடனும், கலையுடனும், தத்துவங்களுடனும் நெருங்கியதொடர்பு கொண்டது.

கிறிஸ்துவுக்கும் 300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சமணப் பெரியார்கள் தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள். தங்கள் அறிவுரைகளைப் போதித்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் அவர்களைப் போற்றியிருக்கிறார்கள் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. முற்றும் துறந்த முனிவர்களாக வாழ்ந்த சமணத் துறவிகள் அக்காலத்தில் மலைகளிலும் குன்றுகளிலும் இயற்கையாக அமைந்த குகைத் தளங்களிலும் வசித்து வந்தார்கள். உயிர் தவம் புரிந்த அவர்களுக்கு அரசர்களும் வணிகளும் பாறைகளைச் செதுக்கி எளிமையான கல் படுக்கைகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு கொடுத்தவர்கள் வரலாறு செய்த பயனுகக் கல்வெட்டுகளைப் பண்டையத் தமிழ் எழுத்துக்களில் பொறித்து வைத்திருக்கிறார்கள். எந்த சமணப் பெரியாருக்காக யார் படுக்கைகளைக் கொடுத்தார்கள் என்ற செய்திகள் பெரும்பாலும் அக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

இவை போன்ற கல்வெட்டுகள் உள்ள பல குன்றுகளும் மலைகளும் தமிழகத்தில் காஞ்சியிலிருந்து குமரி வரையில் காணப்படுகின்றன. இந்த மலை வாழ் பகுதிகள்சாதாரணமாகச் சென்று காணச் சற்று அரிதான இடங்களாக இருக்கின்றன. ஆனால் அங்கு சென்று விட்டால் அங்கு நிலவுகின்ற தனிமையும், சூழ்நிலையும், அதற்குப் புறத்தே சாந்தமாகக் காணப்படும் இயற்கை அன்னையின் எழிலும், தூய அமைதியை இன்றும் கொடுப்பவையாக இருக்கின்றன. இவ்வியற்கைத் தளங்களின் அருகே இனிமையான நீர் ஊற்றுகள் உண்டு. கல் படுக்கைகளிலும், பாறை முகடுகளிலும் இக் கல்வெட்டுகள் பண்டைத் தமிழ் எழுத்து வடிவங்களை நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டு இன்றும் மிளிர்கின்றன.

இவ்வாறு சமணர்கள் தங்கிய மலைகளும் குன்றுகளும் எங்கு அதிகம் இருக்கின்றன என்று பார்க்கும்பொழுது ஓர் உண்மையும் வெளிப்படுகிறது. அன்று திகழ்ந்த முடியுரை மூவேந்தர்களுடைய தலைநகர்களைச் சுற்றியே இவை அதிகம் காணப்படுகின்றன. சங்கம் வைத்துச் சிறந்த தமிழ் மதுரை, சேரர் தலைநகராம் கருவூர், சோழர் உறைவிடமாம் உறையூர், வடபால் சிறந்த காஞ்சி, ஆகிய நகர்களின் அருகில் இக் கல்வெட்டுகள் அதிகம் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் அரசர்களும், பொருள் ஈட்டுவதிலேயே முனைந்திருந்த வணிகர்களும், தானங்கள்கொடுத்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பதிலிருந்து அரசியல் செல்வாக்கும், வணிகப் பெருமக்களுடைய போற்றுதலும் இச்சமயத்தார்களுக்கு முழுமையாகக் கிட்டியது என்று ஊகிக்கலாம்.

இவ்வாறு கிடைத்துள்ள கல்வெட்டுகளில் மிகவும் தொன்மையான கல்வெட்டு, பாண்டிய பெரு மன்னனால் கொடுக்கப்பட்டது. அவன் பணவன், கடலன், வழுதி என்று பட்டம் ஏற்ற நெடுஞ்செழியன் என அவன் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். மதுரையிலிருந்து சுமார் 12 கல் தொலைவில் மீனாட்சிபுரம் என்ற இடத்தில் அவன் கொடுத்த சமணப் பாழி இருக்கிறது. திருமாலிருஞ்சோலை என்றும், பழமுதிர்சோலை என்றும் புகழப் பெறும் அழகர் மலையிலும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளும் இருக்கைகளும் இருக்கின்றன. அழகர் மலை ஊரிலிருந்து மலையோரமாகச் செல்லும் நெடுஞ்சாலையில் நான்கு கல், தொலைவு சென்றால் கரடிப்பட்டி என்னும் ஊரிலே இருந்துஇரண்டு கல் தொலைவில் புதர் மண்டிக் கிடக்கும் பாதை வழியே சென்று நெட்டுக் குத்தலாக உள்ள மலை மீது ஏறினால் இவ்விடத்தைஅடையலாம். அன்று மதுரையில் இருந்த வணிகர்கள் பலர் அங்கு பாழி அமைக்கப் பெரும்பொருள் கொடுத்து உதவியிருக்கிறார்கள். உப்பு வணிகன், பொன் வணிகன், கூல வணிகன் முதலிய பல்துறை வணிகர்களும் பொருள் கொடுத்ததை 32 அடி உயரத்திற்கும் மேலே பாறை முகட்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் காணலாம்.

மணிவாசகப் பெருமான் பிறந்த திருவாதவூரிலும் கிறிஸ்துவுக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடயங்களும், கல்வெட்டுகளும் உள்ளன. இதுபோல் கருங்காலக்குடி, கீழவளவு, கொங்கர் புளியன் குளம், முத்துப்பட்டி, மேட்டுப்பட்டி, வரிச்சியூர் ஆகிய இடங்களில் சமணப் பெரியார்கள்வாழ்ந்த இடங்களும் கல்வெட்டுகளும் அன்றுஎவ்வளவு மேன்மையான நிலையில் இச்சமயம் திகழ்ந்தது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

இந்த மலைகளில் மட்டும் சமணப் பெரியார்கள் வாழ்ந்தார்கள் என்று நினைத்துவிட வேண்டாம். மதுரையைச் சுற்றியுள்ள எல்லா மலைக் குன்றுகளிலும் சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடயங்கள் இருக்கின்றன. சற்றேறக் குறைய கிறிஸ்துவின் சம காலத்துச் சமணக் கல்வெட்டுகள் நாம் அனைவரும் அடிக்கடி செல்கின்ற ஆனைமலை, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் உள்ளன. 'ஆனை மாமலை ஆதியாய இடங்களில்' என்று ஞானசம்பந்தப்பெருமான் பாடுகின்றாரே, அந்த மலையினுடைய பெயர் 'இவகுன்றம்' என்று (இவம் — யானை: யானைக்குன்று) 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு கூறுகின்றது. அப்பொழுதிருந்தே இம்மலை யானைமலை என்று பெயர் பெற்றுள்ளது என்பதற்கு இது சான்று.

திருப்பரங்குன்றத்தில் அந்துவன் என்ற ஒருவர் கற்படுக்கை கொடுத்துள்ளார். சங்க இலக்கியத்தில் நல்லந்துவன் என்ற ஒரு புலவர் குறிக்கப்படுகிறார் என்று நான் அறிவோம்.

சேரர் தலைநகராம் கருவூருக்கு அருகில் பல குன்றுகளில் சமணர்கள் வாழ்ந்த இருக்கைகள் இருக்கின்றன. இவற்றில் புகளூருக்கு அருகில் ஆறுநாட்டார் மலை என்ற மலை ஒன்றில் வரலாற்றுச் சிறப்புடைய கல்வெட்டு ஒன்று இருக்கிறது. (அதைப் பற்றிய கட்டுரையை பிறிதொரு இடத்தில் காண்க).

கருவூரிலிருந்து சுமார் 15 கல் தொலைவில் அரச்சலூர் என்று ஒரு இடம் உண்டு. அங்கு கி.பி. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் சமணப் பெரியார்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களின் தேவன் சாத்தன் என்ற ஒரு பெரியார் நாட்டியத்திற்கு ஏற்ப சில இசை வண்ணங்களைத் தொகுத்து அதைக் கல்வெட்டிலேயே பொறித்து வைத்திருக்கிறார். ''எழுத்து புணர்தான் மணி வண்ணக்கன் தேவன் சாத்தன்' என்று கல்வெட்டு கூறுகிறது. இது சற்றேறக் குறைய சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலமாகும். பல்வேறு இசை எழுத்துக்களை தொகுக்கவல்லஇசை ஆசிரியனைச் சிலப்பதிகாரம் குறிப்பது அனைவரும் அறிந்ததே. அதே காலத்தில் திகழ்ந்த இப்பெரியார் இசையைத் தொகுத்துள்ளது அறிந்து இன்புறத் தக்கது.

உறையூரில் சென்னைப்பல்கலைக் கழகம் நடத்திய அகழ்வாய்வில் பண்டைய எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள் கிடைத்திருக்கின்றன. சிறுப்பள்ளி மலையில் சமணர்கள் வாழ்ந்திருக்கிறார்கள், என்று தடயங்கள் கூறுகின்றன. தமிழகத்தில் தலைசிறந்த கல்விக் கூடமாகவும், அறிவின் பிறப்பிடமாகவும் திகழ்ந்த காஞ்சியம்பதிக்கு 12 கல் தொலைவில் மாமண்டூர் என்ற இடத்தில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் சமணப் பெரியார்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களது கல்வெட்டுகள் அங்கே இருக்கின்றன.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு இறுதி வரையில் சுமார் 500 ஆண்டுகளுக்கு செல்வாக்குடன் திகழ்ந்த சமண சமயம் உருவ வழிபாட்டைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்கியிருந்த குன்றுகளிலோ அல்லது கல்வெட்டுகள் இருக்கின்ற பகுதிகளிலோ சமண உருவங்கள் ஏதும் காணக் கிடைக்கவில்லை. ஆயினும் இந்தியாவின் வடபால் இதே காலத்தில் மாவீரர் போன்ற பெரியார்களின் உருவங்கள் சிலைகளிலே எழுத்துகளோடு காணப்படுகின்றன என்பதனையும் நினைவில் கொள்ளல் தகும்.

தமிழகத்தில் சற்றேறக்குறைய கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் ஆட்சிக்கு வந்தனர். 9-ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில் அவர்களது ஆட்சி சிறந்திருந்தது. பல்லவர்களில் சிலர் சமண சமயத்தில் ஈடுபட்டு அச்சமயத்தைப் போற்றிருக்கிறார்கள் சிம்மவர்மன் என்ற பல்லவ மன்னனின் காலத்தில் சிம்மநந்தி என்பவர் 'லோகவிபாகம்' என்ற நூலை இயற்றியுள்ளார். இது சகவருடம் (கி.பி. 455-இல்) எழுதப்பட்டது என்று அந்நூலிலிருந்து அறிகிறோம். மகேந்திரவர்மனுடைய பாட்டன் சிம்மவர்மன் என்பவன் சமண சமயத்தை ஆதரித்திருக்கிறான். வச்சிரநந்தி என்ற பெரியாருக்குத் திருப்பருத்திக்குன்றில் நிலம் தானமாக அளித்திருக்கிறான். அவன் கொடுத்த தானத்தைச் செப்புப் பட்டயத்தில் எழுதிக் கொடுத்தான். அப்பட்டயம் இப்பொழுது கிடைத்துள்ளது. வச்சிரநந்தி என்ற அச்சமணப் பெரியார் 'நந்திசங்கம்' என்பதைச் சார்ந்தவர் என்றும், பருத்திக் குன்று, வர்த்தமானேஸ்வர தர்ம தீர்த்தம் என்று பெயர் பெற்றிருந்தது என்றும் அறிகிறோம். மகேந்திரனுடைய தந்தை சிம்மவிஷ்ணுவும் சமண சமயத்தைப் போற்றினான் என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர்.

பல்லவ மன்னர்களில் சிறப்புவாய்ந்த மகேந்திரன் முதலில் சமண சமயத்தைத் தழுவியிருந்து பின்னர் சைவ சமயத்திற்கு அப்பரால் மாற்றப்பட்டார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். திருவதிகையில் அவன் காலத்தில் வழிபாட்டில் இருந்த சமணச் சிற்பங்கள் இரண்டு இன்றும் இருக்கின்றன.

திருச்சியிலுள்ள இவனது கல்வெட்டு புறச்சமயத்திலிருந்து சைவத்திற்கு மாறினான் என்று கூறுகிறது. முன்னர் சித்தன்னவாசல்குகை ஓவியங்கள் மகேந்திரவர்மன் காலத்தில் தீட்டப்பட்டன என்று கருதினார்கள். இப்போது அக்கருத்து தவறு என்று கல்வெட்டுக்களிலிருந்து அறிகிறோம்.

மகேந்திரனுக்குப் பிறகு சமண சமயத்தை ஆதரித்த பல்லவ மன்னன் சிவபெருமானிடத்தில் ஈடில்லா பக்தி கொண்டு சைவப் பெருங்கோயில் பலவற்றை எழுப்பியவனும் சிவசூடாமணி என்று பட்டம் பெற்றவனும் ஆன இராஜசிம்மன் ஆகும். இவன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சந்திரபிரபா தீர்த்தங்கரர் கோயில் காஞ்சிக்கு அருகில் திருப்பருத்திக்குன்று என்ற இடத்தில் இன்றும் உள்ளது. இதே காலத்தில் வடஆர்க்காடு மாவட்டம் திருமலை என்ற இடத்தில் பாறையில் அழகிய சமண உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் மிகவும் எழில்வாய்ந்த சிற்பம், இருமருங்கும் அழகிய இருபெண்கள், நிற்க, நின்ற நிலையிலே நிற்கும் 'பாகுபலி' தேவரின் சிற்பமாகும். பல்லவர்கால சமண சிற்பங்களில் ஒப்பற்ற அழகு வாய்ந்த சிற்பம் இதுவே ஆகும்.

8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்ட நந்திவர்மன் என்ற பல்லவ மன்னன் காலத்திலும் சமண சமயம் போற்றப்பட்டது. வடஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்சபாண்டவர் மலையில் நந்திவர்மனின் 50-வது ஆட்சி ஆண்டில் ஒரு இயக்கி உருவம் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. அவ்வுருவம் பொன்னியக்கி என்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இதை சமணர் தொழும் 'சித்தாயிகா' என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். வடஆர்க்காடு மாவட்டம் சாத்தமங்கலம் என்ற ஊரிலும் சமணர்கள், பல்லவர் காலத்தில் சிறப்புற்று வாழ்ந்திருக்கிறார்கள் அங்கு பெரும் கோயில்கள் இருந்திருக்கின்றன. நந்திவர்மன் காலத்துக் கல்வெட்டுகள் அங்கே உள்ளன.

அங்கு கம்பவர்மனுடைய பல்லவன் காலத்திலும் சமணப் பள்ளி சிறப்பாக புதுப்பிக்கப்பட்டு யக்ஷி தேவதைக்கு ஒரு கோயிலும் எடுக்கப்பட்டது என்று அறிகிறோம். பார்த்திவேந்திர வர்மன், இராஜராஜ சோழன் ஆகியவர்களது காலத்திலும் சாத்தமங்கலம் சமணர்களுடைய சிறந்த புண்ணிய தலமாக திகழ்ந்திருக்கிறது.

8-ம் நூற்றாண்டில் மத்தியில் செஞ்சிக்கு அருகில் திருநாதர் குன்று என்ற மலை சமணத் தலமாக திகழ்ந்துள்ளது. அங்கு சந்திரநந்தி என்ற ஆசிரியர் 57 நாட்கள் உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்தார் என்று ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டு கூறுகிறது 'ஐம்பத்தேழு அனசனம் நோற்ற சந்திரநந்தி ஆசிரியர் நிசீதிகை' என்று அக்கல்வெட்டு கூறுகிறது. இதற்கு அருகில் பாறையில் 24 தீர்த்தங்கரர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டு காணப்படுகின்றன. இவை இம்மலை எவ்வளவு புண்ணியத் தலமாக கருதப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இதே காலத்தில் வடஆர்க்காடு மாவட்டத்தில் ஆறுமாமலை என்ற குன்றில் (அறுகர் மாமலை) சமணர்கள் தங்கி சிறந்திருக்கிறார்கள். இயற்கையாக அமைந்த ஒரு குகைத் தளத்தில் செங்கற் சுவரெழுப்பி பள்ளி அமைத்து அழகிய ஓவியங்களை வரைந்து இருக்கிறார்கள். எண் திசைக் காவலர்களின் ஓவியங்களும், கொடிகள், பறவை இனங்கள் ஆகியவற்றின் ஓவியங்களும் இப்பள்ளியை அழகுபடுத்தியுள்ளன. அவற்றின் ஒரு பகுதி இன்றும் எஞ்சியுள்ளது.

பொதுப்படையாக நோக்கும் பொழுது பல்லவர் காலத்தில் சமண சமயம் சிறந்த நிலையிலே இருந்து வந்திருக்கிறது.

பாண்டியப் பெருமன்னர்கள் சமண சமயத்தைச் சிறப்பாக போற்றியிருக்கிறார்கள். கூன் பாண்டியன் என்றும், நின்றசீர் நெடுமாறன் என்றும் பெயர் பெற்ற அரிகேசரி சமண சமயத்தைப் பின்பற்றியவர் என்று பெரியபுராணம் முதலிய நூல்கள் கூறும். ஞானசம்பந்தரால் அம்மன்னன் சைவத்திற்கு மாற்றப்பட்டான். பராந்தக நெடுஞ்சடையன் ஆகிய பாண்டிய மன்னர்கள் காலத்தில் சமணம் சிறந்த செல்வாக்கு பெற்றிருந்தமைக்கு சான்றுகள் உள்ளன. ஆனைமலை, திருப்பரங்குன்றம், கீழக்குயில்க்குடி, கழுகுமலை முதலிய இடங்களில் சிறந்த சமணர் உருவங்கள் செதுக்கப்பட்டு வழிபாட்டுக்காக பொருள்களும், பூமியும் கொடுக்கப்பட்டன. சிறப்பாகக் கழுகுமலையில். ஏராளமான சமணத் திருவுருவங்கள் செதுக்கப்பட்டு அவற்றின்கீழ் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. பல பெரிய சமணப் பொரியார்களுடைய பெயர்களும், பெண் துறவிகளுடைய பெயர்களும் இக்கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன. இறந்துபட்ட பலரின் நினைவாகத் தோற்றுவிக்கப்பட்ட பல சமணத் திருவுருவங்கள் இவற்றில் இடம் பெற்றுள்ளன. இவ்வுருவங்கள் அழகும், தலைச்சிறப்பும் மிக்கவை.

ஆனைமலையிலும் கீழவளவு என்ற இடத்திலும் இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட சமண உருவங்களில் பண்டைய ஓவியங்களின் பகுதிகள் எஞ்சியுள்ளன. இவை அனைத்திலும் சிறந்த பணி ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில் சித்தன்னவாசலில் குடைவரையைப் புதுக்கி அழகிய ஓவியங்களைத் தீட்டி வைத்திருப்பதாகும். மதுரை ஆசிரியன் இளங்கௌதமன் என்பவர் இவ்வெழில் பணியைச் செய்தமைத்தார் என்று கல்வெட்டுக்களிலிருந்து இப்பொழுது தெளிவாகிறது.

பொதுவாகப் பார்க்கும் பொழுது 8-ம் நூற்றாண்டில் சமணப் பெரியார்களின் உருவங்கள் ஏராளமாக மலைகளிலும், குன்றுகளிலும் செதுக்கப்பட்டுள்ளதிலிருந்து சமண சமயத்தில் அது ஒரு சிறந்த காலமாகத் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. தேவார ஆசிரியர்கள் காலத்திற்குப் பிறகு சமண சமயம் வீழ்ச்சி அடைந்தது என்றும், சமணர்கள் கழுவிலேற்றப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள் என்றும் சில இலக்கியங்கள் குறிக்கின்றன. ஆனால் உண்மையில் சமணம் தளர்வு பெறுமல் மிகவும் சிறப்பாகவே திகழ்ந்திருக்கிறது என்று பல இடங்களிலுள்ள கல்வெட்டுகளும், சிற்பங்களும் நமக்கு எடுத்துரைக்கின்றன.

சோழர் காலத்தில் சமணம் செல்வாக்குக் குறைவின்றிச் சிறந்து, வந்திருக்கின்றது. பராந்தக சோழர், கண்டராதித்த சோழர், இராஜராஜ சோழர் ஆகிய சோழப் பெருமன்னர்களுடைய காலத்தில் பல சமணக் கோயில்கள் தோன்றியுள்ளன. அவற்றிற்கு நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டுள்ளன. அவற்றை பள்ளி சந்தங்கள் என்று ' கல்வெட்டுகள் கூறும், சிவஞானச் செம்மல் என்று புகழப்படும் கண்டராதித்த தேவர் பெயரால் கண்டராதித்தப் பெரும்பள்ளி என்று சமணப் பள்ளி இருந்தது. ஏராளமான சிவன் கோயில்களுக்குப் பொருள் கொடுத்து உதவியவரும் இராஜராஜருக்குத் தஞ்சையில் பெருங்கோயில் கட்ட ஊக்கம் அளித்தவரும் ஆன இராஜராஜனின் தமக்கை குந்தவைப் பிராட்டியார் மூன்று இடங்களிலே ஜினாலயங்களை (சமணக் கோயில்களை) எழுப்பியுள்ளார். திருமலை, தாதாபுரம், திருமழபாடி ஆகிய மூன்று இடங்களிலும் குந்தவை பெயரால் சமணப் பள்ளிகள் தோன்றின. அவற்றில் திருமலையில் இன்றும் குந்தவை தோற்றுவித்த சமணத் திருவுருவம் உள்ளது. பாறையில் 16 அடி உயரத்திற்கு ·மேலாகத் தோற்றுவிக்கப்பட்ட நேமிநாத தீர்த்தங்கரரின் உருவம் மிக அழகாக இன்றும் இருக்கிறது.

சோழர்களுக்குப் பின்னர் வந்த விஜயநகர மன்னர் காலத்திலும் சமணம் காப்பாற்றப்பட்டு வந்தது. திருப்ருத்திக்குன்றம், வெண்குன்றம், பொன்னூர், வெடால், திருமலை, வெள்ளிமலை, மன்னார்குடி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், நாகர்கோவில், கழுகுமலை போன்ற தலங்கள் சமணர்களுடைய புண்ணிய தீர்த்தங்களாகத் தொடர்ந்து வந்துள்ளன. தமிழ் மன்னர்கள் தங்களுக்கெனத் தனிச் சமயத்தைப் பின்பற்றிய போதிலும், பிற சமயத்தைப் புறக்கணிக்காது போற்றி வந்துள்ளதை இச்சான்றுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. எவ்வாறு இந்து சமயக் கோயில்களிலே பல்வேறு கலைகள் சிறந்தனவோ, அதுபோலக் கட்டடம், சிற்பம், செப்புத் திருமேனிகள், ஓவியங்கள் ஆகிய பல கலைகளுக்கும் தமிழகத்துக்குச் சமணப் பெரியார்கள் செய்துள்ள தொண்டு அளவற்றது; போற்றத்தகுந்தது வரலாற்றில் இடம் பெற்றது.



**விலைவாசியைக்**
**கட்டுப்படுத்த உதவுங்கள்**



**அதிக விலை**
**கொடுக்காதீர்கள்**

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR CEMENT

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2
ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

**சங்கர் சிமெண்ட்**
தயாரிப்பாளர்கள்

FDSIC/1813THA



இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்




# சமண நெறி


சு. ஸ்ரீபால்
காவல்துறைக் கண்காணிப்பாளர்.


சமணர்கள் நம்பும் வரலாறு மிகப் பழைய காலத்தில் இந்நாட்டில் சமண நெறியே பரவி நிலவியதாக எழுதுகிறது. வேத காலத்திற்கு முன்னும் இந்நாட்டில் இருந்த, வாழ்ந்த நெறி அதுவே என்று அந் நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் வணங்குகின்ற ''தீர்த்தங்கரர்களில்'' முதலாவதான ''இருடப தேவர்'' பரப்பிய நெறிகள் எல்லோராலும் பின்பற்றப்பட்டு வந்தன என்பர். அந்நெறிகளின் அடிப்படை ''கொல்லாமை''க் கொள்கையேயாம். இருடப தேவர், ''ஆதி நாதர்'', ''ஆதி பகவன்'' என்ற பெயர்களாலும் குறிக்கப்படுகிறார். இவரைப் பற்றிப் பாகவதப் புராணம், விஷ்ணு புராணம், வாயு புராணம் போன்ற புராணங்களிலும் குறிப்புக்கள் வருகின்றன. இவரை, விஷ்ணுவின் மிகப் பழைய அவதாரமென்று விஷ்ணு புராணம் குறிக்கும்.

மக்கள் வாழுகின்ற வகையறியாது வாட்டமுற்றிருந்த காலத்தில் அவர்களுக்குத் தொழில் முறைகளைக் கற்பித்து, வாழ்க்கை நெறிகளை உணர்த்தியவர் ஆதிபகவன் என்றும், பன்னெடுங்காலம் அரசோச்சிப் பின்னர் தன் புதல்வன் பரதனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துக் கடுந்தவம் புரியக் கானகம் சென்றார் என்றும் கூறுவர். வேளாண்மைத் தொழிலைத் தலையாய தொழிலாக இவருடைய நெறி கருதியது. நாட்டிலிருப்பவரும், காட்டில் தவம் நோற்பவரும் நெறி பிறழாது வாழ்வதற்கு வேளாண்மைத் தொழில் சிறப்புற நடைபெற வேண்டும் என்பதை உலகுக்குச் சுட்டிக்காட்டியவர் இவர் என்று அவரைப் பற்றி எழுதப் பெற்றுள்ள நூல்கள் சொல்லும். ''கொல்லாமை''க் கொள்கையைக் குவலயம் முழுதும் பரப்பி விலங்குகளை வேள்வித் தீயில் இடுவது விண்ணுலகு ஏகவித்திடுவது என்ற வேத உரையை இவருடைய சமயம் மறுத்தது. தான் கொல்லக் கூடாது. பிறர் கொன்று பெறுகின்ற புலாலைப் புசிப்பது புன்னெறி அன்று என்று போதித்த புத்த சமயக் கூற்றை இவருடைய சமயம் புறக்கணித்தது. இவருடைய சமயத்திற்குத் தெரிந்த சாதிகள் இரண்டு. ஒன்று, இல்லறம் நடத்தும் சாதி. இன்னொன்று, துறவறம் பேணும் சாதி. இந்த இரண்டு சாதிகளும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் தெளிவாக விளக்கப்படுகின்றன. இல்லறத்தார் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை ''அணுவிரதம்'' என்றும், துறவறத்தார் காக்க வேண்டிய கொள்கைகளை ''மகா விரதம்'' என்றும் கூறுவர்.

இல்லறத்தார் பின்பற்ற வேண்டிய ஐந்து சிறந்த அணுவிரதக் கொள்கைகள் ''கொல்லாமை'', ''பொய்யாமை'', ''களவாமை'', ''பிறனில் விழையாமை'', ''பற்றின்மை'' ஆகும். துறவறத்தார் நோற்க வேண்டிய 10 முக்கிய கொள்கைகள் பின்வருமாறு :—

(1) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலப் பொறுமை;
(2) யான், எனது எனும் செருக்கு இல்லாமை;
(3) உள்ளும் புறமும் தூய்மை;
(4) எப்போதும் பொய்யாது ஒழுகுதல்;
(5) நல்லறச் சிந்தையோடு இருத்தல் ;
(6) அருள் சேர்ந்த நெஞ்சோடு பழகுதல்;
(7) நடுங்காத்தவம் ஆற்றல்;
(8) எதனினும் நீங்கி இருக்கும் பற்றற்ற தன்மை;
(9) ஓதியுணர்ந்து பிறர்க்கு உரைக்கும் தெளிவு;
(10) இல்லறப் பழக்கங்கள் அனைத்தும் நீக்கி நிற்றல்.

இந்தக் கொள்கைகளை நம்பி அணுவளவும் பிசகாது முறையாக நடப்பவர்கள் இறுதியில் பிறவிப் பெருங்கடலை நீந்துகின்ற ஆற்றலைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு பிறப்புக்கும் ஆன்மா ஒன்றுண்டு. இந்த ''ஆன்மா'' இயல்பான தூய்மையை உடையது. இல்லறத்திலேயே ஈடுபட்டு வாழ்கின்ற போது, நெறி தவறிச் செயல்படும் நிலைமைகள் பல தோன்றும். அதனால், தூய்மையான ஆன்மா மாசுற்று, உற்ற மாசின் அளவைப் பொருத்துத் தன்னுடைய அடுத்த பிறவிக்கு வழி கோலுகிறது. எண்ணற்ற பிறவிகளுக்குக் காரணம் தீவினையேயாகும். பிறவிப் பெருங்கடலை நீந்தும் ஆற்றலைப் பெறுவது நல்வினையாகும். இந்த நல்வினையைத் தேடிக் கொள்வது உலகில் வாழும் ஒவ்வொருவரின் பொறுப்புமாகும். நல்வினையைத் தேடிக் கொள்ள நமக்குக் கிடைக்கும் நாட்கள் சில. கீழ்க்கண்ட பாக்கள் இதை உணர்த்தும் வகையில், அமைந்திருக்கின்றன :



# தமிழ்நாட்டில் சமணர் திருக்கோயில்கள்

கரந்தை (வடஆர்க்காடு) வர்த்தமான மகாவீரர் ஆலயம்.

மேல்சித்தாமூர் - (தென்ஆர்க்காடு) பார்சுவநாதர் ஆலயம்.

திறக்கோயில் என்னும் ஊரில் காணப்பெறும் பாழடைந்த ஆலயம்.

குந்தவ்வை ஜினாலயம் என்று வழங்கப் பெறும் திருமலை பார்சுவநாதர் ஆலயம்.

காஞ்சிபுரம் அருகில் உள்ள திருப்பரிதிக்குன்றம். திரிலோக்யநாதர் ஆலயத்தின் உட்புறம்.



தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் சமணர் ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒரு சில ஆலயங்கள் இங்கே காட்சி தருகின்றன.

திருநறுங்குன்றம் பார்சுவநாதர் ஆலயக் கோபுரம்.

திருப்பரிதிக்குன்றம் திரிலோக்யநாதர் ஆலயம்.

கரந்தை (வடஆர்க்காடு) ஆதிநாதர் ஆலயம்.

விழுக்கம் ஆதிநாதர் ஆலயம்.

இமார்—

"உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்"
—வரந்தரு காதை, சிலப்பதிகாரம்.

"அன்றறிவாம் என்னா தறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"
—திருக்குறள்.

"நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்"
—திருக்குறள்.

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்".
—நாலடியார்.

"வேற்றுவர் இல்லா நுமர்ஊர்க்கே செல்லினும்
வெகுண்டீர் போல
ஆற்றுணாக் கொள்ள தடிபுறத்து வைப்பீரே அல்லீர்
போலும்
கூற்றங்கொண்டோடத் தமியே கொடுநெறிக்கட்
செல்லும் போழ்தின்
ஆற்றுணாக் கொள்ளீர் அழகலால் அறிவொன்றும்
இலிரே போலும்.
—சீவகசிந்தாமணி.

சீவகசிந்தாமணியில் திருத்தக்கத் தேவர் இன்னொரிடத்தில் இதே கருத்தை நயம்பட நவில்வார். ஒரு வழிப் போக்கன் சீவகனைப் பார்த்து, "ஐயா, உங்களுக்கு மனைவி, மக்கள் உண்டா?" என்று வினவ, அதற்குச் சீவகன், "எனக்கு நான்கு மனைவியர் உள்ளனர். அவர்கள் அனைவருடைய வயிற்றினுள்ளும் பிறந்த ஒரே மகன் உண்டு" என விடையிறுக்கிறான். எப்படி முடியும்? என்று வியந்த வழிப் போக்கனுக்குத் தெளிவுறுத்துமுகத்தான், சீவகன் "என்னுடைய மனைவியர் "நற்றானம், சீலம், நடுங்காத்தவம், அறிவர் சிறப்பு" ஆகிய நால்வராவர்; இவர்கள் அனைவர் வயிற்றினுள்ளும் பிறந்த ஒரே மகன் நல்வினையாம் என்றான். இருள்சேர் இருவினையையும் நீக்க வேண்டிய இன்றியமையாமையை இந்த உவமை உள்ளங்கை நெல்லிக் கனியைப் போல் விளக்குகிறது.

தீவினை மிகுதியாக ஆன்மாவோடு சேருவதற்கு அதிகம் காரணமாக இருப்பது உள்ளத்தில் எழும் அகந்தையும், பற்றும் ஆகும். "அற்றது பற்றெனின், உற்றது வீடு" என்ற ஒரு மொழி உண்டு. பற்று அறுத்தல் என்பதைச் சமண சமயம் பெரிதும் வலியுறுத்துகிறது. தீவினைகள் காதி, அகாதி, வினைகள் என்று எட்டு வினைகளாகவும், இந்த எட்டு வினைகளையும் களைகின்றவர் எட்டுக் குணங்களையும் பெறுகிறார் என்றும் சமண சாத்திரங்கள் சொல்லுகின்றன.

சமணர் வணங்குகின்ற தீர்த்தங்கரர்கள், அரகந்தர் என்ற நிலையிலேயே இருப்பவர்கள். எல்லா வினைகளையும் களைந்தவர் சித்தர் என்ற நிலையில் இருப்பவர்கள். வினைகளைக் களையும் துறவை மேற்கொண்டிருப்பவர்கள் சாதுக்கள் நிலையிலிருப்பவர்கள், அரகந்தர், சித்தர், சாதுக்கள் ஆகியோர் போதித்திருக்கிற தரும நெறிகளைப் பின்பற்றுவது ஒவ்வொரு சமணனுடைய கடமையுமாகும். செல்வத்தின் செருக்கும், உடல் வலியின் வனப்பும், எல்லாம் கற்றவன் என்ற நினைப்பும் அகந்தையைத் தோற்றுவிக்கும். வேடிக்கையாக ஒன்று சொல்லுவார்கள். சாதாரண மனிதன் "நான்" என்று மட்டுந்தான் தன்னைப் பற்றி


ஆனைமலையில் காணப்பெறும்
தீர்த்தங்கரர் சிலைகள்

நினைத்துக் கொண்டிருப்பான். "நீ" என்று எதிரிலே இருப்பவரையும் சேர்த்து, என்று ஒருவன் "நான் நீ" என்று நினைக்கத் தொடங்குகிறானோ, அன்றே அவன் ஞானியாகிறான் என்பார்கள். இன்னொன்றும் சொல்வார்கள். அடிக்கடி நாம் நினைத்தது நடக்கவில்லையே என்கிறோம். இதன் பொருள் நடக்க இயலாததை நினைக்கும் ஆசை, பற்று நம்மிடம் உள்ளது என்பதாகும். மனத்தில் எழும் பற்றைப் பற்றிப் பகரும்போது எனக்கு எங்கோ படித்த ஒன்று நினைவுக்கு வருகிறது. ஈரக்கையால் காக்கை கூட ஓட்டாத—நெஞ்சில் ஈரமில்லாத — ஒரு கருமி ஓர் ஊரில் வாழ்ந்தானாம். அவனைச் சந்தித்த ஒரு பெரியவர், அவனிடத்தில் ஒரு சிறு ஊசியைக் கொடுத்துவிட்டு இதை நீ எனக்கு அடுத்த பிறவியிலே திருப்பிக் கொடுத்து விடு என்றாராம். உடனே, அவன் அடுத்த பிறவியிலே இறந்த பிறகு எப்படித் திருப்பிக் கொடுக்க முடியும் என்று கேட்டானாம். நீ பிறருக்கு ஈயாமல், சேர்த்து வைத்திருக்கும் செல்வத்தை அடுத்த பிறவிக்கும் எடுத்துச் செல்லப் போவதில்லையா என்று அவர் கேட்ட போது, அந்தக் கருமி வெட்கித் தலை குனிந்தானாம். இறந்தவரைத் தொடருவது அவரவர் செய்த வினைப் பயனே அன்றி வேறெதுவும் இல்லை என்பது இதிலிருந்து நன்றாகப் புலனாகும்.

சமணர்கள், இல்லறத்திலே இருப்பவர்கள் வாழ்க்கையிலே பின்பற்ற வேண்டிய நெறியினை மூன்றாக "மும்மணி" என்று கூறுவார்கள். இவை, நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் எனப்படும். முன்னோர் மொழிந்த முதுமொழிகளை நம்பிப் பின்பற்றுவது நன்னம்பிக்கையாகும். நன்னம்பிக்கை என்பதை நற்சாட்சி என்றும் நவில்வர். முது நெறிகள் மீது கொள்ளும் நம்பிக்கையே இது என்றும் கொள்ளலாம். 'அருங்கலச் செப்பு' செப்பும்:

"பறையன் மகனெனினும் காட்சியுடையன்
இறைவன் என உணர்ற் பாற்று".

சென்ற இடமெல்லாம் செலவிடாமல் தீது ஒழித்து நன்னெறியின்பால் செலுத்துகின்ற தன்மையை உடையது நல்லறிவு. நல்லதை உணர்ந்து அல்லவை ஒதுக்கும் மனப்பக்குவத்தைத் தருவது


தீபங்குடி - (தஞ்சை) ஆலயம்

நல்லறிவு. வாழ்க்கை என்னும் கடலில் ஆசை அலைகள் முன்னும் பின்னும், மேலும் கீழும், இடமும், வலமும், மோதிக் கொண்டிருக்கும். அந்தக் கடலில் சுற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய உள்ளம் காகிதப் படகாக இருக்கலாம். அலைகள் மோத மோத அந்தப் படகு நனைந்து மீள்வதற்கு வழியின்றிக் கடலில் மூழ்கிவிடலாம். அலைகள் மோதுகின்றபொழுது நல்ல மரத்தாலான படகு கூடச் சற்றுச் சலனமுறும். ஆனால் சிறிது நேரத்தில் அந்த மரப் படகு தன்னை நிலைப்படுத்திக் கொண்டு, தன் பயணத்தைத் தொடர்ந்து கரை சேரும். பக்குவமடைந்த நெஞ்சங்கள் சலனத்திற்கு உள்ளானாலும், மீண்டும் நிலைப்படுத்திக் கொள்ளும் வலிவு உடையவை. நல்லறிவால்நாம் உணர்கின்ற நெறிகள் காகிதப் படகாகத் தொடங்குகின்ற நம்முடைய உள்ளத்தை மெல்ல மெல்ல மரப் படகாக மாற்ற வேண்டும். இந்த மனப்பக்குவத்தைப் பெறுவதற்கு நல்லறிவு துணை நிற்கும்.

முது நெறிகளை நம்பி அத்தகைய பல நெறிகளை அறிவால் உணர்ந்து கவனத்துடன் அவைகளை நடத்திக் காட்டுவதே நல்லொழுக்கம் ஆகும். நம்முடைய சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும் தூய்மை இருக்க வேண்டும்.

அகமும் புறமும் வெளுத்தால், இகமும் பரமும் ஒன்றாகிவிடும் என்று கூறுவார்கள். ஒழுக்கத்தில் கவனம் இன்றியமையாதது. இறை நெறி ஒழுகுவதைத்தான், இறைவனடி ஏத்துதல் என்பார்கள். பல துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் இடையிலே உழன்று கொண்டிருப்பவன் இறைவனடி ஏத்துதல் இயலாத காரியம். இதனால்தான் "வானின்று அமையாது ஒழுக்கு" என்று புலவர் பேசுகின்றார்.

ஆகவே சமணர், 'எத்திறத்தாரும், அத்திறத்தாருக்கு உரிய நெறியை ஆர்வத்துடன் பின்பற்ற, வேளாண்மைத் தொழில் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டனர். வாழ்க்கையில் நல்ல நிலையில் வாழ்பவர்களும், இறை நெறிக்குப் புறம்பாக வாழக் கூடாது.

பண்டைக் காலத்திலிருந்த ஒரு மாமன்னன், மாடமாளிகையிலே வாழ்பவன், கொடி இடை மகளிரிடம் கூடிக் குலவுபவன் எப்படி இறைப் பற்றுடையவனாக இருக்க முடியுமென்று அவனுடைய நகரத்திலே வாழ்ந்த குடிமகன் ஒருவன் ஏளனமாக எள்ளி நகையாடினான் என்று ஒரு கதை உண்டு. சமண நூல்களில் இக்கதையைப் படிக்கலாம். இதை அறிந்த அரசன், அந்தக் குடிமகனை அழைத்தான். அவனுடைய உள்ளங்கையில் ஒரு அகல் விளக்கை வைத்தான். அது நிறைய எண்ணெய்யை ஊற்றினான். இந்த நகரத்திலிருக்கும் கடைத் தெருவின் வழியாகச் சென்று வா, எண்ணெய்யின் ஒரு துளி உன் உள்ளங்கையில்சிந்தியிருக்குமானால் சிரச் சேதம் செய்யப்படுவாய், என்று ஆணையிட்டு அனுப்பினான். அவன் சென்ற பிறகு அங்காடிகளை யெல்லாம் அழகூட்டச் செய்து வழியெல்லாம் ஆடல் பாடல்களையும் அரசன் ஏற்பாடு செய்தான். சென்ற குடிமகன் திரும்பினான். உள்ளங்கையில் ஒரு துளி எண்ணெய்யும் சிந்தியிருக்கவில்லை. அதனைக் கண்ட காவலன் கடைத் தெருவில் கண்டது என்ன? என்று கேட்டான். கை விளக்கின் மீது கவனம் இருந்ததால் கடைத் தெருவில் எதையும் கவனிக்க முடியவில்லை என்று குடிமகன் கூறினார் அவனுக்கு அறிவுரை புகன்ற அரசன் வாழ்க்கை எனும் கடைத் தெருவில் நான் நடந்து கொண்டிருந்தாலும் கை விளக்கின் மீதுஉன்னுடைய கவனம் நிலைத்திருந்ததைப் போல, என்னுடைய கவனம் இறை நெறி மீது நிலைத்து நிற்கிறது என்றான்.

இன்று இந்தியாவின் வடக்கிலிருந்து தெற்கு முனை வரை சமணர்கள் பல்வேறு மாநிலங்களில் அந்தந்த மாநில மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு சிறுபான்மையினராக வாழ்கிறார்கள். இந்தச் சமயமும் இந்தியாவில் இன்று ஒரு சிறுபான்மைச் சமயமே.

## தீபாவளி எவ்வாறு தோன்றியது?

தீபாவளி நமதுநாட்டில் இந்து சமயத்தவர் கொண்டாடும் விழா என்பதை அனைவரும் அறிவோம். தீபாவளி, சமண சமயத்தவராலும் கொண்டாடப்படுகிறது என்பதைப் பலர் அறிய மாட்டார்கள். அது சமணர்களால் ஏன் கொண்டாடப்படுகிறது, என்பதைப் பார்ப்போம்.

வர்த்தமான மகாவீரர், பாவாபுரி நகரத்திலே அவ்வூர் மன்னனின் அரண்மனையில் தங்கியிருந்தபோது, அங்கிருந்த மக்களுக்கு அறிவுரை செய்தார். இரவு முழுதும் நடைபெற்ற சொற்பொழிவு, பொழுது விடியும்போது முடிவுற்றது. சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் அவரவர் இடத்திலமர்ந்தபடியே உறங்கிவிட்டார்கள். வர்த்தமான மகாவீரரும் தாம் அமர்ந்திருந்த இருக்கையிலமர்ந்தபடியே வீடு பேறடைந்தார். பொழுது புலர்ந்து, அனைவரும் விழிப்படைந்து எழுந்து பார்த்தபோது, மகாவீரர் வீடு பேறடைந்திருப்பதைக் கண்டனர். உடனே தமது மன்னருக்குத் தெரிவித்தனர். மன்னன் ஏனைய அரசர்களை வரவழைத்தான். அவர்களுடன் கலந்துரை செய்தபின்னர், 'உலகத்திற்கு அறிவொளியாகத் திகழ்ந்த மகாவீரரை நினைவுகூர்ந்து வழிபடும் பொருட்டு, அவர் வீடுபேறு பெற்ற நாளில் இல்லம்தோறும் விளக்குகளை ஏற்றிவைத்து விழாக் கொண்டாடும்படி ஆணையிட்டான். மக்கள் அவ்வாறே செய்தனர். அந்த விழா நாள் தான் தீபாவளி: தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள். மகாவீரர் விடியற்காலையில் வீடு பேறடைந்ததனால், தீபாவளியும் விடியற்காலையில் கொண்டாடப்பெறும் விழாவாக அமைந்துள்ளது.

என்று கூறுகிறார். இங்கு, தானத்தின் சிறப்பு நன்கு விளக்கப்படுகிறது. கற்புக் கடம் பூண்ட தெய்வமாகக் கண்ணகியைக் கண்ட கவுந்தியடிகள் இறுதியில் கோவலனுக்கு நேர்ந்த கொடுமையறிந்து, உண்ணாநோன்பிருந்து உயிர் துறக்கிறார்.

இளங்கோவடிகள் தம்சமயக் கருத்துக்களை வலியுறுத்திக் கூறவே கவுந்தியடிகளைப் படைத்தார் எனலாம்.

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு''

என்று வள்ளுவர் கூறிய தவசியர் இலக்கணம் கவுந்தியடிகளுக்குப் பொருந்துமாற்றைக் காண்கிறோம். விளக்கைச் சுற்றி வாழும் விட்டிலுக்கு விளக்கின் கொடுமை தெரியாதது போல, ஆசைகளுக்கு அடிபணியும் மனிதனுக்கும் அவற்றின் கொடுமை தெரிவதில்லை. வயலுக்கு வரப்பு தேவை; குளத்திற்குக் கரை தேவை; மனிதனுக்குக் கட்டுப்பாடு தேவை. அந்தக் கட்டுப்பாட்டை அளிக்கும் சிறந்த சான்றோராகவும்-சமண சமயக் கொள்கைகளின் விளக்கமாகவும் கவுந்தியடிகளை நாம் பார்க்கிறோம்.

## நீலகேசி

பலாலயம் என்ற இடுகாட்டில் முனிசந்திரர் என்ற முனிவருடைய கடுந்தவத்தைக் கலக்க எண்ணி அந்நாட்டரசன் மகள் காமலேகை வடிவில் வந்து முனிவரோடு காதல் நாடகம் ஆடுகிறாள் நீலகேசி. ஆனால் முக்காலமும் உணர்ந்த துறவியோ அவளை நோக்கி, நீ விரும்புவது காதலல்ல, என் அழிவே, ஆனால் தவவலிமையுடைய என்னிடம் உன் செயல்கள் பலிக்கமாட்டா என்று கூறவும் நீலகேசி வியப்படைந்து-அவர் காலில் விழுந்து தன்னை தீவினையினின்றும் கரையேற்றுமாறு வேண்டுகிறாள். முனிவரும் அவள் பக்குவநிலையை அறிந்து சமணநெறியை அவளுக்கு அறிவிக்கிறார். ஆகவே, குருவிடமும், அருகனிடமும் நன்றியைச் செலுத்தும் வகையில் நீலகேசி பல நாடுகளுக்கும் சென்று பலரோடு வாதித்துச் சமணநெறியைப் பரப்புகின்றாள்..

## அபயமதி

அபயருசி இவரது தமையன்; இவர்கள் இருவரும் இரட்டையர். யசோதர காவியத்தில் இடம் பெறுபவர்கள். இவர்கள் முற்பிறப்பில் மாக்கோழியைப் பலியிட்ட காரணத்தால் பல பிறப்புக்களில் பிறந்து உழன்று, இறுதியாக அபயருசியும் அபயமதியுமாகத் தோன்றிப் பிறப்பைப் பற்றி நன்கு உணர்ந்து, வினைகளும், வினைகள் தம்மால் விளைகின்ற பயன்களாலும் வெறுப்புற்றுத் துறவியானவர்கள். இவர்கள் வரலாற்றைக் கேட்ட அந்நகர மன்னன் மாரிதத்தன் முதலானோரும் துறவியாயினர்.

## பம்மை

இவர் சீவக சிந்தாமணியில் குறிக்கப்படும் துறவியாவார். இவர் பெண் துறவியர் தங்கும் சமணப்பள்ளிக்குத் தலைவியாய் இருந்திருக்கிறார். இவர் தாமரையின் அகவிதழ்போல அமர்ந்து அறவுரை ஆற்றியதாகவும்-ஏனைய துறவியர் புறவிதழ் போல அமர்ந்து அறத்தைக் கேட்டதாகவும் திருத்தக்க தேவர் குறிக்கிறார். இவருடைய பள்ளியில் தான் சீவகனின் தாய் விசயமாதேவியும், வளர்ப்புத் தாய் சுநந்தையும், இன்னும் ஆயிரம் பெண்டிரும் துறவியாயினர்.

## பிரிதி தேவி

இவர் நாககுமார காவியத்தில் வருகிறார். சயந்தர மன்னனின் துணைவி. இவர் சிரிமதி என்னும் ஆர்யாங்கனையை வணங்கித் துறவு மேற்கொண்டார்.

## இலக்கணை

இவர் பிரிதி தேவியுடைய மருமகள். இவரைப் பற்றி நாககுமார காவியம்,

''கமலமல ராணிகர்நற் காட்சியிலக் கணையும்
துமிலமனைப் பதுமையெனுந் துறவாடி பணிந்
தான்''

என்று கூறுகிறது. பதுமஸ்ரீ என்னும் ஆர்யாங்கனையை வணங்கி, இவர் துறவு மேற்கொண்டதை இவ்வடிகளால் அறியலாம்.

## இராமதத்தா தேவி

மேருமந்தர புராணத்தில் வரும் ஆர்யாங்கனை சாந்தமதி ஹிரண்யமதி என்று இரு ஆர்யாங்கனைகளின் அறவுரையால் தவத்தை விரும்பி ஏற்றவர்.



தன் மகன பூர்ணசந்திரன் காமத்தில் மனஞ்செலுத்திக் கொண்டிருந்தமையால், அவனுக்கு உபதேசம் செய்து அவன் திருந்தாமல் போக, மீண்டும் சிம்மசந்திர முனிவரிடம் சென்று பழம் பிறப்புணர்ந்து அவனையும் உணர வைத்து அவனைத் திருத்தினார்.

இம்மேரு மந்தரத்தில்மேலும் ஸ்ரீதரை, யசோதரை முதலிய ஆர்யாங்கனைகளும் குறிக்கப்படுகின்றனர்.

இந்தத் துறவியருள் விசயமாதேவி, பிரிதி தேவி, இலக்கணை, இராமதத்தா தேவி ஆகியோர் இல்லறத்திலிருந்து துறவற நெறி மேற்கொண்டவர்.



மேல் சித்தாமூர் ஆலயத்தில் காணப்பெறும் சமணப் பெண் துறவி சிற்பம்.

சமணர் வாழ்க்கை சாவகர், சாரணர் என்று இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. சாவகர்-இல்லறத்தார்; சாரணர்-துறவறத்தார். சமணர் கொள்கைகளைத் துறவியர் சிறிதும் பிறழாமல் காப்பாற்ற வேண்டும்; இல்லறத்தோரும் மிகக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும். சமணர்களின் இல்லற வாழ்வு துறவறத்திற்குச் செல்ல இருக்கும்படி என்றே சொல்லலாம். இதைப் பல இலக்கியங்களிலிருந்து நாம் அறியலாம். ஸ்ரீபுராணம் தாமரையில் வண்டிருப்பதைப் பார்த்தும், மேகங்கள் மறைந்து தோன்றுவதைப் பார்த்தும் வாழ்க்கையில் வெறுப்பு தோன்றியதை விளக்குகிறது. தலை நரைத்ததைக் கண்டு உலகநிலையாமையை உணர்ந்ததை யசோதர காவியம் கூறுகிறது.

மேலும் அதே காவியம் மாவினால் செய்யப்பட்ட கோழியைப் பலியிட்ட காரணத்தால் நேர்ந்த துயரையும் கூறுகிறது. மந்தியின் கையிலிருந்து பழத்தை வேடுவன் பறித்ததால் சீவகனும் அவன் தேவிமாரும் துறவு பூண்டதைச் சீவக சிந்தாமணி கூறுகிறது. சீவகன் முற்பிறவியில் மனைவிக்காக அன்னத்தைச் சிறையிட்ட காரணத்தால் இப்பிறவியில் பற்றலரால் பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவற்றைப் பார்க்கும்போது சமணர்கள் தீவினையை எந்த அளவுக்கு நம்பினர் என்றும், இல்லறத்திலும் எந்த அளவு பற்றின்றி வாழ்ந்தனர் என்பதையும் அறியலாம். ஸ்ரீபுராணத்தின் மூலமும் மற்ற இலக்கியங்கள் மூலமும் பல ஆயிரக்கணக்கான ஆர்யாங்கனைகள் இருந்ததை நாம் அறிகிறோம். இவற்றைப் பார்க்கும்போது சமணர்கள் எந்த அளவுக்குத் தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும் புரிந்து வந்தனர் என்பதை நாம் காணலாம்.

# தமிழரசு

## சிறுகதைப் போட்டி (1974) முடிவுகள்

''தமிழரசு'' சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற கதைகளும் அவற்றை எழுதியோர் விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முதற் பரிசு: ரூ. 500.

**விடியாத இரவுகள் விடிகின்றன**

எழுதியவர் :
திரு எஸ். மகாலிங்கம்
(மாமல்லன்)
டி. குன்னத்தூர் அஞ்சல்,
திருமங்கலம்,
மதுரை மாவட்டம்.

இரண்டாம் பரிசு: ரூ. 300.

**குழாய் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்!**

எழுதியவர் :
திரு ஜி. அப்துல் பஷீர்,
7, தச்சர் சாலை, வட்டம் 18,
நெய்வேலி-3,
தென்னார்க்காடு மாவட்டம்.

மூன்றாம் பரிசு: ரூ. 200.

**பிளாட்பாரம் காந்தி**

எழுதியவர்:
நெல்லை ஞா. இளவரசு
(செல்வி பெப்ரீஷியா)
இளம் அறிவியல் இளம் கல்வி,
அடவித்துறை உயர்பள்ளி,
ஜமருமாத்தூர் அஞ்சல்,
ஜவ்வாது மலை,
வட ஆர்க்காடு மாவட்டம்.

பரிசு பெற்ற சிறுகதைகள் நவம்பர் 16-ந் தேதி இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும். பிரசுரத்திற்குத் தகுதியான கதைகளும் அவ்வப்போது 'தமிழரசு' இதழில் இடம்பெறும்.

இந்தப் போட்டியில் நடுவர்களாகப் பணிபுரிந்த மாநிலங்களவை உறுப்பினர் திரு டி. கே. சீனிவாசன், தினமணி கதிர் ஆசிரியர் திரு எம். எஸ். விசுவநாதன் (சாவி), சென்னை அனைத்திந்திய வானொலியைச் சார்ந்த திரு பி. வி. அகிலாண்டம் (அகிலன்) ஆகியோர்க்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்



# சமணர் - தமிழகத்துத் தந்தவை

தமிழ் இலக்கிய உலகம், மிகப் பரந்து விரிந்து நிற்பதாகும். சமண சமயத்தவர், தங்கள் கருத்துக்களை இலக்கியங்களின் வாயிலாகத் தெரிவித்து வந்துள்ளனர். தமிழ் இலக்கிய வரலாற்றில் சமணர் செய்திருக்கும் தொண்டு மிகச் சிறப்பானதாகும். சமணர்கள் உரு வாக்கியதாகச் சொல்லப்படும் நூல்களின் பட்டியல்

**இலக்கியம் :—**

* 1. பேரகத்தியம்
2. தொல்காப்பியம்
3. திருக்குறள்
4. சிலப்பதிகாரம்
5. சீவகசிந்தாமணி
6. நரிவிருத்தம்
7. சூளாமணி
8. பெருங்கதை
* 9. வளையாபதி
10. மேருமந்தரபுராணம்
* 11. நாரதர் சரிதம்
12. சாந்தி புராணம்
13. உதயண குமாரகாவியம்
14. நாககுமார காவியம்
15. கலிங்கத்துப் பரணி
16. யசோதர காவியம்
* 17. இராமகாதை
* 18. கிளிவிருத்தம்
* 19. எலிவிருத்தம்
* 20. இளந்திரையம்
* 21. புராண சாகரம்
* 22. அமிர்தபதி
* 23. மல்லிநாதர் புராணம்
* 24. பிங்கல சரிதை
* 25. வாமன சரிதை
* 26. வர்த்தமானம்

**இலக்கணம் :—**

1. நன்னூல்
2. நம்பியகப் பொருள்
3. யாப்பருங்கலம்
4. யாப்பருங்கலக்காரிகை
5. நேமிநாதம்
* 6. அவிநயம்
7. வெண்பாப்பாட்டியல்
* 8. சந்தநூல்
* 9. இந்திரகாளியம்
* 10. அணியியல்
* 11. வாய்ப்பியம்
* 12. மொழிவரி
* 13. கடியநன்னியம்
* 14. காக்கைப்பாடினியம்
* 15. சங்கயாப்பு
* 16. செய்யுளியல்
* 17. நக்கீரர் அடிநூல்
* 18. கைக்கிளைச் சூத்திரம்
* 19. நத்தத்தம்
* 20. தக்காணியம்

**நீதி நூல்கள் :—**

1. நாலடியார்
2. பழமொழிநானூறு
3. ஏலாதி
4. சிறுபஞ்ச மூலம்
5. திணைமாலை நூற்றைம்பது
6. ஆசாரக் கோவை
7. அறநெறிச் சாரம்
8. அருங்கலச் செப்பு
9. ஜீவ சம்போதனை
10. ஔவை (அகத்தில் சூடி)
11. நான் மணிக்கடிகை
12. இன்னா நாற்பது
13. இனியவை நாற்பது
14. திரிகடுகம்

**தர்க்க நூல்கள் :—**

1. நீலகேசி
* 2. பிங்கலகேசி
* 3. அஞ்சனகேசி
* 4. தத்துவதரிசனம்

**இசை நூல்கள் :—**

* 1. பெருங்குருகு
* 2. பெருநாரை
* 3. செயிற்றியம்
* 4. பரதசேனாபதியம்
* 5. சயந்தம்
* 6. இசைத்தமிழ்ச்செய்யுட் கோவை
* 7. இசைநுணுக்கம்
* 8. சிற்றிசை
* 9. பேரிசை

**நாடக நூல்கள் :—**

* 1. குணநூல்
* 2. அகத்தியம்
* 3. கூத்தநூல் சந்தம்

**ஓவிய நூல் :—**

1. ஓவிய நூல்
* 2. கலைகோட்டுத்தண்டம் (நிகண்டனூர் இயற்றியது)

**நிகண்டுகள் :—**

1. சூடாமணி நிகண்டு
2. திவாகரம்
3. பிங்கலந்தை

**கணித நூல்கள் :**

1. கெட்டிஎண் சுவடி
* 2. கணக்கதிகாரம்
3. நல்லிலக்க வாய்ப்பாடு
4. சிறுகுழி வாய்ப்பாடு
* 5. கீழ்வாய் இலக்கம்
* 6. பெருக்கல் வாய்ப்பாடு
* 7. அவினந்தமாலை

**சோதிட நூல்கள் :—**

1. ஜினேந்திரமாலை
2. உள்ளமுடையான்

**பிரபந்தங்கள் :—**

1. தோத்திரத்திரட்டு
2. திருக்கலம்பகம்
3. திருநூற்றந்தாதி
4. திருவெம்பாவை
5. திருப்பாமாலை
6. திருப்புகழ்
7. ஆதிநாதர்பிள்ளைத்தமிழ்
8. அப்பாண்டைநாதர் உலா
9. திருமேற்றிசையந்தாதி
* 10. தர்மதேவியந்தாதி
11. திருநாதர் குன்றத்துப் பத்துப் பதிகம்

**சதகங்கள் :—**

1. கொங்கு மண்டல சதகம்
* 2. தேமிநாத சதகம்

*. இக்குறியிடப் பெற்ற நூல்கள் மறைந்து போனவை ; உரை ஆசிரியர்களின் மேற்கோள்களினின்றும் திரட்டப் பெற்றவை.

# சமணப்பெண் துறவியர்

சு. சுனந்தா தேவி

பண்டைக் காலத்தில் சமண சமயம் தமிழ் நாடு முழுவதும் பரவி நிலைபெற்றுச் செல்வாக்கும் பெற்றிருந்தது. இது பிறப்பினால் உயர்வு, தாழ்வு கருதாத பெருஞ்சமயம். இதை,

''பறையன் மகனெனினும் காட்சி யுடையான்
இறைவன் என உணரற் பாற்று''

என்ற அருங்கலச் செப்பினால் அறியலாம். ஐம் பொறிகளை அடக்கி ஆண்டவர், ஊழினைக் கடந்து வென்றவர் என்ற பொருளில் சமண சமயத்தைக் கண்டவர் 'ஜினர்' என்று அழைக்கப்பட்டார். இவர் கண்ட உண்மைகளை ஜைனம் என்றும் இவரைப் பின்பற்றுவோர் ஜைனர் என்றும் அழைக் கப்படுகின்றனர். துறவை வற்புறுத்தும் இச்சமயத் தில் துறவியர்க்குப் பஞ்சமில்லை. அவர்கள் அருளிச் செய்த அறவுரைகளும் கொஞ்சமில்லை. வஞ்ச மனத்தவர் பெறுவது நஞ்சினும் கொடிய நரகம்- அருகனைத் தஞ்சமடைந்தவர் பெறுவது மிஞ்சுபுகழ் வீடு என்று அவர்கள் கொஞ்சுதமிழில் அருளியிருக் கும் நூல்கள் அருமையுடையன. அனைவரும் ஏற் றும் பெருமையுடையன. இத்தகு சிறப்பு பெற்ற சமயத்தில் இருந்த பெண் துறவியரைப் பற்றி இங்குக் காணலாம்.

''நந்திய பிண்டி வாமன் நன்னெறிவழா துநோற்பாள்
கந்தியே அவ்வை அம்மை கன்னியே-கௌந்திஎன்ப''
என்று சூடாமணி நிகண்டும்,

''பைம்மையும் கெந்தியும் அருந்தவப் பெண்
பெயர்'' என்று பிங்கல நிகண்டும்,

''சாமி குரத்தி பெருமாட்டி ஆசாள்தலைவி ஐயை
நாமங், கவுந்தியும் பைம்மையும் ஆருகதத்துத் தவப்
பெண்''

என்று கயாதர நிகண்டும் கூறுவதிலிருந்து சமணப் பெண் துறவியர் கந்தி, அவ்வை, அம்மை, கன்னி, கௌந்தி, பைம்மை, சாமி, குரத்தி, பெருமாட்டி, ஆசாள், தலைவி, ஐயை என்ற பெயர்களால் அழைக் கப் பெற்றனர் என்று தெரியவருகிறது. ஆர்யாங் கனைகள் என்ற பெயராலும் அவர்கள் அழைக்கப் பெற்றமை நீலகேசி மூலம் அறிய வருகிறது.

நாகமதி கந்தியார், சசிமதி கந்தியார், ஸ்ரீமதி கந்தியார், நவிலூர் ராஜிமதி கந்தியார், அநந்த மதி கந்தியார், மாங்கப்பெ கந்தியார் ஆகியோர் சிரவண பெள்குளக் கல்வெட்டுக்கள் கூறும் சமணப் பெண் துறவியர். பல பெண் துறவியர் இருந்தமை கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம். பிருத்வி விடங்க குரத்தி என்பவரும், குணசேர்த்தி படாரக ரின் வழி மாணாக்கியர் கனக வீரக் குரத்தியர் என்ப வரும் சமணத் துறவியரில் சிறந்தவர்களாகக் கல் வெட்டில் இடம் பெறுகின்றனர். மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மர் காலத்து அரிஷ்ட நேமி படாரர் மாணாக்கியர் பட்டினி குரத்தி அடிகள், பெண் பள்ளியும், கிணறும் கண்டதாக ஒரு கல் வெட்டு கூறுகிறது. அக்கல்வெட்டு ஸ்ரீமிழலூர்க் குரத்தி, திருப்பருத்திக் குரத்தி என்று ஊர்ப் பெய ரோடு விளங்கிய சமணப் பெண் துறவியரைக் குறிக்கிறது. பெருங்காவியமான சீவக சிந்தாமணி யில் 450 பாடல்கள் இடைச் செருகலாகக் கூறப்படு கின்றன. அவற்றைக் கந்தியரின் பாடல்கள் என் றும் கூறுகின்றனர். திருத்தக்க தேவரின் பாடல் களைப் போன்றே எழுதும் அளவுக்குக் கந்தியார் திறமை வாய்ந்தவராக இருந்தமையால் அப்பெண் துறவியர்கள் அறிவில் சிறந்தவர் என்பதில் ஐய மில்லை. இத்தகு துறவியர்கள் இல்லறத்தில் இருக் கும் மகளிருக்குச் சமணக் கொள்கைகளையும் அற வுரைகளையும் புகட்டி வந்தனர். இனிச் சிறப்பு வாய்ந்த சில சமணப் பெண் துறவியரைக் காண லாம்.

இவர் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் வரும் துறவியாவார். கோவலனும் கண்ணகியும் புகாரை விட்டு மதுரைக்குச் செல்லுமுன் இவரைச் சந்திக்கின்றனர். அந்த முதல் சந்திப்பிலேயே அவர், 'இவள் செல்வி அறிகுநர் யாரோ' என்று ஊழ்வினையைப் பற்றிக் கூறுகிறார். சமண சமயத் தைச் சார்ந்தவர்கள் நிழல் நம்மைத் தொடர மறந்தாலும், நிலம் நம்மைத் தாங்க மறந்தாலும், வினை நம்மைத் தாங்க மறந்தாலும், வினை நம்மை விட்டு எங்கும் செல்லாது என்ற அசையாத கொள் கையுடையவர்கள் என்பதைக் கவுந்தியடிகள் மூலம் அறிகிறோம். மேலும் துறவியர்கள் ஊர் ஊராகச் சென்று அருகனுடைய அறநெறிகளைப் பரப்பும் விருப்பமுடையவர்கள் என்பதை, அற வுரை கேட்டு ஆங்கு அறிவனை ஏத்த' என்ற தொட ரால் அறியலாம். மேலும் நாடுகாண் காதை யில் சாரணர் தலைவனுடைய மொழியைக் கேட்டுக் கவுந்தியடிகள்,

''ஒருமுன் றவித்தோ னோதிய ஞானத்தி
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா''

என்று கூறுகிறார். இதில் என் செவிகள் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றினையுங் கெடுத்த அருகதேவன் அருளிய அறவுரைக்கு அல்லது பிறி தொன்றற்குத் திறவா என்று கூறுவதை,

''காமம் வெகுளி மயக்கம் இம் மூன்றும்
நாமம், கெடக்கெடும் நோய்''

என்ற திருக்குறளோடு ஒப்பு நோக்கலாம்.

பின்னர் கோவலன் தன் இடும்பையைக் கவுந்தி களிடத்து எடுத்துரைத்த போது அவர்,

''பிரிதல் துன்பமும், புணர்தல் துன்பமும்
உருவிலாளன் ஒறுக்குந் துன்பமும்
புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கில்லை
பெண்டிரும் உண்டியும் இன்பமென்றுலகிற்
கொண்டோ ருறுஉங் கொள்ளாத் துன்பம்''

என்று அறிவுறுத்துகிறார். இதில் சமண சமய முனி வர்களுக்குரிய துறவும், அவாவறுத்தலும் வலி யுறுத்தப்படுதலைக் காணலாம். பின்பு கண்ணகியை மாதரியிடத்து அடைக்கலமாக அளித்தபோது,

''தவத்தோர் அடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருமது கேளாய்''

உங்கள் எதிர்காலத்திற்கு ஓர் நற்செய்தி

TNSC BANK

எப்பொழுதும் இல்லாத அதிகப்படியான வட்டி இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

| ரூ 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001

தந்தி அர்பாங்க் தொலைபேசி: 20367 டெலக்ஸ் 7225

என்.எம்.ஹெப்னிகர், நிர்வாக இயக்குநர்.

குடவாசல் சி.கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர்

ஆர்.கனகசபை, தலைவர்.




# சமணரின் தமிழிலக்கணத் தொண்டு

க.ப. அறவாணன்

சமணர் தமிழிலக்கணத்திற்குச் செய்த பணி மிகப் பெரியது. எழுத்து, சொல், அகப் பொருள், புறப்பொருள், யாப்பு, பாட்டியல் என இலக்கணத்தில் எல்லாத் துறைகளிலும் அவர்கள் ஆற்றிய பணிகள் ஏராளம். அவிநயம், அவிநயனார் யாப்பு, அவிநயனார் புறநடை, அவிநயனார் களவியல், அவிநயனார் புறத்திணைப் படலம், இந்திர காவியம், யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை, அமுத சாகரம், நேமிநாதம், வெண்பாப் பாட்டியல், நன்னூல், நம்பியகப் பொருள் என்ற இலக்கண நூல்கள் இவர்களால் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை எழுதப் பட்டன.

இலக்கணம் எழுவதில் அயல் மொழிக் காரருக்கே ஆர்வம் அதிகம் என்ற கொள்கையுடைய சிலர், சமணரின் தமிழிலக்கணத் தொண்டைக் கொண்டு அவரை அயல்மொழியாளர்; அயல் நாட்டாளர் என்று ஒதுக்குகின்றனர். இது நாட்டு வரலாற்றுப் பார்வையிலும், இலக்கிய வரலாற்றுப் பார்வையிலும் பொருந்தாதது. அயலார்தான் இலக்கணப் படைப்பினர் என்றால் இறையனார் களவியல் முதலான இலக்கண நூல்கள் எழுதிய தமிழ் நாட்டுச் சைவரையும், மாறன் அலங்காரம்முதலான இலக்கண நூல்கள் எழுதிய தமிழ் நாட்டு வைணவரையும் அயல் நாட்டார் என்று கூற வேண்டிய வரலாற்று வழு வந்து சேரும். இது மட்டுமின்றி சமணர்தமிழ் மொழியினர், தமிழ் நெறியினர் என்பது பின்வரும் சான்றுகளால் உறுதியாகும்:

சமணர் தமிழை மிக நேசித்தனர். தமிழிலும் நயம் செறிந்த இலக்கியங்களையும், ஆழம் வாய்ந்தஇலக்கணங்களையும் படைத்தனர். 'தமிழை, ஒரு பெருங் கடல்' என்று புகழ்ந்துரைக்கிறார். யாப்பருங் கலப்பாயிர ஆசிரியர் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு) தமிழில் மிகச் சிறந்த யாப்பிலக்கண நூல்கள் இரண்டை எழுதிய அமுத சாகரரை மாயூரம் நீடூரில் உள்ள கல்வெட்டு (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு), 'தண்டமிழ் அமுதசாகர முனி' என்று பாராட்டுகிறது. தமிழைக் கன்னித் தமிழ்என்று முதன் முதல் போற்றியவர், சைனத் தமிழரே (பார்க்க: யாப்பருங்கலக் காரிகை, 2) மிக அழகியதோர் அகப் பொருள் இலக்கணம் எழுதிய நாற்கவிராச நம்பி என்பவர் ஒரு தமிழாசானின் செல்வர். (கி.பி. 14-ஆம் நூற்றாண்டு) இதனைப் பெருமையாக 'முத் தமிழ் ஆசான் மைந்தன்' என்று சொல்லிப் போற்றுகிறது. அந் நூலின் பாயிரம்.

இளம்பூரணர் என்பவர் தொல்காப்பிய உரையாசிரியர் களுள் முதலாமவர் ;மூத்தவர். பூரணர் என்ற அருகக் கடவுளின் பெயரைப் பூண்ட தமிழ் நாட்டுச் சமணத் துறவி. இவரில்லையேல் தமிழின் மூத்த நூல் எனப்படும் தொல்காப்பியமே இல்லை எனலாம். இத்தகு பெருமைக்குரிய, இளம்பூரணர் தன் சொல்லதிகார உரையில் குறிப்பிடும் கருத்து இங்கே நினைத்துப் பார்க்கத் தக்கது.

வினாவிற்கு விடை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டு நல்க வேண்டும். அவர் தரும் எடுத்துக் காட்டுப் பின்வருமாறு: "நும் நாடு யாது?" என்று வினவினால், 'தமிழ்நாடு' என்று பதில் சொல்லுவது ஆகும்" என்கிறார். அவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. அன்று நாடு காவிரி முதல் கங்கை வரை விரிந்து இருந்தது. அப்போது எழுதுகிறார் 'என் நாடு தமிழ்நாடு' என்று. எவ்வளவு பெருமையுடன் குறிப்பிடுகிறார்!

நேமிநாதம் என்னும் இலக்கண நூல் கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இதன் உரையாசிரியர்: 'எம் நாடு தமிழ்நாடு' என்று நெஞ்சுவக்க, உரிமை மணக்க, கை இனிக்க எழுதுகிறார். 'தமிழ்நாடு' என்பதற்கு இலக்கியச் சான்று கேட்டவர்கள் பார்க்க வேண்டிய பகுதி இது. ஜ ஷ ஹ ஸ க்ஷ ஸ்ரீ போன்ற எழுத்துக்களைத் தமிழில்கலந்து எழுதுதல் கூடாது என்றும், 'ராமன்' என்று எழுதுதல் பிழை என்றும் 'இராமன்' என்று எழுதுதலே தமிழ்நெறி என்றும் முதன் முதல் விரிவாக எடுத்து விளக்கிக் காட்டியவர் சமணத் தமிழரே. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நன்னூலில் 146-149 எண்ணுள்ள நூற்பாக்களில் இவ் விதிகள் இடம் பெற்றுள்ளன. இம்மட்டுமின்றி, தாம் எழுதிய இலக்கியங்களில், வேற்றுமொழி சொற்கள் வருமானால் அவற்றைத் தமிழ் ஒலிப்படுத்தி (Transliteration) எழுதுபவர்; அல்லது தமிழில் மொழி பெயர்த்தே (Translation) எழுதுவர். இதற்கெல்லாம் காரணம், தமிழகத்தில் கி.மு. தொடங்கி வாழ்ந்த சமணர், பிறப்பாலும் குடியாலும் பேசு மொழியாலும் தமிழராக இருந்தமையே தலைமைக் காரணங்கள் ஆகும்.

சமண சமயம் வட இந்தியாவில் (கி.மி. ஆறும் நூற்றாண்டிற்கு முன்) தோன்றியது கொண்டே அது திராவிடச் சமயம் அல்ல என்று ஒதுக்குதல் சரியன்று. ஏனெனில், ஆரியரின் வருகைக்கு முன்னர், இந்தியா முழுதும் வாழ்ந்தவர் தமிழரே அல்லது திராவிடர், என்பது அறிஞர் பலரின் கருத்து. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அரசியல் துறையில் மட்டுமல்லாமல் எழுத்துத் துறையில் பல நூல்களைஎழுதிக் குவித்தவர். அவர் தமது "The Untouchebles" என்ற ஆங்கில நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "Tamil or Dravida was not merely the language of south India, but before the Aryans Came, it was the language of the whole of India and was spoken from Kashmir to Cape Comorin."

ஆதலால் சமணம் பிறந்த இடம் வடபுலம் எனினும், அச்சமயம் பிறந்த போது, அங்கிருந்தவர் தமிழரே. ஆதலின் பகுத்தறிவு மதமான சமணம் திராவிட மதம் என்பது தெளிவு. சமணத்தைச் சார்ந்த அக்கால அறிஞர் தமிழரே என்பதும் தெளிவு.

# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.



ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.




| தொலைபேசி | சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|---|
| | 29684<br>81954 | 3814 | 35051 |


# மகாவீரர் போதனை



மு. சண்முகம் பிள்ளை

பகவான் மகாவீரரின் தோற்றம் உலகில் அற வழிப்பட்ட சமுதாயக் கட்டுக்கோப்பை உருவாக்கக் காரணமாயிருந்தது. அவர் பிறக்கும் பேற்றினைப் பெற்ற விதேக நாடு அவருடைய தோற்றத்தால் வளம் பலவும் பெருகித் திகழலாயிற்று. இதனால் மகிழ்ச்சியுற்ற பெற்றோர் சித்தார்த்தனும் திரிசிலை பிரியகாரிணியும் பெருமகிழ்ச்சி யுற்றனர். அவருக்கு 'வர்த்தமானன்' என்னும் காரணப் பெயரை இந்திரன் சூட்டினான். வர்த்தமானர் என்றால் பெருக்கத்திற்குக் காரணமானவர் என்பது பொருள்.

இளமையிலேயே வர்த்தமானர் அஞ்சாத நெஞ்சுறுதி படைத்த வீரராயும் விளங்கினார். எனவே, சங்கமன் என்னும் தேவனே முதலில் அவரை மகாவீரர் என்று புகழ்ந்து போற்றினான்.

'மகாவீரர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்ற வர்த்தமானர், பின்னர் முற்றத் துறந்த முனிவராய், அப்பெயருக்கு முற்றும் ஏற்புடையவராயினார்.. புறப் பகைகளை வெல்வதினும் அகப் பகையாம் ஐம்பொறிகளையும் வென்று அடக்குவது எளிதன்று. புலனடக்கம் பெற்றோர் பெரு வீரர் ஆவர்.

'ஒன்றாகக் காண்பதே காட்சி ஐம்புலனும்
வென்றான்றன் வீரமே வீரம்...''
—தமிழ் நாவலர் சரிதை—59.

என்னும் ஔவை மூதாட்டியின் முதுமொழி இவ்வுண்மையை நன்கு விளக்கும்.

ஐம்புலனும் வென்று வினைகளிலிருந்தும் விடுபட்டு முற்றும் உணர்ந்த இறைமை நிலை எய்திய வர்த்தமானர் மன்பதை எல்லாவற்றையும் ஒன்றாகவே கண்டார். எவ்வுயிரையும் தன்னுயிர்போல் நினைத்து இரக்கங் கொண்டு அவற்றிற்கு உதவ வேண்டும் என்று வற்புறுத்தினார்.

'தனக்கு வரும் இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு ஏனைய உயிர்களுக்குத் துன்பம் செய்யாதவனே உண்மைத் துறவியாவான்' என்கின்றார் திருவள்ளுவர்.

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு' —குறள்—261.







# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

**தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.**

*சிறு சேமிப்புத் தரும் சிரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரு | ரு | ரு |
| ரெக்கரிங்க டிபாசிட் | 5/- | 375/- | . . . |
| | 10/- | 750/- | . . . |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | . . . | 825/- |
| | 10/- | . . . | 1, 650/- |

**சலுகைகள்**

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங்க டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங்க டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை. சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.


என்னும் பொது மறை வர்த்தமான மகாவீரரின் வாழ்க்கையிலிருந்தே பிறந்தது என்னலாம்.

துறவியான மகாவீரர் எத்தனை எத்தனையோ இன்னல்களைத் தாங்கி, எவ்வகைப்பட்ட உயிருக் கும் தீங்கு செய்யாது ஒழுகினார். பன்னிரண்டு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து முழுதுணர் கேவல ஞானத்தை அவர் பெற்றார். விருப்பு வெறுப்பு இன்றி உலகில் எல்லாவற்றையும் சமநோக்குடன் காண்கின்ற பெரு நோக்கினை அடைந்தார்.

முனிவர்களும் சாதுக்களும், சாவகர் சாவகி களும் அவரை வணங்கி வழிபட்டு அவர் கூறும் அறவுரைகளைக் கேட்க வந்தனர். அவருடைய பெருமையை உணர்ந்து தேவர்களும் வந்து அவ ருக்குப் பணிவிடை செய்தனர். தேவர்கள் அமைத்த 'சமவ சரணம்' என்னும் அறவுரை மண்டபத்தில் அமர்ந்து மகாவீரர் உலகிற்கு உபதேசம் செய்து வரலானார். அவர் அருளிய போதனைகளுள் பொது வான கோட்பாடுகள் கொண்ட சிலவற்றை இங்குக் காணலாம்.

தீர்த்தங்கரர்கள் போதித்த போதனைகளை அறம்' என்றே அனைவரும் போற்றினர் ;

'இறைவர்தம் அறத்தை நோக்கக் காதலன் அடிகள்'
—சீவக. 2653.

'நல்லறமே நினைமின்' —சீவக. 2633—2634

'திருவறம் வளர்க' —சீவக. வாழ்த்து.

எனவரும் சீவகசிந்தாமணிக் காப்பியத் தொடர் கள் இவ்வுண்மையை விளக்கும். மக்கள் அறவழி வாழ மகாவீரரின் அறவுரைகள் வழிகாட்டிகளாம்.

'ஆதியாய் உலகியல்பை அளித்தாய் நீயே!
அருந்தவனாய் அறம்பகர்ந்த அறவன் நீயே!
காதியாய் இருவினையைக் கடிந்தாய் நீயே!
கணம்ஈராறு அடியேத்தும் கடவுள் நீயே!
போதியாய்ப் பொருளளவும் ஆனாய் நீயே!
பொறிவாயில் ஐந்தவித்த புனிதன் நீயே!
சேதியாய் நிலவுகுணச் செல்வன் நீயே!
ஸ்ரீவர்த்த மானன்எனும் தீர்த்தன் நீயே!
—ஜீவசம்போதனை—27

என்று உலகிற்கு அறம் வழங்கிய—வினையின் நீங்கி விளங்கிய அறிவு பெற்றுக் கடவுளாகிய ஸ்ரீவர்த்த மானர் போற்றப்படுகிறார்.

பகவான் வர்த்தமான மகாவீரர் செய்தற்கரிய பெருந் தவத்தினராய் விளங்கிப் பகர்ந்த அறங் களுள் சிறந்தன சிலவற்றை இனிக் காண்போம் :

உயிர்க் குணம் :

உயிர் தெய்வத் தன்மை உள்ளது. ஒவ்வோர் உயிரும் உண்மையாகவே தெய்வத் தன்மை வாய்ந்தது. அதனிடம் கடையிலா அறிவு, கடை யிலாக் காட்சி, கடையிலா வீரம், கடையிலா இன்பம் ஆகிய குணங்கள் உள்ளன. —மேருமந். 69.

உயிரினது ஆற்றல் :

தான் தாங்கியிருக்கும் வடிவத்துக்குத் தக்க படி தன்னைச் சிறியதாகவோ பெரியதாகவோ ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் உயிருக்கு உண்டு. —மேருமந். 81.

உயிரின் நிலை :

பாலில் வெண்ணெய் இருப்பது போலவும், எள்ளில் எண்ணெய் இருப்பது போலவும், விறகில் நெருப்பும் மலரில் மணமும் மறைந்திருப்பது போலவும், உடலில் உயிர் இருக்கிறது. இதையே ஜீவன், ஆத்மா என்று சொல்லுகிறார்கள்.
—திருநாவுக். தேவா. 5, 90:10.

தனக்குத் துணை தானே :

ஒவ்வொரு மனிதனும் அவனவன் வாழ்க்கை யின் சிற்பி. அவனுடைய இன்ப துன்பங்களுக்கு அவனேதான் காரணம்.
—நாலடி. 248, பழ. 56, அறநெறிச். 173-174.

வினைவித்து நான்கு :

கோபம் அன்பை அழிக்கிறது; கர்வம் அடக் கத்தை அழிக்கிறது; மாயை நண்பர்களை விலக்கு கிறது; பேராசையோ எல்லாவற்றையும் அழிக் கிறது. —சீவக. 3076 உரை.

எவ்வினையும் செய்தவனையே சாரும் :

இல்வாழ் மனிதன் தன் அருஞ் சுற்றத்திற் காகத் தகாத செயல்களை மேற்கொள்கிறான். அவ் வினைகள் முதிர்ந்து அவைகளின் கொடிய வினைப் பயனைத் தரும்போது அவனொருவனே அதனை அடைய வேண்டியவனாகிறான். அவனுடை கெழு தகு கிளைஞர் ஒருவரும் அதில் பங்கு ஏற்பதில்லை.
—நாலடி. 30; அறநெறிச். 181.

வினைகள் நிழல்போல் தொடரும் :

மனிதனை நீங்காது தொடரும் அவனதுநிழலைப் போன்று, அவனவன் செய்தவினை அவனவனையே தொடரும். —குறள். 208, நாலடி. 111.

வினைப்பயனாலாம் பிறப்பு :

ஒவ்வோர் உயிரும் அதனதனுடைய வினையின் காரணமாகவே தேவனாகவோ, மனிதனாகவோ, விலங்காகவோ, நரகனாகவோ பிறவியெடுக்கின்றது.
—மேருமந். 976, அறநெறிச். 60.

வினை நீங்கின் வீடு சேரும் :

மண்ணினால் பூசப்பெற்ற சுரைக்காய் தண்ணீ ரினுள் அமிழ்ந்து, பின்னர் மண் கரைந்ததும் அது எங்ஙனம் தண்ணீரின் மேல் எழுந்து மிதக்கின் றதோ அதைப்போல உயிர் வினையினின்றும் நீங்க நீங்க உலகின் உச்சியாகிய வீட்டை அடைந்து கடையிலா இன்பத்தை என்றும் துய்க்கும்.
—மேருமந். 113.

வினை விட்ட ஆன்மா வீடு பெறும் :

வினைக் கட்டினின்றும் விடுபட்டுத் தூய்மை யடைந்த உயிர் மீண்டும் பிறப்பதும் இல்லை ; இறப்பதும் இல்லை. எப்போதும் முடிவற்ற பேரா னந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கும்.
—குறள். 356, 359.

இல்லறத்தார் ஐங்கடமை :

பிற உயிர்களுக்கு ஊறு செய்யாமை, பொய் சொல்லாமை, திருடாமை, மனைவியைத் தவிர்த்து மற்ற மாதருடன் சேராமை, மிகுபொருள் விரும் பாமை. —மேருமந். 356.

அஹிம்சையும் பகுத்துண்டு வாழ்தலும் :

அஹிம்சையை மேற்கொண்ட ஒவ்வொருவரும் பிறர் துன்பங் கண்டு இரங்கும் இயல்புடையவர்க ளாவர். இந்நிலையை உறுதியுடையவர்கள் தாங்கள் ஈட்டும் பொருளை வரையறுத்துக் கொள்ள வேண் டும். தேவைக்கு மேலாக ஈட்டிய பொருளைச் சமு தாய நலத்திற்கும் பொருளற்றோருக்கும் பகுத் துண்டு வாழும் பண்பை மேற்கொள்ள வேண்டும்.
—குறள். 181, 322, 333.

பாவத்திற்கு அஞ்சுதல் அறிவுடைமை :

பாவங்களைக் கண்டு அஞ்சுவதோ விலகி நிற்பதோ கோழைத் தனம் ஆகாது. சூதாடுதல், மது அருந்துதல், புலால் உண்ணுதல், திருடுதல், வியபிசாரம் செய்தல், வேட்டையாடுதல், பிறர் மனைவியை விரும்புதல் என்னும் இந்த ஏழு குற்றங்களையும் செய்யாமல் விலகியிருப்பது கோழைத் தனம் ஆகாது.

—குறள். 438, 920.

*மும்மூடம் அகற்றி முழு அறிவு பெறுக :*

தேவ மூடம், உலக மூடம், பாசண்டி மூடம் ஆகிய மும்மூடங்கள் அறிவைக் கெடுத்து அல்லலை விளைவிக்கும். எனவே, இம் மூடப்புலிகளை வென்றவர்களே முழு அறிவைப் பெற்றவர்கள். இப்பேரறிவே ஒருவரை அறநெறியில் செலுத்தும்.

—அருங்கலச். 30—33, அறநெறிச். 15,17.

*எவன் அந்தணன் :*

விருப்பு வெறுப்பு அற்றவனும், தவம் செய்பவனும் மன அமைதியுடையவனும் எவனோ அவனே அந்தணன் ஆவான். —குறள். 30.

*அகத்தூய்மையில்லாப் புறத்தோற்றம் வீண் :*

வெளி வேடத்தினால் பயன் இல்லை. மழித்த தலையுடையவன் துறவியாக மாட்டான். மறையை ஓதுதலினாலேயே ஒருவன் அந்தணன் ஆகமாட்டான். வனத்தில் வசிப்பதினாலேயே ஒருவன் முனிவனாக மாறிவிடான், மரவுரி உடுத்திக் கையில் தருப்பையைப் பிடித்ததினாலேயே ஒருவன் தவசியாகி விடான். மனத்தூய்மையுடையவனாயும் பற்றற்றவனாயும் விளங்குபவனே தலையாய மனிதனாவான்.

—குறள். 44, 280.

*தன்னைத் தான் வென்றவன் வீரன் :*

தன்னைத் தான் வென்றவன் போர்க் களத்தில் ஆயிரக்கணக்கான வீரர்களை வென்றவனைவிட வல்லமையுடையவனாவான்.

—நீலகேசி.

*பற்றற்ற வாழ்க்கை :*

தடாகத்தில் வளரும் தாமரை தண்ணீரில் மிதப்பினும் தண்ணீர் ஒட்டாதிருப்பது போல, ஒருவன் சுற்றத்தாரால் சூழப்பெற்றுக் குடும்பத்தில் வாழினும் பற்றற்றவனாய் வாழ்தல் வேண்டும்.

—குறள். 58.

*உத்தம மனிதனின் நிலை :*

பொறுமையிலே பூமியைப் போன்றும், தண்ணளியில் தண்ணீரைப் போன்றும், பற்றற்ற தன்மையில் காற்றுப் போன்றும், ஒழுங்கு முறையில் ஆதவனைப் போன்றும், திடமான மனத்தில் சலியாத மலையைப் போன்றும் ஆழ்ந்த கருத்திலும் கம்பீரத்திலும் கடல் போன்றும் இருக்க வேண்டும்.

—குறள். 161, 134.

*அறவோன் அனைவராலும் வணங்கப்படுவான் :*

அறமே உலகில் உயர்ந்ததும் பெருமையுடையதும் ஆம். அது கொல்லாமை, தன்னடக்கம், தவம் ஆகியவற்றையுடையது. எவனுடைய மனம் எப்பொழுதும் அறத்தினிடத்து அழுத்தமாகப் பதிந்துள்ளதோ. அவனைத் தேவர்களும் வணங்குகின்றார்கள்.

—குறள். 42, 50.

*எவ்வுயிரையும் கொல்லற்க :*

மன்பதை அனைத்தும் இன்பத்துடன் வாழத் துடிக்கின்றது; சாவையும் நோயையும் வெறுக்கின்றது. மன்னுயிர்கள் தத்தம் வாழ்க்கையை மிக அருமையாய்ப் போற்றுகின்றன. எனவே, எவ்வுயிரையும் கொல்லற்க.

—குறள். 337.

*பிறவுயிர்க்குச் செய்வது தன்னுயிர்க்கே ஆம் :*

எவனொருவன் பிறவுயிரைத் துன்புறுத்துகின்றானோ அவன் தன்னைத் தானே முதலில் துன்புறுத்திக் கொள்கின்றான்.

—குறள். 329.

*உயிர்க்கு உறுகண் செய்யாமை :*

உயிர் எல்லாருக்கும் இனிமையானது. ஒவ்வோர் உயிரும் வாழ்நாள் முழுவதும் இன்பமாக வாழ விரும்புகின்றது. ஆதலால் எவ்வுயிரையும் துன்புறுத்தாதே.

—குறள். 318.

*உயிர்கள் அவதிப்படக் காரணம் :*

பிற உயிர்களைத் துன்புறுத்துவதாலும் கொல்லுவதாலும் சம்சார பந்தம் என்னும் கடலுள் அழுந்தித் துன்புறுத்தும் உயிர்கள் அவதிப்படுகின்றன.

—குறள். 330.

*கொல்லாமை பேரறம் :*

ஒரு சிறு முள் குத்தினாலும் மிகுந்த வேதனை தருவதை உணர்கின்றாய். கூரிய படைகளால் அடித்துத் துன்புறுத்தப்படும் உயிரினங்கள் உறும் வேதனைகள் எவ்வளவு என்பதை எண்ணிப் பார். கொல்லாமை பேரறிஞர் கண்ட அறமாம்.

—குறள். 250.

*கொல்லாமை எல்லார்க்கும் வேண்டும் :*

பிற உயிர்களைக் கொல்லாமையும் அருளுடைமையும் பிறர்க்கு மட்டுமின்றித் தனக்குமாம். ஏனெனில், அதனால் தோன்றும் பாவங்கள், துன்பங்கள் ஆகியவற்றினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்றான்.

—குறள். 326, 328.

*அறம் ஆருயிரைக் காக்கும் :*

மூப்பு, சக்காடு ஆகிய துன்பமாக் கடலுள் அழுந்துகிறவர்களை அறம் காக்கும். அறமே நல்ல தீவு போலவும், புகலிடம் போலவும், கோடை நன்னிழல் போலவும் காக்கின்றது.

*இளமையிலேயே அறம் செய்க :*

மூப்பு துன்பம் தரத் தொடங்குமுன், பிணிகள் பீடிக்குமுன், ஐம்பொறிகள் தளருமுன் ஒருவன் தருமம் கடைப்பிடித்தல் வேண்டும்.

—குறள். 36, அறநெறிச். 106—107.

*தரும சிந்தனைக்குரியரல்லார் :*

செருக்கு, வெகுளி, கவனமின்மை, பிணி' சோம்பல் ஆகியவற்றையுடையவர்களுக்குத் தரும சிந்தனைகள் உண்டாகா.

*அன்புடையான் அறிஞன் ஆவான் :*

எவனொருவன் உண்மையான அறத்தினிடத்துப் பற்றுடையவனாய்த் தன் செயல்களுக்குப் பயன் கருதாதவனாய், எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவனாய் இருக்கின்றானோ அவன் பேரறிவைப் பெறுதல் மிக எளிது.

—குறள். 439.

*அறுவகை உயிர்களிடத்தும் அருள் நோக்கம் வேண்டும் :*

அறிஞன் ஒவ்வொருவனும் ஆறுவகை அறிவுகளையுடைய உயிரினங்களைப் பற்றி நன்கு அறிதல் வேண்டும். அறிந்தபின் அவைகளுக்கு இன்னா செய்யாமை வேண்டும். பெரியதோ சிறியதோ, நுண்மையானதோ, பருமையானதோ, காட்சிக்கு எளியதோ, அரியதோ, உயிர்கள் எப்படியிருப்பினும் அவைகளினிடத்து அருள் நோக்கம் வேண்டும்.

—குறள். 254.


# தமிழ்நாடு பரிசுப் பத்திரம் வாங்கிடுவீர்!
# ஈடற்ற திட்டம்—
# தேடரிய வெற்றி!
# போட்ட முதல் அழியாமல் மீட்டிடவும் வாய்ப்பு!

## ரூ. 100/- பரிசுப் பத்திரம்



| பரிசு | பரிசுகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு பரிசின் மதிப்பு ரூ. | மொத்தப் பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| I பரிசு | 1 | 1,00,000 | 1,00,000 |
| II பரிசு | 1 | 50,000 | 50,000 |
| III பரிசு | 10 | 10,000 | 1,00,000 |
| IV பரிசு | 100 | 1,000 | 1,00,000 |
| | | | 3,50,000 |

**இறுதி குலுக்கலுக்கு சிறப்புப் பரிசு**
**ரூ. 5,00,000**

## ரூ. 10/- பரிசுப் பத்திரம்




| பரிசு | பரிசுகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு பரிசின் மதிப்பு ரூ. | மொத்தப் பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| I பரிசு | 1 | 50,000 | 50,000 |
| II பரிசு | 1 | 10,000 | 10,000 |
| III பரிசு | 20 | 5,000 | 1,00,000 |
| IV பரிசு | 200 | 500 | 1,00,000 |
| | | | 2,60,000 |

**இறுதி குலுக்கலுக்கு சிறப்புப் பரிசு**
**ரூ. 2,00,000**

- ரூ. 100/- மற்றும் ரூ. 10/- விலை மதிப்பில் தமிழ்நாடு பரிசுப் பத்திரங்கள் கிடைக்கும். இரண்டு ஆண்டு காலத்தில், நான்கு-மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஆறு குலுக்கல்களில் இவை பங்குபெறும்.
- பரிசு விழுந்த தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் பரிசுப் பத்திரங்களைக் கொடுத்து பரிசைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முதல் குலுக்கல் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு ஆண்டு காலத்திற்குள் பரிசுப் பத்திரத்தைக் கொடுத்து ரொக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பரிசு பெற்ற பத்திரத்துக்கு, சிறப்புப் பரிசைத் தவிர இதர பரிசுகள் ஏதும் அளிக்கப்படமாட்டாது.
- ஒவ்வொரு பத்திரத்துக்கும் ஒரு பரிசுதான் வழங்கப்படும். ஒரே பத்திரத்துக்கு, ஒரு பரிசுக்குமேல் விழுந்தால், அந்த பத்திரத்துக்கு விழுந்த அதிகபக்ஷ பரிசுத் தொகை மட்டுமே பத்திரத்தை பெற்றுள்ளவருக்கு அளிக்கப்படும்.
- தமிழ்நாடு பரிசுப் பத்திரங்கள் 1974 அக்டோபர் 1ம் தேதி முதல் கிடைக்கும். பத்திரங்கள், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள், துணைக் கருவூலங்கள் மற்றும் தமிழ்நாடு பரிசுத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மூலம் விற்பனை செய்யப்படும்.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு) சென்னை-600002

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.





# கல்வெட்டில் குறண்டி

இரா.பொ.இராசேந்திரன்

ஏறத்தாழப் பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்து கல்வெட்டுக்கள் பலவற்றில் குறண்டி என்னும் ஊர் குறிக்கப் பட்டிருக்கிறது. உத்தமபாளையம், முத்துப்பட்டி, கீழக்குயில் குடி (மதுரை மாவட்டம்), கோவிலங்குளம், பள்ளிமடை, (இராமநாதபுரம் மாவட்டம்), கழுகு மலை (திருநெல்வேலி மாவட்டம், சோழவாண்டிபுரம் (தென்னார்க்காடு மாவட்டம்) ஆகிய ஊர்க் கல்வெட்டுக்கள் சிறப்பு வாய்ந்தவை. இவற்றின் துணைக் கொண்டு இவ்வூரில் சிறப்புற்றிருந்த சமணப் பள்ளியைப் பற்றியும், இப்பள்ளியை அடிப்படையாகக் கொண்டு பிற ஊர்களுக்குப் பரவிய சமணத் தொண்டினைப் பற்றியும் தெரிந்து கொள்ள முடிகிறது.

''வெண்புநாட்டுக் குறண்டி திருக்காட்டாம்பள்ளி'' என்ற கல்வெட்டுத் தொடர் குறண்டியில் சமணப் பள்ளி இருந்தமைக்கு அச்சாணிச் சான்று. இப்பள்ளியில் விளக்கெரிக்கும் நெய்க்காகப் பூவணவன் என்பவர் எழுபத்தைந்தாடுகளும், குறண்டியைச் சார்ந்த சாத்தங்காரி என்பவர் ஐம்பதாடுகளும், பாண்டியன் கோமாறஞ் சடையனின் இருபத்தாறும் ஆட்சியாண்டில் கருநிலக்குடிநாட்டுக் குன்னூர் சாத்தன் குணத்தான் என்பவர் நூறு ஆடுகளும், கோமாறஞ் சடையனின் முப்பத்தாறின் எதிர் ஆறும் ஆட்சியாண்டில் அளத்து இடு ஓலதூர்கீழ் பாம்பாரூர் மக்கள் ஐம்பது ஆடுகளும் வழங்கினர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இக்கொடைக் குறிப்புகளைக் குறிக்கும் கல்வெட்டுக்கள், பாடல் பெற்ற பாண்டித் திருத்தலங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய திருச்சுழியலுக்குட்பட்ட பள்ளி மடைச் சிவாலயத்தில் காணப்படுகின்றன. சமணப் பள்ளிக்கு வழங்கப்பட்ட நன்கொடைக் குறிப்புக்கள் சைவக் கோயிலில் காணப்படுவது வியப்பே. இருப்பினும், இவ்வாசகங்கள் சைவக் கோயிலில் காணப்படுகின்றன. பொறிக்கப்பட்டுள்ள கற்கள் தொடக்கத்தில் குறண்டி சமணப் பள்ளியில் இருந்திருக்க வேண்டும் என்றும், பின்னாட்களில் இக்கற்கள் இடம் பெயர்க்கப்பட்டுப் பள்ளிமடை சிவாலயக் கட்டடப் பகுதியுடன் கட்டிச் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படும். அமைதியில் இவ்வியப்பு விடை கண்டுகொள்

சமணம் குறண்டியில் வளர்ந்த அதே காலக் கட்டத்தில் குறண்டியால் பிற இடங்களிலும் வளர்க்கப்பட்டது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. இயக்கங்காடி, சிறுப்பட்டாரர் (தோரிப்பட்டாரரின் மாணாக்கர்), காவிதி காவிதி, கனகநந்திப் பெரியடிகள்(தீர்த்த பட்டாரரின் மாணாக்கர்), நாகங் காலன், சாத்தன் சாத்திய் போன்ற குறண்டியைச் சார்ந்த சமணப் பெரியார்கள் கழுகுமலையில் சமணத் திருமேனிகளைச் செய்வித்துத் தங்கள் சமயத்திற்கு வளர்ச்சி ஈந்துள்ளனர்.

இதே போன்று மதுரை மாவட்டத்தில் கீழக்குயில்குடி என்னும் கிராமத்திற்கு அருகிலிருக்கும் உம்மஞ்சிமலையில் செட்டிப் புடவு என்னும் பகுதியிலும் இவ்வூரரால் சமணத் திருமேனிகள் செய்விக்கப்பட்டுள்ளன. இவற்றைச்செய்த பெரியோர்களில் குணசேனப் பெரியடிகளும், குறண்டி திருக்காட்டாம் பள்ளியின் தலைவரான குணசேன தேவரின் மாணவரும் குறிப்பிடத் தகுந்தவர்கள். நிலக்கோட்டை வட்டத்தில் முத்துப்பட்டி என்னும் கிராமத்திற்கருகில் சித்தர் மலையில் பஞ்ச பாண்டவர் படுக்கை என்றழைக்கப்படும் இடத்திலுள்ள சமணத் திருமேனிகள் இரண்டும் இவ்வூராரின் சமணத் தொண்டே. இவற்றைச் செய்வித்தவர்கள் அத்த உபவாசியாரின் மாணவரான மகா நந்தி என்பவரும், அத்த உபவாசிப் பட்டாரரின் சீடராகிய குணசேன தேவரின் மாணவர் கனக வீர பெரியடிகள் என்பவரும் ஆவர்.

சமணத்தை வளர்த்த சமயப் பெரியார்களை ஈன்றெடுத்த குறண்டி, ஆளுமைத் திறமிக்க பெரியார்களைப் பெற்ற பேறுமுடையது. தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோயிலூர் வட்டத்திற்குட்பட்டதாக சோழவாண்டிபுரம் என்னுமூர் உள்ளது. இவ்வூரின் அருகில் ஆண்டிமலையில், சுமார் பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குக் கணிக்கத் தக்கதாக, கண்ட ராதித்த மும்முடிச் சோழனின் இரண்டாமாண்டுக் கல்வெட்டொன்றுள்ளது. இதில், இம்மலையில் எழுந்தருளியிருக்கும் பிண்டிக் கடவுளின் வழிபாட்டிற்காகவும் 'பனப்பாடி' என்னும் கிராமம் கொடையாக்கப்பட்டுள்ளமை குறிக்கப்பட்டுள்ளது. கண்டராதித்த மும்முடிச் சோழனின் துணைத் தலைவருள் ஒருவனாகிய 'சித்தவடவன்' என்பவனால் வழங்கப்பட்ட இக் கிராமத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுமையும் குறண்டி குணரு வீரபட்டாரரின் மேற்பார்வைக்கு உட்படுத்தப் பட்டது ஈண்டு குறிப்பிடற்குரியது.

இங்ஙனம் பல்வேறு இடங்களிலும் சமணத்தினை வளர்ப்பதிலும் பரப்புவதிலும் முயற்சியும் முனைப்பும் மிக்காராக விளங்கிய பெரியார்கள் அனைவரும் ஏறத்தாழ ஒரே காலக் கட்டத்துள் அதாவது பத்தாம் நூற்றாண்டுக் குட்பட்டவராகவே காணப்படுகின்றனர். ஆசிரியர், மாணாக்கர் என்ற முறையில் நிரல்படுத்தின் ஏறத்தாழ மூன்று தலைமுறைகட்குள் இவர்களை அடக்கிவிடலாம். இவர்களில் அஷ்ட உபவாசி படாரரும் அவரது மாணாக்கராகிய குணசேன தேவரும் குறிப்பிடத் தகுந்தவர்கள். குணசேன தேவரின் மாணவர்களாக வர்த்தமானப் பண்டிதரும், கனக வீரப் பெரியடிகளும் திகழ்ந்திருந்தனர். அஷ்ட உபவாசிப் படாரரின் மாணாக்கராக மகானந்திப் பெரியார் என்பவரும் இருந்திருக்கிறார். இவர்களைத் தவிர, கனக நந்திப் படாரர், தீர்த்தப்படாரர், தொடு படாரர் என்பவர்களும் இச்சமணப் பள்ளிக்குச் சிறப்புச் சேர்த்துள்ளனர். கனக நந்திப் படாரரின் மாணவராகப் பூர்ணசந்திரன் என்பவரும், தீர்த்தப்படாரரின் மாணவராகக் கனக நந்திப் பெரியார் என்பவரும், தொரிப் படாரரின் மாணாக்கராகச் சிறு பட்டார் என்பவரும் பயிற்சி பெற்றிருக்கின்றனர்.

இப்படியெல்லாம் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்த குறண்டி தற்பொழுது வினாக் குறியாகவே விளங்குகிறது. இதற்கு விடைகாண முற்பட்டோர் மூன்று வழிகளைக் காட்டுகின்றனர் :

(1) முகவை மாவட்டத்திற்கு உட்பட்டு அருப்புக்கோட்டை வட்டத்திற்குள்ளாக இருக்க வேண்டுமென்பது.

(2) பழைய திருவனந்தபுரத்திற்கு உட்பட்ட அகத்தீசுவரம் வட்டத்திற்குள்ளாக இருக்க வேண்டுமென்பது.

(3) மதுரை மாவட்டத்திற்கு உட்பட்ட செட்டிப்புடவுவாக இருக்க வேண்டும் என்பது.

இவற்றுள் முதல் வழியே ஏனைய இரண்டினும் ஏற்புடைத்தாகப்படுகிறது. ஏனெனில் 'வெண்புநாட்டுக் குறண்டி' என்றே இவ்வூர்க் கல்வெட்டுக்களால் அறிமுகப்படுத்தப்படுகிறது. பத்தாம் நூற்றாண்டில் இதே நிலப் பிரிவுக்கு 'வெண்புநாட்டுக்கு' உட்பட்டவையாகச் சுட்டப்படும் ஊர்களான நாலூர், வீரசோழ நல்லூர், ஆகியன முகவை மாவட்டத்துள் (திருச்சுழியலுக்கும் சற்று வடக்காக) காணப்படுகின்றன. இது தவிர, குறண்டியின் கட்டடப் பகுதிகள் பள்ளிமடையில் பயன்படுத்தப் பட்டன. எனில், இவ்வூர்கள் இரண்டும் அருகருகிருப்பதற்கான வாய்ப்பே மிகுதி. மதுரையை ஒட்டிய முகவை மாவட்டப்பகுதியில் சமணம் வளர்ச்சியடைந்த அளவுக்கு அகத்தீசுவரம் பகுதியில் சமணம் செழிப்புறவில்லை.

குறண்டி சமணப் பள்ளி, திருக்காட்டாம்பள்ளி எனப்படுவதால், பள்ளியிருந்த இடம் காடடர்ந்த பகுதியாக இருக்கலாம் என ஊகிக்க இடமளிக்கும் அளவிற்கு மலைப்பகுதியாக இருக்கலாம் என எண்ண வாய்ப்பளிக்கவில்லை. இவற்றைக் கொண்டு நோக்கும் போதுதான் முதல் வழியில் இருக்கும் தெளிவு மற்ற இரண்டிலும் இல்லை எனப்படுகிறது.

'தேடுங்கள் கிடைக்கும்' என்பது வழக்கு. தேடுவோம் நமது சீர்மிகு குறண்டியை! காண்போம் அது வளர்த்த சமணத்தின் மேன்மையை!



## தீர்த்தங்கரர்

சமண சமயக் கொள்கைகளை உலகத்திலே பரவச் செய்வதற்காக அவ்வப்போது, தீர்த்தங்கரர்கள் என்னும் பெரியார்கள் தோன்றுகிறார்கள் என்பது சமண சமயக் கொள்கை.

தீர்த்தங்கரர் என்னும் வடசொல்லுக்கு, ''பிறவிப் பெருங் கடலில் உழன்று தத்தளிக்கும் ஆன்மாக்களைக் கரையேற்றுபவர்'' என்று பொருள்; தீர்த்தம் என்றால் நீர்நிலை; காரர் என்றால், கரையேற்றுபவர்.

இதுவரை இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றியுள்ளார்கள். இனியும் 24 பேர் தோன்றுவார்கள் என்பது சமண சமயத்தின் கொள்கையாகும்.

இதுவரை தோன்றியுள்ள தீர்த்தங்கரர்கள்:

1. விருஷப தேவர் (ஆதிநாதர்)
2. அஜித நாதர்
3. சம்பவ நாதர்
4. அபி நந்தனர்
5. சுமதி நாதர்
6. பதும நாபர்
7. சுபார்சவநாதர்
8. சந்திரப் பிரபர்
9. புஷ்பதந்தர்(சுவிதிநாதர்)
10. சீதளநாதர் (சித்திபட்டாரகர்)
11. சிரேயாம்சநாதர்
12. வாச பூஜ்யர்
13. விமலநாதர்
14. அநந்தநாதர் (அநந்தஜித் பட்டாரகர்)
15. தருமநாதர்
16. சாந்திநாதர்
17. குந்துநாதர் (குந்து பட்டாரகர்)
18. அரநாதர்
19. மல்லிநாதர்
20. முனிசுவர்த்தர்
21. நமிநாதர் (நமிபட்டாரகர்)
22. நேமிநாதர் (அரிஷ்ட நேமி)
23. பார்சுவ நாதர்
24. வர்த்தமான மகாவீரர்

# 'பாரதி' பருத்தி பயிரிடுவீர்

அமரகவி பாரதியின் நினைவு ஏழை எளிய உழவர் பெருமக்களின் உள்ளத்தில் என்றும் நின்று நிலவ வேண்டும் என்பதற்காக, இன்றையத் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ள 'பாரதி' பருத்தியை, பாண்டிய மண்டலம் எனப்படும் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் கரிசல் நிலங்களில்-தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் 'இலட்சுமி' பருத்திக்குப் பதிலாக-பயிரிடுவதன் மூலம் தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும் ! 'பாரதி' பருத்தியைப் பயிரிடும் தனிப்பட்ட ஒவ்வொரு உழவர் பெருமகனுக்கும் ஏக்கருக்கு 200 ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும் !

'பாரதி' பருத்தி, 'இலட்சுமி' பருத்தியை விட 50 சதவிகிதம் அதிகப் பஞ்சு மகசூல் அளிப்பதுடன், 26 மில்லி மீட்டர் இழை நீளம் உடையதாக இருப்பதால் 40-ஆம் எண்ணுக்கும் மேற்பட்ட நூலை நூற்க உதவுகிறது. மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 'இலட்சுமி' பருத்தி பயிரிடப்படும் 1.8 இலட்சம் ஏக்கர் பரப்பு முழுவதிலும், 'பாரதி' பருத்தி பயிரிடப்படுமானால், தமிழ்நாட்டிற்கு 56,800 பேல் நீண்ட இழைப்பஞ்சு (Long staple lint) கிடைக்கும்!

பஞ்சுப்பற்றுக்குறை நிலைமை நிலவுகின்ற இந்நேரத்திலே, 'பாரதி' பருத்தியைப் பயிரிடுவது, நாட்டிற்கும், வீட்டிற்கும் செய்யும் நல்லதொரு சேவை ஆகும்! எனவே, பின் கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு கரிசல் நிலங்களில், மானாவாரியாகப் 'பாரதி' பருத்தி பயிரிடுமாறு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்ட உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

**வயது :** 195 நாட்கள்.

**பருவம் :** அக்டோபர் மாதத்தில், விதைப்பதற்கு ஏற்ற மழை பெய்தவுடன் விதைப்பது சிறந்தது.

**நிலம் தயாரித்தல் :** விதைப்பதற்கு 10 நாட்கள் முன்பாகவே, நிலத்தைத் தயாரித்து விட வேண்டும். நிலத்தை இரும்புக் கலப்பையால் 2 முறை நன்கு உழுது, கட்டிகளை உடைத்துவிட்டுச் சமப்படுத்த வேண்டும். பிறகு ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழுஎரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) இட்டு, கடைசி உழவு செய்யவும். கடைசியாகக் 'குண்டகா' என்னும் கருவியினால், நிலத்தைச் சமப்படுத்தவும்.



**அடி உரமிடுதல் :** விதைப்பதற்கு முன் ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்தும், 8 கிலோ மணிச்சத்தும் அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக்கள் கிடைக்க ஏக்கருக்கு 80 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 36 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகிய உரங்களை 'கொரு' கலப்பை வரிசையில் இட்டு, மூட வேண்டும்.



**விதை அளவு :** ஏக்கருக்கு 8 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

**விதை நேர்த்தி :** விதைகளின் மூலம் பரவும் கருங்கிளை (Black arm). இலைப் புள்ளி (Leaf spot) ஆகிய நோய்களைத் தடுக்க, விதைகளை 'அக்ரசான்' அல்லது 'செரசான்' என்ற பூசணக் கொல்லி மருந்துடன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் மருந்து வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிறகு, செம்மண்ணையும் மாட்டுச் சாணத்தையும் 3.1 என்ற விகிதத்தில் கலந்து, தண்ணீர் சேர்த்து பசைபோல் தயாரித்துக் கொண்டு, அதில் விதைகளைக் கலந்து தரையில் தேய்த்து, நிழலில் உலர்த்த வேண்டும்.

**விதைத்தல் :** 'கொரு' கலப்பையால் வரிசையில் விதைப்பது சிறந்தது. வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1.5 அடி), செடிக்குச் செடி 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) வீதம் இடைவெளி விட்டு விதைக்க வேண்டும்.

**பின்செய் நேர்த்தி :** விதை முளைக்காத இடங்களில் விதைத்த 10 நாட்களுக்குள் மீண்டும் விதைக்கவும்.



விதைத்த 20-ஆம் நாளில் முதல் களை எடுப்பதுடன், குழிக்கு ஒரு நல்ல செடி வீதம் விட்டு மற்றவைகளை அகற்றி விட வேண்டும். விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் களை எடுத்தல் வேண்டும். களை எடுப்பதுடன் 'தந்துலு' என்னும் கலப்பையால் செடி வரிசைகளுக்கு இடையில் விதைத்த 30-வது நாளில் இருந்து 15 நாட்களுக்கு ஒரு முறைவீதம் பூக்கும் காலம் வரை இடையுழவு செய்து வருதல் நல்லது. இவ்வாறு செய்வதனால், மண் நன்றாகக் கிளறப்படுவதோடு, களைகள் அகற்றப்படுகின்றன.

**பயிர்ப் பாதுகாப்பு :** விதை ஊன்றிய ஒரு மாதத்திற்குப் பின் 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் 10 சதச் செவின் தூளையும், கந்தகத் தூளையும் 2:1. அளவில் கலந்து ஏக்கருக்கு 8 கிலோ வீதம் தூவ வேண்டும். பருத்தி வெடிக்கும் வரை இவ்வாறு தூவுதல் வேண்டும்.

இவ்வாறு மருந்து தூவுவதால், மருந்து தெளிக்காத வயலைவிட ஏக்கருக்கு 330 கிலோ அதிகப் பருத்திமகசூலும் 470, ரூபாய் அதிக இலாபமும் பெற முடியும் என்று கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலிருந்து தெரிய வருகிறது.

**அறுவடை :** நன்றாக வெடித்த பருத்தியை மட்டும் காலை வேளையில் எடுக்க வேண்டும். சருகுகள் ஒட்டாமல் பருத்திகளை எடுக்க வேண்டும். எடுத்த பருத்தியை, நிழலில் உலர்த்தி, தரம்பிரித்து விற்பனை செய்தால், அதிக வருவாய் பெறலாம்.

**செலவும் வரவும் :** ஒரு ஏக்கரில் மானாவாரியாகப் 'பாரதி' பருத்தி பயிரிடச் சராசரியாக ரூபாய் 450 செலவாகும். மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால் சராசரியாக 3 குவிண்டால் பருத்தி கிடைக்கும். அதன் மூலம் குறைந்தது ரூபாய் 750 வருவாய் பெறலாம். எனவே செலவு போக ஏக்கருக்குக் குறைந்தது ரூபாய் 300 இலாபம் கிடைக்கும்.

எனவே, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில், கரிசல் மண் நிலங்களில்-'இலட்சுமி' பருத்திக்குப் பதிலாக-மானாவாரியாகப் 'பாரதி' பருத்தியைப் பயிரிட்டுப் பயன்பெறுமாறு, மேற்கூறிய மூன்று மாவட்ட உழவர் பெருமக்களையும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

—ஆர். எம்



# குறுகிய காலத் துவரை!

'கோ. 2' எனப்படும் ஒரு குறுகியகால, உயர்விளைச்சல் துவரை ரகத்தை, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கி வெளியிட்டுள்ளது. பாசானத்துக்கும், மானாவாரிக்கும் ஏற்ற இந்த இரகத்தின் வயது 110-115 நாட்களாகும். இதன் சராசரி தானிய விளைச்சல் எக்டேருக்கு பாசானத்தில் 1,500 கிலோ, மானாவாரியில் 750 கிலோ. இதன் மூலம் கிடைக்கும் நிகர இலாபம் முறையே ரூபாய் 1,500/-, ரூபாய் 700/- என்ற அளவில் உள்ளது.

முந்தைய வெளியிடான 'கோ-1' துவரையைவிட இந்தப் புது இரகம், வயதில் 20-25 நாட்கள் குறைந்தது; ஆனால் சுமார் 25 சதவிகிதம் அதிக விளைச்சலைத் தருகிறது!

இதன் செடிகள் குட்டையானவை. சுமார் மூன்று அடி உயரும் தான் வளரும். செடியின் நுனிப் பகுதிகளில் கொத்துக் கொத்தாக, அடர்த்தியாகக் காய்க்கும். தானிய மணிகள் பருமனானவை. 'கோ-2' துவரை ரகத்தின் பருப்பு விரைவில் வெந்துவிடும். சமைத்தப் பருப்பு சுவையும், மணமும் மிக்கது. அத்துடன் சுமார் 20 சதவிகிதம் புரதச் சத்தும் கொண்டது.

கோ. 2 இரகத்தை வாடல் நோய் (Wilt) அவ்வளவாகத் தாக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி—மார்ச், ஜூன்—ஜூலை பட்டங்கள் இதன் சாகுபடிக்கு மிகவும் சிறந்தவை. எக்டேருக்கு 15 கிலோ விதைகளை உபயோகித்து 45 செ.மீ. $\times$ 30 செ.மீ. இடைவெளி விட்டு, சால்சாலாக விதைக்க வேண்டும். பாசனப் பயிருக்கு எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச் சத்தும் அடியுரமாக இடவேண்டும். மானாவாரிப் பயிருக்கு மேற்படி உர அளவில் பாதி இட்டால் போதும்!

நிலக்கடலையுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்வதற்கும் 'கோ. 2 துவரை' ரகம் மிகவும் உகந்தது.

தகவல் :— தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர்-3.


பசுமைப் புரட்சியால் உற்பத்திப் பெருக்கம்!
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள்! உதவிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் குடிநீர் வசதி!
புதிய முயற்சிகளால் தொழில்துறை வளர்ச்சி!
ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைந்திடத் திட்டங்கள்! பணிகள்!
இப்படித் தொடரும் நமது அரசின் அரும்பணிகளின்
வெற்றிக்கு
அடித்தளமே
அளவான குடும்பம்.
குடும்ப நலத் திட்டம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!


தமிழரசு
16-11-1974 50 காசு
1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் ரூ 10
1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் ரூ 20
1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் ரூ 30
1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் ரூ 60



# தமிழ் நூல்களில் வர்த்தமான மகாவீரர்

தமிழ் நூல்களில் வர்த்தமான மகாவீரரின் பெயர் எடுத்துரைக்கப்பட்டுள்ள செய்யுள்கள் சிலவற்றை இங்கே தொகுத்துத் தந்திருக்கிருர் திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்கள்.

அறுநால்வர் ஆய்புகழ்ச் சேவடி ஆற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப்—பெறும்நான்
மறைபுரிந்து வாழுமேல் மண்ஒழிந்து விண்ணேர்க்கு
இறைபுரிந்து வாழ்தல் இயல்பு.

*(ஏலாதி—கடவுள் வாழ்த்து)*

அறிவன், அறவோன், அறிவுவரம் பிகந்தோன்,
செறிவுன், சினேந்திரன், சித்தன், பகவன்,
தரும முதல்வன், தலைவன், தருமன்,
பொருளன், புனிதன், புராணன், புலவன்,
சினவரன், தேவன், சிவகதி நாயகன்,
பரமன், குணவதன், பரத்தி யொளியோன்,
தத்துவன், சாதுவன், சாரணன், காரணன்,
சித்தன், பெரியவன், செம்மல், திகழொளி
இறைவன், குரவன், இயல்குணன், எங்கோன்,
குறைவில் புகழோன், குணப்பெருங் கோமான்,
சங்கரன், ஈசன், சயம்பு, சதுமுகன்,
அங்கம் பயந்தோன், அருகன், அருள்முனி
பண்ணவன், எண்குணன், பாத்தில் பழம்பொருள்
விண்ணவன், வேத முதல்வன், விளங்கொளி

*(சிலப். நாடுகாண். 176-189)*



மன்னிய அறிவு, காட்சி மறைத்தல் வேத நீயத்தோடு,
துன்னு மோகநீயம், ஆயுத், தொடர்நாம, கோத்திரங்கள்,
முன்னுறும் அந்தராயம் மொழிந்தஎண் குற்றம் ஆகும்;
இன்னவை தீர்ந்தோன் யாவன் யாவர்க்கும் இறைவன் ஆமே

—சூடாமணி நிகண்டு

*(12, பல்பொருட்கூட், 88)*

கடையிலா ஞானத்தோடு, காட்சி, வீரியமே, இன்பம்,
மிடையுறு நாம மின்மை, விதித்தகோத் திரங்கள் இன்மை,
அடைவிலா ஆயுவின்மை, அந்தரா யங்கள் இன்மை—
உடையவன் இறைவன் என்ன உரைக்கும் ஆருகத நூலே

—சூடாமணி நிகண்டு

*(12, பல்பொருட்கூட், 85)*

செம்பொன் வரைமேல் பசும்பொன் னெழுத்திட்ட தேபோல்
அம்பொன் பிதிர்வின் மறுவாயிரத் தெட்ட ணிந்து
வெம்புஞ் சுடரிற் சுடரும்திரு மூர்த்தி விண்ணேர்
அம்பொன் முடிமேல் அடித்தாமரை சென்னி வைப்போம்

*(சீவக சிந்தாமணி)*

முழாத்திரள் மொய்ம்மலர்த் தாமம் தாழ்ந்துமேல்
வழாத்திரு மலரெல்லாம் மலர்ந்து வண்டினம்
குழாத்தொடும் இறைகொளக் குனிந்து கூய்க்குயில்
விழாக்கொள விரிந்தது வீரன் பிண்டியே.

*(சீவக. 3012)*

மன்னவன் துறவெனத் துறத்தல் மாண்பெனப்
பொன்வரை வாய்திறந் தாங்குப் புங்கவன்
இன்னுரை எயிறுவில் லுமிழ விழ்ந்தது
மின்னியோர் வியன்மழை முழங்கிற் ருெத்ததே.

*(சீவக. 3016)*

நாகிளம்பூம் பிண்டிக்கீழ் நான்முகனும் வானிறைஞ்ச
மாகதஞ்சேர் வாய்மொழியான் மாதவர்க்கும் அல்லார்க்கும்
தீதகல எடுத்துரைத்தான் சேவடிசென் றடைந்தார்க்கு
மாதுயரம் தீர்தல் எளிது

*(பெருந்தொகை, 132)*

'ஒளியாகி உலகாகி நீவிரிந்தாய் என்கோ !
உலகெலாம் நின்னொளியின் உள்ளடங்கிற் றென்கோ !
அளியார உலகம்நீ ஆள்கின்ருய் என்கோ
அமருலகு தான்நின்ன தடியடைந்த தென்கோ !
விளியாத மெய்ப்பொருளை நீவிரித்தாய் என்கோ !
நீவிரித்த வாறேமெய்ப் பொருள்விரிந்த தென்கோ!
தெளியாம லில்லைநின் திருவடிகள் மெய்ம்மை
தெளிந்தாலும் செவ்வனே தெரிந்துரைக்க லாமோ!

சூளாமணி - *(துறவுச். 66)*





பெரும் பரிசைப் பெற்று இதை வாங்கி அணிய

(ஒவ்வொரு வரிசைக்கும்)
முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை–600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009.

செலவு ஒரு ரூபாய்

வாலோ லட்ச ரூபாய்

12256

# தமிழரசு

16-11-1974
மலர்-5
இதழ்-10





முத்து



நாடு என்பது என்றும் இறப்பதல்ல; ஆண்களும் பெண்களும் வருவார்கள், போவார்கள்! ஆனால் நாடு என்றும் வாழ்ந்துகொண்டே யிருக்கும்.

—ஜவகர்லால் நேரு

# ஆராய்ச்சிக் கழகம் அமைத்திடல் வேண்டும் !






உடற்கூறு இயல் மருத்துவம் பற்றிய இந்தக் கருத்தரங்கைத் தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். டில்லியில் நடைபெற்ற 24-வது பன்னாட்டுப் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்ற பிறகு இங்கு இந்த கருத்தரங்கில் பங்கேற்க நீங்களெல்லாம் வந்திருக்கிறீர்கள்.

தென்னாட்டைப் பார்க்காமல், குறிப்பாகத் தமிழகத்தைக் காணாமல் இந்திய வருகை நிறைவு பெறாது என்பதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள். மாமல்லபுரம், காஞ்சிபுரம், மதுரை, கன்னியாகுமரி, பூம்புகார் முதலான இடங்களுக்குச் சென்று தமிழ் மக்களின் பண்பாட்டுச் சிறப்புகளை எல்லாம் அறிய இருக்கிறீர்கள் என்று அறிகிறேன்.

மனித உடலின் அவயவங்கள் ஆற்றுகின்ற பணிகள் உலகெங்கும் ஒன்றுபோலவே அமைந்திருந்தாலும் பூவியல் சூழல்களும் சமூகப் பொருளாதார நிலைமைகளும் பிற நிலைமைகளும் உடற்கூறு இயலைப் பாதிக்கின்றன. நாட்டுக்கு நாடு இந்தப் பாதிப்பு மாறுகிறது என்பதோடு, ஒரே நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கிடையேயும் மாறுபாடுகள் தெரிகின்றன.

ஒரு நோய் ஏன், எதனால் ஏற்பட்டது என்பதை அறிய உடற்கூறுகளின் இயக்கம் பற்றிய அறிவை நாம் பெற்றிருக்க வேண்டும். எனவே உலகின் பல்வேறு பகுதிகளில் மனித உடலின் இயக்கம் எவ்வெவ் வகையில் அமைந்துள்ளது என்பதை ஆராய்ந்துணர வேண்டும். இத்துறையில் ஆராய்ச்சி அவசியம். உலக நல்வாழ்வு அமைப்பு, குழந்தைகளுக்கான ஐ.நா. உதவி நிறுவனம், இந்திய மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் ஆகியவை தங்கள் முயற்சிகளை இந்தக் குறிக்கோளுக்காக மேற்கொள்ள வேண்டும்.

இந்தியா போன்ற ஒரு வளர்ச்சியடையும் நாட்டில் செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. காரணம், இத்தகைய ஆராய்ச்சியின் பலன்களை உடனுக்குடன் பயன்படுத்திட முடிகிறது. ஆதார ஆராய்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவக் கூடியது தானென்றாலும் அதன் உடனடிப் பயன் குறைவு. மேலும், நமக்குள்ள நிதி ஆதாரம் குறைவென்பதால் இத்தகைய ஆராய்ச்சிக்கு நாம் அதிகம் செலவிட முடியாதவர்களாக இருக்கின்றோம்.

மருத்துவத் துறையாரானாலும் வேறு எந்தத் துறையாரானாலும் ஆராய்ச்சி என்பது ஆராயும் முறைகளைப் பற்றிய அறிவைப் பொறுத்ததாகும். சித்த மருத்துவமுறை தோன்றிய தமிழ் நாட்டில் நோய்க்கூறுகள் பற்றி மிகத் துல்லியமாகக் கண்டறிந்து கூறும் ஆற்றல் இருந்தது. மிகப்பண்டைக் காலந்தொட்டு இன்றளவும் இந்த ஆற்றல் உண்மையானதாக இருக்கக் காணுகிறோம். நோய் எதனால் தோன்றியது என்பதையொட்டிய சித்த மருத்துவர்களின் கருத்து இன்று ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாமலிருக்கலாம். ஆனால் அந்தக் கருத்துக்களை முற்றிலுமாகத் தள்ளிவிட முடியாது. ஏனெனில் அந்தக் கருத்துக்கள் தற்காலிக மருத்துவ முறையிலும்கூட ஏதேனும் ஒரு வகையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதை ஏன் நான் எடுத்துரைக்கிறேன் என்றால் நமது நாடு இத்துறையில் தற்காலத்து ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குப் போதுமான அறிவாற்றல் பெற்றிருக்கிறது என்பதைக் காட்டவேயாகும்.

இளம் மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டோ மேல் படிப்புக்கான வாய்ப்புகளைப் பெற்றோ அயல்நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெறும்போது ஆராய்ச்சிமுறைகளைப் பற்றி நன்கு அறிந்து வரவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி அயல்நாடுகளில் பயிற்சி பெற்றோர், தாங்கள் கற்றறிந்தவற்றை இங்கு அமலுக்குக்கொண்டு வர வெகு காலம் பிடிக்கிறது. இதற்குக் காரணம் இங்குள்ள இடர்ப்பாடுகளேயாகும். இப்படிக் காலம் கழிவதால் அவர்கள் பெற்ற அறிவு வீணாகிறது. பல்கலைக் கழகங்கள் பேராசிரியர்களைப் பரிமாறிக்கொள்வது நல்லது என்றாலும் இந்த முறையும் அத்தனை பலனை அளித்திடவில்லை. இங்குள்ள ஒரு பல்கலைக் கழகத்தை அயல்நாட்டில் உள்ள ஒரு பல்கலைக்கழகம் "தத்து" எடுத்துக் கொண்டு முழு அளவில் செயல்முறை சார்ந்த விஞ்ஞான அறிவைக் கொடுத்து உதவலாம்.

ஆராய்ச்சிக்கான நிதி ஆதாரங்களும், அமைப்புகளும் ஒரே இடத்தில் குவிந்து இல்லாமல் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக இருந்திடச் செய்ய வேண்டும்.

இத்துறையில் இப்போது நிலவும் ஏற்றத்தாழ்வு அகற்றப்படவேண்டுமானால் உலக நல்வாழ்வு நிறுவனமும், மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிக்கான இந்தியக் கழகமும் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

இப்படிப் பரவலாக்கப்பட வேண்டுமென்பது மருத்துவக் கல்வியை நிருவகித்து வரும் அகில இந்திய மருத்துவக் கழகம் போன்றவற்றின் விஷயத்திலும் பொருந்தும். இதற்குப் பல நியாயமான காரணங்கள் உண்டு.

தமிழ்நாடு அரசு மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க இருக்கிறது. மாநில அரசின் நிருவாகத்தின் கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மத்திய ஆராய்ச்சிக் கழகம் அமைவது விரும்பத்தக்கதாக இருக்கும். பல்வேறு ஆராய்ச்சி முறைகளுக்குத் தேவையான பயிற்சிக்கான வசதிகளை இங்கு செய்ய இயலும். மாநிலத்துக்குத் தேவையான பயிற்சியாளர்கள் கிடைக்க இந்த ஏற்பாடு துணை செய்யும்.

சர்வதேச விஞ்ஞான அமைப்புகளும் ஒவ்வொரு நாட்டிலும் நாட்டளவில் உள்ள விஞ்ஞான அமைப்புக்களும் தங்கள் அமைப்புக்களைப் பல் துறைகளிலும் பரவலாக்கி விரிவுபடுத்திப் பல்வேறு பகுதிகளில் அமையும் ஆராய்ச்சி நிலையங்களுக்குச் சுயாட்சி அளித்தால் மட்டுமே இந்த நோக்கத்தை அடையமுடியும்.

## முதல்வர் கலைஞர்

சென்னை மருத்துவக் கல்லூரியின் உடற் கூறு இயல் மற்றும் சோதனை மருத்துவப் பிரிவு நான்காவது திட்டக் காலத்தில் 1971-ல் முதல் நிலை அமைப்பாக உயர்த்தப்பட்டது. இந்த அமைப்பில் உள்ளோர் ஆற்றுகின்ற ஆராய்ச்சிப்பணியின் தரமும், அளவும் இவர்களால் டில்லியில் நடைபெற்ற அனைத்து நாட்டு மருத்துவ விஞ்ஞான மாநாட்டில் அளிக்கப்பட்ட ஆய்வுரைகளைக் கொண்டு அறியலாம். சென்னை மருத்துவக் கல்லூரியை, பட்ட மேல்படிப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு உரிய ஒரு மருத்துவமனையாக ஆக்கும் செயற் குறிப்பு உள்ளது.

இன்று இங்கு நடைபெறும் இந்த மருத்துவ விஞ்ஞானக் கருத்தரங்கு இம்மாநிலத்திலும் இந்நாட்டிலும் அடிப்படை மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளுக்குத் துணை செய்வதாக அமையும் என்று நம்புகிறேன்.

**6-11-1974-ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற உடற்கூறு மருத்துவ விஞ்ஞானக் கருத்தரங்கில் முதல்வர் கலைஞர் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**

# 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்

அரசு அலுவலர் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடர்ந்து நமது அரசு அளித்துள்ள .......

இந்தியாவிலேயே முதன் முதலாகச் செயல்படுத்தப் படும் திட்டம் இது.

நமது அரசின் சாதனைகளில் மணி மகுடமாகத் திகழும் திட்டம்.

எல்லா மக்களின் எதிர்கால வாழ்விலும் புத்தொளியைப் —புதிய நம்பிக்கையை உருவாக்கும் திட்டம் இது.

பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளில் அறிவிக்கப்பட்டு, நேரு பெருமகனர் பிறந்த நாளில் செயலுக்கு வரும் அரியதொரு திட்டம்.

அரசு அலுவலர் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் மற்ருெரு மகத்தான திட்டம் 1974-ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டம்.

செல்வச் செழிப்புக் கொழிக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில்தான் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளன.

நமது நாட்டில் முதன் முறையாகச் சமூகப் பாதுகாப்புத்திட்டம் தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப்படுகின்றது.

இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் வகையில் சமூக நலத் திட்டங்களைத் தமிழ்நாடு நிறைவேற்றி வருவதை அனைவரும் அறிவார்கள்.

முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்.

இலவச கண்ணெளி வழங்கும் திட்டம்.

மனிதனை மனிதன் வைத்து இழுக்கும் கொடுமையை அகற்றி சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்.

உடல் ஊனமுற்ருேருக்கு நல்வாழ்வு வழங்கும் திட்டம் போன்ற பல அரிய திட்டங்களை நமது அரசு வகுத்துள்ளது.

ஏழை, எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் ஆகியோர் நல்வாழ்வுக்காகப் பல்வேறு புதிய திட்டங்களையும் சலுகைகளையும் நமது அரசு அளித்து உள்ளது.

இத்தனைக்கும் மேலாகத் தமிழ்நாடு அரசு அலுவலர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஊழியர்கள் ஆகியோரின் நலனுக்காக 1974 சனவரித் திங்கள் முதல் நாள் அன்று தமிழ்நாடு அரசு அலுவலர் குடும்பப் பாதுகாப்புத்

**இந்தியாவில் முதன்முதலாகச் செயல்படுத்தப்பெறும் திட்டம்!**

**நமது அரசின் சாதனைகளில் மணிமகுடம்!**

**எல்லா மக்களின் எதிர்கால வாழ்வில் புத்தொளி! புதிய நம்பிக்கை!**

திட்டத்தைச் செயல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் 6.5 இலட்சம் பேர் கொண்டு வரப்பட்டுள்ளனர். பணியாளர்களின் ஊதியத்திலிருந்து திங்கள்தோறும் ரூபாய் 10 பிடித்துக் கொள்ளப்படுகின்றது. (அக்டோபர் மாதத்திலிருந்து அரசே அந்தத் தொகையைச் செலுத்துகிறது) அந்த அலுவலர் பணி புரியும் காலத்தில் இறக்க நேரிட்டால் அவர்களுக்காக அவர்கள் குடும்பத்தினருக்கு ரூ. 10,000 வழங்கப் படுகிறது.

அரசு அலுவலர்கள் குடும்பப் பாதுகாப்புத்திட்டத்தில்மாதந் தோறும் பணம் செலுத்திவரும் அலுவலர்கள் இயல்பாகப் பணியாற்றி ஓய்வு பெறும் பொழுது அவர்கள் செலுத்திய தொகை வட்டியுடன் திருப்பி அளிக்கப்படுகிறது.

கடந்த பத்து மாதங்களில் அரசு அலுவலர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் மொத்தத் தொகை பெற்றவர்களில் 90 சதவீதத்தினருக்குமேலானேர் குறைந்த ஊதியம் பெறுகின்ற கடைநிலை ஊழியர்கள், ஓட்டுநர்கள், காவல் துறைக் காவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் ஆகியவர் ஆவர்.

இந்தத் திட்டம் போன்றே சமுதாயத்திலுள்ள எல்லாத் தரப்பினரும் எல்லா வயதினரும் பயனடையும் வகையில் தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நமது அரசு அறிவித்துள்ளது.

1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம், குறைந்த வருவாய் பெறுகின்ற மாதச் சம்பளக்காரர்கள், சொந்தத் தொழில் புரிவோர் ஆகியோருக்காகச் சிறப்பாகவகுக்கப்பட்ட திட்டமாகும்.

ஒருவர் தமது வாழ்நாளில் அலுவலில் இருக்கும்போதோ, தொழில் புரியும் காலத்திலோ சிறு தொகையைச் சீராக மாதந்தோறும் செலுத்தி வந்தால் அதற்குப் பதிலாகப் பின்னாளில் அவருக்குக் கணிசமான தொகை மாதந்தோறும் உதவித் தொகையாக வழங்கப் படும். இந்த உதவித் தொகை அவருக்கு முப்பது ஆண்டுக் காலம் வரை வழங்கப்படும்.



மாதந்தோறும் ஒருவர் ரூ. 10 வீதம் 25 ஆண்டுக் காலத்துக்குச் செலுத்தி வந்தால் பின்னர் மாதந் தோறும் ரூ.100 உதவித் தொகை கிடைக்கும்.

இந்தத் திட்டத்தில் சேர்ந்து சந்தா செலுத்த விழையும் ஒருவர் தாம் மாதந்தோறும் ரூ. 10 வீதம் 25 ஆண்டுக்காலம் வரை செலுத்த இயலாத நிலையில் சற்று வயதான நாளில் இதில் சேருவாரானல் அவர் 10, 15, 20 ஆண்டுக் காலச் சந்தாத்திட்டத்தில் சேரலாம் சந்தா செலுத்தும் ஆண்டு குறைந்ததற்கு நிகராக அவருக்கு மாத உதவித் தொகை முறையே ரூ. 20 அல்லது ரூ. 35 அல்லது ரூ. 60 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தில் சேரும் சிலர் வசதியான நிலையில் இருக்கலாம். அவர்கள் அதிகப்படியான மாதாந்தர ஓய்வூதியம் பெற விரும்பலாம். அவர்கள் மாதந் தோறும் அதிகத் தொகை கட்டத் தயாராக இருக்கலாம். அப்படிப் பட்டவர்கள் இருபது ஆண்டுகளுக்கு மாதந் தோறும் 20 ரூபாய் செலுத்தினல் அல்லது 15 ஆண்டுகளுக்கு 30 ரூபாய் செலுத்தினல் அல்லது 10 ஆண்டுகளுக்கு 60 ரூபாய் செலுத்தினலும் பின்னர் மாதந்தோறும் ரூ. 100 ஓய்வு ஊதியம் கிடைக்கும்.

மாதந்தோறும் ஓய்வூதியம் கொடுப்பதுடன் இத்திட்டம் முடிவடைந்துவிடுவதில்லை. ஓய்வூதியம் கொடுக்கப்படும் முப்பது ஆண்டுக் காலம் முடிந்தவுடன் ஒரு குறிப்பிட்ட அளவில் பெருந் தொகையும் அளிக்கப்படும்.

இடையில் சந்தாதாரர் இறந்துவிட்டால் செலுத்திய தொகைஅவரது குடும்பத்துக்கு வட்டியுடன் திருப்பி அளிக்கப் படும்.

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேருவதற்கு வயது வரம்பு ஏதும் கிடையாது. நுழைவுக் கட்டணமும் கிடையாது. சிறுவர் பேரிலும் கணக்குத் தொடங்கலாம். இதில் ஏழு வகைகள் உண்டு.

ஒருவர் மாதந்தோறும் ரூபாய் 10 வீதம் 10 ஆண்டுக் காலம் செலுத்தினல் அதன் பிறகு மாதந்தோறும் ரூபாய் 20, மாத ஓய்வு ஊதியமாகக் கிடைக்கும். இதைத் தவிர 30 ஆண்டுக் கால முடிவில் ரூ. 1,500 கிடைக்கும்.

விளக்கமான பட்டியல் வருமாறு:—

| மாதக்கட்டணம், | சந்தாக் கால அளவு—ஆண்டுகள். | மாத ஓய்வூதியம், | 30 ஆண்டுக் கால முடிவில் கிடைக்கும் தொகை |
|---|---|---|---|
| ரூ. 10 | 10 | 20 | ரூ. 1,500 |
| ரூ. 10 | 15 | 35 | ரூ. 2,500 |
| ரூ. 10 | 20 | 60 | ரூ. 4,000 |
| ரூ. 10 | 25 | 100 | ரூ. 5,500 |
| ரூ. 20 | 20 | 100 | ரூ. 8,000 |
| ரூ. 30 | 15 | 100 | ரூ. 8,000 |
| ரூ. 60 | 10 | 100 | ரூ. 9,500 |

மொத்தத் தொகையில் பாதித் தொகையைச் சந்தாக் காலம் முடிந்தவுடனும் பெற்றுக் கொள்ள விரும்பினல் பெற்றுக் கொள்ளலாம். ஆனல் ஓய்வு ஊதியத் தொகை பாதியாகக் குறையும்.

இந்தத் திட்டத்தில் சேர விரும்புபவர்கள் தமிழ்நாட்டிலுள்ள கீழ்க்கண்ட வங்கிகள் எதிலேனும் தொகை செலுத்தலாம் :

கனரா பாங்க், சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா, இந்தியன் பாங்க், இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, ஸ்டேட் பாங்க் ஆஃப் பாடியாலா, ஸ்டேட் பாங்க் ஆஃப் ஹைதராபாத், ஸ்டேட் பாங்க் ஆஃப் சௌராஷ்டிரா, சிண்டிகேட் பாங்க், யுனைடெட் கமர்சியல் பாங்க், ஆந்திரா பாங்க், பாரத் ஓவர்சீஸ் பாங்க், கார்ப்பரேஷன் பாங்க், கர்நாடகா பாங்க், காதோலிக் சிரியன் பாங்க், கரூர் வைஸ்யா பாங்க், கும்பகோணம் சிடி யூனியன் பாங்க், லட்சுமி விலாஸ் பாங்க், நெடுங்காடி பாங்க், நியூ பாங்க் ஆஃப் இந்தியா, தஞ்சாவூர் பர்மனென்ட் பாங்க், விஜயா பாங்க், பாங்க் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு ஸ்டேட் கோ-ஆப்பரேடிவ் பாங்க், பாங்க் ஆஃப் மகாராஷ்டிரா, தேனு பாங்க், பாங்க் ஆஃப் மதுரை.

—இந்த வங்கிகள் தமிழ் நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்குரிய சந்தாக்களை வாங்கிக் கொள்ளும்.

சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்காகப் பணம் செலுத்தப்படும் வங்கிகளில் சந்தாதாரர்களுக்குத் தனியாக ஒரு பற்றுவரவு ஏடு (Pass Book) தரப்படும். ரூ. 10, ரூ. 20, ரூ. 30, ரூ. 60 மதிப்புள்ள வில்லைகள், பணம் செலுத்தியவுடன் தரப்படும். அவைகளை அந்த ஏட்டில் ஒட்டி முத்திரை பெற வேண்டும்.

எப்படிப் பார்த்தாலும் சந்தா செலுத்துவோருக்குப் பன்மடங்குத் தொகையை இந்தத் திட்டம் திருப்பித் தருகிறது. இதன் மூலவிவரங்களை அறிய இயக்குநர், தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம், குறளகம், சென்னை—600001 என்ற முகவரிக்கு எழுதி அறிந்து கொள்ளலாம்.

—மாறு

# நேருவின் வாழ்விலே......

நேருவின் நண்பர் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. நேருவின் மேல் மிகுந்த அன்பும், பற்றும் கொண்டிருந்த அந்த நண்பர் தனது மகனுக்கு ஜவஹர்லால் என்று பெயர் சூட்டினார். இந்தச் செய்தியைக் கடிதத்தின் வாயிலாக நேருவுக்குத் தெரிவித்தார். அந்தக் கடிதத்தைக் கண்டவுடன் நேரு, தமது நண்பருக்கு எழுதிய மறுமொழி என்ன தெரியுமா?.

''நண்பா! உனக்கு மிகமிக நன்றி சொல்வேன். தயவு செய்து உன் மகனுக்கு ஜவஹர்லால் என்று பெயர் வைக்காதே! என் பெயரை நானே வெறுக்கிறேன்!''

* * *

நேருவுக்கு உடல் பிடித்துக் கொள்ளும் பழக்கம் (மசாஜ்) இருந்து வந்தது. பொழுது புலரும் விடியற்காலை நேரமான, 5.30 மணி அளவில் அவருக்கு உடம்பு பிடித்துவிட ஒருவர் வருவார். அவர் வருவதற்குள்ளேயே நேரு எழுந்து விடுவார். 'வணக்கம்' என்று அந்த ஊழியர் சொல்வதற்கு முன்பே வணக்கம் சொல்லிவிடுவார் நேரு.

ஒருநாள் உடம்பு பிடித்து விடுபவர் சென்றபோது, நேரு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். அவர் சோர்ந்து காணப்பட்டதால் அவரை எழுப்புவதற்கு அந்த ஊழியருக்கு மனம் வரவில்லை.

சில நிமிடங்களில் நேரு எழுந்தார். வழக்கத்திற்கு மீறிச் சற்று அதிக நேரம் தூங்கிவிட்டதை உணர்ந்தார். பதட்டத்துடன், "மணி என்ன?" என்று அந்த ஊழியரிடம் கேட்டார். '5.40' என்று ஊழியர் பதில் சொன்னார்.

உடனே நேரு, ''ஏன் என்னை 5.30 மணிக்கே எழுப்பவில்லை? இன்று முழுவதும் எல்லா வேலையும் மொத்தத்தில் பத்து நிமிடம் தாமதத்தில் நடைபெறுமே!'' என்று மனவருத்தத்துடன் கூறினார். நேருவும் 'காலத்தைப் பொன்போல் கருதியவர்', என்பது தெளிவாகிறது.



நேருவைப் பார்க்க அவரது மாளிகைக்குப் பல்வேறு விதமான மக்கள் நாள்தோறும் வருவார்கள். பார்வையாளர்களில் முதியோர் உண்டு; இளையோர் உண்டு; சிறுவர், சிறுமியர் உண்டு.

அவர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் நேரு அக்கறையுடன் கேட்டு ஆவன செய்வார். அதனால் அனைவரும் உரிமையுடனும் உற்சாகத்துடனும், அணிதிரண்டு வந்து நேருவினிடம் தங்கள் குறைகளைத் தெரிவித்து வருவார்கள்.

ஒருநாள் ஒரு மூதாட்டி தனக்கு ஏற்பட்ட குறையை நேருவிடம் சொல்லிக்கொண்டிருந்தாள். நேரு மிகுந்த அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அதிகாரி ஒருவர் குறுக்கிட்டு, நேரு அவர்களுக்கு வேறு பணி இருப்பதை நினைவூட்டினார். உடனே நேருவுக்குக் கோபம் வந்து விட்டது. அந்த அதிகாரியைக் கனல் தெறிக்கப் பார்த்தார்.

''உங்களுக்கெல்லாம் இதயமே இல்லையா!'' என்று கேட்டார். அந்த அதிகாரி உடனே அங்கிருந்து நகர்ந்துவிட்டார். அதன் பின்னர் மூதாட்டியின் பிரச்சினை முழுவதையும் கேட்டுவிட்டுத்தான் நேரு புறப்பட்டார்.

தமிழ்ப்பித்தன்

**1953-** ஆம் ஆண்டு.

டெல்லியில் குழந்தைகளுக்கான படம் ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. யூகோசுலேவியா நாட்டின் படம் அது. அதனைக் குழந்தைகளுடன், குழந்தையாக அமர்ந்து நேருவும் பார்த்தார். படம் முடிந்தவுடன் அங்கிருந்த பிஞ்சுக் குழந்தைகளைப் பார்த்து, ''இந்தப் படம் என்ன என்று புரிந்ததா? யூகோசுலேவியா பற்றி உங்களுக்கு என்ன புரிந்தது?'' என்று கேட்டார் நேரு.

குழந்தைகள் பல்வேறு விதமான பதில்களைத் தெரிவித்தனர்.



உடனே நேரு, 'யூகோசுலேவியா பற்றியும் அந்தத் திரைப்படத்தில் நடித்த வீரச் சிறுவனைப் பற்றியும் ஒரு வகுப்பே நடத்திவிட்டார். மறுநாள் டெல்லிப் பத்திரிகைகளில் இந்தச் செய்தி முதலிடம் பெற்றது. பத்திரிகைகள் இந்தச் செய்திக்கு என்ன தலைப்புக் கொடுத்தன தெரியுமா?

''ஆசிரியர் வேலைபார்த்தார் பிரதமர் நேரு.''

* * *

ஆள் இல்லாத அறைகளில் விளக்கு எரிந்து கொண்டிருந்தால், அதனை அசட்டை செய்யாமல், உடனே ஓடிச்சென்று அணைத்துவிடுவார் நேரு. எழுத்துப் பிழைகளை அவரால் பொறுத்துக் கொள்ள முடியாது. கட்டுரை, செய்திகள், ஆகியவற்றைத் தட்டச்சு செய்யும்போது மிகுந்த இடைவெளி விடப்படுவதை அவர் விரும்புவதில்லை. காகிதங்களை 'பைல்' செய்வது, பின்குத்துவது ஆகியவைகூட ஒழுங்காகவும் துப்புரவாகவும் இருக்க வேண்டும். 'பைல்' களில் காகிதங்களை எவ்வாறு அடுக்கி வைப்பது என்பதைக்கூட அவரே எடுத்துக் கூறுவார்.

* * *



யானையைக் கண்டால் பிஞ்சுக் குழந்தைகள் மகிழ்ச்சியடைவது இயல்பு. எந்த நாட்டைச் சேர்ந்த குழந்தைகளாக இருந்தாலும், இந்தக் குணத்திற்கு விலக்கு அல்ல.

இரண்டாவது உலகப் போரின் காரணமாக, ஜப்பான் விலங்குச் சாலையில் உள்ள யானைகள் கொல்லப்பட்டுவிட்டமையால், அங்கு யானையே இல்லாதிருந்தது. அதனால் கவலையுற்ற ஜப்பான் நாட்டுக் குழந்தைகள், ''யானையை அனுப்ப வேண்டும்'' என்று இந்தியத் தலைமை அமைச்சர் நேருவுக்கு அன்புக் கடிதம் எழுதினார்கள். குழந்தையுள்ளம் கொண்ட நேரு, குழந்தைகளின் வேண்டுகோளை உடனடியாக நிறைவேற்ற முற்பட்டார். மைசூரிலிருந்து ஒரு பெண் யானைக் குட்டியை ஜப்பானுக்கு அனுப்பி வைத்தார். மைசூரிலிருந்து கல்கத்தா சென்று அங்கிருந்து கப்பல் பயணம் செய்த அந்த யானையின் பெயர் இந்திரா.

இதே யானையை எட்டு ஆண்டு கழித்து, ஜப்பான் சென்றபோது நேரு கண்டார்.

ஜப்பானுக்கு யானை அனுப்பப்பெற்ற செய்தி உலகெங்கும் பரவியது. உடனே பல நாடுகளிலிருந்தும், யானைக் குட்டி கேட்டுக் கடிதங்கள் நேருவுக்கு வரத் தொடங்கின.

அமெரிக்கக் குழந்தைகளுக்கு இரண்டு யானைக் குட்டிகளை அனுப்பினார். ஒன்று பெண் ; மற்றொன்று ஆண். பெண்ணின் பெயர் சாந்தி; ஆணின் பெயர் அசோக். அந்த இரண்டு யானைகளும் கப்பல் பயணம் செய்து அமெரிக்கா சென்றன.

துருக்கி நாட்டில் யானையைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிய ஒரு சிறுமி, தனது ஆசையைத் துருக்கியிலுள்ள பத்திரிகை ஒன்றில் தெரிவித்திருந்தாள். இந்தச் செய்தி நேருவுக்கு எப்படியோ எட்டிவிட்டது. உடனே 'மோகினி' என்னும் பெயருடைய பெண் யானைக் குட்டியைத் துருக்கிக்கு அனுப்பி வைத்தார் நேரு.

ஜெர்மன், ஆலந்து, ரஷ்யா அரேபியா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கெல்லாம் யானைக் குட்டிகளை அனுப்பி அங்குள்ள பிஞ்சுக் குழந்தைகளின் நெஞ்சங்களிலெல்லாம் இடம் பெற்றார் நேரு. உலகக் குழந்தைகளிடம் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டைத் தெரிவித்து வருகிறது நேருவின் யானைப் பரிசு!

* * *

பால் ஆடை என்றால் நேருவுக்கு மிகவும் பிடிக்கும். அதை நன்கு, சுவைத்து மகிழ்வார்.

* * *

**1923-** ஆம் ஆண்டு.

நாபா சமஸ்தானத்திற்கு நேரு சென்றார். அவர் அங்கு வரக்கூடாது என்று சமஸ்தான மன்னர் ஆணையிட்டிருந்தார். தடையை மீறிச் சென்றார் நேரு. அதனால் அவர் கைது செய்யப்பட்டார். அவரைக் கைது செய்த காவலர் (போலீஸ்) நேருவின் அழகிய திருமுகத்தைக் கண்டு மகிழ்ந்தார். அவரது முகத்தோற்றத்தினால் கவரப்பட்டுள்ளார். தனது குறிப்புப் புத்தகத்தில் தன்னை மறந்து நேருவை வருணித்து எழுதியுள்ளார் அந்தக் காவலர்.

''அழகிய காந்தக் கண்கள் கொண்டவர் நேரு''-இவ்வாறு காவலர் வர்ணித்து எழுதிய அந்தக் குறிப்புப் புத்தகம் பஞ்சாப் அரும்பொருட்காட்சியகத்தில் இன்றும் காப்பாற்றப்பட்டு வருகிறது.

* * *

பல ஆண்டுகளுக்கு முன்பு.

நேருவைச் சந்திக்க வார்தாவுக்குப் போயிருந்தார் லால் பகதூர் சாஸ்திரி. இரவுச் சாப்பாட்டு நேரம் வந்தது. லால் பகதூர் சாஸ்திரியைத் தேடினார் நேரு. அவர் இல்லை ; எங்கேயோ சென்றிருந்தார். அதனால் நேரு தனியாக உணவருந்தினார். பின்னர் ஒரு தட்டில் பழங்களும், ஒரு தம்ளரில் பாலும் லால் பகதூருக்கு எடுத்து, அவரது கட்டிலின் அருகில் வைத்துவிட்டு உறங்குவதற்குச் சென்றுவிட்டார் நேரு. இரவு படுப்பதற்காக வந்த லால்பகதூர், கட்டிலின் அருகே உணவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியந்தார். நேருதான் வைத்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டார். அவரது கருணையுள்ளத்தை எண்ணி ஆனந்தக் கண்ணீர் விட்டார்!

## தந்தையும் மகனும்

பண்டித ஜவகர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு மறைந்த நேரம். காந்தியடிகளும், பி.சி. ராயும், ஆனந்தபவனத்திற்குச் சென்று, துக்கம் விசாரித்துவிட்டு, உரையாடிக் கொண்டிருந்தனர்.

''மோதிலால் நேருவிற்கு மிகுந்த பற்று யாரிடத்தில் உண்டு?''—பி.சி ராய் காந்தியடிகளைக் கேட்டார்.

''தமது செல்வன் ஜவகரிடத்தில்தான்'' என்று உடனே பதில் தந்தார் காந்தியடிகள்.

''அப்படியென்றால் நாட்டின் மீது பற்றுக் கிடையாதா?''—ராய் மீண்டும் கேட்டார்.

''ஜவகரிடமுள்ள பற்றுதலில் இருந்துதானே மோதிலாலுக்கு நாட்டுப் பற்று கிளைத்தது!''—என்று காந்தியடிகள் கூறினர்.

ஆம்! காந்தியடிகள் கூறியது முழுக்க முழுக்க உண்மை. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை வெறுக்காமல் அவர்களிடம் அன்பு காட்டி வந்த தந்தை மோதிலால் நேருவை —இந்திய அரசியலுக்கும், ஆங்கிலேய எதிர்ப்புக்கும் இழுத்து வந்தவர், மைந்தர் ஜவகர்லால்தான் என்பதை வரலாறு எடுத்துரைக்கிறது.



**தமிழரசு**

அடுத்த இதழிலிருந்து பரிசு பெற்ற சிறு கதைகள் இடம் பெறும்.

## காரணம்.... என்ன?



பல வருடங்களுக்கு முன்பு நேருவும், ஆஸ்திரேலியப் பிரதமர் ராபர்டு மென்சிஸ்சும், உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஆஸ்திரேலியப் பிரதமர் நேருவிடம் கேட்டார்:

''இந்த உலகத்தில் அதிகமாகப் புகைப்படம் எடுக்கப்படுபவர் தாங்கள் ஒருவர்தான். உங்கள் புகைப்படம் இல்லாத பத்திரிகையோ, செய்தித்தாளோ கிடையாது. உங்கள் புகைப்படத்தை நீங்களே பார்த்துத் தற்பெருமை அடைகிறீர்கள்.''

இராபர்ட்டு சொன்னவற்றைப் புன்னகையுடனும், மிகுந்த அமைதியுடனும் கேட்டுக் கொண்டிருந்த நேரு பதில் சொன்னர்:

''இதற்குக் காரணம் தற்பெருமை அல்ல. நான் அழகன். புகழ் பெற்றவன்' என்பதும் அல்ல. உங்கள் நாடு மிகவும் முன்னேற்றம் பெற்ற நாடு. உங்கள் நாட்டு மக்கள் அனைவருமே நன்கு கற்றவர்கள். அவர்களுக்காக நீங்கள் ஆற்றுகின்ற தொண்டுகளைப் பத்திரிகைகளின் வாயிலாக அவர்கள் படித்து அறிந்து கொள்கிறார்கள். ஆனல் எங்கள் நாட்டில் பெரும் பாலோர்க்குக் கல்வி அறிவு கிடையாது. முன்னேற்றம் பெற்றுவரும் எங்கள் நாட்டைக் குறித்தும், நான் நாட்டு மக்களுக்காகச் செய்யும் தொண்டுகள் குறித்தும் அவர்கள் செய்தித்தாள்களில் படித்து அறிந்து கொள்ள முடியாது. அதனுல்தான் அணைக்கட்டைத் திறந்து வைப்பது, தொழிற்சாலைகளைப் பார்வையிடுவது, கிராமங்களுக்குச் செல்வது, கிராம மக்களோடு உரையாடுவது என்று பல படங்களுக்குப் ''போஸ்'' கொடுக்கிறேன். என் புகைப்படங்களைப் பார்த்து நான் அவர்களுக்காக ஆற்றும் தொண்டில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அந்த நம்பிக்கை அவர்களுக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் அளிக்க வேண்டும். அவர்களுடைய மகிழ்ச்சியும், இன்பமும் தான் என் வாழ்நாளின் குறிக்கோளாகும். இது தற்பெருமை அல்ல.''

# செயற்கரிய செய்யும்




# சேரன் போக்குவரத்துக் கழகம்

குமார்—...

நாட்டுடைமையாக்கப்பட்ட பயணிப் பேருந்துகள் தமிழகத்தில் பணியாற்றத் தொடங்கி 27 ஆண்டுகள் முடிந்துவிட்டன. பொது மக்களின் பேருந்துப்போக்குவரத்து அரசுக்குச் சொந்தமாக—அரசால் ஏற்று நடத்தப்பட வேண்டுமென போருக்குப் பிந்திய மறுசீரமைப்புப் பணியின் மத்தியக் குழு 1944-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பரிந்துரை செய்தது. இப்பரிந்துரைக்கிணங்க தமிழகத்தில் மோட்டார் போக்குவரத்துப் பணிகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென 1946-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு முடிவு செய்தது. பேருந்துப் பணிகளை நாட்டுடைமையாக்கும் முறையில் சென்னை மாநகர்ப் பேருந்துப் பணி முழுவதும் 1948-ஆம் ஆண்டு அளவில் அரசுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. நாட்டுடைமையாக்கும் பணியில் அடுத்ததாக நீள் தொலைவுப் பேருந்துப் போக்குவரத்து தொடங்கப்பெற்றது.

1967-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டுடைமையாக்கப்படும் கொள்கையினை விரைவு படுத்த எண்ணிய தமிழக அரசு, 75 மைலும் அதற்கு மேற்பட்ட வழித் தடங்கள் (சாதாரண மற்றும் விரைவுப் பேருந்துப் போக்குவரத்து), சென்னை நகரில் தொடங்கும் அல்லது முடிவடையும் அனைத்து வழித்தடங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கும் அல்லது முடிவடையும் அனைத்து வழித் தடங்கள் போன்றவைகளை நாட்டுடைமையாக்க முடிவு செய்தது. இதில் ஓரளவு முன்னேற்றங் கண்டதால் மேலும் இதனை விரைவு படுத்த எண்ணி, 1972 ஆகஸ்டுத் திங்களில் மாநிலத்துள்ள அனைத்து மாநிலப் போக்குவரத்து முறைகளை 5 ஆண்டுகளுக்குள் நாட்டுடைமையாக்க முடிவு செய்தது.

அரசுப் போக்குவரத்துத் துறைக்குக் கிடைத்துள்ள அனுபவத்திலிருந்து, குறிப்பிட்ட அளவிற்கு மேல் துறைகள் அமைந்திருப்பது, துறையின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் தடையாக அமையும் எனக் கண்டறியப்பட்டது. பிரிவுகளைப் பரவலாக்குவதும், பரவலாக்கப்பட்ட பிரிவுகளுக்குத் தன்னுட்சி உரிமை அளிப்பதும் சிறந்ததோர் கொள்கை என அரசு கருதி, இக்கொள்கையினை மனத்திற் கொண்டு மாநிலத்தின் பல்வேறு வட்டாரங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போக்குவரத்துக் கழகங்களை அமைப்பதற்கான திட்டப் ஒன்றினை வகுத்தது.

இத்திட்டத்தின் கீழ் அரசு போக்குவரத்துத் துறை தவிர்த்து, பல்லவன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், சேரன்போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், அண்ணு போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் என ஆறு கழகங்கள் நிறுவப்பெற்று செயலாற்றி வருகின்றன. இக் கழகங்கள், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பெற்று, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களாகப் பணியாற்றுகின்றன. இக் கழகங்களில் செயல் முறை, பொது மக்களுக்குப் பணி புரிதல், தொழிலாளர்களுக்குச் சலுகை அளித்தல் போன்றவைகளில் முன்னணியில் திகழ்கின்றது 'சேரன் போக்குவரத்துக் கழகம்'.

தமிழ்நாடு அரசின் வரையறுக்கப் பெற்ற நிறுவனமான 'சேரன் போக்குவரத்துக் கழகம்' 1—3—1972 முதல் பொள்ளாச்சியைப் பதிவு அலு

௨

வலகமாகக் கொண்டு செயல்படத் துவங்கியது. கோயம்புத்தூர்—நீலகிரி மாவட்டங்களில் ஏறத்தாழ 1,200 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் கீழ் ''ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட்'' (A.B.T.) நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 55 வழித்தடங்களில் ஓடிக் கொண்டிருந்த 109 பேருந்துகளை முதலில் இக் கழகம் மேற்கொண்டது. அந்நிறுவனத்திற்குச் சொந்தமான—பொள்ளாச்சியில் அமைந்திருந்த பணிமனையினையும் இடங்களையும் பெற்றுக் கொண்டது. மேலும் அந் நிறுவனத்தில் பணியாற்றி வந்த 840 பணியாளர்களையும் இக் கழகம் மேற்கொண்டு, அவர்களுக்குத் தொடர்ச்சியான பணிக் காலத்தையும், அதற்குரிய சலுகைகளையும் அளிக்க முற்பட்டது.

இக் கழகம் துவங்கப்பட்ட பொழுது (அதாவது 1—3—72 முதல் 31—3—72 முடிய) ரூ. 7.50 இலட்சம் நஷ்டத்தில் இயங்கியது. மக்களின் தேவை, வசதிகளுக்கேற்ற வகையில் இணைப்பான, வலுவான, சிக்கனமான ஒப்பேறக் கூடிய சாலைப் போக்குவரத்தை இயக்குவதில் முழு மூச்சுடன் செயலாற்றத் துவங்கியதால், 1972—73-ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் நாட்டுடைமையாக்கப் பெற்ற 124 பேருந்துகளையும், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து 32 பேருந்துகளையும், தானே விரும்பி விற்பனை செய்ய வந்த தனியாரிடமிருந்து 24 பேருந்துகளையும், நேரிடையாக 23 பேருந்துகளையும் பெற்றது. 1972—73-ஆம் ஆண்டில் மொத்தம் 174 தடங்களில் 312 பேருந்துகள் இயங்கி வந்தன.

பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும், தடங்களின் எண்ணிக்கை உயர்ந்தாலும், பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையும் 1,808 உயர்ந்தது. 1972—73-ஆம் ஆண்டில் பேருந்துகள் மொத்தம் 146 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் ஓடி நாளொன்றுக்கு 83,130 ரூபாயை வசூலாகப் பெற்றுத் தந்து கொண்டிருந்தன. திரு. என். திருஞானசம்பந்தம் அவர்கள் சேரன் போக்குவரத்துக் கழகம் துவங்கப் பெற்றவுடன் அதன் நிருவாக இயக்குநராக அரசால் நியமிக்கப்பெற்ருர். தம்முடைய திறமையான நிருவாகம், அனைத்துத் தொழிலாளர், அலுவலர்கள், மக்கள் போற்றுகின்ற முறையில் 'மக்கள் நலங் கருதி' வகுத்திட்ட செயல் முறைத் திட்டங்கள் போன்றவைகளாலும், ஏனைய அலுவலர்கள், தொழிலாளர்களின் முழுமையான ஒத்துழைப்பினும் 1972—73-ஆம் ஆண்டில் இக் கழகம் ரூ. 7.51 இலட்சத்தை நிகர இலாபமாகப் பெற்றது. சென்ற நிதியாண்டில் காணப்பெற்ற ரூ. 7.50 இலட்சம் நஷ்டத்தை ஈடு கட்டி, ரூ. 1,695 நிகர லாபத்தில் இயங்கிக்கொண்டுவந்தது.

மக்கள் நலன் ஒன்றினையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ள இக் கழகம் 1972—73 முதல் கோயம்புத்தூரைப் பதிவு அலுவலகமாகக் கொண்டு சிறப்புடன் பணியாற்றத் துவங்கியது. இக் கழகக் கிளைகள் கோயம்புத்தூர், பொள்ளாச்சி, கூனூர், தாராபுரம், ஈரோடு, கூடலூர், கோத்தகிரி, காங்கேயம், மேட்டுப்பாளையம், உதகமண்டலம், பழனி, சத்தியமங்கலம், திருப்பூர், உடுமலைப்பேட்டை, வால்பாறை ஆகிய இடங்களில் ஏற்படுத்தப் பெற்று நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

நிருவாகம் திறம்பட நடைபெறவும் தொழிலாளர்—நிருவாகத்தினர் உறவு வலுப்பெறவும், தொழிலாளர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்திடும் வகையில் உலகத்திலே எந்த நாடும், எந்த அரசும் இதுவரையில் கொண்டு வந்திராத ஒரு திட்டத்தினை—சமுதாய சமதர்மத் திட்டம் ஒன்றினை—அதாவது 'தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பொறுப்பும், முதலீட்டில் பங்கும்' அளித்திடும் திட்டத்தினைக் கொண்டு வந்தது தமிழ்நாடு அரசு ஒன்றுதான். இத் திட்டம் 1973-ஆம் ஆண்டு மே திங்கள் முதல் அமலுக்கு வந்தது. இத் திட்டம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் முதலில் கொண்டு வரப்பட்டது சேரன் போக்குவரத்துக் கழகத்தில்தான் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 500 வரை ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்கள் ரூ. 500-க்கான ஈட்டுப் பத்திரத்தையும் (கடன் பத்திரம்) ரூ. 500-க்கு மேல் ஊதியம் பெறுகின்றவர்கள் ரூ. 1000-க்கான ஈட்டுப் பத்திரத்தையும் பெற வேண்டும். இத் தொகையினை மாதத் தவணையின் மூலம் செலுத்தத் தொழிலாளர்கள் அனுமதிக்கப்படுவர். இத்திட்டத்தின் மூலம் இக்கழகத்தில் நிரந்தரமாகப் பணியாற்றும் 1,500 தொழிலாளர்களில் 1,400 பேர் தாமே விரும்பி பங்குதாரர்களாகச் சேர்ந்துள்ளனர். தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கு மட்டும் அளித்தேதாடல்லாமல் இக்



தொழிலாளர் இயக்குநர், பிற அலுவலர்கள் ஆகியோருடன் ...ருவாக இயக்குநர் திரு. என். திருஞானசம்பந்தம்

கழகத்தின் இயக்குநர் குழுவில் இரண்டு தொழிலாளர்கள் இயக்குநர்களாக இடம் பெற்றுள்ளனர். 'தொழிலாளர் இயக்குநர்' இருவரும் ஓட்டுநர்களாவர் என்பது குறிப்பிடத் தக்கது. இருவரில் ஒருவர் பொள்ளாச்சிப் பணிமனையைச் சார்ந்த திரு. கே. பொன்னுசாமி, மற்ருெருவர் உதகமண்டலம் பணிமனையினைச் சார்ந்த திரு. எஸ். எச். சையத் இமாம். முதலில் திரு. கே. பொன்னுசாமியிடம் கேட்டோம். அவர் கொடுத்த தகவல்கள். இதோ அவரே கூறுகிருர்,



தொழிலாளர் இயக்குநர் திரு. சையத்இமாம்



தொழிலாளர் இயக்குநர்
திரு. கே. பொன்னுசாமி

''எனக்கு 40 வயதாகிறது. நான் ஓட்டுநராக 20 ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன். முன்பு ஏ.பி.டியில் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினேன். தொழிற்சங்கத் தலைவராகவும் பணியாற்றியுள்ளேன். என்னைத் தொழிலாளர் இயக்குநராக நிருவாகம் தேர்ந்தெடுத்தது, எனக்கும் இயக்குநர் அந்தஸ்து கொடுத்தது குறித்து பூரிப்பும் பெருமையும் அடைகிறேன். தொழிலாளர்—நிருவாகம் நல்லுறவுக்கு இது பெரிதும் உதவும் என்று நினைக்கிறேன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் எங்களையும் கலந்துதான் முடிவு எடுக்கிருங்க. இதுவரையில் சுமுகமாகவே முடிச்சிருக்கோம்'' எனப் பெருமை பொங்கச் சொன்ஞர்.

அடுத்த தொழிலாளர் இயக்குநர் திரு. சையத் இமாமை அணுகிக் கேட்கிருேம். அவர் சொல்லுகிருர்,

''நான் சுமார் 28 வருசமா இந்தத் தொழில்லே இருக்கேன். நீலகிரி டிரான்ஸ்போர்ட்டிலே இருந்தேன். அதைசேரன் போக்குவரத்துக் கழகத்திலே சேர்த்த பிறகு 2 வருடமா இதிலே வேலை செய்யறேன். 50 வயசு ஆன என்னையும் தொழிலாளர் இயக்குநராக நிருவாகத்தினர் ஆக்கி இருக்காங்க. இது எனக்குக் கெடைச்ச பெரிய பேருகக் கருதுறேன். பொதுவா எங்களுக்கெல்லாம் நல்ல வாழ்வைக் கொடுப்பது இக் கழகத்தைத் தவிர வேறெதுவுமில்லை என்பது எங்க எல்லாருடைய அபிப்பிராயம்னு சொல்லுவேன். இக் கழகம் மேலும் பல சாதனைகள் புரிய நாங்க எங்கள் முழு ஒத்துழைப்பையும் நிருவாகத்தினருக்குத் தருவோமுங்க'' என்று மகிழ்ச்சியுடன் கூறிஞர்.

நிருவாகத்தில் பொறுப்பும், முதலீட்டில் பங்கும் அளிக்கின்ற இத்தகைய மகத்தான தொரு திட்டத்தை அமல்படுத்தியதிலிருந்து இங்குள்ள தொழிலாளர்களிடையே ஒருவித புத்துணர்ச்சியும், உத்வேகமும், உற்சாகமும் காணப்பட்டது. அவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் கடமையறிந்து செயலாற்றி வர முற்பட்டனர். இவர்களுடைய முழு ஒத்துழைப்பும் நிருவாகத்தினருக்குக் கிடைத்ததால் இக்கழகத்தை திறம்பட நடத்திச் செல்ல முடிந்தது.

இத்தகைய சிறந்ததொரு நிருவாகத்தினுல் 1973—74-ஆம் ஆண்டில் பேருந்துகளின் எண்ணிக்கை412 ஆக உயர்ந்து, அவை 227 தடங்களில் ஓடலாயிற்று. இக்கழகப் பேருந்துகள் 287 இலட்சம் கிலோ மீட்டர் தொலைவு சென்று, நாளொன்றுக்குச் சராசரியாக ரூ. 1,82,400 வரை வசூலைப் பெற்றுத் தந்தது. பணியாற்றுவோரின் எண்ணிக்கையும் 2,459 ஆக ஏறியது. இந்த ஆண்டில் 45.21 இலட்சம் ரூபாயை நிகர இலாபமாகப் பெற்றுத் தந்தது பாராட்டுதற்குரியது. இலாபம் அதிகமாகக் கிடைத்ததால் 1973—74-ஆம் ஆண்டில் 32.5 சதவிகிதம் போனஸ் தரப்பட்டுள்ளது. தொழிலாளர்களிடையே மகிழ்ச்சியை அளித்துள்ளதில் ஐயமில்லை. ஏனென்ருல், சென்ற ஆண்டில் 14 சதவிகிதம்தான் போனசாகத் தரப்பட்டது.

இக்கழகத்தில் பணியாற்றும் ஓட்டுநர், நடத்துநர்களுக்கு மற்றக் கழகங்களில் அளிப்பது போன்று 'வசூல் ஊக்கத் தொகை' (Collection Batta) யும் வழங்கி வருகிறது. வெளியூர் பேருந்துகளில் செல்லும் நடத்துநர், ஓட்டுநர்களுக்கு 3 சதவிகிதமும், நகரப் பேருந்துகளில் பணி புரிவோருக்கு 4 சதவிகிதமும் வசூல் ஊக்கத் தொகையாகத் தரப்படுகிறது.

இந்த வசூல் ஊக்கத் தொகைத் திட்டத்திஞல் ஓட்டுநர், நடத்துநர்களே பயன் பெறுகின்றனர். எனவே பணிமனையில் பணியாற்றும் தொழிலாளர்கள், அலுவலகத்தில் பணி புரியும் அலுவலாளர்கள், நிருவாக இயக்குநர் தவிர்த்து மற்ற அலுவலர்கள் முதலியோர் பயன் பெறுகின்ற வகையில் 'ஆதாயப் பங்குத் திட்டம்' (Profit Sharing Scheme) ஒன்று கொண்டுவரப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரு மாதத்தில் கிடைத்த மொத்த வசூலில் 0.5 சதவிகிதத் தொகைஇவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பெறும். அந்த மாதத்தில் 22 நாட்களுக்குக் குறையாமல் பணிக்கு வந்திருப்பவர்களுக்கு மட்டும் இந்தத் திட்டம் பயன் தரும். இதன் மூலம் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்குச் சுமார் ரூ. 30 வீதம் பெறுவர். இத்திட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர் விடுமுறை எடுப்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக்குறைவு என்பது குறிப்பிடத் தக்கது.

தொழிலாளர்கள் தங்களின் பணிக் காலத்திற்குப் பின்னர் வாழ்வில் பாதுகாப்புப் பெற்றிடவும், நிம்மதியான வாழ்வினை

யத்திடவும் தமிழக அரசு கொண்டு வந்த 'குடும்ப நன் மைத் திட்டமும்', அனைத்து அரசுப் பணியாளர்களுக்குத் தரப்படுகின்ற 'பென்ஷன்' திட்டமும் இக்கழகத் தொழி லாளர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. தொழிலாளர்களுக் கும் அவர்களின் குடும்பத்தின ருக்கும் மருத்துவச் செலவினங் களையும் தந்துவிடுகின்றது.

'தொழிலாளர் நல நிதி' ஒன்றினை உருவாக்கி, அதற் கென ரூபாய் இரண்டு இலட் சம் ஒதுக்கியுள்ளது. இந்நிதி யிலிருந்து தொழிலாளர்- தொழிலாளரின் குடும்பத்தி னர் நலனுக்கும், அவர்களது குழந்தைகளின் கல்விக்கும் செலவிடப்படுகிறது. உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று, கற் பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள தொழிலாளர் களின் குழந்தைகளுக்குக் கல் லூரிகளில் இடம் பெற்றுத் தந்து கல்லூரிக் கட்டணம், புத்தகங்கள், விடுதிச் செலவு அனைத்தையும் இந்நிதியிலி ருந்தே செலவிடுகிறது. இந்த ஆண்டில் இரண்டு மாணவர் கள் பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத் தகைய சிறந்ததொரு திட்டம் வேறெந்தக் கழகத்திலும் கிடையாது.

தவிர ஈட்டுப் பத்திரதாரர் களுக்கு வட்டியில்லாக் கட னும் அளிக்கப்பெற்று வரு கிறது. இதனால் அனைவரும் ஈட்டுப் பத்திரதாரர்களாக ஆகியுள்ளனர். கூட்டுறவுப் பண்டகசாலையின் மூலம் தவணை முறையில் வானொலிப் பெட்டி, சைக்கிள், மேசை, நாற்காலி போன்றவைகளும், தீபாவளி, பொங்கல் போன்ற திருநாட் களில் உறுப்பினர்கள் தங்கள் ஊதியத்தில் 80 சதவிகிதத் திற்குத் தவணை முறையில் துணிமணிகள் எடுத்துக் கொள் ளவும், நடமாடும் ஊர்திகள் மூலம் எல்லாக் கிளைப் பணி மனைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்களும் வழங்கப்படு கின்றன.

பணியாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தின்கீழ் கோவையிலும், பொள்ளாச்சி யிலும் ரூ. 32.50 இலட்சம் செலவில் சுமார் 303 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டம், புதுடில்லியி லுள்ள நகர வீட்டமைப்புக் கழகத்தின் (HUDCO) பண உதவியுடன் நடைபெறுகிறது.



வீடுகள் பெறுகின்ற தொழிலா ளர்கள் 15 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையில் பணத் தைத் தவணை முறையில் செலுத்த வேண்டும்.

தொழிலாளர்களுக் குச் சலுகை விலையில் உணவு, சிற்றுண்டி, தேநீர் போன்ற வைகள் எல்லாப் பணிமனைச் சிற்றுண்டி விடுதிகளில் தரப் படுகின்றன. சாப்பாடு 60 காசு களும், சிற்றுண்டி வகை 10 காசுகளும், தேநீர் 5 காசுகளுக் கும் தரப்படுகின்றன. இரவு நேரங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இலவச மாகவும் இவைகள் தரப்படு கின்றன.

மேலும் எரிபொருட்களைச் சிக்கனமான முறையில் பயன் படுத்தும் ஒவ்வொரு பணிமனை யில் பணியாற்றும் தொழிலா ளர்களுக்கு ஊக்கப் போன சும் அளிக்கப்படுகின்றது. ஒவ் வொரு தொழிலாளியும் மாதத்திற்கு இதன் மூலம் ரூ. 5 முதல் 10 வரையில் பெற லாம்.

ஓட்டுநர்களுக்கு அனுபவ அறிவுடன் தொழில் அறிவும் இருக்குமானால், பேருந்துகளைப் பராமரிப்பதும், செலவினங் களைக் குறைப்பதும் சுலபமா கும். எரிபொருள் கிடைக்காத இந்நிலையில் எரிபொருளை மிச் சப்படுத்துவதும், உதிரி உறுப் புக்கள் தட்டுப்பாடு உள்ள சூழ்நிலையில் அவற்றின் உழைப் புக் காலத்தை அதிகப்படுத்துவ தும் அவசியமாகின்றது. சிறந்த முறையில் வாகனங்களைப் பராமரிப்பதற்கு முறையான கல்வியறிவு, தொழிலில் திறமை, சரியான முறையில் வண்டியை ஓட்டுவதற்கான பழக்கம் போன்றவைகள் மிகவும் தேவைப்படுகின்றன. எனவே, இவைகளை ஓட்டுநர்களுக்கு விளக்கிக் காட்டிடும் வகையில் 15 பேர் கொண்ட அணிக்கு மூன்று நாட்கள் பயிற்சி வகுப்பு கள் நடத்தப்படுகின்றன.

செலவினங்களைக் குறைத் தல், வாகனங்களை இயக்கும் திறமையினை அதிகரித்தல் போன்றவைகளில் சரியான- நடைமுறையில் செயல்படுத் தக்கூடிய ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளிகளுக் குப் பரிசுகள் வழங்க 'ஆலோ சனைத் திட்டம்' ஒன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்தகைய சலுகைகள் வழங்கப்பட்டாலும் நலமான குடும்ப வாழ்வை ஒவ்வொரு தொழிலாளியும் நடத்த வேண் டுமல்லவா? எனவே, திட்ட மிட்ட அளவான குடும்பத்தை அமைத்திடும் 'குடும்ப நலத் திட்டமும்' இங்கு உற்சாகப் படுத்தப் பட்டுள்ளது. குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு தொழி லாளியும் ரூ. 500-ம், ஊதியத் துடன் ஒரு வார விடுமுறையும் அளிக்கப்பெறுகின்றார். இது வரை ஏறத்தாழ 150 பேர் அறுவைச் சிகிச்சை செய்துள் ளனர். இத்தகைய திட்டம் வேறு எங்கும் செயல்படுத்தப் படவில்லை என்பதையும் இங் குக் குறிப்பிட வேண்டும்.

வழங்கப்படுகின்ற சலுகை களை நல்ல முறையில் தொழி லாளர்கள் பயன்படுத்துகிறார் களா? அவர்கள் நல்வாழ்வுக் குக் கழகம் துணை புரிகிறதா? என்பதனை அறிய . சிலரைக் கண்டு விசாரித்தோம். முதலில் ஓட்டுநர் திரு. சி.கே. பழனிச் சாமி அவர்களைக் கேட்டோம். அவரது கருத்துக்களை அவரே சொல்கிறார்.


ஓட்டுநர் திரு. சி. கே. பழனிச்சாமி

''நான் கோயம்புத்தூர் - ஈரோடு ரூட்டிலே டிரைவரா இருக்கேனுங்க. எனக்கு இப் போ நாற்பது வயசாகிறது. 15 வருஷம் சர்வீஸ் பண்ணியிருக் கேனுங்க. ஏ.பி.டி. யிலே இருந்துதான் சேரனுக்கு வந் தேனுங்க. ஏ.பி.டி. யிலே எனக்கு 180 ரூபாய் கொடுத் தாங்க. இப்ப 300 ரூபாய் வாங்குறேனுங்க. எனக்கு 4 பெண் குழந்தைகளும், 2 ஆண் குழந்தைகளும் இருக் காங்க. தினமும் 6 ரூபாய் வரை எனக்கு பேட்டா கிடைக் குது. ஏ.பி.டி. யிலே இருந்த தைவிட அதிகமான சலுகை களும், போனசும் கொடுக்கி றாங்க. இப்ப கொடுத்த போன சிலே குழந்தைகளுக்குப் புத்த கம், துணி போன்றவைகளை எடுத்தேனுங்க. வீடு கட்டுற துக்கும் கோயம்புத்தூரிலே வீட்டுமனையும் வாங்கியிருக் கேனுங்க. இப்ப என்னாலே நிம்மதியா குடும்பத்தை நடத்த முடியுதுங்க'' என்றார்.

அடுத்து பொள்ளாச்சிப் பணிமனையைச் சார்ந்த, 'பொள்ளாச்சி - வால்பாறை' தடத்தில் நடத்துநராகப் பணியாற்றும் திரு.பி. கிருஷ்ண சாமியைக் கண்டு கேட்டோம். தனது கருத்துக்களை அவரே கூறுகிறார்,

''எனக்கு வயசு 47 ஆகு துங்க. என் குடும்பத்திலே 5 பேரு இருக்கோம். மூன்று குழந்தைகளும் பள்ளியில் படிக் கிறாங்க. எனக்கு இப்ப 27 வருஷ சர்வீஸ் ஆச்சு. நான் ஏ.பி.டி.யிலே இருந்தப்ப 200 ரூபாய் சம்பளம் வாங்கினேன். இப்ப 308 ரூபாய் கெடைக் குது. தினமும் 5 ரூபாய் பேட்டா கிடைக்குது. இப்ப கொடுத்த போனசில் ஒரு பகுதியை ஈட்டுப்பத்திரத் துக்கு (Share) கொடுத் தேன். எனக்குப் பங்கு 500 ரூபாய். இந்த நிருவாகத்திலே எங்களுக்கு வேண்டிய சலுகை கள் எல்லாம் கிடைக்குதுங்க. இந்த நிருவாக இயக்குநர் இருக்கிறவரைக்கும் எங்களுக்கு ஒரு குறையுமில்லங்க'' என்று பெருமையுடன் கூறினார்.

இத்தனை தொழிலாளர்கள் கொண்ட இக்கழகத்தில் ஒரே ஒரு தொழிற்சங்கம்-கட்சிசார் பற்ற தொழிற்சங்கம் செயல் படுவது வேறெந்த போக்கு வரத்துக் கழகத்திலும் இல்லை. கட்சிசார்பற்ற முறையில் தொழிற்சங்கம் இயங்குவதால் எல்லாப் பிரச்சினைகளும் சுமுக மாகத் தீர்க்கப்பட்டு வருகின் றன. இத்தொழிற்சங்கத்தில் சுமார் 2,100 உறுப்பினர்கள் உள்ளனர். தற்பொழுதுள்ள தொழிற்சங்கத் தலைவர் திரு. எஸ்.பி. ஜேம்ஸ் அவர்களிடம் தொழிற்சங்கம் பற்றி கேட்ட போது அவர் சொன்னார்,

''30 வருசமா மெக்கானிக் காக இருந்த நான் பலதடவை தலைவராக இருந்திருக்கேன். எங்க சங்கம் கட்சிசார்பில்லா மல், தொழிலாளிகளின் ஒரே சங்கமாக இருக்குது. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் நிருவாகத்துடன் பேசி சுமுக மாகத் தீர்த்துக் கொள்கிறோம். இப்ப எங்க தொழிலாளிகளி டம் எந்தத் தகராறும் இல்லை. எந்தப் பிரச்சினையும் எழ வில்லை'' என்று பெருமிதத் துடன் கூறினார்.

போக்குவரத்துத் துறையில் திறமையான நிருவாகம் நடை பெறவும், சீர்திருத்தம் செய் திடும் வகையிலும் இப்போக்கு வரத்துக் கழகம் 'அறிவுரை வழங்கும் அணி' (Consultancy wing) ஒன்றினை உருவாக்கி யுள்ளது. தேவைப்படுகின்ற கழகங்களுக்குச் சென்று போக்கு வரத்து முறையில் சரியான வழி முறைகளைக் கடைபிடித்து செயல்முறைகளில் முன்னேற் றங்காணுவதற்குரிய அறிவுரை களையும், ஆலோசனைகளையும் இந்த அணி வழங்குகிறது. ஏற் கெனவே மேகாலயாவிற்குச் சென்று அங்குள்ள போக்கு வரத்துத் துறைக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. சென்னையி லுள்ள போக்குவரத்துக் கழக மும் இதன் ஆலோசனைகளைக் கேட்டுள்ளது.

மேலும் ரூ. 1.50 இலட்சம் செலவில் பயணிகள் தங்கு மிடங்களை (Shelters) கோவை யிலும், உதகமண்டலத்திலும் உருவாக்கித் தந்துள்ளது. அனைத்துப் பணிகளையும் இக் கழகமே மேற்கொண்டது. கோவை மாநகருக்குத் தானே இயங்கும் அடையாள விளக்கு களை (Automatic Signals) ரூ. 64,000 செலவில் இலவச மாக அளித்துள்ளது. உதகை யில் மலர்ப் பூங்காவிலுள்ள இரண்டு குளங்களை 25 ஆயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக் கிறது. தொழிலாளர்கள் விடு முறை நாட்களில் சுற்றுலாச் சென்றால் இலவசமாகத் தங்கு வதற்கு 'விருந்தினர் மாளிகை' ஒன்றும் உதகையில் கட்டப் பட்டு வருகிறது. இந்தியா விலேயே இத்தகைய இலவச விருந்தினர் மாளிகைக் கட்டப் படுவது இதுவே முதல் தடவை யாகும். தொழிலாளர்கள் வரு டத்தில் ஒருமுறை 2,500 கிலோ மீட்டர் தொலைவுக்குச் சுற்றுலாச் செல்லவும் இலவச அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப் படுகின்றன. வருடத்திற்கு 30 சீட்டுகள் வரை வழங்கப்படு கிறது.

இக்கழகத்திற்குத் தேவை யான உதிரிப் பாகங்கள், பழுது பார்த்தல் அனைத்தும், பொள் ளாச்சியிலுள்ள 'சேரன் பொறி யியல் கழகத்தில் (Cheran Engineering Corporation) தயாரிக்கப்படுகின்றன. ஒரு பாகம் பழுதடைந்துவிட்டால் அதற்குப் பதிலாக புதிய பாகம் பொருத்தப்படுகிறது. எனவே பணிமனையில் பேருந்துகள் அதிக நேரம் தங்குவதில்லை. உடனுக்குடன் பணிகள் முடிக் கப்பெற்று அனுப்பப்படுகிறது

இந்த வகையில் சிறப்புப் பணியாற்றுவதாலும், தொழி லாளர்கள் தங்களின் முழு ஒத்துழைப்பை நல்குவதாலும், நிருவாக இயக்குநர் திரு. திருஞானசம்பந்தம் அவர்களின் திறமையான நிருவாகத்தினு லும், தமிழ்நாடு அரசின் ஊக் கத்தாலும் உதவியாலும் சேரன் போக்குவரத்துக் கழகம் வெற்றி நடைபோட்டுச் சாதனைகள் பல புரிந்துள்ளதில் ஐயமொன்றுமில்லை.

—ஆயிரம்



# நூலகத் துறையில் தமிழக எழுச்சி

மணவை முஸ்தபா

நூலக உணர்வுக்கு வித்தூன்றிய பெருமை பரோடாவைச் சேர்ந்ததாயினும், நூலக வளர்ச்சிக்கு உந்து விசையாக அன்றும் இன்றும் இருந்து வருவது தமிழ்நாடுதான். எத்தனையோ துறைகளில் எழுச்சிமிகு செயல்களைத் தொடங்கி இந்தியாவுக்கே வழிகாட்டி வரும் தமிழ்நாடு அரசு, நூலகத்துறையின் வளர்ச்சியிலும் அரிய சாதனைகள் பலவற்றைத் துணிந்து செயல்படுத்தி வெற்றி காண முயன்று வருவதை அறிவுலகம் போற்றத் தவறவில்லை. நாட்டு நிலையை ஒட்டுமொத்தமாக ஒப்பிட்டு ஆராய்வோர்க்கு இந்நிலை மிகத் தெளிவாகப் புலப்படும்.

நாட்டு மக்களில் இன்னும் நூற்றுக்கு எழுபது பேர் படிக்காதவர்களாகவே இருக்கிறார்கள். துல்லியமாகச் சொன்னால் ஐம்பத்தைந்து கோடி மக்களில் முப்பத்தொன்பது கோடி மக்கள் படிக்காதவர்களாக-பாமரர்களாக-கண்ணிருந்தும் குருடர்களாக - நம்மிடையே வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலை மாறவேண்டும்-மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதிலே மற்றவர்களைவிட தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்தி ஆக்கத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டிச் செயல்படுத்தி, வருகிறது. மாநில அரசின் வருவாயில் கணிசமான பெருந்தொகை கல்விக்குச் செலவிடுவதே இதற்குச் சான்று.

''எல்லார்க்கும் எல்லாம் என்
  றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற
  திந்த வையம்
கல்லாரைக் காணுங்கால்
  கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம்
  அங்கே உண்டாம்!''

என்ற பாவேந்தரின் உணர்ச்சி வழி வளர்ந்தவர்களால் வழி நடத்தப்படும் அரசில், அறிவுத் துறையில் மலர்ச்சி ஏற்படுவது இயல்புதானே! அத்தகைய எழுச்சியின் நிலைக்கொள்கை அமைந்துள்ளது நூலகத் துறை. நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்படும் ஏழாவது தேசிய நூலக வாரத்தில், நூலகத்துறையில் தமிழ்நாட்டில் விரைந்து ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களை அளவீடு செய்வது எல்லாவகையிலும் பொருத்தமுடைத்தாகும்.

நாட்டிலே முதன் முதலாக நூலகச் சட்டத்தை இயற்றிய தமிழ்நாடு அரசு ஊருக்கு ஒரு நூலகம் என்ற கொள்கைவழி மாவட்டந்தோறும், 'மாவட்ட நூலக ஆணைக் குழு'க்களைத் தோற்றுவித்து முக்கிய ஊர்களிலெல்லாம் நூலகங்களைத் திறந்தது. மக்களின் வரிப் பணத்தின் ஒரு பகுதியையும் அரசு மானியத் தொகையின்



ஒரு பகுதியையும் கொண்டு இயங்கி வந்த நூலகங்கள் பெருக்கமடைந்த அளவுக்குத் தரமான நூல்களைப் பெற்று மக்களுக்கு அளிக்கும் போக்கில் ஏதோ ஒருவிதத் தளர்வு தோன்றியது. இதனால் கல்வியாளர்களிடையேயும், பொது மக்களிடையேயும் அதிருப்தி பரவலாக ஏற்படலாயிற்று. இதனால் நூலகத்துறை வளர்ச்சியில் ஒருவிதத் தேக்கநிலை ஏற்படத் தொடங்கியது. இதனை உன்னிப்பாகக் கவனித்து வந்த தமிழ்நாடு அரசு, கல்வியாளர்கள்-மக்களின் விருப்பத்திற்கிணங்க நூலகத்துறையின் அமைப்பினை மாற்றியமைக்க ஆக்கத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டிச் செயல்படுத்த முனைந்துள்ளது.

அதன் முதல் நடவடிக்கையாக, அதுவரை கல்வித்துறை இயக்ககத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்த நூலகத்துறையைத் தனித்துறையாக மாற்றியமைத்தது. அதற்குரிய தனி இயக்குநராக, நூலகத்துறையில் நிறை அனுபவம் பெற்ற திரு வே. தில்லைநாயகம் அவர்களை 1972 சூலை 31-ல் தமிழ்நாடு அரசு நியமித்தது.

நூலகத்தின் துறையின் மறுமலர்ச்சிக்கு உறுதுணையாக அமையத்தக்க வகையில் வல்லுநர்கள் பலரைக் கொண்ட நூலகச் சீரமைப்புக் குழுவை அமைத்து, அவர்தம் ஆய்வுப் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள விழைந்துள்ளது.

நூலகங்களுக்கு நூல்களைப் பெறுவதில் இருந்துவந்த குறைபாடுகளைப் போக்கும் வகையில் தக்கவர்கள் எழுதிய தரமான நூல்கள் நூலகங்களில் இடம்பெறும் பொருட்டு அரசே நேரிடையாக நூலக மானியத் தொகையின் ஒரு பகுதிக்கு நூல்வாங்கி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கி சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. நூலகத்துறையைக் கவ்வியிருந்த பெருங்குறை இதனால் களையப்பட்டுவிட்டது.

இத்திட்டத்தின்படி மாநில மைய நூலகம் 1, மாவட்ட மைய நூலகங்கள் 13, கிளை நூலகங்கள் 1454, ஆக 1468 நூலகங்களுக்கு இதுவரை ரூ. 11 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள 800 தரமான தமிழ்-ஆங்கில தலைப்புகள் வாங்கியளிக்கப் பட்டுள்ளன.



தமிழில் 300 பிரதிகளும், ஆங்கிலத்தில் 100 பிரதிகளும் வாங்கப்படுகின்றன. நூல் வாங்கிக் கொடுக்கும்பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

இதனால் தரமான நூல்களை வெளியிட்டும், நூலகங்களுக்கு உரிய முறையில் விற்க முடியவில்லையே என்ற வெளியீட்டாளர்களின் மனக்குறையும், தரமிக்க நல்ல-புதிய நூல்களைப் பெற்று படிக்க இயலவில்லையே என்ற வாசகர்களின் ஏக்கப் பெருமூச்சும் இனி ஏற்பட வழியில்லை என்ற புதியநிலை தோன்றியுள்ளது.

இதுவரை மாவட்ட நூலக ஆணைக்குழுச் செயலாளராகப் பணியாற்றி வந்தவர் மாவட்ட கல்வியதிகாரி ஆவார். இதனால் நடைமுறைச் சிக்கல்கள் சில இருந்துவந்தன. நூலகத்துறை தனித்துறையாக்கப்பட்டதன் விளைவாக இக்குறையும் நீக்கப்பட்டுவிட்டது. மாவட்ட அளவில் நூலகப் பணிகளைத் திறம்பட ஆற்ற - நூலகத்துறையில் போதிய பயிற்சியும் அனுபவமுமிக்கவர்களைத் தேர்ந்தெடுத்து மாவட்ட நூலக அலுவலராக நியமிக்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நூல்கள் மட்டுமல்லாது தரமான இலக்கிய-செய்தி இதழ்கள் நூலகங்களில் இடம்பெற வழிவகை காண வேண்டும் என்ற நீண்டகாலக் கோரிக்கையும் புதிய நடவடிக்கைகளால் போக்கப்படவிருக்கிறது. இதற்கான ஆக்க நடவடிக்கைகளைத் துரிதமாகச் செயல்படுத்த வல்லுநர் குழுவொன்று அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு [illegible] மான இந்நட[illegible]ால் தமிழ்நாடு நூலக இயக்கம், புத்துணர்வோடு இயங்கத் தொடங்கியுள்ளது; வாசகர்களிடையே புத்தெழுச்சியைத் தோற்றுவித்துள்ளதெனலாம்.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம்நோக்கி நடக்கின்ற தமிழ்நாடு அரசு, 73-74-ல் தனது மொத்தச் செலவான 473 கோடியில் நூலகத்திற்குச் செலவிடும் தொகை 1.35 கோடியாகும். அதாவது தலைக்கு 0.35 காசுகள் வீதம் செலவிடுகிறது. இத்தொகை ஒரு ரூபாயாக உயரும் நாள் அதிகத்தூரத்தில் இல்லை.

தமிழ்நாடு அரசின் நிதியுதவி பெறும் நூலகங்களில் இடம் பெற்றுள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை 50 இலட்சமாகும். அதாவது தலைக்கு 1-8 நூல்கள் வீதம் இருக்கின்றன. இந்நிலை மாறி 'ஊருக்கு ஒரு நூலகம்-ஆளுக்கு ஒரு நூல்' என்ற முழக்கப்படி மொத்த மக்கள் தொகையான 4.11 கோடிப் பேருக்கும் 4.11 கோடி நூல்கள் நூலகங்களில் இடம்பெற வேண்டும். தமிழ்நாடு அரசின் முற்போக்கான நூலகச் சீரமைப்புத் திட்டங்களால் இந்நிலை ஏற்பட்டாலும் வியப்பதற்கில்லை.

எத்தனையோ சிறப்புமிகு திட்டங்களால் தமிழகம் இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது. அவ்வகையில் நூலகத்துறை வளர்ச்சிக்கான ஆக்கத் திட்டங்களால் அனைத்திந்தியாவுக்கே வழிகாட்டியாய் அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதற்கானசெயல் திட்டங்கள் பல வகுக்கப்பட்டு வருகின்றன.

வீட்டைக் கட்டிக் கூரை போடாவிட்டால் வீடு குடியிருக்க அருகதையற்றுவிடும். வீடும் கெட்டுவிடும். கல்வி எனும் வீட்டுக்கு நூலகத் துறை கூரையாக அமைய வேண்டும். அதற்கேற்ற வகையிலேயே கல்வியமைச்சரின் ஆக்கச் சிந்தனையும் நூலக இயக்குநரின் செயல்திறனும் இணைந்து நின்று, தமிழக நூலக இயக்கத் துறைப் பணிகள் சிறக்கச் செய்து வருகின்றன.




## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

**தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.**

*சிறு சேமிப்புத் தரும் சிரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங்க டிபாசிட் | 5/- | 375/- | . . . |
| | 10/- | 750/- | . . . |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | . . . | 825/- |
| | 10/- | . . . | 1, 650/- |

**சலுகைகள்**

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங்க டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங்க டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை. சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.
2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்பும் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

**இயக்குநர்,**
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.


# கிரேக்க வரலாறும் ஔவையாரும்

பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரையார்



மூவாயிர ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைக் கிரேக்க நாடு பலதனித்தன்மைகளைக் கொண்டிருந்தது. அது ஒரு சின்னஞ் சிறிய நாடு. ஆனால் அதில் உள்ள ஒவ்வொரு நகரமும் ஒரு தனி நாடாக, கிரேக்க நாடு முழுவதிலும் பல சிறு தனி அரசுகள் இருந்தன. ஒவ்வொரு நாட்டரசும் ஒரு நகருடன் அதைச் சுற்றியுள்ள சில சிற்றூர்கள் அடங்கியதாகத் தனித்தனி வாழ்வு வாழ்ந்தது. இந்தச் சிறு சிறு நாட்டரசுகளைக் கிரேக்க வரலாற்றாசிரியர்கள் நகர் - நாடுகள் (City-States) என்று குறிப்பிடுவர்.

நகர்-நாடு என்றால் என்ன, அது எப்படி இருக்கும், எவ்வாறு அமைந்தது என்பதைக் கல்லூரி மாணவர்களுக்கு விளக்கக் கல்லூரிப் பேராசிரியர்கள் அரும்பாடுபடுகின்றனர். ஆம்! வரலாற்றேடுகளின் வாசகர்களுக்கு விளக்கும் வகையில் வரலாற்றேடுகளின் ஆசிரியர்களும் அரும்பாடுபட்டுப் பாரிய விளக்கங்கள் தர வேண்டியிருந்தது.

பண்டைக் கிரேக்க நாட்டு வரலாற்றைப் பல பாரிய தொடர்-பகுதிகளாக விரித்து விளக்கிய ஒரு மேலைப் பேராசிரியர், இந்த நகர்-நாட்டின் அமைப்பை விரித்து விளக்குவதற்கென்றே ஒரு முழு ஏட்டுப் பகுதியைப் பயன்படுத்தினார். வாசகர்கள் அப்பெருவிளக்கத்தின் பின்னும் அதை மனக் கண்முன் கொண்டு வருவது அரிது என்று அவர் கருதினாரோ என்னவோ, ஒரு கவிஞரின் கவிதை மொழியையே மேற்கோளாக எடுத்துக்காட்டி அதன் மூலம் அதை விளக்க விரும்பினார். 'நகர்-நாடு எப்படி அமைகிறது' என்பதை அப் பழங்காலத்திலேயே வாழ்ந்த தமிழ்க் கவிதைப் பிராட்டி ஒருவரின் பாடல் நன்கு உருப்

தமிழ்க் கவிதைப் பிராட்டியின் பெயரை அவர் கூற வில்லை; தமிழ்ப் பாட்டையும் தமிழ் மொழியிலே அவர் தர வில்லை. ஆனால், அப்பாட்டின் மொழிபெயர்ப்பு— அதன் கருத்து தரப்பட்டிருந்தது.

கி.மு. 1000 முதல் கி.மு. 600 வரையுள்ள காலத்திற்குரியது நகர்-நாடு அமைப்பு. அவ்வளவு தொலைப்பழமைக் காலத்திய செய்தியை ஒரு தமிழ்க் கவிஞர், அதுவும் ஒரு பெண் கவிஞர் நேரில் கண்டு பாடினாரா? அந்தக் கவிஞர் யாராயிருக்கக்கூடும்? அவர் கவிதை எது என்று கல்லூரி மாணவனாயிருந்த நிலையில் நான் வியந்து தேடலானேன்!

தமிழ் இலக்கியத்தின் பழமை, பெருமை ஒரு சிறிதும் தெரியப் படாத காலம் — தமிழரசு ஏற்படாத காலம் அது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

தமிழில் பெண் கவிஞர்கள் ஒருவர் இருவரல்லர், நூற்றுக்கணக்கானவர்கள். இந்நிலையில் எதுவும் தேடிக் காண்பது எளிதன்று. மேனாட்டு வரலாற்றாசிரியர்களையே கவர்ந்த ஒரே ஒரு பெண் கவிஞரின் ஒரே ஒரு பாட்டைத் தேடுவது என்பது காவிரியின் கிளையான மணற்போக்கி ஆற்றில்போய், ஒரு குறிப்பிட்ட மணல் பொடியை அடையாளம் கண்டு எடுப்பது போன்றதாகவே இருந்தது.

ஆயினும் அந்தக் கவிதைப் பிராட்டியை, அவர் பாடலை நெடுநாட்களுக்குப் பின் என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. அந்தக் கவிதைப்பிராட்டி அருந்தமிழ் ஔவையாரே! அந்தப்பாட்டு நமக்கு ஔவைப் பிராட்டியின் பாட்டாக வந்தெட்டியுள்ள ஓர் உதிரிப் பாடல் தான்!

'வையகம் எல்லாம் கழனியா
வையகத்துள்
செய்யகமே நாற்றிசையின்
தேயங்கள்; செய்யகத்தின்
வான்கரும்பே தொண்டை
வளநாடு; வான்கரும்பின்
சாறே அந்நாட்டின் தனியூர்கள்
சாறட்ட
கட்டியே கச்சிப் பொருப்பெ
லாம்; கட்டியில்
தானேற்றமான சருக்கரை
மாமணியே
ஆனேற்றான் கச்சி அகம்!

'உலகமே ஒரு வயந்காடு. அதன் பல தேசங்கள் நன்செய் வயல்கள் என்று கூறலாமானால் அந்த நன்செய்யிலும் சிறந்த நன்செய் ஆக விளங்கும் கரும்புத்தோட்டம்தான் தொண்டை நாடு. அத்தோட்டக் கரும்பின் சாறு கொட்டிக் கிடக்கும் தொட்டிகளே தொண்டை நாட்டு ஊர்கள். அந்தச்சாறு காய்ச்சி இறுகிய கற்கண்டுக் கட்டிகள்தாம் காஞ்சி நகரின் பகுதிகள். அந்தக் கட்டிகளின் நடுவேயமைந்த மாமணிக்கட்டிதான் கச்சி ஏகம்பநாதர் கோயில்!'



ஔவையார் என்ற பெயரிலும் நமக்குச் சங்க கால ஔவையார், தேவார காலப் பக்திக் கவிஞரான ஔவையார், அசதிக்கோவை போன்ற காவியங்கள் இயற்றிய ஔவையார், பள்ளிப்பாடமாக நீதி யேடுகள் இயற்றிய ஔவையார், யோகக் குறள் இயற்றிய ஔவையார் என எத்தனையோ ஔவையார்கள் இருந்திருப்பதாக அறிகிறோம். மேற்காட்டப்பட்ட பாடலை இயற்றியவர் இவர்களில் எந்த ஔவையாரோ, அல்லது வேறு இவர்களைக் காட்டிலும் பழமையானதோர் ஔவையோரோ - நாம் அறியோம்!

இந்தப் பாட்டு நமக்குக் கிடைத்துள்ள வகையே ஒரு தனி வகைதான்-அது தமிழின் நீண்ட காலத் தமிழினப் புறக்கணிப்புகளிலிருந்து தப்பிப் பிழைத்து நமக்கு வந்தெட்டியுள்ள பாடல்கள் பலவற்றுள் ஒன்றேயாகும். ஏனெனில் இது நமக்குக் கிடைத்துள்ள எந்த முழுக் காவியத்திலும் இடம் பெற்றதன்று. இலக்கண உரையாசிரியர்கள் பஃறொடை வெண்பாவுக்கு எடுத்துக்காட்டாகத் தந்து, அந்த முறையில் வாய்வழி மரபு அழியாமல் நிலவித் தனிப்பாடல் திரட்டுகளில் இடம் பெற்றுவிட்ட ஓர் அருந்தைப்பாட்டேயாகும்,இது!

பாட்டின் பேரழகுதான் அதை இந்த அளவு செத்து ஒழிந்து விடாமல் காப்பாற்றியுள்ளது என்னல் வேண்டும்! உரையாசிரியர்கள் காலம்வரை கூடச் சாகாமலிருந்த ஏதோ ஒரு பாடலேட்டிலிருந்துதான் அவ்வுரையாசிரியர்கள் அதைத் தற்செயலாக ஒரு யாப்பு வகைக்குச் சான்றாக எடுத்துக் காட்டியிருக்க வேண்டும் என்னலாம்!

பாட்டின் அழகைவிட, தொண்டை நாட்டுக்கும் காஞ்சி நகருக்கும் அந்நகரின் ஏகம்பநாதர் கோயிலுக்கும் அது தரும் பெருமையைவிட அதன் பொருள் பெரிது, மாப்பெரிது என்பதில் ஐயமில்லை. ஏனெனில், வேறு எந்தத் தமிழ்ப் பாடலுக்கும் கிடைக்காத முறையில், தொலைதூர மேலையுலகில் வரலாற்றாசிரியர்களே கவரக்கூடிய அரும் பொருள், வரலாற்றுப் பொருள், அதில் அடங்கியிருக்கிறது என்று அறிகிறோம்.

இந்தப் பாட்டு இரேக்க வரலாற்றாசிரியர்களின் கண்களில் பட்டிராவிட்டால், இந்தப் பாட்டின் முழுப்பொருள் — தமிழக வரலாற்றுப் பழமைக்கும் இந்தப் பாட்டுக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பு—நமக்கு விளங்குவதற்கு வழியே ஏற்பட்டிராது. ஏனெனில், இப்பாட்டு நமக்கு உண்மையில் சங்க காலத்துக்கு மிகவும் முற்பட்ட, மூவரசர் பழமைக்கும் முற்பட்ட ஒரு தொல்பழங்காலத் தமிழகத்தை, தொல்பழங்காலத் தொண்டை நாட்டை, தொல்பழங்காலக் காஞ்சிபுரத்தை, ஒரு தொல்பழங்கால ஏகம்பநாதர் கோயிலைப் படம் பிடித்துக் காட்டுவதற்கமைந்த ஒரு பலகணிபோல் விளங்குகிறது.

தமிழகம் அவ்வளவு பழமையானதா?

தொண்டைநாடு அவ்வளவு தொல்பழமை வாய்ந்ததா?

காஞ்சிநகரம் அவ்வளவு தொல்பழமை வாய்ந்ததா?

ஆம்! தமிழர் இன்னும் கனவுகூடக் காணாத அளவு பழங்காலத்திலேயே பழமை வாய்ந்துவிட்ட நாகரிகம்தான் தமிழ் நாகரிகம்!

சங்க காலத்தில் மூவரசர் தமிழகம் ஆண்டனர். ஆனால் தமிழக முழுவதையுமே மூவரசர் முற்றிலும் ஆண்டனர் என்று கூற முடியாது. அவர்களுக்கு அடங்கியும் அடங்காமலும், அவர்களுடன் நட்பாடியும் பகைத்தும் ஏழு அல்லது ஏழுக்கு மேற்பட்ட மிகப் பல முடிசூடாமன்னர்கள், வேள்புலமாண்ட வேளிர்கள் வாழ்ந்தனர் என்பதையும்; மக்கள் உள்ளத்திலும் கவியரசர் பாடல்களிலும் இவ்வேளிர்கள் மூவரசருடன் போட்டியிட்டு ஆட்சி செலுத்தினர் என்பதையும்; மூவேந்தர் அவர்கள் உதவியை, மண உறவை மிகவும் மதித்துப் போற்றி அவை பெறத் தலங்கிடந்தனர் என்பதையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

அணிமைக் காலத் திருவாங்கூர் அரசர், புதுக்கோட்டை அரசர், கன்னட தெலுங்கு நாடுகளை ஆண்ட சாளுக்கிய கங்க அரசர்கள் ஆகியோர் இந்த வேளிர்கள் மரபு வழி வந்தவர்களேயாவர்.

வேளிர்கள் மூவரசர் நாடுகளின் எல்லைகளிலெல்லாம் இருந்தாலும், அவர்கள் மிகவுமாக வாழ்ந்த பகுதிகள் தெலுங்கு, கன்னடப் பகுதிகளும் அவற்றை அளாவிய தமிழகப் பகுதிகளான கொங்கு நாடும் (கோயமுத்தூர், சேலம் பகுதிகளும்) தொண்டை நாடுமே (சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய பகுதிகளுமே) யாகும்.

பல்லவப் பேரரசர், ஆந்திரப் பேரரசர்கள்கூடத் தொடக்கத்தில் வேளிர்களாக இருந்தவர்களே!

[illegible] மூவரசர்கள்கூட [illegible] பல் [illegible], [illegible] பேரர [illegible]





தில் வேளிர்களுடன் வேளிர்களாயிருந்து, புதிதாக நிலைப் படைகள் அமைப்பதன்மூலம் மற்ற வேளிர்களை வென்று, கோல்வலியாலும், வாள்வலியாலும் பெரும்புலம் ஆள முற்பட்டவர்களேயாவர்.

இரேக்கப் பேரரசர் அலக்சாந்தர், ரோமப் பேரரசர் சீசர் ஆகியோரும் உலகெங்கணும் உள்ள எல்லா அரசர், பேரரசர்களும் உண்மையில் மனித நாகரிகத் தொடக்கத்தில் இருந்த வேளிரின் மரபில் வந்த, அல்லது அம்மரபு அழித்து, அதை மறக்கடித்து வளர்ந்து வந்தவர்களேயாவர்.

உலகில் குடியரசுகளெல்லாம் பிந்தியவை, அணிமைக் காலத்தவை; முடியரசுகள் தாம் முந்தியவை, முற்காலத்தவை என்று தமிழரும் சரி, உலக மக்களும் சரி பொதுவாக நம்பி வருகின்றனர். இது உண்மையன்று என்பதனைக் இரேக்க, ரோம வரலாறுகளும் தமிழக, வட இந்திய வரலாறுகளும் காட்டும்..

முடியரசு உலகில் ஏற்படுவதற்கு முற்பட்ட அரசுகள் வேள்புல அரசுகளே; இவை உண்மையில் பழமை வாய்ந்த குடியரசுகளேயாகும். சில இடங்களில், காலங்களில், வேள்புல அரசுகள் பிற வேள்புல அரசுகளை வென்றடக்கி, முடியரசுகளாக, பேரரசுகளாக வளர்ந்தன. ஆனால், வேறு சில இடங்களிலும், காலங்களிலும் இந்த வேள்புல அரசுகள் குடியரசுப் பண்பிலேயே மேன்மேலும் வளர்ந்து பொதுவரசுகள் (Common Wealthy) மன்னரசுகள் (Corporations) என வளர்ச்சியுற்றன.

இந்தியாவில் கி.பி. மூன்றும் நூற்றாண்டில் புகழ் பெற்றிருந்த வைசாலி, ஐரோப்பாவில் 14-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வெனிஸ் ஆகியவை இத்தகைய வாணிக மன்னரசுகளே (Commercial Corporations) வட இந்தியாவில் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் புகழாட்சி செய்திருந்த புத்தர் பிறந்த சாக்கியர் நாடும், தமிழகத்தில் சங்க காலத்தில் பல்லவர்களின் முன்னோகப் பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படையினால் பாடப்பட்ட இளந்திரையனால் ஆளப்பட்டு வந்த காஞ்சி நகரமும் வேள்புல மன்னர் தலைமையிலேயே இயங்கி வந்து பொதுவரசுகளாகவும் அதே சமயம் வாணிக மன்னரசுகளாகவும் நிலவிய தன்னரசுகளேயாகும்.

இந்தியாவிலே, தமிழகத்திலே கூட, வேறெங்கும் காண முடியாத தமிழ் நாகரிகப் பழமை, மனித இன நாகரிகப் பழமையின் சின்னங்களை, சங்க இலக்கியப் பழமையினும் முற்பட்ட, ஒருவேளை தொல்காப்பியர், திருவள்ளுவர் காலங்களுக்குரிய அல்லது அவற்றினும் முந்திய தமிழினப் பழமைகளை நாம் காஞ்சிபுரச் சுற்றுச் சார்புகளில் இன்றும் காணலாம். வருங்காலப் பழமை ஆய்வுகள், புதைவாய்வுகள் இவற்றை மேன்மேலும் தெளிவுபடுத்த வேண்டும்.

ஆனால், இத்தகைய ஆய்வுகளுக்கெல்லாம் ஒருமுனைமுக வழிகாட்டியாய், மேலே காட்டப்பட்ட அருந்தமிழ் ஔவைப் பிராட்டியார் பாடலும், அவற்றின்மீது இரேக்க வரலாற்றாசிரியரின் கண்ணோட்டமும் அமைகின்றன என்னலாம்!

## மணக்கும் மல்லிகை எண்ணெய்!

மல்லிகைப் பூவிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காக ஒரு முன்னோடி ஆலையைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைத்திருக்கிறது. ரூ. 30 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது இது.

சிறந்த வாசனைப் பொருள்களை உருவாக்குவதற்கு மல்லிகை எண்ணெய்யைப் பயன்படுத்தலாம். பிரான்சு போன்ற சில நாடுகள் இதனைப் பயன்படுத்துகின்றன. முல்லை, பாரிமுல்லை, சாதிமல்லி ஆகியவற்றிலிருந்து எண்ணெய்யை எடுக்க முடியும் என்று கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆய்வின்மூலம் கண்டிருக்கிறது.

## வாசகர் மலிந்த நாடு



உலகில் இப்போது கிட்டத்தட்ட 30 கோடி டெலிவிஷன் செட்டுகளும், 70 கோடி ரேடியோ செட்டுகளும் உள்ளன. உலகில் இப்போதுள்ள நாளிதழ்களின் எண்ணிக்கை 7700. நாள்தோறும் 1500க்கும் அதிகமான பல்வேறு புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன.

உலகிலேயே வாசகர்கள் மலிந்த நாடு எனப் புகழப்படுவது சோவியத் நாடுதான்.

1917-ஆம் ஆண்டுமுதல், கிட்டத்தட்ட 25 இலட்சம் புத்தகங்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

1970-ஆம் ஆண்டில் மட்டும் 80 ஆயிரம் புத்தகங்களும், வெளியீடுகளும் வெளியாகியுள்ளன. மொத்தம் 131 கோடி பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன. உலகில் வெளியாகும் புத்தகங்களில் நான்கில் ஒரு பங்கு சோவியத் நாட்டில் வெளியிடப்படுவனவாகும். மொழி பெயர்ப்பு நூல்களின், புத்தகங்களின் எண்ணிக்கையில் சோவியத் நாடு உலகில் முன்னணியில் இருக்கிறது என்பது யுனெஸ்கோ தரும் புள்ளி விவரமாகும்.



# புரசையில் ஒரு புதுக் குடியிருப்பு

சென்னை மாநகரில் குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் வெகு வேகமாகக் குடிசைகள் அகற்றப்பட்டு மாடிக் கட்டடங்கள் எழும்பி வருவதைக் கண்ணுற்ற மற்ற மாநில அமைச்சர்கள் மட்டுமல்லாது —வெளிநாட்டைச் சார்ந்த பலரும் பாராட்டி வருகின்றனர்.

சமுதாயப் பணியில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டுள்ள வாரியத்தின் சாதனைகளில் ஒன்றுதான் இந்த இராதாகிருஷ்ணபுரம் குடியிருப்புப் பகுதியாகும். முன்னாள் மேயர் இராதாகிருஷ்ண பிள்ளையின் பெயரில் இராதாகிருஷ்ணபுரம் என்று அழைக்கப்படும் இந்தப் பகுதி கண்ணம்புக் காளவாய் சேரி என்று முன்னர் அழைக்கப்பட்டு வந்தது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த குடிசைகள் நாளடைவில் 200-க்கு மேற்பட்ட குடிசைகள் கொண்ட பகுதியாக மாறியது.

1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 168 குடியிருப்புகள் கொண்ட மாடிக் கட்டடங்களை உருவாக்குகின்ற பணி துவங்கப் பெற்றது. அப்பகுதியில் ஏற்கனவே வசித்து வந்த குடிசை வாழ் மக்களுக்குத் தற்காலிகக் குடிசைகள் அமைத்திட ஒவ்வொரு குடும்பத்திற்கு ரூ. 50 உதவித் தொகை வழங்கப்பட்டது. தற்காலிகக் குடியிருப்புப் பகுதியில் தீப்பற்று ஏற்பட்டு குடிசைகள் பாழாகி விட்டன. எனவே அவர்களுக்குப் பாதுகாப்பான இருப்பிடம் அமைக்கத் தருகின்ற வகையில் ஏ.சி. சிமெண்ட் ஷீட்டுகள் கொண்ட வீடுகள் அமைக்கக் குடிசை மாற்று வாரியம் உதவியது.

தற்பொழுதுள்ள 168 குடியிருப்புகள் சுமார் பதினைந்து மனை நிலத்தில் கட்டப்பட்டதாகும். இவ்வளவு பல மாடிக் கட்டடங்கள் கட்ட வாரியத்தின் செலவு ரூ. 16 இலட்சங்களாகும். இப் பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள் பல. எந்நேரமும் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்பிலும் தனித் தனி மீட்டர் வசதியுடன் மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. பாதை நெடுகிலும் நிழல் தரும் மரங்கள் வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப் பகுதி வாழ் மக்கள் சிறு தொழில் நடத்திடவும், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தொழில் உதவி புரிந்திடவும், இப் பகுதியிலுள்ள அனைவரும் பயன் பெறுகின்ற வகையில் சிறு தொழிற்கூடம் ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

இப் பகுதியில் அமைந்துள்ள ஒவ்வொரு குடியிருப்பையும் கட்டத் திட்டமிடப்பட்ட செலவு ரூ. 8,000 ஆகும். ஆனால் திட்டமிடப்பட்ட தொகையை விட அதிகச் செலவில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகையைக் கணக்கிட்டால் ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ. 90 வரை வாடகையாக வசூலிக்க வேண்டும். குடிசை மாற்று வாரியம் ரூ. 15 தான் வசூலிக்கிறது. குடிசை வாழ் மக்களின் மன நிலையையும், சூழ்நிலைகளையும் அறிந்து அதனால் ஏற்படுகின்ற இழப்பை அரசு ஏற்றுக் கொள்கின்றது.



குடிசை வாழ் மக்கள் தலைமுறை தலைமுறையாய்த் தங்களது வாழ்வின் பெரும்பகுதியைக் கழித்து விட்டனர். அவர்கள் தங்களுடைய பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொண்டு வாழ்க்கையைப் பயனுள்ள விதத்தில் கிடைக்கும் வசதிகளை முறையோடு பயன்படுத்திவாழ்ந்திட முயலவேண்டும்.

குடிசை வாழ் மக்கள் அறியாமையிலிருந்து அகன்று, சீரிய வாழ்க்கையை நடத்திட வழிகாட்டும் வகையில் சமூக நல அமைப்புக்களின் உதவியுடன் நல்வாழ்வுப் பேரவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நல்வாழ்வுப் பேரவை குடிசை வாழ் மக்களின் நலங்கருதி பல நல்ல பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. குடியிருப்புக்களைப் பராமரிக்கப் போதித்தல், மகளிர் சங்கம் அமைத்தல், சமூக சுகாதார சேவை செய்தல், சத்துணவு பற்றி அறிவுரை வழங்குதல், சுகாதாரக் கல்வி, குடும்பநலத் திட்டம், கலாச்சாரத் திட்டம், முதியோர் கல்வி, இரவுப் பள்ளி நடத்துதல், சிறு சேமிப்புத் திட்டம் என்பன போன்ற பல நல்ல பணிகளை நடத்தி வருகின்றன. இப் புனிதப் பணிகளைப் பேரவையின் நிருவாக அதிகாரி, மருத்துவ அதிகாரி, செவிலியர்கள், நல அதிகாரிகள் ஆகியோர் நிறைவேற்றி வருவது பாராட்டத்தக்கதாகும்.

தமிழக அரசின் திரைப்படப் பிரிவின் உதவியோடு குடியிருப்புப் பகுதியை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தையும், சுகாதாரத்தின் முக்கியத்துவத்தையும், குடும்பநலத் திட்டத்தின் சேமிப்புத் திட்டம் போன்ற அரசின் பல்வேறு சமுதாய சமதர்மத் திட்டங்களை விரிவாக விளக்கிக் காட்டும் திரைப் படங்கள் காட்டப்படுகின்றன. இது போன்று பல்வேறு வசதிகளையும் பணிகளையும் குடிசை மாற்று வாரியம் நல்வாழ்வுப் பேரவையின் ஒத்துழைப்புடன் நடத்தி வருகின்றது.

சென்னை மாநகரில் 14 இடங்களில் புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை பணியாற்றி வருகின்றது. இப் பேரவையின் தலைவரான திரு. மெக்கன்சி அவர்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுப்பதாக வெளிநாடுகளில் இருந்து ஆண்டுதோறும் ரூ. 6 இலட்சம் வரை வரவழைத்து உதவி வருகிறார் என்பதை அனைவரும் பாராட்ட வேண்டும்.



குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகளில் ஒன்றிவிட்ட டாக்டர் ராஜரத்தினம் அவர்கள், லூதரன் உலக நிறுவனத்தின் தலைமை அலுவலகமான ஜெனிவாவிற்குச் சென்று ஐந்து ஊர்திகள் வாங்குவதற்காக ரூ. 3,47,922-ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குத் தந்தார்கள். இந்த ஐந்து ஊர்திகளிலும் மருத்துவச்சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவைகளில் நான்கு ஊர்திகள் மாநகராட்சியின் மேற்பார்வையிலும் ஒன்று புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவையின் மேற்பார்வையிலும் பணியாற்றி வருகின்றன. இந்த நடமாடும் மருந்தகங்கள் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று அப் பகுதியில் வாழும் நோயுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் அளித்து வருகின்றன.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் ரூ. 25.65 கோடி செலவில் 98 திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஏறத்தாழ ரூ. 18 கோடி செலவில் 18,000 குடியிருப்புக்கள் இதுவரை கட்டப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, கடலூர் ஆகிய மாவட்டத் தலைநகர்களில் வாழ்கின்ற குடிசை வாழ் பெருமக்களின் நல்வாழ்வை எண்ணி புதுக்குடியிருப்புக்களைக் கட்டி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் சென்னை புரசைவாக்கத்தில் குடிசை மாற்று வாரியத்தால் உருவாக்கப்பெற்ற "இராதாகிருஷ்ண நகரின் துவக்க விழா" 22-10-74-ல் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் க. ராசாராம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குடியிருப்புக்களைத் திறந்து வைத்தார்கள். மாநகராட்சிக்கென வழங்கப்பெற்ற நடமாடும் நான்கு மருத்துவ ஊர்திகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல் மற்றும் ஏராளமான அலுவலர்கள், பொது மக்கள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார்கள்.

—அ. ம.

# சுருக்கெழுத்து

"புனிதா"

அறிவு வளர வளர உலகத்தில் மக்களுக்குத்தேவை மிகுதியும் அத்தேவையைச் சுருங்கிய உழைப்பில் பெற வேண்டும் என்ற எண்ணமும் இயல்பாக உண்டாகின்ற நிலையை இன்று கண்கூடாகக் கண்டு வருகிறோம். ஆதியிலே மனிதன் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போவதற்கு நடந்தே செல்ல வேண்டியிருந்தது. அந்நிலை மாறி விநாடிக் கணக்குகளில் விமானத்திலே பறந்து செல்லுகிற அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறான். எவ்வளவுக்கெவ்வளவு மனிதன் தன் சுருங்கிய உழைப்பைக்கொண்டு விரிந்த பலனையடைவதற்கு எத்தகு துறைகளிலெல்லாம் செலுத்தலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிற காலமிது. அத்தகு துறைகளிலே சுருக்கெழுத்து முறையும் ஒன்று.

சுருக்கெழுத்து என்று தமிழில் கூறுவதை ஆங்கிலத்தில் (Short-Hand) என்று கூறுவர். இம் முறையை ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் 'தோமஸ் கர்னி' என்பவர் மாஸன் முறை என்னும் சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்து ஆங்கிலேய அரசின் கீழ் சுருக்கெழுத்தாளராக வேலை பார்த்து வந்தார். பிறகு சாமுவேல் டாய்லர் என்பவர் ஒரு சுருக்கெழுத்து முறையைக் கண்டு பிடித்தார். 1789-ல் வில்லியம் மேயர் என்பவர் ஒரு புதிய சுருக்கெழுத்து முறையைக் கொண்டு வந்தார்; அம்முறை அவ்வளவாக வெற்றி பெறுமையால் 1823-ல் வில்லியம் ஹார்டிங் என்பவர் டாய்லர் சுருக்கெழுத்து முறையைத் திருத்தி யமைத்து உபயோகத்தில் கொண்டு வந்தார். இதன் பின்னால் தான் இன்று உலகத்தில் சுருக்கெழுத்து முறையில் முன் வரிசையில் இடம் பெறக் கூடிய 'பிட்மென் முறை' ஸர் ஐஸக் பிட்மென் என்பவரால் ஆங்கில மொழியில் தெளிவாகவும் எளிதான முறையிலும் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இம்முறை இன்று உலகமெங்கும் புகழ் பெற்று விளங்குகிறது. மேலும் பிற மொழிகளிலுமுள்ள சுருக்கெழுத்து முறைகளும் பிட்மென் சுருக்கெழுத்து முறையிலிருந்து தான் எடுத்துக் கையாளப்பட்டு வருகிறது.

ஆங்கில மொழியில் பிட்மென் முறை, கிரெக் முறை என்று சில முறைகளும், தமிழ் மொழியில் ஸ்ரீநிவாசராவ் முறை, சுப்பிரமணியம் முறை, சுப்பிரமணிய அய்யர் முறை, ரோக்கின்ஸ் முறை என்றும் பல முறைகளில் சுருக்கெழுத்து முறைகள் உபயோகத்தில் இருந்து வருகின்றன.

சுருக்கெழுத்து என்பது ஒரு கலை யென்றே கூற வேண்டும். இன்றைய நாட்களில் சுருக்கெழுத்து முறை ஆங்கில மொழியில் மட்டுமின்றி தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி போன்ற பல மொழிகளிலும் கையாளப்பட்டு வருகிறது. ஆனால் ஆங்கிலத்தைப் போன்று வெகு விரைவில் எழுதக் கூடிய சுருக்கெழுத்து முறை வேறு ஒரு மொழியிலும் இல்லை என்று சொல்லலாம். தமிழ் சுருக்கெழுத்து முறை அவ்வளவாக முன்னேறவில்லை. இது போன்ற மற்ற மொழிகளும் அங்ஙனமேயிருந்து வருகிறது. இருப்பினும் தற்காலத்தில் சில மொழிகளிலுள்ள சுருக்கெழுத்து, சீர்திருத்தப்பட்டு மேம்பாடு அடைந்து வருகிறது. சுருக்கெழுத்தினுடைய அவசியம் தற்காலத்தில் இயந்திரத்தின் மூலம் பதிவு செய்வது போல நோட்டுப் புத்தகங்களிலே அப்படியே மனிதனுடைய எண்ண வலிமையாலும் கையின் துணையாலும் பதிவு செய்யப்படுகிறது என்று கூடச் சொல்லலாம்.

பேரறிஞர்களின் கருத்துக் குவியல்கள் பேச்சுக்கள் வாயிலாக வெளி வரும் போது அவை அனைத்து நாட்டு மக்களுக்குப் பயன்படும் அளவில் புத்தக வடிவிலே ஆக்கித் தரப்பட்டு அது எக்காலத்தில் வாழ்பவருக்கும் நிலையான பயனுள்ளதாக ஆக்கப்படுகிறது என்றால் அது சுருக்கெழுத்து முறையின் உன்னத உபயோகத்தை எடுத்துக் காட்டுகிறது.



சுருக்கெழுத்தினுடைய உபயோகம் அரசாங்கத்திற்கு மட்டுமின்றிப் பாரெங்கும் உள்ள செய்திகளை ஊரெங்கும் பரப்பும் பத்திரிகைகள், வியாபார நிறுவனங்கள் போன்ற பிற நிறுவனங்களுக்கும் தேவைப்படுகிறது. அரசாங்கத்தில் நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றுமுள்ள மன்றங்களின் கூட்டங்கள், நடவடிக்கைகள் அனைத்தையும் ஓர் எழுத்துக் கூடத் தவறாமல் அப்படியே பதிவு செய்வதற்குச் சுருக்கெழுத்து முறை பயன்படுகிறது. மேலும், நீதிமன்றங்களில், கட்சிக்காரர்களின் வாக்குமூலங்களையும் வழக்கறிஞர்களின் வாதங்களையும் நீதிபதிகளின் தீர்ப்புக்களையும் பதிவு செய்வதற்கும் வணிக நிறுவனங்களில் நீண்ட கடிதங்களைக் குறுகிய காலத்தில் எழுதுவதற்கும் நிறுவன சம்பந்தமான கூட்டங்களின் நடவடிக்கைகளைப் பதிவு செய்வதற்கும் பத்திரிகைகளில் தலைவர்களுடைய பேச்சுக்களை வெளியிட்டு வருவதற்கும் சுருக்கெழுத்து முறை உதவுகிறது. பல மொழிகள் பேசக் கூடிய நாடாளுமன்றம், சட்டமன்றம் முதலியவற்றில் பல மொழிகளிலும் உள்ள கைதேர்ந்த சுருக்கெழுத்தாளர்கள் இருப்பார்கள். இவர்கள் அவைகளில் பேசக் கூடிய பேச்சுக்களை—மொழியினை அனுசரித்து அந்தந்த மொழிச் சுருக்கெழுத்தாளர்கள் எழுதிக் கொள்வார்கள். பின்னால் அவற்றை ஒழுங்காக எழுதி, விரித்து எழுதி ஒன்று சேர்த்துக் கோவைப்படுத்திச் சபை நடவடிக்கைகள் எல்லாம் ஒழுங்காக எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சுருங்கக் கூறினால் மொழிகளின் வளர்ச்சிக்கும் அரசியல் அறிவின் வளர்ச்சிக்கும் இன்று சுருக்கெழுத்து முறையின் தொண்டு பயன்படுகிறது என்று கூறலாம். இவ்விதமாக, பல விதங்களிலும் பயன்படுகிற சுருக்கெழுத்து முறையை ஒரு கலையைப் போன்று பயில வேண்டும். சுருக்கெழுத்துக் கல்வி முறை பயிலுவதற்கு, 'இளமையில் கல்' என்றபடி சிறு வயதிலேயே முற்பட வேண்டும். காரணம், சுருக்கெழுத்தை வேகமாக எழுதுவதற்கு நரம்புகள் தளர்ச்சி குன்றாமல் இருக்க வேண்டும். முதிய வயதில் சுருக்கெழுத்து முறை கற்றுக் கொள்ள இயலாமல் போகும்.

கலையறிவு தன்னுடைய அறிவுக்கேற்றபடி உயர்வு அடைகிறமாதிரி சுருக்கெழுத்து முறையும் ஒருவருடைய அறிவுக்குத் தக்கபடி உயர்வு பெறும். சுருக்கெழுத்து எழுதுவதிலேயே தனி அக்கறை இருக்க வேண்டும். சுருக்கெழுத்து எழுதும்போது மூன்று உறுப்புகள் ஒரே சமயத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. காதால் கேட்டு, கண்ணால் பார்த்து, கை கொண்டு எழுத வேண்டியிருக்கிறது. ஆகவே சுருக்கெழுத்துப் பயிலுவதற்குக் காது, கண், கை இம் மூன்றும் மிகவும் இன்றியமையாத உறுப்புகள் என்று அறியலாம். சுருக்கெழுத்தினுடைய தத்துவம் நாம் கேட்கக்கூடிய ஒலிக்குத்தான் சுருக்கெழுத்தில் குறியிட வேண்டுமே தவிர எழுத்திற்குக் குறியிடுவதில்லை. ஆகவே சுருக்கெழுத்தில் எழுதும்போது மிகவும் அக்கறையுடன் சப்தத்தைக் கேட்டுக் கொண்டே எழுத வேண்டும். இச் சுருக்கெழுத்துக் குறிகளை, மெல்லியதும், வன்மையானதுமான கோடுகளாகவும் புள்ளிகளாகவும் சிறிய, பெரிய வட்டங்களாகவும் எழுதவேண்டும். மிக முக்கியமாக ஒரு பென்சில் புள்ளி கூட கூடுதலாகப் பதிந்துவிடாமல் இருக்க வேண்டும். மிக முக்கியமான வார்த்தைச் சந்திப்புகளில் அவசியமில்லாமல் ஒரு புள்ளி விழுந்துவிட்டால் சில விபரீதமான அர்த்தங்களைக் கொடுத்துவிடும்.

அதனால் சுருக்கெழுத்தாளர்கள், எழுதி வைத்திருக்கும் சுருக்கெழுத்து ஆவணங்களை மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். சுருக்கெழுத்து, பென்சில் பெரும்பாலும் கொண்டே எழுதப்பட்டு வருகிறது. பேனாக் கொண்டும் எழுதலாம். சுருக்கெழுத்துப் பயிலுவதில் தனி ஆர்வம் இருந்தால் தான் சுருக்கெழுத்து முறையை விரைவில் கற்றுக் கொள்ள முடியும். சுருக்கெழுத்தை அடிக்கடி எழுதிக் கொண்டிருந்தால் தான் அதை வேகமாக எழுத முடியும். தொடர்பற்று இருந்தால் விரைவாக எழுத முடியாது.

சுருக்கெழுத்தினுடைய விரைவைக் குறிப்பிடுவது 'ஒரு நிமிடத்திற்கு இத்தனை வார்த்தைகள் எழுத வேண்டும்' என்கிற முறையிலாகும். சாதாரணமாக ஒரு நிமிடத்திற்கு 100 வார்த்தைகள் வேகம், 150 வார்த்தைகள் வேகம் படிப்படி என்கிற முறையில் படிப்படியாகத் தேர்வுகள் நடைபெறுகின்றன. இன்று ஆங்கிலத்தில் ஒரு நிமிடத்திற்கு 300 வார்த்தைகள் வரை எழுதக் கூடியவர்களும் இருக்கின்றனர். பெரும்பாலும் சுருக்கெழுத்துப் பயிலுபவர்கள் 'தட்டச்சுக் கலையையும் (Typewriting) பயின்று இருப்பார்கள். காரணம் சுருக்கெழுத்தில் எழுதியதை விரிவுபடுத்தித் தட்டச்சு செய்து உபயோகப்படுத்துவது வழக்கம். ஆகவே சுருக்கெழுத்து, தட்டச்சு இவைகளை இரட்டைக் கலை (Twin Arts) என்று கூறலாம்.

இந்தியாவின் பல மொழிகளிலும் கைதேர்ந்த சுருக்கெழுத்தாளர்கள் அரசு அலுவலகங்களிலும் வணிக நிறுவனங்களிலும் வேலை பார்த்து வருகிறார்கள். பெண் சுருக்கெழுத்தாளர்களும் நம் நாட்டில் நிறைய இருக்கின்றனர். வெளி நாடுகளில் தேர்ச்சி பெற்ற சுருக்கெழுத்தாளர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது.

சுருக்கெழுத்து முறையைப் பயின்றவர்கள் வாழ்க்கையிலும் சுருசுறுப்பையடைவார்கள் என்று கூடச் சொல்லலாம். குறிப்பாக நமது நாட்டிலுள்ள இளம் பெண்கள் சுருக்கெழுத்து முறையைப் பயில முன் வர வேண்டும். ஒவ்வொரு மொழியிலும் சுருக்கெழுத்துக் கலை, மேம்பாடு அடைந்து வந்தால் அதற்கேற்றவாறு அந்தந்த மொழியும் மேம்பாடு அடையும். நம் நாட்டில் சுருக்கெழுத்துக் கலையை வளர்ச்சி பெறச் செய்வது மிகவும் அவசியம்!



# நம்பிக்கைப் பேரொளி



வட்டிக்குக் கடன்கொடுக்கும் அன்பா னந்தர்
வசதியாக வாழ்ந்திருந்தார்; கடைவீ திக்குள்
கட்டடங்கள், நிலபுலன்கள், கொடுக்கல் வாங்கல்,
கண்நிறைந்த மனைவி-ஆனால் பிள்ளை இல்லை!
அட்டியின்றிப் பணந்தருவார் யார்கேட் டாலும்;
அரைவட்டி; ஏட்டில்தான்! ஈட்டின் பேரில்!
குட்டிபோடும் வட்டிபற்றிக் குறைசொன் னாலும்,
கூட்டமாக வந்துசெல்வோர் குறைவ தில்லை!

அளகேசன் பெயரில்தான் குபேரன், ஆனால்
அலுவலகம் ஒன்றில்அவன் சேவ கன்தான்!
அளவறிந்து வாழாதான்; பிள்ளைச் செல்வம்
ஐந்துடனே வயிற்றிலொன்றும், ஆறு மாதம்!
உளம்நிறைய வாரிவாரி அரசு தந்தும்
உறுபயனோ ஒன்றுமில்லை; வறுமை என்றும்!
இளகியநல் (!) மனமுடைய அன்பா னந்தர்
எப்போதும் உதவிடுவார்; கடனு கத்தான்!

ஒருமாதம் நோயாகிப் படுக்கை யோடே
ஓய்ந்துபோனான்; காய்ந்துபோனார் வீட்டா ரெல்லாம்!
வருமானம் ஒருகாசும் சேமிப் பில்லை;
வரவுக்குள் செலவுகாண வழியு மில்லை!
அரும்மானம் போகுமாறு திட்டி விட்டார்
ஆறுரூபாய் பாக்கிக்கே அன்பா னந்தர்!
தெருவாரோ ஊராரோ திரும்பிப் பார்த்துச்
செய்வாரோ உதவிகளை இந்த நாளில்?



வருந்துகிறேன் அளகேசன் முடிவைச் சொல்ல;
வாழ்வுதனை முடித்துவிட்டான் ஒருநாள் காலை!
இருந்தபோது கவனியாத அன்பா னந்தர்
இறுதியாகக் கடன்ஆற்ற உதவு தற்கே
விரைந்தோடி முன்வந்தார்; என்ன விந்தை?
வெளிவந்த அரசாணைக் குடும்ப நன்மைப்
பெருந்திட்டம் அலுவலிலே மாண்டோர் மக்கள்
பெறும்பதினா யிரரூபாய் செய்த வேலை!

''சரி!இவன்தான் அரசலுவல் புரிந்தான்! ஆனால்
சகாதேவன் விவசாயி, அவனுக் கென்ன
புரியுமிந்த அரசு?"என்று புரியா வண்ணம்
பொன்னப்பன் அங்கேயே கேட்டு விட்டான்!
"அரியதொரு சமுதாயப் பாது காப்பாய்
அறிவித்து நேருபிரான் பிறந்த நாளில்
உரியதிட்டம் தொடங்கிவிட்டார் முதல்வர்!" என்றே
உரைத்திட்டேன்; ஆர்வமுடன் விவரம் கேட்டார்.

"சகாதேவன் இருபத்தைந் தாண்டு கட்குச்
சரியாகப் பத்துரூபாய் மாதா மாதம்
புகாரின்றிச் செலுத்திவந்தால்...அதற்குப் பின்னர்
பொலிவுடனே முப்பதாண்டுக் காலத் துக்கு
மிகாவண்ணம் நூறுரூபாய் சம்ப ளம்போல்
வீடுதேடி வந்துவிடும் திங்கள் தோறும்!
சுகாதாயம் ஐயாயி ரத்தைந் நூறு
சுளையாகக் கிடைக்கும்!" என்று சிறப்பைச் சொன்னேன்!

**கவிஞர் கருணானந்தம்**

# சங்ககாலத் தொல் கல்வெட்டு

ரா. நாகசாமி



தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அண்மையில் திருச்சி மாவட்டம் கரூருக்கு அருகில் உள்ள புகளூருக்குச் சென்றிருந்தார். அவர்களது பல்வேறு பணிகளுக்கிடையில் அறுநாட்டார் மலையில் உள்ள சங்க காலக் கல்வெட்டை மலைமீது ஏறிச் சென்று கண்டார். அக்கல்வெட்டில் உள்ள வரலாற்றுச் செய்திகள் மக்களிடையே இன்னும் சிறப்பாக பரவவேண்டும் என்று விரும்பி அவைகளை இவ்விதழில் அச்சிட வேண்டும் என்று பணித்தார். தமிழக வரலாற்றில், கலையில் அவர்களுக்கு அவ்வளவு ஈடுபாடு. இக்கட்டுரை அவர்கள் விருப்பத்திற்கிணங்க அச்சிடப்பட்டு உள்ளது.

திருச்சி மாவட்டம் கரூரிலிருந்து பத்துக் கல் தொலைவில் உள்ள புகளூரில் 'ஆறுநாட்டார் மலை' என்ற மலை ஒன்று உண்டு. மலை அடிவாரத்தில் உள்ள ஊரை 'வேலாயுதம் பாளையம்' என்று குறிப்பர். மலைமேல் முருகப் பெருமானுக்கு ஒரு கோயில் உள்ளது. முருகன் கோயிலுக்குச் செல்ல படிகள் அமைக்கப்பட்டுள்ளன. மலைமேல் தென் புறமாக ஒரு இயற்கைக் குகைத் தளம் அமைந்திருக்கிறது. அவ்வழியிலே சென்று மலையைச் சுற்றி வந்தால் வடபுறத்திலும் ஒரு குகைத் தளம் இருக்கிறது. தென் புறத்தில் உள்ள குகைத் தளத்திலும், வட புறத்தில் உள்ள குகைத்தளத்திலும் படுக்கைகளும், கல்வெட்டுகளும் இருக்கின்றன. தென் புறத்தில் உள்ள குகைத்தளத்தில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. அவை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. வடபுறக் குகைத் தளத்தில் ஒரே ஒரு கல்வெட்டு இருக்கிறது. தென் புறக் குகைத்தளத்திலிருந்து வடபுறக் குகைத்தளத்திற்குச் செல்லும் வழியில் ஒரு பெரும் கல்லின் அடியிலும் படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்குக் கல்வெட்டு ஏதும் இல்லை.

வடபுறமுள்ள கல்வெட்டு

1 ஞகன் மகன்ளங்கிரன்

தென்புறக்குகையிலுள்ள கல்வெட்டு

தென்புறம் குகைத் தளத்தில் படுக்கைகளின் பக்கவாட்டிலும், மேலே உள்ள பாறையின் முகப்பிலும் உள்ள இரு கல்வெட்டுகளே தமிழக வரலாற்றுக்கு இன்றியமையாதவை.

1. மூதா அமண்ணன் யாற்றூர் செங்காய பன்.....

கோஆ.ல்லிரும்புறை மகன் பெருங்
கடுங்கோன் மகன் கடுங்
கோன் ஒங்கடுங்
கோ ளங்கோ ஆக அறுபித
கல்.

2. .தா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங்கடுங்கோன்மகன் ஒங்
கடுங்கோ ளங்கோ ஆ
அறுத்த கல்

குகைத்தளத்தில் படுக்கைகளின் தலையில் எழுதப்பட்டு உள்ள கல்வெட்டுகளில் ஒன்று 'யாற்றூர் செங்காயபனை'க் குறிக்கிறது. ஆனால் அது மிகவும் சிதைந்துள்ளது. அதுவும் பிற கல்வெட்டுகளும் கீழே தரப்பட்டுள்ளன :

3. யாற்றூர் செங்காயபன் ....ட்டான்னம்....

4. ...த்த அதிட்டானம்...

5. ...அதிட்டானம்

6. ..ன்ன வான்னிகன்

7. .. தோதா ஆதன் அதிட்டானம்

8. பொ. . . .
கன் . . .
மகன் . . . .
னவ . . . .

9. கொற்றந்தைளஎய் மூன்று
(இதை ஐ. மகாதேவன் கொற்றந்தை இளவன் மூன்று என்று படித்துள்ளார். கல்வெட்டில் மூன்று என்றே இருக்கிறது).

10. கருஊர் பொன் வாணிகன்
நத்தி அதிட்டானம்
(இதை ஐ. மகாதேவன் வாணிகன் அத்தி என்று பிரிக்கிறார்).

11. நல்பி ஊர்அ பிடந்தை மகன்
கீரன் கொற்ற

12. நல்பி ஊர்அ பிடன் குறும்மகள்
கீரந்தோதி செயிபித பளி

எழுத்து

எழுத்துகள் இக்கல்வெட்டுகளில் வளர்ச்சி பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. 'அ' எழுத்து இடை எவ்வளியின்றி சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. உயிர்மெய்யில இகரத்தைக் குறிக்கும் குறிவளையத் தொடங்குகிறது. 'றகரம்' வளர்ச்சி பெற்றுக் காணப்படுகிறது. 'மூன்று' போன்ற சொற்களில் மெய்யைக் குறிக்க புள்ளி காணப்படுகிறது. இந்த எழுத்துகளின் வளர்ச்சியைக் கொண்டு இக் கல்வெட்டுகளைக் கிறிஸ்துவின் சமகாலத்தவையாகக் கொள்ளலாம். இரும்பொறைக் கல்வெட்டில் 'தா அமண்ணன்' என்று இதுகாறும் படிக்கப்பட்டது. ஆனால் அதன் முன்னர் 'மூ' என்ற எழுத்து உள்ளது என்று திரு. நடன. காசிநாதன் கண்டுபிடித்துள்ளார்.

சொல்

மூத்த என்ற பொருளில் 'மூதா' என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது. அமணன் என்பது 'அமண்ணன்' என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் 'இரும்பொறை' என்றும் மற்றொரு கல்வெட்டில் 'இரும்புறை' என்றும் எழுதப்பட்டுள்ளது. சொல்லின் இறுதியில் 'ன்'-னும் வருமொழியில் 'இ' கரமும் வரும் இடங்களிளெல்லாம் 'இ'கரம் மறைந்து சேர்க்கப்பட்டுள்ளது.

உதாரணம் :

மகன் இளங் கடுங்கோ மகன்ளங்கடுங்கோ

கடுங்கோன் இளங் கடுங்கோ கடுங்கோன்ளங் கடுங்கோ

ஞகன். மகன் இளங்கீரன் ஞகன்மகன்ளங்கீரன்

இது போன்ற சில இடங்களில் 'ன்' னும் மறைந்து 'இ'யும் மறைந்து காணப்படுகிறது.

உதாரணம் :
கடுங்கோன் இளங்கோ
கடுங்கோளங்கோ

குறு மகன் எற் சொல் 'குறும்மகள்' என்று மகர ஒற்று இரட்டித்து எழுதப்பட்டுள்ளது. 'செயிபித', 'அறுபித' என்ற வழக்குகள் காணப்படுகின்றன.

'ஞகன்' என்ற சொல்லில் 'ஞ' கரம் சொல்லின் முதலில் வருவது குறிப்பிடத் தக்கது. இது இலக்கண மரபுக்கு ஏற்புடையது அல்லதாயினும் வழக்கில் இருந்துள்ளது என்று இதனால் தெரிகிறது. சுமார் இ.பி. 7-ம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டிலும் 'ஞ' கரம் சொல்லின் முதலில் வரும் வகையில் 'ஞக்கையர்' என்ற பெயர் வந்துள்ளது.

பொருள்

சேரன் இளங்கடுங்கோ 'இளங்கோ' பட்டம் எய்திய போது யாற்றூரைச் சார்ந்த செங்காயபன் என்பவருக்கு உறைவிடம் கொடுத்ததை இரு கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக் கல்வெட்டுகளில் சேர மன்னர்களுடைய மூன்று தலைமுறைகள் குறிக்கப்பட்டுள்ளது சிறந்த வரலாற்றுச் செய்தியாகும்.

''கோ ஆதன் செல்லிரும் பொறை''
''பெருங் கடுகோன்''
''இளங் கடுங்கோன்''

என்று தந்தை, மகன் என்னும் உறவில் குறிக்கப்படுகின்றன. இவற்றில் 'கோ' என்றும் 'இரும்பொறை' என்றும் 'ஆதன்' என்றும் பெயர்கள் வருவதால் இதில் குறிக்கப்பட்டுள்ளவர் சேர குலத்தைச் சார்ந்தவர் என்பதில் ஐயத்திற்கு இடமே இல்லை. அரசா குலத்தில் மூன்று தலைமுறைகளைக் குறித்துள்ள மிகவும் தொன்மையான கல்வெட்டுகள் இவையே. இவற்றின் உதவி கொண்டு வரலாற்றை ஒருவாறு கணிக்கலாம். ஆதலின் தமிழகத்தின் சங்க கால வரலாற்றிற்கு இவை மிகவும் இன்றியமையாத கல்வெட்டுகளாகும்.

புகளூர்க் கல்வெட்டுக்களும் சங்க இலக்கியமும்

இந்தக்கல்வெட்டுகளை மிகவும் தெளிவாகப் படித்து அளித்த பெருமை திரு. ஐ. மகாதேவன் அவர்களையே சாரும். அவர் இக் கல்வெட்டுகள் குறித்து இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் எழுதியுள்ள கட்டுரையில் பின் வருமாறு குறிக்கிறார்.

''கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் பெருங் கடுங்கோன், அவன் மகன் இளங் கடுங்கோன் என்பவனும் இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 'ஆதன்' என்றும் 'செல்' என்றும் பெயர் கொண்டவன் சங்க காலச்சேர மன்னர்களில் செல்வக் கடுங்கோவாழியாதன்' என்ற ஒரு மன்னனே ஆகும். பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் அவனே. ஆதலின், புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள 'கோ ஆதன் செல்லிரும்பொறை'யே, பதிற்றுப் பத்தின் ஏழாம் பாட்டின் தலைவனான 'செல்வக் கடுங்கோ வாழியாதன்' என்பதில் ஐயமே இல்லை. இதிலிருந்து புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பெருங்கடுங்கோவும், இவன் மகன் இளங்கடுங்கோவுமே பதிற்றுப் பத்தில் வரும், 'பெருஞ்சேரல் இரும்பொறையும்' ஆகும். இவர்களே எட்டாவது, ஒன்பதாவது பாட்டுகளின் தலைவர்களாவர். 'பெருஞ்சேரல் இரும்பொறை'யே 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என்றும், 'இளஞ் சேரல் இரும்பொறையே 'மருதம்' பாடிய இளங்கடுங்கோ' என்றும் ஒரு வழிக் கருத்து உண்டு. இதிலிருந்து இவர்கள் 'பெருங் கடுங்கோ' என்றும் 'இளங் கடுங்கோ' என்றும் பெயர் பெற்றிருந்தனர் என்பது தெளிவு. ஆதலின் புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்படுவோர் இவரே.

'இளஞ்சேரல் இரும்பொறை'யின் தந்தை 'குட்டுவன் இரும்பொறை' என்று குறிக்கப் பெறுகிறான். ஆனால் புகளூரில் 'பெருங்கடுங்கோ'வின் தந்தையாகக் குறிக்கப்படுகிறான். 'குட்டுவன் இரும்பொறை' என்பது சேரர்களின் பொதுப் பெயர் எனக் கொள்ளல் வேண்டும். ஆதலின் பதிற்றுப் பத்தின் 7, 8, 9 பாட்டுகளின் தலைவர்களே புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர்' என்பது திரு. ஐ. மகாதேவன் அவர்களுடைய கட்டுரையின் சாரம்.

இங்கு கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்களுக்கும், இலக்கியத்தில் குறிக்கப்படுவோரின் பெயர்களுக்கும் உள்ள ஒற்றுமை கண்டு இருவரும் ஒருவரே என இணைத்துக் கூறுவது ஒரு போற்றத் தக்க முயற்சியாகும். இக்கருத்தில் உள்ள உண்மையைப் புறக்கணித்துவிட முடியாது. இருப்பினும் இன்னும் சிறந்த சான்றுகள் பெறும் வரை இக் கருத்தை முடிந்த முடிவாகக் கொள்ளாமல் இவ்வாறு இருக்கலாம் எனக் கொள்வதில் தவறில்லை. காரணம் இன்னும் சில ஐயப்பாடுகள் இருக்கத் தான் இருக்கின்றன. இரும்பொறை வழி என்றும், குட்டுவன் வழி என்றும் இரு வழிகள்

சேரர் குலத்தே இருந்தன என்றும், இரும்பொறை வழியே புகளூருக்கு அண்மையிலுள்ள கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்றும் கருதப்படுகிறது. ஆனால் சேரர் குலத்தே இரு வழிகள் இருந்ததாகக் கூற போதிய சான்றுகள் இல்லை.

### பிட்டன் கொற்றன்

''சங்க இலக்கியங்களில் சேரர்களின் தானைத் தலைவர்களாகக் கருதப்படும் பிட்டனும், பிட்டன் கொற்றனுமே புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். பிட்டனும், பிட்டன் கொற்றன் என்பவனும் தந்தை, மகன் என்னும் உறவினர். பிட்டன் மகன் கொற்றனும், அதியன் மகன் எழினியும் குதிரை மலையின் தலைவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். (புறம் 158, 168) பெருஞ்சேரல் இரும்பொறை அதியமானின் தகடூரை எறிந்த போது குதிரை மலையைக் கைப்பற்றி பிட்டன் கொற்றனுக்குக் கொடுத்திருக்க வேண்டும். பிட்டன் கோசர்களின் தலைவனாய் இருந்திருக்கலாம். (அகம். 113, புறம். 169). பிட்டன் நல்லூரைச் சேர்ந்தவனாகக் கூறப்படுகிறான். இது கோசர்களின் நல்லூர் போல் ஒலிக்கிறது. புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பெருங்கடுங்கோவே, பெருஞ்சேரல் இரும்பொறை என்றும், அவனே தகடூர் எறிந்தவன் என்றும் யான் கருதுகிறேன். அரிக்கமேட்டில் கிடைத்த பானை எழுத்துகளிலிருந்து புகளூர்க் கல்வெட்டுகள் இன்ன காலத்தைச் சார்ந்தவை என திட்டவட்டமாகக் கூறலாம். இக்காலத்தில்தான் ஔவை, கபிலர், பரணர், பாரி, அதியமான் முதலியோர் வாழ்ந்தனர் எனவும் திரு. ஐ. மகாதேவன் குறித்துள்ளார்.

பிட்டன் கொற்றன் என்று கல்வெட்டில் இல்லை. ஒரு கல்வெட்டில் கடைசி எழுத்து சிதைந்துள்ளது. அது 'பிடந்தை மகள் கீரன் கொற்ற...' என்று உள்ளது. மற்றதில் 'பிடன் குறும்மகள் கிரந்தோறி' என்று உள்ளது. இரு கல்வெட்டுகளிலும் மகள் என்றே வருவதால் இரண்டும் பெண்களைக் குறிக்கின்றன என்று கொள்ளலாம். அவ்வாறாயின் பிட்டன் கொற்றன் என்றும் அவன் குதிரை மலையின் தலைவன் என்றும் கொள்ள இடமில்லை. மேலும் இரு கல்வெட்டுகளிலும் 'நல்பி ஊர்' என்றே வருகிறது என்பதும் குறிப்பிடல் வேண்டும். இருப்பினும் 'பிடன்', 'கீரன்', 'ஓரி' முதலிய பெயர்கள் சேரர் கல்வெட்டுக்கு அருகில் கிடைத்துள்ளது ஒரு சிறப்பாகும். சங்க இலக்கியங்களில் வரும் பல பெயர்களை இவை நினைவூட்டுகின்றன. ஆதலின் இவை சங்க காலக் கல்வெட்டுகள் என திரு. ஐ. மகாதேவன் குறிப்பது முற்றிலும் பொருத்தமே.

### சேரர் தலைநகர் கருவூர்

புகளூர்க் கல்வெட்டில் கருவூர் பொன் வாணிகன் குறிக்கப்படுகிறான். கருவூர் புகளூரிலிருந்து சுமார் பத்துக் கல் தொலைவில் இருக்கிறது. சேரர்களுடைய தலைநகராகக் கருவூர் குறிக்கப்படுகிறது. ஆதலின் இதற்கு அருகில் உள்ள கருவூரே சங்க காலச் சேரர்களின் தலைநகராய் இருந்திருக்க வேண்டும் என்று திரு. ராகவ ஐயங்கார் குறிப்பிட்டு உள்ளார். கருவூரில் ஓடும் 'ஆன்பொருனையே' 'ஆம்ராவதி' என திரிந்திருக்க வேண்டும். கருவூருக்கு வஞ்சி நகரம் எனப் பெயர் உண்டு. 'கருவூராகிய வஞ்சி மாநகர்' எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. இக்கருவூருக்கு அருகிலேயே சேரர் கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. கருவூர் உள் நாட்டுப் பகுதியில் இருந்தது என்று பண்டைய மேலை நாட்டார் குறித்துள்ளனர். சங்க காலத்தில் மேலை நாடுகளுடன் இந் நகருக்கு வணிகத் தொடர்பு இருந்தது என்பதனை இவ்வூருக்கு அருகில் கிடைத்துள்ள ரோமானிய நாணயங்கள் உறுதி செய்கின்றன. அன்றியும் சேரன் செங்குட்டுவன் பாடும் ஐந்தாம் பத்தில்,

''காவிரி அன்றியும் பூவிரி புனல்
மன்று உடன் கூடிய கூடல்
அனையை''

எனக் குறிக்கப்பட்டுள்ளது. காவிரியும் ஆன்பொருனையும், குடவன் ஆறும் ஒன்று கூடும் கடல் என்பது இதற்குப் பழைய உரை. 'ஆம்ராவதி' ஆறுதான் காவிரி ஆற்றுடன் கருவூருக்கு அருகில் கலக்கிறது. அங்கு 'முக்கடல்' என்னும் ஊர் இன்றும் உண்டு. கருவூர் ஆன்பொருனையின் கரையில் அமைந்தது என்று இலக்கியம் குறிக்கும். மேலும் உறையூருக்கு அருகில் கருவூர் இருந்தது என்பதும் சங்க நூல்களிலிருந்து அறியக் கிடைக்கிறது. இவற்றிலிருந்தும், இந் நகரின் அண்மையில் காணக் கிடைக்கும் கல்வெட்டுகளில் வஞ்சி குறிக்கப்படுவதிலிருந்தும், கருவூர் சேரர்களின் ஒரு தலைநகராய்த் திகழ்ந்தது என்பதில் இனி எவ்வித ஐயமும் இருக்க முடியாது. இதைச் சிலர் ஏற்றுக் கொண்டிருந்தனர்.



இக்கருத்தைச் சிலர் ஏற்றுக் கொள்வதில்லை. மேலைக் கடற்கரையில் உள்ள கொடுங்கோளூரே வஞ்சி என்று கூறுவோரும் உளர். இதுவே சேரர்களின் பண்டைய தலைநகர் என்றும் பின்னரே கருவூர் தலைநகராயிருத்தல் வேண்டும் என்றும் அவர் குறிப்பர். ஆதலின் இது குறித்து கருத்து வேறுபாடு உண்டு. மேலைக் கடற்கரையில் உள்ள இடமே வஞ்சி எனக் கூறும் இலக்கியச் சான்றுகள் காலத்தால் மிகவும் பிற்பட்டவை. அப்பகுதி வஞ்சி என்று குறிக்க கல்வெட்டுச் சான்று ஏதும் இதுகாறும் கிடைத்தில. கிடைத்துள்ள தொன்மையான சான்றுகள் அனைத்தும் கருவூரின் அருகிலேயே உள்ளன.

எப்படி இருப்பினும் புகளூர்க் கல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

# அதிசயப் பருத்தி இரகங்கள்




பருத்திச் செடி பயிரிடப்படும் நாடுகளில், இந்தியாவில்தான், அதிக நிலப்பரப்பில்—அதாவது சுமார் 80 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில்—பருத்தி பயிரிடப்படுகிறது. இருந்த போதிலும் கச்சாப் பருத்தி உற்பத்தியில் நம் நாடு நான்காவது இடத்தைத் தான் வகிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், 6 இலட்சம் முதல் 8 இலட்சம் பருத்திப் பொதிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றில், எகிப்து, சூடான் ஆகிய நாடுகளிலிருந்து, சராசரியாக 40 கோடி ரூபாய் மதிப்புக்கு நீண்ட இழை கொண்ட 3 இலட்சம் முதல் 4 இலட்சம் பருத்திப் பொதிகள் இறக்குமதி யாகின்றன. இந்த இறக்குமதிப் பருத்தி ரகங்களைக் கொண்டு, மிக மென்மையான 100-ஆம் நம்பர் நூல் முதல் 120-ஆம் நம்பர் நூல் வரை நூல்கள் நூற்கப்படுகின்றன. மேலும் இத்தகைய நூல்கள் செயற்கை இழைகளுடன் சேர்க்கப்படுகின்றன.

இந்தியா இத்தகைய பருத்தி ரகங்களுக்கான விதைகளை எகிப்து சூடான் போன்ற நாடுகளிலிருந்து பெற முடியாத காரணத்தால், இத்தகைய பருத்தி ரகங்களை நம் நாட்டில் பயிரிட முடிவதில்லை. ஆகையால், நம் நாட்டிலேயே நீண்ட இழைப் பருத்தி ரகத்தைக் கண்டுபிடித்து, பயிரிடும் சவாலை பருத்திப் பயிர் விஞ்ஞானிகள் ஏற்றனர்.

தமிழ் நாட்டில் கோவையில் உள்ள பருத்திப் பயிர் விஞ்ஞானிகள், 2 புதிய பருத்தி ரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் புதிய ரகங்களைக் கொண்டு, மிக நீண்ட இழைப் பருத்தியைச் சாகுபடி செய்யலாம். பருத்தி இறக்குமதியை நிறுத்தி, அரிய வெளிச் செலாவணியையும் மிச்சப்படுத்த முடியும்.

### சுவின்

அனைத்திந்திய பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் ஒருங்கிணைப்பு நிலையம், கோவையில் உள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் இந்நிலையம், விரிவான முறையில் ஆராய்ச்சி மேற்கொண்டு 'சுவின்' எனும் தலைசிறந்த வீரிய ஒட்டு பருத்தி ரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. 'சுஜாதா' ரகம், 'செயிண்ட் வின்ஸ்டன்' ரகம் ஆகிய ரகங்களை இணைத்து, இப்புதிய ரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

'சுவின்' பருத்தி ரகம், சுமார் 40 மில்லி மீட்டர் நீள இழை

கொண்டது. இந்தியவேளாண்மை ஆராய்ச்சிச் சபையின் பம்பாய் தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கூடத்தில் முழு அளவு நூல் நூற்கும் பரிசோதனை நடத்தியபோது, 'சுவின்' ரகத்தைக் கொண்டு மிக மென்மையான 122-ஆம் நம்பர் நூல் நூற்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உற்பத்தியான பருத்தி ரகத்தைக் கொண்டு, இந்த அளவுக்கு, மென்மையான நூல் நூற்கப்பட்டுள்ளது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.




மகாவீரர் நிர்வாண 25காசு அஞ்சல்தலையை மைய அரசு 13-11-74ல் வெளியிட்டுள்ளது.

100-ஆம் நம்பர் நூல் மற்றும் 120-ஆம் நம்பர் நூல் நூற்பதற்காக இறக்குமதி செய்யப்படும், 'கிஸா-45' ரகத்தை போன்ற பருத்தி ரகங்களை, 'சுவின்' ரகம் ஒத்திருக்கிறது. செயற்கை நூல் இழைகளோடு, இந்த ரக நூல் இழையையும் இணைக்க முடியும். நாட்டின் மற்ற பாகங்களிலும் 'சுவின்' பருத்தி ரகத்தை பயிரிடலாம். 1974—75-ஆம் ஆண்டுப் பருவக் காலத்தில் தமிழ் நாட்டில் 5 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் 'சுவின்' பருத்தி ரகம் பயிரிடப்பட்டுள்ளது. மேலும், ஆந்திரப் பிரதேசம், மஹாராஷ்டிரம் ஆகியவற்றில், இந்த ரகப் பருத்தியைப் பயிரிட முடியும் என்பது தெரிய வந்துள்ளது. ஆகையால், இந்த மாநிலங்களிலும், அதிக அளவு நிலப்பரப்பில், இந்த ரகப் பருத்தி பயிரிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**'சி.பி.எஸ். 156'**

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், மென்மையான, நீண்ட இழை கொண்ட புதிய வீரிய ஒட்டுப் பருத்தி ரகத்தைக் கண்டுபிடித்து உள்ளது. 'சி.பி.எஸ். 156' என அழைக்கப்படும், இந்தப் புதிய ரகம், அமெரிக்கப் பருத்தி ரகம், பார்படன்ஸ் பருத்தி ரகம் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்டதாகும். 36 மி.மீ, (1.4 அங்குலம்) நீள பருத்தி இழை கொண்டதாகும். இந்த ரகம், எகிப்துப் பஞ்சுக்கு ஈடான மிக நீண்ட இழைகொண்ட இந்தரகப் பருத்தியைக் கொண்டு 120-ஆம் நம்பர் நூல் நூற்கலாம். பருத்திப் பயிர்ப் பூச்சிகள், புழுக்கள், நோய்கள் ஆகியவற்றை எதிர்க்கும் திறன் கொண்டதாக இது விளங்குகிறது. விரைவில் அதிக மகசூல் அளிக்கிறது. இந்த ரகத்தைப் பயிரிடுவோர் எக்டேருக்கு 30 ஆயிரம் ரூபாய் இலாபம் பெறலாம். இந்த காரணங்களைக் கருத்தில் கொண்டே, உழவர் பெருமக்கள் 'சி.பி.எஸ். 156' ரகப் பருத்தியைப் பயிரிடுகின்றனர்.

இறக்குமதியாகும் எகிப்துரகத்திற்குப் பதிலாக, இதைப் பெருமளவுக்குச் சாகுபடி செய்யலாம். இதைக் கருத்தில் கொண்டே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், இப் புதிய ரகப் பருத்தியை பெருமளவுக்குச் சாகுபடி செய்வதற்கான செயல் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

கோவையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்ட புதிய ரகங்களை, பயிரிடுவதன் மூலம், நாம் பருத்தி இறக்குமதியைத் தவிர்க்கலாம். மேலும் அதன் மூலம் அரிய வெளிச் செலாவணியையும் மிச்சப்படுத்த முடியும்.


# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ்406

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.

தொலைபேசி எண் : 30877
30878. தபால் பெட்டி எண். 486. தந்தி: ''ஹவுஸ்பாங்க்''

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்; எம் எல்.ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை
பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.5 கோடி. |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.33 ,, |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | ... | ரூ. 15.97 ,, |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான விபரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடு அடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் ஆண்டிற்குக் குறையாமலும் தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும். தவணைவைப்புத் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது.

| | | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு. |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | ... | ரூ. 25,000/- |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட | ... | ரூ. 10,000/- |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும் | ... | ரூ. 10,000/-. |

பூ.க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.




# வருங்காலப் பேச்சாளர்கள் உருவாகிறார்கள் இங்கே!

திருக்குறளிலே ஒரு குறள்!

மன்னரைச் சேர்ந்து வாழ்பவர் அவரை மிக நீங்காமலும் மிகவும் நெருங்கிப் பழகாமலும் இருக்கவேண்டும். எதைப் போல? தீக்காய்வார்போல என்கிறார் வள்ளுவர்.

அகலாது அணுகாது
தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு
வார்.

என்பது குறள்.

இந்தக் குறள், மாணவ மணிகளுக்கும் பொருந்துவனவாக இருக்கிறது.

படிக்கும்போது கல்வியிலேயே மிகுந்த நாட்டஞ் செலுத்த வேண்டும். குறிப்பாக அரசியலில் மாணவர்கள் நேரடியாக ஈடுபடாமல், அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்பது பலரது கருத்தாகும்.

''கட்சி அரசியல் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு இடையூறாகும்''.

இந்தத் தலைப்பில் சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் நவம்பர் திங்கள் 23-ஆம் நாள் ஒரு பேச்சுப்போட்டி நடைபெற்றது.

டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை சுழற்கோப்பைக்கான இந்தச் சொற்போரில் 13 கல்லூரிகளின் சார்பில் 25 மாணவமாணவிகள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டி கடந்த 10 ஆண்டுக்காலமாக மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மாணவ மணிகளின் பேச்சுத் திறனை வளர்க்கும் நோக்குடன் தொடங்கப்பெற்ற இப்போட்டியில், மாணவ, மாணவியர் மிக்க ஆர்வத்துடன் கலந்து கொண்டு அரிய சொற்பொழிவு நிகழ்த்தியதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

இந்தச் சொற்போரில் கலந்து கொண்ட கல்லூரிகளாவன:

1. பச்சையப்பன் கல்லூரி, 2. விவேகானந்தா கல்லூரி, 3. கந்தசாமி நாயுடு கல்லூரி (ஆண்கள்) 4. அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (வடசென்னை) 5. கிறித்தவக் கல்லூரி 6. ஜெயின் கல்லூரி 7. அரசினர் கலைக்கல்லூரி (நந்தனம்) 8. மகளிர் கிறித்தவக்கல்லூரி 9. இலயோலா கல்லூரி 10. புதுக் கல்லூரி 11. எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி 12. மாநிலக் கல்லூரி 13. இராணி மேரி கல்லூரி.

ஒவ்வொரு கல்லூரியின் சார்பிலும் இருவர் கலந்து கொண்டு வெட்டியும், ஒட்டியும் பேசினார்கள்.

முதலில் எஸ்.ஐ.வி.இ.டி. மாணவர் பேச வருகிறார்.

சுழற் கோப்பையைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர் பெறுகிறார்.



கட்சி அரசியல் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு இடையூறு ஆகும் என்பதை ஆணித்தரமாகக் கூறுகிருர். அடுத்துப் பேச வரும் இலயோலா கல்லூரி மாணவர் அதை வெட்டிப் பேசுகிருர்.

பெண்கள் அணியில் முதலில் பேச வந்தவர் வடசென்னை மகளிர் கல்லூரி மாணவி. இவர் 'அரசியலால் மாணவர்கள் பாதிக்கப்படுவர்' என்று முழங்குகிருர். அடுத்து வந்த மாணவியோ 'அரசியலில் ஈடுபடவேண்டும்!' என்று வாதிடுகிருர். ஒரு மாணவர், 'கட்சி' அரசியல் மாணவர்களுக்கு ஆசாளுக இருக்கிறது' என்று பேசுகிருர். இன்னெருரு மாணவரோ, 'அரசியல் கலையைத் தெரிந்து கொள்ள வேண்டும்; ஆனுல் அதில் ஆழமாக இறங்கிவிடக்கூடாது' என்று எச்சரிக்கிருர்.

அடுத்தடுத்து மாணவ, மாணவிகள் பேச வருகின்றனர். அவர்களின் பேச்சிலே கனல் தெறிக்கிறது; கருத்து மழை பொழிகிறது!

சொற்போரில் ஒரு மாணவர் பேச வேண்டிய நேரமோ ஆறே நிமிடங்கள்தான். ஆனுல்,

> கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்காவின் 'போர்ட்' நிறுவனம் 5 இலட்சத்து 36 ஆயிரம் டாலர் (ரூ. 40.2 இலட்சம்) உதவிதர ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பல்கலைக் கழகத்தின் 'வேளாண்மைப் பொருளாதாரத் துறை' விரிவமைப்பிற்கு இந்தப் பணம் பயன்படுத்தப்படும்.

பேச வந்த மாணவர்களோ 'எங்களுக்கு ஆறு நிமிடங்கள் போதா; அறுபது நிமிடங்கள் வேண்டும்' என்று கேட்பார்கள் போலிருக்கிறது. அவ்வளவு செய்திகளை அவர்கள் மனத்திலே தேக்கி வைத்துக் கொண்டிருக்கிருர்கள். மடை திறந்தாற்போன்ற அவர்களது பேச்சு நம் மனத்தை வெகுவாகக் கவர்ந்தது.

ஏதோ வந்தோம் பேசிஞேம் என்றில்லாமல், மேடைப் பேச்சுக்குரிய இலக்கணத்தோடு அவர்கள் பேசிய பாங்கானது, 'வருங்காலப் பேச்சாளர்கள் இங்கே உருவாகிருர்கள்' என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது.

'கற்றலில் கேட்டலே நன்று' என்பார்களே அதனை உணர்த்துகின்ற வகையில் அன்றைய சொற்போர் விளங்கியது.

செவிச் செல்வம் வழங்கிய மாணவ மணிகளின் பேச்சுத்திறன், நடுவர்களுக்கே பிரச்சினையாக இருந்தது! இதை நடுவர்கள் இறுதியில் பேசும்போது, 'யாருக்குப் பரிசு அளிப்பதென்றே தெரியவில்லை' என்ற தம் வியப்பினைத் தெரிவித்தார்கள்.

இந்தப் போட்டியில் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை சுழற் கோப்பையைப் பச்சையப்பன் கல்லூரி பெற்றது. கடந்த ஆண்டும் இதே கல்லூரி இக்கோப்பையினைப் பெற்றது.

சிறப்பாகப் பேசிய இருவருக்கும், தகுதிமிக்க இருவருக்கும் புத்தகங்கள் பரிசாக வழங்கப் பெற்றன.

எத்தனையோ பேச்சாளர்களை உருவாக்கிய இப்பெருமன்றம், நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவர்களின் பேச்சாற்றலுக்கு வழிகோலுகிறதென்ருல் அது மிகையல்ல.

— பி. வி. ஜி.


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண். 151.

சேலம்-1.

தொலைபேசி எண் 2402

கிளைகள் :— நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம் ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 323 லட்சம்

நடைமுறை மூலதனம் 1690 லட்சம்

வட்டி விகித அட்டவணை 23-7-'74 தேதி முதல்

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்)

ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) 3¼%

ஓசன் டெபாசிட்டுகள் : ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும்

15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3½%

46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் 3%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு 3½%

1. 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள்
2. 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள் 5½%
3. 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள்... 6%
4. 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள்... 7%
5. 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள். 8%
6. ஐந்து வருடங்களுக்கு மேல் 9%

நடப்புக் கணக்கு ½% சேமிப்பு கணக்கு 5% ... 10%

ரூ. 5,000-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க!

எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
தலைவர்




# காக்காய் வலிப்பு

சுந்தர்

தெருவிலே செல்லும் சிலரை திடீரென்று காக்காய் வலிப்பு தாக்கி நோயாளி சுருண்டு விழுந்து கை கால்களை உதைத்துக் கொள்வதையும் வாயில் நுரை தள்ளுவதையும் காண்கிறேம். உடனே வழிப்போக்கர்களில் யாராவது ஒருவர் இரும்புச் சாவிக் கொத்தை அந்த நோயாளியின் கையில் கொடுக்கிருர்.

இதெல்லாம் நோயைக் குணப்படுத்தாது; நீண்ட காலம் மருத்துவச் சிகிச்சை செய்தால்தான் வலிப்பு வராமல் தடுக்க முடியும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

காக்காய் வலிப்புக்கு என்ன காரணம்?

உறிப்போகிரிட்ஸ் 2500 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர். தற்கால நவீன மருத்துவ முறையின் தந்தை என்ற புகழ் அவருக்கு உண்டு. 'மூளையில் ஏற்படும் ஓர் இயக்கத்தின் விளைவாகக் காக்காய் வலிப்பு ஏற்படுகிறது' என்று அவர் கூறினுர்.

காக்காய் வலிப்பு சாவுக்குக் காரணமாக இருப்பதில்லை; உடல் நலனுக்கோ அறிவுக் கூர்மைக்கோ இது ஊறு விளைப்பதில்லை.

இந்தியாவில் எத்தனை பேருக்கு இந்நோய் இருக்கிறதென்று துல்லியமாகத் தெரியவில்லை. வேலூரிலும் அருகிலும் அண்மையில் நடத்திய ஆய்வின் விளைவாக நூறு பேர்களில் ஒருவருக்குக் காக்காய் வலிப்பு இருப்பதாகத் தெரிய வந்தது.

இந்தியாவில் ஐந்து நிலையங்களில் 1970-ம் ஆண்டிலே கூட்டாக காக்காய் வலிப்பு நோய் ஆராய்ச்சி தொடங்கப் பெற்றது. இந்தியாவிலே பல நிலையக் கூட்டு ஆய்வு நடத்தப் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

அரசாங்கப் பொது மருத்துவ மனை சென்னை, அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகம் புது டில்லி, பங்களூர் நரம்பியல் கழகம் கல்கத்தா, கே. இ. எம். மருத்துவமனை பம்பாய், அனைத்திந்திய மன நோய்க் கழகம், பெங்களூர், அமெரிக்க அரசின் தேசிய உடல்நலக் கழகத்தில் ஒரு பிரிவான உடல்நல மனநோய் நிலையம், பி.எல். 480 மானிய உதவியுடன் இந்த ஆய்வுத் திட்டத்தைத் தொடங்கியது. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஐந்தாண்டுக் கால ஆய்வுக்கு ரூ. 8,70,000 கிடைத்தது.

ஒவ்வொரு ஆய்வு நிலையத்திலும் இந்த நோயை ஆராய்வதற்குப் பயன்படுத்தப் பெறும் முக்கிய கருவி 'எலக்ட்ரோ என்லிஃபாலோ கிராஃப்'. தலையின் தோலில் பொருத்தப்பட்டிருக்கும் மின் வாய்கள் மூளையிலிருந்து வரும் மின் அதிர்வுகளை இக்கருவிக்கு அனுப்பி வைக்கிறது. இந்த அதிர்வுகள் பதிவாகும் படத்திற்குப் பெயர் 'எலக்ட்ரோ என்லிஃபாலோகிராப்'. இதனை மருத்துவர்கள் ஆராய்ந்து மருந்து கொடுக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டிலும் நோயாளிகள் சோதனைக்காக நிலையத்திற்கு வரவேண்டும். ஒவ்வொரு நிலையமும் 500 முதல் 600 நோயாளிகள் பற்றிய நோய்க் குறிப்புகள் முதலியவற்றைத் தயாரிக்கிறது.

இத்தனை தகவல்களைத் தயாரிப்பதில் இரண்டு நோக்கங்கள் கைகூடும். முதன் முதலாக, இந்தப் பல்வேறு நிலையங்கள் தம் ஆய்வு முடிவுகளின் ஒற்றுமைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். மேலும், 'காக்காய் வலிப்பு பரம்பரையாக வரும் நோயா?' என்று அடிக்கடி கேட்கப்படும் கேள்விக்கும் விடை காண உதவும்.

## அஞ்சல்தலை சேகரிப்போர் கவனத்துக்கு !

அஞ்சல்தலை சேகரிப்போர்க்குத் தேவையான நினைவு அஞ்சல் தலைகள், விசேட அஞ்சல் தலைகள், முதல் நாள் உறைகள் முதலியவற்றை விற்கும் வசதி 25 தலைமை அஞ்சலகங்களில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, உதகமண்டலம் ஆகிய இடங்களிலும், ஜம்மு, ராஜ்காட், அமிர்தசரஸ், புனு, பரோடா, விசாகப்பட்டினம், மைசூர், கொச்சி, ஆக்ரா, காசி, மீரத், நைனிடால், சௌரி, இந்தூர், ஜாம்ஷெட்பூர், பெர்காம்பூர், டார்ஜிலிங், துர்க்காபூர், புவனேசுவரம், கௌகாத்தி, சில்கார் ஆகிய இடங்களிலும் உள்ள தலைமை அஞ்சலகங்களில் இவ்வசதியைத் தபால்-தந்தி இலாகா ஏற்படுத்தியிருக்கிறது. இவற்றில் 'வெளியீட்டு முதல் நாள்' முத்திரையும் பொறிக்கப்படும்.

# காணி நிலம் வேண்டும்

வீரமணிக்கு அப்போதுதான் சுயப்பிரக்ஞை திரும்பியிருக்க வேண்டும். அரும்புமீசை துடித்தது, அவனது தோள்களைப் போல! தலைகுனிந்தவாறு எதையோ சாதிக்கத் திட்டம் திட்டி, அத்திட்டத்திலே பாதிக்கிணறு தாண்டிவிட்ட எக்களிப்புடன் நின்றிருந்த பவளக்கொடியைத் தலையை நிமிர்த்தி நோக்கினான். 'அடி பாவி! கொலைக்கு அஞ்சாப் பழிகாரி!'-சொற்கள் உந்தியினின்றும் முட்டி மோதிக் கொண்டு வெளிக் கிளம்பின. எத்தகைய பயங்கரப் பழி பாவத்தைச் சுமத்திவிட்டாள்!

''ஏலே, பவளக்கொடி! அப்படியே அங்கேயே நில்லு!''

—வீரமணி விடுத்திட்ட ஆணையில் பிணை பாவிய காட்டம் அன்னத்தை அச்சம் அணைந்தது. சாது மிரண்டால் காடு கொள்ளாது. மச்சானின் நியாயமான ஆத்திரம் பவளக்கொடியின் அநியாயமான பழிக்கு என்ன பாடத்தை எப்படிக் கற்பிக்கப் போகிறதோ?

பவளக்கொடியோ எதையும் சமாளிக்கும் இதயம் பூண்டவளைப் போல வீரமணியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நின்றவாறு தலையை உயர்த்தி நிதானமாக விழிகளைச் சுழல விட்டாள்!

வீரமணி விசையோடு நடை தொடர்ந்தான்; துருதுருத்த தன்னுடைய உரம் மண்டிய கைகளை வீசியெறிந்து பவளக்கொடியின் நடுங்கும் பூக்கரங்களைப் பிடித்தான். ''பவளம்! ...செய்யாத குற்றத்துக்காக என்னைப் பலி வாங்கப் பாத்தியா என்ன ?'' என்று அவளை அணைத்துக் கொள்ள முயன்ற வேளையிலே—

'ஐயையோ!' என்று அலறிப் புடைத்த வண்ணம் ஓடி, வீரமணியைத் தடுத்து நிறுத்தி விட்டாள் அன்னக்கொடி.

எதையோ ஆசையோடு எதிர்பார்த்து ஏமாந்த மூர்த்தண்யமான ஏக்கத்தோடு தடுமாறி நின்றாள் பவளக்கொடி!



வழிந்த விழிநீரை வழி விலக்கக்கூட நினைவிழந்த அன்னம் தன் அருமை மச்சானை வீராவேசம் பொங்க ஊடுருவினாள்: ''மச்சான்!'' என்று அலட்டினாள் அவள்.

அப்போது, வாசல் வெளியிலே என்னவோ அரவம் கேட்டது. அரவம் கண்ட மாதிரி, திசை மறுகினாள் அன்னக்கொடி.

அங்கே, பண்ணைக்காரன் பரமசிவம் ஐந்தாறு ஆண் பெண்கள் புடைசூழ நின்று கொண்டிருந்தான்.

அன்னம் திகைத்தாள். அந்தக் கும்பல் வெகுநேரமாக மறைந்து நின்று இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்திருக்குமோ?

வீரமணியும் அந்தக் கூட்டத்தைக் கண்டுகொள்ளத் தவறிவிடவில்லை. பவளக்கொடி புதிய தெம்பு வரப் பெற்றவளாக விறைத்து முறைத்து நின்றாள். வீரமணி மறுபடி ஆத்திரம் கொண்டு பவளத்தை மடக்கிச் சாட முனைந்தான்.

ஓடினாள் அன்னம். ''மச்சான்! பவளக்கொடி உங்க மேலே ஒரு பழியைச் சுமத்திப்புட்டா அதுக்காக, நீங்க இன்னொரு பழியைச் சுமக்கலாமா? நாலு சுவர்களைத் தாண்டி இப்ப நாம நின்னுக்கிட்டு இருக்கோமாக்கும்! ஆகச்சே, எம்பேச்சை நீங்க சுயபுத்தியோடே நெஞ்சிலே வாங்கிக்கிடவேணும்! ஊருக்கு முன்னிலையில் இப்ப நாம ரெண்டு சங்கதிகளை நிருபிச்சுக் காட்டக் கடமைப் பட்டிருக்கோம்! ஒண்ணு, நீங்க சீதைக்கு ஏற்ற ராமர் அப்படின்னு மெய்ப்பிச்சுக் காட்டியாகணும்!.. ரெண்டாவது, நான் ராமருக்கு ஏற்ற சீதை அப்படின்னு மூதலிச்சுக் காட்டியாக வேணும்! அப்பத்தான் நீங்களும் நானும் தலை நிமிர்ந்து நின்னு, இந்தப் பவளக்கொடியைத் தலைகுனிய வைக்க முடியும்!'' என்று உணர்ச்சிகள் பீறிடக் கூறினாள் அன்னக்கொடி.

## 22. சவால் விடு தூது!

அட்டகாசமாகச் சிரித்து முழக்கியவளாக, கூட்டத்தைச் சாடிப் பிளந்து கொண்டு ஓடலானாள் பவளக்கொடி!

வீரமணி சிலையாக மலைத்துப் போய்விட்டான்!

''மச்சான்!'' என்று விம்மி விளித்தாள் அன்னக்கொடி. விம்மல் வெடித்தது; கண்ணீர் பொடித்தது.

ஒரு காக்கை, குருவியை இப்போது அங்கே காணோம்!

அன்னக்கொடி மத்தியானச் சாப்பாட்டை முடித்தாள். கூறுகெட்ட செங்கமலம் என்ன ஆனாள்?-சற்று முன், பவளக்கொடி இங்கே புயல் காற்று சூழலில் நிற்கையில் ஊரார் புடைசூழ வேடிக்கை பார்ப்பது போன்று நின்று கொண்டேயிருந்த பண்ணைக்காரன் பரமசிவம் திடுதிப்பென்று எங்கே மறைந்து தொலைந்தான் ?

**பூவை எஸ். ஆறுமுகம்**

வெள்ளை செல்லப்பிள்ளையாகச் சிணுங்குகிறது. பவளக்கொடி கட்டுச்சோறு கட்டிக் கொண்டு சிலட்டூரிலிருந்து வந்து, வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டு பறந்துவிட்டாளே பாவி! கொஞ்சப் பொழுதுக்கு முந்தி வீரமணியும் பவளமும் ஈடுபட்டிருந்த சண்டையில் பரமசிவம் மாத்திரம் நிலவரத்தை கண்டிருந்தால் ஒன்றும் குடிமுழ்கிப் போகமாட்டாது. கூடமாட, வேலப்பன், நாச்சி, பார்வதி, விசாலம், மனோன்மணி என்று யார் யாரோ இருந்தார்களே? உலைவாயை மூடினாலும், ஊர்வாயை மூட வாய்க்காதே?—

வாசல் தடத்தில் வாழைத் தார்களையும் கத்தரிக்காய் கூடைகளையும் சுமந்தவாறு, சந்தைப் பேட்டையை இலக்கு வைத்து நடந்து கொண்டிருந்தார்கள் ஆடவரும் பெண்டிரும். விடிந்தால்தான் வியாழச் சந்தை. ஆனால், இன்று புதன் கிழமையே இங்கே சந்தை கூடிவிடும்; 'மகிமை' காசுகள் குலுங்கும்; லாபக் காசும் புரளும்.

சருகுச் செத்தைகளை-கூளங்களை அடுப்புப்பூற்ற வைக்கப் பொறுக்கினாள் அன்னம்! அடுப்படியில் ஒழுகிக் கிடக்கிறது. தேங்கி நின்ற மழை நீரைக் காலால் எற்றிவிட்டாள். இன்னும் கொஞ்சநாள் பாடு. அப்புறம் ஆவணி விடிந்ததும், புது மனைக்குக் குடிபோய்விடலாம். மேளதாளம் முழங்கிடத் தோன்றிய திருமண வைபவக் காட்சி விரிய, அந்தக் கனவின் மோனத்தில் கை குவித்து, மேனி சில்லிட்டு நின்றாள் கன்னிப்பூ அன்னக்கொடி. ''மச்சான்!'' என்று வாய்விட்டு விம்மினாள். கூப்பிட்ட குரலுக்குச் 'சடுகுடு' போட்டு ஓட்டமாக ஓடிவரப் பழகியவன் அல்லவா வீரமணி! ஆனால், அழையாத வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தானே பவளம்? அப்பா வரட்டும்! இவளை ஒரு கை பார்க்காமலா நான் நல்ல மூச்சுவிடப் போகிறேன்?— நெடுமூச்சு நீண்டது.

மாமன்காரர் ஆதிமூலத் தேவர் 'இடுக்கி' வைத்திருக்கும் வைரச் சிமிக்கிகளும், அப்பன்காரர் 'சொடுக்கி' வைத்திருக்கும் பிராமிசரி நோட்டும் விக்கிரமாதித்தனின் பதுமைக் காலத்தைச் சிவப்புக் கோடிட்டுக் காட்டியபடி, கூடுவிட்டுக் கூடுபாய்ந்தன. தூக்கியெறிந்து பேசிய பவளக்கொடியின் அநியாயப் பழியும் 'அம்மடங்கு' கொண்ட சவாலும் எதிரொலித்தன. பட்டி செங்கமலத்தின் வேசிக் கூத்தும் தலைவிரித்தாடியது! வலி மண்டையை

உடைத்தது. புகை கண்களைக் கரிக்கப் பண்ணிற்று. எழுந்தாள் ராமையாத் தேவரின் மகள்.

பண்ணையாள் பரமசிவம் விளை நடந்து வந்து நிற்பது மாதிரி வந்து நின்றான்.

உடன் வந்தாள் விசாலாட்சி.

அன்னம் அகம் நிமிர்த்தி, முகம் உயர்த்தினாள்; அந்தி ஒளி முகத்தில் அடிக்கவே, இடம் பெயர்ந்து நின்றாள்; ''வா, சாலாச்சி,'' என்று முகமன் மொழிந்தாள். பிற்பாடு, பரமசிவத்தை இனம் பிடிபடாத ஓர் அருவையோடு நோக்கினாள். ''போன காரியம் என்ன ஆச்சுப்பா?'' என்று விசாரித்தாள்.

''வெள்ளைதான் தொழுவத்தில் நிற்குதே, தங்கச்சி! என்று நினைப்பூட்டினான் பரமசிவம்.

''அது தெரியுது! மற்ற சங்கதி என்னாச்சுடா?''

''எந்தச் சங்கதியைக் கேட்கிறீங்களாம்?'' என்று மக்கு மாதிரி எதிர்க் கேள்வி கேட்டான் வேலைக்காரன்.

அன்னத்திற்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. செங்கமலம் என்ன ஆனாள் என்று அந்நியப் பெண் விசாலத்தின் முன்னே எப்படிக் கேட்க முடியும்?

பரமசிவம் 'போடு', பகடை பன்னிரண்டு!' என்பதுபோலே, ஆந்தை விழிகளை உருட்டிவிட்டான்.

வெற்றிலை எச்சிலைத் துப்பி விட்டு, காலில் குத்திய காரை முள்ளைப்பிடுங்கி வேலிக்குச் சாட்சியாக நின்ற ஒணான் மீது வீசிவிட்டு, மீண்டாள் அன்னம். ''அத்தி பூத்தாப்பிலே வந்திருக்கியே, சாலாச்சி?'' என்றாள்.

விசாலாட்சியை முந்திக் கொண்டான் பரமசிவம். 'ராத்திரி நம்ப வெள்ளையை யாரோ சேப்படி அடிச்சிக்கிட்டு ஓடுற தாக நான் உங்ககிட்டே சொன்னடியும், நீங்க நிற்காமல் ஓடினீங்க. நானும் பின்னாடியே ஓடியாந்தேன். ஆவாரம் பத்தை ஒண்டலிலே, பேயிருட்டு வேளையிலே நீங்களும் உங்க அயித்தை மகன் வீரமணியும் ஒண்ணடியாய் நின்னுக்கிட்டு இருந்





தீங்க. நான் என்பாடு விட்டிச் சின்னு என்னோட குடிசைக்கு ஓடிப்போயிட்டேன், தங்கச்சி! அந்தப் பொம்பளையைப் பற்றி ஊர்க்காட்டிலே ஒரே புரளியாய்க் கிடக்குதாக்கும்!'' என்றான் எடுபிடி ஆள்.

''ஆமா, அன்னம், அந்தப் பொம்பளை பவளக்கொடி உன் மச்சானையும் உன்னையும் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டிப்படைச்ச சங்கதியைப் பற்றித்தான் நம்ப பஞ்சாயத்துக் கேணியடிலேயும் அம்மன் ஊரணிக்கரையிலேயும் சாலை கோனார் சாயாக்கடையிலேயும் கிருஷ்ண தேவர் மகன் ராமசாமி பெட்டிக் கடையிலேயும் பேச்சாய் இருக்குதாம்!'' என்று 'குறுக்குச்சால்' ஓட்டினாள்.

''நான் சொன்னது பவளக்கொடியைப் பற்றி இல்லே!'' என்று திருத்தம் கொடுக்கலானான் பரமசிவம்.

இடம், பொருள், ஏவல் தெரியாமல் உறைப்பார்க்கிறானே பரமசிவம்? ''சரி, சரி!'' என்று அடக்கிவிட்டாள் அன்னம்.

''நெருப்பு இல்லாமல் புகையுமாடி, அன்னக்கொடி?'' என்று கிண்டலாகப் பேச்சைக் கிண்டினாள் விசாலாட்சி. பீழை கண்களில் கொப்புளித்தது.

தலைமயிரைக் கோதிவிட்டாள் அன்னம். ''அந்தாலே எங்க அடுப்பிலே நெருப்பு இல்லாமல் புகையிறதைப் பாருடியோ, விசாலாட்சிப் பொண்ணே!'' என்று ஏளனமாகச் சொன்னாள். ''எங்களுக்கு மடியிலே கனம் இருந்தாத்தானே நானும் எம் மச்சானும் வழியிலே பயப்பட வேணும்? சிலட்டூர்க் குட்டி பவளக்கொடி சூதுக்காரி என்கிற உண்மையையும் நானும் என் நேசமச்சான் வீரமணியும் நிரபராதிங்க என்கிற சத்தியத்தையும் இந்த ஆவணத்தாங் கோட்டை மட்டுமில்லை. அந்த சிலட்டூரும்தான் ஆவணிக் கெடுவிலே தீரத் தெளியப் புரிஞ்சுகிடப் போகுது! சகதியிலே கல்லை வீசினால் நம்ப மேலே தெறிக்கத்தானே செய்யும்? தன் விளையைப் பவளம் அனுபவிக்காமல் தப்பிக்கவிடவா போறாக எங்க காளியும் மாரியும்?'' பேசி முடித்தாள் அன்னம். ஏதோவொரு முடிவுக்கு வந்தவளாகத் தலையை உறுதிப்பாட்டோடு ஆட்டினாள்.

அப்போது பையும் கையுமாக வந்தார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர். தோளில் தொங்கும் கோலாலம்பூர்க் குடையை லாகவமாக எடுத்துத் திண்ணையில் வீசினார்.

''அப்பாவா? வாங்க, வாங்க' என்று வாய் கொள்ளாமல் சிரித்தவாறு, எதுவுமே நடக்காத மாதிரி, மகிழ்வுடன் தந்தையை வரவேற்றாள் அன்னக்கொடி.

''அன்னம்! என்னோட செங்கமலத்தை வைரச்சிமிக்கிகளை ஆசைகாட்டிக் காடு மாற்றியிருக்காங்களாம் சிலட்டூர்க்கங்காணி பெரிய கறுப்பத் தேவரும் உன் மாமன் ஆதிமூலத் தேவரும்!...நானே அந்தப் பெரிய மனுசங்க ரெண்டு பேரையும் காடு மாற்றப் போறேனாக்கும்! அது மட்டும் இல்லே! எனக்குக் கடன் பட்டிருக்கிற ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத் தேவரோட வீடுவாசல், காணிகரை சாடாவையும் விடிஞ்சதும் ஏலத்துக்கு விடப் போறேன்! ஆமாம் அப்பாலே நம்ப வைரச்சிமிக்கிகளுக்காக அவர் பேரிலே தாவா தொடுக்கப் போறேன்!''

ராமையாவின் இப்பேச்சு இக்கெட்டும் ஒலிக்க-எதிரொலிக்க ஆரம்பித்தது!



# 23. முத்துச் சிதறச் சிரித்தாள்

ஊர் நாட்டாண்மைப் பெரியவர் ஆதிமூலத்தேவரின் மைந்தன் வீரமணிக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. ஆகவே, அவனும் எங்கேயும் ஓடாமல் தன்னுடைய சொந்த அறையே சொந்தமென்று எண்ணியும், நம்பியும் அங்கேயே பழியாய்க் கிடந்தான். பேய் இருட்டைப் பேய் விரட்டிய குழல் விளக்கின் அழகான ஒளி வெள்ளத்தில் பிரிந்து கிடந்த பாரதியையும் தாகூரையும் வரவழைத்துக் கொண்ட மனச்சாந்தியுடன் நோக்கினான் அவன். தீஞ்சுவைக் கவிகளின் தீர்க்க தரிசனம் நிரம்பிய சிந்தனைகளிலே அவன் சிந்தை ஆலவட்டம் சுழன்றது; விவசாயப் படிப்பும், அப்படிப்பிற்கான செய்முறைப் பயிற்சியுமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இளங்கோமனையிலும் கழிந்த அந்தக் கனவுலக நாட்களை அவனால் ஒருபோதும் மறக்கவே முடியாது. அந்நாட்களிலே அவன்கொண்ட இலட்சியங்கள் எத்தனை? கண்ட கனவுகள் எத்தனை? நாளும் பொழுதும் களிப்பும் அமைதியுமாக விளங்கிச் சுதந்தர வானம்பாடியாகப் பறந்தவன் அவன். பிரச்னைகளுக்கு அப்பாற்பட்டவன் ஆண்டவன் மாத்திரமல்ல. அவனும்தான் ஒரு காலத்தில் அவ்வாறு இருந்தான். அப்படிப்பட்டவன் இப்போது சோதனைமாதிரி எத்தனை எத்தனை பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல நேரிட்டிருக்கிறது! ஓ!..வாழ்க்கை ஒரு விளையாட்டு அல்ல ! - வாழ்க்கையே ஒரு பிரச்சினைதான் !...

'அன்னம் !.......அம்மான் மகளே, அன்னக்கொடி!' இருட்டுக்கு மகத்தான மாண்பைக் கற்பித்துக் காட்டிக் கொண்டிருந்த ரத்தப்பூக்களை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த வீரமணி வெய்துயிர்ப்பை வெளிப்படுத்தினான். உதிரத்திற்கும் ஓர் உன்னதம் இருக்கத்தான் வேண்டும். அந்த உன்னதம் தியாகத்தினால் விளையுமா? காதலால் விளையுமா? இல்லை, அன்பினால் விளையுமா? நல்ல முடிவுக்கு வந்தவன் மாதிரி நிமிர்ந்து குந்திக் கொண்டான்! மடியைத் தடவிச் சோதித்தான்; கனம் இருந்தால்தானே? பவளக்கொடியின் ஞாபகம் விதியாக மறித்தது. வரும் விதி இராவிலே தங்காதாமே ?.... 'அடிபாவி! பழிகாரி! தமிழ் மண்ணின் மரபையும் பண்பையும் கட்டிக் காக்கும் கடன் உனக்கும் உண்டு என்கிற உண்மையையே நீ மறந்து விட்டாயா? என்னை அழிக்க உன்னால் முடியுமா? பாவம் ! ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்ட பேதை நீ! பேய் நீ !' வைர நெஞ்சில் பிறந்த ஒளி அவனுடைய பேசும் கண்களில் பேசாமல் நிழலாடியது. 'அன்றும் சரி, இன்றும் சரி; ஏன், என்றென்றும் நான் என்னோட சீதை அன்னத்துக்கு உரிய ராமர்தான்!.. பெருமையும் பெருமிதமும் சொக்கட்டான் ஆட, அவன் தலையைக் கம்பீரமாக உயர்த்தினான்; கண்கள் கசியத் தொடங்கின!

அந்தச் சுந்தரக்கனவு ஏட விழ்ந்தது.

வீரமணி ரசித்தான். அன்று அன்னம் முத்துச் சிதறச் சிரிக்கவில்லையா? சிரித்த அந்த முத்துச்சிரிப்பில்மெய்சிலிர்த்தான். அம்மான் மகளே, அன்னக்கொடி ! நம்மோட புனிதமான சொந்தங்களின் நேர்மையான தவம் கட்டாயம் பலிக்கும் ! நீ ராமருக்கு ஏற்ற சீதை; நான் சீதைக்கு ஏற்ற ராமர் என்கிற சத்திய தர்மத்தின் உண்மையை நம்ப ஊர் நாடு சாடாவும் கூடிய சீக்கிரம் உணர்ந்துக்கிடத்தான்போகுது! மனச்சாட்சி முறுவல் ஏந்த, மனம் ஆனந்தமான அமைதி காத்து விம்மியது! — புதிய சிரிப்பொன்று பழைய அலையாக ஆர்ப்பரித்தது. அவன் தலையை வைரம் மின்ன நிமிர்த்தினான். 'அடி பாவி ! உன்பேர் சந்தி சிரிக்கிறதை மறந்திட்டு இப்படிச் சிரிக்கிறதுக்கு உனக்கு வெட்கமாக இல்லையா ? பழிகாரி பவளம்! எனக்கும் என்னோட அன்னத்துக்கும் நீ ஒருநாளும் விதியாக ஆகவே முடியாது !,..ஆமாம்!' —திரும்பினான் வீரமணி.

பாரதி வானொலியில் பாடிக் கொண்டிருக்கிறார்! வீரமணி ரசிகன் ஆனான்.

''பத்துப் பன்னிரண்டு — தென்னை மரம்
பக்கத்திலே வேணும் ; — நல்ல
முத்துச் சுடர் போலே — நிலாவொளி
முன்பு வர வேணும் ! அங்கு
கத்துங் குயிலோசை — சற்றே வந்து
காதிற்படவேணும் ; — என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே — நன்றாயிளந்
தென்றல்வர வேணும்.

பாட்டுக் கலந்திடவே — அங்கேயொரு
பத்தினிப்பெண் வேணும்; — எங்கள்
கூட்டுக் களியினிலே — கவிதைகள்
கொண்டுதர வேணும்; அந்தக்
காட்டு வெளியினிலே — அம்மா ! நின்றன்
காவலுற வேணும்; — என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும் !...''

அமரகவியின் நெஞ்சம் தன்னுள் உருகி வழிந்ததை உணர்ந்ததும், வீரமணிக்குப் புல்லரித்தது. தன்னை மறந்த லயம்; உணர்ச்சி வசப்பட்ட நிலை ; சிக்கல்கள் அனைத்தையும் சிக்கறுத்தது வெற்றியுடன் தலை நிமிர்ந்த ஆனந்தப் பரவசம். பின், பாரதியை-பாரதியின் பாட்டைப் படிக்கத் தடை இருக்காதுதான்!

''காணிநிலம் வேண்டும் — பராசக்தி !
காணிநிலம் வேண்டும் ; — அங்கு
தூணில் அழகியதாய் — நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் — அந்தக்
காணிநிலத்திடையே — ஓர் மாளிகை
கட்டித்தர வேணும் ; — அங்கு
கேணி யருகினிலே — தென்னைமரம்
கீற்று மிளநீரும்.......''

பாட்டு நின்று விட்டது !

வீரமணியின் இதயத்தில் கொடி மின்னல் பாய்ந்தது ; கொடி முல்லை மணத்தது. அன்றைக்கு அன்னக்கொடியிடம் யத்தைத் திறந்து காட்டியும் வீரமணி பேசினான் அல்லவா? சத்தியத் தீபமாய்ப் பொலிந்த அச்சொற்களை வீரமணியும் மறக்க மாட்டான் ; அன்னமும் மறக்க மாட்டாள்.



'அன்னம்!..கடன் இல்லாத சுயேச்சை மனிதனாக - சுதந்தர வீரமணியாக நாணயத்தோடவும் நேர்மையோடவும் நம்ப ஊர்ச் சமுதாயத்தின் வீதிகளிலே தலைநிமிர்ந்து நடமாடவே நான் ஆசைப்படுகிறேன். அப்பத்தான், என் சுய கவுரவம்-தன் மானம் தப்பிப் பிழைக்கும். அப்பன் பாட்டன் சேர்த்து வச்ச நில பலம் அப்படியே போனால் போகட்டுமே? என்னோட நெஞ்சிலே உரமும், நேர்மைத் திறமும் ஆத்தா பலமும் இருக்கையிலே கேவலம் ஒரு காணிநிலம் கூட சுயார்ஜிதமாய்க் கிரயம் பண்ணத்தான் என்னாலே முடியாமல் போயிடப்போகுது ?..

சேரிப் புறத்தினின்றும் ஊளைச்சத்தம் கர்ணகடூரமாக மிதந்து வந்தது.

அச்சத்தம் வீரமணியை என்னவோ பண்ணியது. அம்மான் ராமையாத் தேவரிடம் தன் தகப்பன் பட்டிருக்கும் கடன் அவனைக் கலங்கச் செய்தது, மீண்டும். கடன் கழிந்தால் காற்றுப் போலே. மெய்தான். ஆனால், உபாயம் ?.... யோசனை சூடேறியது. பவளக்கொடியின் பழிசுமத்திய படலமும் குறுக்கே பாய்ந்தது. கண்கள் சிவந்தன. தன்னிடம் முத்தாயப்பு வைத்து அன்னம் சுட்டிய அந்த இரு பொறுப்புக்களையும் நினைத்தான். காற்றில் படபடத்த தமிழரசியின் புனிதப் பதில்கடிதத்தின் மீது தாகூரைச் சுமை வைத்தபோது, ஏடு புரண்டது. 'உனது சிம்மாசனத்திலிருந்து இறங்கி வந்து என் குடிசையில் நிற்கிறாய் !. பாடிப் பழக்கமில்லாத என் கீதம் உன் அன்பைத் தொட்டுவிட்டது !..' நேத்திரங்கள் குளமாக, ''தெய்வமே!'' என்று விம்மினான். முத்தங்கள் தமிழரசியின் விடைக் கடிதத்துக்கு விடை கொடுத்தனவோ? 'தமிழரசி! எங்கள் முதற்காதலை உணர்ந்து, நீ எத்தனை நாகரிகமாக எங்களை வாழ்த்தியிருக்கிறாய்! ஆகா!..'—

''மச்சான் !''

அன்னத்தின் அவசரக் குரல் கேட்டு, சிந்தனையிலிருந்து விழிப்புப் பெற்றான் வீரமணி; முறைப் பெண்ணை வரவேற்றான்.

''பாரதி பாட்டு ரொம்ப நல்லாய் இருந்திச்சுங்க !''

''பாரதி பாட்டு நல்லாய்த்தானே இருக்கும் ?''

''நான் உங்க பாட்டைச் சொல்லுறேன்!''

''ஓகோ! பாரதி பாட்டை நான் கொஞ்ச முந்தி பாடினேனே, அதைச் சொல்றியா? அப்படின்னா, நீ நேரத்திலேயே வந்திட்டியா ?''

''ஊம்!'' என்று ஆமோதித்தாள் அன்னம். வெளிச்சத்தில் அவளுடைய விழிகள் பேசின; அப்பேச்சில் சோகம் மின்னுகிறதே ?

''அந்தப் பொம்பளை செங்கமலம் கிடைச்சாச்சாமா ?''

''அந்தப் பாவியைத்தான் உங்க அப்பாரும் சிலட்டூர்ப் பவளக் கொடியோட அப்பாவும் காடு மாற்றிப்புட்டாங்களாமே ! எங்க அப்பா கொதிச்சுக்கின்னு இருக்காங்க, மச்சான் !''

''அட கடவுளே!'' என்று அனுதாபப்பட்டான் வீரமணி. ''வர வர அப்பாவோட நல்ல புத்தி பிசக ஆரம்பிச்சிடுச்சு. எங்க அப்பாவை உங்க அப்பா மதிமோசம் பண்ணினதுக்குப்



பழிக்குப் பழி வாங்கத் தவிச்சுக்கிட்டு இருக்கார்போலே எங்க அப்பா. அந்தத் தவிப்பிலேதான் மூடின கண்ணைத் திறக்காமல்கூட, தடம்புரண்டு நடக்க ஆரம்பிச்சிட்டார். நான் உனக்குக் கொடுத்த வாக்குப்படி உன் வெள்ளையை உன் கையிலே ஒப்படைச்சதுக்காக எம்மேலே சடைப்பட்டுக்கிட்டு, இந்தக் கும்மிருட்டிலே எங்கிட்டோ பறிஞ்சிருக்காங்க எங்க அப்பா !'' என்றான் அவன்.

''தெய்வம் நம்ப ரெண்டு பேரையும் ரொம்பச் சோதிக்குதுங்களே, அத்தான் ?''

''சோதிக்கிறதுக்காகவே தான் தெய்வம் இருக்குது, அம்மான் மகளே ! அப்பத்தான், மனுசன் மனுசனாக இருக்கானா, இல்லையா என்கிற முடிவு அம்பலமாக முடியும்! ஆனா, இந்த மனுசங்க இருக்காங்களே மனுசங்க, அவங்க சோதிக்கிறதுக்குத்தான் அளவே இல்லாமல் போயிட்டுது!''

''வாஸ்தவம்தானுங்க !''

''அன்புக்காக வாழ்ந்தார் காந்தி!''

''அன்பு எதையும் கேட்காது; கொடுக்கவே செய்யும்னு சொன்னார் அண்ணல். கடைசியிலே அவர் சொல்படி அவர் தம்மோட உயிரையே அன்புக்காகக் கொடுத்திட்டாருங்களே!''

''மகாத்மா !'' என்று செருமத் தொடங்கினான் வீரமணி.

இரத்தம் மாதிரி, இருட்டு உறைந்திருந்தது. மௌனமும் தான்.

''மச்சான்,'' என்றாள் அன்னம்.

தன்னுணர்வு பெற்றான் வீரமணி. 'ம். சொல்லு, அன்னம்' என்றான்.

அவள் என்னவோ சொல்லத் துடித்தாள்; ஆனால், தயங்கினாள்; மருட்சி மீதூர நின்றாள். அப்புறம், ''காரியம் தலைக்கு மேலே போயிடும்போல் இருக்குங்களே, மச்சான்?'' என்று கூறினாள்.

''பவளக்கொடி சமாச்சாரத்தைத் தானே சொல்லுறே? ஆமா, ஆமா,'' என்றான் அவன். நெற்றியைத் தடவிக்கொண்டான். நரம்புகள் புடைத்திருந்தன. ''நம்ம ரெண்டு பேரையும் ஊர்நாட்டுக்கு மத்தியிலே ரெண்டு கேள்விக் குறியாக்கிப்புட்டு, பழிகாரி பவளம் ரெண்டு கேள்விக்குறிக்கும் ஊடாலே ஒரு ஆச்சரியக் குறியாக நிற்கிறாள்!...பவளக் கொடி விதைச்ச வினையை பவளக் கொடியே அறுவடை செய்யாமல் விடப்போறதில்லை நான். அதுக்கெல்லாம் வழி புரிஞ்சுக்கிட்டேனாக்கும்! இந்த ஆவணத் தாங்கோட்டையும் அந்தச் சிலட்டூரும் கண்டு தெளியத்தானே போகுது, அன்னம் !''

அன்னம் 'ஊம்' கொட்டித் தலையாட்டினாள். தோன்றிய ஆறுதல் புன்னகை மாறத் தொடங்கியது. ''உன்னை எனக்குத் தெரியாதா? என்னை உங்களுக்குத் தெரியாதா ? இல்லை, நம்ப ரெண்டு பேரையும் பற்றி அக்கம் பக்கம் பதினாறு ஊர் நாட்டுக்கும் தெரியாதா ?..மச்சான்! நான் சொல்ல இங்கிட்டு வந்த விசயம் வேறே!'' என்று மென்று விழுங்கினாள் ராமையாவின் பெண்.

அன்னமும் வீரமணியும் ஏறிட்டு விழித்தனர்.

பெரியவர் ஆதிமூலம் எள்ளும் கொள்ளும் வெடிக்க நின்றார். களத்துமேட்டில் சாவிக் கதிர்கள் பறப்பது நினைவூட்டின அவருடைய வெண் முடிகள். ஊர் நாட்டாண்மைக்காரர் முதல்பணியாக தமது அருமைத் திருமகனை முறைத்துப் பார்த்தார்; அடுத்த அலுவலாக, தம் மைத்துனன் மகளை வெறித்து நோக்கினார். ''அன்னக்கொடி சமைஞ்ச பொண்ணான நீ வேளை தப்பின வேளையிலே இப்படி அசல் இடத்துக்கு வந்திருக்கிறது அசிங்கம் இல்லையா? கங்காணியார் மகள் பவளக்கொடி எங்க வீரமணி பேரிலே சுமத்தியிருக்கிற பழிச்சொல் இப்பத்தான் என் காதுக்கு எட்டிச்சு!...வந்த வழியைப் பார்த்துக்கிட்டு நீ போ, அன்னம்!..உங்க அப்பன் எங்க காணி, கரை, வீடு, வாசலை ஏலத்துக்கு விட்டுப்புட்டு அவன் இந்த ஊரிலே குடியிருந்திட முடியுமாக்கும் ? விடியட்டும், விடியட்டும்! உன் அப்பனைப் பார்க்கிறேன் ஒரு கை!..முதலிலே நீ இந்த இடத்தைக் காலி பண்ணு, தாயே!'' என்று பிசிறு தட்டிய குரலில் உத்தரவிட்டார் பெரியவர்.

''அப்பா!'' என்று கூப்பாடு போட்டான் வீரமணி. ''என்னோட அன்னம் என் வீட்டுக்கு வாரதுக்கும் போறதுக்கும் நேரம் காலம் பார்க்க வேணும்னு ஒரு விதியும் கிடையாது. அது என் சொந்த விஷயம்; எங்க சொந்த விஷயம் அது!... எங்க மானத்தைக் கட்டிக் காத்துக்கிட எங்களுக்குத் தெரியும். நீங்க உங்க மானத்தைக் காபந்து பண்ணிக்கிடுங்க, போதும்!'' என்று வெடித்தான் தேவரின் அன்பு மகன்.

**படகுத் துறைத் திட்டம்.**

தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணிக் கருகிலுள்ள மல்லிப் பட்டினத்திலும், வேதாரண்யத்திற்கு அருகிலுள்ள கோடிக்கரையிலும் மீனவர் துறைமுகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விதத் துறைமுகங்கள் அமையுமானால் அவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று திரும்பி வரும்பொழுது படகுகளை வசதியாகக் கரையோரத்தில் நிறுத்த உதவியாக இருக்கும். மல்லிப் பட்டினத்தில் துறைமுகம்கட்ட ரூ. 15.85 இலட்சத்திற்கும், கோடிக்கரையில் துறைமுகம் கட்ட ரூ. 20.50 இலட்சத்திற்கும் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர மீனவர்கள் பயன்படுத்தும் கட்டு மரங்களில் நவீன வசதியான இயந்திரங்களைப் பொருத்துவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டப்படி, மல்லிப்பட்டினத்தில் வாழும் மீனவர்களுக்கு அவர்களுடைய கட்டு மரங்களிலும் நாட்டுப் படகுகளிலும் பொருத்துவதற்காக ரூ. 2.40 இலட்சம் செலவில் 10 இயந்திரங்கள் வாங்கப்படும். இந்த இயந்திரங்களுக்கு அரசு செய்யும் முழுத் தொகையையும் 60 மாதாந்திரத் தவணைகளில் வசூல் செய்யும். மேலும் பூம்புகாரில் ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் கூட்டு முறையில் மீனவர்களுக்கு 39 விசைப் படகுகள் வழங்கத் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 24.76 இலட்சம். இந்தப் படகுகள் இந்த ஆண்டு கூட்டு முறையில் மீனவர்கட்கு வழங்கப்படும்.

அன்னம் விம்மினாள். ''மச்சான்! நம்ப சொந்தங்கள் வாழும்; வாழ்ந்து காட்டும் அப்படின்னு கனவு கண்டேன். ஆனா, ஆத்தாளும் மாமாவுமே சோதிக்கிறாங்க!.... அத்தான்! என்னை முகாந்திரமாய்க் கொண்டு நீங்க உங்களைப் பெற்ற அப்பன்காரரோட மல்லுக்கு நிக்காதீங்க. உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டுங்க!...நான் போயிட்டு வாரேன்! ஊம்...நான் போறேனுங்க!''

இருட்டு சிரிக்கிறது!
இப்போது, அங்கே :

தந்தையும் தனயனும்தான் மிச்சம்!..

சிந்தனை வயப்பட்ட நிலையில் அன்னத்தை நோக்கி நடந்த வீரமணி, அலமாரியில் பதுங்கிக் கிடந்த அறந்தாங்கி ஸ்டேட் பாங்கியின் சேமிப்புக் கணக்கு நோட்டைப் புரட்டிக்கொண்டு, ''வேறே என்ன விஷயம், அன்னம் ?'' என்று பதட்டத்தைக் கட்டுப்படுத்திக்கொண்ட நிதானத்தோடு விசாரித்தான். ''எங்க அப்பாவுக்கு உங்க அப்பா கொடுக்க வேண்டிய கடன் ரூபாய் இருபதாயிரத்துக்கு எங்க அப்பா கோர்ட்டுக் கச்சேரியிலே டிகிரி வாங்கி வச்சிருக்காங்க, இல்லீங்களா? அதை வச்சு......?'' என்று பேச்சை முடிக்க மாட்டாமல் திண்டாடினாள் அன்னம்.

''சல்தியாய்ச்சொல்லேன்'',

அன்னம் மனப்பாடம் ஒப்புவிப்பதுமாதிரி சொல்லலானாள்: ''எங்க கடனுக்காக உங்க வீடு வாசல், காணி, கரை எல்லாத்தையும் விடிஞ்சதும் ஏலத்துக்கு விடுறதுக்கு உத்தரவு வாங்கி வந்திருக்காகளாம் எங்க அப்பன்காரர்!.... இந்த ரகசியம் வெளியே காற்றுப் பறியக்கூடாதின்னு சொன்னாங்க எங்க அப்பா. இதை உங்க காதிலே விழுக்காட்டத்தான் பயந்து பயந்து இந்தப் பேயிருட்டிலே ஓடியாந்தேனுங்க,'' என்று நிறுத்தினாள் அன்னம். புடவைத் தலைப்பு, கண்களை நாடியது.

வீரமணி வாயடைத்து நின்றான்.

செருப்புச் சத்தம் துடித்தது.

—அடுத்த இதழில் முடியும்.

# உறுதியாகத் தெரியுமா?

நீங்கள் வாங்குவது மட்ட ரகப் போலி அல்ல, ஜெனித் குழாய் தான் என்று உறுதியாகத் தெரியுமா?
குழாய் மீது ஜெனித் அடையாளம் இருக்கிறதா பாருங்கள்.

பார்த்து வாங்கினால் பலனுண்டு. ஏனெனில், அசல் ஜெனித் எஃகுக் குழாய்களை வாங்கும்போது தரமான எஃகுக் குழாய்களைப் பெறுகிறீர்கள், 45 நாடுகளுக்கு ஏற்றுமதி பெறத்தக்க, சர்வதேசத் தரம் பொருந்திடத் தயாரிக்கப்படும் குழாய்களை அடைகிறீர்கள். கறாராகப் பரிசோதிக்கப்படுகின்றன ஆதலால் இயல்பான நிலைகளிலே ஓர் ஆயுட்காலம் நீடித்துழைக்கும் அளவுக்கு, பலவீனமான இடமே இல்லாமல் ஒருசீரான சுவர்ப் பருமனும், வலிமையும், கட்டுறுதியும் படைத்துள்ள எஃகுக் குழாய்கள் இவை. விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் எதற்கும் சரி, எவ்விதத் தேவைக்கும் யாவரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பது ஜெனித்.

ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிட்.,
195, சர்ச்கேட் ரிக்ளமேஷன்.
பம்பாய் 400 020.
போன் : 294445. தந்தி: ZENPIPES
டெலெக்ஸ் 011-2458.

erest/667a/ZSP-tm




# பருத்தியில் ... பரவுகிறது

**கோ**வை மாவட்டத்தில் பருத்தி இரண்டாவது முக்கிய பயிராகும்! இங்கு பருத்தி ஏறத்தாழ 1,29,510 எக்டேர்களுக்கு மேலாகச் சாகுபடி செய்யப்பட்டு சுமார் 1,86,170 பேல்கள் பஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டிலேயே பருத்தி வேளாண்மையில், கோவை மாவட்டம் சிறந்து விளங்குகிறது என்று கூறினால் மிகையாகாது. முன்னேற்ற வேளாண்மை முறைகளைக் கடைபிடிப்பதால், நம் மாநிலத்தின் பருத்திச் சராசரி மகசூல் எக்டேருக்கு 850 கிலோவிலிருந்து 1,350 கிலோவிற்கு உயர்ந்திருந்தாலும், ஐக்கிய அரபுக் குடியரசு, சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு போன்ற நாடுகளில் கிடைக்கும் எக்டேர் விளைச்சலை இன்னும் அடையவில்லை! இந்தியா, பருத்தித் தேவையில் தன்னிறைவு அடைய, உழவர் பெருமக்கள் திருந்திய வேளாண்மை செய்வது மட்டுமல்லாமல், அதில் அடையும் அதிக விளைவைப் பாதுகாக்கவும் பாடுபட வேண்டும். எந்தச் சிறு சேதத்திலிருந்தும் பருத்தியைப் பாதுகாத்து இழப்பைத் தடுக்க வேண்டும். அண்மையில் கோவை மாவட்டத்தில் சில வகைப் பருத்தியில் 'பாக்டீரியாக் கருகல்' எனப்படும் நோய் பெருவாரியாகத் தோன்றியுள்ளது.

இந்த நோய் 1918-ஆம் ஆண்டில் ராஜபாளையத்தில் முதன் முதலாக கம்போடியா பருத்தி ரகங்களில் தோன்றியது. கடந்த சில ஆண்டுகளாகக் கோவையில் இந்த நோய் அதிகம் தோன்றவில்லை. எனினும் இப்பொழுது கோவை மாவட்டத்தில் மத்தம்பாளையம், காரமடை போன்ற இடங்களில் 'வரலட்சுமி' போன்ற ஒட்டுப் பருத்திகள் விதைத்த வயல்களில் இந்த நோய் 45 முதல் 50 நாள் பயிரில் பெருவாரியாகத் தோன்றியுள்ளது. இது ஏனைய 'கம்போடியா', 'பார்படென்ஸ்' பருத்தி ரகங்களுக்கும் பரவக் கூடியது. கடும் வெய்யிலோடு கூடிய மழைச் சாரல் தோன்றும் பொழுது, நோய்க் கிருமிகள் பரவி நோயுண்டாக்குகிறது.

இந்த நோய் பெருமளவில் தாக்கினால் [illegible] சத விகிதம் வரை பஞ்சு மகசூலில் குறைவு ஏற்படலாம்! ஆதலால்தான் உழவர்களுக்கு இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்குரிய அறிவுரை தர முன் வந்துள்ளோம்.

'பாக்டீரியாக் கருகல்' நோய் 'சாந்தமோனஸ் மால்வேசியரம்' (Xanthomonas malvacearum) என்னும் பாக்டீரியாவால் உண்டாகிறது. இது விதைகளின் மூலமாகப் பரவுகிறது. விதையின் புறத்தோலிலும், நூல் இழைகளிலும் தொற்றியுள்ள 'பாக்டீரியா', விதை முளைத்ததும் இளஞ் செடிகளைத் தாக்கி நோய் உண்டாக்குகிறது. இம் மாதிரி நோய் கண்ட செடிகளில் உள்ள 'பாக்டீரியா' அடுத்துள்ள செடிகளையும் தொற்றுவதால் நோய் பரவுகிறது. இது தவிர, கடந்த வேளாண் பருவத்தில் நோய் உற்ற செடிகளிலிருந்து கீழே விழுந்த இலைச் சருகுகளின் 'பாக்டீரியா' மூலமாகவும் பரவி நோய் ஏற்படும். தாக்கப்பட்ட இலைகளில் உள்ள 'பாக்டீரியா' 18 மாதங்கள் வரை வீரியமுடன் இருக்கும் என்று அறியப்பட்டுள்ளது.

## நோயின் அறிகுறிகள்

செடிகளின் இலைகளினுட் சென்ற 'பாக்டீரியா', திசுக்களை அழிப்பதால், இலைகளில் சிறு பழுப்பு நிறக் கோண வடிவப் புள்ளிகளும், இலைக் கருகலும் தோன்றும். இந்த காரணத்தால் இந்த நோய்க்குப் 'பாக்டீரியாக் கருகல்' எனப் பெயர் அமைந்துள்ளது. இலைகளின் கருகலினால் பெருவாரியாக பழுப்பு நிறக் கோடுகளோ, வெடிப்புகளோ தோன்றும். இக் குணத்திற்குக் 'கருங்கிளை' என்று கூறுவர். காய்களிலும் குழி விழுந்த புள்ளிகள் தோன்றி, காய்கள் அழுகுவதோடல்லாமல், பஞ்சும் பழுதடைந்து, விதைகளிலும் 'பாக்டீரியா' தொற்றிக் கொள்கிறது. இதனால்தான் இந்த நோய் முக்கியமாக விதைகள் மூலம் பரவுகின்றன என்று கூறினோம்.

## தடுப்பு முறைகள்

விதைகளில் 'பாக்டீரியா' தொற்றி நோயுண்டாக்குவதால் முதலில் விதைகள் மூலமாக நோய் பரவுவது தடுக்கப்பட வேண்டும். விதைகளை அமிலச் சிகிச்சை செய்த பின், ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் மருந்து என்ற விகிதத்தில் 'அக்ரசான்', 'செரசான்' போன்ற பாதரச மருந்துகள் ஒன்றுடன் கலந்து விதைக்க வேண்டும். அமில சிகிச்சை செய்வதற்கு ஒரு கிலோ



விதைக்கு, 125 மில்லி லிட்டர் அடர் கந்தக அமிலம் (Concentrated suphuric acid) தேவைப்படும். 8 முதல் 10 நிமிடம் வரை அமிலத்தில் மூழ்த்தி எடுத்த பின், மிகுதியான தண்ணீரில் இட்டு, மிதக்கும் விதைகளை அப்புறப்படுத்த வேண்டும். நல்ல விதைகளை நிழலில் உலர்த்திய பின் 'அக்ரசான்' போன்ற மருந்துகளுடன் கலந்து விதைக்க வேண்டும்.

வளர்ந்த பயிரில் சாதாரணமாக விதைத்து 1.5 முதல் 2 மாதங்களுக்குப் பிறகுதான், இந்தப் 'பாக்டீரியாக் கருகல்' தோன்ற ஆரம்பிக்கிறது. இதைத் தடுக்க 'அக்ரிமைசின்-100' என்ற மருந்துடன் பிளைட்டாக்ஸ்', 'பைட்டலான்', 'காப்பர் சாண்டோஸ்' போன்ற தாமிரக் கலவை மருந்துகளில் ஒன்றைக் கலந்துத் தெளிக்க வேண்டும். 'அக்ரிமைசின்-100' சிந்தாமணி சூப்பர்மார்க்கட்டிலே கிடைக்கடலாம். எக்டேருக்கு 'நூறு கிராம்கள் 'அக்ரிமைசின்-100' மருந்தும், 2 கிலோ தாமிரக் கலவை மருந்தும் தேவையாகும். இம் மருந்துகளை விசைத் தெளிப்பான் மூலமாகவோ, கைத் தெளிப்பான் மூலமாகவோ வேண்டிய அளவு தண்ணீரில் கலந்துத் தெளிக்கலாம். விதைத்து இரண்டு மாதங்களுக்குப் பிறகுத் தொடங்கி, மூன்று வாரங்களுக்கு ஒரு முறையாக, மொத்தம் நான்கு அல்லது ஐந்து முறைகள் தெளிக்க வேண்டும். இதனால் 'பாக்டீரியாக் கருகல்' கட்டுப்படுத்தப்படுவதோடு, 'ஆல்ட்டர்நேரியா' புள்ளி நோய், 'சர்க்கோஸ்போரா' புள்ளி நோய் மற்றும் 'துரு' ஆகிய நோய்களும் தடுக்கப்படும். பஞ்சு விளைச்சலும் 25 சதவிகிதம் வரை அதிகமாகலாம்.

எனவே, முக்கியமாக ஒட்டுப் பருத்தி விளைவிக்கும் உழவர் பெருமக்களை, மேற்கூறிய தடுப்பு முறைகளை மேற்கொண்டு இப் புதிய நோயை மேலும் பரவாமல் தடுத்துப் பருத்தி விளைச்சலைப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :—

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

# ஐ.ஆர்.8 அரிசியிலும் மென்மையான இட்லி!

இட்லி ஆவியில் வேகும் உணவாகும். உடலில் எளிதாக ஜீரணமாகக்கூடியது. இட்லி நம் நாட்டின் தென் பாகத்தில் மட்டுமின்றி மற்றப் பகுதிகளிலும் பரவி வருகிறது. இட்லிக்குத் 'தாய்ப்பலகாரம்' என்ற பெயரும் உண்டு. இட்லி தயாரிப்பதற்குப் புழுங்கலரிசியே உபயோகிக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே.

இட்லி தயார் செய்வதற்குப் பெருல்பாலும் நான்குபாகம் அரிசியும், ஒரு பாகம் உளுத்தம் பருப்புமே நாம் உபயோகிக்கிறோம். அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய 'ஐ.ஆர். 8' அரிசியில் இட்லி தயாரித்தால், இட்லி மென்மையாக இல்லையென்றும், பிசு பிசுவென்று ஒட்டிக் கொள்கிறது என்றும், நமது குடும்பப் பெண்மணிகளில் பலர் கூறிவருகின்றனர். 'ஐ.ஆர். 8 அரிசியை உபயோகித்து நல்ல மென்மையான இட்லி தயாரிக்க முடியுமா?' என்றும் கேட்ட வண்ணமிருக்கின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைக் கழகத்தின் உணவு நுண்ணியல் துறையில் 'பங்கஜ்', 'ஜெயா', 'விஜயா', 'காஞ்சி', 'காவேரி', 'கிருஷ்ணா', 'ரத்னா', 'கன்னகி', 'கருணா', 'பத்மா', 'ஐ.இ.டி. 849', 'ஐ.ஆர். 8' 'ஐ.ஆர். 20', 'ஐ.ஆர். 22', 'யமுனா', 'பொன்னி', 'அன்னபூர்ணா' ஆகிய பதினெழுவகை நெல் வகைகளில் எந்த வகைகள், இட்லி தயார் செய்ய பொருந்தாமல் இருக்கின்றன?'' என்று அறியவும், ''அதன் காரணத்தையறிந்து எவ்வாறு அந்த வகை நெல்லை நன்முறையில் பதப்படுத்தி மென்மையான இட்லி தயாரிக்கலாம்?'' என்று அறியவும், ''இட்லி தயாரிப்பதற்கு உளுத்தம் பருப்பை மட்டும் உபயோகிக்காமல் மற்ற பருப்புக்களையும் உபயோகிக்க முடியுமா?'' என்று அறியவும், ''அதிலுள்ள உணவுச் சத்துக்கள் எவ்வாறு மாறுபடுகின்றன?'' என்று அறியவும் ஒரு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

மேற்கூறிய 17 நெல் வகைகளை உபயோகித்து இட்லி தயார் செய்து, அதன் குணங்களை ஆராய்ந்தபோது நம் குடும்பப் பெண்மணிகள் கூறியதுபோல் 'ஐ.ஆர். 8' மற்றும் 'ஐ.ஆர். 20' 'ஐ.ஆர். 22' ஆகிய அரிசிகளில் தயாரித்த இட்லிகள் கடினமாகவும், யவராலும் விரும்பப்படாமலும் இருந்தன. 'யமுனா', 'பொன்னி', 'அன்னபூர்ணா' ஆகிய அரிசிகளில் தயாரித்த இட்லிகளின் நிறம் குறைந்தும், பெருவாரியாக விரும்பப்படாமலும் காணப்பட்டன.

அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய 'ஐ.ஆர். 8' நெல்லைப் பல முறைகளிலும் பக்குவப்படுத்தி, புழுங்கலரிசி தயாரித்து இட்லி தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

### ஐ. ஆர். 8 அரிசியின் குணங்கள்

ஐ.ஆர். 8 அரிசியில் உள்ள 'என்டோஸ் பெர்ம்' (Endosperm) என்ற 'முளைசூழ்தசை' மிகவும் மென்மையாக இருப்பதாலும், 'அமிலோஸ்' (Amylose) என்ற பொருள் மிகவும் குறைந்து காணப்படுவதால் குறைந்த வெப்பத்தில் வெந்து விடுவதாலும், இந்த அரிசியில் தயார் செய்யும் இட்லி பிசுபிசுப்புடன், மென்மையற்று இருக்கிறது. ஐ.ஆர். 8 அரிசியில் [illegible] நல்ல மென்மையான இட்லி தயார் செய்வதற்கு கீழ்க்கண்ட முயற்சிகள் கையாளப்பட்டன.

1. ஊறவைத்த நெல்லை அதிக அளவு நீரில் வேக வைப்பதற்குப் பதிலாக ஆவியில் அவித்துப் புழுங்கலரிசி தயாரித்தல்.

2. அரிசியில் ரவை தாரித்து அதை இட்லி மாவிற்கு உபயோகப்படுத்துதல்.

3. உளுந்து மாவுடன், வெண்டைக்காய் காம்புகளையும் சேர்த்து அரைத்து உபயோகப்படுத்துதல்.

நல்ல மென்மையான, பிசுபிசுப்பில்லாத இட்லி தயார் செய்ய 'ஐ.ஆர். 8' நெல்லைக் கீழ்க்கண்டவாறு பதப்படுத்தி புழுங்கலரிசி தயார் செய்ய வேண்டும்.

**மென்மையான இட்லிக்கு 'ஐ.ஆர். 8' புழுங்கலரிசி தயார் செய்தல் :**

'ஐ. ஆர். 8' நெல்லை முதல் நாள் இரவு, போதிய அளவு நீரில் ஊறவைக்கவும். மறுநாள் காலை ஊறவைத்த நெல்லை எடுத்து மற்றொரு பாத்திரத்தில் (அல்லது ஆட்டோகிலேவ் என்ற குக்கரில்) போட்டு, மூடிவிட்டுவிட வேண்டும். இதில் அதிக நீர் விடாமல், நனைத்த நெல்லில் உள்ள ஈரத்தினால் உண்டாகும் ஆவியிலேயே (Steaming) அவிக்க வேண்டும். நெல்லின் விதத்திற்குத் தகுந்தவாறு 25 முதல் 30 நிமிடத்தில் நெல் உமி வெடிக்கத் தோன்றும். இவ்வாறு நெல் மேல் தோல் வெடிக்க ஆரம்பித்தவுடன் அடுப்பிலிருந்து எடுத்து, கீழே கொட்டி, ஒரு சணல் பையைப் போட்டு மூடிவிட வேண்டும். பிறகு ஆவி அடங்கியவுடன் நிழலில் நெல்லைக் காய விட வேண்டும். பிறகு மில்லில் கொடுத்து அரைத்தப் புழுங்கலரிசியை உபயோகிக்கலாம்.

### புழுங்க வைப்பதற்கும் அவித்தலுக்கும் உள்ள வேறுபாடுகள்

நெல்லை வேக வைப்பதற்கும், அவித்தலுக்கும் ஆகும் கால வேறுபாடுகளைக் காணவும், இரண்டு முறைகளிலும், தயாரித்த அரிசியில் உள்ள, புரதச்சத்தின் அளவை அறியவும், 'ஐ.இ.டி. 849', 'கோ. 36', 'பவானி', 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20' ஆகிய நெல் வகைகளை உபயோகித்து, இந்த இரண்டு முறைகளும் கையாளப்பட்டன.



**நெல்லைப் பக்குவப்படுத்த ஆகும் நேரம் :**

நெல்லை நீரில் வேக வைப்பதற்கு 40 முதல் 50 நிமிடங்களும், அவித்தலுக்கு 20 முதல் 30 நிமிடங்களுமே ஆகின்றன.

**புரதச்சத்திலுள்ள வேறுபாடு :**

இந்த இரண்டு முறைகளாலும் தயாரிக்கப்பட்ட அரிசியில் உள்ள புரதச்சத்தை ஆராயும் போது, ஆவியில் அவித்துத் தயார் செய்த அரிசியில் வேகவைத்துத் தாரித்த அரிசியை விட, 1.5 சதம் புரதம் அதிகமாகக் காணப்படுகிறது.

இம்மாதிரி அதிக நீர்விட்டு வேகவைப்பதற்குப் பதிலாக ஆவியில் அவித்த 'ஐ.ஆர். 8' அரிசியில் நான்கு பங்கு எடுத்துக்கொண்டு ஒரு பங்கு உளுத்தம்பருப்பு கலந்து இட்லி தயார் செய்தால் நல்ல மணத்துடன் கூடிய மென்மையான பிசு பிசுப்பில்லாத இட்லி கிடைக்கும். இந்த இட்லி பார்வைக்கு நன்றுகவும், கடினமின்றியும், சுவையாகவும் இருக்கும்.

**அரிசி ரவையில் இட்லி தயாரித்தல்:**

நாம் யாவரும் நெல்லையே வாங்கி, புழுங்கலரிசி தயாரிக்க முடியாது. நகரங்களில் உள்ள பெரும்பாலானவர்கள் கடைகளில் விற்கும் புழுங்கலரிசியையே வாங்கி உபயோகிக்கின்றனர். அப்புழுங்கலரிசி சரியான பக்குவ முறையில் தயாரிக்கப்படாமலிருப்பதால், அதை உபயோகித்துச் செய்யும் இட்லியும் மென்மையற்று கடினமாக இருக்கிறது.

இவ்வாறு கடைகளில் வாங்கும் அரிசியை ரவையாக அரைத்து, ஆவியில் 15 நிமிடம் அவித்தவுடன் ஆறவிட வேண்டும். இவ்வாறு அவித்தெடுத்த அரிசி ரவை நான்கு பங்கையும், ஒரு பங்கு உளுந்தையும் ஊற வைத்து, மாவாக்கி, எடுத்துக்கொண்டு, இரண்டையும் உப்புடன் கலந்து புளிக்க வைக்க வேண்டும். மறுநாள் காலை இந்த மாவில் இட்லி செய்தால், இந்த இட்லி பிசு பிசுவென்றும், கடினமாகவும் இல்லாமல்-நறுமணத்துடன் மென்மையாக இருக்கும்.

### வெண்டைக்காய் காம்புகளை உபயோகித்தும் இட்லி செய்யலாம்!

நம் வீடுகளில் வெண்டைக்காய்களைச் சமையலுக்காக நறுக்கும்போது அதன் நுனிக் காம்புகளை உபயோகிப்பதில்லை. நான்கு பங்கு அரிசியுடன் ஒரு பங்கு உளுந்து எடுத்துக் கொண்டு, ஊறவைத்து மாவு அரைக்கும் போது ஐந்து அல்லது ஆறு வெண்டைக்காய்க் காம்புகளையும் உளுத்தம் பருப்புடன் சேர்த்து நன்றாக அரைத்து, உப்பு கலந்து, மாவைப் புளிக்கவிட வேண்டும். வெண்டைக்காய்காம்புகளைச் சேர்த்து பருப்பை அரைக்கும்போது, அதிக வழுவழுப்பாகவும், மென்மையாகவும் இருக்கும். வெண்டைக்காயிலுள்ள இந்த பிசுபிசுப்பான பொருள், சர்க்கரைச் சத்துடன் கூடி மாவை நன்கு புளிக்கச் செய்ய உதவுகிறது. இவ்வாறு தயாரித்த மாவில் செய்த இட்லி, மிக மிக மென்மையானதாகவும், சிறந்தருசி, மணம், நிறம் ஆகியவற்றுடன் சிறந்து காணப்படுகிறது.

—திருமதி சுசீலா திருமாறன்,
உணவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.

கல்லூரியில் பயில்வதற்குத் தகுதி பெற்ற மாணவர் அனைவரும் இனிமேல் அரசுப் பணித் தேர்வு எழுதுவதற்குத் தகுதியுடையவர் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

# எங்கெங்கு காணினும் உயர் விளைச்சல் ரகங்களே

பச்சைப் பசேலென்றிருந்த நெல் வயல்களுக்கு இடையே வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்த சிறிய பாதையில்—காலை 8.00 மணி அளவில்—தமிழ் நாடு வேளாண்மைத்துறையின் 2 'வேன்' களும், 2 'ஜீப்' களும் விரைந்து ஓடிக் கொண்டிருந்தன! அந்த வாகனங்களில் அமர்ந்திருந்த பத்திரிகை நிருபர்களும், தமிழ் நாடு வேளாண்மைத் துறையின் அலுவலர்களும் காலை வேளையின் புத்துணர்ச்சியுடன் வெகு ஆர்வமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

''உணவு தானிய உற்பத்தியைக் குறுகிய காலத்தில் பெருமளவில் பெருக்குவதற்குத் தமிழ் நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளில் முக்கியமானது உயர் விளைச்சல் ரகத் திட்டம் (High Yielding Varieties Programme) தமிழ் நாட்டில் உயர் விளைச்சல் ரகத் திட்டம் முதன் முதலாகப் பெரும் பரப்பில் புகுத்தப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக விளங்குகிறது செங்கற்பட்டு மாவட்டம். செங்கற்பட்டு மாவட்ட வேளாண்மையின் வெற்றி, பருவ மழையைப் பொறுத்தே அமைகிறது. செங்கை மாவட்ட மண் பெரும்பாலும் மணற் பாங்கான வண்டலாகவும், ஆற்று வண்டலாகவும் உள்ளது. செங்கை மாவட்டத்தில் ஏறத்தாழ 0.5 இலட்சம் ஏக்கர் உவர், களர் நிலங்களாக உள்ளது. செங்கை மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 8.2 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இச்சாகுபடி, வழக்கமாக சம்பா பட்டத்தில் 5 இலட்சம் ஏக்கர், நவரைப் பட்டத்தில் 2.4 இலட்சம் ஏக்கர், சொர்ணவாரி பட்டத்தில் 0.8 இலட்சம் ஏக்கர் என்ற அளவில் நடைபெற்று வருகிறது. சம்பா பட்டத்தில் ஏறத்தாழ 1.2 இலட்சம் ஏக்கரில் முதலில் மானாவாரியாக விதைத்து, பிறகு பருவ மழை பெய்து ஏரிகளிலே நீர்த் தேங்கியதும் நீர்ப் பாசனம் செய்து நன்செய்போல் பயிரிடும் முறையிலே (Semi Dry Cultivation) சாகுபடி செய்யப்படுகிறது. இது செங்கை மாவட்டத்திற்கே உரிய தனிச் சாகுபடி முறையாகும். 1965 -ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் தீவிர வேளாண்மைப் பகுதி திட்டம் (Intensive Agricultural Area Programme) செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், எல்லா ஒருமித்த செய்நேர்த்தி முறைகளையும் (All Package of Practices) மேற்கொள்ளச் செய்து, குறிப்பிட்ட பரப்பின் உற்பத்தியைப் பெருக்குவதில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. ஒருமித்த செய் நேர்த்தி முறைகளைக் கூட்டு விளக்கத் தளை (Composite demonstration Plot), தேசிய விளக்கத் தளை (National demonstration Plot) ஆகியவற்றின் மூலம் உழவர் பெருமக்களுக்கு விளக்கப்படுகிறது. மேலும் முக்கியப் பயிர்களுக்கான சாகுபடித் தேவைப் பொருள்களையும், கடன் வசதிகளையும் தேவையான காலத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. நெல், சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, பருத்தி ஆகிய முக்கிய பயிர்கள் இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன' என்று சென்னை மண்டல துணை வேளாண்மை இயக்குநர் திரு. வி. ஆதிசேசன் அவர்கள் குறிப்பிட்டார்.

''உயர் விளைச்சல் ரகங்கள் செங்கை மாவட்டத்தில் எத்தனை சத அளவில் பரவியுள்ளது என்பதைக் கூற முடியுமா?'' என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

''செங்கை மாவட்டத்தில் நெல் பயிரிடப்படும் மொத்த பரப்பில் 80 சத அளவு பரப்பில் உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடப்படுகின்றன'' என்று துணை வேளாண்மை இயக்குநர் பதிலளித்தார்.

''மீதியுள்ள 20 சத பரப்பில் உயர் விளைச்சல் ரகங்கள் பரவாததற்குக் காரணம் என்ன?'' என்று மற்றொரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

''செங்கை மாவட்டத்தில் சம்பா பட்டத்தில் 1.2 இலட்சம் ஏக்கர் மானாவாரியாக விதைக்கப்பட்டு, பிறகு வடகிழக்குப் பருவ மழை காலத்தில் பாசன வசதி பெறுகிறது என்று முன்பே குறிப்பிட்டேன் இச் சாகுபடி முறை, உயர் விளைச்சல் ரகங்கள் பரவுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன. ஏனெனில், இப் பகுதிகளில் பொதுவாகப் பருவ மழை—காலம் தள்ளிப் பெய்தாலும் நெற்பயிர் சேதம் அடையக் கூடாது என்பதற்காக—நீண்ட கால வயதுடைய நெல் ரகங்களையே மானாவாரியாக விதைத்து வருகின்றனர். ஆனால் தமிழ் நாடு வேளாண்மைத்துறை இப் பகுதிகளில், 'ஐ.ஆர். 20', 'பொன்னி' ஆகிய உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட்டு, உள்ளூர் ரகங்களிலிருந்து பெறுவதைவிட அதிக மகசூல் பெற முடியும்—அதுவும் குறிப்பாக வறட்சி நிலையிலும் அதிக மகசூல் பெற முடியும்—என்பதை 'அனுசரனை' ஆராய்ச்சி (Adaptive Research) சோதனை மூலம் மெய்ப்பித்து வருகிறது. வேளாண்மைத் துறையின் பல் வேறு விரிவினை முறைகள் மூலம், மானாவாரியாகப் பயிரிடப்பட்டு வரும் பரப்பில்—நீண்ட கால ரகம் பயிரிடும் பரப்பில்—40 சத அளவு பரப்பு, உயர் விளைச்சல் ரகங்களின் கீழ் வந்துவிட்டன'' என்று துணை வேளாண்மை இயக்குநர் திரு. ஆதிசேசன் அவர்கள் குறிப்பிடுவதற்கும், பத்திரிகை நிருபர்கள் அமர்ந்து சென்ற வண்டி நிற்பதற்கும் சரியாக இருந்தது.

சிட்லபாக்கம் என்ற ஊரைச் சார்ந்த உழவர் பெருமகன் திரு. கே. ராமதாஸ் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கும், வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கும் வணக்கம் தெரிவித்து வரவேற்று, தன்னுடைய வயலில் கூட்டு விளக்கத் தளை அமைந்திருந்த இடத்திற்கு எல்லாரையும் அழைத்துச் சென்று விளக்கத் தளையைக் காட்டினார்.

''நான் வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் ஒரு ஏக்கரில் இந்தக் கூட்டு விளக்கத் தளையை அமைத்தேன். சொர்ணவாரி பட்டத்தில் 'கன்னகி' நெல் பயிரிட்டேன். ஏக்கருக்கு 2,750 கிலோ நெல் கிடைத்தது. தடுப்புத் தளையில் (Control Plot) கிடைத்ததைவிடக் கூட்டு விளக்கத் தளையில் ஏக்கருக்குக் கூடுதலாக ரூபாய் 1,200 இலாபம் கிடைத்தது. சம்பா பட்டத்தில் இரண்டாவது பயிராகப் 'பவானி' பயிரிட்டுள்ளேன். நவரைப் பருவத்தில் இதே தளையில் மூன்றாவது பயிராக மீண்டும் 'கன்னகி' பயிரிடத் திட்டமிட்டுள்ளேன். வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் பயிரிட்டால் நிச்சயமாக உணவு உற்பத்தியும் பெருகும்; உழவர்களின் வருவாயும் பெருகும்'' என்றார் திரு. கே. ராமதாஸ்.

''எல்லா ஒருமித்த செய்நேர்த்தி முறைகளையும் மேற்கொண்டால் உற்பத்தியைப் பெருக்கிடலாம் என்பதை உழவர்களுக்கு தெளிவு படுத்துவதற்காக தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் பகுதிகளில் நெல், சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்களில் இத்தகைய கூட்டு விளக்கத் தளை அமைக்கப்படுகிறது. இத்தளை 1 ஏக்கர் பரப்பு கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு செயல் விளக்கத் தளையிலும் தொடர்ந்து 3 பயிர் செய்யப்படும். இத்தகைய 54 கூட்டு விளக்கத் தளை இந்த ஆண்டில் செங்கை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் செயல் விளக்கத் தளை அமைக்கும் உழவருக்கு, ஒவ்வொரு பயிருக்கும் மானியமாக ரூபாய் 125 வீதம் மூன்று பயிருக்கும் சேர்த்து ரூபாய் 375-ஐ வேளாண்மைத் துறை அளிக்கிறது. மானியத்தைப் பணமாகத் தராமல் விதை, உரம், பூச்சிப் பூஞ்சான மருந்துகள் என்று பொருள்களாகவே தருகிறோம்'' என்று சைதாப்பேட்டை கோட்டத்தைச் சார்ந்த மாவட்ட வேளாண்மை அலுவலர் திரு. தம்பு ராஜ் அவர்கள் விளக்கினார்.

வேளாண்மைத் துறையினர் கூறியதற்கேற்ப இந்த ஆண்டு, முதன் முதலாக, 2.02 ஏக்கரில் 'எம். 4', 'எச்.165' என்ற மரவள்ளி ரகங்களைப் பயிரிட்டுள்ளேன். சென்ற ஆண்டுகளில், இந்த நிலம் பயிரிடாமல் வெறுமனே தான் கிடந்தது. இந்த ஆண்டு தான் மரவள்ளி பயிரிட்டேன். 'எம். 4' நன்கு வளர்ந்து வருகிறது. நல்ல பலன் தந்தால் அடுத்த ஆண்டு பத்து ஏக்கரிலாவது மரவள்ளி பயிரிடலாம் என்று நினைக்கிறேன்'' என்றார் திரு. ராமதாஸ்.

''இந்த ஆண்டில் செங்கை மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் மரவள்ளிக் கிழங்குப் பயிரிட திட்டமிட்டுள்ளோம். இதுவரை 3,500 ஏக்கரில் செங்கை மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளோம். வருகிற ஜனவரிக்குள் இலக்குப்படி 10,000 ஏக்கரிலும் மரவள்ளி பயிரிட்டு விட முடியும் என நம்புகின்றோம்.'' என்றார் மாவட்ட வேளாண்மை அலுவலர் (செ.பதி) திரு. அமீது அவர்கள்

அடுத்து, அங்கிருந்து போரூர் நோக்கிப் புறப்பட்டோம்!

போரூர் என்ற ஊரில் திருமதி மீனாட்சி அருணாசலம் அவர்கள் வயலில் அமைக்கப்பட்டிருந்த தேசிய விளக்கத் தளையைப் பார்வையிட்டோம். ஒரு ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 'பொன்னி' நன்கு செழிப்பாகக் காணப்பட்டது. அடுத்து அவ் விளக்கத் தளைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த சாகுபடி நிருவாகச் சோதனைத் தளைகளைப் (Management trial plots) பார்வையிட்டோம்.

''சிக்கனமான முறையில் இரசாயன உரங்களை உபயோகப்படுத்தி, சிறந்த சாகுபடி முறைகளை மேற்கொண்டு, இலாபகரமான அடிப்படையில் உயர்ந்த அளவு மகசூல் பெற முடியும் என்பதை உழவர் பெருமக்களுக்கு விளக்கிடவே, சாகுபடி நிருவாகச் சோதனைகளை ஆங்காங்கே நடத்தி வருகிறோம். திருமதி மீனாட்சி அருணாசலம் அவர்களது வயலில் அமைக்கப்பட்டுள்ள இச் சோதனையில் 3 தளைகள் உள்ளன. முதல் தளையில் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து மட்டுமே இடப்பட்டுள்ளது. இரண்டாவது தளையில் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 10 கிலோ மணிச்சத்து, 10 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் இரசாயன உரமிட்டு, இளம் நாற்றுகளை (young seadlings) நடுதல், ஒரு சதுர மீட்டர் பரப்பில் 66 தூர்கள் இருக்கும்படி நெருக்கி நடுதல் (closer planting), நாற்றுகளைச் சேற்றில் ஆழமாக நடாமல் மேலோட்டமாக (shallow planting), மேலுரமிடுவதை 2 அல்லது 3 தடவைகளாகப் பிரித்து இடுதல் (Application of top dressing in split doses), பாசன நிருவாகத்தை முறையாக மேற்கொள்ளல் (water management), முறையாகக் களையெடுத்தல் (weeding), வருமுன் தடுப்பாகப் பயிர்ப் பாதுகாப்பு செய்தல் (Prophylactic plant protection measures) ஆகிய நவீன யுக்திகள் (New strategies), வேளாண்மைத் துறையின் நேரடிப் பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்றாவது தளையிலும் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 10 கிலோ மணிச் சத்து, 10 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் உரமிடப்பட்டுள்ளது. ஆனால் இரண்டாவது தளையில் மேற்கொள்ளப் பட்டுள்ள நவீன யுக்திகள் மூன்றாவது தளையில் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குப் பதிலாக உழவர்கள் வழக்கமாக மேற்கொள்ளும் முறைகளிலேயே—அதாவது, வயதான நாற்றுகளை நடுதல் (Planting of aged seadlings), அகன்ட இடைவெளிவிட்டு நடுதல் (broader spacing), ஆழமாக நடுதல் (deep planting), களை எடுக்காமல் விட்டு நடுதல் (unweeding), ஒரே தடவையில் மேலுரமிடுதல் (Application of top dressing in single dose) பூச்சிகளோ அல்லது நோய்களோ தோன்றிய பிறகு பயிர்ப் பாதுகாப்பு செய்தல் (curative plant protection measures), கட்டுப்பாடில்லாமல் பாசனம் செய்தல்

( uncontrolled irrigation ), போன்ற உழவர் முறைகளே (Farmers' method) மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச் சோதனைத் தளைகளை அறுவடை செய்து பார்த்த பிறகு சிக்கனமாகவும், இலாபகரமாகவும் மகசூல் பெற எந்த அளவு உரமிட வேண்டும் என்பது தெரிய வரும். மேலும் உயர்ந்த அளவு மகசூல் பெருவதற்கு சிறந்த சாகுபடி நிருவாக முறைகள் (Better management practices) எந்த அளவுக்கு உதவுகின்றன என்பதும் தெரியவரும்'' என்று வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) திரு. ஜி. சச்சிதானந்தம் அவர்கள் குறிப்பிட்டார்.

''தற்பொழுது ஐ.ஆர். 20 ரக நெல்லிற்குப் பரிந்துரைக்கப்படும் இரசாயன உர அளவை விட, இந்தச் சோதனையில் மிகவும் குறைவாகப் போட்டுள்ளீர்களே. மகசூல் குறையாதா?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

''நல்ல கேள்வி கேட்டீர்கள்! உர அளவு குறையும் போது, மகசூல் குறையத்தான் செய்யும்! ஆனால் சிறந்த சாகுபடி முறைகளை மேற்கொண்டால், மகசூல் குறைவதைத் தடுத்திட முடியும்! இதை விளக்கிடவே இச் சோதனை. ஐ.ஆர். 20 நெல்லிற்குப் பொதுவாக ஏக்கருக்கு 75 கிலோ தழைச் சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்கல் சத்து தரும் அளவுக்கு இரசாயன உரம் இடுமாறு முன்பெல்லாம் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் உரப் பற்றாக் குறை நிலவும் இந்த நேரத்திலே அந்த அளவுக்கு இரசாயன உரம் இட, இரசாயன உரங்கள் கிடைக்கவில்லை. ஆகவேதான், நாட்டின் பல்வேறு இடங்களில் அனைத்து இந்திய ஒருங்கிணைந்த நெல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெற்றுள்ள சோதனைகளின் அடிப்படையில், ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 10 கிலோ மணிச் சத்து, 10 கிலோ சாம்பல் சத்து என்று குறைந்த அளவில் இட்டு, சிறந்த சாகுபடி நிருவாக முறைகள் அனைத்தையும் மேற்கொண்டால்— அதிக அளவு இரசாயன உரம் இட்டு கிடைக்கும் மகசூலுக்கு இணையாக — குறைந்த அளவு இரசாயன உரமிட்டே பெறமுடியும் என்பதை உழவர் பெருமக்களுக்குத் தெளிவு படுத்தவே, இத்தகையச் 'சாகுபடி நிருவாக சோதனைகள்' (Management trials) நடத்தி வருகிறோம். இச் சோதனைகளில் குறிப்பிடத் தகுந்த வெற்றி கிடைக்கும் என்று நம்புகின்றோம். வெற்றி கிடைத்து விட்டால், இரசாயன உரப் பற்றாக்குறையைப் பற்றி கவலைப்படாமல் கிடைக்கின்ற இரசாயன உரத்தை இட்டு, மகசூலைப் பெருக்க உழவர் பெருமக்களுக்கு நல்வழி காட்டியவர்களாவோம். எனவேதான், இத்தகைய சோதனைகளில் நாங்கள் பெருங்கவனம் செலுத்தி வருகின்றோம்'' என்று துணை வேளாண்மை இயக்குநர் திரு. ஆதிகேசவன் விளக்கினார். அடுத்து பெரிய பணிச்சேரி என்ற ஊரின் ஊராட்சி மன்ற அலுவலகத்தின் முன்னால் நாங்கள் சென்ற ஊர்திகள் நின்றன!

''எல்லோருக்கும் வணக்கம். வாங்க'' என்று சிரித்த முகத்துடன் எங்களை வரவேற்றார். பெரிய பணிச் சேரி ஊராட்சி மன்றத்தின் தலைவரும், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவருமான திரு. கு. பாலகிருட்டினன் அவர்கள்.

''உங்கள் ஊரில் உயர்விளைச்சல் ரகம் பயிரிட்டுள்ளீர்களா?'' என்று திரு. பாலகிருட்டினன் அவர்களைப் பார்த்து ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

''எங்கள் ஊர் நெல் வயல்களில் எங்கெங்கு பார்த்தாலும் உயர் விளைச்சல் ரகங்களே பயிரிடப்பட்டுள்ளது என்பதை, நெற் பயிர்களின் குட்டையான தோற்றத்திலிருந்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம்'' என்று திரு. கு. பாலகிருட்டினன் அவர்கள் குறிப்பிட்டார்.

''உங்கள் ஊரில் எத்தனை ஏக்கரில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட்டுள்ளீர்களா?'' என்று மற்றொரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

''எங்கள் ஊரில் வழக்கமாக 116 ஏக்கரில் நெல் பயிரிடுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டில் 110 ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. அந்த 110 ஏக்கரில் 106 ஏக்கரில் ''ஐ.ஆர். 20'', ''பொன்னி'' ஆகிய இரு உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. 4 ஏக்கரில் மட்டும் சாதாரண நெல் ரகம் பயிரிடப்பட்டுள்ளது. அந்த 4 ஏக்கரிலும் சாதாரண நெல் ரகம் பயிரிடப்பட்டுள்ளதற்குப் பொருளாதார வசதி போதாமை, தண்ணீர் பற்றாக் குறை போன்ற பல்வேறு காரணங்கள் உள்ளன'' என்று புள்ளி விவரத்தோடு பெரிய பணிச்சேரியின் வேளாண்மை வளர்ச்சி பற்றி திரு. பாலகிருட்டினன் குறிப்பிட்டார்.

''இந்த அளவுக்கு உயர் விளைச்சல் ரகங்கள் உங்கள் ஊரில் பரவியுள்ளதற்கு காரணம் என்னங்க?'' என்று மற்றொரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

''எங்கள் ஊரில் இந்த அளவுக்கு உயர் விளைச்சல் ரகங்கள் பரவியதற்கு வேளாண்மைத்





துறையைச் சார்ந்த அலுவலர்களே மூல காரணமாகும்! வேளாண்மைத் துறையினரை நான் பாராட்டுகின்றேன். அவர்கள் எங்களோடு நன்கு பழகி, வேளாண்மைக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்கிறார்கள். மேலும் எங்கள் ஊரில் உள்ள உழவர்கள் முற்போக்கானவர்கள். இந்த ஊராட்சி மன்றத்தின் துணைத் தலைவர் திரு. ஆர். சிராமுலு அவர்களுக்கு மொத்தம் 74 சென்ட் நிலம் தான் சொந்தமாக உள்ளது. அந்த நிலத்தில் பயிரிட்டு அவர் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டு 42 மூட்டை (ஒவ்வொன்றும் 80 கிலோ கொண்டது) நெல் விளைவித்துப் பரிசு பெற்றார். எங்கள் ஊரில் திரு. பி. கோவிந்தன் என்று ஒரு உழவர் பெருமகன் உள்ளார். அவர் எங்கள் ஊராட்சி மன்ற உறுப்பினரும் கூட. அவர் தான் இந்த ஊரில் புதுப் புது ரகங்களைப் புகுத்துகின்றவர். அவரை நாங்கள் ''New Variety Introducer'' என்று குறிப்பிடுவது வழக்கம். எந்தப் புது நெல் வந்தாலும், அதைவாங்கி வந்து பயிரிட்டுப் பார்த்து, நல்ல ரகமென உணர்ந்தால், மற்ற உழவர்களையும் அதைப் பயிரிடும்படி தூண்டுவார். இதனால்தான் எங்கள் ஊரில் உயர் விளைச்சல் ரகங்கள் பரவின'' என்று கூறிய திரு. பாலகிருட்டினன் அவர்கள், அப்பொழுதுதான் அங்கு வந்த திரு. பி. கோவிந்தன் அவர்களையும் பத்திரிகை நிருபர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

பிறகு, ''கார்டுசிஸ்டம் மூலம் உரம் வழங்குவது நன்றாகவே உள்ளது. இன்னும் கொஞ்சம் அதிகமாக உரம் கிடைக்க ஆவன செய்தால் உற்பத்தி பெருகிடும். அதற்கு ஆவன செய்ய வேண்டும்'' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

''இரசாயன உரப் பற்றாக் குறை இந்தியா வெங்கும் உள்ளது. இருப்பதைக் கொண்டு எல்லாருக்கும் உரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது. யூரியாவையே அதிகம் எதிர் பார்க்காமல், 'காம்ப்ளெக்ஸ்' அல்லது கலப்பு உரத்தை வாங்கி அடியுரமாகப் போடுங்கள். மேல் உரத்திற்கு மட்டுமே யூரியாவைப் பயன்படுத்துங்கள். விரைவில் வரவிருக்கும் உரம் கிடைத்ததும், முடிந்த அளவுக்கு அதிகமாக உரம் கொடுக்க ஆவன செய்கிறோம்'' என்று உறுதியளித்தார் மாவட்ட வேளாண்மை அலுவலர் (இரசாயன உரம்) திரு. பத்மநாபராவ் அவர்கள்.

அடுத்து கோவூர் என்ற ஊரில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சித் அனுசரணை தளையைப் பார்வையிட்டோம். செங்கற்பட்டு மாவட்டத்தில், மானாவாரியாக முதலில் விதைத்து பிறகு பாசனம் செய்து சாகுபடி செய்யும் முறை மேற்கொள்ளப்படும் பகுதிகளில் பெரும்பாலும் 'பையகுண்டா' (B. A. M. 3.) என்ற ரகமே பயிரிடப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் நடத்தப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சிச் சோதனைகளில் இருந்து, இம் முறைச் சாகுபடிக்கு 'ஐ.ஆர்.20', 'பவானி' ஆகிய 2 இரகங்களும் ஏற்றது என்பது தெளிவாகியுள்ளது. இந்த ஆண்டிலும் தொடர்ந்து செங்கை மாவட்டத்தில் 'ஐ.ஆர். 20', 'பவானி', 'பையகுண்டா', 'கல்ச்சர் 1251' ஆகிய ரகங்களை மானாவாரியாக விதைத்து அனுசரணை ஆராய்ச்சி செய்து செங்கை மாவட்டத்தில் மானாவாரியாக விதைக்க ஏற்ற ரகம் எதுவென முடிவு செய்யப்படும் என்ற செய்திகளை அறிந்தோம். எங்கள் பயணம் தொடர்ந்தது!

நந்தம்பாக்கம் என்ற ஊரிலே உள்ள திரு. கோடீஸ்வர ராவ் அவர்களது பண்ணைக்குச் சென்றோம். அவருடைய பண்ணையில் வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவினர் மேற்கொண்டுள்ள பயன் மிகு பணியினைக் காண வாய்ப்பு ஏற்பட்டது!

''எனக்கு 3.5 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 2.50 ஏக்கரில் மட்டுமே காய்கறிகள், மலர்கள் ஆகியவைகளைப் பயிரிட்டு வந்தேன். என்னுடைய கிணற்றிலிருந்து திறந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு சென்றால், தண்ணீர் வயலுக்குச் செல்லக் குறைந்தது 20 முதல் 30 நிமிடம் ஆகிவந்தது. திறந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் பொழுது, தண்ணீர் கீழே வடிந்து விடுதல் (Seepage) மூலமாகவும், ஆவியாவதன் மூலமாகவும் (Evoporation) பெருமளவு தண்ணீர் சேதமாகி வந்தது. இதனால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, ஒரு ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் செய்து பயிரிட முடியாமல் கஷ்டப்பட்டேன். என் கஷ்டத்தை உணர்ந்த கோட்டப் பொறியாளர் (வேளாண்மை) அவர்களும், உதவிப் பொறியாளர் (மண் வளப் பாதுகாப்பு) அவர்களும் என் கிணற்றிலிருந்து வயலுக்கு எவ்வித சேதமும் இன்றி தண்ணீர் கொண்டு செல்ல 'ஆஸ்பெஸ்டாஸ்' குழாய் புதைத்துக்



கொடுத்துள்ளார்கள். இவ்வாறு குழாய் அமைப்பதற்கு ரூபாய் 4,500 செலவாகிறது. அதில் ரூபாய் 2,500-ஐ அரசாங்கக் கடனாகக் கொடுத்துள்ளார்கள். மீதி செலவை நான் ஏற்றுக் கொண்டேன். கடன் தொகையில் 25 சதம் எனக்கு மானியமாகக் கிடைக்கும். மீதியை வட்டியுடன் 10 ஆண்டுத் தவணைகளில் திருப்பிக்கட்ட வேண்டும். 1,400 அடி நீளத்திற்கு 'ஆஸ்பெஸ்டாஸ்' குழாய் புதைத்துச் சேதமின்றித் தண்ணீரைக் கொண்டு செல்ல வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவினர் உதவியதால், பாசனம் பெறுமல் இருந்த ஒரு ஏக்கரிலும் இப்பொழுது பாசனம் செய்து 'ரோஜா' பயிரிட்டுள்ளேன். தற்பொழுது 3.5 ஏக்கரிலும் பயிரிட்டுள்ளேன்'' என்று பெருமிதத்துடன் திரு. கோடீஸ்வர ராவ் அவர்கள் கூறினார்.

திரு. கோடீஸ்வர ராவ் கூறிய செய்தியும், அவரது தோட்டத்து ரோஜா மலர்களும் அளித்த மகிழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட புத்துணர்வுடன் பயணத்தைத் தொடர்ந்தோம்!

'மேல் மணம் பேடு' என்ற ஊரிலே அமைக்கப்பட்டிருந்த நெல் ரகங்களைப் பற்றிய அனுசரணை ஆராய்ச்சித் தளைகள், 'மோதிரம்பேடு' என்ற கிராமத்திலே ஒரே இடத்தில் 60 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வீரிய மக்காச் சோளம், சென்னீர் குப்பம் திரு. அன்வார் அவர்களது வயலில் அமைக்கப்பட்டிருந்த களைக் கொல்லிப் பரிசோதனை, மாதவரம் பால் பண்ணைக்கு அருகில் உள்ள மாதா கோவில் பண்ணையில் 7 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த மரவள்ளிக் கிழங்கு, பண்டிகாவனூரில் உள்ள அசோகா பண்ணையில் பயிரிடப்பட்டிருந்த மரவள்ளி, பஞ்சட்டி என்ற ஊரிலே உள்ள இஸ்மாயில் சாகிப் அவர்களது வயலில் அமைக்கப்பட்டிருந்த அனுசரணை ஆராய்ச்சித் தளை, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் திரு. சுந்தரராமையா அவர்களது வீட்டருகில் அமைக்கப்பட்டு இருந்த சாண எரிவாயு உற்பத்திக் கூடம் (Gobar Gas Plant), பெரிய ஒபளாபுரம் என்ற ஊரிலே 150 ஏக்கரில் பயிரிட்டிருந்த மரவள்ளி ஆகியவைகளைப் பார்த்துவிட்டு பொன்னேரி புறப்பட்டோம்.



களைக்கொல்லி பரிசோதனை!



ஒபளாபுரத்தில் எங்கு காணினும் மரவள்ளியே!

மாலை மயங்கி இரவு வந்துவிட்டது! ஆயினும், உழவர் பெரு மக்களிடம் கலந்துரையாடும் ஆர்வத்துடன் பணத்தைத் தொடர்ந்தோம்! இரவு 8.00 மணி வரை பல கிராம உழவர்களைப் பார்த்து வேளாண்மை வளர்ச்சிப் பணிகளைப் பற்றிக் கேட்டறிந்துவிட்டு, இரவு 9-00 மணிக்குச் சென்னை திரும்பினோம்.

கடந்த 22—10—74 அன்று காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை செங்கை மாவட்டத்தில் கண்டதையும் கேட்டதையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது, ''செங்கை மாவட்டத்தில் எங்கெங்கு காணினும் உயர் விளைச்சல் ரகங்களே பயிரிடப்பட்டுள்ளன!'' என்பதும், ''செங்கை மாவட்டத்தில், வேளாண்மை வளர்ச்சிப் பணிகள் வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன'' என்பதும், அடுத்து வரும் ஆண்டுகளில் செங்கை மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு பெரும் பரப்பில் பயிரிடும்'' என்பதும் ''உள்ளங்கை நெல்லிக் கனி போல்'' தெளிவாகிறது.

— ஆர். எம்.




Criterion CO 2882

பதிவு எண். M. 86


இனியது!
இனியது!!



புதிய
முயற்சிகளால்
தொழில்துறை
வளர்ச்சி!

ஊனமுற்றோருக்கு
நல்வாழ்வு வழங்கும்
திருப்பணிகள்!



இனிய வாழ்வுக்கு
இனிய எதிர்காலத்துக்கு
இனிய திட்டம்-

நாட்டின் நல்வாழ்வுக்கும்
வீட்டின் பெருமகிழ்ச்சிக்கும்
திட்டமிட்ட குடும்பமே அடையா

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!


# தமிழரசு

1-12-1974
50 காசு





# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்



* கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
* புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
* சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ்விருந்து!
* மனதைக் கவரும் மாதவியின் அழகுச்சிலை.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.







பள்ளியில் பயிலுகின்ற சிறுவர்களில் சிலர் காது கேளாதவர்களாக இருக்க நாம் காணுகின்றோம். இத்தகைய குறைகளைக் கொண்டுள்ளதால் அவர்கள் கல்வியில் போதிய கவனம் செலுத்த முடியாமல், பின் தங்கிய நிலையினை அடைகின்றனர். இந்தக் குறைகளைப் போக்கினால் அவர்களின் கல்வியில் தகுந்த பயன்கள் பெற வாய்ப்புகள் ஏற்படலாம். எனவே இவற்றினைக் கருத்திற்கொண்டு, முதல்வரின் உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக-காதுகேட்காத சிறுவர்களுக்கு இலவசமாகக் காது கேட்கும் கருவிகளை வழங்க அரசு ஏற்பாடு செய்தது. 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களுக்குள் ஏறத்தாழ 1,000 சிறுவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக முதலில் 102 சிறுவர்களுக்குக் காதுகேட்கும் கருவிகளை முதல்வர் கலைஞர் அவர்கள் 15-11-74-ல் சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவ மனையில் நடைபெற்ற விழாவில் வழங்கி சிறப்புச் செய்தார்கள்.

●

பள்ளியில் பயிலுகின்ற காலத்தில் சில குழந்தைகள் எதிர்பாராத வகையில் விபத்துகளுக்கு ஆளாகி உடல் ஊனம் அடைகிறார்கள். இவர்களில் சிலருக்கு நீண்ட காலம் வரை சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டியிருக்கும். இந்த நீண்டகாலச் சிகிச்சைகளினால் குழந்தைகளின் கல்வி நிலை பழுது படாமலிருக்க அவர்களுக்கென பள்ளிகளை, சிகிச்சை பெறுகின்ற மருத்துவமனைகளில் அமைத்து கல்வி கற்றுத்தர அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய முறையில் பள்ளியினை நடத்துவது தமிழகத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் 10 சிறுவர்கள் கொண்ட பள்ளி ஒன்றினைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 15.11.74-ல் துவக்கி வைத்தார். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் 7 உள்ளன. ஒவ்வொரு மருத்துவமனைகளில் 7 பள்ளிகள் துவக்கப்பட உள்ளன. ஒவ்வொரு பள்ளியிலும் 10 சிறுவர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கென ஆசிரியர் ஒருவரையும் நியமனம் செய்து, கல்வி கற்றுத்தரப்படும். முன்னேற்றம் கண்டுள்ள மேற்கத்திய நாடுகளில் தான் இத்தகைய பள்ளிகள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் துவக்கப்பெற்றுள்ள முதல் பள்ளி இதுவேயாகும். இத்தகைய உன்னதமான திட்டம் முதல்வரின் உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு அங்கமாக அமைந்துள்ளது.


தமிழரசு
மலர் 5 இதழ் 11
1-12-1974




# சமண இலக்கியங்கள்
# சமணச் சிற்பங்கள்
# சமணக் கல்வெட்டுகள்

**முதல்வர் கலைஞர்**

2500 ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு 599 ஆம் ஆண்டில் விதேக நாட்டில் ஒரு மன்னனுடைய வீட்டில் பிறந்த பிள்ளை வர்த்தமானர். பிள்ளைப் பருவத்திலேயே வீரச்செயல்களில் ஈடுபட்டு, தோட்டத்திலே வந்த பாம்பைக் கண்டு இளம் சிறார்கள் எல்லாம் பயத்தோடு ஓட, தான் மாத்திரம் பயப்படாமல் அந்தப் பாம்பின் தலையில் அடிவைத்து மிதித்து அந்தப் பாம்பைத் துரத்தி, அதற்குப் பிறகு பல வீரச் செயல்கள் புரிந்து மகாவீரர் என்ற பட்டத்தைப் பெற்றவர்; அவர் பிறந்தபோது நாட்டில் வளம் பெருகிய காரணத்தால் வர்த்தமானர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்; வர்த்தமானர் என்றாலே வளத்தைப் பெருக்குபவர் என்று பொருள்பட அந்தப் பெயரைப் பெற்றவர்; பிறகு, தனக்கு நாடு தேவையில்லை என்றும், ஆட்சி தேவையில்லை; மாளிகை, இன்பங்கள் தேவையில்லை என்று அவைகளை எல்லாம் துறந்து, மக்களுக்குப் பணியாற்றித் தன்னுடைய 72 வயது வரை மக்கள் நலனுக்காகப் பணியாற்றி, மக்களுடைய உள்ளத்தில் மண்டிக் கிடந்த காட்டுமிராண்டி எண்ணங்கள், மூடநம்பிக்கைகள், கடவுளின் பெயரால் ஏற்பட்டிருந்த அறிவுக்கு ஒத்துவராத தொத்து வியாதிகள் இவைகள் அத்தனையையும் விரட்ட வேண்டுமென்று பாடுபட்டவர் தான் வர்த்தமானர்.

வர்த்தமானர் சமண மதத்தில் 24-வது தீர்த்தங்கரர்; முதலாவது தீர்த்தங்கரர் விருஷபதேவர்; அவரை ஆதி பகவன் என்றுகூட அழைப்பார்கள். அதையொட்டித்தான் திருக்குறளில் ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' என்கிற அந்தக் குறளிலேகூட, வள்ளுவர் அந்த ஆதி பகவனைத் தான் சொன்னார்; வேறு கடவுளைக் குறிப்பிடவில்லை என்று வாதமிடுகிற சமண மதப் பெரியவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

தமிழர்கள் ஏற்றுக்கொண்ட ஒரு முக்கியமான நல்ல கொள்கை சமணக் கொள்கையாகும். அதற்கு ஆதாரம் சொல்ல வேண்டுமேயானால், தமிழகத்தில் உள்ள சமணப் பெரியவர்களால் எழுதப்பட்ட நூல்களாகும். 12-வது நூற்றாண்டில் இளம்பூரணர் என்ற சமணப் புலவர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியபோது அதிலே குறிப்பிட்டிருக்கிற ஒரு வாசகத்தைப் பார்த்தால், இளம்பூரணர் இலக்கணத்திற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கூறுகிற நேரத்தில் கேள்விக்குப் பதில் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதற்கு உதாரணத்தைக் காட்டும்போது ''நும் நாடு யாது'' என்று கேட்கும்போது, ''எம் நாடு தமிழ்நாடு'' என்று சொல்வது தான் பதில்' என்று குறிப்பிடுகிறார்.

ஆக 11-வது, 12-வது நூற்றாண்டிலேயே இதற்குத் தமிழ்நாடு என்று பெயர் விளங்கியது.




# தமிழ்நாட்டில் போற்றிப் பாதுகாக்கப்படும்

அந்தத் தமிழ்நாடு இந்தியா முழுமையும் பரவிக்கிடந்த நாடாக இருந்தது. இந்திய நாடு முழுமையும் தமிழர்கள் வாழ்ந்தார்கள்; இந்தியா முழுமையும் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கின்ற சமணக் கருத்துக்களை உள்ளத்தில் பதியவைத்துக் கொண்டிருந்த மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு இறக்குமதியான சில சரக்குகள், இங்கே வந்து புகுந்து சில மூட நம்பிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக வந்தன. அப்படிப்பட்டக் கருத்துக்களை தென் புறத்திற்குக் கொண்டு வந்து, தென்னகத்திலே தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்து, இணைக்க வைத்துவிட்டார்கள். சமணர்கள் பழிவாங்கப்பட்டார்கள். கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்; இன்றைக்கு அந்த நிகழ்ச்சிகள் வரலாறுகளாக, புராணங்களாக, ஏன் இலக்கியங்களாகக்கூட இருக்கின்றன.

மதுரையில் நடைபெற்ற சைவ, சமணத் தகராறில் சமணர்கள் தோற்றுவிட்டார்கள் என்று சொல்லப்பட்டு - அவர்கள் தோற்றார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது — ஆனால் அவர்கள் தோற்றார்கள் என்று சொல்லப்பட்டு, அவர்களைக் கழுவிலே ஏற்றிய கொடுமை நடைபெற்றது. அப்படிக் கழுவிலே ஏற்றப்பட்ட சமணர்களுடைய எண்ணிக்கை எண்ணாயிரம்பேர் என்றும் சொல்லப்பட்டது.

ஒருமுறை, ஒரு பண்டிதர், நான் மாணவனாக இருந்த பொழுது திருவாரூரில் வந்து கதாகாலட்சேபம் நடத்திய போது, 'சமணர்கள் சைவர்களிடம் தோற்றார்கள்; அப்படித் தோற்றுப்போன சமணர்கள் 8000 பேரைக் கழுவிலே ஏற்றினார்கள்' என்று சொன்னார். மாணவனாக அப்போதிருந்த நான் உடனே எழுந்து, ''சைவ மதமும், அன்பைப் போதிக்கிற மதம் அல்லவா? சமண மதமும் அன்பைப் போதித்த மதம் அல்லவா! இப்படி அன்பைப் போதிக்கின்ற மதங்களுக்கிடையே தகராறு ஏற்பட்டு அதில் சிலர் தோற்றிருந்தாலும் அன்பைப் போதிப்பதாகச் சொல்கிற சைவ மதத்தினர் சமணர்களைக் கழுவில் ஏற்றலாமா? அன்பு எங்கே போயிற்று?'' என்று கேட்டேன். உடனே அந்தப் பாகவதர் ''இந்தச் சின்னப் பையனுக்கு விஷயம் தெரியவில்லை. நான் பாட்டைச் சொல்கிறேன், கேளுங்கள்'' என்றார்.

''எண்பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்'' என்ற பாட்டைச் சொல்லிச் சமணர்கள் தாங்களே கழுவில் ஏறினார்கள் என்று பாடிக்காட்டினார். அந்தப் பாட்டு எனக்கு முன்பே தெரிந்திருந்த அக் காரணத்தால் உடனே, நான் திரும்பக் கேட்டேன். ''நீங்கள் பாட்டின் கடைசி அடியை மட்டும் பாடிக் காட்டுகிறீர்கள்! நான் முழுமையும் சொல்கிறேன் கேளுங்கள்'' என்று

''பண்புடை அமைச்சரு நும்
பாருளோர் அறியும் ஆற்றல்
கண்புடை பட்டு நீண்ட
கழுத்தரி நிறையில் ஏற்ற
எண்பெருங் குன்றத் தெண்ணா
யிர வரும் ஏறி னார்கள்.''

ஏற்ற, ஏறினார்கள் என்றுதான் பாட்டு இருக்கிறது. ஆகவே அவர்கள்தான் சமணர்களைக் கழுவிலே ஏற்றினார்கள் என்று நான் சொன்னேன்.

ஆகவே தமிழகத்திலே பெரியார் ராமசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு அவர் வழிநின்று பேரறிஞர் அண்ணா அவர்களால் நடத்தப்பட்ட தன்மான இயக்கம்; இன்றைக்கு நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற சுயமரியாதைக் கொள்கை இவைகள் எல்லாம் வடிவெடுக்கக் காரணமாக இருந்த கொள்கைகளில் சமணக் கொள்கையும் தலையாய கொள்கை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமணக் கொள்கைகளில் முக்கியமானது, ''உலகத்தை ஆண்டவன் படைத்தான்'' என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒரு மனிதன் தன்னுடைய பாவங்களை எல்லாம் அகற்றிவிட்டால் அவனே கடவுள் ஆகின்றான். இதுதான் சமண மதத்தின் கொள்கை. ஆகவே மனிதனே தன்னைத் தெய்வமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்; அந்தத் தெய்வம் சிறந்த தெய்வம் என்பது சமண மதத்தின் கொள்கையாகும். அந்தக் கொள்கையோடுதான் இன்றைக்கு இந்த அரசு 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற வகையில் பணியாற்றி வருகிறது. மகாவீரர் வர்த்தமானர் எந்தக் கொள்கை மக்கள் மத்தியில் பரவ வேண்டும் என்று விரும்பினாரோ அந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டு வருகிறோம். அது மாத்திரமல்ல; சமண இலக்கியங்கள்; சமணச் சிற்பங்கள்; சமணக் கல்வெட்டுகள் இவைகள் எல்லாம் தமிழகத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட தமிழக அரசு இந்த ஆண்டு மேலும் முனைப்பான முயற்சியில் இறங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[17-11-1974 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தருகில் நடைபெற்ற வர்த்தமானர் 2500வது நினைவு நாள் விழாவில் ஆற்றிய உரை.]



மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வதுதான் சிறப்பு.

அடுத்தது முதியோர் கல்வி. சென்னையில் எழுத்தறிவு பெற்றவர்கள் நிரம்ப இருந்தாலும், ஏடு படிக்க இயலாத-உலகை அறியாத பலர் உள்ளனர். அவர்களுக்கு 'அ, ஆ' 'படம், பட்டம்' சொல்லித்தர வேண்டாம். அப்படிச் சொல்லித் தருவதானால், அவர்களில் பலர் அதைக் கற்குமுன் காலமாகிவிடக்கூடும். எனவே மாநகராட்சியின் அனுமதி பெற்று, அதன் பள்ளிகள் சிலவற்றில் இரவு நேரங்களில் அப்பகுதி முதியோரைக் கூட்டி, செய்தித்தாள், நல்ல நூல்களைப் படித்துக் காட்டி விளக்கினால், அவற்றைப் புரிந்துகொண்டு விரைவில் உலக அறிவு பெறுவர். முதியோர் கல்வியில் இம்முறையைக்கையாளவேண்டும். எழுத்தின் மூலமாக அல்லாமல் எண்ணத்தின் மூலம் அறிவு புகட்டவேண்டும்.

சீரணித் தொண்டர்கள் மகத்தான பணிகள் புரிய வாய்ப்பிருக்கிறது. சென்னை நகரில் ஓடுகின்ற கூவத்தைச் சுத்தப்படுத்தி, உல்லாசப் படகுகள் செல்லத்தக்கதாக ஆக்க வேண்டும் என்று அமைச்சர் கருணாநிதி திட்டமிட்டிருக்கிறார். அதற்கென ஆட்கள் நியமிக்கப்படுவார்கள் என்றாலும், சீரணியினர் விரும்பினால், 'நாங்கள் 500 பேர் இப்பணியில் ஈடுபட விரும்புகிறோம்' என அதிகாரிகளுக்குத் தெரிவித்து, ஒருநாளை ஏற்பாடு செய்துகொண்டு பணி புரியலாம். அப்படி, நல்ல கட்டுடல் படைத்தவர்கள், வசதியோடு இருப்பவர்கள், எந்தப் பலனும் கேட்காதவர்கள், கண்ணியமான வாழ்க்கை நடத்துபவர்கள் ஒரு 500 பேர், 600 பேர் கூட்டமாகச் சென்று பாடுபட்டால் அந்தக் காட்சியைக் காணுகின்ற மக்கள், 'இவர்களல்லவா சீரணித் தொண்டர்கள்'! என்று வியந்து பாராட்டுவர். அதுதான் உங்களுக்குப் பரிசு. அந்த ஒரு பரிசைத் தவிர என்னிடமிருந்தோ, நாட்டு அரசிடமிருந்தோ வேறு பரிசை எதிர்பார்க்கக் கூடாது.

சென்னைப் புற நகர்களில், சுற்றுப்புற கிராமங்களில் உள்ள ஏரி, குளங்களைச் சீரமைக்கவும், சீரணி மெத்த பயன்படும்.

அரசாங்க நிதியைக்கொண்டு அதிகாரிகளைக் கொண்டு மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது. தொண்டர்கள், மக்களது நிரந்தர ஒத்துழைப்பும் முக்கியம். தொண்டாற்றும் எண்ணம் வளர வேண்டும். வளரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

சீரணி மிகுந்த வெற்றியினைப் பெறும் என்ற எனது இந்த நம்பிக்கை வீண்போகாத அளவுக்குப் பணியாற்றுவார்கள் என்பதால், சீரணியை மெத்த மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் துவக்கி வைக்கிறேன்.

[1967-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ஆம் நாள் சீரணியைத் தொடங்கி வைத்து அறிஞர் அண்ணா ஆற்றிய உரையிலிருந்து....]

# படமும்





உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு போக்குவரத்து, அரசு போக்குவரத்துக் கழகங்கள், அரசு அச்சகம், துளை அட்டை சரி பார்த்தல் பயிற்சித் திட்டங்கள் 15-11-74 அன்று சென்னையில் தொடங்கப்பட்டன.

# செய்தியும்



சிறுவாணித் திட்டப் பணிகளை முதல்வர் அவர்களும் அமைச்சர்களும் பார்வையிட்டனர்.

உடல்ஊனமுற்றோர் நல்வாழ்வுப் பயிற்சித் தொழில் நிலையத்திற்கு செங்கற்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் 19-11-74 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியததில் 14-11-74 அன்று கூட்டுறவு வாரவிழாவை தொழிலாளர் நல அமைச்சர் தொடங்கி வைத்தார்.

சென்னை செங்கை மாவட்ட சமூக நலக் கருத்தரங்கை 19-11-74 அன்று திருமதி மதுபென்ஷா தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் நடத்திய கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நடைபெற்றது.

# தூய தொண்டாற்றவும் தோழமை வளர்க்கவும்...




சீரணி அமைப்புபற்றி சட்டமன்றத்தில் அறிவித்தபோது, இது கட்சி வளர்ச்சிக்காக அமைக்கப்படுகிறது எனச் சிலர் தவருகப் புரிந்துகொண்டு வாதம் எழுப்பினர். அது தவருன கண்ணோட்டம் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மேற்கொள்ளும் தூய நல்ல திட்டங்களுக்குத் துணை நிற்பது, உதவுவது, ஒத்துழைப்பது நாட்டுக் குடிமக்கள் அனைவரது பொறுப்பு. ஆனால் எல்லா மக்களும் இதில் நேரடியாக ஈடுபட இயலாது. தொழில் தொல்லைகள், குடும்ப பாரம், இன்னும் பல ஆசாபாசங்கள் அதற்குக் குறுக்கே நிற்கும். எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் மக்கள் அனைவரும் நேரடியாக இக்கடமையைச் செய்வது கடினம். எனவே அரசின் பணிகளுக்குப் பாடுபட சிலராவது முன்வர வேண்டும்.

பொதுப்பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க இதயம் படைத்தவர்கள், தங்களது குடும்பக் காரியங்களை கவனித்தது போக மீதமுள்ள நேரத்தை, வெறும் பொழுது போக்குக் களியாட்டங்களில் வீணடிக்காமல், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டும். பணம் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கவர் தம் ஆற்றலையும் அளித்து நாட்டுக்கு உதவுவது போல, மற்றவர்கள் தங்கள் நேரத்தில், உழைப்பில் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும் என்பதே சீரணியின் அடிப்படை நோக்கம்.

சீரணிபற்றி அறிவித்ததும், அதை யாரும் அலட்சியப்படுத்தவோ, அதில் அக்கறை காட்டாமல் இருக்கவோ முடியவில்லை. அதுபற்றி கவனித்து உடனே கருத்தும் தெவித்துள்ளனர். கருத்து தவருக இருப்பினும் எல்லார் கவனத்தையும் ஈர்த்துள்ளது என்பதை அது காட்டுகிறது. "ஏதோ ஒரு சீரணியாம், அது எந்த அளவுக்கு வளருமோ, எப்படி எப்படிப் பயன்படுத்தப்படுமோ!" என்று பேசுகின்றனர். ஆக இது வளரத் தகுதியுடையது. வளரத்தான் போகிறது என்பதற்கு இதுவே நல்ல அறிகுறி. வளருவது நல்லதற்கே அன்றி, கெடுதலுக்கு அல்ல.

சீனத்துச் செங்காவல் படையுடன் சீரணியை ஒப்பிட்டுப் பேசுவது தவறு. வன்முறை குழப்பம் ஏற்படுத்துவது சீரணியின் எண்ணமல்ல. வன்முறை, ஒழுங்குபடுத்தப்பட்ட படைகளால் எப்போதும் ஏற்படுவது இல்லை. சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல: தூயதொண்டாற்றவும், தோழமை வளர்க்கவுமே அது அமைக்கப்பட்டுள்ளது. சாதாரண, சராசரி மக்களானாலும் தங்களது ஆற்றலை-தூய தொண்டினை-நாட்டுவளத்தைக் கூட்ட, மக்கள் வாட்டத்தைப் போக்க அளித்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் சீரணியில் சேர்ந்தால் போதுமெனக் கணக்கிட்டிருந்தோம். மாவட்டங்களிலிருந்து கிடைக்கின்ற தகவல்களைப் பார்த்தால் பலதரப்பட்டவர்களும்-வாலிபர்கள், மாணவர்கள், தாய்மார்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், கட்சிகளையே சேராதவர்கள், பல்வேறு வகுப்பினர், வகுப்புகளே வேண்டாம் என்ற போக்கு எண்ணம் கொண்டோர், இப்படி பல திறத்தவரும்-சீரணியில் பெருமளவு சேர முன் வந்திருக்கின்றனர்.

சீரணியின் பத்துக் கொள்கைகளில் எந்தக் கொள்கைக்கும் யாரும் மறுப்புத் தெரிவிக்கமாட்டார்கள். ஏனெனில் அத்தனையும் நல்ல கொள்கைகளே. அவற்றைச் செயல்படுத்தும்போதுதான் சிக்கலும் சங்கடமும், சில வேளைகளில் சஞ்சலங்கூட வரலாம். எனவே இந்தப் பணியில் ஈடுபடுவோருக்குத்தொல்லைகளைத்தாங்கும் இதயமும், எடுத்த இலட்சியத்துக்கு ஏற்பப் பாடுபடும் உறுதியும் வேண்டும்.



பழம்பெரும்நாடு, நம்நாடு; என்றாலும் ஏழ்மை இருளில் ஆழ்ந்துள்ளது. நம் நாட்டில் இயற்கை வளம் நிரம்ப இருக்கிறது. ஆனல் அந்த வளத்திற்கு உரிய செல்வ வளத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இங்கு இல்லை. நாடு வளம் பெற மக்கள் வாழ்வு செம்மையுற, சீர்பட தமிழக அரசு மட்டும் முயன்றால் போதாது.

இங்குப்பாடப்பட்ட சீரணிப் பண்ணில் முதலமைச்சர் அண்ணாதுரை ஆணைக்குக் கட்டுப்படுவோம் என்று பாடப்பட்டது. அதில் அண்ணாதுரை என்ற சொல்லை அகற்றி விட்டு வெறும் 'முதலமைச்சர்' என்று இருக்கும்படிச் செய்யலாம். யார் முதல்வரானாலும் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அதன் நல்ல திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு உதவ வேண்டும். அரசினரால் மட்டும் எதுவும் செய்துவிட முடியாது.

சர்க்கார் பற்றற்ற, சர்க்கார் நேரடித் தலையீட்டில் வராத, ஊதியம், பணம் உத்தியோக உயர்வு கோராத ஒருவித படைபலம், ஒவ்வொரு நாட்டுக்கும் நிச்சயம் தேவை.

இத்தகைய படைக்கு என்ன பெயர் வைப்பது என்று பல இரவுகள் சிந்தித்தேன்; பல பகல்கள் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தேன். நாட்டைச் சீர்ப்படுத்த, சிக்கல்கள் நீக்கிச் செப்பனிட, சமுதாயத்தை-மக்கள் வாழ்வைச் சீரமைக்க ஓர் அணி தேவை என்று உணர்ந்தபோது, அத்தகைய சீரிய செயல்களைச் செய்யும் அணிக்குச் 'சீரணி' என்ற பெயர் பொருத்தமாயிருக்கும், என எனக்குத் தோன்றிற்று; மற்றவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்தனர்.

இங்கு தொண்டர்கள் அணிந்திருக்கும் சீரணி சின்னத்தில் பச்சை நிறமும் பொன்னிறமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. பச்சை வண்ணம் பசுமையை-வளத்தைக் காட்டுகிறது. பொன்னிறம்எங்களுக்குத் தங்கமான இதயம் உண்டு என்பதைக் காட்டுகிறது. இத்தகைய சின்னத்தைத் தொண்டர்கள் தங்கள் மார்பில் குத்திக் கொள்வது மட்டுமல்ல, இதயத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

## பேரறிஞர் அண்ணா

நாட்டுக்காக செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப இருக்கின்றன. சென்னை மாநகரைப் பொறுத்தவரை குறிப்பாக துப்புரவுப் பணியிலும், முதியோருக்குக் கல்வி அறிவூட்டுவதிலும் சீரணித் தொண்டர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

நகர வீதிகளில், ஏழைகள் வாழும் பகுதிகளில், வீடுகளைச் சுற்றிலும் அசுத்தம் அகற்ற-அசுத்தமாக்கும் பழக்கத்தைப் போக்க-துப்புரவுப் பணி அவசியம். கையிலே ஒரு கூட்டுக் கோலுடன், குப்பையை வாரிப் போட்டுக் கொள்ள ஓலைச்சாதனம் ஒன்றையும் கையில் ஏந்தி சீரணித் தொண்டர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்ற காட்சியைக் காணுகின்ற மக்கள், நிச்சயம் தங்கள் ஒத்துழைப்பைத் தருவார்கள். மகனைப் பெற்ற எந்த மாதாவும் மறுநாள் தெருவிலே குப்பையைக் கொட்ட மாட்டார்கள்.

குப்பை என்று நான் சொல்லும்போது, குழந்தைகளைத் தெருவோரத்தில் விட்டுக் கழிக்கச் செய்யும் மலஜலத்தையும் சேர்த்தே சொல்கிறேன். 'அதையும் நாங்கள் சுத்தம் செய்வதா?' என்று நினைக்கக்கூடாது. அதை எடுக்கக் கூசுவோர், எதிரி நாட்டார் வீசும் குண்டை அப்புறப் படுத்தும் வீரனாக முடியாது. அருவருக்கத் தக்கவற்றையும் சகிப்பதுதான், அந்த அளவுக்கு



**2. சோளத்தின் இலைப்புள்ளி நோய்களும், தடுப்பு முறைகளும் :**

பெருந் தானியங்களில் ஒன்றாகிய சோளம் தமிழ் நாட்டில் ஓர் முக்கிய உணவுப் பயிரும், தீவனப் பயிருமாகும். இப்பயிர் 5.9 இலட்சம் எக்டேரில் மானாவாரிப் பயிராகவும், 1.2 இலட்சம் எக்டேரில் இறைவைப் பயிராகவும் தமிழ் நாட்டில் பயிரிடப்பட்டு ஓர் ஆண்டிற்கு 5.5 இலட்சம் டன்கள் தானியம் உற்பத்தி செய்யப்படுகிறது.

பலவித இலைப் புள்ளி நோய்கள் சோளப் பயிரைத் தாக்கி விளைச்சலைக் குறைக்கின்றது. இந் நோய்களால் உண்டாகும் சேதம் கால நிலைக்கு ஏற்பவும், சோள வகைகளுக்கு ஏற்பவும் வேறுபடுகிறது. இலைக் கருகல் நோயும், சொறி நோயும் இலைப் புள்ளி நோய்களில் முக்கியமானவை. இந் நோய்கள் இளம் நாற்றுக்களில் தோன்றுமானால், ஏறத்தாழ விளைச்சலில் 30 சதவிகிதம் குறைகிறது. சாதாரணமாக இலைக் கருகல் நோய் சோளம் விதைத்த 30—35 நாட்களிலும், சொறி நோய் சோள விதை விதைத்த 45—50 நாட்களிலும் தோன்றுகின்றது.

உருண்டை அல்லது நீண்ட உருண்டை வடிவ சிவப்புக் கலந்த பழுப்பு நிறச் சொறிகள் இலைகளின் இரு புறங்களிலும் தோன்றி கறுப்பாக மாறுகின்றன. இந்த கொப்புளங்களின் நிறம், சோள வகைகளுக்குத் தக்கபடி மாறும். செடியின் அடி இலைகள் முதலில் இப் பூஞ்சாளத்தினால் பாதிக்கப்பட்டு, பின்பு இந் நோய் செடியின் மேலுள்ள இலைகளுக்குப் பரவுகிறது. இந் நோய் முற்றும் தருணத்தில் இப் பகுதிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து காய்ந்துவிடுகின்றன. இளம் பயிர்கள் இந்நோயால் தாக்குண்டால் விளைச்சல் அதிகமாகக் குறைகிறது. மழைக் காலங்களிலும், காற்றில் ஈரச் சத்து அதிகமாக உள்ள நேரங்களிலும் இந் நோயால் தாக்குண்ட செடிகள் வளர்ச்சி குன்றி இருப்பதைத் தூரத்திலிருந்தே காணலாம்.

பெரிய, நீண்ட, நூற்கண்டு வடிவ பழுப்பு நிறப் புள்ளிகள் இலைகளில் தோன்றுகின்றன. இப் புள்ளிகள் சாதாரணமாக இலையின் நுனியில் தோன்றி, பின்பு ஓரங்களில் பரவுகின்றன. இப் புள்ளிகள் வைக்கோல் நிற மையமும், அடர் பழுப்பு நிற ஓரமும் கொண்டவை. காற்றில் ஈரச் சத்து அதிகமாக உள்ள காலங்களில் இப்புள்ளிகள் ஒன்றோடொன்று இணைந்து இலை முழுவதும் பரவி இலை கருகிவிடுகிறது. இப்பூஞ்சாளம் உள்ள விதைகள் முளைக்காமல் அழுகிவிடுகின்றன. இந் நோய் வாய்ப்பட்ட இளஞ் செடிகள் கருகிவிடுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 1971, 1972-ஆம் ஆண்டுகளில் மூன்று பருவங்களில் சொறி நோய், இலைக் கருகல் நோய் ஆகியவற்றைத் தடுக்க, ஏழு பூஞ்சாளக் கொல்லிகள் வயலில் பரிசோதிக்கப்பட்டன. இப் பூஞ்சாளக் கொல்லிகள், சோளப் பயிர் முளைத்த 30, 60, 75 நாட்களில் தெளிக்கப்பட்டன.

'சினப்' 0.2 சதம், சொறி, இலைக் கருகல் நோய்களைத் தடுப்பதிலும், தானியம், தட்டு ஆகியவற்றின் விளைச்சலை அதிகரிப்பதிலும் தலைசிறந்து விளங்கியது. இப் பூஞ்சாளக் கொல்லி தெளிப்பதால், ஒரு எக்டேருக்கு சுமார் 720 ரூபாய் அதிக நிகர வருவாய் கிடைக்கிறது. 'சினப்' மருந்திற்கு அடுத்தபடியாக, 'தைரம்' 0.2 சதம் என்ற மருந்து, இவ்விரு நோய்களையும் கட்டுப்படுத்தியது. 'தைரம்' தெளித்ததால் எக்டேருக்கு சுமார் ரூபாய் 440 அதிக நிகர வருவாய் கிடைத்துள்ளது.

**3. தமிழ்நாட்டிற்கேற்ற அமோக விளைச்சல் தரக்கூடிய சாம்பல் நோய்த் தாக்காத ஓர் சோள ரகம், சி.எஸ். 3541.**

தமிழ் நாட்டில் 'கீழ்ச்சாம்பல்' நோய் சோளப்பயிரைத் தாக்கி மிகுந்த சேதம் விளைவிக்கிறது. சோளத்தின் இளம் பயிரிலிருந்து முற்றின பயிர் வரை இந்நோயைக் காணலாம். இந்நோய்த் தாக்கப்பட்ட சோளப்பயிர் இலைகளின் அடியில் வெண்மையான பூசாணம் தோன்றும். பின்பு இப்பூசணம் இலை முழுவதும் பரவி, இலையின் மேற்புறம் மஞ்சளாகத் தோன்றும். இந்நோய் மிகுதியாகப் பரவப்பரவ, இலைகளில் வெண்மை கலந்த பசுமைக் கோடுகள் தோன்றி பழுப்பாக மாறுகின்றன. பின்பு இலைகள் இக்கோடுகளின் வழியே நார் நாராகக் கிழிகின்றன. இளஞ் செடிகள் இந்நோயினால் தாக்கப்பட்டால் வளர்ச்சியடைவதில்லை. கதிர்களும் தோன்றுவதில்லை. ஆகவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இந்நோய் தாக்காததும், அதிக மகசூல் தரக்கூடியதுமான சோள ரகங்களைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சி தொடங்கப்பட்டது.

சோளத்தில் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய ஐந்து புதிய ரகங்களான 'சி.எஸ். 3541' '555', '148', 'சுவர்ணா', '604' ஆகியவை 'கோ. 18' சோள ரகத்தோடு சேர்த்து அடிச்சாம்பல் நோய்க்காக முதன்மைப் பயிரிலும், மறுதாம்புப் பயிரிலும், ஆராய்ச்சிக் கூடத்திலும் ஆராயப்பட்டது.

சி.எஸ். 3541. சோளம்



இந்த ரகங்கள், அடிச்சாம்பல் நோய்ப் பூசணவித்துக்கள் நிறைந்த நிலத்தில் பயிரிடப்பட்டன. அடிச்சாம்பல் நோயால் தாக்கப்பட்ட இலைகள் தூளாக்கப்பட்டு, 5—8 செ.மீ ஆழத்தில், 40 சதுர மீட்டருக்கு ஒரு கிலோ இலைத்தூள்கள் என்ற விகிதத்தில் புதைக்கப்பட்டு, அடிச்சாம்பல் நோய் பூசணம் நிறைந்த நிலம் உண்டாக்கப்பட்டது. மேலும்

ஆராய்ச்சியில் உள்ள இந்த ஐந்து ரகங்கள் 25 நாட்கள் வயது இருக்கும்பொழுது, அடிச்சாம்பல் நோய்த் தாக்கப்பட்ட இலைத்தூள்கள் செடிகளின் குருத்துக்களில்—அதிக ஈரம் சூழ்ந்த நிலையில்-இடப்பட்டன. விதைத்ததிலிருந்து அறுவடையாகும் வரை இப் பயிர்களுக்கு எந்தவிதமான பயிர் பாதுகாப்புக் கட்டுக்கோப்பு முறையும் அனுசரிக்கப்படவில்லை. இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆராய்ச்சிச் செய்யப்பட்ட ரகங்கள் | 1973 பருவ காலம் — முதன்மைப் பயிரில் அடிச் சாம்பல்நோய் தாக்குதல் சதவிகிதம் | மறுதாம்புப் பயிரில் அடிச் சாம்பல் நோய் தாக்குதல் சதவிகிதம் | ஆராய்ச்சிக் கூடத்தில் அடிச் சாம்பல் நோய் தாக்குதல் சதவிகிதம் |
|---|---|---|---|
| 148 | 0.1 | 7.2 | 8.6 |
| 555 | 13.2 | 82.8 | 93.2 |
| சி.எஸ். 3541 | தாக்குதல் இல்லை | தாக்குதல் இல்லை | தாக்குதல் இல்லை |
| சுவர்ணா | 0.8 | 21.2 | 36.9 |
| 604 | 5.5 | 62.9 | 57.7 |
| கோ. 18 | 6.0 | மறுதாம்புப் பயிர் செய்யப் படவில்லை. | 31.2 |

மேலே கண்ட அட்டவணையிலிருந்து 'சி. எஸ். 3541' என்ற சோள ரகம் அடிச்சாம்பல் நோயினால் முதன்மைப் பயிரிலும், மறுதாம்புப் பயிரிலும், ஆராய்ச்சிக்கூடத்திலும் ஒருவிதமான தாக்குதலும் இல்லாமல்இருப்பதைக் காணலாம். மேலும் இந்த 'சி.எஸ். 3541' என்ற ரகம் அதிக மகசூல் கொடுக்கும் தன்மையுடையது. இந்த ரகம் மானாவாரிப் பயிராகவும், இறைவைப் பயிராகவும் பயிரிட ஏற்றது. இந்த ரகம் இறைவைப் பயிரில் ஒரு எக்டேருக்கு 5,000-5,500 கிலோ தானியமும், 10,000 கிலோ தட்டும் கொடுக்க வல்லது. இந்த ரகம் முத்து வெள்ளை நிறமான தானியம் கொண்டது. இத்தானியம் மிகுந்த மழையில் நனைந்தாலும் கெடாத தன்மையுடையது.

ஆகவே, 'சி.எஸ். 3541' என்ற சோள ரகம் அதிக மகசூல் தருவதாலும், அடிச்சாம்பல் நோய் தாக்காததுமாக இருப்பதால் இறைவைப் பயிராகவும், மானாவாரிப் பயிராகவும் தமிழ்நாட்டில் பயிரிட ஏற்றது என்பது தெளிவாகிறது.

தகவல் :—

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

## நம் நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள்

* நம்நாட்டில் இப்போது 19 வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும், 71 வேளாண்மைக் கல்லூரிகளும் உள்ளன.

* ஐந்தாவது திட்ட காலத்தில் உத்தரப் பிரதேசத்தில் மேலும் இரண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகங்களையும், ஜம்மு காஷ்மீரில் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

* 1969 முதல் 1971 வரையிலான காலத்தில் நாட்டில் உள்ள விவசாயப்பல்கலைக்கழகங்களில், சராசரியாக ஆண்டுக்கு 7,159 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

* எத்தனை மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே முடிவு செய்கின்றன. மாநில அரசுகளின் தேவை, அரசு சார்பற்ற நிறுவனங்களின் வேலைவாய்ப்பு, சொந்த வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

* விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதில் வேளாண்மைப் பட்டதாரிகள் பயனுள்ள வகையில் பணிபுரிவதற்கு ஏற்ப, அவர்களுக்குப் போதிய செய்முறை வாய்ப்புகள் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# தொண்டின் பெருமை



மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர்

## என். வி. நடராசன்

'ஊர் கூடித் தேர் இழுப்பது' என்பது தமிழ்நாட்டில் வழங்கும் பழைமையான வாக்கியமாகும். பொதுப்பணிகளில்- ஊரார் அனைவருக்கும் பயன்படும் பணிகளில் எல்லாரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவது என்பது நம் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும். அந்தப் பண்பாட்டை இன்றையச் சூழ்நிலைக்கு ஏற்பப் புதுப்பித்துக் கொள்ளும் வகையிலே அமைக்கப்பட்டதுதான் சீரணி



மகளிர் மன்றம் தையற்பயிற்சிக் கூடத்திற்காக சேலம் மாவட்டம் வரம்பட்டியில் சீரணியினர் உருவாக்கிய கட்டடம்.

அண்ணா அவர்கள் சீரணி அமைத்தபொழுது அச்சுறுத்தும் வகையில் ஆருடம் கணித்தார்கள் சிலர். ஆனால், அவர்களும் ஆனந்தமடையும் வகையில் மிகச் சீரிய பணிகளைச் சீரணி செய்துள்ளது.—செய்து வருகிறது.

ஓய்வு நேரத்தில் ஊதியம் கருதாது ஊரார் அனைவருக்கும் பயன்படும் வகையில் சீரணித் தொண்டர்கள் பல அருமையான பணிகளைச் செய்துள்ளனர். இதனை சின்ன கிராமங்களிலுள்ள கட்சி சார்பு அற்றவர்கள் மட்டுமல்ல வேறு கட்சிகளில் உள்ளவர்களும் சீரணியின் தொண்டுகளை உளமாறப் பாராட்டுவதை நான் நன்கு அறிவேன்.

ஏனைய மாநிலத்தவரும் சீரணியின் அரும்பணிகளைப் புகழ்ந்துள்ளனர். சீரணி செய்து வரும் அருஞ்செயல்களைப் பற்றி மத்திய அரசின் செய்தித் துறைகூட நம் நாட்டிலுள்ள முக்கிய மொழிகளில் சீரணியின் பணிகளை விளக்கி செய்திகள் வெளியிட்டுள்ளது.

சின்னஞ்சிறு கிராமங்களில் அதுவும் நினைத்துப் பார்க்க முடியாத குக்கிராமங்களில் சீரணியினர் சாலைகள் அமைத்திருப்பதையும், வானொலி மன்றங்களுக்குக் கட்டடம் கட்டியிருப்பதையும் ஆங்காங்கே சுற்றுப்பயணம் சென்று வரும் பொழுது பார்க்கின்றேன்.




குமரி மாவட்டம் போன்ற இடங்களில் மடிச்சல் கால்வாய் அமைத்திருப்பது போன்ற மகத்தான பணிகளையும் சீரணி செய்திருக்கிறது.

சீரணியின் பணிகளைப் பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதை விட, அந்தத் தன்மையை ஏனைய பணிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது தான், சீரணியின் பணிகளின் அடித்தளமாக அமைந்துள்ள தொண்டின் பெருமையை மதிப்பிட முடியும்.

பள்ளிக் கட்டடங்களுக்கு வெள்ளையடிப்பது மிகச் சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் தொண்டுணர்வுடன் செய்யும் இந்தப் பழக்கம் ஒவ்வொருவரிடமும் வளர வேண்டும்.

அண்ணா அவர்கள் கண்ட கனவுகள் பலவற்றை நாம் நனவாக்கி வருகின்றோம். சீரணியினரும் அண்ணா அவர்கள் நினைத்தவைகளை நனவாக்கி வருகிறார்கள் என்பதை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் இந்த இதழ் தமிழரசு சீரணி பற்றிய தகவல்களை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

சீரணியினர் தொண்டுள்ளம் நாளும் வளர, சீரணியினர் பணிகள் பட்டி தொட்டி எங்கும் பரவிட அனைவரும் பாடுபடுவோம்! வெற்றி குவிப்போம்!

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்!

### 1. முல்லைச் செடிக்கு உரமிடுவதில் புதிய முறை :

உழவர் பெருமக்கள் முல்லைச் செடிக்குப் பலவிதமாக உரமிடுகிறார்கள். சிலர் உரக் கலவைகளையும், மற்றும் சிலர் அம்மோனியம் சல்பேட்டு போன்ற உரங்களையும் இடுகிறார்கள். தமிழ் நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம் கோவையில் ஏற்கனவே செய்த ஆராய்ச்சியில், ஒரு செடிக்கு ஒரு ஆண்டிற்கு 120 கிராம் தழைச்சத்து (நைட்ரஜன்) விதம் (அதாவது ஒரு செடிக்கு 600 கிராம் அம்மோனியம் சல்பேட்டு —பாதி ஜனவரியிலும், பாதி ஜூலையிலுமாக) இடுவதால் விளைச்சல் அதிகமாகிறது என்று கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் இதை விடக் குறைந்த அளவு தழைச் சத்தைச் செடிகளின் மீது நீரில் கரைத்துத் தெளிப்பதன் மூலம் அதிக விளைச்சலைப் பெற முடியுமா என ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. 1971 முதல் 1973 வரை நடத்திய ஆராய்ச்சியில், ஒரு செடிக்கு ஓராண்டிற்கு 60 கிராம் தழைச் சத்தை நீரில் கரைத்துத் தெளிப்பதன் மூலம் 23 சதவீதம் விளைச்சல் அதிகரித்துள்ளது. சாதாரணமாக மண்ணிற்கு இடப்படும் 120 கிராம் தழைச் சத்து அளவில் 9.5 சத வீதம் தான் விளைச்சல் அதிகரித்தது. இதன் விவரங்கள் கீழ்க் கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :

| | ஒரு செடியின் மகசூல் (கிலோ) 3 ஆண்டுச் சராசரி | தழைச்சத்து இடாத செடியைவிட அதிக விளைச்சல் (சதவீதம்) |
|---|---|---|
| 60 கிராம் தழைச்சத்து தெளித்தல் | 15.6 | 22.9 |
| 120 கிராம் தழைச்சத்தை மண்ணில் இடுதல் | 13.9 | 9.5 |
| தழைச்சத்து இடாதது | 12.7 | ... |

ஆகவே மண்ணில் இடும் அளவில் பாதியைச் செடியின் மீது தெளிப்பதால் அதிக விளைச்சல் பெறலாம் என்பது தெளிவாகிறது. இதற்கு யூரியாவை நீரில் கரைத்து (ஒரு சதவீதம்) 12 தடவைகள் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். முதல் எட்டு தடவைகள் மார்ச்சு முதல் ஜூன் வரை மாதத்திற்கு இரு முறையும், மற்ற நான்கு தடவைகள் மாதத்திற்கு ஒரு முறை ஜூலையிலிருந்து அக்டோபர் வரையிலுமாகத் தெளிக்க வேண்டும்.

இம்முறையில் தழைச்சத்து அளிப்பதில் செலவும் குறைகிறது! ஒரு செடிக்கு 60 கிராம் தழைச் சத்து விதம் தெளிக்க ஒரு ஏக்கராவுக்கு 144 கிலோ யூரியா தான் தேவைப்படுகிறது. ஒரு செடிக்கு 120 கிராம் தழைச் சத்தை மண்ணில் இடுவதற்கு ஒரு ஏக்கராவுக்கு 720 கிலோ அம்மோனியம் சல்பேட்டு தேவைப்படுகின்றது. ஆகவே, ஒவ்வொரு செடிக்கும் 60 கிராம் தழைச் சத்து அளிக்க யூரியாவை நீரில் கரைத்து தெளிப்பதன் மூலம் உரமிடும் செலவில் ஏக்கருக்கு ரூபாய் 500 குறைகிறது. அத்துடன் விளைச்சலும் அதிகமாகின்றது.



# விடியாத இரவுகள் விடிகின்றன



## மாமல்லன்

உறக்கத்தில் கேட்பதுபோல் ரத்துத் தார் ரோட்டில் ந்து மணி பி.ஆர்.சி. பஸ் பாகும் இரைச்சல் கேட்டது. வறிச்சோடிக் கிடந்த தெருவில் திடீரென ஒரு குழந்தை அழுவது கேட்டதும் தாவாரத்துக் கயிற்றுக் கட்டிலில் முடங்கிக்கிடந்த பேச்சிக் கிழவி, கண்ணிமைகள் படபடக்க எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''வேலம்மா .....! என்னடி இன்னைக்கி நேரத்தோட வந்துட்டே?! ஆரு காட்டுக்கு வேலைக்கி போனே ? என்று கேட்டாள். கிழவிக்குக் கண் பார்வை இல்லாவிட்டாலும் காதும் கவனமும் மிகவும் கூர்மை. அந்தக் கைக்குழந்தையின் அழுகுரலை இனம் வைத்து அங்கே வேலம்மாதான் வந்து கொண்டிருக்க வேண்டும் என்ற துல்லியமான தீர்மானத்தோடு கேட்டாள். இந்த விஷயத்தில் பேச்சிக் கிழவி ''பொல்லாதவள்''. இரண்டு தெருக்கள் தள்ளி ஒரு எருமை கத்தினாலும் அது யார்வீட்டு எருமை என்பதை அணுப் பிசகாமல் அடையாளம் சொல்லுவாள்.

''இன்னைக்கி தனுக்கோடி மாமனுக்கு மந்தக்காட்லகளே வெட்னோம். கள அம்புட்டு ரொம்ப இல்ல. அதான் நேரத்தோட வந்துட்டோம்.'' என்று வேலம்மா பதில் சொல்லிவிட்டு, இடுப்பிலிருந்து த்திய குழந்தையைக் களைப்போடு இறக்கிச் சக்சென்று தரையில் இருத்தி வைத்துவிட்டுக் கதவைத் திறந்தாள். வேலம்மாவுக்குப் பக்கத்து வீடுதான்.

''அந்தக்காட்ல எப்பவுமே கள மத்திமமாத்தான் இருக்கும். ரெண்டு குறுக்கம்காடு. பதுனஞ்சு ஆள் உடுவாக. லாத்தலா எடுத்துட்டு நாலு நாழியப் பொழுது இருக்கவே கரையேறிடுவோம். ஹூம்.... (பேச்சிக்கிழவி தான் முன்பு களையெடுக்கப் போனதை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்)...இன்னைக்கி எத்தன ஆள் எடுத்திக.....?''

''இன்னைக்கும் பதுனஞ்சு ஆள்தான்.''—வேலம்மா வீட்டிற்குள்ளிருந்து குழந்தையை மடியில் போட்டுப் பால் கொடுத்தவாக்கில் பதில் சொன்னாள்.

''எங்க வூட்டு தாடவ இன்னைக்கி ஒங்ககூட வேலக்கி வரலியா?''

''இல்ல. அவ இன்னைக்கி எலந்தா ஊரணிக் காட்டுக்குப் போயிருக்கா.''

முதல் பரிசு
பெற்ற
சிறுகதை

''ஆருகூட......?''

''மேலத்தெரு வெள்ளச்சி கூட......''

''சம்வேல் தேவரு காட்டுக்காடி......?''

''ஆமோவ்....''

''அப்போ வெளங்குனப்புலதான். அவ வாறதுக்கு இன்னைக்கி மசங்கிரும்''.—பேச்சிக்கிழவி சோர்வடைந்து மௌனமாகிவிட்டாள்.

பேச்சிக்கிழவிக்கு வயது அறுபதுக்கு உட்படத்தான் இருக்கும். இளம் வயதிலேயே தாலியறுத்துவிட்டு விதவையாகி வெள்ளைச் சேலை கட்டிக்கொண்டு காடுகரைக்குக் கூலி வேலைக்குப் போக ஆரம்பித்துவிட்டதால் விரைவாகவே இளமையையும், பொலிவையும் இழந்து கிழவிபோலாகிவிட்டாள். பேச்சிக் கிழவிக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவனும், கல்யாணமாகி நான்கைந்து வருடங்கள் வெறும் வாழ்க்கை வாழ்ந்துவிட்டு ஒரு பிள்ளைகூட இல்லாமல் அற்பாயுளில் செத்துப் போனான்.



இப்போது அந்த வீட்டில் கிழவியும் அவள் மருமகளு மாகத்தான் இருக்கிறார்கள்.

நல்ல நாளிலேயே மாமியார் என்றால் மருமகளுக்கு எட்டிக் காயாகத்தான் இருக்கும். கண் தெரியாமல் வீட்டோடு கிடக்கும்போது கேட்கவேண்டுமா? மருமகள் உழைத்து மாமியாளுக்கு ஊத்தவேண்டியநிலைமை வந்ததும் மருமகளின் கை வெகுவாக ஓங்கிப்போயிற்று. பாவம் பேச்சிக்கிழவி! மருமகள் வேண்டா வெறுப்பாய் முனங்கி முனங்கி ஊற்றுவதை மறுபேச்சுப் பேசாமல் குடித்து விட்டு, அந்த கயிற்றுக் கட்டிலும், தாவாரமுமே கதியாய்க் கிடந்தாள்.

பேச்சிக்கிழவி இரண்டு வருடங்களுக்கு முன்னால் வரை வேலை வெட்டிக்குப் போய்க் கொண்டுதானிருந்தாள். அவள் கண்பார்வை கொஞ்சங் கொஞ்சமாக மங்கிக்கொண்டே வந்தது. எதிரேவரும் உருவம் ‘துலாம்பரமாக’ அடையாளம் தெரியாவிட்டாலும் மங்கலான உருவமாய்த் தெரியும் வரை அவள் வேலைக்குப் போனாள். ஒருநாள் அப்படி வேலைக்குப் போய்விட்டு வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டுக் களைப்போடு இரவில்படுத்தாள். படுக்கும்போதே இலேசான தலைவலி இருந்தது. சிறிது நேரத்தில் தலை விண் விண்ணென்று தெறிக்க ஆரம்பித்தது. உறங்கவும் முடியாமல் கண்ணைத் திறக்கவும் முடியாமல் விடிய விடிய அனத்திக் கொண்டே புரண்டுவிட்டு அதிகாலையில் விழித்துப் பார்த்த போது பார்வை சுத்தமாக இருண்டு போயிருந்தது. அவளைப் பொறுத்தவரை அன்று இருட்டிய இரவு இன்னும் விடியவேயில்லை.

கண்பார்வை மட்டும் இருந்தால் கிழவியால் இன்றுகூட வேலைக்குப் போய் ஒன்றரை ஆள் வேலையைச் சாய்க்க முடியும். அவள் உடம்பில் இன்னும் அந்த அளவுக்குத் தெம்பு இருக்கிறது. வெறும் தெம்பு மட்டும் இருந்து என்ன செய்ய? அவள் அதை நினைத்துத்தான் அடிக்கடி மனம் நொந்து கொள்வாள். தன் பார்வை போனதைக்கூட அவளால் சகித்துக் கொள்ள முடியும் போலிருந்தது, ஆனால் அந்த நிரந்தர இருட்டுக்குள் சிறைப்பட்டு அந்தக் கயிற்றுக் கட்டிலே கதியென்று கிடக்க வேண்டியிருப்பதையும், வேலை வெட்டிக்குப் போக முடியாமல் சும்மா இருப்பதையும்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் கால்கள் வெகுதூரம் நடக்கத் துடிக்கின்றன. அவள் கைகள் ஏதாவது வேலை செய்வதற்காகச் சதா பரபரக்கின்றன. ஆனால் அந்தத் துடிப்பையும், பரபரப்பையும் அடக்கி அடக்கிச் சாகடிக்க வேண்டியிருக்கிறதே அதுதான் அவளுக்குத் தீராத மனவேதனையாயிருந்தது.

பேச்சிக்கிழவி வெகுதூரம் பேசாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவள் கவனம் தன் மருமகள் எப்போது வருவாள் என்பதிலேயே, அடிக்கடி குவிந்து நின்றது. அவளுக்கு அப்போது பசியாயிருந்தது. அதிகாலையில் அரைப்படி பிடிக்கிற ஒரு அலுமினியக் குவளையில் அவள் மருமகள் கம்மங்கஞ்சியைக் கரைத்து நாய்க்கு ஊற்றுவது போல் ஊற்றிப் போட்டுவிட்டு பக்கத்திலேயே இரண்டு ‘ஈராங்காயத்தையும்’ போட்டுவிட்டுக் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு போய்விட்டாள். காலையில் அதைக் குடித்த பிறகு இந்நேரம் வரையிலும் பச்சைத் தண்ணீர்கூடப் பல்லில் படவில்லை. இனி எந்நேரம் மருமகள் வந்து கம்பு இடித்துக் கஞ்சி காய்ச்சி இவளுக்குத் தரப் போகிறாளோ ?

கிழவி மீண்டும் வேலம்மாவோடு பேச்சு கொடுத்தாள்.

“யடி வேலம்மா.....!”

“ஓய்.........!”

“என்ன செய்யிற?”

“கைகால்லாம் ஒஞ்சிக்கிட்டு வந்துச்சி, சித்த படுத்திருக்கேன்,”



“நேரம் இருட்டிடுச்சி...?”

“இப்பத்தான் மம்மலா இருக்கு”

“நீ கஞ்சி காச்சலயா?”

“இல்ல. நேத்து காச்சின கஞ்சி இம்புட்டூண்டு கெடக்கு. இன்னைக்கிக் காணும்.”

பேச்சிக்கிழவி மீண்டும் அமைதியானாள். அப்போது வேலம்மாவிடம் கொஞ்சம் கஞ்சி வைத்துக் கரைத்துத் தரச் சொல்லிக் குடிக்கலாமா என்று அவளுக்கு எண்ணம் ஓடிற்று. ஆனால் அதற்குத் தயக்கமாக இருந்தது. கேட்போமா, வேண்டாமா என்று அவள் தன் மனத்துக்குள்ளேயே போராடிக் கொண்டிருந்தாள். தந்தால்தான் ஆயிற்று. கேட்டும் கேட்காது போல் இருந்துவிட்டால்? அல்லது ‘கஞ்சி கொஞ்சமாத்தான் கெடக்கு’ என்று அவள் சொல்லிவிட்டாளானால் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதே என்ற பயமும் ஏற்பட்டது. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாகப் பசிமயக்கமும் நாவறட்சியும் அவளைக் கிறக்கின.

“வேலம்மா......”

“ஓய்.....”

“தண்ணி தாகமா இருக்குடி. இத்னூண்டு கஞ்சி வெச்சி கரச்சி தண்ணி தரமாட்ட ?”

“..............”

வேலம்மாவிடமிருந்து பதில் ஏதும் வராததால் கிழவிக்கு ‘திக்’ கென்று நெஞ்சை அடைத்தது. மனத்துடிப்போடு மீண்டும் ஒரு குரல் கொடுத்தாள்.

“வேலம்மா......”

“ஓய்....! கேட்டுச்சி. தோ.. கரச்சிக் கொண்டாறேன்.”

கிழவியின் துடிப்பு அப்போது தான் அடங்கிற்று. சிறிது நேரத்தில் ஒரு கும்பாவில் கஞ்சி வைத்துக் கரைத்து உப்புப் போட்டுக் கலக்கிக் கொண்டு ஒரு அலுமினியத்தம்ளரும், இரண்டு மிளகாய் வற்றலும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். கிழவியின் அருகில் வந்து நின்று கொண்டு அவள் கையைப் பிடித்து “இந்தா. தம்ளரைப் பாடக் சுக்க, ஊத்தறேன்.” என்று சொல்லி தம்ளரைக் கொடுத்துவிட்டு கும்பாவிலிருந்த கஞ்சியைக் கலக்கி ஊற்றினாள். கடித்துக் கொள்வதற்கு ஒரு மிளகாய் வற்றலையும் அவள் கையில் கொடுத்தாள் மிளகாய் வற்றலை வாங்கி ஒரு கடி கடித்துக்கொண்டு, பசியின் வேகத்தில் கிழவி கஞ்சியை மடமடவென்று குடித்தாள். அவளுக்குப் புரையேறிற்று. “மொள்ளமா குடியேன். என்ன அவசரம்?” என்று சொல்லிக்கொண்டே வேலம்மா கிழவியின் உச்சந்தலையில் மெள்ளத்தட்டினாள். பிறகு இரண்டாவது முறையாகத் தம்ளரை நிரப்பினாள்.

அந்நேரம் பார்த்துக் கிழவியின் மருமகள் ஆவடை வீட்டிற்கு வந்து விட்டாள். அங்கே நடந்த காட்சியைக் கண்டதும் ஆவடைக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

“கெழட்டு முண்ட. வீடு வீடா வாங்கிக்குடிக்க ஆரம்பிச்சுட்டியா? குடி..குடி. ஒன் இஷ்டம்போல கொற நாளைக்கும் இப்பிடியே வீட்டுக்கு வீடு பிச்சை எடுத்து குடிச்சிக்க. இன்னமே நான் கஞ்சி ஊத்துவேன்னு மட்டும் சிந்தயில நெனச்சிராத....” என்று பலமாகக் கத்திக் கொண்டே போய் கதவைத் திறந்தாள்.

இந்த சனியனை எப்போது தொலைக்கலாம்’ என்று காத்துக்கொண்டிருந்த ஆவடைக்கு இது ஒரு சரியான சந்தர்ப்பம் கிடைத்ததுபோல் ஆயிற்று. இதுதான் சாக்கென்று வைத்து மாமியாளை இத்தோடு தலைமுழுக வேண்டும் என்று ஆவடை முடிவு செய்து கொண்டாள். உண்மையில் ஆவடையின் எண்ணம், ‘குருட்டு முண்ட எங்கனையும் நாலு வீட்ல போயி வாங்கிக் குடிச்சா என்ன ? இதுலயே கெடந்து, நம்ம உசிர வாங்குறாளே......’ என்பதுதான்.

ஆவடை வீட்டிற்குள்ளிருந்து கிழவியின் ஒரு பழைய சேலையையும், அவள் சாப்பிடுகிற இன்னொரு அலுமினியத் தட்டையும், ஒரு பித்தளைத் தம்ளரையும் வெளியே தூக்கி வீசினாள். “இந்த...ஒன் சாமானல்லாம் இந்தா கெடக்கு. நீ எங்கினயும் போயி வாங்கிக் குடிச்சிக்க.” என்று தீர்மானத்தோடு, ஒரு பெட்டியில் கம்பும், ஒரு குண்டாச் சட்டியில் தண்ணீரும் எடுத்துக்



கொண்டு வெளியே வந்தாள்.

தெருவோரம் கிடந்த உரலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, பெட்டியிலிருந்த கம்பை குண்டாச்சட்டித் தண்ணீருக்குள் கொட்டி, அலசி, அரித்து உரலில் போட்டுக் கொண்டு, உலக்கையை எடுத்துத் ‘தக்..., தக்..’ கென்று இடிக்க ஆரம்பித்தாள். கம்பு இடிக்க இடிக்கக் கிழவியையும் கிழவிக்குக் கஞ்சி ஊற்றிய வேலம்மாவையும் சாடையிலுமாக இரண்டு ‘பாட்டம்’ ஆபாசமான வார்த்தைகளால் திட்டிவிட்டு, இடித்த கம்பைத் தோண்டிக்கொண்டு வீட்டிற்குள் போனாள். பேச்சிக்கிழவியோ, பக்கத்துவிட்டு வேலம்மாவோ, ஆவடையை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவளிடம் வாய் கொடுத்து விட்டு மீள முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஆவடை அடுப்புப் பற்ற வைத்து சோறு பொங்கி முடிப்பதற்கு இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. அதுவரை பேச்சிக்கிழவியும் தன் குருட்டுக் கண்களைக் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஆவடை தனக்குச் சோறு தருவாள் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தாள். ஆனால் ஆவடை, கிழவிக்குச் சோறு கொடுக்கவேயில்லை. அவள் மட்டும் வேக வேகமாகச் சாப்பிட்டுவிட்டுப் பாத்திரங்களை கழுவிக் கவுத்திவிட்டு, கிழவியின் காதில் நன்றாக விழட்டும் என்று கதவை ஓங்கித் தள்ளி ஓசைப்படச் சாத்திக்கொண்டு வீட்டிற்குள் படுத்துவிட்டாள்.

அதைப் புரிந்து கொண்டதும் பேச்சிக்கிழவிக் கட்டிலில் உட்கார்ந்து சுவரோடு சாய்ந்து கொண்டு கண்ணீர் விட்டு மௌனமாக அழுதாள். அந்தக் குருட்டுக் கண்களுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு கண்ணீர் வந்ததோ? பிறகு நடுச்சாமத்தைப் போல் அவளால் பசி தாங்க முடியாமல் போனபோது அவள் பெரிதாய் ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்து விட்டாள். அவள் தனக்கு ஏற்பட்டுவிட்ட அவல நிலையை எண்ணி உருகி ஓலமிட்டாள். பிறகு தன்னை இப்படி நிராதரவாய் தவிக்க விட்டு விட்டுச் செத்துப்போன தன் கணவனையும், மகனையும் வைது வைது ஒப்பாரி வைத்து அழுதாள். அந்த நள்ளிரவின் அமைதியில் அந்தக் கிழவியின் அழுகுரல் ஊரெங்கும் கேட்கும்படியாகத்தான் ஒலித்தது. பலன்..........?’

மறுநாள் விடிந்தது.

ஆவடை எழுந்து, இன்னும் அதே வேகத்தோடு பாத்திரம் தேய்த்துப் பல் விளக்கி, கஞ்சி ஊற்றிக் குடித்து விட்டு, வீட்டை இழுத்துப் பூட்டிக் கொண்டு வேலைக்குப் போய் விட்டாள். அப்போதும் அவள் கிழவிக்குக் கஞ்சி கொடுக்கவே இல்லை. தூக்கமோ அல்லது பசியின் மயக்கமோ? கிழவி கட்டிலில் சாய்ந்துகிடந்தாள்.

வெயிலேறிற்று. பருத்திக் காட்டுக்குக் களையெடுப்பு நேரமானகையால் ஊருக்குள் ஆள்நடமாட்டம் குறைந்து கொண்டே வந்தது. சின்னஞ் சிறுசுகளெல்லாம் பள்ளிக்கூடம் போய்விட்டன. வேலம்மாவும் களைக்குப் புறப்பட்டாள். அவள் மறுபடியும், காலையில் பொங்கிய சோற்றை ஒரு தட்டில் போட்டுக் கொண்டு வந்து கிழவியை எழுப்பினாள். கிழவி எழுந்து உட்கார்ந்தாள். ஆனால் அந்தச் சோற்றைச் சாப்பிடப் பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

“வேலம்மா. எனக்குக் கஞ்சியும் தந்துட்டு, அந்த தாடவ வையுற வசவையும் எதுக்குடி நீ கேட்கணும்? எனக்குச் சோறு வாண்டாம்! நான் சாப்பிட மாட்டேன். எனக்குத்தான் அவ வையுறத கேக்கவேண்டிய விதியிருக்கு. நீயேன் கேக்கணும்? அந்த முண்டச்சி ஒன்ன என்னென்ன சொல்லி வையிறா பாத்தியா ? இந்தா பாரு. அவ நாசமாத்தான் போயிருவா! என்னைய இப்பிடி வயிறெரிய வைச்சிட்டு அவ ஒருநாளும் வெளங்க மாட்டா...” என்று ஆத்திரத்தோடு சாபமிட்டாள். வேலம்மாவும் காட்டுக்கு, வேலைக்குப் போனாள்.

சிறிது நேரத்தில் பேச்சிக் கிழவியின் மனத்தைப்போலவே அந்தத் தெருவும் வெறிச் சோடிப் போயிற்று.

அன்று மாலை காடுகரைகளிலிருந்து ஜனங்கள் வீடுதிரும்பியபோது பேச்சிக்கிழவியை அந்தத் தாவரத்தில் காணவில்லை. அவள் படுத்திருந்த கயிற்றுக்கட்டில் சுவரோரம் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. அவள் எங்கே போனாள்? என்ன ஆனாள்? என்பது யாருக்குமே தெரியாமல் போயிற்று. தெருவில் ஆண்களும் பெண்களுமாகக் கும்பல் கும்பலாய் நின்றுகொண்டு கிழவியைப் பற்றிப் பேசித் தங்களுக்குள் 'ஆற்றுமைப்பட்டு'க் கொண்டார்கள்.

''பாவம், கண்ணு தெரியாம எங்கபோயி தடுமாறிக்கிட்டு கெடக்குறாளோ?''

''எங்கயாச்சும் கெணத்துகளுக்குள்ள போயி விழுந்து செத்திருப்பாளோ?'

''எங்கிட்டும் போயி நாண்டிக்கிட்டு நின்னுட்டாளோ!''

''மூட்டப்பூச்சி மருந்தக் குடிச்சிட்டு எங்கிட்டும் போயி பேசாமப்படுத்துட்டாளோ?''

''ரோட்டுவழி போயிருந்தான்னா கார்ல அடிபட்டு செத்துருப்பா.''

''கண்ணுபோன பின்னால மனுசப் பெறவி வாழ்றதுலே என்ன இருக்கு ?''

''இந்த ஆவட முண்டைட்ட அவளும் எத்தனை நாளக்கித் தான் வசவு வாங்கி வசவு வாங்கி கஞ்சி குடிப்பா பாவம்.

''இவகிட்டக் கஞ்சி வாங்கி குடிக்கிறதவிட அவ செத்துப் போனதே நல்லதுதான்.''

''பாவம் பேச்சிக்கிழவி. இந்தத் தெருவுக்கு காவலானுச்சும் சத்தம் குடுத்துக்கிட்டு கெடந்தா. அவளும் போய் சேந்துட்டாளா?''

''அவ எப்படிப்பட்ட வேலக்காரி! கள வெட்டுல நெற பிடிச்சாள்னு எப்பேர்ப்பட்ட ஆளா இருந்தாலும் அவ நெற முந்தமுடியாது.''

''..............''

ஊர் ஜனங்கள் பேச்சிக் கிழவியைப் பற்றி நினைத்துக் கொண்டபோதெல்லாம் அவளை பற்றித் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ஒருநாள்-இரண்டுநாள்-மூன்றுநாள் — அவளைப்பற்றிய பேச்சு குறைந்து கொண்டே வந்தது. அவளைப்பற்றி ஒரு தகவலும், யாருக்கும் கிடைக்கவில்லை. அவள் செத்துத்தான் போனாளா? அல்லது எங்காவது இன்னும் உயிரோடுதான் இருக்கிறாளா? யாருக்கும் தெரியவில்லை.

பத்து நாட்களாயிற்று. ஊரில் யாருக்கும் பேச்சிக் கிழவியைப் பற்றிய நினைவே இல்லை.

அன்று சாயங்கால நேரம். ஆவடையின் வீடு பூட்டிக்கிடந்தது. பேச்சிக்கிழவி படுத்திருந்த கட்டில் இன்னும் சுவரோடு சாத்திவைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. பக்கத்து வீட்டிற்குள் வேலம்மா அரிசி புடைத்துக்கொண்டிருந்தாள். பள்ளிக்கூடம் போய்விட்டு வந்த பிள்ளைகள் தெருவில் கிட்டியடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். இரண்டு பெண்கள் தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தத் தெருவுக்குள் ஒரு வெள்ளைநிற 'மோட்டார் வேன்' வந்து, ஆவடையின் வீட்டுக்கு முன்னால் நின்றது. விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களெல்லாம் ஓடிவந்து அந்தக் காரைச் சூழ்ந்துகொண்டார்கள். தெருவில் நின்ற எல்லோருடைய பார்வையும் அந்தக் காரின்மேல் வந்து பதிந்தது. வீட்டிற்குள் அரிசி புடைத்துக் கொண்டிருந்த வேலம்மா வெளியே வந்து எட்டிப்பார்த்தாள்.

அப்போது அந்தக் காருக்குள்ளிருந்து பேச்சிக்கிழவி இறங்கினாள். அவளைக் கண்டதும் சூழ்ந்து நின்ற சிறுவர்களெல்லாம் ''ஏ.....பேச்சிப் பாட்டி வந்துட்டா!....பேச்சிப் பாட்டி வந்துட்டா!'' என்று மகிழ்ச்சிக்குரல் எழுப்பினார்கள். அதைக் கேட்டதும் அரத்தில் நின்ற ஆண்களும்-பெண்களும் அங்கே வந்து கூடிவிட்டார்கள். அந்த 'வேன்' திரும்பிப்போய் விட்டது. பேச்சிக்கிழவி அலட்சியமாக நடந்துபோய் தாவரத்துச் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த கட்டிலை எடுத்துப்போட்டு உட்கார்ந்தாள். அவளுடைய இடது கண்ணில் உள்ளங்கையகலத்தில் நீலநிற துணித்திரை தொங்கிக்கொண்டிருந்தது. அவள அந்தத் துணித்திரையை மெல்லத் தன் இடது கையால் தூக்கிக் கொண்டு எதிரிலே நின்றவர்களைப் பார்த்தாள். அவள் ஒவ்வொருவரையும் இனம்கண்டு பெயர் சொல்லி அழைத்துப் பேசினாள். சுற்றி நின்ற கூட்டம் அவளை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு நின்றது. 'அட! பேச்சிக்கெழவிக்குக் கண்ணு தெரியுது!'

வேலம்மா பேச்சிக்கிழவிக்குக் கஞ்சி கரைத்துக்கொண்டு வந்தாள். கிழவி, அவளைக்கண்டதும், ''அடி வேலம்மா.....எம் புண்ணியாட்டி, என்னைப் பாத்தியாடி...! எனக்கு இப்போ கண்ணு தெரியுதுடி! ஒங் கண்ணு நல்லா தெரியுது. எனக்கு இனிமே இருட்டுத்தான் கதின்னு நெனச்சேன். எனக்கு வெளிச்சம் வந்துட்டு. எனக்கு கண்ணு தெரியுது! அன்னைக்கி அந்த ஆவடமுண்ட என்னைய என்னபாடு படுத்திட்டா பாத்தியா? எம் மனசு என்னபாடு பட்டுச்சி தெரியுமா? இனிமே நம்ம இந்த ஒலகத்துல இருக்கப்புடாது. செத்துப்போயிடணும்னுதான் நெனச்சேன். எப்படி சாவலாம்னு ரோசனை பண்ணிக்கிட்டு இருந்தேன். ஆனா அதுக்குள்ள, கவர்மெண்டு ஏற்பாட்டுல கண்ணுக்கு ஆப்ரேசன் பண்ணு கண்ணு. இப்ப வந்துட்டு போவுதே..இந்த கார்ல வந்து என்னைய உகலம்படிக்கி கூட்டிட்டு போய்ட்டாங்க. போகும்போது யார்ட்டாச்சும் சொல்லிட்டுப் போவலாம்னுகூட அப்பம் இந்த தெருவுல ஒரு நாதி இல்லாம போச்சி. நானு என்ன செய்யட்டும்?''-என்று பேச்சிக்கிழவி பூரிப்போடும், ஒருவித நன்றியுணர்ச்சியோடும் பேசினாள்.

பிறகு வேலம்மா ஊற்றிக் கொடுத்த கஞ்சியை வாங்கிக் குடித்தாள். குடித்து முடித்ததும் அவள் வேலம்மாவின் கைகள் இரண்டையும் பற்றிக் கொண்டு ''அடி வேலம்மா. அந்த வாரம் நானும் உன்கூட களைக்கு வாரேன். என்னையும் ஒரு ஆளு சேத்துக்கடி.... என்ன!'' என்று சொன்னாள். கிழவியின் வார்த்தைகளில் ஆர்வத் துடிப்பும், அதிகமான நம்பிக்கையும் பொரியாய்த் தெறித்தன. அவளால் இனி எப்படி வேலை செய்யாமல் சும்மா இருக்கமுடியும்?



# வரலாறு சமைப்போம்!

அறிவியலில் உலகமெலாம் நெறியோங்கி வாழ்கிறது;
வறியரென ஒருபிரிவில் வாட்டமுமே சூழ்கிறது!
கொள்ளைகொள்ளும் நோய்பலவும் அறிவியலால் குறைகிறது;
வெள்ளமெனப் பிறப்புக்கள் அறியாமை விளைக்கிறது!
வெண்மதியின் வியன்பரப்பை மிதித்திடவும் நாடுகிறார்;
உண்பதற்கே உணவின்றி உலைவதுவும் காணுகிறோம்!
செல்வமெனும் அறிவியலின் தெண்ணீரை மேன்மேலும்
பல்துளையாம் பெருகுமக்கள் பானையிலே ஊற்றுதல்போல்
முன்னேற்றத் திட்டமெலாம் முனைப்பாகத் தீட்டிடினும்
தின்னுதற்கும் உடுப்பதற்கும் துன்னிடுமோர் வீட்டிற்கும்
வகைசெய்தல் வேண்டுமென வளமெல்லாம் வரண்டுவிடும்!
மிகையான சுமையாக விளைமக்கள் பெருக்கத்தை
அணைபோட்டுத் தடுத்திடுதல் வேண்டுமென அறிஞரெலாம்
இணைகின்ற ஐ.நா.நல் மன்றத்தார் இவ்வாண்டை
'உலகமக்கள் தொகையாண்டு' நல்லாண்டாய்க் குறித்துள்ளார்!
நலமான உலகமைக்க நாடிடவே எண்ணுகிறார்!
சேய்நலமும் தாய்நலமும் திறமாகப் போற்றுதற்கும்
நோய்நொடிகள் தவிர்ப்பதற்கும் சத்துணவை நுகர்ந்திடணும்!
குறையுமெனில் உயிர்ச்சத்தே ஒளிவிழியும் குறைந்திடுமாம்'
முறையாக முளைகளுக்கும் பூச்சிகொல்லி தூவுதல்போல்
பிள்ளையர்க்கே தடுப்பூசி போட்டால்தான் பின்னாளில்
தொல்லைதரும் நோய்பலவும் இல்லாமல் நலமோங்கும்!
பள்ளியிலே சிறார்க்கெல்லாம் உடல்நலத்தைப் பார்த்திடவும்,
உள்ளபல விழியிழந்தோர் ஒளிபெறவே செய்திடவும்,
தொழுநோயின் இரவலர்கள் துன்பங்கள் துடைத்திடவும்,
பழுதுற்ற - ஊனமுற்றோர் பயன்பெற்றே வாழ்ந்திடவும்,
நல்வாழ்வு முதலான முன்னேற்றத் திட்டங்கள்
எல்லாமும் செயற்படுத்தப் பல்குகிற பிறப்புகளை
இரண்டோடு நிறுத்திட்டால் குடும்பத்தில் எந்நாளும்
திரண்டபல செல்வமெலாம் செழித்தோங்க நனிவாழ்வோம்!
செல்வத்தில் அறிவியலில் திகழ்கின்ற உலகமெலாம்
நல்லபெரும் நலத்திட்டம் குடும்பநலம் கைக்கொண்டே
ஓங்குவதை உணர்ந்திடுவோம்! உலகமெலாம் இவ்வாண்டைப்
பாங்காகப் பிறப்புகளைக் குறைத்திடவே பகுத்துளதை
எண்ணிடுவோம்! எல்லாரும் பெற்றிடுவோம், உலகத்தின்
வண்ணமுடன் இயைந்தேநாம் வரலாறு சமைப்போமே!

1974

மனசை ப.கீரன்

# பொன்னான பணிகள் செய்யும் — அண்ணா அமைத்த சீரணி



எம். அப்துல்ரஹீம், பி.ஏ.,
தனி அலுவலர், சீரணி

பொது நன்மைக்காக ஒன்றுபட்டு உழைக்கும் உணர்ச்சிக்குத் தமிழகத்தில் என்றுமே குறைவில்லை. இந்த கருத்தினை மையமாக வைத்து 1967-ஆம் ஆண்டில் சீரணி என்ற சிறந்த அமைப்பை உருவாக்கித் தந்தவர் அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதைத் தமிழகம் அறியும்-ஏன்? உலகமே அறியும். நாட்டு விடுதலைக்குப்பின், சமூகத் தொண்டு, அறிவுத் தொண்டு வளர நல்ல பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன. நாட்டின் தந்தை காந்தியடிகள், உழைப்பின் உயர்வை உணர்த்திட, நிர்மாணத் திட்டத்தை நாட்டிற்குத் தந்தார். அவர் வழியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தான் அரசுப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின் இல்லாமை, போதாமை, அறியாமை என்ற இடர்பாடுகளைப் போக்க எண்ணி, சீரணி என்ற அமைப்பை தமிழ் நாட்டிற்கு உருவாக்கித் தந்தார், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மக்களின் நல்வாழ்வுக்கெனத் தீட்டப்படும் திட்டங்கள் முழு அளவில் நிறைவேற்றப்பட அரசு மட்டும் முயன்றால் போதாது, அரசோடு மக்களும், தொண்டுள்ளம் படைத்த இளைஞர்களும் முன்வரவேண்டும். எல்லாரும் எல்லாக் காலத்திலும் பொதுத் தொண்டில் ஈடுபட இயலாது. தொழில் தொல்லைகள், குடும்ப பாரம், இன்னும் பல ஆசாபாசங்கள், அதற்குக் குறுக்கே நிற்கும். அவைகளை ஒதுக்கித் தள்ளி நாட்டைச் சீராக்கிச் செம்மைப்படுத்த, அதற்கென்று ஒரு சிலராவது அவசியம் பொதுப்பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். தங்களது குடும்பக் காரியங்களைக் கவனித்தது போக மீதமுள்ள நேரத்தை வெறும் பொழுது போக்குக் களியாட்டங்களில் வீணடிக்காமல் நாட்டு மக்களின் நல்வாழ்விற்குத் தங்களின் உழைப்பினைப் பயன்படுத்த வேண்டும். பணம் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கோர் ஆற்றலையும் அளித்து உழைப்பின் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும். இத்தகைய தத்துவத்தின் அடிப்படையில் பின்னிப் பிணைந்ததுதான் சீரணி.

சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல. தூய தொண்டாற்றவும், தோழமை வளர்க்கவும், மக்களின் வாட்டத்தைப் போக்கவும், நாட்டின் வளத்தைக் கூட்டவும் உருவாக்கப்பட்டதுதான் சீரணி.

மோட்டார் நன்றாக ஓட, அதை ஓட்ட விசை இருந்தால் மட்டும் போதாது. அது தவறான வழியில் செல்லாமல் தடுக்க பிரேக்கும் வேண்டும். நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால் மட்டும் போதாது. அது தடம்புரண்டு ஊரை அழித்திடாமலிருக்கக் கரை வேண்டும். சமூகத்தொண்டு புரிய இளைஞர்கள் பலபேர் இருந்தால் மட்டும் போதாது. அவர்களின் ஆற்றலை, திறமையை, உணர்ச்சியை ஆக்கப் பணிக்குத் திருப்ப கட்டுப்பாடான அணி ஒன்று தேவை. அது தான் சீரணி.

உணர்ச்சிப் பிழம்பாய், உள்ளத் துடிப்போடு நிற்கும் இளைஞர் சமுதாயத்தை ஆக்கப் பணிக்கு ஈடுபடுத்தவும், நாடு எனக்கென்ன செய்தது என்று கேட்காமல், நாட்டிற்கு நான் என்ன செய்தேன் என்று சிந்திக்க வைக்கவும்—தன் கையே தனக்குதவி என்ற தாரக மந்திரத்தை தரணிக்கு நினைவுப் படுத்தி, மக்களைத் தன்னலங் கருதாத பொதுப்பணிக்குத் தயார்ப்படுத்தவும், எல்லாவற்றிற்கும் அரசையே நம்பும் நிலையைப் போக்கி, தன்னால் முடிந்ததை நாட்டிற்குச் செய்ய அணி ஒன்று தேவை. அதுவும், சர்க்கார் பற்றற்ற, சர்க்கார் நேரடித் தலையீட்டில் வராத-ஊதியம், பணம் உத்தியோக உணர்வு கோராத ஒருவித அணி எல்லா நாட்டிற்கும் தேவை—எண்ணினார் அறிஞர் அண்ணா; சீரணி உருவாயிற்று. நாட்டை சீர்படுத்த, சிக்கல்களை நீக்கிச் சமுதாயத்தைச் செப்பனிட மக்கள் வாழ்வைச் சீரமைக்க அறிவைப் பரப்ப, ஆக்கப் பணிகளை ஆற்ற அமைக்கப்பட்டது தான் சீரணி.

இந்த அமைப்பில் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் பொறியியல் வல்லுநர்கள், பாட்டாளிகள், மாணவர்கள், தாய்மார்கள், எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அரசியலில் ஈடுபாடில்லாத முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் 56,180-ஆக சீரணி தொண்டர்கள் பைந்தமிழ்நாடு பல்வளம் பெறவும் சமூகநல ஏற்றம் எய்தவும் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி காணவும், நல்ல ஆக்கப் பணிகள் ஆற்றவும், சீரணியில் நம்பிக்கையும், கொள்கையில் பற்றும் செயலில் ஈடுபாடும் கொண்டு உள்ளத் தூய்மையோடு, காய்தல், உவத்தல் அகற்றிக் கைமாறு கருதாது, கட்டுப்பாடோடும், கண்ணியத்தோடும் கடமையாற்றுவேன் என்று உறுதிமொழி ஏற்று "சீரணி பத்து' என்ற கோட்பாடுகளை வழிகாட்டியாக அமைத்துக் கொண்டு நாட்டின் வளத்தைப் பெருக்க, காட்டைத் திருத்திக் கழனியாக்கி, நீண்ட நெடுங் காலமாகச் செப்பனிடப்படாத ஏரிகள், குளங்களைச் செப்பனிட்டு, அறிவைப் பெருக்கப் பள்ளிகள் அமைத்து, கிராமங்கள் செழிக்க இணைப்புச் சாலைகள் ஏற்படுத்திக் கடந்த ஏழாண்டுக் காலத்தில் உருவாக்கித் தந்த சாதனைகள் ஏராளம், ஏராளம்!

கல்வி, வேளாண்மை, ஊர்ப்புறங்களில் சாலைகள் அமைத்தல், ஊர்ப்புறச் சாலைகளை நெடுஞ்சாலைகளுடன் இணைத்தல், திறந்தவெளி அரங்குகள், வானொலி மன்றங்கள் தரை மட்டக் குடிநீர்த்தொட்டிகள் அமைத்தல், குளங்கள்—கால்வாய்கள் ஆழப்படுத்துதல், அரிசன மக்களின் மயானங்களுக்குச் செல்லும் பாதைகள் அமைத்தல், பேருந்து பயணிகள் இளைப்பாற நிழற்குடைகள் அமைத்தல், சமுதாயக் கூட்டங்கள் அமைத்தல் போன்ற பொதுமக்களுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளில் சீரணி ஈடுபட்டு தொண்டாற்றி வருகின்றது.



சென்னை நகரில் சீரணியினரின் துப்புரவுப் பணிகளை அமைச்சர்கள் தொடங்கிவைத்தனர்

சீரணிச் செம்மல் பேரறிஞர் அண்ணாவின் 'சீரணிப் பத்து' என்னும் பத்துக் கட்டளைகளாவன:

1. ஊதியம் பெறு ஓய்வு நேரப்பணியாற்றல்,.

2. தன்னலங் கருதாப் பொதுப்பணி பேணல்.



சேலம் ஏர்க்காடு அருகில் சீரணியினர் கட்டியுள்ள பள்ளிக் கட்டடம்

உங்கள் எதிர்காலத்திற்கு ஓர் நற்செய்தி

TNSC BANK

எப்பொழுதும் இல்லாத அதிகப்படியான வட்டி இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு கொடுக்கப்படும் வட்டி உயர்வு.

| ரு 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
| --- | --- |
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரு 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001

தந்தி: அர்பாங்க் தொலைபேசி: 20387 டெலக்ஸ்: 7225

என்.எம்.ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர். குடவாசல் சி.கிருட்டிணமூர்த்தி, துணைத்தலைவர் ஆர்.கனகசபை, தலைவர்.


3. தன் மதிப்பையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தல்.

4. உழவும், தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல்.

5. கல்வியறிவும், பொது அறிவும் வளர வகை செய்தல்.

6. பொதுநலம் காணத் துப்புரவுப்பணி மேற்கொள்ளல்.

7. தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல்.

8. அன்பு வழியாக சமூகக் கேடு களைதல்.

கோட்டம், மண்டலம் மாநிலம் எனப்பிரித்து குழுக்களையும், தலைவர்களையும், நியமித்துச் சீரணிப் பணிகளைச் செயல்படுத்த வழி செய்யப்பட்டுள்ளது. சீரணித் தொண்டர்களுக்கு அரசின் சார்பில் உதவ, கூற்ற அளவில் ஆணையாளர்களும், கோட்ட அளவில் கோட்டாட்சித் தலைவர்களும், மண்டல அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உதவி செய்கிறார்கள். சீரணி படைத்த பணிகளை ஆய்வு செய்யவும், மேலும் பல புதிய ஆக்கப் பணிகளையும் திட்டங்களையும் உருவாக்கவும், கூற்றம், கோட்டம், மண்டலம், மாநில அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



9. திக்கற்றவர்களுக்குத் துணைபுரிதல்.

10. அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல்.

சீரணி செயல்திட்ட அமைப்பு முறை: கிராமங்களுக்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி ஒன்றிய அளவில் செயல்படுத்தவும், கோட்ட அளவில் மேற்பார்வையிடவும், மண்டலம் அளவில் ஆய்வு செய்யவும், மாநில அளவில் திட்டத்தின் சாதனைகளைப் பரிசீலிக்கவும், கூற்றம்,

சென்னை நகரைப் பொருத்தவரை 12 சீரணித் தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தலைவர் வீதம் 12 தொகுதிச் சீரணித் தலைவர்களும், வடசென்னை, தென் சென்னை, பகுதிகளுக்கு இரு சீரணிச் செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மாவட்ட சீரணித் தலைவரின் கீழ் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு ஆலோசனைகள் கூற நிர்வாகக்குழு ஒன்றுள்ளது. சென்னை மாவட்டத் தலைவருக்கென தனியே ஓர் அலுவலகம் அண்ணாசாலையிலுள்ள அரசினர் தோட்டத்தில் இயங்கி வருகிறது.

சென்னை மாவட்டத்தில் துப்புரவுப் பணி, பேருந்துப் பயணிகளுக்கு நிழற்குடைகள் அமைத்தல், சீரணி அரங்கம், பள்ளிக் கட்டிடங்கள்போன்ற பணிகள் இதர சமூகப் பணிகள் பலவும் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை நகரில் 410 மையங்களில் 820 சீரணித் தொண்டர்கள் குடிசைவாழ் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்டிருக்கும் சத்துணவு வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டு வாரத்தில் 5 நாட்கள் பணிபுரிகின்றனர். சென்னையில் மட்டும், சுமார் 80,000 பேர் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். தீத்தடுப்பு பணிகளில் உதவுவதற்கும், அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடவும் 'குடியரசு நாள்' போன்ற நாட்களில் அணிவகுப்புகளில் கலந்து கொள்ளவும், நேர்நடைப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் சென்னையில் 970 பேர் உள்ளனர். அதேபோன்று தமிழக முழுவதும் 3,000 பயிற்சி பெற்ற தொண்டர்கள்

உள்ளனர். இத்தொண்டர்களுக்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

மைய அரசின் நிதியுதவிடன் சீரணித் தொண்டர்களுக்கு ஊர் விரிவாக்கப் பயிற்சிப் பள்ளிகளில் தீவிரவேளாண்மை முறை, கால்நடை வளர்ச்சி, கிராமங்களில் தலைமைப் பொறுப்பை மேற்கொள்ளல் போன்ற இவைகளில் ஒவ்வொரு வருடமும் சுமார் 320 தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**சீரணி அறிவகங்கள்:** பொது மக்கள் மத்தியில் அறியாமையை அகற்றவும், நாட்டில் நடைமுறைகளையும், அரசின் சாதனைகளையும் அறிவிக்கும் வகையில் தமிழக முழுவதும் 534 சீரணி அறிவகங்கள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு சீரணி அறிவகம், தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேரூராட்சி மன்றங்களிலும் சீரணி அறிவகங்கள் என்ற எண்ணிக்கையில் செயல்படுகின்றன. இவ்வறிவகங்கள் வாரத்தில் 3 அல்லது 4 நாட்கள் மாலை நேரத்தில் நடைபெறும். ஒவ்வொரு அறிவகத்திற்கும் ஒரு சீரணித் தொண்டர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவருக்கு கௌரவ ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வழங்கப்பட்டு வருகிறது.

சீரணி அறிவகங்களுக்கு நாள், வார, மாத இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சீரணி அறிவகங்கள், தமிழக அரசின் சாதனைகள், முற்போக்கு நாடுகளில் உள்ள நிலை, சமூகக் கேடுகளைக் களைதல் ஆகியவற்றினைத் தெரிவிக்கும் பகுத்தறிவு மன்றங்களாக செயல்படுகின்றவை.

கடந்த ஏழு ஆண்டுகளில் சீரணித் தொண்டர்கள் தமிழகத்தில் தங்களின் அயராத உழைப்பாலும், ஆர்வத்தாலும், உருவாக்கித் தந்த சாதனைகளை எண்ணி, எண்ணி ஏறுநடை போடுகிறார்கள். மக்களிடையே புதியதொரு சமுதாய விழிப்பு உணர்ச்சியை உருவாக்கித் தன்னலம் கருதாத் தொண்டுணர்ச்சியைத் தூண்ட வேண்டும் என்ற முக்கிய குறிக்கோளுடனும், தாமக்கென ஊதியம் எதுவுமின்றிச் சேவையுள்ளத்துடன் ஆண்களும், பெண்களும் ஓய்வு நோக்கில் பிறர்க்கெனப் பணியாற்ற வேண்டும் என்ற உயரிய கோட்பாடுடன் அமைக்கப்பட்ட சீரணியின் வியக்கரு சாதனைகள் தமிழகத்தில் ஏராளம்.

சென்னை நகரில் பேருந்து நிலையங்களில் பயணிகளை ஒழுங்குபடுத்தும் பணியில் 83 சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். சீரணித் தொண்டர்கள் பயணிகளை வரிசைப்படுத்திச் சரியான பேருந்து தடயங்களில் ஏற்றி அனுப்புவதோடல்லாமல், கத்தரிக்கோல், களவு போன்ற சமூக விரோதச் செயல்கள் ஏற்படாமல் எல்லாராலும் பாராட்டப்படும் அளவிற்கு, விழிப்புடன் பணியாற்றுகின்ற இத்தொண்டு பொதுமக்களாலும், பத்திரிகைகளாலும் ஒருமனதாகப் பாராட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆறாண்டுகளில் சீரணி தனது ஒப்பற்ற சாதனைகள் மூலம், பொதுமக்களின் கவனத்தையும், மத்திய அரசின் கவனத்தையும் கவர்ந்துள்ளது. இப்பணிகளை கண்ணுற்ற பெரியோர்கள், எல்லைபுற காந்தி, மத்திய அரசைச் சார்ந்த அமைச்சர்கள் பலர் பாராட்டியுள்ளனர். மேலும், மத்திய அரசின் பொதுமக்கள் ஒத்துழைப்பு இயக்குநர் திரு பால் சௌத்ரி அவர்கள் தமிழகத்திற்கு வருகைதந்து, சீரணியின் சாதனைகளை பார்வையிட்டுப் பாராட்டியதோடு அல்லாமல் பிற மாநிலங்களிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தப் பரிந்துரை செய்து நாட்டின் எல்லா மாநிலங்களுக்கும் தமிழக சீரணியின் விவரங்கள் அடங்கிய கடிதம் அனுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பிடத்தக்க சில சீரணிப் பணிகள்:**

1. தஞ்சை மாவட்டத்தில் கோட்டூரில் ஊர்ப்பொதுமக்களும், சீரணித் தொண்டர்களுமாகச் சேர்ந்து சுமார் 25,000 பேர்கள், இரண்டு 8 மைல் நீளமுள்ள சாலையை ஒரே நாளில் அமைத்தனர்.

2. திருச்சி மாவட்டத்திலுள்ள வார்ப்பட்டு கிராமத்தையும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஓரத்துப் பட்டி கிராமத்தையும் இணைத்து 3 மைல் நீளத்திற்கு ஒரு சாலையை சுமார் 3000 பேர் ஒன்று சேர்ந்து ஒரே நாளில் நிறுவினர்.

3. எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பயன்படும் வகையில் சென்னை கடற்கரையில் 'சீரணி அரங்கம்' ஒன்றைச் சீரணித் தொண்டர்கள் 21 நாட்களில் கட்டி முடித்தனர்.

4. சென்னை, அடையாறு ஊரூரில் பத்தே நாட்களில் 30,000/- ரூபாய் மதிப்புள்ள பள்ளிக் கட்டிடம் ஒன்றைச் சீரணித் தொண்டர்கள் கட்டி முடித்தனர்.

5. சென்னை வியாசர்பாடியில் 5 பர்லாங் நீளமுள்ள ஒரு



வடிகால் 21 நாட்களில் தோண்டப்பட்டது.

6. துப்புரவின் அவசியத்தையும், உழைப்பின் உயர்வையும் பொது மக்களுக்கு உணர்த்தும் வகையில் சீரணித் தொண்டர்கள், மாநகராட்சி ஊழியர்களின் உதவியோடு சென்னை நகர முழுவதும் பொதுமக்கள் பாராட்டக்கூடிய அளவில் துப்புரவுப் பணியினை அவ்வப்போது மேற்கொண்டனர்.

7. குடுமியான் மலையில் உள்ள மாநில வேளாண்மைப் பண்ணையில் நிலச் சீர்திருத்தப் பணியை மேற்கொண்டனர். அச்சமயத்தில் முற்றிலும் மறைந்து போனதொரு குளத்தைக் கண்டு புதுப்பித்து, சுமார் 45 ஏக்கர் நிலம் பாசனம் பெறச் சீரணித் தொண்டர்கள் உதவினர்.

8. ஏழை மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும்பொருட்டு சென்னை நகரில் சைதாப்பேட்டையில் 170 வீடுகள் கொண்ட குடியிருப்புப் பகுதிகள் ஒன்றை கட்டி முடித்தனர்.

9. கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு ஊராட்சிஒன்றியத்தில் கிராம மக்களின் ஒத்துழைப்போடு 2.5 மைல் நீளமுள்ள—நீர்ப்பாசனமுள்ள மடிச்சல் கால்வாயினைத் தோண்டும் பணியினை மேற்கொண்டுள்ளனர். கால்வாய் வெட்டும் இடங்களில் உள்ள சுமார் 1.5 லட்சம் மதிப்புள்ள தனியார் நிலங்களை தானமாகப் பெற்று, சுமார் 4 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பணியினை ரூ. 1.5 இலட்சம் அரசு செலவில் முடிக்கத் திட்டமிட்டு பணி நடைபெற்று வருகின்றது. இதனால் 431 ஏக்கர் பரப்பளவு, நிலங்களுக்குப் பாசன வசதி கிடைப்பதோடல்லாமல் 500 மெட்ரிக் டன் நெல் உற்பத்தித்திறன் உடையதாக இருக்கும். சுமார் 850 குடும்பங்கள் இச்சிரிய பணியினால் பயனடையும்.

10. முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கட்டளையை ஏற்றுச் சென்னை எலியட்ஸ் கடற்கரையில், முட்புதர்களை நீக்கி, கடற்கரையைச் சமம் செய்து மெரினா பீச்சுக்குச் சமமாக காட்சியளிக்கும் வகையில் 840 சீரணித் தொண்டர்களின் 5 நாட்கள் உழைப்பில் எழில் மிகு கடற்கரையாக மாற்றப்பட்டது.

11. டாக்டர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்தநாளையொட்டி, சென்னை நகரில் மூவிய இடங்களில் சீரணித் தொண்டர்கள் உழைப்பின் மூலமும், பொதுமக்கள் நன்கொடை மூலமும், 48 பேருந்து நிலையங்களில் நிழற்குடைகள் அமைக்கப்பட்டன.

12. டாக்டர் கலைஞர் அவர்களின் 49-வது பிறந்த நாளையொட்டி மாவட்டங்களில் 49 சிறந்த வெளியரங்குகள் முழுவதும் பொதுமக்கள் நன்கொடை மூலமே, சீரணியினரால் கட்டப்பட்டன.

13. உணவுப் பொருள் வழங்குதுறையினரின் வேண்டுகோளிற்கிணங்கச் சர்க்கரைக் கார்டுகள் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டு சென்னை நகரில் மாத வருமானம் ரூ. 300/க்கு மேலுள்ள குடும்பங்களை மிகவும் குறுகிய காலத்தில் கணக்கெடுத்தும் கார்டுகளை வழங்கியும் பொதுமக்களின் பாராட்டுதல்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

14. சென்னை நகரில் சைதாப்பேட்டையில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்க வசதியாக ரூ. 25,000/- மதிப்பில் மாணவர் விடுதியொன்று, 14 நாட்களில் சீரணியினரால் கட்டி முடிக்கப்பட்டது.

15. தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் 11-வது ஐந்தாண்டுக் கால்நடைக் கணக்கெடுப்புப் பணிகளில் சுமார் 700 சீரணித் தொண்டர்கள் பயன்படுத்தப்படுத்தப்பட்டனர்.

இப்பணிகளைத் தவிர, பூச்சி மருந்து தெளித்தல், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல், காய்கறித் தோட்டங்கள் அமைத்தல், பள்ளிக் கட்டிடங்களுக்கு வெள்ளையடித்தல் போன்ற இதர பணிகளிலும் சீரணித் தொண்டர்கள் ஈடுபடுகின்றனர். தமிழகத்தில் சீரணியின் கடந்த காலச் சாதனைகளை நோக்குமிடத்து, மக்களுக்குத் தேவையான, குறிப்பாக சமுதாயத்தின் அடித்தட்டில் வாழும் மக்களின் தேவைக்காகச் சீரணி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது மட்டுமல்லாமல், நாடும் ஏடும் போற்றும் வகையில் இன்று தமிழக மக்களிடையே சீரணி ஒரு இன்றியமையாத இயக்கமாக இருந்து வருகிறது. எந்த உயரிய நோக்கத்திற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'சீரணி'யினை உருவாக்கினார்களோ, அந்த நோக்கத்தைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். அவற்றை முழு அளவில் நிறைவேற்றி மேலும் நாட்டு மக்களின் நலனுக்காகவே நிரந்தரமாகச் சீரணி பணிபுரியும் என்பதில் ஐயமில்லை.



நாமக்கல் அருகிலுள்ள பெரியப்பட்டியில் சீரணியினரால் கட்டப் பட்டுள்ள திறந்தவெளிக் கலையரங்கம்



# சாதனைப் பட்டியல்

1-7-1967 முதல் 31-3-1974 முடிய தமிழகம் முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ள சேரணிப் பணிகள் :

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பள்ளிக் கட்டடங்கள் | 1,306 |
| 2. | இணைப்புச் சாலைகள்-வண்டிப் பாதைகள் - மயானத்திற்குப் பாதைகள் | 1,661 |
| 3. | தூர் எடுக்கப்பட்ட ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் | 1,627 |
| 4. | திறந்த வெளி அரங்குகள் | 160 |
| 5. | வானொலி, இளைஞர் மனமகிழ் மன்றங்கள் | 585 |
| 6. | தரைமட்ட குடிநீர்த் தொட்டிகள் | 27 |
| 7. | கதிரடிக்கும் களங்கள் | 12 |
| 8. | மதிய உணவு மையத்திற்கான கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள் | 83 |
| 9. | பேருந்துப் பயணிகளுக்கு நிழற் கொடைகள் | 84 |
| 10. | தரிசு நிலங்களை விளைநிலங்களாக்கல், பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலங்கள், வெள்ளை அடிக்கப்பட்ட பள்ளிகள், காய்கறித் தோட்டங்கள், பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்ப்பலகைகள், துப்புரவுப் பணி போன்ற மற்ற சமூகப் பணிகள் | 40,776 |

மேற்கண்ட பணிகளின் மொத்த மதிப்பு ரூ. 2,02,50,960-00

அரசின் செலவு ரூ. 85,72,226-00



1968 முதல் 1974 மார்ச் திங்கள் முடிய சேரணியின் சாதனை

## மாவட்ட வாரியாகத் தகவல்

| வரிசை எண் | மாவட்டம் | பணிகள் எண்ணிக்கை | அரசு செலவு ரூபாய் | பணிகளின் மதிப்பீடு ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | செங்கற்பட்டு | 1,938 | 8,79,634 | 14,68,930 |
| 2. | வடஆர்க்காடு | 3,924 | 6,50,767 | 12,05,711 |
| 3. | தென்ஆர்க்காடு | 3,846 | 3,86,199 | 11,19,819 |
| 4. | தஞ்சாவூர் | 2 313 | 8,08,333 | 22 93,594 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 5,142 | 7,97,187 | 21,84,006 |
| 6. | சேலம் | 6,575 | 9,59,368 | 21,04,643 |
| 7. | தருமபுரி | 574 | 4,18,686 | 10,35,843 |
| 8. | கோயம்புத்தூர் | 14,035 | 12,78,045 | 34,76,354 |
| 9. | நீலகிரி | 286 | 2,84,613 | 4,75,154 |
| 10. | மதுரை | 4,726 | 5,67,755 | 13,56,282 |
| 11. | இராமநாதபுரம் | 2,594 | 5,82,818 | 14,62,412 |
| 12. | திருநெல்வேலி | 1,297 | 5,10,931 | 12,22,159 |
| 13. | கன்னியாகுமரி | 187 | 2,72,890 | 5,26,059 |
| 14. | சென்னை | 527 | 1,75,000 | 3,20,000 |
| | மொத்தம் | 47,934 | 85,72,226 | 2,02,50,966 |

# தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆற்றும் பணிகள்

இந்தியாவிலே கூட்டுறவு இயக்கம் செழித்து வளர்ந்து சிறப்புடன் பணியாற்றும் மாநிலங்கள் தமிழ்நாடு, மகாராஷ்டிரம், குஜராத், பஞ்சாப் அரியானா முதலியன ஆகும்.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த மத்திய கூட்டுறவு வங்கி கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிதான்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதில் இந்தியாவில் முதன்மையான இடம் வகிப்பது தமிழ்நாடுதான்.

இந்தியாவிலுள்ள கூட்டுறவு ஒன்றியங்களில் முதன் முதலில் தோன்றியது, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமாகும். கூட்டுறவு இயக்கத்தின் பிரச்சார அமைப்பாக இருந்து கூட்டுறவு ஒன்றியம் செயல்படுகிறது. சுருங்கக் கூறின் பணிகளை விளக்கிடச் செய்தி மக்கள் தொடர்புத்துறை செயல்படுவதுபோலக் கூட்டுறவு அமைப்புக்களின் பணிகளை விளக்கிடக் கூட்டுறவு ஒன்றியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பெருந்தலைவராகப் பணியாற்றிவரும் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் இளமையிலேயே ஈடுபாடு கொண்டவர். அவருடைய . நண்பர் கிருஷ்ணதாஸ் என்பவர் ஊட்டிய ஆர்வத்தின் காரணமாகக் கொளத்தூரில் கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கத்தைத் தோற்றுவித்தார். 1961-ஆம் ஆண்டில் மதுராந்தகம்தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் இயக்குநராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இந்தியாவின் வடக்கு மாநிலங்களில் செயல்பட்டு வரும் கூட்டுறவு அமைப்புக்களைப் பார்வையிட்டு வர சில பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. அந்தக் குழுவில் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் சென்றார்கள்.

1966-ஆம் ஆண்டிலே காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1968-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு பனைவெல்லக் கூட்டு





கைரிக்ஷா இழுப்போர் நிதிக்கு முதல்வர் கலைஞரிடம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் ரூபாய் ஒரு லட்சம் நிதிக்கான காசோலை வழங்கப்பட்டது.

## திரு. கொளத்தூர் கோதண்டம்
— பேட்டி —

றவு சம்மேளனத்தின் தலைவரானார். 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு நுகர்வோர் சங்கத்துக்கு இயக்குநரானார். 1971-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவரானார். பின்னர் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் துணைத் தலைவராகி 1974-ஆம் ஆண்டில் டாக்டர் நடேசனார் மறைவுக்குப் பின்னர், அதன் தலைவரானார்.

1974-ஆம் ஆண்டில் இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு கொளத்தூர் கோதண்டம் அனைத்திந்திய அடிப்படையில் காணப்படும் கூட்டுறவாளர்களில் மிகவும் இளைஞராவார்.

முன்னரே குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இந்தியாவிலேயே மிகப் பழமையானதாகும். இந்தியத் துணைக்கண்டத்தில் கூட்டுறவு இயக்கம் துளிர்விட முதன்முதலில் வித்திட்ட பெருமை தமிழகத்திற்கே உரியது. 1904-ஆம் ஆண்டில் அனைத்திந்தியக் கூட்டுறவுச் சங்கம் செயல்முறைக்கு வந்து 10ஆண்டுகள்கடந்து 4.1.1914 அன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பதிவு செய்யப்பட்டு இயங்கத் தொடங்கியது.

கூட்டுறவியக்கம் வளர்ந்தோங்கக் கூட்டுறவுப் பிரச்சாரம் முக்கியமாகும். அதனைக் கருத்திற்கொண்ட பழம்பெரும் கூட்டுறவாளர்களான திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா, திரு. யூ. வெங்கட்ராமையா, திரு. டி. ஆதிநாராயண செட்டியார், திரு. எம். சிவராஜ் இன்றும் பல பெரியவர்கள் கூடி இவ்வொன்றியத்தை நிறுவினார்கள். ''சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்'' என்ற பெயரில் இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய பிரச்சார நிறுவனமாக இந்த ஒன்றியம் தோன்றியது.

கூட்டுறவு ஒன்றியத்தின் முதல் தலைவரான திவான்பகதூர் திரு எம். ஆதிநாராயணய்யா அவர்களாகும். இவர் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் கூட்டுறவுச் சங்கமான 'திரூர்' கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பழுத்த அனுபவமுள்ள முதிய தலைமுறையின் வழித்தோன்றலான கூட்டுறவாளர் டாக்டர் பி. நடேசன் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கிச் செழித்து வளர்ந்தது தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.



தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் விழாவில் கூட்டுறவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள்.

கூட்டுறவு ஒன்றியம் செயல்முறைக்கு வகுத்துக் கொண்டுள்ள நோக்கங்களைக் கீழ்க்கண்டவாறு பிரித்துக் கொள்ளலாம்.

1. ஒன்றியத்தின் ஆட்சி எல்லையில் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பது.

2. கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவது.

3. கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதும் வளர்ப்பதும்.

4. கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சிக்குத் துணைபுரிவது.

5. கூட்டுறவாளர்களின் மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்வது.

6. கூட்டுறவாளர்கள் கூட்டங்கள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், ஆய்வுக் குழுக்கள், உறுப்பினர் பயிற்சி முகாம்கள், மற்றும் கிராம மக்களை கூட்டுறவியக்கத்தில் பயிற்றுவித்தல்.

7. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளால் கூட்டுறவு இதழ்கள் வெளியிடுவது.

8. கூட்டுறவு இயக்கம் தொடர்பான புத்தகங்கள், நாடகம், பாடல்கள் இதழ்கள் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், மற்றும் அவற்றை வாங்கி விற்பனைக்கு ஏற்பாடு செய்தல்.

9. கூட்டுறவாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள், மேலாளர்களிடையே பயிற்சி வகுப்புக்கள் அல்லது அது தொடர்பான முறைகளில் கூட் கூட்டுறவுக் கல்வியை வளர்ப்பதற்காக பாடத் திட்டம் வகுத்தல், மற்றும் அதற்கான தேர்வுகள் நடத்துதல்.

10. நூலகங்கள் அமைத்தல்.

11. கூட்டுறவுப் . பயிற்சிக் கழகங்களுக்கு நிதியுதவி வழங்குதல், நிர்வகித்தல்.

இந்தப் பணிகளை செயல்படுத்திவரும் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களுக்கு புதிய அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

இந்திய அரசுக்குச் சொந்தமான கூட்டுறவுப் பயிற்சிக் குழு 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஜப்பான் நாட்டுக்கு 'இண்டர் நேஷனல் கோ ஆப்ரெடிவ் அலையன்ஸ்' சார்பில் நடைபெற்ற கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்ட கருத்தரங்குக்கு இந்தியாவின் பிரதிநிதிகளாக மூவரை அனுப்பி வைத்தது. இந்த மூன்று பேரில் இருவர் அதிகாரிகள்.



சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நடத்திய பொருட்காட்சியில்...

அதிகாரச் சார்பற்ற முறையில் சென்ற ஒருவர் திரு. கொளத்தூர் கோதண்டம்.

பதினெட்டு நாடுகள் பங்கேற்ற இந்தக் கருத்தரங்கின் மூலம் கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்டத்தில் புதிய முறையைச் செயல்படுத்தும் அனுபவத்தை இவர் பெற்றுள்ளார். இதன் வாயிலாகப் புதிய முறையில் கூட்டுறவுக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது முன்னோடித் திட்டமாகக் காஞ்சிபுரத்திலும் கும்பகோணத்திலும் இத்திட்டம் செயல்படுத்தும். நம் நாட்டுக்கு ஏற்றவாறு கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

''ஜப்பான் நாட்டில் கூட்டுறவு பெருமளவில் வளர்ந்துள்ளது. கூட்டுறவுத்துறைகளின் முழுநிர்வாகமும் அரசுக்கு அப்பாற்பட்டு விளங்குகிறது'' என்கிறார் திரு. கொளத்தூர் கோதண்டம்.

'தென்கிழக்கு ஆசியநாடுகள் அனைத்திலும் கூட்டுறவாளர்கள் அனைவரும் முழு ஊதியம் பெறுபவர்களாகவோ அல்லது பகுதிநேர ஊதியம் பெறுபவர்களாகவோ பணியாற்றுகின்றனர்' என்கிறார் இவர்.

''இந்தியாவில் கூட்டுறவுத் துறையில் சிறந்து விளங்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று: தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையில் நடைபெறும் முன்னோடித் திட்டங்களை அனைத்து மாநிலத்தினரும் பாராட்டுகின்றனர்.

''தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு உள்ளது போல அலுவலகக் கட்டடமும் விருந்தினர் இல்லமும் போன்று வேறு எந்த மாநில கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் இல்லை'' என்றும் பெருமையோடு சொல்கின்றார். தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.கொளத்தூர் கோதண்டம்.

கூட்டுறவுத்துறை நிறுவனங்களில் பணிபுரிய பயிற்சி பெற்றோர் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் பதிவு செய்து கொண்டு வேலைவாய்ப்புகளைப் பெறத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் உதவுகிறது. இந்த வகையில் கூட்டுறவு ஒன்றியம் வேலைவாய்ப்பு நிறுவனமாகவும் பணியாற்றுகிறது.

கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படும் கூட்டுறவுப் பொருட்காட்சி எல்லோராலும் பாராட்டப்படும் பொருட்காட்சியாகும்.

மதுராந்தகத்தில் 1967-ஆம் ஆண்டு நடைபெற்ற கிராம நலக் கண்காட்சி தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக அமைக்கப்பட்ட கண்காட்சியாகும். அறிஞர் அண்ணா அவர்களால் மிகவும் பாராட்டப்பட்ட இந்தக் கண்காட்சியை ஒட்டியே கூட்டுறவுப் பொருட்காட்சி நடைபெறுகின்றது. காஞ்சிபுரம், மன்னார்குடி, பூம்புகார் போன்ற இடங்களில் நடைபெற்ற கூட்டுறவுப் பொருட்காட்சிகள் எல்லோராலும் பாராட்டப்பட்டன.

கூட்டுறவுப் பணிகள் பற்றிய கலைநிகழ்ச்சிகளும் எங்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 'கூட்டுறவு' பற்றிய திரைப்படம் எடுப்பதற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் கதையும் உரையாடலும் எழுதித்தர இசைவு அளித்துள்ளார்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மேற்பார்வையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு முப்பது இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படவிருக்கிறது. எல்லாவசதிகளுடனும் பல மாடிக் கட்டடமாக அமையும் இதற்கு டிசம்பர் திங்களிலேயே முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல்நாட்டவிருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு பணியிலும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தன்னிகரில்லா வகையில் சாதனைகளை ஆற்றிவருகிறது.

அப்பணிகளின் வெற்றிக்கு ஒன்றியத் தலைவர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களின் அயராத உழைப்பும் ஒரு காரணம் என்பதையும் சொல்லவும் வேண்டுமோ?

—மாமுலன்.



இருபது ஆண்டு முன்னர் கேரளம், ஆந்திரம் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் ஒரு சில பகுதிகள் தமிழ்நாடுடன் இணைந்து இருந்தன. 1956-ஆம் ஆண்டு மாநிலங்களைத் திருத்தி அமைத்த காரணமாக (Re-organisation of States) வளமிக்க வனப் பகுதிகள் பல ஏனைய மாநிலங்களுக்குப் பிரித்து கொடுக்கும் நிலை ஏற்பட்டது. தென்கோவை வனக் கோட்டத்திலிருந்து சுமார் 7000 ஹெக்டர் சிறந்த தேக்குத் தோட்டங்களையும், தேக்கு உற்பத்தி செய்யும் செழிப்பு மிகுந்த காடுகளையும் கேரளாவிற்கு கொடுக்கப்பட்டன. வளம் நிறைந்த மலைப் பகுதிகளையும் மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்த பின்னர் எஞ்சிய மலைப் பகுதிகள் வளம் குன்றியதாகவும், தேக்குத் தோட்டங்களை மிகவும் குறைவாகக் கொண்டவையாகவும் காணப்பட்டன.

இந்திய வனக்கொள்கையின்படி நிலப்பரப்பில் 33 சதவிகிதம் வனப்பகுதிகளாக இருத்தல் அவசியம். ஆனால் தற்போது 22 சதவீத வனப்பகுதிதான் உள்ளது. அவற்றில் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் மலைப்பகுதி 16.2 சதவிதமாகும். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1971-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி 41,103,125 ஆகும். தஞ்சை மாவட்டத்தின் மக்கள் தொகை 38 இலட்சமாகும்.

தேக்கு மரத்தின் தேவை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகின்றது. இம்மரத்தின் சிறப்பு யாவரும் தொன்றுதொட்டு அறிந்ததே. இதன் உபயோகம் நம் அன்றாட வாழ்க்கையோடு இணைந்து இருக்கின்றது. கட்டிட வேலைகளுக்கும், நாகரிகமான சாமான்கள் செய்வதற்கும் தேக்கு மரம் பெரும் அளவில் பயன்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் தேக்கு மரத்தின் உற்பத்தி மிகவும் குறைந்த அளவில்காணப்படுகின்றது. தேக்கு, இதுபோன்ற மற்ற கடினமான மரங்களின் தேவை தமிழ் நாட்டில் 2.98 லட்ச மெட்ரிக் டன் என்றும், வனத்துறை 0.70 லட்ச மெட்ரிக் டன் மரங்களை மட்டுமே வழங்கும் நிலையில் இருக்கின்றது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. தேக்கு மரத்தின் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளது.

தமிழ்நாட்டில் தேக்கு மரம் பயிரிடத்தக்க இடங்கள் கன்னியாகுமரி, நெல்லை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடத்தில்தான் காணப்படுகின்றன. இம்மாவட்டங்களிலிருந்து நம் மாநில தேவைக்கான தேக்கு மரங்களைப் பெறுவது என்பது இயலாத காரியமாகும். தமிழக அரசு மக்களின் தேவையை உணர்ந்து அதிக அளவில் தேக்குக் காடுகளை உற்பத்தி செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள வனப்பகுதிகளில் அநேக இடங்கள் வளம் குன்றியும், தேக்கு உற்பத்தி செய்வதற்கான போதிய அளவு மழை இல்லாமலும் காணப்படுகின்றன. மலைப்பகுதிகளில் தேவையான இடங்கள் இல்லாத காரணத்தால் அரசுக்குரிய உபரி நிலங்களிலும், நதிக்கரைகளிலும் கால்வாய் ஓரங்களிலும் உள்ள படுகை நிலங்களில் தேக்கு மரங்களையும் மற்றும் கிராமத்து மக்களுக்குப் பயன்படும் மரங்களையும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டது.

1956-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாள் தஞ்சாவூரில் வனக்கோட்டம் ஒன்று நிறுவி தேக்குத் தோட்டங்களை உற்பத்தி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. காவேரி நதியின் இருமருங்கிலும், அதன் கிளை நதியான கொள்ளிடம், துணைநதிகளான வெண்ணாறு, வெட்டாறு, அரசலாறு, சோலை சூடாமணியாறு, நீலாறு, நாட்டாறு, முடியாறு, வேலப்பாறு, கொண்டான் ஆறு, குடமுருட்டி, திருமலைராசன் ஆறு, முதலியவைகளின் கரைகளிலும் தேக்கு, சிசு, வாகை, புங்கம், வேம்பு, கருவேல், மூங்கில் ஆகிய மரங்களை உற்பத்தி செய்யும் வேலைகள் தொடங்கப்பட்டன. இத்திட்டமானது திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் சரகத்திலுள்ள தாம்பரபரணி நதியின் இருகரைகளிலும் தேக்கு உற்பத்தி பெருகச் செய்ய விரிவு செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மலைப்பகுதியும், மழையும் இல்லாத போதிலும் தேக்கு மர உற்

# தஞ்சைத் தரணியில் தேக்கு

எஸ்.ஏ.ரஹமதுல்லா I.F.S.





பத்தி செய்வதற்கான மற்ற சூழ்நிலைகள் சாதகமாக அமைந்துள்ளன. காவேரி நதியின் கரைகளில் அமைந்துள்ள பொதுப் பணித்துறையின் அநேக ஓய்வு விடுதிகளில் நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் வளர்க்கப்பட்ட பெரிய தேக்கு மரங்கள் இருப்பதே இதற்கு சான்றாகும். மேலும் தனியார் தோட்டங்களிலும் தேக்கு மரங்கள், பல ஆண்டுகளுக்கு முன்னர் வளர்க்கப்பட்டு அவை இன்னும் ஓங்கி வளர்ந்து மலைகளில் இயற்கையான சூழ்நிலையில் வளர்வது போன்று காணப்படுகின்றன. தேக்கு மரங்கள் மலைப் பகுதிகளில் மட்டுமே வளரும் தன்மை உடையன, மற்ற இடங்களில் வளர்க்க முடியாது என நிலவி வரும் கருத்திற்கு மாறாக தஞ்சாவூர் மாவட்டத்தில் நதிக் கரைகளில் தேக்கு மரங்கள் நன்கு வளர்ந்து வருகின்றன.

தேக்கு மரம் வளர்வதற்குச் சுமார் 1200 மி.மீ. மழையும், நல்ல வண்டல் மண் பூமியும் தேவையாகும். மழை-நீர் நிலத்தில் நிற்காமல் உடனுக்குடன் வடிதல் அவசியம். மலைப்பகுதிகளில் மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் கடல் மட்டத்திலிருந்து 90 மீட்டருக்கு மேல் 600 மீட்டர் வரையிலும் தேக்கு செழிப்பாக வளர்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை 850 மி.மீ. முதல் 1420 மி.மீ. வரையில் உள்ளது. சராசரி வெட்பநிலை 900 பா. ஆக அமைந்துள்ளது. மேலும் காவேரி நதிக் கரைகளிலும், கால்வாய் ஓரங்களிலும் வண்டல் மண் அதிகமாகப் படிந்துள்ளது. வருடத்தில் ஒன்பது மாதங்களுக்குக் குறைவில்லாமல் கால்வாய்களில் தண்ணீர் இருந்து வருகின்றது. மேலே குறிப்பிட்ட தனிச்சிறப்புகளால் தஞ்சை மாவட்டம் தேக்கு மர வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலையைத் தன் அகத்தே கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

தேக்கு மரங்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை சிறிது ஆராய்வோம். தேக்கங்கழிகள் (நாற்றுகள்) நடுவதற்கு முந்திய ஆண்டு தேக்கு நாற்றாங்கால் அமைக்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த தேக்கு விதைகளை கோவையில் சேகரம் செய்து-உபயோகிக்கப்படுகிறது. ஒரு கிலோ விதையில் 1800 விதைகள் உள்ளன. சமதள பூமியில் 30 செ.மீ. ஆழத்திற்கு மண்ணைக் கிளரிவிட்டு 10 மீ. நீளத்திலும் 1 மீ. அகலத்திலும் பாத்தி அமைக்க வேண்டும். கால் வண்டி அளவு பண்ணை எருவு இட வேண்டும். பின்னர் பாத்தியின் நான்கு பக்கங்களிலும் மரக்குச்சிகளை நிறுத்தி, நீண்ட மரத்துண்டுகளையோ அல்லது மூங்கில் தட்டிகளையோ சுற்றிலும் வைத்து மரக்குச்சிகளோடு நன்கு கட்டப்பட வேண்டும். பாத்தியில் போதிய அளவு வண்டல் மண் போட்டு, எட்டு முதல் பத்து கிலோ தேக்கு விதைகளைப் பரவலாக விதைக்க வேண்டும். விதையின் மேல் சிறிது மண் தூவி விதைகளை மூடுவது அவசியம். அவற்றிற்கு மேல் வைக்கோலைச் சிறிதளவு பாத்தியின் மேல் பரப்பி காலையும் மாலையும் பூவாளியினால் தண்ணீர் விடவேண்டும். இந்த வேலைகள் யாவும் ஏப்ரல் மாதத்திற்கு முன்பே முடிந்தாக வேண்டும். விதைகள் முளைக்க ஆரம்பித்த உடன் வைக்கோலை பாத்தியிலிருந்து அகற்றி விடவேண்டும். பின்னர் களை எடுத்தல் அவசியம். மேலே குறிப்பிட்ட அளவில் தயார் செய்யப்பட்ட ஒரு பாத்தியில் ஐந்து ஹெக்டர் அளவில் உற்பத்தி செய்யும் தேக்கு நாற்றுகளைப் பெறமுடியும். ஓராண்டு நாற்றுகளே நடுவதற்கு உகந்தவை. தேக்கு நாற்றுகளை நடுவதற்கு முன்னர் அவைகளை 6 முதல் 8 அங்குல குச்சிகளாக (Stump) மாற்றப்படுகின்றன. நாற்றின் வேர்ப் பகுதியில் சுமார் 7 அங்குலம் விட்டு துண்டிக்கப்படுகின்றது. வேருக்கு மேலுள்ள தண்டுப் பகுதியில் சுமார் ஒரு அங்குலம் அளவு விட்டு துண்டிக்கப்படுகிறது. வேரின் மேல் பாகம் (Collar) 2 செ.மீ. முதல் 5 செ.மீ. வரை சுற்றளவு உள்ளதாக இருத்தல் அவசியம். துண்டிக்கப்பட்ட தண்டு பாகத்தின் மேலே மெழுகு பூசப்படுகின்றது. இது தண்டுப் பாகம் கெட்டுப் போகாமல் இருக்க உதவுகிறது.

காவேரிக் கரைகளிலும், கிளை நதிக் கரைகளிலும் தேக்கு நாற்றுகள் 3.5 மீட்டர் இடைவெளி அளவிற்கு ஒன்றாக இரும்புக் கம்பிகளால் துளை செய்த சிறு குழிகளில் நடப்படுகின்றன. இந்த நடுவை ஜுன்-ஜுலை மாதங்களில் கால்வாய்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டதும் துவங்குகிறது. நட்ட நாற்றுகளைச் சுற்றிலும் 60 செ.மீ. விட்டத்தில் 15 செ.மீ. ஆழத்தில் பண்ணை (Saucer) அமைக்கப்படுகின்றன. ஒரு நாற்றிற்கு ஒரு குடம் அளவில் (10 லிட்டர்) ஒரு நாள் விட்டு இருபது நாட்களுக்குத் தண்ணீர் விடப்படுகின்றது. ஒரு நபர் ஒரு நாளைக்கு 200 நாற்றுகளுக்கு தண்ணீர் விட முடியும். பின்னர் ஐந்து தினங்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடப்படுகிறது. அக்டோபர் மாதத்தில் பட்டுப்போன நாற்றுகளுக்கு பதில் நாற்றுகள் போடப்படுகின்றன. ஒரு ஹெக்டர் நிலப்பரப்பில் 200 நாற்றுகள் நடமுடியும். 800 நாற்றுகளைப் பாதுகாக்க (4 ஹெக்டர்) ஒரு நபர் காவலராக நியமிக்கப்படுகிறார். தேக்குச்சாலைத் தோட்டங்களில் 1.5 கிலோ மீட்டருக்கு 1000 நாற்றுகள் நடமுடியும் (5 ஹெக்டர்). மழைக் காலங்களில் தேக்கு நாற்றுகளைச் சுற்றிலும் தேங்கி நிற்கும் மழை நீரை உடனுக்குடன் வடிய வைத்தல் மிகவும் அவசியம். கோடை காலத்தில், நட்ட தேக்கு நாற்றுகளுக்கு தண்ணீர் விடப்படுகிறது. கால்வாய்க் கரைகளில் கிணறுகள் வெட்டப்படுகின்றன. தேக்கு நாற்றுகளை நட்ட முதல் ஆண்டில் இரண்டு முறை களை எடுத்தும் ஒரு முறை நாற்றைச் சுற்றிலும் மண்ணைக் கிளரிவிடும் வேலையும் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

சேதாரம் அடைந்த நாற்றுகளைத் துண்டித்து நன்கு பராமரிக்கப்படுகின்றன. முதல் ஆண்டு செய்த வேலைகள் இரண்டாவது ஆண்டிலும் செய்யப்படுகின்றன. இரண்டு தேக்கு நாற்றுகளில் அடிக்கு மேல் உள்ள பக்கவாதுகளைத் துண்டித்து பராமரிக்கப்படுகிறது. மேலும் நாற்றுகளின் மீது படர்ந்துள்ள கொடிகளையும் வெட்டி அப்புறப்படுத்தப்படுகின்றது. இரண்டாவது ஆண்டு முடிய ஒரு நாற்றிற்கு ஆகும் செலவு ரூபாய் 2.40 ஆகும். நாற்றங்கால் செலவும் இதில் அடங்கும். மூன்றாவது ஆண்டு தேக்கு மரத்தின் பக்க வாதுகளை மட்டும் அப்புறப்படுத்தப் படுகின்றது. நான்காவது ஆண்டு சாலைத் தேக்குத் தோட்டத்தை பொதுப் பணித் துறையிடம் ஒப்புவிக்கப்படுகின்றது. இவ்வாறு நட்ட தேக்கு மரங்கள் நன்கு வளர்ந்து, பயன்தரும் நிலையை அடைந்ததும் அவைகளை, அவற்றின் வளர்ச்சிக்கேற்ப வணிக அடிப்படையில் பல இனங்களாகப் பிரித்து வெட்டி, அப்புறப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றன. தேக்கு வாரிகளாகவும், சிறு உத்திரங்களாகவும், கிளைகளை விறகுகளாவும் விற்பனை செய்யப்படுகின்றன. விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தை வனத் துறைக்கும், பொதுப்பணித் துறைக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றது. தஞ்சையில் உற்பத்தியாகும் தேக்கு இந்தியாவில் உற்பத்தியாகும் சிறந்த தேக்குகளில் நான்காவது தரத்தில் இடம் பெறுகிறது.

இதுவரை தஞ்சை மாவட்டத்தில் தேக்கு மற்றும் சிசு, புங்கம், வேம்பு, மூங்கில் முதலியன 6756 ஹெக்டரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் இம்மாவட்டத்தில் 7000 ஹெக்டர் நிலத்தில் தேக்கு மற்றும் கடின மரங்கள் வரும் பத்து ஆண்டில் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் தேக்குத் தோட்டங்கள் கல்லணையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு காவேரி மற்றும் அதன் கிளை நதிக்கரையோரங்களில் ஏறத்தாழ 2174 கி.மீ. (Avenue) அளவில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தேக்குத் தோட்டங்களில் திருகாட்டுப்பள்ளி, திருவையாறு, பாபநாசம், நாச்சியார் கோவில், நன்னிலம் முதலிய இடங்களில் காணப்படும் தோட்டங்கள் (Compact areas) கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் தேக்குத் தோட்டங்களுக்கு இணையாக விளங்குவது தஞ்சைத் தேக்கின் சிறப்பு நிலையாகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழும் மக்களின் அன்றாடத் தேவைக்கான தேக்கு மரங்கள் வெளி மாவட்டங்களிலிருந்தும், கொண்டு வரப்படுகின்றன. தேக்குப் பலகைகள், சட்டங்கள் முதலியன போதிய அளவில் கிடைக்காத காரணத்தாலும் வெளி இடங்களிலிருந்து இறக்குமதி செய்வதாலும் இந்த மாவட்ட மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்நிலை மாற வேண்டுமானால் மேலும் அதிகமான படுகை நிலங்களை தேக்குத் தோட்டங்களாக மாற்றும் பணியில் அதிகமாக ஈடுபடவேண்டும். இது சம்பந்தமாக அரசும், வனத் துறையும் மிகுந்த கவனம்



செலுத்தி வருகின்றன. இந்த மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேக்குத் தோட்டங்கள் ஓர் அளவு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் வருங்காலச் சந்ததியினரின் தேவைக்கான தேக்கு மரங்களை அதிக அளவில் மேலும் உற்பத்தி செய்வது நமது கடமையாகும்.

இம்மாவட்டத்தில் தேக்குக் காடுகள் அதிக அளவில் உற்பத்தி செய்வதின்மூலம் காவேரி, அதன் உபநதிகளின் கரைகளும் மிகவும் பலப்படுத்தப்படுகின்றன. தேக்கம் வேரின் அமைப்பு வலை போன்று மண்ணில் பரவி இருக்கின்ற தன்மையால் சுலபமாக மண் அரிப்பு ஏற்படாது காத்துக் கால்வாய்க் கரையை நன்கு வலுப்படுத்துகின்றது. நீர் ஓட்டத்தின் வேகத்தாலோ அல்லது வெள்ளப்



பெருக்கத்தால் ஏற்படும் அழுத்தத்தாலோ மண் சரிவு ஏற்படாது தேக்குத் தோட்டங்கள் பாதுகாக்கின்றன. பலத்த மழைகாலங்களில் காவிரியிலும் அதன் கிளை நதிகளிலும் வெள்ளம் கரை புரண்டு பரவலாக ஓடும் காலத்தில் நதியின் கரைகளும், அதை அடுத்த நெல்வயல்களும் சேதம் அடைவது இயல்பு. ஆனால் எங்கெங்கே மரம், சோலை, தேக்கந் தோட்டமாக இருந்ததோ அங்கெல்லாம் இவ்வாறு சேதம் மிகவும் குறைந்த அளவில்தான் ஏற்படுகிறது. 1960 ஜூலை மாதம் எதிர்பாராது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சேதமடைந்த கரைகளில் மரங்கள் இல்லாததுதான் முக்கிய காரணம் என்பது அது சமயம் தணிக்கையிட்டோர் அறிந்த உண்மை.

மேலும்தேக்குத்தோட்டங்கள் நதிக்கரைகளில் வரிசை, வரிசையாக அமைந்திருக்கின்ற தோற்றமும், பசுமையான நெல் வயல்களுக்கு அருகில் வானளாவி நிற்கும் தோற்றமும் பார்ப்பவர் பரவசமடையவும் செய்து, அவர் உள்ளத்தில் புத்துணர்ச்சியையும்; மகிழ்ச்சியையும் தோற்றுவிக்கின்றன. தேக்குத் தோட்டங்களுக்கிடையே செல்லும்போது கதிரவனின் கடுமையான வெப்பத்தை நாம் சிறிதும் உணர்வது இல்லை. கால்வாய்ச் சாலைகளில் சிறந்த நிழல் தரும் தோட்டங்களாக அமைந்திருக்கின்றன. இவையெல்லாம் சுற்றுலா வளர்ச்சிக்கு அவசியமாகும்.

ஒரு கிலோ மீட்டர் அல்லது 3 ஹெக்டர் பரப்பளவில் தேக்கு தோட்டம் உற்பத்தி செய்ய ஏற்படும் செலவு விவரம் வருமாறு.

செலவு :

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | நாற்றங்கால் செலவு | .. | ரூ. | 14.00 |
| 2) | முதல் ஆண்டு உற்பத்தி செலவு (தண்ணீர் விடுதல் சேர்த்து) | .. | ரூ. | 728.40 |
| 3) | இரண்டாவது ஆண்டு பராமரிப்பு செலவு | .. | ரூ. | 720.00 |
| | ஆக மொத்தம் | .. | ரூ. | 1,462.40 அல்லது 1,460.00 |
| | ஒரு ஹெக்டர் தேக்கம் தோட்டம் உற்பத்தி செய்ய ஆகும் செலவு | | ரூ. | 487.00 |

மக்கள் நலனைக் கருதி அரசு ஏற்படுத்தும் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட மக்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. மக்களின் ஆர்வத்தைப் பொறுத்தும் அரசிற்கு அவர்கள் நல்கும் ஒத்துழைப்பைப் பொறுத்துமே எந்தத் திட்டமும் திறம்பட அமையும். கிராமப் புறங்களில் செயல்படுத்தும் திட்டங்களில் அந்தக் கிராம மக்களின் பொறுப்பும், கடமை உணர்ச்சியும் அந்தத் திட்டத்தின் பெரும் வெற்றிக்கு அடித்தளமாக அமைகின்றன. மக்களின் எண்ணத்தின் பிரதிபலிப்பே திட்டத்தின் முன்னேற்றத்திற்கு உயிராக அமைகின்றது. தஞ்சை மாவட்டத்தில் தேக்குத் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் முயற்சியில் ஆரம்ப காலத்தில் வனத்துறை பல இன்னல்களை எதிர்நோக்கி, இறுதியில் மக்கள் ஒத்துழைப்பால் இந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் தோட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. நாட்பட நாட்பட திட்டத்தின் சிறப்பு அம்சங்களை மக்கள் உணர நேர்ந்ததும் ஒத்துழைப்புக் கொடுக்க முன் வந்தனர் என்பது போற்றத்தக்கதாகும்,

இம்மாவட்ட மக்கள் மேலும் ஆர்வம் பெற்று அரசிற்கும் வனத்துறைக்கும் ஊக்கமும், பெரும் ஒத்துழைப்பும் கொடுக்க முன் வருவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. "சோழ நாடு சோறுடைத்து" என்னும் முதுமொழியைத் தொடர்ந்து "சோழ வள நாடு தேக்குமுடைத்து" என்னும் புதுமொழி தோன்றும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

## மாவட்ட வாரியாகச் சேர்ந்த தொண்டர்கள் எண்ணிக்கை

| வரிசை எண் | மாவட்டம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | செங்கற்பட்டு | 3,210 | *** | 3,210 |
| 2. | வட ஆர்க்காடு | 2,964 | 37 | 3,001 |
| 3. | தென் ஆர்க்காடு | 5,513 | 108 | 5,621 |
| 4. | தருமபுரி | 1,900 | 100 | 2,000 |
| 5. | சேலம் | 5,977 | 416 | 6,393 |
| 6. | கோயம்புத்தூர் | 4,890 | 185 | 5,075 |
| 7. | மதுரை | 3,164 | 84 | 3,248 |
| 8. | இராமநாதபுரம் | 5,439 | 371 | 5,810 |
| 9. | தஞ்சாவூர் | 11,076 | 129 | 11,205 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 3,137 | 157 | 3,294 |
| 11. | திருநெல்வேலி | 2,500 | 207 | 2,707 |
| 12. | நீலகிரி | 998 | 76 | 1,074 |
| 13. | கன்னியாகுமரி | 462 | 22 | 484 |
| 14. | சென்னை | 3,000 | 60 | 3,060 |
| | | 54,230 | 1,952 | 56,182 |


விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

SANKAR CEMENT

சங்கர் சிமெண்ட்



இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோருவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துகளும் காலத்தால் அழிவுரு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

# சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

*The Watermark of Quality*

எழுத, அச்சிட, உறையிட உன்னதமான காகிதங்கள்

# காணி நிலம் வேண்டும்

## பூவை எஸ். ஆறுமுகம்

## 24. சீதைக்கேற்ற ராமர்! ராமருக்கேற்ற சீதை!

பச்சைமண் அழகாகக் கண் வளர்ந்து, அன்பாகக் கண்மலரும் காட்சியே காட்சி! அந்தக் கண்கொள்ளாக் காட்சியை நடைமுறையில் சொல்லிக் காட்டும் அர்த்தத்தில், பொழுது மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருக்கிறது.

வீரமணி நீராடி, நீறுதரித்து மகமாயியைச் சந்தித்துத் திரும்பினான். வீட்டின் தலைவாசலை மிதித்ததும் அவனுக்குத் 'திகீ'ரென்றது. வீட்டை ஏக்கமும் சோகமும் சூழ, ஏற இறங்கப் பார்வையிட்டான். எதை நினைப்பான்? எதை மறப்பான்? நீள் மூச்சுப் பிரிந்தது. பிரிந்து கிடந்த 'யூரியா—அமோனியம் பாஸ்பேட்' உரங்களைக் கண்டதும், அவனுக்கு நெஞ்சை அடைத்தது. கண்கள் குளமாயின. 'அன்பு, தர்மம், சத்தியம் முதலான மனிதாபிமானக் குணப்பண்புகளை மனிதன் கைவிடாத பரியந்தம், அவனைத் தெய்வம் ஒரு போதுமே கைவிடாது! பின் மனிதன் ஏன் தெய்வமாக ஆக முடியாது? தெய்வமாக ஆகாவிட்டாலும் மனிதன் கேவலம் மிருகமாக மாறாமல், கடைசிப் பட்சம் மனிதன் மனிதனாக நிலைத்து நிற்கவாவது பழகக் கூடாதா? ஆத்தா!' என்று கொட்டாவி தொடர்கதை படித்தது.

விடியாத இரவும் விடிந்து விட்டது!

தண்டோராச் சத்தம் கேட்டது.

பாம்பைக் கண்டமாதிரி பயந்து, ஆனால் பாம்பை நோக்கிப் பாய்ந்தவராக வெளியே ஓடிவந்தார் பெரியவர்: ''ஐயையோ, தெய்வமே! ஐயோ, ஆத்தா!'' என்று நெஞ்சைப் பிசைந்து கொண்டே ஓலம் பரப்பினார்.

''அப்பா!..ஐயோ, அப்பா!'

வீரமணியின் அன்பெனும் பிடியில் தலைசாய்ந்த பிடியாகச் சாய்ந்தார் ஆதிமூலம்.

''அப்பா!'' விம்மினான்; வெடித்தான் வீரமணி. கருப்யாவும் நடராசனும் கொணர்ந்து தந்த விசிறியையும் செம்பையும் வாங்கினான். தந்தையின் முகத்தில் நீரைத் தெளித்தான்; ஒரு கையினால் மார்பைத் தடவிக் கொடுத்துக் கொண்டே இன்னொரு கையினால் விசிறினான்.

அட்சய பாத்திரமாகப் பொழிந்த-பொலிந்த வெய்யிலின் குடை நிழலிலே நடந்து கொண்டேயிருந்த தர்மயுத்தத்திற்குச் சவால் போலே தமுக்குச் சத்தம் அண்டி வந்தது;

கச்சேரிச் சேவகன் புடை சூழ, அங்கே வாசலில் தோன்றினார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர்.

ஆடிப்பட்டத்தில் தூவப் பட்ட விதைநெல் பருவமும் பருவமழையும் பெற்றதும் நாற்றுக் கண் திறப்பது உண்டு. அதுமாதிரி, ஊர்த் தலைக்கட்டு பெரியவர் கண்களைத் திறக்கலானார்; ''தம்பி வீரமணி! ஆதியிலே நான் போட்டு வச்சிருந்த அயனான திட்டப்படிக்கு நீ சிலட்டூர்க் கங்காணி மகள்



பவளக்கொடியைக் கண்ணாலம் கட்டிக்கிட நல்ல வாக்குக் கொடுத்திருந்தால், சிலட்டூர்க் கங்காணியைக் கொண்டு நான் உன் அம்மான் பாவி ராமையாவுக்குக் கொடுக்க வேண்டிய கடன் பூராத்தையும் இந்நேரம் அடைச்சிருப்பேனே? புரோநோட்டிலே வரிஞ்சுக்கிட்டு ஆனால், கொடுக்காமல் ஏமாற்றின பணம் ரூபாய் ரெண்டாயிரத்துக்குத்தான் அதுக்கு மேலே பெறுமதி கொண்ட வைரச்சிமிக்கி ரெண்டையும் சிக்க வச்சுக்கிட்டேனே! நீ பவளக்கொடியைக் கொண்டுக்கிட ஒப்புதல் சொல்லியிருந்தால், உன் பேரிலே எந்தப் பழியையுமே அந்தப் பவளப் பொண்ணு மனசு துணிஞ்சு சொல்லியும் இருக்காதே! ஐயையோ! ஊருக்கு நாட்டாண்மை செஞ்சுக்கிட்டு தலைமுறை தத்துவமாய்க் கட்டிக் காத்து வந்த நம்ப குடும்ப கவுரவமும் மானமும் கப்பலேறப் போகுதேடா, பாவி!'' என்று புலம்பினார்; மண்டையில் அடித்துக் கொண்டு, மயிரைப் பிய்த்துக் கொண்டார் பெரியவர்.

வீரமணி அமளி துமளியாகச் சிரிப்பைக் கக்கினான்.

''அட, ரோசம் கெட்டவனே! நீ என் மகனா? சே!நான் வயிறு வெடிக்க அழுகிறேன். நீ வயிறு குலுங்கச் சிரிக்கிறீயா? ஊம், சிரி; நல்லாச்சிரி. மானம் இல்லாமல் இப்படிச் சிரிக்கிறியே நீ? நீ என்ன பெரிய விதியாக்கும்? ம்..இன்னும் நல்லாய்ச் சிரி. பொட்டுப் பொழுதுக்குள்ளே என் சீவன் பட்டுன்னு பிரிஞ்சிடும். நல்லாச் சிரிடா பாவிமகனே!''

''அப்பா!'' என்று கூக்குரலிட்டான் வீரமணி. ''ஆமா, நான் பாவி மகன்தான்!'' என்று விம்மினான். ''ஏய் வெத்துவேட்டு நாட்டாண்மைக்காரரே! கையாலாகாத பேடிகணக்கிலே பதுங்கிக்கிட்டு இருந்தால், சட்டம் உம்மைச் சும்மாவா விட்டுப் பூடும்? வாருங்காணும், வெளியிலே!'' என்று கொள்ளிவாய்ப் பிசாசாக இடிமுழக்கம் செய்து கொண்டிருந்த தாய்மாமன் ராமையாத்தேவரின் சுடுகணைகளை நெஞ்சில் உதிரம் வழிய ஏந்தியவனாக, அருமைத் தந்தையைத் தரையிலே கிடத்திவிட்டு, உள்ளே தாய் வீட்டுக்கு ஓடித் திரும்பினான் வீரமணி. ''அப்பா, நான் பாவிமகனா, என்னவோ! அந்தத் துப்பு உங்களுக்குத்தானே புரியுமுங்க? ஆனா நான் பாவி இல்லே! இன்னொரு ரகசியத்தை நீங்க புரிஞ்சுக்கிட்டால் தேவலாம். உங்களுக்கு ஆயுசு கெட்டி !'' என்று தாழ்குரலில் கூறிவிட்டு, தலைவாசலுக்கு ஓடத் தலைப்பட்டான் ஆதிமூலத்தேவரின் புதல்வன். பிறகு என்ன நினைத்துக் கொண்டானோ? திரும்பவும் தந்தையைப் பிடித்து உட்கார வைத்தான். ''அப்பா! விதி என்ன விதி? விதியை மதியாலே வெல்லலாமாக்கும்!'' என்று தெரிவித்து விட்டு மறுபடியும் வாசலுக்கு ஓடலானான் வீரமணி.

சமுதாயம் என்பது வெறும் நாலு பேருக்கு மேற்பட்டது; அப்பாற்பட்டது என்கின்ற நியதிக்கு வாய்த்த தத்துவமெனக் கூட்டம் நிர்த்தூளிப் பட்டது.

வீரமணி தலைவாசலில் வந்து நின்றான்; கூட்டத்தை நாட்டத்தோடு நோட்டம் இட்டான்; முகத்தை வெகு கம்பீரமான மிடுக்குடன் உயர்த்தினான்; ''அம்மான்!'' என்று கோபாவேசத்தோடு அலட்டினான்; அடிமடியைத் தடவிப் பார்த்துக் கொண்டான். சத்தியம் சுடர் தெறிக்கக் காட்சியளிக்கும் வீரனைப் போன்று காட்சியளித்தான் அவன்.

ராமையாத் தேவர் கலக்கம் மிஞ்ச, நிமிர்ந்தார். அவருடைய எக்காளச்சிரிப்பு இப்போது போன இடம் தெரியக் காணோம்!

''மாமா, வார்த்தையை எண்ணிப் பேசுங்க, ஆமா!''

''உங்க அப்பன் என்கிட்டே பட்டிருக்கிற கடன் ரூபாய் இருபதாயிரத்தை வட்டி முதல் தொகையோடே 'ஐசாபைசா'வாக எண்ணி வச்சுட்டால், நான் வார்த்தையை எண்ணிப் பேசமாட்டேனா, மாப்பிள்ளே?

தமிழ்நாட்டில் கோவை, நீலகிரி, சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கான 'வட்டாரக் கிடங்குக் கழகம்' ஒன்றை அமைப்பது குறித்துத் தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது.

இந்த மாவட்டங்களில் உள்ள 10 பெரிய 'மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்' இந்தப் புதிய கழகத்தில் அங்கம் வகிக்கும். இவற்றின் பிரதிநிதிகள், இந்தக் கழகத்தின் நிர்வாகக் குழுவில் இடம் பெறுவர்.

''மாப்பிள்ளையும் ஆச்சு மண்ணாங்கட்டியும் ஆச்சு! . மாப்பிள்ளை முறையெல்லாம், முறைகெட்ட உமக்கு ஒரு கேடாக்கும்?''

''ஓகோ! அம்புட்டு ரோசம் பொத்துக்கிட்டு வந்தாக்க, இப்பவே இந்த மினிட்டிலேயே என் கடனை அப்பனும் மகனும் எண்ணி வச்சுப்பிடுறது தானே? இல்லே ஒங்க வீடு வாசல், காணி கரை சகலத்தையும் கச்சேரி அமீனாவைக் கொண்டு இப்பவே சட்டப்படி ஜப்தி பண்ணி ஏலம் விட்டுப்புடுவேன்!'' என்று ராமையா கொக்கரித்தார்.

''எங்களோட வீடு வாசலையோ, இல்லே நிலம் நீச்சையோ இல்லே, காடு கரம்பையையோ ஏலம் விடுறதுக்கு நீங்க செத்து சிவலோகம் போய்த் திரும்ப வேணுமாக்கும்!'' என்று அரும்பு மீசையைக் குறும்பாக முறுக்கிக் கொண்டே எக்காளமிட்டான் வீரமணி. கண்களில் ரத்தம் 'பாத்தி' அமைத்திருந்தது.

புத்தி தடுமாறியவர்போன்று பாய்ந்து வந்தார் நாட்டாண்மைத் தேவர். பதுங்காமல் பாயுமே, [illegible]ப்புலி, அப்படி! ''டேய் ராமையா! உம்புட்டு மானம் மரியாதை எல்லாத்தையுமே உன்னோட சிறுக்கி செங்கமலம் ஏலம் போட்டுப்புட்டு, வேடிக்கை காட்டி, வேடிக்கை பார்த்துக் [illegible] நிற்கிறாளே? அந்த இடுசாமக் கதையெல்லாம் மறந்துப்புட்டியாடா? என் உயிர் என்னோட எலும்புக் கூட்டிலே உறைஞ்சு இருக்கிறமட்டுக்கும் உன் பேராசைக் கோட்டையிலே இடியைத்தான் வீசுவாள் ஆத்தா மகமாயி! எனக்கு முன்னாலேயே என்னோட சொத்துக்களை ஏலம் போடப்போறேன்னு நாக்கு மேலே நாக்குப் போட்டுச் சொல்லுறதுக்கு உனக்கு அம்மாம் தைரியம் வந்திடுச்சாடா? ஊம், எங்கே காட்டு உன் கைவரிசையை? நானும் உன்னை ஒரு கை பார்த்துக்கிடுறேன்! ம்..'' என்று உச்சாடனக் குரலெடுத்து உக்கிரத்தோடு முழங்கினார் பெரியவர். அவிழ்ந்து திரிந்த வெண்முடிகளை முடிந்து கொண்டார் அவர்.

''ஐயா அமீனா! கோர்ட்டு உத்தரவை அமல்படுத்தி நடவடிக்கை எடுங்க! ம்..சீக்கிரம்!'' என்று உத்தரவிட்டு, ஊர்க் கூட்டத்தை ஊடுருவிய வண்ணம் ஏளனமாக எக்காளமிட்டுச் சிரிக்கலானார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையா.

''டேய் சண்டாளப்பாவியே ....ராமையா!'' என்று விண்ணும் மண்ணும் அதிர அலறிக் கொண்டே தன் மைத்துனன் ராமையா மீது பாய்ந்தார் ஆறுகரை ஆதிமூலம்.

பெற்றவரைத் பதட்டத்துடன் பாய்ந்தோடித் தடுத்தான் வீரமணி. பிறகு, தயங்கி பயந்து முன்னேறிக் கொண்டு நீதிமன்றச் சேவகருக்குக் குறுக்கே மறித்து நின்றான்!

''அமீனா ஐயா! இப்படியே நிற்கிற இடத்திலேயே நில்லுங்க. வாதி ராமையாத் தேவருக்குப் பிரதிவாதியான என்னோட தகப்பனார் கொடுக்க வேண்டிய கடன் முதல் ரூபாய் இருபதாயிரமும் இதுக்குச் சட்டப்படி உண்டான வட்டிப் பணம் ரூபாய் மூவாயிரத்து அறுநூற்றுச் சொச்சமும் இதோ கைக்கு மெய்யாக வச்சிருக்கேன்!'' என்று நாணயமும் கம்பீரமும் குலுங்கிட, அடிமடியிலிருந்து கரன்ஸி நோட்டுக் கத்தைகளை வீரமணி வெளியே எடுத்துக் காட்டினான். இளங்கதிரொளியில் அசோகச் சக்கரங்கள் மின்னிச் சுழன்றன. ''ஊம், புறப்படுங்க. கோர்ட் அடைக்கிறதுக்குள்ளே நானே அங்கே கட்டிப்பிடுவேன். இன்னும் கால்மணி நேரத்திலே அறந்தாங்கியிலேருந்து வருற தஞ்சாவூர் பஸ் சாலைக்கு வந்திடும்'' என்றான் வீரமணி.

''மகனே!'' என்று மெய் சிலிர்க்க விம்மி அழுதார் ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத்தேவர்.

சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர் முகத்தில் ஏமாற்றமும் அசடும் ஒன்றுக்கொன்று போட்டிக் கொண்டு வழிய, சிலையாக நின்றார்.

கூட்டம் மூக்கில் விரலை வைத்தது.

அப்போது.

வேலைக்காரன் பரமசிவம் தலைதெறிக்க ஓடிவந்தான். ராமையாத்தேவரின் முன்னே மூச்சிரைக்கநின்றான். ''எசமான் வெள்ளம் தலைக்கு மேலே பூடுச்சுங்க! தங்கச்சி அன்னம் தன்னோட அத்தை குடும்பத்தைச் சந்திசிரிக்க வச்சுப்புடாதீங்கன்னு விடிய விடிய உங்க காலடியிலே விழுந்து கெஞ்சிக் கூத்தாடிச்சுங்களே! நீங்க கேட்கவே மாட்டேன்னு சொல்லிட்டீங்களே? இப்ப உங்களையும் கேட்காமல் குன்றிமணி விதைகளை அரைச்சுக் குடிச்சிடுச்சுங்க!....... பேச்சு மூச்சு இல்லாமல் கிடக்குதுங்களே, முதலாளி!'' என்று கதறினான்.

''ஐயையோ, மகளே!'' என்று நெஞ்சு வெடிக்கக் கூப்பாடு போட்டுக் கொண்டே ஓடினார் ராமையாத்தேவர்.

அன்னம்! என் தெய்வமே!'' விண்முட்டி மண்முட்ட அலறினான் வீரமணி.

பிரளயத்தில் சிக்கித்தவித்து. ஜீவமரணப் போராட்டம் நடத்தி, பின்னர், உயிர்தப்பிப் பிழைத்த நாணயமான அமைதியோடும் நேர்மையான ஆனந்தத்தோடும் வீரமணி தன்னுடைய மனையின் மண்ணை அந்த கும்மிருட்டில் மிதித்தபோது, ரத்த ஓட்டம் வேலை நிறுத்தம் செய்துவிட்ட மாதிரி அரைக்கணம் உணர்ந்தான், தவிப்பு துடித்தது.

அப்பா இருமிக் கொண்டிருந்தார்.

''அப்பா,'' என்று விளித்தான் வீரமணி. ''தஞ்சாவூர்க் காரியம் முடிஞ்சாச்சு, கோர்ட்டிலே அம்மான் கடனைக் கட்டியாச்சுங்க,'' என்று விவரம் சொன்னான். முகமும் கண்களும் ஒளிகாட்டின.

''தம்பி, வீரமணி'' என்றார் ஆதிமூலத்தேவர். நெஞ்சைப் பிசைந்து கொண்டார். ''பணம் காசோட அருமைபெருமையை என்னைக் காட்டிலும் நீ ரொம்ப கச்சிதமாகப் புரிஞ்சுக்கிட்டு, மரபு காத்து வந்த நம்மோட குல கவுரவத்தையும் குடும்ப மானத்தையும் கட்டிக் காத்துக் காட்டிப்புட்டே!'' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். என்னவோ ரகசியம் கேட்கவோ, அல்லது ரகசியம் சொல்லவோ எண்ணியிருக்க வேண்டும்.

பாசம் பூவிலங்காகச் சுமக்க, ''அப்பா! புறப்படுக நம்ம சொந்த மண்ணுக்கு!'' என்றான் வீரமணி.

''இதுதானே நமக்குப் பூர்விகமான சொந்தமண், தம்பி?'' என்று உயிரும் உள்ளமும் நடுங்கி ஒடுங்கக் கேட்டார் ஆதிமூலம்.

வீரமணி தொண்டை கம்மப் பேசலானான். ''இது இப்ப ஆண்டுமாறிப் போயிடுச்சுங்க; கைமாறிப் போயிடுச்சுங்க, அப்பா! நம்மளுக்கு இது மட்டும் சொந்தமாக இருந்த நம்மோட வீடு வாசல், காடுகரை, நிலம் நீச்சு எல்லாம் இனி லேவாதேவி நல்லதம்பிச் செட்டியாருக்குச் சொந்தம்! அந்தப் புண்ணியவானை மட்டும் ஆத்தா எனக்கு இனம் காட்டாமல் இருந்திருந்தால், காலம்பறவே நம்ப குடும்பத்தோட மானமும் நம்ப ரெண்டு பேரோட உயிரும் பறிபோயிருக்குங்களே, அப்பா! தெய்வம்னு ஒண்ணு கட்டுச்சோறு கட்டிக்கிட்டுத் தனியே வந்து நமக்கு முன்னே குதிக்குமா, என்ன? நல்லதம்பி அண்ணாவுக்கு நான் ரொம்ப ரொம்பக் கடமைப்பட்டவனாக்கும்!''

நாட்டாண்மைத் தலைவர் இருதயத்தைப் பற்றிக்கொண்டு குமுறிக் குமுறி அழுதார்.

''அப்பா, கண் கெடுறதுக்கு முந்தியே சூரியனைக் கும்பிடுறதுதான் விவேகம். அழாதீங்க. அழுகிறதுக்காக வாழ்க்கை இல்லே; சிரிக்கிறதுக்காகத்தான் வாழ்க்கை ! ஆண்டவன் நமக்குக் கொடுத்த உயிருக்கு நாம் ஒரு அர்த்தம் கொடுக்க வேணும். இந்த நியதியையும் நீதியையும் மறந்துப்புட்டு என்னையும் மறந்துபுட்டு நீங்க விஷப் பொடியைத் தின்னு ரகசியமாகச் சாகத் திட்டம் போட்ட உங்களை ஆத்தா பாதிச்சாமத்திலே எனக்கு காட்டிக் கொடுத்துப்புட்டா! நல்லகாலம், விஷப் பொடியை மாற்றி அதுக்குப் பதிலாக காய்ச்சல் பொடியை வச்சுப்புட்டு, நலியாமல் நழுவிட்டேன்! எதிர்வெயில் அடிக்காமலிருக்குங்களா? எதிர் நீச்சல் போடாமல் தப்பிக்க முடியுங்களா அப்பா?''

நிதானமாகப் பேசி நிறுத்தினான் பட்டதாரி இளைஞன்.

''மகனே!'' என்று விரிட்டார் ஆறுகரைத் தேவர்.

''அப்பா, என்னோட சொந்தச் சேமிப்புப் பணத்தைக் கொண்டு, மகமாயி திடலுக்குக் கிழக்காலே காணிநிலம் கிரயம் பண்ணி, அங்கிட்டு ராத்திரியோடு ராத்திரியாய் ஒரு குடிசையும் போட்டிருக்கேன். அந்தக் குடிசைதான் இனி நமக்கு வீடுவாசல், மாளிகை எல்லாம்! மனம் கொண்டது மாளிகை ஆச்சுங்களே? மனம் வச்சுப் பாடுபட்டால், குடிசையையே மாளிகையாகவும் ஆக்கிப்புட முடியாதுங்களா, அப்பா?''

''நூத்திலே ஒரு சேதி, தம்பி!''

**கோ**ட்டு மேளம் கொட்டியது ஆவணி.

'ஆயிமகமாயி' வெறும் கல் அல்லள்! அவள் சிரிக்கிறாள்; சிரித்துக் கொண்டே இருக்கிறாள்! ஊராண்டு, உலகாளும் அன்னையின் அறச் சிரிப்பு அல்லவா அது!

''அம்மான் மகளே!''

''அயித்தை மகனே!''

''எல்லாம் நீங்க தந்த பாக்கியம்! ஆத்தா இட்ட மடிப் பிச்சை!'' என்று மெய்ம் மறந்து பேசினாள் அன்னக்கொடி.

''ஓ!'' என்று கண்களைச் சிமிட்டினான் வீரமணி.

''ஊம்!'' அமுதூறும் இதழ்கள் துடித்தன; கனவூறும் கயல்விழிகள் பொடித்தன.

காஞ்சிபுரம் கூறைப்பட்டும் மாணம்புச் சாவடிச் சரிகை வேட்டியும் சல்லாபம் செய்தன.

மணமாலைக்கு அர்த்தமாக அமைந்து தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த மஞ்சள் தாலியை எடுத்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டாள் அன்னம்.

புனிதத்தின் தரிசனத்தைப் புனிதத்தோடு ஊடுருவினான் வீரமணி. தலைநிமிர்ந்தான்; கம்பீரத்தின் நேர்மையும் சத்தியத்தின் நாணயமும் கண்ணீராகப் பளிச்சிட்டன!

''அன்னம், நீ வச்ச ஆணைப் படியே, சீதைக்கு ஏற்ற ராமராக நானும், ராமருக்கு ஏற்ற சீதையாக நீயும் ஆத்தா மகமாயியைச் சாட்சிவச்சு, இந்தச் சமுதாயத்துக்கு மெய்ப்பிச்சுக் காட்டிப்புட்டோம்! 'மனசுக்கு மனசுதான் சாட்சி; மற்றதுக்குத் தெய்வமேசாட்சி' அப்படின்னு சொல்லுவாங்க. அந்த வேதவாக்கை நம்பியும் மதிச்சும் நீயும் நானும் ஆத்தா சந்நிதானத்திலேயே புருசனும் பெண்சாதியுமாக ஆகிப்புட்டோம். ஆத்தா தயவிலே நம்ப லட்சியமும் கனவும் பலிச்சிடுச்சி. நாம் கொடுத்து வச்சவங்க. அதனாலே நாம ரெண்டுபேரும் ஒருத்தருக்கு ஒருத்தராக நம்மை நாமே கொடுத்துக்கிட்டோம்!''

''மெய்தானுங்க மச்சான்! அஞ்சு வயசிலே அறியாப் பருவத்திலே நீங்களும் நானும் மணல்வீடு கட்டி, புருசன் பொண்டாட்டி விளையாட்டு விளையாடினோம். இப்ப அன்பு வீடு கட்டிக் கணவனும் மனைவியுமாக ஆகியிருக்கோம்! நான் உங்கமூலம் தாலிபாக்கியம் பெறவேணும் என்கிறது ஆத்தா முடிவு; அதனாலேதான், என்னையும் செத்துப் பிழைக்க வச்சுப்புட்டா, நான் செத்துப் போயிடுவேனேன்னு பயந்து, நீங்களும் செத்துப் போயிடத் துடிச்சிருக்கீங்க. உங்களையும் காப்பாற்றிப்புட்டா ஆத்தா!''

அன்னம்! உழைத்து வாழ் பவனே வணங்கத்தக்கவன் என்று பேரறிஞரும், உழைப்பே தமிழனின் சரித்திரம் என்று கலைஞரும் சொல்லியிருக்காங்க அல்லவா? அந்த அமுத மொழிகளைக் கும்பிட்டு, நாமும் நம்மோட உழைப்பை வணங்கி வாழ்ந்தக் கடமைப்பட்டிருக்கோம்! நம்மோட காணிநிலத்திலே இனி நாம் நெற்றி வேர்வை நிலத்திலே விழ உழைச்சுப் பிழைப்போம். அப்பாலே, மண்ணிலே பொன் விளையக் கேட்கவா வேணும்? நாட்டிலே பசுமைப்புரட்சி பூத்துக்குலுங்காதா, அம்மான் மகளே!''

''மெய்தானுங்க, அத்தான்!

பொன்மணித் தீபம் புன்னகை செய்கிறது.

இளங்கதிர்கள் கண்ணாமூச்சி ஆடுகின்றன.

அப்போது:

''மகனே, வீரமணி!'' என்று ஓடி வந்தார் ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத்தேவர். கட்டுக் குடுமியில் புதிய ஒளி பளிச்சிட்டது.

''மகளே, அன்னம்!'' என்று நாடிவந்தார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர். அவர் முகத்தில் புதிய சிரிப்பு நிழலாடியது.

மறுகணம்:

அழகான கூண்டு வண்டி பாய்ந்து வந்தது.

''மச்சான்!'' என்று அலறிப் புடைத்த வண்ணம் தட்டுத் தடுமாறியவாறு ஓடிவந்தாள் சிலட்டூர்க் கங்காணியாரின் செல்வத் திருமகள் பவளக்கொடி. புதுமணப்பெண்ணாகக் காட்சியளித்தாள் அவள். வீரமணியின் காலடியிலே நெடுஞ்சாண்கிடையாகச் சரண் அடைந்தாள் அவள். மல்லிகைப் பூக்கள் சிதறின.

மணமகன் வீரமணி திகைத்தான்!

மணமகள் அன்னக்கொடி திடுக்கிட்டாள்!

கூட்டம் நெரியத் தலைப்பட்டது!

பவளக்கொடி விம்மினாள். ''மச்சான்! ஒருவாட்டி நான் இங்கிட்டு விருந்தாடி வந்த காலத்திலே, உங்களோட மணல்வீடு கட்டி விளையாடக் கொடுத்து வச்ச அந்த நாள் தொட்டு நீங்க என் மனசைத் தொட்டு விளையாடுனீங்க... அது முதல் நீங்களேதான் என்னோட ஆசை மச்சான் அப்படின்னு நான் எனக்குள்ளே முடிவு பண்ணிக்கிட்டேனுங்க! ஆனா, விதி என்னோடு மெய்யாய் விளையாடிச்சு; நானோ விதியோடு பொய்யாய் விளையாடினேன்! பொய்ப்பித்தலாட்டம் செஞ்சு, உதயசூரியனோட பரிசுத்தமான ஒளியை வெறும் கையைக் காட்டி மறைச்சுப்புடலாம்னு தப்புக் கணக்குப் போட்டேன்! என்னை இந்தத் தமிழ்ச் சமுதாயம் சமிக்கவே சமிக்காது! நான் பாவி! ஆனாலும், இந்தப் பாவிக்கும் ஒரு பாக்கியம் கிடைச்சிருக்குதுங்க. உங்களோட தூய நினைவின் பேராலே, உங்களை நினைச்சு எனக்கு நானே கட்டிக்கிட்ட புண்ணியத்தாலிங்க இது! உங்கபேரிலே உங்க அன்னத்துக்கு உள்ள உரிமையும் உறவும் எனக்கு எப்பவும் உண்டுங்க-ஆமாங்க, மச்சான்!

பவளக்கொடியின் பவள இதழ்கள் மூடிக்கொண்டன. நுங்கும் நுரையுமாக வழிந்து கொண்டிருந்தது ரத்தம். 'அந்தத் தாலி' இரத்தத் திலகம் இட்டுக் கொண்டதோ?

''பாவம், பவளக்கொடி!''- வீரமணி இப்போது வாய் விட்டுச் செருமினான்.

அன்னக்கொடி விம்மினாள்.

அதோ, ஆத்தா மகமாயி இன்னமும் சிரித்துக்கொண்டு தான் இருக்கிறாள்.

முற்றும்



# மீன்களுக்கு ஒரு மருத்துவமனை

**ம**னிதர்களுக்கு நோய் வந்தால் அதனைக் குணப்படுத்துவதற்கு ஊரெங்கும் மருத்துவமனைகள் உள்ளன.

கால்நடைகளுக்குப் பிணி ஏற்பட்டால் அவற்றின் பிணி நீக்குவதற்குக் கால்நடை மருத்துவமனைகள் இருக்கின்றன.

இவற்றைப்போலவே, நீரில் நீந்தித் திரியும் மீன்களுக்கு ஏற்படும் பிணிகளை நீக்குவதற்கும் ஒரு மருத்துவமனை உள்ளது! எங்கே உள்ளது என்று மிக அவசரமாகக் கேட்கிறீர்கள் அல்லவா? உங்களது ஆர்வத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால்-ஜப்பானில் உள்ள 'தோபா' நகருக்குச் செல்ல வேண்டும். ஆம்! மீன்களுக்கான மருத்துவமனை அங்கேதான் உள்ளது!

1965-ஆம் ஆண்டிலே துவக்கப்பட்ட இந்த மீன் மருத்துவமனை நாள்தோறும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.

மீன்களுக்கு ஏற்படும் நோய்களைக் குணமாக்குவதுடன், மீன் வளர்ப்போருக்குத் தேவைப்படும் கருத்துரைகளையும் இந்த மருத்துவமனை வழங்கி வருகிறது.

மீன்களுக்குத் தரும் சிகிச் சையும் மீன் வளர்ப்போருக்கு வழங்கும் கருத்துரையும் இல வசம் என்பது இந்த மருத்துவ மனையின் தனிச் சிறப்பு. இத னால் இந்த மருத்துவ மனையின் புகழ் பரவிவருகிறது. உள் நாட்டிலிருந்து மட்டுமல்ல, அமெரிக்கா, ஜெர்மனிபோன்ற வெளிநாடுகளிலிருந்தும் கூட மீன் வளர்ப்பு குறித்து ஆலோசனை கேட்போர் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றனர். உள்நாட்டில் மட்டும் ஆண் டொன்றுக்கு 200-லிருந்து 300 பேர் வரை ஆலோசனை கேட்கிறார்கள். அவர்களின் கேள்விகளுக்கு உடனடியாக அஞ்சல் வாயிலாக மறு மொழியை அளித்து வருகிறது இந்த மருத்துவமனை.

இந்த மருத்துவ மனையில் பணிபுரியும் மருத்துவர்கள் நீரில் மூழ்கி எழும் கலையில் வல்லவர்கள்; அதற்குரிய அனுமதி பெற்றவர்கள். மீன்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அவற்றிற்கு ஏற்பட்டுள்ள நோய் என்னவென்று சொல்லும் திறம் படைத்தவர்கள்.

இந்த மருத்துவமனையில் சிகிச்சை அறை உள்ளது. அந்த அறையினுள்ளே 20 நீர்த்தொட்டிகள் உள்ளன. டெலிவிஷன் பெட்டி போல் காட்சிதரும் அந்த நீர்த் தொட்டிகள் மூன்று அடுக்குகளாக வைக்கப்பட்டுள்ளன. தொட்டிகள், நோயுற்ற மீன்களுக்குப் படுக்கைகளாகப் பயன்படுகின்றன. மருத்துவர்கள் இந்த உள்ளிருப்பு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக, நாள்தோறும் நீர்த் தொட்டிகளை நாடி வருகின்றனர்.

கண்விழி பிதுங்கியவை, செதில்களில் வெண்புள்ளி விழுந்தவை, செதில்கள் உதிர்ந் தவை ஆகிய வகை மீன்களே இங்கு அதிக அளவில் சிகிச் சைக்குக் கொண்டு வரப்படுகின்றன. சில சமயங்களில், உடலின் உள்ளுறுப்பு வீக்கத் தின் காரணமாக, மீன்கள் ஒருபக்கமாக — சாய்ந்த நிலையில் செல்கின்றன. அவை இங்கே கொண்டு வரப்படுகின்றன. அவற்றின் முதுகுத் துடுப்புகளில் ஒருவகை மிதவையை இணைத்தும் அவற்றின் வயிற்றில் பளுவை இணைத்தும் அவற்றின் அசைவுகளைச் சமப்படுத்துகின்றார்கள், மருத்துவ ஆய்வாளர்கள்.

அறுவைச் சிகிச்சை, ஊசி போடுதல், உள்ளுறுப்புகளுக்கு மருந்து கொடுத்தல் ஆகிய வகைச் சிகிச்சைகள் இந்த மருத்துவமனையில் நடைபெறுகின்றன.

'வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவது' மனித இனத்துக்கு மட்டும் சொந்தமல்ல; மீன் இனத்துக்கும் உரிமையுடையதுதான், என்பதைச் சில மீன்கள் மெய்ப்பித்து வருகின்றன. அவை தமக்குள் சண்டையிட்டுக் கொண்டு, ஒன்றுக்கொன்று தீங்கு விளைவித்துக் கொள்வதும் உண்டு. அதன் காரணமாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அந்த மீன்களுக்குப் பாதரச சிகிச்சை (Mercury — Chrome Treatment) செய்யப்படுகிறது.

உள்நோயுள்ள மீன்களின் கூட்டத்திலிருந்து, நல்ல நிலையில் உள்ள மீன்களை உய்த்துணர்வது என்பது மெய்யாகவே மிகவும் கடினமான பணி

'விழிபிதுங்கல்' நோயுற்ற மீனுக்குச் சிகிச்சை நடைபெறுகிறது





தான். என்றாலும், மீன்களின் நீச்சல் திறம், கண்களின் நிறம், பசி உணர்வு ஆகியவற்றைக் கொண்டு, மீன்கள் நலமான நிலையில் உள்ளனவா, இல்லையா என்பதை முடிவு செய்யமுடியும்.

குடற்புழுக்கள் சில மீன்களுக்குத் தொல்லை தரலாம். ஓட்டுண்ணிகளின் மூலம் குடற்புழுக்கொல்லி மருந்தை மீன்களுக்குச் செலுத்துகிறார்கள், பசியற்ற மீன்களுக்கு செரிமானத்திற்குரிய மருந்தைச் செலுத்துகிறார்கள்; உயிர்ச்சத்துக்கள் குறைந்திருக்கும் மீன்களுக்கு உயிர்ச்சத்துக்களை உட்செலுத்துகிறார்கள்.

அவ்வப்போது மிகவும் ஆபத்தான நிலையில் வருகின்ற மீன்களுக்குப் பெரிய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகின்றன. விழி பிதுங்கல் நோயால் தாக்குண்ட மீன்களுக்குச் சிகிச்சை செய்ய- அவற்றின் உடலின் உட்புறத்திலுள்ள காற்றை ஓர் ஊசிக் குழாய் (சிரிஞ்சி) மூலம் வெளியேற்றுகின்றனர் மருத்துவர்கள்.

மீன் மருத்துவமனை துவக்கப்பட்ட காலத்தில் 'நோயாளிகள்' வெப்ப மண்டலத்திலிருந்து வந்து கொண்டிருந்தார்கள்! ஆனால் இந்நாளில்..! பலநாடுகளிலிருந்தும் படையெடுத்து வருகிறார்கள். மீன் கூட்டுறவு நிலையங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி நிலையங்கள் முதலிய இடங்களில் இருந்தெல்லாம் மருத்துவர்களுக்கு அவசர அழைப்புகள் வருகின்றன. தாங்கள் அன்போடு வளர்த்துவரும் மீன்களை-அல்லது-உணவாக்க இருக்கின்ற மீன்களைச் சோதிக்குமாறு மருத்துவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள்.

பலவகை மீன்கள் இருந்தாலும், அடிக்கடி மருத்துவர்களிடம் எந்த வகை மீன்களுக்கு ஆலோசனை கேட்கப்படுகிறது தெரியுமா? தங்க மீன் (Gold Fish) வெப்ப மண்டல மீன் (Tropical Fish) குளத்து மீன் (Carp Fish) ஆகிய வகைகளே! அவற்றிற்கு ஏற்படுகின்ற நோயின் காரணத்தை ஆய்ந்து சொல்கிறார்கள் மருத்துவர்கள்; நோய்க்குக் காரணம் என்ன தெரியுமா? "மிகு தீனி தான்" (Over Eating)! இதனை நகைச்சுவையாகச் சொல்ல வேண்டுமென்றால் இப்படிக் கூறலாம். மீன் வளர்ப்போரின் அளவுக்கு மீறிய அக்கறைதான் ஆபத்தைத் தேடித் தருகிறது!

மீன் மருத்துவமனை 'தோபா' நகரின் மீன் பொருட்காட்சி நிலையத்தின் பத்தாவது ஆண்டு விழா நினைவாக உருவாக்கப் பெற்றது. இந்தக் காட்சிசாலையில் 300 வகையைச் சேர்ந்த 3,000 மீன்கள் உள்ளன. முதுகுத் தடுப்பற்ற ஒருவகை கருநிற மீன்கள் இங்கே உள்ளன. இவ்வகை மீனைச் செயற்கைச் சூழ்நிலையில் வளர்ப்பது மிகமிகக் கடினமான பிரச்சினை. உலகத்தின் எந்தப் பகுதியில் உள்ள காட்சிச் சாலையிலும் சில ஆறு திங்களுக்கு மேல் இவ்வகை மீன் உயிர்வாழ்வதில்லை. ஆனால் ஜப்பானில் உள்ள மீன் பொருட்காட்சிக் கூடம் ஒரு புதிய சாதனையை உருவாக்கியுள்ளது. ஏறக்குறைய நான்காண்டுகளுக்கும் மேலாக இவ்வகைக் கறுப்பு மீனை உயிர் வாழச் செய்து வருகிறது. இந்தச் சாதனைக்குக் காரணம் என்ன தெரியுமா? மீன் மருத்துவமனையினரும், அதன் மருத்துவ ஊழியர்களும் எடுத்துக் கொள்கின்ற சிறப்பான அக்கறை-அருமையான கவனிப்பு-திறமையான முயற்சி ஆகியவைதான்!

ஜப்பானில் மட்டும் காணப்படும் இந்த மருத்துவமனை மற்ற நாடுகளிலும் தோன்றினால் மீன் இனம் நீடு வாழும்!

கு. பி.



# அன்னியச் செலாவணியை அள்ளித் தரும் காப்பி



சாமி

## எஸ். எஸ். சண்முக சுந்தரம்,

உறுப்பினர், காப்பி வாரியம்.

இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் தேவையான அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவதில் காப்பி முக்கியமான இடம் பெற்றுள்ளது. காப்பி ஏற்றுமதியின் மூலம், 1972-73-ஆம் ஆண்டில் 32.92 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணி, நம் நாட்டிற்குக் கிடைத்துள்ளது!

அந்நியச் செலவாணியை ஈட்டித் தரும் காப்பி இந்தியாவிற்குள் புகுந்தவிதம் விந்தையானதாகும்!

ஏறத்தாழ கி.பி. 1600-ஆம் ஆண்டு பாபாபுதன் சாகிப் என்ற மகம்மதிய மதத் தலைவர், சந்திரகிரி மலையில் இருந்து தன் சீடர்களிடம், தான் புனித மெக்கா நகருக்கு யாத்திரை போக முடிவு செய்திருப்பதாக சொல்லி ஒரு குகையில் மறைந்தார். வெகு காலமாக அவரது சீடர்கள் அவரது வருகைக்காக குகையின் வாயிலில் காத்திருந்தார்கள். அவர் திரும்பி வந்து, புனித தலத்தில் இருந்து அவர் களுக்கு அன்பளிப்பாக உணவாகவும், பானமாகவும் உபயோகப்படுத்தக் கூடியதான அற்புதமான ஏழு விதைகளை கொண்டு வந்திருக்கின்ற தந் செய்தியைத் தெரிவித்தார். இந்த விதைகளைச் சந்திரகிரி மலையில் பயிர் செய்தனர். அன்று முதல் சந்திரகிரி மலையானது 'பாபாபுதன் மலை' என பெயர் பெற்றது. இதுவே இந்தியாவில் காப்பி தோன்றிய விதமாகும்!

இப் பயிர்கள் வளர்ந்து, அதில் சிவப்பு நிறப் பழங்கள் தோன்றின! பழங்களின் உள் ளிருந்த விதைகளில் இருந்து முதன் முதலாக தயாரிக்கப் பட்ட பானம்தான் காப்பி !

பாபாபுதன் மலையில் இருந்து இந்த காப்பி பயிர்கள் கடல் கடத்தப்பட்டு, டச்சு கிழக்கிந்தியா, பிரேசில் நாடுகளில் பெருமளவில் பயிரிடப்பட்டன. 1696-இல் மலபாரில் உள்ள கன்னனூரில் இருந்து, டச்சு கிழக்கிந்தியாவுக்கு முதன் முதலாக காப்பி பயிர்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அப்பயிர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. மூன்று ஆண்டுகள் கழித்து இரண்டாவது முறையாகக் காப்பி பயிர்கள் எடுத்து செல் லப்பட்டன. இதுதான் டச்சு கிழக்கிந்தியாவில் அராபிக்கா காப்பி சாகுபடிக்கு முன்னோடியாக அமைந்தது. 1760-ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசியர் ஆட்சியின் கீழ் இருந்த கோவாவில் இருந்து பிரேஸில் நாட்டின் 'ரியோடிஜெனிரோவுக்கு' (Riode Janeiro) காப்பி பயிர் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தியாவில் 17, 18-ஆம் நூற்றுண்டுகளில் காப்பியின் பெருமையை மக்கள் அறியாதிருந்தனர். 1799-ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியார் காப்பியை வியாபார நோக்கத்துடன் பயிர் செய்ய முனைந்தனர். அதே ஆண்டு தலைச்சேரியில் பரிசோதனையாக காப்பி பயிர் சாகுபடி தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தென்னிந்தியா மலைச்சரிவுகளில், காப்பி சாகுபடி வேகமாகப் பரவ ஆரம்பித்தது.

மலைப்பகுதிகளில் இருந்த, ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுக் காப்பி பயிரிடப்பட்டது. இது மிக கடினமானதொரு வேலையாக இருந்தது. அப்பொழுது போக்குவரத்து சாலைகளோ, நவீன இயந்திரங்களோ இல்லாது கால்நடைகள் மூலம் சுமைகளை ஏற்றி மலைப்பகுதிகளுக்குள் சென்று - சொல்ல முடியாத இன்னல்களுக்கிடையே-இக் காப்பிப் பயிரைப் பயிர் செய்வதில் ஈடுபட்டு, காடுகளாக இருந்த இடங்களை எழில்மிக்க காப்பித் தோட்டங்களாக மாற்றினர். அவர்களது விடாமுயற்சியாலும், திடமான

உழைப்பின் பயனாலும் 1872-ஆம் ஆண்டு ஏறத்தாழ 2,500 டன் காப்பியை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தனர்.

மிகச் செழிப்பாகவும், செல்வாக்காகவும் செய்யப்பட்டு வந்த காப்பிச் சாகுபடிமுறை, குறுகிய காலத்திலேயே மிகக் கடுமையான சூழ்நிலைக்கு உள்ளாகி, பெரியதொரு பாதகமான திருப்பத்தை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. இலை நோயாலும், குருத்துப் பூச்சியாலும் (ஸ்டெம்போரர்) செடிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனால் உற்பத்தி குறைந்து, பராமரிப்பு செலவும் அதிகரித்தது. உலக காப்பிச் சந்தையில் ஏற்பட்ட நெருக்கடியான போட்டியைச் சமாளிப்பது உழவர்களுக்கு முடியாததாயிற்று. முடிவில் இரண்டாவது உலக மகா யுத்தத்தால், வெளி நாட்டு வியாபார தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதன் விளைவாக 1940-41-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 3,00,000 ஏக்கராவில் இருந்து 1,81,000 ஏக்கராவாக காப்பிப் பயிர் பரப்பளவு குறைந்து, கவலைக்கிடமாகியது. இதனால் இந்தியாவில் காப்பி விவசாயமே அழிந்து விடுமோ என்று அச்சப்பட வேண்டியதாயிற்று!

இந்திய அரசு, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண 1940-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு மாநாடு கூட்டி ஒருமனதாக "Coffee Market Expansion Ordinance XIII of 1940)" என்ற சட்டம் இயற்ற பரிந்துரைத்ததுடன் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் காப்பி வியாபாரத்தைக் கட்டுப்படுத்த "Indian Coffee Expansion Board"-ஐ, 1940-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி தோற்றுவித்தது. இதுதான் தற்போது காப்பி சட்டத்தின் கீழ் இயங்கி வரும் காப்பி வாரியம் (Coffee Board) ஆகும்.

இந்த ஏற்பாட்டினால் காப்பி விவசாயத்தில் ஏற்பட்ட இன்னல்கள் நீங்கி, புதிய சகாப்தம் தொடங்க ஆரம்பித்தது. யுத்தத்திற்கும், நாட்டு விடுதலைக்கும் பின்னால் இத் தொழில் கணிசமான முன்னேற்றத்தை அடைய ஆரம்பித்தது. 1,81,000 ஏக்கராக இருந்து வந்த காப்பிப்பயிர் பரப்பளவு, 1959-60-ஆம் ஆண்டில் 2,94,929 ஏக்கராவாக விரிவாக்கப்பட்டு சுமார் 49,740 டன் உற்பத்தியை எட்டியது. (31-7-1961 தேதிய புள்ளி விவரப்படி- 46,597 பல்வேறு அளவான தோட்டங்களில் இருந்து). நல்ல உயர்ந்த ரகக் காப்பி விளைவதற்கு தகுதியாக இந்தியாவில் இருக்கின்ற பல மலைச் சரிவுகளைப் போல் உலகத்தில் சில மலைகளே தகுதி வாய்ந்ததாக இருக்கின்றன. உயர்ந்த தரமானதும், அதிக அளவு உற்பத்தியாவதற்குத் தகுதியான மலைச் சரிவுகளும், வெப்ப தட்ப நிலையும், போதுமான மழையளவும், சக்தி மிகுந்த மண் வளமும் நம் நாட்டில் நிரம்பி இருக்கின்றன.

நம் நாட்டு காப்பி உற்பத்தியில் 70 சதம் கருநாடக மாநிலத்திலும், 15 சதம் தமிழ் நாட்டிலும், 15 சதம் கேரள மாநிலத்திலும் கிடைக்கிறது. கருநாடக மாநிலத்தில் பாபா புதன் மலைகளிலும், குடகிலும் தமிழ்நாட்டில் நீலகிரி, சேர்வராயன் மலை, ஆனைமலை, பழனி மலை, சிறுமலை, போடி மலையிலும், கேரள மாநிலத்தில் நெல்லியம்பதி, கண்ணன் தேவன், வயநாடு மலைகளிலும் ஆந்திரமாநிலத்தில் சில பகுதிகளிலும் காப்பி நல்ல முறையில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மேலும், நல்ல காப்பி உற்பத்தி செய்வதற்குத் தகுந்த நிலங்கள் அசாம், ஒரிசா, மத்தியபிரதேசம், மகாராட்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் தீவுகளிலும் இருக்கிறபடியால் அங்கும் காப்பி உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளார்கள்.

## காப்பி வகைகள் :

உலகத்தில் உள்ள 'அராபிக்கா', 'ரோபஸ்டா', 'லிபரிக்கா' என்ற மூன்று வகைக் காப்பியும் தென்னிந்தியாவில் பயிரிடப்பட்டு வருகின்றன. 'அராபிக்கா காப்பி' அபிசீனயாவில் இருந்தது. அராபியாவில் உள்ள ஏமனில் இருந்து, இந்த ரகம் கொண்டு வரப்பட்டதால், இக்காப்பிக்கு 'அராபிக்கா' என்று பெயரிடப்பட்டது. இந்த ரகம் நம் நாட்டில் 84,362 எக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது. 'ரோபஸ்டா' காப்பி 1910-ஆம் ஆண்டு ஜாவாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்த ரகம் 55,116 எக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது. ஆக மொத்தம் இவ்விரு ரகமும் 1,39,478 எக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது.

காப்பி வாரியம் அமைக்கப்பட்டதில் இருந்து பொதுவாக 'அராபிக்கா', 'ரோபஸ்டா' பயிர் நிலங்கள் விரிவாக்கப்பட்டும், குறிப்பாக 'ரோபஸ்டா' பயிர் நிலம் மிக அதிகமாக விரிவாக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தியும் பெருகி இருக்கிறது. இந்தியாவின் சராசரி உற்பத்தி 90,000 டன் ஆகவும், அதிக உற்பத்தியாக 1,10,231 டன்னும், 1970-71-ஆம் ஆண்டு கிடைத்திருக்கிறது ('அராபிக்கா' 58,348 டன், 'ரோபஸ்டா' 51,883 டன்).




'அராபிக்கா' காப்பியின் பல ரகங்கள் பற்பல காலங்களில் பயிரிடப்பட்டன. 'சிக்' (Chick) என்ற ரகம் தான் முதன் முதலில் தோன்றிச் செழிப்புடன் இருந்தது. ஆனால் அது குருத்துப்பூச்சியாலும் (ஸ்டெம்போரர்), இலை நோயாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. பின் இலை நோய் பாதிக்காத 'கூர்க்' (Coorg) என்ற புது வகை கண்டு பிடிக்கப்பட்டு பெரிதும் விரும்பப்பட்டது. அதன்பின் வீரியத்திற்கும், தரத்திற்கும் பெயர் பெற்ற 'கெண்ட்' (Kent) ரகம் பரவியது. கடைசியாக பாளே கண்ணூரில் உள்ள காப்பி ஆராய்ச்சிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள உறுதியும், நோய் தாக்காததுமான புதிய காப்பி ரகங்கள் எஸ். 795-ம், நெ. 1934-ம் மிக பிரபலமடைந்து வருகின்றன. இந்த ரகப் பயிர்கள் அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகின்றன.



பலர் நினைப்பதுபோல் காப்பி விவசாயம் செய்வதும், உற்பத்தி செய்வதும் எளிதான காரியமல்ல! மிகச் சிக்கல் நிறைந்த வழிமுறைகளை உடையது. முதலாவதாக, ஒரே சீரான இடைவெளி விட்டு ஒழுங்கான வரிசைக் கிரமமாக செடிகள் நட குழிகள் எடுக்க வேண்டும். உறுதியானதும், எவ்வித நோய் தாக்காததுமான காப்பி விதைகளை உற்பத்தி செய்யக் கூடிய நல்ல காப்பிச் செடிகளைத் தேர்ந்தெடுத்து, அதில் உற்பத்தியாகும் விதைகளில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட விதைகளையே நடுவதற்கு உபயோகப்படுத்த வேண்டும். சாதாரணமாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் நாற்றங்கால்களுக்காக தயாரிக்கப்பட்ட படுகைகளில் விதைகளை நட வேண்டும். நாற்றுக்கள் முளைத்து இரண்டு வாரத்திற்குபின், சிறிய மூங்கிற் கூடைகளிலோ அல்லது 'பாலிதீன்' பைகளிலோ நல்ல சக்தி உள்ள மண்ணை நிரப்பி அதில் நட வேண்டும். இந்த நாற்றுக்களை மர நிழலில் சுமார் 8 மாத காலத்திற்கு வைத்திருக்க வேண்டும். அதன்பின், இந் நாற்றுக்களை வரிசையாக நிழல் தரும் மரங்களின் மத்தியில் ஒழுங்கான வரிசைப்படி எடுக்கப்பட்டிருக்கும் குழிகளில் வைத்து நட வேண்டும். இம் முறைப்படி செடிகளுக்கு தேவையான அளவு உரம் கொடுத்து, நோய்களினால் பாதிக்காதபடி மருந்துகள் தெளித்து, களை வளராதபடி அடிக்கடி களை எடுத்தும் செடிகளைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

மூன்றாவது ஆண்டில் செடிகள் பலன்தர ஆரம்பித்த போதிலும், ஐந்தாவது ஆண்டில்தான் முழு அளவில் பலன் தரும். பலன் தர ஆரம்பித்ததில் இருந்து செடி தேவைக்கு அதிகமாக வளர்ந்து நிலத்தில் உள்ள சக்தியை அதிகமாக எடுத்து விடாதபடி செடிகளை கவாத்து செய்ய வேண்டும். சாதாரணமாக காப்பிச் செடிகளின் வயது 50 ஆண்டு எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் காப்பி ஆண்டிற்கு ஒருமுறைதான் காய்க்கிறது. மார்ச்சு, ஏப்ரல், மாதங்களில் பெய்யும் மழைக்குப் பின், பூக்கின்றது. பூ பூத்ததில் இருந்து காப்பி, 8 அல்லது 9 மாதங்களில் பழுத்துப் பறிப்பதற்குப் பக்குவமாகி விடுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் பழனி மலையில் மாத்திரம் 6 மாதங்களிலேயே காப்பிப் பழம் பறிப்பதற்குப்பக்குவமாகி விடுகின்றது. சாதாரணமாகப் பழம் பறிப்பு மூன்று எடுப்புகளில் முடிந்து விடுகின்றன.

பறித்த காப்பிப் பழங்களை இயந்திரத்தின் மூலம் பழத்தின் மேல் தோலை நீக்கி, கிடைக்கும் விதைகளை சுமார் 36 மணி நேரம் புழுங்க வைத்திருந்து, தண்ணீர்விட்டு கழுவினால் விதைகளின் மேலே உள்ள பசைப் பொருள் நீங்கி விடும். பின், ஈர விதைகளை வெய்யிலில் உலர வைக்க வேண்டும். இவ்வாறு உலர்ந்த காப்பி, 'தளிர்' (Plantation அல்லது Parchment) என்று சொல்லப்படுகிறது. பழங்களில் இருந்து விதைகளைப் பிரிக்க மற்றொரு சுலபமான முறை கையாளப்படுகிறது. பழங்களைப் பறித்தவுடனேயே வெய்யிலில் நன்றாக உலர்த்தினால் பழத்தின் தோலும், விதைக்கும் தோலுக்கும் மத்தியில் உள்ள பசைப்பொருளும் நன்றாகக் காய்ந்த பின் கைக்குத்தலாலோ அல்லது இயந்திரத்தின் உதவியாலோ பிரித்து எடுக்கப்படுகிறது. இந்த முறையில் எடுக்கப்பட்ட காப்பி 'நாட்டுக்காப்பி' அல்லது 'செரி' (Cherry) காப்பி என்று சொல்லப்படுகிறது.

காப்பி தளிரின் மீதுள்ள மெல்லிய ஓடையும், விதையின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் பட்டுபோன்ற மிருதுவானதும், இலேசானதுமான தோலையும் இயந்திரத்தின் மூலம் நீக்கி, புடைத்து எடுத்துக் கிடைக்கின்ற விதைகளை உருவத்திற்கும், பருமனுக்கும் தக்கபடி பல வகைகளாகப் பிரிக்கிறார்கள். இம்முறைகளை செய்யும் நிலையங்களுக்கு 'Curing works' என்று பெயர். இந்த நிலையங்களில் பல தனிப்பட்டோரா

லும். சில கூட்டுறவு முறையாலும் நடத்தப்படுகின்றன. இம்முறையில் காப்பி கீழே கண்ட விவரப்படி பிரிக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராகின்றன.

### பிளான்டேஷன்

1. அராபிகா பார்ச்மெண்ட் (அண்டு கியூர்டு)
2. அராபிகா பார்ச்மெண்ட் (கியூர்டு அண்டு கிரேடட்)
   பி.பி. (பீபரி)
   ஏ.பி.
   டிரையேஜ்
   பிளாக்ஸ்
   பிட்ஸ்
3. அராபிகா பார்ச்மெண்ட் பீல்டுபல்க் (12 சத 'டிரையேஜ்', பேசின் 8 சத பி.பி)

### அராபிகா செர்ரி

1. அராபிகா வெள்ளை கிராப் செர்ரி (அண்டு கியூர்டு)
2. அராபிகா வெள்ளை கிராப் செர்ரி (கியூர்டு அண்டு கிரேடட்)
   பி. பி. (பீபரி)
   ஏ.பி.
   பல்க் 5 சத 'டிரையேஜ்'
   'டிரையேஜ்'
   பிளாக்ஸ்/பிரெளன்ஸ்/பிட்ஸ்

### ரோபஸ்டா பார்ச்மெண்ட்

1. ரோபஸ்டா பார்ச்மெண்ட் (அண்டு கியூர்டு)
2. ரோபஸ்டா பார்ச்மெண்ட் (கியூர்டு அண்டு கிரேடட்)
   பி.பி. (பீபரி)
   ஏ.பி.
   பல்க் 5 சத 'டிரையேஜ்'
   பிளாக்ஸ்/பிரேளன்ஸ்/பிட்ஸ்

### ரோபஸ்டா செர்ரி

1. ரோபஸ்டா செர்ரி (அண்டு கியூர்டு)
2. ரோபஸ்டா செர்ரி (கியூர்டு அண்டு கிரேடட்)
   பி. பி. (பீபரி)
   ஏ.பி.
   பல்க் 5 சத 'டிரையேஜ்'
   'டிரையேஜ்'
   பிளாக்ஸ்/பிரெளன்ஸ்/பிட்ஸ்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் காப்பி மாதக் கணக்கில் கப்பல்களில் இருக்க வேண்டிய நிலை ஏற்படுவதால், குளிர்ச்சி தன்மையில் காப்பி விதைகள் தன் இயற்கை நிறத்தை இழந்து வெளிறின. இவ்விதம் வெளி நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட காப்பி அதனது இயற்கை மணத்தையும், குணத்தையும், ருசியையும் இழந்தது. இதைத் தவிர்ப்பதற்காக மங்களூரில் புதிய முறை கண்டு பிடித்தனர். அதாவது மே, ஜூன் மாதங்களில் தென்மேற்குப் பருவ மழை காலத்தில் 'செரி' காப்பியை நல்ல காற்றோட்டம் உள்ள இடங்களில் 4 முதல் 6 அங்குல உயரத்திற்குப் பரப்பி, நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு பரப்பி இருக்கின்ற காப்பியை அப்போதைக்கப்போது கிளறி விட்டு, சணல் பைகளில் இறுக்கம் இல்லாது நிரப்பி, நிரப்பப்பட்ட பைகளை நல்ல இடைவெளி விட்டு வரிசை வரிசையாக ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, பருவக்காற்று தாராள



மாக தொடர்ந்து அங்கு படும் விதத்தில் அடுக்கப்படுகின்றன. பின் வாரத்திற்கு ஒரு முறை எல்லா இருப்பையும் மொத்தமாகக் கொட்டி மறுமுறை சணல் பைகளில் நிரப்பியோ அல்லது ஒரு பையில் இருக்கும் சரக்கை மறு பைக்கு மாற்றியோ வைக்கிறார்கள். இந்த முறையில் சுமார் 50 நாட்களில் காப்பிக் கொட்டைகள் பளபளக்கும் வெள்ளை நிறத்தை அடைந்து விடுகின்றன. இது, ஏற்றுமதிக்குச் சரக்கு தயாராகி விட்டது என்பதைக் காட்டுகிறது. இந்த முறையில், காப்பி தன் மணத்தையும், குணத்தையும், ருசியையும் இழப்பதில்லை. இந்த முறைக்கு

'Monsooned Coffee' என்று பெயர்.

காப்பி ஏற்றுமதியின் மூலம் நம் நாடு, கோடிக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணியை சம்பாதிக்கிறது. 1972-73-ஆம் ஆண்டில் 50,833 டன் ஏற்றுமதி செய்து 32,93,96,908 ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது.

விவசாயிகள் அவர்களுக்கு கிடைக்கும் காப்பி மகசூலில் தங்களது வீட்டு உபயோகத்திற்கும், விதைக்காகவும் ஒரளவு நிறுத்தி வைத்துக் கொண்டும் காப்பி போக மீதி காப்பி முழுவதையும் ஆங்காங்கே நிறுவப்பட்டிருக்கும் 'பூல்' டிப்போக்களிலோ அல்லது 'பூல்' ஏஜென்ட்களிடமோ கொடுத்து விட வேண்டும். 35 ஏக்கர் நிலப்பரப்பு வை வைத்திருப்பவர்களையும், ஒ டன் காப்பி மகசூல் வ எடுக்கும் காப்பி விவசாயிகளையும் சிறு விவசாயிகள் என்றும் மற்றவர்களை பெரிய விவசாயிகள் என்றும் பிரித்து இருக்கின்றனர். இதில் சிறு வி [illegible] காப்பி மகசூலை [illegible] அவ [illegible] பான [illegible] ற்கு உள் [illegible] நிர்ணயிக்கப்பட்ட விலையை கொடுத்து விட்டு அவ்வாண்டு காப்பி முழுவது ஏலத்தில் மூலம் விற்பனை செய்ததில் கிடைக்கின்ற விற்பனைத் தொகை

யில் விற்பனை செலவுகள்போக மீதியை போனஸாக கொடுக்கப்படுகிறது.

பெரிய விவசாயிகள் அவர்களது காப்பி மகசூலைப் 'பூல்' செய்யும்பொழுது அவ்வாண்டிற்கு உண்டான நிர்ணயிக்கப்பட்ட முன் பணத்தை மாத்திரம் கொடுக்கிறார்கள். அவர்களால் 'பூல்' செய்த காப்பி முழுவதும் விற்பனையான பிறகு விற்ற தொகையில் விற்பனைச் செலவுகள் போக மீதியை அவரவர்கள் செலுத்திய காப்பியின் தரத்திற்கும், அளவிற்கும், தகுந்தபடி பணத்தைப் பிரித்துப் பல தவணைகளில் கொடுத்து விடுகிறார்கள். இதன்படி சிறு விவசாயிகளுக்கும், பெரிய விவசாயிகளுக்கும் ஆண்டுக் கடைசியில் கிடைக்கின்ற விலை விகிதம் சமமாகவே இருக்கும்.

ஆண்டுதோறும் காப்பி வாரியத்தினர் காப்பி விளைச்சல் அளவை மதிப்பிட்டு, உள்நாட்டுத் தேவைக்கு ஒதுக்கியது போக, மீதியை வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ஒதுக்குகிறார்கள்.

உள்நாட்டுத் தேவைக்கான பெருமளவு காப்பி 'Pool Sales) மூலம் சுமார் மாதம் ஒருமுறை பல பகுதிகளில் பகிரங்க ஏலம் மூலம் விற்கப்படுகிறது. ஏலத்தில் காப்பி வாரியத்தில் பதிவு செய்துள்ள வியாபாரிகளே கலந்து கொள்ள முடியும். உயர்ந்த விலை கோருபவர்களுக்கு விற்கப்படுகிறது. ஒதுக்கீடுகள் மூலம், பல பகுதிகளில் இதற்காக காப்பி வாரியத்தில் பதிவு செய்துள்ள சில்லரை வியாபாரிகள், காப்பித்தூள் உற்பத்தியாளர்கள் நலனுக்காக விற்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விளம்பர இலாக்காவுக்கும் குறைந்த பட்ச விலைக்கு காப்பி கொடுக்கப்பட்டு, அக்காப்பியை இவ்விரு நிறுவனங்களின் கிளை நிறுவனங்களின் மூலம் காப்பிக் கொட்டையாகவோ, காப்பித் தூளாகவோ விற்கப்படுகிறது. இது, காப்பி உபயோகிப்போருக்கு விலை ஏற்றத்தை தடுப்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கிறது.

மிகக் கவனமாக பதனிடப்பட்டதும், நல்ல தரமானதுமான இந்திய காப்பிக்கு, வெளிநாடுகளில் நல்ல விலை கிடைப்பதால் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் மூலம் - காப்பி வாரியத்தாரால் விதிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகள் படி-உலகத்தின் எல்லா பகுதிகளுக்கும் காப்பி ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஜெர்மனி, நெதர்லாண்ட்ஸ் பெல்ஜியம், இத்தாலி, பிரான்ஸ், யுனைடெட் கிங்டம், யுனைடெட் ஸ்டேட்ஸ், ரஷ்யா, ஸ்விட்லர்லாந்து, குவைட், ஹங்கேரி, போலண்ட், ருமேனியா, ஆஸ்திரேலியா, நியூஸிலண்ட் போன்ற சுமார் 45 நாடுகளுக்கு இந்தியா தனது காப்பியை ஏற்றுமதி செய்கிறது!

உலகக் காப்பி உற்பத்தியில், இந்திய காப்பி உற்பத்திசுமார் 2 சதம் ஆகும். ஏற்றுமதி அளவு இந்த 2 சதவிகிதத்திலும் ஒரு சிறிய பாகமே ஆகும்.

காப்பி வாரியத்தாரால் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் செய்யப்பட்டு வரும் விளம்பரத்தின் பயனாகக் காப்பி அருந்துவோரின் எண்ணிக்கையும், காப்பியின் ஏற்றுமதி அளவும் கணிசமாக பெருகி வருகிறது.

வருங்கால உள்நாட்டு தேவைக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் தக்கவாறு காப்பி உற்பத்தியைப் பெருக்க, காப்பி வாரியத்தால் பாளேகண்ணூரில் நிறுவப்பட்டிருக்கும் ஆராய்ச்சி பண்ணையில் நடத்திய ஆராய்ச்சியின் பயனாகக் கிடைக்கப்பெற்றிருக்கும் நோய் தாக்காததும், உறுதி வாய்ந்ததுமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு நாட்டில் காப்பி விளையும் எல்லா பகுதிகளுக்கும் பரப்பப்பட்டு வருகிறது.

ஆராய்ச்சியின் பலன்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லியும், விவசாயிகளுக்கு உள்ள பிரச்சினைகளை ஆராய்ச்சி பண்ணைக்கு அறிவித்தும், பிரச்சினைகளை தீர்ப்பதிலும் ஆலோசனை கூறுவதிலும் தொடர்பு துறை, தீவிரமாக முனைந்து இருக்கிறது.

இதற்காக ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கு குவிண்டால் 1-க்கு ரூபாய் 9-50 சுங்கவரி (Customs duty) ஆகவும், உள்நாட்டில் விற்பனை ஆகும் காப்பிக்கு ரூபாய் 9.50 (Excise duty) ஆகவும், அதிலிருந்து கிடைக்கும் பணம் ஆராய்ச்சிக்காகவும், விளம்பரத்திற்காகவும் செலவிடப்படுகிறது.

இந்தியாவில் காப்பி விவசாயிகளுக்கும், காப்பி அருந்துவோருக்கும், பதனிடுவோருக்கும், காப்பி வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல பலனும், பயனும் கிடைக்கும் முறையில் காப்பி வாரியம் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா சாராரின் பிரதிநிதிகளைக் கொண்டு விற்பனை, விளம்பரம், ஆராய்ச்சி, அபிவிருத்தி என்ற பிரிவுகளின் மூலம் நல்ல முறையில் சிறந்த பணியாற்றி வருகிறது.









சென்னைப் பெரம்பூர் மாதவரம் நெடுஞ்சாலையிலுள்ள ஒரு பட்டாசுக்கடை, போவோர் வருவோரின் கவனத்தையெல்லாம் ஈர்க்கிறது.

அதற்குக் காரணம், அது சாதாரணப் பட்டாசுக்கடை அல்ல, பட்டதாரிகள் பட்டாசுக்கடை!

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து, பொழுதை வீணே கழிக்காமல் இப்படிப் பயனுள்ள செயலைச் செய்து வருவதை பொது மக்கள் பாராட்டுகின்றனர்.

மேலை நாடுகளிலெல்லாம் படிக்கும்போதே மாணவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுப் பொருளீட்டுகின்றனர். எந்தத் தொழிலையும் அவர்கள் தாழ்ந்ததாகக் கருதுவதில்லை. அந்த மனப்பக்குவம் நம் நாட்டிலும் வரவேண்டும்.

படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே என்று முயற்சி ஏதுமில்லாமல் வாழ்நாளை வீணே கழித்துக் கொண்டிருக்காமல், தொழில் எதுவானாலும் அதை ஏற்கின்ற மனத்தினராய் முன் வந்துள்ள பதினொரு பட்டதாரிகளின் இந்தப் பட்டாசுக்கடை நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது.

பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, இலயோலாக் கல்லூரி மாணவர்களான இவர்கள் பி.ஏ., பி.காம்., பி.எஸ்சி., எம்.ஏ., எம்.எஸ்சி பட்டம் பெற்றவர்கள்.

இவர்கள் பட்டாசுக் கடையோடு உட்கார்ந்து விடுவதில்லை. வீடு வீடாகச் சென்று, குறிப்பாக அரசுக் குடியிருப்புகளுக்குச் சென்று 'ஆர்டர்'களைச் சேகரிக்கின்றனர். அரசு அலுவலகங்கள் பலவற்றிலும் இவர்களுக்கு ஆதரவு பெருகியுள்ளது. ஆர்வத்துடன் இளைஞர்கள் ஈடுபடும் எந்த ஒரு நல்ல செயலுக்கும் ஆதரவு இல்லாமல் போகுமா?

உணவுப் பொருள்களைத்தான் நியாய விலையில் தருவார்களா என்ன? இந்தப் பட்டாசுகளையும்தான் இவர்கள் நியாயவிலையில், அதாவது அரசு அலுவலகங்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடியில் தருகிறார்கள்.

தீபாவளி முடிந்ததும் என்ன செய்வீர்கள்? என்று கேட்டால் அவர்கள் சொல்லும் பதில்.

'பொங்கல்தான் வருகிறதே! கிராமத்துக்குப் போய்க் கரும்புகள், காய்கறிகளெல்லாம் வாங்கி' வந்து விற்போம். பொங்கல் போனதும், பள்ளிக்கூட நாட்களில் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் முதலானவற்றை விற்போம்!' என்கிறார் ஒரு மாணவர் உற்சாகமாக.

விருதுநகரில் பட்டதாரி மாணவர்கள் ஒன்று சேர்ந்து தேநீர்க்கடை வைத்தார்களாம். அதைப்போலச் சென்னை நகரில் முதன் முதலாக வந்துள்ள பட்டதாரிகள் பட்டாசுக் கடையை—நாம் பாராட்ட வேண்டும்.





# மரம் நடு விழா!

அண்மையில் செங்கை மாவட்டத்தில் மரம் நடுவிழா நடைபெற்றிருக்கிறது. செடியை நட்டுவிட்டு மரம் நடுவிழா (வன மகோத்சவம்) என்று சொல்வார்களே அப்படி இல்லாமல் மெய்யாகவே ஓர் இடத்திலுள்ள மரத்தைப் பெயர்த்து எடுத்து வந்து மற்றோர் இடத்தில் நடுகின்ற விழா இது!

புதிர் போடுவது போலத் தோன்றுகிறதல்லவா? புதிரல்ல! நடைபெற்ற நிகழ்ச்சி-நடைபெறும் நிகழ்ச்சி -நாளையும் நடைபெறப் போகும் நிகழ்ச்சி.

வேடந்தாங்கலுக்குப் பறவைகள் ...ரண்புக வருகின்றன அல்லவா? அவை ...ரியின் உள்ளே காணப்பெறும் நீர்க்...டப்பை மரங்களைத்தான் நாடி வருகின்...ன. அருகில் வேறு பல வகை மரங்கள் ...இருந்தாலும் நீர்க்கடப்பை மரங்களில் ...ான் பறவைகள் கூடு கட்டுகின்றன; ...டியிருக்கின்றன. எனவே ஏரியினுள் ...ர்க் கடப்பை மரங்களை அதிக அளவில் ...டம்பெறச் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் தமிழக அரசின் வனத்துறையினர்.

சென்ற ஆண்டு, ஆய்வு முறையில் இந்தப் பணி நடைபெற்றது. ஏறக்குறைய 9 மரங்கள் பெயர்த்து நடப்பெற்றன. அவற்றில் 8 மரங்கள் உயிர் பெற்றுத் தழைத்தன. அதனால் இந்தப் பணியைத் தொடர்வதற்கு வனத்துறை முடிவெடுத்தது. அண்மையில் சில மரங்கள் நடப்பெற்றுள்ளன. மொத்தம் 100 மரங்களை இந்த ஆண்டுக்குள் நடுவதற்குத் திட்டம் உள்ளது.

வேடந்தாங்கலுக்கு அருகில் உள்ள சிற்றூரில் இந்த நீர்க்கடப்பை மரங்கள் உண்டாக்கப்பெற்று, அவை அப்படியே பெயர்த்து எடுத்து வரப்பெற்று, நடப்பெறுகின்றன. இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி என்னவென்றால், இந்த மரங்கள் பெயர்த்துக் கொணடு வரப்பட்ட 24 மணி நேரத்துக்குள் மீண்டும் நடப்பெற வேண்டும்.

எனவே நீர்க்கடப்பை மரங்கள் மிக அதிக அளவில் நடப்பெறுவதால் புத்தாண்டில் (1975) சரணாலயம் நோக்கிப் பறவைகள் படையெடுத்து வரும் என்று எதிர்பார்க்கப்பெறுகிறது.

—த. பி.







# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



வளமான நலவாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

**தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.**

*சிறு சேமிப்புத் தரும் சீரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1, 650/- |

### சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை. சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.
2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

"இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்"

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.

தமிழரசு





எல்லா
ஊர்களுக்கும்
இணைப்புச்
சாலைகள்
குடிநீர் வசதி!
புதிய
முயற்சிகளால்
தொழில்துறை
வளர்ச்சி!
இப்படித் தொடரும் நமது அரசின் அரும்பணிகளின்
வெற்றிக்கு
அடித்தளமே
அளவான குடும்பம்.
குடும்ப நலத் திட்டம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!
—குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.


தமிழரசு
11
5-12-1974
50 காசு




# தமிழரசு



மலர்-5

இதழ்-12

16-12-'74

## காவல் துறைச் சிறப்பிதழ்



# "தெய்வ மாக்கவி"

சென்னை,
ஜஸ்டிஸ் எஸ். மகராஜன், 15—10—'74.

அன்புமிக்க,
மாண்புமிக்க
டாக்டர் கலைஞர் அவர்களுக்கு,

அண்மையில் வெளிவந்த 'தெய்வ மாக்கவி'' என்ற நூலை கவிக்கண் படைத்த தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன்.

அதிலுள்ள முதல் கட்டுரையைப் பார்ப்பதற்காவது தங்களுக்கு நேரம் கிடைத்தால், இந்நூலுக்கு ஜீவன் முக்தி கிடைத்து விட்டது என்று கருதுவேன். வணக்கம்.

அன்பன்,
எஸ். மகராஜன்.

மாமல்லை,
நீதிபதி மகராஜன் அவர்கள், 2—11—'74.
சென்னை.

பேரன்புடையீர்,

வணக்கம். தங்களின் ''தெய்வ மாக்கவி'' என்ற நூல் கிடைத்தது. அதில் ''முதல் கட்டுரையைப் பார்ப்பதற்காவது தங்களுக்கு நேரம் கிடைத்தால், இந்நூலுக்கு ஜீவன் முக்தி கிடைத்துவிட்டது என்று கருதுவேன்'' என்று குறிப்பிட்டு, கவிக்கண் படைத்த என் பார்வைக்கு நூலை அனுப்பியிருப்பதாக எழுதியுள்ள தங்களின் அன்பு பொங்கும் இதயத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறந்தவர்கள் எழுதிய நூல்களை முழுவதுமே படிக்கும் பழக்கமுடையவன் நான். அதற்கெனவே நேரமும் ஒதுக்கிக் கொள்கிறேன். ஓய்வுக்காகச் செல்லும் மாமல்லபுரத்தில் நான் நிறையப் படித்துமிருக்கிறேன். எழுதியுமிருக்கிறேன். சுற்றுப்பயணங்களின் போழ்து புகை வண்டியின் விளக்குகள் துணை நிற்குமேயானால் படிக்கவும் எழுதவும் தவறுவதில்லை. இன்று மாமல்லபுரத்தில் தங்களின் ''தெய்வ மாக்கவி''யை முழுமையும் படித்துவிட்டு, இந்த மடலையும் தங்களுக்கு எழுதுகிறேன். கடல் அலைகள் இசை முழக்கும் இனிய சூழ்நிலை, பழம் பெரும் பல்லவ வேந்தர்களை எண்ணி எண்ணி, வரலாற்றுக் காலத்திற்குப் பறந்து செல்லும் சிந்தனை வான ஊர்தி! இந்தப் பின்னணியில் 'தெய்வ மாக்கவி' எனக்குக் கரும்பின் சாறுகக் கிடைத்தது. முதல் கட்டுரையில், கம்பனுக்கும் வான்மீகிக்கும் உள்ள வேறுபாடுகளை; ஏன்; முரண்பாடுகளை விளக்கியிருக்கும் திறனை, மிக ஆழமாகப் பாராட்டத்தான் வேண்டும். காட்டுக்குச் செல்லும் இராமனுடன், சீதை உடன் புறப்படும் காட்சியில், இராமனைப் போல சீதை மரவுரி தரித்துக் கொள்ள மறுக்கிறுள். பொன்னுபரணம் பூண்ட மேனியில் மரவுரியா எனப் புலம்புகிறுள். கைகேயி, மரவுரி அணியுமாறு சீதையை வற்புறுத்துகிறுள். கடைசியில் இராமனே, சீதைக்கு மரவுரியைப் போர்த்துவிடுகிறுன். இது வால்மீகியின் சீதை. கம்பனின் சீதையோ, யாரும் சொல்லாமலே, தானே மரவுரி தரித்துக் கொண்டு, இராமனுடன் காட்டுக்குச் செல்லத் துடிக்கிறுள். இந்த வேறுபாட்டை, ஏன்; பண்பாட்டைப் பொறுத்த வரையில் முரண்பாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறீர்கள்.

இப்படியே வான்மீகி இராமாயணத்துக்கும், கம்ப இராமாயணத்துக்குமுள்ள வேறுபாடு, முரண்பாடுகளைத் தங்களைப் போன்றவர்கள் எடுத்து விளக்கிஞல், மூல நூலான வான்மீகியின் கதாபாத்திரங்களுக்குத் தெய்வீக முலாம் பூசி, மூடநம்பிக்கையை வளர்ப்பவர்களுக்கு எதிரே அகழ் வெட்டியது போலாகும். இராமாயணம், கதைதான் என்பதும்—வால்மீகியின் கதை ஆரியப் பண்பாட்டையும், கம்பனின் கதை திராவிடப் பண்பாட்டையும் — பின்னணியாகக் கொண்டது என்பதும் தெளிவாகும். கதையின் இழை அறுந்து போகாமல் இருக்க, கம்பன், சில இடங்களில் வான்மீகியின் கதாபாத்திரக் குணநிலைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்ததையும்,



அதனால், அந்தப் பண்பாடுகளும் சில இடங்களில் தலைகாட்டியிருப்பதையும், நடுநிலையாளர் மறுத்திடத் துணிந்திடார். எப்படியோ; தங்களின் முதற் கட்டுரை, இக்காலத்திற்கேற்ற வகையில், அந்த உண்மைகளை விளக்க, ஒரு தொடக்க விழா ஆற்றியிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

புத்தகம் முழுமையும் படித்து விட்டு, முதல் கட்டுரை பற்றி மட்டுமே குறிப்பிட்டதற்குக் காரணம்; தாங்கள் எனக்குத் தீட்டியுள்ள மடலிலும் அதைத்தானே கோடிட்டுக் காட்டியுள்ளீர்கள்.

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியும் சிறந்த தமிழ்ச் சான்றேரும் ஆகிய திரு. எஸ். மகராஜன் அவர்களின் தொகுப்புநூல் ஒன்று தெய்வ மாக்கவி என்ற தலைப்பில் அண்மையில் வெளியிடப்பெற்றுள்ளது.

இந்த நூலின் படி ஒன்றினை நீதிபதி அவர்கள் நமது முதல்வர் கலைஞர் அவர்களுக்குத் தந்து படித்துப் பார்க்குமாறு அன்புடன் கேட்டிருந்தார்கள்.

நூல் முழுவதையும் படித்ததற்குச் சில சான்றுகள் இதோ நிறுத்துகிறேன்.

பேதைகளின் நட்பு இனியது: ஏனெனில் அவர்கள் பிரியும் போது நமக்குத் துன்ப துயரம் ஏற்படுவதில்லை என்ற கருத்தைக் கூறும் குறளுக்குத் தாங்கள் எழுதியுள்ள விரிவுரை, எனக்கு எத்தனையோ உணர்வுகளை எழுப்பியது. நூலை ஊன்றிப் படித்தேன் என்பதற்கு எடுத்துக் காட்டாகவும், இளமை முதல், எழுத்துப் பிழை திருத்துவதில் பழக்கமுடையவன் என்ற நிலையிலும் 98-ஆம் பக்கத்தில், ''அழகிய மலை மீது உன்னை மேயவிட்டால், சக்தி நிறைந்த கருப்பு நிலத்தில் மேயப் போகிருயே!'' என்ற வாக்கியத்தில், ''சகதி'' என்பது ''சக்தி'' என்று அச்சியப் பெற்று, பொருளையே மாற்றிவிடுகிறது. அது தங்கள் தவறல்ல! ''புரூஃப்'' பார்த்தவர் குறை

முப்பது ஆண்டுகள் கழித்து, பழைய பிட்டுத் தோப்புத் தெருவைத் தாங்கள் மதுரையில் கண்டபோது, அந்தக் காலத்தில் பெரிதாகத் தெரிந்த தெருவும், வீடுகளும் இப்போது சிறியவைகளாகத் தெரிவதற்குக் காரணம் கூறியிருக்கிறீர்களே; அது மிகவும் சரி! நான் பிறந்த திருக்குவளை கிராமம், அப்போது மிகப் பெரிதாக எனக்கு இருந்தது. இப்போது பிட்டுத்தோப்பு போலத்தான்! நான் திருக்குவளைக்கு நீண்ட காலம் கழித்துச் சென்றபோது, தாங்கள் கொண்ட இதே உணர்ச்சியைத் தான் நண்பர்களிடம் குறிப்பிட்டேன்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பற்றிய குறிப்புக்களும், மொழி பெயர்ப்பும் முதல் தரம். 80-ஆம் பக்கத்தில்,

''மன்றல் கமழ்குழல்சேர் வள்ளிக்கு
வாய்த்தானை''

என்ற வெண்பாவை ரசிகமணி டி.கே.சி.

''மன்றல் குழல்கமழும் வள்ளிக்கு
வாய்த்தவனை''

என்று திருத்தியதாகச் சொன்னீர்கள். பிறகு 200-ஆம் பக்கத்தில் ;

''மன்றல் குழல்கமழும் வள்ளிக்கு
நாயகனை''

என்று பாடல் திருத்தப்பட்டிருக்கிறது. அதை யார் திருத்தியதோ?

பொதுவாகத் தங்களின் 'தெய்வ மாக்கவி' தமிழில் ஒரு தேமாங்கனி! என் வாழ்த்துக்கள்! முதல்வர்—நீதிபதி என்ற முறையிலே அல்ல! எழுத்தாளர்கள் என்ற நிலையில் மனத்தில் எழுந்ததை எழுதினேன். நினைத்ததை எழுதுவது தவறல்ல! நினைத்ததையெல்லாம் எழுதுவது தானே தவறு!

அன்பு மறவாத,
மு. கருணாநிதி.

அத்துடன் நீதிபதி அவர்கள் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்கள். அந்நூலினைப் பார்த்தபின் முதல்வர் அவர்கள் நீதிபதி அவர்களுக்கு மறுமொழிக்கடிதம் ஒன்றினை வரைந்திருந்தார்கள். அதற்கு நன்றி பாராட்டி மீண்டும் நீதிபதி அவர்கள் முடங்கல் ஒன்று எழுதியுள்ளார்கள்.

அவை மூன்றுமே இலக்கியச் செறிவுடன் காணப்பட்டதால் அவற்றினை வெளியிட்டுப் பெருமை கொள்கிறேம். — ஆசிரியர்

சென்னை,
7—11—'74.

பேரன்புமிக்க
கலைஞர் அவர்களுக்கு,

தாங்கள் கைப்பட எழுதிய ஒன்பது பக்கக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். கடிதம் என்று அதைச் சொல்லுவது! ஓர் அரிய மரகதப் பதக்கம் அல்லவா எனக்குக் கிடைத்து விட்டது! அதிலுள்ள அரிய வேலைப்பாடுகளை உற்றுற்றுப் பார்த்து எக்களிப்பும் வியப்பும் விம்மிதமும் அடைந்தேன்.

(1) எக்களிப்புக்குக் காரணம் :

கடல் அலைகள் முழவதிர, வரலாற்றலைகள் இசை பரப்ப, மாமல்லையின் இன்பச் சூழ்நிலையில் தாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நல்லோரையில், என் நூல் ''தெய்வ மாக்கவி''யைப் படித்துச் சுவைத்து, ''அது எனக்குக் கரும்பின் சாறுகக் கிடைத்தது'', ''அது தமிழில் ஒரு தேமாங்கனி'' என்று மன நிறைவோடு பாராட்டியிருக்கிறீர்களே, நோபெல் பரிசு கிடைத்தால் கூட எனக்கு இவ்வளவு எக்களிப்பு ஏற்பட்டிருக்காது.





(2) வியப்புக்குக் காரணம் :

கவித்துவம் நிறைந்து கனிந்த இதயமும் அஞ்சத்தக்க அறிவுக் கூர்மையும் சதா விழிப்பு நிலையிலிருக்கும் நினைவாற்றலும், மறந்தும் குறிக்கோளை விட்டு நழுவாத நிதானமும் — இத்தகைய அபூர்வமான தத்துவங்கள் இசைந்து தங்களிடம் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை நினைக்கும் போது உண்டாகும் வியப்பு.

''80-ஆம் பக்கத்தில் உள்ள பாட்டில் ''வள்ளிக்கு வாய்த்தவனை'' என்றிருக்கிறது. ஆனல் 200-ஆம் பக்கத்தில் ''வள்ளிக்கு நாயகனை'' என்று திருத்தப்பட்டிருக்கிறதே, அதை யார் திருத்தியதோ?'' என்று தாங்கள் கேட்டிருக்கும் வினயமான கேள்வியும் அக்கேள்வி

பின் இறுதியில் ஒலிக்கும் ஒகாரமும் என்னைத் தூக்கி வாரிப் போட்டு விட்டன. இவ்வளவு எச்சரிக்கையோடு ஊன்றிப் படித்து நூலில் உள்ள பிழைகளை வேறொருவரும் இதுவரையில் எடுத்துக் காட்டவில்லை. மோதிரக் கையினால் குட்டுப் படுவதில் எவ்வளவு இன்பம் இருக்கிறது என்பதையும் கண்டு கொண்டேன். 'சகதி' 'சக்தி' யாக மாறிய விபரீதத்தையும் இங்கிதமாக எடுத்துக் காட்டி விட்டீர்கள். ''நூல் முழுவதையும் பார்த்ததற்குச் சில சாட்சிகளை இதோ நிறுத்துகிறேன்'' என்று சொல்லி, மணி மணியான வாய்மை நிறைந்த பல சாட்சிகளைத் தங்கள் கடிதத்தில் அணி வகுத்து நிறுத்தி விட்டீர்கள். அப்பாவி நீதிபதி, சாட்சிகளை வியந்து, வியந்து ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்!

(3) கடிதத்தால் விளைந்த விம்மிதத்துக்குக் காரணம், பொதுவாக ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் கவிஞர்களையும், கலைஞர்களையும் ஆதரிப்பார்களேயொழிய, அவர்களே கவிஞர்களாகவும் கலைஞர்களாகவும் திகழ்ந்ததில்லை. விதி விலக்காக ஒரு தமிழ் மன்னன் கவி பாடுந் திறமையில் தமிழ்க் கவிஞர்களையும் மிஞ்சி நின்றான். இந்த அதிசயத்தைக் கண்டு விம்மிதம் கொண்ட ஒரு கவிஞர்,

''மாணிக்கம் தித்திக்கில் என்னாகும்
மற்ற மதுரங்களே''

என்று பாடினார்.

ஒளி வீச்சினால் அழகு செய்ய வேண்டியது மாணிக்கத்தின் வேலை; நாவுக்குத் தித்திப்பை ஊட்ட வேண்டியது கல்கண்டின் வேலை. ஆனால் தாங்களோ இரட்டை வேலையையும் செய்யும் அற்புதச் சித்தராக இருக்கிறீர்கள்.

மாணிக்கம் தித்திக்கில் என்னாகும்
மற்ற மதுரங்களே

என்று சொல்லித் தங்களுக்கு, எழுத்தாளன் என்ற முறையில் அஞ்சலி செலுத்தி, என் விம்மிதத்தையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,
எஸ். மகராஜன்.

குறிப்பு : நான் எழுதிய 'ஒலிச் செல்வம்' என்ற நூலையும், அண்மையில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் நான் நிகழ்த்திய ''The Inner meaning of Human History'' என்ற பேச்சுக்களையும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். ஓய்வு கிடைக்கும் நேரம் எப்பொழுதாவது அவற்றைப் புரட்டிப் பார்க்கலாமல்லவா?

அன்பன்,
எஸ். மகராஜன்.


உயர்தர வட்டி சம்பாதியுங்கள் !

**BOBL**-லில் உங்கள் சேமிப்பு மூலம்

1—4—74 முதல் வைப்புத் தொகைகளுக்கு வட்டி விகிதம் :

| வைப்புத் தொகை பிரிவுகள் | | ஆண்டுக்கு வட்டி விகிதம் |
|---|---|---|
| சேமிப்புக் கணக்கு | | |
| டெபாசிட் 15 முதல் 45 நாட்கள் வரை | ... | 5½% |
| டெபாசிட் 46 முதல் 90 நாட்கள் வரை | ... | 3% |
| டெபாசிட் 91 முதல் 6 மாதங்கள் வரை | ... | 3½% |
| டெபாசிட் 6 மாதம் முதல் 9 மாதங்கள் வரை | ... | 5½% |
| டெபாசிட் 9 மாதம் முதல் 1 ஆண்டு வரை | ... | 6% |
| டெபாசிட் 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள் வரை | ... | 6¾% |
| டெபாசிட் 2 ஆண்டுகள் முதல் 3 ஆண்டுகள் வரை | ... | 7¼% |
| டெபாசிட் 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை | ... | 8% |
| 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட டெபாசிட்டர்களுக்கு | ... | 8½% |

அங்கீகரிக்கப்பட்ட மத, அறநிலைய, கல்வி நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ½ சதவிகிதம் வட்டி கூடுதலாக அளிக்கப்படும்.

ஸ்ரீ பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : ஆக்ஸ்போர்டு ஹவுஸ், (சபையர் எதிரில்)
மவுண்ட் ரோடு, சென்னை-600006.
தொலைபேசி எண் : 812983


# கொடி நாள்

முதலாவது உலகப் போருக்குப் பிறகு, ''போர் நிறுத்த நாள்'' ஆண்டுதோறும் நவம்பர் திங்கள் 11-ஆம் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. ''வீர மரணம் எய்தியோர் நாள்'' எனவும் இது கொண்டாடப்படுகிறது. ஏனெனில், இந்த நாளன்று அடையாளமாக வண்ணப் பூக்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, அதில் வசூலிக்கப்பட்ட தொகை, போர் வீரர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் பயன்படுத்தப்பட்டது. நாடு விடுதலை பெற்ற நாளிலிருந்து, வீர மரணம் எய்தியோரைக் கௌரவிக்கும் வகையிலும், துணிவுள்ள செயல் வீரர்களுக்கு வணக்கம் தெரிவிக்கவும், போர்க்கள வீரர்களுடன் கூறுரை மேற்கொள்ளவும் உரிய நாளாக ஆண்டு தோறும் டிசம்பர் திங்கள் 7-ஆம் நாளைக் 'கொடி நாள்' என நம் நாடு கொண்டாடி வருகிறது.

நாட்டின் பாதுகாப்பையும் தன்மானத்தையும் கட்டிக் காப்பதற்காக, இன்றையப் படை வீரர்களின் தொண்டுகளையும் முன்னாள் படை வீரர்களின் தொண்டுகளையும் நினைவு கூர்வதற்காகக் கொடி நாள் கொண்டாடப்படுகிறது. நேருக்கு நேர் எதிர்த்து நின்று வீரப் போரிட்டு வீர மரணம் எய்திய அஞ்சா நெஞ்சு படைத்த வீரர்களின் குடும்பத்தினருக்கும், ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரருக்கும் போரில் விழுப்புண் பெற்று ஊனமுற்றோருக்கும் உதவி செய்வதை மக்கள் தமது கடமையாகக் கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் நினைவில் நிறுத்தவே ஆண்டுதோறும் ''கொடி நாள்'' கொண்டாடப்படுகிறது.

நமது முப்படைகளிலுள்ள போர் வீரர்கள், அவர்களது போர்ப் பணியில் பெரும்பான்மையான காலத்தில் தங்களது குடும்பத்தாரிடமிருந்து பிரிக்கப்பட்டு, தொலை தூரப் பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். போரில்லாத சாதாரண சமயங்களில் இந்தப் பிரிவினால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. ஆகவே, தேசியக் கடமையும், குடும்பப் பொறுப்பும் பாதிக்கப்படாத வகையில் சேம நல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே நமக்கிருப்பதைப் போன்ற பாதுகாப்புத் தொண்டர் பணிக்கு எந்த அளவுக்கு நாடு முழுவதும் ஆதரவு தருகிறதோ அந்த அளவுக்கு அப்பணி வெற்றி பெறும். சிறந்த கட்டுப்பாட்டு அமைதியைப் படைகளில் பேணி வருவதற்கு இது சிறந்ததொரு வழியாகும். நமது நாட்டைப் பாதுகாக்கின்ற படைவீரர்களின் குடும்ப நலனைப் பேணிக் காப்பது நாட்டின் பொறுப்பாகும்.

முப்படையினரும் வீரியம் கெடாமல் இளமை முறுக்கோடு ஆற்றலுடன் விளங்கும் வகையில், ஆண்டுதோறும் பெருவாரியான நபர்கள் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்படுவோரில் பெரும்பான்மையினர் 30 வயதுக்கும் குறைந்தவர்கள். ஒரு படை வீரன் இளம் வயதிலேயே இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதால் அவரது ஒப்பரவு நிபந்தனைகளின்படி, வெற்றி வாகை கொண்ட பத்தாண்டுக் காலம் பணி புரிகிறார். அதன் பிறகு, அவர் தனிச் சேமப் படைக்கு மாற்றப்படுகிறார்.



'மாண்புமிகு
பிற்பட்டோர் நல அமைச்சர்
என். வி. நடராசன்

ஒழுக்க உணர்வும், நல்ல உடற்கட்டும், சுறுசுறுப்புடைய இத்தகைய போர் வீரர்கள், நாட்டின் உடைமையாகவே கருதப்படுதல் வேண்டும். நாட்டு நலன் கருதி, பல்வேறு தொழிலில் இவர்கள் நியமிக்கப்பட்டுப் பயன்மிக்க குடி மக்களாக விளங்குவதற்கு முழு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் பணியாற்றும் பொழுதே பெரும்பாலும் தங்கள் குடும்பத்தாரிடமிருந்து பிரிந்துவாழ்கின்றனர். நாட்டின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களின் முழுப் பலனையும் அவர்கள் பெற இயலுவதில்லை.

இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட படை வீரர்களில் 90 சதவீதத்தினர் கிராமப்புற வேளாண் குடியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நிலம் அளித்து வேளாண்மை செய்வதற்காக இவர்களைக் குடியமர்த்தும் திட்டம் இதுகாறும் உதவி செய்து வந்துள்ளது. நிலம் கிடைப்பது இப்போது அரிதாக இருப்பதால் இனி இது சாத்தியமில்லை. மத்திய அரசும், மாநில அரசுகளும் தத்தம் துறைகளில் இயன்ற வரை காலி இடங்களை இவர்களுக்காக ஒதுக்கியுள்ளன. எனினும், அரசுத் துறைகளில் அவர்களுக்கு அளிக்கப்படும் இந்த வேலை வாய்ப்புகள் போதுமானதன்று. எனவே, அரசு நிறுவனங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன், அவர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க, அவர்களுக்கு உதவும் வகையில் சிறப்புத் தொழில் சார்ந்த பயிற்சி, தொழிற் கல்விகள், தொழில் தொடங்குவதற்கான திட்டங்கள் உட்பட அவர்களின் புது வாழ்வுக்கெனப் பல வகை நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. நாடு, தொழில் துறையில் வளம் பெற வேண்டுமானால் சொந்தமாகத்தொழில் தொடங்கி நடத்தக் கூடியவர்களும் சிறு தொழில் முனைவர்களும் முன் வர வேண்டும். முன்னாள் படை வீரர்களுக்கு, அவர்களது திறமையை வளர்த்துக்கொள்ளச் சிறு உதவியும் ஓரளவு நிதி உதவியும் அளித்தால், நாட்டின் தொழில் அமைப்பில் உள்ள இடைவெளியை அவர்களால் நிரப்ப முடியும் என்பது திண்ணம்.

முன்னாள் படை வீரர்களின் நலனுக்கான தேவைகள் பலப் பல. அரசின் வருமானத்தைக் கொண்டு மட்டும் இவை

அனைத்தையும் சரிக் கட்ட முடியாது. எனவே, முன்னாள் படை வீரர்களுக்காகவும் அவர்களது குடும்பத்தினருக்காகவும் ஆற்றப்படுகின்ற நலப் பணிகள், நீண்ட நாள் தொடர்ந்து நடைபெறுமாறும் தமிழ்நாட்டில் உள்ள முன்னாள் படை வீரர்களின் பல்வேறு தேவைகளை ஈடுசெய்கின்ற தமிழ்நாடு முன்னாள் படை வீரர்களின் நல நிதி வளர்ந்திடவும் வேண்டுமென இந்த நாளில் பொது மக்களுக்கு நினைவூட்டப்படுகிறது. படை வீரர்களின் துயரைத் துடைக்க அரசு அமைப்புகள் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும், ஒவ்வோர் ஆண்டும் தாய் நாட்டுக் காவல் பணியிலிருந்து வீடு திரும்புகின்ற ஏராளமான படை வீரர்களைக் குடியமர்த்தி அவர்களுக்கும் புது வாழ்வு அளிக்கப் பெரும் அளவில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவற்றுக்கெல்லாம், முன்னாள் படை வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளோருக்கும் உதவி அளிப்பதற்கு மட்டுமல்லாது போரில் ஊனமுற்றோருக்குப் புதுவாழ்வு அளிப்பதற்கும் தற்போது பணி புரிந்து வருகின்ற படை வீரர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் போதிய நிதி வசதி இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

கொடி நாள், நமது வீரர்களின் நலனில் நமக்குள்ள குறைவில்லாத ஈடுபாட்டை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு அளிக்கிறது. முன்னாள் படை வீரர்களின் நலனிலும், நல்வாழ்விலும் நமக்குள்ள அக்கறைக்கு அடையாளமாக வீரர்களுக்கு நமது உள்ளத் தெளிவான வணக்கத்தைத் தெரிவிக்கும் நீண்ட நாள் மரபிற்கு ஏற்ப, முன்னாள் படை வீரர்களுக்கு ஆதரவு நல்கி, 'கொடி நாள்' விழா வெற்றிகரமாக நடைபெறுவதற்குத் தங்களது முழு ஒத்துழைப்பையும் அளிக்குமாறு தாராள மனப்பான்மையும் அறவுள்ளமும் படைத்த அன்புசால் தமிழ்நாட்டு மக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**(5-12-'74ல் சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை.)**



**துப்பறியும் நாய்ப் படை!**

தமிழகக் காவல்துறையின் ஓர் அங்கமாக விளங்குவது துப்பறியும் நாய்ப்படை என்பதை நாமறிவோம். இன்று சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் துப்பறியும் நாய்ப் படை பிரிவுகள் உள்ளன. இவை மிகச் சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. திருச்சியிலும் துப்பறியும் நாய்ப் படைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாய்ப்பட்டி ஒன்று இப்போது அங்கே கட்டப்பட்டு வருகிறது. இது கட்டி முடிந்து நாய்கள் தருவிக்கப்பட்ட பிறகு இப்பிரிவு செயல்படும். துப்பறியும் நாய்ப்படை 1972-இல் 359 வழக்குகளிலும், 1973-இல் 484 வழக்குகளிலும் பணியாற்றியுள்ளது.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண். 151.

**சேலம்-1.**

**தொலைபேசி எண் 2402**

**கிளைகள் :**— நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம் ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 323 லட்சம்** **நடைமுறை மூலதனம் 1690 லட்சம்**

**வட்டி விகித அட்டவணை 23-7-'74 தேதி முதல்**

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| | ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | 3½% |
| சேவிங்ஸ் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | 3½% |
| பிக்செட் டெபாசிட்டுகள் : | ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு | |
| | 1. 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் | 5½% |
| | 2. 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள் ... | 6% |
| | 3. 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள் ... | 7% |
| | 4. 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள். | 8% |
| | 5. 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள். | 9% |
| | 6. ஐந்து வருடங்களுக்கு மேல் ... | 10% |

நடப்புக் கணக்கு ½% சேமிப்பு கணக்கு 5%

ரூ. 5,000-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க!

எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
தலைவர்




# கலை, கைத் தொழில் மாணவர்களின் கைவண்ணம்

உலக ஓவியத்தை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர், கலை வல்லுநர்கள். அவை மேற்கத்திய ஓவியம் (Western Art) கிழக்கத்திய ஓவியம் (Eastern Art) ஆகும். மேற்கத்திய ஓவியம் நிழலொளிகளாலேயே (Light and Shading) வரையப்பட்டிருக்கும். கிழக்கத்திய ஓவியம் வெளிக்கோடுகளாலேயே (Outline Drawings) வரையப்பட்டிருக்கும். நம்நாட்டு ஓவியம் கிழக்கத்திய ஓவியத்தைச் சார்ந்தது. முதன் முதலில் மொழியை, வரிவடிவில் காட்ட முயன்றவர்கள் ஓவியங்கள் மூலந்தான் காட்டியிருக்கிறார்கள்.

ராஜா ரவிவர்மாவின் ஓவியத்தில் காணப்பெற்ற தனிச் சிறப்பு, இருந்ததை இருந்தபடியே வரைவது (Natural Art or Model Art) ஆகும். ஆனால் சென்னை ஓவியக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய திரு டி.பி. ராய் சௌத்ரி தம்முடைய ஓவியத்தில் ஒரு புதுமையினை, அதாவது நேரில் காணாமல் கற்பனையில் வரையக்கூடிய ஓவியங்களையும் (Memory Art) நவீன ஓவியத்தையும் வரைந்து காட்டினார்.

இத்தகைய வகையில் தம்முடைய முன்னாள் பேராசிரியரின் பாணியைக் கையாண்டு தமிழகத்திலே முதன் முதலில் சென்னையிலுள்ள அரசினர் கலைத்தொழில் கல்லூரியைச் சார்ந்த சில மாணவ மாணவிகள் தங்களது தனித்த உழைப்பாலும், தங்களின் சொந்த முயற்சியாலும் துணிகளில் புதிய வண்ண ஓவியங்கள் அமைப்பது பற்றிய பொருட்காட்சி ஒன்றினை அண்மையில் சென்னையில் நடத்திக் காட்டினர்.

இச்சிறப்புமிகு கண்காட்சி சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டடத்தில் நடைபெற்றது. இதனை 2-11-1974 ஆம் நாளன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் மாதவன் அவர்கள் துவக்கி வைத்துப் பெருமை சேர்த்தார்கள். ஒரு வார காலம் நடைபெற்ற இக் கண்காட்சியினை ஏராளமான மக்கள் கண்டு களித்துப் பாராட்டு பல வழங்கியுள்ளனர்.

இடம் பெற்ற வகைகளில் டிசைன்கள், பிரிண்டிங்குகள் என இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளனர்.

டிசைன் வகைகள்: ஜிக்சாக் டிசைன் (Half step), வீவிங் டிசைன் (Zackad), செக்கு டிசைன் (Checked), புல்ஸ்டெப் டிசைன் (Full step).

பிரிண்டிங் வகைகள்: கம் பேஸ்ட் பிரிண்ட் (Gum past print), டைட் கிரவுண்ட் பிரிண்ட் (Dyed Ground print) ஸ்கிரீன் பிரிண்ட் (Screen print) கண்காட்சியில் ஏறத்தாழ 150-க்கு மேற்பட்ட ஓவியவகைகள் (டிசைன்கள்) இடம் பெற்றன. இவற்றில் பல டிசைன்களை கைத்தறி இலாகாவினரும் மற்ற நூற்பாலை நிருவாகத்தினரும் உரிமை பெற்றது பாராட்டத் தக்கதாகும்.

இத்தகு சிறப்புக்களைப் பெற்ற இந்தக் கல்லூரியில் 250-க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பயில்கின்றனர். கல்லூரியில் சேருவதற்குரிய விளம்பரங்கள் ஜூன் மாதத்தில் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்படும். சேருவதற்கான கல்வித் தகுதி பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு வெற்றி





பெற்றிருத்தல் வேண்டும். எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு மூலமாக மாணவ,மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்குப் பெயிண்டிங், டெக்ஸ்டைல், வுட்வொர்க், செராமிக்ஸ், மெட்டல்வொர்க் முதலிய வைகளிலிருந்து கேள்வித்தாள்கள் அமையும். இத்தேர்வு நான்கு நாட்கள் வரை நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஐந்தாண்டு கல்வி பயிலவேண்டும். இவர்களுக்குரிய பாடப் பகுதிகள் கீழ்க்கண்ட முறையில் பிரிக்கப்பட்டுள்ளன.

முக்கியப் பாடங்கள்: (Main subjects)

1. வணிகவியல் (Commercial)
2. ஓவிய இயல் (Painting)
3. சிற்ப இயல் (Sculpture)

துணைப்பாடங்கள் (Ancillary Subjects)

1. நெசவுச் சார்வியல் (Textile)
2. மண்விணை இயல் (Ceramic)
3. மர(வேலை) நுட்பம் (Wood work)
4. உலோக (வேலை) நுட்பம் (Metal work)

இயேசுவையும் அவர்தம் கருத்துரைகளையும் ஓவியத்தில் நிரந்தரமாக்கிய மைக்கேல் ஏஞ்சலோ (Michael Angelo) லியனார்டோ டாவின்சி (Leonardo Davincy) மற்றும் மொகலாய அரசர்களையும் அவர்தம் வாழ்க்கை வரலாறுகளையும் சித்திரமாய்ச் சிறப்பித்த லாகூர் ரஹீமான் சுக்தா ஆகியோர் எய்திய புகழைப்போன்று இங்கு வண்ணத் துணிகளில் கைவண்ணம் காட்டிடும் மாணவர்கள் திறன் காலத்தை வென்று காவியம் பாடும் என்று நம்பிக்கை சுடர்விடுகின்றது.

—மருதம்,

## கல்லூரி மாணவிகள் விளையாட்டுப் போட்டி

மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவிகள் விளையாட்டுப் போட்டி, திறந்த வெளி அரங்கில முதல் முறையாக நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கில் நவம்பர் முதல் வாரத்தில் இரு நாட்கள் நடைபெற்றன. இப்போட்டியில் 22 கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 200 மாணவியர் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் இரும்பு வட்டு எறிதல், 100 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம், 400 மீட்டர் கொடி ஓட்டம், நீளம் தாண்டுதல போன்றவை நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் மதுரையைச் சார்ந்த லேடி டோக் மீமாட்டிக கல்லூரி மாணவிகள் பங்குபெற்று 31 புள்ளிகள் எடுதது்ப் பல்கலைக் கழகச் சுழற் கேடயத்தைப் பெற்றது.

இதுவரை கல்லூரி நான்கு சுவர்களின் உள்ளே விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவிகள் இன்று திறந்தவெளி அரங்கில் தங்கள் திறமைகளைக் காட்டி வருங்காலத தமிழகத்தை உருவாக்கும் திறமை எங்களுக்கும் உண்டு என்பதையும் அவர்கள் வெளிக் காட்டியுள்ளனர்.



# குழாய் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்!



ஜி. அப்துல் பஷீர்

இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை

மக்ரிபு (மாலை) நேரம், ஊரெல்லாம், கோலாகலமாக மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தது. காணாததைக் காணப் போவதைப்போல், ஒரே மகிழ்ச்சி... ஆனல், மெஹர்பான் ஏனோ அந்த மகிழ்ச்சிக் கடலில் கலக்கவில்லை.

பள்ளிக்கூடத்தை விட்டு வந்த, மூத்தமகன் ஜலில் புத்தகத்தை வைத்துவிட்டுப் போனவன், இன்னும் வீடு திரும்பவில்லை. மக்ரிபு பாங்கு கேட்டு, மெஹர்பான் தொழுகையை முடித்து வெளியில் வந்தாள். தெருவெல்லாம் என்றுமில்லாத வெளிச்சம். அவள் மனத்தில் வெளிச்சமில்லை.

"நம்ம ஊருக்கு கரண்ட் வந்து இன்னிக்கி தெருவெல்லாம் விளக்கு எரியுது. ஒரே கொண்டாட்டமா இருக்கு, அல்லா.... இன்னிக்கு நம்ம ஊருக்கு வெளிச்சத்தைக் கொடுத்தான்" என்று சொல்லிக்கொண்டே வந்தாள் பாட்டி ஜன்னத்துகனி. மெஹர்பானுக்கு தூரத்து உறவு. வந்தவள்..மெஹர்பானைப் பார்த்து, "எல்லோரும் சந்தோஷமா இருக்காங்க, நீ மட்டும் ஏன் கவலையா இருக்கே. என் ஆயுள்லே தெருவிளக்கு வருமான்னு இருந்தேன். வந்துட்டது. நம் சர்க்காருக்கு அல்லா நீண்ட ஹயாத் (ஆயுள்) கொடுக்கணும்" என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தாள்.

இன்றென்ன, சில நாட்களுக்கு முன் ஊரில் கப்பி ரோடு போட்டார்கள். ஒரு நாள் - நிலப்பட்டா கொடுத்தார்கள்; அதில் மெஹர்பானுடைய கணவர் வகாபுக்கும் நிலம் கிடைத்தது. அப்பொழுதுகூட அவளுக்கு மகிழ்ச்சி இல்லை. "என்ன இருந்தென்ன தண்ணீருக்கு ஆத்தங்கரை கிணத்துக்கு அரகல்லு சேத்துலே,கல்லுலே, முள்ளுலே போகணுமே!" என்ற கவலை தான் அவளுக்கு.

"அம்மா" என்று வந்து இடித்தான் கலில். அவனுக்கு இரண்டரை வயது. மூன்றாவது குழந்தை அவன். எதற்குக் கூப்பிடுகிருன் என்று அவளுக்குத்தான் தெரியும். அவன் அழ ஆரம்பித்தால் முடிக்க மூன்றுநாள் ஆகும். வெள்ளம் வருமுன் அணைகட்டுவதற்கு எழுந்தாள்; ஒரு தட்டுலே சோறு கொண்டு வந்தாள். கலிலுக்குச் சோறூட்டுவது ஒரு சாதாரண வேலை இல்லை. ஆட்டம் ஆடி, பாட்டுப்பாடி சோறூட்டினுள் மெஹர்பான்.

ஜமிலா ஆறுவயது மகள் "அம்மா பசிக்குதுமா" என்ற படி வீட்டிற்கு வந்தாள். குழந்தை கலிலைப் பாட்டியிடம் கொடுத்துவிட்டு, மகளுக்கு ஒரு தட்டிலே சோறு போட்டுக் கொடுத்தாள். இன்னும் ஜலிலைக் காணோம். ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டமா இருக்கும்போது, இவன் என்ன விதிவிலக்கா? இவனுக்கு விளையாட நாலு பிள்ளைகள் கிடைத்தால் போதும், வீட்டுக்கே வரமாட்டான்!

சுமார் எட்டுமணி இருக்கும்; வந்தான் ஜலில்.....

"இவ்வள நேரம் எங்கடா போய் இருந்தே...உக்காந்து படிக்கணுனுகூட இல்லாம?"

"இல்லேமா"

"என்னடா இல்லேமா"

"ஒன்னுமில்லேமா, ஊரெல்லாம் கரண்டு விளக்குபோட்டு இருக்காங்கமா, நீ பார்க்கலே"

"ஆமா...விளக்கு போட்டா சரியா போச்சா"

"வேற என்னமா போடணும்"

"நான் சொன்னு நீ செஞ்சிடுவியாக்கும்..... மந்திரிங்க மாதிரி கேட்கறியே?"

"ஆமா மெஹர்பான், இப்பொ எல்லாம் அதிகாரிங்க ஊருரா வந்து குறையெக் கேட்டு, அங்கேயே சரிபண்ணுருங்க என்று தட்டேட்டுத் தம்பி சொல்லிச்சி" என்றுள் பாட்டி.

"என்ன இருந்தென்ன இந்த ஊர்லே ஒரு குழாய் இருக்கா?" என்றுள் மெஹர்பான்.

"அதுகூட வந்துடும்மா" என்றுன் ஜலில்.

"என்னமோ போ, என்னைக் கேட்டா குழாய் இல்லா ஊர்லே குடி இருக்க வேண்டாம்னு சொல்லுவேன்" என்று சொல்லிக் கொண்டே ஜலிலுக்குச் சோறு போடப் போனுள் மெஹர்பான். ஜலிலுக்குச் சோறு போட்டுக் கொடுத்திட்டு வந்து பாட்டி பக்கத்தில் அமர்ந்தாள் ஓய்ந்து. இத்துடன் அவள் ஓய்ந்த பாடில்லை. இன்னும் "அவர்" வந்து பசியாறலே. பாட்டியும், மெஹர்பானும் கடைசியாக முடித்து வந்து படுக்கப் பாதி இரவு ஆகிவிடும்.

"இஷா" பாங்கும் சொல்லி ஆய்விட்டது. வகாப் இன்னும் வரவில்லை. இஷா தொழுது கொள்ளலாம் என்றுல் கொண்டிருக்கும் தொழுது "அவர்" வந்துவிட்டால், அவர் பசி பொறுக்க மாட்டார். ஆகையால் தினமும் அவர் வந்து சாப்பிட்ட போது



பின்தான் அவள் இஷா தொழுவது வழக்கம்.

இஷா தொழுது கொள்ளச் சென்ருள் பாட்டி—

மெஹர்பான் மனத்தில் பழைய நினைவுகள் நிழலாடின: முன்பெல்லாம் பாட்டி தொழுவதில்லை; சிறுகச் சிறுகச் சொல்லித் தொழுகையாளியாளுள்; இப்பொழுது ஒரு வேளைத் தொழுகையும் தவறுவதில்லை. ''அவரை'' மாற்ற முடிவதில்லை; அவருக்குத் தொழுகை எட்டிக்காயாக இருக்கிறது.

பிள்ளைகளும் தூங்கிவிட்டன. பாட்டியும், இஷா முடித்துவிட்டாள்; ஆனல் வகாப் இன்னும் வரவில்லை. மெஹர்பான் மறு நாள் காலை நாலு மணிக்கு முன் எழுந்தால்தான் அன்றையப் பொழுது ஓடும். இப்படியாக இயந்திர வாழ்க்கையாகி விட்டது, அவளுக்கு. 'பெண்ணைப் பிறந்தவளுக்கு எல்லாம் பட்டு தானே ஆகவேண்டும்? ஆண்களுக்கென்ன' என்று நொந்து கொண்டாள்.

வந்து கொண்டிருந்த வகாப் வழியில் தட்டூட்டுத் தம்பியைப் பார்த்தார்.

''என்ன பாய், நம்ம ஊருக்கு கரண்டு வந்தாச்சி'' என்ருர் தம்பி.

''ஆமா...ரொம்ப நாளா எதிர்பார்த்தது'' வகாப்.

''இப்பொ ஒங்க நிலத்துலே என்ன போட்டு இருக்கிங்க''

''நிலத்த சீர் பண்ணி மான வாரி மல்லாக்கொட்டை போட்டு இருக்கேன்.

''கிணத்த வெட்டி, ஒரு பம்ப்செட் போட்டுடுங்க''

''கிணத்த வெட்டிட்டேன், பாங்கிலே கடனுக்கு எழுதிப் போட்டு இருக்கேன், அது சீக்கிரமா கிடைச்சிடும்.''

''ஆமா பாய், இப்பொ விவசாயத்துக்குத்தான் அதிகமாகக் கடன் கொடுக்கராங்க'' என்று சொல்லிக் கொண்டே ''சரி பாய், வர்ரேன்'' என்று சொல்லி வீட்டுக்குச் சென்ருர் தட்டூட்டுத் தம்பி மரைக்காயர்.

வேகமாய் வந்த வகாப், ''என்ன ? வீடு தூங்கி வழியுது'' என்ருர். பதில் பேசாது மெஹர்பான் சோறு போடப் போனுள். ஒரு தட்டிலே சோறு போட்டு ஒரு தடுக்கை எடுத்துப் போட்டுத் தட்டை வைத்தாள்.

''கடிசிக்க என்ன?'' என்று வந்து உட்கார்ந்தார், வகாப்.

''ஒன்னுமில்லே, கருவாடு போட்டு கத்திரிக்காய் ஆணம் காச்சினேன், அதிலே இருக்கிற கத்திரிக்காய் தான் கடிச்சிக்கணும்'' என்ருள்.

''எப்பொ பார்த்தாலும் கத்திரிக்காய், கத்திரிக்காய்'' என்று ஆவேசமாய்க் கத்தினர்

''வேறே ஒன்னும் இல்லே..'

''இல்லாட்டி ஊறுகா மட்ட யாச்சும் வாங்கி வக்கிறது; அதுவும்சொல்லணுமா'' என்று கத்திக் கொண்டே சாப்பிட்டார் வகாப்.

பிறகு பாட்டியும், மெஹர் பானும் உண்டு முடித்தார்கள். மெஹர்பான் இஷா தொழுது விட்டுப் படுத்தாள் ஒருவாறு ஓய்ந்து.

விடியற்காலை மெஹர்பான் எழுந்தாள். எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. தெரு விளக்குகள் மட்டும் தங்கள் வெற்றிகரமான முதலிரவை முடிக்கும் மகிழ்ச்சியில் ஒளி விட்டுக் கொண்டிருந்தன; ஆனல் மெஹர்பான் மனத்தில் ஒரே காரிருள் சூழ்ந்த வண்ணம் இருந்தது. ஒரு குடம் இடுப்பிலும், வாளியும் கயிறும் கையிலும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் - ஆத்தங்கரை கிணத்தை நோக்கி. பனிக்காற்று... சில்... என்று வீசிக்கொண்டிருந்தது. தினம் சென்று பழகிய கால் தன் போக்கில் போனது; மனம் ஏதோ குறைவுடன் காணப் பட்டது. மூடி இல்லா சீசாவைப் போல்!

''என்ன வாழ்க்கை? பத்து ஆண்டு மணவாழ்க்கையில் என்ன சுகத்தைக் கண்டேன்? அன்பற்ற-எப்பொழுதும் சிடு சிடு என்று இருக்கும்- புருஷன், மூன்று குழந்தைக்குத் தாய் ஆகியும் மாற்றமில்லா ஒரு பளுவான வாழ்க்கை. இவற்றின் நடுவே பாவம் அனுதைப் பாட்டி...சில நாள் முன்னே பாட்டிக்கு உதவிப் பணத்திற்காக அரசாங்கத்துக்கு எழுதிப் போட்டது. என்ன ஆச்சோ தெரியிலே...அது வந்தால், பளு கொஞ்சம் குறையும்..... இப்படி நாம் என்னத்துக்கு வாழணும்?'' என்று நினைத்தாள்....உடனே.....

''மனிதர்களை வீணே படைக்கவில்லை'' என்ற இறை வசனம் நினைவுக்கு வந்தது.

கிணற்றடியில் கோடிவீட்டு ஹாத்துன், தட்டூட்டு தாஹிரா, மேட்டுத் தெரு முனியம்மா, கருப்பாயி, கண்ணம்மா, புதுத் தெரு பொன்னம்மா பாத்திமா எல்லோரும் இருந்தார்கள். மெஹர்பானும் சென்று தண்ணீர் மொள்ள ஆரம்பிக்கும் போது...புதுத்தெரு பொன்னம்மா.....

''என்ன பூமா இன்னிக்கி ஊட்டுக்குப் பட்டாதரப் போருங்களாமே?''

''ஆமா...''

''ஒங்க ஊட்டுக்கும்தானே!''

''ஆமா''

''மெஹர்பான் ஊட்டுக்குமா? நீ சொல்லவே இல்லையே மெஹர்பான்'' என்ருள் தட்டூட்டு தாஹிரா.

''இதுலே என்ன இருக்கு'' என்ருள் மெஹர்பான்.

''புறம்போக்கிலே ஊட்ட கட்டினு இராத்திரி பகலா வயத்துலே நெருப்ப கட்டினு இருந்தோம். நீ என்ன பூமா இப்படி சொல்றே'' என்ருள் பொன்னம்மா.

''என்ன இருந்தென்ன? நம்ம ஊருலே தண்ணி குழா இல்லே! தினம் தினம் இப்படிப் பட வேண்டி இருக்கே'' என்று சலித்துக் கொண்டாள், மெஹர்பான்.

''அதுவும் வந்துடும்'' என்ருள் ஹாத்துன்.

''நம்ம ஊருக்கு இப்ப இரண்டு மூணு வருஷத்துலே பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி எல்லாம் வந்திச்சி. கப்பி ரோடு போட்டு இருக்காங்க. கரண்டு வந்திச்சி. தெருவெல்லாம் விளக்கு எரியுது. இதோபாரு இங்கிருந்தே நல்லா தெரியுது! உங்க தர்க்காவிலே விளக்கு போட்ட மாதிரிக்கு என்னமா இருக்கு! இனிமே குழாயும் வந்துடும்'' என்று ஒரே அடியாய் அடுக்கினுள் கண்ணம்மா.

''படிப்படியாகதானே செய்யணும்'' என்ருள் பாத்திமா.




மெஹர்பான் தண்ணீர்க் குடத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். யார் என்ன சொல்லியும் அவள் மனத்திற்குக் குறையாகவே இருந்தது.

மெஹர்பான் வீட்டுக்குள்ளே வரவும் ''சுபஹ்'' பாங்கு சொல்லவும் சரியாக இருந்தது. சுபஹ் தொழுது கொண்டு காலை உணவுக்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தாள்.

இட்லியை ஊத்தி வச்சிட்டு, ஜலீலை எழுப்பி சட்னிக்குப் பொட்டுக் கடலையும், தேங்காயும் வாங்கிக் கொண்டு வரச் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே எழுந்தார் வகாப்....

''நாஷ்டா ஆயிடுதா?''

''இப்பதான் இட்லி ஊத்தி வச்சிருக்கேன்''

''இன்னிக்கு ஊட்டுக்கு பட்டா தர்ராங்க, போவணும் தூங்கி வழியாதே''.

''உங்கமாதிரி நான் ஒன்னும் தூங்கிட்டு இல்லே?''

''என்ன வர வர வாய் நீளுது?''

''ஆமா நீளுது'' என்று துணிந்தே கூறினுள் மெஹர்பான்.

''இரு இரு, நீ ரொம்ப கெட்டுட்டே! நேரத்துக்கு எதும் சரியா செய்றதில்லே'' என்று சொல்லிக் கொண்டே பல் விளக்கச் சென்ருர் வகாப். 'வெள்ளிக்கிழமை; இன்று ஒன்றும் பேசிக்கொள்ள வேண்டாம்' என ஆத்திரத்தை அடக்கிக் கொண்ட மெஹர்பான் ஜலில் கொண்டு வந்த பொட்டுக்கடலையும், தேங்காயும் வைத்துச் சட்னி அரைத்தாள். நாலு இட்லியை ஒருதட்டில் வைத்துச் சட்னியை ஒரு கோப்பையில் ஊற்றி வைக்கவும் வகாப் வரவும் சரியாக இருந்தது.

நாஷ்டா முடித்து வகாப் வீட்டு மனைப்பட்டா வாங்கச் சென்ருர்.

பன்னிரண்டுமணி இருக்கும். பட்டா வாங்கி வந்த வகாப், வாசலிலே இருந்த பாட்டியிடம், ''இது வீட்டுப்பட்டா, பத்திரமா வைக்கச் சொல்லி அவகிட்டே கொடுத்துடு பாட்டி'' என்று சொல்லி, கொடுத்துவிட்டு வேகமாய்ச் சென்ருர்.

வகாப், வழியில் ஜும்மா (வெள்ளி) தொழுகைக்கான பாங்கு சொல்வதைக் கேட்டார்.

''ஹய்யா அலஸ் ஸலாத்'' (தொழுகைக்கு வாருங்கள்) ''ஹைய்யா அலல் பலா'' (வெற்றி பெற வாருங்கள்)— இந்த இரண்டும், இன்று வகாபைச் சிந்திக்க வைத்தன. தினம் கேட்ட பாங்குதான்; இருந்தாலும் இன்றுதான் அவர் உள்மனம்.......தொழுக வேண்டியதுதான்! என்ன பண்றது? நேரம் இல்லையே! இப்ப என்ன?..நம்ம வூட்லே இருக்கிற பாட்டி மாதிரி வயசானப்புறம் தொழுதுகலாம், இந்தக் காலத்திலே வயசானவங்க கூடத் தொழுவதில்லே, அவ மட்டும் எப்பப் பார்த்தாலும் தொழுகப் போங்க, தொழுகப் போங்க என்று நச்சரிக்கிறு; அவளுக்கென்ன தெரியுது?.....

சிந்தனை வயப்பட்டுச் சென்று கொண்டிருந்த வகாப் மிரண்டு வந்த காளையைக் கவனிக்கவில்லை...முட்டித் தள்ளியது... விழுந்த வகாப் கண் விழித்தபோது ஏதோ புதிய இடம்... படுத்திருப்பது கட்டிலில்...பக்கத்தில் சோக வடிவில் மெஹர்பான், ஒன்றுமே விளங்கவில்லை. தலையிலே ஒரு கட்டு...தலையை அசைத்தால் ஒரே வலி..திரும்பவும் கண்ணை மூடிக் கொண்டார். அப்பொழுது அங்கு வந்த டாக்டர் ''இப்பொழுது ஒன்றும் ஆபத்தில்லையம்மா, நாளைக்கு வீட்டிற்குப் போகலாம்'' என்றார்.

வகாபிற்கு ஏற்பட்ட விபத்தின் அதிர்ச்சியோ என்னவோ மெஹர்பானுக்கு அன்றிலிருந்தே ஆரம்பித்த ஜுரம், நான்கைந்து நாட்கள் நகர்ந்தும் இன்னும் குறையவில்லை. அது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர ஆரம்பித்தது. ஆகையால் மெஹர்பான் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள்.

''இது டைபாய்டு ஜுரம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சுமார் ஒரு மாதம் இங்கே இருக்கணும்'' என்றார் டாக்டர்.

வகாபிற்கு ஒன்றுமே புரியவில்லை! 'பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வது யார்? வூட்டு வேலைகளைப் பார்ப்பது யார்? முதலில் தினம் குடிக்கத் தண்ணீர் கொண்டுவருவது யார்? இது போன்ற ஆயிரமாயிரம் கேள்விகள் மனதில் தோன்றிய வண்ணம் இருந்தன. என்ன செய்வார்? நிழலின் அருமை வெய்யிலில்தான் தெரியும். மெஹர்பான் அருமை இன்றுதான் தெரிகிறது. அவள் இல்லாமல் ஒரு நிமிடமும் நகராது போல் தோன்றியது வகாபிற்கு. உதவினாள் பாட்டி.

வாழ்நாளிலே அனுபவிக்காத வேதனையோடு இந்தச் சோதனையைக் கடந்து கொண்டிருந்தார் வகாப். ''அல்லா....எனக்கு வேலை செய்யக் கைகளும் கால்களும், பேச வாயும், கேட்கக் காதும், பார்க்கக் கண்ணும் கொடுத்தாய்; துணைக்கு நல்ல மனைவியையும் மக்களையும் கொடுத்தாய். இவ்வளவும் கொடுத்து ஏழைக்கு உதவும் நல்ல சர்க்காரையும் கொடுத்தாய்; சர்க்காரால் என்போன்ற ஏழை விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு நிலமும், இருக்க வீடும் தந்தாய்! அதுமட்டுமா? இன்னும் உன் அருட்கொடைகள் எத்தனை எத்தனையோ? இவ்வளவுக்கும் நான் பதிலாக என்ன செய்கிறேன்? என்றாவது ஒருநாள்...நன்றி செலுத்தினேனா? இல்லை! இல்லை!! அல்லா....என்னை மன்னித்துவிடு, என்னை மன்னித்துவிடு'' என்றார்.

பாங்கொலியைக் கேட்ட வகாப் பள்ளிவாசலுக்குச் சென்றார். அவன் புகழைத் துதித்தார்; நன்றி செலுத்தினார்; மன்னிப்பை வேண்டினார்; அன்றிலிருந்து தொழுக ஆரம்பித்துவிட்டார்.

மெஹர்பான் இதை அறிந்தால் எவ்வளவு மகிழ்வாள்!

''அல்லா! அன்பற்ற கணவன், பளுவான வாழ்க்கை இத்துடன் இந்த வேதனையோடு நான் எதற்காக வாழ வேண்டும்?'' என நினைந்தாள் மெஹர்பான். அன்று மருந்து கொடுக்க வந்த நர்ஸிடம் ''மருந்து எனக்கு வேண்டாம், நான்...நான் எதற்கு வாழ வேண்டும்?'' என்றாள் மெஹர்பான்.

''என்னமா நீ இப்படி பேசறே? உன் கணவர் இராத்திரி பகலாய் உன் நினைவாகவே இருக்கிறார்'' என்று நர்ஸ் சொல்லவும் பாட்டி அங்கு வரவும் சரியாக இருந்தது.

''ஆமா மெஹர்பான், உன் புருஷன் படாத பாடுபடுறு! குழந்தைகளையும் பார்த்துக்கிட்டு, உன்னையும் பார்த்துக்கிட்டு! பாவம் அவர் தூங்கி



எத்தனை நாளாச்சோ? பித்துப் பிடிச்சவர் மாதிரி இருக்கிறார்! நீ சீக்கிரமா நல்லா ஆயி வீட்டுக்கு வந்துடணும்னு துவாக் கேட்டுட்டு இருக்கிறார்'' என்றாள் பாட்டி.

''அவரைப் பார்க்கப் பாவமா இருக்கு'' என்றாள் நர்ஸ். ''அப்படியா?'' என்ற மெஹர்பானுக்கு நோய் பாதி குறைந்த மாதிரி ஆகிவிட்டது.

அப்பொழுது அங்கு குழந்தைகளுடன் வந்த வகாபைப் பார்த்தாள். கண்களில் நீர் கசிய ''மெஹர்பான்'' என்றார் வகாப்.

''நீங்க அழாதீங்க...எனக்கு ஒன்னுமில்லேங்க; அல்லா குணமாக்கிட்டாங்க; குழந்தைகளைப் பத்திரமாப் பார்த்துக்கோங்க; சீக்கிரமா வூட்டுக்கு வந்துடுவேனுங்க'' என்றாள் மெஹர்பான்.

பூரண குணமானபின் மெஹர்பான் வீட்டுக்கு வந்தாள். காலை சுமார் பதினொரு மணி இருக்கும்; ஊர்விழாக் கோலம் பூண்டிருந்தது.

''என்ன இன்னிக்கி ஊர்லே?'' என்றாள் மெஹர்பான்.

''இன்னியோட உன் கஷ்டம் சரியாப்போச்சு! நம்ம ஊர்லே தண்ணிக்குழாய் போட்டுட்டாங்க; இன்னிக்கி தான் தண்ணி விடப்போறாங்க'' என்றார் வகாப்.

''அல்ஹம்துலில்லா'' (சர்வ புகழும் அல்லாவுக்கே)

''நம்ம ஊர்லே குழாய் இல்லாத குறை ஒன்றுதான் இருந்தது; அதுவும் இன்னியோட சரியாப்போச்சு; எல்லாம் நம்ம சர்க்கார் சாதனைதான்!''

''அல்லா..அவகளே நல்லா வக்கட்டும்''

''இத்தனைக்கும் நாம் எப்படி நன்றி சொல்றதோ தெரியலே''

''போஸ்ட்டு'' என்று குரல் கேட்டது.

''நம்ம வாசல்லியா'' என்றாள் மெஹர்பான்.

''ஆமா, நமக்கு யார் கடுதாசி போடப் போறா?'' என்று சொல்லிக் கொண்டே வாசலுக்கு வந்தார் வகாப்.

''ஜன்னத்துகனி.......பணம் வந்திருக்கு'' என்றார் தபால்காரர். ஆம்! அது சர்க்கார்லே இருந்து பாட்டிக்கு வந்த உதவிப்பணம்; பாட்டி அதற்கு விண்ணப்பித்து இருந்தாளே!'

''மெஹர்பான், பாட்டியை அழைச்சிட்டு வா'' என்று வகாப் சொல்லவும், பாட்டி ஜன்னத்துகனியும், மெஹர்பானும் வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது.

பணத்தைப் பெற்றுக்கொள்ளத் தடுமாறிக் கொண்டே ரேகை வைக்கும்போது பாட்டி ''வர வரக் கண்ணும் சரியாத் தெரியலே'' என்றாள்.

''அடுத்த மாதம் நம்ம ஊர் பள்ளிக்கூடத்திலே கண் சிகிச்சைமுகாம் வருது பாட்டி. நீங்க அதுலே காட்டி வைத்தியம் செஞ்சிக்கலாம்'' என்றார் தபால்காரர்.

''அப்படியா?'' என்று இரட்டை மகிழ்ச்சியோடு பணத்தைப் பெற்றுக் கொண்டாள் பாட்டி, பணத்தை மெஹர்பானிடம் கொடுத்து ''எனக்கு எல்லாமே நீதாம்மா! இதை நீயே வச்சுக்கோ'' என்றாள்.

**அந்தக் குடும்பத்தின் மகிழ்ச்சிக்குச் சொல்லவும் வேண்டுமா?**

## நேரு சமாதானப் பரிசு

மறைந்த இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் நினைவாக, உலக சமாதானத்துக்காகப் பாடுபட்டு வருபவர்களுக்கு 'நேரு சமாதானப் பரிசு' - 1974-ஆம் ஆண்டு முதல் இந்திய அரசினரால் வழங்கப்பட்டு வருகிறது. பரிசுத் தொகை ரூ 1 இலட்சம் வழங்குவதுடன், பரிசு பெற்றோர் இந்தியாவிற்கு வந்து செல்வதற்குரிய செலவுத் தொகையையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது.

இது வரை நேரு சமாதானப் பரிசு பெற்றவர்களின் விவரம்:

1965-ஆம் ஆண்டு — ஊதாண்ட் - பர்மா. (ஐ. நா. மன்றத்தின் முன்னாள் செயலாளர்)

1966-ஆம் ஆண்டு — டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் (அமெரிக்கா)

1967-ஆம் ஆண்டு — கான் அப்துல் கபார் கான்

1968-ஆம் ஆண்டு — யேகுதி மென்ஷின்

1969-ஆம் ஆண்டு — அன்னை தெரசா

1970-ஆம் ஆண்டு — கென்னத் கௌண்டா (ஜாம்பியா குடியரசுத் தலைவர்)

1971-ஆம் ஆண்டு — டிட்டோ (யூகோசுலாவியா குடியரசுத் தலைவர்)

1972-ஆம் ஆண்டு — ஆன்டிரிமால்ராக்ஸ் (பிரெஞ்சு எழுத்தாளர்)

## சிறுசேமிப்பில் சிறந்த ஒன்றியம்.

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், ''ஜயந்தி பிளாக்'' என்ற விருதினைப் பெற்றுள்ளது.

1973-74ல் செங்கற்பட்டு மாவட்டத்திலேயே முதல் தடவையாக, ''ஜயந்தி வட்டாரச் சிறப்''பினை இது பெறுகிறது. இதற்கான சுழற் கோப்பையை மத்திய உதவி நிதியமைச்சர் திருமதி சுசீலா ரோகத்கி வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் குடிநீர், மின்விசை, போக்குவரத்து முதலான வசதிகள் அளிக்கப்பட்டிருப்பதையும் அவர் வெகுவாகப் பாராட்டினார்.

இவ்வொன்றியத்திலுள்ள 50 கிராமங்களில் எல்லாக் கல்வி நிலையங்களும், அரசு அலுவலகங்களும் சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் வந்துள்ளன. 1972-73ல் ரூ. 2.5 இலட்சமும், 1973-74ல் ரூ. 8.5 இலட்சமும் சிறுசேமிப்புத் திட்டத்தில் வசூலாகியது. 1974-75ல் அக்டோபர் வரை ரூ. 14 இலட்சம் திரட்டப்பட்டது.

# ஊனமுற்றோர் பயிற்சி பெற...



முட்டுக்காடு!

செங்கை மாவட்டத்தில்-திருப்போரூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு குக்கிராமம்.

சென்னையிலிருந்து திருவான்மியூர் வழியாக மாமல்லபுரம் செல்லும் சாலையில், பெயருக்கேற்ப முட்டு முட்டுகளாக மணல் மேடு கொண்ட பகுதி!

அந்தப் பகுதி இன்று சமதளமாக்கப்பட்டு, சமதர்ம விருந்துக்கு அடிகோலப்பட்டு, எழில் கொழிக்கும் இடமாக மாறியுள்ளது.

முட்டுக் கொடுத்து நடக்கும் உடல் ஊனமுற்றவர்களின் வாழ்வில் ஒளி வீசிடும் பாசறையாக எதிர்காலத்தில் இது திகழப்போகிறது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் 51-வது பிறந்த நாள் விழாவின்போது, உடல் ஊனமுற்றோரின் நல்வாழ்வுக்குப் பாடுபட உறுதி கொண்டார்.

சென்னை மாமல்லபுரம் பகுதியில் உடல் ஊனமுற்றோருக்குத் தொழிற் பயிற்சி நிலையம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்.

ஆறு திங்களைத் தாண்டி அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுள்ளது. இன்னும் ஆறு திங்களில் நிலையம் ஓங்கி உயர்ந்துவிடும்.

ஏழைகளின் வாழ்வில் புன்னகை ஒளி வீசிட வேண்டும்—ஊனமுற்றோர் நல்வாழ்வு பெற்றிட வேண்டும் என்றெல்லாம் கருதிப் பாடுபட்டு வரும் கலைஞர் அவர்கள், முட்டுக்காட்டில் உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுப் பயிற்சி நிலையம், மற்றும் உற்பத்தித் தொழில் நிலையத்தின் அடிக்கல் நாட்டு விழாவை 19-11-'74 அன்று துவக்கி வைத்தார்கள்.

பாலைவனம் போன்ற அந்தப் பகுதியில் தாய்மார்களும், ஆடவர்களும், சிறுவர், சிறுமியரும் பசுஞ்சோலைக் கிளிகளென ஆர்வத்துடன் வந்து அணி திரண்டிருந்தனர். விழாவுக்கு வந்திருந்த ஏழை எளிய மக்களெல்லாம் நாற்காலிகளில் அமர்ந்திருந்த காட்சி கண்ணுக்கு விருந்தைத் தந்தது. அந்தக் குக்கிராமத்தில் நூற்றுக்கணக்கான நாற்காலிகள் எப்படி வந்தன? வியப்பாக இருந்தது! சமூக நலப் பணியில் இறங்கியுள்ளவர்களால் - ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வு வழங்கும் ஒப்பற்ற பணியில் ஈடுபட்டுள்ளவர்களால் - நாற்காலிகளைத் திரட்டுவதுதானா அருஞ் செயல் என்று கேட்காமல் கேட்டுக் கொண்டிருந்தன நாற்காலிகள்.

சரியாக 11.15 மணிக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் வருகை புரிந்தார்கள். வில்லின் கணையென விரைந்து வரும் முதல்வர் அங்கு வந்தவுடன் விழாவில் சுறுசுறுப்பு சுடர் வீசத் தொடங்கியது.

தமிழ்த்தாய் வாழ்த்து ஒலித்தது. அதன் பின்னர் மாவட்ட ஆட்சியாளர் வரவேற்புரை நல்கினார்.

அப்போது அவர் குறிப்பிட்டார்:

"உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்யும் வகையில் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டு வரும் இந்தத் தொழிற் பயிற்சி நிலையம்-முதன் முதலாகச் செங்கை மாவட்டத்தில் உருவாக்கப்படுவதற்காகச் செங்கை மாவட்டத்து மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

"உடல் ஊனமுற்றோர் பயிற்சிக்கு 66 பேர் தேர்ந்தெடுக்கப்பெற்று அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்கள். உடல் ஊனமுற்றோர் நிதிக்குச் செங்கை மாவட்ட மக்கள் 6 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளனர். இன்னும் வழங்குவர். உடல் ஊனமுற்றோர் 2523 பேர் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

"கடந்த ஆறுமாத காலமாக உடல் ஊனமுற்றோர்க்கு அரசுத் துறையில் அலுவல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. முன்பெல்லாம் உடல் ஊனமுற்றவர்கள், நமக்கு வேலை கிடைக்காதா என்று ஏங்கியது உண்டு. இன்று அப்படியில்லை! ஒரே அலுவலுக்கு நேர்முகத் தேர்வுக்காக உடல் ஊனமுற்ற ஒருவரும், ஊனமில்லாத ஒருவரும் செல்லும்போது, ஊனமுற்ற ஒருவருக்கு அலுவல் கிடைத்து விடுகிறது. ஊனமில்லாதவர், நாம் ஊனமுற்றவராகப் பிறந்திருக்கவில்லையே என்று ஏங்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

"எதிர்காலத்தில் இந்த முட்டுக்காடு ஊனமுற்றோருக்கு ஒரு சொர்க்கமாக விளங்கப் போகிறது. இந்தப் பெருமை நமது முதல்வருக்கே உரியது"

இந்த விழாவில் பேசிய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் குறிப்பிட்டார்கள்:

"பெரியார், அண்ணா ஆகியோர் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டும்-ஏழை மக்களுக்கு நல்வாழ்வு நல்க வேண்டும் என்று கருதி வந்தார்கள்.

உடல் ஊனமுற்றோருக்கு - பார்வை இழந்தோருக்கு - நாவால் பேச இயலாதவர்களுக்கு-நல்வாழ்வு நல்க வேண்டும் என்று சமுதாயத்தில் உள்ள மக்கள் எவரும் நினைக்கவில்லை - செயலாற்றவில்லை! ஆண்டவன்கூட, அத்தகைய மக்களின் துயரத்தைப்போக்க மறந்துவிட்டார். ஆண்டவனே செய்யத் தவறிய காரியத்தைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் - சனாதனிகளின் மொழியில் தெரிவித்தால் - ஆண்டவனின் நேரடி வாரிசாகத் திகழ்ந்து - நிறைவேற்றுகிறார் என்றுதான் குறிப்பிட வேண்டும். ஆண்டவன் எத்தனையோ அவதாரங்கள் எடுத்தும், பேசாத ஊமைகளைப் பேச வைக்க மறந்துவிட்டான். ஆனால் கலைஞரின் கருணை உள்ளம் ஊனமுற்றோருக்கு நல்வாழ்வைத் தேடித் தருகிறது.

"கண் பார்வையற்றோர் - நம்மைப் பார்த்துப் பிறர் குருடர் என்கிறார்களே என்று வருந்தி, நித்த நித்தம் செத்துக் கொண்டிருக்கிறார்களே அத்தகையோர் வாழ்வில் புது வாழ்வு-மறுவாழ்வு தரும் திட்டத்தை நாம் நிறைவேற்றி வருகிறோம். ஊனமுற்றோர் வாழ்வில் ஒரு மறுவாழ்வு-ஒரு திருப்புமுனை, கலைஞர் அவர்களால் இங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளது. கட்சி உணர்வுகளை எல்லாம் மறந்து ஒன்றுபட்ட உணர்வோடு இந்தப் பணியைப் போற்றுவோம்."



பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையத்துக்கு அடிக்கல் நாட்டிய முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை:

"ஒரு புதிய தொழிற்சாலையை-புரட்சிகரமான நிலையில் தொடங்கும் விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

"கடந்த 5, 6 ஆண்டுகளாக, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்றவர்களுக்காக - பார்வையற்றோருக்காக- உடல் ஊனமுற்றோருக்காக - இந்த அரசு பணியாற்றி வருகிறது- ஏறத்தாழ இலட்சம் பேருக்குப் புதிய ஒளி - புதிய பார்வை வழங்கியுள்ளது. 4000 தொழுநோயாளர்களுக்கு இல்லங்கள், மாடமாளிகைகள், நிம்மதியான வாழ்வு ஆகியவை அரசின் பணியினால் வழங்கப்பட்டுள்ளன.

"காந்தியடிகள் சொல்லி-அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியபடி. மனிதனை மனிதன் இழுத்துச் செல்கின்ற இழி நிலையை மாற்றி-கைரிக்ஷா இழுப்பவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாவை இலவசமாக வழங்கி, அவர்களது வாழ்வு செம்மையாக்கப் பெற்றுள்ளது. ஊனமுற்றோரின் நல்வாழ்வுக்கு மாபெரும் திட்டம் அரசின் சார்பில் உருவாக்கப்பெற்று-இரண்டு இலட்ச மக்களுக்குப் பயன்பட்டாக வேண்டும் என்று தீர்மானம் செய்யப் பெற்றுள்ளது.

"விரைவில் இதனைத் தமிழக முழுமைக்கும் உள்ள காலற்றோர், வாயற்றோர், கேட்கக் காதற்றோர் ஆகியோருக்குப் பயன் கிட்டும் வகையில் விரிவுபடுத்த முடியுமா என்றால், முடியாது. ஏற்கெனவே ஆட்சியில் இருந்தவர்கள்-20 ஆண்டுகளுக்குமுன்பே இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருந்தால் உடல் ஊனமுற்ற மக்கள் எல்லாருக்கும் நம்மால் மறுவாழ்வு கொடுத்திட முடியும். முன்பிருந்தவர்கள் இந்தத் திட்டத்தைப் புறக்கணித்து விட்டார்கள். அவர்கள் புறக்கணித்தார்கள் என்பதை நான் எப்படி அறிந்து கொள்ள முடிகிறது என்றால், நானே புறக்கணிக்கப்பட்டவன்! அதனால்தான் எளிதில் உணர்கிறேன்.

"இந்த ஆண்டு 20 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தத் திட்டம். அண்மையில், காதுகேட்கும் கருவிகள்-சக்கர நாற்காலிகள் ஆகியவை வழங்கப்பட்டன. பொருளாதாரப் பின்னணியோடு - தொழிற்பயிற்சி தருவது என்ற திட்டமும் இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் கட்டடங்கள் இன்னும் 5, 6 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்பெற்று விரைவில் இயங்கும் என்று நம்புகிறேன். பொதுப்பணித் துறைப் பொறியாளர்கள் விரைவில் உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையுண்டு எனக்கு.

"முதலில் 75 பேர்கள்; பின்னர் 150 பேர்கள் இணைக்கப் பெறுவர். வேலூரிலும், காட்பாடியிலும் பயிற்சி நிலையங்களில் முன்பயிற்சி பெற்று, இந்தப் பயிற்சி நிலையத்துக்கு வருவர். பின்னர் பயிற்சி முழுமை பெற்றபின்-தனியார் அலுவலகங்களிலும் அரசுத் துறை அலுவலகங்களிலும் வேலை தரும் வாய்ப்பைச் சமூக நலத்துறை ஏற்றுக்கொள்ளும். இங்குப் பயிற்சி பெற்ற பின்னர் வேலை கிடைக்குமா என்று சந்தேகப்படத் தேவையில்லை.

"தமிழக அரசின் சமூகநலத் துறை அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்கிறது.

"வேளாண்மைத் துறைக்குப் பயன் தரும் கருவிகள், மற்றும் இயந்திரப் பகுதிகள் ஆகியவை இங்கே உற்பத்தி செய்யப்பெறும்.

"கிராமப்புறங்களில் உள்ள சாலைகள் எல்லாம் முக்கியமான நகரங்களோடு இணைக்கப்பட வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, சாலை அமைக்கும் பணிகளை நாம் நிறைவேற்றியுள்ளோம். வெறும் சாலை அமைப்பது மாத்திரம் இதன் நோக்கமல்ல; எண்ணற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதும் இதன் நோக்கமாகும்.

"இங்கே மாமல்லபுரத்துச் சிற்பி கணபதி ஸ்தபதி வந்திருக்கிறார். அவரைப் பார்த்தவுடன் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. அதனை இங்கே குறிப்பிடுகிறேன். நான் முதல

லமைச்சரான உடனே, மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பயிற்சி நிலையத்தைக் கண்ணுற்றேன். அங்கே பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் அப்போது என்னிடம் தெரிவித்தார்கள்!

''இந்தப் பயிற்சி முடிவடைந்தவுடன் நாங்கள் சென்றுவிடுவோம். எங்காவது கோவில் பிரகாரங்கள் ரிப்பேர் போன்ற வேலைதாம் கிடைக்கும்; அத்தோடு சரி. எங்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புக்கு வழி தேடித் தாருங்கள்'' என்று மாணவர்கள் முறையிட்டனர்.

நான் யோசித்துப் பார்த்தேன். கலை, இலக்கியத்தோடு தொழிலாகவும் மாற வேண்டும் என்று சிந்தித்தேன். பூம்புகார் உருவாயிற்று. தொழிலாளர் நிலையை, கலை இலக்கியத்தோடு சிந்தித்ததால் பூம்புகார்க் கலைக்கூடம் உருவாயிற்று-பண்டைப் பூம்புகாரில் அங்கே இடம் பெற்றிருந்த கட்டடங்கள் எல்லாம் இன்றைய பூம்புகாரிலும் இடம் பெறுகின்றன. முன்பு 50 பேர் பணிபுரிந்த இடத்தில் தற்போது 500 பேர் பணிபுரிகிறார்கள்.

அண்மையில் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்திருந்த ஜோதிர்மயிபாசு என்னும் இடது கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர் மாபல்லபுரத்துச் சிற்பக் கூடத்தைப் பார்த்துவிட்டு, ''கலை இலக்கியத்துடன் உங்கள் மாநில அரசு தொழில் பணிபுரிவதை நான் பாராட்டுகிறேன்'' என்று சொல்லிச் சென்றிருக்கிறார். வெளிமாநிலத்தில் உள்ள இடது கம்யூனிஸ்டுக்காரர் பாராட்டிச் சென்றுள்ளார்கள். ஆனால் இங்கே உள்ளவர்கள் பாராட்டுவதில்லை.

அமெரிக்காவில் உள்ள ஆர்ம்ஸ்ட்ராங் சந்திரமண்டலத்திற்குச் சென்றால் அய்யம்பேட்டையில் உள்ளவர்கள் பாராட்டுவார்கள். ஆனால் அடுத்த வீட்டில் உள்ள நம்மவன் சென்றால் பாராட்டமாட்டார்கள்! இது நம்மவர்களின் பண்பு.

இந்த அரசு பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறது. இதனைப் பாராட்டுவதன் மூலம் இது, மேலும் நாது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நம்மவர்கள் நினைப்பதில்லை.

நாங்கள் இந்தச் சமூகநலப் பணிகளை எல்லாம் ஏன் செய்கிறோம்? அண்ணா அவர்களின் கட்டளை இது! சமுதாயப்பணி செய்வதற்கு ஆட்சி நமக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று அண்ணா கருதினார். ஆட்சியை அமைத்துக் குறுகிய காலம் வாழ்ந்துவிட்டுச் சென்றுவிட்டார். அவர் உருவாக்கிய நல்ல திட்டங்களை நாங்கள் செய்து வருகிறோம். அவரே இருந்து நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை-அவர் இல்லாததால், நாங்கள் செய்து வருகிறோம். அவரது எண்ணங்களை நாங்கள் செயலாற்றி வருகிறோம்!

முதல்வரின் உரைக்குப் பின்னர் விழா இனிது முடிந்தது. என்றாலும் விழா நடைபெற்ற இடத்தை விட்டு மக்கள் எழுந்து செல்ல விரும்பாமல் அப்படியே நிலைத்து நின்றுவிட்டனர். அவர்கள் முகங்களில் எல்லாம் முறுவலின் ரேகைகள் தோன்றின.

முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இனி இந்தப் பகுதி, முத்துக்கள் பூத்துக் குலுங்கும் முத்துக்காடாக - தமிழ்நாட்டு அரசின் சாதனை முத்துக்களில் ஒன்றாகத் திகழும் என்பது உறுதி.

—த.பி.


**தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நே. எக்ஸ் 406**

**நெ. 14, சித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.**

தொலைபேசி எண் : 30877, 30878. தபால் பெட்டி எண். 486. தந்தி: ''ஹவுஸ்பாங்க்''

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்; எம் எல்.ஏ.

உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை

பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | | |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.5 கோடி. |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | ... | ரூ. 2.33 ,, |
| | ... | ரூ. 15.97 ,, |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான விபரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடு அடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் ஆண்டிற்குக் குறையாமலும் தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும். தவணைவைப்புத் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது.

| | | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு. |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | ... | ரூ. 25,000/- |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட | ... | ரூ. 10,000/- |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும் | ... | ரூ. 10,000/-. |

பூ.க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,

இணைப்பதிவாளர்—செயலாளர்.




# காவலர் மக்களின் நண்பர்


எஃப்.வி.அருள்

தமிழ்நாடு காவல்துறைத் தலைமை அலுவலர்


பொது நலனுக்காகப் பிற குடிமக்கள் சார்பில் பணியாற்றும் குடிமகன் காவலர் என்பதால் அவர் ''உங்கள் நண்பனாக'' விளங்குகிறார். குறுகிய நோக்குடைய சிலர், காவலர்கள், பொதுமக்கள் நோக்கங்களிடையே மோதல் இருப்பதாக எண்ணிக் குழப்புகின்றனர். எதனாலோ இவர்கள் தவறாக எண்ணுகின்றனர். நேரிய நோக்குடன் பொதுமக்கள், காவலர்களிடையே நிலவ வேண்டிய உறவினை ஆய்ந்தால் இரு சாராரின் நோக்கங்களும் ஒன்றே என்று தெள்ளென விளங்கும். பொதுநல நோக்கு, காவலர் நோக்கு என்று இரு வெவ்வேறு நோக்குகள் இல்லை. எதையும் திரித்துப் பார்ப்பவர்கள் ஒருமுக நோக்கைக் கூறுபடுத்த முயல்வது சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகும். பொதுமக்கள் நலன்களைக் கருதியே காவலர் பணிபுரிகிறார் என்பது அவரை மக்கள் நண்பனாக்குகிறது.

உயிர்களையும், உடைமைகளையும் காத்து, அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது காவலரின் தலையாய கடமையாகும். நடந்த குற்றங்களைத் துப்புத்துலக்கிக் கண்டுபிடிப்பதைவிட, குற்றங்கள் நடவாமல் தடுப்பதில்தான் காவலர் மக்களுக்குப் பாதுகாப்பை நல்குகின்றனர். எல்லாப் பொது இடங்களையும் காவல் பகுதிகளாகப் பிரித்து ''ரோந்து முறையில்'' கண்காணித்துக் காவலர் குற்றம் நடவாமல் தடுக்கின்றனர். மக்கள் தனியே பல இடங்களுக்குச் சென்று அலுவல்களைக் கவனித்தல், கடுமையான உழைப்பிற்குப் பின் அமைதியுடன் உறங்குதல் ஆகியவற்றிற்கு வழிகோலுவது, காவலரின் அயராத உழைப்பே! ''உங்கள் நண்பன்'' திரைப்படத்தைப் பார்த்தவர்கள், எவ்வாறு காவலர்கள் தங்கள் குடும்பத்தினர் நோய் வாய்ப்பட்டிருக்கும் நேரத்திலும் நடு இரவில் தங்கள் பகுதிகளில் ரோந்து செல்கின்றனர் என்பதை உணர்ந்திருப்பார்கள். காவலர் மக்களுக்காற்றும் நற்பணியை எடுத்துக்காட்டும் வகையில், சென்னை காவல்துறை நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தின்போது வெளியிடப்பட்ட ''சென்னை காவல்துறையின் வரலாறு'' என்ற புத்தகத்திலிருந்து கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கூறுவது பொருந்தும் என்று எண்ணுகிறேன்:—

''மீண்டும் அவர்களை அவர்கள் அலுவல் பயணத்தில் காணுகின்றோம்; அவர்கள் குளிரால், தண்மையால் நடுங்குவதை-ஈரமிலாது எரிக்கும் கதிரொளியில் காய்வதை— பொருட்படுத்தாது இந்தத் துன்பத்தையும் துயரத்தையும் ஏன் உடலுக்கு ஊறுகளையும் சாவையும்கூட ஏற்கின்றனர்''

இந்த வாக்கியங்கள், சென்னை நகர காவலர் இரத்தினம், தன் பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கும்போது, பாதுகாப்பற்ற ஒரு பாவையைக் கத்தி முனையில் கொள்ளையடிக்க முயன்ற ஒரு கொள்ளைக்காரனை, துள்ளியோடிப் பிடிக்கும்போது குத்திக் கொல்லப்பட்டது என் நினைவுக்கு வருகிறது. ஒரு பாவையைப் பாதுகாக்க இந்தக் காவலர் வீரமரணமடைந்தார். இவ்வாறு பணியாற்றும் காவலரை மக்கள் நண்பன் என்று கூறுவதல்லாமல் வேறு எவ்வாறு அழைப்பது?

சில நேரங்களில் சட்டத்தை நிலைநாட்ட, காவலர்கள் உறுதியுடன் பணியாற்ற வேண்டியிருக்கிறது என்பது உண்மையே! தன் கடமையைச் செய்வதால், அவரை மக்களின் பகைவர் என்று கூறுவது சரியல்ல. மக்களின் நன்மைக்கு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உருவாக்கிய சட்டம் ஒரு சிலருக்கு ஒத்துவரவில்லையெனினும், பொது நலனுக்காகச் சட்டத்தைச் செயல்படுத்தியாக வேண்டும். ஆகையால் இச்சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும். இது, தொடர்ந்து காவலர்களிடம் வலியுறுத்தப்படுகிறது. அவர்களில் ஓரிருவர் தவறிழைத்தால், காவல்துறையினரே மக்களின் பகைவர்கள் என்ற அவசர முடிவுக்கு வருவது முறையாகாது.

நெருக்கடியான சாலைகளில் நின்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும்போது காவலர் மக்களின் உண்மை நண்பனாக விளங்குகிறார். வண்டிகளையும், நடந்து செல்லும் மக்களையும் ஒழுங்குபடுத்திச் சாலையில் செல்லும் குழந்தைகளுக்கும், வலிவற்றவர்களுக்கும் காவலர் பாதுகாப்பு அளிக்கிறார். இந்த நேரத்தில், சில வாத்துக் குஞ்சுகள் ஒரு சாலை சந்திப்பில் ஒருபக்கத்திலிருந்து



சென்னையிலுள்ள காவல்துறைத் தலைமை அலுவலகம்



காவலர் அணிவகுப்பு

மறு பக்கத்திற்குக் கடந்து செல்ல, ஒரு காவலர், சாலையில் ஓடும் ஊர்திகளை நிறுத்தி வைத்திருப்பதுபோல் வரையப்பட்ட கேலிச் சித்திரம் என் மனக்கண்முன் நிற்கிறது. இது மக்களின் நண்பன், காவலர், பாதுகாப்பற்றவர்களை எவ்வாறு பாதுகாக்கிருர் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

காவலர் எல்லா நேரத்திலும் மக்களின் நண்பரே! ஆனல், இயற்கை இடர்களான புயல், வெள்ளப் பெருக்கு, பஞ்சம் இவைகள் ஏற்படும்போது, அவர்களின் உண்மையான தோழமை அதிகமாக வெளிப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் சென்னை நகரிலும், மாவட்டங்களிலும் வெள்ளப்பெருக்கால் மக்கள் துன்பங்களுக்குள்ளாகி பல்லாயிரக்கணக்கில் குடிசைகள் நாசமாய் பசிப்பிணியால் பீடிக்கப்பட்டனர். சுயநலனையும், தற்பாதுகாப்பையும் சிறிதளவும் எண்ணிப் பாராமல் காவலர்கள் ஒன்றுகூடி வெள்ளத்தில் சிக்கிய பலரை மீட்டு, காவல் நிலையங்களிலும் பள்ளிகளிலும் அவர்களைத் தங்க வைத்து, உணவு சமைத்துக் கொடுத்துக் குழந்தைகளுக்குப் பாலும் வழங்கினர். தங்களுக்கேற்பட்ட இடர்களைச் சற்றும் பொருட்படுத்தாது பல நாட்கள் இந்த நற்பணிகளைச் செய்தனர். இந்த நடவடிக்கைகளால், காவலர்கள் மக்களின் உண்மையான நண்பர்கள் என்பதை ஏழை மக்கள் உணர்ந்தனர்.

மக்கள் நல அரசு வளர்ச்சி பெற, வறுமையில் வாழும் சேரிப்பகுதியினரையும், குற்றங்களைச் செய்யும் சிறுவர்களையும், முறைகேடாக நடக்கும் மாதர்களையும், பெண்களையும், வசிக்க வீடு இல்லாதவர்களையும் சீர்திருத்தி வாழச் செய்வது அவசியம். மேற்கூறியவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயுள்ளனர் காவல்துறையினர். இம்மாதிரியானவர்கள் தங்கள் துயரைக் கூறும்போது, காவலர்கள் தங்கள் கண்முன் மேலும் பலவிதமான நிகழ்ச்சிகளை நாடகம்போல் காண்கின்றனர். மனமுறிவைத் தாங்கவொண்ணது உயிர் முறிக்கும் அளவுக்குச் செல்லும் மணமுறிவைச் சீர்படுத்துபவர் காவலர். இல்லத்தை விட்டோடி களவாடி இல்லம் திரும்பும் இளங்கன்றுகளைச் செம்மைப் படுத்தப் பெற்றவர் காவலர் துணையை நாடுகின்றனர். இத்தகைய பல சிக்கல் முடிச்சுகளை அவிழ்க்கத் தங்களாலானவற்றைச் செய்யும் காவலர்கள் முதன்மையான சமூகத்தொண்டர்கள் என்று கூறிஞல் அது மிகையாகாது. இங்ஙனம் பல்வேறு வழிகளில் பணியாற்றிக் காவலர்கள் மக்களின் நண்பர்களாய்த் தொண்டாற்றி வருகின்றனர். சுதந்தர நாட்டில், தாங்கள் தேர்ந்தெடுத்தவர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களை மதித்து நடக்கும் ஆண்களும், பெண்களும் காவலரைக் கண்டு அஞ்சத் தேவையில்லை. உண்மையாகவே, அச்சமின்மை மட்டுமின்றி காவலர் பொதுமக்கள் உறவில் தோழமை இருக்க வேண்டும். உள்ளபடியே சுதந்தர இந்தியாவில், காவலர் மக்களின் நண்பர்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.





# திரைக்குப் பின்னே...!



கே. ஆர். ஷெனய்

காவல்துறை ஆணையாளர் மற்றும் கூடுதல் ஐ. ஜி.

**1974** ஜூலை 28-ஆம் நாள்!

அரிசி விலை எப்படித் திடீர் என உயர்ந்தது என்பதனையும், அரிசிக்கு ஏற்பட்ட பற்றாக் குறையினையும் சென்னை நகர் வாழ் மக்கள் சற்றுச்சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் அரிசியின் விலை மூன்று, நான்கு நாட்களுக்குள் குறிப்பிட்ட அளவுக்குக்குறைந்ததையும், அதிக அளவில் அரிசி விநியோகம் செய்ய முடிந்ததையும் நாம் அறியலாம்.

இடைப்பட்ட நாட்களில் அரசு எவ்வாறு முனைப்பான நடவடிக்கையினை எடுத்தது என்பதும், உணவுப் பொருள் வழங்கு துறை, கூட்டுறவு, காவல் துறை போன்ற வேறு பட்ட துறைகளினிடையில் ஏற்பட்ட மிகச் சிறந்த இணைப்பு முறைகளும் எதிர்காலத்தில் பதிந்து வைக்கத்தக்க ஒன்ருக விளங்கும். மேலும் சுவை கூட்டுவதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

சுருக்கமாகச் சொல்லப் போனல், 27—7—74-ல் சென்னை நகரில் ஏற்பட்ட இந்த நெருக்கடி, ஒரு கடைக்காரரிடம் சில பேர் வந்து, படி அரிசி ரூ. 2.50-க்குத் தர வேண்டும் என்று கோரியதால் உண்டாயிற்று. அப்பொழுது இருந்த நிலையில் அரிசியின் விலை சாதாரணமாகப் படிக்கு 3 ரூபாயாக இருந்தபோதிலும் அந்தக் கடைக்காரர் அவர்களுக்கு வழங்க முன் வந்தார். படி அரிசி ரூ. 2.50-க்கு விற்கப் படுகிறது என்பதனைக் கேள்வியுற்ற அப் பகுதி மக்கள் 100-க்கு மேற்பட்டவர்கள் அங்கே கூடி அரிசி கேட்க ஆரம்பித்தார்கள். கடைக்காரர் மூன்று மூட்டைகள் மட்டும்தான் வைத்திருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் சிலர் கடையின் மீது கற்களையும் சோடா புட்டிகளையும் எறிந்தனர். காவல் துறையினர் அந்த இடத்திற்கு விரைந்து கூட்டத்தைக் கலைத்தார்கள். வழக்கு ஒன்றினைப் பதிவு செய்து சுமார் 5 பேர்களைக் கைது செய்தார்கள்.



28-7-74 அன்றுகூட நகரில் நான்கு, ஐந்து கடைகளில் இதைப் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தன. கடைக்காரர்கள் இருந்த அரிசியை விற்றுவிட்டனர். காவல் துறையினர் உதவி புரிந்து, ஒவ்வொரு இடத்திலும் கூடியிருந்த 50, 60 பேர்களை அனுப்பி வைத்தார்கள். ஆனல் அவர்கள் அரிசி பெற முடியவில்லை.

அரிசிக்கு அதிகத் தேவை ஏற்பட்டது. ஆனல் குறைந்த விலையில் விற்பனை செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டதால் வியாபாரிகள் பதுக்க ஆரம்பித்தார்கள். சில்லறை வியாபாரிகள் மாவட்டங்களிலிருந்து அரிசியினைப் பெற முன்வரவில்லை.

29—7—74-ஆம் நாள் காலையில் காவல் துறையினர், வளர்ந்து வருகின்ற இத்தகைய பயங்கரச் சூழ்நிலையினைக் கண்டறிந்தனர். எனவே அவர்கள் உணவு வழங்கு துறையினரைப் பத்திரிகைகள் வாயிலாகவும், வானெலியின் மூலமாக

வும் அரிசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது குறித்துச் செய்திகள் வெளியிடவும், மக்கள் தேவைகளுக்கு வேண்டிய அரிசி இருப்பில் இருப்பதைத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டனர். அதே நேரத்தில் காவல் துறையினரும் தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதே நாள் மாலையில் காவல் துறை, உணவு வழங்கு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளிடையே ஒரு ஆலோசனைக் கூட்டமும் நடந்தது. அரிசி இருப்பின் அவசியத்தையும், விநியோக நிலையையும் நன்கு விவாதித்து ஆராய்ந்து அறிந்தார்கள். பங்கீட்டுக் கடைகளில் ஏராளமான அட்டைகளுக்கு அரிசி வழங்க வேண்டியிருப்பதால் நீண்ட வரிசைகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட தொல்லைகளைப் போக்கும் விதத்தில், எந்தவொரு கடையும் 2,000-க்கு அதிகமான அட்டைகளை வைத்திருக்கக் கூடாது என முடிவு செய்யப்பட்டது.

30—7—74-ல் காவல்துறை உணவு வழங்கு துறை ஆகியவைகளைச் சார்ந்த அதிகாரிகள் தலைமைச் செயலரைச் சந்தித்தார்கள். அடுத்த மூன்று, நான்கு தினங்களில் விழிப்பு நிலை மேற்கொள்ளப்பட்டு தகுந்த நடவடிக்கைகளைக் காவல் துறையினரும், உணவு வழங்கு துறையினரும் எடுப்பார்கள் என தலைமைச் செயரிடம் கூறினார்கள். இதற்கெனத் தினமும் அரசுக்கிடங்குகளிலும் சில்லறைக் கடைகளிலும் அரிசியின் இருப்பு எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிவதைத் தங்களது இன்றியமையாத கடமையாகக் கொண்டனர். எங்கெங்கு அரிசி இருப்பின் நிலை குறைந்துள்ளதோ அங்கெல்லாம் அரிசி நிரப்பப்பட்டன. இதனால் பொது மக்களிடையே குறைந்த விலைக்கான அரிசி, இருப்பில் இருப்பதற்குரிய நம்பிக்கை ஏற்பட முடிந்தது.

தற்காலிக அரிசிக் கட்டுப்பாடு அறையினை ( Rice Control Room ) நகரக் காவல் துறை அலுவலகத்தில் அமைப்பது போன்ற யோசனைகள் கையாளப்பட்டன. எந்தெந்தக் கடைகளுக்கு அரிசி தேவைப்படுகிறதோ அவைகளுக்கு அரிசிக் கிடங்கிலிருந்தும், மொத்த வியாபாரிகளிடமிருந்தும் உடனே கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ஒவ்வொரு 12 மணிக்கும் அரிசி பற்றிய சூழ்நிலைகளை விவரிக்கவும், 30-7-74 அன்று மாலை முதல் இதனைச் செயல்படுத்தவும் சம்மதித்தார்கள். ஒரு தனித் துணை ஆணையர் பொறுப்பில் அரிசிக் கட்டுப்பாடு ஒருங்கிணைப்புப் பிரிவு ( Co-ordination cell ) ஒன்று நகரக்காவல் துறை அலுவலகத்தில் இயங்குமென விவரமான பத்திரிகைச் செய்தி ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்தப் பிரிவில் தனித்துணை ஆணையருக்கு உதவியாக இரண்டு கண்காணிப்பாளர், தென் சென்னைக்கு ஒருவரும், வடசென்னைக்கு ஒருவருமாகப் பணி புரிந்தனர். இவர்களுக்குத் தனித் தனி தொலைபேசி இணைப்புகள் தரப்பட்டன. அரிசியின் மாதிரி, தற்பொழுதுள்ள விலை, இருப்பு வைத்துள்ள வியாபாரிகள் என்பன போன்ற விவரங்கள் காவல் துறையினரால் அரிசிக் கட்டுப்பாடு ஒருங்கிணைப்புப் பிரிவுக்கு கொண்டு வரப்பட்டன.

சென்னை நகரிலுள்ள எந்தக் கடைக்காரரோ, சில்லறை வியாபாரியோ அல்லது மொத்த வியாபாரியோ அரிசி கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டால் இந்த அமைப்புக்குத் தொலை பேசியின் மூலம் தெரிவிக்க வேண்டும். உடனே அதற்குரிய உதவிகள் தரப்படும்.

வடக்குப் பகுதி, வடக்குப் பூந்தமல்லி நெடுஞ்சாலையினையும், தெற்குப் பகுதி தெற்குப் பூந்தமல்லி நெடுஞ்சாலையினையும் கொண்டுள்ளது.

இந்தப் பிரிவு எந்த நேரமும் பணிபுரியும். மேற்கண்ட பத்திரிகைச் செய்தியும், இந்தக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிகளும் பொதுமக்களிடையே மின்வேகத்தில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தின; விலைவாசிகளையும் கட்டுப்படுத்தின.

**இந்த இதழுடன்
இலவச இணைப்பு
1974 ஆம் ஆண்டு
தமிழ்நாடு
சமூகப் பாதுகாப்புத்
திட்டம்**

மொத்த வியாபாரிகளிடமிருந்து சில்லறை வியாபாரிகளுக்கு அரிசி செல்லுகின்ற போது தேவைப்பட்டால் காவலர்கள் துணைக்குச் செல்லுகின்றனர்.

31-7-74-இல் அதாவது அரிசிக்கட்டுப்பாடு பிரிவு பணி புரியத் தொடங்கிய மறு நாளில் காலை 9 மணியிலிருந்து இரவு 11 மணி வரையில் காவலரின் உதவியை நாடி 19 தொலைவுபேசி அழைப்புகள் வந்தன. ஒவ்வொரு தொலைவுபேசி அழைப்புகளுக்கும் அந்த நிமிட்த்திலேயே தகுந்த பதில்களும் தரப்பட்டன. அன்று மறுநாள், அதாவது 1-8-74-ல் 11 அழைப்புகள் பெறப்பட்டன. இவைகள் இரண்டும் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 2-8-74-ல் 3 அழைப்புகள் மட்டும்தான் பெறப்பட்டன. அவைகள் சரியான முறையில் கவனிக்கப்பட்டன. 4-8-74-ல் ஏராளமான அரிசி நியாயமான விலைக்குக் கிடைத்தன. கடைகளில் மட்டுமல்லாமல், பாதை ஓரங்களிலும் காணப்பட்டன.

இதற்கிடையில் மண்ணெண்ணெய்க்குப் பயங்கரமான பற்றுக்குறை ஏற்பட்டது. மாநிலத்திற்கு ஒதுக்கப்பெற்ற பங்கில் வெட்டியதால் இந்த நிலை ஏற்பட்டது. மீண்டும் இங்கு காவல்துறையும், உணவு பொருள் வழங்கு துறையும் இந்த நிலையைப் பற்றி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனிடம் எடுத்துக் கூறின. தமிழக முதல்வரும் இந்தப் பிரச்சினையை மைய அரசின் பெட்ரோலிய அமைச்சருக்கு எடுத்துச்சொன்னார்கள். வெட்டப்பட்ட பங்கு நீக்கப்பட்டு மண்ணெண்ணெய் விநியோகம் தாராளமாகக் கிடைக்கின்ற நிலை ஏற்பட்டது.

காவல் துறையின் இத்தகைய மேம்பட்ட விழிப்புணர்ச்சியும், உணவு வழங்குதுறை, அரசு ஆகியவைகளின் உடனடி பதில் குறிப்புகளும், 4-8-74-ல் இவைகளை முழுமையாக - சாதாரண நிலைக்கு மீட்டுவிட்டன.

மீண்டும் இத்தகைய பற்றுக்குறை நிலை எழாமலும், விலையேற்றமடையாமலும் இருப்பதற்கான நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஒருங்கிணைப்புப் பிரிவு மேலும் சில நாட்கள் வரை செயல்பட்டது. இப்பிரிவு 14-8-74-ல் நிறுத்தி வைக்கப்பட்டது.



# தமிழ்நாட்டின் சிறப்பு ஆயுதக் காவற்படை

வி.கோ. மனோகரன்
( துணை ஆணையாளர், சட்டம்-ஒழுங்கு )

"தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ்" என்று பெயர் பெற்று விளங்குவது தமிழ் நாட்டுக் காவற்படையின் ஒரு அணியாகும். புகழ் மிக்க இவ்வணியின் தொடக்கம், வளர்ச்சி இவைகளைத் தெரிந்து கொள்வது சுவைமிக்கதாகும்.

1956-ஆம் ஆண்டிற்கு முன் அதாவது மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கு முன் இப்போது மாநிலங்களில் உள்ள மலபார் சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

அன்றைய சென்னை மாநிலத்தில் "மலபார் ஸ்பெஷல் போலீஸ்" "ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ்" என இரு அணிகள் இருந்தன. இவ்விரு அணிகளில் மலபார் அணியே முந்தியதாகும். மலபாரில் உள்நாட்டுக் கலவரங்களை அடக்கத் தோன்றிய இவ்வணி கடினமான தேர்ச்சியாலும், ஒழுங்கான சட்ட திட்ட பராமரிப்பினாலும் ஒரு சிறந்த இராணுவ அணிக்கு ஈடான வேலையாலும், நடத்தையாலும் சிறப்பாக கருதப்பட்டு வந்தது.

1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மலபார் ஸ்பெஷல் போலீஸ் தோன்றியது. இது அங்கு ஏற்கெனவே இருந்த மலப்புரம் போலீஸ் அணியை மூலமாகக் கொண்டது. இந்த இரண்டாவது அணி மலபார் மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தை அடக்குவதற்காகஏற்படுத்தப்பட்டது.

1852-ல் இருந்தே மாப்பிள்ளைக் கலவரம் தொடர்ந்து நடந்தது. அந்த நாளில் சரியான பாதைகளும், செய்தித் தொடர்பு வசதிகளும் இல்லாதிருந்ததே கலகக்காரர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது.

1852-ல் வெளியான "லோகன்ஸ் மானுவல்" என்ற மலபார் மாவட்ட கெஜட்டில் இப்போது நடந்த கலவரங்களைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

1836-க்கும் 1852-க்கும் இடையில் இருபதுக்கும் மேற்பட்ட கலவரங்கள் நடந்திருந்தன எனினும் 1921 ஆம் ஆண்டு நடந்த கலவரமே பரவலாக மூண்டது.

பொருட் செலவைக் கருதி மலப்புரத்தில் இருந்து காவல் அணியை பிரிட்டிஷார் எடுத்து விட்டதால் அதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு கலகக்காரர்கள் தீவிரவாதிகளாகிவிட்டனர். அலிமுஸாலியார் என்ற கலகத் தலைவன் தன்னை "ஏர்நாடு மன்னன்" என்று பிரகடனப்படுத்திக் கொண்டு ஒரு மாப்ளா மாநிலத்தையே அமைத்துக் கொண்டான்.

பிரிட்டிஷ் சிங்கம் தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில் கலகக்காரர்கள் அட்டகாசம் செய்யத் தொடங்கினர். அது கர்ஜனை புரிந்து எழுந்த வேகத்தில் பதிலடி கொடுக்கத் தொடங்கியது.

மறுநாளே இராணுவ ஆட்சி நிறுவப்பட்டு பிரிட்டிஷ் அணியும் இந்திய அணியும் கலந்த ஒரு "ஸ்பெஷல் மலபார் போலீஸ் அணி" என்று கர்னல் ஹம்ரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்டது. அவரே அப்படையின் தளவாயாகவும் காவல்துறை அலுவலராகவும் நியமிக்கப்பட்டார்.

1921 ஆகஸ்ட் 20-ல் மலப்புரத்தில் மாப்பிளாகளுக்கும், மலபார் ஸ்பெஷல் போலீஸ் அணிக்கும் காப்டன் மெக் என் வாய் தலைமையில் நடந்த பயங்கர மோதலில் மிஸ்டர் சி.பி. லண்டன் என்ற துணைக் காவல் அலுவலர் மரண காயப்படுத்தப்பட்டார். ஐந்து மணி நேரத்திற்குப் பின்னர், சுமார் நானூறு கலகக்காரர்கள் கொல்லப்பட்டனர். சிதறி ஓடியவர்கள் போக எஞ்சியவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டும் கொடியன செய்து கொண்டும் ஓடி மறைந்தனர்.

தென் மலபார் மாவட்டக் காவல் அலுவலராக இருந்த ரிச்சர்டு இச்சாக் உடனடியாக இராணுவத்திற்கு நிகரான ஒரு தனிப்படை தேவையென்றும் அது மாப்பிளாகளை அடக்குவதற்கும், காவல்துறைக்குத் துணையாகப் பயன்பட வேண்டுமென்றும் கருதினார். அக்கருத்தை ஆதரித்த மாவட்ட நீதிபதியான தாமஸ், மாப்பிளாக்களை அடக்க ஒரு படை தேவையென்றும், அமைதி ஏற்பட்ட பிறகும் பிரிட்டிஷ் இணைப்பாக மலப்புரத்திலும் அதைச்சுற்றி ஏர்நாடு, வளுவநாடு போன்ற இடங்களில் இப்படையின் அணிகள் அமைய வேண்டுமெனவும், பெரும் பகுதி இந்து சிப்பாய்களும், மலபார் கர்வடிக் அணிகளிலிருந்து வெளியே வந்தவர்களும் இப்படையில் இடம் பெற வேண்டுமெனவும் அரசுக்குப் பரிந்துரை செய்து எழுதினார்.

அரசு நீதிபதியின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டதால் ஆறு வெள்ளை அலுவலர்கள், எட்டு சுபேதார்கள், பதினாறு ஜமேதார்கள், அறுபது அவில்தார்கள், 600 காவலர்கள் கொண்ட ஆறு 'கம்பெனி'கள் உருவாக்கப்பட்டு "மலபார் ஸ்பெஷல் போலீஸ்" என அழைக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு இந்த விசேட போலீசாருக்கு விதிமுறைகள் அமைக்கப்பட்டன. இப்படையை விரிவாக்கும் முழு பொறுப்பையும் ரிச்சர்டு இச்சாக்கே ஏற்றுக் கொண்டதால் அவருடைய தலைமையின்கீழ் அலுவலர்களும், காவலர்களும் இப்படையில் சேர்ந்து ஒத்துழைப்பு தந்தனர். அக்டோபர் 24-க்குள் படையின் பெரும்பகுதியினர் திறமைமிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். "ந" கம்பெனியின் அலுவலரான மிஸ்டர் கோல் புருக் ஒரு இராணுவ அலுவலராக இருந்து பின்னர் காவல்துறை அலுவலராக வந்தவர். இவரே முதல் துணைத் தளவாயாகவும், பின்னர் தளவாயாகவும் இருந்து சிறப்பிற்குரிய இப்படைக்கு அடிப்படை அமைத்த பெருமைக்குரியவராவார்.

இப்படையின் வெள்ளிவிழாவைச் சிறப்பித்து 1946-ஆம் ஆண்டு காவல் துறைத் தலைமை அலுவலர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், மாப்பிளா கலவரத்தால் உயிர்ச் சேதங்களும், பொருட் சேதங்களும் ஏற்

பட்டன. எனினும் அதனல் சில நன்மைகளும் உண்டு. அதுவே ''மலபார் ஸ்பெஷல் போலீஸ் படை'' என்றும், இப்படை கூரிய வாளாக இயங்கி பாதுகாப்பளிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

''மாப்ளா'' கலவரம் ஓய்ந்த பிறகும் கூட இப்படைக்கு ஓய்வு கிட்டவில்லை. ஆறுமாதத்திற்குள் நான்கு கம்பெனிகள் விசாகப்பட்டணத்திற்கு அனுப்பப்பட்டன. அங்கே அல்லூரி சீதாராமராஜு என்பவன் தன் சகாக்களுடன் ஆந்திரப் பிரதேசத்தில் பெரும் வழிப்பறி, கொள்ளை முதலியன நடத்தி வந்தான். இந்தக் கலகக்காரர்களை அடக்கி மலபார் ஸ்பெஷல் போலீஸ் வெற்றிவாகை சூடியது. 1924 மே 24-ஆம் நாள் கலகக்காரர்களின் தலைவர் சுடப்பட்டான். நான்கு காவலரும் உயிரிழந்தனர்.

இதற்குப் பின்னர் ஒரு பதினைந்து ஆண்டுகள் குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சிகள் ஒன்றுமில்லாமல் கடந்தது. எனினும் மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் இப்படை சென்று பாதுகாப்புப் பணி புரிந்தது. இக்கால கட்டத்தில் இவ்விளம் படை திறமை மிக்க தளவாய்களின் கண்காணிப்பில் தேர்ச்சியும், திறமையும் பெற்று மாப்பிளாக் கலவரத்திற்கென்றே அமைக்கப்பட்டிருந்தாலும் மாநிலம் முழுமைக்கும் தேவையான ஒரு பலம் பெற்ற அமைப்பாகிவிட்டது.

நாற்பதாண்டுகளுக்குப் பிறகு மலப்புரம் ஸ்பெஷல் போலீஸ் என்ற படை கலைக்கப்பட்டு 1925-இல் மலபார் ஸ்பெஷல் போலீஸ் படை உருவாக்கப்பட்டது. முந்திய படையிலிருந்தவர்கள் இப்புதிய படையில் சேர்ந்தனர். ஏழாண்டுகளுக்குப் பிறகு ஆறு கம்பெனிகளாக அடங்கிய படையாக்கப்பட்டது. இதனுடன் ஒரு தலைமை நிலையமும் அமைக்கப்பட்டது.

1939 செப்டம்பர் 3 ஆம் நாள் உலகப்போர் மூண்டபோது இப்படையின் பெரும்பகுதியினர் இராணுவத்தில் சேர்ந்தனர். முறையாகப் பயிற்சி பெற்ற இப்படைக்கு நல்ல வரவேற்பிருந்தது. உலகின் பல பகுதிகளுக்கும் சென்று தாம் திறமையைக் காட்டிப் போரிட்டனர். விரைவாகப் பதவி உயர்வுகளும் பெற்றனர்.

இரண்டாவது உலகப் போர் நெருக்கடி காரணமாக மாநில போலீசின் வேலைப்பளு அதிகமாகியது. நான்கு கம்பெனிகள் கொண்டிருந்த இப்படை பதினறு கம்பெனிகள் கொண்ட படையாக விரிவாக்கப்பட்டது.

அடுத்த ஆண்டில் (1947) இப்படையைப் பார்வையிட்ட இராயல் இண்டியன் சின் கர்னல் விட்மன், ''உடை நடை பயிற்சி பணி ஒழுங்கு எல்லாம் மிகச் சிறப்பாக இருந்தன. பயிற்சி தருவோர் தேர்ந்த திறமை பெற்றவர்களாகயிருந்தனர். படையினர் ஆர்வம் நிறைந்தவர்களாக இருக்கின்றனர்'' என்று குறிப்பிட்டார்.

இவர்களைவிடச் சிறந்தவர்கள் இல்லை என இப்படையின் அணிவகுப்பைஏற்றுக் கொண்டு குறிப்பிட்டார், அன்றைய சென்னை மாநில ஆளுநர் சர் ஆர்ச் பால்நை.

1959 ஆண்டு வரை இப்படையைச் சேர்ந்த 17 பேர் வீரப்பதக்கம் பெற்றுள்ளனர்.

மாநிலக் காவற் படைக்கு அடுத்த படையாக இருந்து இப்படை பாதுகாப்புப் பணிகளைச் செய்கிறது. ஆண்டு முழுவதும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் இப்படையின் தேவை இருந்து கொண்டே இருக்கிறது.

# போலி மருத்துவர்கள்

## டி. நாராயணசாமி

துணை ஆணையாளர், (குற்றப் பிரிவு)

அண்மையில் சென்னை நகரில் பொது மக்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதும், அவர்கள் தங்களை நம்பிச் சந்தேகப்படாமல் நெருங்கிப் பழகுவதைப் பயன்படுத்தி அவர்களது உடைமைகளைத் திருடிக் கொள்வதுமான குற்றம் புரியும் ஒரு புதிய 'கிரைம் வேவ்' நகரக் குற்றத் துறையினரின் ஆய்வுக்கு வந்துள்ளது.

திறமை நிறைந்த குற்றவாளிகள், இதுவரை அவர்கள் தெரியாமல் விட்டிருந்த மருத்துவத் துறையை இதற்குத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

இக்குற்றவாளிகள் தங்களை டாக்டர்கள் என்று சொல்லிக் கொண்டு பொதுமக்களை ஏமாற்றத் தொடங்கியுள்ளனர். இப்போது சில குற்றவாளிகள் படித்துப் பட்டம் பெற்ற உண்மையான டாக்டர்களின் தேர்வுச் சான்றிதழ்களைத் திருடியும், பொய்யான சான்றிதழ்களைத் தயாரித்தும் டாக்டர்கள் என்ற பெயரில் உலவி வருகின்றனர். இவர்களைப் பற்றிய தகவல்கள் இப்போது கிடைத்துள்ளன.

இவ்வாறு ஆள் மாருட்டம் செய்பவர்கள் பொதுமக்களை ஏமாற்றியிருப்பது மட்டுமில்லாமல், குற்றத் துறை அதிகாரிகளைக் கூட ஓரளவு திகைப்பு அடைய வைத்திருக்கிருர்கள். இக்குற்றவாளிகள் தாங்கள் பெற்றுள்ள குறிப்பிடத் தக்க ஆங்கில அறிவையும், திறமையான பகட்டையும் வைத்து—இப்போலி டாக்டர்கள் பொதுமக்கள் நம்பும்படி நடித்து எவரும் தங்கள் மீது எவ்வகைச் சந்தேகமும் கொள்ளாமல் இருக்கும்படி சில காலமாக ஏமாற்றியுள்ளார்கள். இமே இரண்டு மாற்றுப் பெயர்களை வைத்துக் கொண்டு, இரண்டு நகரங்களில் இரண்டு பெண்களை (ஒரு கிறிஸ்தவப் பெண்-ஓர் இந்துப் பெண்) மணந்திருக்கும் ஒரு போலி டாக்டரைப் பற்றிய செய்தியை தெரிந்து கொள்வோம்.

குமார் 27 வயதுள்ள ஒரு குற்றவாளி—கேரளத்தில் சீனியர் சர்டிஃபைட் பிரிவில் பள்ளியிறுதித் தேர்வில் தேறிய இளங் குற்றவாளி அங்கு உள்ள ஒரு மிஷன் மருத்துவமனையில் நர்சிங் ஆர்டர்லியாக அங்கு வேலைக்குச் சேர்ந்ததால், மருந்துகளின் பெயரையும் ஓரளவு மருத்துவ அடிப்படைகளையும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. பிறகு பெங்களூருக்கு வேலை தேடிச் சென்ற போது, மருத்துவத் துறையில் நிரப்பவாய்ப்புகள் உள்ளதைக் கண்டறிந்து அங்கே பட்டம் பெற்ற டாக்டராகப் போர்டு போட்டுக் கொண்டு ஒரு கிளினிக் திறந்தான். சில மாதங்களில் இக்குற்றவாளி ஒரு கிறிஸ்தவ செவிலியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டான். இன்னும் சில மாதங்களில் பெங்களூர் மருத்துவக் கல்லூரியிலிருந்த ஒரு டாக்டருடன் மிக நெருக்கமான தொடர்பு ஏற்படுத்திக் கொண்டான். பிறகு அந்த டாக்டர் சென்னையில் ஒரு வேலைக்குப் பேட்டிக்குச் செல்லவிருப்பதாகச் சொன்னதைப் பயன்படுத்தி, அந்த டாக்டருக்கு எல்லா உதவியும் செய்வதாகக் கூறி சென்னைக்கு வந்து அவருடன் தங்கியிருந்து திருட்டுத்தனமாக அவருடைய டாக்டர் தேர்ச்சிக்குரிய சான்றிதழ்களை எடுத்துக் கொண்டான்.

உண்மையான டாக்டர் தம் நண்பரான 'போலி' டாக்டரை நன்ருக நம்பியிருந்ததால் கொஞ்சமும் சந்தேகப்படாமல் தம் சான்றிதழ்கள் தொலைந்து விட்டதை அறிவித்து நகல் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

பெங்களூர் டாக்டரிடமிருந்து திருடிய உண்மையான சான்றிதழ்களை வைத்துக் கொண்டு, சென்னைக்கு வந்து 'வாலண்டரி ஹெல்த் சர்வீசில்' ஒரு பதவியைப் பெற்ருன். பின்பு, பொது மருத்துவமனையில் கௌரவ ஹவுஸ் சர்ஜனுக நியமனம் பெற்ருன்!

ஒரு கம்பெனியில் ஸ்டெனேவாகப் பணியாற்றிய ஒரு இந்துப் பெண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சமயம், அவளது தொடர்பைப் பெற்ருன். பிறகு அவளை இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்து கொண்டான்! அவள் பெயரில் ஒரு 'டிஸ்பென்சரி' திறந்து அதற்கு டெலிபோன் வசதியும் பெற்றதுடன், மருத்துவக் கருவிகள் வாங்குவதற்குப் பாங்கில் ரூ. 10,000 கடனுதவியும் பெற்றுள்ளான். அவன் 'எம்.டி.' படிப்புக்கும் கூட விண்ணப்பித்துள்ளான்.

இந்தப் போலி டாக்டர், சிகிச்சைக்குக் கொண்டு வந்த ஒரு குழந்தைக்கு வெளியே தடவுவதற்குரிய ஒரு மருந்தை உள்ளுக்குக் கொடுக்கும் படி எழுதிக் கொடுத்ததைப் பார்த்து, ஒரு 'பார்மசிஸ்ட்' இவர் டாக்டருக்குப் படித்தவரா என்று சந்தேகப்பட்டார். உடனே மேலதிகாரிகளுக்கு அறிவித்தார். மேலதிகாரிகளான டாக்டர்கள் கேட்ட கேள்விகளைப் போலி டாக்டர் ஆத்திரத்துடன் மறுத்தான். மருத்துவமனை அதிகாரிகள் குற்றத் துறைக்கு இந்நிகழ்ச்சியை அறிவித்துப் புலனுய்வுக்கு அனுப்பி வைத்தார்கள்.

'போலி டாக்டரி'டம் அவனுடைய சான்றிதழ்களைப் பெங்களூருக்குச் சென்று அதிகாரிகளுடன் சரி பார்த்து முடிவு செய்யும்படி கூறப்பட்டது. இதற்கிடையில் பத்திரிகைகளில் 'போலி டாக்டர்' பற்றிய செய்தி வெளிவரவும் குற்றம் புரிவதில் ஆழமாகத் தேர்ந்திருக்கும் மனம்படைத்த போலி டாக்டர் பத்திரிகைகளுக்குச் சட்டப்படியான நோட்டீஸ் அனுப்பியும் ஒரு நாடகம் நடத்தியிருக்கிருன்.

பிறகு ஆய்வாளர், சான்றிதழைச் சரிபார்ப்பதற்கு பெங்களூருக்குப் போலி டாக்டரை அழைத்துச் செல்வதற்காக அவன் வீட்டிற்குப் போன போது, ஆள் தலைமறைவாகிவிட்டான். ஆய்வாளருக்குச் சந்தேகம் வலுப்பெற்றது. பெங்களூரில் சான்றிதழ்களைச் சரி பார்த்ததில் உண்மையிலேயே அந்தச் சான்றிதழ்களுக்குரிய டாக்டர் அங்கே இருப்பதும், அவர் தம் சான்றிதழ்களுக்கு 'டூப்ளிகேட்' பெற்றிருப்பதும் புலனுயிற்று!

ஆய்வாளர் உண்மையான டாக்டருடைய புகைப்படத்துடன் சென்னைக்குத் திரும்பி 'போலி டாக்டர்' வீட்டுக்குச் சென்று அவர் மனைவியிடம் புகைப்படத்தைக் காட்டினர். உடனே அப் பெண் மயக்கமடைந்தாள். பிறகு அப்பெண் தன் உடைமைகளைச் சரி பார்த்த போது ரூ. 5,000 மதிப்புள்ள நகைகள் காணமல் போயிருந்தது தெரியவந்தது. உடனே ஆய்வாளர் அவ்வீட்டைத் துருவிப் புலனுய்ந்ததில் ஒரு புத்தகத்தில் ஓரே ஒரு தடயமாக மலையாளத்தில் எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்று அகப்பட்டது. அதிலிருந்து போலி டாக்டரின் உண்மையான பெயர், மதம், ஊர், முதலிய விவரங்கள் புலனுயின. உடனே கேரளத்துக்கு காவலர் சென்று அங்குள்ள காவல் துறையினரின் உதவியுடன் அங்கே வேருெரு பெயருடன் மீண்டும் போலி டாக்டராகவிருந்த அந்தக் குற்றவாளியைக் கைது செய்து கொண்டு வந்தனர். சென்னையிலும், பெங்களூரிலும் விற்பனை செய்யப்பட்ட நகைகளும் கைப்பற்றப்பட்டன.

இதோ, இன்னெரு போலி டாக்டர்! இவர் ஆந்திர மாநிலத்திலிருந்து வந்த ஒரு போலி நியூரோ சர்ஜன். பெரிய மருத்துவப் பட்டங்களை எடுத்துத் தாராளமாகத் தன் பெயருக்குப் பின் அடுக்கிக் கொண்டவன். பி.எஸ்சி. படித்த இம் மனிதன் ஆந்திரத்தில் ஆயுர்வேதத்தில் மருத்துவம் செய்து வந்துள்ளான். அசோக் நகரில் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, பெரிய மருத்துவப் பட்டங்களைப் பெயருக்குப் பின்னல் சேர்த்துக் கொண்டு ஒரு 'கிளினிக்' தொடங்கியதுடன் ஒவ்வொரு நாளும் பொது மருத்துவமனைக்கு ஆராய்ச்சி மேல் படிப்புக்காகப் போய்வருவதாகப் பாவனையும் செய்து வந்தான்.

போலி நியூரோ சர்ஜனுக மாருட்டம் செய்து வந்தது மட்டுமின்றி, ஒரு பெரிய டயர் கம்பெனியின் தயாரிப்புகளுக்குத் தென் இந்தியாவுக்குத் தானே முழு விற்பனையாளர் என்று பொய்யான ஆவணங்களை முத்திரைக் காகிதங்களில் தயாரித்து வைத்துக் கொண்டு ஏமாற்றி வந்தான்.

இப் பொய்யான ஆவணங்களை வைத்து வேலை தேடும் இளைஞர் ஒருவரிடம் அவருக்குக் கோயமுத்தூரில் அந்த டயர் கம்பெனியின் தயாரிப்புகளுக்கு விற்பனை யுரிமை தர ஏற்பாடு செய்வதாகக் கூறி ரூ. 16,000 ஏமாற்றிப் பெற்றுள்ளான். பின்பு 1973-ல் நேராகச் சென்னைக்கு வந்து, தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினுன்.

மூன்ரும் போலி மாருட்டக்காரன், ஒரு டாக்டர் வீட்டிலிருந்த சமையல்காரன்!

ஒரு ஓமியோபதி மருத்துவச் சான்றிதழ் பெற்றவன். அவன் தன் பெயருக்குப் பின்னல் 'எம்.டி.' பட்டத்தைச் சேர்த்துக் கொண்டு ஒரு கேரளா வாசிக்கு இங்கே மருத்துவக் கல்லூரியில் இடம்வாங்கி தருவதாகக் கூறி ஏமாற்றி ரூ. 15,000 வாங்கிருக்கிருன்.

எனவே, புலனுய்வு நடத்தும் அதிகாரி மிகுந்த சாதுர்யமும், தெளிவும் பக்குவமும் பெற்று இருக்க வேண்டியிருக்கிறது. பொது மக்கள் இந்த விழிப்புணர்வுடன் காவல் துறை ஆய்வுகளுக்குத் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.





607



பாவையர் படையினரின் அணிவகுப்பு மரியாதையினை முதல்வர் கலைஞர் ஏற்கிறார்.

# பணி புரியும் பாவையர் படை

சேங்கையினால் செங்கல்லை உடைக்க முடியுமா?

அதோ! ஒரு பெண் காவலர் 'கராத்தே' உடையில் வருகிறார். ஒரே நோக்கில் செங்கல் இரண்டாகப் பிளந்து கீழே விழுகிறது!

பெண்தானே, ஆண் வந்து தாக்கினால் இவர்களால் என்ன செய்ய முடியும் என்று நாம் நினைக்கிறோம். ஒரு முரடன் ஒரு பெண் காவலரைத் தாக்க வருகிறான். ஒரே நிமிடத்தில் பதிலடி தாங்க முடியாமல் கீழே விழுகிறான்!

பூவையரின் கரம், பூக்கரம் தானே என்று தாக்கவரும் பேர்வழிகள், தாக்குண்டு தவிக்கும் காட்சியும் அங்கே காண்கிறோம்.

கையில் 'கராத்தே' இருக்கும்போது 'கரடுமுரடு'களால் என்ன செய்யமுடியும்? என்று சொல்வதுபோல், பெண் காவலர்களின் வீர தீரச்செயல்கள் அன்று காண்போரை விந்தைக்குள்ளாக்கின.

நவம்பர் முதல் நாள்!

சென்னை எழும்பூரிலுள்ள இராசரத்தினம் விளையாட்டு அரங்கம்.



துணை ஆய்வாளர் ஏ.வி. உஷா தொலைபேசியில் செய்தி பெறுகிறார்.



அணிவகுப்பில் பெண் காவலர்கள்.

அட்டை சொல்லும் கட்டுரை

காவல்துறை அலுவலர்களும், பொது மக்களும் திரளாகக் குழுமியிருக்கின்றனர்.

அன்று தமிழகக் காவல் துறை வரலாற்றில் ஒரு முக்கியமான நாள்!

தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக அமைக்கப்பட்ட பெண் காவலர் படையினர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட நன்னாள். அது மட்டுமல்ல, அவர்களின் கம்பீரமான அணிவகுப்பின் மூலம் அவர்களை அறிமுகப்படுத்தும் நாளாகவும், முறைப்படிப் பணியில் சேர்த்துக் கொள்ளும் நாளாகவும் அது இருந்தது.

பெண் காவலர் தவிர, காவல்துறையின் பிற படையினரின் அணி வகுப்பும் மிகச் சிறப்பாக நடந்தது.

பெண் காவல் படையின் துணை ஆய்வாளர் செல்வி ஏ.வி உஷா பதவிப் பிரமாணத்துக்குரிய வாசகத்தைத் தமிழில் கூறுகிறார், அதைப் பெண் காவலர்கள் திரும்பக் கூறுகின்றனர்.

பிறகு அழகிய கம்பீரமான அணிவகுப்பு நம் எல்லாரையும் கவர்கிறது.



முதல்வரை வரவேற்று அணிவகுத்து வரும் (மகளிர்) குதிரைப்படை.



செங்கல்லை உடைக்கும் செங்கை!

அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களின் உரை, பெண் காவல்படையினருக்கு மேலும் ஊக்கந்தருவதாக இருந்தது :

''நீண்ட நெடுங்காலமாகக் காவல்துறையில் மகளிர் பிரிவு அமைத்திட வேண்டும் என்கிற முறையீடுகள் எழுப்பப்பட்டு, அந்த முறையீடுகளை இன்று முதற்கட்டமாகச் சென்னை மாநகரிலே நிறைவேற்றப்பட்டு அடுத்தடுத்து மற்ற மாவட்டங்களிலே தொடர்வதற்கான நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

''இந்தப் பிரிவில் இத்தனை நாளும் பயிற்சி பெற்றுள்ள பெண்மணிகளுக்கு இந்த நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இதுவரையில் இந்த மகளிர் பிரிவுக்கு மாதாந்திர ஊதியம் ரூ. 150 என்பது அடிப்படை ஊதியமாக அமைந்திருந்தது. இனிமேல் இன்று வெளியிடப்பட்ட அரசு ஆணையின்படி முதல்நிலைக் காவலர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியமான அடிப்படை ஊதியம் ரூ. 200 வழங்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பயிற்சி முடிந்து பணி தொடரச் செல்கின்ற பாலையர் படையினர் பதவியேற்பின் போது தெரிவித்தபடி நடுநிலை தவறாமல், நேர்மை தவறாமல், நெறி பிறழாமல் தங்கள் கடமையை ஆற்ற வேண்டும்''

காவல் படையினர், முதல்வரை வரவேற்று அணிவகுத்து வரும்போது குறிப்பாக இரு குதிரைகளையே அனைவரும் அதிசயமாகப் பார்த்தனர்.

இரு பெண்காவலர்கள்தான் அந்தக் குதிரைகளில் கம்பீரமாக வந்து கொண்டிருந்தனர். வெண்ணிறச் சீருடை அணிந்து வந்த அந்தப் பெண் காவலர்கள் எஸ். அரீஜ், என். சரசுவதி ஆகியோர் குதிரையேற்றத்தில் நல்ல பயிற்சி பெற்றுள்ளனர்.

பெண் காவலர்களுக்குக் கடந்த ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாளிலிருந்து பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. கராத்தே, துப்பாக்கியால் சுடுதல், குதிரை ஏற்றம் போன்ற பல்வேறு பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன.

இப்போது இவர்களுக்கான அலுவலகம் ஒன்று, எழும்பூர் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ளது.

துணை ஆய்வாளர் செல்வி ஏ.வி. உஷா தலைமையில் 20 காவலர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

தற்போது இவர்களுக்கென சில பணிகள் ஒதுக்கப் பெற்றுள்ளன.

1. தீய நடவடிக்கையுள்ள பெண்கள் நடமாடும் பகுதிகளில் ரோந்து சுற்றுதல்.

2. வீடு இல்லாத இளம் பெண்களுக்குப் பாதுகாப்புப் பணியும், விபசாரத்தில் ஈடுபட முயலும் பெண்களுக்குத் தடுப்புக் காவல் பணியும் புரிதல்.

3. விபசாரக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் காவலருக்கு உடன் சென்று உதவி புரிதல்.

4. பெண் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லுதல் மற்றும் நீதிமன்றங்களில் அவர்களுக்குக் காவல் புரிதல்.

'போலீஸ்' என்பது ஆளுதல் என்று பொருள்படும் போலீஷியா (POLITEA) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும்.



5. ரிமாண்டுக்குச் செல்லும் பெண் குற்றவாளிகளையும், விசாரணைக்குச் செல்லும் பெண் குற்றவாளிகளையும் அழைத்துச் செல்லுதல்.

6. பெண்களும், சிறுவர்களும் தாக்கப்பட்ட குற்றங்களில் விசாரணையின் போது காவலருக்கு உதவி செய்தல்.

7. அனாதைக் குழந்தைகளை அழைத்துச் சென்று தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு அவர்களுக்கு உதவி செய்தல்.

8. பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ள பெரிய பொதுக் கூட்டங்களுக்கும், திருவிழாக் கூட்டங்களுக்கும் சென்று, பெண் பகுதிகளில் அமைதி காக்கக் காவல் புரிதல்.

9. காவல்துறைத் தலைமை அலுவலர் அலுவலகம், ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றில் வரவேற்பாளராகப் பணி புரிதல்.

இவையன்றிக் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அலுவலருக்கு உதவியாக இருந்து, பெண்கள் கூறும் புகார்களைக் கவனிக்கவும் ஒரு பெண் காவலர் அமர்த்தப்பட்டுள்ளார்.

## புதுவையிலும் பெண் காவல் படை!

புதுவையிலும் பெண் காவற் படை அமைக்கப்படுகிறது. துவக்கத்தில் இரு துணை — ஆய்வாளர்கள், இரு தலைமைக் காவலர்கள், பத்துக்காவலர்கள் ஆகியோர் இப்படையில் இருப்பர்; இதற்கான தேர்வுகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

சென்னையைத் தொடர்ந்து மதுரை, கோவை, திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகர்களிலும் பெண்காவற்படையினை அமைக்கும் திட்டம் உள்ளது.

பெண் காவல் அணிக்கு முட்டை, பால் போன்ற சத்துணவு வழங்குவதற்கென அரசு ரூ. 5,940 அளிக்க இசைந்துள்ளது.

இவர்கள் தங்கள் பயிற்சிக் காலத்தின்போது பல்வேறு விழாக்களில் அணிவகுப்பு நடத்தியுள்ளனர். மதுரையில் நடந்த 'முதல்வர் காவலர் பதக்கம்' வழங்கும் விழாவிலும், சென்னை அண்ணாசாலையிலுள்ள காயிதேமில்லத் அரசினர் கலைக்கல்லூரி துவக்க விழாவிலும் இவர்களது அணிவகுப்பு மிகச் சிறப்பாக இருந்தது.

பெண் காவல் அணியில் உள்ள காவலர்கள் ஏற்கெனவே பல துறைகளில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றனர். காவலர் எம். சிசிலி என்பவர் தேசிய மாணவர் படையில் 'சார்ஜண்ட்' டாக இருந்தபோது மலையேறும் பயிற்சியில் கலந்து கொண்டிருக்கிறார். சிலர் முதலுதவியில் பயிற்சி பெற்றுள்ளனர். சிலர் தட்டச்சு பயின்று அதில் தேர்வு பெற்றுள்ளனர்.

இந்தியாவில் தில்லி, கல்கத்தா, பம்பாய், திருவனந்தபுரம் ஆகிய மாநிலங்களில் பெண் காவலர் படை செயற்பட்டு வந்தாலும், தமிழகம் பிற துறைகளில் எவவாறு முன் மாதிரியாகத் திகழ்கிறதோ, அதைப்போலத் தமிழ்நாட்டுப் பெண் காவல் படையும் ஒரு முன் மாதிரியாகத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—பி.வி.ஜி.

துணை ஆய்வாளரிடம் புகார் மனுவைத் தருகின்றனர்.



# காவல் துறை அதிகாரிகளுக்கு விஞ்ஞான உதவி

ப. சந்திரசேகரன்
குற்றஞ்சார்ந்த ஆய்வக உதவி இயக்குநர்

குற்றங்கள் எப்போதுமே சாட்சியங்களை வைத்துக் கொண்டு நடை பெறுவதில்லை. அப்படி நடை பெறுகின்ற ஒரு சில குற்றங்களைக் காண நேர்கின்றவர்களும் சாட்சி சொல்ல முன் வருவதில்லை. அப்படி சாட்சி சொல்ல வருகிறவர்களும் உண்மையைச் சொல்வதில்லை. அப்படி அவர்கள் உண்மையையே சொன்னாலும் அவர்கள் கண்களுக்கு அவை உண்மையாகத் தென்பட்டிருக்கலாம். ஆனால் பகுத்து ஆய்ந்து பார்க்கும்பொழுது அவைகள் உண்மைக்குப் புறம்பாக இருக்கும்.

சிலப்பதிகாரத்துப் பொற்கொல்லர், கோவலன் கையிலிருந்த சிலம்பு காணமற்போன அரசியின் காற்சிலம்பைப் போலவே உருவ அமைப்பில் ஒத்திருந்ததால் அதை அரசியின் சிலம்பு என்றே திட்டவட்டமாக வாய் மொழிச் சாட்சியம் தந்தார். என்றாலும், காவியுகு நீரும் கையிற்தனிச் சிலம்புமாகக் கண்ணகி பாண்டியன் அரசவைக்குச் சென்று அச் சிலம்பு அரசியினுடையது அன்று, தன்னுடையதே என்கின்ற உண்மையை அச் சிலம்பை உடைத்து உள்ளிருக்கும் பரல்களை, மாணிக்கம் என்று காண்பித்ததன் மூலம் அச் சிலம்பு தன்னுடையதே என்று நிரூபித்தாள். இவ்வாறு தன் கணவன் குற்றம் அற்றவன் என்ற உண்மையை நிரூபிக்க உயிரற்ற பொருளான சிலம்பு தடயப் பொருளாகக் கண்ணகி வழக்கிலே பயன்பட்டது. இது போன்ற உயிரற்ற தடயப் பொருள்கள் வாய் மொழிச் சாட்சியங்களை விட உயர்வான சாட்சியங்களாக அமைகிறது என்பதை இளங்கோவடிகள் அழகாக, சிலப்பதிகாரத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்த அடிப்படைத்தத்துவத்தில்தான் தமிழ்நாடு குற்றத் தடயப் பொருள் ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. குற்றம் துலக்குவதிலே, காவல் துறையினருக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட பலவகையான தடயப் பொருள்களை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து உதவி அளிக்கும் பணியை மிகச் சிறப்பாகத் தமிழ்நாடு ஆய்வகம் செய்து வருகிறது. குற்றம் துலக்குவதில் விஞ்ஞான முறையைப் பயன்படுத்துவது அண்மைக் காலத்திலே ஏற்பட்ட ஓர் முறை என்றாலும், தமிழகத்தில் 1849-ஆம் ஆண்டிலேயே இதற்காக ஒரு ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆய்வகம் ஆசியாவிலேயே முதலாவதாக நிறுவப்பட்ட ஆய்வகம் ஆகும். இந்த ஆய்வகம் முதன் முதலில் குற்ற வழக்குகளில் மருத்துவ வல்லுநர்களுக்கு உதவி செய்வதற்காக தமிழகத்தில் 125 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்டது. மீண்டும் 1905-ல் காவல் துறைக்கு என்றே தனிப்பட்ட ஓர் ஆய்வகம் சிறிய அளவில் அமைக்கப்பட்டது. 1959-ம் ஆண்டில் இந்த இரு ஆய்வகங்களையும் ஒன்றாக இணைத்து முதன் முதலாகக் குற்றத் துறைத் தடயப் பொருள்கள் ஆய்வகமாக நிறுவப்பட்டது. தமிழ் நாட்டில் இருக்கும் இந்த குற்றத் துறை தடயப் பொருள்கள் ஆய்வகமானது தன்னுள் 7 துறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன: துப்பாக்கிப் பிரிவியல், உயிரியல், வேதியல், ஆவணக் காப்பியல், இயக்கவியல், இரத்தக் கூறுபாட்டியல், நஞ்சு இயல். இந்த 7 துறைகளோடு அல்லாமல் தனியாக ஓர் ஆராய்ச்சித் துறையையும் கொண்டுள்ளது இந்தியாவிலேயே தமிழகம் ஆய்வகம் ஒன்றுதான்.

இந்த ஆய்வகத்தில் ஆராயப்படும் குற்றத் தடயப் பொருள்கள் திருடப்பட்ட காரிலிருந்து கொலை நடந்த இடத்தில் கிடக்கும் ஒரு சிறு மயிரிழை வரை பலதரப்பட்ட பொருள்களாகும். ஒரு மனிதனையோ அல்லது இன்னொரு ஊர்தியினையோ இடித்துவிட்டு அந்த இடத்தில் நிற்காமல் ஓடி மறைந்து விடுகின்றமோட்டார் கார் அல்லது லாரி போன்ற வாகன ஊர்திகளைக் கண்டு பிடிக்கின்ற வழக்கில், அந்த விபத்து நடந்த இடத்தில் கிடக்கக்கூடிய சிறு கண்ணாடித் துண்டுகள், சிறு வண்ணத் துகள்கள், மட்கார்டிலிருந்து உதிர்ந்த மண் தூள்கள் ஆகிய பொருள்களை அந்த இடத்திலிருந்து சேகரித்துக் காவல் துறையினர் அனுப்புவார்கள். அதுபோல, சந்தேகப்பட்ட வாகனத்தைப் பிடித்து அவைகளில் இடிபட்ட மனிதனின் இரத்தமோ, சதையோ அல்லது மயிரிழையோ அல்லது அவர் ஆடையிலிருந்து கழன்று அந்த வாகனத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் நூல் இழை போன்றவைகளையும் கைப்பற்றி ஆய்வகத்திற்கு அனுப்புவர். இந்தச் சிறு சிறு தடயப் பொருள்களை ஆராய்ந்து அந்த மனிதனை இடித்துச் சென்றது இந்த வாகனம்தானா என்பதை விஞ்ஞான முறையில் கண்டு பிடித்து உதவுகிறது ஆய்வகம். இது போலவே கொலை வழக்குகளில் துப்பாக்கி உபயோகப் படுத்தப்பட்டால் சம்பந்தப்பட்ட துப்பாக்கியும் இறந்தவனின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட குண்டையும் ஆராய்ந்து இந்தக்குண்டு இந்தத்துப்பாக்கியிலிருந்து வந்தது தானா என்பதை ஆராய்ந்து திட்டவட்டமாக அறிவிக்க முடிகிறது. இது போல நஞ்சுண்டு தற்கொலை செய்துகொள்ளும் வழக்குகளிலும் அல்லது நஞ்சு வைத்துக் கொலை செய்யும் வழக்குகளிலும் அவர்கள் உட்கொண்ட நஞ்சு என்ன என்பதை இறந்தவனின் உடல் உறுப்புகளிலிருந்து கண்டு பிடித்து உதவுகிறது. சில கொலை வழக்குகளில் அடையாளம் தெரியாமல் பிணங்களை மறைத்து விட்டால்கூட அந்த எலும்புக் கூடுகளை வைத்துக் கொண்டு இறந்தவனின் புகைப்படம் இருந்தால் அந்த புகைப்படத்தையும் இறந்தவனின் மண்டையோட்டையும் வைத்து, இது இறந்தவனின் மண்டையோடுதானா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு புதிய முறையையும் தமிழ்நாடு ஆய்வகத்தில் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

முன்னால் கூறியதுபோல வாய் மொழிச் சாட்சியங்கள் இல்லாத அல்லது இருந்தும் பயன்படாத பல வழக்குகளில் இதுபோன்ற மௌன சாட்சியங்களாக விளங்கும் இந்தத் தடயப் பொருள்களை இந்த ஆய்வகத்தில் ஆராய்வதன் மூலம் உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கவும், நிரபராதிகளை விடுவிக்கவும் முடிகிறது. இப்படிக் காவல் துறையில் பல வழக்குகளில் உதவி செய்ய வேண்டியதன் பொருட்டு ஒவ்வொரு காவல் துறை மாவட்டத்திலும் விஞ்ஞான உதவியார்களைத் தமிழக அரசு நியமித்துள்ளது. இந்த விஞ்ஞான உதவியாளர்களுக்கு என்றே ஒரு இயங்கும் ஆய்வகம் ஒவ்வொரு காவல்துறை மாவட்டத்திலும் செயல்பட்டு வருகிறது. இந்த உதவியாளர் குற்றம் நடைபெற்ற ஒவ்வொரு இடத்திற்கும் உடனே இந்த இயங்கும் ஊர்தியில் தன்னுடன் ஒரு புகைப்பட நிபுணரையும், விரல் ரேகை நிபுணரையும் அழைத்துச் சென்று இது போன்ற தடயப் பொருள்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடித்து, அவைகளின் மூலம் என்னென்ன உண்மைகளைப் பெற முடியும் என்றும் காவல் துறையினருக்கு அறிவிக்கின்றனர். இதுபோன்ற விஞ்ஞான உதவி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் கிடைக்கும்படி இயங்கும் ஊர்திகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் முறை இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒன்றாகும். மேலும், மதுரையிலும், கோவையிலும் இரு வட்டார ஆய்வகங்களும் இந்த ஆண்டு துவங்கப்பட்டு இருக்கின்றன. அடுத்த ஆண்டு திருச்சியிலும் ஒரு வட்டார ஆய்வகம் தொடங்க வேண்டும் என்ற ஆலோசனைக் குறிப்பு அரசிடம் உள்ளது.

இந்த ஆய்வகமானது இது போன்ற குற்றத் தடயப் பொருள்களை ஆய்வதோடு மட்டும் அல்லாமல் காவல் துறையினருக்கு இந்தத் துறையில் தேவையான பயிற்சியை



ஆய்வகத்தின் உதவி இயக்குநர் குற்றத் தடயப் பொருட்களை ஆராய்கிறார்



டாக்டர் செய்த்திம்சன் குற்றஞ்சார்ந்த அறிவியல் குறித்து விரிவுரையாற்றுகிறார்





நடமாடும் குற்றாய்ந்த அறிவியல் ஆய்வகத்தின் உட்புறத் தோற்றம்

குமார்—....

யும் தொடர்ந்து அளித்து வருகின்றது. காவல் துறையில் நியமிக்கப்படும் உதவி ஆய்வாளர் இரண்டு வாரங்கள் இந்த ஆய்வகத்தில் தங்கி பயிற்சி பெற வேண்டும் என்கின்ற முறை சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டும் அல்லாமல், 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்கனவே அலுவலில் இருக்கும் காவல் முதுநிலை ஆய்வாளர்களுக்கும் அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை மட்டும் அன்றி, இந்தத் துறையில் பட்டம் பெறவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களுக்கும், இந்தத் துறையையே தங்களுடைய தொழிலாக மேற்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கும் வசதியாக எம்.எஸ்.சி. பட்டப் படிப்பு ஒன்று வருகின்ற ஆண்டிலிருந்து இந்த ஆய்வகத்தில் துவங்கப்பெற இருக்கின்றது. ஒரு ஆய்வகமே முன் வந்து எம்.எஸ்.சி. அளவிற்குப் பட்டப்படிப்பை நடத்துவது என்பது முதன் முதலாக இந்தியாவிலேயே இந்த ஆய்வகம் தான். மைசூா, சாகர் போன்ற பல்கலைக் கழகங்கள் இந்தத் துறையில் எம்.எஸ்.சி. பட்டப் படிப்பு வைத்து இருக்கின்றன. என்றாலும் அவைகள் ஒரு ஆய்வகத்தோடு இணைத்து நடத்தப்படுகின்ற வகுப்பு ஆகாது.

காவல் துறையினருக்கு நடத்தப்படும் அனைத்திந்திய போட்டியில், தமிழகத்தைச் சேர்ந்த காவல் துறையினர் கடந்த 5 ஆண்டுகளாக முதல் பரிசைப் பெற்று வருகிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம் இந்த ஆய்வகத்திலே அளிக்கப்பட்ட தனிப் பயிற்சி தான். காவல் துறையினர் தங்கள் வேலையில் ஈடுபடும் போது எப்படிப்பட்ட விஞ்ஞான உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக 8 போட்டிகள் இருக்கின்றன. இந்த 8 போட்டிகளிலும் முதன்மையாக வந்து பல பரிசுகளைத் தொடர்ந்து 5 வருடங்களாகப் பெற்று வருவது தமிழகக் காவல் துறையினரின் தனிச் சாதனையாகும். இந்தச் சாதனையைப் பெறுவதற்கேற்ற வகையில் 5 மாதங்களுக்கு முன்பே போட்டியிடுபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கு வேண்டிய பயிற்சிகளை இந்த ஆய்வகம் அவர்களுக்கு அளிக்கிறது.

இது போன்ற ஆய்வகங்கள் பல மாநிலங்களில் இருக்கின்றன என்றாலும் இந்த ஆய்வகம் திறமையுடன் செயல்படுகின்ற நிலை தமிழ் நாட்டிலே இருப்பதற்கு மிக மிக முக்கிய காரணம் காவல் துறையினர் இந்த ஆய்வகத்தைப் பெரிதும் பயன்படுத்தும் ஒரு தன்மையே ஆகும். அதற்குத் தகுந்த முறையில் தமிழக அரசும் காவல் துறைத் தலைமை அதிகாரி அவர்களும் இந்த ஆய்வகத்தின் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்துகிறார்கள் என்றால் அது மிகையாகாது.

இந்த ஆய்வகத்தின் உதவி இயக்குநர் திரு ப. சந்திரசேகரன் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெறும் அனைத்திந்திய போட்டிகளில் பங்கு பெறும் காவல் துறையினருக்குப் பயிற்சி கொடுப்பவராகவும், அப்படிப் பல்வேறு மாவட்டங்களிலும் நடந்த அனைந்திந்திய போட்டிகளில் கலந்து கொண்ட தமிழகக் குழுவுடன் பயிற்சியாளராகச் சென்று, தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளிலும், தமிழக குழுவே விஞ்ஞான உதவிப் போட்டிகளில் முதற் பரிசைத் தட்டி வரக் காரணமாயிருந்தவர்.



## 'இன்டர்போல்' என்றால் என்ன?

அனைத்து நாட்டுக் காவல் படைக்குத்தான் 'இன்டர்போல்' என்று பெயர்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, அதாவது 1946 ஆம் ஆண்டிற்குப் பிறகு இதன் புகழ் பெருமளவில் பரவி வருகிறது.

இந்தக் காவற்படை, ஒரு நாட்டு விஷயத்தை உலகம் முழுவதற்கும் பரப்பி உதவி பெறச் செய்வதற்குப் பயன்படுகிறது. தகவல்கள் தருவது, உள்நாட்டுக் காவல்படையை தயார்ப்படுத்துவது போன்றவை இதன் வேலை.

அனைத்து நாட்டுக் காவல்படையின் தலைமை நிலையம் பாரிசில் இயங்குகிறது. இந்த நிலையத்தில் சுமார் 85 பேர் பணியாற்றி வருகின்றனர். இங்கு ஒரு குற்றப் பிரிவு அலுவலகமும், கைரேகைப் பிரிவும் உள்ளன. உலகமெங்கணும் நடக்கும் பல்வேறு வழக்குகளின் விவரங்கள் இங்கே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது எப்படிச் செயல்படுகிறது?

இது, உறுப்பினராயுள்ள நாடுகளுடன் அஞ்சல், தொலைபேசி, டெலக்ஸ் ஆகியவற்றின் மூலமும், விசேட வானொலி ஒலிபரப்புகள் மூலமும் தொடர்பு கொள்கிறது. இவையன்றி இதற்குச் சொந்தமாக ஒரு வானொலி நிலையம்கூட இருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டுக் காவல்படையும், இந்த நாட்டுக் காவல் படையுடன் தொடர்பு கொள்ள தனித் துறை ஒன்றை வைத்திருக்கிறது.

# தமிழ்நாட்டில் காவல் வானொலி



மு.கி. சாரங்கபாணி
(காவல் வானொலி அலுவலர்)

எழும்பூரிலுள்ள மாஸ்டர் கன்ட்ரோல் அறை

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மாப்ளா கலகக்காரர்களை ஒடுக்குவதற்கென அனுப்பப்பட்ட சென்னை சிறப்புக் காவல் படையினர் ஐந்தாறு வான் தந்தி நிலையங்களைப் பயன்படுத்தித் தங்களுக்குள் செய்திப் போக்குவரத்து ஏற்படுத்திக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இரண்டாவது உலகப்போர் முடிவடைந்த பின்னர் செய்திப் போக்குவரத்துக் கருவிகளை இந்தியாவிலுள்ள காவல் துறைகளுக்குச் சொற்ப விலையில் வழங்கியதாகவும், போர்க் காலங்களில் படைகளின் பல்வேறு முகாம்களிடையே இரகசியச் செய்திப்போக்குவரத்துக்காகப் பயனளித்த வகையில் காவல்துறையினருக்கு உதவ, பல வான் தந்தி நிலையங்கள் மாவட்டத் தலைமையகங்களிலும் மாநிலத் தலைமையகங்களிலும் நிறுவப்பட்டதாகவும் தெரிய வருகிறது. ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன், வான் தொலைபேசிக்கருவிகள் பொருத்தப்பட்ட ரோந்து வண்டிகள் இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, புதுடில்லி, சென்னை ஆகியநகரங்களில் முதன் முதலாகப் புகுத்தப்பட்டன.

இலண்டன் மாநகரில் இன்று கால்நடை ரோந்துக் காவலர் கூட தனது எல்லைக்குள், தெருக்கோடியில் உள்ள கம்பமொன்றில் பொருத்தப்பட்ட பெட்டியிலிருந்து, சிறு வான் தொலைபேசிக் கருவி ஒன்றை எடுத்துக் தன் பணியைத் துவக்கியதற்கு அறிகுறியாக அவருடைய காவல் நிலையத்திற்கு அறிவிக்கிறார். பிறகு, அதன் வாயிலாக அவருடைய எல்லையின் சிறப்புக் குறிப்புகளைத் தனது நிலையத்திற்கு அவ்வப்போது தெரிவிப்பது மட்டுமல்லாமல், நிலையத்திலிருந்து வரும் அவசர உதவிக் கோரிக்கைகளையும் உடனுக்குடன் கவனிக்கிறார்.

அமெரிக்காவிலோ, ஐயுறப்பட்ட ஊர்தியொன்றைத் தொடர்ந்து செல்லும் காவல் அலுவலர் தனது மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்ட வான் தொலைபேசி மூலம் விசாரித்து அந்த ஊர்தியின் ஏனைய விவரங்களைச் சில நிமி டங்களில் அறிந்து கொள்கிறார், பல நூறு மைல்களுக்கப்பால் உள்ள அனைத்துக் குறிப்புகள் தொகுப்பு நிலையமொன்று, அந்த ஊர்தியின் பதிவு எண் களை ஆய்ந்து சில நிமிடங்களில் அதுபற்றிய தகவல்களைக் கூறுகிறது. அதாவது ஒரு வேளை அந்த ஊர்தியில் ஆயுதந்தாங்கிய வழிப்பறிக் கொள்ளைக் காரர்களோ, கடத்தல்காரர்களோ இருப்பதற்கு ஐயமுண்டு. அதனால் அவர்களை மடக்குவதற்குத் தகுதியான வழிவகைகளைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்குமளவுக்கு வசதிகள் உள்ளன.

தமிழ்நாடு காவல்துறைத் தலைவர், இன்று கால்நடையாக ரோந்து செல்லும் காவலர் முதற்கொண்டு வான் தொலைபேசிகளைப் பயன்படுத்திக் காவல் பணியினைச் செவ்வனே செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். மாவட்டத் தலைமையகங்கள் அனைத்தும்



வாக்கி டாக்கி

# கேளுங்கள்? கொடுக்கப்படும்

பதில்கள்

– ஆர்.எம்.



**வினு:** மனுநீதி நாள் என்ருல் என்ன? அதன் பயன் யாது ?

—எம். வீரப்பன்,
டி. இராமலிங்கபுரம்,
சாத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்

**விடை:** மனுநீதிச் சோழன் ஆட்சிக்குப் பிறகு 15-9-1969 வரை தமிழகப் பொதுமக்கள் தங்கள் குறைகளைச் சொல்ல வேண்டுமானுல் - முடியாட்சி காலத்தில் மன்னர்களுக்கு அல்லது மக்களாட்சி நடைபெறும் இக்காலத்தில் தொடர்புடைய அமைச்சர்களுக்கு, அல்லது அலுவலர்களுக்கு எழுத்து மூலமாகவோ அல்லது நேரிலோ தான் தெரிவிக்க வேண்டிய நிலை இருந்து வந்தது! அப்படிக் குறைகளைக் கூறினுலும், அவைகளைக் களைந்திடுவதில் மிகுந்த காலதாமதம் இருந்து வந்தது!

ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை அமைத்திட வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயல்படும் இன்றைய தமிழ்நாடு அரசு, இனியும் அத்தகைய நிலை இருந்திடக் கூடாது என்று எண்ணியது ! எண்ணிய எண்ணத்தை திட்டமாகத் தீட்டியது! நீதி வழுவாது அரசாண்ட மனுநீதிச் சோழ மன்னனின் நினைவாக 'மனுநீதித் திட்டம்' என்று பெயரிட்டு 15.9.69 முதல் செயல்படுத்தத் துவங்கியது!

அத்திட்டப்படி, பொதுமக்கள்-அதுவும் குறிப்பாக கிராம மக்கள்-தங்கள் குறைகளைத் தெரிவித்திட செலவு செய்து கொண்டு அலுவலர்களைத் தேடி வருவதற்குப் பதிலாக, அலுவலர்களே ஒரு குறிப்பிட்ட நாளில் - முன்னறிவிப்பு செய்தபின்-ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று குறைகளைக் கேட்டறிந்து, கூடுமானவரை அங்கேயே அக்குறைகளைத் தீர்த்திட வேண்டுமென்று, இன்றைய தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. அதன்படி, பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்கள்-முன்னறிவிப்பு செய்தபடி-குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிவதுடன், குறைகள் பற்றிய மனுக்களைப் பொதுமக்களிடமிருந்து பெற்று, தொடர்புடைய அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, கூடுமானவரை அங்கேயே குறைகளைக் களைந்திடுகின்ருர்கள். உடனே முடிவு செய்யமுடியாத நிலையில் உள்ள பெருஞ்செலவு செய்ய வேண்டிய கோரிக்கைகளும், சட்டப் பிரச்சினை உட்பட்ட கோரிக்கைகளும் பிறகு கவனிக்கப்படுகின்றன. நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேறுகின்றன!

இப்படி, பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவைகளைத் தீர்த்திட அரசு அலுவலர்களே பொதுமக்களை-குறிப்பாக கிராமமக்களை - சந்திக்கும் நாளுக்கே ''மனுநீதி நாள்'' என்று குறிப்பிடப்படுகிறது. இம் மனுநீதி நாளில், தமிழ்நாடு அரசின் அமைச்சர்களும் அவ்வப்பொழுது கலந்து கொண்டு மக்கள் குறைகளையும் பணிக்கு ஊக்கமூட்டுகின்ருர்கள்.



மனுநீதித் திட்டத்தினுல் கிராம மக்களுக்குப் பெரும் பயன்கள் ஏற்பட்டுள்ளன ! நிலமற்றவர்களுக்கு நிலப்பட்டாவும், வீடற்றவர்க்கு வீட்டுமனைப்பட்டாவும், நல்ல சாலையும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும், பள்ளிக்கூடமும், இன்னபிறவும் மனுநீதித் திட்டத்தினுல் கிடைத்துள்ளன ! எனவே தான், இத்திட்டத்திற்கு கிராம மக்களிடமிருந்து நல்ல ஆதரவு இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

மனுநீதித் திட்டம் துவக்கப்பட்ட 15-9-1969 முதல் 30-9-1969 வரையான காலத்தில் மனுநீதித் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற மனுக்களும், தீர்க்கப்பட்ட குறைகளும் பின் வருமாறு உள்ளன.

குறைகளும், கோரிக்கைகளும் அடங்கிய மனுக்கள் வந்தவை—7,50,885.

உடனுக்குடன் முடிவு செய்யப்பட்டு, குறைகள் அகற்றப்பட்ட, கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட மனுக்கள்—6,97,945.

மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மொத்த மனுக்களில், 93 சத மனுக்களில் கண்ட குறைகள் களையப்பட்டு, கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்பது தெளிவாகிறது.

மனுநீதிச் சோழன், மக்கள் குறைகளை அறிய ஆராய்ச்சி மணியை அமைத்தான்! ஆனுல் ''மக்கள் குரலே மகேசன் குரல்'' என்று கருதும் இன்றைய தமிழ்நாடு அரசு, மக்கள் குறைகளைக் கேட்டறிந்து அவைகளைக் களைய, மக்களைத் தேடி அரசு அலுவலர்களை அனுப்புகிறது! இதைவிடச் சிறந்த பொதுமக்கள் தொடர்புத் திட்டம் உலகில் எங்கும், என்றும், இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்ருேம். (குறிப்பு: தாங்கள் கொடுத்த மனு நியாயமான கோரிக்கையாக இருந்தால், காலதாமதமானுலும் நிறைவேறும். இதுவரை பதில் வரவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். தாங்கள் விரும்பினுல், தங்கள் கொடுத்த மனுவைப் பற்றிக் குறிப்பிட்டு, உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மனு அனுப்பலாம்.)

**வினு:** தமிழ் நாடு அரசு புதிதாகத் துவக்கியுள்ள பொதுமக்கள் குடும்ப நல பென்ஷன் திட்டத்தில் பதவியில் இருக்கும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சேர்ந்து கொள்ளலாமா? அவ்வாறு சேர்ந்து கொள்ளும் அரசு ஊழியரோ அல்லது ஆசிரியரோ தன் பதவிக் காலத்திலிருந்து ஓய்வு பெறும்போது அவர் வகித்த பதவிக்குரிய பென்ஷன் மற்றும் பொது மக்கள் குடும்ப நல பென்ஷன் என்று இரண்டு வகையான பென்ஷன்களையும் பெற இயலுமா? அப்படி இரு வகையான பென்ஷன்களையும் ஒருவர் பெற வாய்ப்பு இருந்தால் அவருக்குத் தனித்தனியே கிடைக்க வேண்டிய இரண்டு பென்ஷன்களின் கூட்டுத் தொகை முழுவதும் கிடைக்குமா?

என்னைப் போன்ற ஆசிரியர்கட்கும், அரசு ஊழியர்கட்கும் எழுந்துள்ள இந்த ஐயப்பாட்டினைத் தாங்கள் ''தமிழரசு'' தமிழ் இதழ் மூலம் களையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

—வை. இரத்தினசாமி,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
வெள்ளப்பள்ளம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை:** தமிழ் நாடு அரசு புதிதாகத் துவக்கியுள்ள திட்டத்தின் பெயர் ''பொதுமக்கள் குடும்பநல பென்ஷன் திட்டம்'' அல்ல! அதன் சரியான பெயர் ''1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்'' என்பதேயாகும்.

இந்த ஆண்டில் ''பேரறிஞர் அண்ணு'' அவர்கள் பிறந்த நாளில் அறிவிக்கப்பட்டு, பண்டித நேரு அவர்கள் பிறந்த நாளில் துவக்கப்பட்டுள்ள தமிழ் நாடு அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து கொள்ளலாம். அரசு ஊழியர் பதவியிலிருந்து ஓய்வு பெறும்போது பதவிக்குரிய ஓய்வூதியத்தைப் பெறமுடியும். ஆனுல் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், பதவி ஓய்வு



பெற்றவுடன், ஓய்வூதியம் பெற முடியாது. அரசு ஊழியர்கள் 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம், 25 ஆண்டு காலம் என்று குறிப்பிட்டுள்ள காலம் வரை மாதம் தோறும் தவருமல் பணம் செலுத்திய பிறகு தான், 30 ஆண்டு காலத்திற்கு தொடர்ந்து சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற முடியும். இரண்டு வகை ஓய்வூதியத்தையும்பெற எந்த விதத் தடையும் இல்லை. ஆனுல் தனித் தனியாகவே பெற்றுக் கொள்ள வேண்டும். ''1974-ஆம் ஆண்டின் சமூகப் பாதுகாப்புத் திட்டம்'' பற்றி ''தமிழரசு'' 1—12—1974 தேதிய இதழுடன் வெளியிட்டுள்ள இலவச இணைப்பு உங்கள் ஐயங்களைப் போக்கிடும் என்று நம்புகிருேம்.

**வினு:** நான் 'Concrete cultivation' 'முறைப்படி 'Pusa-long purple' என்ற ரகக் கத்தரி பயிரிட்டேன். 9 அங்குல மண்கண்டம் இருக்கிறது. கூட, மழைகாலம் இருந்தும் செடிகள் 1 அடி கூடச் சரியாக வளரவில்லை. விதைத்தது, நடவு செய்தது உள்பட மொத்தம் சுமார் 100 நாட்களுக்கு மேல் ஆகிறது. செடிக்கு வளர்ச்சி இல்லையே தவிர எந்தவித நோயும் வந்ததாகத் தெரியவில்லை. எந்த விதப் பலனும் இதுவரையில் இல்லை. இது பற்றி விவரமான காரணங்கள் அறிய விரும்புகின்றேன். தயவு செய்து விளக்கம் தரும்படி வேண்டுகிறேன்.

—ஆர். மல்லீஸ்வரி,
பெருமாள் முதலி தெரு,
கொண்டித்தோப்பு,
சென்னை-600001.

**விடை:** 'பூசாநீண்ட ஊதா' (Pusa-long purple) என்ற கத்தரி ரகம் தமிழ் நாட்டில் சற்று மெதுவாகவே காய்க்கத் துவங்குகிறது. டெல்லியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ரகம், தமிழ்நாட்டுத் தட்பவெட்ப நிலையில் காலந்தாழ்த்தி காய்க்கத் துவங்கிறது என்று அனுபவ அடிப்படையில் பலர் கூறுகிருர்கள். அதுவும் குறிப்பாக மழை காலத்தில் வளர்ச்சி குன்றியே காணப்படும். ஆனுல், தாங்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் 100 நாட்கள் ஆகியும் 1 அடி உயரம் கூட வளராமல் இருக்காது! எனவே, தாங்கள் பயிரிட்டுள்ள முறையில் தவறு இருக்கக்கூடும்! 'கான்கிரீட் தளத்தின்' மேல் நல்ல மண் இட்டு, போதிய இரசாயன உரமும் இட்டு கத்தரி நட்டிருந்தால், இவ்வாறு வளர்ச்சி குன்றியிருக்க முடியாது. அல்லது தங்கள் கத்தரியில் பூச்சி அல்லது நோய் தாக்கியிருக்கக்கூடும். அல்லது 'கான்கிரிட்' தளத்தில் தண்ணீர் தேங்கி-வடிகால் வசதியின்றி-எப்பொழுதும் மண் ஈரமாகவே இருந்தாலும், தண்ணீர் உவர் அல்லது உப்புநீராக இருந்தாலும் கத்தரிச்செடியின் வளர்ச்சி குன்றியே காணப்படும். நேரில் செடிகளைப்பார்த்



தால்தான் சரியான காரணத்தைக் கூறமுடியும். எனினும், மேற்கூறிய காரணங்களால் தங்கள் செடி பாதிக்கப்படவில்லை எனில், உடன் ஒவ்வொரு செடிக்கும் ஒரு தேயிலைக்கரண்டி (Tea spoon) அளவுக்கு அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட்டுத் தண்ணீர் விடும்படி பரிந்துரைக்கின்ருேம். மேலுரமிட்டால் கத்தரிச் செடிகள் வளர்ந்து, பூத்துக் காய்த்திடத் துவங்கும்!

**வினு:** ஐ.ஆர். 20 நெல் நாற்று நட்டவுடன் பசுமை கொடுத்து தழையாமல் நுனித் தோகைகள் வெண்மை நிறத்தில் கருகிக் காய்ந்து விடுகிறது. சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு தான் நாற்று நல்ல பசுமை கொடுத்து தழைக்கிறது. இதற்கு என்ன காரணம்? நாற்று கருகாமல் தழைய என்ன செய்ய வேண்டும்? இதைத் தவிர்ப்பது எப்படி? நெற்

பயிர் முதிர்ந்து கதிர்பரவ
லாக வெளியே தெரியும்
பொழுது (பூட்டை பூராவும்
வாங்கிய பிறகு) இலைச்சுருட்
டும் புழு விழுந்து தோகைகளைச்
சுருட்டிக் கொண்டு சாற்றை
உறிஞ்சி விடுகிறது. இதைக்
கட்டுப்படுத்த எந்த மருந்தை
தெளிக்க வேண்டும்? அளவு
என்ன? கதிர் வாங்கிய பிறகு
மருந்து தெளித்தால், நெல்
மணிகள் பாதிக்கப்படுமா ?
பாதிக்கப்படாமல் இருக்க
எந்த மருந்தைத் தெளிக்க
வேண்டும்?

—மு. பெரியசாமி,
தொக்குப்பட்டி,
கரூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**விடை:** பொதுவாக, நாற்று
நட்ட பிறகு ஒரு வாரம் கழித்
துத்தான் நெற்பயிர் பச்சைக்
கட்ட ஆரம்பிக்கும். ஏனெனில்,
பிடுங்கி நடப்பட்ட நாற்றில்
புதிதாக வேர்கள் கிளைத்து
மண்ணில் நிலைத்து நின்றிட
குறைந்தது 7 நாட்கள் ஆகக்
கூடும். நடவு வயலுக்குப்
போதிய தழைச்சத்து, மணிச்
சத்து, சாம்பல் சத்து இட்டு
நடவு செய்திருந்தால், விரை
வாக வேர் வளர்ந்து, விரை
வாகப் பயிர் பச்சைக் கட்டும்.
அவ்வாறு போதிய சத்து அளிக்
காமல் நடவு செய்தால், வேர்
பிடித்து பச்சைக் கட்ட 10
முதல் 15 நாட்கள்கூட ஆக
லாம்! ஆகவே, நட்ட பயிர்
உடன் பச்சை கட்ட நடவு
வயலுக்குப் போதிய அளவு
இரசாயன உரமிடுதல் அவ
சியமாகும்.

நடப்பட்ட பயிர்களை
வெள்ளைத் தத்துப்பூச்சிகளும்,
பச்சைத் தத்துப் பூச்சிகளும்
தாக்கியிருக்கக்கூடும். அல்லது
நாற்றங்காலிலேயே இவ்வகைத்
தத்துப்பூச்சிகளால் தாக்கப்
பட்டிருக்கக்கூடும். இவை
களின் தாக்குதலினாலும் பயி
ரின் தோகைகள் பசுமை
யிழந்து காய்ந்துவிடக் கூடும்.
எனவேதான், நாற்று பறிப்ப
தற்கு ஒரு வாரம் முன்பாக
நாற்றங்காலில் மருந்து தெளிக்
கும்படி பரிந்துரைக்கப்படு
கிறது.

தாங்கள், நடவு செய்த ஒரு
வாரத்தில் நாற்று நல்ல பசுமை
கொடுத்து தழைக்கிறது என்று
கூறியுள்ளதால், தங்கள் நாற்
றில் தத்துப் பூச்சிகள் தாக்கி
யிருக்காது என நம்புகின்
றோம். ஒரு வாரத்தில் பச்சை
கட்டுவது இயற்கையே! புதிய



வேர் தோன்றி மண்ணில் பயிர்
நிலைத்து நிற்க ஆகும் காலத்
தில் பயிர் வெளுத்துக் கருகிக்
காணப்படுவது கண்டு, கவலை
யுற வேண்டாம்!

இலைச்சுருட்டும் புழு 'முன்
பெல்லாம் அதிகம் சேதம் விளை
விக்காத சாதாரணப் பூச்சி
யாகவே (Minor pest) கருதப்
பட்டது. கடந்த இரண்டு
ஆண்டு காலமாக 'இலைச்சுருட்
டும் புழு', கதிர்வந்த பிறகு
தோன்றி, நெல்லில் பெரும்
சேதம் ஏற்படுத்தி வருகிறது.
அதற்கு முன்பு இலைச்சுருட்டும்
புழுவால் நெல்லில் அதிகச்
சேதம் ஏற்பட்டதில்லை! ஆனால்
குறிப்பாக 'ஐ.ஆர்.8', 'காஞ்சி'
'ஐ.ஆர். 5', 'ஜெயா' 'பத்மா'
'பங்கஜ்', 'பொன்னி', 'கோ.
32', 'பவானி', 'ஐ.ஆர். 20'
ஆகிய அகன்ற இலையுள்ள
உயர்விளைச்சல் தரும் ரகங்களி
லேயே அண்மைக்காலத்தில்,
இலைச்சுருட்டும் புழு பெருமள
வில் தோன்றி சேதம் விளை
வித்து வருகிறது. பச்சை நிற
மாகவும், கருந்தலையுடனும்
இருக்கும் இப்புழு, தோகை
களின் மேல்பாகத்தைச்
சுரண்டி உண்ணுகிறது. இத
னால் பயிரின் தோகைகள்

காய்ந்து, கதிரின் வளர்ச்சியும்
பாதிக்கப்படுகிறது.

இலைச்சுருட்டும் புழுவின்
தாக்குதலைத் தவிர்க்க
'வருமுன் தடுப்பு' முறையாக
(Prophylactic measure) நாற்று
நட்டு 15 நாட்களுக்குப்
பிறகு ஒருமுறையும், பிறகு 15
நாட்கள் இடைவெளியில் 3
முதல் 4 முறைகள்-தேவைக்
கேற்ப-பின்கண்ட மருந்து
களில் ஏதேனும் ஒன்றை 200
லிட்டர் தண்ணீரில் கலந்து
கையால் இயக்கும் தெளிப்
பான் மூலம் தெளிக்க வேண்
டும்.

'பாரத்தியான்' 200 மில்லி
லிட்டர்

அல்லது





'மெட்டாசிட் கோம்பி'
1,120 மில்லி லிட்டர்

அல்லது

'கிலியோடாக்ஸ்' 1,000
மில்லி லிட்டர்

விசைத் தெளிப்பான் பயன்
படுத்தினால் மேற்கூறிய அளவு
மருந்தை 60 லிட்டர் தண்ணீ
ரில் கலந்து தெளிக்க வேண்டும்.

வருமுன் தெளிப்பு முறையை
மேற்கொள்ள முடியாவிட்டால்
இலைச்சுருட்டும் புழு அங்கொன்
றும் இங்கொன்றுமாகக் காணப்
பட்ட உடனேயே, மேற்கூறிய
மருந்தில் ஒன்றைத் தெளிக்க
வேண்டும். தேவையானால், 15
நாட்களுக்குப் பிறகு மறுமுறை
யும் தெளிக்க வேண்டும்.

பொதுவாக, கதிர் முழுவ
தும் வெளிவந்த பிறகு திரவ
மருந்தைத் தெளிக்கக்கூடாது.
(கதிர்நவாய் பூச்சிக்குக்கூட
'பி.எச்.சி. 10 சதத்தூள்'
மருந்தையே தூவ வேண்டும்
என்பதை நினைவில் கொள்ள
வேண்டும்). கதிர் வருவதற்கு
முன்பாகவே அதாவது தொண்
டைப் பூவாக இருக்கும் சமயத்
திலேயே மேற்கூறிய மருந்து
களில் ஒன்றைத் தெளிக்க முற்
படுங்கள்.

**வினா:** 1-11-74 தேதிய தமி
ழரசு இதழில் 'ரொபஸ்டா'
வாழையைப் பற்றியும், அதன்
சாகுபடி முறையைப் பற்றியும்
குறிப்பிட்டுள்ளீர்கள். அவ்
வகை வாழை, செங்கை மாவட்
டத்தில் நல்ல பலனைக் கொடுக்
குமா? 'ரொபஸ்டா' வாழைக்
காய் பதார்த்த வகைக்கு ஏற்
றதா? அதாவது காயைச்
சமைத்துச் சாப்பிட்டால்
சுவையாக இருக்குமா? அங்
காடியில் அவ்வகைக் காய்க்கு
நல்ல விலை கிடைக்குமா?
'ரொபஸ்டா' வாழைக்கன்று
கள் செங்கைமாவட்டத்தில்
எவ்விடங்களில் கிடைக்கும்?

—கே. விஜயகுமார்,
புதுவயல்,
செங்கற்பட்டு மாவட்டம்.

**விடை:** 'எட்டடி வாழை'
எனப்படும் 'ரொபஸ்டா'
வாழை, செங்கை மாவட்டத்
தில் நல்ல பலனைக்கொடுக்கும்.
'ரொபஸ்டா' வாழைக்காய்
பதார்த்த வகைக்கு ஏற்றது
தான். ஆனால் முற்றிய காய்
கள் ஓரளவு இனிப்பாக இருக்கு
மாதலின், வாழைக்காய் வறுவ
லும், கறியும் ஓரளவிற்கு இனிப்

பாகவே இருக்கும். இது சில
ருக்குப் பிடிக்காது. 'ரொ
பஸ்டா' வாழைக்காயைச்
சமைத்துச் சாப்பிட்டால்
சுவையாக இருக்கும். குறிப்
பாக வாழைக்காய் 'பஜ்ஜி'
செய்ய இவ்வகை வாழைக்காய்
விரும்பப்படுவதாகத் தெரிய
வருகிறது. ஆனால் பொது
வாகச் சமையலுக்குப் பெரும்
பாலோர் 'மொந்தன்' வாழைக்
காயையே விரும்புவதால்,
'ரொபஸ்டா' வாழைக்காயை
சமையலுக்குப் பயன்படுத்தும்



பழக்கம் குறைவாகவே உள்
ளது. 'ரொபஸ்டா' வாழைப்
பழத்திற்குத் தமிழ்நாட்டில்
மட்டுமல்ல, வெளிமாநிலங்களி
லும், வெளிநாடுகளிலும் நல்ல
தேவை (கிராக்கி) உள்ளது.
எனவே, பெரும்பாலும்
'ரொபஸ்டா' வாழையைப்
பழத்திற்காகவே பயன்படுத்து
கின்றூர்கள். 'ரொபஸ்டா'
வாழைத்தார்களை (காய்கள்
பழுக்காத, ஆனால் முற்றிய
நிலையில்) அங்காடியில் நல்ல
விலைக்கு விற்க முடியும்.
செங்கை மாவட்டத்தில் பல
முக்கிய உழவர் பெருமக்கள்
'ரொபஸ்டா' வாழை பயிரிட்டு
பயன் அடைந்து வருகிறார்கள்.
அவர்களிடமிருந்து உங்களுக்
குத் தேவையான 'ரொபஸ்டா
வாழைக்கன்றுகளைப் பெற
லாம். உங்கள் ஊருக்கு அருகா
மையில் எங்கு 'ரொபஸ்டா'
வாழைக்கன்று கிடைக்கும்
என்பதை அறிய ஊராட்சி
ஒன்றிய துணை வேளாண்மை
அலுவலர் (வளர்ச்சி) அவர்
களைக் கலந்தாலோசியுங்கள்.
அல்லது வட ஆர்க்காடு மாவட்
டம், வேலூரில் உள்ள 'தனி
மாவட்ட வேளாண்மை அலு
வலர் (வாழை)' அவர்களுக்கு
எழுதி, தரமான 'ரொபஸ்டா'
வாழைக்கன்றுகளைப் பெற
லாம்.

**வினா:** மானாவாரி பருத்திச்
சாகுபடி (எம்.யு.சி. 5) செய்
யும் போது கலப்புப் பயிராக
உளுந்தை அதில் விதைக்க
லாமா? இந்தப் பகுதியில்
அப்படி விதைத்தால், ஒரு
வகை நோய் வருகிறது. அதா
வது இலைகள் சிறுத்து, சுருங்கி,
பழுப்பு நிறம் அடைந்து, செடி

யின் வளர்ச்சி குன்றி விடு
கிறது. இதனால் மகசூலும்
குறைந்து விடுகிறது. இதே
நோய், பருத்திச் செடியையும்
தாக்குவதாக ஒரு சிலர் கூறு
கிறார்கள். இது உண்மையா?
அப்படியானால் இது என்ன
நோய்? இதை எப்படித்
தடுப்பது? வந்த பிறகு என்ன
மருந்து தெளிப்பது?

—க.சி. கிருட்டினன்,
சின்ன கரடியூர்,
கரடியூர் அஞ்சல்,
தருமபுரி மாவட்டம்.

**விடை:** மானாவாரி பருத்தி
யுடன் கலப்புப் பயிராக
உளுந்தை விதைக்கலாம்.
தாங்கள் குறிப்பிட்டுள்ளதை
வைத்து 'திட்ட வட்டமாக
உளுந்தில் என்ன நோய் தாக்கி
யுள்ளது என்று கூற இயலாது.
அநேகமாக தாங்கள் கூறியுள்
ளது சாம்பல் நோயாக
(Powdery mildew) இருக்கும்
என்று எண்ணுகிறோம். இந்
நோய்தான், உளுந்தைத் தாக்
கும் முக்கிய நோயாகும். இந்
நோய் தாக்கிய உளுந்துச்
செடிகளின் இலையின் மேல்
வெண்மையான சாம்பல்
போன்ற திட்டுக்கள் காணப்
படும். அதிகமாகத் தாக்கப்
பட்ட இலைகள் வளர்ச்சி இன்றி
சுருங்கி, பழுப்பு நிறமடைந்து,
உதிர்ந்து விடக் கூடும். இத
னால் மகசூலும் குறைந்துவிடும்.
சாம்பல் நோய்தான் என்பது
திட்ட வட்டமாகத் தெரிந்
தால், உளுந்து விதைத்த 40-
வது நாளில், ஏக்கருக்கு 7
கிலோ கந்தகத் தூளைத் தூவ
வேண்டும்.

உளுந்தைத் தாக்கும் சாம்
பல் நோய், பருத்தியைத் தாக்
காது; ஆனால் உளுந்தைத் தாக்
கும் இலைப் புள்ளி நோய்,
பருத்தியையும் தாக்கக்கூடும்.

தங்கள் உளுந்தை, என்ன
நோய் தாக்கியுள்ளது என்
பதைச் சரியாகத் தெரிந்து
கொள்ளவும், அதைத் தடுப்ப
தற்குரியமருந்தையும், அளவை
யும் அறிந்து கொள்ளவும்,
நோய் தாக்கிய உளுந்துச்
செடி ஒன்றை எடுத்துச்சென்று
உங்கள் ஊராட்சிஒன்றிய துணை
வேளாண்மை அலுவலர்
(வளர்ச்சி) அவர்களிடம்
காட்டி ஆலோசனை பெறு
வதே சிறந்தது.

**வினா:** நான், எங்கள் தோட்
டத்தில் கத்தரி பயிர் செய்து
உள்ளேன். கத்தரி செடி காய்க்
கும் நிலையில் இருக்கிறது.

ஆனால் செடிகள் நட்டு மூன்று மாதத்திற்கு மேலாகியும், பூக்கள் விடவில்லை. காய்களும் காய்க்கவில்லை. ஒரு சில விவசாயிகள் கிணற்றுத் தண்ணீரை விட்டால்தான், செடி பூக்கும் என்று சொல்கிறார்கள். மழை ஈரம் நிலத்தில் இருக்கும் பொழுது, கிணற்று நீரைப் பாய்ச்சுதல் அவசியம்தானா ? இக்கருத்து உண்மையா?

— வாசுதேவன்,
ஆலயாந்துப்பாறை,
கிருட்டினகிரி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.

விடை : மழை பெய்ததால், நிலத்தில் ஈரம் இருக்கும் பொழுது, கிணற்று நீரைப் பாய்ச்சுதல் அவசியம் இல்லை. கிணற்று நீரைப் பாய்ச்சினால் தான் கத்தரி பூக்கும் என்பதற்கு, அறிவியல் அடிப்படையில் எந்த வித ஆதாரமும் இல்லை! போதிய உரம் இட்டு, பயிர்ப் பாதுகாப்பும் செய்து வந்தால், கத்தரி பூத்துக் காய்க்கத் தவறாது. உங்கள் ஊர்நல ஊழியரை அல்லது துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அழைத்துச்சென்று கத்தரிச் செடிகளைக் காட்டி தகுந்த ஆலோசனை பெறுவதே சிறந்தது.

வினா : அகில இந்திய வானொலியின் சென்னை ஒலிபரப்பில், 'பையனைக் காணவில்லை' என்ற பகுதியில் அறிவிக்க, நான் எந்த முறையில் சென்னை வானொலியினரை அணுக வேண்டும்? அதற்குக் கட்டணம் ஏதேனும் உண்டா? விவரங்களை அன்புகூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

கு. ராமன,
'தமிழரசு' ஏஜெண்ட்,
பஸ் நிலையம்,
குன்னூர்,
நீலகிரி மாவட்டம்.

விடை : 'பையனைக் காணவில்லை' என்பதை அங்க அடையாளங்களுடன் சென்னை வானொலியில் தெரிவிக்க விரும்பினால், உங்கள் ஊர் காவல் துறை உதவி ஆய்வாளர் (Police Sub-Inspector) அவர்களிடம் கூறி, 'தங்கள் பையன் காணவில்லை என்பது உண்மையே' என்று அவரிடம் ஒரு அத்தாட்சி வாங்கி உங்கள் பையனின் வயது, அங்க அடையாளம் முதலியவைகளையும் குறிப்பிட்டு எழுதி, பின்கண்ட முகவரிக்கு அனுப்பவும் :

"நிலைய இயக்குநர்,
சென்னை வானொலி நிலையம்,
சென்னை—600004."



இவ்வாறு ஒலிபரப்பு செய்ய கட்டணம் ஏதும் இல்லை!

வினா : 1965-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு 3 மாதம் சிறையில் இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று கேள்விப் பட்டேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு 2 மாதம் சிறையில் இருந்த என் நண்பர் ஒருவர் தற்போது வாழ வழியின்றிக் கஷ்டப்படுகிறார். அவர் ஓய்வு ஊதியம் பெற வழி உண்டா? யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

—எஸ். ராமு,
திருப்பூர்,
கோவை மாவட்டம்.

விடை : 1937-ஆம் ஆண்டு முதல் 1965-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கு கொண்டதன் காரணமாக மூன்று திங்களுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை பெற்றவர்களுக்கு மாதம் ரூபாய் 75 ஓய்வூதியம் வழங்கப்படும் என்று, முன்பு தமிழ் நாடு அரசு அறிவித்திருந்தது. தற்பொழுது ஒரு மாத காலம் சிறைத் தண்டனை பெற்றவர்களும், இவ்வோய்வூதியம் பெற தகுதியுடையவர்கள் என்று தமிழ் நாடு அரசு அறிவித்து உள்ளது. எனவே, உங்கள் நண்பருக்கும் ஓய்வூதியம் கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கான மனு படிவங்களைப் பெற உங்கள் ஊரில் உள்ளவட்டாட்சியாளரையோ (தாசில்தார்) அல்லது மாவட்ட ஆட்சியாளரையோ (கலெக்டர்) அணுகும்படி உங்கள் நண்பருக்குத் தெரிவிக்கவும்.

வினா : நான் தொழில் நுட்பக்கல்லூரியில் பயின்று 'என்ஜினீயரிங் டிப்ளமா' பெற்று உள்ளேன். நான் தற்பொழுது 'Pre stressed Concrete poles' தயாரிக்கும்சிறு தொழிற்கூடம் ஒன்று நிறுவ ஆசைப்படுகிறேன். மேலும் இதை நிறுவுவதற்குத் தேவையான 'Project Report' என்னிடம் உள்ளது. இதை நிறுவுவதற்கு ரூபாய் 2.50 இலட்சம் தேவைப்படுகிறது. இதை நான் அரசாங்க உதவி பெற்றால்தான் நிறுவ முடியும். எனவே, இதற்குத் தேவையான தொகையை மத்திய அரசு அல்லது மாநில அரசு ஆகிய இரண்டிலும் எந்த அரசின் மூலம் சுலபமாகப் பெறலாம்? பெறுகின்ற முறை, அதற்கு தேவையான முகவரி, ஆகியவற்றை மிகத் தெளிவாக விளக்குமாறு மிக மிகப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். மேலும் இந்தக் கடன் உதவி எவ்வளவு நாட்களில் கிடைக்கும் என்றும், இதை எவ்வளவு நாட்களில் திரும்ப அளிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கும்படிகேட்டுக்கொள்கிறேன்.

—எம். ஆனந்தராஜ்,
பிராதாபராமபுரம்,

விடை : சிறு தொழிற்சாலைகள் அமைக்க தற்பொழுது இந்திய அரசோ அல்லது தமிழ் நாடு அரசோ நேரடியாகக் கடன் வழங்குவதில்லை. தாங்கள் 'Pre-stressed Concrete poles' தயாரிக்கும் சிறுதொழிற்கூடம் அமைக்க "சிட்கோ" (SIDCO) என்று சுருக்கமாகக் கூறப்படும் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தில் கடன் உதவி பெற முடியும். தாங்களிடம் உள்ள திட்டக் குறிப்புகளை (Project Report) எடுத்துச் சென்று, பின்கண்ட அலுவலகத்தில் கடன் உதவி பெறுவது பற்றிய ஆலோசனை பெறலாம்.

தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
கண்ணம்மைக் கட்டடம்,
122, அண்ணா சாலை,
சென்னை—600006.

சென்னை வருவதற்குச் சங்கடமாக இருந்தால் திருச்சியில் உள்ள பின்கண்ட அலுவலகத்தில் கலந்தாலோசிக்கவும் :

தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனக் கிளை அலுவலகம்,
1-எ, ஈ.வெ.ரா. சாலை,
புத்தூர்,
திருச்சிராப்பள்ளி.

உங்கள் பகுதியில் உள்ள நாட்டுடைமையாக்கப் பட்ட வணிக வங்கிகளில் இருந்தும், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவில் இருந்தும், சிறு தொழில் துவங்க கடன் பெறலாம். தாங்கள் தொடங்க விருக்கும் சிறு தொழிலைப் பற்றி, உங்கள் பகுதியில் உள்ள உதவி இயக்குநர், தொழில் வணிகத் துறை அவர்களிடம் முதலில் தாங்கள் ஆலோசனைப் பெறுதல் சிறந்தது. அவர் கூறும் முறையில் தாங்கள் கடனுதவி பெற முயற்சிக்கலாம்.






தமிழ்நாட்டில் ஏறக்குறைய ஆறு இலட்சம் ஏக்கர் நன்செய் நிலங்களில், நவரைப் பட்டத்தில் அதாவது மார்கழி—தை மாதம் முதல் சித்திரை—வைகாசி மாதம் வரை, சுமார் 4 முதல் 4.5 மாத காலம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கோவை, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களைப் பொறுத்த வரை, சுமார் 40,000 ஏக்கர் நிலப்பரப்பில், இந்தப் பட்டத்தில் நெல் சாகுபடி செய்யப் படுகிறது. காளிங்கராயன் வாய்க்கால் பாசனப் பகுதிகளில் உள்ள மூன்றும் போக வயல்கள், கீழ்பவானி நீர்த் தேக்கத் திட்டத்தில் முறைத் தண்ணீரின் பயன் பெறும் நன்செய் நிலங்கள் ஆகியனவற்றைத் தவிர ஏனைய பகுதிகளில் கிணற்று நீரின் உதவியால் இறைவைப் பயிராக நவரை நெல் சாகுபடியாகிறது. சாகுபடியாகும் நிலப் பரப்பு இப் பட்டத்தில் குறைவாக இருந்த போதிலும் உழவர் பெருமக்கள் வியக்கத் தக்க அளவு மகசூல் பெற ஏற்ற சூழ்நிலை அமைந்துள்ளது. மற்ற பட்டங்களைப் போல் அல்லாமல் இப் பட்டத்தில் பூச்சி அல்லது பூசணத்தால் பயிர் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. மேலும் சூரிய வெப்பமும், வெளிச்சமும் கூடிய கோடை காலமாக இருப்பதால், தழைச் சத்து கிரகிக்கப்படும் திறன் அதிகரித்து, நெல் அமோக விளைச்சல் கொடுக்கின்றது. அதிசய நெல் 'ஐ.ஆர். 8', இந்தப் பட்டத்தில்தான், மற்ற பட்டங்களைக் காட்டிலும் 20 முதல் 30 சதவீதம் அதிக மகசூலைக் கொடுத்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்து நவரைப்பட்டத்திற்கு ஏற்ற நெல் வகைகள் யாவை என்று சற்றுக் கவனிப்போம். தண்ணீரின் வசதி, உழவர் பெருமக்களின்தேவை, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது 105 நாட்களிலிருந்து 135நாட்கள் வரை வயதுள்ள நெல் வகைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. குறுகிய கால குட்டை ரக உயர் விளைச்சல் நெல் வகைகளான 'காஞ்சி', 'கண்ணகி', 'திரு 'காவேரி', 'கருணா', 'கிருஷ்ணா' வேணி', 'கோ. 37' என்ற 7 மற்றும் ரகங்களும் எந்தெந்தப்பட்டங்களுக்கு உகந்தவை என்று முடிவு செய்யத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கிளை ஆராய்ச்சி நிலையங்களான பவானி சாகர், மற்றும் ஆளியார் ஆராய்ச்சிப் பண்ணைகளிலும், உழவர்களின் வயல்களிலும், சென்ற ஆண்டு இரு பட்டங்களிலும் பரிசோதனை நடத்தப்பட்டன. இதேபோல நடுத்தர கால நெல் வகைகளான 'ஐ.ஆர். 20', 'ஐ.ஆர். 22', 'ஐ.ஆர். 24', 'பவானி', 'கோ. 36', 'ஐ.ஈ.டி. 1991' மற்றும் 'கோ. 32' என்ற திருச்செங்கோடு சம்பா ஆகியவை ஆடி—ஆவணி மாதத்திய முதல் பட்டத்திலும், பிறகு கோ. 36 மற்றும் கோ. 32 ஆகிய இரு வகைகளைத் தவிர, மற்றவைகள் நவரைப் பட்டத்திலும் பரிசோதனைப் பாத்திகளில் சாகுபடி செய்யப் பட்டன. பொதுவாக, 'காஞ்சி' 'வைகை', 'திருவேணி' மற்றும் 'கண்ணகி' ஆகிய நான்கு வகைகளும் ஆடி—ஆவணி மாதத்திய முதல் பட்டத்திற்கும், தை மாதத்திய நவரைப் பட்ட சாகுபடிக்கும் ஏற்றவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இவ் வகைகள், முதல் பட்டத்தைவிட நவரைப் பட்டத்தில் ஏக்கருக்கு 200 முதல் 600 கிலோ வரை அதிக மகசூல் கொடுக்கின்றன.

நடுத்தர கால நெல் வகைகளுள் 'கோ. 36', 'பவானி' மற்றும் 'ஐ.ஆர்.20' ஆகிய மூன்றும் ஆடி—ஆவணி மாதத்திய முதல் பட்டத்திற்கு ஏற்றதாகவும், 'பவானி', 'ஐ.ஆர். 20' ஆகிய இரு வகைகளும் நவரைப் பட்டத்திற்கு மிகவும் சிறந்தவை என்றும் பரிசோதனை மூலம் தெரிய வருகிறது. நல்ல தரமான அரிசியையுடைய 'பவானி', 'ஐ.ஆர். 20' ஆகிய இரு ரகமும் ஏக்கருக்கு 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் கொடுக்கின்றன.

எனவே, தண்ணீர் வசதியைப் பொறுத்து, 105 முதல் 120 நாட்கள் வரை வயதுள்ள 'காஞ்சி', 'இரு 'வைகை', 'கண்ணகி' வேணி' மற்றும் ஆகிய நான்கு நெல்வகைகளும் நடுத்தர, கால நெல் ரகங்களான—அதாவது 125 முதல் 135 நாட்கள் வரை வயதுள்ளவை—'பவானி' மற்றும் 'ஐ.ஆர் 20. ஆகியவையும் நவரைப்பட்டத்தில் சாகுபடி செய்வதற்கு மிகவும் ஏற்றவை என்று பரிந்துரைக்கப் படுகின்றன.

நவரைப் பட்டத்திற்கு ஏற்ற நெல் வகைகளின் சிறப்பு இயல்புகள் கீழே விவரிக்கப்டுள்ளன.

காஞ்சி : 'சுதேச்சங்ரேடில்' —1' என்ற நெல்லையும், 'கோ. 29' என்ற குலைநோய், தாக்காத அறுபதாங்கோடை நெல்லையும் கருச் சேர்க்கை செய்து கோயமுத்தூரில் உருவாக்கப்பட்டது. வயது 115 முதல் 120 நாட்கள். அரிசி

VOLTAS

# தாராளமான சக்தி ஏராளமான விளைச்சல்

## வோட்டா

### எலெக்ட்ரிக் பம்ப்செட்டின் தனிச்சிறப்பு

உங்கள் வயலுக்கென்றே விசேட முறையில் உருவாக்கப்பட்டது வோட்டா எலெக்ட்ரிக் பம்ப் செட். உங்கள் நிலத்திற்கு வேண்டிய நீர்த் தேவைகளை அறிந்து இயங்குவது. வேண்டிய அளவு நீர் பெற வழி செய்கிறது. அதுவும் வேண்டியபொழுது, வேண்டிய இடத்தில். கடுமையான வேலைத்திறனுடன் நீண்ட கால உழைப்பைத்தரும் வகையில் உருவாக்கப்பட்டது. கம்பகமானது, உறுதியானது, திடமானது. முழுதும் மூடப்பட்ட ஃபேன் கூல்ட் மின்சார மோட்டாருடன் (TEFC) சேர்ந்து பெறக் கூடியது. வறண்ட நிலத்தையும் தொடர்ந்த நீர்ப்பாசனத்தின் மூலம் வளம்படுத்துகிறது. நிமிடத்திற்கு 451 முதல் 3825 லிட்டர் நீர் இறைக்கும் திறன் கொண்டது. உபயோகத்திற்கு வெகு சிக்கனமானது.

வோட்டா மோனோப்ளாக் பம்ப்செட்டுகளும் கிடைக்கின்றன

வோல்டாஸ் மற்றும் நாடெங்குமுள்ள அவர்களுடைய விற்பனையாளர்கள் விற்பனைக்குப் பின் அளிக்கும் சர்வீஸ் வசதி இணைந்தது.

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
வோல்டாஸ் லிமிடெட்,
அக்ரோ இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன், பம்பாய் 400 033.
கல்கத்தா . சென்னை . புது டில்லி . பெங்களூர் . லக்னோ . பாட்னா
அகமதாபாத் . செகந்திராபாத் . கொச்சி . போபால் . ஜெய்ப்பூர்
ஜெம்ஷெட்பூர்.



வோல்டாஸ்—செழுமையான விளைச்சலைப் பெருமளவில் பெற உழவர்களுக்கு உதவுகிறது.

நடுத்தரமானது. நவரைப் பட்டத்திற்கு மிகவும் ஏற்ற நெல். 'ப்ளாஸ்ட் நோய்' மற்றும் இலை நோய் ஆகியவற்றால் தாக்கப்படும்.

வைகை: (கோ. 37) இது காஞ்சி நெல்லின் சந்ததியிலிருந்து கிடைக்கப் பெற்ற 'ஐ.ஈ.டி. 849' என்ற ஆய்வு வகை அல்லது கல்ச்சர் நெல்லாகும்.




அதிக விளைச்சல் கொடுக்கும் திறன் கொண்டது. வயது 115 முதல் 120 நாட்கள். அரிசி காஞ்சியை விடச் சன்னமானது, சற்றுத் தரமானது. இவ் வகை, குலை நோய் மற்றும் 'பிளாட் நோய்' ஆகிய பூசணை, பாக்டீரியா நோய்களின் தாக்குதலையும், இலைச் சுருட்டுப் புழு, தத்துப் பூச்சி ஆகியவற்றின் தாக்குதலையும் ஓரளவு எதிர்த்தாளும் தன்மை உடையது. ஆனால் தழைச் சத்து உரம் ஏக்கருக்கு 50 கிலோவுக்கு அதிகமானால் பயிர் சாய்ந்துவிடும்.

சத்து குறிப்பிட்ட அளவுக்கு அதிகம் கொடுத்தால், நெற்கதிரின் கழுத்து பாகம் குலை நோயால் தாக்கப்பட்டு, மகசூல் குறைந்துவிடும்.

'திருவேணி': இது 'அன்னபூரணா' என்ற நெல்லையும் நல்ல தரமான 'பட்டாம்பி-15' என்ற நெல்லையும் கருச் சேர்க்கையில் இணைத்துக்கேரள மாநிலத்தில் உருவாக்கப்பட்டது. வயது 100 முதல் 105 நாட்கள். அரிசி நடுத்தர

கண்ணகி: இது அதிசய நெல் 'ஐ. ஆர். 8'யும், சன்ன சொர்ண வாரி எனப்படும் 'டிகே.எம்'6' நெல்லையும் கருச் சேர்க்கையில் இணைத்து,இந்தியவேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தாரால் உருவாக்கப்பட்டு, தமிழக அரசால் சாகுபடிக்கு விநியோகிக்கப்பட்டுள்ள ரகம். வயது 105 முதல் 110 நாட்கள், அரிசி நடுத் தரமானது. தழைச்

மானது,சற்று பழுப்புநிறமுடையது. பிளாட் நோயையும், குருத்துப் பூச்சியின் தாக்குதலையும் ஓரளவு தாங்கும் சக்தியுடையது.

பவானி: 'பீட்டா' என்ற இந்தோனேசியா நெல்லையும், 'பீ.பி.ஐ. 76' என்ற பிலிப்பைன்ஸ் நாட்டு நெல்லையும் கருச் சேர்க்கையில் இணைத்துக் கோயமுத்தூரில் உருவாக்கப் பட்டது. சற்று உயரமாக வளரும் தன்மை யுடையது. வயது 130 முதல் 135 நாட்கள். அரிசி சன்னமானது. மற்றும் எல்லாப் பட்டங்களுக்கும், குறிப்பாக நவரைப் பட்டத்தில் அதிக மகசூல் கொடுக்கும் திறனுடையது. 'பிளாட் நோய்' மற்றும் குலைநோய் இரண்டையும் தாங்கும் சக்தி யுடையது. ஆனால் குருத்துப் பூச்சியால் பாதிக்கப்படுகிறது. ஓரளவு குறைவான தழைச் சத்தைக் கொடுத்தாலும் சீரான மகசூல் அளிக்கவல்லது.

ஐ.ஆர். 20: பிலிப்பைன்ஸ் நாட்டு 'ஐ.ஆர். 262' என்ற நெல்லையும் தமிழ்நாட்டு 'டி. கே. எம். 6' என்ற சன்ன சொர்ணவாரி நெல்லையும் கருச் சேர்க்கையில் இணைத்து, பிலிப் பைன்ஸ் நாட்டில் உருவாக்கப் பட்டது. வயது 125 முதல் 135 நாட்கள். அரிசி மத்திய தரமானது. இவ் வகை, 'பிளாட்' மற்றும் குலை நோய்களை எதிர்த் தாளும் குணம் உள்ளது. ஆனால் 'ஹெல்மின்தோஸ்போரியோஸ்' என்ற இலைப் புள்ளி நோயால் பாதிக்கப்படும். குருத்துப் பூச்சியால் பயிர் தாக்கப்படுவ இல்லை. பல்வேறு மாறுபட்ட தட்ப வெப்ப நிலைகளுக்கும், மாறுபட்ட பட்டங்களுக்கும், மண் வேறுபாடுள்ள சூழ்நிலைகளிலும், ஏறக்குறைய சீரான மகசூல் கொடுக்கும் திறன் படைத்தது.

எனவே, இது வரை கூறிய 'வைகை', 'காஞ்சி', 'திருவேணி', 'கண்ணகி', 'பவானி' மற்றும் 'ஐ.ஆர். 20' ஆகிய உயர் விளைச்சல் நெல் வகைகளை நவரைப் பட்டத்தில் பயிரிட்டு நல்ல மகசூலைப் பெற்றுப் பயன் பெறுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: கே. எம். பாலசுப்ரமணியம், இணைப்பேராசிரியர், தாவர இயல் பிரிவு, தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழகம்.

# சவ்வரிசிக் கிழங்கு



## சாகுபடிக் குறிப்புகள்

"ஏழை உழவர்களின் பணப் பயிர்" என்று கூறப்படும் சவ்வரிசிக் கிழங்கு, ஏக்கருக்கு ரூபாய் 5,000 முதல் 7,000 வரை வருவாய் தரக் கூடியதாக உள்ளதுடன், வானம் பொய்ப்பதால், ஏற்படும் வறட்சியைத் தாங்கிக் கொள்ளக்கூடிய பணப் பயிராகவும் உள்ளது! தமிழக உழவர் பெரு மக்களின் வாழ்வை வளப்படுத்தவும், தமிழகத்தின் பசிப் பிணி என்றும் தோன்ருதிருக்கவும் சவ்வரிசிக் கிழங்கு பயிரிடுதலே சிறந்த வழி என்ருல் மிகையல்ல!

குறைந்த அளவு இரசாயன உரத்தையும், குறைந்த அளவு தண்ணீரையும் பயன்படுத்தி— அதிகச் செலவும் சிரமமும் இன்றி— நிறைந்த இலாபம் பெற விரும்பும் உழவர் பெரு மக்கள் உடனடியாகச் சவ்வரிசிக் கிழங்கு பயிரிடலாம்.

சவ்வரிசிக் கிழங்கு உடல் நலத்திற்கு ஏற்றது. எளிதில் செரிக்கக்கூடியது(ஜீரணமாகக் கூடியது). ஒரு பௌண்ட் சவ்வரிசிக் கிழங்கு மாவு, 1,650 கலோரி சக்தியை நமக்கு அளிக்கிறது. அரிசிக்குப் பதிலாக உணவாக உட்கொள்ள சவ்வரிசிக் கிழங்கும், அதன் மாவும் ஏற்றது.

**சவ்வரிசிக் கிழங்கின் பயன்கள்:**

1. மேல் தோல் உரித்த கிழங்கைப் பச்சையாகவும், வேக வைத்தும் சாப்பிடலாம்.

2. உருளைக் கிழங்கைப் போல் கறியாகச் சமைத்தும், வடகம், 'சிப்ஸ்' ஆகியவை செய்தும் சாப்பிடலாம். கிழங்கைச் சிறு சிறு துண்டு ஆக்கிக் காய வைத்து, அறைத்து எடுத்த மாவில் முறுக்கு, அடை, புட்டு முதலியன செய்யலாம்.

3. நெசவு ஆலைகளுக்கும் சலவை நிலையங்களுக்கும் தேவைப்படும் மாவு (ஸ்டார்ச்) தயாரிக்கலாம்.

4. சவ்வரிசிக் கிழங்கு மாவை 'குளுகோஸ்'; மாத்திரை மருந்து. அழகு சாதனங்களான 'ஸ்நோ', பவுடர் முதலியன தயாரிக்கவும் பயன்படுத்தலாம்.

5. சவ்வரிசிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி, ரவை, சேமியா முதலியனவாக தயாரித்து உண்ணலாம். பாயசம் செய்யவும், இட்லி தயாரிக்கவும் சவ்வரிசியைப் பயன்படுத்தலாம்.

6. இதர வகையான மாவுகளுடன் கலந்து 'பிஸ்கட்', சப்பாத்தி, ரொட்டி, பூரி முதலிய உணவுப் பொருள்களைத் தயாரித்துச் சாப்பிடலாம்.

**அரிசிக்குப் பதிலாக உணவாகப் பயன்படுத்த மரவள்ளிக் கிழங்கு மிகவும் ஏற்றது! அரிசிக்குப் பதிலாகப் பயன்படுவதால், மரவள்ளிக் கிழங்கை 'சவ்வரிசிக் கிழங்கு' என்றே இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**



உலக வங்கிக் குழுவினர் சவ்வரிசிக் கிழங்குகளைப் பார்வையிடல்.

7. சவ்வரிசிச் செடியின் தழையையும், கிழங்கின் மேல் தோலையும் கால்நடைகளுக்குப் பயன்படுத்தலாம்.

8. சவ்வரிசித் தொழிற்சாலைகளில் கிடைக்கும் 'திப்பி' என்னும் சக்கைப் பொருள் கால்நடைகளுக்குச் சிறந்த தீவனமாகப் பயன்படுகிறது.

மேற்கண்டவாறு பலவகைகளில் பயன்படும் சவ்வரிசிக் கிழங்கு சாகுபடிக்குத் தமிழ் நாட்டில் நல்ல எதிர்காலம் உள்ளது! எனவே, சவ்வரிசிக் கிழங்கு பயிரிட விரும்புகின்றவர்களின் நன்மையைக் கருதி, கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை 'தமிழரசு' சார்பில் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

### சாகுபடி முறைகள் :

சவ்வரிசிக் கிழங்கு வெப்ப நாடுகளிலும், மித வெப்ப நாடுகளிலும், கடல் மட்டத்திலிருந்து 2,500 அடி உயரம் வரையான பகுதிகளிலும் பயிராகக் கூடியது. ஆயினும், குறைந்த உயரம் உள்ள சமவெளிகளிலேயே சவ்வரிசிக் கிழங்கு மிகுந்த பயன் தருகிறது. பல்வேறு மழையளவிலும் சவ்வரிசிக் கிழங்கு நன்கு பயிராகக் கூடியதாகும்.

### மண் :

பல்வேறு வகையான மண்ணிலும் பயிரிட ஏற்றது. நல்ல வடிகால் வசதியுள்ள மேட்டுப்பாங்கான நிலங்களிலும், செம்மண் நிலங்களிலும் சவ்வரிசிக் கிழங்கு நன்கு வளர்ந்து நிறைந்த பலன் தரக் கூடியது. களிமண், பிசுபிசுப்பான மண், உவர்-களர் மண் ஆகியவை இப் பயிருக்கு ஏற்றதல்ல!

### பருவம் :

ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஆனுல் தைப் பட்டத்திலும் (டிசம்பர்-ஜனவரி), ஆடிப் பட்டத்திலும் (ஜுலை-ஆகஸ்ட்) பயிரிடுதல் நிறைந்த மகசூலுக்கு வழி கோலும். தென் மேற்குப் பருவ மழை துவங்கிய உடன், ஜுலை-ஆகஸ்ட் மாதத்தில் மானுவாரியாகப் பயிரிடலாம். நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் டிசம்பர்-ஜனவரி மாதத்தில் இறைவையாகப் பயிரிடலாம்.

### ரகமும் வயதும் :

சாதாரண நாட்டு ரகங்களான பர்மா ரகம், மலபார் ரகம் அல்லது வெள்ளை ரகம் ஆகியவை ஏக்கருக்கு 5 முதல் 7 டன் மகசூலைத் தருவதால், அந்த ரகங்களைப் பயிரிடுதல் பயனுடைய செயல் அல்ல! மால வெள்ளா, ஆனைக் கொம்பன் ஆகிய ரகங்களைப் பயிரிட்டால் ஏக்கருக்கு 12 முதல் 15 டன் மகசூலே பெற முடியும். ஆனுல் பின்கண்ட வீரிய ரகங்களைப் பயிரிட்டால் நிறைந்த மகசூலும் நிறைந்த இலாபமும் பெற முடியும்.



| ரகம் | வயது |
|---|---|
| எச். 97 | 10 மாதம் |
| எச். 165 | 8 முதல் 10 மாதம் |
| எச். 226 | 10 மாதம் |
| எம். 4 | 12 மாதம் |

**நிலம் தயாரித்தல் :**

சவ்வரிசிக் கிழங்கு பயிரிடவிருக்கும் நிலத்தை நான்கு அல்லது ஐந்து முறை ஆழமாக உழுது, சமப்படுத்த வேண்டும். பிறகு நிலத்தைப் பாத்திகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அல்லது 75 செ. மீட்டர் (2.5 அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

**அடி உரமிடுதல் :**

கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்கள்) தொழு எருவை இட வேண்டும். கரணைகளை நடுவதற்கு முன்பாக அடியுரமாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச் சத்து, 30 கிலோ சாம்பல் சத்து ஆகியவற்றினை இட வேண்டும். இந்த அளவுச் சத்தினை அளிக்க, 90 கிலோ 17 : 17: 17; 'காம்ப்ளெக்ஸ்' உரத்தையும், 25 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரத்தையும் இட வேண்டும்.

**கரணை தயாரித்தல் :**

சவ்வரிசிக் கிழங்குச் செடியின் தண்டுகளின் அடிப்பாகத்தில் அல்லது மையப் பாகத்தில் இருந்து கரணைகளைத் தயாரிப்பதே சிறந்தது. தண்டின் நுனிப் பாகத்தைக் கரணைகளுக்குப்



பயன்படுத்துதல் சிறந்ததல்ல! தேமல் (மொசைக்) நோய் தாக்காத செடிகளின் தண்டுகளில் இருந்தே கரணைகளைத் தயாரிக்க வேண்டும். கரணைகள் ஒவ்வொன்றும் 6 அங்குலம் முதல் 9 அங்குலம் உள்ளதாக இருக்க வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய 7,000 கரணைகள் வேண்டும். கறையான் தாக்குதலைத் தடுக்க கரணைகளின் அடிப்பாகத்தைப் 'பி.எச்.சி.' அல்லது 'டி.டி.டி.' கரைசலில் நனைத்து விட வேண்டும்.

**நடுதல் :**

பாத்திகளில் அல்லது பார்களில் தண்ணீர் விட்ட பிறகு, கரணைகளை நடவு செய்யவேண்டும். மானாவாரியாகப் பயிரிட்டால், மழை பெய்தவுடன் ஈரம் இருக்கும் பொழுதே கரணைகளை நட வேண்டும். பாத்திகளில் வரிசைக்கு வரிசை 75 சென்டி மீட்டர் (2.5 அடி) இடை வெளியும், வரிசையில் கரணைக்குக் கரணை 75 சென்டி மீட்டர் (2.5 அடி) இடைவெளியும் விட்டு கரணைகளைச் செங்குத்தாக 4 முதல் 6 சென்டி மீட்டர் ஆழத்தில் நடவு செய்ய வேண்டும். பார்களில் நடுவதானால், ஒருபக்க ஓரத்தில் மட்டும் 75 சென்டி மீட்டர் (2.5 அடி) இடை வெளிவிட்டுக் கரணைகளை நட வேண்டும்.



**நீர்ப் பாசனம் :**

இறைவைப் பயிருக்கு கரணைகள் நட்ட மூன்றுவது நாள் தண்ணீர் விட வேண்டும். பிறகு வாரம் ஒரு முறை வீதம் மூன்று மாத காலம் வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதன் பிறகு, 2 வாரங்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பொதுவாகச் சவ்வரிசிக் கிழங்குச் செடிகளுக்கு 15 முதல் 20 தடவை நீர் பாய்ச்சினால் போதுமானது. தண்ணீர் தேங்கி நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.

மானாவாரிப் பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சத் தேவையில்லை மழையே போதுமானது. மழை பெய்யாவிட்டாலும் வறட்சியைத் தாங்கிக் கொண்டு வளரும். ஆனால் மானாவாரிப் பயிரின் வயது இறைவைப் பயிரின் வயதை விட அதிகமாக இருக்கும்.

**பின்செய் நேர்த்தி :**

ஒரு மாதத்திற்குள் முளைக்காத கரணைகளை அகற்றிவிட்டு புதிதாக நல்ல கரணைகளை நட வேண்டும். முதல் இரு மாதங்களில் மாதம் இரு முறையும் பின்பு களையின் தன்மைக்கு



**மொஸாய்க் நோய் தாக்கப்படாதது.**

**மொஸாய்க் நோய் தாக்கப்பட்டது**



ஏற்ப மாதம் ஒரு முறையும் களை எடுத்தல் வேண்டும்.

கரணை நட்ட மூன்றுவது மாதத்தில், ஒவ்வொரு செடியிலும் இரண்டு நல்ல கிளைகளை மட்டும் விட்டு விட்டு, மற்றைய கிளைகளை ஒடித்து நீக்கிவிட வேண்டும்.

கரணை நட்ட 3-வது, 6-வது மாதங்களில் செடியைச் சுற்றி மண் அணைப்பது அவசியம் ஆகும்.

**ஊடு பயிர் :**

சவ்வரிசிக் கிழங்குச் செடிகளுக்கு இடையிலுள்ள நிலத்தில் ஊடு பயிராக, வெங்காயம் பயிரிட்டால், கூடுதல் வருவாய் பெறலாம். இவ்வாறு வெங்காயத்தை ஊடு பயிராகப் பயிரிடுவதால், சவ்வரிசிக்கிழங்குச் செடிகளுக்கு எந்த விதத் தீங்கும் ஏற்படாது.

**பயிர்ப்பாதுகாப்பு :**

சவ்வரிசிக் கிழங்குச் செடிகளை முக்கியமாகச் செதில் பூச்சிகள், சிவப்புச் சிலந்திகள், வெள்ளைத் தத்துப் பூச்சிகள், கறையான் முதலியனத் தாக்கிச் சேதம் விளைவிக்கின்றன.

செதில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'பாரத்தியான்' 0.03 சதம் மருந்து தெளிக்க வேண்டும்.

சிவப்புச் சிலந்திப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'ரோகார்' 0.03 சதம் மருந்து தெளிக்க வேண்டும்.

'மொசைக்' என்னும் 'வைரஸ்' நோயைப் பரப்பிடும் வெள்ளைத் தத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 0.25 சதம் மெட்டாசிஸ்டாக்ஸ் அல்லது 0.03 சதம் ரோகார் மருந்தை (ஏக்கருக்கு 450 மில்லி லிட்டர் மருந்தை 450 லிட்டர் தண்ணீரில் கலந்து) மாதம் ஒருமுறை வீதம் 3 அல்லது 4 மாதங்களுக்குத் தெளிக்க வேண்டும்.

சவ்வரிசிக் கிழங்குச் செடிகளை 'மொசைக்' என்னும் 'வைரஸ்' நோய் மிகவும் கடுமையாகத் தாக்குகிறது. இந்நோயினால் தாக்கப்பட்ட செடிகளில் 53 முதல் 75 சத மகசூல் குறைந்து விடுகிறது. இந்நோய் வெள்ளைத் தத்துப் பூச்சிகளினால் பரவுகிறது. இந்நோயினால் தாக்கப்பட்ட செடிகளைக் கவனித்து, உடன் வயலில் இருந்து அகற்றி, எரித்து விடவேண்டும். இந்நோயினால் தாக்கப்பட்ட செடிகளிலிருந்து கரணை எடுப்பதைத் தவிர்த்திட வேண்டும். இந்நோயினைப் பரப்பிடும் வெள்ளைத்தத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்த மேலே கூறியவாறு மருந்து தெளிக்க வேண்டும். இந்நோய் வந்தபின் தடுப்பதை விட, இந்நோய் வரும் முன்பே தடுத்திடுவதே சிறந்தது. 'எச். 165', 'எச். 226', 'எஸ். 2371' போன்ற மொசைக் நோய்தாக்கா ரகங்களைப் பயிரிடுவது சிறந்தது.



சவ்வரிசிக் கிழங்குச் செடிகளை இலைப்புள்ளி நோய் தாக்கினால், 1 கிலோ தாமிரப் பூசணக் கொல்லி மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும்.

வேர் அழுகல் நோய் தாக்கினால், 100 கிராம் 'கரையும் செரசான்' (Wet Cereasan) என்ற மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து, செடியின் அடியில் வேர் நனையுமாறு ஊற்ற வேண்டும்.

**அறுவடை :**

சவ்வரிசிக் கிழங்குகளை, ரகத்திற்குத் தக்கவாறு 10 முதல் 12 மாதங்களில் அறுவடை செய்யலாம். செடிகளில் உள்ள இலைகள் பழுத்து உதிர்ந்தால், கிழங்குகள் முற்றி அறுவடைக்குத் தயாரான நிலையை அடைந்து விட்டதாகக் கருதலாம். அந்த நேரத்தில் செடியின் அடிப்பாகத்தில் மண்ணில் வெடிப்பு ஏற்பட்டாலும், கிழங்குகள் முதிர்ந்து அறுவடைக்குத் தயார் ஆகி விட்டன என்று அறியலாம். முதிர்ந்த கிழங்குகள் கெட்டியாகவும், பால் போன்ற வெண்மை நிறத்திலும் இருந்தால் கிழங்குகள் முதிர்ந்து விட்டன என அறியலாம். கிழங்குகள் முதிர்ந்து விட்டன என்று அறிந்தவுடன், செடிகளைக் கையால் பிடுங்கி எடுத்து, கிழங்குகளைத் தனித் தனியாக வேர் நீக்கி வெட்டி எடுக்க வேண்டும்.

**வேண்டுகோள் :**

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு டிசம்பர், ஜனவரி மாதங்களில் இறைவையாகச் சவ்வரிசிக் கிழங்கு பயிரிட்டு, ஏக்கருக்கு ரூபாய் 5,000-க்குக் குறையாமல் நிகர லாபம் பெற்றுப் பயனடையுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆர்.எம்.


இனியது!
இனியது!!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் குடிநீர் வசதி!
புதிய முயற்சிகளால் தொழில்துறை வளர்ச்சி!
இல்லாத சமுதாயம் அமைந்திட திட்டங்கள் பணிகள்!
இப்படித் தொடரும் நமது அரசின் அரும்பணிகளின்
வெற்றிக்கு
அடித்தளமே
அளவான குடும்பம்.
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!



# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

### தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

*சிறு சேமிப்புத் துறையின் சிறிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | . . . |
| | 10/- | 750/- | . . . |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | . . . | 825/- |
| | 10/- | . . . | 1, 650/- |

சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை. சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.
2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

"இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்"

69683

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.

தமிழரசு

# வண்ணத்துப் பூச்சியின் வண்ணமிகு கோலங்கள்!

- அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
- பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
- வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
- பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்

